வித்துவான்
சே. கோவிந்தராஜன்

கணபதிதுணை.

வேலுமயிலுந்துணை.

ஸ்ரீலஸ்ரீ - சிதம்பரசுவாமிகள்

அருளிச்செய்த

# திருப்போரூர்ச்சந்நிதிமுறைமூலம்

மஹாவித்துவான் ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம்பிள்ளையவர்கள்
மாணாக்கர் சோடசாவதானம்
தி - க - சுப்பராயசெட்டியாரவர்களாலும்

ஸ்ரீ-காஞ்சீபுரம்.
ஸ்ரீமத்-ஏகாம்பரசிவயோகிகள்
மாணாக்கர்
கா- ஆலாலசுந்தரம்பிள்ளையவர்களாலும்

இயற்றிய உரையோடு

மயிலை - செந்தில்வேலுமுதலியாரால்

சென்னை:
இந்து தியலாஜிகல்யந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

விஜய௵-கும்பாவி

விலை-ரூபா-௧.

Registered Copy-Right.

உ

# அறிவிப்பு.

இந்நூலிற்றுளை விநாயகர் காப்பு தனியன்றொடங்கி மட்டுவிருத்தம் "உவமையறு" என்னும் ஐந்தாவது செய்யுள் காறும் சோடசாவதானம் தி-க-சுப்பராயசெட்டியார் அவர்களாலும்.

ஷை மட்டுவிருத்தம் "மயக்கமிடர்காணு" என்னும் ஆறாவது செய்யுள்முதல் நூல் இறுதிகாறும் கா- ஆலாலசுந்தரம்பிள்ளை அவர்களாலும் இயற்றப்பட்டது.

இந்நூலாசிரியர் இந்நூலுள் அறுமுகக்கடவுள் தமக்குணர்த்தியதாகக் கூறிய "அருட்கடல்ததும்பி" என்பதை முதலாக வுடைய பதின் மூன்று செய்யுளில் முதற் செய்யுள் நீங்கலாக ஏனைப் பன்னிரண்டு செய்யுளிலும் மெய்கண்ட தேவரருளிய சிவஞானபோதத்தின் பன்னிரண்டு சூத்திரக் கருத்தும் முறையே அமைந்துகிடக்கின்றமையையும் அப்பதிகவுரையினும் நூல்வரலாற்றினும் விதந்துணர்த்தியிருக்கின்றமையையும் அன்பர்கள் யாவரும் கண்டுகளிக்கும்படித்திருவருளைச் சிந்திக்கின்றனன்.

இங்ஙனம்,
ம- செந்தில்வேலுமுதலியார்.

சென்னை தங்கசாலை வீதி 217-நெ. வீட்டிலிருக்கும் ம-செந்தில்வேலுமுதலியாரிடத்திலும், தம்புசெட்டிதெருவு 289-நெ. ஊ-புஷ்பரதச்செட்டியார் அச்சாபீசிலும், சென்னை குமரப்பமுதலி வீதி 1-நெ. வீட்டில் சி-அ-இரத்தினசபாபதிமுதலியாரிடத்திலும் விலைக்கு இப்புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

இங்ஙனம்,
☞ கா- ஆலாலசுந்தரம்பிள்ளை.

திருச்சிற்றம்பலம்.

# உரைச்சிறப்புப்பாயிரம்.

புரசை அஷ்டாவதானம் சபாபதிமுதலியார் அவர்கள்]
மாணாக்கரும்
சென்னை வேப்பேரி-எஸ்-பி.ஜி ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதருமாகிய
திருமயிலை - சண்முகம்பிள்ளையவர்கள் பாடிய

## நாலடித்தரவுக் கொச்சகக் கலிப்பா.

பூமணக்குநறுங்கூந்தற்பொன்னனையார்தம்பொருட்டாத்
தேமணக்குங்கொன்றையினன் சித்தவுருக்கொண்டெய்தி
மாமணக்குமிரதவாதம்புரிந்தமாண்பென்னும்
பாமணக்கும்புகழ்மணக்கும்பஞ்சவன்றன்றிருநாடு. (க)

இன்னநாட்டிடையென்றுமிபத்திலயிராவதமும்
மன்னுகலைகளிற்சைவமாண்கலையுமனுக்கடமிற்
பன்னுதிருவெழுத்தஞ்சும்பரவையிற்பாலாழியுமிங்
கென்னநனிநிலவியதாலெழின்மணிமாடக்கூடல். (உ)

இந்நகரிற்பொய்யடிமையில்லாதபுலவர்வழி
துன்னிடவந்தோனுமைதன்சூடஈக்கைவருநங்கை
தன்னுடையகுலஞ்செய்தவந்தானெனவந்தவதரித்தோன்
தென்னவனுயுலகாண்டோன்சீபாதந்தொழும்பெரியோன். (ங)

இதம்பெறவின்னவர்ப்பெற்றாரிசைந்தெவருங்களியெய்துஞ்
சிதம்பரமென்றொருபிள்ளைத்திருநாமந்தனைநல்க
மதம்பலவேத்துறுமாடமலிமதுரைமாண்புலவோர்
நிதம்பரவுமங்கயற்கணிமலையுருட்பரிசதனன். (ச)

அகத்தியந்தொல்காப்பியமேயாதியநல்லிலக்கணமுஞ்
சகத்தியல்பல்லிலக்கியமுஞ்சதிர்பெறுமாகமநூலும்
மகத்துவமார்தருமுப்பால்வயங்குகுறண்முதலாக
வகுத்தகடைச்சங்கமருவியநூலுமினிதாய்ந்த. (ரு)

அரும்புலமைசெறிந்தோங்கியறிஞரெலாம்வியப்பெய்த
இரும்புலவர்பெருமானென்றிவணிருப்பவினையாளை
விரும்பியெழிற்கலைபயிற்றவிருத்தகிரியுறைசெல்வப்
பரம்பரையார்தஞ்சுதர்க்குப்பரிவினழைத்தமர்வித்தார். (சா)

ஆங்கவரிவ்வாறிருப்பவாண்டிறைவியருள்பெற்ற
பாங்குறுகுமாரதேவரும்பலிக்காப்பரிந்தெய்தித்
தீங்குதெறுசிதம்பரப்பேர்ச்செல்வருக்குப்பரிபாக
மோங்கிடக்கண்ணருள்பொழிந்தாருலகுய்யவெளிவந்தார். (௭)

அங்கணருட்டேசிகரையவொன்றும்பிரியரமே
தங்குநறுநிழலென்னத்தாஞ்சரிப்பவஃதுணர்ந்த
சிங்கவேறெனநிலவத்தேசிகருந்தனையாண்ட
புங்கவனுஞ்சாந்தலிங்கப்புண்ணியன்பாற்கொடுசென்றார். (௮)

அக்குரவனருளானேயாங்கவருக்கனுபூதி
தொக்கிலங்குங்கருணைநாட்டஞ்செய்யத்தோமில்லார்
குக்குடகேதனன்மஞ்ஞைதோன்றுதலுங்குறித்தோத
மிக்கவர்நீமதுரைவயின்மேவியுணர்மெய்யென்றார். (௯)

அங்கணகன்றவர்தாமுமாலவாயடைந்தேகி
அங்கயற்கணம்மைதனையன்பாகப்பணிபரவித்
துங்கமலிகலிவெண்பாத்தொடைசாத்தத்தோகையவர்
நங்குமரன்றனைப்போரிநண்ணியுணர்மெய்யென்றார். (௧௦)

ஆலவாய்மதுரையகன்றடைவின்முதுகுன்றடைந்து
சீலமார்குருமணிபாற்சிறக்கநெஞ்சுவிடுதூதா
மேலுமாரணமொழியாலேய்பிரபந்தம்பாடி
மூலகாரணன்வேதமுதுவரைக்குத்தமிழோதி. (௧௧)

வந்துதனையாட்கொண்டவள்ளலாஞ்சமரபுரிக்
கந்தனடிச்சீர்பரவிக்கவின்றொண்டுபலபுரிந்து
சந்தநறுந்தமிழ்சாத்திச்சந்நிதிமாமுறையெனும்பேர்
தந்தவணன்றெழுந்தருளித்தனையடைவார்க்கருள்புரிந்தார். (௧௨)

பத்திமையேமுதலாயசாதனங்கள்பரிந்துரைக்கும்
அத்தகுநற்சதகமுதலாயநூலொன்றினுக்கும்
புத்துரையிட்டரும்புகலிப்புண்ணியனாரருள்பெற்ற
வித்தகர்சொல்லொடுக்கநூல்விரித்துரையுமளித்தனரால். (௧௩)

புணர்ப்பவெனுந்தமிழ்ப்பாட்டின்புனிதவுரைவாய்மலர்ந்திட்
டிணர்க்கொன்றைநறுந்தாராற்கியலுமறைப்பொருளுணர்த்தும்
மணக்கடம்பனடிநீழன்மருவினர்நல்லிட்டமதி
புணர்த்தபூரணைவிராகந்தானும்பொலிவெய்த. (௧௪)

இனையரருளியநூலுளமையடிமைகொண்டபிரான்
றனைவழுத்துஞ்சந்நிதிமாமுறைக்கொருரைதான்வேண்டிக்
கனைகடல்சூழ்புவியினுளார்கவலெய்திப்பல்காலும்
நனியுழந்துநின்றமையிஞ்ஞானமதியாதன்றே. (௧௫)

இன்னநூற்குரைவரையினிகபரசாதனமாமென்
றன்னதுதான்கடைப்பிடித்திட்டரும்பெறலாந்தன்குரவன்
தன்னிகரில்மீனாட்சிசுந்தரனாந்தமிழர்பிரான்
பொன்னடிக்கேயடிமையெனப்புவிபுகழும்புலவர்பிரான். (கசு)

சோடசஞ்சாரவதானஞ்சொன்னொடிக்கச்செயவல்லோன்
பீடுகெழுமியசுப்பராயவேள்பெரிதுரைத்து
வீடுபெற்றிட்டனனாகமிகவெஞ்சிநின்றனகள்
[illegible]டியுளைசெய்தளிப்பாரிலரென்னாநலிவகற்ற. (கஎ)

முற்றோன்றுஞ்செவியினும்பின்மூளைத்தகொம்பேவலியுடைத்தேதன்
றித்தாரணிக்கணாரையிறுமாக்கவெழிற்காஞ்சி
நற்றானமருவுமேகாம்பரமெய்ஞ்ஞானகுரு
வித்தானகழன்மலரைவியன்புந்திவிடாதமர்வோன். (கஅ)

பாப்பதின்மூன்றாவுரைத்தபதிகத்துமெய்கண்டான்
நீப்பருஞ்சீர்ச்சிவஞானபோதநிலையெனக்காட்டி
வீப்பருமெய்ப்புகழெய்துமிகுகருணைக்கடலனையான்
நாப்பருகுமமிழ்தன்னநல்லுரைசெய்யுரையாளன். (ககூ)

நூலானிங்குணர்வுணரானோன்றாட்கேதொண்டுசெயும்
ஆலாலசுந்தரப்பேரழகியோனுரைசெய்ய
வேலாவலயஞ்சூழும்வியனிலக்குத்தவக்கொருவன்
மேலாஞ்செந்தமிழ்க்கிருவரென்னாமுறைமிகக்கொண்டு. (உ0)

செய்தளித்தவுரையென்னச்செந்தமிழ்மாநிலம்பரசக்
கைதைமணங்கமழ்வேலிக்கலிகடற்றென்மயிலைநகர்
உய்திபெறவருஞ் சீரானுயர்செந்தில்வேலனென்னும்
மெய்திகழ்வேளாண்குலத்தோன்விழைந்தச்சிட்டுதவினனே. (உக)

ஸ்ரீ-சிவஞானயோகிகள் திருவடிவாழ்க.

உ

## விடுபட்டவை:

பிள்ளைத் தமிழில் வருகைப்பருவம்-கூ-ஆம் செய்யுளில்-அ-வது வரி
"மகிமைதழுவுசமரபுரியன் வருகவருகவருகவே."— என்பதைக்கூட்டுவதன்றி,

சஅஅ-ஆது பக்கத்தில்-கஉ-வது வரியில் ஆறுஞ் சூத்திரக்கருத்தென்பதை ஏழாஞ் சூத்திரக்கருத்தெனவும், நூல்வரலாற்றில்-கூ-ஆம்-பக்கத்தில்-உரு-வது வரியில் பேதாபேத மென்பதைப் பேத மெனவும் அமைத்துக்கொள்க.

உ

சிவமயம்.

# இந்நூல்வரலாறு.

அகண்டசச்சிதானந்த கனிபூதராய் விளங்கும் இறைவன் இறைவி இலையோனாகிய சோமசுந்தரக் கடவுள்தடாதகைப் பிராட்டியார் உக்கிரகுமார பாண்டியரென்னு மூவராலும் ஆளப்பட்ட பாண்டிய நாட்டின்கண் பூலோக சிவலோகம்,சமட்டி விச்சாபுரமுதலிய பன்னிரு திருநாமம் புனைந்த மதுரை யென்னுங் க்ஷேத்திரத்தில் "தொண்டர் நாதனைத்தூ திடை விடுத்ததுமுதலை யுண்டபாலனையழைத்தது மென்பு பெண்ணுருவாய்க், கண்டதும்மறைக்கத வினைத்திறந்ததும்" ஆகிய தண்டமிழ்ச் சொல்லைவளர்த்து வந்த சங்கப்புலவர் வழியிற்றோன்றி அங்கயற்கண்ணியம்மையுபாசகராய் சிதம்பர சுவாமிகள் கவிராஜரென்னச்சிறந்து வாழ்ந்திருந்தனர்.

இவ்வாறு வாழ்ந்து வருநாளில் அவிநாசி என்னுங் க்ஷேத்திரத்திற்குச் செல்லும் மார்க்கத்திலுள்ள ஓரூரில் ரெட்டியா ரொருவரிருந்தனர். அவர் உயிர்க்குறுதிபயப்பது இகபரமெனவும் அவற்றைத்தருவோன் சிவபெருமானெ னவுமுணர்ந்து வழிபடவெண்ணி,அவ்வழிபாட்டையேற்குந்திருவேடத்தராகிய வடியார்களுக்கடித்தொண்டராகும் நியதியை மேற்கொண்டனர்.

இத்தவமுதிர்ச்சியால் மேற்படி அவிநாசியென்கிற க்ஷேத்திரத்தில் வீர சைவாசாரியராகிய சிவப்பிரகாசசுவாமிகளது திருவருள் பெற்ற சாந்தலிங்க சுவாமிகளடித்தொண்டராகிய குமாரதேவர் தமதாசிரியர் சிவஞானம் பிறக்கு மாறு விதித்த நட்டலையின்படி விருத்தாசலத்தில் வீற்றிருக்கு மிறைபணி செய்து மணிமுத்தாநதிக்கரையிலுள்ள அரசமர நீழலில்சிவயோகஞ்செய்வா ராயினர். அங்ஙனஞ் செய்வுழி ஆறுமாதத்திற் கொருமுறை குருதரிசனஞ் செய்யும் நியதியுமுடையராயினர். அந்நியதியின் வண்ணம் குமாரதேவர் செ ல்லுகையில் திருவேடமே பொருளெனக்கொண்ட மேற்படி ரெட்டியாரிவ ரைக் கண்ணுற்று அவரடிக் காட்பட் டன்புடையராய் அவ்வன்பின் மிகுதி யால் நன்மக்கட்பேறும் பெற்றனர்.

அச்செல்வர்களுக்கு அருட்செல்வமுண்டாமாறு கல்வி யென்னுங் கண் ணளிப்போர் யாவரென்று தாம் வழிபடு கடவுளை வழிபட்டு வரும்நாளில் மேற் கூறிய சிதம்பரகவிராஜரது கல்வியறிவொழுக்கங்களைக் கேள்வியுற்று அவர் பாற்சென்றடிபணிந்து தங்குறை கூற அவரது இனியவுரைகளைத் திருச்செவி யிலேற்று வேண்டிய வாறே அவரது மாளிகைக்கெழுந்தருளி அப்புத்திரர் கட்குக் கல்விபயில் வித்துவந்தனர். அவ்வுழி குமாரதேவர்முன்போல் வருமள

வில் கவிராஜர் புத்திரர்களுக்குப் போதிக்கும் போதனாசக்தியைக்கண்ணுற்று மனங்களித்து அவரை யடிமை கொள்ள வெண்ணி சிலஞானார்த்தங்களை வினவ அதற் கவர்பொருள் கூறவறியாது மயங்க இஃது கற்றவறிவாலுணர்ந்துகூறும் பான்மைத்தோ என்று அதனருமையை யெடுத்துக்காட்டி யாம் மீண்டு இங்குவருங்கால் அப்பொருளுணர்ந்து கூறுக வென்று கட்டளையிட்டுத் தம்மாசிரியர் பாற்சென்று மீண்டு மங்கெழுந்தருளியப்பொருள்வினவ, அப்பொழுதும் பொருள் கூறவறியாதுமௌனமாய் நிற்பக் கிருபைசுரந்துஅருளானோக்கவே அத்தீக்ஷையா லப்பொருளுணர்ந்து தம்மையடிமைகொள்ள வெழுந்தருளி வந்த குருமூர்த்த மென்றுணர்ந்து அவர் பின்றொடர்ந்துசெல்ல,அக்குமாரதேவர் அவிரூசிக்கேகினர். அங்கு அவராசிரியராகிய சாந்தலிங்கசுவாமிகள் பரிபூரணத்தினின்றும் வெளியே வருமளவும் அப்புறக்கடையிலுள்ள குற்றேவலைச்செய்வாராயினர்.செய்வுழி சாந்தலிங்க சுவாமிகளொடுக் கத்தினின்றும் வெளியே வந்து குமாரதேவரிடத்து கவிராஜரடிமைப்பட்டிருத்தலையும் கல்வியின் மேம்பட்டிருத்தலையும் முகத்தளவே கண்டுகளித்து தாமியற்றிய வைராக்கிய சதகம் வைராக்யதீபம் அவிரோதவுந்தியார் கொலைமறுத்தல் முதலிய நூல்களையும் ஒழுவிலொடுக்கத்தையுங் கொணர்ந்து குமாரதேவரைநோக்கி, “இந்நூல்களுக்கு உனது மாணாக்கனாகிய கவிராஜனால் உரையியற்றக் கடவை” என்றந்நூல்களைத்தந்தருளினர். அவரவற்றை யங்கையிலேற்றுத் தமது மாணாக்கரிடந் தந்தருள அவற்றை கவிராஜர் சிரமேற்கொண்டு பணிந்தெழுந்து ஆசிரியரோடும் விருத்தகிரிக்குச்சென்றனர்.பின்னர் குமாரதேவரால் வீராகமப்படி தீக்ஷைபெற்று **சிதம்பரசுவாமிகள்** என்னும் திருநாமம் புனைந்து வேதாந்த சிரவணஞ்செய்து அம்முறையே சமாதியிலிருந்தனர்.

அங்ஙன மிருக்குங்கால் மயூரமொன்று தோன்றித்தனது சொரூபந்தோன்ற வொட்டாது நடனஞ்செய்தது அதனைத் தரிசித்து. ஒன்றுந்தோன்றாதவசமுற்று ஆனந்தமடைந்து தமதாசிரியர்பாற்சென்றுதாம்கண்டகாட்சியை விண்ணப்பஞ் செய்ய வதனைக் கேட்டு தமது மாணாக்கர்க்குச் சத்திபதியுந்திறத்தை நாடி, அன்பனே ஈண்டெழுந்தருளியிருக்கும் பெரிய நாயகி யெமக்கெவ்வாறு அறிவுக்கறிவாயிருந்து உண்மை ஞானத்தை யுணர்த்த வுணர்கின்றோமோ அதுபோலு முனக்கு உபாசனாமூர்த்தி அங்கயற்கண்ணம்மை யாதலால்அத்தேவியே நீகண்டகாட்சிக்குப் பொருளுணர்த்தும் ஆகையால் மதுரைக்குச் செல்லக்கடவை என்று ஆசிபுகன்று விடைதந்தருள, அக்கட்டளைப்படியே அங்கு சென்று தற்போத ஞானமொழிந்து இறைவனொருவனுள னென்றோர்ந்து அவ்விறைபணி சரியை யாதிகளாகிய நன்னெறியே யென்று கடைப்பிடித்து, அஃதியற்றும் புண்ணிய முடையோமோ என்றையுற்று அது கூடுமாறு தவ விரதங்களில் முயல்வாராயினர். எங்ஙனமெனின். நாற்பத்தைந்து நாள்வரையில் உதயகாலத்தில் பொற்றாமரையில் நீராடுதலும் நித்தியகர் மானுஷ்டானங்

களை முடித்தலும் உச்சிக்காலத்தில் ஓர் பிடிபச்சறுகும் மூன்றுகைநீர்த்தமும் உட்கொள்ளுதலும் மனம் பொறிவழிசெல்லாது திருவருளை நாடிஅங்கயற்கண்ணம்மையாரையுபாசனைசெய்துவந்ததுமாம். அங்கயற்கண்ணம்மை யார்அவரது தவத்திற்கிரங்கி அவரெண்ணிய வாறே அருள்செய்யவெண்ணி நீராச்சுரமும் காற்பிடிப்பும் ஆகிய பெரும் பிணிகளை யெல்லாம் ஏவினர். சிதம்பரசுவாமிகள் இருவினையொப்பும் மலபரிபாகமும் பிறந்துசத்திபதிவுக்குஆளாயிருப்பவராதலால் அவைகளால் கலங்காது தாங்கொண்ட விரதத்தையேமேற்கொண்டு அம்மையார்மேல் கலிவெண்பாவென்னும் ஓர் பிரபந்தம் பாடித்துதித்தனர். அத்துதிவய திருச்செவியிலேற்ற தேவி மகிழ் கூர்ந்து எதிரே காட்சிதந்து தமது மலர்க்கரத்தால் மலசத்தி குன்றுமாறுதடவி, ஓ தவசிலனே! உனது தவத்துக்கிரங்கி யீண்டுவந்தனம் நீ யெண்ணிய விரண்டில் பதிஞானம் வேதபாஹ்யமான புறச்சமய நூல்களிலே கூறும் ஞானமு மன்று, அஃதொழிந்த சதுர்வித புருஷார்த்தங்களைக்கூறும்வேதவாக்கியங்களினலறியப்படுவதுமன்று, இருடிகளாற் கூறப்பட்டஸ்மிருதிமார்க்கங்களிற் காணப்படுவதுமன்று, ஸ்மிருதிகளில்விதிக்கப்பட்ட பிரமசரியமுதலிய ஆச்சிரமங்களை யனுஷ்டித்துப் பெறுவது மன்று, வேதாங்கங்களாகிய வியாகரணங்களையுணருமுணர்ச்சியினுல் கணிக்கப்படுவது மன்று, இவை யெல்லாந் தனதாகவுடைய வேதமுற்றும் அத்தியயனஞ்செய்வதுபோல் படித்தாவது மன்று, அஷ்டாதசபுராணங்களுட்பட்ட பொருள்கள்போல் புராணங்களுட்பட்டது மன்று, அதுவேதச்சிரப்பொருளாகிய வேதாந்தப்பொருள்களை யருளால் சிரவண மனன நிதித்தியாசனங்களைச் செய்து அதனுற் றெளியப்படுவதாகிய சைவஞானமாம். மற்றொன்று இறைபணியாகியசரியையாதிகளாம். அவைமேற்கூறிய ஞானசாதனமுதிர்ச்சியால் வருவதாம். ஆகையாலிவ்விரண்டும் இத்திருவாலவாய்க்குவடபால் முப்பதுயோசனை தூரத்தில் யுத்தபுரிஎன்னுஞ் க்ஷேத்திரமிருக்கின்றது அங்குனக்குக் கைகூடும். அல்லதூஉம் அந்த க்ஷேத்திரம் ஆறுமுறைபிரசித்தியாயிருந்து இப்போது ஜீர்ணமாயிருக்கின்றது, ஏழாவது முறை உன்னுல் பிரகாசப்பட்டு நிலைபெறவேண்டியிருக்கின்றது. இவ்விரண்டு காரணத்தாலன்றோ எனது குமாரனுகிய முருகன் தனது சொரூபத்தைமறைத்து மயில்வடிவமாய்க்காட்சிதந்தனன். ஆகையால் நீ இது பொழுதே அங்கு செல்லக்கடவையென்றருளி திருவுருக்கரந்தனர். சிதம்பரசுவாமிகள் அம்மையார் அருட்டெரிசனத்தையும் இறை ஞானத்தையும் அவ்விறைஞானம் கலங்காவாறு இறைபணியையும் தமக்கு ஒருங்கே வருளிய அருண்மொழியையும் கண்டு கேட்டுக் கிருதார்த்தனுயினேன் கிருதார்த்தனுயினேனென்று ஆனந்தக் கூத்தர்டிஉமாதேவியினருளை மேற்கொண்டு பூமியில் தண்டாகாரமாக விழுந்து பணிந்து யுத்தபுரியை நோக்கிவரத் தொடங்கி விருத்தாசலத்தை யடைந்து தமதாசிரியர்பால் இவ்வற்புதத்தை விண்ணப்பஞ்செய்ய அங்கு நின்றுஞ் செல்லவென்

ணிச் சென்றவக்காலத்தில் நிஷ்டையிலிருக்கக் கண்டவுடனே தேசிகரை வலம் வந்து வணங்கி எண்ணியவாறே விண்ணப்பஞ் செய்வதற் கியலாத குறையை மேற்கொண்டு யுத்தபுரியைச் சமீபித்து அங்குள்ள வோடையில் நீராடித் தமது நியமங்களை முடித்துக் கொண்டு திருப்போரூரை வலம்வந்து உள்ளே சென்று அங்கு பனைமாமூலத்தில்வீற்றிருக்கும்முருகக்கடவுளைக்கண்டும்வணங்காராகி மீண்டு பிரணவசைலத்தருகிலுள்ள வேப்படி விநாயகராயலத்துள்வீற்றிருந்தனர். அங்கு நடந்த சிற்சில மகிமைகளினால் நேர்ந்த பொருள்முற்றும் இறைபணிக்கா மென்றெண்ணியிருந்தி முன் அம்மையாரருளியவாறே இங்கு இறைஞானம் நமக்கு கிடைக்குமாறு யாங்ஙனமென்று எண்ணி ஏக்கமுற்றிருக்கையில் அவ்வேளை மகல இறைவன் ஓர்நாள் குமாரதேவரைப் போலுந்திருவுருக்கொண்டு ஆங்கெழுந்தருளினர். உடனே சிதம்பரசுவாமிகள் தமதாசிரியர் எழுந்தருளி வருதலைக்கண்டு அச்சமுற்று விரைந்தோடி தண்டாகாரமாய்ப் பணிந்து தேவரீரருளியவாறே அங்கயற்கண்ணம்மையார், ஞானமீதெனவும் ஞானங்கலங்கா நெறியீதெனவும் உணர்த்தவுணரப்பெற்றேன் பின்னர்அவ்வம்மையார் உனக்கிவ்விரண்டும் யுத்தபுரியிற் கைகூடுமென்றருளினர். அவை தெளியுமாறு விருத்தாசலத்தில் தேவரீர்பால் வந்தும் தெளியப் பெற்றிலேன் அதனால் அங்ஙனமருளியவாறே இது காறுங்கிடைக்கப் பெறாது மயங்குகின்றேன் அருளே திருமேனியாகிய தேவரீரே இங்கெழுந்தருளியதால் அம் மயக்கத்தைமாற்றி அவ்விரண்டு மடியேனுக்குக் கைகூடுமாறு இக்கணமேயருள்செயவேண்டுமென்று பிரார்த்தித்தனர். அது கேட்டு குமாரதேவராய் வந்த முருகக்கடவுள் நாமிருவரும் இங்கிருக்கு மாலயத்துட் செல்வேமாயின் ஆங்கு விளங்குமென்றருளினர். அருளாளும் சுவாமி! இங்கு பனங்காடன்றி ஆலயத்தைக்காண்கிலன், தேவரீர் ஆலய மிங்குள தென்று கூறுவதனால் எங்ஙனமென்று கேட்க அதற்கவ்விறைவன் அவரது நெற்றியில் திருநீறிட்டு ஞான நோக்கால் நோக்கி இங்கே காணப்படும் ஆலயமுதலிய வற்றைப் பார்ப்பாயாக வென்றருளினர். அருளியவாறே முன்னமைந்து கிடந்ததாயுள்ள கர்ப்பக்கிரகமுதலியவும், திருமதிலும் கோபுரவாயிலும் மாடவீதிகளும் மடாலயமும் இருக்கக் கண்டனர். பின்னர் ஆசிரியர் அவ்வாலயத்துக்குள் அழைத்துக்கொண்டு சென்று இறைவன் சந்நிதியினின்று அம்மையாரருளியவாறே சைவ ஞானத்தையும் இறைபணியையும் இனிது விளக்கி இந்நிலையில் நிற்கக்கடவாயென்றருளிப் பின்னர் ஹரஹர வென்று பெருமானை நோக்கினர். அப்போது சிதம்பரசுவாமிகள் திருவடியில் வீழ்ந்து வணங்கியெழுவதற்கு முன் ஆசிரிய மூர்த்தமாய்நின்ற பெருமான் திருவுருக்கரந்தனர். பின்னரெழுந்தசிதம்பரதேவர் தங்குரவரைக் காணாது குரவசிகாமணியாகிய முருகக்கடவுளை முன்னுள்ளவாறே பனைமாமூலத்தில் வீற்றிருக்கக் கண்டு ஆனந்த பரவசமுற்று இப்பெருமானே இங்கு குருமூர்த்தியாய் வந்து உண்மை ஞானத்தையும் அது கலங்காவாறு இறைபணியையும் நாயிற் கடைப்பட்ட நமக்கும் அருளியது அந்தோ!

அந்தோ! திருவருளு மிவ்வாறிருந்ததோ என்று ஆனந்தக் கூத்தாடி அருட்கடலில் மூழ்கிப் பின்னர் இது திருப்போரூரில் முருகக்கடவுள் சந்நிதியில் தமக்கருளிய இறைஞானமெனவும் இறைபணியெனவும் உலகின ரெல்லாமுணர்ந்துய்யுமாறு திருப்போரூர்ச்சந்நிதிமுறை யென்றே காரணப் பெயரிட்டு இத்திவ்யப்பிரபந்தத்தைப்பாடி திருவடியிற் சார்த்தியருளினர்.

இனி அப்பிரபந்தத்தினுள் நூன் முகத்திற்கூறியிருக்குந்தனியன்களின் உட்கிடைப்பொருளில் சிலவற்றை யெடுத்துக் காட்டுதும். அவற்றுள் முன்னர் குமாரதேவரால்பாசஞானம்நீங்கப்பெற்றுபசுஞானத்தையடைந்தும்அங்கயற்கண்ணம்மையருளால்பசுஞானம் நீங்கப்பெற்றுபதிஞானத்தையுணர்ந்தும்,உணர்ந்த அப்பதிஞானத்தால் வெப்படி விநாயகரடி நிழலிலிருக்குந்தவமுடைமையாய்மலதிமிரம்நீங்கப்பெற்று வேதாந்தப் பொருளாகிய பரசிவம் தடத்தவடிவமாகவும், சொரூபவடிவமாகவும் அநுக்கிரகஞ் செய்யுமுறைமையை யுணர்ந்தனராதலால் சமரபுரிமாநிம்பத்தண்ணிழற்பாலும்பல்,அமரர்தொழவீற்றிருந்ததன்றித்-திமிரமலம்,போக்கியெமதுள்ளின்பப்பூரணமாயெவ்விடத்துந்,தேக்கறிவுமாயிருந்ததேஎனவும்,அங்ஙனங் குருமூர்த்தியாய் அனுக்கிரகஞ்செய்த ஞானம் சீர்காழியில் சிவஞானப் பாலுண்டு பரசமய கோளரியாய் தெய்வம் சிவமேயென்றுகாட்டிய ஆளுடையபிள்ளையார் கூறிய ஞானமாதலானும் நெடுமாற பாண்டியனுக்கு "வாழ்கவந்தண" ரென்றமுதற்செய்யுளை முதலாகவுடைய திருப்பாசுரத்தாலுண்மையைக்காட்டி வணங்காதிருந்த அம்மாறனை வணங்கச் செய்ததுபோல் தன்னளவே வந்த குமாரதேவரைப்போல் தடத்தவடிவங்காட்டி சந்நிதியிலீர்த்து வேதாந்தமயக் கறுத்து தனது சொரூபவடிவத்தைக்காட்டி முன் வணங்காதிருந்த தன்னை வணங்கச்செய்து தன்முடியிலடிசூட்டினமையையுணர்ந்தனராதலால்"உலகமெலாமீன்றவொருத்திதனப்பாலுண், டிலகுகவிதை மழையீசன்-நிலவு,புயமலைப் பாற்பெய்த சுகப்போரியில்வாழ்வானம், புயமலர்த்தாளென்முடிக்குபபோது" எனவுங்கூறினர்.

இனி முருகக்கடவுள் தமக்குணர்த்திய பதிஞானத்தை விதந்து கூறிய "அருட்கடல்ததும்பி"என்னுஞ் செய்யுளை முதலாகவுடைய பதின்மூன்று செய்யுட்களில் வரும் பதங்களையே அனுவதித்து அவ்வவற்றினுட்கிடைப் பொருளை யெடுத்துக் காட்டுதும்.

முதலாவது செய்யுள் என்னுதலிற்றோவெனின் கடவுள்வாழ்த்துக் கூறுதனுதலிற்று.

இவ்வாழ்த்து மூவகை வாழ்த்துள் எடுத்துக்கொண்டபொருளியல் புரைத்தலால் இது பொருளியல் புரைத்ததெனக் கொள்க. எடுத்துக்கொண்டபொருள், ஞானம். இதற்குச்செய்யுளில்"அருட்கடல் ததும்பி" என்றது. இதனால் ஞானம் அருளையின்றி யமையாதாகலான் அம்மங்கலத்தைக் கருதி அருளை முன்னர்க் கூறியதுமாம்.

இரண்டாவது செய்யுள் (எ-வெனின்) உலகு அந்தத்தைச்செய்யும் கடவுளையே முதலாக வுடையதெனக் கூறுதனுதலிற்று.

இதற்குச்செய்யுளில் அறிவு தன்னினைவிற் கலந்துறுபோதில் அரும்பாசு உயிர் சகம் உளவாம் என்றது. எனவேசகசிவ பரங்கள் அறிவென்று கூறிய இறைவன் சங்கற்பிக்குங்கால் உளவாமென்றாயிற்று. ஆகவே அவ்விறைவன் சங்கற்பிக்கானாயின் உளவாகா என்பது பெற்றாம், அல்லதூஉம் நிச்சயமென்று எனக்கிசைத்தான் என்றதனால் ஏனையோர்கூறுங்கூற்றுக்கள் பூர்வ பக்ஷமென்று மறுத்தவாறுமாயிற்று. இனிச் சித்தாந்தம் வருமாறு.

பரமுதலிய மூன்றும் அநாதிநித்தியமென்றுணர்த்த உளவாமெனவும், முயற்கோடு போல இல்பொருளாகக் கூறுவார் கூற்றுப்படாது உள்பொருளெனப்பட்ட அவையுண்டாதல், பிரபஞ்சோபாதான கரரணமான மாயைக் காதாரமாகிய சத்தியையுடையசங்காரகருத்தாவினாலென்றுணர்த்த அறிவுதன்னினைவிற் கலந்துறுபோதி லெனவுங் கூறினார். இறைவனைச் சங்காரகருத்தாவென்று கூறுவது என்னையெனில் உளவாம் என்றதனால் நாசத்தையுமுடன்றழுவப்படும் படவே அச்செயலைச் செய்வோர் ஏனையோரல்லராதலால் அவனையொழித்து சங்கார கருத்தாவையே கொள்ளக்கிடந்தன.

மூன்றாவது செய்யுள் (எ-வெனின்) உலகந்தோன்று முறைமையைக் கூறுதனுதலிற்று.

இதற்குச் செய்யுளில் நினைவிரண்டாகும் பரநினைவுசகம் உயிர்நினைவு புரிந்ததைப் பிடிக்குமென்றது. எனவே உலகிற்குக் கர்த்தா சங்கார காரணனாயின் அவன் மாட்டுலகம் எவ்வாறு தோன்றுமென்று அவாய் நிற்றலின் அவ்வவாய் நிலைபற்றி பரநினைவு சகமென்றது, பரநினைவு சகமாயின் பரநினைவும் சகமும் பொன்னும்பணியும் போலபேதம் இருளும் வெளியும்போல் பேதாபேதம் என்றுஏனையோர் கூறுங் கூற்றுக்களை உயிர்நினைவுபுரிந்ததைப் பிடிக்குமென்றதனால் பூர்வபக்ஷமாக்கி மறுத்தவாறாயிற்று. இனிச் சித்தாந்தம் வருமாறு.

இறைவனால் உலகுதோற்ற நாசங்களை யடையுமென்று மேற்கூறி யிருக்கின்றோமாதலால் அவை வினையாலன்றியாகா வினை சிற்சத்தியன்றி யாகா ஆகவே சிற்சத்திஇறைவனுக்குத் துணைக் காரணமென்றுணர்த்த, வினையான் முத்தொழிற் பட்டு வரும் சகத்தை பரநினைவு சகமெனவும், முத்தொழிற்பட்டு வருதற்குக்காரணம் பாசமென்றும் அதனையுடையார் ஆன்மாக்களென்றுணர்ந்த உயிர் நினைவுபுரிந்ததைப் பிடிக்குமெனவுங் கூறினார். கூறவே உயிர்களுக்கு மலநீக்க முண்டாமளவும் உலகு புனருற்பவப்பட்டு வருமென்று கொள்ளக் கிடந்தன.

நான்காவது செய்யுள் (எ-வெனின்) ஆன்மா பாசகாரியங்களுக்கு வேறாகி பிரகாசிக்குமாற்றைக் கூறுதனுதலிற்று.

இதற்குச் செய்யுளில் திறமுறு சாக்ஷிதானெனச் சீவன் றெரிந்திடில் சகமப்போது பொய்யாகிவிளங்குறும் என்றது. எனவே மலநீக்கமுண்டாமளவும் உற்பவம் நீங்காதென்பது பற்றி சீவன் படிற்றுளக்கினுக்கு அதுமெய்மையென்றது. மெய்மையென்றவதனால் மெய்யெனப் பட்டதேகமுதலியவைகளே ஆன்மாவாம், ஆன்மாவென்பதொன்றில்லை என ஏனையோர் கூறுங் கூற்றுக்களை திறமுறுசாக்ஷிதானென்றதனால் பூர்வபக்ஷமாக்கி மறுத்தவாறாயிற்று. இனிச்சித்தாந்தம் வருமாறு.

தோற்றக் கேடுகள் வினையானன்றியாகாவென்று முன்னர்க்கூறியிருக்கின்றோமாதலால் வினைபுரிவோன் ஆன்மாவேயன்றிச்சடமாகிய தேகமுதலியவையன்று அஃதால் அவ்வினை சிற்சத்தியாகிய அருளால் நீக்கப்பெற்று தேகமுதலியவைகட்குச் சாக்ஷியென்றுணர்த்த வுணருமான்மா அவ்வருளே கண்ணாக அங்கு நிற்குமென்றுணர்த்த திறமுறு சாக்ஷி தானெனச் சீவன் றெரிந்திடில் பரன்மனமிவற்காம் எனவும், அங்ஙனம் நிற்கவே தேகாதிப் பிரவஞ்சங்கள் அப்பிரகாசத்தையடைந்து ஆன்மாவே பிரகாசமாய் விளங்குமென்றுணர்த்த விரவியசகமப்போது பொய்யாகிவிளங்குறும் எனவுங் கூறினார். கூறவே திருவருட்பிரகாசத்தால் பிரகாசிக்குமாற்றலை; யுடையதாதலால் ஆன்மா பிரகாசமென்றே கொள்ளக்கிடந்தது.

ஐந்தாவது செய்யுள் (எ-வெனின்) ஆன்மப்பிரகாசம் கூறியதால் அதுசித்தென்று தடத்த விலக்கணத்தாற் கூறுதனுதலிற்று.

இதற்குச் செய்யுளில் அகமனஞ் சகத்தை அவ்வுயிர்தான் பிறிபடநோக்கின்மனத்தினின்வயமாம் என்றது. எனவே ஆன்மா பிரகாச முடையதாயினும் செம்பிற் காளிதம்போல்மூலமலந் தன்னோடு உடனாய்நிற்றலின் தன்னினைவால் தன்னையுணருமாறின்றிக் கிடக்கத் தன்னையுணருமாறு கரணங்களைக்கூட்ட ஆன்மா அதன் வயப்படுதலின் மனத்தினின் வயமாம் என்றது. அங்ஙனம் மனோலயப்பட்ட சிவனைச் சிந்தையென்றும் சிந்தையைச் சிவனென்றும் கூறுமொற்றுமையையுணராது ஆன்மாவெனப்படுவது மனமேயென்று ஏனையோர் கூறுங் கூற்றுக்களை அறிவின் மிகப் பரிசிக்கின் நினைப்பறும் என்றதனால் பூர்வபக்ஷமாக்கி மறுத்தவாறாயிற்று, இனிச்சித்தாந்தம் வருமாறு.

வினைபுரிவோன் ஆன்மாவென்று முன்னர்க் கூறியிருக்கின்றோமாதலால் அவ்வினை மனமுதலிய கரணங்களால் புரிவதேயன்றிவேறின்று, ஆகவே வினையியற்றுதற்கு அவை கருவிகளெனவும், அவற்றை ஆன்மா சந்திப்பதெனவும் உணர்த்த உயிர் அகமனஞ் சகத்தை நோக்கின் மனத்தினின் வயமாமெனவும், ஆன்மாபிறவிப் பேதங்களையடைதல் கரணதொந்தனையாலென்றுணர்த்த பிறப்புமீதேனவும், இப்பிறவித் தொந்தனையால் சாக்கிரமுதலிய ஐந்தவத்தைப்பட்டு வருவதென்றுணர்த்த இதன் வயப்படாதெனவும், இவ்வவத்தை சிவத்தை நோக்குங்கால் நீங்கப்பெறுமென்றுணர்த்த அறிவின் மிகப்பரிசிக்கில் நினைப்பறுமெனவும், ஆன்மாகரண

ங்களோடொன்றாகாது சிவத்தோடொன்றுதலே முத்தியாமென்றுணர்த்த கதியுமீ தெனவுங் கூறினார். கூறவே மூலமலத்தோடொன்றாய் அறிவுதோன்றாதிருந்த ஆன்மாவிற்கு மனமுதலிய கரணங்களைக் கூட்டி இவற்றை யறிந்த அறிவையுடையதே ஆன்மாவென்று காட்டிப் பின்னர் அவற்றின் வேறாகியசித்தென்று விளக்குவதால் கரணங்களை ஆன்மாவையறிதற்குத் தடத்தவிலக்கணமுடையன வென்றே கொள்ளக்கிடந்தன.

ஆறாவது செய்யுள் (எ - வெனின்) கரணங்களைக் கூட்டி ஆன்மா வவற்றின் வேறாகிய சித்தென்று விளக்கிய முதல்வன துபகாரத்தைக் கூறுதனுதலிற்று.

இதற்குச் செய்யுளில் அவித்தை மூலம் ஈது அகன்றால் மொய்யறிவென்றது, எனவே ஆன்மா கரணங்களைச் சந்தித்து விடயங்களை இது இது வென்று அளவிட்டு அவற்றைப்பற்றி யானென்றெழுந்து பின்னரென்னுடைய தென்றுணர வந்தும் அங்ஙன முணர்ந்ததன்னை யுணரப்பெறாது அஞ்ஞான வசப்பட்டிருக்கின்றமைபற்றி ஈது மூதிருளவித்தை மூலம் என்றது. அஞ்ஞானவசப்பட்டிருந்தமை கூறவே அவ்வஞ்ஞானத்தை அரசனு மமைச்சனும்போன்ற ஆன்மாவும் கருவிகளுங்கூடி அவ்வஞ்ஞானத்தை நீக்கிக்கொள்ள வல்லும்; இதற்கோ ருதவியும் வேண்டப் படுமா றில்லையென ஏனையோர் கூறுங் கூற்றுக்களை நினைவு மனம் அகங்காரம் அவித்தையென்று ஒவ்வோர் நாமங்களைக் கூறிப்பூர்வபக்கமாக்கி மேற்கூறிய நினைவுமுதலியவைகளி லொன்றாயமையாத மொய்யறிவு வேண்டு மென்று மறுத்த வாறாயிற்று. இனிச்சித்தாந்த வருமாறு.

முன்னர் ஆன்மாவினைபுரிதற்குரிய கருவிகளென்று கரணங்களைக் கூறியிருக்கின்றோமாதலால் அரசனா லேவப்பட்டோர் ஏவியகரும மாத்திரையே செய்வரன்றி அதிகத்திற் செல்லமாட்டாமைபோல இறைவனால் கூட்டிய கருவி கரணங்கள் விடய மறப்பை நீக்கி அவற்றையுணர்த்துமே யன்றி ஆணவவிருளை யொழித்து ஆன்மாவை யுணர்த்தக் கூடிய தன்றெனவும், அன்றியும் அக்கருவிகளும் மனத்தின் காரியங்களே யெனவுமுணர்த்த நினைவுமுதல் அகங்காரமீறாகக் கூறு மிங்கிவைக்கு மூதிருளவித்தைமூலமெனவும், இம் மூலமலம் இறைவன் கூட்டும் சிற்சத்தியின் பதிவின்றி அது நீங்குதல் அமையாமையும் அது நீங்கினாலன்றி சிவசொரூபந்தோன்றாமையுமுணர்த்த ஈதகன்றால் மொய்யறி வெனவுங்கூறினார். கூறவே ஆன்மாகரணங்களைக் கூடி விடயங்களை நுகர்ந்ததும் ஆணவமலம் நீங்கப் பெற்றதும் இறைவன் சந்நிதி மாத்திரத்தானேயாதலால்ஈண்டவ்விறைவனுடையவுபகாரத்தையேகொள்ளக்கிடந்தன.

ஏழாவது செய்யுள் (எ - வெனின்) சிவசத்தால் சத்தீதெனவும், அசத்தீதெனவும், வரைசெய்துணர்த்துதனுதலிற்று.

இதற்குச் செய்யுளில் சச்சிதானந்தம் ஆவரணம் என்றது. எனவே கரணசந்திப்பால் அவனவ ளதுவாயறியப்படும் பிரவஞ்சம் இத்தன்மைத்தெனவும் அவற்றைச் சந்திப்பித் துபகரிக்கும் முதல்வற்றன்மை யித்தன்மைத் தென

வுங் காட்டுவோன் சச்சிதானந்தம் மூன்று, ஆவரணம் மூன்று என்றது. சச்சிதானந்தமென்று குறித்துக்கூறவே இறைவனும்சுட்டுப்பொருள்களிலொன்றே யாதலமையும் எனவும், ஆவரணமென்று கூறவே, அசத்தாதல் சத்காரியவாதத்துக் கிழுக்காமெனவும் ஏனையோர் கூறுங் கூற்றுக்களைத் தழுவு மாவரணமெனவும், ஞானத்தாலச்சமின்றகலுமெனவுங் கூறி,பூர்வபக்கமாக்கி மறுத்தவாறாயிற்று. இனிசித்தாந்தம் வருமாறு.

முன்னரான்மாவிற்கு உபகாரமாத்திரையாகக் கூறிய இறைவனீண்டறிவினாலறியப்படும் சுட்டுப்பொருள்களாகிய அசத்தென்றுணரவாராத சத்தென்றுணர்த்த சச்சிதானந்தமெனவும்,துக்கத்தைத் தருவதும் அறிவின்றிச் சடமாய்க் கிடப்பதும் அநித்தியப் பட்டு வருவதுமா மிலக்கணங்களையுடைய காரியப் பிரவஞ்சமும் பாசமும் அசத்தென்றுணர்த்த ஆவரணம் மூன்றெனவுங் கூறினார்.கூறவே அசத்தெனப்படும் அப்பிரகாசமாகிய பிரவஞ்சத்தைச் சத்தியாற் காரியப் படுத்துஞ் சிவமே சத்தெனவும், தானே காரியப்படுமாறின்றிச் சிவசத்தா லப்பிரகாசமாய்க்கிடக்கும் பாசமே அசத்தெனவுங் கொள்ளக்கிடந்தன.

எட்டாவது செய்யுள் (எ - வெனின்) சத்தையும் அசத்தையுமுணர்வது ஆன்மா வெனவும், அஃதால் அவ்வான்மாசதசத்தென்னும் பெயர் பெறுமெனவுமுணர்த்துதனுதலிற்று.

இதற்குச் செய்யுளில் உலகந்துச்சமென்றுணர்தல் அறிவுருமாயிருத்தலெறன்றது.எனவே சத்திலக்கணமீதெனவும் அசத்திலக்கிண மீதெனவும் கூறி இவ்விரண்டிலக்கணத்தையு முணர்வோனித்தன்மைத்தென எண்டெத்துக் காட்டுவோன் உலகந் துச்சமென்றுணரும் நிச்சயத்தால், கானலென்றுணர்ந்திடும் சமாதியால், அறிவுருவமாயிருக்கும் சதசத்தால் என்றது. அறியப்படுமுலகம் துச்சமாகவும்,கானற் சலமாகவுமாயின் சூனியமென்னும்பொருட்டாய்க் கருதவருமென்று ஏனையோர் கூறுங் கூற்றுக்களை கருதுறு நினைவையடக்கியென்றுகூறிப்பூர்வபக்ஷமாக்கி மறுத்தவாறாயிற்று. இனிச்சித்தாந்தம் வருமாறு

முன்னர் பிரவஞ்சத்தை அசத்தென்றும் அப்பிரகாசமென்றும் கூறியிருக்கின்றேமாதலால் அதனையே வலியுறுத்தி சிவசத்தின்முன் அசத்தாய் நிற்கும் பிரவஞ்சத்தைச் சத்தாகவும் இன்பந்தரு மோர்பொருளாகவும் கருதுதலொழிகவென்றுணர்த்த நினைவு, நிச்சயம் சமாதி யென்னு மிரண்டால் துச்சம் கானலென்றுணர்ந்திடலெனவும், இங்ஙனங் கருதுதலொழியவே சிவசத்தாயும் பிரகாசமாயு முள்ள சொரூபத்தையே அடைந்து அதுவாயிருக்க வேண்டுமென்றுணர்த்த இருவகையாய் முன்னுரைத்தவையின்றி அறிவுருவமாயிருக்கவேண்டுமென்வுங் கூறினார். கூறவே,அசத்தாகிய பிரவஞ்சத்தையும் சத்தாகிய சிவத்தையு முணர்ந்ததுவதுவா யனுபவித்தன் மாத்திரையே யன்றி ஆன்மா அவ்வப்பொருள் களன்றாகலான் சதசத்தென்றே கொள்ளக்கிடந்தன.

ஒன்பதாவது செய்யுள் (எ - வெனின்) சத்தையும் அசத்தையுமுணர்வது ஆன்மாவாதலால் அவ்வான்மா அவ்விரண்டு ஞானத்தையுமுணருமுறைமையை யுணர்த்துதனுதலிற்று.

இதற்குச் செய்யுளில் நிச்சயம் சமாதி என்னுமிவ்விரண்டுஞானங்களும் நிராசையார் மனத்தினிற் கலங்கா, ஆசையார் மனத்தினிற் கலங்கும். எனவே ஆன்மாசார்ந்ததின் வண்ணமாம் படிகவிலக்கணமுடையதாதலால் ஐம்புல்வாசையுட்பட்டவழி அதுவாயும் அவற்றின் வேருயவழி ஞானமாயும் நிற்றலைக் கூறுவான் நிராசையார் ஆசையார் என்றது. நிராசை யென்று குறிக்கவே ஆசையையொழித்தலே சாலும் இறை ஞானம் வேண்டா வென்று கூறுங் கூற்றுக்களை சகசஞானிகள் பொய்ச்சகத்துறினும் கலங்குருர் என்று கூறிபூர்வபக்ஷமாக்கி மறுத்தவாருயிற்று. இனிச் சித்தாந்தம் வருமாறு.

அசத்தாயிருத்தற்குக்காரணம் தற்பிரகாசத்தைக் கீழ்ப்படுத்தி மேலெழுந்த ஐம்புலவாசையாலெனவும், சத்தாயிருத்தற்குக் காரணம் அவற்றைப் பொய்யெனக்கண்டு மெய்கண்டவதனாலெனவும், இரண்டு ஞானங்களும் ஆசையார் மனத்திற் கலங்கும் நிராசையார் மனத்திற் கலங்கா எனவுங் கூறினுர். கூறவே ஆன்மா சத்தாமாத்திரமாய் நின்றவழி ஞானவுணர்வு வியாபக விளக்கமாயும் புலனுணர்வு ஏகதேச விளக்கமாயுங் காணப்படுதலின் இவ்விரண்டு ஞானமும் ஆன்மாவுணருமென்றே கொள்ளக்கிடந்தன.

பத்தாவது செய்யுள் (எ - வெனின்.) ஐம்புலவாசையிற் பட்டுழலும் வாலாமை நீங்கி ஆன்மா சுத்தியாமாறுணர்த்து தனுதலிற்று.

இதற்குச் செய்யுளில் சிவன் பொய்த்தலில் வீடு தேடு மென்றது, எனவே ஆன்மா சிவானுபவத்திற்கும் உரிமை யென்னுந் தன்மையுண்மையால் அதுமாயா ரகிதமுண்டானாலன்றி கூடாதென்பான் கூடஸ்தனென்றது. கூடஸ்தன் என்று கூறவே முத்தியின்பத்தையடைதல் சிவனன்று. சீவசாட்சியாகிய கூடஸ்தனே யென்று ஏனையோர் கூறுங் கூற்றுக்களைச் சீவன்தேடுமென்று கூறிப் பூர்வபக்கமாக்கி மறுத்த வாருயிற்று. இனிச் சித்தாந்தம் வருமாறு.

ஆன்மா சத்தோடு கூடியவழி புலனுணர்வு ஏகதேசமென்று கூறியிருக்கின்றோமாதலால் புலனறிவை யேகதேசமாக்கிய இறைவன் திருவடிஞானம் வியாபகப்படுதலே ஆன்மசுத்தியா மென்றுணர்த்த பிரமம் கூடஸ்தன் மாயாரகிதங்களென்று கூறினுர். கூறவே திருவடி வியாபகத்தால் சோகம்பாவனையைப் பெற்று மாயரகிதனும் சுத்தியைப் பெறுதலின் கூடஸ்தனையும் பிரமத்தொடொன்ருய் மாயாரகிதனென்று கொள்ளக் கிடந்தன.

பதினொன்ருஞ் செய்யுள் (எ-வெனின்) ஆன்மசுத்தியாலடையும் பயனாகிய பாசக்ஷயமாமா றுணர்த்துத னுதலிற்று.

இதற்குச் செய்யுளில் மனத்தின் போதமில் நினைவை பகுத்தடக்கென்றது. எனவே சிவப்பேறெய்தற்குரிய ஆன்மா தனக்குக் காட்டாயிருந்த சிவசொரூபத்தாலும் சிவஞானத்தாலும் தானென் றெருமுதல் தோன்றுமாறின்றி நிற்கவேண்டுமென்று கூற ஏதமில் காட்சிகாண் பவனென்ற இவற்றுள் ஓர்வ

குப்பினால் மனத்தி னினைவைப் பகுத்தடக்கென்றது. சிவசொரூபத்தைக் காண்டன் மாத்திரையே வீடுபேறும். நினைவைப் பகுத்தடக்கென்று கூறுதல் மிகையாமென்று ஏனையோர் கூறுங் கூற்றுக்களை ஓதுருநாமம் யானெனதசுத்தம் சுத்த வாதனைகளென்று கூறி பூர்வபக்கமாக்கி மறுத்தவாறாயிற்று. இனிச்சித்தாந்தம் வருமாறு.

சிவன் முத்தித் திசையின்கண் நாமரூபமாகிய தேகத்தோடு கூடியிருத்தலின் அத்தேகவாசனையால் யானெனதென்பது நிகழுமாதலின் அது நிகழாவண்ணம் ஞான சாதனத்தால் யானென் றெழுதலையடக்கி, சிவசொரூபத்தால் எனதென்பதை யொழித்துநிற்க வேண்டுமென்றுணர்த்த ஓதுருநாமம் யானெனதசுத்தவாசனைகள் மனத்தின்போதமி னினைவைப் பகுத்தடக்கென்றான் என்று கூறினர். கூறவே மனத்தின்போதமும் மாயையமுங் கன்மமும் இறைவனோடேகமாய் நிற்கும்பணியைத் தடைபடுத்தா வாகலான் அஃதே பாசக்ஷயமாமென்று கொள்ளக் கிடந்தன.

பன்னிரண்டாவது செய்யுள் (எ-வெனின்.) பாசக்ஷயமாயவழி பரமேசுரன் சிபாதமணையுமாறுணர்த்துதனுதலிற்று.

இதற்குச் செய்யுளில் அயிலுடன் மயிலும் கோழியுமாடு மழகுடன் படைத்த மெய்க்கடவுள் என்றது. எனவே இறைவனோ டேகமாய் நிற்றலால் தற்போத மொழிந்து அருள்நிலையைப் பெற்றதேயன்றிப் பின் பரமானந்தத்தை விளைவிக்கும் சிவத்துவத்தை யடைவதின்றாகலான் அஃதடைய அன்புநெறி வேண்டு மென்றுகூற அயின்முதலியவற்றை அழகுடன்படைத்த என்றது. அன்புநெறி வேண்டு மென்றுகூறவே இருணீக்கமும் ஒளிவிளக்கமும் உடனிகழ்ச்சி யாயவாறுபோல பசுத்துவநீக்கமும் சிவத்துவ விளக்கமும் உடனிகழ் வனவேயாம். அன்புநெறி வேண்டுமென்றது மிகையாமென்று ஏனையோர் கூறுங் கூற்றுக்களை மெய்க்கடவுளென்று கூறி பூர்வபக்கமாக்கி மறுத்தவாறாயிற்று. இனிச் சித்தாந்தம் வருமாறு.

பரமானந்தத்தை விளைவிக்கும் சிவத் துவத்தையடைய அன்புநெறி வேண்டுமென்று கூறி யிருக்கின்றோ மாதலால் அவ்வன்பு ஞானமன்றி யமையா அஃதால் சரியையாதிகள் ஞானத்திற்குச் சாதனமெனவும், ஞானத்தாற்பெறுவது அன்பெனவும், அவ்வன்பால் துரியாதீத நிலைக்கண்ணதாய சிவத்துவ விளக்க மெனப்படும் பரமசுகம் விளையுமெனவும், அது விளையுங்கால் சிவன் முத்தரது அறிவிச்சைசெயல்கள் அப்பரமசுகத்தைச் சரியை முதலியவற்றால் அனுபவிக்க அடங்காத அவாமீதூருமெனவும், அது மீதூருவதனால் அவர்வேண்டியவாறே அருட்டிருமேனி கொள்வா னென்றுணர்த்த அயிலுடன்மயிலுங் கோழியு மாடும் அழகுடன்படைத்த மெய்க்கடவுளெனவுங் கூறினர். கூறவே சரியையாதிகள் இறைவனோ டேகமாய வழி அவ்விறைவனால் விளையும் பரமசுகத்தையனுபவிக்கும் அனுபவ வேற்றுமையே யென்று கொள்ளக் கிடந்தன.

பதின்மூன்றாவது செய்யுள் (எ - வெனின்.) அசிந்திதனாய்நின்ற பதியை அன்புநெறியிற் றலைப்பட்டோர் சிந்திதனாகக்கண்டு வழிபடுமாற்றைக் கூறுதனுதலிற்று.

இதற்குச் செய்யுளில் அருளமிர்தவாரியின் மூழ்கிட நினையாய் என்றது. எனவே சரியையாதிகள் பாசக்ஷய முண்டாவதற்குச் செய்யும் சாதனங்களேயன்றிச் சிவசொரூபத்தை யுணர்ந்து நிட்டை கூடினார்க்குஇச்சாதனநெறிவேண்டற் பாற்றன்றென்று ஏனையோர் கூறுங் கூற்றுக்களை மடமையின்றடியேன்அருள்வாரியின் மூழ்கிட நினையாயென்றதனால் பூர்வபக்ஷமாக்கி மறுத்தவாறாயிற்று. இனிச் சித்தாந்தம் வருமாறு.

சீவன் முத்தர்க்குப் பரமசுகம் விளையுமெனவும்அச்சுகத்தை யனுபவிக்குங் காற்பவும் அனுபவ வேற்றுமைகள் சரியையாதிகளெனவும் கூறியிருக்கின்றாராதலால் சுகத்தை விளைவிப்பதாகிய சரியையாதிகளியற்றுதற்குஇறைவனைக் கோசரமாம்படி தெளியக் கண்டாலன்றி அவை யமையா. அஃதால் சீவன்முத்தராகிய பரமஞானிகளுக்கு வாக்குமனோதீதனாகிய இறைவன் குருலிங்கசங்கம வடிவங்களாய்க் கோசரிப்பானென்ப துணர்ந்து குடமுனிசெவந்த சடைமுடியிவர்ந்த குரவணி சரணவாரிசனே எனக்கூறினார். கூறவே குடமுனிசெவந்த சடைமுடியிவர்ந்த குரவணி சரணவாரிசனென்றதனால் குருவடிவமும், சுந்தரப்போரி வேலிறை யென்றதனால்இலிங்கவடிவமும்,உனதருளமிர்தவாரி என்றதனால் சங்கமவடிவமும் கொள்ளற்பாற்று. இம்மூன்று வடிவங்களில் அறிவிச்சைசெயல்கள் செல்லுமுறையாவன,—அறிவு குருவடிவத்திலும் இச்சை இலிங்க வடிவத்திலும் செயல் சங்கம வடிவத்திலும் செல்லுமென வுய்த்துணரபாற்று. இவ்வழிபாடு மலவாசனை சிறிதுந் தாக்குதலின்றிச் சிவானந்தத்தை வளரச்செய்வதாகலின் நினைபாயென்று அவ்வழிபாட்டைத் தாம் வேண்டியவாறும்.

முதற்செய்யுளிலும் அருட்கடலென்றெடுத்து இறுதிச் செய்யுளிலும்அருள்வாரியென்றுமுடித்தமையால் அனுவாத முகத்தானமைந்து இப்பதின்மூன்று செய்யுளும் பதிபசுபாசவுண்மைகள் முரண்படாது கிடக்கின்றமைகாண்க. முன்வேண்டியவருள் பரபக்கத்தினரைக் கடிந்து காய்வதற்கு எனவும் பின்வேண்டியவருள் சுபக்கத்தினரைப் புகழ்ந்து இன்படைதற் கெனவும் கொள்ளற் பாற்று. இதற்குச்செய்யுள் மயக்கிற் றளர்ந்துழ்று தென்றதும் 'அருளமிர்தவாரியின் மூழ்கிட நினையாய் என்றதுமாம். அல்லதூஉம் முன்னும் பின்னும் அருளைக் கூறினமையான் அருள்பெறாதார் பரபக்கங்களைக் கடியவறியாரெனவும் சுபக்கமாகிய சித்தாந்த ஞானத்தைவிரும்பிப் போற்றுரெனவுங் கொள்ளக்கிடந்தன.

மெய்கண்டான்றிருவடிவாழ்க.

உ
சிவமயம்.
கணபதி துணை.
வேலுமயிலுந் துணை.

# திருப்போரூர்ச் சந்நிதிமுறை.

## விநாயகர் காப்பு.

### தனியன்கள்.

சமரபுரி மாநிம்பத் தண்ணிழற்பா லும்பு
லமரர் தொழவிருந்த தன்றித்—திமிரமலம்
போக்கியெம துள்ளின்பப் பூரணமா யெவ்விடத்துந்
தேக்கறிவு மாயிருந்த தே.

(இ-ள்.) தே - விநாயகக்கடவுள், சமரபுரி மாநிம்பம் தண் நிழல் பாலும் - சமரபுரி என்னுந் திருப்பதியில் பெரிய வேம்பினது தண்ணிய நிழலின் கீழும், பல் அமரர் தொழ இருந்தது அன்றி - பல தேவகணங்கள் வணங்க விருந்த தல்லாமல், திமிரமலம் போக்கி - அந்தகாரத்தை யொத்த வாணவ மலத்தைப் போக்கி, எமது உள் இன்பம் பூரணம் ஆய் - எமது மனத்தில் பேரின்ப நிறைவாய், எவ்விடத்தும் - எவ்விடத்திலும், தேக்கு அறிவும் ஆய் இருந்தது - நிறைந்த அறிவுவடிவாயு மிருந்தது.

கைப்புமர நிழற்கீழிருந்த பயிற்சியால் எம துள்ளத்து வருங்கால் கைப்பொழித்து வந்தானென்பார் திமிரமலம் போக்கி எனவும், இங்குச் சத்துச்சித்தானந்த வடிவாயிருந்தனனென்பார் இன்பப் பூரணமா யெவ்விடத்தும் தேக்கறிவுமா யிருந்த தே எனவும், உலகத்துள்ள பொருள்களைப் பகுத்தறியாவண்ணம் கட்புலன்களை மறைத்திருக்கும் இருள்போலப் பிறப்பிறப்புகளையும் முத்தி நெறியையும் பகுத்தறியாவண்ணம் மறைத்திருப்பது ஆணவமலமென்பார் திமிரமலமெனவுங் கூறினர். திமிரமலம் போக்கி என்றதனால் ஆசிரியனுயெழுந்தருளினமையும், எம துள்ளின்பப்பூரணமாய் என்றதனால் யான் தியானிக்கு மிடத்துத் தியானிப்பானுந் தானாய் நின்றானென்னுந் தன்மையும், அகத்தி லன்றிப் புறத்தில் எவ்விடத்துந் தேக்கறிவுமாயிருந்த தே என்றதனால் அது ஒழிந்து நிலைதிரிந்தகாலையில் தோன்றும் விடயங்களும் தானாய் நின்ற தன்மையுந் தோன்றுதல் காண்க.

முன்னின்ற உம்மை எதிரது தழீஇய எச்சவும்மை எனவும், இறுதியில் நின்ற உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை யெனவும், உண்மையை

"இடையி லுள்ளன வெல்லா மறைதலால்" என்னும் ஏதுவினால் வருவித்த தெனவுங் கொள்க. இறுதியில் நின்ற இருந்தது என்னும் ஒன்றன்பாற்படர்க்கைவிகுதி தொகுத்தல். இருந்தது ஏ எனப்பிரித்து ஏ என்பதை வழுவமைக்கப்பட்ட உயிர்வருக்கமோனையாகக்கொள்ளில் நிழல்பால் உம்பல் எனப்பிரித்து உம்பல் என்பதற்கு யானைமுகக் கடவுள் எனப் பொருள் கொள்க. தே என்பது பொருளால் உயர்திணையாயினும் சொல்லால் அஃறிணையாதலால் அஃறிணை முடிபுதந்து கூறினர்.

## முருகக்கடவுள் காப்பு.

உலகமெலா மீன்ற வொருத்திதனப் பாலுண்
டிலகு கவிதைமழை யீச—னிலவு
புயமலைப்பாற் பெய்தசுகப் போரியில்வாழ் வானம்
புயமலர்த்தா ளென்முடிக்குப் போது.

(இ - ள்.) உலகம் எல்லாம் ஈன்ற ஒருத்தி தனம் பால் உண்டு - அனைத்துலகும் பெற்றுங் கன்னியாயுள்ள உமையம்மையினது அருள்வடிவாகிய திருத்தனஞ்சுரந்த ஞானப்பால் பருகி, இலகு கவிதை மழை - விளங்குந் திருப்பாசுரங்களாகிய மழையை, ஈசன் நிலவு புய மலை பால் பெய்த - சிவபெருமானது விளங்குந் திருப்புயமாகிய மலையிற் சொரிந்த, சுகம் போரியில் வாழ் வான் - அடைந்தோர்க்கு இன்பத்தை விளைக்கும் திருப்போரூரில் வாழும் அருள் மேகத்தினது, அம் புயம் மலர்த்தாள் - திருவடித் தாமரைமலர், என் முடிக்கு போது - என் சிரத்திற் சூடுதற் கோர் மலராம்.

ஆளுடையபிள்ளையாரை அருணகிரிநாதர் முதலிய பெரியோர் முருகக்கடவு ளம்சமெனக் கூறுதலால், ஒருத்தி தனப்பாலுண் டிலகு கவிதை மழை யீச - னிலவுபொழி புயமலைப்பாற் பெய்த என்றார். சீகாழியில் கவுணியகோத்திரத்தில் திருவவதாரஞ்செய்து, நீராடச்சென்ற தமது பிதாவோடு சென்று திருக்குளக்கரையி லெழுந்தருளிப் பசித்தழும்போது உமையம்மை திருமுலைப்பாலைப் பொன்வள்ளத்திற் சுரந்து ஊட்டியருளின தென்பது புராணவரலாறு.

உ

வேலுமயிலுந்துணை.

# பிள்ளைத்தமிழ்

## காப்புப்பருவம்.

பிள்ளைத்தமிழ் பாடுமிடத்து இரண்டாமாதத்தில் பிள்ளையைக் காக்கவெனத் திருமால்முதல் சந்திரனீருகப் பல கடவுளர் காக்கவென நூலிற்கூறுதல்மரபு. அத்தேவருள் திருமால், பரசிவம், பராசத்தி,விநாயகர், முருகவேள், பிரமன், திருமகள், இந்திரன், கலைமகள், சத்தமாதர்கள், முப்பத்துமூவர் இப் பதினொருவருங் காக்கவென்று சான்றோரால் பத்துநிலங்களுள்முதனிலமாகிய காப்புப்பருவங் கூறப்பட்டு வருகின்றது. இங்குச் சிதம்பரசுவாமிகள் முருகக் கடவுளினது பிள்ளைமைப்பருவத்திற் கூறுதலால் அக்கடவுள் தன்னைக் காக்கவெனக்கூறுதல் அமையாதென்பது கருதி அக்கடவுளையொழித்துத் திருமால் முதல் கலைமகளீருகத் தனித்தனிகூறி அவற்றினிடையில் திருநீற்றையும்உருத்திராக்கத்தையும் ஸ்ரீபஞ்சாக்கரத்தையும் தனித்தனி காப்பாக வைத்துமுப்பத்துமூவரையும் ஏனைத்தேவரையும்,சூரியசந்திரர்களையும் இறுதியில் ஓர்செய்யுளி லடக்கிக் காப்புடைக்கடவுளராக வைத்துக் கூறினர். சூரிய சந்திரர்கள் வயிரவக்கடவுள் முதலியோரைக் காப்புடைக் கடவுளராகக் கூறுதலை,

" திருமா லரனே திசைமுகன் கரிமுகன்
பொருவேல் முருகன் பரிதி வடுகன்
எழுவகை மங்கைய ரிந்திரன் சாத்தன்
நிதியவன் நீலி நிலமகள் மலைமகள்
திருமகள் நாமகள் திகழ்மதி யென்று
மருவிய காப்பினுள் வருங்கட வுளரோ "—எனப் பன்னிருபா-

ட்டியலில் வருஞ் சூத்திரத்தா னுணர்க. பத்துநிலமென்றது—காப்பு, செங்கிரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிறுபறை, சிற்றில்,சிறுதேர்.

அதனை—" சாற்றரிய காப்புத்தால் செங்கீரை சப்பாணி
மாற்றரிய முத்தமே வாரானை—போற்றரிய
அம்புலியே யாய்ந்த சிறுபறையே சிற்றிலே
பம்புசிறு தேரோடும் பத்து."— எனவும் இந்நிலங்கள் மூன்று

மாதமுதல் இருபத்தோராமாதங்காறும் ஒற்றித்தமாதமாகக் கூறுகவென்றூர் ஒருசாரார். " முறைதருமூன்றுதிமு வேழீருந் திங்கள், அறைகநிலம்பத்தும்" என வச்சணந்திமாலையுள் வருதல் காண்க.

பிங்கலர், இரண்டாமாதத்தில் தெய்வங்காக்கவெனவும், ஐந்தாமாதத்தில் செங்கீரைபாடலும், எட்டாமாதத்தில் தாலாட்டுதலும், ஒன்பதாமாதத்

தில் சப்பாணியும், பதினோராமாதத்தில் முத்தமும், பன்னிரண்டாமாதத்தில் வாரானையும், பதினெட்டாமாதத்தில் அம்புலியையழைத்தலும், இரண்டாம் வருடத்தில் சிற்றில் சிதைத்தலும், நாலாம்வருடத்தில் சிறுதேருருட்டலும், பிள்ளைக்கவிக்கு இலக்கணமெனக் கூறினர்.

"பிள்ளைப் பாட்டைத் தெள்ளிதிற் கிளப்பின்
திங்க ளிரண்டிற் றெய்வங் காக்கென
வின்றமிழ்ப் புலவ ரியம்பிய காப்பும்
ஐந்தாந் திங்களிற் செங்கீரை யாடலும்
ஆறாந் திங்களிற் கூறுதல் தாலே
டேழாந் திங்களி னின்னமு தூட்டலும்
எட்டாந் திங்களி லியற்று லாட்டலும்
ஒன்பதாந் திங்களி லுயர்சப் பாணியும்
பத்தினோ டொன்றின் முத்தங் கூறலும்
ஆண்டு வரையி லீண்டுவரு கென்றலும்
மதியீ ரொன்பதில் மதியை யழைத்தலும்
இரண்டா மாண்டிற் சிறுபறை கொட்டலும்
நாலா மாண்டிற் சிறுதே ருருட்டலும்" — என வரும் நூற்பாவா

னுணர்க.

## விநாயகர் துதி.

அண்டகோ டிகளுடன் றந்தவுட லியாவையு
மரியமறை முதல கலையு
மக்கரமு மெய்ப்பதமு மைங்கலையு மந்திரமு
மானபத கதியும் வாக்கு
மண்டியுண் டாகவரு குண்டலியொ டைஞ்சத்தி
மாமுக மெனப் படைத்த
வள்ளிநா யகன்மீது பிள்ளையுந் தமிழ்சொலவென்
மதியினின் றருள்பு ரியுமாற்
பண்டைமா மலதிமிரம் விண்டுபோ கக்கிரண
பானுகோ டிகளென் னவே
பழுவடிய ரககமல மகலாது நின்றொளி
பரப்பியா னந்த முதவி
விண்டுவே முதலான வண்டர்மா முனிவர்நரர்
விக்கின மகற்றி யாளு
மேன்மைதரு போரூரில் நிம்பநீ ழற்குலவு
வேழமுக னிரு சரணமே.

(இ-ள்.) பண்டை மா மல திமிரம் விண்டுபோக - அநாதியாயுள்ள பெரிய ஆணவமலமாகிய அந்தகாரம் ஆன்மாக்களிடத்து நின்று நீங்கியோட, கிரணபானு கோடிகள் என்னவே - கிரணத்தையுடைய கோடி சூரியர்களைப் போல, பழ அடியர் அககமலம் அகலாது நின்று ஒளிபரப்பி-தொன்றுதொட்டுள்ள அடியவரது இதயதாமரையி னின்று நீங்காது திருவருளென்னும் ஒளியை வீசி, ஆநந்தம் உதவி - ஆனந்தத்தைத் தந்தருளி, விண்டு ஏ முதலான அண்டர்மா முனிவர் நரர் - திருமால் முதலிய தேவர்களும் முனிவரும் நரரும் ஆகிய இவர்களது, விக்கினம் அகற்றி ஆளும் - விக்கினத்தை நீக்கி அடிமை கொள்ளும், மேன்மை தரு போரூரில் நிம்பம் நீழல் குலவு - உளமிக்க திருப்போரூரில் வேம்படியி னிழற்கீழ் நீங்காதுலவும், வேழமுகன் இரு சரணம் - யானைமுகத்தையுடைய மூத்தபிள்ளையாரது இரண்டு திருவடிகளும், அண்ட கோடிகள் உடன் தந்த உடல் யாவையும் - பல்லாயிர அண்டங்களோடு அமைந்த தேவசரீரமுதலிய யாவும், அரிய மறை முதல கலையும் -அரிய வேத புராண முதலிய அறுபத்துநான்கு கலைகளும், அக்கரமும் - அகர முதலிய ஐம்பத்தோரக்கரங்களும், மெய் பதமும் - உண்மைவாய்ந்த "நமோநம" முதலிய எண்பத்தொரு பதங்களும், ஐங்கலையும் மந்திரமும் - நிவிர்த்திகலை முதலிய பஞ்சகலைகளும் ஈசானமுதலிய பதினொரு மந்திரங்களும், ஆன பதகதியும் - அமைந்த காலாக்கினி புவனமுதலிய இருநூற்றிருபத்திநாலு புவனங்களும், வாக்கும் - சூக்குமை முதலிய நான்கு வாக்குகளும், மண்டி உண்டாக வரு குண்டலியொடு - ஒன்றன்பி னொன்றாகத் தொடர்ந் துண்டாகக் குடிலாசத்தியோடு, ஐஞ்சத்தி மாமுகம் என்ன படைத்த - பராசத்தி முதலிய ஐந்து சத்திகளையும் பெருமை வாய்ந்த திருமுகமெனப் பெற்ற, வள்ளிநாயகன் மீது - வள்ளிநாய்ச்சியாருக்கு மணவாளனாகிய முருகப்பெருமான்மேல், பிள்ளையம் தமிழ் சொல மதியில் நின்று அருள் புரியும் - பிள்ளைத்தமிழ் சொல்ல என்னுடைய அறிவினின்று அருள்செய்யாநிற்கும்.

அண்டகோடிகளுடன் றந்தவுட லியாவையும் என்றது - தத்துவங்களை, அரியமறைமுதல கலையும் என்றது வாக்கின் காரியப்பாடுகளை, அக்கரம், பதம், ஐங்கலை, மந்திரம், பதகதி முன்னர்க்கூறிய தத்துவம் என்றவை ஆறத்துவாக்களை. மறைமுதலியகலைகட்கும் பதங்கட்கும் அக்கரங்காரணமாதலால் அவற்றிடையே அக்கரமுமெனவும், நிவிர்த்தியாதிகலைகள் ஏனைக் கலைமுதலியன தோன்றுதற்கும் ஒடுங்குதற்குங் காரணமாதலால் ஐங்கலையை அவற்றிற் கிடையிலும்,தோற்றத்திற்குக் காரணம் பதங்களாதலால் புவனமென்பதுதோன்றப் பதகதியுமெனவும்,நிவிர்த்தியாதி கலைகளைப்பற்றுக்கோடாகப்பற்றி வைகரிமுதலிய வாக்குகணிற்றலால் வாக்கை யிறுதியிலும் இவை முறையே தோன்றுதற்குக் காரணம் குடிலாசத்தி யாதலால் மண்டியுண்டாகவரு குண்டலியொடு எனவும், இவை காரியப்படுதல் சிவசத்தியாகிய காரணத்தாலாதலால் அவையே திருமுகமாகக் கொண்டனனென்பதுதோன்றக் குண்டலியொடைஞ் சத்தி மாமுக மெனவும், பிள்ளைமைப் பருவத்தில் காப்பு முதலிய பத்து நிலங்களுந் தோன்றக்கூறுதல் பிள்ளைத்தமிழாதலால் பிள்ளையந் தமிழ் எனவும்.

அது இடையூறின்றி முடிவுபெறுதற்கு இருபொருள்பட நின்ற விநாயகனென்னுஞ் சொல்லாற்றலில் விக்கினத்தை நீக்கியருளும் விநாயகனென்பது தோன்ற விக்கின மகற்றி யாளும் வேழமுக னிருசரணம் என்மதியினின் றருள் புரியுமால் எனவுங் கூறினர். செய்யுளாதலால் அத்துவாக்களை முன்பின்படக் கூறினர். இருபொருளாவது ஒன்றுதொடங்குவோர் தன்னை வழிபட்டுவணங்காது முயலுவராயின் அதற்கு விக்கினமும்,வணங்கிமுயலுவோர்க்கு விக்கினத்தை நீக்கியருளுதலுமாகிய காரணத்தால் வந்த திருப்பெயராதலால் இருபொருள்பட என்றும்.

## திருமால்.

பூமேவு முண்மைப் பொறிச்சிறகர் வண்டினம்
　　பொங்கரின் விருந்த யர்தரும்
போரூரின் முருகனைச் சீர்மேவு குமரனைப்
　　புனிதனா னக்கு ரவனைக்
காமேவு கடவுட் பசுந்துணர் விரிந்துநறை
　　கடிமணத் தொடுபி லிற்றுங்
கண்ணகன் னிழலரசு சசிகணவ னுக்குதவு
　　கந்தவே ளைப்பு ரக்க
தூமேவு ஞானசத் திக்கடலின் மொண்டுசிற்
　　சொலிதசத் துவப்பொ ருப்பிற்
றோமற விரிந்துலக மெங்கும் பரந்துயிர்த்
　　தொகைவகைப் பயிர்க டழையத்
தேமேவு மதுரம் பழுத்தொழுகு மென்மொழித்
　　திருமின் கலந்து மிளிரச்
செய்யபே ருண்மாரி பொய்யாது பொழிகின்ற
　　செங்கட் கருங் கொண்டலே.

திருமால் காப்புடைக் கடவுளாதலால் திருமாலைப் பிள்ளைத்தமிழில் முன்னர்க் கூறுவது மரபென்பதை.

“காப்பு முதலிசைக்குங் கடவு டானே
பூக்கமழ் தண்டுழாய் புனைந்தவ னுமவன்
காவற் கிழமைய னாத லாலும்
பூவின் கிழத்தியைப் பொருந்துத லானும்
முடியுங் கடகமும் மொய்பூந் தாருங்
குழையும் நூலும் குறுமணிப் பூணும்
அணியுஞ் செம்ம லாத லானும்
மன்னுறு பிரமனைத் தருத லாலும்
முன்னுற மொழிதற் குரிய னுமெனப்

பன்னி யுரைத்தனர் பாவலர் தாமே.'' — என வரும் பிங்கலநூற் பாவா னுணர்க.

(இ-ள்.) தூமேவு ஞானசத்திக் கடலில் மொண்டு - புனிதம் வாய்ந்த ஞானசத்தி யென்னுங் கடலில் முகந்து, சித் சொலிதம் சத்துவப் பொருப்பில் - அந்த ஞானத்தின் விளக்கம் வாய்ந்த சாத்துவித குணமென்னும் மலையில், தோம் அற இவர்ந்து - குற்றமற வேறிப்பரந்து, உலகம் எங்கும் பரந்து உயிர்த் தொகை வகை பயிர்கள் தழைய - உலகனைத்தும் பரவிச் சீவராசிகளாகிய பகுப்பமைந்த பயிர்கள் தழைத்தோங்க, தேமேவும் மதுரம் பழுத்து ஒழுகு மென்மொழி திருமின் கலந்து மிளிர - தேன்போலும் மதுரங் கனிந்தொழுகும் மெல்லிய சொற்களையுடைய இலக்குமியாகிய மின்னல் கலந்து ஒருபால் விளங்க, செய்ய பேர் அருள் மாரி பொய்யாது பொழிகின்ற செங்கண் கருங் கொண்டல் - நடுவுநிலைமை வாய்ந்த பெரிய திருவருளென்றும் பொய்க்காமல் பொழியாநின்ற சிவந்த கண்களையுடைய திருமாலென்னுங் கரியமேகம்,பூமேவும் உண்மை பொறி சிறகர் வண்டு இனம்-தாமரைகள் நிறைந்த பொய்கைகளில் பரந்து திரியும் பொறியமைந்த சிறகுகளையுடைய வண்டின் கூட்டங்கள், பொங்கரின் விருந்து அயர்தரும் - சோலைசெய்யும் விருந்தினையுண்டு இசைபாடும், போரூரின் முருகனை-திருப்போரூரி லெழுந்தருளிய முருகக்கடவுளை, சீர்மேவு குமரனை-பொலிவமைந்த பாலபருவ முடையவனை, புனித ஞானக்குரவனை - மலரகிதமாகிய ஞானாசாரியனை, கா மேவு கடவுள் பசுந்துணர் விரிந்து நறை கடிமணத்தொடு பிலிற்றும் கண்அகன் நிழல் அரசு - கற்பகச்சோலையில் அமைந்த தெய்வத்தன்மையுடைய பசிய பூங்கொத்துகளவிழ்ந்து தேனை வாசனையோடு வீசும் இடம்பரந்த நிழற்கீழரசு செய்யும் அரசியலை, சசி கணவனுக்கு உதவு கந்தவேளை புரக்க-இந்திராணிக்கு நாயகனாகிய இந்திரனுக்குத் தந்தருளிய குமாரக்கடவுளைப் பாதுகாக்க.

ஞானசத்தியால் காவற்றொழிலைத் திருமால்படைத்தலால் ஞானசத்திக் கடலின்மொண்டு எனவும், சத்துவகுணம் ஞானவடிவாயிருத்தலால் சிற்சொலிதமெனவும், காவற்றொழில் சத்துவகுணத்தோடு நிகழ்தலால் சத்துவப் பொருப்பில் எனவும், மழைபெய்தல் ஒரு காலத்துப் பொய்க்கினும் பொய்க்கும் காப்புத்தொழில் என்றும் பொய்யாமையால் முக்காலமுந் தோன்ற, நிகழ்காலந்தந்து பொய்யாது பொழிகின்ற எனவும், திருப்போரூரிலுள்ளோர் இரவும்பகலும் விருந்தொழியாரென்னும் இறைச்சிப்பொருள் தோன்ற அந்திப் பொழுதில் தாமரைகுவிதலால் பொய்கைவிருந்தொழியச்சோலைவண்டுகளுக்கு விருந்து செய்யுமெனக் கூறுவராதலால் பூமேவுவண்டினம் பொங்கரின் விருந்தயர்தரும் போரூர் எனவும், கட்டிளமையுடையோனாதலால் முருகனெனவும், என்றும் பாலபருவ முடையோனாதலால் சீர்மேவுகுமரனை எனவும்-சிவபெருமானுக்குப் பிரணவத்தின் உட்கிடையை யுணர்த்தினமையால் புனிதஞானக் குரவனை எனவும், சூரபன்மனாலிழந்த அரசியலை இந்திரனுக்குத் தந்தமையால் அரசு சசிகணவனுக்குதவும் எனவும், வேள்என்னும் பொதுப்பெயரின் பொது

லமையைநீக்கி யாவருந் தன்னைவேட்கச்செய்வோன்என்னும்பொருள்தோன்றக் கந்தனென்னுஞ் சிறப்புப்பெயர் முன்றந்து கந்தவேளையெனவுங் கூறினார்.

**சதாசிவம்** - வேறு.

காரென வாருயிர் மீதரு ளேபொழி
கண்ணனை விண்ணவனைக்
கந்தனை யெந்தையை வந்தனை யன்பர்
கடும்பகை கொன்றவனைச்
சீர்சம ராபுரி யாளனை மாளுறு
தேவர்ம ணாளனையோர்
சின்மய ரூபனை நன்மையெ லாமுறு
சேயினை யருள்புரிக
வோர்வரி தாமுயி ரியாவையு நேர்வினை
யொத்து மலப்பகைபோ
யொண்சுக மேவிடவைந்தொழி றந்திடு
முத்தம சிற்பரமாய்ச்
சேருரு வாயரு வாயிரு வகையுஞ்
செறிபொரு ளாய்நிறைவாய்ச்
செம்முக மைந்தொடு செம்மையி னின்றருள்
செய்த சதாசிவமே.

(இ-ள்.) ஓர்வு அரிதாம் உயிர் யாவையும் - அளவிடுதற்கரிய உயிர்த்தொகைகளனைத்தும், வினைநேர்ஒத்து மலப்பகைபோய் ஒண் சுகம் மேவிட - இருவினைப்பயனு நேரொத்தலாகிய திருவருட்பதிவு வந்து ஆணவ மலப்பகையொழிந்து ஒள்ளிய சிவபோகத்தை நுகர, ஐந்தொழில் தந்திடும் உத்தமசிற்பரமாய் - சிருட்டிமுதலிய பஞ்சகிருத்தியங்களையும் ஆன்மாக்கள் பொருட்டு நிகழ்த்தும் மலரகிதமாகிய நிட்களவடிவாய், சேர் உருவாய் - பிரமன் முதலாக அமைந்த நான்கு உருவாய்,அருவாய்-நாதமுதலிய நான்குஅருவாய், இருவகையும் செறிபொருளாய் - உருவம் அருவம் என்னும் இரண்டுவடிவமும் அமைந்த சதாசிவமாகி, நிறைவாய்-யாவும் தன்கீழ் வியாத்தியாய்த்தான் வியாபகமாய், செம்முகம் ஐந்தொடு செம்மையில் நின்று அருள்செய்த சதாசிவம் பொலிவமைந்த திருமுக மைந்தோடு ஒருபாற் கோடாதுநின்று அருள்செய்த சதாசிவமானது,கார்என ஆர்உயிர்மீது அருளே பொழி கண்ணனை-கைம்மாறு கருதாத மேகம்போல அரிய உயிர்களின்மேல் திருவருளைப் பொழியுந் திருக்கண்களையுடையவனை, விண்ணவனை - தேவர்களுக்குத் தேவனாயுள்ளவனை, கந்தனை ஆறு திருவுருவுந் திரண் டோர் திருவுருவாய் நின்றவனை, எந்தையை - எனது தந்தையாயுள்ளவனை, வந்தனை அன்பர் கடும்பகை கொன்றவனை - வழிபட்டு வந்தனைசெய்யும் இந்திரன் முதலிய தேவர்களுக்குக் கொடிய பகையாயுள்ள

கடிய சூரபத்மன் முதலிய அசுரர்களை உயிர் வாங்கினவனை, சீர் சமராபுரி யாளனை - சிறப்புவாய்ந்த திருப்போரூரில் எழுந்தருளினவனை, மாழ்குறு தேவர் மணாளனை-கற்பங்களி னிறுதியில் தேய்ந்தொழியுந் தேவர்களுக்குத் தலைவனுயுள்ளவனை, ஓர் சின்மயரூபனை - ஓர் சின்மயவடிவாயுள்ளவனை, நன்மை எல்லாம் உறு சேயினை - நன்மைகளனைத்தும் ஒருங்கே யமைந்த இளம்பருவமுடையவனை, அருள் புரிக - அருள்புரிந்து காக்கக்கடவது.

அன்பர் கடும்பகை கொன்றவனை அடியவர்க்குக் கொடிய காமம் வெகுளி மயக்க மென்னும் பகையை யொழித்தவனை யெனப் பொருள்கொள்ளுதலு மொன்று. கற்பகாலத்தில் அழியும் பெற்றியோர்க்கு அழியாது நிற்குமொருவனே தலைவனுகவேண்டுமாதலால் மாளுறு தேவர் மணாளனை எனவும், சிவசத்திவடிவாய் நிற்றலால் சின்மயரூபனை எனவும், இம்மைப்பயனும் மறுமைப்பயனும் பலதிறப்படுதலால் நன்மை எல்லாம் எனவும், அவைகளைத் தன்பொருட்டன்றி ஆன்மாக்களின்பொருட்டுஉடையவனுதலால் உடைமையை உடையவன்மேலேற்றி நன்மையெலாமுறு சேயினை யெனவும், அழுக்காலழுக்கை யொழித்து ஆடையைத் தூய்மை செய்தல்போல ஆன்மாக்கள் இருவினையொப்புவாய்ந்து மலப்பிணிப்பொழிந்து பேரின்ப நுகரத் தனு கரண புவன போகங்களாகிய பந்தங்களை யவ் வான்மாக்களுக்குத்தந்து அப் பந்தத்தால் மலபந்தத்தை யொழிக்க அரு,உரு,அருவுருவென மூத்திறப்பட்டுநிற்கும் அப் பந்த முற்றும் தத்துவ வடிவாதலால் மூத்திறப்பட்டுநின்ற அத் தத்துவவடிவங்களை யதிட்டித்துநிற்கும் மூத்திறத் தொன்பது வர்க்கங்களினும் நின்றவனென்பார் ஓர்வரிதாமுயிரியாவையு நேர்வினை யொத்து மலப்பகைபோ யொண்சுக மேவிட வைந்தொழி றந்திடுஞ் சேருருவா யருவா யிருவகையுஞ் செறிபொருளாய் எனவும், ஒருவனே பல வேடங்கட்டி அவ்வவ் வியல்பினனுய் நடித்துத் தன்னியல்பிற் சிறிதுந் திரியாது நிற்றல்போல வேற்றுமையின்றி நின்று அவ்வத் தொழில்களைத் தனது சமவாயசத்தியானடத்தித் தன்னியல்பிற் சிறிதுந் திரிபின்றி நிற்குஞ் சிவமென்பார் உத்தம சிற்பரமாய் எனவும்கூறினர். ஈசான முதலிய ஐந்து திருமுகங்களும் படிகம் கோங்கு முதலியவைகளைப்போல நிறமுடையவ்வயா யிருத்தலிற் பொதுவாய்ச் செம்முகம் என்றதற்குப் பொலிவமைந்த என்றும். (உ)

**பராசத்தி - வேறு.**

விடையவா வாரகஞ் சொருபவா வாரக
மெனப்பகர் விதங்க ளாகி
விரிமலக் கங்குலுயிர் விடயஞா னத்தினொடு
மிகுசொருப ஞானத் தையுந்
தடையதா கச்செய்த தனுவாதி நாலையுந்
தருமாயை யறிவி னாலுந்
தண்ணருட் பேரறிவி னாலுமத் தடைவிடுந்
தகுபரையை யஞ்ச லிப்பாம்

அடலினொ டெழுமவுண ருடல்வேறு கூறுபட
வலகைவே தாள பூத
மாடப் பெருங்கூகை கூவப் பருந்துநிழ
னீடச் செவந்த வடிவே
னொடியிலே வியகுகனை நெடியமான் மருகனை
நிகரில்போ ரூர்மு ருகனை
நுணியகூ ரறிவுகொடு கருதுவோ ரமுதமென
நுவலுமோ ரருள்பு ரியவே.

(இ-ள்.) அடலினோடு எழும் அவுணர்உடல் வேறு கூறுபட-வலிமையோடு போர்க்கெழுந்த அசுரரது உடல் பிளவுபடவும், அலகை வேதாள பூதம் ஆட - அதனை நுகர்ந்து பேய்களும் பூதங்களும் ஆடவும், பெரும் கூகை கூவ - பெரிய கூகைகள் கூவவும், பருந்து நிழல் நீட - கவரவந்த பருந்து பந்தலிடுதலால் நிலமெங்கும் பரவவும், செவந்த வடிவேல் நொடியில் ஏவிய குகனை - பகைவ ருதிரத்திற் றோய்ந்து செவந்த கூரியவேலை நொடிப்பொழுதில் ஏவிய குகனை, நெடிய மால் மருகனை - நிலங்கடந்த நெடியோனாகிய திருமால் மருகனை, நிகரில் போரூர்முருகனை - ஒப்பில்லாததிருப்போரூரி லெழுந்தருளிய முருகக்கடவுளை, நுண்ணிய கூர் அறிவு கொடு கருது வோர் அமுதம் என்ன நுவலும் ஓர் அருள் புரிய - நுண்ணிய கூரிய வறிவைக்கொண்டு சிந்திப்போர்க் கோரமுத மென்று எடுத்துக் கூறும் ஒப்பில்லாத திருவருள் செய்து பாதுகாக்க, விடைய ஆவாரகம் சொருப ஆவாரகம் என பகர் விதங்களாகி - விடய தாரகம் சொருப தாரகம் என வெடுத்துக் கூறும் வகைகளாகி, விரி மலம் கங்குல் - பரந்த ஆணவமலமாகிய இருளானது, உயிர் - ஆன்மகோடிகளுக்கு,விடய ஞானத்தையும் மிகு சொருப ஞானத்தையும்-அவ்விடய ஞானத்தோடு மிக்கசொருப ஞானத்தையும்,தடையது ஆக செய்த தனுவாதி நாலையும்—தடைசெய்தற் கெல்லையாகிய தனு முதலியநான்கையும், தரும் மாயை அறிவினும் - தாராநின்ற மாயையினது விளக்கத்தாலும், தண் அருள் பேர் அறிவினும்-தண்ணிய திரோதாயி சத்தியென்னும் பெரிய விளக்கத்தாலும், தடை விடும் தகு பரையை - அவ் வாணவ்மலமென்னும் தடையை யொழித்து அவ்வான்மாக்களை முத்தியிற் புகுத்தும் நடுவுநிலைமையையுடைய பராசத்தியை, அஞ்சலிப்பாம் - வணங்குவாம்.

ஆவாரகம் என்றது இங்குக் காரணப்பொருளில்வந்ததாரகத்தை-ஆணவமலமானது கேவலத்தில் ஆன்மாக்களினது இச்சா ஞானக் கிரியைகளி னிகழ்ச்சி சிறிதுந் தோன்றாமல் மறைத்துநிற்ப தாதலால் விரிமலக்கங்குல் உயிர் விடய ஞானத்தினொடு மிகுசொருபஞானத்தையும் தடையதாகச் செய்தெனவும், மாயாமலமானது சகலத்தில் தனது காரியப்பாடாகிய கலையாதி முப்பத்தொரு தத்துவங்களால் அவற்றை விளக்கிநிற்றலால் விடையவாவாரகம் சொருபவாவாரகம் எனப்பகர் விதங்களாகி யெனவும்,அவ் விரண்டும் தனு கரண

புவன போக மென்னும் நான்கனிடத்தும் புலப்பட்டு நிற்றலால் ஆகி என்னும் வினையெச்சத்திற்குத் தருமென்னும் பயனிலைதந்து நாலையும் தரும் என முடித்தும், ஆன்மாக்கள் மலபரிபாகம் அடைதற்குத் தனுமுதலியநான்குங் காரணமாதலாலும் அது நுகர்ந்து கன்மமல முடிந்தபின் திரோதாயி அருட்சத்தியாய் நின்று திருவருளடையச் செய்தலாலும் தண்ணருட்பேரறிவினலும் எனவும், அவைமலபரிபாகம் வருவித்தற் கேதுவாதலால் மூன்றனுருபு தந்து அத்தலைட்டவிடும் எனவும், பக்குவம்வாய்ந்த ஆன்மாக்களுக்கு அருளுதற்குக் கண்ணோட்டமின்றி நடுநிற்றலால் தற்பரையை எனவுங் கூறினர். கரணம், போகம் விடையம். தனு, புவனம் சொருபம். (ரு)

**விநாயகர்** - வேறு.

பகவதி கரவணை மிசைதுயில் பயிலு
மிகலறு குமரனை யினிதருள் புரிக
வகரமு முகரமு மகரமு மாகித்
திகழுறு பிரணவ மெழுசிறு களிறே.

**(இ-ள்.)** அகரமும் உகரமும் மகரமும் ஆகி - அகரமும் உகரமும் மகரமும் என்னும் அக்கரங்களின் வடிவாகி, திகழ் உறு பிரணவம் எழு சிறு களிறு - விளங்காநின்ற பிரணவமே ஒருருக்கொண்டெழுந்த யானையிளங் கன்று, பகவதி கரஅணைமிசை துயில் பயிலும் - உமையம்மையினது குடங்கையாகிய மெத்தையின்மேல் துயில் கூரும், இகல் அறு குமரனை இனிது அருள் புரிக - அடைந்தோர்க்கு மாறுபாடின்றி நின்ற குமாரக்கடவுளை இனிதாக வருள்புரிந்து பாதுகாக்க.

கசமுகாசுரன் முதலிய அசுரர்கள் தீங்கு செய்தலால் மன மெலிந்து திருமால் முதலியோர் தமக்கு இடையூறு செய்தற்கு அவ்வசுரர்களியற்றுங் கருமமழியவும், தாம் அவர்களை வெல்லுதற்குச் செய்யுங் கருமம் இனிதோங்கவும் ஓர் கடவுள் வேண்டுமெனக் கருதிச் சிவபிரானை வழிபட்டுவணங்க, அச்சிவபிரான் காட்சி தந்து அவ்வாறே யருள்வோமென் றருள்செய்து உமையம்மையோடு அங்குள்ள சித்திரச்சாலையிற் சென்று, சித்திரங்களைக் காட்டி வரும்போது குஞ்சராகாரங்களாகப் பர பிரணவமும் அபர பிரணவமும் இருத்தலை நோக்கி அவ்வாறிருவரும் புணர்ந்தருளும்போது பிரணவவடிவாய் மூத்தபிள்ளையார் அவதரித்தமையால் பிரணவ மெழுசிறு களிறேஎனவும், அது மூன்றக்கரங்களாக விருத்தலால் அகரமுமுகரமு மகரமு மாகி எனவுங் கூறினர். பிரணவம் மூன்றக்கரவடிவா யிருத்தலை "ஓதரு மகாரம் உகாரமேமகார முதித்திடும் பிரணவம்" என வருஞ் செய்யுளானுணர்க. பகவதி - ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் என்னும் அறுகுணங்களையும் உடையவள். (சு)

**திருநீறு** - வேறு.

சோதி மகரக் குழைசெறிசுந் தரத்தோ ளீரா
றுடையானைச்
சுருதி யிரைக்குந் தண்டையந்தாட் டுணையென் முடியிற்
பொறித்தானை
மாது வளருஞ் சமரபுரி வாழ்வை வானோர்
சிகாமணியை
வடிவே லரசை மயிலரசை வந்து புறங்காத்
தளித்திடுமா
லாதி பகவன் ஞானவடி வழலிற் பூத்து
நித்தியமா
யணிந்தோர் தமக்கு வசிகரமா யருந்தி னோர்கட்
காரமுதாய்
நீதி யறியும் பசுமலத்தை நீக்கு மொருநற்
குறிகாட்டி
நிகழ்பே ரின்பக் கடலூட்டி நின்ற புகழ்வெண்
டிருநீறே.

(இ-ள்.) ஆதிபகவன் ஞானவடிவு அழலிற் பூத்து - இறைவனது ஞானவடிவாகிய நெருப்பில் தோன்றி நித்தியம் ஆய்-அவ்விறைவனைப்போல நித்தியமாய், அணிந்தோர்தமக்கு வசிகரம் ஆய்-தன்னை யணிந்தோர்க்குக் கருதியதைத் தருவதாய், அருந்தினோர்கட்கு ஆர் அமுது ஆய்-தன்னை உண்டோர்க்குப் புறத்திலுள்ள நோயைப் போக்கும் பெறுதற்கரிய அமுதமாய், நீதி அறியும் பசுமலத்தை நீக்கும் ஒரு நல்குறி காட்டி - நிஷேதத்தை யொழித்து விதிவழி யறிந்தொழுகும் ஆன்மாக்களோ டொற்றித்த ஆணவம் காமியம் மாயை யென்னும் மும்மலமாகிய அகநோயை நீக்கியருளும் ஒரு நல்ல அறிகுறியை யுணர்த்தி,நிகழ் பேரின்பம் கடல் ஊட்டி நின்ற புகழ் வெண் திருநீறு-என்றும் இடைவிடாது நிகழும் பேரின்பமாகிய கடலினை அவ்வான்மாக்களுக்குண்பித்து நிலைபெற்ற புகழ்வாய்ந்த திருநீறானது, சோதி மகரக்குழை செறி சுந்தரத்தோள் ஈராறு உடையானை - ஒளிவாய்ந்த மகரகுண்டலஞ் செறிந்த அழகிய பன்னிரண்டுதிருப்புயங்களையுடையவனை,சுருதி இரைக்கும் தண்டையந் தாள் துணை - வேதங்கள் முழங்குந் தண்டையையணிந்த அழகிய தனது இரண்டு திருவடிகளையும், என் முடியில் பொறித்தானை - எனது தலையில் சூட்டினவனை, மாது வளரும் சமரபுரி வாழ்வை - திருமகள் இடைவிடாது உறையும் திருப்போரூரே தமக்கு வாழ்க்கையிடமாக வுடையவனை, வானோர் சிகாமணியை - தேவர்கள் சூளாமணியை, வடிவேல் அரசை மயில் அரசை வந்து புறங்காத்து அளித்திடும் - வடித்த வேலேந்திய அரசினை மயிலேறிய அரசினை வந்து புறத்திற் காக்காநிற்கும்.

எல்லாத் தேவர்கட்கும் முன்னுள்ளவனாதலால் ஆதி எனவும், பகவன் ஐஸ்வரியமுதலிய அறுவகைக் குணங்களையுடையவன் என்னும் பொருளினதாதலால் ஆதி யென்னுஞ் சிறப்புப்பெயர் பகவனென்னும் பொதுப்பெயரை விசேடித்து வந்த இருபெயரொட்டுப் பண்புத்தொகையாய்ச் சிவபெருமானுக்கே யுரிய திருநாமங்களென்பது தோன்ற ஆதிபகவனெனவும், விபூதிசிவாக்கினியிலும் ஓமாக்கினியிலும் தோன்றுதலாலும் அவ்வக்கினி சிவபெருமான் திருவுருவாதலாலும் அச்சிவபெருமானே மகாபற்பமாதலால் ஞானவடிவழலிற் பூத்து எனவும், சிவபெருமான் நித்தியமாதல்போல அவன் திருவுருவமும் நித்தியமென்பது தோன்ற நித்தியமாயெனவும், சிவபெருமானைக் கருதினவர்க்குக் கருதியது கைகூடுதல்போல அவரது திருவுருவிற் றோன்றியதால் காரண காரிய ஒற்றுமை நயந்தோன்ற அணிந்தோர்தமக்கு வசிகரமா யெனவும், இறைவனருளாற்றோன்றிய வமுது தன்னை யுண்போர்க்கு நரை திரை மூப்பை மாற்றுதல்போல அவன்பாற் றோன்றியதான் தன்னை உட்கொண்டோர் பிணிகளை ஒழித்தருளுதலால் அருந்தினோர்கட் காரமுதாய் எனவும், மலநீக்கமுறுதற்கு ஆன்மாக்கள் வேதாகமங்களின் விலக்கினையொழித்து விதியினையுணர்வேண்டுதலால் நீதி யறியும் பசு எனவும், விதிவழி நின்ற அவ்வான்மாக்களின் மும்மலங்களையும் இறைவன் நீக்கியருளுவானென்பதற்குத் தான் மூன்று ரேகை வடிவாய் நிற்றலால் பசுமலத்தை நீக்கும் ஒரு நற்குறிகாட்டி எனவும், மலபரிபாகம் வந்தவழிப் பேரின்ப மீதூர்தலால் நிகழ்பேரின்பக் கடலூட்டி எனவும், மேற்கூறியவற்றிற்கு இறைவனைப்போலத் தானொரு முதலாய் நிற்றலால் நின்றபுகழ் வெண்டிருநீறெனவும், மாது என்பதற்குப் பொருள் அழகு,அது பண்பாகுபெயராய்த் திருமகள்மேல்நிற்றலால் மாதுவளரும் எனவும், ஏனைத் தலங்களில் ஒருகால் நீக்கம் வரினும் வரும் இத்தலத்தில் என்று நீக்கமின்மையால் சமரபுரிவாழ்வை எனவும், தனது அன்னையாகிய உமையம்மையே வடிவேலாகக் கொண்டருளினமையால் வடிவேலரசை எனவும், அவ்வேலால் தேவர் பகைஞனாகிய சூரனை ஊர்தியாகக் கொண்டருளினமையால் மயிலரசை எனவும் கூறினர். திருமால் பிரமனுக்குக் கடந்துநின்றோன் உருத்திரன் ஒருவனேயாதலால் அவனுக்கு ஆதியெனவந்தது காரணம்பற்றிவந்த சிறப்புப்பெயர். பிரமன்முதலியோர்க்குப் பொதுவாய் நின்ற பகவனென்னும் பெயர்ப் பொதுமையை ஒழித்து "சாரைப்பாம்பு" என்னுந் தொடர்போல தனக்குரித்தாக விசேடித்து நின்று ஒருபொருளையே சுட்டிநிற்றலால் சிவபெருமானென்றும். மகாபற்பம் பற்பமென்றதை,

"மருவுமற முழுதுணர்ந்தோய் மகாபற்பம் பற்பமென
இருவகையா கும்பற்ப மென்றுரைப்ப ரெஞ்ஞான்றும்
பெருகுகொடும் பாவநா சம்பண்ணும் பெற்றியினாற்
றிருகறுநல் லுணர்வுடையோர் பற்பமெனச் செப்புவரால்."

"முழுஞான மினிதளித்து மகாபாவ முருக்குதலால்,மழுமானங் கைப் பரமனே மகாபற்ப மெனப்படுவான்" எனவரும் சூதசங்கிதையாலுணர்க (௪)

### உருத்திராக்ஷம்.

அரிய மனமு மறிவரிதா யருவாய் நிறைவா
யிருந்துமுன
ரமரர் திரிபு ரஞ்செய்குறை யறையக் கேட்டு
முக்கண்வழிக்
கரிய களச்செம் புயல்கருணை பொழியப் பெருகுங்
கடற்பிறந்து
கருது மடியார் பவக்கடலைக் கடத்து மணியைத்
துதித்திடுவோம்
பெரிய தவத்துக் குறுமுனியெம் பெருமான் செவிவாய்
மடுத்தருந்தப்
பிறங்கு ஞான மொழிநறவு பெய்யுங் குமுத
வாயானைத்
தெரிய னறுமா முகைகுறமான் றிளைக்கு முலைக்கோ
டுழவலருந்
திருமார் பகனைச் சமரபுரிச் சேயைப் புறங்காத்
தளித்திடவே.

(இ-ள்.) பெரிய தவத்து குறு முனி எம் பெருமான் - தவத்தாற் பெருமையும் வடிவத்தாற் குறுமையுமுடைய அகத்தியர், செவி வாய் மடுத்து அருந்த - செவிப்புலனாகிய வாயால் பருகி நுகர, பிறங்கு ஞானம் மொழி நறவு பெய்யும் குமுதவாயானை - விளங்கும் சிவஞான வுபதேசமாகிய தேனை வாக்கும் குமுதமலர் போன்ற திருவாயை யுடையவனும், தெரியல் நறுமா முகை - மாலையி லமைந்த நறுமணங் கமழும் பெரிய அரும்புகள், குறமான் திளைக்கும் முலைக்கோடு உழ - குறமகளாகிய வள்ளிநாய்ச்சியார் விடாது நுகரும் தனமாகிய கொம்புகளுழ, அலரும் திருமார்பகனை - அலர்தற் கெல்லையாகிய பொலிவமைந்த மார்பினையுடையவனுமாகிய, சமரபுரி சேயை புறங்காத்து அளித்திட - திருப்போரூரிலுள்ள முருகனைப் புறத்தில் நின்று காக்க, அரிய மனமும் அறிவரிதாய் - வேதாகமங்களைக் கற்றுணர்ந்த மனத்தாலும் அறிதற்கரிதாய், அருவாய் - அருவவடிவாய், நிறைவாய் - வியாபகமாய், முன்னர்இருந்து -முன்பிருந்து,அமரர் திரிபுரம் செய்குறைஅறைய கேட்டு - திருமால் முதலியோர் திரிபுராதிகள் தங்கட்குச் செய்யுந் தீங்கினைக்கூறக்கேட்டருளி,கரிய களம்செம்புயல் - கரிய கண்டத்தையுடைய செந்நிறம் வாய்ந்த மேகம்போலச் சகளவடிவங்கொண்டு, முக்கண் வழி கருணை பொழிய - திரிநேத்திரங்களின் வழியாய்த் திருவருள்பொழிய, பெருகுங்கடல்பிறந்து-அந்நீராற் பெருகிய கடலிற்பிறந்து, கருதும் அடியார் பவக்கடலை கடத்து மணியை துதித்திடுவோம் -

தன்னைக் கருதும் அடியவரைச் சனனக்கடலினின்று கடத்தும் உருத்திராக்ஷ மணியைப் போற்றுவாம்.

நிட்களவடிவாகிய சிவத்தை ஆன்மபோதத்தாற் சுட்டியறிதல் அரிதாதலால் அரியமனமும் அறிவரிதாய் எனவும், அருவாய் நிறைவாய் என்றமையால் நிட்கள சிவமெனவும், முன்ன ரமரர்குறை யறையக்கேட் டென்றமையால் சகளவடிவாய் நின்ற சிவமெனவும், தேவர்கள் திரிபுரத் தசுரர்களாலே தமக்கு நேர்ந்த துன்பினை விண்ணப்பஞ்செய்தபோது சகளவடிவாய் நின்ற சிவபெருமான் கேட்டருளினமையால் திரிபுரஞ் செய்குறையை யமரரறைய கரியகளச்செம்புயல்கேட் டெனவும், ஆயிரந் தேவவருடம் மூன்று திருக்கண்களையும் மலர்த்திக்கொண்டிருக்க அக்கண்கள் நீர் பொழிந்தமையால் முக்கண் வழிக் கருணைபொழிய எனவும், நீர் பொழிதல் மேகமாதலால் பொருண் முரணிதோன்றக் கரியகளச்செம்புய லெனவும்,சூரியவடிவாகிய வலக்கண் சொரிந்த நீரினின்று கபிலநிற உருத்திராக்ஷமும், அதில் நின்று செந்நிற உருத்திராக்ஷமும், அதில் நின்று பொன்னிற உருத்திராக்ஷமும், சந்திரவடிவாகிய இடக்கண் சொரிந்தநீரினின்று வெண்ணிற உருத்திராக்ஷமும், அக்கினிவடிவாகிய நெற்றிக்கண் சொரிந்த நீரினின்று கருநிற உருத்திராக்ஷமுந் தோன்றினமையால் பெருகுங் கடற்பிறந்து எனவும், சிவபெருமான் திருவருள் நீர்க்கடலிற் றோன் றோன்றினமையில் தன்னைக் கருதுவோர்க்குப் பிறப் பொழித்தலால் ஒற்றுமைதோன்றக் கருதுமடியார் பவக்கடலைக் கடத்துமெனவும், உருத்திரனது அக்ஷமாதலால் மணியை யெனவும்,வடிவிற் குறியவராயினும் தவத்தாற் பெரியவராதலால் பெரிய தவத்துக் குறுமுனியெம்பெருமானெனவும், அம்முனிவருக்குப் பிரணவத்தி னுட்கிடையை யுணர்த்தினமையால் பிறங்கு ஞான மொழிநறவு பெய்யுங் குமுத வாயானை எனவுங் கூறினர். (சு)

### பஞ்சாக்ஷரம் - வேறு.

கருதரிய பலவுயிர்கள் பந்தனைக் கார்க்கடற்
　　கரையிவர வருகலனை யன்பருட் காட்சியை
யருமறையு மறிவரிய வஞ்சுகப் பேற்றினை
　　யரியசிவ னுரியபெய ரைந்தினைப் போற்றுதுங்
குரவுகமழ் குறவனிதை கொண்கனைக் கார்த்திகை
　　குடமுலையி னமுதகட லுண்டகத் தேக்கனைத்
தருணகும ரனையினிய தண்டலைச் சீர்ப்பொலி
　　சமரபுரி தனினிலவு கந்தனைக் காக்கவே.

(இ-ள்.) குரவு கமழ் குற வனிதை கொண்கனை - குராமலர் கமழும் குறமாதாகிய வள்ளிநாய்ச்சியாரது தலைவனை, கார்த்திகை குடமுலையின் அமுதகடல் உண்டு அகம் தேக்கனை - அறுவகைப்பட்ட கார்த்திகையினது குடம் போன்ற தனத்தினின் றெழுகும் பாற்கடலை யுண்டு உள்ளே தேக்கெறிந்

நவனை, தருண குமரனை-இளமைவாய்ந்த குமாரக்கடவுளை, இனிய தண்டலை சீர் பொலி-காண்போர்க் கினிய சோலையினது சிறப்பால் விளங்கும், சமரபுரி தனில் நிலவு கந்தனை காக்க-திருப்போரூரில் விளங்கும் கந்தனைப் பாதுகாக்க, கருது அரிய பலவுயிர்கள்-எண்ணுதற்கரிய பலவுயிர்களும், பந்தனை கார் கடல் கரை இவர வரு கலனை - பந்தமாகிய கரிய கடலினின்றுங் கரையேற வந்துதவும் மரக்கலத்தை, அன்பர் உள் காட்சியை - அடியவரது உள்ளத்திற் காட்சி தந்தருளுவதை, அருமறையும் அறிவரிய அம்சுகப் பேற்றினை - அரிய வேதங்களும் அறிதற்கரிய பரமசுகப்பேற்றை, அரிய சிவன் உரிய பெயர் ஐந்தினை போற்றுதும் - வாக்குமனதீதமாகிய சிவபெருமானுக்குரிய திருப்பெயராகிய ஸ்ரீபஞ்சாக்கரத்தைத் துதிப்போம்.

ஸ்ரீபஞ்சாக்ஷரத்தின் பொருள் பதி பசு பாசங்களாதல் பசுவைக் கூறுவார் உயிர்களெனவும், அவை எண்பத்துநான்குநூறாயிர யோனிபேதவர்க்கங்களால் பலவகைப்படுமென்பார் பல என்றமையாது கருதரிய பல எனவும், அவ் வான்மாக்கள்தோறுஞ் செம்பிற் காளிதம்போல விரவிநிற்பது பாசமென்பார் கார்ப்பந்தனை எனவும், அது அளவிறந்த சத்திகளையுடையதென்பார் கடலெனவும், தன்னை மாறி யுச்சரிப்போர் அதனைக் கடக்க ஓர் புணையாய் வருமென்பார் கரையிவர வருகலனை எனவும், மலபரிபாகம் வந்த ஆன்மாக்களுக்குப் புலப்படும் பதியியல்பு கூறுவார் அன்பருட்காட்சியை எனவும், திருவருள் முத்தியின்பம் அருளுதல்போல ஸ்ரீபஞ்சாக்ஷரமும் ஒன்றாதலால் அதுவும் முத்தியின்பம் தருமென்பார் அஞ்சுகப்பேற்றினை எனவும், சொற்பிரபஞ்சமாகிய விந்துதத்துவத்தின் காரியப்பாடாதலில் வேதங்களும் அறிதற்கரியதென்பார் அருமறையும் அறிவரிய எனவும், வாக்குமனதீதப்பட்டவனென்பார் அரியசிவனெனவும், ஸ்ரீபஞ்சாக்கரம் அவனுக் குரிய திருநாம மென்பார் உரியபெய ரைந்தினைப் போற்றுதும் எனவும் கூறினர். கலன், காட்சி, பேறு ஒருபொருள்மேல் வந்த பலபெயர்.

### திருமகள் - வேறு.

பொற்குவடு பத்துநூ றிலகுமுடி தொறுமிரவி
  பூவென்னக் கொண்டு மதியம்
பொழிநிலவு வெள்ளத்தின் மிசைமிதந் தழகுசெறி
  புண்டரிக மண்டு புயலை
யற்புதத் தொடுகொண்டு மிளிரவப் புயனடு
  வரும்புநால் வகை மலரொடு
மஞ்சோதி மினலொன் றிருந்தென விருந்தொளி
  ரணங்கினை நினைந்து தொழுவா
மெற்செறி திருப்பரங் குன்றாவி னன்குடி
  யிரும்பொழிற் றிருவே ரக

மீறில்சீ ரலைவாய் விளங்குபழ முதிர்சோலை
யென்னுமறை புகழ் பதிதொறுங்
கற்குவடு தொறுமினிய நற்சமர புரியுமுறை
கடவுளைக் கடவுள ரெலாங்
கைம்மலர் குவிக்கவிரு கான்மலர் படைத்தவொரு
கந்தனை யளிக்க வென்றே.

(இ-ள்.) எல் செறி திருப்பரங்குன்று - விளக்கஞ்செறிந்த திருப்பரங்குன்றமும், ஆவினன்குடி - திருவாவினன்குடியும், இரும் பொழில் திருஏரகம் - பெருமை வாய்ந்த சோலைசூழ்ந்த திருவேரகமும், ஈறு இல் சீரலைவாய் - அழிவில்லாத திருச்சீரலைவாயும், விளங்கு பழமுதிர் சோலை என்னும் மறை புகழ் பதிதொறும் - விளங்காநின்ற பழமுதிர் சோலையும் என்று சொல்லப்படும் வேதங்கள் புகழும் திருப்பதிகள்தோறும், கல் குவடு தொறும்-குன்றுதோறும், இனிய நல் சமரபுரியும் உறை கடவுளை - (இப் படைவீடுகள்போலும்) இனிய நல்ல சமரபுரியும் ஓர் படைவீடாக எழுந்தருளிய கடவுளை, கடவுளர் எல்லாம் கைமலர் குவிக்க - தேவர்களெல்லாம் தமது கையாகியமலரைக் கூப்ப, இருகால் மலர் படைத்த - இரண்டு திருவடி மலரைப்படைத்த, ஒரு கந்தனை அளிக்க - தனக்கோரொப்பில்லாத முருகக்கடவுளைப் பாதுகாக்க, பொற் குவடு - மேருவின் ஆயிரங் கொடுமுடிகள்போல, இலகு பத்து நூறு முடிதொறும் - விளங்காநின்ற ஆயிரந் திருமுடிகள்தோறும், இரவி பூண் எனக்கொண்டு - ஆயிரஞ் சூரியர்களை மகுடமாகக்கொண்டு, மதியம் பொழி நிலவு வெள்ளத்தின்மிசை மிதந்து - சந்திரன் பொழியும் நிலவாகிய வெள்ளத்தின்மேல் மிதந்து, அழகு செறி புண்டரிகம் மண்டு புயலை - அழகு செறிந்த தாமரைக் காடு நெருங்கிய மேகத்தை, அற்புதத்தொடு கொண்டு - மகிழ்ச்சியோடு தனக் குரிமையாகக்கொண்டு, மிளிர - விளங்க, அ புயல் நடு அரும்பும் நால்வகை மலரொடும் - அம் மேகத்தினிடையே அரும்பிய கோட்டுப்பூமுதலிய நால்வகைமலரோடும், அம் சோதி மின்னல் ஒன்று இருந்தால் என்ன-அழகிய விளக்கம்வாய்ந்த மின்னலொன்று இருந்தாற்போல, இருந்து ஒளிர் அணங்கினை நினைந்து தொழுவாம் - இருந்து விளங்கும் திருமகளை நினைந்து வணங்குவாம்.

திருமால் விசுவரூபத்தில் ஆயிரந்திருமுடிகளையுடையவராதலால் பொற்குவடு பத்துநூ றிலகுமுடி தொறும் என்றார். மதியம் பொழி நிலவு வெள்ளமென உவமானத்தால் உவமேயமாகிய திருப்பாற்கடலையும், புண்டரிக மென்கிற உவமானத்தால் உவமேயப்பொருள்களாகிய கண் கை கால் முதலிய அவயவப்பொருள்களையும், புயலாகிய உவமானத்தால் திருமால் திருமேனியாகிய உவமேயப்பொருளையும், புயல் நடு என்னும் உபமானத்தால் திருமார்பென்னும் உபமேயப்பொருளையும், கோட்டுப்பூ, கொடிப்பூ, நிலப்பூ, நீர்ப்பூவாகிய உவமானப்பொருள்களால் உவமேயப்பொருள்களாகிய கண் கால் கை முத

லிய அவயவப்பொருள்களையும் இலக்கணையாகக் கூறுதலால் உயர்வுநவிற்சியணியும், இரவிபூணெனக்கொண்டு எனவும், அஞ்சோதி மினலொன் றிருந்தெனவும் வரும் உவமையணியும், கைமலர் குவிக்க விரு கான்மலர் படைத்த எனச் சொன்முரணணியும் கலந்து வருதலால் கலவையணி. கோட்டுப்பூ சண்பகமுதலியன. கொடிப்பூ முல்லை முதலியன. நிலப்பூ எட்பூ முதலியன. நீர்ப்பூ தாமரை முதலியன. இவை உவமானமாதலை உவமானசங்கிரகத்தானுணர்க. இருந்தென தொகுத்தல் விகாரம். (அ)

சரஸ்வதி - வேறு.

நெய்தலங் காடுமிரு காவிபொரு வள்ளையு
நிகழ்குமிழு முகைமுல் லையு
நிறைநறைக் குமுதமுந் தொடியுடைத் தோன்றியொடு
நேர்கன்னி கார முகையு
மெய்தரிய நூபுரக் கமலமுஞ் செறிகடவு
ளகினம்வெள் ளைக்க மலமீ
தேர்பெற்ற மறைமுதல கலைசொற் றிருந்தென
விருந்தவளை யஞ்ச லிப்பாங்
கைதையங் கானமும் புன்னையங் கானமுங்
கானனெய் தற்கா னமுங்
கடிமணத் தொடுநறவு மகரமுந் தந்திலகு
கலியாண மாம றுகென
மைதவழ் பொழிற் புளின மலிகயற் புலவையும்
வளையலவ னுறுப சியையும்
வாரா தகற்றியொளிர் நெய்தலஞ் சமரபுரி
வருகுகனை யருள்பு ரியவே.

(இ-ள்.) கைதை அம் கானமும் - தாழைக்காடும், புன்னையங் கானமும் - புன்னைமரக்காடும், கானல் நெய்தல் கானமும் - இளஞ்சோலையாகிய நெய்தனிலத்திலுள்ள காடும், கடி மணத்தொடு நறவும் மகரமும் தந்து - மிக்க மணத்தோடு தேனையும் மகரந்தத்தையுந் தந்து, இலகு கலியாண மா மறுகு என்ன - விளங்காநின்ற கலியாணஞ்செய்யும் பெரிய வீதியைப்போல, மைதவழ் பொழில் புளினம் மலி கயல் புலவையும் - மேகந் தவழுஞ் சோலை சூழ்ந்த மணற்குன்றுகள்தோறும் வீசும் கயல்மீன் முடைநாற்றத்தையும், வளை அலவன் உறு பசியையும் - வளையிலுள்ள ஞெண்டுகளடையும் பசியையும், வாராது அகற்றி ஒளிர் நெய்தல் அம் சமரபுரி வருகுகனை அருள்புரிய - அணுகாமல் ஒழித்து விளங்கும் நெய்தனிலஞ்சூழ்ந்த அழகிய திருப்போரூரி லெழுந்தருளிய முருகக்கடவுளைப் பாதுகாக்க, நெய்தலம் காடும் - வெண் ணெய்தற்காடு

போன்ற திருமேனியையும், இரு காவி பொரு வள்ளையும் - இரண்டுநீலோற்பலங்களாகிய கண்கள் போர்செய்யும் வள்ளைக்கொடிபோன்றகாதையும்,நிகழ் குமிழும் - விளங்காநின்ற குமிழமலர்போன்ற நாசியையும், முல்லை முகையும்- முல்லையரும்புபோன்ற பற்களையும், நறை நிறை குமுதமும் - தேன் நிறைந்த ஆம்பல்போன்ற வாயையும், தொடி உடை தோன்றியொடு - வளையலணிந்த காந்தள்மலர்போன்ற கைகளோடு, நேர் கன்னிகார முகையும் - தம்முள்ளொத்த கோங்கரும்புபோன்ற தனத்தையும்,எய்து அரிய நூபுரம்கமலமும்-அடைதற்கரிய சிலம்பணிந்த தாமரைமலர்போன்ற திருவடியையும், செறி கடவுள் எகினம்-பொருந்திய தெய்வத்தன்மையையுடைய அன்னப்பேடொன்று, வெள்ளை கமலம் மீது - வெண்டாமரையின்மேல், ஏர் பெற்ற மறை முதல கலை சொற்று இருந்தால் என்ன இருந்தவளை அஞ்சலிப்பாம் - அழகமைந்த வேத முதலிய நூல்களையெல்லாம்கூறி இருந்தாற்போல இருந்த கலைமகளை அஞ்சலி செய்வாம்.

கலியாண வீதி நாற்றத்தையும், அடைந்தோர் பசியையும் நீக்குதல் போலத் தாழைக்காடுமுதலியவை கயல்மீன் புலால்நாற்றத்தை வாசத்தாலும், வண்டுகளின் பசியை மகரந்தத்தாலும் ஒழித்தலால் வாராதகற்றியொளிர் நெய்த லென்றார். நெய்தற்காடுமுதலிய உபமானப்பொருள்களால் உவமேயப் பொருள்களை இலக்கணையாகக் கூறுதலில் இதுவும் உயர்வுநவிற்சியணி. இருந்தென தொகுத்தல்விகாரம். (கூ)

பலதேவர் - வேறு.

எண்டிசை யோர்வசு வெண்மர்கள் வயிரவ
ரெண்மர் மருத்துவரு
மீரிரு மூவரு மோரொரு பதின்மரு
மீர்று சூரியரு
மண்டர் வியாழ னடும்புய வீர
ரலர்ந்த சரோருகமே
லந்தண னேழொழு மங்கையர் சோமனும்
வந்தரு ளேபுரிவார்
தண்டையு நீடு சதங்கையு நீளொளி
தங்கிய கிண்கிணியுந்
தாளிணை மாமலர் மீதினி லோசை
தழைந்திட வந்துமையா
மொண்டொடி கொஞ்ச விருந்து குறங்கிலு
வந்தருள் கொங்கையமு
துண்டருள் கந்தனை யஞ்சம ராபுரி
யொண்கும ரேசனையே.

(இ-ள்.) தண்டையும் நீடு சதங்கையும்-தண்டையும் ஒலிமிக்க பாதசாலமும், நீள் ஒளி தங்கிய கிண்கிணியும் - மிக்க ஒளிநிலைபெற்ற கிண்கிணி வடமும், தாள் இணை மாமலர் மீதினில் ஓசை தழைந்திட வந்து - இரண்டு பாததாமரை மலர்மேல் ஒலிக்கவந்தருளி, உமையாம் ஒண்தொடி கொஞ்ச குறங்கில் உவந்திருந்து - உமையம்மை கொஞ்சத் திருத்தொடைமேல் மகிழ் கூர்ந்திருந்து, அருள் கொங்கை அமுது உண்டருள் கந்தனை - அவ் வுமையம்மையின் திருவருள்வடிவாகிய திருத்தனஞ் சுரக்கும் திருவமுதைப் பருகியருளிய கந்தனை, அம் சமராபுரி ஒண் குமரேசனை - அழகிய சமராபுரியி லெழுந்தருளிய என்றும் விளக்கம்வாய்ந்த குமாரக்கடவுளை, எண்திசையோர் - எட்டுத்திக்கிலுமுள்ள இந்திரன்முதலிய எண்மரும், வசு எண்மர் - தரன் முதலிய வசுக்க ளெண்மரும், வயிரவர் எண்மரும்-அசிதாங்தகர் முதலிய வயிரவ ரெண்மர்களும், மருத்துவர் ஈர் இருமூவரும் - கிழக்கு முதலிய மருத்துக்க ளெழுவரும், ஓர் ஒரு பதின்மரும் - மாதேவன் முதலிய பதினொருருத்திரர்களும், ஈர் அறு சூரியரும்-தாதாமுதலாகிய துவாதசாதித்தரும், அண்டர்வியாழன்-(அவரொழிந்த) தேவர்களும் பிரகஸ்பதியும், அடும் புய வீரர் - பகைவரைக் கொல்லும் புயத்தையுடைய வீரபத்திரக்கடவுளும், அலர்ந்த சரோருகமேல் அந்தணன் ஓர் எழுமங்கையர் சோமனும் வந்து அருளே புரிவார் - மலர்ந்த தாமரை மலர்மேல் வசிக்கும் பிரமனும் பிரமாணிமுதலிய சத்தமாதர்களும் சந்திரனும் வந்து கருணையே செய்யாநிற்பார்.

இந்திரன் முதிலியோ ரென்றது - இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்னும் எண்மர்களை. தரன் முதலாகிய வசுக்கள் எண்மரென்றது - தரன், துருவன், சோமன், ஆபற்சைவன், அனலன், அணிலன், பிரத்தியூசன், பிரபாசன் என்னும் எண்மர்களை. அசிதாங்தகர் முதலிய எண்மர் என்றது - அசிதாங்தகர், ருரு, சண்டர், குரோதனர், உன்மத்தர், கபாலி, பீஷணர், சங்கரர் என்னும் எண்மர்களை. கிழக்கு முதலிய மருத்துக்கள் எழுவரென்றது - கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு, கீழ், மேல், பல யோனிகள். மாதேவன் முதலிய பதினொருவரொன்றது - மாதேவன், அரன், உருத்திரன், சங்கரன், நீலலோகிதன், ஈசானன், விசயன், வீமதேவன், பவோற்பவன், கபாலி, சவுமியன், என்னும் பதினொரு உருத்திரர்களை. தாதாமுதலிய துவாதசாதித்த ரொன்றது - தாதா, அரிமான், மித்திரன், வருணன், சக்கரன், விவச்சுதன், பூடா, பர்ச்சன்னியன், அஞ்சன், பகன், சேட்டா, விஷ்ணு என்னும் பன்னிருவர்களை. பிரமாணி முதலிய சத்தமாதர்களென்றது-பிரமாணி, நாராயணி, மாயேசுரி, கௌமாரி, வராகி, உருத்திராணி, இந்திராணி, என்னு மெழுவர்களை. அடும்புயவீர ரொன்றதற்கு வீரவாகு முதலிய நவவீரர்கள் என்னின் பின்வந்தோராகலின் அது அமையாதென்க. என்றும் பாலபருவமுடையோராதலால் ஒண் குமரேசன் என்றார். (கo)

காப்புப்பருவம் முற்றிற்று.

செங்கீரைப்பருவம் ஐந்தாமாதத்தில் நிகழ்வது கூறுவது ஆதலால் செங்கீரை என்பது ஒருகால் முடக்கி ஒருகால் நிமிர்த்து இரண்டு திருக்கரங்களையும் நிலத்தி லூன்றித் தலைநிமிர்த்துத் திருமுகமசைய வாடுதல். இதனை,

"வானமுத லாயவொரு மூன்றனுக் கும்பொதுவின்
மன்னியொளிர் கின்ற வபய
வரததா மரைகணில மட்டுமுற லென்னையென
மற்றவை யுழுக்க றுக்கு
மானவது கொளினவைய தன்பயனை யுறுகமல
ரொளொருகை தாங்கு வேமென்
றகஞ்செருக் கினளச் செருக்கொழிய வனையண்மாற்
றவளெனும ணுவகை யெய்த
வீனமக லனையதா மரைபதித் தொருதா
ளிருத்தியொரு தாளெ டுத்தே
யெழினனி கனிந்தமுக தாமரை மலர்ந்தசைய
விருமணிக் குழைவில் வீசத்
தேன்மலர் தருங்குதலை சீர்ப்பமங் களவல்லி
செங்கீரை யாடி யருளே
தெய்வக் குடந்தைவளர் சைவச் செழுங்குமரி
செங்கீரை யாடி யருளே." — என வரும் மங்களாம்பிகை பிள்ளைத்தமிழா லுணர்க.

மும்மையுல கெங்கும் பரந்தொளி பரப்பிடு
முதற்பரை யெடுத்த ணைத்து
மூதருட் புனிதநீர் நிறையவாட் டிப்பெருமை
மொய்த்தநித் தியவா டையான்
மெய்ம்முழுது மொத்தியிரு வேறற்ற வத்துவித
வெண்ணீ றணிந்து மிளிரும்
வீறுபூ ரணநிலப் பொட்டுமிட் டுப்பெரிய
மெய்ஞ்ஞான தீப தட்டா
லம்மருவு மாலத்தி சுற்றிமற் றிச்சையுட
ஞானஞா னங்கி ரியையென்
றருள்செவ்வி யாயரங் கருகிலுற வாரு
றகன்றசிவ வாரி யிலெழுஞ்
செம்மையா ரமுதம் புகட்டவள ருங்குழவி
செங்கீரை யாடி யருளே
திமிரமல மகலவரு குமரசர வணமுருக
செங்கீரை யாடி யருளே.

(இ-ள்.) மும்மை உலகு எங்கும் பரந்து ஒளி பரப்பிடும் முதல் பரை எடுத்து அணைத்து - மூன்றுலகெங்கும் பரவி யொளிவீசும் ஏனைச் சத்திகளுக்கு முதலாயுள்ள பராசத்தி தனது திருக்கரங்களா லெடுத்துத் திருமார்பி லணைத்து, முது அருள் புனிதநீர் நிறைய ஆட்டி - தன்னைப்போல் தொன்று தொட்டுள்ள திருவருளென்னும் மலரகிதமாகிய நீரிற் றிளைக்கத் திருமஞ்சன மாட்டி, பெருமை மொய்த்த நித்திய ஆடையான் - என்றும் அழியாமையாகிய நித்தியமென்னும் ஆடையினால், மெய் முழுதும் ஒத்தி - திருமேனி முற்று மொத்தி, இரு வேறு அற்ற அத்துவித வெள் நீறு அணிந்து - இரண்டல்லாத அத்துவிதமாகிய வெள்ளிய திருநீறு அணிந்து, மிளிரும் வீறு பூரணம் நிலப் பொட்டுமிட்டு - விளங்காநின்ற மனவாக்குகளுக் கதீதமாகிய அவ் வத்துவிதத்தோ டொற்றுமையாகிய பூரணமென்னும் நிலப் பொட்டினையு மணிந்து, பெரிய மெய்ஞ்ஞான தீப தட்டால் - அப் பூரணத்துக்குக் காரணமாகிய பெருமை வாய்ந்த உண்மைஞானமென்னுந் தீபதட்டினாலே, இச்சையுடன் ஆன ஞானம் கிரியை என்று அருள் செவிலியாயர் - இச்சா ஞானக் கிரியா சத்திகளென்னுஞ் செவிலித்தாய்மார், அம் மருவும் ஆலத்திசுற்றி அங்கு அருகில் உறை - அழகமைந்த ஆலத்தியைச் சுற்றி அவ்விடத்தி லோர்பா லிருக்க, ஆறு அகன்ற சிவவாரியில் எழும் செம்மையார் அமுதம் புகட்ட வளரும் குழவி - முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்த சிவசாகரத்தி லுதித்த பேரின்பமாகிய பெறுதற்கரிய அமுதினைப் புகட்ட வளராநின்ற குழந்தாய், செங்கீரை யாடி யருளே - செங்கீரை யாடியருளாய், திமிரமலம் அகலவரு குமர - இருள்போன்ற ஆணவமலம் ஆன்மாக்களி னின்று நீங்க எழுந்தருளிய குமரனே, சரவணமுருக செங்கீரை ஆடி யருளே - சரவணனே முருகனே செங்கீரை யாடியருளாய்.

ஆதிசத்தி முதலிய சத்திகளுக்கு முதலாயிருத்தலால் முதற்பரை எனவும், அப்பராசத்தி மூன்றுலகங்களுக்கும் ஒளிதந்து நிலைபெறுத்தும் சோம சூரியாக்கினி நக்ஷத்திரங்களுக்கு ஒளிதந்து நிற்றலால் மும்மையுலகெங்கும் பரந்தொளி பரப்பிடும் எனவும், அப் பராசத்தி ஆன்மாக்களுக்கு நடுநிலையினின்று அனுக்கிரகித்தல் தனது இயற்கைச்செயலாதலால் மூதருள் எனவும், தன்னைப்போலத் தனது அனுக்கிரகமும் நித்தியநிலையாதலால் அதனை நித்தியமெனவும், அந்த நித்தியத்தால் பரசிவமானது தனது சொருபமாகிய ஒளி வடிவாய் நிற்றலின் அச்சிவமுந் தானும் வேறன்மையால் இருவேறற்ற அத்துவிதமெனவும், அவ் வியல்பு மனவாக்குகளுக் கதீதப்பட்ட நிறைவாயிருத்தலால் வீறு பூரணம் எனவும், அப் பூரணமே மெய்ஞ்ஞான ஒளியாதலால் மெய்ஞ்ஞான தீபமெனவும், ஆன்மாக்களுக்கு முத்தி யருளுதற்பொருட்டுத் தனது சொருபமாகிய அப் பரசிவத்திற்குத் தானே இச்சாஞானக் கிரியாசத்திகளாய் நிற்றலால் இச்சையுடனான ஞானங் கிரியை யென் றருள் செவிலியாயர் எனவும், பிருதிவி தத்துவமுதல் நாததத்துவ மீறாகிய அருவம் உருவம் அருவுருவமெனப்பட்ட முப்பத்தாறு தத்துவங்களையுங் கடந்து நின்றது சுத்தசிவமாதலால் சிவவாரியில் எனவும், அச் சிவசாகரத்தி லுதிப்பது பேரி

ன்ப வமுதாகலால் சிவவாரியிலெழுஞ் செம்மையாரமுதமெனவும், அதுவே தனது திருமுலைப்பாலாதலால் புகட்ட வளருங் குழவி எனவும், ஆன்மகோடிகளுக்கு மலபாகம் வருவித்தற்பொருட்டே என்றும் பாலபருவ முடைமையால் திமிரமல மகலவர குமர எனவுங் கூறினர். சரவணப் பொய்கையில் அவதரித்தமையால் சரவணபவனென்பது ஓர்காரணப்பெயர். இதுபின்மொழி கெட்டு முன் மொழியே அப்பொருள்தந்து நிற்றலால் பின்மொழி கெட்ட முன்மொழி நிலையல். இதனை நியாயநூலார் நாமைகதேசநாமக்கிரகண மென்பர். இது காரண முன்னும் காரியம் பின்னும் வருதலால் காரணமாலையணி. பனை முதல் மெய்ஞ்ஞானமீறாகக் காரண முன்னும் காரியம் பின்னுமாக வருதலால். குமரன், முருகன் காரணப்பெயரென முன்னர்க் கூறியிருக்கின்றாம் அங்குக் காண்க. (க)

அஞ்சக் கரப்பரத் தொட்டிலிற் சதுர்வேத,
மானவட மொருநாலையு
மாதியுட னிச்சைஞா னக்கிரியை நாமமுற்
றருள்வளர்ந் தொளிர் சத்திக
டஞ்சக் கரங்கொடு பிடித்தங் கசைத்திடத்
தகுபரையு மாதி சிவனுந்
தாமுள மகிழ்ந்துறச் சோமனென நிலவுபொழி
தவளயா னைக்க டவுளும்
விஞ்சக் கரம்புனையு முதல்வர்பதி னொருவரும்
விபுதர்களு மரி பிரமரு
வேணிமுனி வருமருண் ஞானமுனி வராதி
வியனுலக ரும்ப ரவவே
செஞ்சக் கரப்பரிதி யெனநிலவு போரூர
செங்கீரை யாடி யருளே
திமிரமல மகலவரு குமரசர வணமுருக
செங்கீரை யாடி யருளே.

(இ-ள்.) அஞ்சக்கரம் பரத்தொட்டிலில் - ஸ்ரீ பஞ்சாக்கரமாகிய மேலாகிய தொட்டிலிற் பூட்டிய, சதுர்வேதம் ஆன வடம் ஒரு நாலையும் - இருக்குவேத முதலாகிய நான்கு வேதங்களென்னும் நான்கு வடங்களையும், ஆதியுடன் இச்சை ஞானம் கிரியை நாமம் உற்று - தனது அவசரமாய் ஆதியெனவும் இச்சை யெனவும் ஞானமெனவும் கிரியையெனவும் திருநாமம் வாய்ந்து, அருள் வளர்ந்து ஒளிர் சத்திகள் - திருவருள் கனிந்து விளங்கும் நான்கு சத்திகளும், தஞ்சம் கரங்கொடு பிடித்து அங்கு அசைத்திட - பற்றுக்கோடாகத் தமது திருக்கரங்களால் பிடித்து அவ்விடத்தி லாட்டவும், தகுபரையும் ஆதி சிவனும் - யாவர்க்கும் பொதுவாய் நின்றருளிய பராசத்தியும் பரசிவமும்,

தாம் உளம் மகிழ்ந்துற - தாம் திருவுளம் மகிழ்கூர்ந்திருக்கவும், சோமன் என நிலவு பொழி தவள யானைக் கடவுளும் - சந்திரனைப்போல வெள்ளிய நில வை வீசும் வெள்ளிய யானையூர்தியையுடைய இந்திரனும், விஞ்சு அக்கு அரவு புனை முதல்வர் பதினொருவரும் - ஒளி மிக்க அக்கு மணியையும் பாம்பையு மணிந்த முதல்வராகிய பதினோருருத்திரரும், விபுதர்களும் அரிபிரமரும் வே ணிமுனிவரரும் . தேவர்களும் திருமாலும் பிரமனும் சடாபாரத்தையுடைய முனிசிரேஷ்டர்களும், அருள் ஞான முனிவரர் ஆதி வியனுலகரும் பரவ - சிவஞானத்தையுடைய முனிசிரேஷ்டர்கள் முதலிய பரந்த நிலவுலகிலுள்ள வருந் துதிக்கவும், செம் சக்கரம் பரிதி என நிலவு போரூர செங்கீரை யாடி யருள் - செவந்த வட்டவடிவாகிய சூரியனைப்போல விளங்கும் திருப்போரூரி லெழுந்தருளிய இறைவனே செங்கீரை யாடி யருளாய்.

ஸ்ரீ பஞ்சாக்கரம் சிவத்தையுணர்த்தி நிற்றலால் அஞ்சக்கரப் பரத்தொட்டில் எனவும், அவ்வக்கரங்களில் இருக்குமுதலிய நான்கு வேதங்களும் உட் கிடையாய்க் கோப்புண்டுகிடத்தலால் சதுர்வேதமானவடம் ஒருநாலையும் என வும், ஸ்ரீபஞ்சாக்கரத்தில் சிருட்டிமுதலிய பஞ்சகிருத்தியங்களும் அடங்கி நிற் றலால் ஆதியுட னிச்சைஞானங்கிரியை நாமமுற்று அருள்வளர்ந்தொளிர் சத் திகள் தஞ்சக்கரங்கொடு பிடித்தங் கசைத்திட எனவும், அவற்றுள் பராசத்தி யும் பரசிவமும் அடங்கி நிற்றலால் தருபனையும் ஆதிசிவனும் தாமுளமகிழ்ந் துற எனவும், பிரம சிருஷ்டியிற் பட்ட முனிவர்களைக் கூறுதலால் வேணி முனிவரர் எனவும், இந் நிலவுலகில் சிவஞானம் வாய்ந்தோரைக் கூறுதலால் அருள்ஞான முனிவரரெனவும்,சூரியன் புறவிருளை யோட்டுதல்போல அகவி ருளை யோட்டுதலால் செஞ்சக்கரப்பரிதி யெனநிலவு போரூர எனவுங் கூறி னார். அரிபிரமர் உயர்திணையில்வந்த உம்மைத்தொகை யாதலால் அரி பிரமர் எனப் பலர்பாலீறுதந்து கூறினார். அர என்பதனீற்றில் மகரமெய் விரித்தல்.

குஞ்சிமுடி யுற்றசெஞ் சுடிகையா டச்செவிகொள்
கோலக் குதம்பை யாடக்
குமுதமென வமுதொழுகு மிதழ்களா டக்கரங்
கொண்டபொற் றொடிக ளாடக்
கஞ்சமல ரைப்பொருவு நயனமா டக்கடி
தடத்தரை வடங்க ளாடக்
கருதரிய முத்தியின் புதவுசீ ரடிமருவு
ககனநற் றண்டை யாட
வஞ்சுபடி வத்தசுரர் திண்டாட வரிபிரம
ராதிசுரர் கொண்டா டநீ
ளகிலசர வசரங்க ணின்றாட வெண்டிசையொ
டண்டபகி ரண்ட மாடச்

செஞ்சர வணப்பொய்கை மஞ்சமிசை நிலவுமிறை
செங்கீரை யாடி யருளே
திமிரமல மகலவரு குமரசர வணமுருக
செங்கீரை யாடி யருளே.

(இ-ள்.) முடி உற்ற குஞ்சி செம் சுடிகை ஆட - முடிகூடிய சிகையாலமைந்த சுட்டி யணிந்த சூழியக் கொண்டை யாடவும், செவிகொள் கோலம் குதம்பை ஆட - திருச்செவியி லணிந்த அழகிய குதம்பை என்னும் ஆபரணமாடவும், குமுதம் என அமுது ஒழுகும் இதழ்கள் ஆட - செவ்வாம்பல் மலர்போல அமுது சிந்தும் திருவாயிதழ்க ளாட்வும், கரம் கொண்ட பொன் தொடிகள் ஆட - திருக்கையி லணிந்த பொன்னு லாகிய தொடிக ளாடவும், கஞ்ச மலரைப் பொருவு நயனம் ஆட - தாமரைமலரை யொத்த திருக்கண்களாடவும், கடிதடத்து அரைவடங்கள் ஆட - நிதம்பம் வாய்ந்த அரையி லணிந்த கிண்கிணிகள் ஓர்பா லாடவும், கருதரிய இன்பு உதவு சீர் அடி மருவு கனகம் நல் தண்டை ஆட - நினைத்தற்கரிய மோக்ஷ வின்பத்தை அடியார்க்குதவும் சிற்றடியி லணிந்த பொன்னுலாகிய நல்ல தண்டை என்னும் ஓரணி ஓர்பாலாடவும், அஞ்சு வடிவத்து அசுரர் திண்டாட-கண்டோ ரஞ்சும் வடிவத்தையுடை அசுரர்கள் ஒருபால் திண்டாடவும், அரி பிரமர் ஆதிசுரர் கொண்டாட - அரி பிரமராதிய தேவர்கள் ஒருபால் கொண்டாடவும், நீள் அகில சர அசரங்கள் நின்றாட-நீண்ட நிலவுலகிலுள்ள தாபரசங்கமங்கள் ஒருபால் நின்றாடவும், எண் திசையொடு அண்டபகிரண்டம் ஆட - எட்டுத் திக்குகளோடு திரண்ட வடிவாய்ப் பகுப்பமைந்த அண்டங்கள் ஓர்பாலாடவும், செஞ்சரவணப்பொய்கை மஞ்சமிசை நிலவும் இறை செங்கீரை ஆடி யருள் - தாமரைமலரால் செந்நிறம்வாய்ந்த சரவணப்பொய்கையாகிய மஞ்சத்தின்மேல் விளங்கிய இறைவனே, செங்கீரை ஆடி யருளாய்,—

சூழியக்கொண்டை உச்சியில் அமைந்த மயிர்க்கொண்டை. குதம்பை பிள்ளைமைப்பருவத்தில் காதி லணியும் ஓரணி. கடிதடம் ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுவாதலால் கடிதடத்து அரைவடங்களாடவும் எனவும், யாவும் தானியக்க இயங்குதலால் நீளகில சரவசரங்க ணின்றாட வெண்டிசையொடு பகிரண்டமாட எனவும், அண்டமெனப் புவனங்களுக்குவந்த பெயர் அண்டம்போலத் திரண்டவடிவுடைமையில் உவமையாகுபெயராகிய காரணத்தாலாதலால் அண்ட பகிரண்ட மாட எனவும்கூறினர்.

ஐந்தொழிலு மெனதிவைக ளாகுஞ் சிருட்டிமுத
லானமுத் தொழில்ச டத்தும்
அறிவிடத் தோரிரண் டும்வினைக் கீடா
யவற்றையுயி ரறியா மையான்
முந்திவரு தன்னையும் பிறரையுங் கருதிநனி
முதிர்விழைவு வெகுளி மருவி

முன்னுசுக துன்பங்கண் மன்னியிரு வினைமேவி
மூடப் பிறப்பி லாழும்
பந்தமுறு முயிர்சுதந் திரமிலி சடம்பாச
மானகரு விகண் முழுதுமே
பகருமற் றவைநடத் திடுமொருவ னுனிவை
பகுத்துன் சுதந்தர மறச்
சிந்தனைசெய் பந்தமறு மென்றெனக் கருள்குரவ
செங்கீரை யாடி யருளே
திமிரமல மகலவரு குமரசர வணமுருக
செங்கீரை யாடி யருளே.

(இ ள்.) வினைக்கு ஈடாய்-ஆன்மகோடிகளின் இருவினைகளுக்கீடாக, இவைகள் ஆகும்-மேற்கூறிய தொழில்களின் பகுப்பாகிய, சிருட்டி முதலான முத்தொழில் சடத்தும் - படைப்புமுதலிய முத் தொழில்களும் பாசமாகிய சடத்தினிடத்தும், ஓரிரண்டும் அறிவிடத்தும் - திரோபவமுதலிய இரண்டும் சித்தாகிய பசுவினிடத்தும், (யாம் கொண்டருளினமையால்) ஐந்தொழிலும் எனது - படைப்பு முதலிய ஐந்தொழிலும் என்னுடையது, அவற்றை உயிர் அறியாமையால் - அவைகளை ஆணவமல மறைப்பால் அப் பசுவறியாமையால், முந்தி வரு தன்னையும் பிறரையும் கருதி - முற்பட்ட தன்னையும் தன் போலுள்ள பிறரையும் நட்பினர்பகைவர் அயலினர் எனக் கருதுதலால், கனி முதிர் விழைவு வெகுளி மருவி - எழுந்து மிகவு முறுகிய விருப்பு வெறுப்புகளைப் பொருந்தி, முன்னு சுக துன்பங்கள் மன்னி - அவற்றால் முற்பட்ட சுகதுக்கங்களைப் பொருந்தி, இருவினை மேவி - அவற்றால் நல்வினை தீவினைகளைப் பொருந்தி, மூடம் பிறப்பில் ஆழும் - அவற்றின் காரணமாகிய ஆணவ மலத்தால் பிறப்பிலழுந்தும், பந்தம் உறும் உயிர் சுதந்திரம் இலி - பந்தத்தாற் சிமிழ்ப்புண்ட அப்பசு தனக்கோர் சுதந்திரமில்லான், பாசம் ஆன கருவிகள் முழுதும் சடம் - ஆன்மதத்துவமுதலிய, பாசமான கருவிகள் முற்றும் சடம், பகரும் அவை நடத்திடும் ஒருவன் நான் - சொல்லப்படும் பசுவும் பாசமுமாகிய அவற்றை நடத்தும் ஒருவனாகிய யானே பதி, இவை பகுத்து உன் சுதந்தரம் அற சிந்தனை செய் - இப் பதி பசு பாசங்களினியல்பைப் பகுத்து உனது சுதந்திரம் நீங்கச் சிந்தி, பந்தம் அறும் என்று எனக்கு அருள் குரவ - அப்பாசமானது உன்னில் நின்று நீங்குமென்று எனக்கு அருளிய குருமூர்த்தியே, செங்கீரை ஆடி அருள் - செங்கீரை யாடி யருளாய்,—

இதனால் பதி பசு பாசங்களினியல்பு கூறுவாராதலில் நிட்களமாகிய எமக்குப் படைப்புமுதலிய ஐந்தொழிலு நேர்ந்தது பசுக்களின் வினைக்கீடாய் என்பார் வினைக்கீடாய் எனவும், அத்தொழில்களுள் படைப்பு, நிலை, ஒடுக்கமென்னு முத்தொழிலும் அப் பசுக்களுக்குப் போகம்வரப் பாசத்தினிடத்துக் கொ

ண்டருளினம் என்பார் சிருட்டிமுதலான முத்தொழில் சடத்தும் எனவும், நாமறிவிப்பவனும் அறிபவன் பசுவுமென்பார் பசுவை அறிவெனவும், அத்தொழில்களால் பக்குவம் வாய்ந்த பசுக்களுக்கு அனுக்கிரகம் வாய்ப்ப மறைக்குந் திரோபவமும் அனுக்கிரகமென்பார் அனுக்கிரகமுங் கூட்டி அறிவிடந்தோ ரிரண்டும் எனவும், ஆணவமலமறைப்பால் அவைகளைத் தனதாகக் கருதிய தென்பார் அவற்றை யுயிர் அறியாமையால் எனவும், அவ்வறியாமையால் தன்போலுள்ள ஏனையனை நட்பினர் பகைவர் அயலினர் எனக் கருதியதென்பார் முந்திவரு தன்னையும் பிறரையும் கருதி எனவும், அக்கருதுதலால் விருப்பும் வெறுப்பும் வந்தனவென்பார் நனிமுதிர்விழைவு வெகுளி மருவி எனவும், அவ்விருப்பாற் சுகமும் வெறுப்பாற்றுன்பமும் வருமென்பார் முன்னுசுகதுன்பங்கள் மன்னி எனவும், அச்சுகதுக்கக்களுக்குக் காரணமாகிய விழைவு வெகுளிகளே இருவினைகளுக்குக் காரணமென்பார் இருவினை மேவி எனவும், இருவினை மேவுதற்குக் காரணம் ஆணவமென்பார் அதனை மூடமெனவும், அதனல் அலைபோல் எழுவது சனனமரணமென்பார் பிறப்பிலாழும் எனவும், அதுவே பசுவிற்குப் பந்தமென்பார் பந்தமுறு முயிர் எனவும், நீ பரதந்திரனென்பார் உயிர் சுதந்திரமிலி எனவும், நீ எனதெனக் கருதிய பாசம் நிலையுறுவதுபோற்றோன்றும் பாசத்தின் காரியமாகிய கருவிகள்சடமென்பார் சடம் பாசமான கருவிகள் முழுதும் எனவும், பாகம் வர அதனைப் பசுவுக்குக் கூட்டும் நான் பதியென்பார் மற்றவை நடத்திடும் ஒருவனென் எனவும், பதி பசு பாசங்களி னிலக்கணங்களைப் பகுத்தறிதலே மாணவகனிலக்கணமென்பார் இவை பகுத்து எனவும், இவை சிந்தித்துத் தெளிதலே ஞானநிட்டை என்பார் சிந்தனைசெய் எனவும், இதனுற் போத மொழியுமென்பார் உன் சுதந்திர மற,எனவும், தற்போத மொழிந்தவிடத்துப் பிறப்பறுமென்பார் பந்தமறும் எனவும் கூறினர். இவை யொன்றற்கொன்று காரணகாரியமாய் நிற்றலால் காரணமாலையணி. (ச)

இதுவுமது.

காம விடத்தான் மாமயல் கொண்டே நொந்தேனைக்
கருணியத்தால் வாவென வந்தா டந்தோனே
தீமை யிழைத்தேழ் வாரிதி சென்றே நின்றேனைச்
சீரருள் பெற்று ரார்கனை தந்தா ளெங்கோனே
மாமல முற்றே தோமுறு நெஞ்சே னுய்ந்தார
வாய்மொழி நற்றே னீமிசை யிந்தா வென்றீயுஞ்
சேம நிதிப்போ லுருறை செங்கோ செங்கீரை
தேவர் தமக்கோர் மாமணி செங்கோ செங்கீரை.

(இ-ள்.) காமம் விடத்தால் மாமயல் கொண்டு நொந்தேனை - காமமென்னும் விடத்தினல் பெரிய மயக்கத்தைக்கொண்டு மனம் வருந்தின என்னை, கருணியத்தால் வா என வந்து ஆள் தந்தோனே - உனது பெருங்கரு

ணையால் வாவென்றழைத்துக் காட்சிதந்து அடிமைகொண்டவனே, தீமை இழைத்து - உயிர்களுக்குத் தீவினையையே என்றுஞ் செய்து, ஏழ் வாரிதி சென்றே நின்றேனை - எழுபிறப்பாகிய ஏழு கடலிலழுந்தி நின்ற என்னை, சீர் அருள் பெற்றார் ஆர் கரை தந்து ஆள் எம்கோனே-உனது திருவருள் பெற்றா ரடையும் முத்தியாகிய கரையைத்தந்து அடிமைகொள்ளும் எமதிறைவனே, மாமலம் உற்றே தோம் உறும் நெஞ்சேன் உய்ந்து - கரிய ஆணவமலத்திற் சிமிழ்ப்புண்டு குற்றம் வாய்ந்த மனத்தையுடைய யான் அக்குற்றத்தினின்றும் நீங்கி, வாய் மொழி நல் தேன் நீ ஆரமிசை இந்தா என்று ஈயும் - உனது அனுபூதியாகிய சுவை கனிந்த தேனை நீ பருகாய் இதோ என்று அருளும், சேமநிதி போரூர் உறை செங்கோ செங்கீரை - வைப்புநிதியாகிய திருப்போரூரி லெழுந்தருளிய இறைவனே, தேவர்தமக்கு ஓர் மாமணி - தேவர்களுக்கு ஓர் சூளாமணியாயுள்ளவனே செங்கீரை யாடியருளாய்.

இந்தா இதோளி என்பதன் திரிபு - செங்கோ செங்கீரை என்பதன் மரூஉ. செங்கோ செங்கீரை விரைவுப்பொருளில் வந்த அடுக்குத்தொடர். விடம்-பருகினலன்றிக் கருதினும் நோக்கினும் கேட்டாலும் மயக்கந்தாராது. அதுபோலன்றிக் காமங்கருதியபோதே மயக்கந்தருமென்பதுதோன்ற மாமயல் எனவும், தேவர் சிகையிலணியும்மணி சூளாமணி என்பதுதோன்ற மாமணி எனவும், அயன் முதலிய பலரும் உனது திருவருளைப்பெறத் தவத்தைச்செய்துவாடி நிற்கவும் அவர்களைக் கருதாது கடைப்பட்ட என்னை வாவென்றழைத்தருளியஅருளின்றன்மைதோன்றக் காருணியத்தால் வாவெனவும்,அரியதில் அரியான்எளியதில் எளியானுய்ப் புலப்பட்டனனென்பது சொல்லாற்றலால் தோன்றவந்தெனவும்,காமமயக்கால் பிறர்க்கு வருவது தீங்கேயென்பது தோன்றத்தீமைஇழைத்தே எனவும்,அதனல்வருவது எழுபிறப்பென்பதுதோன்ற ஏழ்வாரிதி எனவும், அப் பிறப்பு விடாது தொடருமென்பது தோன்ற சென்றே நின்றேனை எனவும், அவனது திருவருளைப் பெற்றோர் அடைவது முத்தி என்பது தோன்றச் சீரருள்பெற்றா ரானெனவும், சனனக்கடலைக் கடத்தற்கு முத்திசாதன மென்பது தோன்றக் கரை எனவும், மயலும் தீமையுந் தோன்றுதற்குக் காரணம் ஆணவமல மென்பது தோன்ற மாமலமுற்றே எனவும், மோகமுதலிய தீக்குணங்கள் அம்மலத்தின் காரியப்பாடென்பது தோன்றத் தோமுறு நெஞ்சேன் எனவும், அதினின்று நீங்குதற்கு அவனது அநுபூதிகாரணமென்பது தோன்ற உய்ந்தாரவாய்மொழி நற்றேன் நீமிசையிந்தாவென்றீயு மெனவும். தீரா மிடியாளனுக்கு அம் மிடிதீரச் சேமநிதி எதிர்ப்பட்டதுபோலத் தனக்குத் திருப்போரூர் எதிர்ப்பட்டமைதோன்றச் சேமநிதிப் போரூரிறை எனவும், சூரபன்மன் முதலிய அசுரர்களால் விளைந்த ஆற்றுதற்கரியதுன்பக்கடலினின்றும் தேவர்களைக் கரையேற்றிய அருமைதோன்றத் தேவர்தமக்கோர்மாமணி எனவுங் கூறினர். ஏழ்வாரிதிகரை என உவமானப்பொருள்களால் பந்தமுத்தியென்னும் உவமேயப்பொருள்களை இலக்கணையாகக்கூறுதலால் உயர்வுநவிற்சியணி. எழுபிறப்பாவன-தேவர்,மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம். இவற்றின் வகையினை,

"ஊர்வ பதினொன்று மொன்பது மானுட
நீர்பறவை நாற்காலோர் பப்பத்தாம் — சீரிய
பந்தமாந் தேவர் பதினு லயன்படைத்த
வந்தமில்சீர்த் தாவரநா லைந்து."—என்பதனுலும்,

மோகமுதலியன ஆணவமலத்தின் காரியப்பாடென்றதை—

"விகற்பங் கற்பம் - குரோதமோகங் கொலையஞர் மதநகை - விராயெண் குணனு மாணவுமென விளம்பினை" என்பதனுலும் அறிக.

களவறு ஞானிக ளுளமலர் மீதி
 லெழுந்தூ றுந்தேனே
கடையனை மேவிய மலமற வோர்குரு
 வென்றே வந்தோனே
யளவறு சூரிய னென்மயி லேறி
 யுவந்தூ ருங்கோவே
யகமுக மாயொரு சுழிமுனை சேர்பவ
 ரங்கே யுந்தேவே
யிளநில வாணகை யுறுகுற மாதை
 யியைந்தா ளுந்தோளா
வெழிலடி யார்முத லனைவரு மேநகை
 கொண்டா ருந்தாளா
தெளிவுற வேயென தகநிறை பேரொளி
 செங்கோ செங்கீரை
திகழ்சம ராபுரி முருக சடானன
 செங்கோ செங்கீரை.

(இ-ள்.) களவு அறு ஞானிகள் உளம் மலர்மீதில் எழுந்து ஊறும் தேனே - கள்ள ~~மிகுந்த~~ மெய்ஞ்ஞானிகளது இதயதாமரைமலர்மேல் எழுந்து சுரக்கும் தேன்போ லினியவனே, கடையனை-நாயிற் கடைப்பட்ட வென்னை, மேவிய மலம் அற ஓர் குருஎன்றே வந்தோனே - சிமிழ்த்த ஆணவமலம் நீங்க ஒருகுருமூர்த்தமென்று கண்டோர் கூற வந்தருளினவனே, அளவு அறு சூரியர் என்ன மயில் ஏறி உவந்து ஊரும் கோவே - அளவில்லாத சூரியருதித்ததுபோல மயிலின்மேலாரோகணித்து மகிழ்ந்து நடத்தியருளும் அரசே, அகம்முகமாய் ஒரு சுழிமுனை சேர்பவர் அங்கு ஏயும் தேவே - அந்தர் முகமாய் ஒரு சுழிமுனை நாடியில் சென்று நிற்குஞ் சிவயோகிகள் அந்நாடியினின்று சென்றடையும் கடவுளாயுள்ளவனே, இள நில வாள் நகை உறு குற மாதை இயைந்து ஆளும் தோளா - இளஞ் சந்திரனது கிரணத்தை யொக்கும் புன்னகையரும்பும் வள்ளி நாய்ச்சியாரை மணந்து ஒற்றித்த திருத்தோள் களையுடையனே, எழில் அடியார் முதல் அனைவருமே நகைகொண்டு ஆரும் தாளா -

அழகிய அடியவர் முதலிய தேவர்களும் விருப்பங் கொண்டடையும் திருவடிகளையுடையவனே, எனது அகம் தெளிவுற - எனது மனந்தெளிய, நிறை பேர் ஒளிசெங் கோசெங் கீரை - நிறைந்த பெரிய ஒளிப்பிழம்பா யுள்ளவனே செங்கீரை யாடியருளாய், திகழ் சமராபுரி முருக - விளங்குந் திருப்போரூரி லெழுந்தருளிய முருகக் கடவுளே, சடானன செங்கோசெங்கீரை - ஆறு திருமுகங்களையுடையவனே செங்கீரையாடியருளாய்.

மெய்ஞ்ஞானிகளென்பார் களவறுஞானிகளெனவும், அவரிதய தாமரையில் வசிப்பவ னென்பார் உளமலர் மீதிலெழுந்து எனவும், என்றும் இன்பந்தருபவனென்பார் உலகியல் நோக்கி ஊறுந்தேனே எனவும், கீழ்மையை யுடையே னென்பார் தன்னைக் கடையன் எனவும், அறுதியே மறைத்ததென்பார் மேவியமல மெனவும், திருக்கடைக்கண்ணருளா லதைப்போக்கச் சாதாரத்திருவுருக்கொண்டு வந்தன னென்பார், அற ஓர்குருவென்றே வந்தோனே எனவும்,அகவிருள்போக்கப் பேரொளியாய் நின்றதுபோலச் சூரபன்மன் முதலிய பகையிருளொதுங்கத் தோன்றினனென்பார் அளவறுசூரியனென மயிலேறி எனவும், அது தன்பொருட்டன்று இந்திராதியர் பொருட்டென்பார் உவந்தூருங் கோவே எனவும், இந்திரியத்தைத் தம் வசப்படுத்த என்பார் அகமுகமா யெனவும், அதனைத் தம்வசப்படுத்தற்கு உசுவாச நிசுவாச மாயுள்ள பிராணவாயுவை ரேசகபூரகஞ் செய்து கும்பித்து நிறுத்துமிடம் சுழிமுனையென்பார் சுழிமுனை எனவும், அது குண்டல சத்தியின்தானம் என்பார் ஒரு எனவும், அதுதான் மனமடங்கும் நிட்டைஎன்பர் சேர்பவனெனவும், அங்குத் தியானிக்கப்படும் பொருளா யுள்ளா னென்பார் அங்கேயுந் தேவே எனவும், ஆன்மாக்களுக்குப் போகம் அருளுதற்பொருட்டுத் தான் போகியாயிருந்தானென்பார் இள நில வாணகை யுறு குறமாதை யியைந்தாளுந்தோளா எனவும், தேவரிலும் அவனடியார் சிறந்தவரென்பவர் எழிலடியார்முதலனைவரு மெனவும், அவர்கள் வேண்டியாங் கடைய அடைக்கலம் புகுதற்குப் புகலிடம் உடையான் என்பார் - நசைகொண்டாருந்தாளா எனவும், ஆணவமலத்தால் இருட்டறைபோலுள்ள எனதுமனம் அவ்விருட்சி யொழிந்து தன்பானிற்க நின்றருளினு னென்பார் தெளிவுறவே யெனதகநிறைபேரொளி எனவும், ஆறுபடைவீடுகளிலுஞ் சிறந்ததென்பார் திகழ் சமராபுரி எனவுங் கூறினர். (௬)

மகபதி சக்கிரி மலரய னத்திய
வண்சே ருங்காவே
மலமறு முத்தர்க ளெனுமளி சுற்றிய
தண்சூ ழும்பூவே
யிகலறு மெய்த்தவ முழுதையு முற்றவ
ரெண்கூ ரும்பேறே
யெழிலருள் பெற்றுயிர் மயில்கள் களிக்க
வெழுந்தூ ருங்காரே

ககன சுரர்க்கொரு துணையென நெட்டயில்
கொண்டே நின்றோனே
கடவுண் மடப்பிடி தனவிணை தைத்தொளிர்
திண்டோண் மொய்ம்போனே
திகழ்மதி யத்தொளிர் சமர புரிக்கிறை
செங்கோ செங்கீரை
செறிதய வுற்றவ ரிதய புரிக்குக
செங்கோ செங்கீரை.

(இ-ள்.) மகபதி சக்கிரி மலர் அயன்-வேள்விக்குத் தலைவனாகிய இந்திரனும் சுதரிசனமென்னுஞ் சக்கரத்தையுடைய திருமாலும் தாமரைமலரில் வசிக்கும் பிரமனும், நத்திய வண் சேருங் காவே - தமது இளைப்பு நீங்க விரும்பிய டைந்த நிழல் வளம் அமைந்த சோலையே, மலம் அறும் முத்தர்கள் என்னும் அளி சுற்றிய - ஆணவமென்னும் மலத்தினின்று நீங்கிய சீவன்முத்தர்களென்னும் வண்டுகள் புறஞ்சூழ்ந்து கிடக்க, தண் சூழும் பூவே - திருவருளென்னுங் குளிர்ச்சிவாய்ந்த மலரோ, இகல் அறு மெய்த்தவம் முழுதையும் உற்றவர் - தம்முள் பகைமையகன்ற வுண்மைவாய்ந்த தவமுற்றையும் ஒருங்கே யடைந்தவர், எண்கூடும் பேறே-தியானிக்கும் பெரும்பேறுயுள்ளவனே, உயிர் மயில்கள் - ஆன்மகோடிகளென்னும் மயில்கள், எழில் அருள் பெற்று களிக்க - உனது திருவருளென்னு நீர்த்துளியைப்பெற்றுக் களிகூர, எழுந்து ஊரும் காரோ - ஞானவெளியில் எழுந்து தவழும் மேகமே, ககன சுரர்க்கு ஒருதுணை என, நெடு அயில் கொண்டே நின்றோனே - பொன்னுலகில் வாழுந் தேவர்களுக்கு ஓர் துணையாக நெடிய வேலேந்தி நின்றவனே, கடவுள் மடப்பிடி தனஇணை தைத்து ஒளிர் - தெய்வநாய்ச்சியாரது இரண்டு தனங்களும் பாய்தலால் விளங்கும், திண்தோள் மொய்ம்போனே - திண்ணிய திருத்தோள்களையுடையவனே, திகழ் மதியத்து ஒளிர் சமரபுரிக்கு இறை - விளங்குஞ் சந்திரமண்டிலத்தை யொத்து விளங்குந் திருப்போரூருக் கிறைவனே, செறி தயவு உற்றவர் இதயபுரி குக - நெருங்கிய உனது திருவருளை யடைந்தோரது இதயமாகிய புரியில் வசிக்கும் குகனே, செங்கோ செங்கீரை,—

சூரபத்மன் முதலிய அசுர ரென்னுங் கோடையால் அடிபட்டு வேசற்ற இந்திரன் திருமால் முதலிய தேவர்கள் அவ் வேசறவுநீங்கத் தனது தண்ணருளாகிய நிழலை அவர்களுக்குத் தருஞ் சோலைபோல நிற்றலால், மகபதி சக்கிரி மகபதி மலரய னத்திய வண்சேருங்காவே எனவும், ஆணவமலம் நீங்கிய சீவன்முத்தர்களென்னும் வண்டுகள் அகமும் புறமுஞ் சூழ்ந்து பேரின்பமதுப்பருகித் திளைத்துக் களிகூரத் தானொரு மலர்போ னிற்றலால் மலமறு முத்தர்களெனு மளிசுற்றிய தண்சூழும் பூவே எனவும், காமக் குரோத லோப மோக மத மாற்சரிய மென்னும் பகை யிகந்த தவமென்பார் இகலறு மெய்த்தவ மெனவும், அதனை ஓர் சார்புபற்றியுடைய ரல்லரென்பார் முழு

தையு முற்றவனெனவும், அவர் அவனையன்றி ஓர் முதல்வ னுண்டென்று கருதுவா ரில்லை என்பார் எண்கூடும் எனவும், அவர் தியானத்திற் குரிய பயனையருள்வோனென்பார் பேறே எனவும், ஆன்மாக்கள் தனது திருவருள் பெற்றுக் களிகூர இனிய காட்சியருள்வோனென்பார், எழிலருள் பெற்றுயிர் மயில் களிக்க வெழுந்தூருங்கோவே எனவும், மண்ணுலகினர்க்கும் அன்றியென்பது உபலக்கணத்தால் தோன்றக் கண்சுரர்க்கெனவும், அவர்கள் சூரபன்மன் முதலிய பகைவரால் ஒரிடுக்கணு முறாது காவல்பூண்டு நின்றானென்பார் ஒரு துணை எனவும், உமையம்மையின் கூற்றையே தனக்கோர் படையாகக்கொண்டனனென்பார் நெட்டயில் கொண்டே எனவும், அவர்களை வெல்லுதலில் தனக்கோர் சலனமின்றி நின்றானென்பார் நின்றோனே எனவும், சந்திரமண்டிலம்போலத் தன்னை யடைந்தோர்க்குத் தண்ணளி சுரப்பவனென்பார் திகழ்மதி யொத்தொளிர் சமரபுரிக்கிறை எனவும், அத்தண்ணளியால் மல வெப்பொழித்து அடியவர்க்கு அருளும் இறைவனென்பார் இறை எனவும், தனது திருவருள்வழி நின்றோர் இதயத்தில் என்றும் வாழ்வோ னென்பார் செறிதய வுற்றவரிதய புரிக்குக எனவுங் கூறினர்.

குவளைப் பிழிசெங் குமுதப் பிழிகோ
கனகப் பிழிகூடிக்
கோதறு சேதக மாகிக் கூனற்
கொழுவுழு சீதைதொறுந்
தவளத் தரளத் தொடுபிழி யூற
றதும்பக் கடைசியர்தந்
தண்ணகை யொடுமித ழூற லொடுஞ்சம
ஞமென வுட்சினவிப்
பவளக் கடிகைப் பேரணி சரிதிகழ்
பங்கய மென்கையாற்
பணிலத் தரளத் திரளைத் திடரிற்
பழனக் கரைதரவே
திவளுற் றிடுதுண் டீரநன் னாடா
செங்கோ செங்கீரை
சீரூர் போரூர் வீர மயூர
செங்கோ செங்கீரை.

(இ-ள்.) குவளை பிழி - குவளைமலரின் றேனும், செம் குமுதம் பிழி - செவ்வாம்பலின் றேனும், கோகனகம் பிழி - தாமரையின் றேனும், கூடி - தம்முட் கூடி, கோது அறு சேதகமாகி - குற்றமற்ற சேறாய், கூனல் கொழு உழு சீதை தொறும் - வளைந்த கொழுவுழாநிற்ற படைச்சால் தோறும், தவளம் தரளத்து ஒடு பிழிஊறல் ததும்ப - வெள்ளிய முத்துகளோடு தேனூற்றுச்

சுரப்பும் பொலிந்தோங்க,கடைசியர் தம் தண் நகையொடும் இதழ்ஊறலொடும் சமனும் என உள்சினவி - மருதநிலப் பெண்கள் தமது தண்ணிய முறுவலோடும் இதழி ஊறும் ஊறலோடும் இவை யொப்பாமென்று மனத்திற்கோபங்கூர்ந்து, பவளம் கடிகை பேரணி சரிதிகழ் பங்கயம் மென்கையால் - பவளத்துண்டால் அமைந்த பெரிய ஆபரணமாகிய சூடகமும் வளையலும் விளங்குந் தாமரைமலரையொத்த மெல்லிய கையினுல், பணிலம் தரளம் திரளை - சங்குகளீன்ற முத்தின் குப்பைகளை, திடரின் பழனம் கரைதர-திடரைப்போல வயலின்கரையில் அம்மருதநிலப்பெண்கள் குவிக்க,திவளுற்றிடு துண்டீர நல்நாடா - அதனுல் விளங்கும் துண்டீரனுண்ட நல்லநாட்டை யுடையவனே, சீர் ஊர்போரூர் வீரமயூர - செல்வப்பொலிவு நீங்காத திருப்போரூரி லெழுந்தருளிய வீரம்வாய்ந்த மயில்வாகனனே, செங்கோ செங்கீரை,—

குவளை, செவ்வாம்பல், தாமரை இவற்றின் தேன்கள் பெருக்கெடுத்துப் பாய்தலால் வயலிற் சேறுபட, அவற்றை மருதநிலமாக்கள் கண்டு விளாக்கோலிய விடங்கள்தோறும் முத்தும் அத்தேனும் பொலிந்துதோன்ற, அவற்றை அந்நிலப்பெண்கள் கண்டு அவைகள் தமது தந்தபந்திகளுக்கும் தமது இதழூறலுக்கும் ஒத்துத்தோன்றுகின்றன என்று மனம்பொருது வயலின்கரையில் வாரியெறிய, அவையென்றும் விளக்கஞ்செய்யும் நாட்டையுடையவனே என்பார் திவளுற்றிடு துண்டீரநன்னுடா என்றார். இது மிகுதியணி. இந்நாடு தண்டகனுண்டதனுல் தண்டகநாடெனவும், துண்டீரனுண்டதனுல் துண்டீரநாடெனவும்,தொண்டைமானுண்டதனுல் தொண்டைநாடெனவும் காரணப்பெயர்களுடைமையால் துண்டீரநன்னுடா எனவும், சூரன் மயிலூர்தியாகவந்து தாங்கினமையால் வீரமயூர எனவுங் கூறினர். (அ)

புள்ளுங் கிளியு மயிலுங் குயிலும்
 பொன்னஞ் சிறையனமும்
பொருகோ டரமுங் கரியுந் திரியும்
 பொங்கர்ப் புதுமலர்வாய்க்
கள்ளும் விள்ளு மிருவிழி பிழியுங்
 கனிவகையின் சாறுங்
காலாய் மடுவா யாறா யோடிக்
 கடல்புக வெதிரேறித்
துள்ளும் மகரம் புயலின தகடு
 சுளித்துச் சலமேவிச்
சுடர்வான் மகரஞ் சாடிக் கங்கை
 துளைந்து திரும்பிவருந்
தெள்ளும் வளமுள தொண்டைநன் னுடா
 செங்கோ செங்கீரை

சீரூர் போரூர் வீரம யூர
செங்கோ செங்கீரை.

(இ-ள்) புள்ளும் கிளியும் மயிலும் குயிலும் பொன்னம் சிறை அன்னமும்-ஏனைப் பறவைகளும் கிளிகளும் மயூரங்களும் கோகிலங்களும் பொன்போலும் சிறகினைவாய்ந்த வோதிமங்களும், பொருகோடரமும் கரியும்திரியும் பொங்கர் புதுமலர்வாய் கள்ளும் - போர்செய்யும் குரங்குகளும் யானைகளும் தம்முட்பகையின்றி யுலவுஞ் சோலையிலுள்ள அஃறலர்ந்த மலர்கள் தமது வாயாற் கான்ற மதுவும், விள்ளும் இறால் இழி பிழியும் - தேன்முறுகியதால் வாய்விண்ட தேனடைசொரியும் தேனும், கனிவகையின் சாறும் - வாழை பலா மா என்னுங் கனிவகைகள் பதமுறுகிச் சிந்திய இனியரசங்களும், கால் ஆய் - முன்புகால்வாயாய், மடு ஆய் - (மலர்த்தேன் பெருக்கொடு தேனடையின் தேன்வந்து கலத்தலால்) மடுவாகியும், ஆறு ஆய்- (அவற்றொடு கனியின் சாறுவந்து கலத்தலால்) ஆறாகியும், ஓடி கடல்புக - உவட்டெடுத்தோடிக் கடலில் மடுக்க, எதிர் ஏறி துள்ளும் மகரம் - அவ் வெள்ளத்தின் எதிரே கிழித்தேறிச் சென்று துள்ளும் மகரமீனானது, புயலினது அகடுசுளித்து, மேகத்தினது வயிற்றைக்கிழித்து,சலம் மேவி-அதற்கு மேற்சலங்கொண்டு தாவி, சுடர் வான் மகரஞ் சாடி - விளங்கும் மகரராசியைப் பின்கண்டு, கங்கைதுளைந்து- அங்குள்ள கங்கைநீரி லாடி,திரும்பிவரும் தெள்ளும்வளம் உள்ள தொண்டை நல்நாடா-இந்நிலவுலகில் மீண்டுவரும் நிறைந்தவளம் வாய்ந்த தொண்டைநன்னாட்டை யுடையவனே, செங்கோ செங்கீரை,—

இந்நிலவுலகின் வளம்போல வானுலகில் வளமில்லையென்பது தெரிந்து மீண்டதென்பார் திரும்பிவருந் தெள்ளும்வளமுள தொண்டைநன்னாடா என்றார். காலாய்மடுவா யாறாயென்பது காறும் மிகுதியணியும், எதிரேறித்துளைந்து திரும்பிவருமென்பது காறும் அதிசயவணியுங் கலந்துவருதலால் கலவையணி. துணித்து எனவும் பாடம். துணித்தற்றொழிலை யிவற்றின்மேலேற்றுதல் வழுவாதலால் சுளித்து என்னும் பாடங்கொண்டாம். (கூ)

ஓதிம சாலம் மேதியி னங்க
ளூழக்கப் பேரேரி
யொள்ளிய கமலப் பள்ளியை விண்டாங்
குயர்தண் டலையேறத்
தாதவிழ் தண்டலை ஞிமிறுகள் விரைசெறி
தடமலர் மீதேறத்
தடநீ ராடிய மடவார் வெருவித்
தண்ணதி நீரேறக்
கோதறு நதியுறை வாளைக டாவிக்
குளிர்வயன் மடையேறக்

குலவிய மடைதவழ் குடவளை பதறிக்
கொழுவிய கமுகேறத்
தீதற வொளிர்தரு தொண்டைநன் னாடா
செங்கோ செங்கீரை
சீரூர் போரூர் வீரம யூர
செங்கோ செங்கீரை.

(இ-ள்.) மேதி இனங்கள் உழக்க - எருமைக் கூட்டங்கள் கலக்க, ஓதிமசாலம்-அன்னக்கூட்டங்கள், பேர் ஏரி ஒள்ளிய கமலப்பள்ளியை விண்டு - பெரிய தடத்தில் மலர்ந்து விளங்கிய தாமரையாகிய படுக்கையினின்று நீங்கி, அங்கு உயர் தண்டலை ஏற - அங்கு ஓங்கிய சோலையிற் குடியேறவும், தாது அவிழ் தண்டலை ஞிமிறுகள் விரை செறி தடம் மலர் மீது ஏற-மகரந்தத் தோடு மலர்ந்த அச் சோலையிலுள்ள வண்டுகள் வாசஞ்செறிந்த அத் தடாகத்திலுள்ள தாமரைமலர்மேற் குடியேறவும், தடம் நீர் ஆடிய மடவார் வெருவி தண் நதி நீர் ஏற - அத்தடத்தில் நீராடிய பெண்கள் அதற் கஞ்சித் தண்ணிய நதியில் நீராடச்செல்லவும், கோது அறு நதி உறை வாளைகள் தாவி- குற்றமற்ற அந்நதியில் வசிக்கும் வாளைமீன்க ளதற் கஞ்சித் தாவி,குளிர் வயல் மடை ஏற-குளிர்ந்த வயலி லுள்ள நீர்மடைமேற் பாயவும்,குலவிய மடை தவழ் குடம்வளை பதறி கொழுவிய கமுகு ஏற-விளங்காநின்ற அந்நீர்மடையிற் றவழும் குடம் போன்ற சங்குகள் அதற் கஞ்சிப் பசந்த கமுகின்மேற் பாயவும், தீதுஅற ஒளிர் தருதொண்டை நல்நாடா குற்றமற விளங்கும் நல்ல தொண்டைநாட்டையுடையவனே, செங்கோ செங்கீரை,—

தடத்தில் வாழும் அன்னங்கள் எருமைக ளத்தடத்தைக் கலக்க அதற்கஞ்சி அதனை விட்டுச் சோலையிற் குடியேறியதெனவும், நாம் குடியிருந்த சோலையில் அன்னங்கள் குடியேறியதேயென்று வண்டுகள் மனம் புழுங்கி அவ்வன்னங்கள் குடியிருந்த தாமரைச்சேக்கையிற் குடியேறியதெனவும், அத்தடத்தில் நீராடிய பெண்கள் வண்டுமூசுதற் கஞ்சி நதியில் நீராடச் சென்றனரெனவும், அவர்களுக்கஞ்சி அந்நதியில் வசிக்கும் வாளைகள் வயலின் நீர்மடைமேற் பாய்ந்ததெனவும் கூறிய பொருள்கள் முன்பின் முறைவழுவாமற் கூறுதலால் அரதனமாலையணி. (௧௦)

செங்கீரைப்பருவம் முற்றிற்று.

தாலப்பருவம் எட்டா மாதத்தில் நிகழ்வ தாதலால் தாலம் நாவினை யசைத்தருளா யென்னும் பொருண்மேனின்றது. தாலாட்டலென்பது தால மெனப் பின்மொழிகெட்டுத் தால மென நின்றதேனும் பின்மொழியோடுகூடி நின்றாற்போலவே தாலுவை யசைத்தருளாய் என்னும் பொருண்மே னிற்ற லால் இது பின்மொழிகெட்ட முன்மொழி நிலையல். இதனை வடநூலார் நாமை கதேசநாமக்கிரகண மென்பர். அமரசிம்மன் அமரமெனவும், வீமசேனன் வீமனெனவும் வருதல் காண்க.

கறையின் றொளிரு மதிமுகத்துக் கரும்பன்னரு மாடவருங்
கலவித் தேற லயின் றயின்று களித்துத் தருக்கி விளையாடு
நிறையுஞ் சோமச் சிலைத்தகடு நிரப்பிக் குலிசத் தூணிறுத்து
நிலைகொண் டரிய நவமணிக ணிகழு மாழைத் தசும்புநிரைப்
பொறைகொண் டிலங்கு பலமாடப் புனிதக் கொடிகள் கற்பகப்பூம்
பொங்கர்க் குறுந்தா ணறுமுகையிற் புடைக்குந் தோறு மடலவி
தறையி னறையின் பெருக்கூற்றுஞ் சமர புரியாய் தாலேலோ [ழ்ந்து
தமரக் கடலைக் கடந் தமுதந் தருவோன் மருகா தாலேலோ.

(இ-ள்.) கறை இன்று ஒளிரும் மதி முகத்து கரும்பு அன்னரும் ஆடவரும் - மறுவிகந்து விளங்கும் சந்திரனை யொத்த முகத்தையுடைய கரும்பினை யொத்த பெண்களும் புருடர்களும்; கலவி தேறல் அயின்று அயின்று களித்து தருக்கி விளையாடும் - புணர்ச்சியாகிய மதுவினைப் பருகி அம்மதுவாற் களிப்பேறி இறுமாந்து விளையாடாநின்ற, நிறையும் சோமச் சிலைதகடு நிரப்பி- தண்மை நிறைந்த சந்திரகாந்தக்கல்லின் தகடுகளை வரிசைப்படுத்தி, குலிசத் தூண் நிறுத்து நிலைகொண்டு - அதன்மேல் வயிரத்தூண்களை நிறுத்திய நிலைக ளைக்கொண்டு, அரிய நவமணிகள் நிகழும் மாழை தசும்பு நிறை பொறை கொண்டு இலங்கும் பல மாடப் புனிதக்கொடிகள் - பெறுதற்கரிய மாணிக்கமுத லிய நவமணிக ளழுத்திய பொன்னாலமைந்த குடங்களின் வரிசையாகிய பார ங்களைச் சுமந்து விளங்காநிற்ற பல உபரிகைகளிற் கட்டிய வெள்ளிய கொடி கள், கற்பகப் பூங்கொம்பர் குறுந்தாள் நறுமுகையில் புடைக்குந்தோறும்-மல ர்களையுடைய கற்பகச்சோலையில் சிறிய காம்பினையுடைய நறுமணங் கமழும் அரும்புகளில் மோதுந்தோறும், மடல் அவிழ்ந்து தறையில் நறையின் பெரு க்கு ஊற்றும் சமரபுரியாய் - அவ் வரும்புகள் இதழ் முறுக்கவிழ்ந்து நிலவுலகி ன்மேல் தேன் பெருக்கினைச் சிந்தும் சமரபுரியில் வசிப்போய், தாலேலோ - தாலாட்டல் செய்தருள்வாய், தமரம் கடலை கடந்து அமுதம் தருவோன் மருகா தாலேலோ - ஒலியையுடைய திருப்பாற்கடலைக் கடைந்து அமுதினை த்தேவர்களுக்குத் தந்த திருமாலின் மருகோய் தாலேலோ,—

சோமச் சிலைத்தகடு நிரப்பிக் குலிசத் தூணிறுத்து - நிலைகொண்டரிய நவமணிக ணிகழு மாழைத் தசும்புநிறை என்பதுகாறும் செல்வ மிகுதியைக்

கூறுதலால் வீறுகோளணியும்,அங்குள்ள உபரிகைகளிற் கட்டிய கொடிகளுக்கும் விண்ணுலகிலுள்ள கற்பகச்சோலைக்கும் சம்பந்தமில்லாதிருக்கச்சம்பந்தங் கற்பித்துக்கூறுதலால் தொடர்புயர்வுநவிற்சியணியும்- கலந்து வருதலால் கலவையணி. (௯)

மகரப் பரவை யளறு பட
மாயைத்திறமார் கிரவுஞ்ச
வயமால் வரைசெந் தூளியெழ
மதமாமுகத்துச் சினத்தவுண
னகலக் குலிச வரை தகர
வரிமாமுகன்பே ராயிரவா
யருஞ்சோ ரிகணின் றலையெறிய
வண்டகூடத் தொடுஞ்சூத
மிகலற் றலறிவிழ வசுர
ரெவரும்பதறிக் குடியோட
விலங்கு மமரர் கலங்காம
லெழில்வானுலகங் குடியேறத்
தகைமைச் சுடர்நெட் டிலைவடிவேற்
றடக்கையெடுத்தோய் தாலேலோ
தமரக் கடலைக் கடைந் தமுதந்
தருவோன்மருகா தாலேலோ.

(இ-ள்.) மகரப்பரவை அளறுபட-மகரமீன் உலாவுங் கடல் சேறுபடவும், மாயைதிறமார் கிரவுஞ்ச வயம் மால்வரை செந்தூளி எழ - மாயையின் பகுதிநிறைந்த கிரவுஞ்சமென்னும் வெற்றிவாய்ந்த பெரியமலை செந்தூளியெழவும், மதம் மாமுகத்து சினத்து அவுணன் அகலம் குலிசவரைதகர - யானைமுகத்தையும் கோபத்தையுமுடைய கஜமுகாசுரனது மார்பாகிய வயிரமலையுடைபடவும், அரிமாமுகன் பேர் ஆயிரவாய் அருஞ்சோரிகள் நின்று அலை எறிய - சிங்கமுகாசுரனது பெரிய ஆயிரவாய்களுங் கான்ற மிக்க வுதிரங்கள் கடல்போனின்று அலையெறியவும், அண்டகூடம் தொடும் சூதம் இகல் அற்று அலறிவிழ-அண்டகூடத்தை யளாவிய மாமரம் பகை இகந்து கதறிவிழவும், அசுரர் எவரும் பதறி குடியோட - அவர்களொழிந்த ஏனைஅசுரர்கள் யாவரும் மனங் குலைகுலைந்து மகேந்திரத்தினின்றுங் குடியோடவும், இலங்கும் அமரர் கலங்காமல் எழில்வான் உலகம் குடிஏற- (குடியோடிய) விளங்குந் தேவர்கள் மனங்கலங்காமல் அழகிய வானுலகிற் குடியேறவும், தகைமை சுடர்நெட்டிலை வடிவேல் தடக்கை எடுத்தோய்-அழகும் பொலிவும்வாய்ந்த நெடிய இலைபோலுந்தகட்டுவடிவாய்ந்த கூரிய நீண்டவேலைக் கையிலெடுத்தவனே,தாலேலோ,

சூரபத்மன் கடல்நடுவுள் மாமரவடிவாய் நின்றகாலையில் அதன்மேலெறிந்த வேல் அக்கடலுஞ் சுவறச்செய்தலால் மகரப்பரவை யளறுபட எனவும், அணுவை மேருவாக்கலும் மேருவை யணுவாக்கலுமுதலியபலமாயையால் வீரவாகுமுதலிய நவவீரரையும் மயக்கினமையால் மாயைத்திறமார் எனவும், அவ்வசுரன் ஓர் பறவைவடிவாய் நிற்றலால் கிரவுஞ்சவயமால்வரை எனவும்,அதனொடு கலந்து தாரகாசுரன் பலமாயைகளை விளைத்துப் போர்செய்தமையால் அதனொடுகூட்டி வயமால்வரை செந்தூளியெழ மதமாமுகத்துச் சினத்தவுணன கலக்குலிசவரை தகரஎனவும், அவனுக்கு முன்னோனாகிய சிங்கமுகாசுரன் ஆயிரந்தலைகளுடைமையால் அரிமாமுகன் பேராயிரவாயருஞ் சோரிநணின்றலையெறிய எனவும், அவனுக்கு முன்னோனாகிய சூரபன்பன் ஆயிரத்தெட்டண்டங்களையும் தன்னடிக்கீழ்ப்படுத்திநின்ற தன்மைதோன்றத் தான் மாமரவடிவாய் நின்றகாலத்தும் அவ்வண்டங்களைத் தன் கீழ்ப்படுத்திநின்றன னாதலால் அண்டகூடந்தொடுஞ் சூதமெனவும், அவன் கிழிபட்டு விழுந்தகாலையில் தேவர்கள் அசுரர்பகை யொழிதலால் இகலற்றலறிவிழ எனவும், தேவர்கள் குடியோடச்செய்த அசுரர்கள் இன்று அஞ்சிக் குடியோடவும் குடியோடிய சுரர்கள் அவர்களுக்கஞ்சாது தமது நாட்டிற் குடியேறவும் செய்தருளினமையால் அசுரரொவரும் பதறிக்குடியோட எனவும், அமரர் கலங்காமல் வானுலகங் குடியேற எனவும், இவ்வாறுசெய்தது தேவர்களிடத்துக் கண்ணோட்டஞ்செய்யாத நடுநிலைமையாதலால் தகைமைச்சுடர்நெட்டிலை வடிவேலெனவும், தடக்கையெடுத்தோயெனவுங் கூறினர். (உ)

மூல நிலத்தி லதோ முகமாய்
முகிழ்த்துவிழியின் பொடுதுயிலு
மூரிப் பாம்பைக் காலனலை
மூட்டியெழுப்பி நிலமாறுஞ்
சீல மொடும்போய்த் தரிசித்துச்
செழுமாமதியி னமுதகட
றேக்கி யகத்தங் கசைவறுமோர்
தெய்வத்தவத்தோ ருளவிழியிற்
காலுந் தீப மினல்பந்தங்
கடிகூர்விரிசு கதிர்மதிபோற்
காட்டு மொளியா யிவையாவுங்
கடந்தாங்கழிவில் பேரொளியாய்ச்
சால விளங்கும் விந்துவெனுந்
தடமாமயிலோய் தாலேலோ
தமரக் கடலைக் கடந்தமுதந்
தருவோன்மருகா தாலேலோ.

(இ-ள்.) மூலநிலத்தில் அதோமுகம் ஆய் விழிமுகிழ்த்து - மூலாதாரத்தில் கீழ்நோக்கியமுகமாய்க் கண்களைமுகிழ்த்து, இன்பு ஒடுதுயில்கூரும் பாம்பை-இன்பத்தோடு துயில்கூரும் பெரியகுண்டலிசத்தியென்னும் பாம்பினை, கால் அனலைமூட்டி எழுப்பி - கும்பித்த பிராணவாயுவால் அக்கினிமண்டிலத்தை மூட்டி எழுப்பி, நிலம் ஆறும் சீலமொடும்போய் தரிசித்து - மூலாதாரமுதல் ஆக்கினையீறுகவுள்ள ஆறுதாரங்களிடத்தும் ஒழுக்கத்தோடுஞ் சென்று ஆங்காங்குள்ள கடவுளைத் தெரிசித்து, செழுமாமதியின் அமுதகடல் அகத்து தேக்கி - செழித்த பெருமைவாய்ந்த சந்திரமண்டிலத்தினின்றுஞ் சிந்தும் அமுதப்பிரவாகத்தை உள்ளே நிரப்பி வாயால் நிறைய மடுத்து, அங்கு அசைவு அறும் ஓர் தெய்வத்தவத்தோர் உள விழியில்- அங்கு அசைவற்றுநிற்கும் ஒரு சிவயோகிகளது அகக்கண்ணில், காலும் தீபம் மின்னல் பந்தம் கடிகூர் விரிசு கதிர்மதிபோல் காட்டும் ஒளியாய், ஒளிவீசும் தீபமும்மின்னலும் பந்தமும் ஒளிமிக்க தீப்பொறியும் சூரியனும் சந்திரனும் ஆகிய இவைகளைப்போல அங்குப் புலப்படும்ஒளியாகியும், இவையாவுங்கடந்து அங்கு அழிவில் பேரொளி ஆய் - இவ்வொளி யெல்லாவற்றையுங்கடந்து அவ்விடத்து அழிதலில்லாத பெரிய ஒளியாகியும், சாலவிளங்கும் விந்துஎன்னும் தடமாமயிலோய்-மிகவும் விளங்கும் விந்துதத்துவமென்னும் பெரிய மயிலையுடையோய் தாலேலோ,—

குய்யத்தின் இரண்டங்குலத்தின் கீழிருப்பது மூலாதாரமென்பார் மூலநிலத்தில் எனவும், அம்மூலாதாரத்திற்கு ஒன்பதங்குலத்தின்மேல் உள்ள கந்தத்தானத்தில் இரண்டங்குலத்தின் கீழே குண்டலிசத்தி பாம்புவடிவாய்க் கந்தத்தானத்தினின்று புருவமத்தியங்காறும் சுழிமுனைத்துவாரத்தை மறைத்துத் தனதுவாலால் பிரமரந்திரத்தை மறைத்து அக்கந்தத்தானத்திலுள்ள குளிர்ச்சியால் அக்குண்டலிசத்தி துயிலுமென்பார் அதோமுகமாய் முகிழ்த்து விழியின்பொடு துயிலுமூரிப் பாம்பை எனவும், அம்மூலாதாரத்தில் அக்கினிமண்டிலம் உளதென்பார் அனலையெனவும், கும்பித்த பிராணவாயுவால் வன்னிபீசத்தால் அக்கினிமண்டிலத்தைமூட்டிஅப்பாம்பினை யெழுப்பவேண்டுமென்பார் காலனலைமூட்டி யெழுப்பி எனவும், மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்கினை யென்னும் ஆறுதாரங்களிலும் பிரணவத்தியானத்தோடுசெல்லவேண்டுமென்பார் நிலமாறும்சீலமொடும்போய் எனவும் அங்கங்குள்ள விநாயகர்முதலிய கடவுளைத் தரிசிக்கவேண்டுமென்பார் தரிசித்தெனவும், அந்தலக்ஷியங்களினின்று அவ்வாறுதாரங்களுக்கு மேலாகிய பிரமரந்திரத்தில் அப்பிரணவத்தோடுஞ்சென்று அப்பிரமரந்திரத்திலுள்ள சந்திரமண்டிலத்தை அவ்வன்னிபீசத்தால் இளகச்செய்ய அதினின்றும் அமிர்தப்பிரவாகம் வருமென்பார் செழுமாமதியி னமுதகடல் எனவும், எழுபத்தீராயிரம் நாடிகளில் அவ்வமிர்தப்பிரவாகத்தை நிரப்பவேண்டு மென்பார் அகந்தேக்கி எனவும், அங்குத்தோன்றிய தியானத்தின்றன்மையினின்றன என்பார் அங்கசைவறுமோர் தெய்வத்தவத்தோர் எனவும், இங்குக்கூறுவது யோகநிலையாதலால் ஆக்கினைத்தானமாகிய புருவமத்தியமென்பார் உளவிழியின் எனவும், அங்கு அவர்கட்குத் தோன்றும் ஒளி இம்முறை என்பார்

காலுந் தீப மினல் பந்தங்கடிகூர் விறிசு கதிர்மதிபோற்காட்டு மொளியாய் எனவும், இவ்வொளி கண்ட வொளிகளாகச் சூரியனொளியின்கீழ்ச் சந்திராதிய ரொளியடங்கி நிற்றல்போல அவ்வொளிகள்யாவுந் தன்கீழடங்கி நிற்கத் தோன்றும் அகண்டவொளியாய் அவர்களால் தியானிக்கப்படுமென்பார் பேரொளியாய் எனவும், சுத்தமாயை என்பார் சாலவிளங்கும் எனவும், யாவுந் தோன்றுதற்குக் காரணமாயுள்ள தென்பார் விந்துவெனுந் தடமாமயிலோய் எனவும், தன்னையடைந்தோர் பிறவியை யொழிப்பானென்பார் தமரக்கடலைக் கடைந்தோன்மருகா எனவுங் கூறினர். விறிசு ஒருவகைத் தீப்பொறி.

காரார் திசைமலி போரார் களிறு கலங்கிப் பிளிறிடவே
　　கனக நிறத்துத் திருகு மருப்பிற் கனிசின மொடுமோதிப்
பேரா யிரமுடி யுரக நெளிக்கப் பின்போய் முன்னோடிப்
　　பேசரு வடவரை குலவரை திசைவரை பெயரும் படிதாவிப்
பார்சூ ழேழ்கடல் குமுறத் துள்ளிப் பனிவா னகமோதிப்
　　பகரரு கோளகை சாடிப் பீடுறு படிவரு தகருடையோய்
தாரார் பொழில்சூழ் போரூரிறையே தாலோ தாலேலோ
　　சண்முக முக்கட் பண்ணவர் குருபர தாலோ தாலேலோ.

(இ-ள்.) கார் ஆர் திசைமலி போர் ஆர் களிறு கலங்கி பிளிறிட-மேகந்தவழும் எண்டிசையிலும் உள்ள மிக்க போர்த்தொழில் வாய்ந்த யானைகள் கலங்கிப் பேரொலிசெய்ய,கனகநிறத் துதிருகுமருப்பில் கனிசினம் ஒடு மோதி-பொன்போலும் நிறத்தையுடைய திருகிய கொம்பினால் முறுகிய கோபத்தோடுதாக்கி, பேர் ஆயிரமுடி உரகம் நெளிக்க - பெரிய ஆயிரம் பணுமுடிகளையுடைய ஆதிசேட னெளிக்க, பின்போய் முன் ஓடி - பின்வாங்கி முன்னே ஓடி, பேசு அரு வடவரை குலவரை திசைவரை பெயரும்படி தாவி-சொல்லுதற்கரிய மேருமலையும் அது வொழிந்த மலைக்கூட்டங்களும் அஷ்டகுலபர்வதங்களும் நிலைபெயரும்படி ஒன்றன்மேலிருந்து ஒன்றன்மேற்றாவி, பார்சூழ் ஏழ் கடல் குமுறத் துள்ளி - உலகினைச் சூழ்ந்த ஏழு கடல்களுங் கோஷிக்கத் துள்ளி, பனிவானகம் மோதி - குளிர்ந்த விண்ணுலகத்தைத் தாக்கி, பகர்அறு கோளகை சாடி - சொல்லுதற்கரிய அண்டகோளத்தைச் சிதைத்து, பீடு உறு படி வரு தகர் உடையோய் - பெருமை மிக்க நிலவுலகில் இறுமாந்து வரும் ஆட்டுவாகனத்தையுடையவனே, தார் ஆர் பொழில்சூழ் போரூர் இறையே-மலர்வரிசை நிறைந்த சோலைசூழ்ந்த திருப்போரூரி லெழுந்தருளிய இறைவனே, தாலேதாலேலோ, சண்முக முக்கண் பண்ணவர் குருபர-ஆறுமுகங்களையுடையவனே திரிநேத்திரங்களையுடைய சிவபெருமானுக்குக் குருமூர்த்தமாய் நின்றவனே தாலோ தாலேலோ,—

தாலோ தாலேலோ என்பதன் மரூஉ- ஆடு பாயும்போது பின்வாங்கி முன்னேபாய்தலால் பின்போய் முன்னோடி எனவும்,நாரதர் வேள்வியிற்றோன்

றித் திக்கசங்கள் கலங்க மோதியும், ஆதிசேடன் பொறையாற்ருது உடல் நெளிக்க வோடியும்,மேருமலைமுதலிய பருவதங்கள் நிலைகலங்க அவற்றின்மேனின்று ஒன்றன்மேல் தாண்டியும்,எழுகடல்களும் கொந்தளித்துக்கோஷிக்கத் துள்ளி வானுலகத்தைத் தாக்கி அண்டகோளங்களைச் சிதைத்து நிலவுலகின்மேல் உலவுதலால் பிளிறிடமோதி, ஒடி, தாவி,துள்ளி, சாடி, பீடுறு படிவருமெனவும், நாரதமுனிவர் தேவர்களோடு தொடங்கிய வேள்வியை முடித்து எங்களுக்கு அருளவேண்டுமென்று குறையிரக்க, வீரவாகுவால் அவ்வேள்வியிற்ருேன்றிய அந்த ஆட்டினைக் கொணர்வித்து அதனை ஊர்தியாகக் கொண்டருளினமையால் தகருடையோய் எனவும், பிரமனைச் சிறையில் வைத்தகாலையில் சிவபெருமானுர் திருமடியி லெழுந்தருளியிருந்து ஓமென்னுமெழுத்திற் பிரணவம் அருளுதலால் முக்கட்பண்ணவர் குருபர எனவுங் கூறினர். (௬)

அமரர்தமக் கன்ருெருநா ளிரணியவணி வடவரைமீதே
யறைதருமும் மாயையினூ டுருவியகண் டாகாரமதாய்த்
திமிரமகற்றியமுச் சுடருக்கொளிசெய் காரண வொளியாய்த்
திகழ்தருபுவன சராசரமுழுதுஞ் செறிபூரண வெளியாய்க்
கமையுறுமன வாசகமொடு காயங்கண் டளவிடவருநின்
காட்சியைமாட் சிமைபெறமுன் காட்டியகண் ணேயாவர்க்குந்
தமரெனநிலவிய சமரபுராதிப தாலோ தாலேலோ
சண்முகமுக் கட்பண்ணவர் குருபரதாலோ தாலேலோ.

(இ - ள்.) அமரர் தமக்கு அன்று ஒருநாள் இரணிய அணிவடவரைமீது-தேவர்களுக்கு அக்காலையில் ஒருநாள் பொன்மயமாகிய அழகிய மேருமலையின் மேல், அறை தருமும்மாயையின்ஊடுருவி அகண்டாகாரமதாய்-சொல்லப்படும் சுத்தம், அசுத்தம், சுத்தாசுத்தம் என்னு மூன்றுமாயைக்கு மப்பாற்பட்டு எங்கும் நிறைவாய், திமிரம் அகற்றிய முச்சுடருக்கு ஒளிசெய்காரண ஒளியாய்-புறவிருளைப்போக்கிய சோமசூரியாக்கினிகளுக்கு ஒளிதருங் காரணவொளியாகி, திகழ்தரு புவனசராசரமுழுதுஞ் செறிபூரண வெளியாய்-விளங்கும் அண்டங்களும் சராசரங்களுமாகிய முற்றும் தன்னுள் வியாப்பியமாகத் தான் வியாபகமாகிய வெளியாகியும், கமைஉறு மனம்வாசகம் ஒடு காயம்கண்டு அளவிடவரும் நின் காட்சியை - இயமநியமாதிகளா லடங்கியமனமும் வாக்கும் காயங்களுமாகிய திரிகரணத்தால் தெரிசித்து அடியார் அளவறுக்க எழுந்தருளிவரும் உனது காட்சியை, மாட்சிமைபெற முன்காட்டிய கண்ணே - மாட்சிமைபொருந்த முன்பு அத்தேவர்களுக்குப் புலப்படுத்திய கண்ணே, யாவர்க்கும் தமர்என நிலவியசமரபுராதிப தாலோ தாலேலோ-பிரமன்முதல் மக்களீருகவுள்ள யாவர்க்கும் உறவினர்போலத் தண்ணருள்செய்து விளங்கிய சமரபுரிக்குத் தலைவனே,—

குமாரக்கடவுள் பிள்ளைமைப்பருவத்தில் பிள்ளைகள்செய்யுஞ் சிறுகுறும்புபோல உலகங்கள் நிலைகலங்கித் தட்டுமாறத் தனது திருவுருக்காட்டாது திருவிளையாடல் செய்யுங்கால், அதனைத் தேவர்களுணர்ந்து இச்செயல் அசுரர் செயலன்று செய்தவன் யாரோவென எண்ணித் தேராது, மகமேருவினிடத்தில்வந்து சூரனுக்கஞ்சி யம்மேருவினிடத்திருந்த இந்திரனிடத்துக்கூற அவனுந் தெளியாது திருமால் முதலியோரிடத்துக் கூற, அவர்களும் ஐயுற்று ஓரிடத்துக் கூடி நின்றவழி, முருகக்கடவுள் ஆறுதிருமுகங்களைக் கரந்தருளி ஒருதிருமுகத்தோடு பிள்ளைமைப்பருவமுடையராய் அவர்களுக் கெதிரேவந்து குழந்தைகள் மணலைக்கிள்ளி யெறிவதுபோல் அம் மேருவின் சிகரபந்தியில் ஒன்றைக் கிள்ளித் தன் செயலையுணர்த்த அவர்கள் மேல் வீசியருளிய காலத்தில், இச்செயல் செய்தவன் இவன்தானென்று ஐயமொழிந்து போர் செய்யத் தொடங்க, அவர்களைப் போர்க்களத்தில் சாய்த்ததை நாரதமுனிவருணர்ந்து பிரகஸ்பதியினிடத்திற்சென்று கூற, அப்பிரகஸ்பதி அந்நாரதமுனிவரோடு போர்க்களத்துவந்து அம்முருகக்கடவுளைத் தரிசித்துப், பெருமானே இங்கு மடிந்தோர் நின்வருகையைநோக்கித் தவஞ்செய்திருக்கின்றனர், அவர்களந்தோ நின்னை யுணராது போர்செய்து மடிந்தனரே யென் றிரங்கிக் குறையிரக்க, அது கேட்டருளிக் கருணை கூர்ந்து அவர்களுக் குயிர்தந்து தனது பிள்ளைமைப்பருவத்தை யொழித்துத் தமது உண்மைநிலையைக் காட்டியருளினொன்பது புராணவரலாறுதலால் அது தோன்ற அமரர்தமக் கன்றருநாளிரணிய வணிவடவரை மீதே எனவும், தமது உண்மை நிலையைக் காட்டியருளுதற்குப் பல்லாயிரகோடியண்டங்களையும் கடந்துநின்ற விசுவரூபம் புலப்பட ஊடுருவி யெனவும், அவ்வண்டங்கள் சுத்தமாயை அசுத்தமாயை சுத்தாசுத்தமாயையின் காரியங்களென்பது புலப்பட அண்டங்களென்றுது மும்மாயையினெனவும், அம்மாயைக் கதீதப்பட்டவனென்பது புலப்பட அகண்டாகாரமதாய் எனவும், அம் மாயையின் காரியப்பாடுகளை ஆன்மாக்களுக்குப் புலப்படுத்தச் சந்திரசூரியாக்கினிகளுக்கு ஒளிதந்தவனென்பது தோன்றத்திமிரமகற்றிய முச்சுடருக் கொளிசெய் எனவும், அவைகளுக்கு ஒளிதருவோன் இவனென்பது புலப்படக்காரணவொளியா யெனவும், அன்றுகொண்ட திருவுருவத்தின்கீழ்யாவும் நின்றனவென்பது புலப்படத்திகழ்தருபுவன சராசரமுழுதுஞ் செறி பூரணவெளியாய் எனவும், இயம நியம முதலிய அட்டாங்கயோகங்களில் நின்றவரது திரிகரணங்களென்பது புலப்படக்கமையுறு மனவாசகமொடு காய மெனவும், ஏனையோர்க் கரியன் இவர்களுக் கெளியனென்பது புலப்படக் கண்டளவிடவரும் நின்காட்சியை எனவும், தெரித்தருளும் தனது திருக்காட்சியொளியைக் கண்டு கண் வழுக்குறுந் திருமான் முதலியோர்க்கு அக் கண்வழுக்காது தெரிசிக்கக்கண்ணொளி தந்தவனென்பது புலப்பட மாட்சிமை பெற முன் காட்டிய கண்ணே யெனவும், தன்னை யடைந்தோர்க்கு இன்பந் தருவன் என்பது புலப்பட யாவர்க்குந் தமனொ நிலவிய சமரபுராதிப எனவுங் கூறினர்.

அறைதரு மும்மாயையினூடுருவி அகண்டாகாரமதாய் என்பதனால் அனாதிபோதமுடைமையால் இயல்பாகவே பாசங்களினீங்கி நிற்றலும், திமிர மகற்றிய முச்சுடருக் கொளிசெய் காரணவொளியாய் என்பதனால் அனந்தசத்தியுடைமையால் முடிவிலாற்றலுடைமையும், திகழ்தருபுவன சராசரமுழுதும் செறிபூரணவெளியாய் என்பதனால் சுதந்தரனாதலால் தன்வயத்த னாதலும், கமையுறு மனவாசகமொடுகாயங்கண்டள விடவருநின் காட்சியை என்பதனால் அலுத்த சத்தியுடைமையால் பேரருளுடைமையுங் காண்க. (௫)

கோளகை தடவிக் குடைபல நீடக்
    கொடியெண் டிசைமூடக்
கோதறு பேரணி சூரியர் மறையக்
    கொழுவிய வெயில்வீச
நீளிய சாமரை வீசப் பேரிக
    ணீள்கட லேழெனவே
நின்று முழங்கத் தெய்வத நகரி
    னிரம்பு மரம்பையர்தாம்
வேளை மருட்டு விழித்தொழில் கைத்தொழில்
    வேறா காநடன
மிட்டு வரப்புய லொத்தவன் முதலவர்
    மெச்சி வரச்சுரர் கைத்
தாளம தொற்றவெள் ளானையி லுற்றாய்
    தாலோ தாலேலோ
சண்முக முக்கட் பண்ணவ குருபர
    தாலோ தாலேலோ.

(இ-ள்.) பல குடை கோளகை தடவி நீட - பல வன்னங்களையுடைய குடைகள் அண்டகோளத்தைத் தடவி ஒருபால் நீண்டோங்கவும், கொடி எண்திசை மூட - துவசங்கள் எட்டுத் திக்குகளையு மூடவும், கோது அறு பேர் அணி சூரியர் மறைய-குற்றமற்ற விலைமதித்தற்கரிய ஆபரணங்கள் துவாதசாதித்தர்களும் தம் மொளியிற் குன்ற, கொழுவிய வெயில் வீச-நிறைந்த வொளியை ஒருபால் வீசவும், நீளிய சாமரை வீச-நீண்ட கவரிகள் ஒருபால் வீசவும், பேரிகள் நீள்கடல் ஏழெனவே நின்று முழங்க-பேரிகைகள் நீண்ட ஏழுகடல்போல ஓர்பால் நின்று கோஷிக்கவும், தெய்வத நகரில் நிரம்பும் அரம்பையர் தாம் வேளை மருட்டு விழித்தொழில் கைத்தொழில் வேறு ஆகாத நடனம் இட்டுவர - தேவருலகில் நிரம்பிய ஊர்வசிமுதலிய அரம்பையர்கள் மதனை மயக்கும் தமது கண்களால் அபிநயிக்குந் தொழிலும் கைகளால் அபிநயிக்குந் தொழிலுந்தம்முளொத்த பரதஞ்செய்து ஒருபால்வரவும், புயல் ஒத்தவன் முதலவர் மெச்சிவர - மேகத்தையொத்த திருமால்முதலிய தேவர்கள் ஓர்பால்

விருதுகூறி வரவும், சுரர் கைத்தாளமது ஒற்ற வெள்ளானையில் உற்றோய் தாலோ தாலேலோ - அதற்கொப்பத் தேவர்கள் தமது கைகளால் அளவறுத்துத் தாளம் ஓர்பால் ஒற்றவும் வெள்ளானையின்மேல் வலம்வந்தருளியவனே,

அருள் சுரக்கவந்தன னென்பது புலப்பட வெள்ளானையிலுற்றோய் என்றார். கண்களால் அபிநயிக்குந் தொழிலும் கைகளால் அபிநயிக்குந் தொழிலும் தம்முள் ஒற்றுமையுடைமையால் வேறாகா நடனமெனவும், திருமால் முதலியோர் புகழ்ந்து பாடும் புகழ்ச்சிக்குத் தேவர்கள் கையால் தாளத்தால் அளவறுத்தலைச் சுரர் கைத்தாளமதொற்ற எனவுங் கூறினார். பரதம் என்பது ப-ர- தம் எனப் பிரித்துப் பாவம், இராகம், தாளம் எனப் பொருள்கொள்ளப் படுதலால் நடனம் என்பதற்குப் பரதம் என்றார். பாவமென்றது அபிநயத்தை.

தென்னங் காவைச் சூழப் பூகத்
திரளவை புடைசூழத்
தேமா வினமற் றவைபுடை சூழச்
செறிதரு பலவினின
மின்னும் மவைபுடை சூழப் பெருவா
ழைக்கா டவைசூழ
மிளிர்கன் னற்கா டவைசூ ழப்புனன்
மிகுநெற் பணைமருத
மன்னுஞ் சூழல் பொன்னம் பூமியில்
வானவர் வந்திழிய
மலிசோ பானம் போல விளங்கிய
வளநெடு மிளமாழைத்
தன்னந் திகழ்சா ரற்போ ரூரா
தாலோ தாலேலோ
சண்முக முக்கட் பண்ணவர் குருபர
தாலோ தாலேலோ."

**(இ-ள்.)** தென்னங்காவை பூகத்திரள் புடை சூழ-தென்னஞ் சோலையைக்கமுகஞ்சோலை ஒருபாற் சூழவும், அவை- அக்கமுகஞ்சோலையை, தேமா இனம் புடைசூழ-மாமரவினம் ஒருபாற் சூழவும், அவை-அவற்றை, செறிதரு பலவின் இனம் புடை சூழ - நெருங்கிய பலாமரச் சோலை ஒருபாற் சூழவும், மின்னும் அவை-விளங்கும் அப்பலாமரச்சோலையை,பெருவாழைக்காடு புடைசூழ-பெரியவாழைக்காடு ஒருபாற்சூழவும், அவை-அக்கதலிக்காட்டை, மிளிர் கன்னல்காடு புடைசூழ- விளங்கும் கருப்பங்காடு ஒருபாற்சூழவும், அவை-அக்கருப்பங்காட்டை, புனல்மிகு நெற்பணை புடைசூழ-நீர் நிறைந்த கதிர்முற்றிய வயல்கள் ஒருபாற்சூழவும்,மன்னும் மருதம் சூழல்-நிலைபெற்ற அம்மருதநிலவை

ப்பானது, பொன்னம் பூமியில் வானவர் வந்து இழிய மலிசோபானம்போல் விளங்கியவளனொடும்-பொன்னுலகிலுள்ள தேவர்கள் தரிசித்தற்குநிலவுலகின் வந்திறங்க அமைத்த படித்தலங்கள்போலவிளங்கிய வளத்தோடும்,இளமாழை தன்னம் திகழ் சாரல் போரூரா தாலோதாலேலோ - இளகும் பொற்கட்டிகள் மாணிக்கவொளியால் (அங்குள்ள) ஒளிசிறிது வீசும் மலைச்சாரலையுடைய திருப்போரூரனே.

தென்னஞ்சோலையின்கீழ் கமுகமரச்சோலையும், கமுகமரச்சோலையின் கீழ் மாமரச்சோலையும், மாமரச்சோலையின்கீழ் பலாமரச்சோலையும், பலாமரச் சோலையின்கீழ் வாழைக்காடும், கதலிக்காட்டின் கீழ்க்கருப்பங்காடும், கருப்பங்காட்டின் கீழ் நெற்பயிர்க்காடும் உயர்ந்தோங்கும் வளம் உடையது மருத நிலமென்பார் மருதமன்னுஞ் சூழலெனவும், ஒன்றன்கீழ் ஒன்றாக அமைந்திருத்தலைத் தேவர்கள் நிலவுலகில் வந்து முருகக்கடவுளை வணங்குதற்கு அமைத்த படித் தலங்கள்போல் விளங்கிய தென்பார் சோபானம்போல் விளங்கிய வளனொடுமெனவும், மலைச்சாரலிலுள்ள மாணிக்கவொளியால் அங்குள்ள பொற்கட்டிகள் புற்கென விளங்கியதென்பார் இளமாழைதன்னந்திகழ் சாரல் போரூரா எனவுங் கூறினர். சோபானம்போல் விளங்குமென்றது பொருளதிசயவணி. இதனை உயர்வுநவிற்சியணி யெனக் கொள்ளலுமொன்று. (எ)

செங்கட் சிறுமின் ளொளிர்வனமேதிச்
செழுமேகங் குழுமித்
திகழ்தரு வரைமிசை கனைகுரலொடுதீம்
பால்சொரி வெள்ளருவி
வெங்கட்பணி மணியின்குவை கழைமணி
வெண்குவைபொங் கொளிசேர்
வியனீலக் குவையொடுமுச் சங்கநல்
வேணியெனும் படியே
துங்கப்பே ரலைகொண்டு வரன்றித்
துண்ணென் றிழியொலியாற்
றுடியடிவரை முழைதோறுங் கண்படு
சோலைச் சாரலெலாந்
தங்கப் பொடியே மிளிர்போரூரா
தாலோ தாலேலோ
சண்முக முககட் பண்ணவ
குருபரதாலோ தாலேலோ.

(இ-ள்.) செங்கண் சிறுமின் ஒளிர்வனமேதி செழுமேகம் குழுமி திகழ்தருவரை மிசை - செவந்தகண்கள் சிறிய மின்னலைப்போலக் கிடந்து விளங்கும் காட்டெருமைகளாகிய சூன்முதிர்ந்த மேகங்கள் நெருங்கி விளங்கும்

மலையின்மேல்,கனைகுரலொடு தீம்பால்சொரிவெள் அருவி-கன்றுள்ளிக்கனைக் குங்குரலோடு சொரியும் இனியபாலாகிய வெள்ளிய அருவியானது, வெங்கண்பணிமணியின் குவை-கொடிய கண்களையுடைய பாம்புகள் கான்ற மாணிக்கக் குப்பல்களும்,கழைமணி வெண்குவை-மூங்கிலின் வெள்ளிய முத்துக் குப்பல்களும், பொங்கு ஒளிசேர் வியன் நீலக்குவையொடு - விளங்கும் ஒளிமிக்க பரந்த நீலமணியின் குப்பல்களுமாகிய இவற்றோடு, முச்சங்கம் நல்வேணி என்னும்படி துங்கம் பேர் அலைகொண்டு வரன்றி துண்ணென்று இழி ஒலியால் - காவிரியும் கங்கையும் காளிந்தியுமென்று சொல்லப்பட்ட மூன்றுநதிகளின் சங்கமமாகிய நல்ல நதியென்று சொல்லும்படி உயர்ந்த பெரிய அலைகளாகிய கைகளால் அவற்றை வாரிக்கொண்டு துண்ணென்னும் ஒலிக்குறிப்போடிழியும் ஒலியினால், துடியடிவரை முழைதோறும் கண்படு சோலை சாரல் எல்லாம் தங்கப்பொடியே மிளிர் போரூரா தாலோ தாலேலோ- யானைகள் மலையின் குகைதோறும் கண்டுயில்கூரு மலைச்சாரலிலெல்லாம் பொற்பொடியே விளங்குந் திருப்போரூரனே,—

துடியடி உடுக்கைபோலுங் காலையுடைய யானைமேனிற்றலால் உவமைத் தொகைநிலைக் களத்துப் பிறந்த அன்மொழித்தொகை நிலைத்தொடர். ஒலியால் கண்படு சோலை என்றது மிகுதி நவிற்சியணியும், சாரலெலாம் தங்கப்பொடியே மிளிரொன்றது வீறு கோளணியும், முச்சங்க நல்வேணி என்றது இல்பொருளுவமையணியுங் கலந்துவருதலால் கலவையணி. (அ)

கஞ்சனையன்று முனிந்து செவந்தருள்
கையாய் தாலேலோ
காமனை வென்றவர் தோளினுலாவிய
காலா தாலேலோ
மஞ்சன்மகன்கன வின்சொல் வழங்கிய
வாயாய் தாலேலோ
மஞ்சள் வட்டஞ்செறி குஞ்சரிகொங்கைகொண்
மார்பா தாலேலோ
விஞ்சுறு மன்பினர் பந்தனைகொன்றொளிர்
விழியாய் தாலேலோ
வேடுவர் மங்கை யுளங்குடி தங்கிய
மெய்யாய் தாலேலோ
தஞ்செென வந்தவ ருஞ்சிடுசமர
புராதிப தாலேலோ
சரவண பவனே குரவணிதருசண்
முகனே தாலேலோ,

(இ-ள்.) கஞ்சனை அன்று முனிந்து செவந்தருள் கையாய் தாலேலோ-பிரமனை அக்காலத்தில் கோபித்து முடக்கிக்குட்டிச் செவந்தருளிய திருக்கரத்தை யுடையவனே, காமனைவென்றவர் தோளில் உலாவிய காலா தாலேலோ- மன்மதனை யெரித்தருளிய சிவபெருமானாரது திருத்தோளி லுலாவிய திருப்பதத்தையுடையவனே, மஞ்சன்மகன் கனவு இன்சொல் வழங்கிய வாயாய் தாலேலோ- மேக வூர்தியையுடைய இந்திரன் மகனாகிய சயந்தனது கனவில் இனியசொல்லைப் பணித்தருளிய திருவாயையுடையவனே, மஞ்சள்வடம் செறி குஞ்சரி கொங்கை கொள்மார்பா தாலேலோ-பொன்வடம் இடமின்றிச் செறிந்த திருமார்பையுடைய தெய்வயானை நாய்ச்சியாரது திருக்கொங்கைதாக்குந்திருமார்புடையவனே, விஞ்சுஉறும் அன்பினர் பந்தனைகொன்று ஒளிர் விழியாய்தாலேலோ - முறுகிய அன்பினையுடையவரது பாசத்தைப்போக்கிவிளங்கும் திருக்கண்களை யுடைவனே, வேடுவர்மங்கை உளம் குடிதங்கிய மெய்யாய் தாலேலோ - வேடுவ குலத்திற் றோன்றிய வள்ளிநாய்ச்சியாரது திருவுளத்திற்குடியேறிய திருமேனியை யுடையாய், தஞ்செனவந்தவர் உஞ்சிடு சமரபுராதிபதாலேலோ-அடைக்கலம்புகுந்த அடியவருய்யும் வண்ணம் சமரபுரியிலெழுந்தருளிய இறைவனே, சரவணபவனே குரவு அணிதரு சண்முகனே தாலேலோ-சரவண பவனென்னுந் திருநாமத்தையுடையவனே குராமலராற்றொடுத்த மாலையையணிந்த சண்முகனென்னுந் திருநாமத்தையுடையவனே.

மஞ்சள் நிறம்பற்றி உவமையாகு பெயராய்ப் பொன்மேனின்றது - "மஞ்சளழகு மழகல்லவென" சான்றோராட்சியில் வருதல் காண்க.

திருக்கயிலைக்குத் தேவரோடுசென்ற பிரமன் சிவபெருமான் றிருவடியைவணங்கி மீளுங்காலையில் திருவாயிலிலுள்ள முருகக்கடவுளை வணங்காது இறுமாந்து செல்லுகையை அக்கடவுள் நோக்கி, இங்குவாவென் றழைத்து நீ எத்தொழில் வல்லையெனப் பணித்தபோது நான் படைப்புத்தொழிலில் வல்லேனெனப் பிரமன் விடைதர, வேதங்களில் வல்லையோ அவற்றுள் ஒன்று கூறென வினவியருளினர்; கூறத்தொடங்கும் பிரமன் முன்னர்ப் பிரணவத்தைக்கூற, அதன் பொருள்யாதென்று வினவியபோது, அப்பிரமன் தெரியாது மயங்கிய காலையில் அம்முருகக்கடவுள் அவன்றலையில் குட்டி யருளினமையால் கஞ்சனையன்று முனிந்து செவந்தருள் கையாய் எனவும், சூரபன்மன் மகேந்திரத்திலிட்ட சிறையழுவத்திருந்து தனது பிதாவாகிய இந்திரனும், தனது அன்னையாகிய இந்திராணியும், எவ்விடத்துளரோ நம்போற்சிறையழுவத் துளரோ எனக் கவலைகூர்ந்து வருந்துங்காலையில், தாரகாசுரன்முதலிய அசுரர்களை உயிர் பருகித் திருமால்முதலிய தேவர்களோடு திருச்செந்திநகரி லெழுந்தருளிய குமாரக்கடவுள் அஃது உணர்ந்து சயந்தன்கனவி லெழுந்தருளி; தன்னை முன்னர் அறியாதவனாதலால் தன் வரலாற்றை முன்னருணர்த்தி உங்கள் இடுக்கண்களையவே திருச்செந்திநகரில் வந்திருக்கின்றனம், உன்றந்தையாகிய இந்திரன் எம்பக்கலி லிருக்கின்றனன், உன் தாய்மேருவி லிருக்கின்றனள் நீகவலையையொழிக, இன்றுமுதல் ஈரைந்துதினத்தில் சூரபன்மன்

முதலியோரைக்கொன்று உங்களிடர்களைக்களைந்து அரசியலுந்தந்தருள்வோம் என்று பணித்தருளி னமையால் மஞ்சன்மகன் கனவின் சொல்வழங்கிய வாயா எனவும்,அழுக்காலழுக்கைப் போக்குதல்போல ஆனமாக்களது பந்தத்தைப் பந்தத்தாலொழித்தற்பொருட்டே தானும் போகியாயிருந்தனனுதலால் மஞ்சள்வடஞ் செறிகுஞ்சரி கொங்கைகொண்மார்பா எனவும், அடியவர்க்குக் காட்சிதந்து அவருள்ளத்திற் குடிகொள்ளுதற் பொருட்டே திருவிளையாடல் செய்தவனுதலால் வேடுவர் மங்கையுளங் குடி தங்கிய மெய்யாய் எனவும் கூறினார். சரவணபவ னென்பதற்கும், சண்முகனென்பதற்கும் முன்னர்க் கூறியிருத்தலால் அங்குக் காண்க. (கூ)

குண்டச் சமணக் கரிகளை யடுகோ
ளரியே தாலேலோ
கும்பத் திடுமென் பைத்திரு விற்றரு
குழகா தாலேலோ
பண்டைத் தமிழ்நக் கீரன் சிறைவிடு
பண்பா தாலேலோ
பச்சைக் கொடிகச் சுப்பொரு கலசப்
பாலா தாலேலோ
மண்டைத் தலையிற் பலிநசை கொண்டவன்
மைந்தா தாலேலோ
வாரண மைந்து கரங்கொடு தழுவிய
வாகா தாலேலோ
தண்டைத் தாளுந் தோள்களு மழகிய
சதுரா தாலேலோ
சரவண பவனே குரவணி தருசண்
முகனே தாலேலோ.

(இ-ள்.) குண்டச்சமணர் கரிகளை அடு கோளரியே தாலேலோ - கரகத்தையேந்திய சமணர்களாகியயானைகளை உயிர்பருகிய சிங்கமே,கும்பத்து இடும் என்பை திருவில் தருகுழகா தாலேலோ- கும்பத்திலடைத்த எலும்பினை இலக்குமிபோல வுருவாக்கிய பேரழகுடையவனே, பண்டை தமிழ் நக்கீரன் சிறைவிடு பண்பா தாலேலோ - முன்பு தமிழில் வல்ல நக்கீரனைச் சிறையினின்று விடுவித்த தன்மையையுடையவனே, பச்சைக்கொடிகச்சுப் பொருகலசப்பாலா தாலே தாலோ-பசுங்கொடிபோன்ற வுமையம்மையினது கச்சொடு பொருதுந் திருத்தனஞ்சுரந்த திருப்பால் பருகினவனே, மண்டை தலையில் பலிநசை கொண்டவன் மைந்தா தாலேலோ - பிரமனது கபாலத்தில் ஏற்கும் பலியை விரும்பிய சிவபெருமானது திருமகனனே, வாரணம் ஐந்துகரங்கொடு தழுவிய வாகாதாலேலோ- விநாயகக்கடவுள் தமது ஐந்து திருக்கரங்களா

லும் தழுவ நின்ற தோள்களையுடையவனே, தண்டை தாளும் தோளும் அழகிய சதுரா தாலேலோ - தண்டையையணிந்த திருத்தாளும் திருத்தோளும் அழகு வாய்ந்த சதுரப்பாடுடையவனே.

பாண்டியன்மனைவியாராகிய மங்கையர்க்கரசியார் வேண்டுகோளால் திருவாலவாயென்னுந் திருப்பதிக்குத் தமது திருக்கூட்டங்களோடும் எழுந்தருளி, அவ்வரசியாரமைத்த திருமடத்தில் ஆளுடையபிள்ளையா ரெழுந்தருளியிருக்குங்காலையில், அப் பாண்டியனைப் புன்னெறிப்படுத்திய அமண்கையர்கள் அத்திருமடத்தில் தீக்கொளுவினர் ; அப்பிள்ளையார் திருக்கடைக்கண் சாத்தி இத்தீத்தொழிலுக்கு ஏதுவாயுள்ள அரசன்மாட்டணுக எனப் பணித்தருளியபோது, அத் தீ கொடுஞ்சுரவடிவாய் அப்பாண்டியனைப்பற்றி வருத்த, அதனை அப்பாண்டிமாதேவியார் நோக்கி அடியார்க்கிழைத்த அபராதமல்லவோ இவ்வாறு மூண்டதெனக் கைநெரித்து வாய்புலர்ந்து, சமணர் பரிகாரஞ் செய்யவும் தீராது மூண்டெழும் அச்சுரத்தை, அப்பிள்ளையாரால் தீர்க்க அப்பாண்டியன் அனுமதிபெற்றுத் திருக்கூட்டங்களோடும் வருவித்து அப்பிள்ளையாராற் றீர்த்தவழி, மனம்பொறுதெழுந்த அவ்வமணர் தத்தம் துணிபினை எழுதித் தீயிடில் எது பச்சோலையாயிருக்கின்றதோ அச்சமயமே தோல்வியில்லாததெனக் கூறினர்; அவ்வாறே பிள்ளையார் தமது பொருட்டுணிபை ஏட்டில் வரைந்து தீயிலிட்டுப் பச்சோலையாகக் கண்டருள, அதனைநோக்கி அழுக்காறுற்ற அச்சமணர்கள் இதுவும் அமையாது இனி நீரில்விடுவோம், எது எதிரேறுகின்றதோ அதுவே வென்றது, தோல்வியுற்றவர் கழுவிலேறக் கடவர் என அரசன்முன்னர் முடிவுசெய்த தாம் தோல்வியடைந்து அவ் வெண்ணுயிரஞ் சமணர்களும் கழுவேறினமையால் குண்டச்சமணக் கரிகளை யடுகோளரியே எனவும், தொண்டைநாட்டில் திருமயிலையில்வாழும் வணிக குலோத்தமராகிய சிவநேசச் செட்டியாருக்குக் கபாலீசுரர் கிருபையால் ஓர் புத்திரி பிறந்து வளருங் கன்னிப்பருவத்தில், ஓர்நாள் அப்பெண்ணரசி,தோழிகளோடுஞ்சென்று மலர் கொய்யும்பொழுது பாம்பு தீண்டி யிறந்தனர், அதுகண்டசெட்டியார் கவலைகூர்ந்துதகனஞ்செய்வித்து இந்தக் கன்னிகையை என் திரவியத்தோடு ஆளுடையபிள்ளையாருக் கொப்புவிக்க நியமித்திருந்தமையால் அவரே இக்கன்னியின் கடன்கழித்தற் குரியவரென்று தகனஞ்செய்த சாம்பலை அஸ்தியோடு குடத்தில் நிரப்பிக் கன்னிமாடத்தில் முன்போலத் தோழிமார்கள் உபசரித்துவரச் செய்தனர்; இவ்வாறு நிகழுங்காலத்து ஆளுடையபிள்ளையார் திருவொற்றியூரில் எழுந்தருளியிருத்தலைக் கேள்வியுற்றுத் தண்டாகாரமாக வணங்கி, திருமயிலைக் கெழுந்தருளும் பிள்ளையாரோடு தாமும் வர, பிள்ளையார் கபாலீசுரரைத் தெரிசித்துத் திருப்பதிகமோதி அவ் வெலும்பைப் பெண்ணாக்கினமையால் கும்பத்திடு மென்பைத்திருவிற்றருகுழகா எனவும், சிவபெருமானருளிய திருப்பாசுரத்துக்குக் குற்றங்கூறிய அபராதத்தால் நேர்ந்த குட்டநோயைக்கைலையைத்தரிசித்து நீக்கச்சென்ற நக்கீரன், இமயபருவதத்திற் கருகு சென்று அங்குள்ள ஓர் தடாகத்தின் கரையிலிருந்து மனமசைவற நிட்டைகூடியிருக்குங்காலையில், அத்தடத்தின் கரையில் விண்

ணினை யளாவநின்ற ஓர் ஆலவிருக்கம் உதிர்க்கும் இலைகள் அத்தடாகநீரில் விழுமானால் மீனும், கரையில் விழுமானால் பறவையுமாக அமைதல் என்றும் வழக்கமாதலால், அன்று கரைவிளிம்பிலுள்ள நீரில் வீழ்ந்த ஓரிலையின் பாதி மீனாகவும், கரையில் சேர்ந்த மற்றைப் பாதி பறவையாகவும் ஒன்றனை யொன்றீர்த்து நிற்றலைக் கண்டு அந் நக்கீரன் தான் கூடிய நிட்டை யொழிந்து வியப்புற்று நோக்க, அதனை அங்கோர் மலைமுழையிலுள்ள பூதமுணர்ந்து அந் நக்கீரனை யெடுத்துச்சென்று அம்மலைமுழையிற் சேர்த்து அப்பூதம் நீராடச்சென்றது; முன்னர் அம்முழையிற் சேர்க்கப்பட்டுள்ள தொள்ளாயிரத் துத் தொண்ணூற் றொன்பதின்மர் அந் நக்கீரனை நோக்கி நின்னோடு ஆயிரம் பேராயினேம். இன்றைக்கு அப்பூதத்திற்கு இரையாகப்போகின்றோம் என்று கவலைகூர்ந்தவிடத்து, அந்நக்கீரன் முருகக்கடவுளைத் தியானித்துத் திருமுருகாற்றுப்படையென்னுந் திருப்பிரபந்தத்தைக் கூறியவழித் திருச்செவிசாத்தி, அம்முருகக்கடவுள் காட்சிதந்து எதிர்ந்த அப்பூதத்தினுயிரை வீட்டி அந்நக்கீரன்பொருட்டு ஏனையோரையும் அப்பூதம் வாய்ப்படாமல் விடுவித்து அவனையுந்தீர, கைலை யெனச் சிவபெருமான் பொதுப்படக்கூறிய அதனால் தென்கயிலையாகிய ஸ்ரீகாளத்திக்குச் செல்லுவாயென்றருளினமையால் பூதத்தின் சிறையும் நோயின் சிறையும் தோன்றப் பண்டைத்தமிழ்நக்கீரன் சிறைவிடுபண்பா எனவும், திருவருட் பதிவுசெய்தலும், பாச க்ஷயம் செய்தலுமுடைமையால் தண்டைத்தாளும் தோள்களு மழகிய சதுரா எனவுங் கூறினார்.

தாலப்பருவம் முற்றிற்று.

சப்பாணி - ச, பாணிஎனப் பிரித்துக் கைசேர்த்துக் கொட்டுதல் என்னும் பொருண்மேனிற்றலால் கைசேர்த்துக்கொட்டும் பருவமெனக்கொள்க. ச-சகிதம், பாணி-கை, எனப் பொருள்கொள்க. பருவம் என்பதற்கு ஒன்பதாமாதத்திற் சப்பாணிகொட்டலென முன்னர்க்கூறிய காலவரையறைகொள்க.

பொருனைநதி யிற்படிந் திளமரக் காவிற்
    புகுந்துசந் தப்பொங்கரிற்
புக்குமண் நாறுதென் றற்குழவிவிளையாடு
௧ பொதியுப் பொலங்கு வட்டிற்
றிரையெறியு மணியாழி யங்கையி லடக்கியஞ்
    செந்தமிழ்க் கடல்வி ரித்துத்
திறமையுட னுறையுமொரு குறுமுனிய கத்தினுட்
    டிமிரமற மறைமுடி வெனு
மருளொளி பரப்புஞா னக்கொழுஞ் சுடர்வைத்த
    வாறா னனக் கொண்டலே
யன்பர்வாய் வண்குமுதம் விண்டுதெண் டமிழ்நறவ
    மாரவெழு மொரு மதியமே
தருணவுமை முககமல மலரவரு பரிதியே
    சப்பாணி கொட்டி யருளே
தடமலையை நிகர்கரிக டிரிசமர புரிமருக
    சப்பாணி கொட்டி யருளே.

(இ-ள்.) பொருனைநதியில் படிந்து இளமரக்காவில் புகுந்து - தாமிரவர்ணி நதியிற்றோய்ந்து இளமரச்சோலையிற் புகுந்து தண்ணென்று, சந்தம் பொங்கரிற்புக்கு-சந்தனமரச் செறிவிற் புகுந்து, மணம்நாறும் தென்றல் குழவி விளையாடு - அங்குள்ள மணத்தொடளாவிக் கமழும் இளந்தென்றல் விளையாடாநின்ற, பொதியம்பொலம் குவட்டில் மணிதிரை எறியும் ஆழி அங்கையில் அடக்கி அம் செம் தமிழ்கடல் விரித்து - பொதியமாகிய பொற்கட்டி நிறைந்த மலையின்கண் இரத்தினங்களை அலைகள்கொழிக்குங்கடலை உள்ளங்கையிலடக்கி அழகிய செந்தமிழ்க்கடலை யாவருஞ் செவியாற் பருகவிரித்து, திறமையுடன் உறையும் ஒரு குறுமுனி அகத்தினுள் திமிரம் அற - அத்திறமையோடு அம்மலையி லெழுந்தருளிய ஒப்பில்லாத வடிவிற் சிறிய அகத்தியமுனிவரது மனத்துட் பொதிந்த ஆணவமலமென்னும் இருளோட்டெடுக்க, மறைமுடிவு'என்னும் அருளொளிபரப்பும் ஞானக்கொழுஞ்சுடர்வைத்த ஆறு ஆனனக்கொண்டலே-வேதசிரசிலுள்ளபிரணவமென்னும்திருவருட்பிரகாசம் வீசும் சிவஞானமென்னுந் தூண்டாவிளக்கேற்றிய ஆறு திருமுகங்களையுடைய காற்றுப்போல்வாய், அன்பர்வாய் வண்குமுதம்விண்டு தண் தமிழ் நறவம் ஆர எழும் ஒரு மதியமே - அன்பரது திருவாயென்னும் வளவிய ஆம்பல் மலர்ந்தொழு

க்கும் தண்ணிய தமிழ்ப்பாசுரங்களாகிய தேனைப்பருக வுதயஞ்செய்யும் ஒரு சந்திரன்போல்வாய், தருண உமைமுக கமலம் மலரவரு பரிதியே சப்பாணி கொட்டி அருளாய்-இளமைவாய்ந்த உமையம்மையினது முகமாகிய தாமரை மலர வுதயஞ்செய்த சூரியன்போல்வாய் சப்பாணி கொட்டியருளாய், தடமலையை நிகர்கிரிகள் திரி சமரபுரி முருக சப்பாணிகொட்டி அருள்- பெரியமலையையொத்த யானைகள் உலவுஞ் சமரபுரியி லெழுந்தருளிய முருகக்கடவுளே சப்பாணி கொட்டியருளாய்,

விருத்திராசுரனென்பவன் போர்க்கெதிர்ந்த இந்திரன் உறைகழித்தேந்திய வச்சிராயுதத்தை நோக்கி யச்சங்கூர்ந்து கடல்புக் கொளித்தகாலையில், இந்திரன் அகத்தியமுனிவரிடத்துச் சென்று தனது குறையிரக்க, அக்கடலை உள்ளங்கையி லடக்கினனென்பது புராணவரலாறு. தமிழ்க்கடற் பரப்பினுக்குக் கருங்கீடற்பரப்பு நம்மினும் பரந்துளதென்று அழுக்காறுற்றவழி அஃதுணர்ந்து அத னிறுமாப்பினையடக்கித் தமிழ்க்கடலை விரித்தனனென்னு நயந்தோன்றச்சொன் முரணணியுளடக்கி விரித்தெனவும், உருவிற்சிறியராயினும் சிவஞானத்தாற் பெரியனென்பதுதேரின்றத் திறமையுடனுறையும் ஒரு குறுமுனிஎனவும், விளக்கினையவித்தல் இயல்பேயன்றி ஏற்றுதல் காற்றுக்கு முரணுதலால் பொருண் முரணணிதோன்ற ஞானக்கொழுஞ்சுடர்வைத்த வாருனனக்கொண்டலே எனவும், பிரணவம் வேதமுதலியவற்றை யுள்ளடக்கி நிற்பது என்பதுதோன்ற மறைமுடிவு எனவும், அது சிவத்தையே யுணர்த்துமென்பதுதோன்ற அருளொளிபரப்பு ஞானக்கொழுஞ்சுடரெனவுங்கூறினர். கொண்டலென்பது இயைபிலுருவகவணி. மதிஎழும்போது குமுதமலர்தலும், சூரியனெழும்போது கமலமலர்தலும் இயல்பாதலால் மதியமே பரிதியே என்றது சிறப்புருவகவணி. வாயைக் குமுதமாகவும் முகத்தைக் கமலமாகவுங்கூறியது இயைபுருவக வணி. (க)

அலைகட லிடைப்பெரிய மகர மீனீர்கிழிய
வம்பிற் கடிங் தேருமா
றரவுயிர்த் திடுகொடிக் குருகுலக் கோமக
னடற்படைக் கடலு டையவே
சிலைவலிய வாகுவல யப்புயப் பற்குனன்
றேர்கடவி வெற்றி வளைவாய்ச்
செம்மலரில் வைத்துமறு மன்னர்செவி செவிடுறச்
செல்லிடித் தொனிமு ழக்குந்
தொலைவறு பசுங்கதி ரெறிக்கு மரகதநிறச்
சுந்தரப் புயன் மருகனே
சுருதிமுடி வாசனத் துறைபனை முலைக்குடஞ்
சொரியமுத வாரி நாறுங்

தலைமைபெறு செங்குமுத வாயனே தூயனே
சப்பாணி கொட்டி யருளே
தடமலையை நிகர்கரிக டிரிசமர புரிமுருக
சப்பாணி கொட்டி யருளே.

(இ-ள்.) அலைகடல் இடைபெரியமகரமீன் நீர்கிழிய அம்பில் கடிந்துகும் ஆறு - அலைக்குங் கடலிடத்துப் பெரிய மகரமீனானது அக்கடலின் நீர் கிழிய அம்பைப்போலப்பிளந்து செல்லும்வகைபோல, அரவு உயர்த்திடு கொடி குருகுலக்கோமகன் அடல் படை கடல் உடைய-சர்ப்பக்கொடியை யுயர்த்திய குருகுலத்திற் றோன்றிய துரியோதனனது வலிய சேனாசமுத்திரம் உடைய, சிலைவலிய வாகுவலயம் புயம் பற்குனன் தேர்கடவி - காண்டீபமேந்திய வலிய கேயூரமணிந்த புயத்தையுடைய அருச்சுனனது தேரைச்செலுத்தி, வெற்றிவளைவாய் செம்மலரில்வைத்து மறுமன்னர் செவிசெவிடுற செல் இடிதொனிமுழக்கும் - வெற்றிவாய்ந்த பாஞ்சசன்னியமென்னும் சங்கினைத் திருவாயாகிய செந்தாமரைமலரில்வைத்துப்பகைவரது காதுசெவிடுபட மேகத்தினிடிமுழக்கம்போல முழக்கஞ்செய்யும்,தொலைவு அறு பசுங்கதிர் எறிக்கும் மரகதம்நிறம் சுந்தரப்புயல் மருகனே-அழிதலில்லாத பசிய கிரணத்தைவீசும் மரகத நிறம்போன்ற பசியநிறத்தையுடைய அழகிய மேகம்போன்ற திருமால் மருகனே,சுருதிமுடிவு ஆசனத்து உறை பனை முலை குடம் சொரி அமுதம்வாரி நாறும் தலைமை பெறு செங்குமுதவாயனே தூயனே சப்பாணிகொட்டி அருளே-வேதசிரசாகிய ஆசனத்தி லெழுந்தருளிய பராசத்தியினது குடம்போன்ற திருத்தனஞ்சொரியுஞ் சிவஞானமாகியஅமுதப்பிரவாகங்கமழும் தலைமை பெற்ற செவந்த ஆம்பல் போன்ற திருவாயையுடையவனே தூய்மையை யுடையவனே,—

அம்பிற்கடிந்தேகுமாறு தேர்கடவி என முடிக்க. அனந்தசத்தியுடைமையால் முடிவிலாற்றலுடைமைதோன்றச் சுந்தரப்புயன்மருகனேயெனவும், சர்வஞ்ஞத்துவ முடைமையால்முற்றுமுணர்தல்தோன்றச் சுருதிமுடிவாசனத்துறை பனை எனவும், அனாதி போதமுடைமையால் இயல்பாகவே பாசங்களினீங்குதல்தோன்ற முலைக்குடஞ் சொரி யமுதவாரி நாறும் தலைமை பெறு செங்குமுதவாயனே எனவும், விசுத்த தேகமுடைமையால் தூயவுடம்பினனாதல் தோன்றத் தூயனே எனவுங் கூறினர். (உ)

ஈராறு பரிதி யீராறு மேருதயத்
திருங்குழை சுமந்த புயமு
மீரெட்டு வொண்கலைகண் மேவிக் களங்கமுய
வின்றிச் செழுஞ்சுடர் விடு
மோராறு மதிய மீராறுதெய்வக் கமல
வொண்மலர் மலர்ந்த படியே

யொற்றுமை பெறக்கொண்டு நிற்றல்போ லத்திகழு
மொளிவிழி சிறந்த முகமுஞ்
சீரார் படைக்கலக் கமலமும் மார்பமுஞ்
செய்ய தண்டைத் தாளுமென்
றிமிரமற வெனதகங் குடிகொண்டு மீளாது
திகழ்வீடு தரு குரிசிலே
தாரார் சடைப்புனிதர் பாலா குகக்கடவுள்
சப்பாணி கொட்டி யருளே
தடமலையை நிகர்கரிக டிரி சமரபுரிமுருக
சப்பாணி கொட்டி யருளே.

(இ-ள்.) ஈராறு பரிதி ஈராறு மேரு உதயத்து இரும்குழை சுமந்த புயமும் - துவாதசாதித்தர்கள் பன்னிரண்டு மேருமலையின்மேல் உதயஞ்செய்ததையொத்த பெரிய மாணிக்கக் குண்டலங்களைச் சுமந்த பன்னிரண்டு திருப்புயங்களும், ஈரெட்டு ஒள்கலைகள் மேவி - பதினாறு வெள்ளிய கலைகளை யடைந்து, முயல்களங்கம் இன்றி செழும் சுடர்விடும் ஓராறுமதியம்-மறுதம்மிடத்துச் சிறிதுமில்லாமல் கொழுவிய கிரணத்தைவீசும் ஆறு சந்திரர்கள், ஈராறுதெய்வக் கமலஒள்மலர் - ஒள்ளிய பன்னிரண்டு தெய்வத்தாமரைகளை, மலர்ந்தபடியே ஒற்றுமைபெற கொண்டு நிற்றல்போல - குவியாது மலர்ந்தவண்ணம் வேற்றுமையின்றி நட்புக்கொண்டு நிற்றல்போல, திகழும் ஒளி விழி சிறந்தமுகமும்—விளங்கும் ஒளிவாய்ந்த திருக்கண்கள் சிறந்த திருமுகங்களும்,சீர் ஆர்படைக்கலக் கமலமும் மார்பமும்-சிறப்பு மிகுந்த ஆயுதங்களை யேந்திய தாமரைமலரையொத்த திருக்கரங்களும் திருமார்பமும், செய்ய தண்டை தாளும்-செவந்த தண்டையையணிந்த திருவடிகளும், என் திமிரம் அற எனது அகம் குடிகொண்டு மீளாது - எனது ஆணவமலம் குடியோட எனது மனத்திற் குடியேறித் திரும்பாது, திகழ்வீடு தரு குரிசிலே - விளங்கும் முத்திநிலையைத் தந்தருளும் இறைவனே, தார்ஆர்சடை புனிதர் பாலா குகக் கடவுள் சப்பாணிகொட்டி அருளே - கொன்றைமாலையையணிந்த சடையையுடைய இறைவரது திருமகனே குகனென்னுந் திருநாமம்வாய்ந்த கடவுளே சப்பாணிகொட்டி யருளாய்,—

மேரு வடசொல்லாதலால் ஈற்று முற்றியலுகரங் கெடுதல் செய்யுள் விகாரம்.

திருமுகங்கள் முதல் திருவடிகாறும் எடுத்துக்கூறியது திருவருள் நிலையைக் குறிப்பித்தற்கு என்க. ஆன்மாக்கள் பாசக்ஷயஞ்செய்வது திருத்தோள்களாதலால் திருத்தோள்களை முன்னர்க்கூறினர். அத்திருத்தோள் பன்னிரண்டும் மேருகளெனவும், அம்மலைகளினுலவும் துவாத சாதித்தர்கள் ஒருங்கேகூடியவழிப் புறவிருள் சிதைந்து குடியோடுதல்போல ஆன்மாக்கள்

மலவிருள் சிதைந்து குடியோடுதற்கு அமைந்தன குறிப்பித்தற்கு ஈராறுபரிதி யீராறு மேருதயத் திருங்குழை சுமந்தபுயமும் எனவும், பரிபக்குவமமைந்த அவ்வான் மாக்களுக்குத் தண்ணளிசெய்வதென்பது குறிப்பித்தற்கு ஓராறு மதியம் எனவும்,அத்தண்ணளிபெற்ற அவ்வான்மாக்கள் தன்போலாதலைக் குறிப்பித்தற்கு ஈராறுதெய்வக் கமலவொண்மலர் மலர்ந்தபடியே எனவும், இவ்விரண்டும் ஒருசேர ஏனைக்கடவுளரிடத்து நிற்ப தரிதென்பது குறிப்பித்தற்கு ஒற்றுமைபெறக்கொண்டு நிற்றல்போல எனவும், ஆறுதிருமுகங்களில் ஒரு திருமுகம் உலகு குற்றமின்றி விளங்கக் கிரணங்களைத் தோற்றுவித்தலும், ஒரு திருமுகம் தன்பாற் பத்திசெய்வோர் துதிக்கிரங்கியைந்து அவர்பாற்கொண்ட விருப்பால் அவர்க்கு வேண்டும் பொருள்களை முடித்துக்கொடுப்பதும், ஒரு திருமுகம் வேதத்திற்கூறியவிதி தப்பாதியற்றும் அந்தணர் யாகத்திற்குத் தீங்குவாராதபடி நினைப்பதும், ஒரு திருமுகம் வேத நூல்களிலுள்ள நுண்பொருள்களை யாராய்ந்து முனிவர்கள் மகிழ்கூரும்படி யுணர்த்தி விளக்குவிப்பதும், ஒரு திருமுகம் அசுரர்முதலியோரைக் கொல்லக் களவேள்வியை விரும்புவதும், ஒரு திருமுகம் உலகியலை நடத்துதற்கு வள்ளிநாய்ச்சியாரோடு நகைபுரிதலும் ஆகிய இவற்றிற்கு உரியனவென்பது குறிப்பித்தற்குத் திகழும் ஒளிவிழி சிறந்த முகமும் எனவும், போர்செய்யுங் காலமென்பது குறிப்பித்தற்குப் பன்னிரண்டு திருக்கரங்களுள் ஒரு திருக்கரத்தில் துவசமும், ஒரு திருக்கரத்தில் வச்சிரமும், ஒருதிருக்கரத்தில் அங்குசமும்,ஒருதிருக்கரத்தில் அம்பும்,ஒரு திருக்கரத்தில் வேற்படையும், ஒருதிருக்கரத்தில் அபயமும்,ஒருதிருக்கரத்தில் வரதமும், ஒருதிருக்கரத்தில் தாமரையும்,ஒருதிருக்கரத்தில் கண்டையும், ஒரு திருக்கரத்தில் மழுவாயுதமும், ஒரு திருக்கரத்தில் கதாயுதமும்,ஒருதிருக்கரத்தில் கோதண்டமும் என்பது தோன்றப் படைக்கலக்கமலமும் எனவும்,போர்செய்யாக்காலங்குறிப்பித்தற்கு ஒருதிருக்கரம் ஆகாயத்தில் இயங்குந் தெய்வவிருடிகளைப் பாதுகாத்தற்கு எடுத்ததென்பதும்,ஒருதிருக்கரம் நிலவுலகிலுள்ள முனிவரைப் பாதுகாக்க உலகைத்தாங்கிக் காத்தற்கு இடையிற்சேர்த்ததென்பதும், தன்னை வழிபடுவோரிடத்து வருங்கால் யானைமேல்வந்து அருள்செய்தல் இயல்பாதலால் ஒருதிருக்கரம்அதனை நடத்தற்குஅங்குசம்ஏந்தியதென்பதும், யானையேறுவோர்க்கு இணைந்த மற்றொருகைதொடையிற்கிடத்தல்போலஅங்குசத்தையேந்திய திருக்கரத்திற்கிணைந்த ஒருதிருக்கரம் தொடையின்மேற் கிடந்ததென்பதும்,அசுரர்வந்து வேள்வியைக்கெடுக்காமல்அவரையோட்டுதற்கு என்பன குறித்தற்கு ஒரு திருக்கரம் வேலேந்தியதென்பதும் மற்றொருதிருக்கரம் கேடகம் ஏந்திய தென்பதும், பேரின்ப ஒளி சீடர்க்கு நிறைய மோனமுத்திரையஸ்தனாய் இருந்தனனென்பது குறிப்பித்தற்கு ஒருதிருக்கரம் திருமார்போடு விளங்குமென்பதும்,அத்திருக்கரத்திற்கு இணைந்த ஒரு திருக்கரம் அத்திருமார்பின் மாலையோடு சேர்ந் தழகுபெறுமென்பதும், வேள்விக்கு முத்திரைகொடுப்பது குறிப்பித்தற்கு ஒருதிருக்கரம் தொடியோடு மேலேசுழன்றதென்பதும், கீழேவீழ்ந்த மற்றொருதிருக்கரம்மணியை யொலிக்கப்பண்ணியதெனவும், உலகியல் நிறுத்துவித்தற்கும், இல்வாழ்க்கையை நிறுத்துவித்தற்கும் ஒரு

திருக்கரம்மழைபொழிவிப்பதென்பதும்,மற்றொருதிருக்கரம் தெய்வமகளிர்க்கு மணமாலை சூட்டியதென்பதுந் தோன்றச் சீரார்கமலமெனவும், மூன்றுவரை கிடத்தலால் உத்தம இலக்கணம் வாய்ந்ததென்பது தோன்ற அடைகொடுத்துக் கூறுது வாளா மார்பமுமெனவும்,முத்திநிலையருளுவதென்பது தோன்றச் செய்யதண்டைத் தாளுமெனவும்,திருப்புயமுதல் திருவடிகாறும் எனது ஆணவமலம்நீங்க என்மனத்திற் குடியேறியதென்பதுதோன்ற எனது திமிரமலமெனதகங்குடிகொண்டு எனவும், வாசனுவசத்தால் நழுவாதென்பது தோன்ற மீளாதெனவும்,தேகம் உள்ளவளவும் சீவன்முத்திநிலையை யருள்வோனென்பதுதோன்றத் திகழ்வீடுதருகுரிசிலே எனவுங் கூறினர்.

ஆறு திருமுகங்களின் அருள்நிலையை,

"மாயிருண் ஞால மறுவின்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன் றொருமுக மொருமுக
மார்வல ரேத்த வமர்ந்தினி தொழுகிக்
காதலி னுவந்து வரங்கொடுத் தன்றேயொருமுக
மந்திர விதியின் மரபு ளிவழாஅ
வந்தணர் வேள்வியோர்க் கும்மே யொருமுகம்
எஞ்சிய பொருள்களை யேமுற நாடித்
திங்கள் போலத் திசைவிளக்கும்மே — யொருமுகஞ்
செறுநர்த் தேய்த்துச் செல்சம முருக்கிக்
கறுவுகொ ணெஞ்சமொடு களம்வேட் டன்றே—யொருமுகங்
குறவர் மடமகள் கொடிபோ னுசுப்பின்
மடவரல் வள்ளி யொடுநகை யமர்ந்தன்றே"—எனவும்,

பன்னிரண்டு திருக்கரங்களும் போர்செய்யுங் காலத்தில்
ஆயுதங்க ளேந்துதலை,

"வீறு கேதனம் வச்சிர மங்குசம் விசிக
மாறி லாதவே லபயமே வலமிடம் வரத
மேறு பங்கய மணிமழுத் தண்டுவில் லிசைந்த
வாறி ரண்டுகை யறுமுகங் கொண்டுவே ளடைந்தான்." — எனக்
கந்தபுராணம் சயந்தன் கனவுகாண்படலத்திலும்,

போர்செய்யாக்காலத்துப் பன்னிரண்டு திருக்கரங்களும் நடத்துகையை,

"ஆரந் தாழ்ந்த வம்பகட்டு மார்பிற்
செம்பொறி வாங்கிய மொய்ம்பிற் சுடர்விடு
வண்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு நிமிர்தோள்
விண்செலன் மரபினை யர்க்கேந்திய தொருகை
யுக்கஞ் சேர்த்திய தொருகை
நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை யசைவதொருகை
யங்குசங் கடாவ வொருகை யிருகை

யையிரு வட்டமோ டெஃகுவலந் திரிப்ப — வொருகை
மார்பொடு விளங்க வொருகை
தாரொடு பொலிய வொருகை
கீழ்வீழ் தொடியொடு மீமிசைக்கொட்ப வொருகை
பாடின் படுமணி யிரட்ட வொருகை
நீனிற விசும்பின் மலிதுளி பொழிய வொருகை
வானர மகளிர்க்கு வதுவைசூட்ட வாங்கப்
பன்னிரு கையும் பாற்பட வியற்றி"— எனத்திருமுருகாற்றுப்
படையிலும், வருதல் காண்க.

சந்திரனைக்கண்டு தாமரை குவிதல்போலக்குவியாது திருமுகங்களாகிய மதியங்களில் திருக்கண்களாகிய தாமரைகள் குவியாது மலர்ந்தபடியே நின்றன வென ஓராறுமதிய மீராறுதெய்வக்கமல வொண்மலர்மலர்ந்தபடியே-யொற்றுமை பெறக்கொண்டு நிற்றல்போலத் திகழுமொளி விழி சிறந்தமுகமும் என்றது, பொருளதிசயவணி. (ரு)

நனவில்வரு கனவிற் சுழுத்தியிற் பொறிகரண
நற்புருட னிற்பகுதியு
நவில்கால பரமதில சுத்தமா யையும் விண்ணி
னண்ணுபூ ரணமாயதோ
ருனலருவி யோமத்தி ருஞ்சுத்த வித்தைமுத
லொருமூ வகைக் கருவியு
மொருபரம துரியத்து விந்துவும் மிளிர்விசுவ
முண்டதிசை யுயர் நாதமும்
வினவலுறு முபசாந்த மதனின்மா மாயையு
மிகுசொருப மதனி லிருளும்
விள்ளுமென வுரைசெய்தெ னுள்ளமல மகலவருள்
விழிவழிப் பொழியு முகிலே
தனபதியை யெலுவனென வுளமகிழு மரன்மதலை
சப்பாணி கொட்டி யருளே
தடமலையை நிகர்கரிக டிரிசமர புரிமுருக
சப்பாணி கொட்டி யருளே.

(இ ள்.) நனவில் வரு பொறி - சீவசாக்கிரத்தில் அமைந்த ஞானேந்திரிய கன்மேந்திரியங்களும், கனவில்வரு கரணம் - சீவ சொப்பனத்தில்வரும் மனம்புத்திசித்தம் ஆங்காரங்களும், சுழுத்தியில்வரு பகுதியும்- சீவசுழுத்தியில் அவ்வியத்தமாய்நின்ற பிரகிருதியும், நல் புருடனில் பகுதியும்-பரசாக்கிரமாகிய புருடதத்துவத்தில் வியத்தமாய் நின்ற மூலப்பிரகிருதியும், நவில் காலபரம்

அதில் அசத்தமாயையும்- சொல்லப்பட்ட பரசொப்பனமாகிய காலபரதத்துவத்தில் அதோமுகமாயையும், விண்ணின் நண்ணு பூரணம் ஆயது ஓர் உன்னல் அரும் வியோமத்து - ஆகாயத்தைப்போல வியாபித்த நிறைவாய் ஒப்பில்லாத நினைத்தற்கரிய பரசுழுத்தியில், இரும் சுத்தைவித்தைமுதல் ஒரு மூவகை கருவியும் - பெருமைவாய்ந்த சுத்தவித்தை முதலிய தத்துவங்களின் காரியப்பாடுகளும், ஒரு பரம துரியத்துவிந்துவும் - ஒப்பில்லாத பரமதுரியமாகிய சிவசாக்கிரத்தில் விந்து தத்துவத்தின் காரியப்பாடும், மிளிர் விசுவம் உண்ட திசை உயர்நாதமும்-விளங்காநின்ற விசுவக்கிராசமாகிய சிவசொப்பனத்தில் உயர்ந்த நாத தத்துவத்தின் காரியப்பாடும், வினவலுறும் உபசாந்தம் அதனில் மாமாயையும்- மாணுக்கன் வினவுதற்கமைந்த சிவசுழுத்தியாகிய உபசாந்தத்தில் பின்னுசத்தியும், மிகுசொருபம் அதனில் இருளும் விள்ளும் என உரைசெய்து, குருதுரியமாகிய சொருபத்தில் ஆணவமலமும்நீங்குமென்று அனுக்கிரகித்து, என் உள்ளம் மலம் அகல-எனதுமனத்தோடு செம்பிற்காளிதம்போல நீங்காது நின்ற ஆணவமலம் நீங்க, அருள்விழிவழி பொழியு முகிலே - திருவருள் என்னும் மழையைத் திருக்கண் வழியாகப் பொழியுங் கருணைமேகமே, தனபதியை எனுவன் என உளம் மகிழும் அரன் மதலே சப்பாணிகொட்டி அருளே - குபேரனைத் தனது தோழனுகக்கொண்டு திருவுளங் களிகூரும் சிவபெருமானது திருமகனே,—

உபக்கிரமத்தில் பின்னுசத்தியும், அதில் மாயையும், அதில் பரதத்துவமும், அதில் வியோமமும், அதில் காலபரமும், அதில் புருடனும், அதில் மூலப்பகுதியும், அதில் மானும், அதில் அகங்காரமும், அதில் முக்குணமும், அவற்றுள் சாத்துவிதகுணத்தில் மனமும் ஞானேந்திரியமும், இராசகுணத்தில் கன்மேந்திரியமும், தாமதகுணத்தில் தன்மாத்திரையும், அவற்றால் தூலபூதமும் தோன்றுதலால் இம் முப்பது தத்துவமும் பந்தமெனவும், இவற்றை நீங்கிப்பிரமத்தை யடைதலே உபசங்காரமாதலால் அவை யொடுங்குதற்கு; சீவசாக்கிரம், சீவசொப்பனம், சீவசுழுத்தி, பரசாக்கிரம், பரசொப்பனம், பரசுழுத்தி; சிவசாக்கிரம், சிவசொப்பனம், சிவசுழுத்தி; குருதுரியம் எனத் தசாவத்தைகளைக் கூறி அவற்றுள் அத் தத்துவங்களை யொடுக்கங்கூற வந்தவர், சீவசாக்கிரத்தில் தூலபூதமைந்தும், சூக்ஷ்மபூதமைந்தும், ஞானேந்திரியமைந்தும், கன்மேந்திரியமைந்தும் ஆகிய இருபது தத்துவங்களும் உளவாதலால் அவற்றுள் தூலசூக்குமமாகிய பூதங்கள்நீங்கில் அவன்அவள்அதுவென்னும்பகுப்பொழியுமென்பார் நனவில்வருபொறி எனவும், சீவசொப்பனத்தில் மனம் புத்தி ஆங்காரங்களால் நிகழும் மயக்கமொழியுமென்பார் கனவில் கரணமெனவும், சீவசுழுத்தியில் அவ்வியத்தமாய் நின்ற மூலப்பகுதி யொழியுமென்பார் புருடதத்துவத்தி னிறுதியில் பகுதி எனவும், பரசாக்கிரத்தில் வியக்தமாய் நின்ற பிரகிருதி நீங்குமென்பார் புருடனிற் பகுதி எனவும், பரசொப்பனத்தில் அசுத்த மாயாவாசனை யொழியுமென்பார் நவில்கால பரமதில் அசுத்தமாயையும் எனவும், அப்பர ஆகாயத்தைப்போல வியாப்தமற்று பிரமஸ்வரூபமாய் கெ

டுமென்பார் பரசுழுத்தியை விண்ணின் நண்ணு பூரணமாயதோ ருனலரும் வியோமத்து எனவும், அப்பரசுழுத்தியில் ஈஸ்வர வுபாதி யொழியு மென்பார் இருஞ் சுத்தவித்தை முதலொரு மூவகைக் கருவியும் எனவும், சிவசாக்கிரத்தில் உலகம் நீங்கும் என்பார் ஒரு பரமதுரியத்து விந்து எனவும், சிவசொற்பனத்தில் அவ் வுலகவாதனை கழியுமென்பார் மிளிர் விசுவமுண்ட திசை யுயர், நாதமும் எனவும்,சிவசுழுத்தியில் பின்னுசக்திநீங்கவேண்டுமென்பார் வினவலூறும்மாயை எனவும், குருதுரியத்தில் ஆணவமலம் ஒழியுமென்பார் மிருசொருபம தனிலிருளும் விள்ளுமெனவும், இவ்வாறு உபசங்காரங் கூறுதலே அனுக்கிரகமென்பார் உரைசெய்தெனவும்,தூலசூக்ஷ்மபூதங்கள் பத்தும் இந்திரியங்கள் பத்தும் திரோதாயி எனவும், அந்தக்கரணமும் பிரகிருதியும் ஆகிய இரண்டும் மாயை எனவும், ஈசுரவுபாதியும் உலகமும் அவ்வாசனையும் ஆகிய இம்மூன்றும் கன்மமெனவும், பின்னுசத்தியால் மகாமாயையும் குருதுரியத்தால் ஆணவமும் ஆகிய பஞ்சமலங்களும் ஒழிய அருள்செய்வான் என்பார் என்னுள்ளமல மகலவருள் விழிவழிப் பொழியு முகிலே எனவும்,பரசாக்கிரத்தைப் புருடனென்றது-துவம் பதார்த்தமான துரியத்தை. பரசொப்பனத்தைக் காலபரமென்றது சர்வசிருட்டி, சர்வதிதி, சர்வசங்காரமாகிய வுபாதிகளை பரசுழுத்தியை வியோமமென்றது வியாப்தமற் றிருக்கையை. சிருட்டி, திதி, சங்காரமென்னு ஈசுரவுபாதிகளைச்,சுத்தவித்தை,ஈசுரம் சாதாக்கிய மென்னும், மூன்றுதத்துவங்களாகக்கூறியது சீவர்கள்பொருட்டு ஈஸ்வரன்கொண்ட பிரேரகங்களை. சிவசாக்கிரத்தைப் பரமதுரியமென்றது சுத்த துவம் பதார்த்தமாயிருக்கிற துரிய ஸ்வரூபத்தினிடத்தில் சர்வக்ஞாத்வாதி யுபாதி சம்பத்தித்து விளங்குகிற பரசாக்கிரத்தை, சிவசொப்பனத்தை விசுவக்கிராச மென்றது மேற்கூறிய வுபாதிக ளொழிந்து போக்குவரவின்றி விசுவங்களை யெல்லாம் விழுங்கி அகண்ட பூரணமாய் விளங்குதலை. உபசாந்தமென்றது சீவேஸ்வர வுபாதிகளொழிந்து நின்ற விடத்தை. சொருபமென்றது சச்சிதானந்த சுயம்பிரகாசத்தை. குரு துரியமென்றதும் அது. இதனைக் குமாரதேவர் சாத்திரக்கோவையா லுணர்க. (சு)

குலிசக் குழூச்சுலவு பூனதக் கிம்புரிக்
　　கோடுநா லுடைய வெள்ளைக்
குஞ்சரக் கும்பமிசை கொட்டல்போ லச்சிவன்
　　குலவுப் புயங் கொட்டல்போன்
மலைபெற்ற பைம்பிடிப் பாலுண்டு முத்தமிழ்
　　மதம்பொழியு மந்த நாளின்
மன்னுதத் துவமசியின் மும்மைப் பதங்களை
　　வகுத்தறி வுறுத்து முறைபோற்
கலகப் பிணக்குடைச் சமயப் பெரும்பறவை
　　கடியுமொரு கருவி யதுபோற்

கருதரிய பதிமுதற் றிரிபொருளு நிசமெனக்
கைக்குறிப் பறிவித் தல்போற்
றலைமைத் தமிழ்ச்சங்க மளவிட்ட விரககுக
சப்பாணி கொட்டி யருளே
தடமலையை நிகர்கரிக டிரிசமர புரிமுருக
சப்பாணி கொட்டி யருளே.

(இ-ள்) குலிசக் குழு சுலவு பூனதம் கிம்புரி கோடு நாலுடைய வெள்ளை குஞ்சரம் கும்பம்மிசை கொட்டல் போல-வச்சிராயுதக்கூட்டம்போல வளைந்த பொன்னாலமைந்த பூண்கட்டிய நான்குகொம்புகளையுடைய வெள்ளை யானையின் மத்தகத்தின்மேல் கொட்டுதல்போலவும், சிவன் குலவு புயம் கொட்டல்போல் - சிவபெருமானது விளங்குந் திருப்புயங்களைக் கொட்டுதல்போலவும், மலைபெற்ற பைம்பிடி பால் உண்டு முத்தமிழ்மதம் பொழியும் அந்நாளில் - இமயமலைபெற்ற உமையம்மையாகிய இளமைவாய்ந்தபெண் யானையின் சிவஞானப்பால் பருகி இயல் இசை நாடகமென்னும் முத்தமிழென்னும் மும்மதங்களைப் பொழியுமக்காலத்தில், மன்னு தத்துவமசியின் மும்மைப்பதங்களை வகுத்து அறிவுறுத்தும் முறைபோல்-நிலைபெற்ற தத்துவமசியென்னு மஹாவாக்கியத்திலடங்கிய மூன்றுபதங்களைப் பகுத்து ஆன்மாக்களுக்குத் திருநெறித் தமிழ் வேதமாகிய திருப்பாசுரங்களால் அறிவுறுத்திய முறைபோலவும், கலகம் பிணக்கு உடைசமயம் பெரும் பறவைகடியும் ஒரு கருவியது போல்-தம்முள்மாறுபடுதலால் என்றும் பிணக்குடையசமயமாகிய பெரிய பறவைகளையோட்டும் ஒருகருவியைப்போலவும், கருது அரிய பதிமுதல் திரிபொருளும்நிசம் எனகைகுறிப்பு அறிவித்தல் போல் - நினைத்தற்கரிய பதிமுதலிய மூன்றுபொருள்களும் நிச்சயமென்று தனது திருக்கரக்குறிப்பால் அறிவித்தல்போலவும், தலைமைதமிழ்ச்சங்கம் அளவிட்ட விரக குக சப்பாணி கொட்டியருள் - தலைமை வாய்ந்த தமிழ்ச்சங்கத்தில் புலவர்கள் பாசுரங்களை யளவறுத்தபேரறிவுடையவனே குகனே,—

சாம்பூநதம் பூநதமெனவந்தது செய்யுள் மரூஉ வாய்வந்த முதற்குறை. மேருவின் தெற்கிலுள்ள நாவற்பழச்சாறு ஓர் வெள்ளமாய் மேற்றிசைநோக்கி அம்மலையை வலம்வரும் நதத்தில் பிறந்த பொன்னாதலால் சாம்பூநதமெனக் காரணம் பற்றிவந்த பெயராகக்கொள்க. "நாவலொடு பெயரிய பொலம்புனைய விரிழை" என வருதல் காண்க. நதம் மேல்முகநோக்கிச் செல்லும் ஆறு. இந்திரனேந்திய வச்சிராயுதம்போல வெண்மையும் வலிமையும் வாய்ந்ததென்பது தோன்றக்குலிசக்குழுச்சுலவு பூநதக்கிம்புரிக்கோடெனவும்,அடியவர்க்கருளவிரைந்து வருகைதோன்ற வெள்ளைக் குஞ்சரக் கும்பமிசை கொட்டல்போலெனவும், சிவபிரான் தன்னிடத்து ஆராமகிழ்ச்சி யுடையவனென்பது தோன்றச் சிவன்குலவுப் புயங்கொட்டல்போல எனவும், இமயமலைப் பெண்யானையின் பால்பருகுவது கன்றாதலால் முத்தமிழெனக் கர்னமதம், கபோலமதம்,

துதிக்கைமதமென்னும் மூன்றுமதங்களையும் பொழிந்ததென்பது தோன்றப் பிடிப்பாலுண்டு முத்தமிழ் மதம்பொழியும் அந்தநாளில் எனவும், சிவஞானப்பாற்பருகிய அன்றே வேதசிரசிலுள்ள தத்துவமசி என்னும் உட்கிடையையுணர்ந்தனனென்பது தோன்ற மன்னுத்துவமசியின் மும்மைப்பதங்களை வகுத்து எனவும்,அவ்வாக்கியத்தி னுட்கிடை அது நானுயினேன் என்னும் சிவோகம் பாவனையை ஆன்மாக்களுய்தற்பொருட்டு ஆளுடையபிள்ளையார் தமது திருப்பாசுரங்களால் அறிவுறுத்தினரென்பது தோன்ற அறிவுறுத்து முறைபோலெனவும், இது ,சுத்தாத்விதம். ஒரு பொருள் மற்றொருபொருளாதல் எவ்விடத்து மின்மையின் அதுநானுனேனென்னும் ஒருசொற்படும் வண்ணம் எழுந்தார்க்கு ஒன்றுகெட்டு ஒன்ருகுமெனக் கொண்டு பரிணமங் கூறுவாரும்; அது நான் என்னும் இருபெயரும் விட்டும் விடாத விலக்கணையாகக் கொண்டு கேவலாத்துவிதங் கூறுவாரும்; அவற்றுள் ஒன்றைமாத்திரம் இலக்கணையாகக் கொண்டு விசிட்டாத்துவிதங் கூறுவாரும் உளரென்பதுதோன்றக் கலகப் பிணக்குடைச் சமயப் பெரும்பறவை எனவும், கருடோகமெனப் பாவிக்கும் அத்துவித பாவனைக்கு மந்திரத்தின் ஆற்றலும், அவ்வாற்றல் வழிநின்று பாவிக்கும் மாந்திரிகனது ஆற்றலும் ஒருதலையால் வேண்டப்பட்டு அவ்விடத்து நிலைபெறுமாறு போல, சிவோகமெனப் பாவித்து நிற்கும் அத்துவித நிலைக்கு இறைவனது கலப்பும் இவனது அடிமையும் ஒரு தலையான் வேண்டப்படுமென்பது போந்தமையால் அங்ஙனம் தொண்டுசெய்தற் குரிய ஆன்மாவினது ஞானக்கிரியைகளும் கலத்தற்குரிய இறைவன் ஞானக்கிரியைகளும் அவ்விடத்துக் கேடில்லாது நிலைபெறுமென்பது சுத்தாத்துவிதமாதலால் அதனைக் கொண்டு கடிந்தனரென்பது தோன்றக் கடியும் ஒரு கருவியதுபோலெனவும், வேதமுதலிய பன்னூல்களின் றுணிபு இதுவே என்பது தோன்றக் கருதரிய பதிமுதற்றிரிபொருளுநிசமெனக் கைக்குறிப்பறிவித்தல்போல எனவும்,சங்கப்புலவர்கள் நாற்பத்தெண்மரும் தாம்தாம்செய்த நூல்களையே வியந்து தம்முட்கலகங்கூர்ந்து திருவாலவாயிலெழுந்தருளிய சோமசுந்தரக் கடவுளிடத்துச் சென்று குறையிரக்க,அச்சிவபெருமான் இந்நகரில் வணிகர்குலத்தில் மூங்கையாய்த் தோன்றிய உருத்திர சன்மரிடத்திற் சென்றுநுங் கவிகளை அவர் முன்னர் எடுத்துக் கூறின், இரத்தினங்களை வரையறுத்துச் சீர்தூக்கல்போல உங்கள் கவிகளிலுள்ளகுண குற்றங்களை வரையறுத்துச் சீர்தூக்குவரென்றருள, அவர்பால் அப்புலவர்கள் சென்று வணங்கி அவரைத்தாமிருக்குஞ் சங்கப்பலகைமேலேற்றித் தாம்செய்த நூல்களைக் கூறியபோது, சிலவற்றிற்கு வாளாவிருந்தும், சிலவற்றிற்குத் தலையசைத்தும், சிலவற்றிற்கு உடல் புளகித்தும், சிலவற்றிற்குக் கண்ணீர் அரும்பியும், அந்நூல்களின் குண குற்றங்களை அளவறுத்த பெரும் புலமைத்தன்மைதோன்ற தலைமைத் தமிழ்ச்சங்கம்ளவிட்டவிரக எனவும் கூறினர். (ரு)

## வேறு.

கண்ணன் றிருத்தங்கை முலையமுத கடலுண்டு
கனஞான வரை யிவர்ந்து

கருதரிய சுரர்முதற் பயிர்கடழை யப்பெருங்
காரவுண மாசுண மெலாந்
துண்ணென் றுளஞ்சுறுக் கிட்டுமுரி யச்செழுஞ்
சுடர்விடுந் தாரை நெடுவேற்
சோதிமின் மின்னியெழு தீபச் சிகைப்பொருவு
சுடிகைக் கொடிப் பேரிடி
யெண்ணெண் டிசைக்களிறு பிளிறிட வீடித்துமுறை
யின்னருட் பொழியு முகிலே
யிசைமுழவு பேரிகை வலம்புரி முழக்கமுட
னெழின்மங் கலச் சும்மையுந்
தண்ணந் துறைப்பரவை யோடிகலு போரூர
சப்பாணி கொட்டி யருளே
தகைமைபெறு குறவனிதை விழியிணைகள் குடிகொள்புய
சப்பாணி கொட்டி யருளே.,

(இ ள்.) கண்ணன் திருத்தங்கைமுலை அமுதகடல் உண்டு - திருமால் திருத்தங்கையாகிய அம்பிகையினது திருத்தனஞ்சுரக்கும் திருவருட்பாலாகிய கடலினைப்பருகி, கனம்ஞான வரை இவர்ந்து-மேன்மைவாய்ந்த சிவஞானமென்னும் மலையின் மேலேறிப்பரந்து, கருது அரிய சுரர்முதல் பயிர்கள் தழைய-நினைத்தற்கரிய தேவர்கள்முதல் மானிடரீறாக வுள்ளபயிர்கள் தழைத்தோங்கவும், பெருங்கார் அவுணர் மாசுணம் எல்லாம்-பெரிய அசுரர்என்னும் பாம்புகளெல்லாம், துண்ணென்று உளம் சுறுக்கிட்டு முரிய-நடுங்கி மனஞ்சுறுக்கிட்டு முரிந்தோடவும், செழும் சுடர்விடும் தாரை நெடுவேல் சோதி மின் மின்னி-குறைவில்லாம லொளிவீசுந்தாரைவாய்ந்த நெடியவேலின் ஒளியாகிய மின்னலை மின்னி, எழுதீபம் சிகைபொருவு சுடிகை கொடிபேர் இடி - ஏழுந்தோங்கும் விளக்கின் சிகையையொத்த வுச்சிக்கொண்டையையுடைய கோழிக் கொடியின் பெரிய முழக்கால், எண் எண் திசைக்களிறு பிளிறிட இடித்து முறை இன் அருள் பொழியுமுகிலே- யாவருங்கருதும் எட்டுத்திசைகளிலும் உள்ள யானைகள் பிளிறிட்டோட இடித்து முறையாக இனிய திருவருளென்னும் மழையைப்பொழியு மேகமே,இசைமுழவு பேரிகை வலம்புரி முழக்கம் எழில்மங்கலம் சும்மையும் - யாழிசையும் முழவோசையும் பேரிகையோசையும் வலம்புரிச்சங்கோசையும் அழகிய மங்கல ஒலியும், தண் அம் துறைபரவையோடு இகலு போரூர சப்பாணி கொட்டியருளே - தண்ணிய அழகிய துறையையுடைய கடலோடு இகலும் திருப்போரூரையுடையவனே சப்பாணி கொட்டியருளாய்,தகைமைபெறு குறவனிதைவிழி இணைகள் குடிகொள்புய- அழகுவாய்ந்த வள்ளிநாய்ச்சியாரது இரண்டு திருக்கண்களுங்குடியேறிய திருப்புயங்களையுடையவனே,

முருகக்கடவுளை மேகமாக வுருவகஞ்செய்தமையால் கடல்நீர் பருகுத லும், பெய்ய மலைமேலேறுதலும், பயிர்கள் தழைக்கப் பெய்தலும், பாம்புகளஞ்ச மின்னுதலும், இடித்தலும் மேகத்திற்கு இயல்பாதலால் அதன் றொழிலை முருகக்கடவுள்மே லேற்றி அமுதக்கடல் பருகுதலும்; அது பெய்யச் சிவஞானமலைமே லேறுதலும், தேவர்கள் முதலிய பயிர்கள் தழைக்கப் பெய்தலும், அசுரர்களாகிய அரவங்கள் முரிந்தோட வேலின் ஒளியை வீசுதலும், துவசமாயுள்ள கோழியினெலியால் இடித்தலும் முறையே கூறுதலால் முற்றுருவகவணி. (சு)

### வேறு.

மரகதப் பந்திநிறை பைங்கிரண மண்டிலம்
வழங்குகுழை முகம திகளு
மாணிக்க மணிராசி யிளவெயிற் றிசைவீசு
மகுடநீ டிய முடிகளுங்
கரகதிர்ப் பகலெனச் சுடர்விரித் தொளிர்வயிர
கடகநிறை செறிதோள் களுங்
கறையகலு மதிமண்டி லங்களென நித்திலங்
கதிர்விடும தாணி மார்புந்
திரகதிர்ச் செக்கரி னிறத்துகின் மருங்குலுந்
திப்பியத் தல நவமணித்
திரண்மண்டு தண்டையங் கமலமுந் திகழவிச்
சித்திரப் பைஞ் சிறைமயிற்
குரகதத் தினைநடவி யடியவர்க் கருண்முருக
கொட்டி யருள் சப்பாணியே
கூளுரயிற் கிறைவபோரூர்நகர்க் கதிப
கொட்டி யருள் சப்பாணியே.

(இ-ள்.) மரகதம் பந்தி நிறைபைங் கிரண மண்டிலம் வழங்கு குழை முகமதிகளும்-மரகதவரிசையின் நிறைவால் பசிய கிரணவட்டத்தை வீசாநின்ற குண்டலங்களையணிந்த திருமுகங்களாகிய சந்திரமண்டிலங்களும், மாணிக்க மணிராசி இளவெயில்திசைவீசும் மகுடநீடியமுடிகளும்-மாணிக்க இரத்தினத்தின்கூட்டங்களால் இளவெயிலைத் திசைகள்தோறும்வீசும் மகுடங்களணிந்த ஆறுதிருமுடிகளும், கரம் கதிர் பகல் என்ன சுடர்விரித்து ஒளிர் வயிர்கடக நிறை செறி தோள்களும் - கிரணத்தையுடைய சூரியன்வீசும் பகற்பொழுது போலக் கிரணத்தைவிரித்து விளங்கும் வயிரங்கள்பதித்த கடகவரிசை செறிந்த பன்னிரண்டு திருத்தோள்களும், கறை அகலும் மதிமண்டிலங்கள் என்ன நித்திலங் கதிர்விடும் மதாணிமார்பும் - குற்றம் நீங்கிய சந்திரமண்டிலங்களைப் போல முத்துகள் ஒளிவீசும் பதக்கமணிந்த திருமார்பமும், திரம் கதம் செக்

கரின் நிறம் துகில்மருங்குலும் - நிலைபெற்றுச் செல்லும் செக்கர் வானம்போலும் செந்நிறம்வாய்ந்த ஆடையணிந்த திரு இடையுங், திப்பியத்தலம் நவமணி திரள்மண்டு தண்டைஅம் கமலமும் திகழ - தேவருலகிலுள்ள நவமணிக்கூட்டங்களா லிழைத்த தண்டையையணிந்த அழகிய தாமரைமலர்போன்ற திருவடியும்விளங்க, விச்சித்திரம்பைஞ்சிறைமயில் குரகதத்தினை நடவி அடியவர்க்கு அருள்முருக சப்பாணிகொட்டி அருள்-பல நிறம்வாய்ந்த பசியசிறகினையுடைய மயிலூர்தியாகிய குதிரியைநடத்தி அடியார்க்கருளும் முருகனே சப்பாணி கொட்டியருள், கூர் ஊர் அயிற்கு இறைவ போரூர் நகர்க்கு அதிப - கூர்மை தவழும் வேலுக்கிறைவனே போரூர்நகர்க்குத் தலைவனே சப்பாணி கொட்டியருள்,—

பசுங்கிரணமண்டிலத்தையும், இளவெயில் மண்டிலத்தையும், முதுவெயில் மண்டிலத்தையும் சந்திரமண்டிலத்தையும், செக்கர்வானையும் தனது உபாங்கங்களால் விளக்குவானென்பர் ; மரகதக்குழை பைங்கதிர் மண்டிலத்தையும், மாணிக்கமகுடம் இளவெயிலையும்,வயிரகடகம் பகலொளியையும், முத்துப் பதித்த பதக்கம் சந்திரமண்டிலத்தையும், ஆடை சொக்கர்வானத்தையும் வீசவும் எனவும், அடியவர்களுக்கு திருக்காட்சியை விரைந்தருளுவா னென்பார் திகழப்பைஞ்சிறைமயில் குரகதத்தினை நடவியடியவர்க்கருள் முருக எனவுங் கூறினர்.

திப்பியம் திவ்வியமென்னும் வடசொற் றிரிபாதலால் தேவருலகிற் றோன்றிய என்றும் - திவ் தேவருலகு, ய-தோன்றுவது. ஊர்திகளுட் சிறந்தனதேரும், குதிரையும், யானையும் ஆதலால். சிறைமயில் குரகதத்தினை என்றார். இது சான்றோ ராட்சி "கார்மாமிசைக் காலன் வரிற்கலபத் தேர்மாமிசை வந்தெதிரப்படுவாய்" என வருதல்காண்க. (எ)

## வேறு,

உடலிற் குடர்நீ ளக்கொடு சென்று
வணத்திரள் வட்டமிட
வொள்ளிய செல்வப் பிள்ளைகள்பற்பல
வுயர்பட் டம்விடல்போற்
கடலிற் படுகுரு திப்பெரு வெள்ளங்
கட்குழி சிறுபலபேய்
கடியதண் மூடிய பேரிகை முழவு
கரங்கொடு கனைகாண
மிடலுற் றிடுபிண மாமலை தோறும்
வியன்பேய் களியாட்ட
மிட்டா டத்தலை வட்டா டக்கடு
வெஞ்சூர்க் குலமுழுதும்

கொடுமைத் திறமு மறவேல் விட்டவ
கொட்டுக சப்பாணி
கொற்றவ நற்சம ரப்பதி யுத்தம
கொட்டுக சப்பாணி.

**(இ-ள்.)** **ஒள்ளிய பற்பல செல்வப்பிள்ளைகள்** - விளங்கும் செல்வத்தையுடைய பலபிள்ளைகள்திரண்டு,உயர்பட்டம் விடல்போல்-உயர்ந்தபட்டங்களை மேலே விடுதல்போல,உவணத்திரள் உடலில் குடர்நீளக் கொடு சென்று வட்டம் இட - கழுகின்கூட்டங்கள் அசுரர்வயிற்றினின்று பிதுங்கிய குடல்களைக்கவர்ந்துதொங்கி அசைய மேலேசென்றுஒருபால் வட்டமிடவும், கடலில் படுகுருதி பெருவெள்ளம்-கடலில்மடிக்கும் அசுரரது உதிரமென்னும் பெரிய வெள்ளத்தினை, குழிகண் சிறுபலபேய்- குழிந்த கண்களையுடைய உருவிற் சிறியபல்பைசாசங்கள்,கடிஅதள் மூடியபேரிகை முழவுகரம் கொடுகரைகாண-விளக்கம்வாய்ந்த தோலினல்மூடிய பேரிகையையும் முழவையும் புணையாகத் தமதுகைகளால் பற்றி ஒருபால்அவ்வுதிரவெள்ளத்தின்கரைகாணவும், மிடல் உற்றிடு பிணமாமலைதோறும் வியன்பேய்களி ஆட்டம் இட்டு ஆட - வலிமைமிக்க அப்பிணக்குவியல்களாகிய பெரிய மலைகள்தோறும்அப்பைசாசங்கள் அவ்வுதிரம்பருகிய களிப்பால் துணங்கைஆடல்களை ஒருபாலாடவும், தலைவட்டாட - அவ்வசுரர்தலைகளை அப்பேய்கள்சூதாடுகருவிகளாகக் கொண்டு ஒருபாலாடவும்,கடு வெம் சூர் குலம் முழுதும் கொடுமை திறம் உம் அற வேல் விட்டவ- மிக்ககொடிய சூரபன்மன் குலமுற்றும் அவனது கொடுந்தொழிற் பகுதிகளும் வேரோடற வேலெறிந்தவனே, கொற்றவ-வெற்றியை யுடையவனே கொட்டுக சப்பாணி-சப்பாணி கொட்டியருளாய், நற்சமரப்பதி உத்தம-நல்ல சமரபுரியில் எழுந்தருளிய வுத்தமனே,

திருமால்முதலிய தேவர்களால் வெல்லுதற்கரிய சூரபன்மன்முதலியோரைவென்றமிகுதிதோன்றக் கொற்றவவெனவும்,தேவர்கள் மீளாதசிறைமீட்ட பெருங்கருணைதோன்ற உத்தமஎனவுங் கூறினர். களியாட்டம் என்றமையால் துணங்கைக் கூத்தென்றும். துணங்கை இருகைவிரல்களையும் பழுப்புடை யொற்றியாடல், இதனுய்வாகைத்திணையுள் களவேள்வித்துணை கூறினர். "முடக்கி யிருகை பழுப்புடையொற்றித் - தொடக்கிய நடையது துணங்கையாகும்" என வருஞ் சூத்திரத்தானுணர்க. (௪)

வேறு.

ஆடகத் திரண்மதிலு மேனிலைச் சிகரிகளு
மாணிமுத் தொளிர்மேடையு
மாழிதத் தலைபொருவு பீடுடைக் கொடிகள்பல
வாடுபொற் குடமாடமு
நீடுதெற் றிகளுமணி சூளிகைச் செழுமனையு
நேர்செலுத் தியதேர்களு

நீர்நிறைத் திடுகுடமும் வாழைநற் கமுகினமு
　　நீணிலைப் பலதேர்களுஞ்
சேருறத் திகழ்மகர தோரணப் பலமறுகு
　　தோறுமுத் தமிழோர்களுஞ்
சீர்மறைத் தலைவர்பரி பூரணத் தவரளகை
　　யாளனொத் தவர்யாவருங்
கூடிமொய்த் தொளிர்சமர மாநகர்க் கொருமுதல்வ
　　கொட்டியருள் சப்பாணியே
கூடலிற் செழியன்மழல் கூனறப் புரியுமிறை
　　கொட்டியருள் சப்பாணியே.

(இ-ள்.) ஆடகம் திரள் மதிலும் - ஆடகம் என்னும் பொன்னாற் றிரண்டமதிலும், மேல்நிலை சிகரிகளும் - அதன்மேனிலையாகிய கோபுரங்களும், ஆணிமுத்து ஒளிர்மேடையும்- ஆணிமுத்தங்களால் விளங்கும் மேடைகளும், ஆழிதத்து அலைபொருவு பீடு உடை கொடிகள் பல ஆடு பொன்குடமாடமும்- கடலிற்றாவும் அலைகளையொத்த பெருமைவாய்ந்த பலதுவசங்களசைந்தாடாநின்ற பொற்குடங்கள் நிரைத்தமாடங்களும், நீடுதெற்றிகளும் - நீண்ட வேதிகைகளும், மணி குளிகை செழுமனையும் - இரத்தினங்களிழைத்த சிறப்பினையுடைய வளம்வாய்ந்த வீடுகளும், நேர்செலுத்திய தேர்களும்- நேரோசெலுத்தப்பட்ட தேர்களும், நீர் நிறைத்திடு குடமும் - நீர்நிரப்பிய பூரணகலசங்களும், வாழை நல் கமுகு இனமும் - வாழைக்கூட்டங்களும் நல்ல கமுகின்கூட்டங்களும், நீள் நிலை பலதேர்களும்-நீண்ட பல நிலைத்தேர்களும்,சேடுஉற திகழ் மகரதோரணம் பல மறுகுதோறும் -பெருமைபொருந்த விளங்கும் மகரதோரணங்களுமாகிய இவைகளமைந்த பலவீதிகளும் ஆகிய இவைகள்தோறும், முத்தமிழோர்களும் சீர்மறைத்தலைவர் பரிபூரணத்தவர் அளகையாளன் ஒத்தவர் யாவரும் - இயலிசை நாடகமென்னும் முத்தமிழில் வல்லவர்களும் சிறப்புவாய்ந்த வேதங்களையுணர்ந்த அந்தணர்களும் சீவன்முத்தர்களும் குபேரனையொத்த செல்வமுடையவர்களும் ஆகிய எல்லோரும், கூடிமொய்த்து ஒளிர் சமரமாநகர்க்கு ஒரு முதல்வ- ஒருசேரக் கூடி நெருங்கி விளங்கும் பெருமைவாய்ந்த சமரபுரிக்கண் ஒருமுதல்வனாயிருக்கின்றவனே,சப்பாணிகொட்டி அருள் - சப்பாணிகொட்டி யருளாய், கூடலில் செழியன் அழல் கூன் அற புரியும் இறை-மதுரையில் கூன்பாண்டியனுக்குத்தான் கடைக்கணித்த சுரத்தால் அவன் முதுகு கூனறச்செய்தருளிய இறைவனே,—

வீதிகளில் பூரணகலசங்களும், வாழைகளும், கமுகுகளும், பல தேர்களும்,நிலைத்தேர்களும், மகரதோரணங்களும் உண்மையால் அமைந்த என்னும் சொல் அவாய் நிலையாக வருவிக்கப்பட்டது. மதுரையில் அமண்சமையத்திற் சிமிழ்ப்புண்ட பாண்டியன் அச்சமையத்தினின்று நீங்கவும்,அவன் முதுகின் கூனறவும், அவன் முன்னர்த் திருமடத்தில்வைத்த அழலே காரணமாதலால்

அழ் கூனறப்புரியு மென்றார். நதியி லெதிரேற அருளிய திருப்பாசுரத்தில் "வேந்தனும் ஓங்குக" என்றருளினமையால் கூன் நிமிர்ந்ததென்றது-

"எம்பிரான் சிவனே யெல்லாப் பொருளுமென் றெழுது மேட்டிற்
றம்பிரா னருளால்வேந்தன் றன்னைமுன் னோங்கப்பாட
அம்புய மலராள் மார்ப னனபாயனென்னுஞ் சீர்த்திச்
செம்பியன் செங்கோ லென்னத் தென்னன் கூனிமிர்ந்ததன்றே"—
என வருந் திருத்தொண்டர் புராணத்தாலறிக. (௬)

வேறு.

தீதறு கற்பக நற்றரு வுற்ற செயக்குலி சப்பாணி
சேட னுடற்றுயில் பச்சை நிறத்த செருச்செய் வளைப்பாணி
போதிடை யுற்றுல கத்தை யளித்த புதுக்கர கப்பாணி
பூசுரர் நற்றவர் கற்றவ ரேத்து புவித்தல முற்றார்கண்
மூதணி கைக்கம லத்தொ டுவப்பு முகக்கம லப்போது
மூட விரிக்க வுதித்த மதிக்கதி ரொத்தெழு மெய்த்தேவே
கோதறு நற்சம ரப்பதி யுத்தம கொட்டுக சப்பாணி
கூர்கொ ளயிற்படை யுற்ற கரத்திறை கொட்டுக சப்பாணி.

(இ - ள்.) தீது அறு கற்பகம் நல் தரு உற்ற செயம் குலிசம் பாணி - குற்றமற்ற கற்பகவிருட்சத்தினிழலின்கீ ழமர்ந்த வெற்றிவாய்ந்த வச்சிராயுதத்தை யேந்திய கையையுடைய இந்திரனும், சேடன் உடல் துயில் பச்சை நிறத்த செருச்செய் வளை பாணி - ஆதிசேட னுடலில் அறிதுயில்கொள்ளும் பசிய நிறத்தையுடைய போர்செய்யும் பாஞ்சசன்னியமென்னுஞ் சங்கினையேந்திய கையையுடைய திருமாலும், போது இடை உற்று உலகத்தை அளித்த புது கரகம் பாணி - தாமரைமலரிற் குடியிருந்து உலகங்கள் யாவையும் தந்தருளிய வியப்புவிளைக்கும் கமண்டலத்தை யேந்திய கையையுடைய பிரமனும், பூசுரர் நல்தவர் கற்றவர் ஏத்து புவித்தலம் உற்றார்கள் - அந்தணர்களும் நல்ல தபோதனர்களும் கற்றவர்களும் துதிக்கும் நிலவுலகில் வாழ்வோர்களும் ஆகிய இவர்களது, முதுமை அணி கை கமலத்தொடு உவப்பு முகம் கமலப்போது - பெருமையாற் பொலிவுசெய்யும் கைகளாகிய தாமரைகளோடு மகிழ்கூரும் முகமாகிய தாமரைமலர்களும், மூட விரிக்க உதித்த மதிக்கதிர் ஒத்து எழு மெய்த்தேவே -குவியவும் மலரவும் உதயஞ்செய்த சந்திரனுடைய கிரணத்தை யொத்துக் காட்சிதரும் உண்மைத் திருவுருவாய்ந்த இறைவனே, கோது அறு நல் சமரப்பதி உத்தம சப்பாணி கொட்டுக-குற்றமற்ற நல்ல சமரபுரியில் எழுந்தருளிய வுத்தமனே, கூர் கொள் அயில் படை உற்ற கரத்து இறை-கூர்மை வாய்ந்த வேற்படை யேந்திய திருக்கரத்தையுடைய இறைவனே.

சந்திரன் உதயஞ்செய்யுங் காலத்துத் தாமரைகள் குவித லொன்றே, அவை விரிதலுமுடைய சந்திரன் இருந்தால் அதனை யொக்குமென்பார் மூட

விரிக்க வுதிக்க மதிக்கதி ரொத்தெனவும்,இந்திரன் முதலியோர் கைத்தாமரைகள் குவியவும் அவர்கள் முககமலம் விரியவும் உதயஞ்செய்தவனென்பார் எழுமெய்த்தேவே எனவும், தன்னை யடைந்தோர் குற்றமொழிதற்குத் தான் இயல்பாகவே குற்றமொழிந்து நின்றவனென்பார் கோதறு நற்சமரப்பதி யுத்தம எனவுங் கூறினர். (கo)

சப்பாணிப்பருவ முற்றிற்று.

---

## முத்தப்பருவம்.

பதினோராமாதத்தில் நிகழ்வது கூறுதலால் முத்தந் தருகவென விளிக்கும்பருவத்தின்மேல் நின்றதெனக்கொள்க.

கயல்கொக் குடும்பின் சிரசுகளுங்
கரிக்கோ டேன முடக்கோடுங்
கழையுங் கரும்புங் கமுகினமுங்
கதலி சாலி கடிக்கமலம்
புயனத் தாதி தருமுத்தம்
புனலிற் கனலிற் புடவியினிற்
பொன்றும் பொதியிற் கேழொளிபோம்
பொருந்தும் விலையுண் டவைவேண்டே
மியல்புற் றென்று மழிவிலதா
யென்றும் புதுமை தருமொளியா
யெவர்க்கு மதிக்க வரிதாகி
யிருந்து மிகுந்த மதுரமெலா
முயல்வுற் றளிக்கு நின்கனிவாய்
முத்தந் தருக முத்தமே
முருகுந்தன் மருகா சமரபுரி
முருகா முத்தந் தருகவே.

(இ-ள்.) கயல் கொக்கு உடும்பின் சிரசுகளும் - கயல் மீன்றலையும் கொக்கின்றலையும் உடும்பின்தலையும்,கரிக்கோடு ஏனம் முடக்கோடும்-யானையின் கொம்பும் பன்றியின்வளைந்ததந்தமும், கழையும் கரும்பும் கமுகு இனமும்-மூங்கிலும் கரும்பும் கமுகின் கூட்டங்களும், கதலி சாலி கடிக் கமலம் புயல் நத்து ஆதி தரு முத்தம் - வாழையும் நெற்பயிரும் வாசம்வாய்ந்த தாமரையும் மேகமும் சங்கும் ஆகிய இவைமுதலியவை தாரா நின்றமுத்துகள்,புனலில்கன

லில் புடவியினில் பொன்றும் - அப்புவாலும் தேயுவாலும் பிருதிவியாலும் ஓர் காலழியும், பொதியில்கேழ் ஒளிபோம்-துணியில் முடிந்தால் விளங்குமொளி குன்றும், பொருந்தும் விலையுண்டு - மதித்து வரையறுக்கும் விலையுமுண்டு, அவைவேண்டேன் - அம்முத்தங்களை விரும்பேன், இயல்பு உற்று-இயல் பாய்த்தோன்றி, ஒன்ருன் அழிவிலது ஆய்-அப்பு முதலிய மூன்று பொருள்களுளொன்ருலுமழிவில்லாததாய், என்றும் புதுமை தரும் ஒளியாய் - எக்காலத்தும் புதுமையை விளைக்கும் ஒளியுடையதாய், எவர்க்கும் மதிக்க அரிதாகி இருந்து - விலைமதிக்கும் வணிகரெவர்க்கும் விலைமதிக்க அரிதாயிருந்து, மிகுந்த மதுரம் எல்லாம் முயல்வுற்று அளிக்கும் நின் கனி வாய்முத்தம் தருக-மிக்க மதுரங்களெல்லாவற்ருேடும்பழகி அம்மதுரந்தரும் உனது கனிபோன்றதிருவாய் முத்தந்தருக, முத்தமே - முத்தமே (தருக), முகுந்தன்மருகா-திருமால் மருகனே, சமரபுரி முருகா - திருப்போரூரி லெழுந்தருளிய முருகனே, முத்தந்தருக - முத்தந்தரக் கடவாய்.

சங்குமுதலியவை தருமென்றது சிப்பி, நத்தை, பெண்கள் கழுத்து, பசுவின் பல், பாம்பு, சந்திரன், முதலை இவைகள் தரு முத்துகளை-அப்புவுந் தேயுவும் பிருதிவியுமாகிய இவைகள் முத்துகளுக்குப் பகைமையாதலால் புனலிற் கனலிற் புடவியினில் அம்முத்துகள் பொன்றுமெனவும்; முடிந்தால் ஒளிகுன்றுமெனவும், அவற்றிற்கு விலையுண்டெனவும் கூறப்படுதலால் அம்முத்தங்களை விரும்பேனெனவும், உன்றிருவாய் முத்தம் அதுபோலத்தோன்றப் படுதலின்மையால் இயல்புற்றெனவும், மேற்கூறியவை புனல்முதலியவற்ருலழிதல்போல அவற்ருலிது அழிவின்மையால் ஒன்ருனழிவிலதாய் எனவும், அவையொன்றில் பொதியில் ஒளியிழத்தல்போல் உன்றிருவாய் முத்தமொன்றில் பொதியில் என்றும் புதுமைதருமொளியாய் எனவும், ஒளிகுன்றலின்மையால் அவை விலைமதித்தல்போல நின்றிருவாய்முத்தம் விலைமதித்தற் கருமையால் எவர்க்கு மதிக்கவரிதாகி யிருந்தெனவும், அதனுல் நின்கனிவாய் முத்தம் விரும்பினேனுதலால்முத்தந்தருகவென் றமையாது மீட்டு முத்தமெனவுங் கூறினூர்,

முத்தந்தோன்று மிடங்களை,

"தந்திவராகமருப்பிப்பிபூகந்தணிக்கதலி
நந்துசலஞ்சலமீன்றலைகொக்குநளினமின்ஞர்
கந்தரஞ்சாலிகழைகன்னலாவின்பல்கட்செவிகார்
இந்துவுடும்புகராமுத்தமீனுமிருபதுமே." என வருஞ் செய்யுளாலுணர்க. (க)

சந்தங் கமழ்மந் தாரிலத்தேர்
தருக்கோ டிவர்ந்து பொறியளிகா
றளைக்கு முறுக்கு நாண்கழைக்கோ
தண்டங் குழைத்து வளைத்தேற்றி

யிந்தங் கவிகை யமுதநிழ
லீயக் குயில்கள் விருதூத
விசைவா ரிதிப்பே ரிகைமுழங்க
விருண்மால் கரியுஞ் சுகப்பரியுங்
கந்தங் கமழுங் குழற்படையுங்
கடவுள் வசந்த னுடுசூழக்
களித்து வருவோ னொளித்தேகக்
காட்சி தருகட் டழகுடையோய்
முந்துந் தவத்தோர் பணிசரண
முதல்வா முத்தந் தருகவே
முகுந்தன் மருகா சமரபுரி
முருகா முத்தந் தருகவே.

(இ-ள்.) சந்தம் கமழ் மந்தா நிலம் தேர் - சந்தனமணங்கமழும்தென்றற் காற்றாகியதேரில், தருக்கோடு இவர்ந்து-இறுமாப்போடேறி, பொறி அளி கால்தளைக்கு முறுக்குநாண் - பொறியமைந்த வண்டுகளாகிய வில்லின்காலைப் பந்திக்கும் முறுக்கமைந்த நாண்பூட்டிய, கழை கோதண்டம்-கரும்பாகிய வில்லினை, குழைத்து வளைத்து ஏற்றி - வளைத்து மலரம்பேறிட்டு,இந்து அம் கவிகை அமுதநிழல் ஈய-சந்திரனாகிய அழகியதவளக்குடை அமுதம்போலும்தண்ணிய நிழலையோர்பால் தரவும், குயில்கள் விருது ஊத-குயில்கள் ஓர்பால் விருது ஊதவும், இசைவாரிதி பேரிகைமுழங்க - ஒலிக்கும் கடலாகிய பேரிகை ஓர்பால் முழங்கவும், இருள்மால் கரியும் சுகப்பரியும் - இருளாகிய பெரியயானையும் கிளியாகிய குதிரையும், கந்தம் கமழும் குழல்படையும் - வாசனைவீசும் கூந்தலையுடைய பெண்களாகிய சேனையும், கடவுள் வசந்தன் சூழ - தெய்வத்தன்மையுடைய வசந்தனென்னுந் தோழன் ஓர்பால் சூழவும், களித்துவருவோன் ஒளித்து ஏக காட்சி தரு கட்டழகு உடையோய் - செருக்கிப் போர்க்கு வரு மன்மதன் அழகிற்குப் புறங்கொடுத்து மறைந்தோட்டெடுக்க அடியவர்க்குக் காட்சிதந்தருளும் பேரழகையுடையவனே, முந்தும் தவத்தோர் பணி சரணமுதல்வா - முற்பட்ட தவத்தினையுடைய முனிவர்கள் வணங்குந் திருவடியையுடைய முதல்வனே, முத்தந்தருக - திருவாய்முத்தந் தந்தருள்க.

சந்தனப்பொதியிற் றோன்றுதலால் சந்தங்கமழ் மந்தாநிலம் எனவும், திருமால் முதலியதேவர் அழகிற்கௌமாரபருவமும், சிவபெருமான் அழகிற் குமாரபருவமும், இலக்ஷுமிமுதலியோர் அழகில் மடந்தைப்பருவமும், உமையம்மையழகில்மங்கைப்பருவமும் உடையவர் எனவும், அழகிற்சிறந்த இவர்களிருவரினும் குமாரக்கடவுள் அழகிற் பாலப்பருவமுமுடையரெனவுஞ் சுருதி கூறுதலால் களித்துவருவோனொளித்தேகக்காட்சி தருகட்டழகுடையோய் எனவும், தவத்தில் மேம்பட்டது சிவஞானமாதலால் முந்துந்தவத்தோர் எனவுங்கூறினர்.

தென்றற்காற்று தேரும், வண்டு நாணும், கரும்பு வில்லும், சந்திரன் குடையும், குயில் சின்னமும், கடல் முரசும், அந்தகாரம் யானையும், கிளி குதிரையும், பெண்கள் சேனையும், வசந்தன் தோழனுமாதலே.

“ இரதம்வசந்தம்மதயானையிரவாம்பூவைபசுங்கிள்ளை
புரவிமங்கையர்வாசம்பொலியுமிணர்மென்பூஞ்சோலை
பரவுபடைவீடாமுரசுபரந்தகடலாங்கொடிமகரம்
உரவு மன்றி லவன்தூளமுயர்வெண்குடையிந்தனங்கனுக்கே.

பதிக்குமதனன்பரிக்கலனைபகருநறும்பூமல்லிகையாம்
கதிக்குமிலஞ்சிகடிவாளம்கன்னல்சல்லிபுன்னையம்பூ
மதிக்குமவன்மெய்யிடுகவசம்மலிந்தவிளாதோழன்வசந்தன்
விதிக்கும்பினவன்றேர்ப்பாகன்விரும்புமதுகனெனலாமே.

கதிப்பூம்பச்சைத்தண்டும்வெறிகமழும்பசியமாந்தண்டும்
மதுக்கொண்டலரவழிந்தொழுகும்வாசமுறுமல்லிகைத்தண்டும்
துதிக்குங்கருப்பந்தண்டுமெளிசூழுங்கமலப்பூந்தண்டும்
விதுத்தண்குடையானெடுத்தபஞ்சவில்லென்றுணர்ந்தோர்சொல்வாரே.

பிச்சிக்கொடியும்மடல்விளக்கும்பிரசநறுந்தாமரை நூலும்
மெச்சப்பொலியுமணம்வீசும்வெட்டிவேருங்கார்வண்டும்
பச்சைப்பசுமாந்தளிரொனவும்பகர்ந்ததனுக்களை ந்தினுக்கும்
மச்சக்கொடியோன்பூட்டியநாண்வகையைந்தென்பர்மதியுடையோர்.

சொன்னகடைக்கால்மதிக்கிரணஞ்சுரிமென்குழலார்பூசுவன
உன்னும்வதுவையவன்பரிசையோங்கித்தளிர்க்கும்வெருகிலையாம்
சின்னமிசைப்பூங்குயில்விளம்பும்தேரினுருள்சந்தனச்சாணை ” — என வரும் உசிதசூடாமணியா லுணர்க. (உ)

பெருகுங் கருணை சுரந்தொழுகும்
பிராட்டி பசும்பொற் குடத்தமுதும்
பிறங்கு மறுவ ரீராறு
பெரிய குரும்பை யொழுக்கமுதுங்
கருகுஞ் சகரர்க் கருள்புரிந்து
கடலி ன்கடு கிழித்தொழுகுங்
கங்கைப் பெருந்தா யாயிரமாங்
கனிவாய் முத்த மிடுமமுதுங்
குருகின் சிறையும் பிறைக்கொழுந்துங்
கூடத் திகழ்செஞ் சடைப்பெருமான்
குமுதத் திருவாய் முத்தமிடக்
கொழிக்கு நறவு மோனசுக

முருகுந் ததும்புங் கனிவாயான்
முத்தந் தருக முத்தமே
முகுந்தன் மருகா சமரபுரி
முருகா முத்தந் தருகவே.

(இ - ள்.) பெருகும் கருணை சுரந்து ஒழுகும் பிராட்டி பசும்பொன் குடத்து அமுதும் - ஒட்டெடுக்கும் திருவருள் ஊற்றுச்சுரந்து ஒழுகும் உமையம்மையின் பசியபொற்குடம்போன்ற தனத்தினின்றொழுகு மமுதமும், பிறங்கும் அறுவர் ஈராறு பெரிய குரும்பை ஒழுக்கு அமுதும் - விளங்குங் கார்த்திகையாகிய அறுமீன்களுடைய பன்னிரண்டென்னும் எண்வாய்ந்த பெருமையுடைய தென்னங் குரும்பைகள்போன்ற தனங்கள் சுரக்குமமுதமும், கருகும் சகரர்க்கு அருள் புரிந்து கடலின் அகடுகிழித்து ஒழுகும்-வருத்தத்தால் நிறங் கருகிய சகரர்க்கருள்செய்து கடலின்வயிற்றைக் கிழித்துச்செல்லும், கங்கைப் பெருந்தாய் ஆயிரம் ஆம்கனிவாய்முத்தம் இடும் அமுதும் - கங்கையென்னும் பெரியதாயானவள் தனது கோவைக்கனிபோன்ற ஆயிரம்வாய்களால் முத்தமிடும்படியான வமுதமும், குருகின்சிறையும் பிறைக்கொழுந்தும் கூட திகழ் செஞ்சடை பெருமான் - கொக்கின் வடிவமாகவந்த பகனென்னும் அசுரனது இறகும் இளஞ்சந்திரனும் நிறத்தாற்பகையின்றி விளங்கும் செவந்தசடையையுமுடையவிறைவன், குமுதம் திருவாய்முத்தம் இடகொழிக்கும் நறவும்-ஆம்பல்போன்ற திருவாயால் முத்தமிடச் சொரியுந்தேனும், மோனசுகம் முருகும் ததும்பும் கனிவாயால் முத்தந்தருக முத்தமே - மௌனசுகமாகிய தேனும் ததும்பாநின்ற கோவைக்கனிபோன்றதிருவாயால் முத்தந்தரக்கடவாய் முத்தந்தரக்கடவாய்,

கார்த்திகை நட்சத்திரம் அறுமீன்வடிவமா யிருத்தலால் அதற்கு அறுமீனென வோர்காரணப் பெயருளதாதலால் அறுவரெனவும், அவ்வாறு பெண்களுஞ் சிவபெருமானாணையால் சரவணப்பொய்கையில் ஆறு திருவுருவாயமைந்த முருகப்பெருமானுக்குப் பால்சுரந்தூட்டினமையால் ஈராறுபெரியகுரும்பை யொழுக்கமுது எனவும், பாதலவுலகிலுள்ள கபிலமுனிவர் கோபத்தால் வெந்து நீறாயின தனது மூதாதையராகிய பதினாறாயிரம் சகரர்களையும் நரகிலழுந்தாமல்கதியிலுய்த்தற் பொருட்டுஐயாயிரவருடம் ஆகாயகங்கையைக்குறித்துத் தவஞ்செய்தமையின், அக்கங்கை பாதலத்திற்புகுந்து அவர்கள் சாம்பலிற்படிந்து நிலவுலகின்மேல் வந்து கடலிற் கலந்தமையால் கருகுஞ் சகரர்க்கருள்புரிந்து கடலி னகடுகிழித்தொழுகுங் கங்கை எனவும், சிவபெருமான் திருக்கண்கள் சிந்தியதீப்பொறிகளைத் தீக்கடவுள் சுமக்கலாற்றாது கங்கையிலுய்க்கக் கங்கை சரவணத்துய்த்தமையால் பெருந்தாய்எனவும், கொக்கினிறகும் இளஞ்சந்திரன் சுடர்க்கொழுந்தும் வெண்ணிறத்தில் வேறுபாடில்லாமையால் கூடத்திகழெனவும், பொன்னிறம்வாய்ந்த சடையின் செந்நிறத்தோடு கலந்து விளங்குதலால் பொருண்முரணணி தோன்றச் செஞ்சடை யெனவும், சிவோகம்பாவனையுற்றோர்க்குச் சிவபோகம் தேன்போலு மதுரித்தெழுதலால்

போனசுக முருகுததும்புமெனவும், சுவைதரும் பொருள்களில் பாலுந்தேனுஞ் சிறந்தனவாதலால் அவைகள் ஒருசேரவமைந்தகனி அரியகனியாதலால் ததும்புங் கனியெனவுங் கூறினர்.

அறுமீன் வடிவமாகிய கார்த்திகை ஆறு பெண்களாய்ப்பால்சுரந்தூட்டினமையை,

"மறுவறுமாரலாகுமாதர்மூவிருவர்தாமு
நிறைதருசரவணத்தினிமலனையடைந்துபோற்ற
வுறுநர்கடமக்குவேண்டிற்றுதவுவானாதலாலே
யறுமுகவொருவன்வேறாயறுசிறுருவங்கொண்டான்.

ஆறுருவாதலோடுமறுவருமகிழ்ந்துவேறு
வேறுதாமெடுத்துத்தத்தம்வியத்தகுதுணைமென்கொங்கை
யூறுபாலமுதமன்னோற்குதவலுமுறுவல்செய்து
மாறிலாவருளாலாற்றவருந்தினன்போல்வுண்டான்

தீக்கடவுள் சுமந்து கங்கையிலுய்த்ததை.

சேர்த்தலுமொருப்தந்தீயின்பண்ணவன்
வேர்த்துடல்புழுங்குறமெலிவிற்றுங்கியே
பேர்த்தொருபதமிடப்பெறாதுவல்லைபோ
யார்த்திருகங்கையினகத்துய்த்தானரோ"—எனவரும் கந்தபுராணத்தாலுணர்க. (௫)

வேறு.

பனியிற் குறிய துளிதூற்றும்
பரவைத் தரங்க மெடுத்தெறிந்த
பணிலத் திரளு மிரசிதப்பூம்
பணிச்செப் பேய்ந்த முரணினமு
னனிமுற்றியசூ லுளைந்துசொரி
னளிவெண் டரளத் திடர்தோறு
னவைதீர் பவள வண்டல்வளை
நடுவும் படவர் மடமகளி
ரினிதுற் றிவர்ந்து பனைப்பாளை
யிருந்த கலச மதுவருந்தி
யிணர்க்கே தகையும் புனைப்போது
மெடுத்து முடித்துக் களித்தாடு
முனிவர் குழாங்கள் புகழ்போரூர்
முதல்வா முத்தந் தருகவே

முத்தார் கொத்தே யனாதிவரு
முத்தா முத்தந் தருகவே.

(இ-ள்.) பனியில் குறிய துளி தூற்றும் பரவை தரங்கம் எடுத்து எறிந்த-பனித்துளிபோலச் சிறிய துளிகளை வீசும் கடலின் அலைகளெடுத்துவீசிய, பணிலம் திரளும் இரசிதம் பூ பணி செப்பு ஏய்ந்த முரண் இனமும் - சங்கின் கூட்டங்களும் வெள்ளியால் பணிதியமைந்த வழகிய செப்பினையொத்த இப்பியின் கூட்டங்களும், நனி முற்றிய சூல் உளைந்து சொரி நளி வெள்தரளம் திடர்தோறும்-மிகவும் முதிர்ந்த கருப்பத்தால் வருந்திப் பெற்ற தண்ணிய வெண்ணிறம்வாய்ந்த முத்துக் குவையல்களாலமைந்த திடருகள்தோறும், நவை தீர் பவளவண்டல் வரை நடுவும் - புழுக்கடி முதலிய குற்றத்தினின்று நீங்கிய பவளக் குப்பல்கள் செறிந்த வண்டலாகிய மலைகளினடுவும், படவர் மடமகளிர் இனிது உற்று இவர்ந்து பனை பாளை இருந்த கலசம் மது அருந்தி- நெய்தனிலமாக்கள் பெற்ற இளம்பெண் சிறூர்களினிதாகப் பொருந்தி யேறிப் பனையின் பாளையில் கோப்புண்டு கிடந்த கலசத்தில் நிறைந்த மதுவினைப்பருகி, கேதகை இணரும் புன்னைபோதும் எடுத்து முடித்து களித்து ஆடும் -தாழையின் பூங்கொத்தையும் புன்னையின் கிண்கிணிவாய்கொள்ளு மலரையுங்கொய்து தமது குழலிற் செருகி மகிழ்ந்து விளையாடும்,முனிவர் குழாங்கள் புகழ்போரூர் முதல்வா முத்தம் தருகவே - முனிவர் கூட்டங்கள் புகழ்ந்துபோற்றும் திருப்போரூரில் வாழு முதல்வனே முத்தந்தரக்கடவாய்,முத்து ஆர் கொத்தே அனாதிவரும் முத்தா முத்தம்தருகவே - முத்தாலமைந்த வடக்கொத்தே அனாதியாயுள்ள முத்தனே முத்தந்தரக்கடவாய்,—

அடியவர்க்குப் பொலிவுசெய்து நிற்றலால் முத்தார்கொத்தே என்றார். அனாதிமுத்தன் - தனக்கோர் முதலில்லாத மலரகிதமாயுள்ளவன். அநாதி முத்த னெனவரின் பிறப்பில்லாத மலரகிதனெனக் கொள்க. அநாதி - ஞாதியரில்லாமை. சங்குகளு மிப்பிகளுந் தந்த முத்துகள் திடர்களாகவும், பவளங்கள் மலைகளாகவும் அமைந்துகிடக்க, அதன்மேல் நெய்தனிலப்பெண்களேறி மதுவருந்தி மலர்முடித்து விளையாடும் போரூரெனக் கூறுதலால் வீறுகோளணி (ச)

## வேறு.

பூனத மாழைக் கிண்கிணி பலவும்
பொலிவொடு கணகணெனப்
புனிதத் தண்டையி னொலிகல கலெனப்
பொற்றொடி நிரையதிர
மேனகு மரைவட மோசை தழைந்திட
வியனவ மணிமாலை
விரவி யலம்பக் குண்டல மொளிவிட
மிளிர மணிச்சுடிகை

யான முடப்பட மாயிர முந்தள்
ளாடத் தளர்நடையிட்
டம்மை செவிக்கின் சுவைபெற மழலை
யரும்பிழி சொரிவாயான்
மோன சுகந்தரு ஞானப் பிள்ளாய்
முத்தந் தந்தருளே
முத்தமிழ் நற்சமரப்பதி நாயக
முத்தந் தந்தருளே.

(இ-ள்.) பூணதம் மாழை கிண்கிணி பலவும் பொலிவொடு கண கண என - பொன்னாலமைந்த சதங்கைகள் பலவும் விளக்கத்தோடு கண கணென ஒருபா லொலிக்கவும், புனிதம் தண்டையின் ஒலி கலகல என - குற்ற நீங்கிய பணிதியமைந்த தண்டையினொலி கலகல என ஒருபா லொலிக்கவும், பொன் தொடி நிரை அதிர - பொன்னாலமைந்த தொடியின் வரிசைகள் ஒருபால் முழங்கவும், மேல் நகும் அரை வடம் ஓசை தழைந்திட - மேலேநின்று விளங்கும் அரைவடத்தின் ஓசையானது ஒருபால் தழையவும், வியன் நவமணி மாலை விரவி அலம்ப-ஒளிபரந்த மாணிக்கமுதலிய நவமணிகள் பதித்தமாலைகள் தம்முட்கலந்து ஒருபா லொலிக்கவும், குண்டலம் ஒளி விட-திருச்செவியி லணிந்த குண்டலங்கள் ஒருபால் ஒளிவீசவும், மிளிர் அமணிச் சுடிகை ஆன முடப்பட ஆயிரமும் தள்ளாட தளர் நடை இட்டு-விளங்கும் அவ்வாதிசேடனது மாணிக்கங்களுள்ள உச்சிக்கொண்டையமைந்த வளைந்த ஆயிரம் படங்களுமசையத் தளர்ந்து நடக்கும் இளநடையிட்டு, அம்மை செவிக்கு இன் சுவை பெற மழலை அரும்பிழி சொரி வாயால்-உமையம் மையினது திருச்செவியாகிய திருவாய்க்கு இனிய சுவைதோன்ற மழலைச் சொல்லாகிய தேனைச்சொரியும் உனது திருவாயால், மோன சுகம்தரு ஞானப்பிள்ளாய் முத்தம்தந்தருள்-அடியவர்க்கு மௌனசுகத்தைத் தந்தருளும் அருண்ஞானமுள்ள பிள்ளைமைப்பருவமுடையாய் முத்தந்தந்தருளாய், முத்தமிழ் நல் சமரப்பதி நாயக முத்தம் தந்தருள்-இயலிசைநாடகம் என்னு முத்தமிழ்வழங்கும் நல்ல சமரபுரியிலெழுந்தருளிய நாயகனே,—

பிள்ளைமைப்பருவத்திற்குரிய தன்மையை யெடுத்துக்கூறுதலில் நிலவுலகைத்தாங்கும் ஆதிசேடன் ஆயிரம்படங்களும் தளர் நடைக்காற்றாது அசைந்து நடுங்கியதென்பார் மிளிர மணிச்சுடிகை யானமுடப்பட மாயிரமுந்தள்ளாடத்தளர் நடையிட்டு எனக்கூறினார். (ரு)

இருண்மைப் படலங் கெடநூக் குஞ்சுட
ரொழின்மா ணிக்கவரை
யீரைந் துடனக் கிரிவந் தீரா
றிணைவுறு பரிசுதெனக்

கருடத் துவசனு மறிவரி யானணி
　　கடகத் தோடழுவிக்
கறையறு முழுமதி யொருபத் தொன்று
　　கலந்து மகிழ்ந்துறல்போ
லருண்மொய்த் தொழுகு முகத்தொடுமுகம்வைத்
　　தழகியமழலைசொலி
யைய னுளங்களி பொங்குற முத்த
　　மடிக்கடி தருவாயான்
முருகுற் றெழுநீ பத்தொடை யழகா
　　முத்தந் தந்தருளே
முத்தமிழ் நற்ச மரப்பதி நாயக
　　முத்தந் தந்தருளே.

(இ-ள்.) இருண்மை படலம் கெட நூக்கும் சுடர் எழில் மாணிக்கவ ரை ஈரைந்துடன் - இருட்படலங்கெட வோட்டும் ஒளிவாய்ந்த தோற்றத்தை யுடைய மாணிக்க மலைபத்தோடு, அக்கிரி ஈராறுவந்து - அம்மாணிக்க மலை ப ன்னிரண்டுவந்து, இணைவுறு பரிசுஅது என்ன-தம்முள் பிணையுந்தன்மைபோ ல, கருடத்துவசனும் அறிவரியான் அணி கடகத்தோள் தழுவி - கருடத்துவ சத்துடைய திருமாலும் அறிதற்கரிய இறைவனது கடகமணிந்த திருத்தோள் களைத்தழுவி, ஒருபத்தொன்று கறை அறுமுழுமதி கலந்து மகிழ்ந்து உறல்போ ல் - பதினொரு குற்றமில்லாத பூரணசந்திரர்கள் தம்முட்கலந்து அளவளா வல்போல், அருள்மொய்த்து ஒழுகுமுகத்தொடு முகம்வைத்து - திருவருள் க னிந்தொழுகும் இறைவனது ஐந்து திருமுகங்களோடு தனது ஆறு திருமுகங் களை வைத்து, ஐயன் உளம் களி பொங்குஉற அழகிய மழலைசொல்லி முத்தம் அடிக்கடி தருவா யால்- அவ்விறைவனது திருவுளங்களிகூர அழகிய மழலைச் சொல்லைக் கூறித் திருமுத்தத்தை அடிக்கடி தந்தருளுந்திருவாயால், முருகு உற்று எழு நீபத்தொடை அழகா முத்தம் தந்தருளே-தேன்சுரந்தெழுங்கடப் பமாலையை யணிந்த கட்டழகுடையாய் முத்தந்தந்தருளாய்,—

சிவபெருமான் பத்துத்திருத்தோள்களும் முருகக்கடவுள் பன்னிரண் டு திருத்தோள்களும் செந்நிறமுடைமையால் பத்து மாணிக்க மலைகளோடு பன்னிரண்டு மாணிக்கமலைகள்வந்து தம்முள்அளவளாவல்போலத் தமதுதிரு த்தோள்களால் தழுவினானென்பார், மாணிக்க வரையீரைந்துட னக்கிரிவந்தீரா றிணைவுறு பரிசதெனக்கருடத்துவசனு மறிவரியானணிகடகத் தோடழுவி எனவும், களங்கமில்லாத பதினொரு பூரணசந்திரர்கள் உளரேல்அவர்கள் த ம்முட்கூடி அளவளாவல்போலச் சிவபெருமான் ஐந்து திருமுகங்களோடுதம து ஆறு திருமுகங்களையும் ஒருசேரவைத்துத்தழுவினா னென்பார் கறையறு முழுமதி யொருபத்தொன்று கலந்து மகிழ்ந்துறல்போல்- அருண்மொய்த்தொ

முகு முகத்தொடுமுகம்வைத்து எனவுங் கூறினர். இது பண்புந் தொழிலும்ப ற்றி வந்த வுவமையணி. அது பகுதிப்பொருள்விகுதி. (கூ)

பூவே பூவிற் பரிமள மேயப்
பூநிறை சுவைநறவே
பொங்குங் கடலே கடலி லுதித்தெழு
புனிதத் தெள்ளமுதே
காவே காவிற் கொஞ்சும் பஞ்ச
வனக்கட வுட்கிளியே
கண்ணே கண்ணுறு பாவாய் பூவாய்
கனியே கனிரசமே
தேவே தேவர் சிரோமணி யேயென்
சீருயி ரேயுயிரிற்
செம்பொரு ளேயரு ளேமுழு மணியே
மணியிற் றேசிகமே
மூவா மறையே மறையின் பொருளே
முத்தந் தந்தருளே
முத்தமிழ் நற்சம ரப்பதி நாயக
முத்தந் தந்தருளே.

(இ-ள்.) பூவே பூவின் பரிமளமே - மலரோ மலரின் மணமே, அப் பூ நிறை சுவை நறவே - அம்மலரில் நிறைந்த சுவைகனிந்த தேனே, பொங்கும் கடலே - பரந்து விளங்குங் கடலே, கடலில் உதித்து எழு புனிதம் தெள் அமுதே - கடலிற் றோன்றிநோய்நீக்கும்தெள்ளிய அமுதமே, காவே காவில் கொஞ்சும் பஞ்சவன்னம் கடவுள் கிளியே - இளஞ்சோலையே இளஞ்சோலையில் இன்சொற் பயிலும் தெய்வத்தன்மை வாய்ந்த பஞ்சவர்ணக் கிளியே, கண்ணே கண் உறு பாவாய்-கண்களே கண்களிலமைந்த பாவையே, பூவாய் கனியே கனிரசமே-பொலிவுவாய்ந்த கனியே அக்கனியின் சாறே,தேவே தேவர் சிகாமணியே-தெய்வமே அத்தேவர்கள் சூடாமணியே, என் சீர் உயிரோ உயிரின் செம் பொருளே அருளே-எனது சிறந்த வுயிரோ அவ்வுயிரின் தற்போதவொழிவிற் றோன்றுந் திருவருளே,முழுமணியே மணியின் தேசிகமே—சேகுபற்றிய மாணிக்கமே அம் மாணிக்கத்திற் றோன்றும் ஒளியே,மூவாத மறையே மறையின்பொருளே - கெடாத அனுபூதிமொழியே அவ்வனுக்கிரகமொழியினுட்கிடையே முத்தந் தந்தருளே,—

அடியவரிடத்து மெல்கிய குணமும் தண்ணளியு முடையானென்பார் பூவே எனவும், பூவும் பூவின்மணமும் அநனியமாய் நிற்றல்போல அடியவரிடத்து அநனியமாய் நிற்பா னென்பார் பூவின்மணமே எனவும், அவ்வடியவ

ருளத்தில் என்றுந் தித்திக்குஞ் சுவை தருவோனென்பார், பூநிறை சுவைநற வே எனவும், அவ்வடியவர்க்குச் செய்யுங் கருணைப்பெருக்கில் என்றுஞ் சுவறு தா னென்பார் பொங்குங்கடலே எனவும், உடற்குற்றமாகிய நஞ்சா திரை மூப் புகளை அமுதமாற்றுதல்போல உயிர்க்குற்றமாகிய பிறவியை அடியவர்க்கொழி ப்பானென்பார் கடலி னுதித்தெழுபுனிதத் தெள்ளமுதே எனவும், தம்மை யடைந்தோர்க்குக் கோடை வெப்பொழித்துத் தண்ணிழல்செய்யுந் தன்மை போலத் தன்னையடைந்த வடியவர்க்குத் தாபத்திரயத்தை யொழிக்கத் தண் ணளிசெய்வானென்பார் காவேஎனவும்,அத்தண்ணளியை யடைந்த யடியவர் க்கு அருண்மொழி வைப்பானென்பார் காவிற் கொஞ்சும் பஞ்சவனக்கடவுட் கிளியே எனவும், கண்கள் தீநெறியை விலக்கி நன்னெறியைப் புலப்படுத்திச் செலுத்துதல்போல் அடியவர்க்குப்புன்சமயத் தீநெறியைவிலக்கி முத்தியடை தற்குச் சோபானமாகிய சரியாதிகளாகியநன்னெறிகளிற்செலுத்தும்மெய்ச்சம யத்தில் செலுத்துவானென்பார் கண்ணே எனவும்,அக்கண்களில் அபேதமாய் நின்று ஒளிவிளக்கும் பாவைபோல அடியவர்க்கு அச்சரியாதி நன்னெறிகளி னுண்மையைத் தோற்றரவு செய்வானென்பார் கண்ணுறுபாவாயெனவும், அ டியவர்க்குப் பேரின்பந்தருதலால் பூவாய் கனியே எனவும், இன்பந்தருதற்கு ரசங்கருவி யாதல்போல அப்பேரின்பந் தருதற்கு முதல்வனு யுள்ளானென் பார் கனிரசமே எனவும், அவர்களுக்குத் தேவனென்பார் தேவே எனவும், ஏ னையோர் கொள்ளுங்கடவுளர்க்கு ஒளிதருவோனென்பார் தேவர்சிகாமணியே எனவும், பசுவின்பால் அதனுடலெங்கும் விரவிநிற்பினும் அதன்மடியில் நி லைபெற்று நிற்றல்போல ஏனைய வுயிர்கள்தோறும் விரவி நிற்பினும் அடியவர் களுயிரில் விரவி நிற்றலால் சீருயிரோ எனவும், ஓர் சொல்லுக்கு ஆக்கப்பொரு ளும்,குறிப்புப்பொருளும்போலாது நேரே பொருடந்துநிற்பது செம்பொருளா தலில் அவ்வுயிர்க்கு நேரே யொளிதந்து நிற்றலால் உயிரின் செம்பொருளே எனவும், அவ்விளக்கமே திருவருட்பதிவாதலால் அருளே எனவும், அத்திரு வருட்பதிவையுடையஅடியவர்க்குப்பெருஞ்செல்வமாயுள்ளானென்பார்,முழு மணியே எனவும், அச்செல்வத்துக் கோர்விளக்கமா யுள்ளானென்பார் மணி யின்றேசிகமே எனவும், அவ்வடியவருய்தற்கு அனுபூதிமொழியாய் நின்று னென்பார் விசேடந்தந்து மூவாமறையேயெனவும், அவ்வனுபூதி மொழியின் உட்கிடையுந் தானுயுள்ளானென்பார் மறையின்பொருளேஎனவுங் கூறினர்.

ஆடக நன்கத் தரியால் வேளுக்
கம்பு திருத்துவபோ
லலவன் குறுமுட் டாள்கொடு குவளையொ
டம்புய விதழ்கிள்ளு
மோடையி னீடுங் கவையடி மேதிக
ளூறுகுட மடியில்வரா
லுகளி யடிக்கடி முட்டக் கன்றெனை
வுள்ளிச் சொரிவெள்ளம்

பீடுறு மாலைச் சாடிகொ ளாதெழு
பிரச வெளத்துடனே
பெருகிக் கதலியின் மஞ்சளொ டிஞ்சி
பெருங்கழை செஞ்சாலி
மூடி நிறைக்குந் தொண்டைந ளுடா
முத்தந் தந்தருளே
முத்தமிழ் நற்சம ரப்பதி நாயக
முத்தந் தந்தருளே.

(இ-ள்.) ஆடகம் நன்கத்தரியால் வேளுக்கு அம்பு திருத்து வபோல்- ஆடகமென்னும் பொன்னாலமைந்த நல்ல கத்தரிகையால் மன்மதனுக்கு அம்பைத்திருத்துதலைப்போல, அலவன் குறு முள் தாள் கொடு குவளை யொடு அம்புய இதழ்கிள்ளும் ஓடையில்-நண்டுகள் சிறியமுள்ளமைந்தகாலால் குவளை மலரோடு தாமரைமலரி னிதழ்களைக்கிள்ளும் நீரோடையில், நீடும் கவை அடி மேதிகள் உறு குடமடியில் வரால் உகளி அடிக்கடி முட்ட - நீண்டபிளவு பட்டகால்களையுடைய எருமைகளது குடம்போல அமைந்த திரண்டமடியில் வரால்மீன்கள் தாவி அடிக்கடிமுட்டுதலால், கன்று என உள்ளி சொரிவெள்ளம் - அவற்றைக் கன்றுகளெனக் கருதிச்சொரியும் பால்வெள்ளமானது, பீடு உறும் ஆலை சாடி கொள்ளாது எழுபிரச வெள்ளத்துடனே பெருகி - பெருமை வாய்ந்த ஆலையின்கீழமைந்த சாடியின்வாய் கொள்ளாது உவட்டெடுத்தோடிய தேன்வெள்ளத்துடனே பெருக்கெடுத்து, கதலியின் மஞ்சளொடு இஞ்சி பெருங் கழை செஞ்சாலிமூடி - வாழையும் மஞ்சளும் இஞ்சியும் பெரிய கரும்பும் செந்நெற்பயிருமாகிய இவைகள் தோன்ருமல், தொண்டை நல்நாடா முத்தம் தந்தருள் - வயலினை நிறைக்கும் தொண்டைநாட்டையுடையவனே திருமுத்தந்தந்தருளாய்,—

பாலுந்தேனும் உவட்டெடுத்து வயலினை நிறைக்குமெனக் கூறுதலால் மிகுதிநவிற்சியணி. (அ)

மாலைப் பொழுதிற் பெடையொடு சிறையளி
வனசக் கோயில்புக
வளர்மதி யமுத கரங்கொண் டிதழ்வா
சக்கத வதுமூடக்
காலைப் பரிதி கரத்தா லந்தக்
கதவுதி றந்துவிடுங்
கடிமல ரேரிப் பெருமத கெழுநீர்
கதிர்வயல் புகவெதிர்போஞ்

சேலைச் சினைபடு களிறு துரத்தச்
செறிநில விறிசெனவே
சிதறிக் கன்னற் காடு முரிப்பத்
தேன்முத் தொடுசொரியு
மூலிச் சுதைநிகர் பாலிநன் னாடா
முத்தந் தந்தருளே
முத்தமிழ் நற்சம ரப்பதி நாயக
முத்தந் தந்தருளே

(இ-ள்.) மாலைப்பொழுதில் பெடையொடு சிறை அளி வனசம் கோயில் புக. மாலைக்காலத்தில் பெண் வண்டோடு சிறையையுடைய ஆண்வண்டுகள் தாமரையாகிய கோயிலிற்குடியேற, வளர் மதி அமுத கரம் கொடு இதழ் வாசம் கதவு மூட - பூரணசந்திரன் தனது அமுதகிரணமாகிய கையால் அத்தாமரைகளின் இதழாகிய கதவினைமூட, காலைப்பரிதி கரத்தால் அந்தக் கதவுதிறந்து விடும் கடிமலர் ஏரி-காலையிலுதயஞ்செய்யுஞ் சூரியன் தனது கிரணமாகிய கையால் அந்த இதழ்க் கதவினைத் திறந்துவிடா நின்ற வாசமிக்க தாமரைகள் நிறைந்த ஏரியின்கண், பெருமதகு எழு நீர்கதிர் வயல்புக எதிர்போம் சேலை - பெரியமதகினின்றுஞ் செல்லும் நீர் நெற்கதிர்வாய்ந்த வயலிற் புக அந்நீரைக் கிழித்து எதிர்செல்லுஞ் சேற்கெண்டையை, சினை படு களிறு துரத்த நிலம் செறிவிறிசு என்னசிதறி கன்னல் காடு முரிப்ப-சினைவாய்ந்தகளிறு மீன் துரத்துதலால் நிலத்திற்செறிந்த விறிசென்னுந் தீப்பொறிபோலச் சிதறியோடிக் கருப்பங்காட்டை முறிக்க, தேன்முத்தொடு சொரியும் மூலி சுதை நிகர்பாலி நல்நாடா முத்தந்தந்தருள்-அக்கருப்பங்காடு தேனைமுத்தொடு சொரியாநின்ற ஓடதி யென்னும் மூலிகையையும் அமுதத்தையு மொத்த பாலாறு சூழ்ந்த நல்ல தொண்டைநாட்டையுடையவனே திருமுத்தந் தருவாய்.

சூரிய சந்திரர்களுடைய கிரணங்களுக்குக் கரமென்பது ஓர் பரியாய நாமமாதலால் கையென்னும் பொருள்படக் கரங்கொண்டெனவும், கையாலெனவுங் கூறியது செம்மொழிச் சிலேடையணி. மாலையில் சந்திரகிரணத்தால் தாமரை குவிதலும் காலையில் சூரியகிரணத்தால் அலர்தலும் இயல்பாதலால், வண்டுகள் மாலையில் தாமரைமலராகிய மனையிற்செல்ல, சந்திரன் அதனது இதழாகிய கதவினை மூடினனெனவும், காலையில் சூரியன் தனது கிரணமாகிய கையால் அவ்விதழ்க் கதவினைத் திறந்தானெனவுங் கூறியதால் தொழிலதிசயவணியும், ஓஷதியென்னும் மூலிகையும் அமுதமும் உண்டோர்க்கு நரை திரை மூப்பினைமாற்றி இனிமை பயப்பதுபோலப் படிந்தோர்க்கும் பருகினோர்க்கும் அவை நோய்நீக்கி இன்பந்தருதலால் மூலிச்சுதைநிகர்பாலியெனவுங்கூறினர். மூலிச்சுதை பாலியென்றது பண்புந்தொழிலும் பற்றிவந்த வுவமையணியுங் கலந்துவருதலால் கலவையணி. மூலிகை மூலிஎனவந்தது கடைக்குறை. விறிசு என்பது இக்காலத்தில் புறிசு என வழங்கும். விறிசு என்பது எழுத்து

நிலை மாறியது, நாளிகேரம்-நாரிகேளமெனவருதல்போல. விறிசென்னுங் முத னிலைத்தொழிற்பெயர் ஒரு தீப்பொறியின்மேல் நிற்றலால் ஆகுபெயர். (கூ)

## வேறு.

சிமய மொய்த்தொன் றிமய வெற்பன்
றவப லப்பைம் பிடியனுள்
செறிக ளிப்பண் புறவு ரைக்குஞ்
சில்சொல் கற்குஞ் சிறுகிளா
யமர ருக்கு முனிவ ருக்கு
மடிய வர்க்கு மமுதமே
யவுண ருக்குஞ் சமண ருக்குங்
கொடிய வர்க்கு மனலமே
குமுத நற்பங் கயமு ருக்குங்
குலிக மிக்குஞ் சுதைநறுக்
குலவுகற்கண் டிவையி ருக்கு
மிதழ ளைப்பைங் குழவியே
சமர நற்செம் பதி யருக்கன்
றருக முத்தந் தருகவே
தணிகை வெற்பன் சரவ ணத்தன்
றருக முத்தந் தருகவே

**(இ-ள்.)** சிமயம் மொய்த்து ஒன்று இமய வெற்பன் தவபலம் பைம்பிடி அன்னுள் - சிகரங்கள் நெருங்கியமைந்த இமயமலையரசன் தவபலமாயுதித்த பசிய பெண்யானையையொத்த வுமையம்மை, செறிகளி பண்பு உற உரைக்கும் சில சொல் கற்கும் சிறு கிள்ளாய் - நிறைந்த களிப்பென்னும் பண்பு மிகக்கூறும் சில சொற்களைக்கற்கும் சிறு கிளியே, அமரருக்கும் முனிவருக்கும் அடியவர்க்கும் அமுதமே - தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் அடியவர்களுக்கும் அமுதம்போல்பவனே, அவுணருக்கும் சமணருக்கும் கொடியவர்க்கும் அனலமே - அசுரர்களுக்கும் சமணர்களுக்கும் கொடியவர்களுக்கும் வடவானலம்போல்பவனே, குமுதமும் நல்பங்கயமும் முருக்கும் குலிகமும் மிக்கு- ஆம்பலும் நல்லதாமரையும் முருக்கமலரும் சாதிலிங்கமுமாகிய இவைகளினுஞ் செந்நிறம்வாய்ந்து, சுதை நறு குலவு கற்கண்டு இவை இருக்கும் - அமுதுந் தேனும் விளங்குங் கற்கண்டுமாகிய இவற்றின் சுவை குடியிருக்கும், இதழ் அளை பைங்குழவியே - இதழொடு கூடிய பசியகுழந்தாய், நல் சமர செம்பதி அருக்கன் தருக முத்தம் தருக - நல்லொழுக்கமும் நடுவு நிலைமையும் வாய்ந்த சமரபுரியி லெழுந்தருளிய இளஞ் சூரியன்போல்வாய் தரக்கடவாய் முத்தந்தரக்கடவாய், தணிகை வெற்பன் சரவணத்தன் - தணிகைமலையின்கணுள்

ளாய் சரவணப்பொய்கையில் வசித்தோய்,தருக முத்தம்தருகவே முத்தந்தரக் கடவாய்,

பிள்ளைமைப்பருவத்தில் அன்னைகேட்டுக் களிகூர அப்பிள்ளைக்குச்சில சொல் பயிலுவித்தல் வழக்கென்பார், பிடியனுள் செறிகளிப் பண்புறவுணாக் கும் சில சொல் கற்கும் சிறுகிளாய் எனவும், தேவர்களுக்கும் முனிவர்களுக் கும் அசுரர்கள்செய்யும் இடையூற்றையும், அடியவர்களுக்குப்பிறவியையும் ஒழித்து அருள்புரிவா னென்பார் அமரருக்கும் முனிவருக்கும் அடியவர்க்கும் அமுதமே எனவும், திருமால்முதலியோர் வேண்டுகோளால் ஆறு திருமுகங்க ளையுடைய முருகக்கடவுளாய்ச் சூரபன்மன் முதலிய அசுரர்களை மாய்த்தும்,ஆ ளுடையபிள்ளையாராய்ச் சமணர்களைக் கழுவேற்றியும், தன்னைவழிபடும்நக்கீ ரர் முதலியோர்க்குத் தீங்குசெய்யும் பூதமுதலிய பல்லுயிர்களையழித்தும் நின் றவனென்பார் அவுணருக்கும் சமணருக்கும் கொடியவர்க்கும் அனலமே என வும், ஆம்பலும் தாமரையும் முள்முருக்கும்இங்குலிகமும் ஆகிய இவற்றினும் செந்நிறம் மிகவுமுடையதென்பார் குமுதநறபங்கய முருக்கும் குலிகமிக்கும், எனவும், அமுதமுந் தேனுங் கற்கண்டும் இயற்கையாகவே சுவையுடைய பொ ருள்களாதலின் இயற்கையாகவே சுவையமைந்த அச்செவந்த திருவிதழ்க ளோடு கலந்ததென்பார் சுதை நறுகுலவுகற் கண்டிவையிருக்கு மிதழனைப் பைங்குழவியே எனவும், தாய்மார்க்கு ஆராவின்பமீதூரத் தருவதென்பார் உவகைப்பொருண்மைதோன்ற முத்தந்தருக முத்தமே எனவுங் கூறினர். கு லிகத்தின் இறுதியினின்ற எண்ணும்மை மிக்கென்னும் வினையெச்சத்தினிறு யினின்றது பொருத்தமில் புணர்ச்சி - அளை என்பது முதனிலைத் தொழிற்பெ யராதலால் வருமொழி முதல்வல் லெழுத்து மிக்கது. (௧௦)

முத்தப்பருவ முற்றிற்று.

---

வருகைப்பருவம் நற்றாய் முதலியோர் வருகவென்றழைத்தல் பன்னிரண்டா மாதத்தில் நிகழ்வதாதலால் வருகவென்றழைக்கும் பருவமெனக் கொள்க. வாரானைப்பருவ மெனினு மமையும். வாரானை வருகை.

விரைநறுங் குழலினர் கொங்கைப் பெருங்குவடு
மிகுதடக் கடலுழக்க
வெள்ளைவா ளைக்களிறு கொள்ளுசூன் முகில்பிளிறி
விள்ளக் கிழித்தஃதுறு
நிரைதருங் கந்திக் குடக்கழுத் தறமோதி
நெட்டிலைக் கதலிசாடி
நீடுகன் னற்கா டொடித்துப் பொறிச்சிறைய
நீலவண் டூது கஞ்சத்
திரளொடும் பணைமண்டு நெற்றாளுடைத்திடச்
செறிதரள முகி லாதியிற்
சிந்தப் பெருஞ்சோதி யுமெண்டி லத்தினிற்
றிகழ்கின்ற மருதவேலி
மருவியம் புகழ்கொண்ட சமரபுரி தனினிலவு
மஞ்ஞைவா கனன் வருகவே
மலிபுவன முழுவதுங் கிடுகிடென நொடியில்வலம்
வருகந்த வேள் வருகவே.

(இ-ள்) விரை நறுங் குழலினர் கொங்கை பெருங்குவடு மிகுதடம் கடல் உழக்க - வாசிக்கும் நறுமணங் கமழும் கூந்தலையுடைய பெண்களது தனமாகிய பெரியமலை நீர் நிறைந்த தடாகமாகிய கடலைக் கலக்க, வெள்ளை களிறு வாளை சூல் கொள்ளுமுகில் பிளிறி விள்ள கிழித்து - (அதற் கஞ்சித் தாவிய) வெள்ளிய ஆண் வாளைகள் சூல் முதிர்ந்த மேகங்கள் முழங்கி ஒருபாலொதுங்க அதனைக் கிழித்து, அஃது உறும் நிரைதரும் கந்தி குடம் கழுத்து அற மோதி - அம் மேகமண்டலத்தை யளாவிய வரிசையாயுள்ள கமுகினது குடம்போலத் திரண்ட மிடறு முறியத்தாக்கி, நெடு இலை கதலி சாடி - நீண்ட இலைகளையுடைய வாழைகளை முறித்து, நீடு கன்னல் காடு ஒடித்து - ஓங்கி வளர்ந்த கருப்பங்காட்டை ஒடித்து, பொறி சிறைய நீலவண்டு ஊது கஞ்சம் திரளொடும் - புள்ளியமைந்த சிறகுகளையுடைய கரிய வண்டுகள் மூக்கால் கிளறும் தாமரைமலர்த் திரளோடும், பணை மண்டு நெல் தாள் உடைத்திட - வயலிலுள்ள நெல்லின் தாளை உடைத்து, செறி தரளம் - நெருங்கிய முத்துகளை, முகில் ஆதியில் சிந்த - மேகமுதலிய பொருள்களினின்றுஞ் சிந்த, பெருஞ் சோதி உடு மண்டிலத்தினில் திகழ்கின்ற மருதவேலி - பெரிய கிரணத்தையுடைய நக்ஷத்திரமண்டிலத்தைப்போல விளங்கும்மருதநிலம், மருவி அம்புகழ் கொண்ட சமரபுரிதனில் நிலவும் மஞ்ஞைவாகனன் வருக - பு...

சூழப்பெற்று அழகிய புகழ்வாய்ந்த சமரபுரியில் விளங்கிய மயிலூர்தியையுடைய இறைவனே வரக்கடவாய், மலிபுவனம் முழுவதும் கிடுகிடென நொடியில் வலம்வரு கந்தவேள் வருக - வளம் நிறைந்த வுலகமுற்றும் கிடுகிடென்றதிர நொடிப்பொழுதில் இறைவனைவலம்வந்தவேளே வரக்கடவாய்,

சிவபெருமான் ஓர்கால் திருக்கரத்தில் மாங்கனியை யேந்தியிருக்குங்கால், மூத்தபிள்ளையாரும் இளையபிள்ளையாரும் அருகி லணுகி இக்கனி தரவேண்டுமென்று வினவ, உலகமுற்றும் நொடியில் வலப்வருவோருக்கு இக்கனி யருள்வோமென்றருள,இளையபிள்ளையார் மயில்மேல் ஏறிவலம்வந்தன ரென்பது நூல்வரலாருதலால் மலிப்புவனமுழுவதுங் கிடுகிடென நொடியில் வலம்வருகந்தவேள் என்ருர். 'கருமிடற்றுக் கடவுளைச் செங்கனி வேண்டி' எனக் கல்லாடத்தில் வருதல் காண்க.உடைத்திட செய்தெனெச்சத்திரிபு. மேகத்திலும், கமுகின்கழுத்திலும், வாழையிலும், கரும்பிலும், நெல்லின் ருளிலும், முத்தங்க ளுளவாதலால், பெண்கள் கொங்கை தோய நீராடுந் தடாகத்தில் அஞ்சி யெழுந்த ஆண்வாளைகள் மேலே தாவி மேகத்தைக் கிழித்துக் கமுகின் கழுத்துமுறியத் தாக்கி, வாழையை முறித்துச் கருப்பங்காட்டை யொடித்துத் தாமரை மலரையும் நெல்லின் ருளையுஞ் சிதைத்தலால் அவற்றி னின்றும் முத்துக்கள் சிந்தியதென்பார் செறிதரள முகிலாதி யிற்சிந்த எனவும், அம்முத்துகளால் விளங்கும் மருதநிலம் நட்சத்திரமண்டிலம்போல விளங்கியதென்பார்உடுமண்டிலத்தினிற் றிகழ்கின்ற மருதவேலி எனவுங் கூறினர். முகிலாதியில்என்றது முன்னர் முத்துப்பிறப்பிடங்கூறிய செய்யுளாலுணர்க.இதுமிகுதி நவிற்சியணி. கந்தன் முருகக்கடவுளுக்கே யுரிய திருநாமமாதலால் கந்தவேள் என்பது வேள் என்னும் பொதுப்பெயரை விசேடித்துவந்த இருபெயரொட்டுப் பண்புத்தொகை. மஞ்ஞைவாகனன், கந்தவேள் அண்மைவிளி. கந்தன் - ஆறு திருவுருவங்களும் ஒருருவாகத் திரண்டு நின்ருேன் என்னும் பொருள்மேனிற்றலால் காரணப்பெயர். இதனை, — "சேயவன் வடிவ மாறுந் திரட்டிநீ யொன்ருச் செய்தா - யாயத ஞலே கந்த ஞமெனு நாமம் பெற்ருன், எனக் கந்தபுராணம் திருவிளையாட்டுப்படலத்தில் வருதல் காண்க, (கக)

பொன்னஞ் சிறைப்பேடை யன்னங் களிப்போடு
புனலாட நிழல்கண் டுதன்
புகலாவி யின்சேவ லுடனாடி மாலையம்
பொழுதிற் கரந் துறைதரத்
துன்னுறு மடற்கே தகைத்துணை வெள்ளிதழ்த்
தூயகஞ் சக்கு ழுவினை
சுரிமுகச் சங்கினைத் திரையெறியு நித்திலத்
தொகுதியைச் சூலிப் பியைப்
பன்னுநா ளைத்திரளை நாடிப் பசும்புனைப்
பஞ்சரத் திடைகண் டுதன்

பவளவா யதின்வாய் மடுத்தருக ணைத்துப்
பரிந் ததனின் முனிவகற்றி
மன்னுந் தருக்கொடு திளைக்குநெய் தற்சமர
மாநகர்க் கிறை வருகவே
மலிபுவன முழுவதுங் கிடுகிடென நொடியில்வலம்
வருகந்த வேள் வருகவே.

(இ-ள்.) அன்னம் களிப்போடு புனல் ஆட - சேவலன்னங் களிப்போடு நீராட, பொன் அம் சிறை பேடை நிழல் கண்டு- பொன்னிறம்வாய்ந்த சிறகினையுடைய பெட்டையன்னமானது தன்னிழலைக் கண்டு, தன் புகல் ஆவியின் சேவலுடன் ஊடி - தனது சொல்லப்படும் உயிரினுஞ் சிறந்த சேவல் மற்றொரு பெடையோடு நீராடியதென்று அதனோடுபிணங்கி,மாலையம்போதில் கரந்து உறைதர - மாலைப்பொழுதில் ஓர்பால் மறைந்து வசிக்க, மடல் துன்னுறு கேதகை துணரை மடல் நெருங்கிய தாழையின் பூங்கொத்தையும்,தூய வெள் இதழ் கஞ்சம் குழுவினை-களங்கமில்லாத வெள்ளிய இதழையுடையதாமரைக் கூட்டத்தையும், சுரிமுகம் சங்கினை-சுரிந்த முகத்தையுடைய சங்கினையும், திரை எறியும் நித்திலத்தொகுதியை - அலைகொழிக்கும் முத்துக்குவியலையும், சூல் இப்பி - சூற்கொண்ட சிப்பியையும், பன்னும் நாரைத் திரளை-சொல்லப்படும் நாரைப்பறவையின் கூட்டத்தையும்,நாடி-தனது பெடையென்று தனித்தனி நாடி (அவையன்மையால்) பசும்புன்னை பஞ்சரத்துஇடைகண்டு-பசிய புன்னைமரத்தின் சேக்கையினிடத்துக் கரந்திருக்கும் தன் பெடையைக்கண்டு, தன் பவளவாய் அதின்வாய் மடுத்து அருகு அணைத்து பரிந்து -தனது பவளத்துண்டுபோன்ற வாயால் அதரபானம் பருகி அருகில் அணைத்து அன்புகூர்ந்து, அதனின் முனிவு அகற்றி - அப்பெடையன்னத்தின் துனியை நீக்கி, மன்னும் தருக்கொடு திளைக்கும் நெய்தல் சமரமாநகர்க்கு இறை வருக- நிலைபெற்ற இறுமாப்பொடு கலவியின்பம் நுகரும் நெய்தனிலஞ்சூழ்ந்த பெருமைவாய்ந்த சமரபுரிக்கு இறைவனே வந்தருள்க,—

சேவலன்னம் நீராட, பெட்டையன்னம் அங்குத் தன் நிழலைக்கண்டு மற்றொருபெடையன்னத்தோடு கலந்து நீராடியதென்று பிணங்கினது என்றமையால் மயக்கவணியும், அப்பெட்டையன்னம்பிணங்கிக் கரந்தமையால் தாழைப் பூங்கொத்தையும், வெண்டாமரையையும், முத்தையும், சிப்பியையும், நாரையையும் மாலைப்பொழுதாதலில் அவற்றை நிற ஒற்றுமையால் தனித்தனிச் சேவலன்னம் நாடின தென்றமையால் ஐயவணியும் கலந்து வருதலால் கலவையணி. முன்னர் ஊடி எனக் கூறிப், பின்னர் முனிவென்றமையால் துனி என்றும், ஊடல் சிறுகலாம், துனி பெருங்கலா மாதலால். (உ)

குழையளவு தாவடி செலுங்கயற் கட்கவுரி
கொஞ்சிவிளையாடு கிளியைக்

குழகர்வே ணிப்பிறைத் தோணிமிசை வைத்தலை
கொழித்தகங் கையில் விடுத்து
முழைவெருவி யுகளவெம் புலியதளை யானனத்
துறவைத்து நகை கொட்டியு
மொளிர்மணிச் சுடிகைமுட வுப்படத் தரவத்தை
யுலர்தலை முழைக்க ணுய்த்து
மிழைபொருவு மாமையோ டதிலறலை மொண்டெரி
யவித்தரி மருப்பு வில்லுக்
கெண்டேர் டயங்குபுரி நூலுண் வளைத்திட்
டெழிறகரத் திடை பிடித்து
மழைபொருவு களன்மடியில் விளையாடு குகசமர
மாநகர்க் கிறை வருகவே
மலிபுவன முழுவதுங் கிடுகிடென நொடியில்வலம்
வருகந்த வேள் வருகவே.

(இ - ள்.) குழை அளவு தா வடி செலும் கயல்கண் கவுரி - குண்டல மளவும் போர்க்குச் செல்லும் கயல்போன்ற கண்களையுடைய உமையம்மை, கொஞ்சிவிளையாடு கிளியை - கொஞ்சிவிளையாடாநின்ற கிளியை, குழகர் வேணி பிறைத்தோணி மிசைவைத்து - பேரழகையுடைய இறைவரது சடையிலணிந்த பிறையாகிய தோணியின்மேல்வைத்து, அலைகொழித்த கங்கையில்விடுத்தும் - அலைகொழித்து அச்சடையிலிருக்குங் கங்கையில் விடுத்தும், உழைவெருவி உகள-அப்பெருமான் இடத் திருக்கரத்திலேந்திய மான் அஞ்சித்தாவ, வெம்புலி அதளை ஆனனத்து உறவைத்து-கொடிய புலியின்றோலைத்தனது திருமுகங்களொன்றில் பொருந்தவைத்து, நகை கொட்டியும் - புன்னகையரும்பியும், மணி ஒளிர் சுடிகை முடவு படத்து அரவத்தை - அப்பெருமானணிந்த மாணிக்கம் விளங்கு முச்சிக்கொண்டைவாய்ந்த முடங்கிய படத்தையுடையபாம்பினை, உலர்தலை முழைக்கண்உய்த்தும் உக்கிய கபாலத்தின் றொளையிற்செலுத்தியும்,இழை பொருவும் ஆமை ஓடு அதில் அறலைமொண்டு எரிஅவித்தும்-அப்பெருமானுக்கு ஆபரணத்தையொத்த ஆமையோட்டில் அக்கங்கைநீரைமொண்டு அப்பெருமானேந்திய அக்கினியை அவித்தும், அரி மருப்பு வில்லுக்கு-அப்பெருமானணிந்த பன்றியின் கொம்பாகிய வில்லுக்கு, எண் தோள் தயங்கு புரிநூல் நாண்வளைத்திட்டு எழில்கரத்து இடை பிடித்தும்-அப்பெருமான் எட்டுத் திருப்புயங்களிலும் விளங்கும் உபவீதத்தை நாணாகப் பூட்டி வளைத்து அழகிய திருக்கரத்திற்பிடித்தும்,மழைபொருவுகளன் மடியில் விளையாடு குக - மேகத்தையொத்த ஸ்ரீகண்டத்தையுடைய இறைவரது மடியில்விளையாடியருளும் முருகனே, சமர மாநகர்க்கு இறை வருக பெருமைபொருந்திய சமரபுரிக்கு இறைவனே வரக்கடவாய்,—

பிறை தோணிபோலிருத்தலால் பிறையைத் தோணியென உருவகஞ் செய்தார். பிள்ளைமைப்பருவத்தில் சிவபெருமான் திருமடியிலிருந்து சடையிலணிந்த இளஞ்சந்திரனாகிய தோணியில் உமையம்மை திருக்கரத்திலிருந்த கிளியையேற்றி அப்பெருமானணிந்த கங்கையிலேற்றியும், அப்பெருமான் கரத்திலேந்தியமான் அஞ்சித்தாவ அப்பெருமானுடையாகவுடுத்தபுலித்தோலினைத் தன் திருமுகங்களில்ஒன்றில்வைத்து அச்சுறுத்தி நகைசெய்தும், அப்பெருமான் ஆபரணமாயணிந்த சர்ப்பத்தை அப்பெருமானேந்திய உக்கிய பிரமகபாலத்தின் றுளையிற் செலுத்தியும், அப்பெருமான் பதக்கமாக மார்பிலணிந்த ஆமையோட்டால் கங்கையினுள்ள நீரைமுகந்து திருக்கரத்திலேந்திய தீயினையவித்தும்அப்பெருமானணிந்த வராகத்தின் கொம்பாகிய வில்லில் திருந்தியதோள்களில் விளங்கு முப்புரிநூலை நாணாகப்பூட்டி அவ்வில்லினை வளைத்துத்திருக்கரத்திற்பிடித்தும் விளையாடி யருளினமையால், மழைபொருவுகளன் மடியில் விளையாடுக என்றார் இது தொழிற்றன்மையணி,—

சிவபெருமான் திருக்கண்களை அம்மை புதைத்தருளிய காலத்தில், சூரியசந்திரர்களியக்கமின்மையால் உலகு தட்டழிய, அச்சிவபெருமான்கருணைகூர்ந்து நெற்றிக்கண் திறந்தருளிய காலையில், அவ்வுமையம்மை வெருவித் திருக்கரங்களை விதிர்த்தபோது, அக்கரங்களிலுள்ள பத்துத் திருவிரல்களினின்றும் பத்துக்கங்கைகள்தோன்றி ஊழிவெள்ளம்போல அக்கங்கைகளைத் திருச்சடையிலணிந்தானென்பதும், தேவதாருவன முனிவர் பன்னியர்கள் தமது கற்புநிலையா விறுமாந்தபோது, சிவபெருமான் பிக்ஷாடனத் திருவுருவங்கொண்டு சோதித்தமையை, அம்முனிவர்களுணர்ந்து அச்சிவபெருமானுயிர்வாங்க ஓர் வேள்விசெய்து மானையும் புலியையும் பாம்பையும் அவ்வேள்வித்தீயையும் ஏவியபோது, அம்மானையேந்தியும், புலியின்றோலையுரித்து ஆடையாகவுடுத்தும், பாம்பை யாபரணமாகத் தரித்தும், வேள்வித்தீயை யேந்தியும் நின்றருளினானென்பதும்; தானே இறைவனென்று செருக்கிய பிரமன் ஐந்தலைகளுள் நடுத்தலையைக்கிள்ளி யேந்தினனென்பதும், தேவர்கள் வேண்டுகோளால் திருமால் கூர்மாவதாரங்கொண்டு கடல்கடைந்தமுதூட்டி அன்றெழுந்த செருக்கினால், அக்கடல் புடைபெயர்ந்துலகினையழிக்க, மீட்டுமத்தேவர்கள் வேண்டுகோளால் சிவபெருமான் அக்கூர்மத்தை யொறுத்து அவ்வோட்டினை யணிந்தானென்பதும்; சோமுகாசுரனென்பவன் உலகினைக்கவர்ந்து பாதலத்தின்கட்செல்லத் தேவர்கள் வேண்டுகோளால் திருமால் வராகவடிவங்கொண்டு அவ்வசுரனுயிர்பருகி மீட்டு மவ்வுலகுநிலைபெறவைத்த விறுமாப்பால் அஷ்டபர்வதங்களைத் தனது வக்கிரதந்தத்தாற் கோத்து உலகுநிலைகுலைய வீசியபோது, அதற்கஞ்சிய தேவர்கள்வேண்டுகோளால் சிவபெருமான் அவ்வராகத்தையொறுத்து அக்கொம்பினையணிந்தானென்பதும் புராணவரலாறாதலால் கங்கையும் மானும்புலித்தோலும்பாம்பும் அக்கினியும் பிரமகபாலமும் ஆமையினோடும் வராகத்தின் வக்கிரதந்தமும் சிவபெருமானுக்கேற்றிக் கூறினார். (ரு)

மேருப் பொருப்பையொரு தண்டெனக் கொண்டுமேழு
வேலையை யுறிஞ்சி விட்டும்
விரிசக் ரவாளகிரி யொருவாகு புரியாக
வெவ்வலித் தோளி லிட்டும்
பேருற்ற கயமெட்டுமெட்டு நாகங்கொடு
பிணித்துச் செவிக்க ணிந்தும்
பெரியபுவ னப்பொறைக் கமடம தெடுத்துப்
பிறங்குசில் லெனவி டுத்துஞ்
சீறுற்று விளையாடு பூதக் கணத்தொடுஞ்
சென்றுசூர் வேட்டை யாடுஞ்
சேவகப் பெருமா ளெனுவியுட் பெருமாள்
செயத்தேவர் முனிவர் பெருமாண்
மாரிப் புயற்கருணை பொழிகின்ற போரூர
மாயூர குக வருகவே
மலிபுவன முழுவதுங் கிடுகிடென நொடியில்வலம்
வருகந்த வேள் வருகவே.

(இ-ள். மேரு பொருப்பை ஒரு தண்டுஎன்ன கொண்டும்-மேருமலை
யையொருகதாயுதமாக வேந்தியும், எழுவேலையை உறிஞ்சிவிட்டும்-ஏழுகடலை
யும் வாயாலுறிஞ்சியும், விரிசக்கிரவாளகிரி-பரந்தசக்கிரவாளகிரியை, ஒருவாகு
புரிஆகவெவ்வலிதோளிலிட்டும் ஒருவாகுவலையமாகவெவ்விய வலிமைவாய்ந்த
தோளிலணிந்தும், பேர் உற்றகயம்எட்டும்-பெருமைவாய்ந்த திக்கயங்களெட்
டையும், எட்டுநாகம் கொடு பிணித்துசெவிக்கு அணிந்தும்-வாசுகிமுதலிய எட்
டுநாகங்களாற்கட்டித் தமது செவியில் குண்டலங்களாக வணிந்தும், பெரியபுவ
னம்பொறைகமடம் அது எடுத்து-பெரிய அண்டகடாகத்தைச்சுமக்கும் கூர்ம
த்தை யெடுத்து, பிறங்கு சில் என விடுத்தும்-விளங்காநின்ற சில்லாக வெடு
த்தெறிந்தும், சீர் உற்று விளையாடு பூதக்கணத்தொடும்சென்று-சிறந்துவிளையாடா
நின்ற பூதகணத்தொடும் மகேந்திரமென்னும் அடவியிற்சென்று, சூர்வேட்டை
யாடும் சேவகப்பெருமாள்-அசுரர்களாகியமிருக வேட்டையாடநின்றவீரம்வா
ய்ந்த இறைவனே, என் ஆவியுள் பெருமாள்- எனது உயிருள் கலந்துநின்ற பெ
ருமானே, செயம் தேவர்முனிவர்பெருமாள்-வெற்றியையுடைய தேவர்களுக்கு
ம் முனிவர்களுக்கும் பெருமானே, மாரிபுயல் கருணைபொழிகின்ற போரூர
மாயூரகுகவருக - மழைபெய்யும் மேகம்போலத் திருவருள்பொழிகின்ற திருப்
போரூரிலெழுந்தருளிய விறைவனே மயூரவூர்தியையுடையவனே முருகக்கட
வுளே வரக்கடவாய்,—

பெருமான் என்பதின் ஆன் விகுதி ஆள் விகுதியாக, விகுதிப்புணர்ச்சி
யுள்வரினும் அப்பொருளேதந்து நிற்குமெனவறிக. கயம் எட்டாவன - ஐரா

தம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சாருவபூமம், சுப்ரதீபம். வாசுகிமுதலிய அஷ்டநாகங்களாவன-வாசுகி, அனந்தன், தக்கன் சங்கபாதன், குளிகன், பதுமன், மகாபதுமன், கார்க்கோடன்.

இந்தத்திக்கஜங்களும் அஷ்டநாகங்களும் எட்டுத்திக்குகளிலும் தனித் தனியேநின்று பூமியைச் சுமத்தலும் அண்டகடாகத்தின்கீழ் திருமால்கூர்ம மூர்த்தங்கொண்டு அண்டங்கள் யாவையும் தாங்குவதினால் பேருற்ற கய மெட்டுமெட்டு நாகம் பெரியபுவனம் பொறைக்கமட மெனவுங்கூறினர். சில்- நிலத்தில் சிறு கீற்றைக் கீறிச் சிறுவர் விளையாடும் ஓர்கருவி. வேட்டையென் றமையால் மகேந்திரபுரியை அடவியெனவும், அசுரர்களை மிருகங்களெனவுங் கூறினும். சேவகம் - வேட்டையாடுமென்ற அடையால் வீரத்தின்மேல்நின்ற து. பசுவின்மடியில் பால் நிறைந்து நிற்றல்போல என துயிருள்நிறைந்து நிற்ற லால் எனதாவியுட் பெருமாளெனவும், சூரபன்மன் முதலிய அசுரர்களால் தத்தம் செயலிழந்து இடர்ப்பட்ட தேவர்முனிவர்களுக்கு அவ்வசுரர்களுயிர் பருகி அவர்கள்செயல் தலையெடுக்க விஜயந்தந்தமையால் செயம்தேவர் முனி வர்பெருமாளெனவும், கைம்மாறு கருதாது தம்மையடைந்த உயிர்களுக்கு மா று து திருவருள் புரிதலால் மாரிப்புயல்கருணை பொழிகின்ற போரூரவென வுங் கூறினர். பூதகணங்களின் வன்மைமிகுதியைக்கூறுவார் மேருமலையைத் தண்டாகவேந்தியும், எழுகடலையுறிஞ்சியும், சக்கிரவாளகிரியை வாகுவலயமா கக்கொண்டும், திக்கயங்களைஎட்டுநாகங்களால் ஒருசேரக்கட்டிக்குழைகளாக வணிந்து அண்டகடாகத்தைச்சுமக்கும் கூர்மத்தைச் சில்லாக வெறிந்துமென அப்பூதகணங்களுக்கு விசேடணந்தந்து அப்பூதகணங்களோடுசென்று வெலற் கரிய சூரபன்மன் முதலிய வசுரரை வேட்டையாடினனென இறைவனை விசேடித்து நிற்றலால் மேல்மேலுயர்வுநவிற்சியணி. (ச)

அளகுபல முட்டைதன் சிறைகொண் டணைக்குமா
றண்டரா சிகளனைத்து
மகலப் பெருஞ்சிறையில் விகலப் பொருட்போ
லடக்கிவைத் தும்விடுத்துங்
களவகல வருசுத்த மாயைவெளி முழுதுங்
கடந்தொரு கணத்தில் வந்துங்
கலிசுவே தத்திலெழு சலராசி தந்தூழி
காலவழல் வெகுளி தந்தும்
புளகமெழு மெய்ச்சிறை யடித்துப்பிர சண்டப்
பொருங்கா லளித்து நச்சுப்
புழையெயிற் றுரகன்மணி யிரவிதந் துஞ்சிறைப்
பொருவினிழன் மதிய ளித்தும்

வளமையுட னடனமிடு மாயூர போரூர
மாவீர குக வருகவே
மலிபுவன முழுவதுங் கிடுகிடென நொடியில்வலம்
வருகந்த வேள் வருகவே.

(இ-ள்.) அளகு பல முட்டை தன் சிறைகொண்டு அணைக்கும் ஆறு-பெண்பறவை தாமிட்ட பலமுட்டைகளைத் தன் சிறகாலணைக்கும்வகைபோல, அண்டராசிகள்அனைத்தும் - பல்லாயிரங்கோடி யண்டங்களையும், அகலம் பெருஞ் சிறையில் விகலம் பொருள்போல் அடைக்கிவைத்தும் விரித்தும்-பரந்த தனது பெரிய சிறகால் அவ்வண்டங்களைக் குறைபாடுள்ள பொருள்களைப் போல எளிதாக மறைத்துவைத்துங்கண்களுக்குப்புலப்படுத்த வெளிப்படுத்தியும்,களவு அகல வரு சுத்தமாயை வெளிமுழுதுங் கடந்து ஒருகணத்தில் வந்தும் - குறைபாடொழியத் தோன்றிய சுத்தமாயையினின்றும் வந்த வண்டங்கள் முற்றும் கடந்து ஒரு கணப்பொழுதில் வலம்வந்தும்,கலிசுவேதத்தில் - தனது தேகத்தில் மிக்கெழுந்த வெயர்வையால், எழு சலராசி தந்து-எழுகடலையும்படைத்தும்,ஊழிகால அழல்வெகுளிதந்தும்-ஊழிக்காலத்தில்பெயரும்வடவாமுகாக்கினியைத் தனது கோபத்தாற்படைத்தும்,புளகம் எழு மெய் சிறை அடித்து பிரசண்டம் பொருங் கால் அளித்தும்- புளகரும்பும் தனது தேகத்திலமைந்த சிறகினையடித்துத் தாக்கும் சண்டமாருதத்தைப் படைத்தும், நச்சு புழை எயிறு உரகன் மணி-நஞ்சுசிந்தும் தொளைவாய்ந்த பற்களையுடைய ஆதிசேடனது சுடிகையிலுள்ள மாணிக்கத்தை, இரவி தந்தும்-உலகிற்கு ஒளிதரச் சூரியனாகப்படைத்தும்,சிறைபொருவில் நிழல் மதி அளித்தும்-தனது சிறையிலெழுந்த ஒப்பில்லாத பசியநிழலால் தனது ஒளி குன்றிய சந்திரனை மீட்டுமொளிதர வெளிப்படுத்தியும்,வளமையுடன் நடனமிடும் மாயூர போரூரமாவீர குக வருக - இவ்வகைப்பட்ட வளத்தோடு நடனஞ்செய்யும் மயிலூர்தியுடையோனே திருப்போரூரில் வாழ்வோனே பெரியவீரனே குகனேவரக்கடவாய்.

தானிட்ட முட்டைகளைத் தன் உருவம்வாய்ப்பச் சிறகிலடக்குதலால் அளகுபல முட்டைதன் சிறைகொண் டணைக்குமா றண்டராசிகளனைத்தும் அகலப்பெருஞ்சிறையாலடக்கி யெனவும்,அவ்வண்டராசிகள் தனதுசிறையின் உருவிற்கு சிறுகிய வுருவுடையதாதலால் விகலப்பொருட்போ லடக்கிவைத்தும் விரித்தும் எனவும், மல கன்மங்களோடு கலவாது முதற்காரணமாய் நின்றலாற் களவகல வருசுத்த மாயையெனவும்,அச்சுத்தமாயை அப்பெண்பறவை போல அண்டங்கள் தோற்றுவித்தற்குக்காரணமாதலால் சுத்தமாயையை வெளியெனவும்.தன்சிறையுளடங்கிய அண்டங்களை வலம்வருத லெளிதாதலால் வெளிமுழுதுங் கடந்தொரு கணத்தில்வந்து மெனவும்.தனது வேர்வைநீர் எழுகடல்போலப் பெருகுதலால் கலிசுவேதத்திலெழு சலராசிதந்தெனவும்,தனது கோபத்தழலே அண்டங்களை நுகரும் ஊழித்தீப்போல பகைவருயிர் பருகச்சிந்துதலால் ஊழிகாலழல் வெகுளி தந்தெனவும், தனது சிறகால் வீசுங் காற்று

சண்டமாருதம்போலப் பகைவரை மோத வீசுதலால் புளகமெழு மெய்ச்சிறையடித்தெனவும், அக்காற்ருல் ஆதிசேஷன் சுடிகையினின் றெழுந்த மாணிக்கம், சூரியனைப்போல ஒளிவீசுதலால் நச்சுப்புழையெயிற்றுரகன்மணிஎனவும்,வீசிய தனது சிறகின் நிழலால் ஒளிகுன்றிய சந்திரனை ஒளிதந்து மீட்டும் வெளிப்படுத்தினமையால் பொருவினிழல்மதியளித்தெனவும், இவ்வன்மை, யின் செருக்கால் நடனஞ்செய்தலால் வளமையுடன் நடனமிடுமெனவும்,இவ்வாற்றல்வாய்ந்த மயிலைத் தனக்கூர்தியாகவுடையவன் பேராற்றலுடையானுதலால் மாயூர வெனவும்,இவ்வாற்றலையுடையான் என்றும் போர்புரிந்தே நிற்பானுதலால் போரூரஎனவும், எதிர்ந்த போர்கள்தோறும் இளையா வீரனுதலால் மாவீர எனவும், போர்த்தொழிலையுடைய வீரனுயினும் அடியவர் மனக்குகையில் வசித்து என்றும் இன்பந்தருவானுதலால் குக னெனவுங் கூறினர். முன்னர் விந்துவெனுந்தடமாமயிலோய் என்றதனை இதனுலுணர்க.

பூதம் புலன்பொறிகள் கரணங் குணம்பகுதி
புகலரு கலாதி சுத்தம்
பொருவிலிரு மாயையுங் காணவரு மாணவப்
பொங்கிருளு மூடு ருவியே
பேதங் களைந்துயிர்ப் போதங் கலந்துகலை
பேசொணு நேர்மை வெளியாய்ப்
பேரா யிரங்கோடி சூரியரு மட்கப்
பிறங்கியெழு ஞான வொளியா
யேதங் கடந்துட் புறம்பாகி யாவைக்கு
மின்பபரி பூர ணமதா
யிலகருட் சத்தியே சத்தியா கக் கையி
லெடுத்த ஞானச் சேவகா
மாதங் கனங்கண்மும் மாரிபொழி போரூர
மாயூர குக வருகவே
மலிபுவன முழுவதுங் கிடுகிடென நொடியில்வலம்
வருகந்த வேள் வருகவே.

(இ-ள்.) பூதம் புலன் பொறிகள் கரணம் குணம் பகுதி - தூலபூதங்களும் சூக்குமபூதங்களும் ஞானேந்திரியங்களும் கன்மேந்திரியங்களும் அந்தக்கரணங்களும் முக்குணங்களும் மூலப்பிரகிருதியும், புகலரு கலாதி சுத்தம் பொருவு இல் இருமாயையும்- சொல்லுதற்கரிய கலைமுதலிய சுத்தாசுத்த தத்துவங்களேழும் நாதமுதலிய சுத்ததத்துவங்களைந்துமாகிய வொப்பில்லாத சுத்தாசுத்த மாயையும் சுத்தமாயையும்,காணவரும் ஆணவம் பொங்கு இருளும்-கண்களுக்குப்புலப்படத்தோன்றும் ஆணவமென்னும் மிக்கவிருளும்,ஊடு உருவியே - ஆகியஇவற்றைக்கடந்து, பேதம் களைந்த உயிர் போதம் கலந்து கலை

பேச ஒண்ணாத நேர்மை வெளி ஆய்-யானெனதென்னும் பேதங்களைந்து (பரிபக்குவம்வாய்ந்த சகலர்கள் அந்தத்தற்போதம் நீங்குதலால்) ஆக மவளவையால் அளவறுக்க வொண்ணாத சிதாகாசரூபமாய், பேர் ஆயிரங் கோடி சூரியரும் மட்க பிறங்கி எழும் ஞான ஒளியாய்-ஒரு சேரவுதித்த பெருமைவாய்ந்த ஆயிரங்கோடிசூரியர்களும் தமதொளி மழுங்கவிளங்கி யொளிவீசும் மெய்ஞ்ஞான வொளியாய், ஏதம் கடந்த உள் புறம்பு ஆகி - மலக்குற்றத்தினின்று நீங்கிய அடியவர்களுள்ளும் புறம்பும் காணப்பட்டு, யாவைக்கும் இன்பபரிபூரணம் ஆய் அவ்வுள்ளும்புறம்புமாகிய எவ்விடத்தும் பேரின்பபரிபூர்ணமாய்,இலகு அருள் சத்தியே சத்தியாக கையில் எடுத்த ஞானச்சேவகா-விளங்கும் திருவருள்வடிவாகிய பராசத்தியே வேலாகத் திருக்கரத்திலேந்தியருளிய மெய்ஞ்ஞானவீரனே, மாதம் கனங்கள் மும்மாரி பொழி போரூர மாயூர குக வருகவே- மாதங்கள்தோறும் மேகங்கள் மும்மாரிபொழியும் திருப்போரூர் இறைவனே மயூர வாகனனே வரக்கடவாய்,

தூலபூதங்களாவன பிருதிவி,அப்பு,தேயு,வாயு,ஆகாயம். சூக்குமபூதங்களாவன - சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம். ஞானேந்திரியங்களாவன மெய், வாய், கண், மூக்கு, செவி. கன்மேந்திரியங்களாவன - வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம். அந்தக் கரணங்களாவன - மனம், புத்தி, சித்தம், அகங்காரம். முக்குணங்களாவன - சாத்துவிகம், இராசதம், தாமதம். பகுதி என்பது பிரகிருதி மாயையெனக்கொள்க. அப்பிரகிருதி முக்குணவடிவாயிருக்க அதனை வேறு பிரித்தது எற்றுக்கெனில் ? அக்குணங்களினின்றும் அந்தக்கரணங்கள் தோன்றுதலறிதற்கென்க. கலையாதியாவன-காலம், நியதி,கலை, இராகம், புருடன், மாயை. சுத்ததத்துவங்களைந்தாவன- சுத்தவித்தை, ஈசுரம், சாதாக்கியம், விந்து, நாதம். இவற்றைச் சுத்த தத்துவமென்றது-இவ்வைந்து தத்துவங்களும் சிற்சத்திக்குச் சுதந்தரவடிவாயிருத்தலால் சுத்தமென்றார். பிரகிருதிமாயையானது தூலவடிவாய்ச் சுத்தாசுத்தமாயையின் கீழ் நின்று புருடனுக்குப் பூதமுதல் கரண மீறாயுள்ள இருபத்துநான்கு தத்துவங்களாகிய போக்கியகாண்டத்தைத் தந்துநிற்றலால் பகுதியென அசுத்த மாயை முன்னர்க்கூறியும், சுத்தாசுத்தமாயையானது சுத்தமாயையின் கீழ்சூக்கும வடிவாய் நின்று பிரகிருதியின் கீழ் நின்ற உயிர்களுக்கும் அதன் மேனின்றவுயிர்களுக்கும் போகங்களைப்புசிப்பிக்கும் கலைமுதலிய எழுதத்துவங்களும் போககாண்டமாய் நிற்றலால் கலாதியெனச் சுத்தாசுத்தமாயையை அதன் முன்னர்க்கூறியும், சுத்தமாயையானது அதிசூக்கமவடிவாய் நின்று கீழ்நின்ற அவ்விருவகைமாயையினையும் பிரேரிக்கும் பிரேரககாண்டமாய்ச் சுத்தவித்தை முதலிய ஐந்து தத்துவங்களையும் சுத்தமெனச் சுத்தமாயையை அவற்றின் முன்னருங்கூறினார், பகுதியின் காரியப்பாடுகளாகிய தத்தவங்களை நிரைபடவைத்து முன்னர்ப் பகுதியென்றதுபோலக்கூறாது, கலாதிசுத்தமெனக் காரியப்பாடுகளைமட்டும் எடுத்துக் கூறுதலால் அவற்றின் காரணந்தோன்றப் பொருவிலிருமாயை எனவும், பிரகிருதிமாயையும், அசுத்தமாயையும் மலகன்மங்க

ளோடு விரவி நிற்றலால் காணவருமென்னும் விசேடணந்தந்து காணவருமா ணவப் பொங்கிருளுமெனவும், இம்மூன்றுமாயையுஞ் சத்தியின் சங்கற்பரூப மாதலால் ஊடுருவியே எனவும், யானெனதென்னும் பேதங்களை யொழிந்து இறைவனைவழிபடுவோர் அடியவராதலால் அடியவரென்பது தோன்றப்பேதங் களைந்துயிர் எனவும்,யானென தென்பதேதற்போதமாதலால் போதங்கலைந்து எனவும், அந்தப்போதங்கழிந்த அடியவர் அருட்கண்ணாலறிவதேயன்றி ஆகம வளவையாலறியவரிதாதலால் கலைபேசொணு நேர்மைவெளியாய்எனவும்,பரா சத்தி ஒளிவடிவாய் நிட்களவடிவாகிய சிவத்திற்குத் திருமேனிதந்து நிற்றலால் பேராயிரங்கோடி சூரியருமடக்கப் பிறங்கியெழு ஞானவொளியாய் எனவும், அடியவருள்ளம் காமமுதலிய முக்குற்றங்களையுங் கடந்து நிற்றலால் ஏதங் கடந்த எனவும், அவருள்ளத்தில் சிவஞானம் பிரகாசிக்கச்செய்து அவரால் தியானிக்கப்படுவானும் தியானமும் தானாய் நிற்றலாலும்,அந்நிலைதிரிந்து விசுவந் தோன்றுங்காலத்துக்காண்பானும் காணப்படுபொருளுந்தானாய்நிற்றலால் உட் புறம்பாகி எனவும்,அவ்விரண்டிடத்தும் காணப்படுவது பேரின்ப மேயாதலால் யாவைக்கும் இன்பபரிபூரணமதாய் எனவும், இவ்வாறுள்ள சத்தியையே வே லாகக்கொண்டருளினவன் அளவிறந்த ஞானவொளியாயுள்ளவனாதலால் இல கு அருட்சத்தியே சத்தியாகக்கையிலெடுத்த ஞானச்சேவகாஎனவுங்கூறினார்.

ஊடுருவி என்னும் இறந்தகாலவினையெச்சம் யாற்றுநீர்ப்பொருள்கோ ளாய் வெளியாய் என்னும் வினையெச்சத்தையும், வெளியாய், ஒளியாய், பரி பூரணமாய் என வேறுபல வடுக்கிய வினையெச்சங்கள் தனித்தனி இலகு எ ன்னுங் காலங்கரந்த பெயரெச்சத்தைத் தனித்தனியே கொண்டுமுடிந்தன. களைந்த, கலைந்த, என்னும் இறந்தகாலப்பெயரெச்சங்கள் ஈறு தொக்கன. கலை ந்து காரணகாரியப்பொருளில் வந்த இறந்தகால வினையெச்சம், யாவைக்கும் என்றது னிறுதியினின்ற கு உருபு ஏழனுருபு நிற்குமிடத்து நிற்றலால் உரு புமயக்கம். பூரணமது அது பகுதிப்பொருள் விகுதி. சத்தியை இலகருட்சத்தி யென விசேடித்துக்கூறி அச்சத்தியை வேலாகக் கையிலேந்திய ஞானச்சே வகா வென்றமையால் மேன்மேலுயர்ச்சிநவிற்சியணி.

## வேறு.

கருத்தே புகுந்து கதிகாட்டுங் கண்ணே வருக மெய்ஞ்ஞானக்
கரும்பே வருக கருணைபொழி காரோ வருக வானந்தப்
பெருக்கே வருக யாங்கள்பெறும் பேறே வருக மறைசொல்கிளிப்
பிள்ளாய் வருக பிறங்குதெய்வப் பெம்மான் வருககுறமடந்தை
தருக்கே வருக மிடியகற்றுந் தருவே வருக மன்பதைக்கோர்
தஞ்சே வருக வெமையளிக்குந் தாயே வருக பவப்பிணிக்கு
மருந்தே வருக சமரபுரி வாழ்வே வருக வருகவே
மறையின் சிரமெய்ப் பொருளான வள்ளல் வருக வருகவே.

(இ-ள்.) கருத்தே புகுந்து கதிகாட்டும் கண்ணே வருக - அடியாருள்ளத்தே குடியேறி முத்திநிலையைக் காட்டுங் கண்ணே வரக்கடவாய், மெய்ஞ்ஞானக்கரும்பே வருக - மெய்ஞ்ஞானமாகிய கரும்பே வருக, கருணைபொழி காரே வருக-திருவருள்பொழியும் மேகமே வருக, ஆனந்தப் பெருக்கே வருக - பேரின்பவுவட்டே வருக, யாங்கள் பெறும் பேறே வருக - அடியேங்கள் பெற்றுய்யும் பயனே வருக, மறை சொல் கிளிப்பிள்ளாய் வருக - வேதமுடிவிற்கூறும் கிளிப்பிள்ளையே வருக, பிறங்கு தெய்வப் பெருமாள் வருக - விளங்கிய தேவர்பெருமானே வருக, குறமடந்தை தருக்கே வருக - வள்ளிநாய்ச்சியாருள்ளத்தில் உவட்டெடுக்குங் களிப்பே வருக, மிடி அகற்றும் தருவே வருக-அடியவர் மிடியையோட்டுங் கற்பகமே வருக, மன்பதைக்கு ஓர் தஞ்சே வருக-மக்கட்பரப்பிற்கு ஓர் பற்றுக்கோடாயுள்ளவனே வருக, எம்மை அளிக்கும் தாயே வருக - எமக்குத் தலையளிசெய்யுந் தாயே வருக, பவம் பிணிக்கு மருந்தே வருக - அடியவர் பிறவிநோய்க்கு மருந்தே வருக, சமரபுரிவாழ்வே வருக வருக - சமரபுரியில் வாழ்வோனே வரக்கடவாய் வரக்கடவாய், மறையின் சிரம் மெய்ப்பொருளான வள்ளல் வருக - வேதசிரசின் மெய்ப்பொருளாயுள்ள பெருங்கொடையாளனே.

கண் எப்பொருள்களையும் புலப்படுத்தல்போல அடியவருள்ளத்தே மலவிருளொழித்து முத்திநிலையைக்காட்டும் விளக்காயுள்ளோனாதலால் கண்ணே வருக எனவும், கரும்பு ஓர்பால் இனித்தலும் ஓர்பால் புளித்தலுமுடைமைபோலாது சிவஞானமுடையோர் தன்னைத் தியானிக்குந்தோறும் முற்றும் இன்பமே தருதலால் மெய்ஞ்ஞானக்கரும்பே வருக எனவும், கார்காலத்துப் பொழிதலும் ஏனைக்காலத்துப் பொழியாமையுமுடைய மேகம்போலாது அவர்க்கு என்றும் பொழிதலுண்மையால் கருணைபொழி காரே எனவும், மழைபொழிதலால் உவட்டெடுக்கும் வெள்ளம்போலத் திருவருளால் ஆனந்தப் பெருக்கெடுக்கும் வெள்ளமென்பார் ஆனந்தப்பெருக்கே யெனவும், அவ்வடியவரன்றி யெங்கள் பெரும் பயனுமுள்ளானென்பார் எங்கள் பெரும்பேறே எனவும், வளர்ப்போர் களிகூர்தரப்பேசும் கிளிப்பிள்ளைபோலத் தன் பிதாவாகிய சிவபெருமான் களிகூரப் பிரணவத்தி னுட்கிடையை மொழிந்தானென்பார் மறைசொல் கிளிப்பிள்ளாய் வருகஎனவும்,சூரபன்மனால் சிறைப்பட்டதேவர்கள் அச்சிறையினின்றுங் காத்த சார்வபௌமனாதலால் பிறங்குதெய்வப் பெருமான் எனவும், வள்ளிநாய்ச்சியார் பேரழகுடைமையால் மாறாத அன்புடையா னென்பார் குறமடந்தை தருக்கே எனவும், அடியவர்க்குப் பவமே வறுமையாதலால் அதனை யொழிப்பவனென்பார் மிடியகற்றுந் தருவே யெனவும்,மக்கட்பிறப்பினர்க்கு எய்ப்பில்வைப்பா யுள்ளான்என்பார் மன்பதைக்கோர்தஞ்சே யெனவும்,யாவர்க்குந் தாயின் றலையளிபோல எங்களுக்குப்பாகம் வரச் சிருட்டி முதலிய ஐந்தொழிலிற்படுத்தித் தலையளி செய்வோ னென்பார் எமையளிக்குந்தாயே எனவும், பாகம் வந்தபின் பவநோய்மாற்றுதற்குச் சிவஞானந்தருவோ னென்பார் பவப்பிணிக்கு மருந்தே எனவும், இகவாழ்க்கை

யை விரும்பியடைந்தவர்க்கு அவ்வாழ்க்கையை யுதவுவோனென்பார் சமரபுரிவாழ்வே எனவும், வேதாந்தத்தினுட்கிடைப் பொருளாயுள்ளானென்பார் மறையின் சிரமெய்ப்பொருளான எனவும், அடியவர்க்கு என்றும் மாறாக்கொடையையுடையவனென்பார் வள்ளல் எனவுங்கூறினர். (எ)

வட்டாட் டாகு மெங்கள்பவ மாற்ற வருக பொறிவேழம்
வணக்க வருக மனமாவை மாய்க்க வருக மலச்சிறையை
விட்டாட் கொண்டு மெய்ஞ்ஞானம் விளக்க வருக வியனருளே
மேலீ டாக்கி யெங்குநிறை மிளிர்பே ரின்பந் தரவருக
தட்டா திருந்த சிவமென்றுந் தானென் றிளைக்கு மயலகற்றித்
தானே யதுவா யதுதானாய்த் தயங்கு மோனந் தரவருக
மட்டார் சோலைச் சமரபுரி வாழ்வே வருக வருகவே
மறையின் சிரமெய்ப் பொருளான வள்ளல் வருக வருகவே.

(இ - ள்.) வட்டு ஆட்டு ஆகும் எங்கள் பவம் மாற்றவருக - சூதாடு கருவி பிறழுதல் போலப்புரண்டுவரும் எங்கள் பிறப்பினை மாற்றவரக்கடவாய், பொறி வேழம் வணக்க வருக - இந்திரியமாகிய யானையை (உனது திருவருளாகிய தோட்டியால்) உனது திருவடிக்கீழ்ப்படுத்தவருவாய், மனம் மாவை மாய்க்க வருக - மனமாகிய குதிரையை அடக்கி நடத்தவரக்கடவாய், மலம் சிறையை விட்டு ஆட்கொண்டு மெய்ஞ் ஞானம் விளக்கவருக - மலச்சிறையினின்று மீட்டு என்னை அடிமைகொண்டு மெய்ஞ்ஞானத்தைவிளக்க வருக, வியன் அருளே மேல் ஈடாக்கி எங்கும் நிறை மிளர் பேரின்பம் தரவருக-தனது பரந்த திருவருளே விழுங்கச்செய்து உள்ளும்புறம்பும்ஆகிய எவ்விடத்து நிறைந்து விளங்கும் பேரின்பந்தருள வரக்கடவாய், தட்டாது இருந்த சிவமென்றும் தானென்றும் இளைக்கும் மயல் அகற்றி - நீங்காதிருந்த சிவமென்றும் தானென்றுங் கருதி யிருந்த மயக்கத்தை நீக்கி,தானே அதுவாய் அது தானாய்-தானேஅச்சிவமாய் அச்சிவமே தானாய்,தயங்கு மோனம் தரவருக-விளங்கு மோனநிலையைத்தரவரக் கடவாய்,மட்டு ஆர் சோலை சமரபுரி வாழ்வே வருகவருக-தேனிறைந்த மரச்சோலை சூழ்ந்த சமரபுரியில் வாழ்கின்றவனே வரக்கடவாய் வரக்கடவாய்,—

சூதாடுகருவி புரண்டு பற்பலவகையாய் மாறிவருதல்போலப் பிறவி பற்பலவகையாய் மாறிவருதலால் அவற்றையொழிக்கஎன்பார் வட்டாட்டாகு மெங்கள் பவம் எனவும், அப்பிறவிகளில் சுரோத்திரமுதலிய இந்திரியங்கள் நேரே யூடுருவிச்செல்லும் யானைபோல் ஒளிமுதலிய தத்தமக்குரிய விடயங்களில் நேரே யூடுருவிச்செல்லுதலால் அதனைத்தன்வசப்படுத்தித் தன்வழியிற் செலுத்தவருக என்பார் பொறிவேழம் வணக்கவருக எனவும்,தன்னைநடத்துவோன் குறித்த விடத்திற் குதிரை மிகவும் விரைந்தோடிச்செல்லுதல் போல

மனமும் அவ் விந்திரியங்குறித்த விடத்தில் விரைந்துசெல்லுதலால் புருடன் குறித்தவழியே அதனை விலக்கி நின் குறிவழியிற்செலுத்துக என்பர் மனமாயைமாய்க்க வருக எனவும், மனமும் அவ்விந்திரியத்தின்வழியே செல்லுதலால் இருள் சிறைபட்டுக்கிடந்த சிறையில்விளக்கால் அவ்விருட் சிறையொழிதல்போல நின்வழித் திருப்பிய மனத்தில் அநாதியேசிமிழ்ப்புண்டு கிடந்த ஆணவமலவிருளாகிய சிறையை வீட்டித் தற்போதமொழிக்க மெய்ஞ்ஞான தீபம் ஏற்ற வருக என்பார் மலச்சிறையைவிட் டாட்கொண்டு மெய்ஞ்ஞானம் விளக்க வருக எனவும், அத்தற்போதம் சேயாமல் திருவருள் மேலீடாக மூழ்கிநிற்கும் அவதரத்துத் தோன்றும் இன்பம் பேரின்பம் என்பார் வியனருளே மேலீடாக்கி யெங்கு நிறை மிளிர்பேரின்பந் தரவருக எனவும், அப்பேரின்பநிலையே சிவமென்பார் தட்டாதிருந்த சிவமெனவும், அங்குத் தோன்றும் சிவமொரு முதலென்றும் தானொரு முதலென்றும் கருதுத லொழிந்து தானே சிவமாய் அச்சிவமே தானாய்நிற்கும் சீவன்முத்தநிலை மௌனநிலை என்பார் சிவனென்றுந் தானென்றிளக்கு மயலகற்றித் தானே யதுவாயதுதானாய்த்தயங்குமோனம் எனவும் அந்நிலையைத்தந்தருள அருட்குருவடிவாய் வருக என்பார் தரவருக எனவுங்கூறினர். பொறிவேழம் வணக்கவருக மனமாவைமாய்க்கவருக என்பது காறும் ஆன்மதரிசன மெனவும், மலச்சிறையை விட்டாட்கொண்டு மெய்ஞ்ஞானம் விளக்க வருக என்பது காறும், ஆன்மசுத்தி எனவும், வியனருளே மேலீடாக்கி யெங்கு நிறைமிளிர் பேரின்பந்தரவருக என்பது காறும் ஆன்மலாபமெனவும், தட்டாதிருந்த சிவமென்றுந் தானென்றிளக்கு மயலகற்றித் தானேயதுவா யது தானாய் என்பதுகாறும் அவ்வான்மலாபமாகிய ஞேயத்தழுந்துதலெனவும், தயங்குமோனமென்பதுகாறும் ஞேயத்தழுந்துதலாகிய சீவன்முத்தி நிலை எனவும் தோன்றுதல் காண்க. மோனநிலை என்றது தனக்கெனவேண்டுதல் வேண்டாமை சிறிதுமின்றி பசித்தபொழுது கிடைக்கும் உணவையருந்தித் தமதுநிட்டையில் அசைவற நிற்குநிலைமை. (அ)

## வேறு.

உயிருண் மருவு திமிர மிரிய வொளிரு மளவில் பரிதியே
யுததி பொருவு கருணை யமுத முளனு ளுதவு மதியமே
யியலின் மதுர முழுது மறியு மிசைகொள் பெரிய புலவனே
யிரவு பகலு நினையு மடிய ரிதய நகரி னரசனே
கயிலை யிறைவர் மகிழ வொருசொல் கழறு பரம குரவனே
ககன சுரர்கண் முடிக டடவு கமல சரண கடவுளே
மயிலின் முதுகி னுதய குமரன் வருக வருக வருகவே.

(இ ள்.) உயிருள் மருவு திமிரம் இரிய ஒளிரும் அளவில் பரிதியே - ஆன்மாவின் புறம்பன்றி உள்ளும் விடாதமைந்த ஆணவமலவிருள் ஓட்டெடுக்க விளக்கும் அளவிறந்த கிரணத்தையுடைய சூரியனே, உததி பொருவு கருணை அமுது என் உளனுள் உதவும் மதியமே- கடலையொத்த கருணையாகிய

முகத்தை என்மனத்திற்றந்தருளுஞ் சந்திரனே, இயலின் மதுரமொழி முழு
ம் அறியும் இசைகொள் பெரிய புலவனே—சங்கத்தார்இயற்றமிழ்ச்செய்யுளி
மைந்த சுவைமுற்றும்உணர்ந்துகளிகூரும்புகழ்வாய்ந்தபுலவர்சிரோமணியே,
ரவும் பகலும் நினையும் அடியர் இதயம்நகரின் அரசனே — இராப்போதும்
கற்போதும் இடைவிடாது தியானித்துருகும் அடியவரது மனமாகிய திருநக
ல் ஞானவரசியல் செய்வோனே, கயிலைஇறைவர் மகிழ ஒருசொல் கழறு பரம
ரவனே — திருக்கயிலையிலெழுந்தருளியபெருமானார் களிகூரஅவர்திருமடியி
ருந்து ஓமெனுமெழுத்திற் 'பிரணவம்பேசிய பரமாசாரியனே, ககனசுரர்கள்
டிகள் தடவு கமல சரண கடவுளே—விண்ணுலகில்வாழும்தேவர்கள் மகுடங்
ளுரிஞ்சும் தாமரைமலரையொத்ததிருவடியையுடையகடவுளே, மயிலின்முது
ல் உதயகுமரன் வருக வருக வருகவே — மயூரத்தின்முதுகில் ஆரோகணி
தருளிய குமாரக்கடவுளே வந்தருள்வாய், மகிமை தவழு சமரபுரியன்—மகி
மவாய்ந்த சமரபுரியில் எழுந்தருளிய இறைவனே.

செம்பிற்காளிதம்உள்ளும்புறம்பும்இருத்தல்போல ஆன்மாவிலுள்ளும்
றம்பும்இருள் பொழிதலால் உயிருள் மருவுதிமிரமெனவும், புறவிருளையோ
டும் சூரியன்போலாதுஉள்ளும்புறம்பும்விரவியஆணவஇருளைஓட்டித்தீவிரத
பக்குவமுடையோர்மனத்தில்சூரியன்போலக் காட்சிதந்துநிற்றலால்திமிரமிரி
ஒளிரும் அளவில்பரிதியே எனவும், சந்திரன்அமுதமேகிரணமுடையனாயினும்
ர்காலத்தில் விளங்குதலும் விளங்காமையுமுடைமைபோலாது இருவினை
யாப்புவாய்ந்ததீவிரபக்குவமுடையோரிதயத்தில்சிவமென்னும் பைங்கூழ்ஓங்க
ன்றும்அமுதக்கிரணத்தைத் தண்ணென்றுவீசிஅச்சந்திரனைப்போலக்காட்சிதந்த
ளுதலால் உததிபொருவுகருணையமுதெனுளனுளுதவுமதியமே எனவும், சங்
ப்புலவர்கள் தாமியற்றியநூல்களுள் ஒருவர்க்கொருவர்குற்றங்கூறிப்பெருங்க
ாம்விளைந்தவழி உருத்திரசன்மராய்வணிகர்குலத்தில்அவதரித்தகாலையில் அவ
கள்சங்கப்பலகையிலிருந்து அப்பெருங்கலாம்அவர்களுக்கு ஒழித்தருளினமை
ால்இயலின்மதுரமொழிமுழுதுமறியுமிசைகொள்பெரியபுலவனேஎனவும், யா
னனதென்னும்விகற்பினையொழித்துஎன்றும்வழிபடுவோராதலால்இரவுபகலு
னையுமடியரெனவும், காமமுதலியமுக்குறும்பினையொழித்து முப்பத்தாறுதத்
வங்களும்பரிசனங்களாய்த் தன்னேவல்வழிநிற்ப அவரிதயமாகியநகரினைத்தன
டிப்படுத்தித்தனதுதிருவருளாணையை நடத்துவோனாதலால் அடியரிதயநகரி
ரசனே எனவும், பிரணவப்பொருள் தானாயிருக்குந்தன்மையைப்பிள்ளைமை
பருவமுடைய தனதுபுதல்வனே யறிந்தனனென்று மகிழ்கூர்ந்தனனாதலால்
யிலையிறைவர் மகிழவொருசொல்கழறு பரமகுரவனேஎனவும், தமக்குச்செய்த
தவிக்குத் தாம்செய்யுங் கைம்மாறு வேறின்மையின் தேவர்கள்தமது மகுடங்
ளில் திருவடியைத்தாங்கியிடைவிடாதிருக்கின்றனராதலால் ககனசுரர்கண்மு
கடடவுகமலசரணகடவுளேஎனவும், அடியவர்களுக்கு விரைந்தருளமயிலூர்
யிலாரோகணித்தருள்வானாதலால் மயிலின்முதுகிலுதயகுமரன் எனவும்,
ாய்மார் உவகைமிகுதிதோன்ற அழைத்தனராதலால் மூன்றடுக்கி வருகவருக
ருகஎனவுங் கூறினர். (கூ)

அறையவரியகருவியடவியருகவொழுகுநதியமே
யறிவில்சமயவரிகள்வெருவியலறமுடுகுசரபமே
நிறைகொள்பரமசுகமெய்யடியர்நினைவிலுதவுபிரமமே
நிகழுமயனுமறியவரியநிமலவொளியுண்மதுரமே
கறைகளிரியவெனதுமனதுகளுலிநிலவுபுணரியே
கலகவினைவலனலையடுநல்கருணைபொழியுமெழிலியே
மறைகள்குலவுகமலசரணன்வருகவருகவருகவே
மகிமைதழுவுகுமரபுரியன்வருகவருகவருகவே.

(இ-ள்.) அறைய அரிய கருவி அடவி அருக ஒழுகும் நதியமே—சொ[ல்]லுதற்கரிய தத்துவமாகியகாடுதன்னிலைகுன்றச்செல்லும் நதிப்பெருக்கே, அ[றி]வில் சமயம் அரிகள் வெருவி அலற முடுகு சரபமே—அறிவில்லாத புன்ச[ம]யங்களாகிய சிங்கங்கள் வாய்புலர்ந்து கதறியோட்டெடுக்க விரைந்து செல்லு[ம்] சரபப்பட்சியே, மெய் அடியர் நிறைகொள்பரமசுகம்நினைவில் உதவு பிரமமே—மெய்யடியார் நினைவில் குன்றுதலில்லாத பேரின்பசுகத்தைத் தந்தருளும் இறை[]வனே, நிகழும் அயனும் அறிய அரிய நிமல ஒளியுள்மதுரமே—என்றும் நிலை[பெ]ற்ற பிரமனும் அறிதற்கரிய மலாகிதமாகிய அருள்ஞானஒளிப்பிழம்பில்கனி[ந்]தெழுந்த இன்சுவையே, கறைகள் இரிய எனது மனது களுலி நிலவு புண[ரி]யே—மலக்குற்றங்களோட்டெடுக்க எனது மனத்தில் நிறைந்து விளங்குந்தி[ரு]வருட்கடலே, கலகவினை வல் அனலை அடும் நல்கருணை பொழியும் எழிலியே—கலகஞ்செய்யும் இருவினையாகிய கொடியஅனலை அவித்தற்கு நல்லதிருவருள[ா]கிய மழைபொழியும் மேகமே, மறைகள் குலவு கமலசரண வருக வருக வரு[க]வே—வேதசிரசுகளில்விளங்குந்தாமரைமலரையொத்த திருவடியையுடையா[ய்] வரக்கடவாய்,—

அகக்கருவி, புறக்கருவிஎன்னும் தத்துவங்களின் சேட்டைகள் சொ[ல்]லுதற்கரியனவாதலால் அறையவரிய கருவிஎனவும், இவ்விருவகைக் கருவி[க]ளும் தொண்ணூற்றாறு வகைப்படுதலால் அடவிஎனவும், நதிபெருக்கெடுத்[து] வருங்கால் காடுதன்னியல்புகுன்றுதல்போல இவரதுதிருவருட்பெருக்கு மே[லெ]டுங்கால் தத்துவமென்னுங் காட்டினியல்புகுன்றுதலால் அருகவொழுகுநதி[ய]மேஎனவும், சரபப்பட்சிக்குச் சிங்கங்களஞ்சிப் புறங்கொடுத்தோட்டெடுத்த[ல்] போலச்சமண்முதலியபுன்சமயங்களஞ்சிப் புறங்கொடுத்து ஓட்டெடுக்கச்செ[ய்]தமையால் சமயவரிகள் வெருவியலறமுடுகு சரபமேஎனவும், அச்சமயங்க[ள்] பதியிற்று, பசுவிற்று, பாசமிற்றெனப்பகுத்துணரும் உணர்ச்சியின்மையால் அறி[]வில் எனவும், பேரின்பம்என்றும் ஒருபடித்தாய் நிலைபெறுதலால் நிறைகொ[ள்] பரமசுகமெனவும், அக்கரங்கள் அகரத்தைவிட்டுநில்லாமைபோலத்தியானத்தை[] விட்டுத்தனித்துச் சொரூபசிவம் நில்லாமையால் மெய்யடியர் நினைவிலுதவு பி[ர]மமேஎனவும், பிரமன்முதலிய பல்லுயிர்களும்அறிதற்கரிய சிவஞானவொ[ளி]யாயிற்றால் நிகழுமயனுமறியவரிய நிமலவொளிஎனவும், அச்சிவஞான[]

ன்னுடையார் மனத்தில்மதுரித்துத்தோன்றுதலால் உள்மதுரமேஎனவும், பத்திற்படிந்த அழுக்குகளைப்போக்க வெள்ளம்பெருகுதல்போல எனதுமன திற்படிந்த காமமுதலிய கறைகளொழியஅம்மனத்தில் பெருகுங்கடல்போல் ற்றலால் கறைகளிரிய வெனதுமனது களுலிநிலவுபுணரியே எனவும், ஆகா யம்பிறவிக்கலாம் விளைத்தலால் கலகவினைஎனவும், அதுபிராரத்துவநுகரும் பாதேயிடையிலெறுதலால் வல்அனலேஎனவும், மேகத்தால் கோடைவெப்ப ல்அவிதல்போல இவனதுதிருவருளால்அவ்வனலழிதலால் அடுரல்கருணை பாழியுமுகிலேஎனவுங் கூறினர். (௧0)

வருகைப்பருவ முற்றிற்று.

## அம்புலிப்பருவம்.

பதினெட்டாமாதத்தில் நிகழ்வது கூறுவதாதலால் சந்திரனைவருகவெ ன்று செவிலித்தாயர்முதலியோர் அழைக்கும் பருவமெனக்கொள்க.

தம்மரசனினும், மிக்கவலிமையையுடையாரை தம்மரசனுக்கு நட் பாகக்கோடற்குச்சாமமுதலிய வுபாயங்களைக்கூறிவரித்தல்போலத் தமதுமக்க ளோடு நட்புக்கோடற்கு அம்புலியையழைக்குங்கால், சாமபேததானதண்ட மென்னும் நால்வகையுபாயங்களையும் கூறுவது இந்நூல்வழக்காதலால் முன் னர்ச் சாமங்கூறுகின்றார். சாமம் - இன்சொற்சொல்லுதல். அதுசமமானோ டத்துஅச்செயல் நிகழ்வதாதலால், சாமமென்றது இங்குச்சமமாயினோர்மே நின்றது.

மானையாகந்தழுவுவாயிவனுமுழைதந்த
 மானையாகந்தழுவுவான்
வனேசடைக்கங்கையலைதவழ்குழவிநீயதின்
 மடித்தலக்குழவியிவனும்
தேனனையமொழியறுவர்மகிழவருவாயிவன்
 றிகழுமவர்மகிழவருவான்
சிவனடியுமுடியுநீயறிதிமற்றவையிவன்
 சிறுவிரற்சுட்டியறிவான்
சோனைமழையெனவமுதுபொழிகிரணநீயிவன்
 சுகக்கருணையமுதுபொழிவான்
றுன்னிருள்கிழித்தெழுஞ்சோதிநீயிவனடியர்
 துகளிருள்கிழித்தசோதி
யாலவிம்முறைமைகொடுநீநிகர்நியான்மகிழ்ந்
 தம்புலியாடவாவே
யருமறையினொலிநிலவுசமரபுரிமுருகனுட
 னம்புலியாடவாவே.

(இ-ள்.) மானை ஆகம் தழுவுவாய்—மானினைநீஉன்னுடலிற் றழு வாய், இவனும்—இம்முருகக்கடவுளும், உழை தந்த மானை ஆகம் தழுவுவான் காஞ்சனையென்னும்மான் பெற்ற வள்ளிநாய்ச்சியாராகியமானைத் தன்மார்பி தழுவுவான், வனை சடை கங்கை அலை தவழ் குழவி நீ—கட்டியசடையிலுள் கங்கையினலையில் தவழுங்குழந்தை நீ, இவனும்—இம்முருக்கடவுளும், அதி மடி தலம் குழவி—அக்கங்கையின் மடிதலத்திலுள்ள குழந்தை, தேன் அனை மொழி அறுவர் மகிழ வருவாய்—தேனையொத்த சொல்லையுடைய கார்த்திகை பெண்களறுவரும் மகிழ்கூர நீவருவாய், இவன்—இம்முருகக்கடவுள், திகழு அவர் மகிழ வருவான்—விளங்கும் அவ்வறுவரும் மகிழ்கூரக்குழந்தை வடிவா வருவான், சிவன் அடியும் முடியும் நீ அறிதி—சிவபிரானது திருவடியையு திருமுடியையும் நீயறிவாய், இவன் அவை சிறு விரல் சுட்டிஅறிவான்—இ முருகக்கடவுள் அவற்றைத்தனது சிறியவிரலால் சுட்டியறிவான், சோனை மழை என அமுது சொழி கிரணன் நீ—விடாது சொரியும் மழையைப்போல அமு தத்தைப் பொழியுங்கிரணமுடையவன் நீ, இவன் சுக கருணை அமுது பொழி வான்—இம்முருகக்கடவுள் அடியவர்க்கு இன்பந்தருந்திருவருளாகிய அமு த்தைப் பொழிகின்றவன், துன் இருள் கிழித்து எழும் சோதி நீ—உலகி நெருங்கிய புறவிருள் கெடக்கிழித்தெழுங்கிரணத்தையுடையவன் நீ, இவன் அடியர் துகள் இருள் கிழித்த சோதி—இம்முருகக்கடவுள் அடியவர் அகவிருள கிய மலவிருளைக் கிழித்தெழும் ஒளிவடிவாயுள்ளவன், ஆன இ முறையைகொ நீ நிகர்தி—அமைந்த இம்முறையால் நீஅவனொடொப்பாய் (ஆதலால்) அ புலி மகிழ்ந்து ஆடவா—சந்திரனே நீமகிழ்கூர்ந்து இவனோடு விளையாட வ ராய், அரு மறையின் ஒலி நிலவு சமரபுரிமுருகன் உடன் அம்புலி ஆடவா— அரியவேதங்களின் கோஷம் இடையறாது விளங்கும் சமரபுரியிலெழுந்த ளிய முருகனோடு சந்திரனே நீ விளையாடவாராய்,—

சந்திரன் உடல் நடுவிலிருக்கும் களங்கத்தை மானெனக்கூறுதல் உல வழக்காதலால் மானையாகந்தழுவுவாயெனவும், உமையம்மையின்தோழியாக, சவஞ்செய்தகாஞ்சனையென்னும் மான்வயிற்றிற்பிறந்தவள்ளிநாய்ச்சியாரைமுரு கக்கடவுள் மணந்தமையால் இவனுமானையாகந் தழுவுவானெனவும், சிவபெரு மானுதற்கண்ணினின்றுந் தோன்றிய தீப்பொறிகளைச் சிவபெருமானுரை யால்சுமந்துசென்ற தேயுவும்வாயுவும்தாங்கலாற்றாதுகங்கையில்விடுக்க, அக்கங் கைதாங்கினளாதலால் அதின்மடித்தலக்குழவியிவனும் எனவும், தக்கன்புத்தி களாகிய அச்சுவினிமுதலிய இருபத்தேழு நக்ஷத்திரங்களும் சந்திரன் மனை வியர்களாதலால் தேனனையமொழியறுவர் மகிழவருவாயெனவும், கங்கை தாங்கிச்சரவணத்தில் விடுக்கஅங்குத்தோன்றிய முருகக்கடவுளுக்கு அறுவ வாகிய கார்த்திகைமாதூட்டினமையால் இவன்றிகழுமவர் மகிழவருவான் என வும், தக்கன்வேள்விச்சாலையில் அவிப்பாகத்துக்குச்சென்ற வீரபத்திரக் கடவுளடியால் தேய்ப்புண்டு கலையிழந்தசந்திரன் இழந்தகலைகள் அடைத பொருட்டுச்சிவபெருமானைச்சரணடைந்து அப்பெருமானால் திருமுடியிற்சூட படுதலால் சிவனடியுமுடியுநீயறிதியெனவும், தன்தந்தையை இயல்பாய்ச்சுட்

யுணர்தலும் பிறர்க்குரைத்தலும் இயல்பாதலால் இவன்சிறுவிரற்சுட்டியறிவா னெனவும், உயிர்களுக்குத்தண்ணளிசெய்யுங்கிரணமுடைமையால் அமுதுபொழிகிரணனீஎனவும், சந்திரன்கிரணம்வீசுதல்ஒருகாலத்தில் மாறினும்மாறும், இவனடியவர்க்கு என்றுந்திருவருள்நிலவுவீசுதலில்மாறுதவனாதலால்இவன்சுக கருணையமுதுபொழிவான்எனவும்,சந்திரன்உலகிற்பொருந்தியபுறவிருளைப்போக்குவான் இவன் அடியவர்அகவிருளாகிய மலவிருளைப்போக்குவோனாதலால் துன்னிருள்கிழித்தெழுஞ்சோதிநீயிவனடியர்அகஇருள் கிழித்தசோதிஎனவும், நீங்களிருவரும் ஒருதன்மையிராதலில்ஒப்பாயாதலால் நிகர்தியால்எனவும், நீ இவனொடுவிளையாடுதற்கு ஒத்ததன்மையனாதலால் மகிழ்ந்தம்புலியாடவாவே எனவுங்கூறினர். ஆனைட்யபிள்ளையாராய்ச் சிவபெருமானைத்திருவிரலாற் சுட்டினமையைக்கொள்ளினுமமையும்.

இதனால் சமமென்னும் உபாயம்கூறினமைகாண்க. மேருவில்சிவயோக நிலையினின்ற ஏமர்த்திருமுனிவரது நிட்டையைக்கெடுத்தற்பொருட்டு இந்திரன் கந்தருவனையும்அரம்பையையும் ஏவ, அக்கந்தருவர்பாடலாலும் அரம்பையாடலாலும் நிட்டையினின்றும்நீங்கிய அம்முனிவர், அவர்களைநோக்கி என்னிலைமைக்குமாறுசெய்தலால் நீங்கள்வேடரும் அரம்பையர்கள்வேடுவச்சியருமாக விந்தமலைச்சாரலிற்றோன்றுகவென்று சபித்தனர், அதனைக்கேள்வியுற்றஅவ்விருவரும் வருத்தங்கூர்ந்து குறையிரப்ப. அம்முனிவர்உங்கள்குடியில் வள்ளிநாய்ச்சியார்வந்தவதரிப்பர், அவரைக்குமாரக்கடவுள்வந்துமணம்புரிவர்அக்காலையில்உங்கள்சாபம்மாறுமென்றருளினர்? இதனைக்கேள்வியுற்றுமகிழ்கூர்ந்த கந்தருவரும்அரம்பையரும் விந்தமலைச்சாரலில் வேடுவக்குலத்தராய் உலவுங்காலையில் உமையம்மையின்பாங்கியாகக் காஞ்சனையென்பவர் ஓர்பெண்மானாய்க்கருப்பங்கொண்டுஈனுங்கால்வருந்திச்சுழலுதலை, அங்குள்ளவேடுவர்கள்கண்டுஅதனைத்தமதரசனுணையாற் போற்றிநின்றனர், அம்மான்ஈன்ற காலையில் அதுஓர்தெய்வப்பெண்வடிவமாயிருத்தலை அவ்வேடர்கண்டெடுத்துத்தமதரசன்பாலுதவ, அவ்வரசன்பாராட்டிவளர்த்து முருகக்கடவுளுக்குத்திருமணமுடித்துச்சாபநீங்கினரொன்பது திருச்செந்திப்புராணவரலாறு.

சாமபேததானதண்டமென்னும் நால்வகையுபாயங்களுள்தன்னின் மிக்கானிடத்துஅமையம்வாய்க்குமளவும் சாமபேததானமென்னு மூன்றுபாயங்களுமே செய்யத்தக்கனவாதலால் இதனாற் சாமோபாயங்கூறிப் பின்னர்வருஞ் செய்யுளாற் பேதங்கூறுகின்றார். (க)

சுரர்சிலர்க்கமுதுதவிநீதேய்வைகதியமுது
தொல்லுயிர்க்குதவிநிறைவான்
றோமுறுகளங்கனீயிவனடியர்கனவினுஞ்
சொல்லுறுகளங்கமறியா
ருரவரவினுக்குநீவெருவுவாய்ஃதுமிவ
னூர்பரிக்கொருகவளமா

முலகைவலம்வரவுனக்கொருதினஞ்செல்லுமிவ
னொருநொடியிலோடிவருவா
னிரவினுக்குரியவொளிநீயிவனகம்புறத்
தெக்காலுமிக்கவொளியா
னெய்துதண்ணளிசிலர்க்குடையைநீயனைவர்க்கு
மிவனெண்ணுதண்ணளியின
னரன்முதலெவர்க்குமொருகுரவனிவனுதலா
லம்புலியாடவாவே
யருமறையினொலிநிலவுசமரபுரிமுருகனுட
னம்புலியாடவாவே.

(இ-ள்.) நீசுரர் சிலர்க்கு அமுதுஉதவி தேய்வை—நீசில தேவர்களுக்கு அமுது தந்து நாளுக்குநாள் உடம்பு மெலிகின்றாய், தொல் உயிர்க்கு கதிஅமுது உதவி நிறைவான்—இவன் அநாதியாயுள்ள வுயிர்களுக்கு முத்தியாகியஅமுதினைத்தந்தருளி என்றும் ஒருபடித்தாயே நிறைந்துள்ளவன், நீ தோம்உறுகளங்கன்—நீ குற்ற மமைந்த களங்கமுடையவன், இவன்அடியவர்கனவிலும் சொல்லுறு களங்கம் அறியார் — இவனன்றிஇவன் திருவடிக்குத் தொண்டுபூண்டவர்களும்உலகினர் சொல்லுங்களங்கத்தினைக் கனவிலுஞ் சிறிதும் அறியார்கள், நீ உரவு அரவினுக்கு வெருவுவாய்—நீ பெரியபாம்பினுக்கு அஞ்சுவாய், அஃதும்—அப்பாம்பும், இவன் ஊர் பரிக்கு ஒருகவளமாம்—இவன் செலுத்தும் மயிலாகிய குதிரைக்கு ஒரு கவளமாகும், உலகைவலம் வரஉனக்கு ஒருதினம் செல்லும்—உலகினை நீபிரதக்ஷிணஞ் செய்யஒருநாள் செல்லும், இவன் ஒரு நொடியில் ஓடிவருவான்—இவன் ஒருநொடிப்பொழுதில் அண்டங்கள் முற்றுஞ்சென்று ஓடிவருவான், நீ இரவினுக்குஉரிய ஒளி—நீ இராப் போதுக்குரிய ஒளியையுடையாய், இவன் அகம்புறத்து எக்காலும் மிக்க ஒளியான் — இவன் அடியவருள்ளத்திலும் புறத்திலும் எக்காலத்தும் மேம்பட்ட ஒளியையுடையவன், நீ சிலர்க்கு எய்துதண்ணளி உடையை—நீ சிலர்க்கு மட்டும்அமைந்ததண்ணியகுளிர்ச்சியையுடையாய், இவன்அனைவர்க்கும் எண்ணும்தண் அளியினன்—இவன் யாவர்க்கும்கருதுந்தண்ணளியையுடையான், இவன் அரன் முதல் எவர்க்கும் ஒரு குரவன்—(இதுவுமன்றி)இவன்சிவபெருமான் முதல் யாவர்க்கும் பரமாசிரியன், ஆதலால் அம்புலி ஆடவா, ஆதலால்சந்திரனே இவனோடுவிளையாடவாராய்,—

சுரர்என்பது அமுதபானம்பருகினோர்என்னுங்காரணம்பற்றிவந்தபெயராதலால் பின்னர்க் கூறுவதற்கியலச்சுரர்சிலர்க்கமுதுதவி எனவும்,நீஅவர்கள்உடற்புறத்துள்ள நரைதிரைமூப்புகளொழியத்தந்து அதனாலுனதுகலை குன்றவாய் எனக்குற்றங்கூறுவார் நீ தேய்வை எனவும், இவன் தொன்றுதொட்டு அனைத்துயிர்களுக்கும் அகத்திலுள்ளஆணவம், மாயை, காமியமொழிய முத்தியமுது தந்தருளிக் குறையாதுஎன்றும் ஒருபடித்தாய்நின்னிலும் மேம்பட்டவனாயிருத்

நலிற் பேதங்கூறுவார் கதியமுது தொல்லுயிர்க்குதவி நிறைவானெனவும், நீயகத்தினன்றிப்புறத்திலும்மிக்ககளங்கமுடையாயென்று உலகினரால்காணப் படுதலிற் குற்றமுடையாயென்று கூறுவார் தோமுறு களங்கனீ எனவும், இவன்தானுமன்றித்தன்னடியவரும்காமமுதலியமுக்குற்றங்களும் புறத்தன்றி யகத்தினும் உலகினர்கனவிலுஞ்சொல்ல நினையார்எனப்பேதங்கூறுவார்இவன டியர்கனவினுஞ் சொல்லுறுகளங்கமறியார் எனவும், நீ இராகுவென்னும் பாம்புக்கு ஓர்கவளமாதலால் அதனுக்கஞ்சுவாயெனக் குற்றங்கூறுவார் உர வரவினுக்குநீவெருவுவாயெனவும், அப்பாம்பும் இவனுக்கன்றி இவ்விறைவனூர் திக்கும் காணில் ஓர்கவளமாகும் மேம்பாட்டால் பேதங்கூறுவார் அஃதும் இவ னூர்பரிக் கொருகவளமாம்எனவும், நீ நிலவுலகைவலம்வரக்கருதின் ஒருநாள் முற்றுஞ்செல்லும் அதனல் வன்மையில்லாயெனக் குற்றங்கூறுவார் உலகை வலம்வரவுனக்கொருதினஞ் செல்லுமெனவும், இவனண்டங்கள்முற்றும் வலம் வரக்கருதில் ஒருநொடியில்வரும் வன்மையையுடையானென்னும் பேதங்கூறு வார் இவனொருநொடியில் ஒழிவருவான் எனவும், பகலிரவென்னும் இருபொ ழுதில் இராப்பொழுதில்மட்டும் நிசாபதிஎன்னும் பெயர்க்காரணத்தால் புறத் தில் ஒளிபரப்புங்குற்றமுடையாயென்பார் இரவினுக்குரிய வொளிநீஎனவும், இவன் பகலிரவென்னும் இருபொழுதிலும் அகத்தும் புறத்தும் ஒருபடித்தாய் மேம்பட்டஒளியுடையானெனப் பேதங்கூறுவார்இவன்அகம்புறத்தெக்காலும் மிக்கவொளியானெனவும், நீகூடியஸ்திரீபுமான்களிடத்துமட்டும்தண்ணியகில வினவுடையாய் ஏனையோர்க்குவெப்பமுடையாயெனக்குற்றங்கூறுவார் எய்து தண்ணளிசிலர்க்குடையை எனவும், இவன் இயாவர்க்கும் ஒருபடித்தானதண் ணிய கருணையையுடையனுகிய மேம்பாட்டாற் பேதங்கூறுவார் அனைவர்க்கு மிவனெண்ணுதண்ணளியினனெனவும், உனக்குமட்டும்பரமாசாரியனன்றென மேம்பாடு கூறுவார் அரன்முதலெவர்க்குமொருகுரவனெனவுங் கூறினர். அ..முன்னது குளிர்ச்சி, பின்னது கருணை. அடியவர்தமதகத்திற்றோன்றுங் காட்சியையே புறத்திலுங்காணப்படுதலால் இவனகம்புறத்தெக்காலுமிக்கவொ ளியான்என்பதன் கருத்தெனக்கொள்க. பின்வருஞ் செய்யுளால் தானங்கூறு கின்றார். (உ)

மயிலுமயிலுங்கொண்டுவன்பகைதணிக்கலா
மலரடித்தோணிகொண்டுன்
மாறுதபவசலதியேழுங்கடக்கலாம்
வானுலகுதொழவாழலாம்
வெயிலொளியுநிகரலவெனப்புகலமெய்ஞ்ஞான
மிககவொளிபெற்றுய்யலாம்
விடகத்துலையாதிருந்தமுதருந்தலா
மிகுதுகட்சிறைகடியலாங்

குயிலனையமொழியார்முகத்தினுக்கொப்பெனக்
கூறுதபெருமையுறலாங்
கொடியகயநோயகன்றெப்பொழுதுமொல்காத
குலிசமென்னவடிவுபெறலா
மயிலைமுளரிக்கரங்கொண்டசேவகனுட
னம்புலியாடவாவே
யருமறையினொலிநிலவுசமரபுரிமுருகனுட
னம்புலியாடவாவே.

(இ-ள்.) மயிலும் அயிலுங்கொண்டு வன்பகைதணிக்கலாம்—அவனது ஊர்தியாகிய மயிலையும் படையாகிய வேலையுந் துணையாகக்கொண்டு உனக்கியல்பாயுள்ள பகைவரைப் போக்கலாம், மலர் அடி தோணி கொண்டு உன்மாறுத பவ சலதி ஏழும் கடக்கலாம்—தாமரைமலர்போன்ற அவனது திருவடியைத் தோணியாகக்கொண்டு உனது இடைவிடாத எழுபிறப்பாகிய கடலையுந் தாண்டலாம், வான் உலகு தொழவாழலாம்—மண்ணுலகன்றி விண்ணுலகுந்தொழ உயிர் வாழலாம், வெயில் ஒளியும் நிகர் அல்ல என்ன புகல—சூரியனொளியுந் தனக்கொப்பல்லவென்றுகூற, மெய்ஞானமிக்க ஒளி பெற்று உய்யலாம்—சிவஞானமாகிய மேம்பட்ட ஒளியைப்பெற்று உயிர்வாழலாம், வீடு அகத்து உலையாது இருந்து அமுது அருந்தலாம்—மோட்சவீட்டில் அழியாதிருந்து பேரின்பமாகிய அமுதினை நுகரலாம், மிகு துகள் சிறை கடியலாம் — உனக்கு இயல்பாய் மிக்க களங்கமாகிய சிறையைப்போக்கலாம், குயில் அனைய மொழியார் முகத்தினுக்கு ஒப்பு என கூறுத பெருமை உறலாம்—குயிலிசையையொத்த சொல்லையுடையபெண்கள் முகத்துக்கு ஒப்பென்று நிந்தைசொல்லக்கூறுத பெருமையை நீயடையலாம், கொடிய கயம் நோய் அகன்று எப்பொழுதும் ஒல்காத குலிசம் என்ன வடிவுபெறலாம்—கொடிய க்ஷயநோயினின்று நீங்கி எக்காலத்தும் குறைபாடில்லாத வச்சிராயுதத்தைப்போல வலிய வடிவுபெற்று வாழலாம், அயிலை முளரிகரம் கொண்ட சேவகன் உடன் அம்புலிஆடவா—வேலினைத்தாமரைமலரையொத்ததிருக்கரத்திலேந்தியசேவகனோடு சந்திரனே நீ விளையாடவாராய்,—

பாம்பிற்குப்பகை மயிலாதலாலும் சுரர்களுக்கு அமுது தருதல்போல அசுரர்க்கு அமுது தாராமையாலும் உன்னை விழுங்கவரும் இராகுவென்னும் பாம்பினையும் உனக்குளன்றும் இடர்செய்யும்அசுரரையும் இவனை நீ சரணடையின் இவனுக்கு ஊர்தியும் படையுமாகிய மயிலும் வேலும் உனக்குத்துணையாகவருமெனத் தானங்கூறுவார் மயிலும் அயிலுங்கொண்டு வன்பகை தணிக்கலாமெனவும், கடல் கடத்தற்குத் தோணி துணையாதல்போலப்பிறப்பினைக் கடத்தற்கு இவன் திருவடி துணையாதலால் இவனைச் சரணடையில் அதனைக்கடக்கலாமெனத் தானங்கூறுவார்மலரடித்தோணிகொண்டுன்மாறுத பவசலதி

ழுங்கடக்கலாம் எனவும், மண்ணுலகத்துக் கன்னிப்பெண்கள் மனத்துக்கி யவனைப் பெறுதற்பொருட்டு மூன்றுகலையோடுநிற்குங்கால்வணங்குதல்போல ண்ணுலகிலுள்ள தேவகன்னிகைகளும் உன்னை வழிபட இவனைச்சரணடை ந் பெறுவாயெனத்தானங்கூறுவார் வானுலகுதொழ வாழலாம் எனவும், னதொளிமிகவும் மந்தவொளியாதலால் சூரியனொளியும்உன்னொளிக்கு நிகர லஎனச்சொல்லும்படி சிவஞானவொளியை இவனைச்சரணடையிற்பெறலாம் ாத்தானங்கூறுவார் வெயிலொளியு நிகரலவெனப்புகல மெய்ஞ்ஞான மிக்க வாளிபெற்றுய்யலாம் எனவும், நீ எந்நாளும் அமுது நந்து அழியாத மோட்ச ட்டிலிருந்து பேரின்பமாகிய அமுதினை நுகரநீ இவனை வழிபடிற்பெறலாமெ த் தானங்கூறுவார் வீடகத்துலையாதிருந்தமுதருந்தலாம் எனவும், நீ பிறந்த ாது கூடப்பிறந்த களங்கத்தைப் போக்குதற்கு இவனைச் சரண்புகிற்பெற ாமெனத் தானங்கூறுவார் மிருதுகட்சிறைகடியலாம் எனவும், நீ மறுவுடை மயால் சிறிதுபெண்கள்முகத்திற்குஉப்பானும் ஆவாய்என்றுகவிகள்கூறும் ்தையை இவனைச் சரண்புகில் ஒழிக்கலாமெனத் தானங்கூறுவார் குயிலனைய மாழியார்முகத்தினுக்கொப்பெனக்கூறுத பெருமையுறலாம் எனவும், உனது நகத்தோடியல்பாயுள்ள க்ஷயநோய் நீங்கி எப்பொழுதும் மாறுத வலிமை யஇவனைச் சரணடையிற் பெறலாமெனத் தானங்கூறுவார் கொடிய கயநோ கன்றெப்பொழுதுமொல்காத குலிசமெனவடிவுபெறலாமெனவுங் கூறினர்.

வானுலகென்பதில் எச்சவும்மை தொக்கது. பிறையை வணங்கினுற் ணவனைப் பெறலாமென்பதை,—

"மைவார்கருங்கண்ணிசெங்கரங்கூப்புமறந்துமற்றும்
பொய்வானவரிற்புகாதுதன்பொற்கழற்கேயடியே
னுய்வான்புகவொளிர்தில்லைநின்றோன்சடைமேலதொத்துச்
செவ்வானடைந்தபசுங்கதிர்வெள்ளைச்சிறுபிறைக்கே"

எனவருந் திருக்கோவைத் திருவாசகத்திலும்,
உவமையை நிந்தித்துக் கூறுதலை,—

"மறுப்பயின்றவாண்மதியுமம்மதிக்குத்தோற்கு
நிறத்தலருநேரொக்குமேனும்—சிறப்புடைத்துத்
தில்லைப்பெருமானருள்போற்றிருமேனி
முல்லைப்பூங்கோதைமுகம்"

என வருஞ்செய்யுளாலும் உணர்க. (ரு)

பின்னர்வருஞ்செய்யுளால் தண்டமுந்தானமும்விரவிக் கூறுகின்றார்.

கஞ்சாதனத்தனைச்சிறையிடுவன்முத்தமிழ்க்
கவிஞனைச்சிறைவிடுப்பன்
கடியகுன்றடுவனிருள்கடியுங்குணக்குன்று
கனகும்பனுக்கருளுவ

னெஞ்சாதகடலழித்தரிவைமுருகாவென்
றிசைக்கவருள்வாரிதருவ
னிகலவுணர்களைகட்டடைந்தகடவுளரொனு
மிரும்பயிர்தழைப்பவைப்ப
னஞ்சாயசமணர்கழுவேறவிட்டடியர்நா
டோறுமீடேறவருவ
னவைதழுவுபுத்தன்முடியிடறியழலடுமென்னை
நளினமங்கைக்கிணைசெய்வ
னஞ்சாதிருந்திடேலிவன்வெகுளிகொளுமுன
மம்புலியாடவாவே
யருமறையினொலிநிலவுசமரபுரிமுருகனுட
னம்புலியாடவாவே.

(இ-ள்.) கஞ்சாதனத்தனை சிறை இடுவன்—தாமரையை யாசனமா வுடைய பிரமனைச்சிறையில் வைப்பன், முத்தமிழ் கவிஞனை சிறைவிடுப்பன்—இயலிசைநாடகமென்னும் முத்தமிழமைந்த கவியில்வல்ல நக்கீரனைச் சிறை யில்நின்றுவிடுவிப்பன், கடியகுன்று அடுவன்—கடுந்தொழில்வாய்ந்த கிரவு ச்கிரியினுயிரைவாங்குவன், இருள் கடியும் குணம் குன்று—மலவிருளைப்போ கும் சிவஞானமலையை, கனகும்பனுக்கு அருளுவன்—பெருமைவாய்ந்த கும்பமு னிவராகிய அகத்தியருக்குத் தந்தருளுவன், எஞ்சாத கடல் அழித்து—வற்ற நீர்மயமாகிய கடலினை நீர்சுவறச்செய்து, அரிவை முருகா என்று இசைக்க—சாபம்வாய்ந்த வள்ளிநாய்ச்சியார் முருகனே என்று குறையிருக்க, அருள்வாரி தருவன்—கருணையாகியகடலைத் தந்தருளுவன், இகல் அவுணர் களைகட்டு—பகைமையையுடைய அசுரர்களாகிய களையைக்களைந்து, அடைந்த கடவுளர் என்னும் இரும் பயிர் தழைப்ப வைப்பன்—தன்னைச் சரணகவடைந்த இந்திரன் முதலிய தேவர்களென்னும் பெரிய பயிர்தழையவளர்ப்பன், நஞ்சு ஆய சமண கழு ஏற விட்டு அடியர் நாடோறும் ஈடேற வருவன்—தீமைவாய்ந்த அமணர்கள் கழுவிலேறச்செய்துதனது அடியவர்கள் நாள்தோறும் பல்கவந்தருளுவன் அவை தழுவு புத்தன் முடி இடறி-குற்றந்தழுவிய புத்தன்தலையையிடறி, அழல் அடும் என்னை நளினம் மங்கைக்கு இணை செய்வன்—தீநுகர்ந்த எலும்பினை த்தாமரைமலரில் வசிக்கும் இலக்குமிக்குஒப்பாகச்செய்வன், அஞ்சாதிருந்திடேல்—நீ சிறிதும் இவனுக்கஞ்சாமல் வாளாவிருத்தலொழிக, இவன் வெகுளி கொளுமுன்னம்-இவன் உன்னிடத்தில் கோபங்கொள்ளுவதற்குமுன்னே, அம் புலி ஆடவா—சந்திரனே நீ விளையாடவாராய்,—

பிரமனைச் சிறையில்வைத்ததும், நக்கீரனைச் சிறையினின்றுவிடுவித்த தும், கிரவுஞ்சகிரியை வேலாற்றொளைத்ததும் சமணரைக் கழுவிலேற்றியதும் என்பைப் பெண்ணாக்கியதும் முன்னர்க்காண்க.

சிவபெருமான் சவுந்தரபாண்டியராய்த் தடாதகைப்பிராட்டியாரைத் நமணஞ்செய்து பாண்டிநாட்டில் அரசியல்செய்யுங்கால், அம்மை திருக்கு பதிந்தருள்செய்யமுருகக்கடவுள் திருவவதாரஞ்செய்து உக்கிரகுமாரபாண் யனெனத் திருநாமம்வாய்ந்து, சிவபெருமான் கொடுத்தருளிய வேலும் சக்கர ம் செண்டும் பெற்று அரசியல்செய்துவருங்கால், அசுவமேதயாகஞ்செய்ய தனை இந்திரனுணர்ந்துமிகவும் மனம் புழுங்கிமதுரையையழிக்க ஏவியகடல் த்திருநகரை யழிக்க நள்ளிருளில் வருங்கால், சிவபெருமான் உக்கிரகுமார பூதியார் கனவிலெழுந்தருளிஇந்நகரையழிக்கக்கடல்வருகின்றது அதனையழி ; வேல்விடுகவெனக் கட்டளையிட்டுமறைந்தருளினர், அவ்வாறேவேலினையெ ந்து அக்கடல் சுவறச்செய்தனர் என்பது புராண வரலாறாதலால் எஞ்சாத டலழித்து எனவும்,திருமால் வலக்கண்ணிற்றோன்றிமூத்தமனைவியராயிருந்த ள்ளிநாய்ச்சியார்முருகக் கடவுள்தமதிடத்துமிக்க அன்புடையராயிருத்தலின் த்திருமாலிடக்கண்ணிற்றோன்றி அக்கடவுளுக்குஇளையமனைவியராயிருக்குந் தய்வநாய்ச்சியாரை யவமதித்தொழுகுதலால் அத்தெய்வநாய்ச்சியார்மனங்க ன்றுதிருமுகம்புலர்ந்திருத்தலைஅம்முருகக்கடவுள்திருவுளங்கொண்டு, அவ்வ ளிநாய்ச்சியார் திருமுகநோக்கி இக்குற்றந்தீர நிலவுலகில் ஓர் மான்வயிற்றில் றக்கவெனச்சபித்தருள, அச்சாபமேற்றவள்ளிநாய்ச்சியார்மனங்கவன்றுகுறை ரப்பநாமேவந்து திருமணஞ்செய்வம்என்றருளினரென்பதுபுராணவரலாறாத ால் அரிவைமுருகாவென்றிசைக்கவருள்வாரிதருவன் எனவும், திருஞானசம்ப தப்பிள்ளையார்மதுரையிற்பொதிந்த அமணிருளையோட்டிச்சைவவிளக்கேற்றிச் சாழநாட்டுக்கெழுந்தருளுங்கால் இடையிலுள்ள திருத்தளிச்சேரியென்னுந் ிருப்பதியை வணங்கிஅதனருகிலுள்ளபோதிமங்கைக்கெழுந்தருளுங்காலையில் ரசமயகோளரி வந்தனர் என்னக்குறிக்குந் திருச்சின்னவோசையைக்கேள்வியு றபுத்தர்கள் மனம் புழுங்கிப்புத்தநந்தியோடுசார்ந்து அத்திருச்சின்னத்தைத் ;டுக்க, அவ்வாளுடைய பிள்ளையார் திருவாய்மலர்ந்தருளும் திருப்பாசுரங்களை ரைந்தருளும் அவர் நல்லம்மானாராகிய சம்பந்தசரணாலயர் அப்பாசுரங்களில் "புத்தர்சமண்கழுக்கையர்" என்னும்முதனினைப்புடையதிருப்பாசுரத்தைஎடுத் தக்கூற, அப்புத்தநந்தியின்மேல் இடிவிழுந்து அவன்றலை யிடறியதென்பது ுராண வரலாறாதலால் நவைதழுவு புத்தன்முடி யிடறி எனவுங் கூறினர்.

கஞ்சாதனத்தனைச் சிறையிடுவென், கடியகுன்றடுவென், எஞ்சாதகடலழி ந்து, இகலவுணர்களைகட்டு, நஞ்சாயசமணர்கழுவேறவிட்டு, நவைதழுவு புத்தன்முடியிடறி என்பது காறுந்தண்டமும், முத்தமிழ்க்கவிஞனைச் சிறை விடுப்பன், இருள்கடியுங் குணக்குன்று கனகும்பனுக்கு அருளுவன், அரிவை முருகாவென்றிசைக்க வருள்வாரிதருவன், அடைந்த கடவுளெனுமிரும்பயிர் தழைப்பவைப்பன், அடியர் நாடோறு மீடேற வருவன், அழலடுமென்பை ளினமங்கைக் கிணைசெய்வன் என்பது காறும் தானமும் எனக்கொள்க, (௪)

முக்கணாயகனரியதிருநுதற்குறுவேர்வின்
மூரிவடவையினுதித்தோன்

மூதண்டகோளகைகிழித்தெழுந்தாயிர
முகந்தொறும்வெகுளிபொழியத்
தக்கன்மகசாலையுட்புக்கியங்குறைகின்ற
சதகோடிதேவரையெலாஞ்
சாடிக்கொழுங்குருதியாடிப்பெருந்தூளி
யாடித்தருக்கியாடி
மிக்கவுனதுடலமொருகறியாகமாநில
மிகுத்தபேரம்மியாக
மேன்மைதருபாதவெங்குழவிகொண்டரைத்தனன்
வெயர்வினாலவனையுதவு
மக்கடவுள்கட்கனலமிக்குழவிநீவிரைந்
தம்புலியாடவாவே
யருமறையினொலிநிலவுசமரபுரிமுருகனுட
னம்புலியாடவாவே.

(இ-ள்.) முக்கண் நாயகன் அரிய திருநுதல் குறுவேர் வின் — திரிநே
திரங்களையுடைய இறைவரது ஆற்றுதற்கரிய அழகிய நெற்றியிற் பொடித்
சிறிய வேர்வையில், மூரி வடவையில் உதித்தோன் — பெரிய வடவாமுகாக்கின
போலத்தோன்றிய வீரபத்திரக்கடவுள், முது அண்ட கோளகை கிழித்து எழு
ந்துஆயிரமுகந்தொறும் வெகுளி பொழிய — பெரிய அண்டங்களைக்கிழித்தெழு
ந்து ஆயிரமுகங்கள் தோறுங் கோபஞ்சிந்த, தக்கன் மகம் சாலை உள்புக்கு இ
ங்கு உறைகின்ற சதகோடி தேவரை எல்லாம் சாடி — தக்கனுடைய வேள்வி
சாலையுட்புகுந்து உலவித்தங்குகின்ற அளவில்லாத தேவர்களை யெல்லாம் ஒ
த்து, கொழும் குருதிஆடி பெரும் தூளி ஆடி தருக்கி ஆடி — நிறைந்து பெருகி
வுதிரவெள்ளத்திற்றிளைத்துஅங்கெழுந்த பெரியதூளிப்படலத்திற்படிந்து இ
மாந்து விளையாடி, மிக்க உனது உடலம் ஒருகறியாக — அமுதத்தால் மேம்பட்
உனது சரீரம் ஒரு கறியாகவும், மாநிலம் மிகுத்த பேர் அம்மி ஆக — பெரிய நி
வுலகு கடினமாகிய பெரிய அம்மியாகவும், மேன்மை தருபாதம் வெம்குழ
கொடு அரைத்தனன் — அடியவர்க்குவேண்டி யாங்குத் தந்தருளும் தனது தி
வடியாகிய பெரிய குழவியைக்கொண்டரைத்தனன், இ குழவிவேர்வினால் அ
னை உதவும் அ கடவுள் கண் கனலம் — இந்த மதலை, தமது வேர்வினால் அவ்வீ
பத்திரக் கடவுளைத்தந்த அவ்விறைவரது கண்ணிற்றோன்றிய நெருப்பு, நீவிரை
ந்து அம்புலி ஆடவா — (நீயழைக்கவாராதொழியில் ஒறுப்பான் ஆதலால்) ச
திரனே நீவிரைந்து விளையாடவாராய்,—

முனிவர்களோடுதிருக்கயிலைக்குச்சென்ற தக்கன்சிவபெருமான் தன்னை
க்கண்டெழுந்து உபசரியாமையைத் தன்மனத்துட்கொண்டு சினந்து திருமாலை

எக்ஞபதியாகக்கொண்டுவேள்விதொடங்குங்கால், அங்குச்சென்றததீசிமுனிவர் எக்ஞகர்த்தாவாகிய சிவபெருமான் அங்கில்லாமையைக்கண்டு நின்வேள்வியழி யக்கடவதெனச் சபித்தனர், அதனைத்திருவுளத்துணர்ந்த சிவபெருமான் திரு நுதலிலரும்பிய வேர்வையிற் றோன்றிய வீரபத்திரக்கடவுள் அத்தக்கன்யாக சாலையுட்புகுந்து அங்குள்ள தேவர்சனை யொறுத்து அந்தக்கன்றலையைத்துமித் துச் சந்திரனைத்திருவடியாற்றேய்த்தனர் என்பது புராணவரலாறுதலால் மிக் கவுனதுடலமொருகறியாகமாகில மிகுத்தபேரம்மியாக - மேன்மைதருபாதவெ ங்குழவிகொடாத்தீனன் எனவும், சிவபெருமான் ஓர்காரணத்தால் மேரும லையிலெழுந்தருளியிருக்குங்கால் சூரபன்மனால் யாவுமிழந்து கவலுகின்ற தே வர்களங்குச்சென்று தமதுகுறை கூறிஇரந்துநிற்க, அவர்கள் குறையொழித்த ற்பொருட்டு ஆறுதிருமுகங்களோடு சிவபெருமானெழுந்தருளிய காலையில் அவ் வாறுதிருநுதற்கண்களினின்றுந் தோன்றிய ஆறுதீப்பொறிகளும் முருகக்கட வுள் திருவுருவென்பது புராணவரலாறுதலால் அக்கடவுள் "கட்கனலம் இக்கு ழவி எனவுங்கூறினர். நீர் வடிவாகிய குறுவேர்விற்றோன்றிய வீரபத்திரக்கட வுளால் திருமால்முதலியோர் பட்டபாடிது வாயின்நெருப்பிற்பிறந்த இவனால் படும்பாடு கூறுதல்எளிதல்லவென்பதுதோன்றக் கூறுதலின் இதனால்தண்டங் கூறினர். பின்னர்வருஞ் செய்யுளால் பேதங்கூறுகின்றார். (எ)

விரவுபலவண்டங்களிவனுட்டையெனவைத்து
விளையாடுபைங்கழற்காய்
விரிகருவியாறுமிவனேவறலைகொண்ட
வீறாழியக்காரராம்
பொருவரியவிருமாயையிவனுளநினைத்தபடி
புரிகின்றதாதியர்களாம்
பூரணத்திரண்ஞானவாரியெழுசுவைபமுது
போசனமிவன்றனக்கே
கருதரியமறைநாலுமிவனரசிருக்குமொரு
கதிர்மணிச்சிங்கவணையாங்
ககனசுரரனைவருமிவனைப்பணிந்துகை
கட்டும்பெருஞ்சேனையா
மரிபிரமரிவனுக்கமைச்சராமாதலா
லம்புலியாடவாவே
யருமறையினொலிநிலவுசமரபுரிமுருகனுட
னம்புலியாடவாவே.

(இ-ள்.) விரவு பல அண்டங்கள்—அடுக்கடுக்காய் ஒன்றை விட்டு ஒன்று நீங்காத பல வண்டங்களும், இவன் உண்டை என வைத்து விளையாடு பைங்

கழல்காய்—இவனுண்டையாகக் கொண்டு விளையாடா நின்ற பசிய கழற்காயாம், விரி கருவி ஆறாறும் — பரந்தமுப் பத்தாறுதத்து வங்களும், இவன் ஏவல்தலை கொண்ட வீறு ஊழியக்காரர் ஆம்—இவன் ஏவிய ஏவலைத்தலையிற் சுமந்த பெருமை வாய்ந்த ஊழியக்காரராம், பொருவரிய இருமாயை—ஒப்பில்லாத சுத்தம் அசுத்தம் என்னும் இரண்டு மாயைகளும், இவன் உளம் நினைத்தபடிபுரிகின்ற தாதியர்களாம்—இவன்திருவுளத்தில்நினைத்தவண்ணம்செய்கின்ற ஏவற்பெண்களாம், இவன் தனக்கு—இவனுக்கு, பூரணம் திரள் ஞானம் வாரி எழு சுவை அமுதுபோசனம், எங்கும்நிறைவாய்த்திரண்ட சிவஞானக்கடலிற்றோன்றியபேரின்பமே திருவமுதாம், கருது அரிய மறை நாலும்—வரையறுத்தற்கரியவேதங்கள் நான்கும், இவன் அரசு இருக்கும் ஒருகதிர் மணி சிங்கஅணை ஆம் — இப்பெருமான் அரசுவீற்றிருத்தற்கமைந்த ஒப்பில்லாத ஒளிவாய்ந்த இரத்தினங்களாலிழைத்த சிங்காதனமாம், ககன சுரர் அனைவரும் இவனை பணிந்து கைகட்டும் பெருஞ் சேனையாம்—விண்ணுலகிலுள்ள தேவரெல்லோரும் இவனை வணங்கிக் கைகட்டி நிற்கும் பெரிய சேனைகளாம், அரிபிரமர் இவனுக்கு அமைச்சர் ஆம்—திருமாலும் பிரமனும் இவன் கீழ்நின்ற மந்திரிகளாம், ஆதலால் அம்புலி ஆடவா—ஆதலால் சந்திரனே நீ விளையாட வாராய்.

ககனசுரர்என்றதில்அவர்களுள் நீயும் ஒருவனாதலால்உனக்குந் தலைவனுமெனஇதனாற்பேதங்கூறினர். அடியில் வரும் இரண்டு செய்யுள்களால் தானங்கூறுகின்றார். (சு)

மேகசாலங்களெனநீலக்கலாபம்
விரித்துவிச்சித்ரகிரிபோல்
விண்டுவினைமேவியோர்சண்டநாகத்தனை
விடுத்தவனைவேலைமூழ்கப்
பாகுவாரிதியளறுபட்டமொண்டுசிவலோக
பரியந்தமேவிநின்று
பரமனுலகும்பரந்தாமனுலகும்பரி
மளிக்கின்றகமலனுலகும்
போகமலிகற்பகாடவிநீழல்வாழ்வே
பொலிந்தபுருகூதனுலகும்
புகருலகுமதியுலகுகதிருலகுபூவுலகு
பொங்கப்பொழிந்துமீளு
மாகிறைவர்பின்வருந்தோகையின்றதன்னுட
னம்புலியாடவாவே
யருமறையினொலிநிலவுசமரபுரிமுருகனுட
னம்புலியாடவாவே.

(இ-ள்.) மேகசாலங்கள் என்ன நீலக்கலாபம் விரித்து—மேகபடலங்களைப்போலக் கரிய தோகையை விரித்து, விச்சித்திர கிரிபோல் விண்டு வினைமேவி—பல நிறம்வாய்ந்த மலையைப்போல் திருமாலினையடைந்து, ஓர் சண்டநாகத்து அணைவிடுத்து அவனை வேலைமூழ்க—ஓர்கொடிய சர்ப்பமாகிய படுக்கை அத்திருமாலை விடுத்துக் கடலிலே மூழ்கி மறைய, பாகு வாரிதி அளறுபடமொண்டு—கருப்பஞ்சாறாகியகடல்சேறுபடமுகந்து, சிவலோகபரியந்தம்மேவி நின்றுசிவலோகபரியந்தம்பொருந்திநின்று, பரமன் உலகும் பரந்தாமன் உலகும்—அச்சிவலோகமும் திருமால் உலகமும், பரிமளிக்கின்ற கமலன் உலகும்—கமழ்கின்ற தாமரையில் வசிக்கும் பிரமனுலகமும், போகம்மலி கற்பக அடவி நீழல் வாழ்வேபொலிந்த புருகூதன்உலகும்—போகமிக்க கற்பகச்சூழலின் நிழலின் வாழ்வாலே விளங்கிய இந்திரனுலகமும், புகர் உலகும் மதி உலகும் கதிர் உலகும் பூஉலகும் பொங்க பொழிந்து மீளும்—சுக்கிரனுலகும் சந்திரனுலகும் சூரியனுலகும்பூவுலகும் ஆகிய இவ்வுலகங்கள் சுவையால் விளங்க அக்கருப்பம் பாகினைப்பொழிந்து திரும்பும், ஆகு இறைவர் பின்வரும் தோகை இறை தன்னுடன் அம்புலியாடவா—மூடிகவூர்தியையுடைய விநாயகக்கடவுள் பின்வந்தருளிய மயிலூர்தியையுடைய முருகக்கடவுளோடு சந்திரனே விளையாடவாராய்.

மயிலின்றோகையில் பலநிறமுடைமையால் அதனைவிரித்துத் திருமாலையடைதல் பலநிறம்வாய்ந்தமலைபறந்து திருமாலையடைந்ததொக்குமெனக்கூறுதலால் இது இல்பொருளுவமையணி. பாம்பினுக்குப் பகைமயிலாதலால் மயிலூர்தி திருமாலையடைந்தபோது அத்திருமாலைச்சுமந்த ஆதிசேடன் அத்திருமாலைப் பாற்கடலுள்விடுத்து அதனுளஞ்சி ஒளித்ததென்பதுதோன்ற விண்டுவினைமேவியோர் சண்டநாகத்தணைவிடுத் தவனைவேலைமூழ்க எனவும், திருப்பாற்கடலுக்குக் கருப்பஞ்சாற்றுக்கடல் அப்பாற்பட்டதென்பதுதோன்றப்பாகுவாரிதிஎனவும், அதனைமுற்றும் முகந்ததென்பதுதோன்ற அளறுபடமொண்டு எனவும், முகந்தபாகினைப் பொழியச்சிவலோகமளவுஞ்சென்றதென்பதுதோன்றச்சிவலோகபரியந்த மேவிஎனவும், அதுவொழிந்தவுலகுசிவலோகமுதல்நிலவுலகுஈறாக ஒன்றின்கீழொன்று அடுக்காயுள்ளனவென்பதுதோன்ற பரமனுலகும் பரந்தாமனுலகும் பரிமளிக்கின்ற கமலனுலகும்போகமலி கற்பகாடவிநீழல் வாழ்வே பொலிந்த புருகூதனுலகும் புகருலகு மதியுலகு கதிருலகு பூவுலகு எனவும், இவ்வுலகங்கள்தோறும்மிகவும்பொழிந்த தென்பதுதோன்றப்பொங்கப்பொழிந்து எனவும், அவ்வுலகங்களினின்று மேகம்போலமீண்டது என்பது தோன்ற மேகசாலங்களென மீளுந்தோகை யெனவுங்கூறினர்.

நீஅவனுடன் விளையாடவந்தால் முன்னர்ப்பொழிந்ததுபோல இன்றும் பொழிவானென்ன இதனால் தானங்கூறினர். மேகசாலங்களென, பொழிந்து மீளும் தோகையெனவந்தது தொழில்பற்றிவந்த வுவமையணி. ஆகுஇறைவர் பின்வரும் இறையெனமுடிக்க. தோகையெனல் இடைப்பிறவரல். வரும்என்னும்பெயரெச்சம் இறை என்னும் வினைமுதல் கொண்டது. (எ)

புலன்மறுகுபொறியையுறுகமடமெனவுட்கொண்டு
பொருமுக்குணங்கள்வென்று
பூரகமிரேசகந்தாரகமெனுந்தொழில்
புகன்றகாலிற்பயின்று
கலகமறுநடுநாடிசென்றுமுச்சுடர்களிற்
கதிர்மண்டிலங்கடந்து
கணபணுடவியுரகன்முடியிற்றுளக்கமறு
கம்பத்தினசைவற்றுளோர்
மலவிரவுவிடியமிகுதுறவுணர்வுநஞ்சயறுதன்
மலிகுணக்குன்றின்முடிமேன்
மன்னுஞானக்கதிரொழுந்தொளிபரப்ப
மாறுதுதசநாதமுழுது
மலகில்பவதுயிலறக்கூவுசேவலனுட
னம்புலியாடவாவே
யருமறையினொலிநிலவுசமரபுரிமுருகனுட
னம்புலியாடவாவே.

(இ-ள்.) புலன் மறுகு பொறியை—சத்தமுதலிய புலன்களின் வழியேசெல்லும் சுரோத்திரமுதலிய வைம் பொறிகளையும், உறு கமடம் என உட்கொண்டு—தனதுறுப்புகளையடக்கும் ஆமையைப்போலத்தனது வழிப்படுத்தி, பொரு முக்குணங்கள் வென்று—தனது நிலையொடு போர்செய்யும் சாத்துவிக முதலிய முக்குணங்களை வென்று, இரேசகம் பூரகம் தாரகம் என்னும் தொழில் புகன்ற காலில் பயின்று—இரேசம் பூரகம் கும்பகமென்னும் தொழிலமைந்த காற்றைத் தடுத்தலென்னும் பிராணயாம நிலையிற் பழகி, கலகம் அறும் நடு நாடி சென்று—அத்தொழிலிற் பயிலுதலொழிந்த சுழிமுனையின் வழியேசென்று, முச்சுடர்களின் கதிர் மண்டிலம் கடந்து—சோம சூரியாக்கினி என்னும் மூன்று மண்டிலங்களுள் அக்கினிமண்டிலத்தைக் கடந்து, கணம் பணுடவி உரகன் முடியில் துளக்கம் அறு கம்பத்தின் அசைவற்று—கூட்டமாகிய ஆயிரம் படங்களையுடைய குண்டலி சத்தியென்னும் பாம்பின் முடியின்கீழ்நின்ற சுழிமுனையில் அசைவற்றுநின்ற சிவயோகியர்கள், மலஇரவு விடிய—ஆணவமலமாகிய கங்குல்விடியும்படி, மிகுதுறவுணர்வு—மிக்கதுறவின்மேல்உணர்ச்சியும், நசைஅறுதல்—காமம் ஒழிதலுமாகிய, மலிகுணம் குன்றின் முடிமேல்—மேம்பட்ட சாத்துவிககுணமாகிய மலையின் சிகரத்தில், மன்னும் ஞானம் கதிர் எழுந்து ஒளிபரப்ப—நிலைபெற்ற சிவஞானமென்னும் சூரியனெழுந்து ஒளிவீச, மாறுது—அந்நிலையினின்று பெயராமல், அலகு இல் பவம் துயில் அற—கணையிறந்த பிறப்பென்னும் நித்திரைநீங்க, தசநாத முதுழும் கூவு சேவலன் உடன்—தசநாத

ழுதுங் கூவாநின்ற சேவற்கொடியையுடைய இவனோடு, அம்புலி ஆடவா—
திரனே நீவிளையாடவாராய்,—

ஆமைதனதுறுப்புகளை யடக்குதல்போலப் புலன்வழி செல்லும் இந்
ரியங்களை மனத்தின் வழியேநிற்க முன்னர் அடக்கவேண்டுவது யோகத்திற்
ரிய நிலையாதலால் புலன்மறுகு பொறியையுறுகமடமெனவுட்கொண்டு என
ம், மனம்சலிப்பதற்கு, சாத்துவிகம், இராசதம் தாமதம் என்னும் முக்குணங்
ளும் கருவிகளாதலால் ஒருமுக்குணங்கள் வென்றெனவும், இரேசகம் உள்
ளயுள்ள அசுத்தவாயுவைக்கழித்தலும், பூரகம் புறத்திலுள்ள சுத்தவாயுவை
ள்ளேபூரித்தலும், கும்பகம்இவ்விரண்டு மல்லாதவாயுவை உள்ளேகும்பித்த
லும்ஆகிய இவைகள்தொழில்களாதலால்பூரகம் இரேசம் தாரகமெனுந்தொழில்
கன்றஎனவும், இவ்வாறு பிராணவாயுவைத்தடுத்துநிற்றல் பிராணாயாமநிலையா
லால் காலிற்பயின்று எனவும், அத்தொழில்களினின்று தியானநெறியிற்
செல்லுதலால் கலகமறும்எனவும், அக்கும்பித்தவாயுவைச் சுழிமுனையின்வழி
ற்செலுத்தி ஆருதாரங்களிலுள்ள கடவுளரைத்தெரிசிக்க வேண்டுவதாத
ால் நடுநாடிசென்றெனவும், அங்குள்ளமண்டிலங்களுள்மூலாதாரம் அக்கினி
ண்டிலத்தினிடத்திலாதலில்அம்மண்டிலத்தினின்றும்விநாயகர்முதலிய கடவு
ளைத் தெரிசிக்கவேண்டுதலால் கதிர்மண்டிலங் கடந்துஎனவும், அம்மண்டில
தினின்று பாம்புவடிவாய்க்குண்டலிசத்தி சுழிமுனைத்துவாரத்தைமறைத்து
ற்றலால் அச்சுழிமுனையைக்கணபணுடவியுரகன் முடியிற்றுளக்கமறுகம்பமெ
எவும், அக்கம்பத்தினின்று ஆக்கினைத்தானத்திலுள்ள சதாசிவமூர்த்தியைத்
யொனித்து நிற்கவேண்டுமாதலால் அசைவற்றுளோர்எனவும், அத்தியானத்
ால் ஆணவமலவிருளொழியச் சிவஞானமென்னுஞ் சூரியனுதிக்குமாதலால்
லவிரவுவிடியமன்னு ஞானக்கதிரொழுந்தொளிபரப்ப எனவும், அச்சூரியன்
தயஞ்செய்யு மலை, துறவின்மேற்செல்லுமுணர்ச்சியும், காமாதிமுதலியமுக்
குற்றமொழிதலும்சாத்துவிகமாகிய குணத்தாலாதலால் அக்குணத்தையோர்
லையாகவுருவகஞ்செய்து மிகுதுறவுணர்வு நசையறுதன்மலி குணக்குன்றின்
முடிமேல்எனவும், அச்சூரியனுதயஞ்செய்யுங்கால் பிறப்பென்னுந்துயிலொழியு
ாதலால் அலகில்பவதுயிலறஎனவும், அச்சூரியனுதயமாதலை யறிவுறுத்தற்குச்
சேவல்கூவவேண்டுமாதலால்கூவுசேவல்எனவும், அச்சேவல்கூவுதல்,—பிரா
ணாயாமஞ்செய்யுங்கால் அங்குட்டவிரலாற்காதுகளையடைத்து, கண்களைத்தற்
சனிவிரலாற்புதைத்து, மத்திமைவிரலால் நாசியைநெருக்கி, வாயைமூடிப்பிரா
ணவாயுவைக்கும்பிக்குங்கால்அங்குத்தசநாடிகளினின்றும் சதங்கையோசைபோ
லவும், சிலம்போசைபோலவும், மணியோசைபோலவும், சங்கத்தொனிபோல
வும்,வீணையினோசைபோலவும், தாளத்தினோசைபோலவும், வேய்ங்குழலோசை
போலவும், பேரிகையினோசைபோலவும், மத்தளத்தினோசைபோலவும், மேகத்
தினோசைபோலவும்,சிரசின்மத்தியில்அதோமுகமாய்த்தோன்றுமாதலால் தச
நாதமுழுதுங்கூவுசேவலன்எனவுங்கூறினர். தசநாதங்கள்தோன்றியக்கால் மெ
ய்ஞ்ஞானமுதையமாதலும், அம்மெய்ஞ்ஞானத்தால் பிறப்பொழிதலும் எனக்

காரணகாரியமாய்க்கூறுதலால் காரணமாலையணி. வாயுதாரணையைத்தாரகமெ
ன்றார். இதனால்நீயும் இங்கணுகில்பிறப்பொழியுமென்றதுபோதரலால் தான
கூறினர். (அ

## வேறு.

கானவர்குலமடமானைமணந்தகடம்பன்கரைபொருநீர்க்
கஞ்சச்சரவணவணைமிசைதனினனிகண்டுயில்சிறுகுழவி
யானவுன்மனைவிவளர்த்திடுமகனிவனம்மானுரலூடே
யன்றளைதிருடிக்கட்டுணியிடையனனையுஞ்சிறுவாலை
யூனமிலத்தன்பித்தனிவற்கென்றுன்னியிருந்துவிடேல்
லுலகசராசரமிவன்முத்தொழில்விடவுண்டோகண்டிகொலோ
வானவர்சேனபதியுடனாடிடவாவம்புலிவாவே
மலிசமராபுரிமுருகனதருகேவாவம்புலிவாவே.

(இ-ள்.) கானவர்குல மடமானை மணந்த கடம்பன்—இவனே வேட
குலத்திற்றோன்றிய மடமைக் குணம்வாய்ந்த வொருமானைக்கூடிய கடம்பன்
கரைபொருநீர் கஞ்சம் சரவண அணைமிசைதனில் நனிகண்துயில் சிறுகுழவி—
கரையொடுமோதும் நீர்மயமாகிய தாமரைமலர்நிறைந்த சரவணப்பொய்கையா
கியமெத்தையின்மேல்மிகவுங்கண்டுயில்கொள்ளும்இவன்சிறியபிள்ளை, ஆனஉன்
மனைவிவளர்த்திடுமகன்—அமைந்த உன்மனைவியாகிய கார்த்திகையென்பவள்
செவிலித்தாயாக வளர்த்தமகன், இவன்அம்மான் அன்று அளைதிருடி உரலோ
கட்டுணி இடையன்–இவன் நல்லம்மான் அக்காலத்தில் வெண்ணெய்திருடி உ
லோடுகட்டுண்ட இடையன், அன்னையும் சிறுவாலை—இவன் தாயும் சிறி
பாலப்பெண், இவற்கு ஊனம் இல் அத்தன் பித்தன் என்று உன்னி இருந்
விடேல்—இவனுக்குக் குற்றமில்லாத பிதா பித்தனென்று கருதிவாராம
வாளாவிருந்து விடாதே, உலகம் சராசரம்இவன் முத்தொழில் விடஉண்டோ-
உலகங்களும் அவற்றிலுள்ள இயங்கியற்பொருள்களும் நிலையியற்பொருள்களு
இவனது சிருட்டிதிதிசங்காரமென்னும் முத்தொழிலிற்பட்டனவன்றிவேறுண்
டோ, கண்டிகொல்லோ–நீயும் கண்டாயல்லவா (ஆதலால்) வானவர் சேனபதி
உடன் ஆடிட அம்புலிவாவா—தேவர்கள்சேனைக்குத்தலைவனாகிய இவருடனே
சந்திரனேவிளையாடவாராய், மலிசமராபுரி முருகனதுஅருகே அம்புலிவாவா—
வளம்நிறைந்த சமரபுரியிலெழுந்தருளிய முருகக்கடவுளதுபக்கலிலே சந்திரனே
நீவிளையாடவாராய் விளையாடவாராய்,—

கடம்பன் இன்சொல்லுக்குச்சிறிதுமிணங்காத கடினமனமுடையவன்
சரவணவணைமிசை தனினனிகண்டுயில் சிறுகுழவி — தனக்கெனவோர் இ
இல்லாமையால் சரவணப்பொய்கையையே ஓர் அணையாகக்கொண்டு க
டுயில்செய்யுஞ் சிறுபிள்ளை, இவன் ஆனஉன்மனைவிவளர்த்திடுமகன்—இவனு
குப்பெற்றதாயென்று ஒருவருமில்லாமையால் உன்மனைவியாகிய கார்த்தி

ன்பவர் மனமிரங்கி அறத்தினையோம்பற்குப்பாலூட்டினள், அம்மான் அன்
அலைதிருடி உரலோடேகட்டுணிஇடையன்—இவனதுநல்லம்மான் ஆயர்க
ல்லில்கரந்துசென்று உறியிலுள்ள வெண்ணெயைத்திருடி யுண்டமையால்
வர்களால் உரலோடுபிணித்து அடிக்கப்பட்டஓர் சிற்றிடையன், அனையும்
வாலை—தாயும்ஓர் சிறியகன்னிப்பெண், இவற்குஅத்தன்பித்தன்—இவனுக்
த் தந்தையோபித்துப்பிடித்தவன். எனக்கூறியபழிப்பால்? கடம்பமலர்மாலை
யுடையவனும் தேயு, வாயு, கங்கை, இவர்களாற்சுமக்கமாட்டாத வலிய
ம், என்றும்பிள்ளைமைப்பருவமுடையவனும், இவனதுநல்லம்மான்இயங்கியற்
பாருள்களும், நிலையியற்பொருள்களுமாகிய சராசரங்கள்யாவும் தானேயென்
உலகிற்கறிவுறுத்தஉரலோடுபிணிக்கப்பட்டு அடிபட்டவனும், அவனதுதாயா
உமையம்மை எல்லாவுலகங்களையுமீன்றகன்னியும், அவனதுபிதாவோ
பல்பாகவேஞானமுடையவனும் எனப்புகழ்தோன்றக்கூறுதலால் பழிப்பது
பாலப் புகழைப்புனைந்து கூறுதலில்வந்தவஞ்சப்புகழ்ச்சியணி. இதனால்பே
க்கூறுவார்போன்று நீவரில்உனக்குஅருள்வான் என்பதுதோன்றஉலகசராச
இவன்முத்தொழில் விடவுண்டோகண்டிகொலோஎனத்தானங்கூறினர், பின்
நஞ்செய்யுளாலுந் தானங்கூறுகின்றார். (கூ)

குறுமுட்டாணெட்டிதழ்வெண்கமலக்கோயிலிருந்தவடன்
கொழுநன்றொழிறந்திடவோபச்சைக்கொண்டற்கிணைசெயவோ
தறுகட்சிறுகட்டழைசெவிவெள்ளைத்தந்திக்கரசுறையுந்
தருநிழற்ரவோதுருவனிருக்குந்தங்கக்கிரிதரவோ
பிறவிப்பகையைத்தெறவோதண்கலைபிரியாதருடரவோ
பேசருமறுவிலரியாவருநிற்கப்பேரருளேதறியே
மறுவுற்றுளநினைவாவாவென்றனன்வாவம்புலிவாவே
மலிசமராபுரிமுருகனதருகேவாவம்புலிவாவே.

(இ-ள்.) குறு முள்தாள் நெடு இதழ்—சிறியமுள்ளமைந்த தண்டை
ம் நெடிய இதழையுமுடைய, வெண்கமலம் கோயில் இருந்தவள் தன்கொழு
ன்தொழில்தந் திடவோ—வெண்டாமரையாகிய கோயிலிலெழுந்தருளிய கலை
கள்கணவனாகிய பிரமனதுபடைப்புத் தொழிலையுனக்குத்தரவோ, பச்சைக்
காண்டற்கு இணைசெயவோ—பசியமேகம்போலக்கருநிறமுடையதிருமால்கா
ற்றொழில்தந்து அவனுக்கிணையாகவுன்னைச்செய்யவோ, தறு கண் சிறு கண்
ழைசெவி வெள்ளைதந்திக்கு அரசு உறையும்தருநிழல்தரவோ—அஞ்சாமையை
ம்சிறுகண்ணையும் தழைந்தசெவியையுமுடைய வெள்ளையானைக்கரசனாகிய இந்
ரன்வசிக்கும் கற்பகநிழலைத்தரவோ, துருவன் இருக்கும் தங்கக்கிரி தரவோ—
ருவநக்ஷத்திரமிருக்கும் மேருமலையையுனக்குக்காணியாகத்தரவோ, பிறவிப்
கையைதெறவோ—உன்னைவிடாது தொடர்ந்தபிறவியாகிய பகையைப்போ
கவோ, தண்கலை பிரியாது அருள் தரவோ—தண்ணிய உனது கலைகள் உன்

னினின்றும் இனிப்பிரியாதிருக்க அருள்தந்தருளவோ, பேசரும் மறு இலா இயாவரும்நிற்க—சொல்லுதற்கரிய மறுவிகந்தோர் யாவரும்வாளாநிற்க, பேர் அருள் ஏது அறியேம்—நின்னிடத்தில்வைத்த பேரருள் யாதோ அதனை அறியே லேம், மறு உற்று உள்ள நின்னை வாவா என்றனன்—இயல்பாகவே மறுவமை ந்தவுன்னை வாவாவென்று விளையாட அழைத்தனன், அம்புலிவாவா—சந்திர னே நீவிளையாடவாராய் வாராய்,—

உத்தானபாதனென்னும் ஓரரசன்மனைவிமார்ராகிய சுநிதி, சுரிதியென் னுமிருவருள் சுரிதியென்பவள்பெற்றதுருவன், தனதுதந்தையின் தொடைமே லிருக்க, அதுகண்டுபொறுத்வளாய்ச் சுரிதியென்பவள் என்மகனிருத்தற்குரி யன் நீயிருத்தற்குரியையோ அவன்தொடையினின்றும் இழிகவெனச்சினந்து கூறியபோது,அதுகேட்டதுருவன் அவன்தொடையினின்றிழிந்துகண்கலுழ்ந்து தன்தாயினிடத்துவந்துநிகழ்ந்ததைக்கூற, புதல்வனேஉன்பிதாவின்தொடைமே லிருத்தலோ பெரும்பதம், தேவர்களுக்குங்கிடைத்தற்கரிய பதம்பெறுதற்குத் தவஞ்செய்வாயெனவிடுத்தனள். அத்துருவன் தாய்விடைபெற்றுக்காட்டிற் சென்று கவுதமமுனிவன்ஆச்சிரமமடைந்து அம்முனிவனைவணங்க, அம்முனி வன் அனுஞையால் திருமாலைநோக்கித்தவஞ்செய்து அத்திருமாலால்மேருமலை யின் முகட்டிலுள்ளதுருவபதத்தில் என்றும்மாறுதிருக்க வரம்பெற்று அங் கிருந்தனன்என்பது புராணவரலாறுதலால் துருவனிருக்குந்தங்கக்கிரிதரவோ எனக்கூறினர்.

மறுவில்லாதவடியார் பெறுதற்குரிய பிரமன்படைப்புமுதலியவற்றைப் பெறுதுவாளாநிற்க, உன்னைமட்டும்வாவென்றழைத்தமையால் முற்கூறியவற் றுள்யாதாயினும் ஒன்றுதருதற்கோயாமறியோம். எனக்கூறுதலில் இதனைத் தானங்கூறினர். (க0

அம்புலிப்பருவம்முற்றிற்று.

---

## சிறுபறைப்பருவம்.

இரண்டாமாண்டில்சிறுபறைகொட்டுதல் நிகழ்வதாதலால் பதினெட டாமாதத்தில் அம்புலியைவருகவென்றழைக்கும் பருவத்திற்குப்பின் சிறுபறை ப்பருவத்த தக்காலவரையறையால்முறையே வைத்தார்.

கனககுவடெனநிலவுவீரவாகுத்தலைவர்
ககனமுகடளவுமிரதக்
கணமணிமுழக்குங்கவுட்குழிதிறந்துபாய்
கலுழிமதகரிமுழக்கு
மனகதியினைப்பொருவுகுரகதமுழக்கொடு

வயப்பூதகணமுழக்கும்
வால்வளைமுழக்குமதிபேரிகைமுழக்குமகல்
வானவர்கள்முடிமுழக்கும்
பனகவணைதுயிலுமவன்முதலோருபயதிசை
பல்லாண்டுசொலுமுழக்கும்
படிறவுணமாசுணக்குருமெனச்செவிபுகப்
பண்டுசூர்வென்றசதுரா
தினகரனைநிகர்சமரபுரியிலுறைகுமரவேள்
சிறுபறைமுழக்கியருளே
செறிகலபமயின்முதுகிலுதயசின்மயதூய
சிறுபறைமுழக்கியருளே.

(இ-ள்.) கனகம் குவடு எனநிலவும் வீரவாகு தலைவர்—மேருவைப்போல
ளங்கும் வீரவாகுமுதலிய நவவீரர் செலுத்தும், ககனமுகடு அளவும் இரதம்
ணமணி முழக்கும்—அண்டத்தின் முகட்டையளாவிய தேரிற்பூட்டிய மணி
ர் கூட்டத்தின் முழக்கமும், கவுள் குழி திறந்துபாய் கலுழி மதகரி முழக்கும்—
போலத்திலுள்ள கரடந்தூராது பாயும் காட்டாறுபோலச் சிந்தும் யானை
ன் முழக்கமும், மனம்கதியினை பொருவு குரகதம் முழக்கொடு வயம் பூதக
ம் முழக்கும்—மனோவேகத்தையொத்த குதிரையினது கனைப்போடு வெற்றி
ாய்ந்த பூதகணங்களின் ஆரவாரமும், வால் வளை முழக்கும் அதி பேரிகை முழ
கும்—வெள்ளியசங்குகளின் முழக்கமும் பெரிய பேரிகைகளின் அதிர்ப்பும்,
கல் வானவர்கள் முடி முழக்கும்—அகன்ற விண்ணுலகிலுள்ள கிரீடம் ஒன்
ருடொன்றுரிஞ்சுதலால் எழுந்த ஆர்ப்பும், பன்னகம் அணை துயிலுமவன்
தலியோர் உபய திசைபல்லாண்டு சொலும் முழக்கும்—சர்ப்பசயனத்தில்
யில்கூரும் திருமால்முதலியோர் இருபக்கலிலுமுள்ள உபயதிசைகள்தோறும்
ன்று பல்லாண்டு கூறுங் கோஷமும், படிறு அவுணமாசுணத்துக்கு உரும் என
செவிபுக பண்டு சூர்வென்ற சதுரா—வஞ்சனையையுடைய அசுரர்களாகிய பாம்பு
ளுக்கு இடிபோலஅவர்கள் காதுகளிலேற முற்பொழுது சூரபன்மனைவென்ற
துரப்பாடுடையவனே, தினகரனை நிகர் சமரபுரியில் உறை குமரவேள்—ஒளி
ால் சூரியனையொத்த சமரபுரியில் எழுந்தருளிய முருகக்கடவுளே, சிறுபறை
ழக்கி அருள்—சிறுபறையைக் கொட்டியருளாய், செறி கலபமயில் முதுகின்
தய சின்மயதூய சிறுபறை முழக்கி அருள்—நெருங்கிய கலாபத்தையுடைய
மயில்முதுகிலுதயஞ் செய்தருளிய ஞானவடிவாகிய நிமலனே சிறுபறை முழக்கி
அருளாய்;—

வீரவாகுமுதலிய நவவீரர்களாவார்,— (க)

வீரவாகு, வீரகேசரி, வீரமகேந்திரன், வீரமகேச்சுரன், வீரபுரந்தரன், வீரராந்தகன், வீரமார்த்தாண்டன், வீரராக்கதன், வீரதீரன். என்பவர்களாம்.

உபயதிசையென்றது சூரபன்மனுடைய மயேந்திரபுரியைநோக்கி தென்றிசைமுகமாகச் செல்லுங்கால் மேல்பாலுங் கீழ்பாலுமாம்.

குட-முழாவாணனீராயிரகரங்கொண்டு
குமுகுமெனவேமுழக்கக்
கொண்டலினிறக்கடவுண்முழவொலிமுழக்கவிரி
கோகனகமாளிகையினன்
றடமருவுகைத்தாளநற்றொனிமுழக்கவந்
தமருகத்தொனிமுழக்கத்
தாரளிமுழக்கமறைநூபுரமுழக்கவிரு
தாள்கடாளம்முழக்க
அடனதியிரைக்கமணியரவுகளிரைக்கவுழை
யலறமுயலகனெளிவுற
வாடகமணிச்சபையினடகமிழைத்துமைக்
கன்புசெயுமின்பவடிவோன்
றிடமருவுகுமரனேசமரபுரிமுருகனே
சிறுபறைமுழக்கியருளே
செறிகலபமயின்முதுகினுதயசின்மயதூய
சிறுபறைமுழக்கியருளே.

(இ-ள்.) குடமுழா வாணன் ஈராயிரம் கரம் கொண்டு குமு குமு எனவே முழக்க—வாணசுரன் தனது இரண்டாயிரங் கைகளாலும் குடமுழாவைக்குமுகுமென ஓர்பால் முழக்கவும், கொண்டலின் நிறம் கடவுள் முழவொலி முழக்க—மேகம்போலுங் கரியநிறத்தையுடைய திருமால் மத்தளத்தினொலியை ஓர்பால் முழக்கவும், விரிகோகனக மாளிகையினன்—மலர்ந்த தாமரைமலர் மாளிகையையுடைய பிரமன், தடமருவு கைதாளம் நல் தொனி முழக்க—பெருமையமைந்த கையிலேந்திய ஒலிமிக்க தாளத்தின்றொனியை ஒருபால் முழக்கவும், அம் தமருகம்தொனி முழக்க—அழகிய திருக்கரத்திலேந்திய தமருகத்தின் ஒலி ஓர்பால் முழங்கவும், தார்அளி முழக்க—சடாபாரத்திலணிந்த கொன்றைமாலையில் மூசியவண்டுகள் ஓர்பால் முழங்கவும், மறை நூபுரம் முழக்க—வேதமாகிய சிலம்புகள் ஓர்பால் முழங்கவும், விருது ஆள்கள் தாளம் முழக்க—விருதுபாடுவோர்கள் தாளத்தை ஓர்பால் முழக்கவும், அடல்நதி இரைக்க—வலிய கங்காநதி சடாபாரத்தில் ஓர்பால் கோஷிக்கவும், மணி அரவுகள் இரைக்க—இரத்தினச் சுடிகையையுடைய பாம்புகள் ஒருபால் ஒலிக்கவும், உழை அலற முயலகன் நெளிவுற—திருக்கரத்திலேந்திய மான் ஓர்பால் கதறவும் முயலகன் நெளியவும், ஆடகம் மணிசபையின் நாடகம் இழைத்து—பொன்னாகிய இரத்தினமமைந்த சபையில் ஆனந்தத்தாண்டவஞ் செய்து

மக்கு அன்பு செய்யும் இன்ப வடிவோன்—உமையம்மைக்கு அன்பு செய்யும் ின்பவடிவாகிய சிவபெருமானது, திடம் மருவு குமரனேசமரபுரி முரு ா சிறுபறை முழக்கி அருள்—திடம்வாய்ந்த குமரனே சமரபுரியில் எழுந் ளிய முருகனே சிறுபறை முழக்கி அருளாய்,—

தேவதாருவனத்திருடிகள் ஏவியதமருகத்தைச் சிவபிரான் ஏந்திநிற்ற ் தமருகத் தொனிமுழக்க எனவும், மக்கள் நோய் அறத் தாய் பத்தியம் ற்றல்போல, ஆன்மாக்கள்பக்கும்வாய்ந்துய்தற்பொருட்டுக் கருணைகூர்ந்த மயம்மையின் பொருட்டே சிவபிரான் ஆனந்தத்தாண்டவஞ்செய்தலால் மக்கன்புசெயுமின்பவடிவோன் எனவும், சிவபெருமான்திருநுதற்கட்கன முருகக்கடவுளது திருவுருவாதலால் திடமருவுகுமரனே எனவுங்கூறினர்.

ஆறுசமயக்கடவுள்வேறுவேறின்றியா
னொருவனேயங்கங்கிருந்
தன்பர்க்குமுத்திதருவித்தென்றியாவர்க்கு
மறிவித்தவதனமணியே
வீரசுரர்துஞ்சவெஞ்சிறைவிண்டுவானவர்கள்
விண்ணகத்தமுதருந்த
வெற்றிமுரசன்றுனதுசேனைவாரிதியிடை
வியப்புறமுழங்குமுறைபோன்
மாறுபடுகாமாதிவெம்படைகடுஞ்சிட
மலச்சிறைகழன்றுஞான
மாவிண்ணகத்திருந்தானந்தவமுதெனது
வாய்மடுத்துண்ணவறிவிற்
றேறுமறைநாதமெனநினதுமுளரிக்கரச்
சிறுபறைமுழக்கியருளே
செறிகலபமயின்முதுகினுதயசின்மயதூய
சிறுபறைமுழக்கியருளே.

(இ-ள்.) ஆறு சமயம் கடவுள் வேறு வேறு இன்று—சைவமுதலிய றுசமயங்களுக்குரிய கடவுளர் தனித்தனியில்லை, யான் ஒருவனே அங்கு ங்கு இருந்து அன்பர்க்கு முத்திதருவித்து என்று—நானொருவனே அவ்வச் மயங்கள் தோறும் நின்று அடியருக்கு மோட்சந்தரும் மூலகாரணனென்று, வர்க்கும் அறிவித்த வதனமணியே—யாவர்க்கும் அறிவுறுத்திய ஆறுதிருமு ங்களையுடைய மாணிக்கமே, வீறு அசுரர் துஞ்ச வெம் சிறை விண்டு வானவர் ர் விண் அகத்து அமுது அருந்த—தமக்கொப்பில்லையென்று இறுமாந்த அசு ள்அழியத் தேவர்கள் கொடிய சிறைச்சாலையினின்று நீங்கிவிண்ணுலகில் மதினை நுகர, வெற்றி முரசு அன்று உனதுசேனைவாரிதி இடை வியப்புற முழ

ங்கும் முறைபோல்—செயமுரசு அக்காலையில் உனது சேனைக்கடலின் நடுவில் யாவரும் அதிசயிக்க முழங்கு முறைமைபோல, மாறுபடு காமம்ஆதி வெம் படைகள் துஞ்சிட—என்னுடு மாறுபட்ட காமமுதலாக அறுவகைப்பட்ட கொடியசேனைகளழிய, மலம் சிறை கழன்று—யான்ஆணவமலமாகிய சிறையி னின்று நீங்கி, ஞானம் யா விண் அகத்து இருந்து—சிதாகாசத்தில் விரவியிரு ச்து, ஆனந்த அமுது எனது வாய் மடுத்து உண்ண—பேரின்பமாகிய அமுதினை எனது வாயால் மடுத்துண்டு தேக்கெறிய, அறிவில் தேறும் மறை நாதம் என் ன—அக்காலத்தெழுந்த சிவஞானவுணர்ச்சியாற் றெளிந்துணரும் அருளும் உனதனுபூதியாகிய ஒலியைப்போல, நினது முளரி கரம்சிறு பறை முழக்கி அரு ள்—உனது தாமரைமலர்போன்றகையால் சிறுபறையை முழக்கியருளாய்,—

சைவம், பாசுபதம், மாவிரதம், காளாமுகம், வாமம், பைரவம்என்னும் அகச்சமயமும், பாடாணவாதம், சமவாதம், சங்கிராந்தவாதம், ஈஸ்வரஅவிகார வாதம், பரிணாமவாதம், சிவாத்துவிதம் என்னும்அகப்புறச்சமயமும், தருக்கம், மீமாஞ்சை, ஏகான்மவாதம், சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரம் என்னும் புறச்சமயமும், உலோகாயதம், சௌத்திராந்திகம், யோகாசாரம், மாத்மீகம், வைபாடிகம், ஆருகதம் என்னும் புறச்சமயமும் எனநால்வகைப்பட்டசமயங்க ளும் ஒவ்வொன்றும் அறுவகைப்பட்டிருத்தலால் அவ்வச்சமயக்கடவுளர்களை வழிபடுவோர்க்கு முத்தியருளுவோன் தானொருவனேயன்றி வேறிலனென்று அறிவுறுத்தற்கேதான் ஆறுதிருமுகங்களைவாய்ந்தனனென்பார் வேறு வேறின் றியானொருவனே யங்கங்கிருந்தன்பர்தரு முத்திதருவித்தென் றியாவர்க்கு மறி வித்தவதனமணியே எனவும், சூரபன்மனுடைய அசுரப்படையாகிய மூலப் படை, கூலிப்படை, நாட்டுப்படை, காட்டுப்படை, துணைப்படை, கைப்படை என்னும் அறுவகைப்படையும்அழியத் தேவர்கள்சிறையினின்று நீங்கிவிண்ணு லகிலுள்ள அமுதினை நுகரச்செயமுரசினைமுழக்கியமுறைபோல, காமம், குரோ தம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம்என்னும்அறுவகைப்படையும்அழிய ஆணவச்சிறையினின்றும்நீங்கி சிவஞானமென்னும்அமுதினை அடியேன்ஞான விண்ணிலிருந்து நுகரும்படி மெய்யுணர்ச்சியாலுணரும் உனதுஅனுபூதி நா த்தை முழக்குவதுபோலச் சிறுபறைமுழக்கியருளாய்என ஒப்புமைக்கூட்டவு மையணி தோன்ற வீறசுரர் துஞ்சஎன்பதுமுதல் தேறுமறைநாதமெனநினது முளரிக் கரச்சிறுபறைமுழக்கியருளே எனவுங்கூறினர். (ங.)

கட்டைமுட்டமூவுதாணெட்டிதழுடுத்தசெங்
கமலநான்முகவெகினமுங்
கவுத்துவமணிப்பணிபொடம்போருகாடவி
கலித்தபச்சைப்பன்றியு
மட்டுலவுசீர்பாதமின்றளவுகண்டிலா
வானவனுமோரொருவனா-

வழிவருஞ்சரியாதிவருவித்துவீடுதரும்
வனைதமிழ்க்காழிமேவி
யெட்டுணையுமறிவருமனந்தசீவராவதுவை
யென்றுபெயரிட்டழைத்தங்
கிரும்புண்டநீரிற்றிரும்பாதவீடுதரு
மினியகவுணியர்விளக்கே
திட்டமொடுவரமுதவுசமரபுரிமுருகவேள்
சிறுபறைமுழக்கியருளே
செறிகலபமயின்முதுகினுதயசின்மயதூய
சிறுபறைமுழக்கியருளே.

(இ-ள்.) கட்டை முள் தழுவு தாள் நெடு இதழ் உடுத்த செம் கமல நான்முகன் எகினமும்—குறுகிய முள்ளைத்தழுவிய தண்டையுடைய நெடிய புறவிதழ் சூழ்ந்த செந்தாமரையில் வசிக்கும் பிரமனாகிய அன்னமும், கவுத்துவ மணி பணியொடு—கவுத்துவமணியாலமைந்த ஆபரணத்தோடு, அம்போருக அடவி கவித்த பச்சை பன்றியும்—தாமரையாகிய காடுசூழ்ந்த திருமாலாகிய வராகமும், மட்டு உலவு சீர்பாதம் இன்று அளவும் கண்டிலாத வானவனும்—வாசம்வீசும்தனது சீர்பாதத்தை இன்றளவுங் கண்டறிதற்கரிய சிவபெருமான், ஓர் ஒருவரையும் — ஒவ்வொருவரையும், வழிவரும் சரியைஆதிவருவித்து வீடுதரும் வனைதமிழ் காழி மேவி — சோபான முறையாயமைந்த சரியை முதலிய நெறியிற் செலுத்தி அவர்களுக்கு முத்தியைத்தரும்தமிழ் புனைந்த திருக்காழியிலவதரித்து, எள் துணையும் அறிவரும் அனந்த சீவரை—எள்ளளவும் வரையிட்டறிவதற்கரிய அளவில்லாத சீவர்களை, வதுவை என்று பெயரிட்டு அழைத்து—தனக்கோர் திருமணமென்று பெயரிட்டழைத்து, அங்கு இரும்பு உண்டநீரில் திரும்பாத வீடுதரும் இனிய கவுணியர் விளக்கே—அவ்விடத்து இரும் புண்ட நீர்மீளத்திரும்பாததுபோல மீளத்திரும்பாத முத்திநிலையை அவ்வுயிர்களுக்குத்தரும் இனிய கவுணியர் கோத்திரத்தில்தோன்றிய ஓர் சிவஞானதீபமே, திட்டமொடு வரம் உதவு சமரபுரி முருகவேள்—தன்னை யடைந்தவர் மீளவொருவரை யடைந்து வேண்டாத வண்ணம் வரந்தருளுஞ் சமரபுரியிலெழுந்தருளிய முருகனே, சிறுபறை முழக்கியருள்—சிறுபறை முழக்கி அருளாய்,—

நாளியென்கிற நாகம்பூசித்தலால் காழியென்னும் பெயர்க்காரணம்வந்ததென்பதும், ஆளுடையபிள்ளையார்நல்லூர்ப்பெருமணத்தில் நம்பாண்டார்திருமகளைத்திருமணஞ்செய்தகாலையில்திருமணப்பந்தரில்வேதவோசைமல்க, அவர் செங்கைபற்றி ஓமாக்கினியைவலஞ்செய்யவருங்கால் அவ்வக்கினியைச் சிவபெருமானாகக்கருதி, இம்மங்கையோடுசிவபெருமான்திருவடியைச்சேர்வோமென்னும் கருத்தல்மீதூர அத்திருப்பதியிலுள்ள திருக்கோயிலையடைந்து தேவரீர்திருவடி

யையடையும்பருவமிதுதானென்று "கல்லூர்ப்பெருமணம்வேண்டாகழுமலம்" என்னும் முதனினைப்புடைய திருப்பதிகம்பாடியருள, சிவபெருமான் கருணை கூர்ந்து ஒளிப்பிழம்பாகத்தோற்றி ஓர்வாயிலைவகுத்துக்காட்டி இதன் வழித்தாய்த்திருமணத்திற்குவந்தாரோடு இச்சோதியுட்கலந்தருள்க வென்றருளினர். அதுகேட்டுஉவகைமீதூர்ந்தபிள்ளையார்நமச்சிவாயத்திருப்பதிகமோதித்தொண்டர்களுந்திருமணங்காணவந்தோரும் செல்கவெனமுன்னர்ப் போக்கிப்பின்னர் கைப்பற்றிய அம்மனைவியாரோடு அவ்வொளியிற் கலந்தனரென்பதும், புராண வரலாறுதலால் எட்டுணையுமறிவருமனந்தசீவரை வருவல்வயென்று பெயரிட்டழைத்தங்கிரும்புண்டநீரிற்றிரும்பாதவீடுதருமினியகவுணியர்விளக்கே, என்றார், திருவடியைச்சேரும் பருவமிதுதான் என்றுதிருப்பதிகம்பாடியருளினமையும், சிவபெருமான் ஒளிப்பிழம்பாய்த்தோன்றி இதனுள்திருமணத்திற்குவந்தாரோடுவந்தணுகுக என்றருளினமையும், நமச்சிவாயப்பதிகமோதியாவருமுன்செல்க என்றருளித்தாம்பின் சென்றுகலந்தருளினமையும்,—

"காதன்மெய்ப்பதிகநல்லூர்ப்பெருமணமெடுத்துக்கண்டோர்
தீதுறுபிறவிப்பாசந்தீர்த்தல்செம்பொருளாக்கொண்டு
நாதனேநல்லூர்மேவும்பெருமணநம்பனேயுன்
பாதமெய்ந்நீழல்சேரும்பருவமீதென்றுபாட" எனவும்,

"தேவர்கள்தேவர்தாமுந்திருவருள்புரிந்துநீயும்
பூவையன்னாளுமிங்குன் புண்ணியமணத்தின்வந்தார்
யாவருமென்பாற்சோதியிதனுள்வந்தெய்துமென்று
மூவுலகொளியால்விம்மமுழுச்சுடர்த்தாணுவாகி" எனவும்,

"ஞானமெய்ந்நெறிதான்யார்க்கும்நமச்சிவாயச்சொலாமென்
றானசீர்நமச்சிவாயத்திருப்பதிகத்தையங்கண்
வானமுநிலனுங்கேட்கவருள்செய்திம்மணத்தில்வந்தோர்
ஈனமாம்பிறவிதீரயாவரும்புகுகவென்ன" எனவும்,

"ஆறுவகைச்சமயத்திலருந்தவருமடியவருங்
கூறுமறைமுனிவர்களுங்கும்பிடவந்தணைந்தாரும்
வேறுதிருவருளினால்வீடுபெறவந்தாரும்
ஈறில்பெருஞ்சோதியினுளெல்லாரும்புக்கதற்பின்" எனவும்,

"காதலியைக்கைப்பற்றிக்கொண்டுவலம்வந்தருளித்
தீதகற்றவந்தருளுந்திருஞானசம்பந்தர்
நாதனெழில்வளர்சோதிநண்ணியதனுட்புகுவார்
போதநிலைமுடிந்தவழிப்புக்கொன்றியுடனானார்"

எனவும் வருந்திருத்தொண்டர்புராணத்தாலுணர்க. (௪)

வெளியில்வளிபசைவற்றுநின்றவாறமலவுள
மிளிர்பரத்திலயமாகி

மெய்த்தவமிழைப் பவர்க்ககல்வானநதிநீர்
வியன்றொளைக்கரநிமிர்த்தங்
களியொடுங்கிமொண்டுகுண்டிகைநிறைப்பவல
வற்பகைக்கவிகடாவி
யங்கற்பகக்கனிகொணர்ந்துவந்திக்கவனு
தினமுமவரறையுமறைநூல்
கிளிகள்பயிலக்ககனகந்தருவர்வந்தமுத
கீதநாதம்முழக்குங்
கிளர்சந்தனப்பொங்கர்மலிசாரல்கயிலையங்
கிரிவாரவளநிகர்க்குந்
தெளிவுதருசமரபுரிதனினிலவுகுமரவேள்
சிறுபறைமுழக்கியருளே
செறிகலபமயின்முதுகினுதயசின்மயதூய
சிறுபறைமுழக்கியருளே.

(இ-ள்.) வெளியில் வளி அசைவற்று நின்ற ஆறு—ஆகாயத்தில்காற்று அசைவற்றுநின்றவண்ணம், அமலம் உளம்—தமது களங்கமில்லாதமனம், மிளிர் பரத்து இலயம் ஆகி மெய் தவம் இழைப்பவர்க்கு—விளங்கும்சொரூபசிவத்திலயமாக அந்நெறியினின்று தவஞ்செய்யும் முனிவர்களுக்கு, அகல் வானநதி நீர்—பரந்தகங்கைநீரை, கரி வியன் தொளை கரம் நிமிர்த்து—யானைகள்பெரியதொளைவாய்ந்த துதிக்கைமேலேநிமிர்த்து, அங்கு அளியொடுமொண்டு குண்டிகைநிறைப்ப—அவ்விடத்துஅன்போடு கமண்டலத்தில் ஓர்பால்நீரைநிரப்பவும், அலவன் பகை கவிகள் தாவி—நண்டுகளுக்குப்பகையாயுள்ள குரங்குகள்மேலேதாண்டி, அம் கற்பகம் கனி கொணர்ந்து வந்திக்க—அழகியகற்பகத்தின் கனியைக்கொண்டுவந்து ஒருபால்வழிபட்டு நிற்கவும், அனுதினமும் அவர் அறையும் மறைநூல்—எக்காலமும் அவர்கள்கூறும் வேதவாக்கியங்களை, கிளிகள் பயில—கிளிகள் பயின்றுகூறவும், ககன கந்தருவர் வந்து அமுத கீத நாதம் முழக்கும்—விண்ணுலகிலுள்ள கந்தருவர் அங்குநின்றும்வந்து அமுதுபோன்ற கீதம்பாடும் முழக்கமும், கிளர் சந்தனம் பொங்கர் மலி சாரல்—விளங்குஞ் சந்தனச்சோலை நிறைந்து மணங் கமழும் பிரணவசைலத்தின் சாரலானது, கயிலை யங் கிரி வாரம் வளம் நிகர்க்கும்—கயிலைமலையின் சாரலின்வளத்தை ஒத்துத்தோன்றும், தெளிவு தரு சமர புரி தனில் நிலவு குமரவேள்—விளக்கம்வாய்ந்த சமரபுரியிலெழுந்தருளிய முருகக்கடவுளே, சிறுபறை முழக்கி அருள்—சிறுபறை முழக்கியருளாய்,—

அங்குள்ள திருமலைக்குப் பிரணவசைலமென்பது ஓர்திருநாமமாதலால் சாரலென்றதற்குப் பிரணவசைலமெனவும், தவஞ்செய்வோர் சொரூபசிவத்தில் தமதுளத்தையொடுக்கிநின்று தவம்புரிய வேண்டுதலால் பரமென்றதற்குச்சொரூபசிவமெனவும், மெய் என்றதற்கு அந்நெறியினின்று எனவுங்கூறினும். பகு

ப்பறிவில்லாத மிருகங்களும், பறவைகளும், பகுப்பறிவுள்ள உயிர்கள் போலப் பணிசெய்யுமெனஅவைகள் செய்யும் மேம்பாடு கூறுவார் கவிகடாவியங்கற்பக க்கனி கொணர்ந்து வந்திக்க, மறைநூல் கிளிகள்பயில எனக்கூறினர். (ரு)

**வேறு.**

புகர்படுதொண்டைநிமிர்த்துச்சிகிவாய்
பொருவக்கரிமதியிற்
பொங்கமுதள்ளிப்பிடிகளிபெருசப்
போழ்வாய்வழியூற்றி
மகவுடுதடவும்பொழில்படுமுகில்வாய்
மணிநீர் திணிதரளம்
வாரியிறைத்துக்கற்பகநற்குழை
மலர்நறைசொரிதரவே
தகரமுறித்துக்கயமுனிபகுவாய்
தந்தப்பிடிநுதலைத்
தைவந்தருகிலணைத்துமணந்திடு
சண்பகமலர்துயிலுங்
குகைபடுசாரற்போரூரிறையே
கொட்டுகசிறுபறையே
கொத்துறுமுத்தமிழ்மெத்தவளர்த்தவ
கொட்டுகசிறுபறையே.

(இ-ள்.) சிகிவாய் பொருவ—மயில்வாய் திறந்ததை யொப்ப, புகர் படு தொண்டைகரி நிமிர்த்து—புள்ளியமைந்த பெண்யானையின் வாயை ஆண்யானை நிமிர்த்து, கரிமதியின் பொங்கு அமுது அள்ளி பிடி களி பெருக—சந்திரனிட த்துவிளங்கும் அமுதத்தைத்தனது துதிக்கையினலள்ளி அப்பெட்டையானை களிகூர, போழ் வாய் வழி ஊற்றி—அதன் பிளந்தவாயின்வழியே வார்த்து மகவுடு தடவும் பொழில் படு முகில் வாய்—மகநக்ஷத்திரத்தையளாவிய சே லையிற்படிந்த மேகத்தினிடத்துள்ள, மணிநீர் திணிதரளம் வாரி இறைத்து—வ ருதநீரையும் திண்ணியமுத்துகளையும் துதிக்கையால் ஒருசேரவாரியிறைத்து கற்பகம் நல் குழை மலர் நறை சொரிதர தகர முறித்து—கற்பகத்தினது நல் குழைகளைமலர்களின் தேன்சிந்தத் தகரும்படிமுறித்து, கயமுனி பகுவாய் த து—அத்தயானைக் கன்றின்பிளந்தவாயிற்றந்து, அ பிடி நுதலை தைவந்து அ கில் அணைத்து மணந்திடு—அப்பெண்யானையின் நெற்றியைத்தடவித்தன் பக்க லணைத்துக்கலக்கும், சண்பகம் மலர் துயிலும் குகைபடு சாரல் போரூர் இறை யே—சண்பகம் ஊழ்த்தமலர்கள் இடைவிடாது நிலைபெற்ற குகைகளமைந் பிரணவசைலச்சாரலையுடைய திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளே

று பறை கொட்டுக—சிறுபறை கொட்டியருள்க, கொத்து உறு முத்தமிழ் மெத்த வளர்த்தவ சிறுபறை கொட்டுக—திரண்ட இயலிசை நாடகமென்னு முத்தமிழையும் மிகவும்வளர்த்தவனே சிறுபறை கொட்டியருள்க,—

யானைக்கும், சந்திரமண்டிலத்துக்கும், மேகமண்டிலத்திற்கும், விண் ணுலகிற்கும் சம்பந்தமில்லாதிருக்கச் சம்பந்தங்கற்பித்துக் கூறுதலால் தொடர் புயர்வு நவிற்சியணி. (சு)

அளைகடைமுடைகதுவியதளிர்வடிவத்
தாய்ச்சியர்மத்தொலியு
மங்குடமடிமுலைவிம்மிக்கன்றுளி
யானிரைகத்தொலியுங்
கிளைபடுதொளைவழிவிரல்விடு
தொறுவர்கள்கீதக்குழலொலியுங்
கேழ்செறிகானக்கோழிகண்முறைமுறை
கிட்டிக்கூவொலியும்
விளைதருதளவத்தளிபலவிளரி
விளக்கியசீரொலியும்
விடியற்காலைக்கடலைப்பொருவ
மிகுத்தெழுமாமுல்லைக்
குளமலிகண்ணன்றருபோருரிறை
கொட்டுகசிறுபறையே
கொத்துறுமுத்தமிழ்மெத்தவளர்த்தவ
கொட்டுகசிறுபறையே.

(இ-ள்) அளை கடை முடை கதுவிய தளிர் வடிவத்து ஆய்ச்சியர் மத்து ஒலியுங் — தயிர்கடையும் முடைநாற்றம் மாறாதுகமழும் மாந்தளிர்போலும் மெல்லிய்வுருவத்தையுடைய இடைப்பெண்கள் பிடித்த மத்தின்முழக்கமும், ஆன் நிரை கன்று உள்ளி அம் குடம் மடி முலை விம்மி கத்து ஒலியும்—பசுக் கூட்டங்கள் கன்றினைநினைத்து அழகியகுடம்போல மடித்தலத்திலுள்ள பால் முலைசுரந்து கதறும் முழக்கமும், கிளை படு தொளை வழி—இசையமைந்த தொளையின்வழியே, விரல் விடு தொறுவர்கள் கீதம் குழல் ஒலியும்—விரல்களை விட்டுப் பிடிக்கும்,இடையர்கள்பாடும் வேய்ங்குழலின் ஓசையும், கேழ் செறி கானம் கோழிகள் முறை முறை கிட்டி கூ ஒலியும்—நிறம் விளங்கிய காட்டுக்கோழிகள் முறை நிரையே நின்றுநெருங்கிக்கூவாநின்ற ஒலியும், விளைதரு தளவத்து அளி பல விளரி விளக்கியசீர் ஒலியும்—மலர்ந்த முல்லைகளில் பலவண்டுகள் விளரி யென் னும் பண்ணைப்பாடும்அழகிய முழக்கமும், விடியற்காலை கடலை பொருவ மிகுத்து எழு மா முல்லை—வைகறையில் ஒலிக்குங் கடலை யொப்பஅப் முழக்கங்கள்

அதிகரித்தெழாநின்றபெரியமுல்லைநிலஞ் சூழ்ந்த, குளம்மலி கண்ணன் தருபோரூர் இறை கொட்டுக சிறுபறை—நெற்றியில்வாய்ந்தஅனற் கண்ணையுடைய சிவபெருமான் தந்தருளிய திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளே சிறுபறைகொட்டியருள்க,—

வேய்ங்குழலிலமைந்த தொளைகள்நான்கு. அவற்றைச்சுட்டு விரல்முதலாகவிட்டுப்பிடிப்பது ஆரோகணம், சிறுவிரல்முதலாக விட்டுப்பிடிப்பது அவரோகணம். இவற்றால் எழும்பண்கள் நூற்றுமூன்றாகலால் கீதக்குழலொலியென்றார். மத்தின் ஒலியும், பசுக்களினொலியும், வேய்ங்குழலொலியும், கானக்கோழிகள் கூவொலியும், வண்டுகள்பாடும் விளரிப்பண்ணொலியும், கடலொலியை ஒப்ப மேம்பட்டொலிக்குமெனக்கூறியது மிகுதி நவிற்சியணி. (எ)

கிளிமொழிபுகல்வார்கீதம்பயில்வார்
கின்னரிவாசிப்பார்
கேழ்கலனணிவார்மாலைகள்புனைவார்
கிளர்மயினடமிடுவா
ரளிசுழல்பூம்பந்தெறிவார்குங்கும
மள்ளியிறைத்திடுவா
ராடவர்புயவணைமீதிற்றுயில்வா
ரழகுபணிக்கருள்வார்
களிறிடைவருவார்சிவிகையில்வருவார்
கவனப்பரிவருவார்
காமனில்வருவார்மாமனில்வருவார்
கஞ்சனில்வந்திடுவார்
குளிர்தமிழ்புனைவார்திகழ்போரூரிறை
கொட்டுகசிறுபறையே
கொத்துறுமுத்தமிழ்மெத்தவளர்த்தவ
கொட்டுகசிறுபறையே.

(இ-ள்.) கிளிமொழி புகல்வார்—தாம்வளர்த்த கிளிகளோடு மொழிபயிற்றுகின்றவர்களும், கீதம் பயில்வார்—கீதம் பாடுகின்றவர்களும், கின்னரி வாசிப்பார்—கின்னரியென்னும் வாச்சியத்தை வாசிக்கின்றவர்களும், கேழ் கலன் அணிவார்—விளங்கும் ஆபரணங்களை யணிகின்றவர்களும், மாலைகள் புனைவார்—மலராற்றொடுத்த மாலைகளைச் சூடுகின்றவர்களும், கிளர் மயில் நடம் இடுவார்—விளங்கும் மயிலோடுதாமும் நடனஞ்செய்கின்றவர்களும், அளி சுழல் பூம் பந்து எறிவார்—வண்டுகள் தேனுண்டு சுழலு மலராற்றொடுத்த பந்தினை யொருவர்மேலொருவர் எறிகின்றவர்களும், குங்குமம் அள்ளி இறைத்திடுவார்—குங்குமத்தை அள்ளி ஒருவர்மேலொருவர் வீசுகின்றவர்களும், ஆடவர் புய அணை

'தில் துயில்வார்—புருடர்களது புயமாகிய மெத்தையின்மேல்துயில் கூரு ன்றர்களும், அழகு பணிக்கு அருள்வார்—தமதழகைத் தாமணியும் ஆபரணத் 'க்குத் தருகின்றவர்களும், களிறுஇடை வருவார்–யானைமேல் வருகின்றவர் ளும், சிவிகையில் வருவார்–சிவிகையின்மேல் வருகின்றவர்களும், கவனம்பரி ருவார்–விரைந்து செல்லுங் குதிரையின் மேல் வருகின்றவர்களும், காமன் இ வருவார் மா மன் இல் வருவார்–மன்மதனது மனைவியாகிய இரதியைப்போல ருகின்றவர்களும் திருமாலுக்கு மனைவியாகிய இலக்குமியைப்போல வருகின் வர்களும், கஞ்சன் இல் வந்திடுவார்—பிரமனது மனைவியாகிய சரஸ்வதியை போல வருகின்றவர்களும், குளிர் தமிழ் புனைவார் — செவிக்கின்பந்தரும் மிழ்ச்செய்யுளைத்தொடுக்கின்றவர்களும் ஆகிய பெண்கள், நிகழ் போரூர் இறை றுபறைகொட்டுக–இடைவிடாமல்வாழுந்திருப்போரூரில் எழுந்தருளியஇறை னே சிறுபறைகொட்டியருள்க,—

ஆபரணங்களால்தமக்குச்சிறிதும் அழகுவாய்த்தலின்றித், தம்மால்அவ் ாபரணங்களுக்கு அழகுபயக்கும் பேரழகினராதலால் அழகுபணிக்கருள்வா ான்றார். (அ)

உதடுகடந்தநெடும்பலுமுட்குழி
கணுமெக்கியவயிறு
மூரரவங்கணெளிந்திடுசெவிகளு
முளநெட்டைப்பலபேய்
கதழெரிவெம்பசியற்றனமென்று
களிப்பொடுகைகொட்டக்
ககனர்க்கரசிகலற்றனமென்றணி
கடகத்தோள்கொட்ட
மதமலியவுணருளம்பறைகொட்டிட
வானவர்நகரியெலா
மன்னியவீரப்பேரிகைகொட்ட
மணிக்குடருதிரநிணங்
குதிகொளும்வெற்றிச்சத்திதரித்தோய்
கொட்டுகசிறுபறையே
கொத்துறுமுத்தமிழ்மெத்தவளர்த்தவ
கொட்டுகசிறுபறையே,

(இ-ள்.) உதடு கடந்த நெடும் பல்லும் உள் குழி கண்ணும் எக்கிய வயிறும்— நட்டைக்கடந்த நெடிய பல்லும் உள்ளே குழிந்த கண்ணும்மேல்நோக்கியவ றும், ஊர் அரவங்கள் நெளிந்திடு செவிகளும் உள்ள பல நெட்டை பேய்—

நகரும் பாம்புகள் நெளியுஞ் செவிகளுமுள்ள பல நெடிய பேய்கள், கதழ் எரி வெம் பசி அற்றனம் என்று களிப்பொடு கை கொட்ட—மூண்டெழுங் கொடிய பசியற்றேமென்று இறுமாப்போடொருபால்கைகொட்டவும், ககனர்க்கு அரசு இகல் அற்றனம் என்றுகடகம் அணி தோள்கொட்ட—விண்ணுலகினர்க்கு அரசனாகிய இந்திரன் பகையற்றேமென்று கடகமணிந்ததோளை ஒருபாற் கொட்டவும், மதம் மலி அவுணர் உளம் பறை கொட்டிட—வன்மைமிக்க அசுரர்களுடைய மனம் ஒருபால் பறைகொட்டவும், வானவர் நகரிஎல்லாம் மன்னிய வீரம் பேரிகை கொட்ட—தேவர்கள் வசிக்கும் விண்ணுலகமுற்றும் நிலைபெற்ற வீரமுரசு ஒருபால் முழங்கவும்,மணிக்குடர் உதிரம் நிணம் குதிகொளும் வெற்றிசத்திதரித்தோய்—மணிக்குடலும் உதிரமும் நிணமும் குடிகொண்ட வெற்றிவாய்ந்த வேலேந்தியஇறைவனே, சிறுபறை கொட்டுக—சிறுபறை கொட்டியருள்க,—

சூரபன்மன்முதலியஅசுரர்கள் தசைகளைவயிறுமோடிடவுண்டமையால் பேய்கள்பசியற்றன மென்று களிப்பொடு கைகொட்ட எனவும், இந்திரன் பகை யொழிந்தோமென்று களித்தனனாதலால் ககனர்க்கரசிகலற்றனமென்றணிகடகத் தோள் கொட்டஎனவும், அவரொழிந்த அசுரர்கள் நாமும்அப்பெயருடைமையால் நம்மையெங்குக்கொல்லுமோ என்றுஅஞ்சினராதலால் மதமலியவுணருளம் பறைகொட்டிடஎனவும், அவர்கள்குடலிலும் நிணத்திலும் உதிரத்திலுந்தோய்தலால் மணிக்குடருதிரநிணங்குதிகொளும்வெற்றிச் சத்திதரித்தோய்எனவுங் கூறினர். (கூ)

மரகதமணிக்குவடுதழைசிறைவிரித்துரகன்
மணிமுடிநெளிக்கவிருமூ
வளமுளமுடிப்பவளவரையினையெடுத்துநட
மிடலெனமயிற்பரியின்மே
லருள்விழிகொழிக்கமுகமதிநிலவெறிக்கநினை
யடியவர்களிக்கவருவோ
யமணர்கள்பிதற்றுகலையலைகடன்முழக்கமற
வருமறைமுழக்கமுறையே
யிருமதுரையிற்பெரியநதிவிடுதிருப்பதிக
மெதிர்செலவிடுத்தபெருமா
னிருளெனமலைக்குமலமறவுனதடிக்கமல
மெனதுபுன்முடிக்கணருள்வோய்
செருவளமுழக்குநிசிசரர்கெடவுருத்தவிறை
சிறுபறைமுழக்கியருளே
செழுமணிமதிற்சமரபுரியிலுறைசிற்பரம
சிறுபறைமுழக்கியருளே.

(இ-ள்.) மரகதமணி குவடு தழை சிறை விரித்து உரகன்மணி முடி நெளி
க-மரகதமலையானது தழைத்தசிறகினைவிரித்துஆதிசேடன்றனது ஆயிரமணிச்
டிகைகளையும் நெளிக்க, இரு மூவளம் உள்ள முடி பவளவரையினை எடுத்து
டம் இடல் என்ன—ஆறுவகைப்பட்டசிகரங்களையுடையப வளமலையினைஎடு
துநடனஞ்செய்தல்போல, மயில் பரியின் மேல்—மயிலாகிய குதிரையின்மேல்,
அருள் விழிகொழிக்க—அருளினைத்திருக்கண்கள் கொழிக்கவும், முகம் மதி நிலவு
றிக்க—முகமாகிய சந்திரன் நிலவினைவீசவும், நினை அடியவர் களிக்க வருவோ
—உன்னை அநுதினமுங் கருதும் அடியவர்மகிழ்கூரவந்து காட்சிதருவோய்,
அமணர்கள் பிதற்று கலை அலை கடல் முழக்கம் அற—சமணர்கள் பிதற்றும் பொ
ய்நூலாகியஅலைக்குங் கடலின்முழக்கோயவும், அரு மறை முழக்க—இருக்கு
முதலிய அரியவேதங்களின் முழக்கம் பெருகவும், முறையே இரு மதுரையில்
பெரிய நதி விடு திருப்பதிகம் எதிர்செல விடுத்த பெருமான்—முறையே பெரு
மைவாய்ந்த மதுரையில் பெரியநதியில் விடுத்தஏடு எதிரேற எடுத்தபெருமானே,
இருள் என்ன மலைக்கும் மலம் அற—இருளைப்போல என்னுடுமலையும் ஆணவ
மலமற, உனது அடிகமலம் எனது புன்முடிக்கண் அருள்வோய்—உனதுதிருவடி
த்தாமரையை எனபுல்லியசிரத்திற் சூட்டுவோய், செருவளம்முழக்குநிசிசரர்
கெட உருத்த இறை—தமது போர்வீரத்தை எடுத்துக்கூறும்அசுரர்கள் கெட
க்கோபித்த இறைவனே, சிறுபறை முழக்கி அருள்—சிறுபறைமுழக்கியருளா
ய், செழு மணி மதில் சமரபுரியில் உறை சிற்பரம—முழுமணிகளழுத்திய மதில்
சூழ்ந்த சமரபுரியிலெழுந்தருளிய ஞானசொரூபியாகிய பரமனே,—

அமணர்கள் தீயிலிட்ட ஏடு சாம்பரானமை யுணர்ந்து இரண்டுதரம் நாங்
கள் தோற்றோம், மூன்றாந்தரமாவது நாங்கள்வெற்றியையடைவோம் ஆதலால்
நாங்கள் மறையையும்அவர்கள்மறையையும் எழுதிவைகையில் விடுவோம்,
அது எதிரேறுவதோ அதுதான்மெய்ச்சமயம் எனப்பாண்டியன் முன்னொட்டி
எழுதிவிட, ஆளுடைய பிள்ளையார் "வாழ்கவந்தணர்" என்னுந் திருப்பதி
கம் வரைந்து விடுத்த திரு ஏடு எதிரேறினமையால் பெரியநதிவிடு திருப்பதிக
மெதிர்செல விடுத்தபெருமான் எனவும், இருவினையொப்பு வாய்ந்ததமக்கு மல
பரிபாகம் வாய்ப்பத்திருவருட்பதிவு செய்தருளினமையால் இருளெனமலைக்கு
மலமறவுனதடிக்கமல மெனது புன்முடிக்கணருள்வோய் எனவுங்கூறினர்.

மூன்றாந்தரமாவது வெற்றியையடைவோம் என்றதை—

"தென்னவனகையுட்கொண்டு செப்பியமாற்றந்தேரார்
சொன்னதுபயனுக் கொண்டுசொல்லுவார்தொடர்ந்தவாது
முன்னுறவிருகாற் செய்தோமுக்காலிலொரு கால்வெற்றி
யென்னினுமுடையோ மெய்ம்மையினியொன்று காண்டதென்றார்"

எனத்திருத்தொண்டர்புராணத்தில்வருதல்காண்க. (கo)

சிறுபறைப்பருவம் முற்றிற்று.

---

## சிற்றிற்பருவம்.

சிற்றிற்பருவம் மூன்றாம்வருடத்தில் நிகழ்வதாதலால் சிறுமியர்வண்டலாடும் சிற்றிலைச்சிதைக்கும் பருவமெனக்கொள்க "மூன்றுமாண்டில் சிற்றில் சிதைத்தலும்" என்றமையால் காலவரையறைபற்றிச் சிறுபறைப்பருவத்தின் பின்வைத்தார்.

தேமாங்கனியி னடுப்பமைத்துத்
திகழூன்கழிந்த வலம்புரியிற்
செந்தேனுலைப் பெய்தரவீன்ற
செழுமாமணி வெங்கனன்மூட்டிப்
பூமாதளையின் விதையரிசி
புகட்டிச்சமைத்துக்கதலிமடற்
பொங்கப்பிழியு மதன்கனியும்
பொருந்தவளவிக் கறியட்டுக்
காமாதவிப்பூம் பந்தரிடைக்
கயற்கண்ணாய மிழைத்தவண்டல்
கருதும்புவன கோடியெல்லாங்
கரந்தும்படைத்துங் காக்குமொரு
சீமானுனக்கோ ரிலக்கோசொல்
சிறியேஞ்சிற்றில் சிதையேலே
தேரூர்வீதிப் போரூரா
சிறியேஞ்சிற்றில் சிதையேலே.

(இ-ள்.) தேமாங்கனியின் அடுப்பு அமைத்து—தேமாங்கனியினால் அடுப்புக்கோலி, திகழ் ஊன்கழிந்த வலம்புரியில் செந்தேன் உலை பெய்து—விளங்கும் ஊன்கழிந்த வலம்புரிச்சங்காகிய குழிசையிற் செந்நிறம்வாய்ந்த தேனை உலைநீராகவார்த்து, அரவு ஈன்ற செழுமை மாமணி வெங்கனல்மூட்டி—பாம்புதந்தஒளிமிக்க பெரியஇரத்தினங்களைக் கொடியதழலாகமூட்டுவித்து, பூமாதளையின்விதை அரிசி புகட்டி சமைத்து—மலர்வாய்ந்த மாதளையின் வித்தையே அரிசியாகப்பெய்து சமைத்து, கதலி மடல் பொங்க பிழியும்—வாழையினது பூவிதழ் ஓட்டெடுக்கச் சிந்துமத் தேனையும், அதன்கனியும்—அவ்வாழையின் கனியையும், பொருந்த அளவி கறிஅட்டு—பொருந்தக்கலந்துகறியாக்கச்சமைத்து, காமாவிதபூம்பந்தரிடை—சோலையிலுள்ள குருக்கத்திக் கொடிபடர்ந்த பூம்பந்தலில், கயல் கண் ஆயம் இழைத்தவண்டல்—கயல் போன்ற கண்களையுடையசிறுர்கள் செய்தசிற்றில், கருதும் புவனகோடி எல்லாம் கரந்தும் படைத்தும் காக்கும் ஒருசீமான்—அளவறக்கும் புவனகோடிகளெல்லாவற்றையும் சங்கரித்தும்

ளப்படைத்தும் காத்துவருஞ்சீமானே, உனக்கு ஓர் இலக்கோசொல்—உனக் காரிலக்காகுமா சொல்லாய், சிறியேஞ் சிற்றில் சிதையேல்—சிறியேமாகியயா மிழைக்குஞ் சிற்றிலை ஓர் பொருளாக அழிக்காதே, தேரூர்வீதி போரூராசிறி யம் சிற்றில் சிதையேல்—அரசர்கள் தேரூர்ந்துசெல்லும் வீதியையுடைய நப்போரூரில் வாழ்பவனே சிறியேர் இழைத்த சிற்றிலையழிக்காதே,—

புவனகோடிகளை யெல்லாம் அழித்தும்படைத்தும் காத்தும்வருந் தேவ நக்கு இயாமிழைத்த சிற்றில் ஓரிலக்கோ என்று குறையிரப்பார் புவனகோ யெல்லாங் கரந்தும் படைத்துங் காக்குமொருசீமானுனக்கோரிலக்கோசொல் றியேஞ் சிற்றில்சிதையேல் எனக்கூறினர். கனிமுதலியவற்றையுருவகஞ்செய் வலம்புரிச்சங்கை யுருவகஞ்செய்யாமையால் ஏகதேசவுருவகவணி. சிப்பிகள் பிரந்தன்னைச்சூழ விருப்பது இடம்பரிச்சங்கு, இடம்புரி ஆயிரந் தன்னை சூழவிருப்பது வலம்புரிச்சங்கு. (க)

அங்கைத்தலத்திற்குண்டகழ்நீ
ரடக்குமுனிவரேறனையா
னகத்தின்ஞானவிளக்கேற்று
மடிகேள்பவளவிளக்கவியேல்
செங்கட்டிரண்மெய்யுடையோற்குச்
செழுங்கற்பகத்தினிழறருவோய்
செந்தேன்றுளிக்குங்குருந்தரிழ
றீர்க்கேன்மேன்மேற்புடைத்தெழுந்த
கொங்கைச்சுமையோடருங்களபங்
கூடச்சுமந்துவாடுமிடைக்
கொம்பரரம்பைமடமகளிர்
குலவச்சிதையாவீடளித்தோய்
திங்கட்கிரணநித்திலப்பூஞ்
சிற்றில்சிதையேல்சிதையேலே
தேரூர்வீதிப்போரூரா
சிறியேஞ்சிற்றில்சிதையேலே.

(இ-ள்.) அங்கை தலத்தில்—தனது உள்ளங்கையில், குண்டு அகழ்நீர் அடக்கு முனிவர் ஏறு அனையான்—கடனீரையடக்கிய முனிவர்களாகிய யானை க்கு ஓர் ஆண்சிங்கம்போன்ற அகத்தியரது, அகத்தில்ஞானவிளக்கு ஏற்றும் அடிகேள்—உளத்தில் சிவஞானதீபத்தை யேற்றிய வடிகளே, பவளம் விளக்கு அவியேல்-எங்கள் சிற்றிலுக்கு ஏற்றிய பவளவிளக்கினை அவிக்காதே, செங்கண் திரள்மெய் உடையோற்கு—சிவந்த ஆயிரங்கண்கள்வாய்ந்தஇந்திரனுக்கு, செ

ழும் கற்பகத்தின்நிழல் தருவோய்—செழித்த கற்பகத்தின் நீழலைத்தருகின்றவனே, செந்தேன் துளிக்கும் குருந்தநிழல் தீர்க்கேல்—யாங்கள் விளையாடும் செவந்ததேனைச் சிந்துங்குருந்தமர நிழலையழிக்காதே, மேன்மேல் புடைத்துஎழுந்த கொங்கைசுமையோடுஅரும் களபம் கூட சுமந்து வாடும் இடைகொம்பர்—மேலும் மேலும் பருத்தெழுந்த தனபாரத் தோடுவாசமிக்ககூட்டுவர்க்கச் சந்தனமாகிய பாரத்தையும்ஒருங்கேசுமந்து வாடாநின்ற பூங்கொம்புபோன்ற இடையையுடைய, அரம்பைமடமகளிர் குலவ சிறையாத வீடு அளித்தோய்—அரம்பைமாதர்கள் மகிழ்ந்துலாவப்பொலிவமைந்தசுவர்க்கவுலகத்தைத்தந்தவனே, திங்கள் கிரணம்நித்திலம் பூம் சிற்றில் சிதையேல் சிதையேல்—சந்திரனைப் போல்வெள்ளியகிரணம் வீசும் முத்தால் நாங்களிழைத்த வீட்டினையழிக்காதே யழிக்காதே,—

இந்திரன் வேண்டுகோளால் உள்ளங்கையி லடக்கிய வலியிற்பெரியஉருவிற்சிறிய அகத்திய முனிவருளத்தில், மலவிருளிரிய ஞானவிளக்கேற்றியும், சூரபன்மனால் கற்பகநீழலிழந்து வருந்தும் அவ்விந்திரனுக்கு அக்கற்பகநிழலைத்தந்தும், அவனால் சிறைபிடிக்கப்பட்டுத் தமது நகரிழந்த அரம்பையர்கள் அச்சிறையினின்று நீங்கிமகிழ்ந்துலவப்பொன்னகரைத்தந்தும், உலவிய நீ நாங்கள் இழைத்த சிற்றிலுக் கேற்றிய விளக்கினையவித்தலும், நாங்கள்விளையாடக்குருந்த மரநிழலைச் சிதைத்தலும், நாங்கள் முத்தாலிழைத்த சிற்றிலைச் சிதைத்தலுங் கூடுமோஎன்பார் அவியேல், தீர்க்கேல், சிதையேல்எனவுங்கூறினர். (௨)

விதையாயிருக்குமைந்தெழுத்தும்
வேதாகமமுமுத்தமிழும்
விளங்குஞ்சரிதாதிகளுங்கும்
வீருகியமெய்ச்சிவமதமுஞ்
சிதையாதரிக்குந்திருநீறுஞ்
சோதிநயனத்திருமணியுந்
துகடீர்பத்திவிதிநெறியின்
றொடர்புஞ்செடிதீர்மெய்யடியா
ரிதையாலயத்தைப்பிரியாதங்
கிருடீர்ஞானமணிவிளக்கு
மிலங்குமவுனந்துளும்பாத
வின்பவள்ளுஞ்சந்ததமுஞ்
சிதையாதளிக்குமோரிறைவ
சிறியேஞ்சிற்றில்சிதையேலே
தேரூர்வீதிப்போரூரா
சிறியேஞ்சிற்றில்சிதையேலே.

(இ-ள்.) விதையாய் இருக்கும் ஐந்தெழுத்தும்—எல்லாத்திருமந்திரங்களுக்கும் மூலமாயிருக்கும் ஸ்ரீபஞ்சாக்கரமும், வேதாகமமும் முத்தமிழும்-வேதங்களும் ஆகமங்களும் மூவரோதிய திருப்பாசுரங்களும், விளங்கும் சரியாதிகள் நான்கும்—விளங்குகின்ற சரியைமுதலியநான்கு சோபானங்களும், வீறுஆகிய மெய்சிவமதமும்-தனக்கு நிகரின்றிநிலைபெற்றசைவசமயமும், சுதைஆதரிக்கும் திருநீறும்—அமுதம்போல வெண்ணிறமும் பயனும்வாய்ந்த திருநீறும், சோதிநயனத்திருமணியும்—சிவபெருமான் திருக்கண்களினின்றுந்தோன்றிய ஸ்ரீருத்திராக்கமணியும், துகள்தீர்பத்திவிதி நெறியின் தொடர்பும்-குற்றத்தினின்றுநீங்கியபத்திக்கு விதித்தநெறியின் சம்பந்தமும், செடிதீர்மெய் அடியார் இதையாலயத்தை பிரியாது—கீழ்மையினின்று நீங்கியமெய்யடியவரது மனமாகிய திருக்கோயிலினின்றும் பிரியாது, அங்கு இருள்தீர் ஞானம் மணிவிளக்கும்—அவ்விடத்துத் தனது அருளொளியால் ஆணவமலவிருளைப் போக்கும் சிவஞான தீபமும், இலங்கும்புவனம் துளும்பாத இன்பவளனும்—விளங்காநின்ற நசகசநிட்டையினின்று நிலைபெயராத பேரின்பவளமும் (ஆகியஇவற்றை) சந்ததமும் சிதையாது அளிக்கும் ஓர் இறையே—எந்நாளும் அடியேமுக்கு அழிவில்லாமல் தந்தருளும் ஒப்பில்லாத இறைவனே, சிறியேம் சிற்றில்சிதையேல்—சிறியேம்இழைத்த சிற்றிலை அழிக்காதே,—

அடியவர் திருநீறும் உருத்திராக்கமும்ஆகிய சிவசின்னங்களைத் தரித்தலும்,வேதாகமபுராணங்களையும் மூவர்திருப்பாசுரங்களையுங் கேட்டலும், அவர்க்குரியபுறத்திலக்கணமாதலால்சுதையாதரிக்குந் திருநீறும் சோதிநயனத்திருமணியும் வேதாகமமுமுத்தமிழும்எனவும், சிவாலயதரிசனஞ் செய்தல், சிவபெருமானைத்தோத்திரஞ்செய்தலாகிய புறத்திலக்கணமும், சிவபெருமானைச் சிந்திக்குந்தோறும் பேசுந்தோறும், கண்டம்விம்முதலும், நாக்குத்துடித்தலும், உதடுதுடித்தலும், சரீரம்நடுங்குதலும், உரோமஞ்சிலிர்த்தலும், குறுவேர்வைகொள்ளலும்நாக்குத்தழுதழுத்தலும், ஆனந்தக்கண்ணீர் சொரிதலும், வாய்விட்டழுதலுமாகிய உடலிலக்கணங்களும், சரியையுளடங்குதலாலும், சிவபெருமானைப் பூசனைசெய்தலாகியபுறத்திலக்கணம்கிரியையுளடங்குதலாலும், மானதபூசையாகிய அகத்திலக்கணம் யோகத்துளடங்குதலாலும், சிவபெருமானைத்தன்னோடிரண்டறக்காணுதல் ஞானத்துளடங்குதலாலும் விளங்குஞ்சரியாதிகணான்கும் எனவும், ஸ்ரீபஞ்சாக்கரத்தைச்செபித்தல் அகத்திலக்கணத்து ளடங்குலால் ஐந்தெழுத்து மெனவும், இவற்றைமுறையேயுடையது சைவசமயமாததால் வீறுகிய மெய்ச்சிவமதமுமெனவும், அச்சமயத்தில்சார்புபற்றியபத்தியிலும்சார்பிகந்தபக்தியிலும்நிற்கவேண்டு மாதலால் துகளீர்பத்தி விதிநெறியின் றொடர்பும் எனவும், அப்பத்திகளுள் சார்பிகந்தபத்திவழியில் நிற்கில் சிவஞானவொளியையும், அவ்வொளியால்வரும்பேரின்பப்பயனையும்நீதருவோனாதலால்சந்ததமுஞ்சிதையாதளிக்குமோரிறையே எனவுங்கூறினர்,

ஸ்ரீபஞ்சாக்கரம்எல்லாத்திருமந்திரங்களுந்தோன்றுதற்குக்காரணமாய் நிற்றலாலும், தேவாமுதுபிணிமாற்றுதலும் வெண்ணிறமும் உடைமையும்போ

லத்திருநீறு பிறவிப்பிணி மாற்றுதலும் வெண்ணிறமுடைமையாலும்விதையா யிருக்கும், சுவையாதரிக்கும் என அடைகள்தந்து கூறினர். செய்யுளாத லால்முன்னும் பின்னும்வந்தன. சார்புபற்றிய பத்தி போகாதிகளைக்கருதி இறை வனிடத்துஅன்புபூணல். சார்பிகந்தபத்தி முத்தியைவிரும்பிஅன்புபூணல். அடி யவரிதயாலயத்தைப் பிரியாதிருக்கும் நீ நாங்கள் விரும்பும் சிற்றிலை நீஅழிக்க லாமோ என்பார் மெய்யடியாரிநயாலயத்தைப் பிரியாதிருக்கும் நீ சிறியேஞ்சிற் றில் சிதையேலே எனக்கூறினர்.

அடியவர்க்குரிய புறத்திலக்கணத்தை,—

“ வாசப்பூதியுருத்திரமாமணி
பூசிப்பூணல்குரவனைப்பூசித்த
லாசைப்பாட்டிலரனைப்புகழுத
லீசற்குள்ளனநாமமியம்புதல். எனவும்,

எந்தையீசனருச்சனையோம்புத
றந்திரச்சிவதன்மம்புரிகுதன்
முந்தையோன்கதைகேட்டன்முறைமையான்
புந்திகூர்ந்தரனாலயம்போற்றுதல். எனவும்,

ஒத்தபத்தரிடத்தலதோரிடத்
தய்த்தனீத்தலத்தொண்டரிற்றொண்டராய்ச்
சித்தமன்புறவீதன்முன்செப்பிய
பத்துமீங்கிவைகாணப்படுதிரால்” எனவும்,

அடியவர்க்குரிய உடலிலக்கணத்தை,—

“ தொண்டர்மெய்யிற்றுலங்குமிலக்கண
முண்டொர்பத்தென்றுரைத்ததுரைக்குதுங்
குண்டையூர்திசிவத்தியல்கூறுங்காற்
கண்டமுற்றொருவிம்மிதங்காட்டுதல்.

ஏத்துமெந்தையியற்கையுணர்தொறு
நாத்துடித்தெழும்பாமைநகைப்புறம்
பூத்தமுத்தந்துடித்தல்விபூதிகொண்
டார்த்தணிந்ததன்னங்கங்குலுங்குதல்.

மயிர்ப்புறம்புளகித்தல்வரன்முறை
வியர்த்தறன்வசமன்றிவிளம்புநாப்
பெயர்த்திடாமையானந்தப்பெருங்கணீ
ரயற்படுத்துதல்வாய்விட்டழுதலே.

பரவசத்தினனாகிப்படர்சடை
யானுளப்படத்தன்னையயர்க்குதல்
விரவுபத்தும்விடுத்துறைத்தோமினி
வரமுனித்தலைவீர்மனக்கொள்விரால்" எனவும்,

உபதேசகாண்டத்தில் வருஞ்செய்யுள்களால் உணர்க. (௫)

மறையின்சிரமெய்வாச்சியமு
மருவுங்கருவியாறுறின்
வயங்குமுடியிற்பேரருளும்
வானோர்முடியினறுந்தொடையுங்
கறைகொண்மிடற்றோன்றிருப்புயத்துக்
கடியாரிதழிச்செழுந்தாருங்
கவுரிகருணைநறவுபொழி
கண்ணென்கமலத்தண்மலரு
மறையுந்தணிகைமலைச்சுனைக்கு
ளலருமலருமணக்குமுன
தருஞ்சீறடிசிற்றிலின்புழுதி
யளவிமணப்பத்தகுமோதான்
சிறைவண்டோகைக்கிறையோனே
சிறியேஞ்சிற்றில்சிதையேலே
தேரூர்வீதிப்போரூரா
சிறியேஞ்சிற்றில்சிதையேலே.

(இ-ள்.) மறையின் சிரம் மெய்வாச் சியமும்—வேதசிரசாகிய வாசகத்தின் உண்மைப் பொருளும், மருவும் கருவி ஆறுறின் முடியில் வயங்கும் பேர் அருளும்—பொருந்திய முப்பத்தாறுதத்துவங்களின் முடியில்விளங்கும் பெரிய திருவருளும், வானோர் முடியில் நறும் தொடையும்—தேவர்களது நறுமணங் கமழும் கற்பகமலர்மாலையும், கறைகொள் மிடற்றோன் திருப்புயத்து—விடமமைந்தஸ்ரீகண்டத்தையுடைய சிவபெருமான் திருப்புயத்தில், கடி ஆர் இதழி செழும் தாரும்—வாசம் வீசுங் கொன்றைமலராற்றொடுத்த வாடாதமாலையும் கவுரி கருணை நறவு பொழி கண் என்கமலம் தண் மலரும்—உமையம்மையின் கருணை யென்னுந்தேனைக் கொழிக்கும் கண்ணென்னுந்தாமரைமலரும், அறை யும் தணிகை மலைச்சுனைக்குஉள் அலரும் மலரும்—யாவரும் புகழ்ந்துபேசும் தணிகைமலையிலுள்ள சுனையில் மலரும் குவளை மலரும், மணக்கும் உனது அரும் சீறடி —மணக்காநின்ற உனது அடைதற்கரிய சிற்றடி, சிற்றிலின் புழுதி அளவிமணப்ப தகுமோ—நாங்கள்கோலியசிற்றிலின்புழுதியோடளாவி.

மணம்வீசத்தரு'மா, சிறைவண் தோகைக்கு இறையோனே—சிறகாற்பொலிவுவா ய்ந்தமயிலூர்திக்கிறையவனே, சிறியேம் சிற்றில் சிதையேல்—சிறியே மிழைத்த சிற்றிலை யழிக்காதே,—

உபநிடதவாக்கியத்தின் உட்கிடைப்பொருளும், முப்பத்தாறுதத்துவங்களையுங் கடந்தவிடத்து மேவிடுந்திருவருளும், இவன்திருவடியில் மணத்தலாலும், தேவர்கள்தமதுமுடிதோயத்திருவடியில் விழுந்துவணங் குதலாலும், சிவபெருமான்றிருப்புயங்களிலேறித்துவைத்து விளையாடுதலாலும், அவற்றால் இச்சிற்றடிகள் எங்குக்கன்றிவருந்துமோ என்றுஅம்மைதிருக்கண்சாத்துதலாலும், இந்திரன்தணிகைமலைச்சுனையில் தான்வைத்த குவளை மலர்க்கொண்டுசாத்துதலாலும், மணக்கும் உனதருஞ்சீறடிஎனவும், அச்சிற்றடியால் யாங்கள் புழுதியாற்கோலிய சிற்றிலைத் தேவரீர்சிதைக்கில் அப்புழுதிதோய்ந்துஅத்திருவடியில் மணக்குமே அது கூடுமோ என்பார் மணக்குமுனதருஞ்சீறடி சிற்றிலின் புழுதியளவிமணப்பத் தகுமேதான் எனக்கூறினர்.

சூரபன்மனொடு செய்தபோரும், வள்ளிநாய்ச்சியார் பொருட்டுவேடர்களிடத்துச் செய்தபோரும் இம்மலையிற்றணிதலால் தணிகைமலை எனவும், அம்மலையிலுள்ள சுனையில் இந்திரன் காலையிலும் உச்சியிலும் மாலையிலும் மலரும் மூன்றுகுவளைகளைப்பறித்து அம்மலர்களைக்கொண்டுபூசித்துவழிபடுதலால் தணிகைமலைச் சுனைக்குளலருமலருமென்றார்,

சூரபன்மன் முதலியோரேரடு போர்செய்து செருத்தணிந்தமலை என்பதை,—

“ செங்கண்வெய்யசூர்ச்செருத்தொழிலினுஞ்சிலைவேடர்
தங்களிற்செயுஞ்செருத்தொழிலினுந்தணிந்திட்டே
மிங்குவந்தியாமிருத்தலாற்செருத்தணியென்றோர்
மங்கலந்தருபெயரிணைப்பெற்றதிவ்வரையே. எனவும்,

இந்திரன் அங்குள்ளசுனையில் குவளையைப்பறித்துப்பூசித்தமையை—

“ வான்றிகழ்ந்திடுமிருநிலவளாபலவவற்று
ளான்றகாதலாலிங்ஙனமேவுதுமதற்குச்
சான்றுவாசவன்வைகலுஞ்சாத்துதற்பொருட்டான்
மூன்றுகாவியிச்சுனைதனிலெமக்குமுன்வைத்தான்”

“ காலைப்போதினிலொருமலர்கதிர்முதிருச்சி
வேலைப்போதினிலொருமலர்விண்ணெலாமிருள்சூழ்
மாலைப்போதினிலொருமலராகவிவ்வாமே
னீலப்போதுமூன்றொழிவின்றிநிற்றலுமலரும்”

எனவுங் கந்தபுராணத்தில் வருதல்காண்க. (௬)

அடியார்நிமலத்திருவகத்து
　　என்புபொறுமையவாவறுத்த
லடுப்பாங்கமைத்துமலக்காட்டத்
　　தநிகஞானக்கனன்மூட்டி
மடியாதிருந்தவுயிர்க்கலசம்
　　வழியவருட்பேருலேவார்த்து
மாறாப்பெருமைச்சிவானந்த
　　மதுரச்சோறுதினம்பொங்கி
விடியாச்சீவபோதவிருள்
　　வீயமவுனச்சுடர்விளக்கு
விளக்கியிருந்தபடியிருந்து
　　மேலாஞ்சிற்றில்விளையாடுஞ்
செடிதீரகத்தோர்புகழ்வாலே
　　சிறுவாசிற்றில்சிதையேலே
தேரூர்வீதிப்போரூரா
　　சிறியேஞ்சிற்றில்சிதையேலே.

(இ-ள்.) அடியார் நிமலம் திருஅகத்து உள்—அடியவரது மலரகித மாகிய அழகிய மனமாகியவீட்டில், அன்புபொறுமை அவாஅறுத்தல் அடுப்பு ஆங்கு அமைத்து—அன்பும் பொறுமையும் அவாவறுத்தலுமாகிய அடுப்பினை யமைத்து, மலக்காட்டத்து அதிகஞானம் கனல் மூட்டி—ஆணவமலமாகிய விறகில் சிவஞானமாகிய தீயைமூட்டி, மடியாது இருந்த உயிர் கலசம் வழிய அருள்பேர்உலேவார்த்து—என்றும் நிலைபேறுடைய உயிராகிய குழிசியில்ததும்பிவழியத்திருவருளாகிய பெரிய உலைநீர் பெய்து, பெருமைமாறாத சிவானந்த மதுரம் சோறு தினம் பொங்கி—என்றும் மாட்சிமை யமைந்தசிவலோகமென்னும் மதுரமமைந்த சோற்றினை அனுதினமும் பொங்கி, விடியாத சீவபோத இருள்வீய—என்றும் ஒழியாததற்போத இருளொழிய, மவுனம் சுடர் விளக்கு விளக்கி—சகசநிட்டையாகிய விளங்குந்தீபத்தை யேற்றி, இருந்தபடி இருந்து—அவ்வடியவர் இருந்த நிலைக்குத்தகத்தானுமிருந்து, மேலாம் சிற்றில்விளையாடும்—மேலாகிய அச்சிற்றிலில் விளையாடும், செடிதீர் அகத்தோர் புகழ்வாலே சிறுவா—கீழ்மையினின்று நீங்கிய மனத்தோர்புகழும் உமையம்மையின் புத்திரனே, சிறியேம் சிற்றில் சிதையேல்—சிறியேமாகிய யாங்களிழைத்த வீட்டினையழிக்காதே,—

மனமும்வீடும் என்னும்பொருள்மேனிற்கும் பலபொருள்பட அகம்என்றமையால் அகமென்றதற்கு மனமும் வீடும் என்றாம். அன்பென்றது சீவகருணையை. பொறுமைஎன்றதுஅச்சீவர்கள் ஓர்காரணத்தாலாவதுஅறியாமையா

லாவது தமக்குத்தீங்கு செய்தவழி அதற்குத்தாம்மாறு செய்யாது பொறுத்த லை. அவாவறுத்தலென்றது மேற்கூறியவாற்றால் வினைத்தொடர்பறுத்தவர்க்கு நின்றவுடம்பும், அதுநுகர்தற்குவினைப்பயன்கள்மட்டும்நின்றமையால்அவைபற்றி முன்புதம்மால் விடுக்கபபட்ட புலன்களின்மேல் வாசனை வசத்தால்நினைவுசெல்லுமாதலின் அந்நினைவும் பிறவிக்குவித்தாமென அதனை யொழித்தஅடியவர்மனமேதான் வசித்தற்குரிய திருக்கோயிலாகக்கொண்டமையால் அடியார்நிமலத்திருவகத்து எனவும், தான்வசித்தலால் அமையும்அன்புமுதலிய தூயகுணங்களை இருத்தற்கிடம் அமைந்தகாலையில் அமுதுசமைத்தற்குஆய்தவெழுத்து வடிவம் போலமுக்கூட்டமைந்த அடுப்பமைத்தனனெனவுருவகஞ்செய்வார்அன்புபொறுமை அவாவறுத்தல் அடுப்பாங்கமைத்து எனவும், தானெழுந் தருளிய காலத்துமலதிமிரமொழியச்சிவஞானவொளிமேலிடுதலால் சமைத்தற்குவிறகும்அதுஎரிந்து நீறுதற்குஆணவமலத்தைக் காட்டமாகவும்,சிவஞானத்தைக்கனலாகவும் அமைத்தனனெனஉருவகஞ்செய்வார் மலக்காட்டத் ததிகஞானக்கனன்மூட்டிஎனவும், சிவஞானம் உதயமாகுங்கால் ஆன்மாவிடத்தில்திருவருள்மீதூர்தலால் சமைத்தற்கு உயிரேகலசமாகவும் திருவருளேயுலைநீராகவும்அமைத்தனனென உருவகஞ்செய்வார் மடியாதிருந்த வுயிர்க்கலசம் வழியவருட்பேருலைவார்த்து எனவும், திருவருள்மீதூர்ந்தவழிச்சிவானந்த மேலிடுதலால் உலைவார்த்துச் சமைத்தவழி திருஅமுதமைதலில் சிவானந்தத்தைத் திருவமுதாகஅமைத்தனெனனவுருவகஞ்செய்வார் சிவானந்த மதுரச்சோறுதினம்பொங்கியெனவும், சிவானந்த மேலிட்டகாலத்துத்தற்போதவிருள்மாய்தலும் சகசநிட்டைகைகூடுதலு முடைமையால் திருவமுதுநுகர்தற்கமைந்த விடத்து இருளொழியவிளக்கமைத்தனனென உருவகஞ்செய்வார் விடியாச்சீவபோத விருள்விடியமவுனச்சுடர்விளக்கிஎனவுங்கூறினர். இவைஇயைபுருவகவணி, மேலாஞ்சிற்றில் என்றது, அடியவர்மனக்கோயிலை. இருந்தபடி யிருந்தென்றது,அடியவர்க்கருளச்சாதரத்திருவுருக்கொண்ட காலையில் அவரொத்திரத்தரோ அத்திரத்தனுய்த்தானின்றருளுதலை. (ரு)

ஆறுவதனதாமரைக
ளலருமதுரச்சுவைமடுவே
யடியாரிதயதாமரையு
ளரும்பிமாறுப்பரிமளமே
வீறுமமரர்கணஞ்சூழ்ந்து
வியப்பமுளைத்தமுழுமதியே
வெவ்வாளவுணக்கருங்கடலை
விழுங்கியெழுந்தவடவனலே
மாறுபடுபுன்சமயவன
மலைத்துமுறித்தமதகளிறே

மாயாப்பிறவிக்கனலவிய
வளருங்கருணைபொழிகாரே
தேறுமுயிருட்பூரணமே
சிறியேஞ்சிற்றில்சிதையேலே
தேரூர்விதிப்போருரா
சிறியேஞ்சிற்றில்சிதையேலே.

(இ-ள்.) ஆறுவதனதாமரைகள் அலரும் மதுரம் சுவைமடுவே—ஆறு திருமுகங்களாகிய தாமரைகள் அலர்ந்துவிளங்கும் மதுரம் அமைந்த அமுதமய மாகிய ஓர்மடுவே, அடியார்இதயம் தாமரையுள் அரும்பிமாறாதபரிமளமே— அடியவர்மனமாகிய தாமரையில் அரும்பி நீங்காத நறுமணமே, வீறும்அமரர் கணம் சூழ்ந்து வியப்பமுளைத்த முழுமதியே—பல்கியதேவகணஞ் சூழ்ந்துஅதி சயங்கூர வுதயஞ்செய்த பூரணசந்திரனே, வெவ்வாள் அவுணர் கரும்கடலை விழுங்கி எழுந்த வடஅனலே—கொடியவாளேந்திய அசுரரென்னுங்கடலைச் சுவறச்செய்துமேலெழுந்தவடவாமுகாக்கினியே, மாறுபடுபுன்சமயம் வனம் மலைத்து முறித்தமதகளிறே—மாறுபட்ட புல்லியஅருகர் சமயமுதலிய காடுக ளோடு போர்செய்து களைந்து எறிந்தமதயானையே, மாயாதபிறவிகனல் அவிய வளரும் கருணைபொழிகாரே—மாயாதபிறவியென்னுங் கோடைக்கனலவிய நி லைபெற்ற கிருபையென்னும் மழைபொழியுமேகமே, தேறும்உயிருள்பூரணமே— தன்னைத்தெளிந்துணர்ந்த ஆன்மாக்களுள் பூரணமாயுள்ளவனே, சிறியேம் சிற்றில் சிதையேல்—சிறியேமிழைத்த சிற்றிலைச்சிதைக்காதே,—

ஆறுதிருமுகங்களைத் தாமரையாக வுருவஞ்செய்தமையால் அடியவர்மு ம்மலங்களையும் போக்கும் திருமேனியை அமுதமடுவென்பார் ஆறுவதனதாம ரைகள் அலருமதுரச்சுவைமடுவேஎனவும், அடியவர்மனத்தினின்றுபிரியாதுஅந நியமாய் நின்றானென்பார் இதயதாமரையுளரும்பி மாறாப்பரிமளமேஎனவும், தேவர்கள்களிகூரச்சந்திரன் அமுதுதருதல்போலத்தேய்தலும் வளர்தலும்இல் லாது அடியவர்க்கு ஒருபடித்தாயின்பஞ்செய்வானென்பார் அமரர்கணஞ்சூழ்ந் துவியப்பமுளைத்த முழுமதியே எனவும், அசுரர்களை வேரோடறக்களைந்தன னென்பார் வெவ்வாளவுணக்கருங்கடலை விழுங்கியெழுந்த வடவனலே என வும், ஆளுடையபிள்ளையாராய் அருகர்சமயமுதலிய வற்றையழித்தன னென் பார் மாறுபடுபுன்சமய வனம்மலைத்துமுறித்தமதகளிறேஎனவும், அடியவர்பிற விவெப்பொழிய அருள்புரிவானென்பார் மாயாப்பிறவிக்கனலவிய வளருங்கரு ணைபொழிகாரேஎனவும், அவ்வடியவரிடத்துத் தான்வேரற நின்றானென்பார் தேருமுயிருட்பூரணமே எனவுங்கூறினர். மதுரச்சுவைமடுவே முதல்கருணை பொழிகாரே என்பதுகாறும், ஆறுவதனதாமரைகள் என்பதுமுதல்மாயாப்பிற விக்கனலவிய என்பது காறுமுள்ள சிறப்படைகளால் முருகக்கடவுளை உருவ கஞ்செய்தலால் சிறப்புருவகவணி. (௬)

வித்துவான்
சே. கோவிந்தராசு

கரியின்கோடுமகிற்றிரளுங்
கடிச்சந்தனமுங்கழைமணியுங்
கடுவூற்றிருந்ததொளையெயிற்றுக்
கடுங்கணரவின்முழுமணியும்
விரியுந்தரங்கக்கரங்கள்கொடு
விரவிக்கொழித்துநிலங்கிழித்து
வேலைபுகுதப்பாதலத்தின்
மிளிருமிராசவுரகபடம்
பரியுமணிகணீர்கதுவல்
பரிதியுநவம்பலவெடுத்துப்
பரமானந்தக்கடல்படிவான்
பரிந்துமூழ்கித்தவஞ்செயல்போல்
தெரியும்பாலித்திருநாடா
சிறியேஞ்சிற்றில்சிதையேலே
தேருர்வீதிப்போரூரா
சிறியேஞ்சிற்றில்சிதையேலே.

(இ-ள்.) கரியின் கோடும் அகில் திரளும்—யானையின்கொம்புகளையும் அகிற்றுண்டுகளையும், கடிசந்தனமும்கழைமணியும்—வாசமமைந்தசந்தனக்கட்டைகளையும் மூங்கிலுகுத்த முத்துகளையும், கடுஊற்றிருந்த தொளை எயிறு கடும்கண் அரவின் முழுமணியும்—விடம்ஊற்றெடுக்கும் தொளைவாய்ந்த பற்களையும்கொடியகண்களையுமுடைய பாம்பினது பருத்தமாணிக்கங்களையும், விரியும் தரங்கம் கரங்கள் கொடுவிரவி கொழித்து—பாலிநதியானது விரிந்த அலைகளாகிய கைகளால் வாரிக்கலந்து கரைகளிற்கொழித்து, நிலம்கிழித்து வேலைபுகுத—பூமியைக்கிழித்துக் கடலிற்பாய, பாதலத்தில் மிளிரும்இராசஉரகபடம் பரியும்மணிகள்நீர்கதுவல்—பாதலத்தில் விளங்கும் ஆதிசேடனுடைய படங்கள்சுமந்தமாணிக்கங்கள் அப்பாலிநதியில்பிரதிபிம்பித்தல், பரிதிபலஉரு எடுத்து—சூரியன்பல உருவுகொண்டு, பரமானந்தம் கடல்படிவான் பரிந்து மூழ்கி தவஞ்செயல்போல்தெரியும்பாலி திருநாடா—பேரின்பமாகிய கடலிற்படிய அந்நதியில் அன்புகூர்ந்து மூழ்கித்தவஞ்செய்தல்போலத் தெரிதற்கெல்லையாகிய அப்பாலிநதிசூழ்ந்த தொண்டைநாட்டையுடையவனே, சிறியேம்சிற்றில் சிதையேல்—சிறியேமிழைத்த சிற்றிலைச் சிதைக்காதே,—

யானையின் கொம்பு முதலியவற்றைப்பாலாறுவாரிப்பூமியைக்கிழித்துக் கடலிற்பாய, கிழிபட்டபாதலத்தின் வழியே ஆதிசேடன் முடிகளிலுள்ளஇரத்தினங்கள் அந்நீரிற் பிரதிபிம்பித்தலைச் சூரியன் பலவுருவங்களையெடுத்து அந்

நதியிற் படிந்து சிவானந்தத்தை யடையத்தவஞ்செய்தலை யொக்குமெனக்க வியத்தியவசயித்துக் கூறுதலால் தற்குறிப்பேற்ற வுவமையணி. (எ)

தருவிற்படரும்வல்லியெனத்
தகுமாடவரைமடவார்க
டழுவப்புயத்தின்முலைக்கோடு
தைப்பத்தெரியன்முகையுடைந்து
முருகூற்றெழுந்துதுகினனைக்கு
மூரிச்சுதைமாளிகையிழைத்த
முதிரும்பதுமராகவொளி
முழுமீன்றிகழுமகல்வானப்
பருநித்திலவெண்பந்தருக்குப்
பவளநெடுங்கால்பலநாட்டும்
பண்பாமதியம்பந்தர்நடுப்
பால்வெண்டரளப்புஞ்சமெனத்
தெரியும்பாலித்திருநாடா
சிறியேஞ்சிற்றில்சிதையேலே
தேரூர்வீதிப்போரூரா
சிறியேஞ்சிற்றில்சிதையேலே.

(இ ள்.) தருவில் படரும் வல்லி என்ன—கற்பகத்திற் படரும் காமவல்லிக்கொடிபோல, தகும் ஆடவரை மடவார்கள் தழுவ—நடுநிலையினிற்குந் தத்தமக்குரிய கணவர்களைப் பெண்கள் தழுவதலால், புயத்தில்முலை கோடு தைப்ப—அவர்கள்புயத்தில் தமது முலையாகிய கொம்புதைத்துருவ, தெரியல்முகைஉடைந்து முருகு ஊற்று எழுந்து துகில்நனைக்கும்—அக்கணவர் புயத்தில் தொடுத்த மாலையினரும்புக ளுடைந்துதேன்சுரந்தெழுந்து அப்பெண்களாடையை நனைதற்கெல்லையாகிய, மூரிசுதை மாளிகை இழைத்த—பெருமையமைந்த சுண்ணச்சாந்தால் திட்டியமாளிகைகளிலிழைத்த, முதிரும்பதுமராக ஒளி—ஒளிமிக்க மாணிக்கத்தின் ஒளியானது, முழுமீன்திகழும் அகல்வானம் பருநிலத்தில வெண்பந்தருக்கு—நக்ஷத்திரங்கள் விளங்கும் அகன்ற வானமாகியபருத்த முத்துகளாலமைந்த பந்தருக்கு, நாட்டும்பல பவள நெடுங்கால் பண்பு ஆக—நாட்டிய பலநெடிய பவளக்கால்களின் தன்மையாகவும், மதியம்—அவ்விண்ணினுள்ள சந்திரன், பந்தர் நடுபால்வெண் தரளம் புஞ்சம் என்னதெரியும் பாலிதிருநாடா—அப்பந்தலினடுவே வெள்ளியமுத்தின் திரட்சியைத்தூக்கிய தொப்பவிளங்கும் பாலிநதிசூழ்ந்த திருநாட்டையுடையவனே, சிறியேம்சிற்றில் சிதையேல்—சிறியேமிழைத்த எமது சிற்றிலை யழிக்காதே,—

மூலைக்கோடு தைப்பத் தெரியன் முகையுடைந்து முருகூற்றெழுந்து தினனைக்கும் என்பதுகாறும் மிகுதிநவிற்சியணியும், அகல்வானப்பந்தருக்கு என்பது உருவகவணியும், நாட்டும் பண்பாளன்றதுதொடர்புயர்வு நவிற்சியணி யுங், கலந்துவருதலால் கலவையணி. (அ)

கமலக்களைசெந்நெலிற்களையுங்
கடைச்சிமகளிர்வளையொலியாற்
கயல்போய்க்கரும்பைவளைத்தொடிப்பக்
கலித்தகொழுஞ்சாறொழுகுவழித்
தமரக்கலிவண்டொழுங்கேறல்
சம்பராரிநாணேற்றுந்
தனுவைப்பொருவமலரோடை
தருக்குமவன்றூணியைநிகர்ப்ப
நிமலக்கமுகின்குடப்பணில
நிலவுக்கவிகைதனையேய்ப்ப
நெடுமாளிகையின்மகளிரவ
னேருஞாயிற்படையேய்க்குந்
திமிலப்பாலித்திருநாடா
சிறியேஞ்சிற்றில்சிதையேலே.
தேரூர்வீதிப்போரூரா
சிறியேஞ்சிற்றில்சிதையேலே.

(இ-ள்.) கமலம் களை செந்நெலில்களையும் கடைச்சி மகளிர் வளை ஒலியால்—தாமரையாகிய களைகளை செந்நெற்பயிரிற்களையும் மருதநிலப்பெண்களின் வளையலின் ஒலியினால், கயல்போய் கரும்பைவளைத்துஒடிப்ப—அஞ்சியகயன் மீன்மீதுசென்றுகரும்பினைவளைத்துமுரிக்க, கலித்த கொழும்சாறுஒழுகும்வழி—ஒலிக்காநின்ற கொழுவியசாறு ஒழுகுமிடத்து, தமரம் கலிவண்டு ஒழுங்குஏறல் ஒலிக்கும் மதுமயக்கினையுடைய வண்டுகள் அச்சாறுண்ண அக்கரும்பின்மே ல்நிரைநிரையா யேறுதல், சம்பராரிநாண் ஏற்றும்தனுவைபொருவ—மன்மதனு ணேற்றிய வில்லையொருபா லொப்பவும், மலர் ஓடை தருக்கும் அவன்தூணி யைநிகர்ப்ப—மலர்நிறைந்த நீரோடைகள் இறுமாக்கும் அம்மன்மதனதுஅம் பறாத்தூணியை ஒருபா லொக்கவும்; நிமலம் கமுகின் குடம் பணிலம் நிலவு கவிகைதனை ஏய்ப்ப—களங்கமில்லாத கமுகினுள்ள குடம்போன்ற சங்குகள் மன்மதனது சந்திரனாகிய குடையையொருபாலொப்பவும், நெடுமாளிகையில் மகளிர் அவன் நேரும் ஞாயில் படை ஏய்க்கும் — உயர்ந்தமாளிகைகளிலு ள்ள பெண்கள் அம்மன்மதன்றனது உயர்ந்த மதிலுறுப்புகளில் வைத்தசே னையை யொத்துத் தோன்றும், திமிலம்பாலி திருநாடா — பேரோசை

யையுடைய பாலிநதிசூழ்ந்த வளமிக்கதொண்டைநாட்டையுடையவனே, சிறியேம் சிற்றில் சிதையேல்—சிறியேமிழைத்த சிற்றிலையழிக்காதே,—

மன்மதனென்னும் ஒருபொருட்கேஅவனங்கங்கள்பலவற்றையும் எடுத்துக்கூறிஅவ்வுவமைகள் தோறும்அவ்வுவமைச்சொற் புணர்த்திவருதலால் பலவயிற் போலியணி. (௯)

அருணன்றபனஞ்செவ்விளநீ
    ரகற்றப்பசும்பொற்புரவியிளைப்
பரும்பும்பொதும்பிற்றுயின்முகினீ
    ராற்றக்கமுகுகுடைநிழற்றக்
கருவினிருந்துநிமிர்ந்துதலை
    கவிழ்க்குஞ்சாலிக்கதிர்கற்றைக்
கவரிமருங்கின்காலசைப்பக்
    கடிச்சண்பகங்கண்மணம்வீசத்
தருணவாழையாலவட்டஞ்
    சந்தப்பொதியக்காலெறியத்
தரணியிதயங்களிசிறப்பத்
    தயங்குமணித்தேர்மெலச்செலுத்துந்
திருவண்பாலிச்செழுநாடா
    சிறியேஞ்சிற்றில்சிதையேலே
தேரூர்வீதிப்போரூரா
    சிறியேஞ்சிற்றில்சிதையேலே.

(இ-ள்.) அருணன் தபனம்—சூரியன் தேரையோட்டும் அருணனது தாபத்தை, செவ்விளநீர் அகற்ற—அங்குள்ள தென்னையின் செவ்விளநீரானது ஒருபால்நீக்கவும், பசும்பொன் புரவிஇளைப்பு—சூரியன்தேரிற்கட்டிய பசியபொன்னிறம்வாய்ந்தகுதிரையினிளைப்பினை, அரும்பும் பொதும்பில் துயில்முகில்நீர்ஆற்ற—முகையரும்பியசோலையிற்றூங்கும் மேகங்கள் துளிக்கும்நீரால் ஒருபாலாற்றவும், கமுகுகுடைநிழற்ற—கமுகு ஒருபால்குடைபோல நிழல்செய்யவும், கருவின் இருந்து நிமிர்ந்து தலைகவிழ்க்கும் சாலி கதிர்கற்றை—பீளின்கண்ணிருந்தெழுந்து நிமிர்ந்து பால்பற்றியபின் தலையைக் கவிழ்க்கும் நெல்லின்கதிர்நெருக்கம், கவரிமருங்கின் கால் அசைப்ப—சாமரம்போல ஒருபால்நின்று காற்றை வீசவும், கடி சண்பகங்கள் மணம்வீச—வாசமிக்க சண்பகங்கள் ஓர்பால் வாசம்வீசவும், தருணம்வாழை ஆலவட்டம் சந்தம் பொதியக்கால் எறிய—கன்னிவாழைகள் ஆலவட்டம்போலச் சந்தனமரஞ்செறிந்த பொதியமலையில் முளைத்ததென்றலைஒருபால்வீசவும், தரணி இதயம்களிசிறப்ப—சூரியன்மனங்களிகூர்தலால், தயங்குமணித்தேர் மெல்லச்செலுத்தும்—விளங்காநின்ற இரத்தினமிழைத்ததேரைமெல்லச்செலுத்தும், திருவண்பாலிசெழுநாடா—அழகிய சிறந்தபாலிநதி சூழ்ந்தவளமிக்கதொண்டைநாட்டையுடையவனே, சிறியேம் சிற்றில் சிதையேல்—சிறியேமிழைத்த சிற்றிலை யழிக்காதே.

அருணனுக்குஞ் சூரியன்றேரிற்பூட்டிய குதிரைக்கும், சூரியன் மண்டிலத்திற்கும், இங்குள்ள தென்னையும் சோலையுங் கமுகும் நெற்கதிர்களும் சண்பகங்களும் வாழைகளுஞ் சம்பந்தமில்லாதிருக்க, அவற்றொடுசம்பந்தங் கற்பித்துக்கூறுதலால் தொடர்புயர்வு நவிற்சியணி. (௧0)

சிற்றிற்பருவம் முற்றிற்று.

## சிறுதேர்ப்பருவம்.

நாலாமாண்டில் சிறுதேருருட்டுவதாதலால் மூன்றுமாண்டில் நிகழுஞ் சிற்றிற்பருவத்தின் பின்னர்க்காலவரையறைபற்றிச் சிறுதேர்ப்பருவத்தைமுறையேவைத்தார்.

மதுகரம்புக்கிடறவிரைநறுங்குறியமுகை
வாய்விண்டுமடன்மடக்கி
மதுமாரிபொழிகின்றதொங்கலாகண்டலன்
வயத்தொடுந்தேருருட்ட
விதுகரமுமட்கவோராயிரகரங்கொண்டு
வேலையிருளள்ளியுண்டு
வெற்பின்முடியெழுகடவுள்சூர்மகற்கஞ்சாது
வியன்மணித்தேருருட்டச்
கதமெழிச்செங்குஞ்சிவெண்பற்பசுங்கட்
கரும்பேய்களவுணருடலக்
கார்வரையுருட்டமாலட்டதிசைதனதாணை
கைக்கொள்சக்கரமுருட்டச்
சிதைவறுபெருந்தேருருட்டுபோரூரிறைவ
சிறுதேருருட்டியருளே
சிமயமொய்த்திடுமிமயமயில்வயிற்றுதயமணி
சிறுதேருருட்டியருளே.

(இ-ள்.) மதுகரம்புக்கு இடற—வண்டுகள் புகுந்து காலாலிடற, விரைநறுங் குறியமுகைவாய் விண்டு மடல் மடக்கி—வாசமிக்க நறுமணங்கமழும் சிறியஅரும்புகள் வாய்மலர்ந்து இதழினை மடக்கி, மதுமாரிபொழிகின்ற தொங்கல்ஆகண்டலன்—தேன்மழை சிந்தும் மாலையையணிந்த இந்திரன், வயத்தொடும் தேர் உருட்ட—வெற்றியோடுந் தேரினைத் தடையின்றிவிண்ணுலகிற்செலுத்தவும், விதுகரமும் மட்கஓர் ஆயிரம்கரம்கொண்டு—சந்திரகிரணமு மழுங்க ஒரு ஆயிரங்கிரணங்களைக்கொண்டு, வேலைஇருள் அள்ளியுண்டு—கடல்போலெங்குஞ் செறிந்தஇருளினைக் கையாலள்ளிப் பருகி, வெற்பின் முடி எழுகடவுள்—உதயகிரியின் சிகரத்திலெழுந்த சூரியன், சூர்மகற்கு அஞ்சாது—சூரன் மகனாகிய பானுகோபனுக்குச்சிறிதுமஞ்சாது, வியன்மணி தேர் உருட்ட—பரந்த

இரத்தினமிழைத்த தனதுதேரை ஆகாயத்தில் ஒருபாற்செலுத்தவும், கதழ் எரி செங்குஞ்சி - விரைந்தெரியும் தீயையொத்த செவந்தமயிரையும், வெண்பல் பசுங்கண் கரும்பேய்கள் - வெள்ளியபல்லையும்பசியகண்ணையுமுடையகரியபேய்கள், அவுணர் உடலம்கார்வரை உருட்ட - அசுரர்களதுசரீரமாகியகரியமலையை ஓர்பாலுருட்டவும், மால் அட்டதிசை தனதுஆணைகைகொள் சக்கரம் உருட்ட - திருமால் அட்டதிசைகளிலும் தனது ஆணையைக்கைக்கொண்டு சக்கரத்தைஓர்பாற்செலுத்தவும், சிதைவரு பெருந்தேர் உருட்டு போரூர் இறைவ - அழிதலில்லாதபெரியதேரைச்செலுத்திய திருப்போரூரில்வாழும் இறைவனே, சிறுதேர் உருட்டி அருள் - சிறியதேரையுருட்டியருளாய், சிமயம்மொய்த்திடும் இமயமயில் வயிறு உதயமணி - சிகரங்கள்நெருங்கிய இமயமலையிற்றோன்றிய உமையம்மையின்திருவயிற்றிலுதயஞ்செய்த மாணிக்கம்போல்வாய், சிறுதேர் உருட்டி யருள் - சிறுதேரைச்செலுத்தியருளாய்.

அசுரர்களுக்கஞ்சி மறைந்துநின்ற இந்திரன் முருகக்கடவுள் அசுரர்களுயிர்வாங்க மகேந்தரபுரிக்குத் தேர்செலுத்திச் சென்றருளியகாலையில் அசுரரை வென்றேமென்று தானுந்தேர் செலுத்தினமையால் ஆகண்டலன்வயத்தொடுந்தேருருட்ட எனவும், சூரன்மகனாகிய பானுகோபனென்பவன் இளமைப்பருவத்தில் தொட்டிலில்கண்ணுறங்கும்போது சூரியகிரணம் சிறிதுபட, அதற்கு அவன்கோபித்துப்பாய்ந்து பிணித்துத்தனது தொட்டிலின் கீழ்படுத்தினமையால் அவைகளுக்கஞ்சி விண்ணினியங்காதசூரியன் இன்று இவர்களிடரொழிந்தோமென்று அஞ்சாதுவிண்ணில் தேர்செலுத்தலால் வெற்பின்முடியெழுகடவுள் சூர்மகற்கஞ்சாது வியன்மணித் தேருருட்ட எனவும், அசுரருடற்சுவைகண்டறியாதபேய்கள் இன்று அவர்களுடற் சுவைகண்டறிதலால் கரும்பேய்கள் அவுணருடலக் கார்வரை யுருட்ட எனவும், திருமால் சூரன்முதலியோர்க்கஞ்சுதலால்தனதாணையின்வழிநில்லாத அட்டதிக்குகளையும்தனதாணைவழிப்படுத்தியோம்புதலால்மாலட்டதிசைதனதாணைகைக்கொள்சக்கரமுருட்ட எனவும், அவரவர்கள்பகையொழிந்து தத்தமக்கியன்றவாறுசெல்ல அசுரரோடு போர்புரியப் பெருந்தேருருட்டிய நீஇன்றுயாங்காணச் சிறுதேருருட்டியருளென்பார் சிதைவருபெருந்தேருருட்டுபோரூரிறைவ சிறுதேருருட்டியருளே எனவுங்கூறினர்.

பானுகோபன் சூரியனைத் தனது தொட்டிலின்கீழ்ப்படுத்தினதை.

“கட்டழகுடையமைந்தன்சம்பலங்கொண்டசெம்பொற்
றொட்டிலிற்றுயிலுமெல்லையொருபகற்சுடருமென்றாழ்
விட்டதோர்நூழைதன்னுண்மேவியேயனையன்மெய்யிற்
பட்டதங்கதனைநாடிப்பரிதியைச்சுளித்துப்பார்த்தான்.

பார்த்திடுகின்றமைந்தன்பன்மணித்தொட்டினின்றுஞ்
சீர்த்தெழுந்தண்டம்பாய்ந்துசெங்கதிர்ச்செல்வற்பற்றிக்
கார்த்திடுபுயங்கங்கவ்வும்படித்தெனக்கரத்திற்கொண்டு
பேர்த்துமோரிறையில்வந்தானவத்தினும்பெரிதொன்றுண்டோ.”

எனக் கந்தபுராணத்தில் வருதல் காண்க. (க)

மறுகுவளியெறியுங்கடுஞ்சிறைப்புலிநக
வளைத்துண்டவெண்டலைச்செம்
மாமுதுகுடைக்கருடன்மீதிவர்ந்தொளிபெருகு
மரகதநிறக்கடவுளு
முறுகெரிகடுக்குஞ்சிகைப்பவளவாய்வெண்மை
மொய்த்தசிறைவிள்ளாவடி
மூதோதிமத்திவர்ந்தாரணமுழக்கநா
முண்டகமனைக்கடவுளுங்
குறுகியிருபுறனும்வரநடுவிடைப்பைஞ்சிறைக்
குரகதங்கடவியடியார்
குறைகளைந்தாறுமதிவதனவழிகருணைபொழி
கொண்டலேயண்டரரசே
சிறுகிடைப்பெருமுலைத்தேவகுஞ்சரிகணவ
சிறுதேருருட்டியருளே
சிமயமொய்த்திடுமிமயமயில்வயிற்றுதயமணி
சிறுதேருருட்டியருளே.

(இ - ள்.) மறுகு வளி எறியும் கடும்சிறை - சுழலுங்காற்றைவீசுங்கடியசிறையையும், புலி நகம் வளைதுண்டம் வெண்டலை - புலியின்நகத்தைப்போலவளைதலையுடைய மூக்கையும் வெள்ளியதலையையும், செம்மாமுதுகு உடையகருடன்மீது இவர்ந்து - செவந்த பெரியமுதுகையுடைய கருடன்மேலேறி, ஒளிபெருகு மரகதம் நிறம் கடவுளும் - ஒளிமிக்கமரகதம்போன்றநிறத்தையுடைய திருமாலும், முறுகு எரிசிகை கடுக்கும் பவளம் வாய் - முறுகியெரியும் தீயின்சிகையையொத்த பவளம்போன்றவாயையும், வெண்மை மொய்த்த சிறைவிள்ளாத அடி - வெண்ணிறம்வாய்ந்தசிறகினையும் பிளவுபடாதகாலையுமுடைய, முது ஓதி மத்து இவர்ந்து ஆரணம் முழக்கும் நாமுண்டகம் மனைக்கடவுளும் - பெரியஅன்னவூர்தியின் மேலாரோகணித்து வேதபாராயணஞ்செய்யும்நாவையுடைய தாமரையாகியமனையில்வசிக்கும்பிரமனும், இருபுறனும் குறுகிவர - வலப்பாலிடப்பாலென்றுமிவ்விரண்டுபக்கத்தும் சுத்தஊர்திமேல்வரவும்; நடு இடை பைஞ்சிறை குரகதம் கடவி - நடுவேபசியசிறகையுடைய மயிலாகியகுதிரையைநடத்தி, அடியார் குறைகளைந்து - அடியவர்குறைகளையோட்டி, ஆறுமதி வதனவழி - ஆறுசந்திரர்கள் ஒருங்கே உதித்தாலொத்த திருமுகங்களின்வழியே, கருணைபொழி கொண்டலே - திருவருள்சுரக்குமேகமே, அண்டர் அரசே - தேவர்களுக்கரசனே, சிறுகு இடை பெருமுலை தேவகுஞ்சரி கணவ - சிறுகிய இடையையும்பெருகியமுலையையுமுடைய தெய்வயானை நாய்ச்சியார் கணவனே, சிறுதேர் உருட்டிஅருள் - சிறுதேரைச்செலுத்தியருளாய். (உ)

பாதகிரியுமெலும்புப்பெரும்பலகையும்
பகர்நாடியுருவாணியும்
பரியமருமத்தட்டுமெரியசீர்க்கூவிரம்
படிறுசெறிபொறியாடியுங்
காதறருகுஞ்சிக்கொடிஞ்சியும்பலமொழி
கலித்தபல்லியராசியுங்
கணமொடுமலிந்தவுடலெனவுரைதரும்
பெரியகடுவேகமுடையநாறு
பேதமுறுதேர்கண்மீதாருயிர்ப்பிள்ளையைப்
பிறங்கிடவிருத்திவெற்றிப்
பேசருமனப்புரவிகட்டிவினைவடவழிப்
பெருமநின்னருள்வலவனற்
றீதறநடத்திடச்செய்தகுமரேசனே
சிறுதேருருட்டியருளே
சிமயமொய்த்திடுமிமயமயில்வயிற்றுதயமணி
சிறுதேருருட்டியருளே.

(இ - ள்.) பாதகிரியும் - பாதமேயுருளையும், எலும்பு பெரும்பலகையும் - எலும்பேபெரியபலகையும், பகர்நாடி உருவாணியும் - சொல்லும்நாடியே ஓரச்சாணியும், பரியமருமம் தட்டும் - பருத்தமார்பேதட்டும், அரிய சீர் கூவிரம் ஆடி படிறுசெறி பொறியும் - அரியசிறப்புவாய்ந்த தேர்க்கொடிஞ்சியே காற்றாடியையொத்தவஞ்சம்நெருங்கிய இந்திரியங்களும், காதல் தருகுஞ்சி கொடிஞ்சியும் - விருப்பமமைந்தசிகையே தேர்க்கொடிஞ்சியும், பலமொழி கலித்தபல்லியம்ராசியும்-பலசொற்களே ஒலிக்கும்பலவாச்சியத்தின்றெகுதியுமாக, கணம் ஒடு மலிந்த உடல் என்ன உரைதரும்-திரட்சியாகநிறைந்தசரீரமென்று சொல்லப்படும் பெரியகடியவேகத்தையுடைய பலவகைப்பட்டபேதமிக்கதேரின்மேல், ஆர் உயிர்ப்பிள்ளையை பிறங்கிட இருத்தி - பெறுதற்கரியவுயிராகிய ஓர்சிறுவனைவிளங்கவிருத்தி, வெற்றிபேசு அரு மனப்புரவி வினைவட வழிகட்டி - வெற்றிவாய்ந்தசொல்லுதற்கரிய மனமென்னுங்குதிரைகளை இருவினையென்னும்வடத்தின்வழிப்பூட்டி, பெரும - பெருமானே, நின் அருள் வலவனல்- உமது திருவருளாகியபாகனல், தீது அறநடத்திட செய்தகுமரேசனே - குற்றமறநடத்திச்செய்தருளிய குமரேசக்கடவுளே, சிறுதேர் உருட்டி அருள் - சிறிய தேரைச்செலுத்தியருளாய்.

வினையின்வழியே ஆன்மாக்களுக்குத் தக்கவுடல்தருதலால் கணமோடுமலிந்தவுடலெனவுரைதரும்பெரியகடுவேகமுடையநாறுபேதமுறுதேர்கண்மீது எனவும்,அவ்வினைப்போகநுகர்தற்கு அத்தேகங்களிலுயிர்களைக்கூட்டுவித்தலால் ஆருயிர்ப்பிள்ளையைப்பிறங்கிடவிருத்தியெனவும், அத்தேர்க்கு இருவினையே

வடமாதலால் வினைவடவழியெனவும், அவ்வினைப்போகவழிமனஞ்செல்லுத லால் பேசருமனப்புரவிகட்டியெனவும், ஆன்மாக்கள் வினைப்போகநுகர அதன் வழிநடத்துதல் அவனது திருவருளேயாதலால் அருள்வலவனூற்றீதறநடத் திட எனவுங்கூறினர். உருளும்பலகையும் உருவாணியும்தட்டும் தேர்க்கொடி யும் கொடிஞ்சியும் தம்முள் இயைபுடைமையால் இயைபுருவகவணி. (௯)

உலகினொடுசரவசரமெவையுமாயொன்றினொடு
மொருபற்றிலாதபொருளா
யுறுமறிவையறிவிடத்தெழுகின்றசிற்றசைவி
லுயிருலகுமயலில்பரமு
மிலகுமவையெங்ஙனமெனிற்கருதுமறிவொன்ற
தெழுநினைவுசுட்டுபொருளென்
றிவையோரிரண்டையுமிணைத்தும்பிரித்தும்
மியக்கிவருபொருளொன்றுமாங்
கலகமுறுமந்தநினைவின்றாகின்முப்பொருளு
மின்றுபரகதியுமிதுவே
காணென்றுகடையேனைவாவென்றுமுடிமீது
கஞ்சமலரடிதரித்தென்
சிலைமனங்கனிசெய்தகுமரசற்குரவனே
சிறுதேருருட்டியருளே
சிமயமொய்த்திடுமிமயமயில்வயிற்றுதயமணி
சிறுதேருருட்டியருளே.

(இ - ள்.) உலகினொடு சரம் அசரம் எவையும் ஆய் - உலகங்களோடு அவற்றிலுள்ள இயங்கியற்பொருளும் நிலையியற்பொருளுந் தானேயாகியும், ஒன்றினொடும் ஒருபற்று இல்லாதபொருள் ஆய் - தானேயாகிய அவைகளோடும் ஓரியைபில்லாதவேறுபொருளாகியும், அறிவு உறும் - பிரமம்உள்ளது, அவ்வறி விடத்து எழுகின்ற சிறு அசைவில் - அப்பிரமத்தின்சந்நிதியில் எழுகின்றசங் கற்பத்தில், உயிரும் உலகும் மயல் இல்பரமும் இலகும் - சீவனும்சகமும்மயக் கமில்லாத ஈஸ்வரனும் விளங்கும், அவை எங்ஙனம் என்னில் - அவையெவ் வாறென்னில், கருதும் அறிவு ஒன்று அது எழும் நினைவு சுட்டுபொருள் என்ற - முன்னர்க்கூறிய அப்பிரமமொன்றில் எழாநின்றசங்கற்பமும் சுட்டப் படும் சீவேஸ்வரசங்கத்தென்றுசொல்லப்பட்ட, இவை ஓரிரண்டையும் - இவ் விரண்டையும், இணைத்தும் பிரித்தும் இயக்கிவருபொருள் ஒன்றும் ஆம் - தன துலீலையாற்கூட்டியும்பிரித்தும் நடத்திவரும்பிரமம்ஒன்றுமாம், கலகம் உறும் அந்தநினைவு இன்று ஆகில் - கலாம்விளைத்தற்குஎல்லையாகிய அந்தநினைவுஇல் லையானால், முப்பொருளும் இன்று பரகதியும் இதுவே காண் என்று - சுட்டுப் பொருளாகிய சீவேஸ்வரசகத்துஎன்னுமுப்பொருளுமில்லை இதுவேபரமுத்தி

இதனைக்கண்டுதெளிவாயென்று, கடையேனை வா என்று முடிமீது கஞ்சமலர் அடிதரித்து - நாயிற்கடைப்பட் என்னை வாவென்று என் சிரத்தின்மேல்தாமரைமலர்போன்றதிருவடியைச்சூட்டி, என்சிலைமனம் கனிசெய்த குமரகுரவனே - எனதுகல்லையொத்தகடினமாகியமனத்தை யிளகச்செய்தகுமரேசக்கடவுளே ஞானாசிரியனே, சிறுதேர் உருட்டி அருள் - சிறியதேரைச்செலுத்தி, அருளாய்.

யாவுந்தானாய்நிற்பது பிரமமென்பார் உலகினோடு சரவசரமெவையுமாய் எனவும், பிரமம்யாவுந் தானாய்நிற்றலால் அவற்றில்அப்பிரமம் பற்றுள்ளதெனக்கூறுவார் கூற்றைஆசங்கித்துமறுப்பார் ஒன்றினோடும் ஒருபற்றிலாத பொருளாய் எனவும், அசைவற்ற அப்பிரமத்தினிடத்து அசைவுதோன்றியது அதன்லீலையென்பார் அவ்வறிவிடத்தெழுகின்ற சிற்றசைவு எனவும், அசைவாகிய அந்நினைவே சீவேஸ்வரசகத்தென்பார் உயிருலகுமயலில்பரமெனவும், பிரமம்இத்தன்மைத்து, சங்கற்பம் இத்தன்மைத்து, சீவேஸ்வரசகத்து இத்தன்மைத்து என்பார் அவைஎங்ஙனமெனில் எனவும், சிற்றசைவே பிரமத்தினிடத்தெழும்நினைவென்பார் கருதுமறிவொன்றதெழுநினைவென்றும், அந்நினைவே சீவேஸ்வரசகத்தென்பார் சுட்டுபொருளென்றும், அந்தர்முகநோக்கால் நினைவன்றிச்சீவேஸ்வரசகத்தும், சீவேஸ்வரசகத்தன்றி நினைவும்வேறின்மையும், பகிர்முகநோக்கால் நினைவும், சுட்டுப்பொருளும் வேறுபடுதலும் உளதென்பார் என்றஇவையோரிரண்டையும் இணைத்தும்பிரித்தும் எனவும், இவைஅப்பிரமத்தின்லீலை என்பார் இயக்கிவருபொருளொன்றுமாமெனவும், அந்நினைவேபந்தமாதலால் கலகமுறும்அந்தநினைவெனவும், அந்நினைவுபிரமத்தொடுங்கில் சீவேஸ்வரசகத்தோற்றரவின்றென்பார் இன்றாயின்முப்பொருளும் இன்றெனவும், இதுவன்றிப்பரகதிவேறின்றென்பார் பரகதியிதுவேகாண் எனவும், இந்நிலைக்குவாராத என்மேற்கருணைகூர்ந்தான் என்பார் கடையேனைவாவென்றெனவும், என்னைத்தாணக்கினான் என்பார்முடிமீதுகஞ்சமலரடிவைத்தென்சிலைமனங்கனிசெய்தஎனவும்கூறினார். இதனைக்குமாரதேவர் சாத்திரக்கோவையாலுணர்க. ()

ஒருபொருளிடத்தினிற்சச்சிதானந்தமோ
டுருவநாமமுமுள்ளதென்
றுரைதந்துமுன்னர்பினருண்டாய்விளங்கியுறு
பிரியமாயுளமூன்றுமே
மருளிரியவருமெய்ம்மையுருவநாமம்பொய்ம்மை
வன்பழுதையுரகவுருவின்
மாறுதறிந்திடுதிபின்பழுதைநன்று
மதித்தவர்க்கரவின்மையி
னிருளறும்பிரமமேநிகழுமற்றொருபொருளு
மெதிரிட்டிலங்காதென
வேழ்பிறவிவாரிதியிலாழுமெனைவாவென்
றெடுத்தருளளித்தகுரவா

தெருளுறுங்கலைமுனிவர்பரவுபோரூர்முருக
சிறுதேருருட்டியருளே
சிமயமொய்த்திடுமிமயமயில்வயிற்றுதயமணி
சிறுதேருருட்டியருளே. (௫)

(இ - ள்.) ஒரு பொருள் இடத்தினில் - ஒருபொருளில், சச்சிதானந்தமோடுஉருவமும்நாமமும் உள்ளது என்று முன்னர் உரைதந்து-சச்சிதானந்தத்தோடுஉருவமும்நாமமும்உள்ளதென்றுமுன்னரருள்செய்து, பின்னர் உண்டாய்விளங்கி உறும் - பின்புஉண்டாகிவிளங்கும், பிரியம்ஆய் உள்ள மூன்று உள்ளே - பிரியமாயுள்ளஅம்மூன்றனுள்ளே, மருள்இரியவரும்மெய்மை-சச்சிதானந்தம்மயக்கம்நீங்கவுதிக்கும்மெய்மையாம், உருவம்நாமம் பொய்மை-உருவமும்நாமமும்பொய்மையாம், வன்பழுதை - வலியபழுதை, உரகஉருவில் - பாம்பாகத்தோன்றுதலில், மாறாது அறிந்திடுதி-மாறாதிருத்தலையறிவாய், பின்பழுதை நன்றுஆக்மதித்தவர்க்குஅரவுஇன்மையின் - பின்புபழுதையெனவிளங்கத்தெரிந்தவர்க்குஆரோபமானஅராத்தோற்றரவு இல்லாமையினால், இருள் அறும் பிரமமே நிகழும் - விளங்கும்பிரமம்ஒன்றுமேநிகழாநிற்கும், மற்று ஒருபொருளும் எதிரிட்டுஇலங்காது என்ன-வேறொருபொருளும்முன்னிட்டுவிளங்காதென்று, எழ்பிறவிவாரிதியில் - எழுபிறப்பாகியகடலில், ஆழும் என்னைவா என்று-அழுந்திய என்னை வாவென்றெடுத்து, அருள் அளித்த குரவா - அனுபூதியருளியஞானாசிரியனே, கலைதெருளுறும் முனிவர் பரவு போரூர் முருக - பலநூல்களையும் ஐயந்திரிபறவுணர்ந்த முனிவர்கள்விளங்கும் திருப்போரூரிலெழுந்தருளியமுருகக்கடவுளே, சிறுதேர் உருட்டி அருள் - சிறுதேரைச்செலுத்தியருளாய்.

பிரமம் என்பார் ஒரு பொருளெனவும், உள்ளதை யுணர்ந்தவழிச்சச்சிதானந்தந் தோன்றுமென்பார் ஒடுக்கொடுத்துப் பிரித்துச்சச்சிதானந்தமோடெனவும், உலகென்பார் உருவநாமமெனவும், மயங்கியவழிஅவ்விரண்டும்உள்ளதென்பார் - உள்ளதென்று முன்னர் உரைதந்து எனவும், உருவநாமத்தோற்றரவும்அவைநீங்கியகாலத்துச்சச்சிதானந்தமும் பின்னர்விளங்குமென்பார்பின்னருண்டாய்விளங்கியுறும்எனவும், அவை என்றுமுள்ளன வென்பார் பிரியமாயுள்ள மூன்றெனவும், உருவநாமத்தோடு சச்சிதானந்தத்தைக் கூட்டியுரைப்பினும் அது பிரிக்கப்படு பொருளில் வந்ததென்பார் கூட்டிப்பிரித்தற் பொருளில்வந்த எழனுருபு தந்து மூன்றுளே எனவும, சச்சிதானந்தம் நிலைபேறுடையதென்பார் மெய்ம்மையெனவும், பழுதை பாம்பாகத்தோன்றியக்கால் விளக்கொளியால் பாம்பின் தோற்றரவாகிய மயக்கம் ஒழிதல்போலப் பிரமத்தில் ஆரோபிதமான உலகு வேதாந்தவிசாரத்தாலொழிய அச்சச்சிதானந்தம் உதிக்குமென்பார் மருளிரிய வருமெனவும், ஆரோபமொழிவது இயல்பென்பார் உருவநாமம் பொய்மை எனவும், பிரமத்தில் உலகுதோன்றுதற்கு எதுக்கூறுவார் பழுதையுரகவுருவின் மாறாதறிந்திடுதி எனவும், அவ்வாரோபம் விளக்கொளியால் நீங்குமென்பார் பின்பழுதை நன்றுமதித்தவர்க்கெனவும், அவ்வராத்தோற்றரவு ஒழிந்தவர்க்கு அதிட்டானமாகியபழுதைத் தோற்றரவே தோன்றுமெ

ன்பார் அரவின்மையின் எனவும், அதுபோல ஆரோபமாகிய உலகத்தோற்ற
ரவு ஒழியுமென்பார் இருளறும் எனவும், அத்தோற்றரவு ஒழிந்தகாலத்தில் அதி
ட்டானமாகிய பிரமம் விளங்குமென்பார் பிரமமேநிகழுமெனவும், அங்குச்சச்
சிதானந்தமே தோன்றுமென்பார் மற்றொரு பொருளும் எதிரிட்டிலங்காதென
வும், ஆரோபமான உலகையே மெய்யென்று கருதியுழன்றேனென்பார் ஏழ்பி
றவி வாரிதியிலாழுமெனை எனவும், நீ கருதியது பொய் நாம் அருளுவது
மெய் என்றருளினனென்பார் வாவென்றெடுத் தருளளித்த குரவா எனவுங்
கூறினர். (௫)

வேறு.

வடவைக்கனலெனவுதரக்கனன்மிக
 மண்டப்பசிவிஞ்சி
மண்டையின்மூளையயளையெனமுதுபேய்
 வாரிவிழுங்கவதின்
புடையிற்சிறுபேய்கெஞ்சிக்கெஞ்சிப்
 பொருமியழத்தேர்கள்
புணரிக்கலனிற்குருதிக்கடலிற்
 போகக்காகநிற
மிடறற்றாடுகவந்தக்குழுவினை
 விரிதலைமுதுகூளி
வெங்களநாடகசாலையிலாட்ட
 வெகுண்டெழுமவுணர்கணத்
துடலைக்கறியினரைத்தெழுதேரா
 வுருட்டுகசிறுதேரே
யுமையொருபாகற்கருமைக்குமர
 னுருட்டுகசிறுதேரே. (௬)

(இ - ள்) வடவைகனல்என்ன உதரம்கனல்மிகமண்ட - வடவாமுகாக்கினி
போலவுதராக்கினிமிகவு மூளுதலால், பசிவிஞ்சி - பசிமீதூர்ந்து, மண்டையில்
மூளையை அளை என்னமுது பேய் வாரிவிழுங்க - தலையிலுள்ள மூளையைத்த
யிர்போலப்பெரியபேய்கள்ஓர்பால்வாரிவிழுங்கவும், அதின் படையில்சிறுபேய்
கெஞ்சி கெஞ்சி பொருமி அழ - அப்பேய்களின்பக்கலிலுள்ளசிறுபேய்கள்அம்
மூளையைத்தமக்குத்தாராமையால் கெஞ்சிகெஞ்சிவிம்மியழவும், தேர்கள்புணரி
கலனில் குருதி கடலில்போக - அசுரரேறியதேர்கள்கடலிற்செல்லுமரக்கலம்
போலஉதிரக்கடலில்ஓர்பாற்செல்லவும், காகம் நிறம் மிடறு அற்று ஆடு கவந்
தம் குழுவினை - காகம்போலக்கருநிறம்வாய்ந்தகழுத்தற்றுஆடும்உடற்குறைக்
கூட்டங்களை, விரிதலைமுதுகூளி வெங்களம் நாடகசாலையில் ஆட்ட - மயிர்வி
ரித்ததலையையுடையபெரியபூதங்கள்கொடியகொலைக்களமாகியநாடகசாலையில்
ஓர்பாலாட்டவும், வெகுண்டு எழும் அவுணர்கணத்து உடலை - கோபித்தெழும்
அசுரர்கூட்டத்தின்சரீரங்களை, கறியின் அரைத்து எழுதேரா - சாயம்போல அரைத்

தெழுந்தேரையுடையவனே, சிறுதேர் உருட்டுக - சிறிய தேரைச்செலுத்தக்கட வாய், உமை ஒருபாகற்கு அருமைகுமரன் சிறுதேர் உருட்டுக - உமையம்மை யையோர் பாலுடைய இறைவனுக்கு அரியபுத்திரனே சிறுதேரைச்செலுத்தி யருளுக.

பேய்களும் பூதங்களும் என்றுங் கண்டறியாத சுவைகண்டு குதுகலிக்க அசுரர் சரீரங்களைக் கூட்டுப்போலத் தடைபடாதரைத்தெழ மகேந்திரபுரிக்குத் தேர் செலுத்துவோ னீயாதலால் இன்று எங்கள் கண்கள் களிகூரச் சிறுதேரு ட்டுக என்பார் உருட்டுக சிறுதேரே என்றார். (சு)

கவைதருகுறுமுட்டாண்ஞெண்டுருகுறு
கண்டற்கரியெயிறு
காணெனவெண்முகையுண்டாய்விண்டது
காலுந்துகளள்ளி
நவையறுபெடைஞெண்டுக்குதவிப்பக
னள்ளிருளளைமனைவாய்
நண்புறுமஃதொடுபுக்குக்கொண்ட
னறுங்குறுதுளிவீசத்
தவநனிகுளிரானுளையக்கடறன்
றண்டிரைவண்கையாற்
றரளக்கதவும்பவளக்கதவுந்
தந்தம்மனைமூடு
முவமையினெய்தற்போரூரிறைவ
னுருட்டுகசிறுதேரே
யுமையொருபாகற்கருமைக்குமர
னுருட்டுகசிறுதேரே. (எ)

(இ - ள்.) கவைதரு குறுமுள்தாள் ஞெண்டு - பிளவுபட்ட சிறியமுள்வா ய்ந்தகாலையுடையஞெண்டும், அருகு உறுகண்டல்-பக்கங்களிலுள்ளதாழைகள், கரிஎயிறுகாண் என்ன வெண்முகை உண்டாய் விண்டு - கண்டோர் இதுயா னையின் கொம்பென்றுசொல்ல வெள்ளிய அரும்பரும்பிமலர்ந்து, அதுகாலும் துகள் அள்ளி - அத்தாழைகக்கியமகரந்தங்களையள்ளி, நவை அறு பெடைஞெ ண்டுக்கு உதவி - குற்றமற்றபெண்ஞெண்டுக்குத்திமிர்ந்து, பகல் நள் இருள் அளைமனைவாய் - பகற்பொழுதிலும்நடுவிராப்பொழுதிலும்வளையாகியமனையில் நண்பு உறும் அஃதொடு புக்கு - ஊடல்நீங்கிக்கலந்தஅப்பெண்ஞெண்டொடு புகுந்து, கொண்டல் நறுங்குறுதுளிவீச - மேகம்நறுமணங்கமழும் சிறுதுளி களைவீசுதலால்உண்டாகிய, தவநனிகுளிரான் உளைய - மிக்ககுளிரால்வருந்த, கடல் தன் தண்திரை வண்கையால் - அதனையுணர்ந்துகடலானது தனது தண் ணிய அலையாகியவளம்வாய்ந்தகையினால், தரளக்கதவும் பவளக்கதவும் தம் தம்

மனைமூடும்- முத்தாகியகதவும்பவளமாகியகதவும் ஆகியஇவற்றால் தத்தமக்குரிய வளையாகியமனையைமூடும், உவமையில் நெய்தல் போரூர்இறைவன் சிறுதேர் உருட்டுக - ஒப்பில்லாத நெய்தனிலம்சூழ்ந்த திருப்போரூரையுடைய இறைவனே சிறுதேரைச்செலுத்தியருளுக.

கவைதருகுறு முட்டாண் ஞெண்டு, கரியெயிறு காணென வெண்முகையுண்டாய் என்னுமிரண்டும் பொருட்டன்மை யணிகளும், ஆண்ஞெண்டு பெண்ஞெண்டுக்குத் தாழையின் மகரந்தங்களைத்தந்து நண்புறுமென்பது உதாரவணியும், கடல் முத்துகளையும் பவளங்களையும் வாரி அஞ்ஞெண்டின் வளை செறித்தலை,அதுகுளிருக்காற்றாது வருந்துதலையொழித்தற்குக்கடல்கதவுமூடியதெனக் கவிஅத்தியவசயித்துக்கூறுதலால்தற்குறிப் பேற்றவணியும், கலந்துவருதலாற்கலவையணி. (எ)

பசுமைப்புல்லிச்செந்நிறவல்லிப்
பங்கேருகமீதும்
பால்பாய்தாறொடடுக்குமடற்குலை
பரியுங்கதலியினும்
நசையுற்றிடுகட்டேறற்பாளை
நறும்பூகத்திடையு
நவைதீரீர்வாணெட்டிலைமுண்டக
நகுவெண்டுணர்தோறுந்
திசையுற்றருமணம்வீசுபுன்னகஞ்
செறிபுளினத்திடையுஞ்
சினைவளைமதியமுதத்திரள்சிந்துஞ்
செய்தியின்மணிசொரியு
முசிதக்கல்வியர்சூழ்போரூர
னுருட்டுகசிறுதேரே
யுமையொருபாகற்கருளழைக்குமர
னுருட்டுகசிறுதேரே.

(இ - ள்.) பசுமை புல்லி செந்நிறம் அல்லி - பசியபுறவிதழையும்செந்நிறம்வாய்ந்த அகவிதழையுமுடைய, பங்கேருக மீதும் - தாமரைமலர்மேலும், பால்பாய் தாறொடு அடுக்கும் மடல் குலை பரியும் கதலியினும்-பால்பரவியகுலையோடுஅடுக்கடுக்காயுள்ளமடல்செறிந்தகுலையைச்சுமக்கும்வாழையின் மேலும் நசைஉற்றிடு கள்தேறல் பாளை - விரும்புங்கள்ளமைந்தபாளையையுடைய, நறும்பூகத்து இடையும் - நறுமணங்கமழும்கமுகமரத்திடத்தும், நவைதீர் ஈர்வாள்நெட்டிலை முண்டகம் - குற்றத்தினின்றுநீங்கியஈர்வாளையொத்தநெடியஇலையையுடையதாழையின், நகு வெண் துணர் தோறும்-விளங்கும்வெள்ளியபூங்கொத்துகள்தோறும், திசை உற்று அருமணம் வீசுபுன்னாகம் செறி புளினத்து

இடையும்-திக்குகளையளாவிமிக்கமணத்தினைவீசும்புன்னைமரங்கள்செறிந்தம ணற்குன்றுகளிடத்தும், சினை வளை மதி அமுதத்திரள் சிந்தும் செய்தியின்-கருப்பம்வாய்ந்தசங்குகள்சந்திரன்அமுதத்திரளைச்சிந்தும்செய்திபோல், மணிசொரியும் - முத்துகளைச்சொரியும், உசிதக் கல்வியர்சூழ் போரூரன் - நன்மைதரும் நூலுணர்ச்சியையுடையோர் சூழும் திருப்போரூரனே, சிறுதேர் உருட்டுக - சிறுதேரினைச்செலுத்தியருளுக.

தாமரையின்புறவிதழ் பசியநிறமும் அகவிதழ்செந்நிறமு முடைமையால் பசுமைப் புல்லிச் செந்நிறவல்லிப் பங்கேருகமெனவும், 'பால்பாய்தாறு என்ற மையால் முதிர்ந்தகுலை எனவும், அடுக்குமடற்குலை யென்றமையால் இளங்குலை யெனவுங்கூறினர். தாமரையிலும் வாழையிலும் கமுகிலும் தாழையின் பூங்கொத்திலும் மணற்குன்றிலும் சங்குகளின்முத்துச்செறியுமென்பது மிகுதிற விற்சியணி. (அ)

தரளவெண்மணியுஞ்சங்குந்துகிருந்
தடவாள்வாய்முரணுந்
தண்டிரையெறியும்வண்கடலிடையே
தந்திக்கனகோடு
நரைதருகவரியுநாவியுமகிலு
நற்சந்தக்குறடு
நாடருதிரையாலுந்திப்பலநதி
நண்ணுறல்பண்ணுறவே
யிருகிலமுழுதாளரையர்க்கங்கங்
கெய்தியதிருபரெலா
மேர்திறையிட்டங்கவனுளடங்கி
யிருந்திடுமுறைமானு
முருமலிசெய்தற்போரூரிறைவ
னுருட்டுகசிறுதேரே
யுமையொருபாகற்கருமைக்குமர
னுருட்டுகசிறுதேரே.

(இ - ள்.) தரளம் வெண்மணியும் சங்கும் துகிரும்-வெள்ளியமுத்துகளையும் சங்குகளையும் பவளங்களையும், தட வாள் வாய் முரணும்-பெரியவாள்போலுங் கூரியவாயையுடைய இப்பியையும், தண் திரை எறியும் வண்கடலிடையே-தண்ணிய அலைவீசும் சீர்வளம்வாய்ந்த கடலினிடத்து, தந்தி கனம் கோடும் - யானையினது பெரியகொம்பினையும், நரைதரு கவரியும் நாவியும் அகிலும் நல்லசந்தக்குறடும்-வெள்ளியசாமரையையும்மிருகமதத்தையும்அகிற்கட்டைகளையும் மணம் வாய்ந்த சந்தனமரத்துண்டுகளையும், பல நதி நாடரு திரையால் உந்தி நண்ணுறல்-பலநதிகளும் அடைதற்கரிய அலைகளால் தள்ளி வாரிக்கொ

ண்டு அக்கடலுளடங்குதல், பண் உற - அமைதிபெற, இருநிலமுழுது ஆள் அரையற்கு-பெரிய நிலவுலகுமுழுதுமாளும் அரசனுக்கு,அங்கு அங்கு எய்திய நிருபர் எல்லாம் - அவ்வந்நாட்டிலுள்ள அரசர்களெல்லாம், எர்திறையிட்டு அங்கு அவனுள் அடங்கி இருந்திடுமுறைமானும் - அழகிய திறையளந்து அங்கு அவன் கீழடங்கியிருக்கும் முறையையொக்கும், உருமலிநெய்தல் போரூர் இறைவன்சிறுதேர் உருட்டுக-உருவமிக்க திருப்போரூரை யுடையவனே சிறுதேரினைச்செலுத்தியருளுக.

நெய்தனிலப்பொருள் காண்போர்க்குப் புலப்படுதலால் உருமலி நெய்தல் என்றார். பெருநில அரசனைக் கடலாகவும், பலநதிகளைச் சிற்றரசர்களாகவும், யானைக்கொம்புகளையும் அகிற்கட்டைகளையும் சந்தனக்கட்டைகளையும் மிருக மதத்தையும் திறையிறுக்கும் பொருள்களாகவும், இதனைவாரிச்சென்று கடலினுளடங்குதலைத்திறையளக்கும் பொருள்கொண்டுசென்று பேரரசன் கீழடங்கும் குறுநிலமன்னர் செயலை யொக்குமெனவுங்கூறுதலால் ஒப்புமைக்கூட்ட உவமையணி. (கூ)

வடவரையோராயிரமுழைதோறும்
வருங்கொடிமினலெனவே
வாடருகவைநாநீளவிரித்திடு
மாசுணராசனையே
கடகரியெட்டுஞ்சென்னிகவிழ்த்துக்
கால்கண்மடித்திடவெங்
கடுவேகத்துடனோடிக்குத்திக்
கதிர்செறிபுஞ்சமெனப்
படமுடிதாழவெடுத்துதறிப்
பரதத்தினடித்திடுமோர்
பருமயில்கடவும்பவளக்குன்றே
பாலசமுத்திரமே
யுடலுறுமுயிர்கட்கினிதருளமுத
முருட்டுகசிறுதேரே
யுமையொருபாகற்கருமைக்குமர
னுருட்டுகசிறுதேரே.

(இ-ள்.) வடவரை ஓராயிரமுழைதோறும் - மேருவிலுள்ள ஆயிரங் குகைகள்தோறும்,வரும் மின்னல்கொடி என்ன-தோன்றியமின்னற்கொடியை ப்போல, வாடருகவைநா நீள விரித்திடு மாசுணராசனை - உணங்குதலில்லாத பிளவுபட்டநாவுகளை நீளவசைக்கும் ஆதிசேடனை, கடகரி எட்டும் சென்னி கவிழ்த்து கால் கண் மடித்திட - மதத்தையுடைய திக்குயானைகளெட்டும் தலைகளைக்கவிழ்த்துக் கால்களைமடக்கி யஞ்சிநிற்க, வெம் கடுவேகத்துடன் ஓடி

குத்தி - மிக்க கொடிய கோபத்தோடு சென்றேடிக்குத்தி, கதிர்செறிபுஞ்சம் என்ன - ஒளிநெருங்கிய ஓர் திரட்சியைப்போல, பட முடி தாழ எடுத்து உதறி - படத்தையுடைய அவ்வாதிசேடன் ஆயிரமுடியுங்கீழே தாழத்தூக்கியுதறி, பரதத்தின் நடித்திடும்-பரதநூலில் கூறியவண்ணம் நடனம்செய்யும், ஓர் பருமயில் கடவும் பவளக்குன்றே - ஓர் பருத்தமயிலையூர்தியாகநடத்தும் பவளமலையே, பாலசமுத்திரமே - பாலபருவத்தில் என்றும் நிறைந்துள்ளவனே, உடல் உறும் உயிர்கட்கு இனிது அருள் அமுதம்-உடம்பிலடங்கியஉயிர்கட்கு இனிதாக அருளும் அமுதமே, சிறுதேர் உருட்டுக - சிறு தேரினைச்செலுத்தியருளுக.

திக்குயானைகளுக்குத் தீங்குசெய்யும் ஆதிசேடனைக்குத்தித்தூக்கிமேலெடுத்து உதறுதலால் அந்த யானைகள் கண்டஞ்சியதென்பார், கடகரியெட்டுஞ் சென்னிகவிழ்த்துக் கால் கண்மடித்திட எனவும், ஆயிரம் பணடவிகளும் கீழே தாழ வெடுத்தமையால் ஒளிநெருங்கிய ஓர்திரட்சிபோலிருந்ததென்பார் கதிர் செறிபுஞ்சமெனப் படமுடிதாழ வெடுத்தெனவும், பாவம், ராகம், தாளம் என்னும் மூன்று திறத்தினையும் கூறுவது பரதநூலாதலால் அதிற் கூறியவண்ணம் நடித்ததென்பார் பரதத்தினடித்திடுமெனவும், சிவபெருமான் யௌவன பருவமும், உமையம்மை கன்னிப்பருவமுமென்றுமுடைமைபோலஇவன்பால பருவமென்றுமுடைமையால் பாலசமுத்திரமே யெனவும், மரணத்தையொழிக்கு மமுதுபோல உயிர்கட்குப்பிறப்பொழிய என்றும் அருள்வோன் என்பார் உயிர்கட்கினிதருளமுதமெனவும், உமைக்கும் இறைவனுக்கும் தம்மைப்போல ஒரு தன்மையனாய் இவன் இருத்தலின் புத்திரருள் இவனரிய புத்திரன் என்பார் உமையொருபாகற்கருமைக் குமரனெனவுங் கூறினர். (கO)

சிறுதேர்ப்பருவமுற்றிற்று.

---

திருப்போரூர் முருகர்பிள்ளைத்தமிழ் முற்றிற்று.

ஆகபருவம் (கO)-க்கு திருவிருத்தம் (கOO.)

வேலுமயிலுந்துணை.

வேலுமயிலுந்துணை.

# அலங்காரம்.

## விநாயகவணக்கம்.

### கலித்துறை.

முக்கட்பவளமலைவந்ததேனை முராரிதங்கை
பக்கத்தெடுக்கும்பரிமளப்பூவைப்பரிமயிலோற்
கொக்கத்துணைவந்தவுத்தமதேவையுயர்பொருளைச்
செக்கச்செவந்தநன்மாலியானையைச்சிந்தைசேர்க்குதுமே.

(பதவுரை.) முக்கண்பவளம் மலை வந்ததேனை - மூன்றுகண்களையுடைய பவளமலையிற்றோன்றிய தேனை, முராரிதங்கை பக்கத்து எடுக்கும் பரிமளம் பூவை-திருமால் தங்கையாகிய உமையம்மை தன் பக்கலில் எடுக்கு நறுமணங்கமழும் மலரினை,பரிமயிலோற்கு ஒக்கதுணைவந்த உத்தமதேவை-குதிரையாகியமயிலூர்தியையுடைய முருகக்கடவுளுக்கு ஒரு சேரத்துணையாக வந்தருளிய அருள்வடிவாகியதேவனை,உயர் பொருளை-உயர்ந்தபொருளாயுள்ளவனை, செக்க செவந்த நல்மால்யானையை - மிகவுஞ் செவந்த பெரிய யானைமுகக்கடவுளை, சிந்தை சேர்க்குதும்-மனத்திற் கருதுவோம்.

(பொழிப்புரை.) சிவபெருமானென்னும் பவளமலையிற்றோன்றியதேனை, உமையம்மை களிகூரும் நறுமணங்கமழும் மலரை, முருகக் கடவுளுக்குத் துணையாக முன்வந்த சிற்சொரூபமாகிய இறைவனை, எட்டுதற்கரிதாகிய இறைவனை, யானைமுக்கடவுளை நாம்மனத்திற் கருதுவோம்.

தேன் பிறத்தற்கு இடம் மலையாதலால் பவளமலை வந்ததேனை எனவும், அத்தேன் தோன்றுதற்கு மலர் இடமாதலால் முராரிதங்கை பக்கத்தெடுக்கும் பரிமளப் பூவை எனவும், பிரணவத்தின் பொருள் தானுயிருத்தலால் உயர் பொருளை எனவும், அப்பிரணவமே தானாதலால் யானையை எனவும், அவனைக் கருதுதலில் எடுத்தகாரியம் முட்டின்றி முடியுமென அடைந்தனராதலால் சிந்தை சேர்க்குதுமெனவுங் கூறினார். முக்கட்பவளமலை சிறப்புருவ கவணி.

## நூல்.

1 பூமேவுநாபனுநான்முகத்தோனும்புரந்தரனுந்
தாமேவுவாழ்வுமதிகாரமும்பெறத்தார்புனைந்த
கோமேவுவேல்கொண்டவுணரைமாய்த்தகுமரனெங்கோன்
றாமேவுதாண்மலர்போரூரிலென்முடி சூட்டினனே.

(ப - ரை.) பூமேவும் நாடனும் நான்முகத்தோனும் புரந்தானும்-தாமரை மலரை யொத்த திருவுந்தியையுடைய திருமாலும் நான்கு முகங்களையுடைய பிரமனும் இந்திரனுமாகிய இவர்கள், தாம்மேவும் வாழ்வும் அதிகாரமும் பெற-தத் தமக்குரிய வாழ்வையும் அதிகாரத்தையும் பெற,'தார் புனைந்தகோ மேவு வேல் கொண்டு-வெற்றிமாலை சூடிய அரசத்தன்மைவாய்ந்த வேலேந்தி,அவுணரைமாய்த்த குமரன் எங்கோன்-அசுரரை வேரோடறக்களைந்த குமாரக்கடவுளாகிய எமதிறைவன், தூமேவுதாள்மலர் - புனிதம்வாய்ந்த தனது திருவடித்தாமரையை, போரூரில் என் முடிசூட்டினன்-திருப்போரூரி லென்சிரசிற் சூட்டினான்.

(போ - ரை.) திருமாலும் பிரமனும் இந்திரனும் தத்தமக்குரிய வாழ்வையும் அதிகாரத்தையும் பெற்றுய்ய வெற்றிமாலை சூடிய வேலேந்தி அசுரரைக் குலத்தோடு களைந்த குமாரக்கடவுள் தனது திருவடித்தாமரையை என் சிரசிற் சூட்டினான்.

திருமால் முதலியோர் தாம் இழந்த வாழ்க்கையையும் அதிகாரத்தையும் பெற வேல்கொண்டு அவுணரை மாய்த்தனனென்பார் பெற அவுணரைமாய்த்த குமரனெனவும், அவன் திருப்படை வீடுபல வற்றுள்ளுஞ் சிறந்த தென்பது தோன்ற அங்கருளாது திருப்போரூரில் திருவருட்பதிவு செய்தனனென்பார் எங்கோன் தூமேவுதாண்மலர்போரூரிலென்முடி சூட்டின னெனவுங் கூறினர். (௯)

தெய்வப்பிடிவந்துசேருந்துகிர்க்கிரிசெந்தளிர்போல்
மெய்வைத்தவள்ளிக்கொடிபடர்தாருவியனுலகிற்
சைவப்பயிரைவளர்க்குந்தண்மேகந்தகைமைசெறி
நெய்வைத்தவேல்கொண்டுபோரூரிலென்றுநிகழ்தெய்வமே.

(ப - ரை.) தகைமை செறி நெய்வைத்த வேல்கொண்டு போரூரில் என்றும் நிகழ் தெய்வம்-பொலிவுமிக்க நெய்பூசிய வேலேந்தித் திருப்போரூரில் என்றும் எழுந்தருளிய வோர்தெய்வம்,தெய்வப்பிடி வந்து சேரும் துகிர்க்கிரி-தெய்வத்தன்மைவாய்ந்த பெண்யானை வந்து சேருமோர்பவளமலை, செந்தளிர் போல் மெய்வைத்த வள்ளிகொடிபடர் தாரு - சிவந்த தளிர்போலும் இயல் வாய்ந்ததிருமேனியையுடைய ஓர் வள்ளிக்கொடிபடர்ந்த விருட்சம், வியன் உலகில் சைவப்பயிரை வளர்க்கும் தண் மேகம்-பரந்த நிலவுலகில் சைவப்பயிரை வளர்க்குங் குளிர்ந்த மேகமாம்.

(போ - ரை.) போரூரில் நெய்பூசிய வேலேந்தி விளங்கும் ஓர் தெய்வம் பெண்யானை வந்து சேரும் ஓர்பவளமலை, வள்ளிக் கொடிபடரும் விருக்ஷம், நிலவுலகில் சைவமென்னும் பைங்கூழைவளர்க்கும் ஓர் மேகமுமாம்.

தெய்வப்பிடி தெய்வநாய்ச்சியாரெனவும்,வள்ளி வள்ளிநாய்ச்சியாரெனவும் செம்மொழிச்சிலேடைப் பொருள் மேனிற்றலால் தெய்வப்பிடி வந்து சேரும் துகிர்க்கிரி - வள்ளிக்கொடி படர் தாரு இவை சிறப்புருவகவணிகள்.

கொடிக்குத் தளிருண்மையால் தளிரினியலைத் தேகத்தினியல் மேலேற்றிச் செந்தளிர் போன்மெய்வைத்த வள்ளிக்கொடி எனவும், ஆளுடைய பிள்ளையார் அவதாரத்தில் புறச்சமயங்களை யோட்டிச்சைவத்தை நிறுத்தினமையால் சைவப்பயிராவளர்க்குந் தண்மேக மெனவுங் கூறினர். (உ)

கருதார்புரங்கொன்றசேவகனுர்க்குங்களிப்புறவே
பொருதாரகப்பொருளோதியவாவுனதன்பரைப்போற்
றருதாரணிசொலுநாயேனுமன்புளந்தானுளனோ
விருதாசெஞ்சேவற்சமராபுரிவருவேலவனே.

(ப - ரை.) செம்சேவல் விருது ஆகசமராபுரி வருவேலவனே - செவந்த சேவற்கொடியை விருதாக வேந்திச் சமரபுரியி லெழுந்தருளிய முருகக் கடவுளே, கருதார்புரம் கொன்ற சேவகனுர்க்கும் - பகைவரது திரிபுரத்தை நகைத் தெரித்த சிவபெருமானுர்க்கும், களிப்பு உற ஒருதாரகப் பொருள் ஓதியவா - களிப்பு மிகவொப்பில்லாத பிரணவத்தினுட்கிடையை யருளினவனே, உனது அன்பரைபோல் தருதாரணி சொல்லும் நாயேனும்-உனது அடியவரைப்போல் என்னையும் ஒருவனுக உன்னுல் நிலைபெற்ற நிலவுலகிலுள்ளோர் கூறும் நாயிற் சடைப்பட்டயானும், அன்பு உளம் தான் உளனோ-அவரைப்போல் முறுகிய அன்பு மனத்திலுடையேனோ (இலனுயினும் அடியேனுக் கருளாய்.)

(போ - ரை.) சேவற்கொடியை விருதாக வேந்திச் சமரபுரியிலெழுந்தருளிய முருகக்கடவுளே, சிவபெருமானுர்க்கும் பிரணவத்தி னுட்கிடையை யருளினவனே உனதன்பரைப்போல் என்னை யொருவனுகநிலவுலகெடுத்துக் கூறினும் அவர்களைப்போல் முறுகிய அன்புடையவன்காணுவேனோ (நாணுகேன்.)

சேவகனுர்க்கும் என்றதின்கண் வந்த உம்மை உயர்வு சிறப்புப்பொருட்டு.

சிவபெருமானுர்க்குப்பிரணவத்தினுட்கிடையை யுணர்த்தினவனுதலால் கருதார்புரங்கொன்ற சேவகனுர்க்கு மொருதாரகப்பொருளோதிய வா எனவும், அவனதன்பரைப்போலப் புறத்தில்வேடமட்டுந்தாங்கினேனுதலால் உனதன்பரைப்போற்றரு தாரணிசொலும் நாயேனு மெனவும், நீ எங்குமுளனுதலின் அகத்தில் நான் அன்பிலேன் என்பதை நீ யுணர்ந்தவனுதலால் அன்புளந்தானுளனோ எனவும், சூரபன்மன்மாமரத்தின் வடிவாய் இருகூறுபட அவற்றுட்பன்மன் என்பவன் சேவல்வடிவாய் நின்றனனுதலால் செஞ்சேவல் விருதா எனவுங்கூறினர்.

சாவகத்தீவில் அரசியல் செலுத்திவந்த பிரபாகரன் என்னும் அரசனுக்குச் சூரன், பன்மன், சிங்கமுகன, தாரகன் - என நான்கு புத்திரர்களுளர். அவர்களுள் சூரனென்பவன் அரசியல்செலுத்துங்காலையில் அகத்தியமுனிவர் அங்கடைந்துமுருகக்கடவுளது மான்மியத்தையும்,அவன் ஊர்தியும் துவசமுமாகிய

மயிலுங்கோழியும் ஆகிய இவற்றின் மான்மியத்தையும் எடுத்துக்கூற, அதனைக் கேட்ட சூரனும் பன்மனும் முருகக்கடவுளுக்கு ஊர்தியும்-துவசமுமாகத்தவஞ் செய்யுங்கால் திருக்கைலையிலுள்ள அம்முருகக்கடவுளது ஊர்தியும் துவசமு மாகிய மயிலையுங் கோழியையும் அங்கு வந்த திருமாலூர்தியாகிய கருடனும் பிரமனூர்தியாகிய அன்னமும் நோக்கி உங்கள் பதத்தைச் சிறிதுநாளில் இழக்கப்போகின்றீர்கள் என, அவைசொல்லக்கேட்ட அம்மயிலுங் கோழியும் சூரன் பன்மன் என்னும் அவர்கள் தவநிலையைக்குலைக்க, பின்னர் அவர்கள் வேண்டுகோளால் இங்குத்தவஞ்செய்ததுபோலத் திருக்கயிலையிற் சென்று தவஞ்செய் வீர்களாயின் உங்கள் கருத்து முற்றுப்பெறுமென்று வரந்தந்துசென்றன - அதனை யுணர்ந்த முருகக்கடவுள் என் அனுஞையின்றித்தவத்தையழித்தமையால் எனக்கூர்தியும் துவசமும் இனியாகீரெனச் சபிக்க, அதனைக்கேட்டமயிலுஞ் சேவலுங் குறையிரக்க, அருள் சுரந்து அவற்றிற்குமுத்திதந்தருளினன். பின்னர்ச்சூரனும் பன்மனும் சூரபன்மன் என்னும் ஓர் அசுரனாய்ப் பிறந்து முருகக் கடவுளோடுபோர்புரியுங்கால் அவனுடலை யிருகூறுக்க மயிலுந்துவசமுமுமுன் னருளிய வரத்தின்படியே ஒரு கூறாகிய சூரன் மயிலும், ஒரு கூறாகிய பன்மன் கோழியும் ஆயினன்.

பிரபாகரனென்னும் அரசனுக்குச் சூரன்முதலிய நால்வரும் புத்திரர்களென்றமையை.

"முன்னொழிந்த நெடுங்காலத்திரை திரைநின்றுவட்டெடுக்குமூரிமுந்நீர்த்-தன்னகத்து நவதீவிற் சாவகத்தீவொன்றுளதா லதனுட்டோன்றி, மன்னிய செங்கோலோச்சி யொருகுடையினுயிர் புரக்கு மன்னர் மன்னன், பொன்னவிர்பைங் கழற்காற் பிரபாகரனென்றுள னொருவன் புலவுவேலோன்.

அனையவனுக்குயிரனையாளொருத்தியகமாட்சிபுரந்தளிப்பாளன்னாள்
புனைமணிமேகலையள்சுகுமாரியெனும்பெயருடையாள்பொற்பினீங்காள்
கனைகழற்காலரசநெறிமுறைதிறம்பாளருந்ததியிற்கற்பினிற்பா
ளினையரிவாளவிறந்தநெடுங்காலமரசுபுரிந்திருந்தாரன்றே.

ஈங்கிவர்நின்றிழைத்தபெருந்தவப்பயத்தாலினிதுவப்பினெடுத்துமோப்பத்
தீங்குதலைமதலையரோர்நால்வர்பிறந்துளரிவர்க்குச்செங்கோல்வேந்த
னோங்குதிறற்சூரனென்றும்பதுமனென்று மிரட்டையருக்குறைத்தேனோர்க்குத்
தாங்குகழற்சிங்கனென்றுந்தாரகனென்றும்புனைந்தான்தாமவேலோன்.

அகத்தியமுனிவர் சூரனரசியல் புரியுங்கால் எழுந்தருளி முருகக்கடவுள் மான்மியத்தையும் அவன் ஊர்தியும் துவசமுமாய்நின்ற மயிலுங்கோழியும் ஆகிய இவற்றின் மான்மியத்தையும் எடுத்துக் கூறினமையை.

"திருமுகங்களோராறுளன்றீவினையனைத்தும்
பொருதுவென்றுளபன்னிருபுயமுளன்புலரிப்
பரிதியாயிரமெண்ணநின்றிமைப்பதுபணியார்
குருதியூற்றெழுவேற்படை திருக்கரங்கொள்ளும்"

எனவும் வருதலை யுபதேச காண்டத்திலும்.

"தாவடிநெடுவேன்மீளத்தற்பரன்வரத்தால்வீடா
மேவலனெழுந்துமீட்டுமெய்பகிரிரண்டுகூறுஞ்
சேவலுமயிலுமாகிச்சினங்கொடுதேவர்சேனை
காவலன்றன்னைநாடியமர்த்தொழில்கருதிவந்தான்" எனவும்.

மயிலுங் கோழியுமானதை.

"அக்கணமெம்பிரான்றனருளினாலுணர்வுசான்ற
குக்குடவுருவைநோக்கிக்கடிதினீகொடியேயாகி
மிக்குயர்நமதுதேரின்மேவினையார்த்தியென்ன
தக்கதேபணியிதென்றுவெழுந்ததுதமித்துவின்மேல்"

எனவும் வருதலைக் கந்தபுராணத்திலும் காண்க. (ரு)

சிற்றறிவொன்றுநினைப்பொடுநித்திரைசேர்ந்தியங்கு
மற்றிவைநீங்கிலதுதானெவைகளுமாகின்ற
வற்றமில்பேரறிவூடேகலந்திடுமாயமிதே
பற்றறுமுத்தியென்றான்சமராபுரிப்பண்ணவனே.

(ப-ரை.) சமராபுரிபண்ணவன் - சமராபுரியிலெழுந்தருளிய இறைவன், சிற்றறிவு ஒன்று - ஆன்மாவொன்று, நினைப்பு நித்திரை சேர்ந்து இயங்கும் - கேவலசகலமென்னும் இரண்டவத்தைகளையும் பொருந்தியவும், இவைநீங்கில் - இவ்விரண்டவத்தைகளையும் நீங்கில், அதுதான் - அவ்வான்மா, எவைகளும் ஆகின்ற - யாவுந்தானாய்நின்ற, வற்றம் இல் பேர் அறிவு ஊடே கலந்திடும் - குறைதலில்லாத சிவத்தினிடத்துக்கலந்துவிளங்கும், மாயம் இது - இந்த மாயம், பற்று அறும் முத்தி என்றான் - யானெனதென்னும் இருவகைப்பற்றுமொழிந்த பரமுத்தியென்றருளினான்.

(பொ-ரை.) திருப்போரூரிலெழுந்தருளிய இறைவன், ஆன்மா சகல கேவலம் என்னும் இரண்டவத்தைகளோடுஞ் சேர்ந்துநடக்கும், இவ்விரண்டவத்தைகளையும் நீங்கில் யாவுந் தானாய்நின்ற சிவத்தோடு கலந்துவிளங்கும், இந்த மாயந்தான் பரமுத்தியென்றருளினான்.

ஒடு எண்ணொடு. ஆன்மாகிஞ்சிக்யன், சிவம் சர்வக்யன் ஆதலால் சிற்றறிவு, பேரறிவு எனவும். கேவலம் ஆன்மா ஆணவமலமறைப்பால் தத்துவங்களை நீங்குதலில் தன்னிச்சா ஞானக்கிரியைகளி னிகழ்ச்சிசிறிதுமின்றித் தான்மாத்திரமுளனாதல், சகலம் தனு கரண புவன போகங்களோடு கூடித் தன்னிச்சா ஞானக்கிரியைகள் விளங்கு மவதரம் ஆதலால் நினைப்பொடு நித்திரைசேர்ந்தியங்கும் எனவும், இவற்றையொன்றுவிட்டு ஒன்றைப் பற்றுதலொழிந்தால் திருவருளுட்னே கூடிச்சிவத்

தோடிரண்டறக் கலக்கும் சுத்தாவத்தை கூடுமாதலால் இவை நீங்கிலதுதானெவைகளுமாகிநின்ற வற்றமில்பேரறிவூடேகலந்திடுமெனவும், அதுவே மலங்கள் நீங்கிய பரமுத்தி யாதலால் பற்றறுமுத்தி யென்றான் எனவுங் கூறினர். (ச)

எல்லார்க்குமேலவனீயென்றறிந்துனையேத்தியன்பாய்ப்
பொல்லாக்கருமலந்தீர்ந்தான்பொதியப்புகழ்முனிவன்
சொல்லாற்புனைதொங்கனக்கீரன்சாத்தித்துனிகடந்தான்
நல்லார்க்குநல்லவனேசமராபுரிநாயகனே.

(ப - ரை) சமராபுரிநாயகனே - திருப்போரூரிலெழுந்தருளிய இறைவனே, நீ எல்லார்க்கு மேலவன் என்று அறிந்து - நீ யாவர்க்கு மேலானவனென்றுணர்ந்து, உன்னை அன்பு ஆய் ஏத்தி - உன்னை முறுகிய அன்புவடிவாய் நின்று துதித்து, பொதியம்புகழ்முனிவன் - பொதியமலையில் வசிக்கும் புகழ்வாய்ந்த அகத்திய முனிவன், பொல்லாத கருமலம்தீர்ந்தான் - தீய பிறவிக்கேதுவாகிய ஆணவமலத்தினின்று நீங்கினன், நக்கீரன், சங்கப்புலவரு ளொருவராகிய நக்கீரநாயனர், சொல்லால் தொங்கல் புனை சாத்தி- பெயர் வினை இடையுரியென்னுஞ்சொற்களாலோர்மாலை தொடுத்துச் சாத்தி, துனிகடந்தான் - துன்பத்தினின்று நீங்கினன், நல்லார்க்கு நல்லவனே - ஆதலால் நல்லார்க்கு நீ நல்லவனுவா யென்றுன்னை யுணர்ந்து நானடைந்தனன்.

(பொ - ரை) சமரபுரியி லெழுந்தருளிய விறைவனே நீ யாவாக்கு மேலானவனென்று அகத்தியமுனிவனுணர்ந்து உன்னை யன்பால் வழிபட்டுப்பிறப்பினின்று நீங்கினன், நக்கீரநாயனர் திருமுருகாற்றுப்படையென்னு மொரு மாலையைத்தொடுத்துத் துன்பத்தினின்று நீங்கினன், ஆதலால் நீ நல்லவர்க்கு நல்லவனுயிருக்கின்றாயென்று உன்னை நானடைந்தேன்.

நானுணர்ந்தடைந்தனன் என எழுவாயும் பயனிலையும் தொக்குநின்றன. நல்லார்க்கு நல்லவன் என்றமையால் தீயார்க்குத் தீயனென்பதைஉபலக்கணத்தாற்கொள்க. நக்கீரநாயனர் துன்பத்தினின்று நீங்கிய வரலாற்றை முன்னர்க்காண்க. (ரு)

தோட்குங்குமநக்குங்கோக்குழைமாதர்க்குந்தொல்லைமத
வேட்குமுளங்குலைந்தேனை விடேல்விண்டுமாமலர்க்கை
வாட்குங்கொடியமருப்பார்மகிடன்வளைப்பினுரு
தாட்கொண்டருளுகண்டாய்போரிவாழுமயிலவனே.

(ப - ரை.) தோள்குங்குமம் நக்கும் கோகுழைமாதர்க்கும் - தோளிலணிந்த குங்குமத்தையளாவிய சிறந்த குண்டலத்தை யணிந்த பெண்களுக்கும், தொல்லைமதவேட்கு உம் - தொன்றுதொட்டுள்ள மன்மதனுக்குமே, உளம் குலைந்தேனை - மனநிலைகுலைந்தவென்னை, போரிவாழும் மயிலவனே - திருப்போரூரில் வாழுமிறையவனே, விடேல் - கைவிடாதொழிக, விண்டு

மாமலர்கைவாட்கும் - திருமால் தனது தாமரைமலர்போன்ற கையிலேந்திய வாளிலும், கொடியமருப்பு ஆர்மகிடன்வளைப்பில் உருது - கொடுமைவாய்ந்த கொம்புகளையுடைய எருமைக்கடா வூர்தியையுடைய இயமனது வலையிலகப்படாது, ஆட்கொண்டு அருளு கண்டாய் - அடிமைகொண்டருளுவாய்.

(போ - ரை.) பெண்களுக்கும் மன்மதனுக்குமே மனநிலைகுலைந்த வென்னைச் சமரபுரியில் வாழுமிறையவனே இயமன் வலையிலகப்படாமல் என்னை யாட்கொண்டருளுவாய்.

கோ - அரசு, இங்குச் சிறப்பின்மேல் நின்றது. (சு)

அண்டஞ்சராசரமெண்டிசையாவுமளித்தவளுங்
கண்டங்கரியசிவனுந்தமவங்கரங்களின்மேன்
மண்டன்பினேந்திமுறைமுறைதந்துமகிழ்மதலாய்
தொண்டன்பெனக்குமுளதோதென்போரிச்சுராதிபனே.

(ப - ரை) தென்போரிசுராதிபனே - இமமலைக்குத் தென்பாலுள்ள திருப்போரூரிலெழுந்தருளிய தேவர்களுக்குத் தலைவனாயுள்ளவனே, அண்டம்சராசரம் எண்திசையாவும் அளித்தவளும் - அண்டங்களும் இயங்கியற்பொருளும் நிலையியற்பொருளும் எட்டுத்திக்குகளும் ஆகியஎல்லாவற்றையுந்தருளும் உமையம்மையும், கரியகண்டன் சிவனும் - கரிய ஸ்ரீகண்டத்தையுடைய சிவபெருமானும், தமஅம்கரங்களின்மேல் மண்டுஅன்பின்ஏந்தித் தமக்குரிய அழகியதிருக்கரங்களின்மேல் செறிந்தஅன் போடேந்தி, முறைமுறைதந்து மகிழ்மதலாய்-முறைமுறையேதத்தமக்குள் ஒருவர் திருகாத்தில் ஒருவர் தந்துமகிழ் கூரும்மதலையே, எனக்கும்தொண்டன்பும் உளதோ-அடியேனுக்குந் தேவரீர் திருவடிக்குவழிபாடுசெய்யும் அன்புமுளதோ (கூறாய்.)

(போ - ரை.) திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளேஅண்டங்களும் சராசரங்களும் எட்டுத்திக்குகளும் ஆகிய எல்லாவற்றையும் தந்தருளும் உமையம்மையும்,கரியகண்டத்தையுடைய சிவபெருமானும்,தம்முடைய திருக்கரங்களில்அன்போடேந்தி ஒருவர்க்கொருவர் கொடுத்து மகிழும்பிள்ளாய், எனக்கும் தேவரீருக்கு ஆட்பட்டொழுகும் அன்புமுண்டோ கூறாய்.

உமையம்மை சிவபெருமான் திருக்கரத்திலும், சிவபெருமான் உமையம்மை திருக்கரத்திலும் அன்போடு தந்து மகிழ் கூர்தலால் அன்பினேந்தி முறைமுறைதந்து மகிழ்மதலாய் எனவும், தான் யாவரினுங் கடைப்பட்டவனென்பது தோன்ற இழிவுசிறப்பும்மை தந்துஎனக்கும் எனவும், தனக்கு உன் அடியவர்போல முறுகிய அன்பில்லை யென்பதுதோன்ற எதிர்மறை ஓகாரந்தந்து, தொண்டன்புளதோ எனவுங் கூறினர், அன்பிலனுதலில் அருளாயோ வென்பது எஞ்சி நிற்றலால் சொல்லெச்சம். (எ)

கொங்கணராரிய ரொட்டியர் கோசலர்குச் சரராஞ்
சிங்களர் சோனகர் வங்காள ரீழர் தெலுங்கர் கொங்க
ரங்கர்கலிங்கர்கன்னடர் துருக்கரனைவருமே
தங்கடங்கட்கிறை நீயென்பர்போரிச்சரவணனே.

(ப - ரை) போரிசரவணனே - திருப்போரூரி லெழுந்தருளிய முருகக் கடவுளே, கொங்கணர், ஆரியர், ஒட்டியர், கோசலர் குச்சரர், சிங்களர், சோனகர், வங்காளர், ஈழர், தெலுங்கர், கொங்கர், அங்கர், கலிங்கர், கன்னடர், துருக்கர், அனைவரும்-கொங்கணர் முதல் துருக்கர் ஈறாகயாவரும், தங்கள்தங்கட்கு இறை நீ என்பர் - தத்தமக்குரிய சமயத்திற்குறிய இறையவன் நீயே என்று உன்னைவணங்குவர்.

(பொ - ரை.) திருப்போரூரி லெழுந்தருளிய இறைவனே உன்னைக் கொங்கணர் முதலாகத் துலுக்கரீறாக வுள்ளயாவரும் தத்தம் சமயத்துக்குரிய கடவுள் நீயே யென்று வழிபடுவர்.

எல்லாச் சமயங்களிலு நின்ற இறைவன் நீயொருவனே யென்பார் தங்கள்தங்கட்கிறை நீயென்பர் என்று கூறினர். இயாவர்க்கும் இறைவனாய் நின்றருள்வோன் நீயே ஆதலால் எனக்கும் இறைவனாய் நின்றருளாய் என்பது இதனுள் தோன்றுதலால் உதாரவணி. (அ)

மான்குட்டிறைச்சி செந்தேன்றோய்த்தருந்தும்வனசரர்மான்
கூன்கோட்டிளம்பிறைநெற்றிக்கும் வேலிணைக்கூர்விழிக்குங்
கான்கூட்டமாமலர்க்கூந்தற்குங்கொங்கைக்குங்காதல்கொண்டோன்
றேன்கூட்டம்வாழ்பொழிற்போரூரனெங்குருதேசிகனே.

(ப - ரை) தேன் கூட்டம் வாழ்பொழில் போரூரன் என்குரு தேசிகன் வண்டின் கூட்டங்கள் வாழும் சோலை சூழ்ந்த திருப்போரூரில் வாழ்பவனும் எனக்கு ஞானசாரியனுமாயுள்ள இறைவன், மான் குட்டு இறைச்சி செம் தேன் தோய்த்து அருந்தும் வனசரர்மான் - மானினது குட்டிறைச்சியை ச்செந்தேனில் தோய்த்துத் தின்னும் குறவர் குறிச்சியில் மான்வயிற்றிற் றோன்றிய வள்ளி நாய்ச்சியாரது, கூன் கோடு இளம்பிறை நெற்றிக்கும்-இரு கோடாய் வளைந்த இளஞ் சந்திரனை யொத்த திரு நுதலுக்கும், வேல் இணை கூர் விழிக்கும்-இணைத்தவேலைப் பதித்தா லொத்தகூரிய திருக்கண்களுக்கும் கான் கூட்ட மாமலர் கூந்தற்கும் - சோலையின் கூட்டத்தையொத்த பெருமையமைந்த மலரையணிந்ததிருக்கூந்தலுக்கும், கொங்கைக்கும்காதல் கொண்டோன்-திருத்தனத்துக்கும் ஆசைகூர்ந்தவனாவான்.

(பொ - ரை.) திருப்போரிலுல் வாழும் இறைவன் வள்ளிநாய்ச்சியார் திருநுதலுக்கும் திருவிழிக்கும் திருக்கூந்தலுக்கும் என்றுங் காதல் செய் தருளுவான்.

சூட்டிறைச்சி அம்பிற்கோத்து நெருப்பில்வாட்டிய இறைச்சி, அது அரியவுண வாதலால் மான் சூட்டிறைச்சி செந்தேன் தோய்த்தருந்தும் வனசரர்மான் எனவும், திருத்தனம் அளவிறந்த பெருமையுடைய தென்பது தோன்றத் திருநுதலுக்கும் திருக்கண் களுக்கும் திருக்கூந்தலுக்கும் விசேடணந்தந்து கூறியது போலக் கூறாதுவாளா கொங்கைக்கு மெனவுங் கூறினர். (கூ)

கோக்குஞ்சரமதநாற்றந்தவிர்த்துக்குலநரந்தந்
தேக்கும்புழுகுமணம்வீசும்போரியெந்தேவன்செவ்வே
ணோக்கும்விழியருள்போக்கும்பிணியினைநூபுரத்தாள்
காக்கும்பவம்புகவொட்டாநமக்கென்கவலைநெஞ்சே.

(ப - ரை.) கோகுஞ்சரம்மதம் நாற்றம் - அரசயானை சிந்தும் மத நாற்றத் தினை, குலம் நரந்தம் - கத்தூரியின் கூட்டமும், தேக்கும் புழுகும் தவிர்த்து - மணம் நிறைந்த புழுகும் ஒழித்து, மணம் வீசும் போரி எம் தேவன் - மணத்தை வீசும் திருப்போரூரிலெழுந்தருளிய எமதிறைவராகிய முருகக்கடவுள், நோக்கும் விழி அருள் - கடைக்கணிக்கும் திருக்கண்ணருள், பிணியினை போக்கும் - மலச்சிமிழ்ப்பினை யொழிக்கும், பவம் புகஒட்டாது - பிறவியிற் செல்ல வொட்டாது, நூபுரம் தாள் காக்கும்-சிலம்பணிந்த திருவடிகள் காக்கும், எமக்கு நெஞ்சேகவலை என் - நமக்கு மனமே கவலையாது. (இல்லை யென்றபடி).

(போ - ரை.) அரசயானைசிந்தும்மதநாற்றத்தினைக்கத்தூரியும்புழுகும் தவிர்த்துமணம்வீசும், திருப்போரூரிலெழுந்தருளிய இறைவன்திருக்கடைக்கண்ணருள்மலச்சிமிழ்ப்பினையொழிக்கும், பிறவியிற் புகவொட்டாமல் சிலம்பணிந்த திருவடி காக்கும், ஆதலால் நமக்கு நெஞ்சமே கவலையாது.

ஆணவமலம் பிறவிக்கு வித்தாதலால் திருநோக்கு அதனை யொழிக்குமென்பார் நோக்கும் விழியருள் போக்கும் பிணியினை எனவும், பிறவிக்கடலைக்கடத்தும் புணை திருவடி யென்பார் பவம்புகவொட்டாது நூபுரத்தாள் காக்கும் எனவும், கவலையிது வாதலால் எமக்கென்கவலை நெஞ்சே எனவுங் கூறினர். எவன் என்னும் வினாவினைக்குறிப்பின் முன்னின்ற வினாவிடைச்சொல் இன்மைப்பொருள் மேனின்றது. (சo.)

ஆயர்குழலிசை கேட்கும் பணாமுடியாடரவம்
வாயையங்காந்துமணி காலுதல்வள்ளல் பாடல்கொண்டு
தூயகொடை கொடுத்தாங்குறும் போரிச்சுராதிபனை
நாயகனைக்கும ரேசனைநாடுவர் ஞானிகளே.

(ப - ரை.) ஆயர்குழல் இசைகேட்கும் பணமுடி ஆடுஅரவம்-இடையர் ஊதும் வேய்ங்குழலிசையைக் கேட்கும் படம்வாய்ந்த தலையையுடைய ஆடா நின்றபாம்புகள், வாயை அங்காந்து மணிகாலுதல் - வாயைத்திறந்து இரத்தினத்தைக் கக்குதல், வள்ளல்- பெருங்கொடையாளன், பாடல் கொண்டு தூய கொடை கொடுத்தால் ஆங்கு உறும் - புலவர்பாடும்பாடலையேற்று அறவழியாலீட்டிய பொருட்கொடையைக் கொடுத்தாலொக்கும் போரிசுர அதிபனை - திருப்போரூரிலெழுந்தருளிய தேவர்கள் தலைவனை. நாயகனை குமரேசனை - இறைவனை முருகக்கடவுளை, ஞானிகள் நாடுவர் - ஞானிகளென்றுந்தியானிப்பார்கள்

(போ - ரை.) இடையர் பாடும் வேய்ங்குழலிசையைக்கேட்ட பாம்புகள் இரத்தனங்களைக் கக்குதல், கொடையாளன் புலவர்பாடும் பாடலைக் கேட்டு அதற்குக் கைம்மாறு கொடுக்கும் பரிசுபோல அமைந்த திருப்போரூரிலெழுந்தருளிய குமாரக்கடவுளை ஞானிகளடைவார்கள்.

தூய குறிப்பு வினைமுற்றுப் பெயராதலால் அறத்தின் வழியீட்டிய பொருளென்னும். பாம்புகள் வேய்ங்குழலிசைக்குருகி இரத்தினங்கக்குதலைக்கொடையாளன் புலவர்பாடலை யேற்றுப் பொருள் கொடுத்தாலொக்குமெனக்கூறுதலால் தொழிலதிசயவணி. தேவர்கள் இடுக்கண் தீர்த்தமை தோன்றச் சுராதிபனெனவும், எப்பொருட்கும் இறைவனென்பது தோன்ற நாயகனெனவும், என்றும் பாலபருவமுடையோ னென்பது தோன்றக் குமரேசனெனவும், முத்திதருவோனென்பது தோன்ற ஞானிகள் நாடுவோரெனவுங் கூறினர். (கக)

இடமுறச்சூழுமுழைதொறுநாகமெரிபுரையும்
படமணிச்சென்னியெடுத்தாடன்மங்கலப்பந்தரிலே
சுடர்மணித்தண்டினைச்சூழவிளக்கிட்டசோதியொக்கும்
தடவரைப்போரிச்சரவணநாயகன்றஞ்செனக்கே.

(ப - ரை.) நாகம்-பாம்புகள், இடம்உறச்சூழும்முழைதொறும்-மலையினிடங்தோறும்பக்கங்களில்அமையச்சூழ்ந்தகுகைகள்தோறும், எரிபுரையும் மணிபடச்சென்னி எடுத்து ஆடல்-நிறத்தையொத்தமாணிக்கங்களமைந்தபடம் வாய்ந்ததலை யெடுத்தாடுதல், மங்கலம் பந்தரில்-மணப்பந்தரில்வைத்த, சுடர் மணி தண்டினை சூழவிளக்கிட்ட சோதி ஒக்கும் - ஒளிவாய்ந்த இரத்தினமிழைத்த கிளைவிளக்குத் தண்டினைச் சூழ விளக்கேற்றிய ஒளியை யொத்துத் தோன்றும், தடவரை போரி சரவண நாயகன் எனக்கு தஞ்சு - பெரிய மலைசூழ்ந்த திருப்போரூரிலெழுந்தருளிய சரவணப் பொய்கையிற் றோன்றிய இறைவன் எனக்குப் புகலிடமாவான்.

(போ - ரை) மலைகளின் குகைகள் தோறும் பாம்புகள் மாணிக்கம் வாய்ந்ததலை யெடுத்தாடுதலால் மணப்பந்தரில் வைத்த கிளைவிளக்கை யொத்துத்தோன்றுந் திருப்போரூரிறைவன் எனக்குப் புகலிடமாவான்.

மலையைக் கிளைவிளக்குத் தண்டாகவும், அதனயலிற் சூழ்ந்த குகைகளைக் கிளைவிளக்குகளாகவும், பாம்புகள் மாணிக்கம் வாய்ந்ததலை யெடுத்தாடுதலை அவைகளிலேற்றிய ஒளியாகவும் ஒப்புமை கூறுதலால் ஒப்புமைக்கூட்டவுவமையணி. (௧௨)

பிடிபார்த்தலறவெயினச்சிறூர்கள்பிரிந்தகன்றைக்
கொடியாற்பிணித்ததன்மேலேறியாடுங்குளிர்பொழில் சூ
ழடிவாரப்போரிப்பதிவேலவனைவந்தண்டினனென்
குடியார்க்குநல்லகதிவாய்த்ததென்றுளங்கொண்டனனே.

(ப - ரை.) பிடிபார்த்துஅலற - பெட்டையானை பார்த்துக்கதற, எயினச்சிறூர்கள்-வேடச்சிறுவர்கள், பிரிந்த கன்றை கொடியால் பிணித்து-தம்மினின்றும் பிரிந்த கன்றினைக் கொடியினாற்கட்டி, அதன் மேல் ஏறி ஆடும் குளிர்பொழில் சூழ்-அக்கன்றுகளின் மேலேறி விளையாடும் குளிர்ந்த சோலை சூழ்ந்த, அடிவாரம்போரிப்பதி வேலவனை-பிரணவசைலத்தின் சாரலிடத்துள்ள திருப்போரூரென்னுந் திருப்பதியில் வாழும் முருகக்கடவுளை, வந்து அண்டினன் - வந்து சரண்புகுந்தேன், என்குடியார்க்குநல்லகதிவாய்த்தது என்று - எனக்கன்றி என்குடியிலுள்ளோர்க்கும் நல்ல கதிவாய்த்த தென்று, உளம் கொண்டனன்-மனம்தேறினேன்.

(போ - ரை.) வேடச்சிறுவர்கள் பெண்யானைப்பார்த்துக் கதற அதனின்றும் பிரிந்த கன்றினை, கொடியாற்கட்டி அக்கன்றின் மேலேறி விளையாடும் சோலை சூழ்ந்த சாரலிலுள்ளதிருப்போரூரி லெழுந்தருளிய முருகக்கடவுளை யடைக்கலம்புகுந்தேன், அதனால் எனக்கன்றி என் குடியிலுள்ளோர்க்கும் நல்லகதிகிடைத்த தென்று மனந்தேறினேன்.

எனக்கும்கதிவாய்த்ததன்றி எனபொருள்கொள்ளுதல்இரந்தது தழியெச்சவும்மையால் குடியார்பன்படியாகப்பிறந்த குறிப்புவினைமுற்றுதலால்என்குடியிற்பிறந்தோர்,என்குடியிற்பிறந்திருக்கின்றவர்,என்குடியிற்பிறப்போர் என முக்காலத்திலுள்ளார் மேல் நிற்றல் தோன்றக்குடியார் என்றார் (௧௩)

தோகைநடித்திடவேடச்சிறூருழைத்தோற்பறையை
நாகம்பறித்துலர்வாகைநெற்றூற்கொட்டநாடியளி
யோகைதரும்பண்ணிசைபாடுஞ்சந்தனவொண்பொழில்சூழ்
மாகர்தொழுந்திருப்போரூரன்றுளென்மதிவிழியே.

(ப - ரை.) தோகைநடித்திட-மயில்கள் கூத்தாட, வேடச்சிறார் உழை தோல் பறையை-வேடச்சிறுவர்கள் மான்தோலால்கட்டியஒருகட்பறையை, நாகம்பறித்து-யானைபறித்தலால், உலர்வாகைநெற்றால் கொட்ட அளிநாடி ஓகைதரும் பண்ணிசைபாடும்-உலர்ந்தவாகை மரத்தின் நெற்றினால்கொட்ட வண்டுகளுணர்ந்து கேட்போர்க்கு மகிழ்ச்சியூட்டும் இசைப்பண்பாடும், ஒண் சந்தனப் பொழில்சூழ் - ஒள்ளிய சந்தனமரஞ்சூழ்ந்த, மாகர்தொழும் திருப் போரூரன்தாள் - தேவர்கள் வணங்குந் திருப்போரூரிலெழுந்தருளிய இறை வன் திருவடி, என்மதிவிழி - அடியேன் உளக்கண்ணிலென்று முள்ளது.

(பொ-ரை.) மயில்களாட வேடச்சிறுவர்கள் ஒரு கட்பறையை வாகை மரத்தின் நெற்றால் கொட்ட, அதை வண்டுகள் நாடி இசைப்பாட்டுப்பாடும் சந்தனச்சோலை சூழ்ந்த திருப்போரூரிலெழுந்தருளிய இறைவன் திருவடி என்மனக்கண்ணிலென்றும்ுளது.

சகசநிட்டையை என்று முடையவன் என்பது தோன்ற - போரூரன் தாள் என்மதிவிழி என்றார். குறவரும் வேடரும் ஒரு மரபினராதல் குறிஞ்சி நிலப்பொருளாகிய மானையும் பாலை நிலக்கருப்பொருளாகிய வாகை யையும் விரவிக் கூறினர். வேடச்சிறார் பறையைவாகை நெற்றால் கொட்ட என்பது தொழிற்றன்மையணியும், அளிநாடி பண்பாடு மென்பது தொழி லதிசய வணியும் கலந்து வருவதால் கலவையணி. (கச)

மேகங்கள்சூற்கொண்டுசாரற்படிந்துமிகக்குமுற
நாகங்கள்கோடிறப்பாயத்தெறித்தநகைத்தரள
மோகந்தருங்குறமின்னார்கண்மேலுறமொய்த்தெதிர்பார்த்
தாகந்தடவியபோரூர்க்குகனென்னருட்டந்தையே.

(ப - ரை.) மேகங்கள் சூல் கொண்டு சாரல் படிந்து மிகக்குமுற-மேக கள் கருக்கொண்டு மலைச்சாரலிற் படிந்து மிகவும் பெருமுழக்கஞ்செய்ய, நாகங்கள் கோடு இறப்பாய (அதனைக்கேட்ட) யானைகள் தனக்குப்பகை யென்று கொம்புமுறிய அதன் மேற்பாய்தலால், தெறித்த நகைதரளம் - அக் கொம்பினின் றுஞ் சிந்திய வொளிவாய்ந்த முத்துகள், மோகம் தருங்குறமின் னார்கள் மேல் உற-தங்கணவர்க்கு மயக்கமூட்டும் குறப்பெண்கள் மேல் வந்து பட, எதிர்மொய்த்து பார்த்து, ஆகம்தடவிய போரூர் குகன்-இதுகல்லன்று எதிரேவந்து நெருங்கிப்பார்த்துமுத்தமென்று அவர்களுடம்பைத் தைவரும் திருப்போரூரிலெழுந்தருளியவிறைவன், என் அருள் தந்தை-எனது கருணை வடிவாகிய பிதா ஆவான்.

(பொ - ரை.) கருக்கொண்ட மேகங்கள் மலைச்சாரலிற் சேர்ந்து பெ ருமுழக்கஞ்செய்ய அதனைக்கேட்ட யானைகள் பகையென்று கருதி தமது

கொம்புமுறியப்பாய்தலால் அதினின்றுஞ்சிந்தும் முத்துகள் தம்மனைவியர் மேல்வந்துபட, இது யாரொறிந்தகல்லோ வென்றுமயங்கிய மயக்கந்தீர, அவர்கள் கணவர்களாகிய குறவர்வந்துபார்த்து இது கல்அல்லமுத்தமென்று அவர்களுடைய உடம்பைத் தடவிக் கொடுக்கும் திருப்போரூரிலெழுந்தருளிய இறைவன் என்றந்தையாவான்.

குகன்-அடியவர் இதயமாகிய குகையில் வசிப்பவன். குறிஞ்சிநிலக்கருப்பொருளில் சேர்ந்த மயக்கினை யெடுத்துக்கூறி என்னருட்டந்தை என்றதனல் வாசனை வசத்தால் நீங்கியபாசம் இடையில் வந்து மயக்கில் அன்று ஒழித்தருள்வான் என்பது தோன்ற நிற்றலில் இறைச்சிப்பொருட்டு (கரு)

வரைமுத்தொளிரும்பளிக்காடரங்கின்மயினடித்தல்
புரையில்சசிமண்டிலத்தாடன்மாதர்புரிவதொக்கும்
விரவுற்றசாரலம்போரூர்விசாகன்விரைமலர்த்தா
ளுரையற்றுணர்வற்றுயரின்பமாகியவுள்ளொளியே.

(ப - ரை.) வரைமுத்து ஒளிரும் பளிச்கு ஆடரங்கின் மயில் நடித்தல் மூங்கிலில் வெடிக்த முத்து வீழ்ந்து விளங்கும் பளிங்குப் பாறையாகிய ஆடும் நாடகசாலையில் மயிலாடுதல் புரையில் சசிமண்டலத்து-களங்கமில்லாத சந்திரமண்டிலத்தில், மாதர்ஆடல்புரிவது ஒக்கும்-பெண்கள்ஆடுவதையொத்துத் தோன்றும், சாரல்விரவுற்ற அம்போரூர் விசாகன்-மலைச்சாரலோடு கலந்தமைந்த அழகிய திருப்போரூரில் எழுந்தருளிய முருகக்கடவுளது, விரைமலர்த்தாள்-வாசனைமிக்க தாமரைமலரை யொத்த திருவடி, உரையற்றுஉணர்வற்று உயரின்பமாகிய உள் ஒளி - வாக்கையும் மனவுணர்ச்சியையுங் கடந்து உயர்ந்த பேரின்பமாகிய எனதுள்ளத்திற்றோன்று மொளியாம்.

(பொ - ரை.) பளிங்குப்பாறையாகியநாடகசாலையில் மயிலாடுதல் சந்திரமண்டிலத்தில் பெண்களாடுவதை யொக்கும், பிரணவசயிலச்சாரலிலுள்ள திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளினது திருவடி வாக்கையு மறிவையுங்கடந்த பேரின்பமாகிய வொளியாம்.

இறைவனதுதிருவுருஅருள்வடிவாதலால்விரைமலர்த்தாளெனவும்,அது மாயாவசத்ததாகிய வாக்கையுமன உணர்ச்சியையுங்கடந்துநிற்றலால் உரையற்றுணர்வற்றெனவும் அத்திருவருளால் இன்பமேலிடுதலே அவ்விறைவன் தோற்றமாதலால் இன்பமாகிய உள்ளொளி எனவுங் கூறினர்.

பளிங்குப்பாறையில் மயில் நடித்தல் சந்திர மண்டிலத்திலாடும் பெண்களாடலை யொக்குமென்றது இல்பொருளுவமை யணி. (கசு)

பளிக்கறையூடுதருக்குழைப்பாயலிற்பள்ளிகொண்டே
களிக்குறுமாகந்தருவர்தங்கீதமுங்காரத்தினுல்
விளக்குறுமேனிலத்தோகையர்கீதமும்வேறறவே
கிளக்கலுறுந்திருப்போரூரனன்பர்தங்கேண்மையனே.

(ப - ரை.) பளிக்கு அறை ஊடு தருமழை பாயலில் - பளிங்குப் பாறையினிடத்து சந்தன விருட்சக்குழைகளாலமைந்த பாயலில், பள்ளி கொண்டுகெளிக்குறும் மா கந்தருவர்தம் கீதமும் - தாங்கள் துயிலு மிடமாகக் கொண்டுகெளிக்கும் பெருமை வாய்ந்த கந்தருவர்பாடும் கீதமும், காரத்தினால் விளக்குறும் மேனிலத்தோகையர் கீதமும், பொன்னால் விளங்கும் தேவலோ கத்தில் அரம்பையர்பாடும் கீதமும், வேறு அறகிளக்கலுறுந் திருப்போரூரன் தம்முள்மாறுபாடற வொலிக்கும் திருப்போரூரிலெழுந்தருளிய இறைவன், அன்பர்தங்கேண்மையன்-தன்பாலன்பு செலுத்தும் அடியவரை உறவின ராக வுடையவன்.

(போ - ரை.) பளிங்குப்பாறையில் சந்தனமரத்தளி ராலமைந்த பாயலில்பள்ளிகொண்டு கந்தருவர் பாடுங்கீதமும், விண்ணுலகிலுள்ள அரம்பை யர் பாடுங்கீதமும் தம்முள்வேறுபாடின்றி யொலிக்கும் திருப்போரூரிலெழு ந்தருளிய விறைவன் அடியவரை உறவினராக வுடையவன்.

என்றும் பிறப்பிலானாதலில் அடியவரே தனக்குறவினரன்றி வேறு றவினரவனுக்கில்லை என்பார் அன்பர்தங்கேண்மையன் என்றார்- (கஎ)

கருநாகத்தொண்டைக்கயமுனிக்கூட்டங்கள்கல்லுச்சில்லுப்
பொருநாசிக்கேழலுடனாடுஞ்சாரலம்போரிச்செவ்வே
ளிருபாததாமரையேத்திவணங்கியெந்நாளுநினைந்
தொருவாதிருந்திலைநெஞ்சேயென்வீணிலுழன்றனையே.

(ப - ரை.) கருநாகம் தொண்டை கயமுனி கூட்டங்கள், கருநாக த்தை யொத்த துதிக்கையையுடைய யானைக்கன்றின் கூட்டங்கள், கல்லு சில்லு பொருநாசிகேழல் உடன் ஆடும் சாரல் அம்போரிசெவ்வேள்-கல்லால் வகுத்த சில்லினை யொக்கும் நாசியினையுடைய பன்றியோடு விளையாடும் பிர ணவசையிலச்சாரலிலுள்ள திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளது, இரு பாததாமரை-இரண்டுதிருவடித்தாமரைகளை, நெஞ்சே எந்நாளும் ஏத்தி வணங்கி நினைந்து ஒருவாதுஇருந்திலை - மனமே நீ யெந்நாளும் வாழ்த்திவண ங்கி இடைவிடாது நினைந்திருந்தாயில்லை, வீணில் உழன்றனைஎன் - வீணாகப் பாசத்தி லுழன்றாய் அது யாது.

(போ - ரை.) திருப்போரூரிலெழுந்தருளியமுருகக்கடவுளது திருவடி யைமனமே நீ யெந்நாளும் வாழ்த்தி வணங்கி நினையாதிருந்தாய் பயனின்று வீணாகவுழன்றாய் யாது பயன்கருதி.

ஏத்தலும் வணங்கலுமாகிய புறத்தொண்டும், நினைத்தலுமாகிய அகத் தொண்டு மேற்கொள்ளாது நிலையில் பொருளை நிலையுடைப்பொருளாகக் கருதி இதுகாறுமுழன்றனை, அதனால் வரும் பயன்யாது என்பார் எத்திவண ங்கி யெந்நாளும் நினைந்துஒருவா திருந்திலைநெஞ்சே யென்வீணிலுழன்றனை என்றார்.

எத்தலும் வணங்கலுமாகிய புறத்தொண்டும் நினைத்தலுமாகியஅகத்தொண்டும்இனிப்பூணில்உன்னிடத்துஉவர்ப்பில்லாது அருளுவன் என்பதுயானைக்கன்றின் கூட்டங்கள் பகையின்றிப்பன்றிகளோடு விளையாடுமெனக்கூறிய இறைச்சிப்பொருளால் தோன்ற,கருநாகத்தொண்டைகயமுனிக்கூட்டங்கள் கல்லுச்சில்லுப்பொருநாசிக்கேழல் உடனும் எனவுங்கூறினர். (கஅ)

அகிலேந்து நல்ல முகிலேய்ந்த கூந்தலரி வையர்த
நகிலேந்து மாரவடம் போலருவி நகந்திகழு
முகிறேந்து மாடநம் போரூர்க்கு கன்பதமுண்டகத்தைத்
தகவேந்து நெஞ்சினர் மேன்மதவேளெய்யத்தானஞ்சுமே.

(ப - ரை.) அகில் ஏந்தும் நல்லம்முகில்எய்ந்தகூந்தல் அரிவையர்தம்-அகிற்புகையளாவியகரிய மேகத்தையொத்த கூந்தலையுடைய பெண்களது, நகில் ஏந்தும் ஆரவடம்போல்- பெண்களது தனங்களேந்திய முத்துவடம் போல, அருவிநகம் திகழும்-அருவிபாயும் மலைகள்விளங்கும், முகில் ஏந்தும் மாடம்நம் போரூர் குகன்பதமுண்டகத்தை-மேகமண்டலத்தையளாவிய மாடங்கள் நெருங்கிய நமது போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளது பாத தாமரையை, தகவு ஏந்து நெஞ்சினர்மேல் - தகுதியாக நிறுத்திய அடியவர் மனத்தின்மேல், மதவேள்தான் எய்ய அஞ்சும் - மன்மதன் தாமரையாகிய பாணத்தைப்பிரயோகிக்க அஞ்சுவான்.

(பொ - ரை.) பெண்கள் தனத்திலணிந்தமுத்துவடம்போலஅருவிபாயும் மலைகள் விளங்கும் திருப்போரூரிலெழுந்தருளிய இறைவனது பாத தாமரைகளையிருத்தும் நெஞ்சையுடைய வடியவர் மனத்தின்மேல் மன்மதன் தாமரையாகிய பாணத்தை யெய்ய அஞ்சுவான்.

ஊர் என்ப பெயர்வழங்குதல் மாடங்களை வாய்ந்துடைமையால் ஆதலின் முகிலேந்துமாடமென்றது சாதியடை. கோடாது என்றும் சிந்தித்திலில் தகவேந்துமெனவும், பதம் முண்டகமெனவும் நெஞ்சினர் எனவும் கூறிய குறிப்பால்மன்மதன்தாமரையாகிய பாணத்தை மனத்தின்மேலெய்தலுடைமையால் தாமரையாகியபாணமென்பது தோன்ற, பதமுண்டகத்தைத் தகவேந்து நெஞ்சினர்மேல் மதவேளெய்யத்தானஞ்சும் எனவும் கூறினர் இது குறிப்பணி.,

குறிப்பால் தாமரையாகிய பாணமென்றமையால் ஏனைப்பாணங்களை ஏனையவுறுப்புகளில் எய்ய அஞ்சுவனென கொள்ளப்படுதலால் உபலக்கணம். (கக)

மதுவார்த்திடுகடம்போலேமயக்குறுமாதரையோர்
கொதுகாக்கருதுறுங் காலமுண்டோ கொடியேன்றனக்கே
விதுவாற்சலந்தருங்கற்கணையூடுவிளங்குபிடி
சதுராக்குடைந்துவிளையாடும் போரிச்சரவணனே.

(ப - ரை.) விதுவால் சலந்தரும் கல்சுனை ஊடு-சந்திர கிரணத்தால் நீர்கக்கும் சந்திரகாந்தக் கல்லினிடத்து உள்ளசுனையில், விளங்குபிடிசதுராகக்குடைந்துவிளையாடும் - விளங்கும் பெண்யானைகள் தகுதியாக மூழ்கி விளையாடும், போரிசரவணன் - திருப்போரூரி லெழுந்தருளிய முருகக்கடவுள், மதுவார்த்திடு கடம்போலே - கள்ளைவார்த்த குடம்போல, மயக்குறும் மாதரை - கண்டஆடவரை மயக்கும் பெண்களை, ஓர் கொதுகாக கருதுறும் காலம் - ஒரு கொதுகாகச்சிந்திக்குங்காலம், கொடியேன்றனக்கும்உண்டோ - உனதுதிருவடியைச்சிந்திக்காத கொடுமையையுடையேனுக்கு முள்ளதோ.

(பொ - ரை) சந்திரகாந்தக்கற்சுனையில் பெண்யானைமூழ்கிவிளையாடுந்திருப்போரூரில் எழுந்தருளிய முருகனே பெண்களை ஒருகொதுகுபோலக் கருதும் காலமுளதோ.

கூறுய் என நிற்றலால் ஒகாரம் வினுப்பொருட்டு - மதுவார்த்த குடம் தன்னை நுகர்வோர் கண்ட பொழுதே அவரறிவினை மயக்குதல்போல் பெண்கள்தம்மைக் கண்ட ஆடவரை ஆடைமுதலிய வற்றால் மயக்குதலில் மதுவார்த்திடுகடம் போலே மயக்குறு மாதரை யென்றார். பகிர்முகத்தில் விட்ட வாதனைவந்து தாக்குதலால் கொதுகாக்கருதுங்காலமுண்டோ கொடியேன்தக்கு எனக்கூறுதலினல் ஞானயோகங்கூறினர். (௨0)

அள்ளித்தெளித்தன்னகள்ளி வெந்நீழலணுகுழைதா
னள்ளிப்புன்லெனப்பேய்த்தேரைநாடி நலிவதுபோ
லுள்ளிப்பொய்வாழ்வினையூர்தோறுஞ்சென்றுழலாதெனையாள்
வெள்ளிப்பொருப்பினன்மைந்தாதென்போரியில்வேலவனே.

(ப - ரை.)அள்ளிதெளித்தால்அன்ன-அள்ளித்தெளித்தாலொத்த,கள்ளி வெம்நீழல் அணுகு உழைதான் - கள்ளியினுடைய கொடிய நிழலை அடைந்து சேர்ந்தமானனது, புனல் என்ன அள்ளி - நீரெனவிரும்பி, பேய்த் தேரைநாடி நலிவதுபோல் - கானற் சலத்தைவிரும்பி வருந்துவதுபோல, பொய்வாழ்வினை உள்ளி - பொய்வாழ்வினை மெய்வாழ் வாகக் கருதி, ஊர்தோறுஞ்சென்று உழலாது - ஊர்தோறும் பொருள்தேடச் சென்று வருந்தாமல், வெள்ளிப்பொருப்பினன்மைந்தா - வெள்ளியங்கிரியி லெழுந்தருளிய இறைவனது புத்திரனே, தென்போரியில்வேலவனே - இமமலைக்கு தென்பாலுள்ள திருப்போரூரிலெழுந்தருளிய வேலேந்திய இறைவனே, என்னை ஆள் - என்னையடிமைகொள்வாய்.

(பொ - ரை.) நிழலில்லாமையால் கள்ளிமரத்து நிழலை வந்தடையும் மானனது கானற்சலத்தை நீரென்று கருதிச்சென்று வருந்துவதுபோல, பொய்வாழ்வைக்கருதி ஊர்தோறுஞ் சென்றுழலாமல் சிவபெருமான் புத்திரனே திருப்போரூர் முருகனே என்னையடிமைகொள்ளாய்.

கள்ளிமரத்துநிழல் இடையிடைவெள்ளிடை யிட்டிருத்தலால் அள்ளித்தெளித்தன்னகள்ளியினிழலெனவும், வேறுமரத்தினிழலில்லாத பாலைநில

மாதலால் அணுகுழையெனவும், நீர்வேட்கையால் கானற் சலத்தை நீரென்று கருதி வேட்கை தணியாமையால் நள்ளிப்புனலென்பேய்த்தேரைநாடிநலிவது போல் எனவும், மனைவி மக்களொடு கூடிவாழும் வாழ்க்கை பொய்வாழ்க்கையாதலலைபொய்வாழ்வினை எனவும், அதனைமெய்வாழ் வார்க்கநதினமையால் உள்ளிஎனவும். அதனைஓம்புதற்குப்பொருள் தேட ஊர்தோறும் கால் தேயச்சென்றழலுதலால் ஊர்தோறுஞ்சென்றழலாதெனவும், இதுவிரையஅழிந்துமறைந்துபோம், இதனை அசத்தென்றறியென்று அருள்வோனாதலால் ஏனையாள் எனவும் கூறினர். (உக)

முடைமாறமுல்லைகுழல்சூடுமேரய்ச்சியர்மூதளைதான்
கடைதோறுமாரத்தின்மார்பிற் றெறித்திடக் கன்றுதுள்ளும்
புடைபாயுழுவைகுமுறலென்றஞ்சுறுபோரியெங்கோன்
படைவேறுணையுண்டெமக்கொருநாளும்பயமில்லையே

(ப-ரை.) முடைமாற-தமது முடைநாற்றமாற, முல்லை குழல் சூடும் ஆய்ச்சியர்-முல்லைமலரைக்கூந்தலிற்சூடியஇடைப்பெண்கள், ஆரத்தின் மார்பில்தெறித்திட-சந்தனக்குழம்புபோலத்தமதுமார்பிற்றெறிக்க, முதுஅளைதான் கடைதோறும் - செறிந்த கட்டியாயுள்ள தயிரைக்கடையுந்தோறும், கன்று-பசுவின்கன்றுகள், புடைபாய் உழுவைகுமுறல்என்று-அயலிற் பாயும் புலியின் முழக்கமென்று, அஞ்சுறும் - அஞ்சித் துள்ளிப் பாயும், போரி எங்கோன் - திருப்போரூரி லெழுந்தருளிய எமதிறைவனது, வேல் படைதுணையுண்டு எமக்கு ஒருநாளும் பயமில்லை - வேலாயுதம் துணையாகவுண்டு (ஆதலால்) எனக்கு எந்நாளும் சிறிதும் அச்சமில்லை.

(பொ-ரை.)இடைப்பெண்கள்தயிரைக்கடையுந்தோறும்பசுவின்கன்றுகள் புலியின் முழக்க மென்றஞ்சித்துள்ளும் திருப்போரூரிலெழுந்தருளிய இறைவனது வேற்படை நமக்குத்துணையா கவுண்டுஅதனாலென்றும்இயமனுக்கு அஞ்சோம். (உஉ)

இதனால் முல்லை நிலத்திலுள்ள கருப் பொருளைக்குறிஞ்சி நிலத்திற் கூறியதுஇடமலைவமைதி.

பூவையுங்கோவுமசுணமுநாகமும்பூம்பொறிக்கான்
சேவலுஞ்சித்திரம்போற் கேட்டுறங்கச்சிறூர்ப்பொதுவர்
தூவருந்தீங்குழலோசைவளர்க்கின்ற தொல்லைமுல்லை
தேவருந்தேடும்பொருள் போரிவேலன்றிருவடியே.

(ப-ரை) பூவையும் கோவும் அசுணமும் நாகமும் - நாகணவாய்ப்புள்ளும் பசுவும் அசுணப்புள்ளும் பாம்பும், பூம்பொறிக்கான்சேவலும் - அழகிய பொறிவாய்ந்த காட்டுக்கோழிச் சேவலும், சித்திரம்போலக்கேட்டு உறங்க-சித்திரம்போல அசையாது கேட்டு நின்று துயில்கூர, பொதுவர்சிறூர் - இடைச்சிறுவர்கள், தூவரும் தீங்குழல்ஓசைவளர்க்கின்ற - குற்றமின்றியமை

ந்த இனியவேய்ங்குழலோசை பாடுகின்ற, தொல்லை முல்லை போரிவேலன் திருவடி - தொன்று தொட்டுள்ள முல்லைநிலஞ் சூழ்ந்த திருப்போரூரிலெழுந்தருளியவேலேந்திய இறைவனது திருவடி, தேவரும் தேடும்பொருள் - முனிவர்முதலியோர் தேடுவதுமன்றி தேவர்களும்விரும்பித்தேடும்பொருளாம்.

(போ - ரை.) நாகணவாய்ப்புள்ளும் பசுவும்அசுணப்புள்ளும் பாம்பும் காட்டுச்சேவலும் சித்திரம்போல அசையாது கேட்டுநின்றுதுயில்கூர இடைச்சிறுர் வேய்ங்குழலூதுகின்ற முல்லைநிலஞ்சூழ்ந்த திருப்போரூரிலெழுந்தருளிய இறைவனது திருவடி தேவர்களுந்தேடும்பொருளாம்.

உம்மை இறந்ததுதழீஇய உயர்வு சிறப்பும்மை. சூரபன்மன் முதலிய அசுரர்கள் செய்யுந்தீங்கினை யொழித்தமையால் தேவருந்தேடும் பொருளெனவும், இசைநூலிற்கூறிய வண்ணமமைந்த வேய்ங்குழலாதலால் தூவருந்தீங்குழலோசையெனவுங் கூறினர். (௨௧)

கட்டாணிரம்பியகவிதழ்கீன்றெழுகஞ்சமுடன்
முட்டாடுவைத்திடமேதிதெறித்தொளிர்முத்தையன்னப்
புட்டான்சினையென்றணைக்கின்றபோரிப்புனிதச்செவ்வேண்
பட்டாருஞ்சேவடிதொட்டானமக்குநல்வாழ்வுள்ளமே.

(ப - ரை.) கள் தான் நிரம்பி அகவிதழ் கீன்று எழுகஞ்சமுடன் - கள் நிரம்பி அகவிதழைக்கிழித்து உவட்டெடுக்குந்தாமரை மலரோடு, மேதி முள்தாள்து வைத்திட-எருமைகள் முட்செறிந்த அத் தாமரைத்தாளைத்து வைக்க, தெறித்து ஒளிர்முத்தை - தெறித்து வீழ்ந்து விளங்கும் முத்தினை, அன்னப்புள் தான் சினை என்று அணைக்கின்றபோரி புனிதன்செவ்வேள் - அன்னப்பெடையானது தன்முட்டை யென்று அணைத்து அடைகிடக்கின்ற திருப்போரூரிலெழுந்தருளிய இறைவனாகியமுருகக்கடவுளது,மட்டு ஆரும்சேவடிதொட்டால் - வாசம் நிறைந்த திருவடியைப்பரிசித்து அருச்சித்தால், உள்ளமே எமக்கு நல்வாழ்வு-மனமே எனக்கு அதுவே நல்ல வாழ்க்கையாம்.

(போ - ரை.) மது உள்ளே நிரம்பிஅகவிதழைக்கிழித்து வெள்ளமெடுக்குந் தாமரைமலரோடு அதன்தாளை எருமைகள் காலாற்றுவைக்க,அம்மலரினின்றுஞ்சிந்திவீழ்ந்த முத்தினை அன்னப்பெடை தாமுயிர்த்த முட்டையென்று கருதி அடைகிடக்கும் திருப்போரூரிலெழுந்தருளிய விறைவனது திருவடியைப்பரிசித்தருச்சித்தால் மனமே எனக்கு அதுவே நல்லவாழ்வு.

யனத்தையுந் தன்னோடுளப்படுத்திக்கூறுதலா லெமக்கென்றார். முத்தினைத்தாமுயிர்த்தமுட்டை யென அன்னம் அடைகிடக்கு மெனக்கூறுதலால் மயக்கவணி. இதனால் குறிஞ்சிக்கும் மருதத்திற்கும் மயக்கங்கூறினர். இதனால்ஞான கிரியைக்கூறப்பட்டது. (௨௨)

மடுப்பமயக்கிடைகொண்டேகுநெஞ்சினைமாற்றியென்னை
எடுப்பதுனக்குக்கடனையனேயெழில்கூர்பழனத்
துடும்புமுகக்கொழுச்செல்கின்றசீதையிலூறியநீர்
கடுப்பவனசப்பிழியூறும்போரியன்காங்கெயனே.

(ப - ரை.) ஐயனே- யாவருக்கும்மேலானவனே, எழில்கூர்பழனத்து பொலிவுமிக்கவயலில், உடும்புமுகம்கொழுசெல்கின்ற சீதையில்-உடும்புமுகம் போன்றகொழுச்செல்கின்றபடைச்சாலில், ஊறியநீர்கடுப்ப-சுரந்தநீரையொப்ப, வனசம்பிழிஊறும் போரியன்-காங்கேயனே-தாமரையின்தேனூறும்திருப்போரூரிலெழுந்தருளியமுருகக்கடவுளே, மடுப்பமயக்கு இடைகொண் ஏகும் நெஞ்சினை - என்னை வீழ்த்தப்பாசமயக்கிற்கொண்டு செல்லும் மனத்தை, மாற்றி என்னை எடுப்பது உனக்குகடன் - அங்குச்செல்ல வொட்டாது என்னைக்காப்பது உனக்குக்கடனாம்.

(பொ - ரை.) ஐயனே வயல் சூழ்ந்த திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளே என்னைப் பாசமயக்கிற்கொண்டுசெல்லும்மனத்தைத் தடுத்து அடியேனைக்காப்பது உனக்குக்கடனாம்.

உடும்புமுகக்கொழு பண்புபற்றிய உவமையணி. காங்கேயன் என்பது காங்கெயன் என நின்றது. கங்கையின் புத்திரன் காங்கேயன் இது தத்திதாந்தபதம். (உரு)

பச்சைக்குடைதிருப்புந்தகைப்பாசடையூடுருவ
மெச்சக்கடைசியர்சேல்பாயும்போரிவிசாகனெங்கோன்
கொச்சைச்சிறியனையிந்நாளும்பண்ணியகோகனகத்
தச்சற்கினியெனைப்பண்ணக்கொடானிதுசத்தியமே.

(ப - ரை.) பச்சைக்குடைதிருப்பும்தகைபாசடை ஊடுஉருவ-பச்சைக்குடையைத்திருப்புந்தன்மையைப்போலத்தாமரையின்பசிய இலையினூடுருவ, கடைசியர் மெச்ச சேல்பாயும்-பள்ளப் பெண்கள்மெச்சச்சேல்பாயும்,போரி விசாகன் எங்கோன் - திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளாகிய எமதிறைவன், கொச்சை சிறியனை-இழிவுபட்ட சிறியேனை, இந்நாளும்பண்ணிய கோனகம் தச்சற்கு-இந்நாள்காறும் பிறவியிற்றொழிற்படுத்தி வந்த தாமரைமலரிற் குடியேறிய பிரமனாகியதச்சனுக்கு, இனி என்னை பண்ணகொடான்-இனி என்னைத்தொழிற்படுத்த ஒப்புவியான், இது சத்தியம் - இவ்வார்த்தை சத்தியமாம்.

(பொ - ரை) பச்சைக்குடையைத் தலை கீழாகத் திருப்புவதுபோலத்தாமரையின்பசிய இலை தலை கீழாகத்திரும்ப சேற்கண்டைபாயும் திருப்போரூரிலெழுந்தருளிய இறைவன்சிறியேனை இந்நாள்காறும் படைப்புத்தொழிற்படுத்திய பிரமனாகிய தச்சன் இனி படைப்புத்தொழி லுட்படுத்த அவன் கையில் ஒப்புவிக்கான் இது உண்மை.

நானவனுக்கு ஆட்பட்டேன் இதனாற் பிறப்பொழிந்தேன் என்பது கருத்து (உகூ)

விருந்துண்டுபின்னைக்குபசாரஞ்செய்யும்விதத்தினத்துப்
பொருந்துஞ்சரோருகத்தேனுண்டுமுத்தமிழ்போரியிலோர்
மருந்துண்டதன்பெயர்செவ்வேளஃதென்மலப்பிணியுந்
திருந்துமுடற்பிணிதன்னையும்போக்கிடுஞ்சித்தமிதே.

(ப - ரை) விருந்து உண்டு பின்னைக்கு உபசாரம் செய்யும்விதத்தின் திருமகள் தன்மனையில் அருத்திய விருந்தினையுண்டு அத்திருமகளுக்குத்தான் உபசரிக்கு விதம்போல, நத்துபொருந்தும் சரோருகம்தேன்உண்டு முதது உமிழ்போரியில் - சங்குகள் பொருந்திய தாமரையிலுள்ள தேனையுண்டு முத்தினைத்தரும்திருப்போரூரில், ஓர்மருந்து உண்டு - ஒரு தெய்வ மருந்து உளது, அதன் பெயர் செவ்வேள் - அம்மருந்தின் பெயர் முருகன், அஃது என் மலப்பிணியும் - அஃது என்னுயிரோடொற்றித்த ஆணவமாயை காமியமென்னு மும்மலநோய்களையும், திருந்தும் உடல்பிணி தன்னைபும்போக்கிடும் - திருந்திய உடம்பிலுள்ள வாதபித்த சிலேட்டும நோய்களையும் போக்கும், இதுசித்தம்-இவ்வார்த்கை திடமாம்.

(போ - ரை.) திருமகள் தன்வீட்டிலூட்டிய விருந்தினையுண்டு அத்திருமகளுக்குத்தான் உபசரிப்பதுபோலச்சங்குகள் தாமரையிலுள்ள தேனையுண்டு அங்கு முத்தினைச்சொரியும் திருப்போரூரில் ஒருதெய்வமருந்துண்டு. அதன்பேர் முருகன், அம்மருந்து என்னுயிரோடொற்றித்தமலப் பிணியையும், என்னுடலோடொற்றித்த வாதபித்தசிலேட்டுமப் பிணிகளையும்போக்கியருளும் இது சத்தியமாம்.

அகநோய் என்பார் மலப்பிணி எனவும், புறநோய் என்பார் உடற்பிணியெனவுங்கூறினர், மலமுமூன்று பிணியும் மூன்றாதலின். இதுதொழிலும் பயனும் பற்றிவந்த உவமையணி (உஎ)

தண்டாமரையிலனப்பேடுறவதுதன்னருகே
வெண்டாமரையிரண்டாலுதல்வாணிக்குவெண்கவரி
கொண்டாரவீசுதல்போலுறும்போரிக்குகனிருதாள்
கண்டாலுமின்பக்கடல்வந்துகோக்குங்கருத்தினையே.

(ப - ரை) தண்டாமரையில் அன்னப்பேடு உற - தண்ணிய வெண்டாமரையில் அன்னப்பெடை வந்திருக்க, அது தன்னருகே- அவ்வன்னப்பெடையினயலே,வெண்தாமரை இரண்டு ஆலுதல் - வெள்ளிய இரண்டுதாமரைமலர்கள் அசைதல், வாணிக்குவெண்கவரிகொண்டு ஆரவீசுதல்போலுறும்- அவ்வெண்டாமரையில் வசிக்கும் கலைமகளுக்கு வெள்ளிய சாமரங்கொண்டு நிரம்ப வீசுதலையொத் துத்தோன்றும், போரிகுகன் இருதாள் கண்டாலும் - திருப்போரூரிலெழுந்தருளிய முருகனது இரண்டு திருவடிகளை அகத்திலன்

பிப்புறத்தில் தரிசித்தாலும் - இன்பக்கடல் வந்து கருத்தினை நோக்கும் - பேரின்பக்கடல் மேலெழுந்து நமது மனத்தினை விழுங்கும்.

(போ - ரை.) வெள்ளியதாமரையில் பெடையன்னம் வந்திருக்க அத னயலே இரண்டு வெண்டாமரை மலர்களசைதல், கலைமகளுக்கு இரண்டு வெண்சாமரங்கொண்டு வீசுதலொக்கும் திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளது இரண்டு திருவடிகளை அகத்திலன்றிப் புறத்தில் கண்டு தரிசித்தாலும் பேரின்பமேலிடும்.

அன்னப்பெடையைக் கலைமகளாகவும், அயலிலுள்ள தாமரை மலர்கள் அசைதலை வெண்சாமரை வீசுதலாகவும், ஒப்புமைகூறுதலால் ஒப்புமைக் கூட்டவுவமையணி. உம்மைஇறந்ததுதழீ இயஉயர்வுசிறப்புப்பொருட்டு. (உஅ)

வண்டுகிண்டக்கஞ்சம்விண்டுதண்டேன்சிந்தவால்வளைகள்
கண்டயின்றின்புறும்போரூர்முருகன்கழலிணைக்கே
தொண்டுவந்தின்புறுவோர்பாததாமரைத்தூளென்சென்னி
கொண்டுவந்தேன்மலம்விண்டேன்பரகதிகூடினனே.

(ப - ரை.) வண்டுகிண்ட-வண்டுகள் மூக்காற்கிளறுதலால், கஞ்சம்விண்டு தண்டேன்சிந்த-தாமரைமலர்ந்து தண்ணியதேனைச்சிந்த, வால்வளைகள்கண்டு அயின்று இன்புறும்போரூர்முருகன்கழல் இணைக்கே-வெள்ளிய சங்குகள் கண்டு அதனைப்பருகி மகிழ்கூரும் திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளது இரண்டு திருவடிக்கீழ், தொண்டு உவந்து இன்புறுவோர் பாத தாமரை தூள்-தொண்டுசெய்து மகிழ்கூர் வோரது திருவடித்தாமரையின் பராகத்தை, என் சென்னி கொண்டு உவந்தேன்-என் சிரசின்மேற் கொண்டு மகிழ்கூர்ந்தேன், மலம்விண்டேன் பரகதிகூடினேன் - மும்மலங்களையும் நீங்கினேன் பரமுத்தியிற்கூடினேன்.

(போ - ரை.) தாமரைதேன்சிந்தச்சங்குகளதனைப் பருகி மகிழ்கூரும் திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளது இரண்டு திருவடிக்கீழ்த்தொண்டு செய்து மகிழ்கூரும் அடியவரது திருவடித்தாமரையின் துகளை எனது சிரசின்மேற்கொண்டு மகிழ்கூர்ந்தேன், அதனால் மலநீக்கமுற்றேன், அதனாற் பரகதியுமடைந்தேன்.

அடியவரது திருவடி சூடப்பெற்ற திருவருட்பதிவால், மலபரிபாகமும் மலபரிபாகத்தால் முத்தியையும்பெற்றேன் என்பார் பாத தாமரைத்தூளென் சென்னி கொண்டுவந்தேன் மலம் விண்டேன் பரகதிகூடினனே எனக்கூறினர்.

இது ஒன்றற்கொன்று காரணமாய்நிற்றலால் காரணமாலையணி. (உகூ)

கன்னியராடிக்கழித்த கத்தூரிகயன் மணக்கும்
மன்னியவாவிதிகழ் சமராபுரிமாமயிலோன்
பொன்னியல்கிண்கிணித்தாளையுந்தோளையும்போற்றுவையே
லுன்னியயாவுமுறுநெஞ்சமேயுண்மையுண்மையிதே

(ப - ரை.) கன்னியர்ஆடிகழித்தகத்தூரி - கன்னிப்பெண்கள் நீராடிக் கழித்த கஸ்தூரியே, கயல்மணக்கும் மன்னியவாவிதிகழ் சமராபுரிமாமயிலோன் - கயல்மீனுந்தோய்ந்து மணம் வீசும் நிலைபெற்ற தடாகஞ்சூழ்ந்தசமராபுரியி லெழுந்தருளிய பெருமைவாய்ந்த மயிலூர்தியையுடைய இறைவனது, பொன் இயல் கிண்கிணிதாளையும் தோளையும் நெஞ்சமேபோற்றுவை - பொன்னாற்செய்த சதங்கை யணிந்த திருவடியையும் திருத்தோளையுமேமனமே வணங்குவாய், மேல்உன்னியயாவும்உறும் - அதன்மேல்நீ கருதிய யாவுங் கைக்கூடும், இது உண்மை உண்மை - இதுசத்தியம் இது சத்தியம்.

(போ - ரை.) பெண்கள் நீராடுதலால் கழிந்த கஸ்தூரியின்மணமேகயலும் வீசும் தடாகஞ் சூழ்ந்த சமராபுரியிலெழுந்தருளிய இறைவனது திருவடியையும் திருத்தோளையுமே மனமே நீ வணங்கு, வணங்கில் நீ நினைத்த யாவுங் கைகூடும், இது சத்தியம் இது சத்தியம்.

உண்மை உண்மை துணிவுப்பொருளில் வந்த அடுக்குத் தொடர். புலால்கமழுங் கயலும் கஸ்தூரியின் சார்பால் நறுமணங்கமழும் சமராபுரியென்றமையால் ஆணவமலத்தானிருண்டமனமும் அத்திருப்பதியில் எழுந்தருளிய இறைவனது திருவடி திருத்தோள் இவைகளை வணங்குஞ்சார்பால் அவ்விருள் நீங்கித் திருவருள் ஒளி மேவிடுமென்பதுபோதரலால் உன்னிய யாவும் உறும் இது உண்மை உண்மை என்றார். கத்தூரி கயல்மணக்குமென்றது மிகுதி நவிற்சியணி. (கூ0)

வள்ளைக்கொடிச்செவிசை வலக்கூந்தல்வனசமுகந்
தெள்ளுற்ற நீலக்கண்ணும்பற்செவ்வாய் திகழுந்திகிரிப்
புள்ளுக்குயமன்னப் பேட்டு நடையுடைப் பொய்கைமங்கை;
நள்ளத்திகழ்கின்றபோரூர் விசாகனை நாடுள்ளமே.

(ப - ரை.) வள்ளை கொடிசெவி - வள்ளைக்கொடியைச் செவியாகவும் சைவலம் கூந்தல் - பாசிக்கொத்தைக் கூந்தலாகவும், வனசம்முகம் - தாமரையை முகமாகவும், தெள்உற்ற நீலம் கண் - மதர்த்த நீலமலரைக் கண்களாகவும், ஆம்பல் செவ்வாய் - ஆம்பலைச்செவந்தவாயாகவும், திகழும் திகிரி புள்குயம் - விளங்கும் சக்கரவாளப்புள்ளைத்தனமாகவும், அன்னம்பேடு நடை உடை-பெட்டையன்னத்தின் னடையேதனக்குநடையாகவுமுடைய, பொய்கை மங்கை நள்ள திகழ்கின்ற போரூர் விசாகனை - பொய்கையென்னும் ஓர் பெண் நட்புக்கொள்ள விளங்கும் திருப்போரூரி லெழுந்தருளிய முருகக்கடவுளை, உள்ளமே நாடு - மனமே நீதேடியடையாய்.

(போ - ரை.) வள்ளைக்கொடியைச் செவியாகவும், பாசிக்கொத்தைக் கூந்தலாகவும், தாமரையைமுகமாகவும், நீலமரைக்கண்ணாகவும், ஆம்பலை வாயாகவும், சக்கரவாளப்புள்ளைத்தனமாகவும்,பெட்டையன்னத்தின் னடையைநடையாகவுமுடைய பொய்கையாகிய பெண் நட்புக்கொள்ள விளங்கும் திருப்போரூரிறைவனை மனமே நீ நாடியடையாய்,

வள்ளைக் கொடிமுதலியவற்றைச் செவிமுதலிய வுறுப்புக்களாகவும் பொய்கையை மங்கையாகவும் உருவகஞ்செய்தலால் ஆறனுருபுதொக்குவந்த தொகையுருவகவணி. (கசு)

கருப்புத்திரளையறுத்துச் செறித்தகளைசகட
மருப்புப்பகட்டைக்கழைபாலுழவர் கண்மாறுதொறும்
விருப்புற்றமுத்துத்தெறித்தொளிர்சாளரவீடுபுகுந்
திருப்பெற்றபோரிக்குகன்றாளறிஞர்க்குத்தித்திக்குமே

(ப - ரை.) கரும்பு திரளை அறுத்து செறித்த களை சகடம் - கரும்பின் கட்டங்களை அறுத்துச் செறித்தேற்றிய மிக்கபண்டிகளிற் பூட்டிய, மருப்புப்பகட்டை கழையால் உழவர்கள் மாறு தொறும் - கொம்புகளையுடைய எருமைகளை மருத நிலமாக்கள்கரும்புகளினால் அடிக்குந்தோறும், விருப்புற்ற முத்துதெறித்து - விரும்பும்முத்துகள் அதன் கணுக்களினின்றுந் தெறித்து சாளரம் ஒளிர் வீடுபுகும் திருபெற்றபோரிகுகன்தாள் - சாளரஞ் செறிந்து விளங்கும் வீடுகள்தோறும் புகா நின்றசெல்வம் வாய்ந்த திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளது திருவடி, அறிஞர்க்குதித்திக்கும் - சிவஞானிகளுக்குத்தித்திக்கும்,

(போ - ரை.) கரும்புத்திரளையறுத்துச் செறிந்தேற்றியபண்டிகளிற்பூட்டிய எருமைக்கடாக்களை மருதநிலமாக்களடிக்குந்தோறும்கணுவினின்றுந் தெறித்துச்சிந்திய முத்துகள் வீடுகள்தோறும் போய்விழுஞ் செல்வம் வாய்ந்த திருப்போரூரிலெழுந்தருளிய முருகனது திருவடி சிவஞானிகளுக்குத் தித்திக்கும்.

தித்திக்குமென்ற குறிப்பால் கரும்பின் கூட்டங்களே எங்குஞ் செறிந்த திருப்போரூராதலால் அத்திருப்போரூரில் எழுந்தருளிய இறைவன் திருவடியும் கரும்பென்பது போதரலால் உதாரவணியும், கரும்பின் முத்துகள் தெறித்து வீடுகள் தோறும் புகுமென்றமையால் செல்வந்தோன்ற நிற்றலில் பிறு கோளணியுங் கலந்து வருதலால் கலவையணி. (கஉ)

காண்டமடிக்கடி நீர்மூழ்கியாங்குக்கயலெடுத்தே
மருண்டமென்னோக்கியர் முன்காட்டனுங்கண்மலர்விழிக்கு
வெருண்டகயலன்றிதுபார்மினென்று விளம்பலொக்குந்
தெருண்டவர்சூழ்திருப்போரூரின்றேவர்சிரோமணியே.

(ப - ரை.) காண்டம் அடிக்கடி நீர் மூழ்கி - நீர்க்காக்கை யடிக்கடிநீரில்மூழ்கி, ஆங்குகயல் எடுத்து - அந்நீரிலுள்ள கயன் மீனெடுத்து, மருண்ட மெல் நோக்கியர் முன்காட்டல் - மாட்சிமையயுடைய மெல்லியபார்வையையுடைய பெண்கள் முன்காட்டுதல், இது நும்கண்மலர்விழிக்கு வெருண்டகயல் அன்று - இது நமது தாமரைமலர்போன்ற கண்களுக்கு அஞ்சி யகன்ற கயலல்ல, பார்மின் என்று விளம்புதல் ஒக்கும் - பாருங்களென்று சொ

ல்லுதலை யொக்கும், தெருண்டவர்சூழ் திருப்போரூரன் தேவர் சிரோமணி - றுலாராய்ச்சியிற் றெளிந்தோர் சூழும் திருப்போரூரிலெழுந்தருளிய இறைவன் தேவர்கள்சூடுஞ் சூளாமணியாம்.

(போ - ரை.) நீர்க்காக்கைகள் நீரில் மூழ்கி அங்குள்ள கயல்மீனை யெடுத்து அங்குள்ள நெய்தனிலமாக்களின் முன்காட்டுதல் உங்கள் கண்களுக்கு அஞ்சியகன்றகயல்கள் இது வல்ல, பாருங்களென்று சொல்லுதலையொக்கும், திருப்போரூரிலெழுந்தருளிய இறைவன்தேவர்கள்சூடிய சூளாமணியாவான்.

தேவர் சிரோமணி யென்றதனால் ஏனையமுனிவர்க்கும் மக்களுக்கும் சூளாமணியுமாவான் எனப்பொருடந்து நிற்றலால்உபலக்கணம். நீர்க்காக்கை நீருளிருக்கும் கயலையெடுத்துக் காட்டுதலைப் பெண்களைநோக்கி உங்கள் கண்களுக்கு அஞ்சியகன்ற கயல் இது வல்ல பாருங்களென்று சொல்லுதலை யொக்குமெனக்கவியத்திய வசயித்துக் கூறுதலால் தற்குறிப் பேற்றவுவமையணி. (ருரு)

காளைச்சலப்பெயர்நாயினமூழ்கக்கயமடுவி
லாளைப்பகட்டுறும்வாளைப்பகட்டினமம்பினிற்போய்ப்
பாளைக்கமுகின்மிடறறப்பாய்ந்துநெற்பண்ணைபுகும்
கேளொத்தபோரிக்குகனன்பரோயென்கிளைஞர்களே.

(ப - ரை.) சலப்பெயர் காளைநாயினம் மூழ்க - ஆண் நீர் நாயின் கூட்டங்கள் மேலெழுந்துமூழ்க, கயமடுவில் ஆளைப்பகட்டுஉம் வாளைபகடு இனம் ஆழமாகியமடுவில்நின்று ஆள்களைமயக்கும் ஆண்வாளையின்கூட்டம், அம்பினில் போய் - அம்பைப்போல் மீதெழுந்து சென்று, பாளைகமுகின் மிடறு அறபாய்ந்து நெல்பண்ணைபுகும்-பாளைவாய்ந்த கமுகின் மிடறு முறியப்பாய்ந்து நெல்விளையும் வயலிற்புகுந்து விளையாடும், கேள் ஒத்தபோரிகுகன்-அடைந்தோர்க்கு உறவினரை யொத்த திருப்போரூரி லெழுந்தருளிய முருகக்கடவுளது, அன்பரோ என்கிளைஞர்கள் - அடியவர்களே எனக்கு உறவினராவார்.

(போ - ரை.) நீர் நாய்கள் மூழ்குதலால் அதற்கஞ்சி மடுவினின்று மேலெழுந்த ஆண்வாளைகள் அம்பைப்போலவிரைந்து சென்று அங்குள்ள கமுகின்மிடறு முறியப்பாய்ந்து வயலிற்புகுந்து விளையாடும் திருப்போரூரி லெழுந்தருளிய முருகக்கடவுளது அடியவர்களே எனக்கு உறவினராவார்.

முருகக்கடவுளெழுந்தருளிய திருப்போரூரோ அடைந்தோர் குறைபாட்டை யொழித்தலால் அத்திருப்பதியி லெழுந்தருளிய இறைவனடியார்கள் எனது குறைபாடொழித்தல் எளிதென்பார்குகனன்பரோ என்கிளைஞர்களென்றார். (ருச)

கருக்கடனையடியேன்புகுதாவகைகாத்துமுத்திப்
பெருக்குறுமின்பத்திருத்துகண்டாய்பெருநீர்க்கரையின்
வருக்கைவெடித்தெழுசெஞ்சாற்றுச்சேற்றில்வழுக்கிநத்துக்
குருக்கொளுமுத்துமிழ்போரூர்ச்சடானனக்கோக்கொண்டலே.

(ப - ரை.) பெரு நீர்க்கரையின் வருக்கைவெடித்து எழுசெஞ்சாற்று சேற்றில் நத்து வழுக்கி - பெரியநீர்க்கரையிலுள்ளபலாக்கனிகள் வெடித்து அவற்றிலுள்ளசுளைகள் ஊற்றும்செவ்ந்தசாற்றாலமைந்தசேற்றில்சூற்கொண்ட சங்குகள்வழுக்கி வீழ்ந்து, குருகொள்ளும்முத்து உமிழ்போரூர்-நிறம் வாய்ந்த முத்தினைக்காலும் திருப்போரூரிலெழுந்தருளிய, சடானனம்கோகொண்டல் ஆறுதிருமுகங்களையுடைய மேகமே, கரு கடல் நாயடியேன் புகுதாதவகை காத்து - பிறவியாகிய கடலில் நாயடியேன் புகுதாத வண்ணங்காத்து, முத்திபெருக்கு உறும் இன்பத்துஇருத்து கண்டாய் - மோக்ஷமென்னும் என்றும் சுருங்காத பேரின்பக்கரையில் என்னை இருத்துவாய்.

(போ - ரை.) நீர்க்கரையிலுள்ளபலாக்கனிகள்வெடித்துஅவற்றிலுள்ள சுளைகளூற்றும் சாற்றாலமைந்த சேற்றில் சூற்கொண்ட சங்குகள் வழுக்கி வீழ்ந்து முத்துகளைக்கக்கும் திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளென்னும் ஓர் மேகம், பிறவியாகிய கடலில் நாயிற்கடைப்பட்ட அடியேன்புகுதாமற்காத்துப் பேரின்பமென்னுங்கரையிலிருத்தும்.

மேகம் கடலிற்புகுதல் இயல்பாதல்போலாது இம்மேகம் பிறவிக்கடலிற்படியும் என்னைப்படுக்காமல் இன்ப மென்னுங்கரையினெல்லையில் நிலை பெறுத்தும் எனகூறுதலால் ஒழிப்பணி. (௩௫)

வீட்டின்பநாடியிருப்போர்தமக்கும்விடயசுக
நாட்டங்கொண்டாங்கவர்போலிருப்போர்க்குநலனுறவே
காட்டுமுவமையதாக்கொக்குநீர்மடைக்கண்ணிலகுந்
தீட்டும்புகழ்கொண்டபோரூரன்வேல்சுரர்தேவதையே.

(ப-ரை.) வீடுஇன்பநாடிஇருப்போர்தமக்கும்.முத்தினையின்பத்தைநாடி அசைவற்றிருக்கும் மௌனிகளுக்கும், விடைய சுகம் நாட்டம் கொண்டு ஆங்கு அவர் போல் இருப்போர்க்கும், விடையத்தால் வருஞ்சுகத்தை நாடிஅது கிட்டுமளவும்அவ்விடத்துஅம்மௌனிகளைப்போல் அசைவற்றுவாளாவிருக்கும் போகிகளுக்கும், நலன் உறவே காட்டும் உவமையதாக - பொருட்சுவையமையப் புலவர்களெடுத்துக் காட்டும் உவமை ஆக, கொக்கு நீர்மடைக்கண் இலகும்-கொக்குகள் நீர் மடையின்கண்மீன்வருகையைநாடி அசைவற்றிருக்கும், தீட்டும்புகழ்கொண்ட போரூரன் வேல்-யாவரும் எழுதுதற்கமைந்த புகழ்வாய்ந்த திருப்போரூரிலெழுந்தருளிய இறைவன் திருக்கரத்தில் ஏந்திய வேல், சுரர்தேவதை - தேவர் குலத்துக்கோர் தெய்வமாம்.

(போ - ரை) முத்தியின்பத்தைநாடி அதுகிட்டுமளவும்மவுனமாயிருப்பவர்களுக்கும், விடயசுகத்தைநாடி அது கிட்டுமளவும் வாளாவிருக்கும் போகிகளுக்கும் உவமையாகவெடுத்துப் புலவர்கள் கூறக், கொக்குகள் நீர்மடைகளில் அசைவற்றிருக்கும் திருப்போரூரி லெழுந்தருளிய இறைவனது வேல்தேவர்களுக்கோர்குலதெய்வமாம்.

சூரபன்மன் முதலிய அசுரர்களால் தேவர்களுக்குவந்த பெருந்துன்பத்தை ஓட்டிப்பாதுகாத்ததுவேலாதலால் போரூரன் வேல்சுரர்தேவதைஎன்றாரேனும், முனிவர்களுக்கும் மக்கட்பிறப்பினருக்கும்விளையும்பெருந்துன்பினை யோட்டிப்பாதுகாப்பதும் அவ்வேலாதலின் அவர்க்கும் குலதெய்வமென்பது கொள்ளநிற்றலால் உபலக்கணம். (௬௬)

வாவிக்கரைக்கமுகே கொக்குநிழல்வயங்கத் தெண்ணீர்
தாவிக்கயலதைக்கண்டேவெருவுதறன்கனவின்
மேவுற்றகாட்சி நனவிற்கண்டாங்குவிளங்கலுறும்
பூவிற்றிருத்திகழ் போரூர்க்குகன்பதம் போற்றுள்ளமே.

(ப - ரை) வாவிகரைகமுகே - தடாகத்தின் கரையினுள்ள கமுகமரமே, தெள்நீர் கொக்குநிழல்வயங்க - தெள்ளியநீரில் கொக்கினிழலைப்போல விளங்கித்தோன்ற, அயல்தாவி - அதற்கஞ்சி அக்கமுகின்மேற்றாவி, அதைக் கண்டேவெருவுதல் - மீள அப்பிரதிபிம்பத்தைக்கண் டஞ்சுதல், தன்கனவில்மேவுற்றகாட்சி - தனது கனவில்வந்த காட்சிப்பொருளை நனவிற்கண்டாற்போல, விளங்கலுறும் - விளங்கும்பூவில் திருதிகழ்போரூர்க்குகன்பதம் உள்ளமேபோற்று, விளங்காநின்ற தாமரைகளில் திருமகள் வசிக்கும் திருப்போரூரிலுள்ள முருகக்கடவுளது திருவடியை நெஞ்சமே வணங்காய்.

(போ - ரை.) தடாகத்தின்கரையிலுள்ளகமுகமரமே தெள்ளியநீரில் கொக்கினிழலைப்போலப் பிரதிபிம்பிக்க, கயல்கண்டஞ்சி அக்கமுகின்மேற்றாவி அப்பிரதிபிம்பத்தை நீரில் மீளக்கண்டஞ்சுதல் தனது சொப்பனத்தில் வந்த பொய்க்காட்சியை நனவில் மெய்க்காட்சியாகக் கண்டவனைப்போல விளங்கும் திருப்போரூரி லெழுந்தருளிய இறைவனது திருவடிகளை மனமே வணங்கு.

முருகக்கடவுளது திருவடியை மனமே நீ வணங்கில் இம்மைக்குரிய பொருட்செல்வத்தையும் மறுமைக்குரிய ஞானச்செல்வத்தையும் பெறுவா யென்பார் பூவில் திருத்திகழ்போரூர் என்றார். (௬௭)

பச்சைநிறத்தநிறை நீர்க்குடங்கள்பலசுமந்தே
யுச்சியினுள்ளகதிரோனுக் கீயுமுயர்ந்துளதெங்
கெச்சமறச்செறி போரூர்ச்செவ்வேலையிறைஞ்சிநினைப்
பிச்சைநெஞ்சேயடுகின்றனன்பாரொன்பிரதாபத்தையே.

(ப - ரை) பச்சைநிறத்தநிறை நீர்க்குடங்கள் பலசுமந்து - பசியநிறம் வாய்ந்த நீர்நிறைந்த குடங்கள் பலவற்றையுந் தலையிற்சுமந்து, உச்சியில்உற்ற கதிரோனுக்கு ஈயும் - வானினுச்சியில்வந்த சூரியனுக்குத்தரும், உயர்ந்துள்ளதெங்கு எச்சம்அறசெறி போரூர்செவ்வேலை - உயர்ந்த தென்னமரங்கள் குறைவறநெருங்கிய திருப்போரூரி லெழுந்தருளிய முருகக்கடவுளை, நெஞ்சே இறைஞ்சி நினைப்பு இச்சை அடுகின்றனன் - மனமே இன்றுவணங்கி நீ

நினைக்கு நினைப்பையும் நீ கொண்ட விச்சையையும் செப்புகின்றேன், என் பிரதாபத்தைப்பார் - என்னுடையபிரதாபத்தை நீயேபார்.

(பொ - ரை.) பசிய நிறத்தையுடைய நீர் நிறைந்த குடங்களைத்தலையிற்சுமந்து உச்சிப்போதில்வந்த சூரியனுக்குத்தந்து இளைப்பாற்றும் புன்னைமரங்கள் குறைவறச்செறிந்த திருப்போரூரி லெழுந்தருளிய முருகக்கடவுளை வணங்கி மனமே நினைப்பையும் இச்சையையும் சொல்லுகின்றேன், என் பிரதாபத்தை நீயேபார்.

இறைவனெழுந்தருளிய திருப்போரூரே தன்னிடத்துவந்தடைந்தவர்களது வெப்பொழித்தற்குரீருதவுமென்றமையால் அத்திருப்போரூரிலெழுந்தருளிய இறைவனுந்தன்னைச் சரண்புகுந்தோர் பிறவிவெப் பொழிப்பானென்பார் தெங்கு எச்சமறச்செறி போரூர்ச்செவ்வேள் எனவும், மனமே என் சொல்வழிநில்லாது நிலையில் பொருளைக்கருதலும் அதன்மே லிச்சைகொள்ளுதலுமுடையாய் அவன்றிருவடியை வணங்கி யிப்போதே செல்லுகின்றேன் என்பிரதாபத்தைப் பாரென்பார் இறைஞ்சி நினைப்பிச்சை நெஞ்சேயகின்றனன்பாரென் பிரதாபத்தையே எனவுங்கூறினர். பிரதாபம் வெற்றியாய்வரும் வீரச்சொல். (௯அ)

சாறூற்றெழுந்துகணுவுடைத்தோடுந்தழைக்கரும்பை
வீறேற்றுவாழைக்குலையோடுமாசினிவீழ்ந்தொடித்துச்
சேறூறியவயற்போரூர்முருகனந்தீதகற்றிப்
பேறுக்கருணைசெய்தேநெஞ்சமேதரும்பேரின்பமே.

(ப - ரை.) ஆசினிவீழ்ந்து - ஈரப்பலாக்கனிவீழ்ந்து, சாறு ஊற்று எழுந்துகணு உடைத்து ஓடும் தழைக்கரும்பை - சாறு உவட்டெடுத்து கணுவினையுடைத்து ஓடும் தழையையுடைய கரும்பினை, வீறு ஏற்ற வாழைக்குலையோடும் ஒடித்து-நிகரின்றி ஓங்கிய வாழையின்குலையோடும் ஒடித்து, சேறு ஊறிய வயல் போரூர் இறைவன் - சேறூறிய வயல்சூழ்ந்த திருப்போரூரிலெழுந்தருளிய முருகன், நந்தீது அகற்றி பேறுக்கருணைசெய்து - நமது பிறவித்தீங்கினையொழித்து நாம்பெறும் பேறுகத்திருவருள்செய்து, பேரின்பமேதரும் - நமக்குப் பேரின்பத்தையே தந்தருள்வான், நெஞ்சமே - மனமே (நீ யவனைச்சரணடையாய்.)

(பொ - ரை.) பலாக்கனிவிண்டூற்றெடுத்துவீழ்ந்துசாறுசுரந்துகணுவினையுடைத்தோடுங்கரும்பினை ஓங்கியவாழைக்குலையோடுமொடித்துவயலைச்சேறுக்கும் திருப்போரூரி லெழுந்தருளிய இறைவன் நமது பிறவித்தீங்கினையொழித்துத் திருவருள் செய்து பேரின்பத்தையே தருவான். ஆதலால்மனமே நீ அவனைவணங்கிச் சரண்புகுவாய்.

நீ சரண்புகாயென்னும் பயனிலை தொக்குநின்றது. திருப்போரூர் பழங்களின்சாறால் தன்பாலுள்ளோர்க்கு இன்பஞ்செய்தல்போல அங்குள்ள இ

றைவனுந் தன்னையடைந்தோர்க்குப் பேரின்பமே தருவானென்பார் தரும் பேரின்பமே என்றார். (ங௯)

பவளக்கொடியிற்பிணித் தூசல்புன்னையிற்பார்வைமயற்
குவளைக்கண் கற்குமடயாதராடவக்கோடரும்பைத்
தவளத்தரளமழை போலவர்மெய்தனிற் சொரியுந்
திவளுற்ற போரிக்குமரேசனென் குலதேவதையே.

(ப - ரை.) பவளம் கொடியில் - பவளக்கொடியால், புன்னையில் ஊசல் பிணித்து - புன்னைமரக்கொம்பில் ஊசலைக்கட்டி ஆட, குவளைக்கண் பார்வை - தமது மலர்போன்ற கண்களால், மயல்கற்கும் மடமாதர் ஆட - ஆடவர்க்கு மயல்பூட்டக்கற்கும் இளமையை யுடைய பெண்களாட, அக் கோடு - அப்புன்னைமரத்தின் கொம்பானது, அரும்பைதவளம் தரள்மழை போல் அவர் மெய்தனில் சொரியும் - அரும்பினை வெள்ளிய முத்துமழை போல அவருடம்பிற் சொரியும், திவளுற்றபோரிகுமரேசன் என்குல தேவதை - விளங்குந்திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுள் என்குல தெய்வமாவான்.

(போ - ரை) பவளக்கொடியினால் புன்னைமரக்கொம்பில் ஊசல் கட்டித்தமது கட்பார்வையால் ஆடவர்க்கு மயல்பூட்டும் பெண்களாட, அப்புன்னைமரத்தின் கொம்பானது அரும்பினைமுத்து மழைபோல அவருடம்பிற் சிந்தும் திருபோரூரிலெழுந்தருளிய முருகக்கடவுள் என்குலதெய்வமாவான்.

தம்மையடைந்த பெண்கள்மேல் புன்னைமரங்கள் அரும்பினை முத்துப் போலச்சிந்துமெனக்கருப் பொருள்மேல் வைத்துக்கூறுதலால் திருப்போரூர்முருகக்கடவுள் அடியேனிடத்து அருள் சுரக்குமென்னும் பொருள் புலப்படுதலில் இறைச்சிப்பொருட்டு. (சo)

வல்லைத்துரந்தமுலைநுளைமாதர்வளையெறியப்
பல்லைத்திறந்துறுமக்கவிதாலப்பழமெறியுந்
தொல்லைத்திருத்திகழ்போரூர்க்குகன்பதஞ்சூடுஞ்சென்னிக்
கில்லைப்பிரமன்றுயருறக்கீறுமெழுத்துக்களே

(ப - ரை.) வல்லை துரந்தமுலைநுளை மாதர் - சூதாடுகருவியைப் புறங்கண்ட தனத்தையுடைய நெய்தனிலப்பெண்கள், வளைஎறிய - (பனம்பழத்தை விரும்பி) சங்கினைக் குரங்கின் மேலெறிய, பல்லைதிறந்து உறும் அக்கவி - பல்லைத்திறந்து அங்குள்ள குரங்குகள், தாலப்பழம்எறியும் - பனம்பழத்தையவர்க்கெதிர்வீசும், தொல்லை திருதிகழ் போரூர்குகன்பதம் சூடும் சென்னிக்கு - தொன்றுதொட்டு வாழும் திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளது திருவடியைச்சூடுந் தலைக்கு, பிரமன் துயர்உற கீறும் எழுத்துக்கள்இல்லை - பிரமன் பிறவித்துன்ப மடையத்தலையி லெழுதுமெழுத்துக்கள் இனி இல்லை.

(பொ - ரை.) நெய்தனிலப்பெண்கள் பனம்பழத்தை விரும்பிச்சங்கி னைப்பனைமரத்தின் மேலெறிய, அப்பனைமரத்திலுள்ள குரங்குகள் அதற்கெதிராகப்பனம்பழத்தை அவர்கள்மேல் வீசும் திருப்போரூரி லெழுந்தருளிய இறைவனது திருவடியைச் சூடுந்தலையிற் பிரமன் பிறவித்துன்பமடைய எழுதும் எழுத்து இனியில்லை. (௬௧)

வாடைக்கொதுங்கிடப்பார்ப்புகள் வெள்ளைவனசங்கண்மேற்
றேடிப்பெடையனந்தன்பாலணைத்துறந்தீதினெய்த
னீடத்திகழ்கின்ற போரூர்விசாகனிமலபத
நாடிக்களிப்பவர்க்குண்டோ துயரெனுநாமங்களே.

(ப - ரை) பார்ப்புகள் வாடைக்கு ஒதுங்கிட-குஞ்சுகள் வடகாற்றின் குளிர்க்கு ஒதுங்கி யடைய, அன்னப்பெடைதேடி வெள்ளை வனசங்கள்மேல்தன்பால்அணைத்துறும்- பெட்டையன்னந்தன்பார்ப்புகளைத்தேடிவெண்டாமரையின்மேல் தன்பாலணைக்கும், தீதுஇல் நெய்தல் நீட திகழ்கின்ற போரூர் விசாகன் - குற்றமில்லாத நெய்த னிலத்தால் மிகவும் விளங்குகின்ற திருப்போரூரில்முருகக்கடவுளது,நிமலபதம்-இயல்பாகவேகுற்றத்தினின்று ம்நீங்கிய திருவடிகளை, நாடிகளிப்பவர்க்குதுயர் என்னு நாமங்கள் உண்டோ - தேடிக்கண்டு மகிழ் கூருவோர்க்குத் துன்பமென்னும் பேருமுண்டோ.

(பொ - ரை ) குஞ்சுகள் வடகாற்றின் குளிருக் கொதுங்க, பெண்ணன்னம் வெண்டாமரைமலர்மேல் தன்பாலணைத்துறங்கும் நெய்தனிலத்தால் விளங்குந் திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளை நாடி மகிழ் கூருவோர்க்குத்துன்பமென்னும் பெயருமுண்டா.

தன்னையடைந்தோர் மலத்தைப்போக்கு மென்பது தோன்ற நிமலபத மென்றார். பெண்ணன்னங்கள் குளிர் காற்றுக்கஞ்சி யொதுங்கிய தன்குஞ்சுகளைத்தன் பாலணைத்து வெண்டாமரை மலரில் உறங்குமென நெய்த னிலக்கருப்பொருள்மேல் வைத்துக்கூறுதலில் திருவடி தன்னை யடைந்தோரை அணைத்து அவர்கள் பிறவித்துன்பத்தைப் போக்கு மென்பது தோன்றுதலால் இறைச்சிப்பொருட்டு. மருதநிலக்கருப்பொருளாகிய தாமரையை நெய்தநிலத்தில் வைத்துக் கூறியது இடமலை வழுவமைதி. (௬௨)

செக்கர்க்கிடையினுடுக்கூட்டமென்னத்திரைகளினுற்
றொக்கப்படுந்துகிர்வண்டலின்மீதுசுரிமுகங்கள்
கக்கப்படுமுத்தொளிருந்தென்போரியிற்காங்கெயனைப்
பக்கத்துடன்பணிவாரவரேசுகபாரணரே.

(ப - ரை.) செக்கர்க்கு இடையின் உடுக்கூட்டம் என்ன - செக்கர் வானத்தினிடையில் நக்ஷத்திரக்கூட்டங்கள் விளங்குதல்போல, திரைகளினுல் தொக்கப்படும் துகிர்வண்டலின்மீது - அலைகளினுல் நெருங்கப்பட்ட பவளஞ்செறிந்த சேற்றின்மேல், சுரிமுகங்கள் கக்கப்படும் முத்து ஒளிரும்

தென்போரியில் காங்கெயனை- சங்குகளால் கக்கப்படும் முத்துகள் விளங்கும் இம மலைக்குத்தென்பாலுள்ள திருப் போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளை, பக்கத்துடன் பணிவார் - பக்ஷத்தோடு வணங்குவோர் எவரோ, அவரே சுகபாரணர் - அவர்களே இம்மைக்குரிய சுகத்தையும் மறுமைக்குரிய முத்தியின்பத்தையும் நுகர்வோராவர்.

(போ - ரை.) செக்கர்வானத்திடையே நக்ஷத்திரக்கூட்டங்கள்போல அலைகளால் நெருங்கப்பட்ட பவளச்சேற்றின் மேல் சங்குகளால் கக்கப்பட்ட முத்துகள் விளங்குந் தென்பாலுள்ள திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளைப் பக்ஷத்தோடு வணங்குவார் எவரோ அவரே இருமைச்சுகங்களும் நுகர்வோராவார்.

செக்கர்வானம் பவளச்சேறாகவும், அதனிடையிலுள்ள நக்ஷத்திரக்கூட்டங்கள் அச்சேற்றிற்சொரிந்த முத்துகளாகவும் ஒப்புமை கூறுதலால் ஒப்புமைக்கூட்டவுவமையணி. (சரு)

வண்டணையாக்கொண்டுகண்டுஞ்சும்பூங்குழல்மாதரையே
கண்டனையாயுனுங்காலமுண்டோகடையேன்றனக்கே
ஞெண்டினங்கேதகைத்தாதரித்துண்டறனீடுபொய்கைத்
தண்டுறைஞெண்டுடனாடிடும்போரிச்சரவணனே.

(ப-ரை.) ஞெண்டுஇனம்-ஆண் ஞெண்டின்கூட்டங்கள், கேதகைதாது அரித்துஉண்டு-தாழை மலரின் மகரந்தத்தை அரித்துண்டு, அறல் நீடுபொய்கைதண்துறை ஞெண்டுடன்ஆடிடும் போரிச்சரவணனே- தண்ணியபெரியநீர்த்துறையில்பெண்ஞெண்டுகளோடுவிளையாடும்திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளே, வண்டு அணையாகக்கொண்டு கண்தூங்கும் பூங்குழல் மாதரை - வண்டுகள் அணையாகக்கொண்டு கண்துயில் கொள்ளும் மலரையணிந்த கூந்தலையுடைய பெண்களை, கண்டு அனையாய் உன்னும் காலம் கடையேன் தனக்கும்உண்டோ-கண்டு அவர்களைத்தாய் மாராகக்கருதுங்காலம் நாயிற்கடைப்பட்ட எனக்கும் உண்டோ.

(போ - ரை.) ஆண்ஞெண்டின் கூட்டங்கள் தாழைமலரின் மகரந்தத்தை ஆதரித்துண்டுநீர்நிறைந்தபொய்கையின்துறையில்பெண்ஞெண்டுகளோடு விளையாடும் திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளே, வண்டுகள் மெத்தையாகக்கொண்டு கண்துயில் கொள்ளும் கூந்தலையுடைய பெண்களைத்தாய்மாராகக்கருதும்காலமும் நாயிற்கடைப்பட்ட எனக்கும்உண்டாகுமோ (கூறுயென்றபடி.)

ஈரறிவுயிர்களும் தத்தம் இனத்திலுள்ளபிணக்களோடு இடைவிடாதிருக்கும் நெறியையுடையது உலகியற்கை என்பார் ஞெண்டினங்கேதகைத்தாதரித்துண்டறனீடு பொய்கை தண்டுறை ஞெண்டுடனாடிடும் போரி எனவும், இவ்வுலகில் பகுப்பறிவோடுஆறறிவுடைய பெண்களைக்கண்டு தாய்மாராகக்

கருதும்பெருந்துறவு எனக்கும்வாய்க்குமோ என் பார்வண்டணையாக்கொண்டு கண்டேங்கும் பூங்குழல் மாதரையே கண்டனையாயுனுங்கால முண்டோ என வுங்கூறினர்.

ஒகாரம் வினப்பொருட்டு. (சச)

சந்திரகாந்தமணிமாடத்தூடுதன்சாயைகண்டோர்
பைந்தொடிமாதுதலைவனொடேப்பரிந்தவனே
சுந்தரவாடிநிழற்காட்டியின்புறுசொற்புகலுஞ்
செந்திருப்போரிக்குகனைக்கண்டார்க்குண்டுசித்திக்ளே.

(ப - ரை) சந்திரகாந்தமணி மாடத்தூடு - சந்திரகாந்தக்கல்லாற்செய்த மாடத்தினிடத்து, ஓர் பைந்தொடி மாதுகண்டு - ஒரு பசியவளை யலைய ணிந்த ஓர் பெண் தன் சாயலைக்கண்டு, தலைவனொடூட - தன்னாயகனோடுபிணங்க, அவன் பரிந்து - அத்தலைவனன்பு கூர்ந்து, சுந்தர ஆடி நிழல்காட்டி - அழகிய கண்ணாடியில் அவர்தேகச்சாயலைக்காட்டி, இன்புஉறுசொல்புகலும் - இன்சொற்சொல்லி மகிழ்வித்தற்கெல்லையாகிய, செம் திருப்போரிகுகனை கண்டார்க்கு - திருமகள் வாழும் திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளைத் தரிசித்தவர்களுக்கு, சித்திகள் உண்டு - அட்டமாசித்திகளு முண்டு.

(போ - ரை) சந்திரகாந்தக்கல்லாலமைத்த மாடங்களிடத்துத் தனது சாயலை ஓர் பெண்கண்டு தன் கணவன் மற்றொரு பெண்ணோடு கலந்து நிற்கின்றானென்று பிணங்க, அத்தலைவன் அவளறியாமைக்கிரங்கிக்கண்ணடியில் அவள் நிழலைக்காட்டி இது பிரதிபிம்பமேயன்றிப்பிம்பமன்று என்று இன்சொற்கூறுதற்கு எல்லையாகியதிருப்போரூரிலெழுந்தருளியமுருகக்கடவுளைத் தெரிசித்தோர்க்கு அட்டமாசித்திகளும் கைகூடும்.

அட்டமா சித்திகளாவன - அணிமா, மகிமா, இலகிமா, கரிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம். (சரு)

ஏதங்கருதினர் சென்மினென்றேயுமிதங்கருதும்
போதஞ்சிறந்தவர்வம்மினென்றேயும்புகல்வனபோல்
வாதஞ்செறியக்கொடியாடும் போரிவரதன்றண்டை
நாதங்களியோகியரியோகினிற் காண்குறு நாதங்களே.

(ப - ரை.) ஏதம் கருதினர் சென்மின் என்றும் - ஆன்மாக்களுக்குத் துன்பஞ்செய்யக் கருதுவோர் இங்கு நின்று போங்களென்றும், இதம்கருதும் போதம் சிறந்தவர்வம்மின் என்றும் - ஆன்மாக்களுக்கு இன்பஞ்செய்யக்கருதுவோர் இங்கு வாருங்களென்றும், புகல்வனபோல் - சொல்லுதல் போல, வாதம்செறியகொடிஆடும் போரிவரதன் தண்டைநாதங்கள் - காற்று வீசக்கொடிகளாடுந்திருப்போரூரிலெழுந்தருளிய வள்ளல் திருவடியிலணிந்த தண்டையினொலிகள், யோகியர் யோகினில் காண்குறும் நாதங்கள் - சிவயோகிகள் சிவயோகத்திற் கண்டு தெரிசிக்கும் நாதங்களாம்.

(போ - ரை.) உயிர்களுக்குத் துன்பஞ்செய்யக் கருதுவோர் இங்கு நின்று செல்லுங்களென்றும், இன்பஞ்செய்யக் கருதும் அறிவிற்சிறந்தோர் வாருங்களென்றும் சொல்லுதல்போலக் காற்றுவீசக்கொடிகளசையும் திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளது திருவடியிலணிந்த தண்டையின் ஒலியைக்கேட்கும்பரிபக்குவமுடையோர்க்குச் சிவயோகத்தில் முழங்குஞ் சங்கோசை முதலிய தசநாதங்களாம்.

சந்திரமண்டிலத்தினின்றிழிந்த அமிர்தத்தால் நனைந்த தசநாடிகளும் தசநாதங்ளாக வொலித்தலைக்கேட்டலே அவர்களுக்குக் காட்சியாதலால் தண்டைநாதங்களியோகியர் யோகினிற்காண்குறுநாதங்களென்றார். இதனைப் பிள்ளைத்தமிழிற் காண்க." கண்ணிற்குரியகாண்டற்றொழிலைக்காதுக்குக்கூறுதல் உபசாரவழக்கு. காற்றாற்கொடியசைதலைத்தீ யொழுக்கமுடையோர் இங்கு நின்று போங்கள், நல்லொழுக்க முடையோர் இங்குவாருங்கள் என்று சொல்லுதலை யொக்கு மெனக்கவி அத்தியவசயித்துக்கூறுதலால் தற்குறிப்பேற்றவுவமையணி. (சகூ)

தேரூரிரவிவலவன்கைமீது செழுங்கொடிக
ளேராகத்தாக்குதலெங்கோனயிலொளிக்கெய்துமுட்கோ
னேரோசொல்நில்லென்றுபோரூர்கைக்கொண்டுநிறுத்தலொக்குஞ்
சீரூருமிந்நகரே கயிலாயந் தெளிந்தவர்க்கே.

(ப - ரை.) இரவிதேர்ஊர்வலவன்கைமீது-சூரியனதுதேரைநடத்தும் பாகனாகிய அருணன் கைமேல், செழுங்கொடிகள் ஏராகதாக்குதல்-பொலிவுவாய்ந்த மாடங்களிற் கட்டியகொடிகள் அழகுபெறத்தாக்குதல், எங்கோன் அயில் ஒளிக்கு - எமதிறைவனேந்திய வேலினொளிக்கு, எய்தும்முள்கோல்நேரோ சொல் - உன்கையிலேந்திய முட்கோல் ஒப்போ கூறாய், நில் என்று போரூர் கைகொண்டு நிறுத்தல் ஒக்கும் - இங்கு நில்லாயென்று தன்கையாற்பற்றிநிறுத்துத லொக்கும், சீர் ஊரும் இந்நகரே தெளிந்தவர்க்கு கயிலாயம் - சிறப்புமிக்க இத்திருப்போரூரே தன்னைத் தெளிந்தவர்க்குத்திருக்கயிலாயமாம்.

(போ - ரை.) சூரியன்தேரைநடத்தும்அருணன்கைமேல்பொலிவுவாய்ந்த கொடிகள் அழகுபெறத்தாக்குதல் எமதிறைவனாகிய முருகக்கடவுளேந்திய வேலினொளிக்கு உன்கையிலேந்திய முட்கோலொப்பாகுமா (சொல்லாய்) இங்குநில்லென்று திருப்போரூர்கையாற்பற்றிநிறுத்துதலையொக்குஞ்சிறப்புமிக்கஇத்திருப்போரூரே தன்னைத்தெளிந்தவர்க்குத்திருக்கயிலாயமாம்.

திருக்கயிலாயந் தன்னையடைந்தபரிபக்குவர்க்குச் சாலோக சாமீப சாரூபசாயுச்சிய மென்னும் நான்குபதவின்பங்களையுந்தருதல் போலஇத்திருப்போரூர் தன்னைத் தெரிந்தடைந்த அன்பர்களுக்கு அந்நான்குபத வின்பம்

கனியுந்தருதலால் சிறந்திங்கரோ கயிலாயம் தெளிந்தவர்க்கென்றார். சூரியன்தேரை நடத்தும்பாகனாகிய அருணன்கைமேல்கொடிகள்தாக்குதலை முருகக்கடவுள் கைவேலொளிக்கு உன்கையிலேந்திய முட்கோலொப்பாகுமா சொல்லாய் நில்லாயென்று சொல்லுதலையொக்குமெனக் கவியத்திய வசயித்துக் கூறுதலால் இதுவுந்தற்குறிப்பேற்றவுவமையணி. (சஎ)

மனப்பரிசோரவிறுமாந்துநாவிமதம்பொழியுந்
தனக்களிற்றன்னமுருகாகுகாவென்றுதானுரைப்பப்
புனக்கிளிகற்கின்றபோரூரிறையைப்புகழ்ந்தவரைச்
சினக்கனல்காமக்கனலும்விட்டோடுந்திசைப்புறனே.

(ப - ரை.) மனம்பரிசோர இறுமாந்து-ஆடவரதுமனமாகிய குதிரை சோரச்செருக்கி, நாவிமதம் பொழியும் தனம்களிற்றின் அன்னம் - மிருகமதமாகியமதத்தைச் சிந்தும் தனமாகிய யானையையுடைய அன்னம் போன்ற தினைப்புனங்காக்கும் குறப்பெண்கள், முருகாகுகா என்றதான்உரைப்ப புனம்கிளிகற்கின்ற போரூர் இறையைபுகழ்ந்தவரை-முருகனே குகனேயென்றுகூற அத்தினைப்புனத்துவசிக்குங்கிளிகளுங்கற்றுக்கூறும் திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளைப் புகழ்ந்து துதித்தவர்களை, சினம்கனலும் காமக்கனலும் திசைப்புறன்விட்டு ஓடும்-கோபக்கனலும் காமக்கனலும் அவர்களைவிட்டு எட்டுத்திக்குகளுக்குஅப்பாலும்ஓடும்.

(பொ - ரை.) ஆடவர்கள் மனமாகிய குதிரைசோரச்செருக்கி மிருகமதாகிய மதத்தைச்சிந்துந்தனமாகிய யானையையுடைய அன்னம்போன்ற தினைப்புனங்காக்கும் குறப்பெண்கள் முருகனே குகனே யென்று கூற அத்தினைப் புனத்தில் வசிக்குங் கிளிகள் அதனைக்கேட்டுக் கற்கும் திருப்போரூரிலெழுந்தருளியஇறைவனை,முருகனேகுகனேயென்றுபுகழ்ந்தவர்களைக்கோபக்கனலும் காமக்கனலும் அவர்களை விட்டுத் திசைக்கு அப்பாலோடும்.

முருகன் இளமையுடையான் என்னும் பொருள்மேலும், குகன் அடியவரிதயமென்னும் குகையில் வசிப்பவனென்னும் பொருள்மேலும் நிற்றலால் இளமைப்பருவத்தில் தேவர்களிடத்துப் பெருங்கருணையாளனென்பதன்மேல்நின்றன.முருகாவென்றவர்க்குச்சினக்கனலோடுதலும்,ஞானவடிவினனாயிருத்தலால்குகனென்பவர்க்குக்காமக்கனல் ஓடுதலுமுண்மையாதலால் புகழ்ந்தவரைச்சினக்கனல் காமக்கனலும் விட்டோடும் திசைப்புறனென்றார். சினக்கனலென்பதனிறுதியினின்றஎண்ணும்மைதொக்கதல்.மனப்பரிசோரவிறுமாந்து நாவிமதம்பொழியும் தனக்களிற் [illegible] றது சொன்முரணணி.நாவிமிருகமதமாதலால்முலையாகிய யானைக்குஅத[illegible]மென்றார். (சஅ)

மதிகொண்டபூச்சக்கிரவாளக்குடையின்வருநிழற்கீழ்த்
துதிகொண்டயானைபிடர்மேல் வருமச்சுகந்தனிலு

நதிகொண்டபேரன்பினற்போரிவேலனைநண்ணியின்பக்
கதிகொண்டமேலவர்காறலைதாங்கல்கனசுகமே.

(ப - ரை) மதிகொண்ட பூசக்கிரவாளக்குடையின் வரு நிழல்கீழ் - சந்திரனையொத்த பூச்சக்கரவாளக்குடை நிழலின்கீழ், துதிகொண்ட யானை பிடர் மேல்வரும் அச்சுகந்தனிலும், துதியமைந்த யானையின் பிடரின்மேல்வரும்அந்தச் சுகத்தைப் பார்க்கிலும், நதிகொண்டபேர்அன்பினல்போரிவேலனை நண்ணி-நதிபோலவுவட்டெடுக்கும் மூறுகிய அன்பினல் திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளை யடைந்து, இன்பம்கதிகொண்ட மேலவர் கால்-பேரின்பம் வாய்ந்த சிவஞானிகளது திருவடியை, தலைதாங்கல் கனசுகம்-தலைமேல் சுமக்குதல் பேரின்பசுகமாம்.

(போ - ரை.) சந்திரனை யொத்த பூச்சக்கிரவாள குரியின்நிழலின்கீழ் அரசயானையின் பிடரின் மேல்வரும் அரச சுகத்தைப்பார்க்கிலும், திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளைத் தலையன்பால் அடைந்த சிவன்முத்த நிலையிலிருக்குஞ் சிவஞானிகளுடைய திருவடியைத் தலையில்சூடிவாழுதல் மேலான பரமசுகமாம்.

அரசச் செல்வம் பகைவரால் பீடிக்கப்படுதலால் சிவஞானிகளது திருவடிக்கு வழிபட்டு நடத்தல் பரமசுகமாதலில் யானைப்பிடர் மேல்வரும் அச்சுகந்தனிலும் - மேலவர்காலைத்தாங்கல் கனசுகமேஎன்றூர். (௬௯)

அளகாபுரியன்னபட்டணத்தேசுதையால்வனைந்த
களவார்முகில்படிமாடத்தினூடுகளித்தலினும்
புளகாடவியெழுமெய்ப்போரிவேலனைப்போற்றியுய்வார்
வளவார்புறந்திண்ணைவைகுதலேதமின்மாசுகமே.

(ப - ரை.) அளகாபுரி அன்னபட்டணத்தே - குபேரனது அளகாபுரியையொத்தபட்டணத்தில், சுதையால்வனைந்தகளவார்முகில்படிமாடத்தினூடு - சுண்ணச்சாந்தால் தீட்டிய களாக்கனியை யொத்த மேகத்தையொத்த உபரிகைஇடத்திருந்து, களித்தலினும்-களித்திருந்துமகிழ்தலைப்பார்க்கிலும், மெய்புளகஅடவி எழ-உடம்பில் உரோமாஞ்சம்எழ, போரிவேலனை போற்றி உய்வார்-திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளைவாழ்த்தியுய்யும் அன்பர்கள், வளம்ஆர் புறம்திண்ணைவைகுதலே தம்மில்மாசுகம் - வளம் நிறைந்த வீட்டின்புறந்திண்ணையில்வசித்துவாழும் வாழ்வு தம்முள்ளேபெரியசுகமாம்.

(போ - ரை.) அளகாபுரியையொத்தபட்டணத்தில் சுண்ணச்சாந்தால் தீற்றிய மேகம்படிந்துவாழும் உபரிகையிலிருந்து வாழும்வாழ்க்கையைப்பார்க்கிலும்உடல்புளகரும்ப முருகக்கடவுளை வாழ்த்தி உய்யும் அன்பர்கள் அயலவர் புறந்திண்ணையில் தங்கிவாழ்தலே தம்முள்பெரிய சுகமாம்.

பெருஞ்செல்வமுடைய பட்டணத்தில் உபரிகையிற் செல்வத்தால் களித்து வாழ்வார்க்குத்துன்ப மணித்தாதலால், திருப்போரூரில் வாழும் முருகக்

கடவுளை வாழ்த்தி ஐப மேற்றுண்டு புறந்திண்ணையில் வாழுந்துறவறத்திற்குத் துன்பஞ் செய்த்தாதலால் மாடத்தினூடு களித்தலினும் புறந்திண்ணை வைகுதலேதமின்மாசுகமே என்றார். (ருo)

உள்ளக்கவலையெலாமொழிந்தேனொழியாதுசெய்யுங்
கள்ளக்கருமங்கள்யாவும்விண்டேன்கலைவாணியுடன்
வள்ளக்கமலமலர்மாதுதந்தருள்வாழ்வடைந்தேன்
றெள்ளத்தெளிந்தனன்போரூர்முருகனைச்சேவைசெய்தே.

(ப - ரை.) தெள்ள தெளிந்தனன் - அருள்செய்யுங்கடவுள் யாரெனமிகவுந்தெளிந்து, போரூர் முருகனை சேவை செய்த்- திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளைச்சேவித்து, உள்ளம் கவலை எல்லாம் ஒழிந்தேன்- மனக்கவலைஎல்லாம்பற்றறவிட்டேன், ஒழியாது செய்யும் கள்ளம்கருமங்கள் யாவும் விண்டேன் - இடைவிடாது யான் செய்யும் வஞ்சமுற்றும் நீங்கினேன், கலைவாணியுடன் வள்ளம்கமலமலர்மாது தந்தருள்வாழ்வு அடைந்தேன் கலைமகளோடு - கிண்ணம்போல வாய்மலரும் தாமரைமலரில் வசிக்கும்திருமகளுந் தருங் கல்விச்செல்வமும் பொருட்செல்வமுமாகியவாழ்வினையடைந்தேன். (இனியெனக்குயாதுகுறை யுளது.)

(போ -ரை.) மிகவுந் தெளிந்து திருப்போரூர் முருகக்கடவுளைச்சேவித்து மனக்கவலைஎல்லாம் ஒழிந்தனன், யான் இடைவிடாது செய்யுந்தீக்கருமங்களை எல்லாம் நீங்கினேன். கலைமகளோடு திருமகளுந் தந்தருளுங்கல்விச்செல்வமும் பொருட்செல்வமுமாகிய வாழ்வினையடைந்தேன், இனி எனக்குயாது குறையுளது-

ஆன்மாக்களுக்கு இம்மையின்பத்தையும் மறுமையின்பத்தையும் கரதலாமலகம்போல அருள்வோர் எக்கடவுளரென ஆகமவளவையாலும் காக்ஷியளவையாலும் ஆராய்ந்து முருகக்கடவுளே யருள்வோன் எனத்தெளிந்தனராதலால்தெள்ளத்தெளிந்தனன் எனவும், கல்விப்பொருள்சிவஞானம்பெருகுதற்கும் செல்வப்பொருள்சிவபுண்ணியம்பெருகுதற்குங்கருவிகளாதலால்அவற்றினிறுதியில் வைத்துக்கலைவாணியுடன் வள்ளக்கமலமலர்மாதுதந்தருள் வாழ்வடைந்தனெனவுங்கூறினர். தெளிந்தனன் முற்றெச்சம். (ருக)

பூதரவிற்கொண்டவுணரைமாய்த்தபுராரிமைந்த
னாதரவாலணிப்போரூரிருந்திங்கவனருளாற்
சீதரனன்மருகாமுருகாவென்றுசெப்பினன்பின்
ஞூதரம்போலுறுந்தீவினையாவுந்தணந்தனவே.

(ப -ரை.) பூதரம்வில் கொண்டு - மேருவை வில்லாகக்கொண்டு, அவுணரைமாய்த்த புராரிமைந்தன் - திரிபுரங்களில் வசிக்கும் அசுரர்களைப்புன்னகையாலெரித்தருளிய இறைவனது புத்திரனாகிய முருகக்கடவுளது திருவடிக்கீழ்வைத்த, ஆதரவால் அணிபோரூர் இருந்து- அன்பாலழகிய திருப்போ

ரூரில் வசித்து, அங்கு அவன் அருளால்-அத்திருநகரில் அவ்விறைவனது திருவருளால், சீதரன் நல்மருகா முருகா என்று செப்பினன் - திருமாலினது நல்லமருகனே முருகனே என்று துதித்தேன், பின்-பின்னர், தாது அரம்போல உறுந்தீவினை யாவும் தணந்தனன் - இரும்பினைமாய்க்கும் அரம்போல என்னை மாய்க்குந்தீவினைகளெல்லாம் நீங்கின.

(பொ-ரை.) மேருவை வில்லாகக்கொண்டு திரிபுரங்களிலுள்ள அசுரர்களை மாய்த்த இறைவன் புத்திரனாகிய முருகக்கடவுள் திருவடிக்கீழ்வைத்த அன்பால் அழகிய திருப்போரூரில்வசித்து அவரது திருவருளால் திருமால்மருகனே முருகனே யென்று வாழ்த்தினன், அதன்பின் பிறவிக்கேதுவாகிய தீயகருமங்கள் யாவும் என்னினின்றும் நீங்கின.

அன்பின் முதிர்ச்சியால் திருவருள் வாய்த்தலும், அவனது திருவருளால் அவனைவணங்குதலும், அதனாற்பிறவி மாய்தலும் உளவாதலில் காரணமாலையணி. (௫உ)

வட்டாடல்போலப்பிறப்பதுஞ்சாவதுமாக்கியென்றும்
ஒட்டாரஞ்செய்கின்றமாயையுணர்ந்துமுணரவொட்டா
தட்டாவதானஞ்செயுஞ்சீவரைப்பொய்மையாயிருத்து
கட்டாணியானமுத்தேசமராபுரிக்காங்கெயனே.

(ப - ரை.) வட்டு ஆடல்போல - சூதாடுகருவி புரள்வதைப்போல, பிறப்பதும் சாவதும் ஆக்கி - பிறப்பு மிறப்புமாகிய இவைகளை விளைத்து என்றும் ஒட்டாரம் செய்கின்றமாயை-எக்காலத்தும் இந்தஒட்டாரத்தையே செய்து வருகின்ற மாயையை, உணர்ந்தும்-இத்தன்மைத் தென்றுணர்ந்தும் உணர ஒட்டாது-அதனையறிந்துய்யஒட்டாமல், அட்டாவதானம்செய்யும்சீவரை-விடய சுகங்களைப்பற்றியும்விட்டுமயங்குஞ்சீவர்களை,பொய்மைஆய் இருத்தும் - அப்பொய்ந்நிலையிலே நிலைபெறுத்தும், கட்டாணி ஆனமுத்தே - ஒரு கருவியாலும் பேதித்தற்கிய லாதமுத்தமே, சமராபுரி காங்கெயனே -சமராபுரி லெழுந்தருளிய முருகக்கடவுளே (அடியேனுக்கருளாய்.)

(பொ - ரை.) சூதாடு கருவிபுரளுதலைப்போல மாறிமாறிவரும் பிறப்பிறப்புகளைச் சீவர்களுக்கு விளைவித்து எக்காலத்தும் மயக்குமாயை யினியல்பினையுணர்ந்தும் அம்மாயையினின்றுநீங்காமல்ஒவ்வொரு விடயங்களைப்பற்றியும் பற்றுதும் சுழன்று வருஞ்சீவர்களை, அப்பொய்ந்நிலையிலே நிலைபெறச்செய்து அம்மாயை தனக்குச் சிறிது மணுகுதலில் லாதமுத்தமே சமரபுரியில் வாழு முருகக்கடவுளே யெனக்கருளாய்.

பிறப்பிறப்புகள் உயிர்களுக்கு மாறிமாறியிடைவிடாது வருதலால் வட்டாடல்போல வெனவும், இவற்றை யெக்காலத்தும் அவ்வுயிர்களுக்கு விளைவித்து மயக்குதலேயியல்பாகவுடைமையால் என்றும் ஒட்டாரஞ்செய்கின்ற மாயையெனவும் அம்மாயைமயக்குந்திரோதாயியெனவுமுணர்ந்தும்அம்மாயை

யைக்கடக்கமுயலாமல் அம்மயக்கிலே சீவர்கள் மூழ்குதலால்; உணரவொட்டா-தட்டாவதானஞ் செயுஞ்சீவரையெனவும், அச்சீவர்களுக்குப் பரிபக்குவம் வாய்ப்ப அப்பொய்ந்நிலையே மெய்ந்நிலையாக மருளச் செய்தலால் பெர்ய்மையாயிருத்து மெனவும், சீவர்களை யிவ்வாறு மாயையில் மயக்குதலின் அம்மயக்குச்சிறிதுந் தனக்கில்லாமையால் கட்டாணியான முத்தே யெனவுங்கூறினூர்.

எனக்கருளாய் என்னும் பயனிலை தொக்குநின்றது. (ருரு)

ஆள்வேட்டமாடுமயில்விழிமாதரமைகடந்த
தோள்வேட்டபுன்னெஞ்சமேயதுசீவரைச்சூழ்ந்துகொண்டே
வேள்வேட்டமாடுவதாங்கேகல்போரிவிசாகனிரு
தாள்வேட்டுநாடுதிமேல்வீட்டினின்பந்தழைத்துறுமே.

(ப - ரை) ஆள்வேட்டம் ஆடும் - புருடராகிய மிருகங்களை வேட்டையாடும், அயில் விழி மாதர் - வேல்போலுங்கண்களையுடையபெண்களது, அமை கடந்த தோள் வேட்ட புல் நெஞ்சமே - மூங்கிலை யொத்ததோளைவிரும்பிய புல்லிய நெஞ்சமே, அதுசீவரை சூழ்ந்துகொண்டு - அவ்விருப்பம் ஓர்வலையாகச் சீவர்களைச்சூழ்ந்து கொள்ளுதலால், வேள்வேட்டம் ஆடுவது - மன்மதன் வேட்டஞ்செய்வதற் கோர் இடமாயுள்ளது, ஆங்கு எகல் - அம்மயக்கவலையிற் செல்லாதே, போரிவிசாகன் இருதாள்வேட்டு நாடுதி - திருப்போரூரி லெழுந்தருளிய முருகக்கடவுளுடைய இரண்டு திருவடிகளையும் விரும்பி நாடுவாய், மேல்வீட்டின் இன்பம் தழைத்துறும் - அதன்மேல் மோட்சவீட்டின்பம் வந்து தலைப்படும்.

(போ - ரை) புருடர்களாகிய மிருகங்களை வேட்டையாடும் வேல்போலுங்கூரிய கண்களையுடைய பெண்களது மூங்கிலை யொத்ததோளை விரும்பிய மனமே அம்மயல் ஓர்வலையாகச் சீவரைச்சூழ்ந்து கொள்ளுதலால், மன்மதன் வேட்டையாடு மிடமாம் ஆதலால், அம்மயலிற் செல்லாதே திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளது இரண்டு திருவடிகளையும் விரும்பி நாடுவாய் அதன்மேல் மோட்ச இன்பம் தலைப்படும்.

பெண்களின்பத்தை மெய்யெனக்கருதி மனமுழலுதலால் புன்னெஞ்சமே யெனவும், அப்பெண்கள் கண்கள் ஆள்களைக் கொல்லுதலால ஆள்வேட்டம் ஆடும் அயில்விழிஎனவும்; அப்பெண்களின்மேல் மயக்கங் கொள்ளுதல் சீவர்களுக்கு ஓர்வலையாதலால் அது சீவரைச் சூழ்ந்துகொண்டே யெனவும், அம்மயல் மன்மதனுகியவேடன் வேட்டையாடுவதற்கு ஓரிட மாதலால் வேள்வேட்டமாடுவதெனவும், அவ்வலையிற் சிக்கில் கேடுவருமாதலால் ஆங்கேகலெனவும், முருகக்கடவுளுடைய இரண்டு திருவடிகளையும் விரும்பிநாடுவாயானல் அவ்விருப்பம் மோட்சவின்பத்தைக் கூட்டுமாதலால் போரிவிசாகனிருதாள் வேட்டுநாடுதி மேல் வீட்டினின்பந்தழைத்துறுமே - எனவுங்கூறினூர். (ருச)

ஆறுசமயருந்தம்மிலொவ்வாதங்கலைவதென்னே
தேறுமறிவினரெல்லாமறிந்துந்தெளிந்திலரே

பேறுதருந்தெய்வம்யாவைக்கும்யான்பெருந்தேவனென்றே
வீறுமுகங்கொண்டு போரூர் முருகன் விளக்கியதே.

(இ-ள்.) தேறும் அறிவினர் எல்லாம் அறிந்தும் - பலகலையில் தெளிந்த அறிவினர் யாவையும் உணர்ந்திருந்தும், ஆறுசமயரும்-முத்திறப்பட்டு அறுவகைப்பட்ட புறச்சமயத்தரும், தம்மில் ஒவ்வாது - தம்முள் மாறுபட்டு, பேறு தரும் தெய்வம் யாவைக்கும் - தம்மைக்கருதினவர்க்குப் பயன்றரும் கடவுளர் யாவருக்கும், யான் பெரும் தேவன் என்றே - யான் முதற் கடவுளாயுள்ளவனென்றே, வீறு முகம் கொண்டு - ஆறுவகைப்பட்ட திருமுகங்களைக்கொண்டு, போரூர் முருகன் விளக்கியது - திருப்போரூரி லெழுந்தருளிய முருகக்கடவுள் விளக்கியதை, தெளிந்திலர்-தெளியாதவராய், இங்கு அலைவது என் - கடவுளர் யாரென்று இங்குவருந்தித் திரிவது யாது.

(போ-ள்) பலநூலினுஞ்சென்ற அறிவினராகிய அறுவகைப்பட்ட புறச்சமயத்தவர்களும் எல்லாமறிந்திருந்தும் தம்முள்மாறுபட்டு, அச்சமயங்கள்தோறும் பயன்றரும் கடவுளர் யாவருள்ளும் யான் முதற்கடவுளே யென்று தனது திருமுகங்களால் விளக்கியதைத் தெரியாதவர்களாய் இந்நிலவுலகில் வருந்தித் திரிவது யாது.

முத்திறப்பட்டு அறுவகைப்பட்ட புறச்சமயங்களாவன. பாடாணவாதம், சமவாதம், சங்கிராந்தவாதம், ஈஸ்வர அவிகாரவாதம், பரிணாமவாதம், சிவாத்துவிதம் என்னும் அகப்புறச்சமயமும், தருக்கம், மீமாஞ்சை, ஏகான்மவாதம், சாங்கியம், யோகம், பாஞ்சரரத்திரம் என்னும் புறச்சமயமும், உலோகாயதம், சௌந்திராந்திகம், யோகாசாரம், மாத்மீகம், வைபாடிகம், ஆருகதம் என்னும் புறப்புறச்சமயங்களுமாம். புறச்சமயங்கள் ஒவ்வொன்றும் அறுவகைப்படுதலால் ஆறுசமயரும் எனவும், அச்சமயங்களிலுள்ளோர் பலநூல்களிற்சென்று தெளிந்தும் பதிபசுபாச விலக்கணங்களில் தம்முள் மாறுபட்டிருத்தலால் தேறுமறி வினரெல்லாமறிந்தும் தம்மிலொவ்வாதெனவும், ஒன்றுக்கு மேற்பட்டது பலவாதலால் வீறுமுகங்கொண்டெனவும், அவ்வச்சமயங்களில் பயன்றரும் கடவுளர் யாவருள்ளும் நான்முதற்கடவுளென்றே ஆன்மாக்களுக்குக் கண்கூடாக விளக்குதற் பொருட்டுத் திருப்போரூர் முருகன் ஆறுமுகங்கொண்டமையால் தெய்வம்யாவைக்கும் யான்பெருந்தேவனென்றே வீறுமுகங்கொண்டு போரூர்முருகன் விளக்கியதே எனவும், அவ்வாறு விளக்கியதைப் பலநூல்களிற்சென்ற அறிவினர்களாயிருந்தும் தெரிந்துய்யாமையால் இங்கலைவதென்னே எனவுங் கூறினர். யாவைக்கும் என்றதில் எழனுருபு நிற்குமிடத்து நான்கனுருபு நின்றது உருபுமயக்கம். (ருகு)

முற்றவர்நிற்கமெய்ஞ்ஞானிகள்வம்மின்வகுத்துரைக்கே
னுற்றதுகேண்மினெம்போரூர்முருகனுயர்கதியை
நற்றமிழ்க்காழிவந்தெண்ணிலிபேர்க்குநயந்தளித்தான்
கொற்றமவனதலாலெவர்க்குண்டினிக்கூறுமினே.

(இ - ள்.) அவர் நிற்க - அப்புறச்சமயிகள் நிற்க, மெய்ஞ்ஞானிகள் வம்மின் - மெய்ஞ்ஞானிகளே இங்குவாருங்கள், வகுத்து உரைக்கேன்-உங்களுக்கொன்று வகுத்துக்கூறுகின்றேன், உற்றது கேண்மின் - நடந்தசெய்தியைக் கேளுங்கள், எம் போரூர் முருகன்-எமது போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுள், நல் தமிழ் காழிவந்து - நல்ல தமிழ்வழங்கும் சீகாழியில் திருவவதாரஞ் செய்து, எண்ணிலிபேர்க்கு - அளவிறந்த தொண்டர்க்கு,உயர்கதியை நயந்து அளித்தான் - இம்மையில் உயர்ந்த முத்திநிலையை விரும்பித் தந்தனன், கொற்றம் அவனது அல்லாமல் - வெற்றி அவனுடையதல்லாமல், எவர்க்கு உண்டு - யாருக்குண்டு, இனி கூறுமின் - இனியாவது நீங்கள் கூறுங்கள்.

(போ - ரை.) புறச்சமயிகள் நிற்க மெய்ஞ்ஞானிகளே வாருங்கள் உங்களுக்கொன்று வகுத்துக் கூறுகின்றேன், நடந்த செய்தியைக் கேளுங்கள், எமது திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுள் தமிழ்வழங்குஞ் சீகாழியிலவதரித்துஅளவிறந்த தொண்டர்களுக்கு இம்மையிற் கண்கூடாக வுயர்ந்த முத்திநிலையைத் தந்தருளினன்,ஆதலால் வெற்றி அவனுடையதேயன்றி யாருக்குண்டு, இனியாவது எடுத்துக்கூறுங்கள்.

பொய்ஞ்ஞானிகள் முத்திவிருப்பிலராதலால் மெய்ஞ்ஞானிகள் வம்மினெனவும், மறுமையில் முத்தியருளுதல் ஆகமவளவையேயன்றிக் கண்கூடல்லாமையால் அங்குப்பரகதியருள்வோன், தானென்பது ஆன்மாக்களுக்குக்கண்கூடாகவிளக்குதற்பொருட்டுச்சீகாழியில் மறையவர்குலத்தில் ஆளுடைய பிள்ளையாராக வெழுந்தருளிஅளவிறந்தொண்டர்களுக்கு இம்மையில்முத்தியைத் தந்தருளினமையால் உயர்கதியை நற்றமிழ்க்காழிவந்தெண்ணிலிபேர்க்கு நயந்தளித்தான் எனவுங்கூறினர். ஆளுடைய பிள்ளையார் திருக்கலியாணத்தில் அடியவர்க்கு முத்தி தந்தருளிய வரலாற்றை முன்னர்க் காண்க. (ருசு)

கரும்பாற்செய்வேலிசுரும்பார்க்கும்போரியங்காங்கெயன்போற்
றிரும்பாச்சுகந்தருவீடீவதற்குஞ்சிறப்புடனே
பெரும்பாற்றிருத்தருபெற்றிக்குந்தேவர்பிறரிலையென்
றிரும்பாற்கடற்றுயின்றோனெய்யினூடுகையிட்டனனே.

(இ - ள்.) கரும்பால்செய்வேலி-கரும்பினாற் கோலியவேலியில், சுரும்பு ஆர்க்கும் போரியன் காங்கெயன்போல் - வண்டுகள் ஒலிக்கும் திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளைப்போல, திரும்பாத சுகம்தரும் வீடு ஈவதற்கும் - அடியவர்க்கு பிறப்பிறப்புகளில் மீட்டும் அடையாத பேரின்பசுகத்தைத் தரும் முத்திநிலையை மறுமையில்தந்தருளுவதற்கும், சிறப்புடனே பெரும்பால் திருதரு பெற்றிக்கும் - சிறப்போடு பெரும்பாலும் இம்மையில் செல்வத்தைத் தரும் தன்மைக்கும், தேவர் பிறர் இல்லை என்று - கடவுளர் வேறில்லையென்று, இரும் பால் கடல் துயின்றோன் - பெரியபாற்கடலில் பள்ளிகொண்டிருக்குந் திருமால், நெய்யின் ஊடு கையிட்டனன் - நெய்யிற்கை தோய்த்தான்.

(போ - ரை.) கரும்பாற் கோலியவேலியில் வண்டுகள் ஒலிக்கும் திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளைப்போல மறுமையில் முத்திதருதற்கும்

இம்மையில் பெரும்பாலும் போகநுகர்தற்குச்செல்வந்தருதற்கும் கடவுளாவான் இவனையன்றி வேறில்லையென்று திருமால் நெய்யிற்கை தோய்த்தான்.

நெய்யிற் கைதோய்த்தல் சத்தியமாதலால் நெய்யினூடு கையிட்டனனென்றார். கண்ணனவதாரத்தில் உண்ணுதற்பொருட்டு நெய்யிற் கைதோய்த்தமையை இங்குக்கூறினார். (௫௭)

வேதனெங்கேயவன்றாதையெங்கேவிண்ணினண்ணுபுரு
கூதனெங்கேமிகுதேவரெங்கேகுறையாததவப்
போதரெங்கேயறமாதியெங்கேதிருப்போரியில்வாழ்
நாதனெங்கோனவரைப்போலச்சூரையுநாடிடிலே.

(இ - ள்.) திருப்போரியில் வாழ்நாதன் - திருப்போரூரில் எழுந்தருளிய யாவர்க்குந் தலைவனாகிய எமதிறைவன், அவரைப்போல சூரையும் நாடிடில் - பிரமன் முதலியோரைப்போலச் சூர பன்மன் முதலியோரைக் கண்டஞ்சில், வேதன் எங்கே - பிரமனெங்கே, அவன் தாதை எங்கே - அவனுடைய தந்தையாகிய திருமாலெங்கே, விண்ணில் நண்ணு புருகூதன் எங்கே - பொன்னுலகில் அரசியல்செய்து வசிக்கும் இந்திரனெங்கே, மிகுதேவர் எங்கே - பல்கிய தேவர் எங்கே, - குறையாத தவம் போதர் எங்கே - நிரம்பிய தவத்தையுடைய முனிவர்களெங்கே, அறம் ஆதி எங்கே-தருமமுதலிய நான்கு பொருள்களும் எங்கே உய்யும்.

(போ - ரை.) திருப்போரூரிலெழுந்தருளிய எமதிறைவனாகிய முருகக் கடவுள் பிரமன் முதலியோரைப்போலச் சூரபன்மன்முதலியோரைக் கண்டஞ்சில் பிரமன்எங்கேயுய்வன் திருமால் எங்கேயுய்வன் இந்திரன் எங்கேயுய்வன் தேவரெங்கே யுய்வர் தவத்தையுடைய முனிவர்களெங்கே யுய்வர் தர்மார்த்த காம மோட்சமென்னும் நான்கு பொருளுமெங்கே யுய்யும் (யாவரும் பாழாவரென்றபடி).

பிரமன்முதலியோர் சூரபன்மனுக்குப் புறங்காட்டியஞ்சி யொழுகியது போல முருகக்கடவுளுமிருக்கில் அவர்கள்யாவரும் இடர்ப்பட்டே மாய்வரெனப் போதரலால் இது குறிப்பணி. (௫௮)

திருநீலகண்டம்வெந்தீவினைதீண்டப்பெறாவெனவே
கருநீலகண்டனைப்பாடியடியரைக்காத்தவனெம்
முருமேலிருந்தபிணியையுமாற்றுவனுண்மைநெஞ்சே
யிருநீலவாவிநம்போரூரனைப்பணிந்தேத்துவையே.

(இ - ள்.) திருநீலகண்டம் வெம் தீவினை தீண்ட பெறா என - திருநீலகண்டம் கொடிய தீவினை தீண்டப்பெறா என்னுந் திருபதிகத்தை, கருநீலகண்டனை பாடி - ஸ்ரீகண்டத்தையுடைய சிவபெருமானைப் பிள்ளையாரவதாரத்தில் பாடி, அடியரை காத்தவன் - தன்னடியவரைத் திருச்செங்குன்றூரிற் காத்தவன், எம் உரு மேல் இருந்த பிணியையும் மாற்றுவன்-எமது சரீரத்தின்மேலிருந்த பிணியையும் போக்குவன், நெஞ்சே உண்மை - மனமே இது சத்தியம்

இரு நீல வாவி - பெரியகுவளைமலர் மலரும் தடாகஞ்சூழ்ந்த, நம் போரூரனை பணிந்து ஏத்துவை - நமது திருப்போரூரி லெழுந்தருளிய முருகக்கடவுளை வணங்கித் துதிப்பாய்.

(போ - ரை.) திருநீலகண்டம் கொடியதீவினை தீண்டப் பெருவெனச் சிகண்டத்தையுடைய இறைவன்மேல் பிள்ளையார் திருவவதாரத்தில் பாடிய டிவரைக்காத்த இறைவன் எமதுசரீரத்திலிருந்தநோயையுந்தீர்ப்பான் இது மனமே சத்தியம். குவளை மலர்மலரும் தடாகஞ்சூழ்ந்த திருப்போரூரி லெழுந்தருளிய முருகக்கடவுளை வணங்கித் துதிப்பாய்.

ஆளுடையபிள்ளையார் அடியவர் திருக்கூட்டத்தோடு திருக்கொடிமாடச் செங்குன்றூர், திருநணுப்பள்ளி முதலிய திருப்பதிகளிற் சென்று திருப்பதிகமோதி மீளவும் அத்திருக்கொடிமாடச் செங்குன்றூரில் அடியவர் திருக்கூட்டத்தோடு இருக்குங்காலையில் குளிர்காலம்வர, அக்காலையில் அங்குள்ளவர்க்கு வருடந்தோறுங் காணும் நளிர்சுரம் தமதுஅடியவர் திருக்கூட்டத்துக்கும்வந்தணுக. அதுகண்டு "அவ்வினைக் கிவ்வினை" என்னுந் திருப்பதிகம் எடுத்தோதியவளவில் அடியரைவிட்டு நீங்கியதன்றி அங்குள்ளவர்க்கும் அந்நாள்தொட்டு இந்நாள்காறும் வாராதொழிந்தது என்பது புராணவரலாறுதலால் கருநீலகண்டனைப்பாடியடியரைக் காத்தவன் எனவும், அவனை நீயின்று திருப்போரூரிற்கண்டு மனமே வணங்குவையாயின் நமது தேகத்திலெழுந்த சுரத்தையுமாற்றுவன் நெஞ்சே பிணியையுமாற்றுவன் ஆதலால் போரூரானைப்பணிந்தேத்துவை எனவும், தன்னைப்போலமனமும் உடலோடொற்றுமை யுண்மையால் தன்னோடுளப்படுத்தி எம்முருஎனவுங் கூறினார்.

திருநீலகண்டம் வெந்தீவினை தீண்டப்பெறு என்றதை.

"அவ்வினைக்கிவ்வினையாமென்றுசொல்லுமதுவறிவீ
ருய்வினைநாடா திருப்பதுமுந்தமக்கூனமன்றே
கைவினைசெய்தெம்பிரான்கழல்போற்றுதுநாமடியோஞ்
செய்வினைவந்தெமைத்தீண்டப்பெறுதிருநீலகண்டம்."

எனவருந் திருப்பாசுரத்தாலறிக. (ருக)

அஞ்ஞானத்தாலடியேன்பிழைசெய்யினுமரரருள்சேர்
மெய்ஞ்ஞானத்தாய்பொறுத்தாட்கொள்ளவேண்டும்வியன்மறைதேர்
செஞ்ஞானத்தார்புகழ்போரூர்முருகசெகமுயிராம்
பொய்ஞ்ஞானக்கூட்டத்துக்குட்புறனாகியபூரணனே.

(இ - ள்.) வியன் மறைதேர் - அளவிறந்த வேதங்களை யுணர்ந்த, செம் ஞானத்தார்புகழ் - செவ்விய சிவஞானச் செல்வர்கள் புகழும், போரூர்முருக - திருப்போரூரி லெழுந்தருளிய முருகனே, சகம் உயிர்ஆம் பொய் ஞானக்கூட்டத்துக்கு உள் புறன் ஆகிய பூரணனே-சகசீவர்களாகிய பொய்ஞ்ஞானக்கூட்டத்தின் உள்ளும்புறம்புமாய்நிறைந்தவனே, அஞ்ஞானத்தால் அடியேன்பிழை செய்யினும்-அஞ்ஞானத்தால் அடியேன் தேவரீருக்குத் தவறுசெய்யினும், ஆர் அருள்சேர் மெய்ஞ்ஞானத்தால் - ஆன்மாக்களிடத்து நிறைந்த கருணையை

யுடைய மெய்ஞ்ஞானத்தையுடையாய், பொறுத்து ஆட்கொள்ளவேண்டும் - அதனைப்பொறுத்து ஆட்கொள்ளவேண்டும்.

(பொ - ரை.) வேதங்களை யுணர்ந்த சிவஞானிகள் புகழுந் திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளே சகசீவர்களாகிய பொய்ஞ்ஞானக்கூட்டத்திற்கு உள்ளும் புறம்புமாய் விளங்கும் பரிபூரணமே, அடியேன் அஞ்ஞானத்தினால் தேவரீர் திருவடிக்குப் பிழைசெய்யினும் ஆன்மாக்களிடத்து நிறைந்த கருணையையுடைய மெய்ஞ்ஞானத்தை யுடையோய்நீயாதலால் அதனைப்பொறுத்து என்னை யடிமை கொள்ளாய்.

செகமும் உயிரும் பொய்மையாதலால் செகமுமுயிராம் பொய்ஞ்ஞானக் கூட்டமெனவும், இருவினைக்கீடாக உயிர்களுக்குச் சுகதுக்கங்களை யூட்டுதலால் உள்ளெனவும், தோன்றியழியுஞ் செகத்துக்கு அப்பாற்பட்டவனாதலால் புறனாகிய எனவும், உள்ளும் புறம்புமாய் எங்கும் நிறைந்திருத்தலின் பூரணனே எனவும், பேரருளுடையனாதலால் ஆரருள் சேர்எனவும், இயல்பாகவே பாசங்களினீங்கிநிற்பவ னாதலால் மெய்ஞ்ஞானத்தா யெனவும், பாசங்களில் தான்பற்றுடைமையால் அஞ்ஞானத்தா லெனவும், அப்பற்றுடைமையால் நின்னை மறத்தலால் அடியேன் பிழைசெய்யினுமெனவும், அப்பிழையைப் பேரருளுடையன் நீயாதலின் பொறுத்தாளுதல் உன்கடனாதலால் பொறுத்தாட் கொள்ளவேண்டுமெனவுங் கூறினர். (௯0)

புரங்கொன்றதேவெள்ளிமாமலைநீலப்புயமலைமே
லுரங்கொண்டெடுத்தவனீரைந்துசென்னியுமூடுறவே
கரங்கொண்டவாளியினாலெய்தமாயன்கனமருகா
திரங்கொண்டபோரிமுருகாவென்றீவினைதீர்த்தருளே

(இ - ள்.) புரம் கொன்ற தே - திரிபுரத்தை நகைத்தெரித்த சிவபெருமானது, வெள்ளிமாமலை-பெரியவெள்ளிமலையை, புயம் நீலமலைமேல்-புயமாகிய நீலமலையின்மேல், உரம்கொண்டு எடுத்தவன்-தனது வன்மையைக்கொண்டெடுத்த இராவணனது, ஈரைந்து சென்னியும்-பத்துத்தலையும், ஊடு உற-இடையேதைத்துருவ, கரம்கொண்ட வாளியினால் - தனதுகையாற்றொட்ட அம்பினால், எய்த மாயன் கனமருகா-எய்ததிருமாலின் மேன்மைவாய்ந்த மருகனே, திரம்கொண்ட போரிமுருகா - நிலைபெற்ற திருப்போரூரிலெழுந்தருளிய முருகனே, என் தீவினை தீர்த்தருள் - என் கொடியதீவினையை நீக்கியருளாய்.

(பொ - ரை.) திரிபுரங்களை நகைத்தெரித்த இறைவனது வெள்ளிமலையைப் புயமாகிய தனது நீலமலையின்மேல் வன்மைகொண்டு எடுத்தேந்திய இராவணனது பத்துத்தலையினும் இடையேதைத்துருவஅம்பினாலெய்த திருமாலின் மருகனே ஊழியினும் அழியாத திருப்போரூரி லெழுந்தருளிய முருகக்கடவுளே எனது தீவினைப்பயனைத் தீர்த்தருளாய்.

ஊழியிலும் அழியாததென்பார் திரங்கொண்ட போரி என்றார். வெள்ளிமலை நீலமலை சொன்முரணணியும், திரிபுரத்தை நகைத்தெரித்த இறைவனைச்

சுமக்கு மலையைத் தன்புயத்திலெடுத்தவன் தலைகளைச்சேதித்த திருமாலென ஒன்றற்கொன்றுயர்ச்சிகூறுதலால் மேன்மேலுயர்ச்சியணியும் கலந்து வருதலால் கலவையணி. (சுக)

நெஞ்சைக்கலக்குறுஞ்சேலோரிரண்டுடைநேரிழையார்
வஞ்சக்கலவிமெய்யென்றேமயங்கினைவன்னெஞ்சமே
துஞ்சற்கும்வந்துபிறத்தற்குமேததுசொற்கதிசேர்ந்
துஞ்சற்குநீதிருப்போரூர்க்குகனையுறப்பணியே.

(இ - ள்.) வல் நெஞ்சமே-வலியமனமே, நெஞ்சை கலக்குறும்-மனத்தை நிலைகலக்கும், சேல் ஓர் இரண்டுஉடை நேரிழையார் - சேற்கெண்டையையொத்த இரண்டுகெண்களையுடைய பெண்களது, வஞ்சம் கல்வி மெய் என்று மயங்கினை -வஞ்சம் வாய்ந்தபுணர்ச்சியை மெய்யென்று கருதினுய், அது-நீ கருதிய மெய், துஞ்சற்கும் வந்துபிறத்தற்கும் எது - இறத்தற்கும் உலகில்வந்துபிறத்தற்குங் காரணமாம், சொல் கதி சேர்ந்து உஞ்சற்கு - நீபுகழமைந்த முத்தியையடைந்து பிழைத்தற்கு, திருப்போரூர் குகனை உற பணி-திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளை மிகவும்பணியாய்.

(போ - ரை.) வலியமனமேகண்டோர் மனத்தைக்கலக்கும் சேற்கெண்டைபோன்ற இரண்டுகெண்களையுடைய பெண்களதுவஞ்சம் வாய்ந்தபுணர்ச்சியை மெய்யென்று கருதினுய்,அம்மெய் இறத்தற்கும் பிறத்தற்கும்காரணமாம், நீமுத்தியையடைந்து பிழைத்தற்குத் திருப்போரூரிலெழுந்தருளியகுகனைமிகவும் பணியாய். இதுதான்சத்தியம்.

என்சொல்வழி நில்லாது பொய்யை மெய்யென்று கருதினமையால் அதனை இழிவு படுத்திக் கூறுவார் நெஞ்சமே எனவும், அதனுல் வந்தபயன் இதுவென்பார் துஞ்சற்கும் வந்து பிறத்தற்கும் எது எனவும், என்சொல் வழிநிற்பாயாகில் முத்தியடைவது சத்தியமென்பார் சொற் கதிசேர்ந் துஞ்சற்கு நீ திருப்போரூர்க்குகனையுரப்பணியே எனவும் கூறினுர். சேலோரிரண்டுடைஎன உவமானச் செல்லால் கண்ணுகிய உவமேயத்தை இலக்கணையாகக் கூறுதலில் உருவக வுயர்வு நவிற்சியணி. (சுஉ)

கொலையாதிசெய்தவராயினுமன்புகுணம்பொறுமை
யிலையாமுளத்தினராயினும்போரியிசைந்துகுண
மலைபோலிருந்தவடிவேலனைவந்துவாழ்த்தினரே
ரெலையாமெய்ஞ்ஞானமடைவார்முன்மேவுந்துயரிலரே.

(இ - ள்.) கொலை ஆதி செய்தவராயினும் - கொலைத்தொழில் முதலிய கொடுந்தொழிலைச்செய்தவராயினும், அன்பு குணம் பொறுமை இலையாம் உளத்தினர் ஆயினும் - அன்பும் குணமும் பொறுமையும் இல்லாத மனத்தினராயினும், போரி இசைந்து-திருப்போரூரைத் தனக்கோர் திருப்படைவீடாகக்கொண்டு, குணமலைபோல் இருந்த வடிவேலனை-சத்துவகுணமலைபோலிருந்த வடி

த்தவேலையேந்திய முருகக்கடவுளை,வந்து வாழ்த்தினரேல்-அடைந்துவாழ்த்து வாராயில், தொலையாத மெய்ஞ்ஞானம் அடைவார்-அழியாத மெய்ஞ்ஞானத்தை யடைவார்கள், முன் மேவுந்துயர் இலர் - சஞ்சிதவினைத் துன்பமும் இலராவர்.

(போ - ரை.) கொலைமுதலிய கொடுந் தொழிலைச் செய்தாராயினும் அன்பும் பொறுமையும் குணமும் சற்றும் இல்லாத மனத்தினராயினும் திருப்போரூரென்னுந் திருப்பதியே தனக்குத் திருப்படைவீடாகக்கொண்டருளி சத்துவ வகுணவடிவாயிருந்த முருகக்கடவுளை யடைந்து வாழ்த்துவரானால் அழியாத மெய்ஞ்ஞானத்தை யடைவார்கள் அதனாற் சஞ்சித வினையு மொழிவார்.

கொலை, களவு, கள், காமம், குருத்துரோகமென்பார்சொலை யாதினெனவும், அவற்றில் ஒன்றின் வழிநிற் போர்க்கும் அன்பும் குணமும் பொறுமையும் சற்றும் இலவென்பார் அன்பு குணம் பொறுமை இலையாமுளத்தினராயினும் எனவும், மனத்தாலும் வாக்காலும் அளவறுத்தற்கரிய பெருமையினையும், அசுரர்முதலியோரால் கலங்காத நிலைமையையும்,தேவர்களுக்குள் உயர்ந்து தோன்றும் தோற்றமுமுடைய தென்பார் குணமலைபோலிருந்த வடிவேலனை எனவும், அன்னோனை வாழ்த்தில் அக்கொடுந் தொழிலொழிந்து சிவஞானம் பெறுவரென்பார் தொலையா மெய்ஞ்ஞானம் அடைவாரெனவும், அதனால் சஞ்சித வினையொழிவா ரென்பார் இனிமேவுந் துயரிலர் எனவுங் கூறினார். (௬௫)

இமையாக்கருங்கண்முலையானைமாதரையெண்ணியெண்ணிச்
சுமையாகப்பாவஞ்சுமக்குநெஞ்சேயிது துன்புகண்டாய்
சமயாதியாறுமுடையோர்க்குவீடுதரும்பெருமா
னமையாட்கொள்போரிக்குமரேசன்சேவடிநாடின்பமே.

(இ - ள்.) இமையாத கரும் கண் முலையானை மாதரை - இமைகொட்டாத கரியசூசுகத்தையுடைய முலையென்னும் யானையையுடைய பெண்களை; எண்ணி எண்ணி-நாள்தோறுங்கருதிக்கருதி,சுமையாக பாவம் சுமக்கும் நெஞ்சே-பெருஞ்சுமையாகப்பாவத்தைச்சுமந்து திரியும்மனமே,இது துன்பு-இச்செய்கை பெருந்துன்பமாம், சமயம் ஆதி ஆறும் உடையோர்க்கு-நால்வகைச்சமயங்களுள் உட்சமயமாகிய ஆறுசமயங்களையும் உடையோருக்கு, வீடுதரும்பெருமான் - முத்தி தரும் பெருமானும், நமை ஆட்கொள்போரி குமரேசன்-நம்மையாட்கொள்ளும் திருப்போரூரிலெழுந்தருளிய குமரேசனுமாகிய இறைவனது, சேவடி நாடு-செவந்த திருவடியை நாடு, இன்பம் - அது பேரின்பமாம்.

(போ - ரை.) இமைகொட்டாத கருங்கண்ணையுடைய முலையென்னும் யானையையுடைய பெண்களை நாள்தோறுங் கருதிப் பெருஞ்சுமையாகப் பாவத்தைச் சுமந்து திரியும் மனமே இச்செய்கை பெருந்துன்பமாம். உட்சமயமாறினுள்ளவர்க்கு முத்தி தரும் பெருமானும் நம்மையடிமைகொள்ளும் திருப்போரூரிலெழுந்தருளிய குமரேசனுமாகிய முருகக்கடவுளது திருவடியைத் தேடு. அது பேரின்பமாம்.

மூலையின் சூசகத்துக்குக் கண்ணென்று ஓர் பெயராதலால் கண் இமைகொட்டுவதுபோல இது இமை கொட்டாமையின் மூலையை யானையாக வுருவகஞ்செய்து இமையாக்கருங்கண் மூலையானை எனவும், முத்திறப்பட்ட புறச்சமயங்களுக்கு உட்சமயம் முதலாதலால் சமயாதி யாறுமெனவும், நீ கருதிய இன்பம் கணப்பொழுது நின்று பெருந்துன்பம் விளைத்தல் போலாது நான் கூறுவது என்றும் பேரின்பம் விளைக்குமாதலால் சேவடி நாடின்பமே எனவுங் கூறினர். உட்சமயம் ஆறுவன-சைவம், பாசுபதம், மாவிரதம், காளாமுகம், வாமம், வைரவம். எண்ணி எண்ணி இடையறாமைப்பொருளில்வந்த அடுக்குத்தொடர். (௬௪)

சடையாம்பவளக்கொடிபடர்பேரின்பசாகரத்தே
கடையாதெழுந்தசுகவாரமுதினைக்கஞ்சமொன்று
புடைதோன்றுமுந்திப்புணரிமருகனைப்புண்ணியனை
மிடைதீரப் போரியிற்கண்டேன் கதியின்பமேவினனே.

(இ - ள்.) சடை ஆம் பவளக்கொடிபடர் - சடையாகிய பவளக்கொடி படர்ந்த, பேரின்பசாகரத்து-பேரின்ப மென்னுங்கடலில், கடையாது எழுந்த சுகஆரமுதினை - கடைந்து தோன்றாமல் தோன்றிய பேரின்பசுகமாகிய பெரிய அமுது போல்பவனை, கஞ்சம் ஒன்று புடைதோன்றும் உந்தி புணரி மருகனை - தாமரையொன்று தன்னிடத்திற் றோன்றும் உந்தியை யுடைய கடலாகிய திருமால் மருகனை, புண்ணியனை - தருமவடிவாயுள்ளவனை, மிடைதீர போரியில்கண்டேன் - என்வறுமை தீரத்திருப்போரூரில் தரிசித்தேன், கதி இன்பம் மேவினன் - தரிசித்தற்குப் பயனாகமோட்ச வின்பத்தையன்றேயடைந்தேன்.

(பொ - ரை.) சடையாகிய பவளக்கொடிபடர்ந்த பேரின் பக்கடலில் கடையாமலுதித்தபேரின் பசுகமாகிய பெரிய அமுது போல்பவனை, தாமரையொன்று தன்பாற்றோன்றும் உந்தியையுடையகடலாகிய திருமால்மருகனைத் தருமவடிவாயுள்ளவனை என்வறுமை தீரத் திருப்போரூரிற் றெரிசித்து மோட்ச வின்பத்தையடைந்தேன்.

ஊழிகாலத்தில் மூன்றுலகமும் அழிய நிலைகடந்தெழுந்த கடற்பெருக்கிற் சர்ப்பசயனத்தின்மேல் திருமால் அறிதுயில்கொள்ளுங்கால் அவரது திருவுந்தியாகிய தடாகத்தில் நூறுயோசனையளவு பரந்து, நூறுயோசனையளவு நீண்டு, ஆயிரம் இதழை விரித்து ஒரு தாமரை மலர்ந்ததென்பது புராண வரலாறுதலால் கஞ்சமொன்று புடைதோன்று முந்திப் புணரி எனவும், உலகந் தோன்றியகாலத்தே தேவாசுர யுத்தம் நிகழ்ந்ததாதல் சூரனாதியோர்க்குத் தேவர்கள்புறங்கொடுத்தகாலையில், தேவர்கள் தலைவனாகிய இந்திரன் அசுரர்களைவென்று நமக்குச் சயந்தருதற்குத் தக்க சேனாதிபதி ஒருவனில்லையே என வருந்திச் சிவபெருமானைச் சிந்திக்குங்கால் அச்சிவபெருமான் காட்சி தந்து உனக்குச் சயந்தருதற்கு ஓர் சேனாதிபதிவருவன் நீ அஞ்சற்க வென்றருள, அன்றே அச்

சிவபெருமானுஞ்சிவடிவில் முருகக்கடவுள்தோன்ற இந்திரன் வணங்கி என் அரசியலைத் தேவரீர் கைக்கொண்டு எங்கள் பகைவரை யொழிப்பாயென்று குறையிரக்க, நான் உன்னரசியலை வேண்டேன் உனக்குத் தேவசேனாதிபதியா யிருந்து உனக்குச் சயந்தந்தருள வந்தேன் என்று திருவாய் மலர்ந்தருளிய போது, அவ்விந்திரன் அம்முருகக்கடவுளைச் சிம்மாசனத்தி லெழுந்தருளச் செய்து சேனாதிபதி பட்டங்கட்டிச் செயம்பெற்றனனென்பது வேதவளவை யாதலால் பேரின்ப சாகரத்தே கடையாவெழுந்த சுகவாரமுதினை எனவும், கடலிற்றோன்றினவன் கடலுக்கு மருகனாதல் இயல்பாதலால் புணரி மருகனை எனவும், அமுதினைக்கண்டவன் இன்பங்கூர்தல் வழக்காதலால் கதியின்ப மேவினன் எனவுங்கூறினர். (சுடு)

மேருப்பொருப்பினைச்சென்றேவியனண்டகூடமுட்டும்
சூரப்பொருப்பைத்தொளைத்தவைவேலவன்றுங்கனெங்கோன்
போரிப்பிரானெம்பிழைபொறுத்தாலன்னபூதலத்தே
யாரிப்படிபொறுப்பார்சொல்கநீயிங்கறிந்துள்ளமே.

(இ - ள்.) மேருப் பொருப்பினை சென்று - மேருமலையையடைந்து, வியன் அண்டகூடமுட்டும் சூரப்பொருப்பை - பரந்த அண்டகூடத்தையளாவநின்ற சூரனாகிய மலையை, தொளைத்த வைவேலவன் - தொளைசெய்த கூரிய வேலேந்தினவனும், துங்கன் எங்கோன் - யாவருள்ளும் உயர்ந்தவனும் எமது தலைவனும், போரி பிரான்-திருப்போரூரி லெழுந்தருளிய இறைவனும் ஆகிய முருகக்கடவுள், என் பிழை பொறுத்தால் அன்ன-எமது பிழையைப் பொறுத் தருளியதுபோல, பூதலத்தே யார் இப்படி பொறுப்பார் - நிலவுலகில் இவ்வாறு பொறுத்தருளுங் கடவுளர் யார், உள்ளமே நீ இங்கு அறிந்து சொல்க - மனமே நீ இவ்விடத்துத் தெரிந்து சொல்லக்கடவாய்.

(போ - ரை.) மேருமலையை யடைந்து பரந்த அண்டகூடத்தை யளாவி நின்ற சூரனாகிய மலையைத் தொளைபடுத்திய கூரிய வேலேந்தினவனும், எமது தலைவனும் திருப்போரூரிலெழுந்தருளிய இறைவனுமாகிய முருகக்கடவுள் எமது பிழையைப் பொறுத்தருளியதுபோல இவ்வுலகிற் பொறுத்தருளுங் கடவுளர் யார் மனமே தெரிந்திருந்தாற் கூறாய்.

சூரன் போரிற் புறங்கொடுத்தஞ்சி மேருமலையளவுஞ் சென்று மலைவடிவாகவும் மேகவடிவாகவும் காற்றுவடிவாகவும் நின்று போர்செய்து அதற்கும் ஆற்றாது முடிவில் மாமரவடிவமாய் நின்றானென்பது புராணவரலாறாதலால் மேருப் பொருப்பினைச் சென்றே வியனண்டகூடமுட்டும் சூரப்பொருப்பைத் தொளைத்த வைவேலவன் எனவும், பகைத்துப் போர்செய்த சூரன் சரணடைந்தகாலத்து அவன் பிழை பொறுத்தருளியதுபோல அவன்றிருவடிபிழைத்துச் சரணடைந்தகாலத்து என்னையுங் காத்தருளியதுபோலக் காக்குங் கடவுளர் வேறிலராதலால் பூதலத்தேயாரிப்படி பொறுப்பார் சொல்க எனவுங்கூறினர்.()

அண்டப்பரப்பினைக்கண்டோர்கொடிவருமாய்ந்தபச்சைக்
கொண்டற்சிறைப்பெருமாமயிலோன்குகனெங்களையன்
தண்டைத்திருப்பதம்போரூரில்வானவர்தம்முடிமேற்
றொண்டுற்றபேர்முடிமேன்மறைமேலென்றுந்தோன்றிடுமே.

(இ - ள்.) அண்டம்பரப்பினை ஓர் நொடிகண்டுவரும் - அண்டப்பரப்பினை ஓர் நொடிப் பொழுதில் கண்டு சுழன்றுவரும், ஆய்ந்தபச்சைகொண்டல் சிறை பெருமா மயிலோன் - ஆராய்ந்த பசிய மேகம்போலும் நிறம்வாய்ந்த சிறகையுடைய பெருமையமைந்த பெரியமயிலூர்தியை யுடையவனும், குகன்எங்கள் ஐயன் - குகனும் எங்களையனுமாகிய முருகக்கடவுளது, தண்டை திருப்பதம்-தண்டையணிந்த திருவடி, போரூரில் வானவர் தம்முடிமேல்-திருப்போரூரில் தேவர்களது முடிமேலும், தொண்டு உற்ற பேர்முடிமேல் - தொண்டுபூண்டவரது முடிமேலும், மறைமுடிமேல் - வேதத்தின்முடிமேலும், தோன்றிடும் - விளங்காநிற்கும்.

(போ - ரை.) அண்டப்பரப்பை ஓர் நொடிப்பொழுதில் வலம் வரும்பசியமேகம் போலும் கருமைவாய்ந்த மயிலூர்தியையுடையவனும் குகனும் எங்களையனுமாகிய முருகக்கடவுளது திருத்தண்டையணிந்த திருவடி திருப்போரூரில் வானவரது முடிமேலும் அடியவரது முடிமேலும் வேதத்தின் முடிமேலும் விளங்காநிற்கும்.

தேவர்கள் இடையூற்றினையொழித்தருளினமையால் வானவர்தம்முடிமேலெனவும், அடியவர் பிறப்பொழித்தற்குத் திருவருட்பதிவு செய்தலால் தொண்டுற்றபேர்முடிமேல் எனவும், சொற்பிரபஞ்சமாகிய வேதம்விந்துதத்துவத்தின் காரியப்பாடாதலால் மறைமேலெனவும், இடையறாது அங்குவிளங்குதலால் என்றுந் தோன்றிடும் எனவுங் கூறினர். (௬எ)

தரைபகச்சீத்துத்திசையதிரச்சிறைதான்புடைத்தே
யெரிநிறச்சென்னிநிமிர்த்துவளைத்தெண்புலிநகவாய்
விரைவுறத்தோன்றத்திறந்தூழிமேகமெனத்தொனிக்கும்
பொருகொடிச்சேவலன்போரூரனாரினும்புண்ணியனே.

(இ - ரை.) தரை பக சீத்து - நிலங்கிழிபடக்காலாற் சீத்து, திசைஅதிரச் சிறைதான்புடைத்து-எட்டுத்திக்குகளுமதிரச்சிறகையடித்து, எரிநிறம்சென்னி நிமிர்த்து வளைத்து-தீப்போலும் செந்நிறம்வாய்ந்த தலையை நிமிர்த்துவளைத்து எண்புலிநகம் - யாவரும் அஞ்சிக்கருதும் புலிநகம்போல, வாய் விரைவுற தோன்ற திறந்து - தனது வாய்விரையத்தோன்றத் திறந்து, ஊழிமேகம் என்னத் தொனிக்கும் பொரு கொடி சேவலன் - மேகம்போல வொலிக்கும் யாவருடனும் போர்செய்யும் சேவற்கொடியை யுடையவனும், போரூரன் - திருப்போரூரி லெழுந்தருளினவனும் ஆகிய முருகக்கடவுள், ஆரினும் புண்ணியன் - அயன்முதலிய எல்லாத்தேவர்களினும் புண்ணியவடிவாயுள்ளவன்.

(போ-ரை.) நிலங்கிழிபடக்காலாற்சீத்து எட்டுத்திக்குகளும் நடுங்கச்சிறையடித்துத் தீநிறம்போலும் செந்நிறம்வாய்ந்ததலையை நிமிர்த்து வளைத்துயாவருமஞ்சிக் கருதும் புலிநகம்போலப்பரந்த வாயைத்திறந்து ஊழிமேகம்போலக் கொக்கரிக்கும் சேவற்கொடியையுடைய திருப்போரூரிலெழுந்தருளிய முருகக் கடவுள் அயன் முதலிய எல்லாதேவர்களிலும் புண்ணிய வடிவாயுள்ளவன்.

அசுரர்முதலிய பல்லுயிருமஞ்ச சிறையடித்தலும் கொக்கரித்தலும் ஆகிய கொடிய உடையவனாயிருப்பினும் தன்னையடைந்த உயிர்களிடத்து பேரருளுடையோனாதலால் ஆரினும் புண்ணியன் என்றார். (௯௮)

நதிபிறைகொன்றைசெறிசென்னிமூன்றுகணான்குபுயந்
துதியிருதாணிகழ்மாணிக்கவெற்பைத்தொடர்ந்துபடர்
கதிதருபச்சைக்கொடிதோன்றுமின்பக்கனியளகை
யதிவளமேவியபோரூரில்வந்தெமையாட்கொண்டதே.

(இ-ள்.) நதி பிறை கொன்றை செறி சென்னி - கங்கையும் இளஞ்சந்திரனும் கொன்றைமாலையுமணிந்த சடாமுடியையும்; மூன்றுகண் நான்குபுயம்- திரிநேத்திரங்களையும் நான்கு திருப்புயங்களையும், துதி இருதாள் நிகழ்-யாவரும் துதிக்கும் இரண்டு திருவடிகளையுமுடைய, மாணிக்க வெற்பை - ஓர் மாணிக்கமலையை, தொடர்ந்து படர் - தொடர்ந்து படர்ந்து, கதிதரு பச்சைக் கொடி-அடியவர்க்கு முத்தி தரும் பசிய மரகதக்கொடியில், தோன்றும் இன்பக்கனி - பழுத்த ஓர் இன்பக்கனியானது, அளகை அதி வளமேவிய போரூரில்வந்து-அளகாபுரியினு மிக்கவளம் வாய்ந்த திருப்போரூரில் வந்து, எம்மை ஆட்கொண்டது-எம்மை யடிமைகொண்டது.

(போ-ரை.) கங்கையும் இளஞ்சந்திரனும் கொன்றைமாலையும் செறிந்த சடாமுடியையும் திரிநேத்திரங்களையும் நான்கு திருப்புயங்களையும் இரண்டு திருவடிகளையுமுடைய ஓர் மாணிக்கமலையைத் தொடர்ந்து படர்ந்த மரகதக் கொடியிற் பழுத்த ஓர் இன்பக்கனியானது திருப்போரூரில் வந்து எம்மை யடிமைகொண்டது.

கங்கையும் இளஞ்சந்திரனும் கொன்றைமாலையுமுடைய சடாமுடியையும் திரிநேத்திரங்களையும் நான்கு திருப்புயங்களையும் இரண்டு திருவடிகளையுமுடைய ஓர் மாணிக்கமலையென்றமையால் பொதுமை நீங்கிச் சிவபிரானையும், அம்மலையிற் படர்ந்த மரகதக்கொடியென்றமையால் உமையம்மையையும், அக்கொடியிற் பழுத்த இன்பக்கனி யென்றமையால் முருகக்கடவுளும் தோன்றுதலால் சிறப்புருவகவணியும், ஒருசென்னி, மூன்றுகண், நான்குபுயம் இரண்டு திருவடியென்றமையால் சொன்முரணணியும் கலந்துவருதலால் கலவையணி. பொருளால் உயர்திணை ஆயினும் சொல்லால் அஃறிணையாதலால் இன்பக்கனி ஆட்கொண்டது என அஃறிணை முடிபுதந்து கூறினார். (௯௯)

நன்மைநினைத்துன்றிருவடிசேரநயக்குமென்னைப்
புன்மைநினைத்துளங்கொண்டேகநொந்தனன்பொய்மையினேன்

மும்மையழிக்குறு மின்பனம் போரி முருகப் பிரான்
செம்மையளிக்கு நினைவினி வேண்டுஞ் சிறியனுக்கே.

(இ - ள்.) நன்மை நினைத்து - முத்தியின்பத்தைக்கருதி, உன் திருவடி சேர நயக்கும் என்னை - உன் திருவடியை யடையவிரும்பும் என்னை, புன்மை நினைத்து - புல்லியவிடயங்களைக் கருதி, உளங்கொண்டு ஏக - மனங்கொண்டு செல்ல, பொய்மையினேன் நொந்தனன் - பொய்யடியேன்மனம் வருந்தினேன், மும்மை யழிக்குறும் இன்பன் - ஆணவமுதலிய மும்மலங்களையும் அழித்து ஆன்மாக்களுக்கருளும் பேரின்ப சொரூபனே, நம்போரி முருகப்பிரான் -நமது திருப்போரூரிலெழுந்தருளிய முருகப்பெருமானே, சிறியனுக்கு - சிறியேனாகிய எனக்கு, செம்மையளிக்கும் நினைவு - உன் திருவருள்வழிச்செல்லும் நினைவு, இனிவேண்டும் - அடியேனுக்கு இனி இடையறாது வேண்டும்.

(போ - ரை.) முத்தியின்பத்தைக்கருதி உன் திருவடியை யடையக்கருதும் என்னைப் புல்லிய விடயங்களைக்கருதி மனம்கொண்டு செல்ல அடியேன் அதனால் வருந்தினேன், மும்மலங்களையும் அழித்துப்பேரின்பந்தருவோனே போரூரிலெழுந்தருளிய முருகப்பெருமானே சிறியேனுக்கு உன் திருவருள் வழிச்செல்லும் நினைவு இனி இடையறாது வேண்டும்.

உன்னையடையக்கருதிய என்னை மனம் தீவழிக்கொண்டு புகுத்தலால் அப்பொய்யிலடிபட்டு வருந்தினன் என்பார் பொய்மையிலே நொந்தனன் எனவும், நீ யடியவர்க்கு மும்மலங்களையுமொழித்து அருளும் பேரருளுடையோனாதலால் பொய்யடியேனுக்கும் அவ்வின்பம் தந்தருளவேண்டுமென்பார் மும்மை யழிக்குறும் இன்பன் எனவும், சிறியேனுக்குச் செம்மையளிக்கும் நினைவினிவேண்டும் எனவுங்கூறினார். (எ௦)

அவுணக்கருங்கடல்செங்கடலாக்குமணிநெடுவேற்
சிவணுற்றதோட்கிரிச்சேவகன்றன்னைச்செழுங்கொடிக்காற்
கவணுற்றகைக்குறமானைத்திருடியகள்வன்றன்னைக்
குவடுற்றசாரலம்போரியிலேகண்டுகொண்டனனே.

(இ - ள்.) அவுணக்கருங்கடல் - அசுரராகியகரிய கடலை, செங்கடல் ஆக்கும் அணி நெடு வேல்-செங்கடலாக்கிய அழகிய நெடிய வேல், சிவண் உற்ற தோள்கிரி சேவகன் தன்னை - பொருந்திய புயமலையையுடைய அதிவீரனை, செழும் கொடிக்கால் - தழைத்த கொடிபோலுங் காலையுடைய, கவண் உற்றகை குறமானை -கவணேந்திய திருக்கரத்தையுடைய வள்ளிநாய்ச்சியாரை, திருடிய கள்வன் தன்னை - திருடிய கள்வனை, குவடு உற்ற சாரல் அம்போரியில்-பிரணவ சயிலத்தைச் சார்ந்த சாரலிலுள்ள அழகிய திருப்போரூரிலே, கண்டுகொண்டனன் - தரிசித்தேன்.

(போ-ரை.) அசுரராகிய கருங்கடலைச் செங்கடலாக்கிய அழகிய நெடிய வேலேந்திய புயசயிலத்தையுடைய அதிவீரனை, தழைத்த கொடிபோன்ற காலமைந்த கவணேந்திய வள்ளிநாய்ச்சியாரைத் திருடிய கள்வனைப் பிரணவ சயிலச்சாரலிலுள்ள திருப்போரூரிலே தரிசித்தேன்.

அசுரர்கள் அளவிறந்தவர்களாதலால் அவரைக் கருங்கடலெனவும், அவர்களை உதிரவெள்ளமாக்கியதால் கருங்கடலைச் செங்கடலாக்கிய வேலெனவும், இந்த வேலேந்தினவன் அதிவீரனாதலால் சேவகனெனவும், அச்சேவகன் ஓர் மானைக்கவருதல் எளிதாயிருக்க வஞ்சித்துக் கவர்ந்தனனாதலால் குறமானைத் திருடிய கள்வன் எனவும், அக்கள்வனை ஏனைப்படை வீடுகளிற் காணாதுதிருப்போரூரிற் கண்டனனாதலால் போரியிலே கண்டுகொண்டனனே எனவுங்கூறினார். கருங்கடல் செங்கடலென்றது சொன்முரணணி. (எக)

கோலக்கருங்குயிலேமயிலேயென்றுகொஞ்சுமலை
வாலைப்பருவமின்றத்தருளானந்தமாமுகிலைச்
சோலைப்புயன்மலர்த்தேன்பொழிபோரிச்சுராதிபனை
மாலைக்கடந்தமனத்திற்கண்டார்க்குண்டுவாழ்வுகளே.

(இ - ள்.) கோலம் கரும் குயிலே மயிலே என்று - அழகிய கரிய குயிலே மயிலே என்று, கொஞ்சுமலை வாலை பருவமின் - சிவபிரான் கொஞ்சும் இமமலையிற் றோன்றியபாலையாகிய பருவகாலத்து மின்போன்ற உமையம்மை, தந்தருள் ஆனந்தமாமுகிலை - பெற்ற பேரின்ப மழைபொழியும் பெருமைவாய்ந்த மேகத்தை, சோலைமலர் - சோலையிலுள்ள மலர்கள், தேன்புயல்மொழி போரி சுராதிபனை - தேனை மேகம்போலச்சொரியும் திருப்போரூரிலெழுந்தருளிய தேவர்களுக்குத் தலைவனாயுள்ளவனை, மாலை கடந்த மனத்தில் கண்டார்க்கு - மயக்கத்தைக் கடந்த தமதுமனத்தில் தரிசித்தவர்க்கு, வாழ்வுகள் உண்டு - பதவி வாழ்க்கைகளுண்டு.

(பொ - ரை.) அழகிய கரிய குயிலே மயிலே யென்று சிவபிரான் கொஞ்சும் இமமலையிற் றோன்றிய உமையாகிய பருவகாலமின் பெற்ற ஆனந்த மழை பொழியும் பெரிய மேகத்தை, சோலையிலுள்ள மலர்கள் மேகம்போலத் தேனைச்சிந்தும் திருப்போரூரிலெழுந்தருளிய தேவர்களுக்குத் தலைவனை, பிரபஞ்ச மயக்கைக் கடந்த தம் மனத்துள்ளே தரிசித்தவர்க்கு வாழ்வுகளுண்டு.

உமையம்மை என்றுங்கன்னியாதலால் வாலை எனவும்,மேகம் மின்தருதல் போலாது உமையம்மையாகிய மின் பெற்ற மேகமாதலால் மின் தந்தமாமுகிலெனவும், மேகம் மழைபொழிதல்போல அடியவர்க்கு ஆனந்தம் பொழிதலால் ஆனந்தமாமுகிலெனவும், பற்றொழிந்த மனத்தாற் றெரிசித்தவர் கருதிய சாலோகமுதலிய பதவிகள் அன்றேகைகூடுதல் உண்மையாதலால் தேற்றப்பொருளில் வந்த தொழிற்பெயர் தந்து உண்டு வாழ்வுகளெனவுங்கூறினார். (எஉ)

நீரிற்கயலெனக்கண்ணீர் துலங்கிநெஞ்சைக்கவற்று
நாரிச்சமனையுநம்புவரோநலனேகொடுக்கும்
போரிப்பதியெங்குமரேசன்றாட்கன்புபூண்டுநித்தஞ்
சீரிற்பெரியகதிமேவியின்பஞ்செறிபவரே.

(இ - ள்) நலனே கொடுக்கும் - அடியவர்க்கு நன்மையே கொடுத்தருளும், போரிப்பதியெங் குமரேசன் றாட்கு - திருப்போரூரிலெழுந்தருளிய எமது முருகக்கடவுள் திருவடிக்கு, அன்பு நித்தம் பூண்டு - அன்பு தினமும் பூண்டு.

சீரின் பெரிய கதிமேவி-சிறப்பில் மேம்பட்ட சிவன் முத்திநிலையையடைந்து, இன்பம் செறிபவர் - பேரின்சுகத்தைத் திளைக்கும் அடியவர், நீரில் கயல் என்ன - நீரிற்பிறழுங்கயல்போல, கண்ணீர்த்துலங்கி - கண்ணின் தன்மை விளங்கி, நெஞ்சம் கவற்றும் - ஆடவர் மனத்தைப் புண்படுத்தும், நாரிசமனை யும் நம்புவரோ-பெண்களாகிய யமனையும் ஒரு பொருளாக நம்பி நடப்பரோ (நடவாரென்றபடி).

போ - ரை.) அடியவர்களுக்கு நன்மையே கொடுத்தருளும் திருப்போ ரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளது திருவடிக்குத் தினமும் அன்புகூர்ந்து பேரின்ப சுகத்தில் திளைக்கும் அடியவர் நீரிற்பிறழுங்கயல்போலக் கண்ணின் றன்மையால் விளங்கிக் கண்டோர் மனத்தைப் புண்படுத்தும் பெண்களாகிய யமனையும் நம்பி நடப்பரோ (நடவாரென்றபடி.)

ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது, ஓகாரம் எதிர்மறைப்பொருட்டு. (எக)

சூரன்கிளைகளைந்தெண்ணிலிதேவர்துயர்களைந்து
வீரஞ்சிறந்தநவவீரர்முன்னவன்வேலையின்மேய்ந்
தாரம்புயறுயில்போரூர்முருகனருளெனக்குச்
சீருங்குணமுமருவுந்தவமுநற்செல்வமுமே.

(இ - ள்.) சூரன்கிளைகளைந்து - சூரபன்மனுடைய வுறவினரைக்களைந்து, எண்ணிலி தேவர் துயர்களைந்து-அளவிறந்த தேவர்களது துன்பத்தைக்களைந்து வீரம் சிறந்த நவவீரர் முன்னவன் - வீரத்தாற் சிறந்த நவவீரர்களுக்கு முன் னோனும், வேலையில் மேய்ந்து - கடலில் மேய்ந்து, ஆரம்புயல்துயில் போரூர் முருகன்-சந்தனமரங்களில் மேகந்துயில்கூரும் திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளுமாகிய இறைவனது, அருள்-திருவருள், எனக்கு சீரும்-எனக் குச்சிறப்பும், குணமும் மருவும் தவமும் நற்செல்வமும்-குணமும் புகழும் தவ மும் நல்லசெல்வமுமாம்.

(போ - ரை.) சூரபன்மனுடைய கிளைகளைக் களைந்து அளவில்லாத தேவ ர்களுடைய துன்பத்தை யோட்டி வீரத்தாற் சிறந்த வீரவாகுமுதலிய நவவீர ர்களுக்கு முன்னோனும் கடல்நீர் மேய்ந்து சந்தனமரங்களில் மேகம் துயில் கூரும் திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளுமாகிய இறைவனது திருவருள் எனக்குச்சிறப்பும புகழும் குணமும் தவமும் நல்ல செல்வமுமாம்.

அவனது திருவருள் எனக்கு இம்மையிற் சிறப்பும் சாந்த குணமும் புகழும், மறுமையின்பநுகாதற்கேதுவாகிய தவமும் இம்மையில் போகநுகர் தற்கேதுவாகிய நல்ல செல்வமும் வாய்க்குமென்பார் அருள் எனக்குச் சீருங் குணமு மருவுந்தவமு நற்செல்வமுமென்றார். (எச)

இருகோட்டொருமதிசூடும்பிரான்மகிழ்ந்தின்புறவே
திருகோட்டுபோதமுனாசெய்ததேசிகன்செங்குழையாற்
குருகோட்டிமாதர்விளையாடும்போரிகைக்கூட்பினைப்
பொருகோட்டெருமையன்கண்டாலுமஞ்சிப்புறஞ்செல்லுமே

(இ-ள்.) இருகோடு ஒருமதி சூடும் பிரான்-இருநுதிவாய்ந்த ஓர் இளஞ் சந்திரனைச்சூடிய பெருமானும், மகிழ்ந்து இன்புற - மகிழ்ந்து இன்பங்கூர, திருகு ஓட்டும் போதம் உரைசெய்த தேசிகன் - மாறுபாட்டினை யொழிக்கும் பிரணவத்தினுட்கிடையை அருள்செய்து பரமாசிரியனது, செம் குழையால்- மாணிக்கமிழைத்த குண்டலத்தினால், குருகு ஓட்டும் மாதர்விளையாடும் போரி- பறவையையோட்டிப் பெண்கள் விளையாடும் திருப்போரூரைத் திசைநோக்கி, கைகூப்பினரை-கைகுவித்து வணங்கினவரை, பொரு கோடு எருமையன் கண்டாலும்-போர்செய்யுங் கொம்பினையுடைய எருமை யூர்தியையுடைய இயமன் பார்த்தாலும், அஞ்சி புறஞ்செல்லும் - அஞ்சிப் புறங்கொடுப்பான்.

(போ - ரை.) இருநுதிவாய்ந்த ஓரிளஞ்சந்திரனை யணிந்த சிவபெருமான் மகிழ்ந்து இன்பங்கூரப் பிரணவத்தினுட் கிடையை யருளிய பரமாசாரியனது திருப்போரூரைக் கைகூப்பி வணங்கினவரை இயமன் கண்டாலும் அஞ்சிப் புறங்கொடுப்பான்.

பிரமன் பிரணவத்தினுட்கிடையை வேறுபடக் கூறுதலில் அவ்வேறுபாட்டை யொழித்தலால் திருகோட்டு போதமெனக்கூறினார். எப்பொருட்கு மிறைவனாகிய பரமனுக்கு ஆசிரியனானமையால் தேசிகனென்றதற்குப் பரமாசிரியனெனவும், செங்குழையாலென்ற குறிப்பால் மாணிக்கமிழைத்த குண்டலமெனவும் கூறினாம். செங்குழையாற் குருகோட்டு மாதர்விளையாடு மென்றது பெருஞ் செல்வமிகுதியைக் குறித்தலால் வீறுகோளணி. (எ௲)

ஆரணனாரணனின்னமுங்காண்டற்கரியபரி
பூரணந்தோன்றியபூரணனேதிருப்போரியில்வாழ்
காரணனேயொருநாள்நீயளித்தகரையில்சுக
பாரணமென்றருள்வாய்கடையேற்கெம்பரம்பொருளே.

(இ - ள்.) ஆரணன் நாரணன் இன்னமும் - பிரமனுந்திருமாலும் இன்னமும், காண்டற்கு அரிய பரிபூரணன் - அடிமுடி காண்டற்கரிய பரிபூரணமாகிய சிவத்தில், தோன்றிய பூரணனே - உதித்தபரிபூரணனே, திருப்போரியில்வாழ் காரணனே - திருப்போரூரில்வாழும் யாவைக்குங் காரணமாயுள்ளவனே, எம்பரம்பொருளே-எமதுமேலானபொருளே, ஒருநாள் நீ அளித்த கரையில் சுகபாரணம் - ஒருநாள் நீ வெளிப்பட்டருளிய அளவிறந்த பேரின்ப நியதியை, கடையேற்கு என்று அருள்வாய் - கடைப்பட்ட அடியேனுக்கு என்னாளில் அருள்செய்வாய்.

(போ - ரை.) பிரமனுந் திருமாலும் இன்னமும் அடிமுடிகாண்டற்கரிய பரிபூரணமாகிய சிவத்திற்றோன்றிய பரிபூரணனே திருப்போரூரில்வாழும் யாவைக்குங் காரணனே, எமது மேலானபொருளே ஒருநாள் நீ வெளிப்பட்டருளிய அளவிறந்தசுகநிறைவைக் கடையேனுக்குஎக்காலத்தில் அருள்செய்வாய்.

இந்திரன் அசுரர்களுக்குடைந்து வருந்திச் சிவபெருமானைத் தியானிக்குங்கால் வெளிப்பட்டருளிய சிவபெருமான் திருவுருவிற் றோன்றிய முருகக்

கடவுளது வரலாற்றையே இங்குங் கூறுதலால் பரிபூரணந்தோன்றிய பூரணனே எனவும், திருப்போரூரில் பனையடியின்கீழ் முருகக்கடவுள் வன்மீகத்தால் மூடிபட்டிருக்குங்கால் வழிபட்டுவரும் இவ்வாசிரியர் வீரசைவராதலால் அட்டாங்க பஞ்சாங்கவிதிப்படி வணங்காதுகரங்கூப்பிச் செல்லுங்காலையில் ஓர்நாள், அவ்வாறு வணங்கித்திரும்புங்கால் முருகக்கடவுள் இவராசிரியராகிய குமாரதேவர் திருவுருக்கொண்டு எதிரே எழுந்தருள எதிர்ந்தோடித் திருவடியில் வீழ்ந்து பின்தொடரும்போது அப்புற்றில் மறைந் தருளினனென்பது இத்தலப்புராண வரலாறுதலால் "ஒருநாள் நீயளித்தகரையில் சுகபாரணம் என்றருள்வாய் எனவுங்கூறினர். (௬௬)

மெய்வேடம்பூண்டவர்க்குள்ளும்புறனும்விளங்கும்பிரான்
பொய்வேடம்பூண்டனனென்றாலுங்காத்தனைபூங்கணையா
லெய்வேடனால்வருந்தாதெனையாளினியேய்ந்ததினை
கொய்வேடமானைமணந்தோய்தென்போரிக்குணக்கொண்டலே.

(இ - ள்.) மெய் வேடம் பூண்டவர்க்கு - சிவவேடம்பூண்ட மெய்யடியார்க்கு, உள்ளும் புறனும் விளங்கும் பிரான்-உள்ளும்புறம்பும் நிறைந்துவிளங்கும் பெருமானே,ஏய்ந்த தினை கொய்வேடமானை மணந்தோய்-பொருந்திய தினைக்கதிரைக் கொய்யும் வேடர்குலத்திற் றோன்றிய வள்ளிநாய்ச்சியாரை மணந்தருளினவனே, தென்போரி குணம் கொண்டலே - இமமலைக்குத் தென்பாலுள்ள திருப்போரூரி லெழுந்தருளிய சத்துவகுண பர்வதமே, பொய்வேடம் பூண்டனன் என்றாலும் - நின்னடியவர் மெய்வேடம்போல யான் பொய்வேடம் பூண்டவனாயினும், பூங்கணையால் எய்வேள்தனால் வருந்தாது - மலரம்பாலெய்யும் மன்மதனால் வருந்தாது, (வேடனால் வருந்தாது - வேடனால் வருந்தாமல்) காத்தனை - காத்தருளினாய், இனி என்னை ஆள் - இனி என்னை அடிமை கொள்ளாய்.

(போ - ரை.) சிவவேடம்பூண்ட மெய்யடியவர்க்கு உள்ளும் புறம்புமாய் விளங்கும் பெருமானே தினைக்கதிரைக் கொய்யும் வேடர்குலத்திற்றோன்றிய வள்ளிநாய்ச்சியாரை மணந்தருளினவனே தென்போரியிலுள்ள குணபருவதமே உன்னடியவர் மெய்வேடம்போல யான் பொய்வேடம் பூண்டவனாயினும் மலரம்பால் எய்யும் வேடனால் வருந்தாமல் நீ யென்னை யாள்.

வேடனால் வேள் தன்னாலெனப் பிரித்து மன்மதனாலெனவும், வேடனாலெனவும் பொருள்கொள்க. (௬௭)

அருணகிரிப்பெயர்மெய்ஞ்ஞானநாதன்சொல்லால்வனைந்த
பொருணைநதிக்கிரியான்புகழ்மாலைபுனைபுயனே
கருணைமிகுத்தென்னையாண்டாய்க்குமீண்டுக்கைம் மாறுளதோ
தருணவளத்தினனேசமராபுரிச்சண்முகனே.

(இ - ள்.) அருணகிரி பெயர் மெய்ஞ்ஞானநாதன்-அருணகிரியென்னும் திருப்பெயரையுடைய சிவஞானம்பெற்ற மூர்த்தி, சொல்லால்வனைந்த - சொ

ல்லாற் றொடுத்த,- பொருநைநதி கிரியான் புகழ் மாலை - தாம்பரவர்ணி தோன்றிய பொதியமலையிலுள்ள அகத்தியமுனிவர் புகழும் பாமாலையை, புனைபுயனே-அணிந்த திருப்புயங்களையுடையவனே, தருணவளத்தினனே - பாலபருவத்தையுடையவனே, சமராபுரி சண்முகனே-சமராபுரியிலெழுந்தருளிய ஆறு திருமுகங்களையுடையவனே, கருணை மிகுத்து என்னை ஆண்டாய்க்கும் - கிருபை மீக் கூர்ந்து என்னையடிமைகொண்ட வுனக்கும், ஈண்டு கைம்மாறு உளதோ - அடியேன் இவ்வுலகிற் செய்யும் பிரதியுபகாரம் உண்டோ.

(போ - ரை.) அருணகிரியென்னுந் திருப்பெயரை வாய்ந்த சிவஞானத்தலைவன் சொல்லாற் றொடுத்த அகத்தியர் புகழும் பாமாலையைச்சூடிய திருப்புயங்களையுடையவனே பாலபருவத்தையுடையவனே சமராபுரியிலெழுந்தருளிய ஆறு திருமுகங்களையுடையவனே கிருபை மீக் கூர்ந்து என்னையடிமைகொண்ட தேவரீருக்கும் இவ்வுலகில் அடியேன்செய்யும் கைம்மாறுமுண்டோ.

மீண்டென வினையெச்சமாக்கி மீளச்செய்யும் கைம்மாறும் உண்டோவெனப் பொருள்கொள்ளுதலுமொன்று. பொருநைநதிக்கிரியான் என்பதனிறுதியில் உயர்வு சிறப்பும்மை தொகுத்தல். சொல் என்றது செஞ்சொல், ஆக்கச்சொல், குறிப்புச்சொற்களை-சொற்சுவை சிறந்திருத்தலால், தமிழாசிரியராகிய அகத்தியரும் புகழ்மாலை எனவும், மாலை புனைதல் திருப்புயத்திலாதலால் புனைபுயனே எனவுங்கூறினர். (எஅ)

மாலோன்விருந்தையையுண்டாக்கிக்கொண்டிலன்மாமலரோன்
மேலானநன்சிரமொன்றுக்கிக்கொண்டிலன்மீதுயர்ந்த
நாலாமறைபுகழ்போரூரன்சம்பந்தநாமங்கொண்டே
நூலாமிடைமயிலாக்கினனென்னைநொடியினிலே.

(இ - ள்.) மீதுஉயர்ந்த - எல்லாநூல்களுக்கும் மேலாகவுயர்ந்த, நால்மறைபுகழ் போரூரன் - நான்குவேதங்களும் புகழும் திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுள், சம்பந்தநாமம் கொண்டு - திருஞானசம்பந்தரெனத் திருநாமங்கொண்டு, என்பை - எலும்பினை, நொடியினில் - ஓர்கொடிப்பொழுதில், நூல் ஆம் இடைமயில் ஆக்கினன் - நூலையொத்த இடையையுடைய ஓர்பெண்ணாகச் செய்தனன் (அதனை உணர்ந்தும்) மாலோன் விருந்தையை உண்டாக்கி கொண்டிலன் - திருமால் தான் விரும்பிய விருந்தை என்பவள் எலும்பைப் பெண்ணுருவாக்கிக் கொண்டிலன், மாமலரோன்-பெருமைவாய்ந்ததாமரைமலரில் வசிக்கும் பிரமன், மேலான நன்சிரம் உண்டாக்கி கொண்டிலன் - தானிழந்த நான்குதலைகளுக்கும் மேலான தலை யொன்றினைச் செய்துகொண்டிலன், (இது என்னமடமை)

(போ - ரை.) நான்குவேதங்களும் புகழும் திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுள் திருஞானசம்பந்தனென்னுந் திருநாமங்கொண்டு எலும்பினையோர் நொடிப்பொழுதில் திருமயிலையில் ஓர்பெண்ணாகச் செய்தருளினன். அதனைத் திருமாலும் பிரமனும் உணர்ந்திருந்தும் தாம்விரும்பிய பிருந்

தையை ஓர்பெண்ணுக்குக் கொள்ளாமலும், பிரமன் தானிழந்த நடுத்தலையொன்றையாக்கிக் கொள்ளாமலுமிருந்த மடமையாது.

நாலாமறை, நூலாமிடை என்பதினிடையினின்ற ஆம் என்னும் இடைச்சொல்லுள் முன்னது "புற்றுஞ்சோறு" என்றாற்போலச் சாரியை இடைச்சொல்மேலும், பின்னது "ஆள்வாரிலிமாடாவேனோ" என்றாற்போல உவம இடைச்சொன் மேலும் நின்றன. சலந்தரன் மனைவியாகிய பிருந்தையை நெடுநாள் விரும்பி யொழுகிய திருமால் அச்சலந்தரன் சிவபெருமானோடு போர்செய்யச்சென்ற சமையம்நோக்கி இதுதான் சமையமென்று ஓர்தவவேடங்கொண்டு அவ்வசுரன் மனைப்புறத்திலுள்ள பூஞ்சோலையில் தவவேடங்கொண்டுவந்த திருமாலை, அச்சோலைக்கு மலர் கொய்யவந்த பிருந்தை யென்பவள் இவர்முனிவரென்றுகருதி அடிவணங்கிப்போர்க்குச்சென்ற என்கணவனுக்கு வெற்றியோ தோல்வியோவென்று வினவ, சிவபெருமானோடு போர்செய்து உய்ந்தவர் யாவர் என்றுசொல்லுங்கால், ஓரசுரன் வேர்வரும்ப இளைப்புமீதூரவோடிவந்து அடிவணங்கி அன்னாய் போர்க்குச்சென்ற நின் கணவன் மாண்டனன், அச்சிவபெருமான் நெற்றிக்கண்ணால் சேனைகள் நீறாயின, இதனை நான் சேய்மையினின்று கண்டு உணர்த்த வந்தனன் என்று கூறினன். அது கேட்டுப் பிருந்தையென்பவள் வாய்பதறி மெய்சோர்ந்து கீழேவிழுந்து புரண்டழுங்கால் திருமால் பற்றச்செல்ல, அவன் குறிப்புணர்ந்து மூன்று நாள் கழிந்தபின் உனது மனையாளாகுவனென்று கூறித், தன்அந்தப்புரத்திற்சென்று தீயில் விழுந்து சாம்பலாயினள். இது உணர்ந்த அத்திருமால் அங்குச்சென்று அச்சாம்பலில் புரண்டு அவளைச் சிந்தித்து நெடுநாள் வருந்தினனென்பது புராணவரலாறாதலால் மாலோன் பிருந்தையை யுண்டாக்கிக்கொண்டிலன் எனவும், பிரமன் ஓர் கால் யாவும்படைத்தலால் யானே இறைவனென இறுமாந்தகாலையில் நான்கு வேதங்களும் வந்து நீ இறைவனல்ல என்று கூறவும் அவன் மறுத்தபோது, பிரணவம் ஒருருக்கொண்டு நீ இறைவனல்லவென்று கூற அதனையும் இகழ்ந்து செருக்கால் மயங்கியிருக்குங்காலையில் சிவபெருமானெதிர்வந்து நிற்கப்பிரமன் சிறிதும் அஞ்சாது என்புதல்வா வா என்றழைத்தபோது கோபங்கொண்ட அப்பெருமான் திருவுருவில் வயிரவக்கடவுள் தோன்றி அவன் நடுத்தலையைக் கொய்தனரென்பது புராணவரலாறாதலால் மாமலரோன் மேலான நற்சிரமுண்டாக்கிக் கொண்டிலன் எனவுங்கூறினர். (எகூ)

சகலமதங்களையெல்லாமுணர்ந்ததவமுனிவோர்
புகலுமிலக்கமெண்ணாயிரம்பேரைப்பொருகழுவி
லிகலறவைத்தும்வருமேதமொன்றின்றியேயிருந்தான்
றிகழுறும்போரியின்சம்பந்தநாமஞ்சிறந்துகொண்டே.

(இ - ள்.) திகழ் உறும் போரியன் - விளங்குந் திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுள், சம்பந்த நாமம் சிறந்து கொண்டு - ஞானசம்பந்தனென்னுந் திருப்பெயரைச் சிறப்பக்கொண்டருளி, சகல மதங்களை எல்லாம் உணர்

ந்த-எல்லாச்சமயநூல்களையும் முழுதுணர்ந்த, தவமுனிவர் - தவத்தையுடைய முனிவர்கள், புகலும் இலக்கம் எண்ணாயிரம்பேரை - எடுத்துக்கூறும் எண்ணாயிரம் சமணமுனிவர்களை, பொருகழுவில் இகல் அறவைத்தும் - வருத்துங் கழுநுதியில் பகைமைகெடவேற்றியும், வரும் ஏதம் ஒன்று இன்றி இருந்தான் - தனக்கு வரும் ஓர் குறையின்றி யிருந்தனன்.

(போ - ரை.) விளங்குந் திருப்போரூரி லெழுந்தருளிய முருகக்கடவுள் ஞானசம்பந்தனென்னுந் திருநாமத்தைச் சிறப்பக்கொண்டருளி எல்லாச்சமய நூல்களையும் முழுதுணர்ந்த தவத்தையுடைய முனிவர்களெடுத்துக் கூறும் எண்ணாயிரஞ் சமணமுனிவர்களைக் கழுநுதியிலேற்றியும் அதனால் தனக்குவரும் ஓர் குறையுமின்றி யிருந்தனன்.

ஒரு முனிவருக்குத் தவறு செய்யினும் வரும் ஏதம் பெரிதாயிருக்க எண்ணாயிரம் முனிவருயிர்வாங்கியும் தனக்கோர் குறையின்றி யிருத்தலால் சுதந்தரனென்பார் வருமேதமொன்றின்றியே யிருந்தான் என்றுகூறினர்.

திருமயிலையில் எலும்பைப் பெண்ணாக்கின வரலாற்றை முன்னர்க்காண்க.

எண்ணற்கரியசமணக்களைகளைந்தேதமிலாத்
தண்ணுற்றபேரருணீர்பாய்ச்சிச்சைவப்பயிர்வளர்த்து
நண்ணச்சிவானந்தபோகம்விளைவிக்குநல்லுழவன்
விண்ணுற்றதேவருஞ்சூழ்போரிவாழ்கின்றவேலவனே.

(இ - ள்.) விண் உற்ற தேவரும் - விண்ணுலகிலுள்ள தேவர்களும், சூழ் போரி வாழ்கின்ற வேலவன்-வலம்வரும் திருப்போரூரில் வாழாநின்ற வேலேந்திய முருகக்கடவுள், எண்ணற்கு அரிய சமணர்களை களைந்து - வரையறுத்தற்கரிய சமணர்களாகியகளைகளைக் களைந்து, ஏதம் இல்லாத தண் உற்றபேர் அருள்நீர் பாய்ச்சி-குற்றமில்லாத குளிர்ச்சிவாய்ந்த பெரிய கருணை யென்னும் நீரைப்பாய்ச்சி, சைவம் பயிர் வளர்த்து - சைவமாகிய பைங்கூழைவளர்த்து, நண்ண-நிலைபெற, சிவானந்தபோகம் விளைவிக்கும் நல் உழவன் - சிவானந்த போகத்தை விளைவிக்கும் நல்ல வுழவனும்.

(போ - ரை.) விண்ணுலகில் வாழும் தேவர்களும் வலம் வரும் திருப்போரூரில் வாழ்கின்ற வேலையேந்திய முருகக்கடவுள் வரையறுத்தற்கரிய சமணர்களாகிய களையைக் களைந்து குற்றமில்லாத பெரிய கருணையென்னும் நீரைப்பாய்ச்சிச் சைவமாகிய பைங்கூழை வளர்த்து நிலைபெறச் சிவானந்த போகத்தை விளைவிக்கும் நல்ல வுழவனும்.

ஆளுடைய பிள்ளையார் திருவவதாரத்தில் சமணர்கள் பல்கியிருந்ததால் எண்ணற்கரிய சமணர் எனவும், அவர்களெங்கு மிடைந்து இடையூறு செய்தலால் களைகளைந்தெனவும், அவர்களாற் சைவங்குன்றியதாதலால் சைவப்பயிர் வளர்த்து எனவும், பயிரோங்கக் களை களைதலும நீர்ப்பாய்ச்சலும் வழக்காதலால் களை களைந்து நீர் பாய்ச்சி எனவும், திருவருளிடமாக நின்று சிவானந்த போகம் துய்க்கவேண்டுதலால் அத்திருவருளால் விளையும் பயன் சிவானந்த

மாதலில் சிவானந்த போகமெனவும், பயிரின் போகம் நிலைபெறுமையை யுடையது சைவப்பைங்கூழ் தரும் சிவானந்தபோகம் என்றும் நிலை பேறுடை டையதாதலால் நண்ண எனவும், இது தன்பொருட்டுமன்றிப் பிறர்பொருட்டு மாதலால் வாழ்விக்குமெனவும்,ஆன்மாக்களிடத்துக் கருணையுடையோனாதலால் நல்லுழவன் எனவுங்கூறினார். சமணரைக் களையாகவும் திருவருளை நீராகவும் சைவத்தைப் பைங்கூழாகவும் சிவானந்தத்தைப் போகமாகவும் கூறுதலால் மிகை குறையில்லாத ஒற்றுமை யுருவகவணி. மற்றையோருமன்றி யென நிற்றலால் தேவரும் என்பதனிறுதியினின்ற உம்மை இறந்தது தழீ இயவுயர்வு சிறப்புப்பொருட்டு. (அக)

தாரகன்கோளரிமாமுகன்கொக்கின்றனதுபெயர்
காருறுமால்வரைசூதம்வெஞ்சூரகங்காய்ந்தவைவேற்
பேருறுவோர்தமைக்காலனுந்தீண்டப்பெறானெனிலே
போரியென்னாயகன்றாட்கேசரணம்புகுநெஞ்சமே.

(இ - ள்) தாரகன் கோளரி மாமுகன் கொக்கின் தனது பெயர் - தாரகனாகவும் சிங்கமுகனாகவும் கொக்கென்னும் பெயர்வாய்ந்த புள்வடிவாகவும், கார் உறு மால்வரை - மேகந்தவழும் பெரிய மலையாகவும், சூதம் - மாமரவடிவாகவும் மாயையால் வடிவங்கொண்டு போர்க்குவந்த, வெம் சூர் அகம் காய்ந்தவைவேல் பேர் உறு வோர்தமையும்-கொடிய சூரபன்மன் மார்பைப்பிளந்த வேலின் திருநாமத்தைத் தேகநாமமாகக்கொண்டவர்களையும், காலனும் தீண்டப்பெறான் என்னில்-இயமனும் பரிசிக்கப்பெறானானால், போரி என் நாயகன் தாட்கே - திருப்போரூரில் எழுந்தருளிய எமதிறைவன் திருவடிக்கீழே, நெஞ்சமே சரணம் புகு - மனமே அடைக்கலம்புகுவாய் (சரண்புகுந்தால் பிறப்பொழிவா யென்பது கருத்து.)

(பொ - ரை.) தாரகனும், சிங்கமுகனும், கொக்கு வடிவமும், மலையும், மாமரமும் மாயையால் வடிவங்கொண்டுபோர்க்குவந்த சூரபன்மன் மார்பைப் பிளந்த வேலின் திருநாமத்தைத் தேகநாமமாகக் கொண்டவர்களிடத்தும் இயமன் வந்தணுகானானால் மனமே நீ திருப்போரூரில் எழுந்தருளிய முருகக் கடவுள் திருவடியைச் சரணடைவாய் அதனால் வரும் பேறு பெரிதாம்.

சூரன் மாயையால் தாரகன்முதலிய வடிவங்கொண்டு போர்க்கு வந்தமையை, "கரியின் முகத்துணைவன்னென வொரு சார்வருங்கடுங்க-ணரியின் முகத்திளையோனெனவொரு சார்வரும்" எனவும், "கலிவான், அக்கால்வருதனிப்புள்ளென வொருசார்வருமன்றே," எனவும். "ஒரு சாருருமென வந்திடுமொருசார்வரும் வரைபோல்" எனவுங் கந்தபுராணத்தில் வருதல் காண்க.

ஓரசுரன் கொக்குவடிவாய்த் தமக்குப் பலநாளுந் தீங்குசெய்துவருதலைச் சிவபெருமானிடத்துத் தேவர்கள்முறையிட அச்சிவபெருமான் அருள்கூர்ந்து அவன் உயிர் வாங்கினனென்பது புராணவரலாறாதலால் கொக்கின்றனது பெயர் என்றார்.

ஆருயிரியாவைக்குமானந்தத்தேனையளிக்குமுக்கட்
டாருவினாற்கவிமாமழையேபொழிதண்முகிலே
காரிருண்மாமலந்தீர்த்தென்னையாளக்கடனுனக்கே
சீருறுதேசிகனேபோரிமாநகர்ச்சிற்பரனே.

(இ - ள்.) ஆர் உயிர் யாவைக்கும் ஆனந்தத்தேனை- நிறைந்த எல்லாவுயிர்க்கும் சிவானந்தமாகிய தேனை, அளிக்கும் முக்கண் தாருவில் - கசிந்து கொடுக்கும் மூன்று கண்களையுடைய கரும்பின்மேல், நால்கவிமாமழையே பொழி தண் முகிலே-ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரமென்னும் நான்கு கவிகளாகிய பெரியவிடாமழையைப் பொழியும் தண்ணிய மேகமே, சீர் உறு தேசிகனே - சிறப்புவாய்ந்த பரமாசாரியனே,போரிமாநகர்சிற்பரனே- திருப்போரூரென்னு பெருமைவாய்ந்த நகரிலெழுந்தருளிய ஞான சொரூபியே, கார் இருள் - கரிய இருள்போன்ற, மாமலம் தீர்த்து என்னை ஆள - ஆணவமலததைப் போக்கியென்னை அடிமைகொள்ள, உனக்குக் கடன் - தேவரீருக்குக் கடமையாம்.

(பொ - ரை) நிறைந்த எல்லாவுயிர்களுக்கும் சிவானந்தமாகிய தேனைக் கசிந்து கொடுக்கும் மூன்று கண்களையுடைய கரும்பின்மேல் ஆசுகவிமுதலிய நான்கு கவியாகிய தண்ணிய மழையை விடாது பொழியும் மேகமே பரமாசாரியனே திருப்போரூரி லெழுந்தருளிய ஞானசொரூபியே ஆணவமலத்தையொழித்து அடியேனை யடிமைகொள்ளுதல் தேவரீருக்குக் கடனும்.

ஆளுடைய பிள்ளையார் திருவவதாரத்தில் சிவபெருமான்மேல் திருப்பாசுரங்களைப் பாடியருளினமையால் முக்கட்டாருவினாற்கவிமாமழையே பொழி தண்முகிலே எனவும், ஆணவமலம் ஏனையமலங்கட்கு முன்னிற்றலில் காரணமெனவுங்கூறினர். கண் - விழி, கணு. ஆதலால் முக்கட்டாரு வென்றதற்குக் கரும்பென்றும். (அ௬)

வீரத்தவுணருயிர்களைமேய்துவிரைவினவர்
சோரிக்கடலிடையாடிக்குடர்த்தொங்கல்சூடிவெற்றிக்
கூருற்றவேல்கரங்கொண்டோன்றென்போரிக்குமரனென்மேற்
சீருற்றபேரருள்வைத்தானிஃதென்றெளிந்திலனே.

(இ - ள்.) வீரத்து அவுணர் உயிர்களைமேய்ந்து - வீரத்தையுடைய அசுரர்களது உயிரைமேய்ந்து, விரைவின் - விரைந்து, அவர்சோரிகடல் இடை ஆடி - அவரது உதிரமாகிய கடலில் மூழ்கி, குடர்த்தொங்கல் சூடி வெற்றி - அவர்கள் குடலாகிய மாலைசூடி வெற்றிவாய்ந்த, கூர் உற்றவேல் கரம் கொண்டோன் - கூரமைந்தவேலைத் திருக்கரத்திற் கொண்டவனும், தென்போரிகுமரன் - இமமலைக்குத் தென்பாலிலுள்ள திருப்போரூரி லெழுந்தருளியகுமாரக்கடவுளாகிய இறைவன், என்மேல் - அடியேன் மேல், சீர்உற்றபேர் அருள் வைத்தான், சிறப்புவாய்ந்த பெருங்கருணை வைத்தனன், இஃது என் - இது யாது காரணமோ, தெளிந்திலன் - அறிந்திலேன்.

(போ - ரை) வீரத்தையுடைய அசுரர்களது உயிரைமேய்ந்து விரைந்து அவரதுதிரமாகிய கடலில் மூழ்கித்திளைத்துக் குடலாகிய மாலையைச் சூடி வெற்றிவாய்ந்த கூரமைந்தவேலைக்கையிலேந்தினவனும் திருப்போரூரிலெழுந்தருளியகுமாரக்கடவுளுமாகிய இறைவன் என்மேல் பெருங்கருணை வைத்தனன், இஃது என்னகாரணமோ சிறிதும் தெரிந்திலன்.

முருகக்கடவுள் ஆட்கொள்வதற்குச் சிறிதும் வழிபாடிலனுயிருக்கவும் ஆட்கொண்டதற்குக் காரணமறிந்திலேன் என்பார் இஃதென்றெளிந்திலனே என்றார். (அச)

தேவருநாகருமியாவருமும்முறைதெண்டனிட
மேவருமாமகுடத்தினிராசிகண்மீதொளிருந்
தூவருமாமணிராசிகண்மேவித்தொடச்செவந்த
பூவருதாளினன்போரூர்க்குகனெனும்புங்கவனே.

(இ - ள்.) போரூர் குகன் எனும் புங்கவன் - திருப்போரூரிலெழுந்தருளிய குகனென்னும் திருநாமத்தையுடைய இறைவன், தேவரும் நாகரும் யாவரும் - பொன்னுலகிலுள்ளவரும் நாகருலகிலுள்ளவரும் அவரொழிந்த விச்சாதரர்முதலியோரும், மும்முறை தெண்டனிட - மூன்றுதடவை தண்டாகாரமாய் வணங்க, மேவரும் மாமகுடத்தின் இராசிகள் மீது - அவர்கள் கவித்த பெரிய கிரீடத்தின் கூட்டத்தின்மேல், ஒளிரும்தூ வருமாமணிராசிகள் மேவி தொட செவந்த-விளங்கும் முழுமணிக்கூட்டங்கள் அடைந்து பரிசித்தலால் செந்நிறமேறிய, பூவருதாளினன் - பொலிவுவாய்ந்த திருவடியையுடையான்.

(போ - ரை.) திருப்போரூரிலெழுந்தருளிய குகனென்னும் திருநாமத்தையுடைய இறைவன் பொன்னுலகினரும் நாகருலகத்தினவரும் அவரொழிந்த விச்சாதரர்முதலியோரும் மூன்றுவர்த்தி தெண்டஞ்செய்ய அவர்கள்சூடிய மகுடராசிகளிற்பதித்த முழுமணிராசிகள் படிந்து பரிசித்தலால் செவப்பேறிய திருவடியையுடையான்.

இதனால் யாவர்க்கும் இறைவன் என்பதைக்கூறினார். (அரு)

கொக்கரித்தேவருந்தானவர்சேனையைக்கொன்றுழக்கி
மிக்கரத்தக்கடலாடிப்பிணமலைமீதிவர்ந்து
செக்கரிற்றோன்றுங்கணநாதர்சேவிக்குஞ்சேவடியா
னிக்கரிக்குஞ்சுரும்பார்க்கின்றபோரிக்கிறையவனே.

(ப - ள்.) இக்கு அரிக்கும் சுரும்பு ஆர்க்கின்ற - சரும்புகளை யரிக்கும் வண்டுகளொலிக்கின்ற, போரிக்கு இறையவன் - திருப்போரூரில்வாழும் எமதிறைவன், கொக்கரித்தேவரும், வீரகோஷஞ்செய்தே போர்க்குவரும், தானவர் சேனையை கொன்று உழக்கி - அசுரர் சேனையைக்கொன்று கலக்கி, மிக்கரத்தக்கடல் ஆடி - பிரவாகித்தெழுந்த உதிரக்கடலிற் படிந்துமூழ்கி, பிணமலை

மீது இவர்ந்து - அவர்கள் பிணக்குவியலாகிய மலைமீதேறி, செக்கரில் தோன்றும் கணநாதர்-செக்கர்வானம்போலத் தோன்றும் உருத்திரகணநாதர்கள், சேவிக்கும் சேவடி யான் - வணங்குஞ் செவந்த திருவடியை யுடையவனும்.

(போ - ரை.) கரும்பு கழையரிக்கும் வண்டுகளொலிக்கின்ற திருப்போரூரில்வாழும் எமதிறைவன் வீரகோஷஞ் செய்துபோர்க் கெதிர்ந்தபகைவர் சேனையைக் கொன்றுகலக்கி, பிரவாகித் தெழுந்த உதிரக்கடலிற்படிந்து அவர்கள் பிணக்குப்பலாகிய மலையின்மீதேறிச் செக்கர்வானம்போல் தோன்றும் உருத்திர கணநாதர் சேவித்து வணங்கும் திருவடியை யுடையவனும்.

உதிரக்கடலிற் படிந்ததனால் செக்கர் வானம்போல் தோன்றினரென்பார். செக்கரிற் றோன்றும் கணநாதர் என்றார். தேவர்களுஞ் சிப்புறங்கொடுத்த அசுரர் சேனையைவென்ற கணநாதர்கள் அதிவீரராதலால் அதிவீரரும் வணங்கும் திருவடியை யுடையா னென்பதை யிதனாற் கூறினார். (௮௬)

மணிகொண்டசேடன்படர்முடிதூக்கிமணியுதறித்
திணிகொண்டமால்வரைமாடேபறந்துறச்சேண்பறந்தங்
கணிகொண்டதேவர்தொழச்சென்றுமீண்டிங்ககவுமும்மைக்
குணில்கொண்டபேரிகையார்க்கின்றபோரிக்குகன்மயிலே.

(இ - ள்.) மும்மை - மூன்றுவகைப்பட்ட, குணில்கொண்ட பேரிகை - குறுந்தடியால் அடிக்கப்பட்ட முரசு, ஆர்க்கின்ற போரி குகன் மயில் - என்று மொலிக்கும் - திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளுடைய வூர்தியாகிய மயில், மணிகொண்ட சேடன் படர் முடி தூக்கி-மாணிக்கம் வாய்ந்த ஆதிசேடனுடைய பரந்த ஆயிரந் தலைகளையும் குத்தித் தூக்கி, மணி உதறி - அம்முடிகளிலுள்ள மாணிக்கங்களையுதறி, திணிகொண்டமால்வரை மாடேபறந்து - கலங்கா நிலையைவாய்ந்த பெரிய மேருமலையின்பாற் பறந்து, சேண் உற பறந்து-விண்ணுலகிற் பொருந்தப் பறந்து, அங்கு அணிகொண்ட தேவர் தொழ சென்று - அவ்வுலகில் வசிக்கும் பொலிவுவாய்ந்த தேவர்கள்வணங்கப்போய், இங்கு மீண்டு அகவும் - இவ்வுலகிற் றிரும்பியாடாநிற்கும்.

(போ - ரை.) மும்முரசு என்று மொலிக்குந் திருப்போரூரி லெழுந்தருளிய முருகக்கடவுளுடைய வூர்தியாகிய மயில் ஆதிசேடனுடைய மாணிக்கம் வாய்ந்த பரவிய அவனது ஆயிரந்தலைகளையுந்தூக்கி அம்முடியிலுள்ள மாணிக்கங்களை யுதறி, மேருமலையிற் பறந்து அதன்மேலுள்ள விண்ணுலகிலும் பறந்து அங்குள்ள தேவர்கள் வணங்கச்சென்று இந்நிலவுலகிலும் திரும்பியாடாநிற்கும்.

மும்முரசு மங்கலமுரசு, கொடைமுரசு, வெற்றிமுரசு. மங்கலமும் வெற்றியும் ஈகையும் என்றுமமருந திருப்போரூரென்பார் மும்மைப் பேரிகையார்க்கின்ற போரியென்றார். இதனால் மயிலூர்தியின் விரைவுகூறினார். (௮௭)

வாரிசுழலவடவரையாதிவரைசுழலக்
காரொடுசந்திரசூரியர்மீன்கறங்காச்சுழலக்

கூரிருளியாக்கையரக்கர்சுழன்றிடக்கோதில்பச்சைத்
தேரென வட்டம்வரும் போரிவேலன் சிறைமயிலே.

(இ - ள்.) போரி வேலன் சிறை மயில் - திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளது சிறைவாய்ந்த மயில், வாரிசுழல - கடல்சுழலவும், வடவரை ஆதி வரைசுழல - மேருமலைமுதலிய மலைகள் சுழலவும், கார் சந்திர சூரியர் மீன் - மேகமுஞ்சந்திரனுஞ் சூரியனும் நக்ஷத்திரமும், கறங்கு ஆக சுழல - காற்றாடிபோலச் சுழலவும், கூர் இருள் யாக்கை அரக்கர் சுழன்றிட-மிக்கவிருள் போலக்கருநிறம்வாய்ந்த சரீரத்தையுடைய அரக்கர்கள் சுழலவும், கோது இல் பச்சை தேர் என்ன வட்டம் வரும் - குற்றமில்லாதபசியதேரைப்போல வட்டமிடும்.

(பொ - ரை.) திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளது ஊர்தியாகியமயில் எழுகடலுஞ் சுழலவும் மேருமலைமுதலியமலைகள் சுழலவும் மேகமும் சந்திரனும் சூரியனும் நக்ஷத்திரமுஞ்சுழலவும் இருள்போலக்கருநிறம்வாய்ந்த சரீரத்தையுடைய அரக்கர்கள் சுழலவும், பசுந்தேரைப்போல வட்டமிடாநிற்கும்.

முருகக்கடவுள்மயில்வட்டமிடுங்கால் அது கருதியது யாதோவென எழுகடல்முதலியபொருள்கள் அஞ்சி மனஞ்சுழலுமென்பார் சுழன்றிடவட்டம் வரும் என்றார். இதனால் மயிலின் பராக்கிரமம் கூறினார். (அ௮)

முகடிடித்துச்சக்ரவாளத்தைமுட்டிவெம்மூரியெட்டுப்
பகடுகுத்திக்கனல்சிந்திடப்பார்த்துப்பரவையெல்லா
மகடுறத்தேக்கிவிடுத்துறத்தாவியரைக்கணம்போய்க்
ககனமுற்றும்வரும்போரூரனேறுங்கனதகரே.

(இ - ள்.) போரூரன் ஏறும் கன் தகர் - திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளாரோகணித்தருளிய மேன்மைவாய்ந்த ஆட்டுக்கடா, முகடு இடித்து-மேருவின் சிகரத்தையிடித்து, சக்ரவாளத்தை முட்டி - சக்ரவாள கிரியைமோதி, வெம் மூரி எட்டுப் பகடு குத்தி - எட்டுத்திக்குகளிலுமுள்ள கொடியபெரிய எட்டுயானைகளையுங்குத்தி, கனல் சிந்திடப் பார்த்து - கோபக்கனல் சிந்த வுறுக்கிப்பார்த்து, பரவை எல்லாம் - எழுகடலையும், அகடு உற தேக்கி - வயிறுநிரம்பத்தேக்கி, விடுத்து - மீளவிடுத்து, உற தாவி- அதன்மேற்பொருந்த, அப்பாற்றாவி, அரை கணம் போய் - அரைக்கணப்பொழுதில் மேலேபோய், ககனம் முற்றும் வரும் - அண்டமுழுமையும் வலம்வாராநிற்கும்.

(பொ-ரை.) முருகக்கடவுளேறிய ஆட்டுக்கடா மேருமலையின் சிகரத்தையிடித்துச் சக்ரவாளகிரியைத் தாக்கித் திக்கு யானைகளைக் குத்திக் கோபக்கனல் பறக்க அவைகளை யுறுக்கிப்பார்த்து எழுகடலையும் வயிறுநிரம்பமடுத்து மீளவிடுத்து அப்பால்தாவி அரைக்கணப்பொழுதில் அண்டமுழுமையும் வலம் வாராநிற்கும்.

நாரதமுனிவர் ஓர்கால் வேள்வி செய்யுங்காலையில் அதினின்றுமோர் ஆட்டுக்கடா புறப்பட்டு அங்குள்ளோர் அஞ்சியோடப் பல்லுயிர்களையும் அழித்துத் திக்குயானைகள் எட்டும், நிலைகலங்கப்பாய்ந்து சந்திரன்முதலியோர் விமானமுந்தேரும் தகரமோதி விண்ணுலகு முதலியவுலகிலுள்ளோர் நிலைகலங்கச் செல்லுங்கால், நாரதமுனிவர் முதலியோர் அஞ்சிநடுங்கிக் கயிலைக்குச்சென்று முருகக்கடவுள் திருவடிகளை வணங்கித்தங்கள்குறைகூற நீங்களஞ்சலீரென்று அபயந்தந்து தம்மிடத்துள்ள வீரவாகுவால் அத்தகரைத்தம்பால் வருவித்தருள, நாரதர்முதலியோர் கண்டு மகிழ்ந்து எமதுவேள்வியில்வந்த தகரையூர்தியாகக் கொள்ளவேண்டுமென்று குறையிரக்க, அருள்செய்து அவ்வாறு கொண்டருளினமையை,—

"இரிந்தவர்கள்யாவரையுமிப்புவியும்வானுந்
துரந்துசிலர்வீழ்ந்துதொலைவாகநனிதாக்கிப்
பரந்ததரைமால்வரைபராகமெழவோடித்
திரிந்துயிர்வருந்தவடல்செய்ததுசெயிர்த்தே."

"எட்டுளதிசைக்கரியிரிந்தலறியேங்கக்
கிட்டியெதிர்தாக்குமதிகேழ்கிளருமானந்
தட்டிரவிதேரொடுதகர்ந்துமுரிவாக
முட்டுமெவர்தம்பரியைமொய்ம்பினொடுபாயும்" எனவும்.

"ஆடலந்தொழின்மேல்கொண்டேயனைவருமிரியச்செல்லு
மேடமஞ்சுறவேயார்த்துவிரைந்துபோய்வீரவாகு
கோடவைபற்றியீர்த்துக்கொண்டுராய்க்கயிலைநண்ணி
யேடுறுநீபத்தண்டாரிளையவன்முன்னருய்த்தான்" எனவும்.

"என்னலுந்தகரையற்றேயானமாக்கொள்வம்பார்மேன்
முன்னியமகத்தைநீவிர்முடித்திரென்றருளயார்க்கு
நன்னயமாடல்செய்யுநாரதன்முதலோர்யாரு
மன்னதோர்குமரனெந்தையடிபணிந்தருளாற்போந்தார்."

"நவையில்சீர்முனிவர்தேவர்நயப்பநாரதனென்றுள்ளோன்
புவிதனில்வந்துமுற்றப்புரிந்தனன்முன்னர்வேள்வி
யவர்புரிதவத்தினீராலன்றுதொட்டமலமூர்த்தி
யுவகையாலனையமேடமூர்ந்தனனூர்தியாக"

எனவும் கந்தபுராணத்தில் வருதல் காண்க. (அகூ)

மின்னற்சுடர்விழுதோட்டுமணிக்குழைமெல்லியலார்
பொன்னுற்றபூண்முலைவேட்டநெஞ்சேயிதுபொய்ம்மயக்கே
தன்னைத்தலைவனையாராய்ந்தடையுந்தகைமையின்பக்
கென்னப்பனுகியபோரூர்ச்செவ்வேளையிறைஞ்சுவையே.

(இ - ள்.) மின்னல்-மின்னலைப்போல, சுடர் விழுது ஓட்டும் மணி குழை ஒளியை விழுதுபோல்விடும் இரத்தினமிழைத்தகுண்டலத்தையணிந்த, மெல்லியலார் பொன் உற்ற பூண்முலை - பெண்களதுதேமல்பூத்தஆபரிணமணிந்த தனத்தை, வேட்டநெஞ்சே - விரும்பியமனமே, இது பொய் மயக்கு - இவ்வி

ரும்புதல்பொய்மயக்காம், தன்னை தலைவனை ஆராய்ந்து-முன்புதன்னையும்பின்பு தலைவனையுந்தரிசித்து, அடையும் தகைமை இன்பக்கு - அத்தலைவனையடையும் பொலிவுவாய்ந்த பேரின்பமடைதற்கு, என் அப்பனாகிய போரூர் செவ் வேளை-என்தந்தையாகிய திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளை, இறைஞ்சுவை - வணங்குவாய் (வணங்கில் பேரின்பமடைவதுமெய்)

(பொ - ரை.) மின்னல்போல ஒளியை விழுதுபோலவிடும் இரத்தின மிழைத்தகுண்டலத்தையணிந்த பெண்களது தேமல்பூத்த ஆபரணத்தையணிந்த தனத்தைவிரும்பியமனமே நீவிரும்பியுழலும் இதுபொய்மயக்கம், தன்னையும் தலைவனையுந்தரிசித்து அவனையடையும்பேரின்பம்வாய்த்தற்குத் திருப்போரூரி லெழுந்தருளிய முருகக்கடவுளை வணங்கு இதனால்வரும் பேரின்பம் மெய்.

இன்பக்கு அத்துச்சாரியைதொகுத்தல். பொன் பொன்னென்னுமுவமானச்சொல்லால் தேமலாகிய உபமேயச்சொல்லை இலக்கணையாகக் கூறுதலால் உருவக உயர்வுநவிற்சியணி. தன்னையறிதலாவதுபிருதுவிமுதலிய முப்பத்தாறு தத்துவங்களின் உண்மையையுணர்ந்தால் தேகாதிபிரபஞ்சங்கள்நீங்கும். அது நீங்கில் தற்போதத்தின் மேலீடாகிய இச்சாஞானக்கிரியைகள்நீங்கும், அவை நீங்க அருளே உடம்பாய் நின்றவிடம் ஆன்மதரிசனமாதலால் தன்னையாராய்ந் தெனவும், அவ்வருள் மேலீட்டால் தற்போதம்சீவியாமல் நின்றவிடத்து அத் திருவருள்ஞானத்திற்கு முதலாகிய சிவம் தோன்றுமாதலால் தலைவனையாராய்ந்தெனவும், அச்சிவத்தையுணர்ந்தவிடத்து அவ்வருட் சத்தி சிவத்தோடுகூட்டுமாதலால் அடையுந்தகைமை யெனவும், அங்குத் தோன்றுவது பேரின்பமாதலால் இன்பக்கு எனவுங்கூறினர். (கூ0)

மகுடங்களாறுங்குழையோர்பனிரண்டும்வானவரும்
புகழுங்கடகங்களீராறுமாழியும்பூனதப்பொன்
றிகழுமதாணியுஞ்செந்துகிராடையுஞ்செஞ்சிலம்பு
நிகழும்படிதரித்தோர்தெய்வம்போரிநிலாவியதே.

(ப - ரை.) மகுடங்கள் ஆறும் - மகுடங்களணிந்த திருமுடிகளாறும், குழை ஓர் பன்னிரண்டும் - குண்டலங்களையணிந்த திருச்செவிகள் பன்னிரண்டும், வானவரும் புகழும் - தேவர்களும் புகழாநின்ற, கடகங்கள் ஈராறும்-கடகங்களணிந்த திருப்புயங்கள் பன்னிரண்டும், ஆழியும் - மோதிரங்களும், பூனதம் பொன் திகழு மதாணியும் - சாம்பூநதமென்னும் பொன்னாலமைந்து விளங்கும் ஆபரணங்களும், செந் துகிர் ஆடையும் - செவந்த பவளம்போன்ற செவ்வாடையும், செம் சிலம்பும் - மாணிக்கங்களாற் செந்நிறம்வாய்ந்த சிலம்பணிந்த திருவடியும் (ஆகிய இவை), ஓர் தெய்வம் - ஒப்பில்லாத முருகக் கடவுள், நிகழும் படி தரித்து - விளங்கும் படிதரித்து, போரி நிலாவியது - திருப்போரூரென்னுந் திருப்பதியில் விளங்கியது.

(பொ - ரை.) மகுடங்களணிந்த ஆறு திருமுடிகளும் குண்டலங்களை யணிந்த திருச்செவிகளும் தேவர்களும் புகழும் கடகங்களணிந்த பன்னிரண்டு திருப்புயங்களும் திருவிரலாழியும் சாம்பூநதப் பொன்னாலமைந்த ஆபரணங்

களும் செவந்த பவளம்போன்ற செவ்வாடையும் செவந்த சிலம்பணிந்த திருவடியும் ஆகிய இவைகள் ஓர் கடவுள் விளங்கத் தரித்துத் திருப்போரூரென்னுந் திருப்பதியில் விளங்கியது.

தெய்வம் பொருளால் உயர்திணையாயினும் சொல்லால் அஃறிணையாதலால் தெய்வம் போரியில் நிலாவியதே யென்றார். பொன் நால்வகையுள் - சாம்பூநதமென்னும் பொன் ஓர்வகையாதலால் பூனதப் பொன்னென்றார். சாம்பூநதமெனப் பெயர் வந்தது மேருவின் தென்பாலிலுள்ள நாவற்கனியின் சாறோடுசேர்ந்து நிற்றலால், சாம்பூநதமென்ற இது காரணப்பெயர். இது முதற்குறையாய் நின்றது. திருமுகங்களும், திருத்தோள்களும் திருவடிகளும் அருளுந்தன்மையுடையனவாதலால் அது தோன்ற ஆசிரியமூர்த்தமாய் வந்தருளினமையைக்கூறினார். (கூக)

நின்பாததாமரைக்கன்பேதுமின்றியநீசன்பொல்லேன்
புன்போதமேலிட்டபொய்யேன்பிழையைப்பொறுத்தருளா
யம்போருகமலரோராறலர்ந்தவருட்கடலே
செம்போரிவேலவனேயிமையோர்கள்சிகாமணியே.

(ப - ரை.) அம்போருகமலர்ஓராறு - ஆறுதாமரைமலர்கள், அலர்ந்தஅருள்கடலே - மலர்ந்தகருணைக்கடலே. செம்போரிவேலவனே - நடுநிலைமையுடைய திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளே, இமையோர்கள் சிகாமணியே - தேவர்கள் சூளாமணியே, நினபாததாமரைக்கு - உனதுதிருவடித்தாமரைக்கு, அன்பு ஏதுமின்றிய - அன்புசிறிதுமில்லாத, நீசன்பொல்லேன்- கடைப்பட்டயான்மிகவும் கொடியேன், புன்போதமேலிட்டபொய்யேன் - புல்லியவறிவே மேற்கொண்டபொய்மையுடையேன் (ஆயினும்பிழையை பொறு)த்தருளாய் - அடியேன்பிழையைப்பொறுத்து அருள்செய்யாய்.

(போ-ரை.) ஆறுதாமரைகள்மலர்ந்த கருணைக்கடலே திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளே தேவர்கள்சூளாமணியே உன்திருவடித்தாமரைக்கு அன்பு சிறிதுமில்லாத கடைப்பட்டேனாகிய நான்கொடியனும் புல்லறிவுவாய்ந்த பொய்மையுமுடையவனாயிருப்பினும் என்பிழையைப் பொறுத்தருட்கருணைசெய்யாய்.

இடத்திற்கும் இடத்தினிகழ்பொருளுக்கும் ஒற்றுமையுண்மையால் இடத்திலுள்ளோர் நடுநிலைமையை இடத்தின்மேலேற்றிச் செம்போரியெனவும், திருமுகங்களாகிய அவையவங்களை ஆறுதாமரைகளெனவும், அவையவியாகிய முருகக்கடவுளை அருட்கடலேஎனவும் கூறினார். திருமுகங்களைத் தாமரைகளாகவும் முருகக்கடவுளை அருட்கடலாகவும் கூறியது உருவகஉயர்வுநவிற்சியணி.

செப்புக்கவித்தன்னவன்குரத்தான்மண்சிதைத்தெறியுந்
துப்புற்றமாவிற்கிணையாகவோதினர்சொல்கணத்தே
யொப்பற்றமுவுலகும்போய்த்திரும்புமொருமனத்தை
யெப்பெற்றியாலுரைத்தார்சமராபுரியெண்குணனே.

(ப - ரை.) சமராபுரி எண்குணனே - சமராபுரியென்னுந் திருப்பதியில் வாழும் எண்குணங்களையுடையவனே, கணத்தே - ஒரு கணப்பொழுதே, ஒப்பு அற்ற மூவுலகும் போய் - ஒப்பிகந்த சுவர்க்கமத்திய பாதாளமென்னும் மூன்றுலகங்களிலுஞ் சென்று, திரும்பும்ஒரு மனத்தை - மீளும் ஒரு மனத்தை, செப்பு கவித்தால் அன்ன-கரண்டகத்தைக் கவித்தாலொத்த, வன்குரத்தால் - வலிய குளம்பால், மண்சிதைத்து எறியும் துப்பு உற்ற - மண்ணிலைக் கிளைத்துவீசும் வலிமை மிக்க, மாவிற்கு இணையாக ஓதினர் - குதிரைக்கு ஒப்பாகக்கூறினர், எப்பெற்றியாலுரைத்தார் - எந்தக்காரணத்தினாலுவமைகூறினார்கள், இஃதறியேன் (நீ கூறாய்.)

(போ - ரை.) திருப்போரூரிலெழுந்தருளிய எண்குணனே கணப்பொழுதிலே மூன்றுலகத்தினுஞ்சென்று திரும்பும் மனத்தினைக் குதிரை வேகத்துக்கொப்பாகக்கூறினர், எக்காரணத்தாலவ்வுவமைகூறினரோ இஃதறியேன் நீ கூறினாய்.

எண்குணங்களாவன,—தன்வயத்தனாதல், தூயவுடம் பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பலின்பமுடைமை.

தன் வயத்தனாதல் - ஏனைத்தேவர்கள்போல் பரதந்தரனாகாது சுதந்தரனாதல், தூய உடம்பினனாதல் - விசுத்த தேகமுடையவனாதல், இயற்கையுணர்வினனாதல் - நிராமயான் மாவாதல்,முற்றுமுணர்தல்-சர்வஞ்ஞத்தனாதல், இயல்பாகவே பாசங்களினீங்குதல் - அநாதிபோகமுடைமையனாதல், பேரருள் உடைமை - அலுத்த சத்தியுடைமை, முடிவிலாற்றலுடைமை - அனந்த சத்தியுடைமை, வரம்பலின்பமுடைமை - திர்ப்தியுடைமை. இவை யெண்குணங்களின் வகையாதலால் இவற்றை யொருங்கேயுடைய இறைவனென்பார் எண்குணனே யெனவும், கணப்பொழுதிலே மூன்றுலகங்களிலுஞ்சென்று திரும்பு மனத்தை அவ்விரைவு தனக்குச்சிறிதுமில்லாத மனத்துக்கு ஒப்பாகக்கூறியது என்ன காரணந் தெரிந்தோ என்பார் எப்பெற்றியாலுரைத்தாரெனவும், எங்கும் விடயங்களிற் சென்று திரும்பும் வேகத்தினையடக்கி யென் மனத்தைத் திருவடிகளிற் சேர்ப்பாய் என்பார் சொல்லெனவுங்கூறினர். (௩௬)

மெய்யாநெறிக்கணடியேன்செலுத்தவிலங்கிமிகு
பொய்யாநெறிக்கண்ணெனைக்கொடுபோமுளப்போர்க்களிற்றை
யையாநினதருளாங்கயிற்றூற்பிணித்தானதண்டைச்
செய்யாருந்தாட்கந்துசேர்ப்பாய்தென்போரியஞ்சேவலனே.

(ப - ரை) தென்போரி அம் சேவலனே - இமமலைக்குத் தென்பாலுள்ள திருப்போரூரிலெழுந்தருளிய அழகிய சேவற்கொடியையுடைய இறைவனே, மெய்யாம்நெறிக்கண் - உனது திருவருண்ஞானவழியில், அடியேன்செலுத்த- அடியேன்செலுத்தவும், விலங்கி - அவ்வழியிற் செல்லாதுவிலகி, மிகுபொய்யாம்நெறிக்கண் - மிக்க அஞ்ஞானமானவழியில், என்னைகொடுபோம் - என்

ளைக்கொண்டுசெல்லும், உளம்போர்களிற்றை - மனமாகிய போர்த்தொழிலையுடைய யானையை, ஐயா - ஐயனே, நினது அருள்கயிற்றால் பிணித்து - உனதுதிருவருளாகிய கயிற்றாற்கட்டி, ஆனதண்டை - அடியவர்க்குதவும் தண்டையையணிந்த, சேய் ஆரும் கந்துதாள் சேர்ப்பாய் - செந்நிறம்வாய்ந்த உனதுதிருவடியாகிய கட்டுத்தறியில் பிணிப்பாய்.

(போ - ரை.) திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளே. உனது சிவஞானவழியில் அடியேன்செலுத்தவும் அவ்வழியிற்செல்லாதுவிலகி அஞ்ஞானவழியிற்கொண்டுசெல்லு மனமாகியயானையை உனதுஅருளாகிய கயிற்றாற் கட்டி உனதுதிருவடியாகிய கட்டுத்தறியிற்பிணிப்பாய்.

சேய்,செய்யெனநின்றது-குறுக்கும்வழிக்குறுக்கல்விகாரம். தன்னைப்பாகனாகவும் மனத்தையானையாகவும், திருவருளைக்கயிறாகவும், திருவடியைக் கட்டுத்தறியாகவும் உருவகஞ்செய்தது மிகைகுறையின்றிவந்த ஒற்றுமை உருவகவணி. (கச)

உள்ளுறுபுன்னினைவெல்லாமொழிந்திங்குணர்வரிய
நள்ளிருளன்னவஞ்ஞானமுந்தீர்ந்துநலனுதவுந்
தெள்ளியபேரருளுடேகலந்தின்புசேர்ந்திருப்பக்
கள்ளநெஞ்சேற்கும்வருமோதென்போரியங்காங்கெயனே.

(ப - ரை.) தென்போரி அங் காங்கேயனே - தென்பாலுள்ள திருப்போரூரி லெழுந்தருளிய அழகிய முருகக்கடவுளே, உள்உறு - மனத்திலமைந்த, புல் நினைவு எல்லாம் ஒழிந்து - புல்லிய நினைவையெல்லாம் கட்டறவிட்டு, இங்குஉணர்வு அரிய - இந்நிலவுலகில் அறிதற்கரிய, நள் இருள் அன்ன-நடுவிருளையொத்த, அஞ்ஞானமும் தீர்ந்து - ஆணவமலமாகிய அஞ்ஞானத்தினின்றுந்தீர்ந்து, நலன் உதவும் - முத்தி நன்மையைத்தரும், தெள்ளிய பேர் அருள் ஊடேகலந்து - குற்றமில்லாத வுனது திருவருளிடத்தேகலந்து, இன்பு சேர்ந்திருப்ப - பேரின்பத்தில் திளைத்திருக்க, கள்ளம் நெஞ்சேற்கும் வருமோ - கள்ளம்வாய்ந்த மனத்தையுடைய எனக்குச் சித்திக்குமோ (சித்தியாதென்றபடி)

(போ - ரை.) திருப்போரூரி லெழுந்தருளிய முருகக்கடவுளே மனத்துளமைந்த புல்லிய நினைவையெல்லா மொழிந்து இந்நிலவுலகில் அறிதற்கரிய நடுவிருளை யொத்த ஆணவமல திமிரமும் நீங்கி முத்திநலத்தைத்தரும் உனது திருவருளுடேகலந்து பேரின்பத்திற்றிளைத் திருக்கவஞ்சம் வாய்ந்த மனத்தையுடைய எனக்கும் கைகூடுமோ. (கூடாது என்றபடி)

உள்ளுறு புன்னினைவுளன்பது இருவகைப்பற்றையும், அது ஒழிந்தவிடத்து ஆணவமலமிகுதி கெடுதலால் அஞ்ஞானமுந்தீர்ந்தெனவும், அதுதீர்ந்தவிடத்துத் திருவருள் மேலிடுதலால். நலனுதவுந் தெள்ளிய பேரருளுடே கலந்தெனவும், அத்திருவருள் சிவத்தோடு கூட்டுதல்லால் - இன்பு சேர்ந்திருப்ப எனவுங்கூறினர். (கரு)

எல்லாப்பொருள்களுந்தாளுகித்தானொன்றிலேய்வதின்றாய்ச்
சொல்லாற்கருத்ததனாற்சென்றுகூடருஞ்சோதியதா
மல்லாரணப்பொருணாயேற்குமீயமதித்திகொல்லோ
நல்லார்க்கினியகுகனேதென்போரியென்னாயகனே.

(ப - ரை.) நல்லார்க்கினியகுகனே - உன்னடியர்மனத்துக்கு இனியமுருகனே, தென்போரி என் நாயகனே - தென்பாலுள்ள திருப்போரூரிலெழுந்தருளிய என்இறைவனே, எல்லாப்பொருள்களும் தான் ஆகி-உலகிலுள்ள எல்லாப் பொருள்களுந்தானேயாகி, தான் ஒன்றில் ஏய்வது இன்று ஆய் - தான்அப்பொருள் ஒன்றிலும் பொருந்துதல் இல்லையாகி, சொல்லால் கருத்ததனால் - வாக்காலும் மனத்தாலும், சென்றுகூடருஞ் சோதியது ஆம் - சென்றடைதற்கரிய ஒளியாயும்நிறைந்து, மல் ஆரணப்பொருள் - வளம்நிறைந்தவேதத்தினுட்கிடையை, நாயேற்கும் ஈயமதித்திகொல்லோ - நாயிற் கடைப்பட்ட எனக்குந்தந்தருளக்கருதினையோ (அறியேன்.)

(போ - ரை.) அடியவர் மனத்துக்கினிய முருகனே, தென்பாலுள்ள திருப்போரூரிலெழுந்தருளிய எனதிறைவனே எல்லாப்பொருளுந்தானாய் அப்பொருள்களுக்கு வேறாய்வாக்காலும் மனத்தாலும் அறிதற்கரிய ஒளியாய்நிறைந்தவளம் நிறைந்தவேதத்தினுட்கிடையை நாயிற்கடைப்பட்ட எனக்குத் தந்தருளக் கருதினையோ, இல்லையோ அறியேன்.

அவனவளதுவென்றுசுட்டப்படும் பிரபஞ்சத்தினிடத்துக்கலப்பால் அவைதானாய் நிற்றலின் எல்லாப்பொருள்களுந்தானாகி யெனவும், இப்பிரபஞ்சத்தோடுகூடிநிற்பினும் பொருட்டன்மையால் அதற்குவேறாய்நிற்றலின் தானொன்றிலேய்வதின்றாய்எனவும், சொல்விந்துதத்துவத்தின் காரியப்படாதலாலும் மனம்பிரகிருதியின் காரியப்பாடாதலாலும் சொல்லாற்கருத்ததனாற் சென்றுகூடருஞ்சோதியதாயெனவும், இவ்வாறுள்ளது சிவமாதலால் ஆரணப்பொருளெனவுங்கூறினார். (கூசு)

எண்ணியவெண்ணியவாறேசிறியனுக்கீந்தருளும்
புண்ணியனேநின்மகிமையையோர்ந்திலன்பொய்யவனேன்
கண்ணுறுமாமணியேகருத்தூறுங்கனிரசமே
தண்ணளிமாமுகிலேபோரிமேவியசண்முகனே.

(ப - ரை.) எண்ணிய எண்ணிய ஆறே - கருதியவற்றைக் கருதியபடியே, சிறியனுக்கு ஈந்தருளும் புண்ணியனே - சிறியனுக்குத் தந்தருளும் புண்ணிய சொரூபியே, கண் உறுமாமணியே - கண்ணிலமைந்த மணியே, கருத்து ஊறுங்கனிரசமே - என் மனத்தில் தித்தித்தூறும் முக்கனிரசமே, தண் அளி மாமுகிலே-தண்ணிய கருணைபொழியும்மேகமே, போரி மேவிய சண்முகனே திருப்போரூரிலெழுந்தருளிய ஆறு திருமுகங்களையுடையவனே, பொய்யவனேன்-பொய்ம்மையையுடைய யான், நின் மகிமையை ஓர்ந்திலன் - உனது மகிமையைச் சிறிது முணர்ந்திலன்.

(போ - ரை.) அடியார்கருதினவற்றைக் கருதினவண்ணமே சிறியேனு க்குத் தந்தருளும் புண்ணிய சொரூபியே, கண்ணுளமைந்த மணியே, என் மனத்திலூறு முக்கனிரசமே, தண்ணிய கருணைபொழியு மேகமே, திருப்போ ரூரி லெழுந்தருளிய ஆறுமுகங்களையுடையவனே பொய்ம்மையையுடைய யான் உன் மகிமையைச் சிறிதும் உணர்ந்திலன்.

கண்ணுள்மணி தீயவழியை நீக்கி நல்ல வழியைக் காட்டுதல்போல என் பொய்ந்நெறியைவிலக்கி மெய்ந்நெறியைக் காட்டுதலால் கண்ணுறுமாமணியே எனவும், அம்மெய்ந் நெறியால் என் மனத்திலின்ப நிறைத்தலால் கருத்தூ றுங் கனிரசமே யெனவும், கைம்மாறு கருதாதுஇவ்வாறு கருணைவைத்த லால் தண்ணளிமாமுகிலே யெனவும், அக்கருணையால் அடியேன் கருதினவற் றைக் கருதினவண்ணங் கொடுத்தருளுதலால் எண்ணிய வெண்ணியவாறே சிறியனுக்கீந்தருளும் புண்ணியனே யெனவும், பொய்ந்நெறியிற் சிக்குண்டோ னிவனென்றுணர்ந்தும் நீயருளுதலால் நின் மகிமையை யோர்ந்திலன் என வுங்கூறினார். (கூஎ)

உள்ளத்தழுக்கினைபெல்லாமகற்றியுனதுபத
வள்ளக்கமலத்தெழுநறவானந்தவாரியிலே
கள்ளச்சிறியனை வைத்தாளவேண்டுங்கழனிமடை
யள்ளத்திறந்திடும்வாளைகள்போரியயிலவனே.

(ப - ரை.) கழனிமடை அள்ள - வயல் மடை நீரைமடுக்க, வாளைகள் தி றந்திடும் - வாளைகளம் மடைநீரைத்திறக்கும், போரி அயிலவனே-திருப்போ ரூரிலெழுந்தருளியமுருகக்கடவுளே, உள்ளத்து அழுக்கினை எல்லாம் அகற்றி- எனதுயிரில் நென் முனைபோல் ஒற்றித்த ஆணவமலச் செருக்கை எல்லாமொ ழித்து, உனது பதம் - உனது திருவடியாகிய, வள்ளம் கமலத்து - கிண்ணம் போலும்வாயமைந்த தாமரையில், எழு நறவு ஆனந்தவாரி - ஊற்றெடுக்குந்தே னாகிய சிவானந்த வெள்ளத்தில், கள்ளம் சிறியனை வைத்து ஆள வேண்டும் - கள்ளத்தையுடைய நாயிற்கடைப்பட்ட என்னையு மிருத்தி ஆளவேண்டும்.

(போ - ரை.)வயல் மடைநீரை மடுக்கவாளை மீன்கள் அம்மடையைத்திற க்கும் திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளே, எனதுயிரில் நென்முனை போல ஒற்றித்த ஆணவமலச்செருக்கையெல்லாமொழித்து உனது திருவடி யாகியதாமரையில் ஊற்றெடுக்குந்தேனாகிய சிவானந்த வெள்ளத்தில் நாயிற் கடைப்பட்ட சிறியேனையும் வைத்து ஆட்கொள்ளவேண்டும். (கூஅ)

மலஞ்சோர்கடத்தைப்பிணிக்கூட்டையொன்பதுவாயிற்பையை
நலஞ்சாலவெண்ணிக்கடையேன்களித்தனனுய்ப்புலையேன்
றிலஞ்சார்தயிலமெனவெங்குமானசிவானந்தத்தேன்
கலந்தேகளிப்பதென்றோசமராபுரிக்காங்கெயனே.

(இ - ள்.) சமராபுரி காங்கேயனே - திருப்போரூரி லெழுந்தருளிய முரு கக்கடவுளே, மலஞ்சோர்கடத்தை - மலங்கள்ததும்பிச் சோரும் குடத்தினை,

பிணி கூட்டை—நோய்செறிந்த கூட்டினை, ஒன்பது வாயில் பையை - நவத்துவாரங்களையுடைய தோற்பையினை, கடையேன் நலம் சால எண்ணி - நாயிற்கடைப்பட்டயான் மிகவும் அதனைப் பயனுள்ளதாகக்கருதி, களித்தனன்- களிகூர்ந்தேன், நாய் புலையேன்-நாயையொத்தகீழ்மையை யுடையேன், திலம் சார் தயிலம் என்ன—எள்ளிலமைந்த எண்ணெயைப்போல, எங்கும் ஆன சிவானந்தம் தேன் —எங்கு நிறைந்துள்ள சிவானந்தமென்னும் தேனினை, கலந்தே களிப்பது என்றோ—கலந்தேகளித்தல் எந்நாளோ (கூறாய்.)

(பொ-ரை.) சமராபுரியிலெழுந் தருளிய குமாரக்கடவுளே மலங்கள் சிந்தும் கும்பமும், நவத்துவாரங்களையுடைய சோற்பையுமாகிய வுடம்பினைக்கடைப்பட்டயான் மிகவும பயனுள்ளதாகக் கருதிஇறுமாந்து இதுகாறுமிருந்தேன் நாயினுங்கீழ்மையையுடைய யான், இனியாவது எள்ளிலமைந்த நெய்போல எங்கும் நிறைந்த சிவானந்தமென்னுந் தேனொடுகலந்து களிகூர்வது எந்நாளோவருளாய்.

நவத்துவாரங்களிலும் மலஞ்சோருதலால் மலஞ் சோர்கடத்தை எனவும், உடல் அங்குரித்தவன்றே நோயும் அங்குரித்தலால் பிணிக்கூட்டை எனவும், நவத்துவாரங்கள் உடலோடுண்மையால் ஒன்பதுவாயிற் பையை எனவும், இத்தன்மைத்தாகிய கீழ்மையையுடைய உடம்பினை மிகவும் பயனுள்ள பொருளெனக்கருதிக் களித்தமையால் களித்தனன் எனவும், எள்ளுக்குள் நெய் உள்ளும் புறம்பும் விரவியிருத்தல்போலச் சிவம் ஆன்மாக்கள்தோறும் விரவி நிற்றலால் எங்குமான சிவமெனவும், அச்சிவம் ஆனந்த வடிவாதலால் அடைந்தோர் நுகர்வது தேன்போலும் மதுரச்சுவையையுடைமையதால் ஆனந்தத்தேனெனவும், அதனை யானும் நுகர்ந்துகளித்தல் எக்காலங் கூடுமென்று கவன்றனராதலால் கலந்தே களிப்பதென்றோ எனவுங் கூறினார். (௬௬)

எண்ணிலிகாலத்தின்பின்னரிக்காயமினிதளித்தாய்
நண்ணுறுமீதினுமெய்ப்பத்தியீந்திலைநாயடியேன்
பண்ணியபாவமென்றேகும்பரகதியென்றடைவேன்
விண்ணுறுதேவருஞ்சூழ்போரிவாழ்கின்றவேலவனே.

(இ-ள்.) விண் உறு தேவரும் சூழ்போரிவாழ்கின்ற வேலவனே - விண்ணுலகில்வசிக்குந் தேவரும்வலம்வரும் திருப்போரூரில்வாழும் வேற்படையையுடைய இறைவனே, எண் இலி காலத்தின் பின் - அளவிறந்த காலஞ்சென்றபின், இக்காயம் இனிது அளித்தாய்-இம்மானுடசரீரத்தை இனிதாகத்தந்தருளினாய், நண்ணுறும் ஈதினும் - கிடைத்த இம்மானிடப்பிறப்பிலும், மெய்பத்தி ஈந்திலை - உண்மையாகிய பத்திதந்தருளினாயில்லை, நாய் அடியேன் பண்ணிய பாவம் என்று ஏகும் - நாயிற்கடைப்பட்ட அடியேன் செய்தபாவம் எக்காலையில் நீங்கும், பரகதி என்று அடைவேன் - முத்திநிலையை எக்காலத்திலடைவேன்.

புல்முதலிய நிலையியற்பொருளாகவும், மிருகமுதலிய இயங்கியற் பொருளாகவும் எடுத்துழன்றதின் பின் நின்திருவடியையடைதற்கு அவ்வியங்கியற் பொருளுளொன்ருகிய இவ்வுடம்பைத்தந்தருளினுய் என்பார் எண்ணிலிகாலத்தின் பின்னரிக்காயமினி தளித்தாய் எனவும், இப்பிறப்பும் அப்பிறவிகள் போலப்பயன்பட்டதல்ல வென்பார் நண்ணுறுமீதினும் மெய்ப்பத்தி யீந்திலையெனவும்,ஆதலாலிப்பாவம் என்றுகழியுமென்பார் பண்ணிய பாவமென் றேகுமெனவுங்கூறினர். (௧௦௦)

திரவணிநீடியபோரூர்கைகூப்பிச்செழுங்கமலச்
சரவணவாவியினீராடித்தங்கச்சதங்கைகொஞ்சுங்
குரவணிபாதம்பணிவோர்க்கினிமைகொடுக்கும்பிரா
னரவணிவோன்குமராவடியேனுன்னடைக்கலமே.

(இ-ள்.) திரம் அணி நீடிய போரூர்கை கூப்பி-நிலைபெற்ற பொலிவுமிக்க திருப்போரூரைக் கைகுவித்து, செழும் கமலம் சரவணவாவியில் நீராடி - அன்றலர்ந்த தாமரைகள் நிறைந்தசரவணப் பொய்கையில் நீராடி, தங்கம் சதங்கை கொஞ்சும் குரவு அணிபாதம் பணிவோர்க்கு-பொன்னுலமைந்த சதங்கை தழுவியொலிக்கும் குராமலரையணிந்த திருவடியை வணங்குவோர்க்கு, இனிமைகொடுக்கும்பிரான் - சிவபோகந் தந்தருளும் பெருமானே, அரவு அணிவோன் குமரா - சர்ப்பாபரணத்தையணிந்த சிவபெருமான் புத்திரனே, அடியேன் உன் அடைக்கலம் - அடியேன் உன்னை அடைக்கலமாகக் கருதியடைந்தேன். (என்னைக் காவாயென்றபடி.)

(பொ-ரை.) நிலைபெற்ற திருப்போரூரைக்கண்டு கைகூப்பிவணங்கித் தாமரைமலர்ந்த சரவணப்பொய்கையில் நீராடி உனது திருவடியை வணங்குவோர்க்குச் சிவபோகந்தந்தருளும் இறைவன் நீயாதலால் அதனைக்கருதித் தேவரீரைச் சரண்புகுந்தேன்.

என்றும் பாலபருவமுடைமையால் தங்கச்சதங்கை கொஞ்சுமெனவும், குறிஞ்சிநிலக் கடவுளாதலால் குரவணிஎனவும், திருவடி வழிபட்டோர்க்குப் பேரானந்தந் தருதலால் பாதம்பணிவோர்க் கினிமைகொடுக்கும் பிரான் எனவும் கூறினர். (௧௦௧)

அலங்காரமுற்றிற்று.

மாலை.

## காப்பு.

நேரிசை வெண்பா.

மருப்புநிலவாலென்மலதிமிரம்போக்குங்
கருக்கோடைபோக்குமதக்காரற்—திருப்போரூர்
நிம்பத்தின்கீழிருந்துநேயர்க்குவாழ்வளிக்குங்
கம்பக்கடமாகளிறு.

(இ-ள்.) திருப்போரூர் நிம்பத்தின் கீழ் இருந்து - திருப்போரூரில் வேம்பின்கீழெழுந்தருளியிருந்து, நேயர்க்கு வாழ்வு அளிக்கும்-அடியார்க்குச் சிவஞானவாழ்வுதந்தருளும், கம்பம் கடம் மா களிறு-அடியருள்ளமாகிய கம்பத்திற் பிணிப்புண்ட திருவருளாகிய மதத்தைச்சிந்தும் பெருமைவாய்ந்தயானை, என் மலதிமிரம் - என்மலமாகிய அந்தகாரத்தை, மருப்புநிலவால் போக்கும் - தனது தந்தத்தின் கிரணத்தால் ஒழித்தருளும், மதம் காரால் - மதமாகியமேகத்தால், கரு கோடை போக்கும் - பிறப்பாகிய கோடையைப் போக்கியருளும்.

வேம்பு உயிர்களின் கண்ணோறு போக்கி மகிழ்ச்சியருளுதல்போல, அடியவர்க்குப் பிறவியென்னுங்கண்ணோறு போக்கிச் சிவானந்தம் அளித்தற்பொருட்டு வேப்பமரத்தின்கீழ் எழுந்தருளி யிருத்தலால் நிம்பத்தின் கீழிருந்து நேயர்க்கு வாழ்வளிக்கும் எனவும், அடியவருள்ளத்தில் நிலைபெற்றிருத்தலால் உவமேயத்தை யிலக்கணையாற் புலப்படுத்த உருவகவுயர்வு நவிற்சியணியாக உள்ளத்தைக் கம்பமெனவும், ஏனைய அவயவங்களில் தலைசிறந்து உத்தமாங்கமெனத் தனக்கோர் காரணப் பெயருடைமையால் விநாயகக்கடவுள் தேவவுறுப்பு முதலியவை வாய்ந்தும் யானைமுகமுடைமையால் கடமாகளிறு எனவும், களிறுகவுருவகஞ் செய்தமையால் கொம்பினை இளஞ்சந்திரனாக வுருவகஞ்செய்து சந்திரன் புறவிருளைப்போக்குதல்போல இது அகவிருளாகிய மலவிருளைப்போக்கலால் மருப்புநிலவான் மலதிமிரம் போக்கும் எனவும், மேகம் கோடைவெப்பொழித்தல்போலத் தனது கருணையென்னும் மதத்தால் பிறவிவெப்பொழித்தலால் கருக்கோடை போக்குமதக்காரால் எனவுங்கூறினர். இது இயைபுருவகவணி.

## நூல்.

பூவார்ந்தகற்பகப்பூம்பொங்கரிடத்திற்சிறந்த
தேவாய்ந்தசெல்வமுதற்செல்வமெல்லாம் - தூவாய்ந்த
வேள்பணிந்தபேரழகாமேதகுபோரூராவின்
றாள்பணிந்தார்க்குண்டாகுந்தான்.

(இ-ள்.) தூ வாய்ந்த வேள் பணிந்த பேர் அழகா - களங்கமில்லாத மன்மதன் வணங்கி வழிபடும் பேரழகுடையவனே, மேதகு போரூரா - மேன்மை

யமைந்த திருப்போரூரை யுடையவனே, நின் தாள் பணிந்தார்க்கு - உனது திருவடியை வணங்கி வழிபட்டோர்க்கு, பூ ஆர்ந்த கற்பகம் பூம் பொங்கர் இடத்தில் சிறந்த தே - மலர்நிறைந்த பொலிவுவாய்ந்த கற்பகச்சோலையினிடத்தில் மேம்பட்டுவிளங்கிய இந்திரனது, வாய்ந்த செல்வம் முதல் செல்வம் எல்லாம் - நிறைந்த செல்வமுதலிய எனைச்செல்வங்களெல்லாம், உண்டாகும்-தாமேவந்து கைகூடும்.

அரசர்முதலியோர் செல்வத்தினும் இந்திரன் செல்வம் மேம்பட்டதாதலால் தேவாய்ந்த செல்வமுதற் செல்வமெல்லாம் என்றார். இதனால் முருகக்கடவுளை வழிபடுவோர்க்கு இம்மை மறுமைப்பயன் வாய்த்தலைக்கூறினார். (க)

காழியிலேவந் துகணக்கிலாச்சிவரைநீ
டூழியின்பத் துய்த்தவொருவனே - யாழியெனுந்
துன்பத்திருந்தேனைத் தூக்கித்தென்போரூரா
வின்பத்துள் வைப்பாயினி.

(இ-ள்.) காழியிலே வந்து கணக்கு இல்லாத சிவரை நீடூழி இன்பத்து உய்த்த ஒருவனே - சீகாழியிலவதரித்து அளவில்லாத சிவர்களை என்றும் அழிவில்லாத முத்தியின்பத்திற்செலுத்திய ஒருவனே, தென் போரூரா - இமமலைக்குத்தென்பாலுள்ள திருப்போரூரனே, ஆழி என்னும் துன்பத்து இருந்தேனை தூக்கி - அளவறுத்தற்கருமையால் இதுகடல்தான் என்றுசொல்ல அமையுந் துன்பத்தில் அழுந்தியிருந்தவென்னை அதினின்றுமெடுத்து, இனி இன்பத்துள் வைப்பாய் - இனியேனும் பேரின்பத்துள் நிலைபெறவைத்தருளாய்.

ஆன்மாக்களிடத்துக் கருணையுடைமையால் சீகாழியில் திருவவதாரஞ்செய்து பெருமண நல்லூரில் திருமணமெனப்பெயரிட்டு அடியவர் முதலிய யாவரையயும் முத்திவீட்டில் செல்ல விடுத்தது உனக்கியல்பாதலால் உன்னையடைந்த என்னை இனிப் பிறவித்துன்பத்தில் வையாது மோட்சவைப்பில் வைத்தருள்வாயென்பார் நீடூழியின்பத்துய்த்த வொருவனே இன்பத்துள் வைப்பாயினியென்றார். (உ)

இருட்டறையைநோக்குவிழிக்கேற்றுவிளக்கென்றூழ்
பொருட்டனையேகாட்டுமதுபோல - மருட்டனையு
மாயையினாற்பேரருளான்மாற்றியறிவளிக்குந்
தாயனையான்போரூரன்றான்.

(இ-ள்.) போரூரன்தான் - திருப்போரூரிலெழுந்தருளிய இறைவன், இருட்டு அறையை நோக்கு விழிக்கு - இருட்டறையைநோக்கிய கண்களுக்கு, ஏற்று விளக்கு-ஏற்றியதீபம், என்றூழ் பொருள் தன்னையே காட்டும் அதுபோல - சூரியனைப்போல அங்குள்ள பொருளைக்காட்டும் அச்செயல்போல, மருள் தனையும் - ஆணவமலத்திலழுந்தித்தனது இச்சாஞானக்கிரியைகள் தோன்ற

மல் அழுந்திக்கிடக்கும் ஆன்மாக்களது அஞ்ஞானத்தை, பேர் அருளால் - தனதுபெரிய திருவருளால், மாயையினால் மாற்றி - கலையாதிதத்துவமாகிய காரியமாயையினால்போக்கி, அறிவு அளிக்கும் தாய் அனையான் - தன்னையுணர்த்தும் சிவஞானத்தைத் தந்தருளுந்தாயை யொப்பவனாவான்.

ஒளியுள்ள பொருள்களெல்லாம் ஆதித்தபிரகாசத்தின் அம்சமாதலால் என்றாழ்போலென்றும். விளக்குஞ்சூரியனும் இருட்டறையைநோக்கும்விழிக்கு அவ்விருளைப்போக்கிப் பொருளைக்காட்டும் விளக்கும் சூரியனும்போல எனப்பொருள்கொண்டு - இருட்டறையை நோக்கும் விழிக்கேற்று விளக்கென்றாழ் பொருட்டனையே காட்டுமவைபோல எனப்பாடம் ஓதுவாருமுண்டு. இருட்டறையை நோக்குவிழிக்கேற்று விளக்கென ஏகதேசப்பொருளைக் கூறினமையால் என்றாழ்போலெனப்பொருள்கொண்டுபொருட்டனையேகாட்டுமதுபோலஎனப் பாடங்கொண்டாம். கேவலத்தி லழுந்திக்கிடக்கும் ஆன்மாக்களின் இச்சா ஞானகிரியைகளை விளக்கிப்பக்குவம் வருவித்தற்பொருட்டு இறைவன் தந்தருளும் கலையாதி தத்துவமாயை ஓர்விளக்குப்போல் நிற்றலின்மாயையினால் மாற்றி எனவும், அவ்வாறுவிளக்குவதும் இறைவனருளாதலால் மருட்டனையும்பேரருளால் மாற்றி எனவும், இருளில்மூழ்கிய கண்களுக்கு விளக்கு அறையிலுள்ளவிருளைப்போக்கி அங்குள்ள பொருளைக்காட்டுதல்போல மாயையினால் ஆணவவிருளைச் சிறிது போக்கிப் பின்னர்த்தனது பேரருளால் முற்றுமொழித்துத் தன்னைக்காட்டுதலால் மருட்டனையும் - மாயையினாற் பேரருளால் மாற்றியறிவளிக்கும் எனவும், உயிர்கள் செய்யும் புன்மையைக்கருதாது அவர்களுக்கருளும் மிக்ககருணையையுடையாராதலால் தாயனையான் எனவுங்கூறினார். மாயையை விளக்கென்றது "விடிவாமளவும் விளக்கனையமாயை" எனவருந் திருவருட்பயனால் உணர்க. (௬)

நாயேனுன்சீரடிக்குநன் கல்லசெய்தாலும்
பேயேனிழைத்தபெரும்பிழையை - நீயே
பொறுத்தாள்வதுன்கடனாம்போரூராவென்னை
யொறுத்தாலெனக்காருறவு.

(இ-ள்.) போரூரா - திருப்போரூரிலெழுந்தருளிய இறைவனே, நாயேன் உன் சீர் அடிக்கு நன்கு அல்ல செய்தாலும் - நாயிற்கடைப்பட்டயான் உனது சீர்பாதத்துக்கு அபராதத்தைச்செய்தாலும், பேயேன் இழைத்த பெரும்பிழையை - பேய்போன்ற யான்செய்த பெரியகுற்றத்தை, நீயே பொறுத்து ஆள்வது உன் கடன் ஆம் - நீயேபொறுத்து என்னையாளுதல் உனதுகடனாகும், என்னை ஒறுத்தால் உறவு எனக்கு ஆர் - என்னை அப்பிழைகருதி ஒறுத்தருளினால் அதனைவிலக்கி உதவும் உறவினர் நின்னையன்றி எனக்கார்.

பிறவியால் அடையும் பயனைக்கருதாது நன்கல்லனவற்றைச் செய்தலால் இழிந்த பிறப்பையுடையேனென்பார் நாயேன் எனவும், பேய்போலப்பிறழவுணருஞ் செய்கையுடையேனென்பார் பேயேனெனவும், உன்னையடைந்த யான்

பெரும்பிழைசெய்யினும் பொறுத்தலும் அதற்கேற்பவருளுதலும் நீயேயென்பார் நீயே பொறுத்தாள்வதுன் கடனுமென்றுங்கூறினர். (ச)

ஐம்பொறியாற்கண்டுபினரற்பித்தானுயடியே
னெம்பெருமான்மிச்சிலுனக்கேறுமோ - வம்பனே
னீகாட்டக்காண்பதெனநேயமுறப்போரூரா
வாய்காட்டிதற்புதமேயாம்

(இ-ள்.) எம்பெருமான் - எமதுபெருமானே, நாய் அடியேன் - நாயிற்கடைப்பட்ட அடியேன், ஐம்பொறியால் கண்டு - பஞ்சேந்திரியங்களா லொருபொருளைக்கண்டு, பின்னர் அற்பித்தால் - பின்னர் அப்பொருள் தேவரீர்க்கு அற்பிதஞ்செய்தால், மிச்சில் உனக்கு ஏறுமோ - எச்சிற்பட்ட அப்பொருள் உனக்கேறுமா, நீ காட்ட வம்பனேன் நேயம் உற காண்பது என்ன-நீயே ஒரு பொருளையுணர்த்த விலக்காகிய நெறியிற்செல்லும் யான் அன்புமிகக்காண்பது எப்பொருள்கள், போரூரா - திருப்போரூரிலெழுந்தருளிய இறைவனே, ஆய் - தாய்போல்வாய், இது அற்புதம் ஏ ஆம் காட்டு - இது அற்புதச்செயலாதலால் உணர்த்தாய்.

முன்பு ஒருபொருளைப் பஞ்சேந்திரியங்களாற்கண்டு அதனைப்பின்பு தேவரீர்க்குப் பிரீதிசெய்வேனுனல் பின்பு அப்பொருள் எச்சிற்பட்டதாகுமே அது தேவரீருக்கு இயலுமா என்பார் - ஐம்பொறியாற்கண்டு பின்னரற்பித்தால் எச்சிலுனக்கேறுமோ எனவும், அது தவறுகில் முற்றும் நீகாட்ட நான் காண்பதேயன்றியானேகாணுமொருபொருள் யாதுளதுஎன்பார்-நீகாட்டக்காண்பது என்ன எனவும், யாவும் நீகாட்டயான்காண்பதாதலால் - அவற்றிற்சிலமிச்சிற்பட்டது அற்புதமாதலால் இது அற்புதமேயாமெனவும், இதனை நீயுணர்த்த நானுணர்வேண்டுமென்பார் காட்டு எனவுங்கூறினர். (ரு)

விதிவழியேநின்றுன்மிளிர்கமலத்தாளை
மதிதழையுமன்பால்வணங்கிக் - கதிதழையு
மன்பரைப்போல்வேடமணிந்துநின்றேன்போரூரா
வன்பருக்குள்வன்பனேன்வந்து.

(இ-ள்.) போரூரா - திருப்போரூரி லெழுந்தருளிய இறைவனே - விதிவழியேநின்று-ஆகமத்தில் விதித்த வழியேநின்று, உன் மிளிர் கமலம் தாளை - உனதுவிளங்கும் தாமரைமலரையொத்த திருவடியை, மதிதழையும் அன்பால் வணங்கி - அறிவில்தழைக்கும் அன்பினுல்வணங்கி, கதிதழையும் அன்பரைப் போல் - முத்திநெறியிற்செல்ல அமைந்த உனது அடியவரைப்போல,வன்பருக்குள் வன்பனேன் - வன்பருக்குள்மிக்க கடியமனத்தையுடையயான்,வேடம் அணிந்து வந்து நின்றேன் - உனது சிவவேடத்தையணிந்து தேவரீரது சந்நதியில்வந்துநின்றேன்(அதனுல் விளையும்பயன்யாதுகூறுய்.)

தான்கொண்டவேடம் பொய்வேடமாதலால் அதனுற்பயனில்லையென்பார் - வன்பருக்குள் வன்பனேன் அன்பரைப்போல் வேடமணிந்து நின்றேன் என்றார். (சு)

இல்லறத்தானல்லேனியற்கைத்துறவியல்லே
னல்லறத்துஞானியல்லேனுயினேன் - சொல்லறத்தி
னொன்றேனுமில்லேனுயர்ந்ததிருப்போரூரா
வென்றோநானீடேறுவேன்.

(இ-ள்.) உயர்ந்த திருப்போரூரா-எல்லாத்தலங்களிலுமுயர்ந்த திருப்போரூரிலெழுந்தருளிய இறைவனே, நாயினேன் - நாயிற்கடைப்பட்டயான், இல்லறத்தான் அல்லேன் - இல்லறவழியில் நின்றவனல்லேன், இயற்கை துறவி அல்லேன் - இயல்பாகவே துறவறவழியில் நின்றவனுமல்லேன், நல் அறத்து ஞானி அல்லேன் - இவ்விரண்டுமெல்லாத சிவபுண்ணியவழியில் நின்றஞானியுமல்லேன், சொல் அறத்தின் ஒன்றேனும் இல்லேன் - சொல்லியமூவகை அறங்களில் ஒருவகையறத்திலும் நிற்கிலேன், நான் என்று ஈடேறுவேன் - நான் எக்காலத்தில் கரையேறப்போகின்றேன்.

மூவகையறங்களுள் ஒருவித அறத்திலேனும்நிற்கில் ஈடேறுதல்கூடும்,யான் ஒருவகையறத்திலும் நின்றிலேனுதலால் எவ்வாறுய்வேன் என்பார் என்றோநானீடேறுவேன் என்றார். (எ)

இன்போரணுவாயிடரதற்குமாமலையாம்
புன்போகம்வேண்டிப்புலம்பாதே - யென்போடே
யுள்ளமுருகவருமொண்போரூரையனருள்
வெள்ளமுறநெஞ்சேவிரும்பு.

(இ-ள்.) நெஞ்சே - மனமே, புன் போகம் இன்பு ஓர் அணுவாய் - புல்லியபோகத்தால்விளையும் இன்பம் ஓரணுவளவாய், அதற்கு இடர் மாமலையாம் - அவ்வின்புகாரணமாகவரும் துன்பம் ஒருமேருவளவாம்,வேண்டி புலம்பாதே அப்போகத்தை விரும்பி வருந்துதலொழிக, என்போடே உள்ளம் உருக வரும் ஒண் போரூர் ஐயன் - எலும்போடு மனமும் கசிந்துருகக் காட்சிதந்தருளும் ஒள்ளிய திருப்போரூரிலெழுந்தருளிய இறைவனது,அருள் வெள்ளம் உற விரும்பு - கருணைவெள்ளங்கைகூடவிரும்பாய்.

போகத்தால்வரும் இன்பம்சிறிது, அதனுல் வரும் துன்பம் பெரிதென்பதுதோன்ற இன்போரணுவாமிடரதற்கு மாமலையாம் எனவும், அப்போகத்தை வேண்டுதல்பெருந்துன்மென்பது தோன்ற வேண்டிப்புலம்பாதே எனவும், என்றும் இன்பவிளைப்பது அவனது திருவருளாதலால் போரூரையனருள் வெள்ளமுற நெஞ்சே விரும்பு எனவுங் கூறினர், (அ)

மயக்கமெலாநீங்கியுன்றன்மாமலர்த்தாட்கீழே
யியக்கமறுவாரிதிபோலென்றே - தியக்கமறு

பேரானந்தப்பெறுவேன்பேணுதிருப்போரூரா
சீராருந்தேவாதெளிந்து.

(இ-ள்.) பேணு திருப்போரூரா - யாவரும் விரும்பும் திருப்போரூரிலெழுந்தருளிய இறைவனே, சீர் ஆரும் தேவா - திருவருட் பொலிவுமிக்க தேவனே, தெளிந்து - உன்னை இறைவனெனத் தேர்ந்து, மயக்கம் எல்லாம் நீங்கி - ஏனைத்தேவர்களை இறைவனெனக்கருதும் எல்லாமயக்கங்களினின்று நீங்கி, உன்தன் மாமலர்த்தாள் கீழே - உனது பெருமையமைந்த தாமரைமலர்போன்ற திருவடியின் கீழே, இயக்கம் அறும் வாரிதிபோல் - அலையாற்சலனமற்ற கடல்போல, இயக்கம் அறு பேரானந்தம் என்றே பெறுவேன் - சலனமற்ற பேரின்பத்தை எக்காலத்தே பெறுவேன் (அருளாய்).

அலையாற்சலன மில்லாத கடலொன்றுளதேல் அதனையொக்குமெனக் கூறியது இல்பொருளுவமையணி. (௯)

அளகையர்கோன்வாழ்வுமனங்கன்பேரலேரு
மளகவடமீன்போலணங்கு - முளமதனி
லுன்னாதுகைவிட்டுனைப்பிடித்தார்போரூரா
வென்னாதரவுகண்டேனியான்.

(இ-ள்.) போரூரா - திருப்போரூரிலெழுந்தருளிய இறைவனே, அளகையர்கோன் வாழ்வும் - குபேரனையொத்த செல்வ வாழ்க்கையையும், அனங்கன்போல் ஏரும் - மன்மதனையொத்த பேரழகினையும், அளக வடமீன்போல் அணங்கும் - கூந்தலையுடைய அருந்ததிபோலக் கற்பினையும் அழகையும் வாய்ந்த பெண்ணையும், உளம் அதனில் உன்னாது - மனத்திற்கருதாது, கைவிட்டு உன்னை பிடித்தார் - அவற்றைக் கைவிட்டு உன்னைப் பற்றுக்கோடாக விரும்பிப் பற்றினார், யான் என்ன ஆதரவு கொண்டேன் - நான் என்ன விருப்பங்கொண்டு உன்னைப் பற்றினேன் (இல்லையென்றபடி.)

வடமீன் என்பதன் பொதுமை நீக்க அளக+மென அடைதந்து கூறினமையால் சிறப்புருவகவணி. அடியார்கள் நிலையாப் பொருளைக் கைவிட்டு உன்னை நிலைப்பொருளாகக் கைக்கொண்டமையால் அவர்களுய்ந்தனர்,யான் அவற்றைக் கைக்கொண்டு உன்னைக் கைவிட்டமையால் எவ்வாறுய்வேனென்பார் என்னாதரவு கொண்டேன் யானெனவுங் கூறினார். (௪௦)

வள்ளிக்கொடிபடருமாகற்பகதாரு
தெள்ளிப்புகழ்தெய்வசிந்துரமே - யுள்ளிக்
களித்துவிளையாடுங்கனகமலைபோரூ
ரளித்துவிளையாடுமரசு.

(இ-ள்.) போரூர் அளித்துவிளையாடும் அரசு - திருப்போரூரில் தன்னையடைந்தோர்க்குத் திருவடி நீழல்தந்து விளையாடும் ஓரரசானது, வள்ளிக்கொடி படரும் மா கற்பகதாரு - வள்ளியென்னுங் கொடிபடர்தற்கெல்லையாகிய பெரி

ய கற்பகவிருக்ஷம், தெள்ளி புகழ்தெய்வசிந்துரம் - யாவருந் தெளிந்து புகழுந் தெய்வயானை, உள்ளி களித்து விளையாடும் கனகமலை - தனக்குரிய விடமென்று கருதி விளையாடும் மேரு.

அரசு ஓர்மரத்திற்கும்இறைவனுக்கும் பொதுப்பெயராதலால்அளித்தென்றதற்குத்திருவடிநீழல் தந்தென்றும்.வள்ளியென்பதுபொகுட்டையையுடைய ஓர் புதராதலால்வள்ளிக்கொடி எனவும், கொடிபடர்தற்குப் பற்றுக்கோடு மரமாதலால் வள்ளிக்கொடிபடரும் மாகற்பகதாருஎனவும்,தெய்வயானை விளையாடுதற்கு மலையிடமாதலால்,தெய்வசிந்துரமே-களித்துவிளையாடுங் கனகமலை எனவுங்கூறினர். அரசு இறைவன்மேலும், வள்ளி-தெய்வசிந்துரம்-வள்ளி நாய்ச்சியார்மேலும் தெய்வயானை நாய்ச்சியார்மேலும் நிற்றலால் சிலேடையணியும், பேரூரொன்றமையாலும், வள்ளி, தெய்வசிந்துர மென்றமையாலும், அரசு, கற்பகதாரு, கனகமலை என்றது இறைவன்மேலும் நிற்றலால் சிறப்புருவகவணியும் கலந்துவருதலால் கலவையணி. (கக)

மெய்ப்பொருளாநின்னைவிரும்பியின்பமேவாது
பொய்ப்பொருளைநாடியிடர்ப்போந்தேனைச் - செப்பரிய
மட்டழகார்சோலைமலிந்ததிருப்போரூரிற்
கட்டழகாகாத்தாள்கடன்.

(இ-ள்.) செப்பு அரிய - சொல்லுதற்கரிய, மட்டு அழகு ஆர் சோலைமலிந்த திருப்போரூரில் கட்டு அழகா - தேனின் பொலிவுநிறைந்த சோலைசெறிந்த திருப்போரூரிலெழுந்தருளிய பேரழகையுடையவனே, மெய்ப்பொருளாம் நின்னை விரும்பி இன்பம் மேவாது-அழியாப்பொருளாகிய உன்னை விரும்பியடைந்து பேரின்பநுகராது, பொய்ப்பொருளைநாடி இடர் போந்தேனை-அழியும் பொருளாகிய மனைவிமக்கள் முதலிய பொருள்களைத்தேடித் துன்பத்திலழுந்திய என்னை, காத்து ஆள் கடன் - காத்தாளுதலுன் கடனும். (கஉ)

வள்ளையாரோடைமலிபோரூராறுமுகப்
பிள்ளையார்பாதம்பிடிநெஞ்சே - கொள்ளையார்
வன்பிறப்புநீங்குநமைவாரிதிபோல்வந்தடருந்
துன்பிறக்குங்கூடுஞ்சுகம்.

(இ-ள்.) நெஞ்சே - மனமே, வள்ளை ஆர் ஓடை மலி போரூர்-வள்ளைக்கொடிகள் நிறைந்தஓடை செறிந்த திருப்போரூரி லெழுந்தருளிய, ஆறுமுகப்பிள்ளையார் பாதம்பிடி - ஆறு திருமுகங்களையுடைய இளைய பிள்ளையார் திருவடியைப்பற்றுய், கொள்ளை ஆர் வன் பிறப்புநீங்கும் - வரையறையின்றி வரும் வலியபிறப்புநீக்கும், நம்மைவாரிதிபோல் வந்து அடரும் துன்பு இறக்கும் - நம்மைக் கடல்போல மீதெழுந்து வந்து விழுங்கும் துன்பங்கெடும், சுகம்கூடும் - பேரின்ப சுகங்கைகூடும். (கங)

இருளிற்கிடந்தவெனையன்றேதூக்கி
யருளைத்தரத்தனுவேயாதி - தெருளூற்றுத்

தந்தவனீமற்றவையைத்தந்ததுபோனிற்கீத
லெந்தவகைபோரூரனே.

(இ - ள்.) இருளில் கிடந்த என்னை - ஆணவமலத்திலழுந்திக் கிடந்த வென்னை, அன்றே தூக்கி - அநாதியிலேயே யெடுத்து, அருளை தர - தனது பேரருளிற் கூட்ட, தனுவே ஆதி - தனுமுதலிய நான் கினையும், தெருள் உற்று தந்தவன் நீ - தெளிந்து தந்தருளினவன் நீ, அவையை தந்ததுபோல்-அவற்றை யெனக்குத்தந்தருளியதுபோல, போரூரனே - திருப்போரூரிலெழுந்தருளிய இறைவனே, நிற்கு ஈதல் எந்த வகை-உனக்கு அவற்றை நான் தருதல் எந்த வகை (கூறியருளாய்.)

தனுமுதலிய நான் கென்றது - தனுகரணபுவனபோகங்களை. அநாதியாயுள்ள பதிபசுபாசமென்னு முப்பொருள்களுள் பசு பதியை நோக்காது பாசத்தை நோக்கவே பின்பு தன்னொடுகூட்டத் தனுவாதிமுதலிய நான் கினையுந்தந்தருளினனென்பார் அருளைத்தரத் தனுவேயாதி-தெருளுற்றுத் தந்தவனீ எனவும், அவற்றாற் பக்குவம்வந்தவழித் தனுமுதலிய பொருளிருத்தலால் அவற்றைத் தேவரீருக்கு அர்ப்பித்தல் எந்தவகையென்பார் நிற்கீதலெந்தவகை போரூரனே எனவுங் கூறினார்.

"நீக்கி முன்னெனைத் தன்னொடு நிலாவகைகுரம்பையுட்புகப் பெய்து" எனப்பெரியோர் பணித்தவாறுங் காண்க. (சச)

இடர்களையுமின்பக்கரும்பையெமது
தொடர்பிறவிநீக்குந்துணையைத் - தொடர்பாகி
யுள்ளும்புறம்புமொளிவீசும்போரூரிற்
றெள்ளுமணியைநெஞ்சேசேர்.

(இ - ள்.) நெஞ்சே - மனமே, இடர் களையும் இன்பக்கரும்பை - பிறவித்துன்பத்தை வேரோடறக்களையும் பேரின்பக்கரும்பினை, எமது தொடர்பிறவி நீக்கும் துணையை - எம்மை விடாதுதொடரும் பிறவித்தொடக்கினை நீக்குந்துணையை, தொடர்பு ஆகி - எம்மைத்தொடர்ந்து, உள்ளும் புறம்பும் ஒளிவீசும்-உள்ளும் புறம்பும் ஒளிவீசாநின்ற,போரூரில் தெள்ளுமணியை-திருப்போரூரி லெழுந்தருளியிரா நின்ற ஒளி வீசும்மாணிக்கத்தை, சேர் - அடையாய்.

கரும்பிற்குச் சுவைத்தண்டெனு ஓர் பரியாய நாமமாதலால் இன்பக்கரும்பெனவும், அக்கரும்புவேண்டினோர் துன்பத்தை நீக்குதல்போல் இறைவன் அடைந்தோரது ஆதியான் மீகமுதலிய பிறவித்துன்பத்தைப் போக்குதலால் இடர்களையும் எனவும், துணையயுள்ளோர் தம்மையடைந்தோர் துன்பத்தை நீக்குதல் போல அடைந்தோர் பிறவியை யொழித்தலால் எமது தொடர்பிறவி நீக்குந்துணை எனவும், மாணிக்கம் புறவிருளை நீக்கவொளிவீசுதல்போல அகவிருளாகிய மலமும் புறவிருளாகிய மயக்கமும் ஒழிய ஒளிவீசுதலால்

உள்ளும் புறம்புமொளிவீசும் எனவுங்கூறிய சிறப்புகளால் கரும்பு முதலிய பொருள்களை நீக்கி இறைவன் மேனிற்றலால் சிறப்புருவகவணி. (௧௫)

சேர்ந்துநமதுசெயலற்றமுடிமேற்சேர்த்தி
யார்ந்தகளிமேன்மேலுமாக்கியே - சார்ந்தெவணும்
பொங்கிமணக்குமின்பப்போரூரான்றாட்பூவைத்
தங்கிமனமேதருக்கு.

(இ - ள்.) சேர்ந்து - அடைந்தருளி, செயல் அற்ற நமது முடிமேல் சேர்த்தி-தற்போதமிழந்த நமது தலை மேற் சூட்டி, ஆர்ந்த களிமேன்மேலும் ஆக்கி-நிறைந்த பேரின்பக்களிப்பினை மீதூரச் செய்து, எவணும் சார்ந்து பொங்கிமணக்கும்-எவ்விடத்தும் நிறைந்து பரவி மணம் வீசும், இன்பப் போரூரான் தாள் பூவை-பேரின் பத்தை விளைக்குந் திருப்போரூரி லெழுந்தருளிய இறைவன் திருவடியை, மனமே தங்கி தருக்கு-மனமேநீ நிலைபெறக் கருதிமகிழாய்.

மலரைத்தலையிற் சேர்த்தல் வழக்காதலால் செயலற்ற நமது முடிமேல் தாட்பூவைச் சேர்த்தி எனவும், அதனால் இன்பமீதூர்தலால் ஆர்ந்தகளிமேன் மேலுமாக்கி எனவும், தலையிற் சூடிய திருவடி மலர்தம்மை முற்றும் விழுங்கிச்சிவமயமாக்குதலால் சார்ந்தெவணும் பொங்கி மணக்கு மின்பப் போரூரன் தாள் எனவுங் கூறினர். (௧௬)

முடித்தேன்களித்தேன்முசிப்பெல்லாமாறிக்
குடித்தேனனந்தக்கொழுந்தே - னடித்தேன்விண்
ணூரார்போற்றியடிபணிந்துநின்றுதொழும்
போரூரன்பாதாம்புயம்.

(இ - ள்.) ஆர் விண் ஊரார் போற்றி அடிபணிந்து நின்று தொழும் போரூரன் - நிறைந்த விண்ணுலகிலுள்ள தேவர்கள் துதித்துத் திருவடியை வணங்கி நின்று கைகூப்பும், போரூரன்-திருப்போரூரிலெழுந்தருளிய இறைவனது, பாத அம்புயம் - பாததாமரையை, முடித்தேன் - தலையிற்சூடினேன், களித்தேன்-களிகூர்ந்தேன், முசிப்பு எல்லாம்மாறி ஆனந்தம் கொழுந்தேன் குடித்தேன்-பிறவித்துன்பத்தால்வரும் இளைப்பெல்லாம் நீங்கிப்பேரின்பமென்னுங் கொழுவிய தேனைக்குடித்தேன், நடித்தேன் - மீதூர்ந்த பேரானந்தத்தால் நடனஞ் செய்தேன்.

தாமரைமலரிலுள்ளது தேனாதலால் ஆனந்தக் கொழுந்தேன் குடித்தேன் எனவும், குடித்தபின் களிகூர்தல் இயல்பாதலால் களித்தேன் எனவும், களித்தபின், நடித்தல்வழக்காதலால் நடித்தேன் எனவுங் கூறினர். இது முறையிற்படர்ச்சியணி-எம்மாரூரன் என்பது பொருத்த மின்மையால் விண்ணூரார் எனப்பாடங் கொண்டாம். (௧௭)

அருளேவடிவாகியானந்தவாரிப்
பொருளாயானென்னதெனல்போமோ - மருளேது

மில்லானேபோரூரிறைவனேநாயேற்கு
நல்லானேசொல்லாய்நயந்து.

(இ - ள் ) மருள் எதும் இல்லானே - மயக்கஞ் சிறிது மில்லாதவனே, போரூர் இறைவனே-திருப்போரூரிலெழுந்தருளிய இறைவனே, நாயேற்கு நல்லானே - நாயிற்கடைப்பட்ட எனக்கு நல்லவனே, அருளேவடிவாகி-திருவருளே தனுவாகி, ஆனந்த வாரிபொருளாய் - ஆனந்தக்கடல் வடிவாகிய சிவமாய், யான் என்னது என்னல் போமோ - அகங்காரமும் மமகாரமுங்கழியுநாளெந்நாளோ, நயந்து சொல்லாய்-விரும்பிக் கூறியருளாய்.

தத்துவங்களைச் சடமென்று கண்டு நீங்கின விடம் ஆன்மதரிசனம் என்பார் அருளே வடிவு எனவும், அந்த அருள்மேலீட்டால் தற்போதம் சீவியாமனின்ற விடம் ஆன்மசுத்தியாதலால் ஆகி எனவும், அவ்வழித்தாய் நிற்குங்கால் அத்திருவருளால் ஞானத்துக்கு முதலாகிய சிவந்தோன்றுதலால் ஆனந்தவாரிப் பொருளாய் , எனவும், இவைதோன்றுங்கால் யான் என்னுந் தற்போதமும்,எனதென்னுந்தேகாதிப் பிரபஞ்சங்களும் ஒழியுமேயன்றி ஏனையவற்றால் அழியாதாகையால் யானென தெனல்போமோ எனவும், இவற்றையுணர்த்துவோன் இயல்பாகவே பாசங்களினீங்கி நின்ற இறைவன் அவனாதலால் மருளேது மில்லானே நயந்து சொல்லாய் எனவுங் கூறினார். ()

என்னை விழுங்கியிருக்கநீயானந்தந்
தன்னை விழுங்கித்தருக்கநா - னன்னையிலுஞ்
சாலவருளபுரிந்தசற்குரவாபோரூரா
வேலமருள்செய்யேலினி.

(இ - ள்.) நீ என்னை விழுங்கி இருக்க - நீ என்னை உன்வடிவாக்க, நான் ஆனந்தம் தன்னை விழுங்கி தருகக - நான் பேரின்பத்திலழுந்தி இறுமாந்திருக்க, அன்னையிலும் சால அருள் புரிந்த சற்குரவா - தாயிலும் மிகவுங் கருணைசெய்த ஞானசாரியனே, போரூரா - திருப்போரூரிலெழுந்தருளிய இறைவனே, இனிமருள் ஏலசெய்யேல் - இனி விட்டமயக்கை அடியேனடையச் செய்யாதே.

அகமுகத்தில் தற்போதஞ் சீவியாமல் சிவந்தோன்ற நிற்றலால் நீ என்னை விழுங்கியிருக்க எனவும், அங்குத் தோன்றுஞ் சிவம் இன்பவடிவாதலால் ஆனந்தந் தன்னை விழுங்கித்தருக்க எனவும்,அவ்வாறகமுகத்தில் அருள்புரிந்தமையால்அன்னையிலுஞ் சாலவருள்புரிந்த சற்குரவா எனவும், அகமுகத்தினின்றுபகிர்முகத்து வந்தகாலையில் இங்குவிருந்த பாண்டம்போல விட்டவாதனை வந்து தாக்குதலால் ஏல மருள்செய்யேலினி எனவுங் கூறினார். (கக)

படலமுரித்தவிழிபானுவைக்கண்டாற்போ
லுடலமுதலாணவநோயோட்டி - யடியிணையைக்
காட்டியநீமீட்டுங்கனமயக்கிற்போரூரா
கூட்டியெனையாட்டாதாட்கொள்.

(இ - ள்.) படலம் உரித்த விழி பானுவைகண் டாற்போல்-படலமுரித்த கண்சூரியனைக் கண்டாற்போல, உடலம் முதல் ஆணவநோய் சிட்டி-சரீரமுதலாக வுள்ள ஆணவ நோயையோட்டி, அடி இணையை காட்டிய நீ - இரண்டு திருவடிகளையும் காட்டியருளிய நீ, போரூரா-திருப்போரூரி லெழுந்தருளிய இறைவனே, மீட்டும் கன மயக்கில் கூட்டி - மீளவும் அந்தமயக்கத்திற் செலுத்தி, என்னை ஆட்டாது ஆள்கொள் - என்னைவருத்தாமல் அடிமைகொள்ளாய்.

யானென தென்னுந்தற்போதமேலீட்டைப் படலமெனவும், அத்தற்போதஞ் சீவியாமல் ஆன்மா அருள்வழி நிற்றலை உரித்தவிழி எனவும், அத்திருவருள் மேலீட்டால் ஞேயந்தோன்றுதலால் பானுவைக்கண்டாற் போலெனவும், அஞ்ஞேயத்தால் தனுமுதலிய ஆணவச்சேட்டையொழிந்து சிவந்தோன்றுதலால் உடலமுதலாணவ நோயோட்டி அடியிணையைக் காட்டிஎனவும், அச்சீவன் முத்தநிலையில் என்று நிற்கக் கருத்துடையாராதலால் நீ மீட்டுங்கனமயக்கிற் கூட்டி எனையாட்டா தாட்கொள் எனவுங்கூறினர். (உ0)

எனதபிமானம்பிடித்தவிந்தவுடலாதி
யுனதபிமானம்பிடித்தாயுற்றே - யெனதாகக்
கொண்டேன்மயக்கங்குலையுநாளெந்தநாள்
கண்டேபோரூராகழறு.

(இ - ள்.) எனது அபிமானம் பிடித்த இந்தஉடல்ஆதி-என்னுடையதென அபிமானங்கொண்ட இந்தஉடல் பொருள் ஆவிமூன்றனையும், உற்றே உனது அபிமானம்பிடித்தாய் - ஆசிரியத் திருவுருவங்கொண்டு வந்தருளி உன்னுடையதெனக் கைக்கொண்டருளினாய், எனது ஆக கொண்டேன்-உனக்கற்பித்த அம்மூன்றையும் என்னுடையதாகக் கொண்டுஉழலுகின்றேன், போரூரா-திருப்போரூரி லெழுந்தருளிய இறைவனே, மயக்கம் குலையும் நாள் எந்தநாள்-அவ்வாதனா மயக்கங்கழியு நாள் எந்தநாள், கண்டே கழறு - அதைத்தெரிந்து கூறியருளாய்.

உனதுதிருவடி சூடப்பெற்றேனென்பார் எனதபிமானம் பிடித்த விந்தவுடலாதி - உனதபிமானம் பிடித்தாயுற்றேஎனவும், வாதனாவசத்தால் மீட்டுந்தன தெனக்கருதலால் எனதாகக் கொண்டேனெனவும், நீ இயல்பாகவே பாசங் களினீங்கி நிற்குமிறைவனாதலால் அவ்வாத னாமயக்கங் களினின்று கழியுங்காலம் உனக்குத்தெரியுமென்பார் மயக்கங்குலையுநா ளெந்தநாள்கண்டே போரூராகழறு எனவுங்கூறினர். (உக)

எனக்கவலம்வாராமலெந்நாளுங்காத்து
மனக்கவலைமாற்றுமருந்தாம் - புனச்சிறுமி
முத்துவடக்கோடுமுதமுர்நான்குதோளுடையான்
றத்துபுனற்போரூரன்றாள்.

(இ - ள்.) புன்ம் சிறுமி முத்து வடம் கோடு உழுதமுந்நான்கு தோள் உடையான்-தினைப் புனங்காக்குஞ் சிறுமியாகிய வள்ளிநாய்ச்சியாரது,முத்து வடம் கோடு உழுதமுந்நான்குதோள் உடையான் - முத்துவடமணிந்த திருத்த னங்களாகிய கொம்புகளுழுத பன்னிரண்டு தோள்களையுடையவனும், தத்துபு னல் போரூரன் - அலைகளால் தாவும் நீர்சூழ்ந்த திருப்போரூரி லெழுந்தரு ளினவனுமாகிய இறைவனது, தாள் - திருவடி, எனக்கு அவலம் வாரா மல்-எனக்குப் பிறவித்துன்பம் அணுகாமல், எந்நாளும் காத்துமனம்கவலை மாற்றும் மருந்து ஆம்-இடைவிடாமற் காத்துமனத் துன்பத்தை மாற்றும் ஓர் மருந்தாகும்.

அவனது திருவடியே திருவருளாதலால் போரூரன்றாள் மனக்கவலை மா ற்று மருந்தாம் என்றார். "தில்லை மூதூராடியதிருவடி,, என்னும் உண்மை வாக்கியத்தாலுணர்க. (௨௨)

பொருப்பெனவேபஞ்சின்பொதியெனினுஞ்சின்ன
நெருப்பணுகினீறுருகுமாபோல் - விருப்பமுட
னுன்னைத்தொடர்வார்க்குறுபவநோய்போரூரா
பின்னைத்தொடராபிறந்து.

(இ - ள்.) பொருப்பு என்ன பஞ்சின் பொதி எனினும்-மலையைப்போல ப்பஞ்சின் பொதியுயர்ந்திருக்கினும்,சின்ன நெருப்பு அணுகில்-ஓர் தீப் பொ றிபட்டால், நீறு ஆகும் ஆறுபோல் - நீறாம்வகைபோல,போரூரா - திருப்போ ரூரிலெழுந்தருளிய இறைவனே, விருப்பமுடன் உன்னை தொடர்வார்க்கு - அன்போடு உன்னையடையும் அடியவர்க்கு, உறு பவநோய் பின்னைதொடரா - மிக்கபிறவி நோய்பின்புதோன்றி அவர்களையடையா (அன்றே யொழியு மென் றபடி.)

தீப்பொறிபட்டால் பஞ்சுப்பொதி நீறாகலும்,அன்போடடைவார்க்குப்பிற விநோய்அன்றேயொழிதலுந் துணிபாதலால்இது தெரிதருதேற்றவுவமையணி.

கண்ணிற்கருமணியேகற்பகமேகற்றோர்க
ளுண்ணிற்குமோரொளியேயோர்பொருளே - யெண்ணிற்கும்
போரூரிறையேபுனிதநிறையானந்தச்
சீரூரிலநாயேனைச்சேர்.

(இ - ள்.) கண்ணில் கருமணியே - கண்ணில் நிற்கும் பாவைபோல் பவ னே, கற்பகமே-கற்பகம் போல்பவனே, கற்றோர்கள் உள் நிற்கும் ஓர் ஒளியே கற்றவர்களது உள்ளத்தினிலைபெறும் ஓரொளிபோல்பவனே, ஓர் பொரு ளே - ஒப்பில்லாத நிதியே, எண் நிற்கும் போரூர் இறையே - அடியவரெண் ணத்தில் நிலைபெறும் திருப்போரூரி லெழுந்தருளிய இறைவனே, புனிதம் நிறை ஆனந்தம் சீர்ஊர் இல் நாயேனை-களங்கமில்லாத பேரின்ப மென்னுஞ் செல்வத்தை யடைதலில்லாத நாயிற்கடைப்பட்ட என்னை, சேர் - அடைந்த ருளாய்.

கண்ணிலுள்ள பாவைகள் கண்களுக்கு யாவையு விளக்கஞ்செய்தல் போல நீ என்னறிவுக்குள் நின்றுயாவையும் விளக்கஞ்செய்தலால் கண்ணிற் கருமணியே எனவும், மிடியாளர் குறையிரந்ததைக் கற்பகந்தருதல்போல அடியவர்குறையிரந்ததை அன்றேதருதலால் கற்பகமே எனவும், புலவருள்ளத்தினின்றுஅவர்கள் புலமையைவிளக்கும்புலவர் சிகாமணியாய் நிற்றலால் கற்றோர்களுண்ணிற்குமோரொளியே எனவும், அடியவர்க்கு எய்ப்பில்வைப் பாயிருத்தலால் ஓர் பொருளே எனவுங்கூறினர். (உ௪)

வேல்கண்டேன்றோளில்வியன்சதங்கைமொய்த்திருந்த
கால்கண்டே னாறுமுகங்கண்டேனே - நீல்கொண்ட
மாயூரங்கண்டேன்வளமைதருபோரூரிற்
போயூரங்கண்டேன்புகுந்து.

(இ - ள்) போரூரில் போய் - செல்வவமிக்க திருப்போரிற்சென்று, தோளில்வேல் கண்டேன் - திருப்புயத்தில் சார்த்திய வேலைத்தரிசித்தேன், வியன்சதங்கை மொய்த்திருந்த கால் கண்டேன்-ஒளிபரந்த சதங்கை நெருங்கியிருந்ததிருவடியைத்தரிசித்தேன்,ஆறுமுகம் கண்டேன்-ஆறுதிருமுகங்களையுந் தரிசித்தேன், நீல் கொண்ட மாயூரம் கண்டேன்-கருமைவாய்ந்த மயிலூர்தியைத்தரிசித்தேன்,ஊர் போய் அங்கு அண்டேன்-இனி யமபுரத்திற் சென்றடையேன். (உ௫)

தாயாமெனக்குரியதாதையாஞ்சற்குருவாந்
தேயாக்கருணைபொழிதெய்வமா - மாயப்
பொருணீக்குமன்பர்புனிதவீடேற
விருணீக்குமபோரூரிறை.

(இ - ள்.) மாயம் பொருள் நீக்கும் அன்பர் - மாயாகாரியமாகியதத்துவங்களை நியதிகளையும் அடியவர்கள், புனித வீடு ஏற - களங்கமில்லாதமுத்தி வீட்டையடைய, இருள் நீக்கும்போரூர்இறை-ஆணவமலத்தைப் போக்கும்திருப்போரூரிலெழுந்தருளிய இறைவன், எனக்கு தாயாம் - எனக்கு உரியதாயாவான், சற்குரு ஆம் - ஞானசாரியனுவான், தேயாகருணை பொழிதெய்வம் ஆம் - என்றுங் குறையாத அருள் செய்யுந் தெய்வமாவான்.

தன்மகவுயாது பிழைசெய்யினும் அப்பிழைபொறுத்துக் கருணை செய்தல் தாயாதல்போல் அடியவர்யாது பிழைசெய்யினும் பொறுத்தாள் வோனுதலால் எனக்குரிய தாயாமெனவும், தீயவழியிற்புகுத்தாது நல்வழியிற் செலுத்துவோன் தந்தையாதல்போலப் புன்றெய்வங்களின் வழிப்படுத்தாதுதன் தொழும்பின்வழி என்னைப்படுத்தலால் தாதையாம் எனவும், தனது திருவருள் நோக்கால் மலச்சிமிழ்ப் பினின்றும் என்னை நீக்குதலால் - சற்குருவாம் எனவும், என்னை முத்தியிற் புகுத்தலால் தேயாக்கருணை பொழிதெய்வமாமெனவுங் கூறினர். (உ௬)

கேட்டதெல்லாம்பாலிக்குங்கேடிலாத்தாதாவும்
வீட்டுநெறிகாட்டும்வியன் குருவு - நாட்டமென
வுண்ணின்றுநாயேற்கொளிகாட்டுஞ்சிற்பரனு
மெண்ணின்றபோரூரிறை.

(இ - ள்.) கேட்டது எல்லாம் பாலிக்கும் கேடு இல்லாத தாதாவும்-அடியேன் கேட்டதை யெல்லாந்தந்தருளும் அழிதலில்லாத பிதாவும், வீட்டுநெறி காட்டும் வியன் குருவும்-முத்திநெறியைத்தந்தருளும் பெரியஞானசாரியனும் நாட்டம்என்ன-கண்களைப்போல, நாயேற்கு உள்நின்று ஒளிகாட்டும்-எனதுமனத்தில் நிலைபெற்று ஒளிதரிசனஞ்செய்விக்கும், சிற்பரனும் - இறைவனும், எண் நின்ற போரூர்இறை - அடியவருள்ளத்தில் நிலைபெற்ற திருப்போரூரிலெழுந்தருளிய இறைவனேயாம்.

உண்ணின்றஒளி என்றதை "தெய்வத் தவத்தோருளவிழியிற் - காற்றுந் தீபமினல் பந்தல்கடி கூர்விறிகதிர் மதிபோற் காட்டு மொளியாய்" எனமுன்னர்க் கூறியதனுலுணர்க. (உஎ)

ஐம்பொறியாற்போகமயின்றாலுநாயேனுன்
செம்பதுமத்தாளிணையேசிந்திக்க - வும்பருக்குங்
காணவரிதாமின்பங்காணத்தென்போரூரா
பூணவருளேபுரி.

(இ - ள்.) தென் போரூரா-இமமலைக்குத் தென்பாலுள்ள திருப்போரூரிலெழுந்தருளிய இறைவனே, ஐம்பொறியால் போகம் அயின்றாலும்-பஞ்சேந்திரியங்களால் போகங்களை நுகர்ந்தாலும், நாயேன்-நாயிற்கடைப்பட்டயான் செம்பதுமம்தாள்இணையே சிந்திக்க - உனது செந்தாமரைமலர் போன்ற திருவடிகளைத்தியானிக்கவும், உம்பருக்கும்காண அரிதாம்இன்பம்காண-தேவர்களுக்குங் காண்டற்கரிய பேரின்பத்தை நுகரவும், பூண அருளேபுரி-சேர உன்திருவருளைச் செய்யாய்.

இறைவன் திருவருள்வழித்தே நின்றவழி யாண்டுள்ள பயிற்சிபற்றி ஒவ்வோரிடத்து இந்திரியங்களின் சேட்டைநிகழினும் அவ்விந்திரியங்களுக்கும் எனக்கும் ஓர் சுதந்தரமில்லாமையால் அவ்வாறு நிகழ்வது அவ்விறைவன்செயலே என்று வரையறைசெய்து அடித்தொண்டினின்றும் வழுவா தொழுகவேண்டுமென்பார் ஐம்பொறியாற் போகமயின்றாலும் நாயேனுன் செம்பதுமத்தாளிணையே சிந்திக்க எனவும், அவ்வாறு புரியவே பேரின்ப மீதூரும் என்பார் உம்பருக்குங் காணவரிதாமின்பங்காண எனவும், இவைவழுவாதுநிற்க அருளவேண்டுமென்பார் பூணவருளே புரிஎனவுங் கூறினர். (உஅ)

அன்பெலாநின்பாலேயாக்கியடியேனுன்
னின்பெலாமுண்டிங்கிளைப்பாறக் - கொன்புனைவேற்
கையாதென்போரூரிற்காங்கேயாவீடுதவு
மையாநீகண்பார்த்தருள்.

(இ - ள்.) சொன்புனை வேல்கையா-அச்சம்விளைக்கும்,வேலேந்திய திருக்கரத்தையுடையவனே, தென் போரூரில் காங்கேயா - தென்பாலுள்ள திருப்போரூரி லெழுந்தருளிய காங்கேயனே, வீடு உதவும் ஐயா - அடியவர்க்கு முத்திதந்தருளும் ஐயனே, அடியேன் அன்பு எல்லாம் நின்பாலே ஆக்கி - அடியேன் அன்புமுற்றும் உன்னிடத்தேவைத்து, உன் இன்பு எல்லாம் இங்குஉண்டு - உன்னொடுவிரவி நுகரும்பேரின் பத்தையெல்லாம் இவ்விடத்து நுகர்து,இளைப்பு ஆற - பிறவித் துன்பத்தால்வந்த இளைப்புநீங்க,நீகண்பார்த்தருள்-நீ கடைக்கண்பார்த்தருளாய். (உகூ)

நீலக்கடன்முகட்டினேருதயசூரியன்போற்
கோலக்கலாபக்குரகதமேற் - சாலவுநீ
தோன்றியடியேன்றுயர்தீரப்போரூரா
வூன்றியடியென்முடிமேலோது.

(இ - ள்.) போரூரா - திருப்போரூரி லெழுந்தருளிய இறைவனே, நீலம் கடல் முகட்டில் உதயம் நேர் சூரியன்போல் - கரிய கடலினுச்சியில் உதயஞ் செய்த சூரியனைப்போல், கோலம் கலாபம் குரகதமேல் - அழகியமயிலாகிய குதிரையின்மேல், சாலவும் நீ தோன்றி - மிகவும் நீ காட்சிதந்து, அடியேன் துயர்தீர - அடியேன் பிறவித்துயர் தீர, என்முடிமேல் அடிஊன்றி - எனது சிரத்தின்மேல் திருவடிசூட்டி, ஓது - நீ அனுக்கிரகஞ் செய்யாய்.

கடல் முகடெண்பும் சூரியனுதயந் தொழிலும் ஆகத்தோன்றக் கூறுதலால்பண்புந் தொழிலும் பற்றிவந்த வுவமையணி. (௩0)

மலையரையனீன்றபிடிவாழ்ந்துதவுமியானை
கலையரையனைப்புடைத்தகாளை - சிலையரையன்
மாப்பிளைதென்போரூரின்மாணிக்கச்செஞ்சதங்கைக்
காற்பிளைநாயேனூர்கதி.

(இ - ள்.) மலை அரையன் ஈன்ற பிடிவாழ்ந்து உதவும் யானை-இமபர்வதவரசன் பெற்ற பெண்யானைவாழத் தந்தருளிய யானைக்கன்று, கலை அரையனைப்புடைத்தகாளை-வேதமுதலிய கலைகட்கு அரசனாகிய பிரமனைக்குட்டிய ஓர் காளை, சிலைஅரையன் மாப்பிள்ளை - கோதண்டத்துக்கரசனாகிய திருமாலின் மாப்பிள்ளை, தென்போரூரில் மாணிக்கம் செம் சதங்கை கால்பிள்ளை-தென்பாலுள்ள போரூரிலெழுந்தருளிய மாணிக்கங் குயின்ற செவந்த சதங்கையையணிந்த திருவடியையுடைய பிள்ளை, நாயேன் ஆர்கதி - நாயிற்கடைப்பட்ட எனக்கோர் பெருந்துணையாவான்.

யானை, காளை, மாப்பிள்ளை, பிள்ளை பொருண்முரணணி. வாழ்ந்து செயவெனெச்சத்திரிபு. (௩க)

ஏதுபிழைசெய்தாலுமேழையேனுக்கிரங்கித்
தீதுபுரியாததெய்வமே - நீதி

தழைக்கின்றபோரூர்த்தனிமுதலேநாயேன்
பிழைக்கின்றவாறுநீபேசு.

(இ - ள்.) நீதி தழைக்கின்ற போரூர் தனி முதலே - மறுநீதி பிறழாத திருப்போரூரி லெழுந்தருளிய ஒப்பில்லாத முதல்வனே, ஏது பிழை செய்தாலும் - யாதுகுறை செய்யினும், ஏழையேனுக்கு இரங்கி - அறிவில்லாத வெனக்குக் கருணைபுரிந்து, தீது புரியாத தெய்வமே - சிறிதுந் தீங்குசெய்யாத தெய்வமே, நாயேன் பிழைக்கின்ற ஆறு நீபேசு - நாயிற் கடைப்பட்ட யான் பிழைக்கும் வகையை நீபேசாய்.

விட்ட பற்றுவாதனை மீளவந்து தாக்குதல் தவறென்பார் ஏது பிழை செய்தாலும் எனவும், அதுவும் உனது செயலாய் நின்றதென்பார் ஏழையேனுக் கிரங்கித் தீதுபுரியாத தெய்வமே எனவுங்கூறினர். (கூஉ)

முக்கரணத்தாலுமுசியாதுனைப்பணியுந்
தக்கவர்கடாட்டாமரைமீது - புக்கபொடி
யொன்றினுமென்சென்னிக்கோரணியாப்போரூரா
சென்றுறுவேன்வீடுதெளிந்து.

(இ - ள்.) போரூரா- திருப்போரூரி லெழுந்தருளிய இறைவனே, முக்கரணத்தாலும் - மன முதலிய திரிகரணத்தாலும், முசியாது உன்னை பணியும் - வருந்தாது உன்னைவணங்கும், தக்கவர்கள் தாள் தாமரை மீது - நடுவு நிலைமையுடையோரது திருவடித் தாமரையில், புக்க பொடி ஒன்றினும்-அமைந்த பராகங்களில் ஒன்றாயினும், என் சென்னிக்கு ஓர் அணியாக - என்னுடைய சிரசுக் கோரணியாக நிலைபெற, வீடு தெளிந்து சென்று உறுவேன் - முத்திநிலையைத் தெளிந்து சென்றடைவேன்.

உன்னடியார்கள் திருவடி தீக்ஷையால் ஆணவமுதலிய மலங்களொழியுமென்பது தோன்ற வீடுதெளிந்து சென்னிக்கோரணியாச் சென்றுறுவேன் என்றார். (கூகூ)

மூவாசைகொண்டுமுசிக்குநெஞ்சேபோரூரிற்
றேவாசைகொள்ளத்தெரியாதோ - தேவாசை
கொண்டாயேனந்தங்குறைகளெல்லாமிக்கணமே
விண்டாயேகண்டாயேவீடு.

(இ - ள்.) மூ ஆசை கொண்டு - பொன்னாசை முதலிய ஈஷணாத்திரயங் கொண்டு, முசிக்கும் நெஞ்சே - வருந்து மனமே, போரூரில் தே ஆசை கொள்ள தெரியாதோ - திருப்போரூரி லெழுந்தருளிய இறைவனிடத்து விருப்பங் கொள்ள வுனக்குத் தெரியாதா, தே ஆசை கொண்டாயேல் - இறைவனிடத்து விருப்பங்கொண்டாயாகில், நந்தம் குறைகள் எல்லாம் - நமது குறைபாடுகளெல்லாம், இ கண மேவிண்டாய் - இந்த க்ஷணமே யொழிவாய், வீடு கண்டாய் - மோக்ஷமடைவாய் (அதனால் விருப்பங்கொள் என்றபடி.)

மூவாசை - மண், பெண், பொன் இம் மூன்றனிடத்தும் எழுமாசை. விண்டாய், கண்டாய் எதிர்காலத்தை இறந்தகாலமாகக் கூறியது தெளிவு பற்றி வந்த காலவழுவமைதி. (ருச)

குழவியழுதகுரல்கேட்டதாய்வந்
தழுதகண்ணீர்மாற்றியமுதூட்டுங் - கெழுதகைபோ
னாயேனிடர்களைந்துநல்லருளூட்டும்போரூர்ச்
சேயேநந்தாயாகுந்தேர்.

(இ - ள்.) குழவி அழுத குரல் கேட்ட தாய் வந்து-குழந்தையழுத குரலைக் கேட்ட தாயானவள் வந்து, அழுத கண் நீர் மாற்றி-அழுதலால்வந்த கண்ணீரைப்போக்கி, அமுது ஊட்டும் கெழுதகைபோல் - அமுதினை யூட்டும் மிக்க அன்பின் றன்மைபோல, நாயேன் இடர்களைந்து - நாயிற் கடைப்பட்ட எனது துன்பத்தைமாற்றி, நல் அருள் ஊட்டும் போரூர் சேயே - நல்ல கருணைசெய்யும் திருப்போரூரி லெழுந்தருளிய இறைவனே, நம் தாயாகும் - நமது தாயாவான், தேர்-மனமே நீ தெளியாய்.

குழந்தை யழுகுரலைக்கேட்டால் தாய் யாதுசெய லிருப்பினும் அதனைவிட்டுத் தாயானவளெடுத்துக் கண்ணீரைமாற்றி அமுதூட்டுதல் அவட்குரிய தொழிலாதலால் இது தொழிற்றன்மையணி. (ருரு)

கலங்கினேன்கண்ணீருன்கையாற்றுடைத்தே
யலங்கிலைவேலாறுமுகத்தையா - புலன்கரணங்
கண்டறியாவின்பங்கடையேற்குப்போரூரா
வுண்டறியத்தந்தாளுவந்து.

(இ - ள்.) அலங்கு இலை வேல் ஆறு முகத்து ஐயா - விளங்குந் தகட்டுவடிவாகிய வேலேந்திய ஆறு திருமுகங்களையுடைய ஐயனே, போரூரா - திருப்போரூரி லெழுந்தருளிய இறைவனே, கலங்கினேன் - உனது திருவருளைப் பெறாது நிலைகலங்கினேன், கண் நீர் உன் கையால் துடைத்து - அழுத கண்ணீரை உனது திருக்கரத்தால் துடைத்து, புலன் கரணம் கண்டு அறியாத இன்பம் - ஐம்புலன்களாலும் அந்தக் கரணங்களாலுங் காணுதற்கரிய பெரிய வின்பத்தை, கடையேற்கு உண்டு அறிய உவந்து தந்து ஆள் - அடியேற்குப் பருகி யறியமகிழ்கூர்ந்து தந்தாளாய்.

ஐம்புலன்களும், மனமுதலிய வந்தக்கரணங்களும் மாயா காரியங்களாதலால் புலன்கரணங் கண்டறியா என்றார். (ருசு)

மலைமுழையிலுற்றாலென்மாமருந்துண்டாலென்
கலைமுழுதுங்கற்றாலென்காணு - நிலைநிலவு
வேல்பிடித்தகையான்வியன்போரூரையனிரு
கால்பிடித்தார்காண்பார்கதி,

(இ - ள்.) இலை நிலவு வேல் பிடித்த கையான் - தகட்டு வடிவாகிய வேலேந்திய திருக்கரத்தை யுடையவனும், வியன் போரூர் ஐயன்-பரந்த

திருப்போரூரிலெழுந்தருளினவனு மாகிய இறைவனது, இருகால் பிடித்தார் - இரண்டுதிருவடிகளையும் பற்றுக்கோடாகப் பற்றினோர், கதிகாண்பார் - முத்தியைக்கண்பார்கள், மலை முழையில் உற்றால் என் - (பிடியார்)மலைக்குகையில் வசித்தாலுமென்ன, மா மருந்து உண்டால் என் - காயசித்திகள் பெறப் பெருமைவாய்ந்தமருந்தினையுண்டாலுமென்ன, கலை முழுதும் கற்றால் என் - நூல்முற்றுங் கற்றுணர்ந்தாலுமென்ன, கதி காணார் - முத்தியைக்காணார்.

பிடியார் என்பது சொல்லெச்சம். (௬௭)

விருப்பமுடனேபணியுமெய்யன்பரைய
மிருப்புநெஞ்சவென்போலியையுங் - கருப்பிரதக்
கட்டியார்தீஞ்சுவைபோற்காதலர்க்கீயும்போரூர்ச்
செட்டியார்தாமறிவார்தேர்ந்து.

(இ - ள்.) விருப்ப முடனே பணியும் மெய் அன்பரையும் - விருப்பத்தோடு கசிந்து வணங்கு மெய்யன்பை யுடையவரையும், இரும்பு நெஞ்ச என்போலியையும் - இரும்புபோலக் கடினமான மனத்தையுடைய என்னை யொத்தவரையும், கருப்பு இரதக்கட்டி ஆர் தீம் சுவைபோல் - கரும்பின் ரசத்தை வடித்துக் காய்ச்சிய கட்டியிலமைந்த இனிய சுவையைப்போல, காதலர்க்கு ஈயும் போரூர் செட்டியார் - தன்னை விரும்பியடைந்தவர்க்கு அருள்செய்யுந் திருப்போரூரிலெழுந்தருளிய இறைவர், தேர்ந்து அறிவார் - அறிந்து உணர்வார்.

முருகக்கடவுள் சங்கத்தார் கலகந்தீர்த்தற் பொருட்டு வணிகர்குலத்தில் மூங்கைப் பிள்ளையாராய்த் திருவவதாரஞ்செய்த காரணத்தால் செட்டியெனவந்தது ஓர் காரணப்பெயராதலின் செம்மொழிச்சிலேடையாகச் செட்டியார் எனவும், வணிகர் அவரவர் தரமறிந்து ஒழுகுங் குணமுடையோராதலால் மெய்யன்பரையும், என்போலியையுந் தேர்ந்தறிவாரெனவும் கூறினர். என்போலி உயர்திணை யொருமைக்கேயுரிய பெயராயினும்பன்மையினும்விரவி வருதலால் என்போலி என்றதை என் போலியரெனப் பொருள்கொண்டாம். (௬௮)

கோழிப்பதாகையுஞ்சீர்க்கோலமயில்வாகனமு
மாழிப்பெருக்குறிஞ்சியார்வேலும் - வாழியெனத்
தோத்திரஞ்செய்போரூரிற்சுந்தரனார்பேரருளோர்
மாத்திரையினெஞ்சேவரும்.

(இ - ள்.) நெஞ்சே - மனமே, கோழிப்பதாகையும் - சேவற்கொடியையும், சீர் கோல மயில் வாகனமும் - சிறந்த அழகிய மயிலூர்தியையும், ஆழி பெருக்கு உறிஞ்சி ஆர்வேலும் - கடற்பெருக்கினையுறிஞ்சித் தன்னிலையிற்குன்றாத வேலினையும், வாழி என தோத்திரம் செய் - வாழக்கடவ எனத் தோத்திரஞ்செய்யாய், போரூரில் சுந்தரனார் பேர் அருள் - திருப்போரூரி லெழுந்தருளிய கட்டழகையுடையவரது பெரிய திருவருள், ஓர் மாத்திரையில் வரும் - ஒரு மாத்திரைப் பொழுதிற் கைகூடும். (௬௯)

அயிலேந்துதோளானையாறுமுகத்தானை
மயிலேந்துதாளானைவாழ்த்திப் - புயலேந்து
தண்டலையார்போரூர்ச்சரவணனைநெஞ்சமே
கண்டலையாதுற்றார்களி.

(இ - ள்.) நெஞ்சமே - மனமே, அயில் ஏந்து தோளானை - வேலையேந்திய திருத்தோள்களையுடைய முருகக்கடவுளை, ஆறுமுகத்தானை - ஆறுதிருமுகங்களையுடையவனை, மயில் ஏந்து தாளானை - மயிலேந்திய திருவடிகளையுடையவனை, புயல் ஏந்து தண்டலை ஆர் போரூர் சரவணனை - மேகந்தவழுஞ் சோலை சூழ்ந்த திருப்போரூரி லெழுந்தருளிய முருகக்கடவுளை, அலையாது கண்டு வாழ்த்தி - விடயங்களி லலை யாதுதெரிசித்து வாழ்த்தி, களி உற்றார் - பலரும் பேரின்பமடைந்தார்கள் (நீயுங்கண்டு வாழ்த்தில் பேரின்பமடையலாமென்றபடி.) (சo)

புயல்போற்கருணைபொழிவிழியான்றன்னை
மயல்போக்குமாமருந்தைவந்தெஞ் - செயல்போக்கும்
போதானந்தச்சுடரைப்புண்ணியனைப்போரூரி
னாதாந்தனைமனமேநாடு.

(இ - ள்.) மனமே - நெஞ்சமே, புயல்போல் கருணை பொழி விழியான் தன்னை - மேகம்போலக்கருணை பொழியுந் திருநேத்திரங்களையுடையவனை, மயல்போக்கு மாமருந்தை-பிறவிமயக்கமொழிக்கும் பெரிய மருந்தினை,வந்து எம் செயல் போக்கும் போதானந்தம் சுடரை-ஆசிரிய மூர்த்தமாயெழுந்தருளிவந்து எமது தற்போதத்தை யொழித்தருளும் ஞானந்த வொளியை,புண்ணியனை-புண்ணிய சொருபனை, போரூரில் நாதாந்தனை நாடு - திருப்போரூரி லெழுந்தருளிய நாதாந்த தத்துவத்தினிறுதியிலுள்ளவனை நீ ஆராயாய்.

திருவருள் வடிவாயுள்ளானென்பார் நாதாந்தனை யென்றார். (சக)

உரகபடந்தூக்கியுதறுபசுந்தோகைத்
துரகமிசைத்தோன்றுஞ்சுடரே - பரகதியில்
வாழ்ந்துய்யநாயேன்வளமைதரும்போரூரா
சூழ்ந்தருளாய்சாலத்தொடர்ந்து.

(இ - ள்.) உரகபடம் தூக்கி உதறு பசும் தோகை துரகம் மிசை தோன்றும் சுடரே - பாம்பின்படத்தைத் தூக்கி உதறுநின்ற பசிய மயிலாகிய குதிரையின் மீது காட்சி தந்தருளும் ஒளியே, நாயேன் பரகதியில் வாழ்ந்து உய்ய - நாயிற்கடைப்பட்டயான் முத்தியில் வாழ்ந்து பிழைக்க, வளமைதரும் போரூரா - வளமைமிக்க திருப்போரூரி லெழுந்தருளிய இறைவனே, சால தொடர்ந்து சூழ்ந்து அருளாய் - மிகவும் அடியேனைவிடாது தொடர்ந்து கருணை செய்யாய்.

தன்னை உயர்த்திக்கூறல் பொருந்தாமையால் வாழ்ந்தருள என்னும் பாடத்தை வாழ்ந்துய்ய எனக்கொண்டாம். (சஉ)

கடலைச்சேறுக்கிக்கடுவரைநீறுக்கி
மிடலுற்றசூரனுரம்வீட்டி - யடலுற்ற
வேல்கொண்டார்தெய்வத்தைமெய்யாகப்போரூரின்
பால்கண்டார்க்குண்டோபவம்.

(இ - ள்.) கடலை சேறு ஆக்கி-கடலினை அளறுபடுத்தி,கடுவரை நீறு ஆக்கி-அச்சந்தருமலைகளை நீறுபடுத்தி, மிடல் உற்ற சூரன் உரம் வீட்டி-வலிமைமிக்க சூரபன்மன் மார்பைப்பிளந்து, அடல் உற்ற வேல் கொண்டு ஆர் தெய்வத்தை - வெற்றிமிக்க வேலேந்தி யெழுந்தருளிய தெய்வத்தை,போரூரின்பால் மெய்யாக கண்டார்க்கு - திருப்போரூரில் உண்மையாகக்கண்டு தெரிசித்தவர்க்கு,பவம் உண்டோ - பிறவியுண்டோ (இல்லையென்றபடி.)

கடு - கடி என்னும் உரிச்சொற்றிரிபு. பவமுங்கடல் போல அளவிடுத்தற் கரிதாதலாலும், பிறரளத்தற் கரிதாதலாலும், அதனை யொழித்தற் குரியோன் இவனென்பது தோன்றக் கடலைச் சேறுக்கிக்கடுவரை நீறுக்கி, மிடலுற்ற சூரனுரம் வீட்டி, எனவி சேடணங்களை வாக்கியரூபமாகக் கூறியிருத்தலால் கருத்துடையடையணி. (௬௩)

மறப்புநினைப்பாகிவருதிரையெந்நாளும்
புறப்படாவின்பப்புணரி - யுறப்புகுந்தே
யாடிக்களிக்குமருட்போரூரையனடி
கூடிக்களிக்குங்குழாம்.

(இ - ள்.) அருள் போரூர் ஐயன் அடி கூடி - திருப்போரூரிலெழுந்தருளிய இறைவனது திருவடியிற்கலந்து, களிக்கும் குழாம் - மனங்களிக்கும் அடியவர் கூட்டம், மறப்பு நினைப்பு ஆகி வருதிரை - கேவலசகல மென்னும் பெயர் பெற்றுவரும் அலைகள், எந்நாளும் புறப்படாத - எந்நாளுந்தோன்றாத, இன்பப்புணரி - பேரின்பகடலில், உற புகுந்து ஆடி களிக்கும் - பொருந்தச்சென்று திளைத்தாடிக் களிகூர்வார்கள்.

பொருளால் உயர்திணையாயினும் சொல்லால் அஃறிணையாதலால் குழாங் களிக்குமென அஃறிணை முடிபு தந்தார். கடலுக்கு அலையுளதாதல்போலக் கேவல சகலமென்னும் இரண்டவத்தைகளுக்கும் மேற்பட்ட சுத்தாவத்தையிற் றோன்றிய பேரின்பக் கடலுக்கு அவ்வலைகளின்மையால் மறப்பு நினைப்பாகி வருதிரை யெந்நாளும் புறப்படா வின்பப்புணரி யென்றார்.

இதனால் மறுமைப்பயன் கூறினார். (௬௪)

முத்துச்சிவிகையராய்மூரிமதயானையராய்த்
தத்துபரிமான்றேரிற்றங்குநராய் - மெத்து
மரியாதனத்தராயாளுவர்பூம்போரூர்ப்
பிரியாதானீறணிந்தபேர்.

(இ - ள்.) பூம் போரூர் பிரியாதான் நீறு அணிந்த பேர்-பொலிவமைந்த திருப்போரூரினின்று நீங்கா தெழுந்தருளியிருக்கின்ற முருகக்கடவுளது திருநீ

ற்றையணிந்த அடியவர், முத்து சிவிகையாராய் - முத்துப்பல்லக்கை யுடைய வராகியும், மூரி மதயானையராய் - பெரிய மதத்தையுடைய யானையூர்தியை யுடையவராகியும், தத்து பரிமான்தேரில் தங்குநராய் - தாவிச்செல்லுங் குதிரை பூட்டிய தேரிற்செல்லுவோராகியும், மெத்தும் அரி ஆதனத்தாராய் ஆளுவர்-மேன்மைவாய்ந்த சிங்காதனத்தில் வசிப்பவராகியும் உலகினையாளுவர். (௬௫)

பேய்போந்துயரம்போம்பித்தம்போம்போகாத
நோய்போமிடிபோம்நுவலுங்காற் - றாய்போல
நன்னிதியைப்போலநயந்ததிருப்போரூரன்
சன்னிதியைக்கண்டளவே தான்.

(இ - ள்.) நுவலுங்கால்-சொல்லுமிடத்து, தாய்போல் நல்நிதியைப்போல நயந்த திருப்போரூரன் - தாயைப்போலவும் நல்லசங்கநிதி பதுமநிதியைப் போல்வும் யாவரும்விரும்பப்பட்ட திருப்போரூரிலெழுந்தருளிய இறைவனது, சன்னிதியைகண்ட அளவே - சந்நிதியைத் தரிசித்தவளவிலே, பேய் போம் - பேய்புறங்கொடுத்தோடும், துயரம் போம் - துன்பமொழியும், பித்தம் போம்- பித்தநோயொழியும், போகாத நோய் போம் - ஒழியாத நோய்போம், மிடிபோம் - வறுமைபோம்.

இரண்டு செய்யுளாலும் இம்மைப்பயன் கூறப்பட்டது. (௬௬)

குமராநமாவென்றுகூறினரோர்கா
லமராவதியாள்வரன்றி - யமராசன்
கைபுகுதார்போரூரன்கால்புகுவார்தாயுதரப்
பைபுகுதார்சேரார்பயம்.

(இ - ள்.) ஓர் கால் குமரா நமா என்று கூறினோர் - ஒருதரங் குமாராய நம என்று உச்சரித்தவர், அமராவதி ஆள்வர் - விண்ணுலகை யாள்வார்கள், அன்றி - அதுவுமன்றி, யமராசன் கை புகுதார் - இயமனுடைய கையிற்படார், போரூரன் கால் புகுவார் - திருப்போரூரி லெழுந்தருளிய இறைவனுடைய திருவடியை யடைவார், தாய் உதரப்பைபுகுதார்-தாயினது கருப்பப்பையிலடையார், பயம் சேரார் - பயத்தையடையார்.

இதனால் திருமந்திரத்தின் பயன் கூறப்பட்டது. (௬எ)

குற்றமிழைத்தாலுங்குணமாகக்கொண்டுநம்மேற்
பற்றுவிடாதபழம்பொருளா - முத்தமழைக்
காரூரரையனுக்குக்கற்பகநீழற்கொடுத்த
போரூரரையனெஞ்சேபோற்று.

(இ - ள்.) குற்றம் இழைத்தாலும்-நாம் யாதுகுற்றஞ் செய்யினும், குணம் ஆக கொண்டு - அதனைக் குணமாகக்கொண்டருளி, நம்மேல் பற்று விடாத பழம்பொருள் ஆம் - நம்மேல் சிறிதும் நெகிழாத மூலதனமாகிய, முத்தம் மழை கார் ஊர் அரையனுக்கு - முத்தினை மழையாகச்சொரியும் மேகத்தை யூர்தியாக

நடத்தும் இந்திரனுக்கு, கற்பக நீழல் கொடுத்த போரூர் அரையன் - கற்பக நிழலிலிருந்து செய்யும் அரசியலைக் கொடுத்த திருப்போரூரி லெழுந்தருளிய இறைவனை, நெஞ்சே போற்று - மனமே துதியாய்.

சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி, நீலவருணம் என்னும் மேகங்களேழனுள் சம்வர்த்தமென்னும் மேகம் முத்தம் பொழிவதாதலால் முத்தமழைக்கா ரென்றார். (சஅ)

வேலுமயிலும்விளங்குஞ்சிறுசதங்கைக்
காலுமீராறுகனதோளுஞ் - சால
வருளுதவுமாறுமுகமுமுளபோரூர்ப்
பொருணமதுநெஞ்சமேபோற்று.

(இ - ள்.) வேலும் மயிலும் - வேற்படையும் மயிலூர்தியும், சிறு சதங்கை விளங்கும் காலும் - சிறுசதங்கை விளங்குந் திருவடிகளும், ஈராறு கனதோளும் - பருத்த பன்னிரண்டு திருப்புயங்களும், சால அருள் உதவும் ஆறுமுகமும் உள - மிகவும் அருள் சுரக்கும் ஆறு திருமுகங்களுமுள்ள, போரூர் பொருள் - திருப்போரூரி லெழுந்தருளிய நிதி, நமது - நமக்குரிய நிதி, நெஞ்சமே போற்று - மனமே துதியாய்.

நமது—பொருளடியாகப்பிறந்த குறிப்புவினை முற்றுப்பெயர். (சகூ)

சரவணவாவிச்சலமூழ்கியன்பாற்
குரவணிதாணடிக்கைகூப்பிப் - பரகுருவே
யென்றோதிவாழ்த்தியிரும்போரூர்சூழ்ந்தவனை
நின்றோதிநெஞ்சேநினை.

(இ - ள்.) நெஞ்சே-மனமே, சரவண வாவி சலமூழ்கி-சரவணவாவியிலுள்ள நீரிற்படிந்து, அன்பால் குரவு அணிதாள் நாடி கைகூப்பி-அன்போடு குராமலரையணிந்த திருவடியை நாடிக் கைகுவித்து, பரகுருவே என்று ஓதிவாழ்த்தி - பரகுருவே என்று கூறிவாழ்த்தி, இரும் போரூர் சூழ்ந்தவனை - பெரிய திருப்போரூரை வலம்வந்தவனை, நின்று ஓதி நினை - நின்று துதித்து நினையாய். (ருo)

வேலைநினைத்தாயோவியன்கிண்கிணிசூழ்ந்த
காலைநினைத்தாயோகனபோரூர் - வேலையாச்
சூழ்ந்துதொழுதாயோநீசூரியாகாரிருளைப்
போழ்ந்திடுவாளேதோபுகல்.

(இ - ள்.) சூரியா நீ - சூரியனே நீ, வேலை நினைத்தாயோ - முருகக்கடவுளேந்திய வேற்படையைச் சிந்தித்தாயோ, வியன் கிண்கிணி சூழ்ந்த காலை நினைத்தாயோ - ஒளிபரந்த சதங்கை சூழ்ந்த திருவடியை நினைத்தாயோ, கன போரூர் - பெருமைவாய்ந்த திருப்போரூரை, வேலையாக சூழ்ந்து தொழுதாயோ - நித்திய கடனாகப் பிரதக்ஷிணஞ்செய்து வணங்கினாயோ, கார் இருளை

போழ்ந் திடு வாள் - கரிய அந்தகாரத்தைப் பிளக்கும் வாட்படை (வாள் - ஒளி) ஏது - உனக்கேது, புகல் - சொல்லாய்.

இவற்றுளொன்றைக்கடனாகநீகொண்டமையால் உனக்கு வாள்வாய்த்தது என்பார் போழ்ந்திடுவாளேதோ புகல் என்றார். (ருக)

அம்புலியேபோரூர்வந்தாறுமுகங்கண்டாயோ
நம்புமடியார்சபையைநண்ணினையோ - வெம்பரனைப்
பண்ணளியாற்பாடினையோபாற்கடல்போலேவிளங்குந்
தண்ணளிநிற்கேதுகாண்சாற்று.

(இ - ள்.) அம்புலியே - சந்திரனே, போரூர் வந்து ஆறு முகம் கண்டாயோ - திருப்போரூரில்வந்து ஆறு திருமுகங்களையுங்கண்டு தெரிசித்தனையோ, நம்பும் அடியார் சபையை நண்ணினையோ - அவனை நம்பியடைந்த அடியவரது திருச்சபையை யடைந்தாயோ, எம்பரனை பண் அளியால் பாடினையோ - எமது குருபரனைப் பண்ணோடு அன்பாற்பாடினாயோ, பால் கடல்போலே விளங்கும் தண் அளி நிற்கு ஏது - பாற்கடல்போல் விளங்காநின்ற தண்ணிய குணம் உனக்கு வந்ததுயாது, சாற்று - அதனை எனக்குக் கூறாய்.

இவற்றுளொன்றை நீகடனாகக் கொண்டமையால் வந்ததென்பார் சாற்று என்றார். (ருஉ)

கடவுட்பிடிக்கோர்களிப்பாகும்வள்ளிக்
கொடிசுற்றத்தானுங்குலாவு - மடியார்க்கே
யெண்ணுதொறுமுள்ளத்திலின்பூறும்போரூரிற்
கண்ணுதலான்றந்தகரும்பு.

(இ - ள்.) போரூரில் - திருப்போரூரில், கண்ணுதலான் தந்த கரும்பு - சிவபெருமான் பெற்ற ஓர் கரும்பு, கடவுள் பிடிக்கு ஓர் களிப்பு ஆகும் - தெய்வயானைக்கு ஓர் களிப்பினைத்தரும், வள்ளி கொடி சுற்ற தானும் குலாவும் - வள்ளியென்னும் ஒருகொடிசூழ்ந்து படரவிளங்கும், அடியார்க்கே எண்ணுதொறும் உள்ளத்தில் இன்பு ஊறும் - அடியவர்க்கே எண்ணுந் தோறும் மனத்தில் பேரின்பத்தைச் சுரக்கும்.

கரும்பு சுவைத்தாற் சுவைதருவது, இக்கரும்பு அடியவர் சிந்திக்கச் சுவைதருவதென்பார் எண்ணுதொறும் உள்ளத்திலின்பூறு மெனவும், யானைக்குக் களிப்புத்தருவது கரும்பென்பார் கடவுட் பிடிக்கோர் களிப்பாகு மெனவும், கொடிசூழ நிற்றல் கரும்பின்றன்மையென்பார் வள்ளிக்கொடி சுற்றத்தானுங்குலாவும் எனவுங் கூறினார். கடவுட்பிடி, வள்ளிக்கொடி, தெய்வயானை நாய்ச்சியார் மேலும், வள்ளி நாய்ச்சியார்மேலும் நிற்றலால் செம்மொழிச்சிலேடையணியும், கரும்பினியல்பை யெடுத்துக் கூறுதலால் சாதித்தன்மையணியும் கலந்து வருதலால் கலவையணி. (ருங)

வாளைப்பகடுமடைவாயடைக்கவரு
மாளைப்பகட்டுமணிபோரூர் - நீளிடத்தி
லைவண்ணமுண்டங்கதிலோரரசிருக்கு
நைவண்ணம்போகநெஞ்சேநாடு.

(இ - ள்.) வாளைபகடு-ஆண்வாளை,மடைவாய் அடைக்கவரும் ஆளை பகட்டும் - நீர்மடையின் வாயையடைக்கவாரா நின்ற ஆளினைமயக்காநின்ற, அணி போரூர் நீள் இடத்தில் - அழகிய திருப்போரூராகிய வெளியிடத்தில், ஐவண்ணம் உண்டு-மருதோன்றியொன்றுண்டு, அங்கு அதில் ஓர் அரசு இருக்கும் - அவ்விடத்தில் ஒரு அரசமரமிருக்கும், (அதனை) நெஞ்சே-மனமே, நைவண்ணம் போக-வருந்தும் வகைபோக, நாடு - நீ நாடாய்.

ஐவண்ணமென்றது பஞ்சவர்னங்களையுடைய சிவபிரானை, அரசு என்றது முருகக்கடவுளை.இது செம்மொழிச்சிலேடையணி.சிவபெருமான் அதோமுகத்தோடு ஆறுதிருமுகங்களினின்றுந் தோன்றினவராதலால் ஐவண்ணமுண்டங்கதிலோர் அரசிருக்கு மென்றார். (௫௪)

என்போதநின்பாலேயீதலேநல்லறனு
முன்போதங்கைக்கொள்வதொண்பொருளா - முன்பாதத்
தானந்தமின்பமாமாரமுதேபோரூரா
மோனந்தான்வீடாகுமொய்த்து.

(இ - ள்.) என்போதம் நின்பாலே ஈதலே நல் அறன் ஆம்-எனது தற்போதத்தை உன்னிடத்துக் கொடுத்தலே நல்ல தருமமாம், உன் போதம் கைக்கொள்வது ஒண் பொருள் ஆம்-உனது சிவபோதத்தைக் கைக்கொள்ளுதலே ஒள்ளிய பொருளாம், உன் பாதத்து ஆனந்தம் இன்பம் ஆம் - உனது திருவடியை அடைந்து நுகரும் இன்பமே இன்பமாகும், ஆர் அமுதே - அரிய அமுதுபோல் ப்வனே, போரூரா - திருப்போரூரி லெழுந்தருளியிருக்கின்ற இறைவனே, மோனம் தான் மொய்த்து வீடு ஆகும் - மௌனநிலையே இடைவிடாது முத்தியாகும்.

இதனால் அடியவர் நாடியடையும் தர்மார்த்த காமமோக்ஷங்கள் கூறப்பட்டன. (௫௫)

சூக்குமையாம்வாக்குந்துனியாணவவுடலு
நீக்கரியவென்போதநெஞ்சமே - போக்கி
யிருந்தபடியிருக்கவென்றுபோரூரா
திருந்தவரம்பாலிப்பாய்செப்பு.

(இ - ள்.) சூக்குமையாம் வாக்கும் - சூக்குமையாகிய வாக்கையும், துனி ஆணவ உடலும் - நடுக்கஞ்செய்யும் ஆணவமாகிய வுடம்பையும், நீக்கு அரிய என் போதம் - நீக்குதற்கரிய எனது தற்போத நிலையையும், நெஞ்சும் - என்மன நிலைமையையும், போக்கி - ஒழித்தருளி, இருந்த படி இருக்க - மவுன

நிலையில் அடியேனிருக்க, என்று - எக்காலத்தில், போரூரா - திருப்போரூரி லெழுந்தருளிய இறைவனே, திருந்த வரம் பாலிப்பாய் - திருத்தமாக வரம்தந் தருள்வாய், செப்பு - அதனைக்கூறாய்.

விந்து தத்துவத்தின் காரியப்பாடாகிய சூக்குமை முதலிய நான்கு வாக்கு களும் சொற்பிரபஞ்சமாதலால் சூக்குமையாம் வாக்கு எனவும், ஆணவமலமே உடம்பாகத்தன் இச்சாஞானக்கிரியைகள் தோன்றாமல் ஆன்மா நிற்குங் கேவலா வத்தையைக் கூறுதலால் தனியாணவவுடலும் எனவும், தனுகரண புவனபோ கங்களோடுகூடி அவை யான் எனது எனநிற்கும் அவசரம் சகலமாதலால் நீக் கரிய வென்போத நெஞ்சம் எனவும், இவற்றைக்களைந்து சிவத்தொடு கூடிநிற் கும் சுத்தாவத்தையை விரும்புதலால் போக்கி இருந்தபடியிருக்க எனவும் கூறி னார். ஏகாரம் எண்ணிடைச்சொல். (௬௬)

ஐவாயவாவையுமுன்னாரடிக்கேவைப்பதலர்
மெய்யானவன்பேவியன்சலமாம் - பொய்யாத
வுன்போதத்தாலறிவதொண்சுடராம்போரூரா
வென்போதநைவேத்தியம்.

(இ - ள்.) போரூரா - திருப்போரூரி லெழுந்தருளிய இறைவனே, ஐ வாய் அவாவையும் உன் ஆர் அடிக்கே வைப்பது - ஐம்புலன் வழியேவரும் வி ருப்பத்தை உனது அரிய திருவடிக்கண்ணே வைப்பதே, அலர் - மலராம், மெ ய் ஆன அன்பே வியன் சலம் ஆம்-உண்மையாகிய அன்பே உனக்குப்பெரிய தி ருமஞ்சனமாம், பொய்யாத உன்போதத்தால் அறிவது ஒண்சுடராம் - பொய்க் காத உனது சிவபோதத்தாலுன்னை யறிதலே ஒள்ளிய திருவிளக்காம், என் போதம் நைவேத்தியம் - எனது தற்போதமே உனக்கு நைவேத்தியமாம்.

ஐம்புலன் வாயிலாகவரும் அவாவை இறைவன் திருவடிக்கண்ணே வை க்குங்காலம் மெய்யன்பு தலைப்பட்டகாலத்தே யாதலால் அதனை மலராகவும், அவ்வின்பினைச் சலமாகவும், சிவபோதவொளியில் தற்போத இருள் ஒழிதலால் சுடராம் நைவேத்தியம் எனவும் உருவகஞ் செய்தார். (௬௭)

அமரர்க்கின்பாகுமவுணர்க்கேகைப்பா
மிமயப்பிடிகரத்திலெய்துஞ் - சமயத்
தலைவனார்மோந்துகொளச்சாரும்போரூரிற்
கலைவலாரேத்துங்கனி.

(இ - ள்.) போரூரில் கலை வல்லார் ஏத்தும் கனி - திருப்போரூரில் அறுப த்து நான்கு கலைகளினும் வல்ல புலவர்கள் வணங்கும் ஓர்கனி, அமரர்க்கு இ ன்பு ஆகும்-தேவர்களுக்கு இன்பத்தைவிளைக்கும்,அவுணர்க்கே கைப்பு ஆம்-அ வுணர்களுக்கே கசப்பாகும்,இமயப் பிடி கரத்தில் எய்தும் - இமயமலையிற் றோ ன்றிய பெண் யானையையொத்த உமையம்மையின் திருக்கரக்கரத்திற் பொரு ந்தும், சமயத் தலைவனார் மோந்து கொள சாரும் - அறுசமயங்களுக்கும் தலை வராகிய இறைவர் மோப்பச்சாரா நிற்கும்.

முருகக்கடவுளை அம்மை திருக்கரத்திலேந்துதலாலும், சிவபெருமான் உச்சியை மோத்தலாலும் இடயப்பிடிகரத்திலெய்துஞ் சமயத்தலைவனுர் மோந்து கொளச்சாரும் எனவும், இந்திரன் முதலியோர்க்கு வாழ்வைத் தருதலாலும் சூரபன்மன் முதலியோரை வேறறக் களைதலாலும் அமரர்க்கின்பாகு மவுணர்க்கே கைப்பாமெனவுங் கூறினுர். (௫அ)

மரகதமாமலைமேன்மாணிக்கவெற்புத்
திரகதமாய்த்தோன்றுந்திறம்போல் - வருமுனது
காட்சியினைநாயடியேன்கண்டுதொழத்தந்தருளாய்
மாட்சிதருபோரூராவந்து.

(இ - ள்.) மாட்சி தரு போரூரா - பெருமையமைந்த திருப்போரூரி லெழுந்தருளிய இறைவனே, மரகத மாமலை மேல் - பெரிய மரகதமலைமேல், மாணிக்க வெற்பு திர கதமாய் தோன்றும் திறம்போல் - மாணிக்கமலை நிலையாகப் புலப்படும் திறத்தைப்போல, வரும் உனது காட்சியினை நாய் அடியேன் கண்டு தொழ - வாராநின்ற உனது காட்சியினை நாயிற் கடைப்பட்ட அடியேன் கண்டு தெரிசிக்க, வந்து தந்தருளாய் - எழுந்தருளிவந்து கொடுத்தருளாய். (௫௯)

ஆணிப்பொனென்கோவருளாழிதானென்கோ
மாணிக்கமென்கோமதியென்கோ - பேணிப்
பணிவாரிருள்போக்கும்பானுவென்கோபோரூர்க்
கணியாகுந்தெய்வத்தையான்.

(இ - ள்.) போரூர்க்கு அணியாகும் தெய்வத்தை - திருப்போரூர்க்கு ஓரலங்காரமாகிய தெய்வத்தை, யான் ஆணிப்பொன் என்கோ - யான் உரையாணிக் கமைந்த பொன்னென்று கூறுவேனே, அருள் ஆழி தான் என்கோ - கருணைக்கடலென்று கூறுவேனே, மாணிக்கம் என்கோ - மாணிக்கம் என்று கூறுவேனே, மதி என்கோ - சந்திரன் என்று சொல்வேனே, பேணி பணிவார் இருள் போக்கும் பானு என்கோ - வழிபட்டு வணங்கும் அடியவர் அகவிருளைப்போக்கும் சூரியன் என்று கூறுவேனே.

உலகினர்க்குப் பொன் அரிய பொருளாதலால் ஆணிப்பொன் என்கோ எனவும், ஆன்மாக்களிடத்து அளவிறந்த கருணையை யுடையோனுதலால் அருளாழிதானென்கோ எனவும், கிட்டுதற்கரிதாதலால் மாணிக்கமென்கோ எனவும்,அடியவரிடத்துத் தண்ணளிசெய்தலால் மதியென்கோ எனவும், சூரியன் புறவிருளைப் போக்குதல்போல அடியவரகவிருளைப் போக்கலால் பேணிப்பணிவாரிருள் போக்கும் பானுவென்கோ எனவுங்கூறினுர். (௬0)

ஆனந்தமாகடலேயாராவமுதமே
மோனந்தருஞ்சுடரோமுத்திவித்தே - தேனந்து
கஞ்சமலர்வாவிக்கனபோரூராயாநீ
தஞ்சமெனைக்காத்தாள்சரண்.

(இ - ள்.) ஆனந்த மா கடலே - பெரியவானந்த சாகரமே, ஆரா அமுத மே - தெவிட்டாத வமுதமே, மோனம் தரும் சுடரோ - மௌனநிலையைப் பாவித்தருளும் பேரொளியே, முத்தி வித்தே - மோக்ஷநிலத்துக்கு ஓர்விதையே, தேன் நந்து கஞ்சமலர் வாவிகள போரூர் ஐயா - தேன் பொழியும் தாமரைகள் மலரும் தடாகஞ்சூழ்ந்த பெருமை யமைந்த திருப்போரூரி லெழுந்தருளிய ஐயனே, நீ தஞ்சம் - நீ எனக்குப் பற்றுக்கோடு, என்னை காத்து ஆள் - என்னைக் காத்து அடிமைகொள்ளாய், சரண் - யான் உனக்கு அடைக்கலம். (௬௧)

பாம்பாகத்தோன்றிற்பழுதைசற்றுந்தோன்றாதாம்
பாம்பின்றாத்தோன்றிற்பழுதையே - மேம்பாடாய்ப்
பொய்தோன்றின்மெய்தோன்றாபோரூராநின்னருளான்
மெய்தோன்றிற்பொய்தோன்றாவீடு.

(இ - ள்.) பாம்பு ஆக தோன்றில் - பழுதை பாம்பாகத்தோன்றினால், பழுதை சற்றும் தோன்றாதாம் - ஆரோபத்திற்கிடமான பழுதைபழுதையென்று சிறிதும் புலப்படாதாம், பாம்பு இன்றாகத் தோன்றில் - ஆரோபமான பாம்பு இல்லையாகத் தோன்றினால், பழுதையே - ஆரோபத்திற் கிடமான பழுதை பழுதையாகவே தோன்றும், (அது போல) மேம்பாடாய் - மிகவும், பொய் தோன்றில் மெய் தோன்றா - மாயாகாரியமாகிய பிரபஞ்சமாகிய சடம்புலப்பட்டால் அதற்கு அதிட்டானமாகிய சித்து தோன்றாவாம், போரூரா - திருப்போரூரிலெழுந்தருளிய இறைவனே, நின் அருளால் - உனது திருவருளால், மெய் தோன்றில் - அதிட்டானமாகிய சித்துப்புலப்பட்டால், பொய் தோன்றா - மாயாகாரியமாகிய பிரபஞ்சம்தோன்றா, வீடு தோன்றும் - முத்திதோன்றும்.

இரவும் பகலுமொழிந்த மாலைப்பொழுதில் ஓர் பழுதை கிடக்கில் அது பார்ப்போன் கண்களுக்குச்சிறிது நிகழுமிருட்டால் பாம்பாகத்தோன்றும் ஆதலால் பாம்பாகத் தோன்றிற் பழுதை சற்றுந் தோன்றாதாமெனவும்,அவ்வையம் நீக்குதற்கு விளக்கினைக் கைக்கொண்டோனுக்கு ஆரோபமான பாம்பு தோன்றாது பழுதையேதோன்றுவதுபோலப் பாம்பின்றாத்தோன்றிற் பழுதையேயெனவும், கேவலாவத்தையும் சுத்தாவத்தையுமின்றி நின்ற சகலாவத்தையில் மாயாகாரியமாகிய பிரபஞ்சமென்னும் சடந்தோன்றில் அதற்கதிட்டானமாகிய சித்துத்தோன்றாவாதலால் பொய்தோன்றின் மெய்தோன்றா எனவும்,உனது திருவருளாகிய விளக்கைக் கொண்டால் பிரபஞ்சமாகிய சடந்தோன்றாது அதற்கதிட்டானமாகிய சித்துப்பொருள் தோன்றுமாதலால் மெய்தோன்றிற் பொய்தோன்றாவெனவும்,சித்துப்பொருள் புலப்பட்டால் முத்திநிலை கைகூடுமாதலால் வீடுதோன்றுமெனவுங் கூறினர்.

தோன்றுமென்பது சொல்லெச்சம். (௬௨)

கானலைநீரன்றென்றுகாட்டக்கண்டானொருவன்
மானலநீரொன்றுமயங்கல்போ - னீநலமாய்ப்

பொய்யுலகம்பொய்யாகக்காட்டியும்போரூரனே
மெய்யெனவுண்ணைந்தேன்மிக.

(இ - ள்.) கானலை நீர் அன்று என்று காட்ட - தாகவேட்கை மிக்கோனொருவன் கானற்சலத்தை நீரென்று கருதியக்கால் அது நீரல்லவென்று ஒருவன் காட்ட, கண்டான் ஒருவன் - பார்த்த ஒருவன், மா நல்ல நீர் என்று மயங்கல் போல் - பெரிய நல்ல நீரென்று கருதிமீளவும் மயங்கல்போல, போரூரனே நீ நலம் ஆய் பொய் உலகம் பொய்யாகக் காட்டியும்-திருப்போரூரிலெழுந்தருளிய இறைவனே நீ கருணைகூர்ந்து பொய்யாகியபிரபஞ்சத்தைச்சடமென்று காட்டியும், மெய்யென மிக உள் நைந்தேன் - மெய்யென்று மிகவும் கருதி மனம் வருந்தினேன். (இது என்ன மடமை.) (சுங)

கும்பமுனிக்குக்கொடுமலங்கண்மூன்றறுத்துச்
செம்பதுமத்தாள்கொடுத்ததேசிகா - நம்ப
வறியேன்மலமறுத்தாயற்புதம்போரூரா
சிறியேன்மேலென்னருளோசெப்பு.

(இ - ள்.) கும்ப முனிக்கு கொடுமலங்கள் மூன்று அறுத்து - அகத்திய முனிவருக்குக் கொடுமைவாய்ந்த மூன்றுமலங்களையும் வேரோடறுத்து,செம்பதுமம் தாள் கொடுத்த தேசிகா - செந்தாமரை மலரையொத்த திருவடியைக் கொடுத்தருளிய ஞானதேசிகனே, நம்ப - இறைவனே, அறியேன் மலம் அறுத்தாய் - நின்னை யுணரும் உணர்ச்சி சற்றுமில்லாத வெனது ஆணவமுதலிய மலங்களை யறுத்தருளினாய், அற்புதம் - இதுவோ ஒரு பெருவியப்பு,போரூரா-திருப்போரூரி லெழுந்தருளிய இறைவனே, சிறியேன் மேல் - அறிவிற் சிறியேனாகிய என்னிடத்து, அருள் என்னோ - கொண்ட கருணையாதோ, செப்பு - கூறாய்.

தன்னை யுணர்ந்தோர்க்கு மலபரிபாகம்வரத் திருவடி சூட்டுமிறைவன் என்பார் கும்பமுனிக்குக்கொடுமலங்கண் மூன்றறுத்த தேசிகா எனவும், உனக்கு வழிபாடு சிறிதும் அறியேனது மலங்களைப் போக்குதற்குக் காரணம் யாதென்பார் சிறியேன்மே லென்னருளோ செப்பு எனவுங் கூறினார். (சுச)

அஞ்ஞானவல்லிருள்போயன்பர்குணக்குன்றின்மிசை
மெய்ஞ்ஞானபானுவெளிதோன்றச் - செஞ்ஞான
நாதத்தொனிகூவுநற்கொடிப்போரூரனிரு
பாதத்தைநெஞ்சேபணி.

(இ - ள்.) அஞ்ஞானம் வல் இருள் போய்-அஞ்ஞானமாகிய வலிய ஆணவவிருள்கழிந்து, அன்பர் குணம் குன்றின்மிசை - அன்பரது குணமாகிய மலையின்மேல்,மெய்ஞ்ஞானபானு வெளி தோன்ற-மெய்ஞ்ஞானமாகிய சூரியனது வெளிச்சந்தோன்ற, செஞ்ஞானம் நாதம் தொனி கூவும் நல்கொடி போரூரன்-நடுவுநிலைமையைத்தரும் ஞானமாகிய தொனியையெழுப்பும் நல்லசேவற்கொடி

யையேந்திய திருப்போரூரி லெழுந்தருளிய இறைவரது, இருபாதத்தை நெஞ்சே பணி - இரண்டு திருவடிகளையும் மனமேநீபணியாய்.

உதயபர்வதத்தின்மேல் புறவிருள்கழியச் சூரியன்தோன்றுதலைக் கோழியுணர்த்துதல்போல ஆணவவிருள்கழிய அடியவரதுகுணபர்வதத்தின்மேல் ஞானசூரிய னுதயந்தோன்ற அனுக்கிரகஞானமாகிய தொனியெழுப்பும் சேவற்கொடியென்பார் செஞ்ஞான நாதத்தொனி கூவுநற்கொடிப் போரூரனென்றார்.

கலங்கா நிலை என்பது தோன்றக் குணக்குன் றென்றார். "குணமென்னுங் குன்றேறி நின்றார்." எனவருதலுங் காண்க. (கரு)

பவளக்கொடியூசற்பன்னிரண்டின்மீதே
யிவருற்றசூரியர்போலேய்ந்து - திவளுற்ற
குண்டலங்களாடவருகோவைப்போரூரனைப்போற்
கண்டிலன்பொய்யாக்கருணைக்கார்.

(இ - ள்.) பவளக்கொடி பன்னிரண்டு ஊசலின்மீதே - பவளக்கொடியாலமைந்த பன்னிரண்டு ஊசலின்மேலே, இவர் உற்ற சூரியர்போல் - ஏறியமைந்த பன்னிரண்டு சூரியனைப்போல, ஏய்ந்து திவளுற்ற குண்டலங்கள் ஆடவருகோவை - அமைந்து விளங்கிய பன்னிரண்டு குண்டலங்களுமாட அடியவர்க்குக் காட்சிதந்தருளவரும் இறைவனை, போரூரனைப்போல் பொய்யாத கருணைகார் கண்டிலன் - திருப்போரூரனைப்போல இடையிற் பொய்க்காத கிருபா மேகத்தைக் காணேன்.

அடியார்க்கு என்றும் கிருபாமழையை இறைவன் சொரிதலாலும், மேகம் பெய்யும்பருவத்திலிடையே பொய்த்தலாலும் போரூரனைப் போற்பொய்யாக் கருணைக் கார்கண்டிலன் என்றார். (கசு)

மூதண்டகூடமுகடுதொடத்தாணீட்டுங்
கோதண்டபாணிகுலமருகன் - றீதண்டா
வண்ணமெமையாண்டான்மகிழ்போரூரையனினி
யெண்ணமெனைநெஞ்சேயெமக்கு.

(இ - ள்.) முது அண்ட கூடம் முகடு தொட - தொன்று தொட்டுள்ள அண்டகடாகத்தின் உச்சியை யளாவ, தாள் நீட்டும் கோதண்ட பாணி குலமருகன் - திருவடியை நீட்டிய திருவிக்கிரம மூர்த்தங்கொண்ட திருமாலினுடைய நல்ல மருகனும், மகிழ் போரூர் ஐயன் - யாவருந் தரிசித்து மகிழும் திருப்போரூரி லெழுந்தருளிய ஐயனுமாகிய இறைவன், தீது அண்டா வண்ணம் எம்மை ஆண்டான் - பிறவித்தீங்கு எம்மை யணுகாத வண்ணம் அடிமைகொண்டான், நெஞ்சே இனி எமக்கு எண்ணம் என்னை - நெஞ்சமே இனி யெமக்குக் கவலையாது. (இல்லை யென்றபடி.) (கஎ)

ஆம்பல்வாய்விள்ளவடியார்கரகமலங்
கூம்பவுதிக்குங்குளிர்மதியே - தேம்பி

யழும்பிள்ளைக்காய்போலருட்போரூரையா
தொழுதவெற்குநீயேதுணை.

(இ - ள்.) அடியார் வாய் ஆம்பல் விள்ள - அடிவர் வாயாகிய ஆம்பல்மலரவும், கரகமலம் கூம்ப - கைகளாகிய தாமரைகள்குவியவும், உதிக்கும் குளிர் மதியே - தோன்றிய குளிர்ந்த சந்திரனே, தேம்பி அழுத பிள்ளைக்கு ஆய்போல் அருள் போரூர் ஐயா - பசித்தழுத பிள்ளைக்குத் தாய்போல அருளைச்செய்யும் திருப்போரூர் ஐயனே, தொழுத எற்கு நீயே துணை - வணங்கிய அடியேனுக்கு நீயே துணையாவாய்.

முருகக்கடவுளைச் சந்திரனாக வுருவகஞ்செய்தமையால் சந்திரன் உதிக்கும்போது ஆம்பல் மலர்தலும் தாமரை குவிதலும் உண்மைபோல அடியவர்வாயாகிய ஆம்பல் மலர்தலும், கைத்தாமரை கூம்பலும் உண்மையால் ஆம்பல் வாய்விள்ள வடியார் கரகமலம் கூம்பவுதிக்குங் குளிர்மதியே என்றார். (௬௮)

என்செயலாய்த்தோன்றவிருட்டிரோதம்புரிந்தாங்
குன்செயலாய்த்தோன்றவொளியருள்செய் - துன்செயலா
லென்போதந்தோன்றாதுன்னின்பாரப்போரூரா
வுன்போதந்தந்தாளுவந்து.

(இ - ள்) போரூரா - திருப்போரூரிலெழுந்தருளிய இறைவனே, என் செயலாய் தோன்ற-ஆணவ முதலிய மலங்கள் எனது செயலாய்த்தோன்ற,இருள் திரோதம் புரிந்து - மயக்குந் திரோதமலத்தையேவி, ஆங்கு உன் செயலாய் தோன்ற - அவ்விடத்து அம்மலம் உனது சத்தியாய்த்தோன்ற,ஒளி அருள் செய்து - பாசம் வருத்தி, உன் செயலால் என் போதம் தோன்றாது - உனது அவ்வருட்சத்தியால் எனது சீவபோதந்தோன்றாமல், உன் இன்பு ஆர - உனது பேரின்பத்தை நுகர, உவந்து உன் போதம் தந்து ஆள் - உனது சிவபோதந்தந்து அடிமைகொள்ளாய்.

ஆணவ முதலிய மும்மலங்களையும் அவ்வத்தொழிலிற் படுத்துதலால் என் செயலாய்த்தோன்ற விருட்டிரோதம்புரிந்து எனவும்,அதுவே பாசம் வருத்தும் அருட்சத்தியாய் நிற்றலால் ஆங்குன் செயலாய்த்தோன்றவொளியருள் செய்தெனவும், அத்திருவருட் சத்தியால் தற்போதங்கரைந்து நிற்றலால் என்போதந் தோன்றாது எனவும்,தற்போதங் கழன்றவிடத்துச் சிவபோதமேலிடுதலால் உன்னின்பார உன் போதந் தந்தாளுவந்து எனவுங் கூறினார். (௬௯)

உள்ளந்தனிலேயுவமையிலாவானந்த
வெள்ளந்துளும்பவிளையாடும் - பிள்ளையே
சூழுந்திருப்போரூர்ச்சுந்தரனேயென்பிறவி
யேழும்போநெஞ்சேயெமக்கு.

(இ - ள்.) உள்ளந் தனிலே - மனத்திலே,உவமை இல்லாத ஆனந்த வெள்ளம் துளும்ப விளையாடும்-ஒப்பில்லாத பேரின்பவெள்ளந் ததும்ப விளையாடா

நின்ற, பிள்ளை பிள்ளைமைப்பருவ முடையராகிய, சூழும் திருப்போரூர் சுந்தரனால் - சோலைகள் சூழ்ந்த திருப்போரூரி லெழுந்தருளிய பேரழகையுடைய இறைவனால், நெஞ்சே எமக்கு வெம்பிறவி ஏழும்போம் - மனமே எனக்குப் பிறவியே முழ்கழியும். (ஆதலால் அவனைச் சரணடையாய் என்றபடி.)

என்றும் பாலபருவமுடைமையால் பிள்ளையாமெனவும், பிள்ளை விளையாட்டால் யாவருக்கும் மனமகிழ்ச்சி மீதூர்தல்போல இப்பிள்ளை விளையாட்டால் பேரின்பமீதூர்தலால் உள்ளந்தனிலே உவமையிலா வானந்தவெள்ளந் துளும்ப விளையாடுமெனவுங் கூறினார். ஏ அசைநிலை. (எ0)

ஒளியாற்கதிரவுணரூனடலாற்கால
னளியாற்குளிர்மதியேயாகு - மெளிதினனி
தூரம்போய்மீளுதலாற்சொன்மனமாம்போரூரில்
வீரன்கரத்தேந்தும்வேல்.

(இ - ள்.) போரூரில் வீரன்கரத்து எந்தும்வேல் - திருப்போரூரி லெழுந்தருளிய இறைவன் திருக்கரத்திலேந்திய வேலானது, ஒளியால்கதிர் - ஒளியினால் சூரியனும், அவுணர் ஊன்அடலால் காலன் - அசுரரது உயிர்பருகுதலால் இயமனும், அளியால் குளிர்மதியேயாகும் - அடியவர்க்குத் தண்ணளிபுரிதலால் தண்ணிய சந்திரனேயொக்கும், எளிதில் நனிதூரம்போய் மீளுதலால் சொல்மனமாம் (பகைவர்மேற் செல்லுங்கால்) எளிதாக மிக்கதூரஞ் சென்றுதிரும்புதலால் எடுத்துச்சொல்லும் மனம்போலும் வேகமுடையதாம்.

ஊன் உடம்பிற்குக் கருவியாகுபெயரும் அது உயிர்க்கு இடமாகிநிற்றலால் இடவாகுபெயருமாதலால் இருமடி யாகுபெயர். (எக)

கைக்குரியகஞ்சமாங்கண்ணுக்கோர்காட்சியா
மெய்க்குரியசென்னிக்கேமென்முடியாம் - பொய்க்காதென்
னெஞ்சத்துளின்பநிறைக்கும்பரஞ்சுடராந்
தஞ்சுற்றபோரூரன்றாள்.

(இ - ள்.) தஞ்சுஉற்ற போரூரன் தாள் - எனக்கு அடைக்கலமாயுள்ள திருப்போரூரி லெழுந்தருளிய இறைவனது திருவடி, கைக்கு உரியகஞ்சம் ஆம் - நான் கையிலேந்துதற்குரிய தாமரைமலராம், கண்ணுக்கு ஓர் காட்சியாம் - என் கண்களுக்குப்புலப்படும் ஒப்பில்லாத காட்சிப்பொருளாம், மெய்க்குஉரிய்சென்னிக்கு - எனது சரீரத்திற்குரிய உறுப்புகளுள் உத்தமாங்கமாதற்குரிய தலைக்கு, மெல்முடிஆம் - ஒரு மெல்லிய மகுடமாம், பொய்க்கு ஆகாது - பிரபஞ்சமயக்கிற் புகுத்தாது, என் நெஞ்சத்துள் இன்பம் விளைக்கும் பரஞ்சுடர் ஆம் - எனது மனத்தில் பேரின்பத்தை நிறைத்தலால் மேலான ஒளியாம்.

திருவடியைப் பலபடக் கூறுதலால் - பலபடப் புனையணி. (எ௨)

வள்ளவளச்செம்முளரிமாளிகையின்மீதிருந்து
பிள்ளைமடவன்னப்பெடைநோக்க - வுள்ளலொடு
செவ்வாய்ச்சிரலாடுந்தேன்வயற்போரூராள
னெவ்வாய்ப்புமாகுமெமக்கு.

(இ - ள்.) வள்ளம் வளம் செம்முளரி மாளிகையின்மீது - கிண்ணம்போலவாய்விள்ளும்வளம்வாய்ந்த செந்தாமரையாகியமாளிகையினிடத்து, பிள்ளைமடமை அன்னம் பெடை இருந்து நோக்க - இளமைவாய்ந்தபெட்டையன்னமிருந்துபார்க்க, உள்ளலொடு - உள்ளல் மீனோடு, செவ்வாய்சிரல் ஆடும் - செவந்தவாயையுடைய சிச்சிலிப்பறவையாடும், தேன்வயல் போரூராளன் - தேன் நிறைந்த வயல்சூழ்ந்த திருப்போரூரி லெழுந்தருளிய இறைவன், எமக்கு எவ்வாய்ப்பும் ஆகும் - எமக்கு எவ்வகைப் பயனுமாவான்.

சிச்சிலிக்குருவிமீனைக்கவர அதற்கு ஆட்டங்காட்டுதலை அன்னப்பெடைநோக்குமென மருதநிலக்கருப்பொருளை யெடுத்துக்கூறுதலால் அது காரணமாக, அடியேனுக்குத் தனுகரணபுவனபோகங்களைத்தந்து அவற்றான் மலைவுபடுதலை தனதருட்பார்வையால் நோக்குவர் என்பது புலப்படுதலின் அன்னப்பெடை நோக்க வுள்ளலொடு செவ்வாய்ச்சிரலாடுந் தேன்வயற்போரூராளன் என்றது இறைச்சிப்பொருட்டு. (எ௩)

வீதிமணக்கும்விரைக்குங்குமச்சேறே
யோதிமணக்குமுயர்மாடந் - தாதுசெறி
பூமணக்குஞ்சோலைபுகழ்மணக்கும்போரூரிற்
பாமணக்குஞ்செவ்வேள்பதம்.

(இ - ள்.) விரை குங்குமம் சேறு வீதிமணக்கும் - வாசமமைந்த குங்குமக்குழம்பு வீதிகடோறும் நறுமணங்கமழும், உயர்மாடம் - மேனிலைமாடங்கள், ஓதிமணக்கும் - பெண்கள் கூந்தலால் மணம்வீசும், சோலை - சோலைகள், தாதுசெறிபூமணக்கும் - மகரந்தஞ்செறிந்த மலரால் மணம்வீசும், புகழ்மணக்கும் போரூரில் - கீர்த்திமணக்குந் திருப்போரூரி லெழுந்தருளிய, செவ்வேள் பதம் - முருகக்கடவுளது திருவடி, பாமணக்கும்-அடியவர்பாடும் பாமாலையால் நறுமணம் வீசும்.

ஈரம்புலர்தற்குப் பெண்கள் மேனிலையிலிருந்து தங்கள் கூந்தலை அகிற்புகையா லுலர்த்துதலால் ஓதிமணக்குமென்றார். திருப்போரூரின் வீதியும், மேனிலையும், சோலைகளும், அங்கெழுந்தருளிய முருகவேள் திருவடியும், குங்குமச்சேற்றினாலும், பெண்கள் கூந்தலாலும், பூவாலும், பாமாலையாலும் மணக்

குமெனக் கூறியதால் என்றுந் திருப்போரூரானது மணம் மாறுதென்பது போதரலால் குறிப்புநவிற்சியணி. (எ௪)

மயிலடையுஞ்சந்தமலைச்சாரலெங்குங்
குயிலடையும்பூஞ்சோலைக்குள்ளே - புயலடையும்
பொன்மாடமெங்கும்புகழ்போரூர்வாழ்தெய்வந்
தன்மாடடைவார்தவர்.

(இ - ள்.) சந்தம் மலைச்சாரல் எங்கும் மயில் அடையும் - சந்தனமரங்கள் நெருங்கிய மலையின் சாரல்கடோறும் மயில்கள் வந்தடையும், பூஞ்சோலைக்கு உள்ளே குயில் அடையும் - மலர்செறிந்த சோலைக்குள் குயில்கள்வந்து சாரும், பொன்மாடம் எங்கும் புயல் அடையும் - பொன்னாலமைந்த மாடங்கள்தோறும் மேகங்கள் வந்தடையும், புகழ் போரூர்வாழ் தெய்வம் தன்மாடு- யாவராலும் புகழப்பட்ட திருப்போரூரில் வாழும் இறைவனிடத்து, தவர் அடைவார் - தபோதனரடைந்து அடைக்கலம் புகுவார்கள்.

இதனால் யாவர்க்குந் திருப்போரூர்ப் புகலிடமென்பது தோன்ற நிற்றலால் இதுவும் அவ்வணி. (எ௫)

தன்னைமறந்துகண்ணீர்த்தண்டரளமார்பணியும்
பின்னைமுருகாவென்றுபேசுமுளத் - துன்னுங்
குயிலாலுஞ்சோலைக்குளிர்போரூரானை
மயின்மேல்வரக்கண்டமான்.

(இ - ள்.) குயில் ஆலும் சோலைகுளிர் போரூரானை - குயில்கள் கூவும் சோலைகளாற் குளிர்ச்சிவாய்ந்த திருப்போரூரிலெழுந்தருளிய முருகனை, மயில்மேல் வர கண்ட மான் - மயிலூர்திமேல் எழுந்தருளி வரக்கண்ட என் தலைவி, தன்னைமறந்து கண் நீர் தண்தரளம் மார்பு அணியும் - (காமத்தால் அவசப்படுதலில்) தன்னைமறந்து கண்ணீராகிய தண்ணிய முத்துவடத்தை மார்பிலணிவாள், பின்னை முருகா என்று பேசும் - பின்பு முருகனேயென்று வாழ்த்துவாள், உளத்து உன்னும் - என்று கூடுவோமென்று தன்மனத்தில் ஒருகால் கருதுவாள்.

இதனால் தலைவியினது ஆற்றாமையைப் பாங்கிகள் கூறியதாகக்கூறினார். சோலைக்குளிர் போரூரன் என்றதனால் இறைவன்பேரருளால் தண்ணளிசெய்வானென்று போதரலில் இறைச்சிப்பொருட்டு. (எ௬)

எத்திக்குந்தானாயிருந்தடியேனுள்ளத்தே
தித்திக்குந்தேனளிக்குஞ்செட்டியாங் - கொத்தி

யாவமணிப்பை தூக்கியாடுமயிலேறிக்
குரவமணிபோரூர்க்குகன்.

(இ-ள்.) அரவம் மணிபை - பாம்பினது மாணிக்கமமைந்த படத்தை, கொத்தி தூக்கி - கொத்தித்தூக்கி, ஆடும்மயில் ஏறி-ஆடாநின்ற மயிலூர்திமேலாரோகணித்து, குரவம் அணி போரூர் குகன்-குராமலரையணிந்த திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுள், எத்திக்கும் தானாய் இருந்து - எந்தத் திக்குகளிலுந் தானாகியேயிருந்து, அடியேன் உள்ளத்தே தித்திக்கும் தேன் அளிக்கும் செட்டியாம் - அடியேனுடைய மனத்தில்தித்திக்கும் இனிமைசுரக்கும் பேரின்பமாகிய செட்டியாவான்.

வாணிபஞ்செய்வோர் ஓர் திக்கிலிருந்து வாணிபஞ்செய்தல் வழக்கு, இவர் எத்திக்குந்தானே வியாபித்திருத்தலில் எத்திக்குந் தானாயிருந்து எனவும், வணிகர் தமது வாணிபத்தால் ஒருவர் மனத்தில் உவர்ப்புவர இசைத்தலுமுண்டு. இவ்வணிகர் யாவரிடத்தும் இன்பமேமீதூரச்செய்தலால் அடியேனுள்ளத்தே தித்திக்குந் தேனளிக்குஞ் செட்டியாமெனவுங் கூறினார். முருகக்கடவுளுக்குச் செட்டியானவந்த காரணத்தை முன்னர்க்கூறினாம். அங்குக் காண்க. (எஎ)

அன்புந்தருநல்லருளாழியுந்தரும்பே
ரின்புந்தருமெண்ணியதருமே - மன்பதையைக்
காக்கும்போரூரான்கடையேனைத்தன்னடியா
னாக்கும்போரூரானறிந்து.

(இ-ள்.) மன்பதையைக் காக்கும் போரூரான் - மக்கட்பரப்பைக் காத்தருளும் திருப்போரூரிலெழுந்தருளிய இறைவன், கடையேனை தன் அடியான் ஆக்கும்-நாயினுங்கடைப்பட்ட என்னைத் தன்னடியனாக்குதலில், போரூரான் அறிந்து - திருப்போரூரிலெழுந்தருளிய இறைவன் மாறுபடாது என்மடமையையுணர்ந்து, அன்பும் தரும் - தனது திருவடிக்கீழ்த் தலையன்பையுந் தருவான், நல் அருள் ஆழியும் தரும் - நல்ல அருட்கடலையுந் தருவான், பேர் இன்பும் தரும் - பேரின்பத்தையுந் தருவான், எண்ணிய தரும் - எண்ணியபேறெல்லாவற்றையுந் தருவான் (அதனால் மனமே நீ அடையாய்.)

போரூரான் - எதிர்மறை முற்று எச்சமாய் நின்றது. ஆக்கும் என்னும் பெயரொச்சம் தொழிற்பெயரில் வந்தது. (எஅ)

நோவவுரையானெம்மைநோவக்கண்பார்த்திடான்
சாவவினையான்றளரவிடான் - பாவனைய

சொல்வாய்க்குறத்திதுணைபிரியாப்போரூர
னல்வாய்ப்பரையனெஞ்சேநாடு.

(இ - ள்.) பா அணைய சொல்வாய் குறத்தி - இசையையொத்த சொல் வாய்ந்த வாயையுடைய குறத்தியை, துணைபிரியாத போரூரன் - தனக்குத் துணையாகக்கொண்டு பிரியாத திருப்போரூரி லெழுந்தருளிய இறைவன், நல் வாய் பரையன் - நல்ல வாய்மையையுடைய பரையன், (நல்வாய்ப்பு அரை யன் - அடியவர்க்கு நல்ல ஊதியமாகிய இறைவன்,) எம்மைநோவ உரை யான் - எம்மை மனம்நோவத் தீயசொற்களைக் கூறான், நோவ கண்பார்த்தி டான் - அடியேன் மனம் வருந்தத் திருக்கண்பாரான், சாவநினையான் - அடி யேன் சாவ நினைத்தருளான், தளரவிடான் - தளரக்கைவிடான், (ஆதலால்) நெஞ்சே நாடு - மனமே நாடாய்.

நோவ வுரைத்தலும் நோவக்கண்பார்த்தலும் சாவநினைத்தலும் கைதளர விடுதலும் குறத்திக்கும் பறையனுக்கு மியல்பாதல்போல இவர்க்கியல்பல்ல வென்பார். நோவ வுரையான் நோவக்கண் பார்த்திடான் சாவ நினையான் தளரவிடானென்றார். "ளக்கல்போல" வல்லின றகரத்திற்கும் இடையின ரகரத்திற்கும் பேதமின்மையால் பறையன் பரையனென வந்தது. குறத்தி வாய்ப்பறையன் செம்மொழிச் சிலேடையணி. (எ௬)

திருவடிக்கேதோன்றுஞ்சிறியேன்றுயர
மொருவருக்குத்தோன்றாதென்னுள்ளே - சருவியெனை
யெந்நாளும்வாட்டுமிடர்களையப்போரூரா
நந்நாளிந்நாளாநயந்து.

(இ - ள்.) சிறியேன் துயரம் திருவடிக்கே தோன்றும் - அடியேனது துன்பம் தேவரீரது திருவடிக்கே புலப்படும், ஒருவருக்குந் தோன்றாது - எனை யொருவருக்கும் புலப்படாது (ஆதலால்) என் உள்ளே சருவி - என் மனத்திற் கலந்து, என்னை எந்நாளும் வாட்டும் இடர் - என்னை எந்நாளும் வாட்டும் துன்பத்தை, போரூரா நயந்து களைய - திருப்போரூரி லெழுந்தருளிய இறைவ னே நீ விரும்பிக் களைய, இந்நாள் நல் நாள் ஆம் - இந்தச் சமயம் நல்ல சம யமாம். (அ௦)

ஆசையுமன்புமபிமானமுமுனது
பூசையிலேவைக்காதுபொய்க்காளாய்ப் - பேசரிய
பெண்ணாசையாதிபிடித்துழன்றேன்போரூரா
வெண்ணாதுநின்னையிருந்து.

(இ - ள்.) போரூரா நின்னை எண்ணாது இருந்து - திருப்போரூரி லெழுந்தருளிய இறைவனே நின்னைச் சிறிதும் கருதாமலும், ஆசையும் அன்பும் அபிமானமும் - ஆசையையும் அன்பையும் அபிமானத்தையும், உனது பூசையிலே வைக்காது - உனது பூசனையில் வைக்காமலும், பொய்க்கு ஆளாய் - அஞ்ஞானத்திற்கு அடிமைப்பட்டு, பேசு அரிய பெண் ஆசை ஆதிபிடித்து உழன்றேன், சொல்லுதற்கரிய பெண்ணாசை முதலியவற்றால் பிடிபட்டு வருந்தினேன் (அடியேனைப் பாதுகாத்தருளாய் என்றபடி.)

இருந்து அசைநிலை. (௮௧)

தீயவனென்குற்றந்திருவுளத்தினாடாதென்
றாயனையபோரூர்ச்சரவணா - தூயசுக
வீட்டுக்குள்வைப்பாய்வினையேனைப்பொய்க்காயக்
கூட்டுக்குள்வைக்கேல்குறித்து.

(இ - ள்.) என்தாய் அனைய போரூர் சரவணா - எனதுதாயையொத்த திருப்போரூரி லெழுந்தருளிய சரவணனே, தீயவன் என்குற்றம் - தீயவனாகிய எனது குற்றத்தை, திருவுளத்தில் நாடாது - தேவரீர் திருவுளத்தில் நினையாமல், தூயசுகவீட்டுக்குஉள் வைப்பாய்-புனிதமாகிய பேரின்பவீட்டுக்குள்வைத்தருளாய், வினையேனை பொய்காயம் கூட்டுக்குள் - தீவினையையுடைய என்னை நிலையாத காயமாகிய சரீரத்திற்குள், குறித்துவைக்கேல் - திருவுளத்திற் கருதி வைக்காதே (முத்திவீட்டிலேயே வைத்தருளாயென்று குறையிறந்தபடி.)

பொய்க்காயக்கூடு தனக்குரிய வீடன்மையால் தூயசுகவீட்டுக்குள் வைப்பாய் என்றார். (௮௨)

வேல்விடலாயென்றுமணிவீரக்கழல்புனைந்த
காலுடையசூரடுகொளாயென்று - மாலின்
மருகனேயென்றுமடநெஞ்சேபோரூர்
முருகனேயென்றுமுயல்.

(இ - ள்.) மடநெஞ்சே - அறியாமையையுடைய மனமே, வேல்விடலாய் என்றும் - வேலையேந்திய விடலையேயென்றும், மணிவீரக்கழல் புனைந்த காலுடைய - இரத்தினமழுத்திய வீரகண்டைகட்டிய காலையுடைய, சூர் அடுகொளாய் என்றும் - சூரபன்மன் உயிரைவாங்கிய காளையேயென்றும், மாலின் மருகனே என்றும் - திருமால் மருகனேயென்றும், போரூர் முருகனே என்றும் - திருப்போரூரி லெழுந்தளிய முருகக்கடவுளே என்றும், முயல்- வாழ்த்துதலில் முயலாய். (நீ பெறும்பேறடைவா யென்றபடி.) (௮௩)

காதலித்தவாறுதவுங்காங்கெயனூர்தாளிணையை
யாதரித்துநன்றாயனுதினமு - நீதரித்துக்
கள்ளமெலாம்போகக்கருதுநெஞ்சேபோரூர்வந்
துள்ளமெலாமின்பமுறும்.

(இ - ள்.) காதலித்த ஆறு உதவும் - அடியவர் விரும்பிய வண்ணம் உதவாநின்ற, காங்கேயனூர் தாள் இணையை - முருகக்கடவுளது இரண்டு திருவடிகளையும், அனுதினமும் நன்றாய் ஆதரித்து நீ தரித்து - எந்நாளும் நன்றாய் விரும்பி நீ துதித்து, போரூர் வந்து - திருப்போரூரில் வந்து, கள்ளம் எல்லாம் போக நெஞ்சே கருது - உன் வஞ்சமெல்லாங் கழிய மனமே நீ நினையாய், உள்ளம் எல்லாம் இன்பம் உறும்-உன் உள்ளிடமெல்லாம் இன்பமிகும்.(அச)

கருப்புச்சிலையானுங்கைகூப்பழகா
பொருப்புச்சிலையான்புதல்வா - விருப்புற்ற
வென்னெண்ணத்தின்படியேயீந்தருளாய்போரூரா
வுன்னெண்ணத்தின்பாயுவந்து.

(இ - ள்.) கரும்பு சிலையானும் கைகூப்பு அழகா - கரும்புவில்லையேந்தும் மன்மதனும் கைகூப்பித் தொழும் பேரழகையுடையவனே, பொருப்புசிலையான் புதல்வா - மேருவை வில்லாக ஏந்தும் இறைவன் புத்திரனே, போரூரா - திருப்போரூரி லெழுந்தருளினவனே, விருப்புற்ற என் எண்ணத்தின்படியே - விரும்பிய எனதெண்ணத்தின்படியே,உன் எண்ணத்து இன்பு ஆய் உவந்து ஈந்து அருளாய் - உனது திருவுளக்கருத்தி லின்பமார்ந்து மகிழ்கூர்ந்து உனது திருவடியைத் தந்தருளாய். (அரு)

நாடுதனிலேயுழலுநாயேனைவாவென்று
வீடுதனில்வைக்கவிரும்புவாய் - பீடுதரு
காட்சியேபோரூரின்கற்பகமேயாருயிர்க்கோர்
சாட்சியேயுன்றாள்சரண்.

(இ - ள்.) நாடுதனிலே உழலும் நாயேனை - நாட்டிற் சுழன்று திரியும் நாயிற்கடைப்பட்ட வென்னை, வா என்று வீடுதனில்வைக்க விரும்புவாய் - வாவென்றருளி முத்திவீட்டில் வைக்க விரும்பியருளாய், பீடுதருகாட்சியே - பெருமையமைந்த காட்சிப்பொருளே, போரூரில் கற்பகமே - திருப்போரூரி லெழுந்தருளிய கற்பகமே, ஆர் உயிர்க்கு ஓர் சாட்சியே - அரிய வுயிருக்கு ஒரு சாட்சியாயுள்ளவனே, உன் தாள் சரண் - உனது திருவடியே எனக்குப் புகலிடம்.

ஆன்மாக்களிடத்துத் தோய்ந்தும் தோயாதுநின்று அவ்வான்மாக்க ளியற்றும் இருவினைகளின் பயன்களை அவ்வான்மாக்களுக்குத் தந்தருளுதலால் ஆருயிர்க்கோர் சாட்சியே என்றார். (அசு)

ஆரியனாய்வந்துமறிவுக்கறிவாயுங்
கூரியநூற்றந்துங்கொடியேற்குப்-பேரறிவு
தந்தாய்மறந்துதளர்கின்றேன்போரூர்வா
ழெந்தாயென்செய்கேனினி.

(இ - ள்.) போரூர் வாழ் எந்தாய் - திருப்போரூரில் வாழும் எனது தந்தையே, கொடியேற்கு - கொடியேனாகிய எனக்கு, ஆரியனாய்வந்தும் - ஆசிரியமுகூர்த்தமாயெழுந்தருளிவந்தும், அறிவுக்கு அறிவாயும் - எனதறிவுக்குள் அறிவாகியும், கூரியநூல்தந்தும்-அவ்வறிவுக்கேற்ப நுண்ணிய பொருளமைந்த சிவஞான நூலைத்தந்தும், பேர் அறிவுதந்தாய் - பெரிய அறிவினைத்தந்தருளினாய், மறந்து தளர்கின்றேன் - அதனை மறந்து தளராநின்றேன், இனி என் செய்கேன் - இனியாது செய்வேன்.

தனக்காசிரிய முகூர்த்தமா யெழுந்தருளி வந்தனனென்பது தோன்ற ஆரியனாய்வந்தெனவும், மந்ததரம் மந்தம் தீவிவரம் தீவிரதரமென்னும் பக்குவமுணர்ந்து அப்பக்குவத்திற்கேற்பத்தானின்று உணர்த்தினனென்பதுதோன்ற அறிவுக்கறிவாயெனவும், அப்பக்குவத்திற்கேற்ப ஞானநூலோதுதல் தோன்ற கூரியநூல்தந்தும்எனவும், கேட்டல் சிந்தித்தல் அளவுக்கேற்பப்பேரறிவு உதிக்குமென்பது தோன்றப்பேரறிவு தந்தாயெனவும் கூறினார். மந்ததரம் - பாலில் ஒருவகையால் நெய்தோன்றியும் தோன்றாது மறைந்து உடனாய்நிற்றல்போல் சிவம் ஒருவகையாய்த்தோன்றியும் தோன்றாது உடனாய்நிற்றல், மந்தம் - பழத்தினிரதம் ஆராய்ந்தறியும்வழி விளங்கித்தோன்றுவதாய் உடனாய் நிற்றல்போலச் சிவம் ஆராய்ந்தறியும்வழி விளங்கித்தோன்றுவதாய் உடனாய் நிற்றல். தீவிரம்-எள்ளின்கண் எண்ணெய் இனிதுவிளங்கித்தோன்றினும் பிரித்தறியப்படாது உடனாய்நிற்றல்போலச் சிவம் இனிது விளங்கித்தோன்றினும் பிரித்தறியப்படாதுடனாய் நிற்றல். தீவிரதரம் - தீ இரும்பைத் தன்வண்ணமாக்குதல்போலச் சிவானந்த மேலிடச்செய்தல். (அஎ)

என்றுமபிமானமேழையேன்மீதுவைத்து
நன்றுபுரியுங்குமரநாயகா - வின்றுசுக
பூரணத்தினாயேன்புகவைப்பாய்போரூர்வாழ்
காரணத்தாயுள்ளேகலந்து.

(இ - ள்.) என்றும் அபிமானம் ஏழையேன்மீதுவைத்து - எக்காலும் ஏழையின்மீது அபிமானத்தைவைத்தருளி, நன்றுபுரியும் குமரநாயகா - நன்

மைசெய்யும் குமரனென்னுந் திருநாமத்தையுடைய இறைவனே, போரூர் வாழ்காரணத்தாய் - திருப்போரூரில்வாழுங் காரணத்தையுடையாய், உள்ளே கலந்து - என்னுள்ளத்தேகலந்து, இன்றுசுகபூரணத்தில் நாயேன் புக வைப்பாய் - இப்போது பூரணசுகத்தில் நாயேன் கலக்கவைத்தருளாய்.

என்றும் நீயென்னிடத்தில் விருப்பமுடையோயாதலால் இப்போது பூரணசுகத்தில் நாயேன் கலக்க என்னுள்ளத்தில் கலந்தாலன்றோ முடியுமென்பார் உள்ளேகலந்து புகவைப்பாய் என்றார். (அஅ)

கைவிட்டானாயேனைக்காப்பாரொருவரில்லை
பொய்விட்டார்போற்றும்புனிதனே - மையிட்ட
கண்ணாரிருவர்கலந்தபுயத்தழகா
தண்ணார்போரூராதரித்து.

(இ - ள்.) பொய் விட்டார் போற்றும் புனிதனே-அஞ்ஞானத்தையொழித்த மெய்ஞ்ஞானிகள் துதிக்கும் மாசிலாதவனே, மை இட்டகண்ணார் இருவர் கலந்த புயத்து அழகா-மையெழுதிய திருக்கண்களையுடைய தெய்வயானை நாய்ச்சியாரும் வள்ளிநாய்ச்சியாருங்கலந்த திருப்புயத்தையுடைய பேரழகனே,தண் ஆர்போரூரா - குளிர்ச்சிநிறைந்த சோலைசூழ்ந்த திருப்போரூரிலெழுந்தருளிய இறைவனே, தரித்து-நீ தாமதித்து, கைவிட்டால் நாயேனை காப்பார் ஒருவர் இல்லை-நீ கைநெகிழவிட்டால் பாதுகாப்பவர் உன்னையன்றி ஒருவருமில்லை (ஆதலால் என்னைக் கைநெகிழவிடாது காப்பாயென்றபடி).

தண்ணார் என்றமையால் சோலையென்பது குறிப்பால்வந்தது. (அகூ)

ஆனைமுகத்தாற்கிளையவாறுமுகத்தானை
மானையிடத்தில்வைத்தோன்மாமகனை - மானுதவு
வேடிச்சிதோள்சேர்ந்தமெய்ப்புயனைநெஞ்சமே
நாடிச்சிபோரூர்நயந்து.

(இ - ள்.) ஆனைமுகத்தாற்கு இளைய ஆறுமுகத்தானை - ஆனைமுகத்தையுடைய விநாயகமூர்த்திக்கு இளையவனாகிய ஆறுமுகக்கடவுளை, மானை இடத்தில்வைத்தோன் மாமகனை - உமாதேவியை இடப்பாகத்தில்வைத்த சிவபெருமானது பெருமையமைந்த புத்திரனை,மான்உதவு வேடிச்சி தோள்சேர்ந்த மெய் புயனை - மான்பெற்ற வள்ளிநாய்ச்சியாரது மெல்லியதோளைப்புணர்ந்த ஞானச்செல்வத்தைத்தரும் திருப்புயத்தை யுடையவனை, நெஞ்சமேநாடு - மனமே நீ நாடாய், போரூர் நயந்து இச்சி - திருப்போரூரைவிரும்பி யிச்சியாய் (உனக்கு யாவும் கைகூடுமென்றபடி.)

மானை யிடத்தில்வைத்தோனென்றதற்கு - மானை யிடக்கரத்திலேந்தினோனெனப் பொருள்கூறினும் அமையும், மானை யிடத்தில்வைத்தவன் மகனு

தலால் மானுதவு வேடிச்சிதோள்சேர்ந்த மெய்ப்புயனென இயைபுகூறினுமமை யும், போகம்வேண்டியடைந்தவர்க்கும் போகத்தைவிளைக்கும் திருப்புயமெ ன்பார் - மானுதவுவேடிச்சிதோள்சேர்ந்த மெய்ப்புயனேயென்றார். (௬0)

மெய்யடியார்போலமிகநடிப்பேன்மெய்யடியார்
செய்யடிமைத்தொண்டேதுஞ்செய்திலேன் - பொய்யடியே
னுன்னாட்கமலபதத்துண்ணிறையப்போரூரா
வெந்நாட்கிடைக்குமெனக்கு.

(இ - ள்.) போரூரா- திருப்போரூரி லெழுந்தருளிய இறைவனே, மெய் அடியார்போல மிகநடிப்பேன்-உனது உண்மைவாய்ந்த அடியவர்போலமிகவும் நடிக்கின்றேன், மெய்அடியார் செய் அடிமைதொண்டு பொய்அடியேன் ஏதும் செய்திலேன்—அம்மெய்யடியவர்செய்யும் அடித்தொண்டினைப் பொய்வேடம் பூண்ட அடியேன் சிறிதுஞ் செய்தறிந்திலேன், உன் நாள்கமலபதம் உள்நிறை ய - உனது அன்றலர்ந்த தாமரைமலரையொத்த திருவடி எனதுள்ளத்தில் நி லைபெற, எனக்கு எந்நாள்கிடைக்கும் - எனக்கு என்னாளிற் கைகூடும்.

மெய்யடியவர்போலப் பொய்யடிமைபூண்டு நடப்பவனுக்கு உன்திருவடி கூடுதல் எந்நாள்கிடைக்குமென்பார் உண்ணிறையவெந்நாட் கிடைக்குமென க்கு என்றார். (௬௧)

நோயுற்றடராமனொந்துமனம்வாடாமற்
பாயிற்கிடவாமற்பாவியேன் - காயத்தை
யோர்நொடிக்குணீக்கியெனையொண்போரூரையாநின்
சீரடிக்கீழ்வைப்பாய்தெரிந்து.

(இ - ள்.) ஒண்போரூர் ஐயா - ஒள்ளிய திருப்போரூரிலெழுந்தருளிய ஐயனே, பாவியேன் நோய் உற்று அடராமல் - பாவியேனாகிய யான் நோயில் வீழ்ந்து அந்நோயிற் செறியாமலும், மனம் நொந்துவாடாமல் - அதனால் மனம் வருந்தி வாடாமலும், பாயில்கிடவாமல் - பாயில் கிடையாய்க்கிடக்காமலும், காயத்தை ஓர் நொடிக்குள் நீக்கி - எனதுசரீரத்தை ஒரு நொடிப்பொழுதில் நீக்கி, என்னை நின்சீர் அடிக்கீழ் தெரிந்து வைப்பாய் - என்னை உனதுதிருவ டிக்கீழ் உன்னடியவருக்குள் ஒருவனைத்தெரிந்து வைத்தருள்வாய். (௬௨)

குறைகளையுங்கோவேகுணமளிக்குந்தேவே
மறைமுடிவுகாட்டுமணியே - யிறையவனே
போரூராவென்றுபுகழ்நேஞ்செயெந்நாளுங்
காரூர்மயக்கமறுங்காண்.

(இ - ள்.) குறைகளையும் கோவே - என்னுடைய குறைபாடுகளைக் களை ந்தருளு மரசே, குணம் அளிக்கும் தேவே-குணந்தந்தருளுந் தெய்வமே, மறை

முடிவுகாட்டு மணியே - வேதசிரசையுணர்த்தும் மாணிக்கமே, இறையவனே போரூரா என்று நெஞ்சே புகழ் - இறைவனே திருப்போரூரி லெழுந்தருளின வனே என்று நெஞ்சமே புகழாய், எந்நாளும் கார் ஊர் மயக்கம் அறும்-எக்கா லத்தும் இடைவிடாதுள்ள ஆணவ மலமயக்கம் நீங்கும்.

குற்றங்களைந்து குணமருளுவோனென்பது தோன்றக் குறைகளையுங் கோவே குணமளிக்குந்தேவே எனவும், மாணிக்கம் இடைவிடா தொளிவீசுதல் போல உண்மைப்பொருளை யுள்ளபடி வுணர்த்துவோனாதலால் மறைமுடி வுகாட்டு மணியே எனவும், இவ்வாறுள்ளவனால் ஆணவமலமயக்க மொழியு மாதலால் காரூர் மயக்கமறும் எனவுங் கூறினார். (கூங)

கோதுபடாதகுணஞானசாரமே
யேதுபடிறேனுமிழைத்தாலுந்-தீதாகக்
கொள்ளாதுபோரூர்க்குமரவேளுநாயேனை
யெள்ளாதுகாத்தாளினி.

(இ - ள்.) கோதுபடாத குண ஞானசாரமே - சிறிதுங் குற்றந்தோயாத ஞானகுணக்கடலே, ஏதுபடிறேனும் இழைத்தாலும் - எந்த வஞ்சத்தையாகி னு மடியேன் செய்தாலும்,தீது ஆக கொள்ளாது - அதையோர் தீங்காகக்கொ ள்ளாது, போரூர் குமரவேள்-திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளே, நாயேனை எள்ளாது - நாயிற்கடைப்பட்ட என்னை யிகழாது, இனி காத்து ஆள் - இனி காத்து அடிமைகொள்ளாய்.

இயல்பாகவே நீ குணமுடையோனாதலால் குற்றஞ் சிறிதும் நோக்கா யென்பார் ஏதுபடிறேனுமிழைத்தாலுந் தீதாகக்கொள்ளாது என்றார். (கூச)

மருளுடையேன்செய்தபிழைவண்போரூரையா
வருளுடையநீபொறுத்திங்காளாய் - தெருளுடையாய்
வேறுதுணைகாணேன்வினையேன்றனக்குரிய
வாறுதுணையாறானனம்.

(இ - ள்.) மருளுடையேன் செய்தபிழை - ஆணவ மலமயக்கமுடையே ன் செய்த குற்றத்தை, வண்போரூர் ஐயா - வளம்வாய்ந்த திருப்போரூரிலெ ழுந்தருளிய ஐயனே, அருள் உடைய நீபொறுத்து இங்கு ஆளாய் - என்றும் மாறாக்கருணையையுடைய நீ பொறுத்து இவ்விடத்து அடிமைகொள்வாய்,தெ ருள் உடையாய் - தெளிவினையுடையவனே, துணைவேறுகாணேன் - உன்னை யன்றி வேறு துணை யொன்றுமறியேன், வினையேன்தனக்கு உரிய ஆறுதுணை- தீவினையையுடைய எனக்குரிய ஆறுதலையாயுள்ளன, ஆறு ஆனனம் - தேவ ரீர் ஆறு திருமுகங்களுமே.

ஒருவனுக்கு ஒருதுணையே அமையும், அடியேனுக்குத் தேவரீர் ஆறு திருமுகங்களும் ஆறு துணையாயிருத்தலால் அடியேன் யாது குற்றஞ்செய்யினும் நீ பொறுத்தாளுவோனென்பார் அருளுடைய நீ பொறுத்திங்காளாய் என்றார். (கரு)

பஞ்சரத்தின்மூடிவைத்தபைங்கிளிபோனாயேனை
யஞ்சிரத்தக்கூட்டிலடையாதே - விஞ்சு
மருளொளியிற்சேர்த்தியமுதூட்டிவைப்பாய்
தெருளொளியேபோரூராதேர்ந்து.

(இ - ள்.) பஞ்சரத்தில் மூடிவைத்த பைங்கிளிபோல் - பஞ்சரத்தில் மூடிவைத்த பசியகிளியைப்போல், நாயேனை அஞ்சு இரத்தக்கூட்டில் அடையாதே - நாயிற்கடைப்பட்ட அடியேனை சாக்கிரமுதலிய பஞ்சாவத்தைகளமைந்த உதிரநிரம்பிய கூட்டிலடைக்காதே, தெருள் ஒளியே - களங்கமில்லாத பேரொளியே, போரூரா - திருப்போரூரிலெழுந்தருளிய இறைவனே, தேர்ந்து - என்னையுமோர் அடியவனாகத்தேர்ந்து, விஞ்சும் அருள் ஒளியில் சேர்த்தி - மிக்க உனது திருவடியாகிய ஒளியிற் கூட்டி, அமுது ஊட்டிவைப்பாய்- பேரின்பமென்னு முணவினையூட்டி வைத்தருள்வாய்.

சாக்கிரமுதலிய பஞ்சாவத்தைகளாவன - சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம். (கசு)

எப்போதுமென்முடியுனின்பத்திருப்பாத
மெய்ப்போதின்கீழிருக்கவேண்டுமே - மெய்ப்போத
வேதாவணங்கவரும்வித்தகாபோரூரி
னாதாமயில்வாகனா.

(இ - ள்.) மெய் போத வேதா வணங்கவரும் வித்தகா - மெய்ஞ்ஞானத்தையடையவேண்டிப் பிரமன் வணங்கவரும் வித்தகனே, போரூரில் நாதா - திருப்போரூரிலெழுந்தருளிய நாதனே, மயில்வாகனா - மயிலூர்தியையுடையவனே, எப்போதும் என்முடி-எக்காலத்திலு மெனது சிரசு, உன் இன்பத்திருப்பாதம் மெய்போதின்கீழ் - உனது பேரின்பநிறைந்த திருவடியாகிய உண்மையமைந்த தாமரையின்கீழ், இருக்கவேண்டும்-நிலைபெறவேண்டும். (அதுதானெனது வேண்டுகோளென்றபடி.) (கஎ)

கன்றழைக்குமுன்னேகருதிவருமாப்போல
நின்றழைக்குநாயேற்குநேர்தோன்றி - யொன்றினுக்கு
மஞ்சாதேவாவென்றழைப்பாய்தென்போரூரா
வெஞ்சாதபேரருளாலின்று.

(இ - ள்.) கன்று அழைக்கும் முன்னே - கன்றழைத்தற்கு முன்னமே, கருதிவரும் ஆ போல - அதைக் கருதிவரும் பசுவைப்போல், நின்று அழைக்கும் நாயேற்கு - நின்றுன்பால் குறையிரந்தழைக்கும் நாய்போன்ற எனக்கு, தென்போரூரா - இமமலைக்குத் தென்பாலுள்ள திருப்போரூரிலெழுந்தருளினவனே, எஞ்சாத பேர் அருளால் - குறையாத பெரிய திருவருளால், நேர்தோன்றி - காட்சி தந்தருளி, இன்று ஒன்றினுக்கும் அஞ்சாதே - இன்று ஒன்றுக்கும் அஞ்சாமல் வா என்று அழைப்பாய் - என் திருமுன் வாவென்றழைத்தருளாய்.

ஊழுக்காளாகியுறுபோகமேகருதிப்
பாழுக்குழைத்தபடிறேனை - யேழுக்குட்
போகாவகைபுரியாய்போரூராபன்னிரண்டு
வாகாவடிவேலவா.

(இ - ள்.) போரூரா - திருப்போரூரிலெழுந்தருளிய இறைவனே, பன்னிரண்டு வாகா - பன்னிரண்டு திருப்புயங்களை யுடையவனே, வடி வேல்வா - வடித்தவேலையுடையவனே, ஊழுக்கு ஆளாகி - ஊழ்வினைக்கு ஆட்பட்டு, உறு போகமே கருதி - மிக்க போகத்தையே பொருளாகக்கருதி, பாழுக்கு உழைத்த படிறேனை - அவமானச்செய்கைகளுக்கு உழைத்துவருந்திய வஞ்சத்தையுடைய என்னை, ஏழுக்குள் போகா வகை - அள்ளல்முதலிய ஏழுநரகங்களிற் செல்லாவண்ணம், புரியாய் - அருளாய்.

அள்ளல்முதலியஏழுநரகங்களாவன - அள்ளல், ரௌரவம், கும்பிபாகம், கூடசாலம், செந்துத்தானம், பூதி, மாபூதி. ஊழின்வழிவந்ததால் ஊழுக்காளாகியெனவும், அவ்வூழால்வரும் போகத்தையேகருதி நிற்றலால் உறுபோகமேகருதியெனவும், அப்போகம்வேண்டிமேலுமேலும் நன்மைதீமைகளைப்புரிதலால் பாழுக்குழைத்தபடிறேனையெனவுங்கூறினார். (கூகூ.)

உண்ணாதபோகமில்லையுற்பவியாக்காலமில்லை
நண்ணாததேகமில்லைநாயினேன் - உண்ணாடிப்
பண்டுவந்ததுன்பமறப்பார்தொழுபோரூரானைக்
கண்டுவந்துநெஞ்சேகருது.

(இ - ள்.) நாயினேன் - நாயிற்கடைப்பட்டயான், உண்ணாத போகம் இல்லை - நுகராதபோகமுலகிலில்லை, உற்பவியாத காலம் இல்லை - யான் பிறவாதகாலமில்லை, நண்ணாத தேகம் இல்லை - நானடையாதசரீரமில்லை, (ஆதலால்) நெஞ்சே - மனமே, போரூரானை - திருப்போரூரிலெழுந்தருளிய இறைவனை, உள் நாடி பண்டு வந்த துன்பம் அற - நம்மைநாடிவந்த சஞ்சிதவினையால் நொந்தபிறவித்துன்பமற, பார் - தெரிசி, தொழு - வணங்கு, கண்டு உவந்து கருது - உள்ளேதெரிசித்துமகிழ்ந்து நீசிந்தியாய்,

பார், தொழுளனப் புறத்தேதெரிசித்தலையும், தொழுதலையும், கண்டேனென அகத்தேதெரிசித்தலையும் இதனாற்கூறினர். (௪௦௦)

களங்கமெலாமற்றேன்கதிபுகுந்தேனாயே
னுளங்குளிரவானந்தமுண்டேன் - வளங்களெல்லா
முற்றேன்திருப்போரூருத்தமனார்சீர்பாத
நற்றாமரைதொழுதநான்.

(இ - ள்.) திருப்போரூர் உத்தமனார் - திருப்போரூரிலெழுந்தருளிய இறைவரது, சீர் பாத நல் தாமரை தொழுத நான் - திருவடியாகிய தாமரையைவணங்கியநான், வளங்கள் எல்லாம் உற்றேன் - இம்மையில்நுகரவேண்டிய போகங்களை யெல்லாமடைந்தேன், களங்கம் எல்லாம் அற்றேன் - குற்றமெல்லாமொழிந்தேன், கதிபுகுந்தேன் – முத்தியிற்புகுந்தேன். நாயேன் உளம்குளிரஆனந்தம் உண்டேன் - நாயிற்கடைப்பட்டயான் மனவெதுப்பறப் பேரின்பத்தை நுகர்ந்தேன்.

வெதுப்பென்றது பிறவிவெப்பத்தை. (௪௦௧)

ஆறுமுகம்வாழியாறிரண்டுதோள்வாழி
தேறுபதம்வாழியிருதேவிமார் - வீறுபுடை
வாழிவேல்வாழிமயில்வாழிபோரூரர்
வாழிசகம்வாழிமகிழ்ந்து.

(இ - ள்.) ஆறு முகம் வாழி - ஆறுதிருமுகங்களும் வாழக்கடவன, ஆறு இரண்டு தோள்வாழி - பன்னிரண்டு திருப்புயங்களும்வாழக்கடவன, தேறு பதம் வாழி - அடியவர்கள் தெளிந்தடையும் திருவடிவாழக்கடவது, இரு தேவிமார் வீறுபுடை வாழி - தெய்வயானை நாய்ச்சியாரும் வள்ளிநாய்ச்சியாரும் நிகரின்றிஎழுந்தருளிய இருபாலும்வாழக்கடவன, வேல் வாழி மயில்வாழி - வேல்வாழக்கடவது மயில்வாழக்கடவது, போரூரர்வாழி - திருபோரூரில் வசிக்கும் மெய்யடியவர்வாழக்கடவர், சகம்மகிழ்ந்துவாழி - இதனைக்கற்றநிலவுலகினர்மகிழ்ந்துவாழக்கடவர்.

திருக்கண்கள்உயிர்கள்மேலருள் சுரத்தலால்ஆறுமுகம்வாழியெனவும், அவ்வருள்வழிப்பட்ட ஆன்மாக்களின்மும்மலங்களைத்திருப்புயங்கள்வெல்லுதலால் ஆறிரண்டுதோள்வாழியெனவும், அம்மலச்சிமிழ்ப்புநின்றுநீங்கிய ஆன்மாக்களைச்சிவபோகநுகரத் தன் பாற்கூட்டுதலால் தேறுபதம்வாழியெனவுங் கூறினர். (௪௦௨)

மாலை முற்றிற்று.

## தாலாட்டு.

பெண்கள் தொட்டிலில் தங்கள்மக்களைவளர்த்திக் கண்வளர நாவினைய சைத்துப்பாடும் தாலாட்டுப்போல முருகக்கடவுளும் பிள்ளைமைப்பருவத்தில் திருக்கண்வளர உமையம்மையின் அருட்டோழியர்கள் சிவஞானத்தொட்டிலில் திருக்கண்வளரப்பாடியருளிய பாடலாகக்கூறுதலால் தாலாட்டெனக்கூறினர். இது விழுமியபொருளும் வொழுகியவோசையுமுடைத்தாய் இரண்டடி தம்முளொத்துவருதலால் வெண்செந்துறை.

### நேரிசை வெண்பா.

### காப்பு.

கனகவரையிருபாற்கங்கைவழிந்தாங்குக்
கனகருணையேமதமாக்காட்டுங் - கனகவரைக்
கோதண்டனீன்றதிருக்குஞ்சரத்தைக்கைதொழுவார்
தீதண்டார்சேர்வார்திரு.

(இ - ள்.) கனகவரை இருபால் கங்கை வழிந்தால் ஆங்கு-மேருவின் இரண்டுபக்கத்திலும் கங்கைவழிந்தாற்போல, கன கருணையே - மிக்ககருணையையே, மதம் ஆக காட்டும் - மதமாகப்புலப்படுத்தும், கனக வரை கோதண்டன் ஈன்ற திருக்குஞ்சரத்தை - மேருமலையைவில்லாகவுடையஇறைவன்பெற்றஅழகியயானைமுகக்கடவுளை, கை தொழுவார் தீது அண்டார் - கைகூப்பிவணங்குவோர்தீங்கினையடையார், திரு சேர்வர் - செல்வத்தையடைவார்.

### நூல்.

பூமாதுநாமாதுபோதசுகமாமாது
தாமேவுபோரூர்ச்சரவணநாயகனே.

(இ - ள்.) பூமாது நாமாது போத சுக மாமாது - திருமகளுங்கலைமகளும்சிவஞானமகளும், தாமேவு போரூர் சரவண நாயகனே - தாமிடையறாதுவசிக்குந்திருப்போரூரிலெழுந்தருளியசரவணபவனென்னுமிறையவனே. (க)

மாணிக்கமால்வரைமேன்மன்னுசெக்கர்வானமென
வேணிப்பிரான்றோளின்மேவுஞ்சிறுகுருந்தோ,

(இ - ள்.) மாணிக்க மால் வரைமேல் - பெரியமாணிக்கமலைமேல், மன்னு செக்கர் வானம் என - நிலைபெற்றசெக்கர்வானம்போல, வேணி பிரான் தோளில் - சடாபாரத்தையுடையசிவபெருமான்றோளில், மேவுஞ் சிறு குருந்தோ - எழுந்தருளியசிறியமுளையோ.

சிவபெருமான் மாணிக்கமலையாகவும் முருகக்கடவுளைச் செக்கர்வானமாகவும் உவமையுருபுதந்து கூறுதலால் இது பண்புவமையணி, (உ)

உலகீன்றமாதாவுதவியபால்கஞ்ச
மலர்வாய்களாறுமணக்கின்றவான்குருந்தோ.

(இ - ள்.) உலகு ஈன்ற மதா உதவிய பால் - உலகினைப்பெற்றமாதாவாகியஉமையம்மைதந்தருளியபால், கஞ்ச மலர் வாய் கள் ஆறும் - தாமரைமலர்போன்றதிருவாய்களாறிலும், மணக்கின்றவான்குருந்தோ - நறுமணம் வீசும்பெரியகுருந்தோ. (௩)

பெண்ணுய்ந்தகற்புப்பிடியும்பிணைமானுங்
கண்ணாரக்கண்டுகளிக்கவருகற்பகமோ.

(இ - ள்.) பெண் ஆய்ந்த கற்பு பிடியும் - பெண்களுள்சிறந்ததென்றாராயப்பட்டகற்பினையுடையதெய்வயானையும், பிணை மானும் - வள்ளிநாய்ச்சியாரும், கண் ஆர கண்டு களிக்க வரு கற்பகமோ - தனதுகண்களாற்கண்டுகளிக்கவாராநின்றகற்பகவிருட்சமோ. (௪)

நீலமயில்வாகனனேநெட்டிலைவேலாயுதனே
கோலநிறைகோழிக்கொடிபடைத்தசேவகனே.

(இ - ள்.) நீல மயில் வாகனனே - கரியமயிலூர்தியையுடையவனே, நெடு இலை வேலாயுதனே - நெடியதகட்டுவடிவாகியவேலாயுதத்தையுடையவனே, கோலம் நிறை கோழி கொடி படைத்த சேவகனே-அழகுநிறைந்தகோழிக்கொடியையேந்தியவீரனே. (௫)

ஆறிரண்டுதோளானேவாறுமுகத்தானே
தேறுமறைகொஞ்சுஞ்சிறுசதங்கைத்தாளானே.

(இ - ள்.) ஆறு இரண்டு தோளானே - பன்னிரண்டுதிருத்தோளையுடையவனே, ஆறு முகத்தானே - ஆறுதிருமுகங்களையுடையவனே, தேறு மறை கொஞ்சும் சிறு சதங்கை தாளானே - தெளிந்தவேதங்கொஞ்சுஞ்சிறியசதங்கையையணிந்ததிருவடியையுடையவனே. (௬)

மகுடங்களாறுமணிக்குழையீராறுந்
திகழ்கடகமீராறுஞ்சிலம்புந்தரித்தானே.

(இ - ள்.) மகுடங்கள் ஆறும் - ஆறுதிருமுடிகளும், மணிக் குழை ஈராறும் - இரத்தினமணிந்தபன்னிரண்டுதிருக்குண்டலங்களும், திகழ் கடகம் ஈராறும் - பன்னிரண்டுகடகங்களும், சிலம்பும் தரித்தானே - சிலம்புமாகிய இவைகளைத்தரித்தருளினவனே. (௭)

சடைமேற்பிறையையமுந்நூறன்னுற்பிணித்தணிந்த
விடையான்மடிமேல்விளையாடுமாரமுதோ.

(இ - ள்) சடைமேல் பிறையை முந்நூல் தன்னால் பிணித்து அணிந்த- சிவபெருமான்சடைமேலணிந்த அர்த்தசந்திரனை அப்பெருமானுபவீதத்தாற் பிடித்துக்கட்டி அதனைத்தானணிந்த, விடையான்மடிமேல் விளையாடும் ஆர் அமுதோ - இடபவாகனத்தை யூர்தியாகவுடைய இறையவன்மடிமேல் விளையாடும் அரிய அமுதுபோல்பவனே. (அ)

செஞ்சதங்கைகொஞ்சச்சிறுகிண்கிணியாடக்
கஞ்சமலர்த்தாளுமையாள்கண்களிக்கவந்தானே.

(இ - ள்.) செம் சதங்கை கொஞ்ச - பொன்னாலமைந்தசதங்கைகள் ஒருபால்கொஞ்சவும், சிறு கிண்கிணி ஆட-சிறியகிண்கிணிகளொருபாலாடவும், கஞ்சமலர் தாள் உமையாள் கண்களிக்க வந்தானே - தாமரைமலரையொத்த திருவடியையுடைய உமையவள் கண்களிகூர வந்தருளினவனே. (கூ)

ஆய்மாரறுவர்களுமம்பிகையுங்கங்கைமின்னுஞ்
சேயேயென்றேந்திச்சிரமோந்துகொள்குருந்தோ.

(இ - ள்.) ஆய் மார் அறுவர்களும் - பாலூட்டியகார்த்திகைப்பெண்களறுவரும், அம்பிகையும் - பார்வதியும், கங்கைமின்னும் - கங்கைப்பிராட்டியும், சேயே என்று ஏந்தி சிரம் மோந்து கொள் குருந்தோ - பிள்ளாயேயென்று தமதுதிருக்கரங்களிலேந்தி உச்சிமோக்கநின்றகுருந்தோ. (கo)

கானந்திரிவேடர்கன்னிகைக்காகப்பரண்மேன்
ஞானங்கமழ்பாதநண்ணவைத்தநாயகமோ.

(இ - ள்.) கானம் திரி வேடர் கன்னிகைக்காக - காட்டில்திரியும்வேடர்களதுபெண்ணாகிய வள்ளிநாய்ச்சியாருக்காக, பரண்மேல் - அந்நாய்ச்சியார் தினைகாக்கவெழுந்தருளிய பரணின்மேல், ஞானம் கமழ் பாதம் நண்ண வைத்த நாயகமோ - சிவஞானங்கமழுந்தனது திருவடியைவைத்த இறையவனே.(கக)

புராரிசிறுவாவென்னப்பூவுலகங்காக்கு
முராரிமருகாவென்னமுன்வந்துநின்றானே.

(இ - ள்.) புராரி சிறுவா என்ன - திரிபுரத்தையெரித்தசிவபெருமான் திருமகனேயென்றழைக்கவும், பூவுலகம் காக்கும் முராரி மருகா என்ன - நிலவுலகைக்காக்கும் திருமால் மருகனேயென்றழைக்கவும், முன் வந்து நின்றானே - அவர்கள்முன்வந்துநின்றவனே.

நிலவுலகென்றமையால் சுவர்க்கமுதலிய உலகங்கள் கொள்ள நிற்றலால் உபலக்கணம். (கஉ)

அமராபதியிலமரரெல்லாஞ்சூழ்ந்து
தமராகிவாழ்த்தவெள்ளைத்தந்திமேல்வந்தானே.

(இ - ள்) அமரா பதியில் அமரர் எல்லாம் சூழ்ந்து - தேவவுலகில் எல்லாத்தேவர்களுஞ்சூழ்ந்து, தமராகி வாழ்த்த - உறவினராய்ப் புடைசூழ்ந்து வாழ்த்த, வெள்ளை தந்தி மேல் வந்தானே - வெள்ளையானையின்மேல் பவனிவந்தருளினவனே. (கங)

அண்டமனந்தமருளுருவினின்றிலகக்
கண்டமரர்போற்றக்கனகவரைநின்றானே.

(இ - ள்.) அண்டம் அனந்தம் - அளவில்லாத அண்டங்களும், அருள் உருவின் நின்று இலக - தன்துதிருவருளாகியதிருவுருவில் நின்றுவிளங்க, அமரர் கண்டு போற்ற - தேவர்கள்கண்டுவணங்க, கனக வரை நின்றானே - மேருமலையில் நின்றருளினவனே.

மேருமலையில் இந்திரன்முதலிய தேவர்கள்கண்டுதெரிசிக்க விசுவரூபங்கொண்டகாலையில் அத்திருவுருவில் அண்டமுதலிய பல்பொருள்களுந்தோன்றக் காட்சிதந்தருளினனென்பது புராணவரலாறு. (கச)

தவமுனிவர்தேவர்சயசயவென்றேத்த
நவவீரராமணிக்குநடுவிருந்தநாயகமே.

(இ - ள்) தவ முனிவர் தேவர் சய சய என்று ஏத்த - தவத்தையுடையமுனிவர்களும் தேவர்களும் சயசயவென்றுதுதிக்க, நவ வீரராம் மணிக்கு நடுவு இருந்த நாயகமே - நவவீரராகியமாணிக்கங்களுக்கு நடுவேயிருந்த நாயகமணியே.

நவவீரரவானா முன்னர்க்காண்க. (கரு)

பொதியமுனியகத்துப்பொங்குமிருணீங்க
விதியுமறியாவிளக்கேற்றுந்தேசிகனே.

(இ - ள்.) பொதியமுனி அகத்து பொங்கும் - பொதியமுனிவராகிய அகத்தியமுனிவர்மனத்தில் இடைவிடாதோங்கிய, இருள் நீங்க - ஆணவமலவிருள்நீங்க, விதியும் அறியாத விளக்கு ஏற்றும் தேசிகனே - பிரமனும் அறிதற்கரிய சிவஞானவிளக்கையேற்றிய குருமூர்த்தியே. (கசு)

அருணகிரிநாதனருந்தமிழ்நூற்கீரன்
கருணைபெறவோதுங்கவிமாலைத்தோளானே.

(இ - ள்.) அருணகிரி நாதன் அரும் தமிழ் நூல்கீரன் - அருணகிரிநாதரென்னுந் திருநாமமுடையவரும் அரியதமிழ்நூலை யறிந்தநக்கீரரும், கருணை பெற ஓதும் - கிருபைபெறப்பாடிய, கவிமாலை தோளானே - பாமாலையைப் புனைந்த திருத்தோளையுடையவனே.

நக்கீரர் திருமுருகாற்றுப்படையைப் பாடி யருள்பெற்றதை முன்னர்க் காண்க. (கஎ)

பிரமனறியாப்பிரணவத்தினத்த
மரனார்செவிகுளிரவன்றுரைத்தசற்குருவோ.

(இ - ள்.) பிரமன் அறியாத பிரணவத்தின் அத்தம் - பிரமனாலறிதற்கரிய பிரணவத்தின் உட்கிடையை, அரனார் செவி குளிர - சிவபெருமானார் திருச்செவிகுளிர்தூங்க, அன்று உரைத்த சற்குருவோ - அக்காலத்திலுபதேசித்த சற்குருராயனே. (கஅ)

அரிவைமுருகாவென்றழைக்குமுன்னேவந்து
கரமுதவிநின்றகருணைப்பெருந்தேவோ.

(இ - ள்.) அரிவை முருகா என்று அழைக்கு முன்னே வந்து - ஓர்பெண் முருகனே என்றழைத்தற்குமுன் காட்சிதந்து, கரம் உதவி நின்ற கருணைப்பெருந்தேவோ - கைதந்தருளிய கிருபையையுடைய பெருங்கடவுளோ.

முருகக்கடவுளிடத்து அன்புள்ள ஓர் பெண் எந்நாளு முருகாவென்று கூறுதலையுணர்ந்த அவள் கணவன் அயல்வீட்டுக்காரன் பெயரும் முருகனாயிருத்தலால் ஐயங்கொண்டிருக்குங்கால் ஓர்நாள் தன் மனைவி மணலைவாரி முருகக்கடவுளருளால் அமுதமைத்து வைத்திருக்க, நுகரவந்த தன் கணவன் அரிசி யில்லத்திலில்லையே அமுது எவ்வாறமைத்தாயென்று வினவ, முருகாவென்று எந்நாளுங் கூறுவதுபோற் கூற, முன்னரே ஐயங்கொண்ட அவன் அயல் வீட்டுக்காரன் உதவினான் என்பதை யுட்கொண்டு வாளெடுத்து அமுதுபடைக்குங்கரத்தைச் சேதிக்க, அப்போது முருகாவென்று தன்னிலைபிறழாது கூறினமையால் வெட்டுண்ட கை முருகக்கடவுள் திருவருளால் மூளைத்ததென்பது ஓர் வரலாறு. (கக)

வேலைக்கலைபயின்றமேதருபொய்யாமொழிக்குப்
பாலைக்கடையிதென்றுபகர்ந்தபெரும்பாவலனே.

(இ - ள்) கலை வேலை பயின்ற - நூற்கடலைப்பழகித்தேர்ந்த, மேதரு பொய்யா மொழிக்கு - மேன்மைவாய்ந்த பொய்யாமொழிப்புலவருக்கு, இது பாலை கடை என்று - இந்நிலம் பாலை நிலத்தினுங் கீழ்ப்பட்டதென்று, பகர்ந்த பெரும்பாவலனே - செப்பியருளிய பெரியபுலவனே.

தன்னைப்பாலனென்று பாடாதொழிந்த பொய்யாமொழிப்புலவர் வாயினின்று ஒருசெய்யுள் தன்மேற் பாட விருப்பங்கூர்ந்த குமாரக்கடவுள் அப்புலவன் பாலைநிலத்தின்வழியே செல்லுங்கால், குமாரக்கடவுள் வேடுவவுருக்கொண்டு அப்புலவர் முன்னின்று என்மேலொரு செய்யுள்செய்யவேண்டும் இல்லாதொழியில் இவ்வேலுக்கிரையாக்குவன் என்றபோது அதற்கஞ்சிய புலவர் நின்பேர் என்னவென்றுவினவ, முட்டையென்று முருகக்கடவுள் கூறிய

ருள, அப்புலவர் "பொன்போலுங்கள்ளிப்பொறிபறக்குங்கானலிலே, என்பேதைசெல்லற் கியைந்தனளே, மின்போலு - மானவேல்முட்டைக்கு மாறுயதெவ்வர்போம், கானவேல்முட்டைக்குங்காடு" (இ - ள்.) மின்போலு மானவேல் முட்டைக்கு - மின்னலைப்போலுமொளிவாய்ந்த மானமமைந்த முட்டையென்னுமிவ்வேடனுக்கு, மாறு ஆயதெவ்வர்போம் - பகையையுடைய பகைவர்கள் புறங்காட்டி ஓடும், கானவேல்முள்தைக்குங் காடு - குடைவேல் முள்தைத்துருகும் இப்பாலைவனத்தில், கள்ளிப்பொறி - வெப்பத்தால்பற்றியெரியும் கள்ளியின்றீப்பொறி, பொன்போலும் பறக்கும் கானலில் - பொற்பிதிர்போலப்பறக்கும்வெப்பத்தில், என்பேதை செல்லற்கு இயைந்தனள் - என்னுடையதலைவி தலைவனொடுபோதற்கு உடன்பட்டாள். என.

இப்பொருளமைந்த செய்யுளைப் பாடினனென்பது புராணவரலாறு. (உ0)

தார்மார்பகனேசமரபுரிநாயகனே
சூர்மார்புருவத்தொளைத்தவடிவேலவனே.

(இ - ள்.) தார் மார் பகனே - கடப்பமலர்மாலையணிந்த திருமார்பையுடையவனே, சமரபுரி நாயகனே - திருப்போரூரிலெழுந்தருளிய இறைவனே, சூர் மார்பு உருவ தொளைத்த வடி வேலவனே - சூரபன்மனுடையமார்பை யுருவத்தொளைபடுத்திய வேலையேந்தினவனே. (உக)

குன்றமுங்கொக்குங்குறைகடலுஞ்சூர்மார்புங்
குன்றவடிவேலெறிந்தகொற்றவனேநற்றவனே.

(இ - ள்.) குன்றமும் கொக்கும் - கிரௌஞ்சகிரியும் கொக்குவடிவாய்வந்த அசுரனும், குறை கடலும் சூர்மார்பும் குன்ற - ஒலிக்குங்கடலும் சூரபன்மனுடையமார்பும் தத்தம்வலியிற்குறைய, வடிவேல் எறிந்த கொற்றவனே நல்தவனே - வடித்தவேலையெறிந்த வெற்றியையுடையவனே நல்லதவத்தையுடையவனே.

இவற்றின்வரலாறு முன்னர்க்காண்க. (உஉ)

சமரபுரித்தேவோதணிகைமலைத்தேனோ
வமரும்பழனிமலைக்கானமணிவிளக்கோ.

(இ - ள்.) சமரபுரி தேவோ - திருப்போரூரிலெழுந்தருளிய தேவனோ, தணிகை மலை தேனோ - தணிகைமலையிலெழுந்தருளிய தேனோ, அமரும் பழனிமலைக்கு ஆன மணிவிளக்கோ - எழுந்தருளிய பழனிமலைக்கமைந்த ரத்நதீபமோ. (உங)

சீரலைவாய்முத்தோதிருப்பரங்குன்றத்தரசோ
வேரகத்திலென்றுமிருந்தபெருவாழ்வோ.

(இ - ள்.) சீர் அலைவாய் முத்தோ - திருச்சீரலைவாயிற்பிறந்த ஆணிமுத்தமோ, திருப்பரங்குன்றத்து அரசோ - திருப்பரங்குன்றத்திலெழுந்தருளிய அரசனே, ஏரகத்தில் என்றும் இருந்த பெருவாழ்வோ - திருவேரகத்தில் என்றுமெழுந்தருளிய பெரியவாழ்வோ. (உச)

பழமுதிர்சோலைப்பரனேகுறிஞ்சிக்
கிழவனெனநல்லோர்கிளக்கும்பெருமாளோ.

(இ - ள்.) பழமுதிர்சோலை பரனே - பழமுதிர்சோலையிலெழுந்தருளிய இறைவனே, குறிஞ்சிக்கிழவன் என - குறிஞ்சிநிலத்திற்குரியவனென, நல்லோர்கிளக்கும் பெருமாளோ - ஆன்றோரெடுத்துக்கூறும் பெருமானே.

ஆறு திருப்படைவீடுகளுள் குன்றுதோறாடல் ஓர்திருப்படைவீடாதலால் குறிஞ்சிக்கிழவனென என்றார். (உரு)

சங்கப்பலகைத்தமிழைப்புலவோர்க்குப்
பங்கப்படாமற்பகர்ந்தபெரும்பாவலனே.

(இ - ள்.) சங்கம் பலகை தமிழை - சங்கப்பலகையில்வீற்றிருந்து அவரவர்பாடிய தமிழ்ச்செய்யுளின் குணகுற்றங்களை, பங்கப்படாமல் - குறைபடாமல், புலவோர்க்கு - அச்சங்கப்புலவோருக்கு, பகர்ந்த பெரும் பாவலனே - தெரித்தருளியபெரும்புலமையையுடைய வணிகப்பிள்ளையோ. (உசு)

நாயினேன்செய்பிழைகணாடாதெனதுளமே
கோயிலாக்கொண்டுகுடியிருந்தமெய்ப்பொருளோ.

(இ - ள்.) நாயினேன் செய்த பிழைகள் நாடாது - நாயிற்கடைப்பட்ட நான்செய்யுந்தவறுகளைத்திருவுளத்தில்வைக்காது, எனது உள்ளமே கோயிலாகக்கொண்டு - அடியேனதுமனத்தையே திருக்கோயிலாக்கொண்டு, குடியிருந்த மெய்ப்பொருளோ - குடியேறிய உண்மைப்பொருளோ. (உஎ)

வானவர்சூழ்போரூரணைவந்தடைந்தபேர்க்கெல்லா
மோனசுகங்காட்டிமுத்திதருந்தேசிகனே.

(இ-ள்.) வானவர் சூழ்-தேவர்கள்வலம்வரும், போரூரணைவந்து அடைந்த பேர்க்கெல்லாம் - திருப்போரூரைச்சரணடைந்துவந்த அடியவருக்கெல்லாம், மோன சுகம் காட்டி-மோனசுகத்தைக்காட்டியருளி, முத்திதரும் தேசிகனே-மோட்சத்தைத்தந்தருளும் குருராயனே. (உஅ)

உள்ளத்திமிரமொழித்துச்சிவாநந்த
வெள்ளத்துளன்பர்விளையாடவைத்தானே.

(இ - ள்.) உள்ளம் திமிரம் ஒழித்து - ஆன்மாவோடியைபுடைய ஆணவமலவிருளொழிய, சிவானந்தவெள்ளத்துள் - சிவபோகவெள்ளத்திலே, அன்

பர் விளையாட்டவைத்தானே - அடியவர்கள் அழுந்திவிளையாடவைத்தருளின வனே.

உள்ளம் - ஆன்மா. (உகூ)

அரனொடுவந்தம்மையளித்தவள்ளப்பாலைப்
புரைதீரவுண்டவரைப்போதமுறக்கண்டானே.

(இ - ள்.) அரனொடு வந்த அம்மை - சிவபெருமானோடுவந்த உமையம்மை, அளித்த வள்ளம்பாலை - கிண்ணத்திற்றந்தருளிய சிவஞானப்பாலினை, புரைதீர உண்டு - குற்றந்தீரப் பருகி, அவரை-அம்மையப்பரை, போதம் உற கண்டானே - சிவஞானமேலிடத்தெரிசித்தவனே. (௩௦)

பொற்றாளம்பொற்சின்னம்பொற்பார்சிவிகையொடு
நற்றரளப்பந்தரையுநம்பர்கையிற்பெற்றானே.

(இ - ள்.) பொன்தாளம் - பொற்றாளத்தையும், பொன்சின்னம்-பொற்சின்னத்தையும், பொற்பு ஆர் சிவிகையொடு - பொலிவமைந்த பல்லக்கோடு, நல் தரளப்பந்தரையும்-நல்லமுத்துப்பந்தலையும், நம்பர் கையில் பெற்றானே - சிவபெருமான் திருக்கரத்தினின்றும்பெற்றவனே.

திருஞானசம்பந்தப்பிள்ளையார் திருக்கோலக்காவுக்கெழுந்தருளித் திருக்கரமொத்தித் தேவாரமோதுகையில் திருக்கரங் கன்றுமேயெனச் சிவபெருமானிரங்கிப் பொற்றாளந்தந்தனரொன்பதும், திருத்தூங்கானைமாடமென்னுந் தலத்திலிருந்து திருவரத்துறைக்குத் திருவடிகன்ற மெல்லமெல்லச்செல்லும்போது போதுசென்றமையால் மாறன்பாடியில் அடியவர்கூட்டத்துடனிருக்குங்கால்,சிவபெருமான் அங்குள்ள மறையவர்க்குக் கனவிலெழுந்தருளி நம்மடியவனுக்கு முத்துச்சிவிகையும் முத்துக்குடையும் முத்துச்சின்னமும் தந்தருள்வோமென்றருள, அவ்வடியவர் திருவத்துறைக்குவந்து ஆலயத்தில்பார்க்க அவ்வாறே யிருந்தமைகண்டு கைக்கொண்டு ஆளுடைய பிள்ளையாரிடஞ்சென்று சிவபெருமானருளியதைத்தர ஏற்றுக்கொண்டனரொன்பதும், திருப்பட்டீச்சரத்துக்குச்செல்லுங்கால் வெயில்வெப்பந்தணிய முத்துப்பந்தல்வந்து தோன்ற இதுவும் நமதிறைவனருளே என்று ஏற்றனரொன்பதும் புராணவரலாறுகள் ஆதலால் நம்பர்கையிற் பெற்றானே எனக்கூறினர். (௩க)

மதுரைச்சமணமதகரிகளெல்லாஞ்
சிதறத்துறந்தசிவசமயகோளரியோ.

(இ - ள்.) மதுரைச்சமண மதகரிகள் எல்லாம் - மதுரையிலுள்ள சமணரென்னும் மதம்வாய்ந்தயானைகளெல்லாம், சிதற துறந்த சிவசமய கோளரியோ - அங்குநின்றுஞ்சிதறியோடவோட்டிய சைவசமயசிங்கமோ.

மதுரையில் தாமெழுந்தருளியிருந்த மடத்தில் தீவைத்த சமணர்களை வாதில்வென்று கழுவேற்றினராதலால் கரிகளெல்லாஞ் சிதறத்துறந்த சிவசமய கோளரியோ என்றார். சமணர்களை யானைகளாக வுருவகஞ்செய்து ஆளுடைய பிள்ளையாரைச் சிங்கமாகவுருவகஞ்செய்தமையால் இயையுருவகவணி. (௩௨)

மயிலைநகர் தன்னில்வன்னியடுமென்பைக்
குயிலைநிகருமொழிக்கோதையாச்செய்தானே.

(இ - ள்.) மயிலை நகர் தன்னில் - மயிலையென்னுந் திருநகரில், வன்னி அடும் என்பை - தீநுகர்ந்த எலும்பினை, குயிலை நிகரும் மொழி கோதையாக செய்தானே - குயிலையொத்தசொல்லையுடைய ஓர்பெண்ணாகச்செய்தானே. (௩௩)

ஆச்சாப்புரத்திலனந்தமுயிரையெல்லாம்
பேச்சோடுளங்கடந்தபேரின்பம்வைத்தானே.

(இ - ள்) ஆச்சாப்புரத்தில் அனந்தம் உயிரை எல்லாம் - ஆச்சாப்புரமென்னுந்திருப்பதியில் அளவில்லாத உயிர்களையெல்லாம், பேச்சோடு உளம்கடந்த பேரின்பம் வைத்தானே - மனவாசகங்கடந்த பேரின்பத்தில் வைத்தருளினவனே. (௩௪)

வந்தோர்பிணிதீர்க்குமாமருந்தோவன்பருக்குச்
சந்தோடநல்குஞ்சமரபுரிமாநிதியோ.

(இ - ள்.) வந்து ஓர் பிணிதீர்க்கும் மாமருந்தோ - வந்தடைந்தவர் பிறவிநோயைநீக்கும் பெரியமருந்தோ, அன்பருக்கு சந்தோடம் நல்கும் சமரபுரி மாநிதியோ-அடியவருக்குக் களிப்பைத்தரும் திருப்போரூரிலெழுந்தருளிய பெரியதிரவியமோ. (௩௫)

தாயோதமரோவென்றாதையோசற்குருவோ
தேயாக்கருணைபொழிதென்போரிவேலவனே.

(இ - ள்.) தாயோ தமரோ - தாயோஉறவினரோ, என்தாதையோ - எனதுபிதாவோ, சற்குருவோ - ஞானாசாரியனோ, தேயாத கருணைபொழி தென்போரி வேலவனே - என்றுங்குன்றாத கிருபையைப்பொழிகின்ற இமமலைக்குத்தென்பாலுள்ள திருப்போரூரிலெழுந்தருளிய வேலையேந்திய இறையவனே. (௩௬)

முத்தோகுலிசமோமூதொளிமாணிக்கமோ
சித்தோதென்போரூர்ச்சிவானந்தவாரிதியோ.

(இ - ள்.) முத்தோ குலிசமோ-ஆணிமுத்தோவச்சிராயுதமோ, மூது ஒளி மாணிக்கமோ - பெரியகிரணத்தையுடையமாணிக்கமோ, சித்தோ - அறிவுவ

டிவாயுள்ளதோ, தென்போரூர் சிவானந்தவாரிதியோ - இமமலைக்குத்தென்பா லுள்ள திருப்போரூரில்நிறைந்த சிவபோகக்கடலோ.

உலகினர்க்குத்தெவிட்டாத பொருளாயுள்ளானென்பார் முத்தோகுலிச மோமாணிக்கமோ வெனவும், மெய்ஞ்ஞானியர்க்கு ஆருவானந்தம்நிரப்புதலா ல் சித்தோதென்போரூர்ச்சிவானந்தவாரிதியோ எனவுங்கூறினர். (௩௭)

பாலோசெந்தேனேபழமோபழமறையோ
மேலோர்புகழ்போரூர்வீற்றிருந்தபார்த்திபனே.

(இ - ள்.) பாலோ செந்தேனேபழமோ - பாலோசெவந்ததேனே இனியகனியோ, பழமறையோ - தொன்றுதொட்டுள்ளவேதமோ, மேலோர் புகழ் போரூர் வீற்றிருந்த பார்த்திபனே- அறிவில்மிக்கோர்புகழுந் திருப்போரூரிலெழுந்தருளிய அரசனே.

அடியவருள்ளத்தில் இனிமைசுரத்தலால்பாலோசெந்தேனே பழமோ எனவும்,அவ்வடியவர்க்குவிதிவிலக்குவிதித்தலால் பழமறையோஎனவும், அதன்வழி நின்றோரைப்புரத்தலால் போரூர்வீற்றிருந்த பார்த்திபனே எனவுங்கூறினர். (௩௮)

அன்னமோபைங்கிளியோவம்பிகைகண்ணுக்கினிய
சொன்னமோபோரூர்ச்சுகபூரணவொளியோ.

(இ - ள்.) அன்னமோ பைங்கிளியோ - அன்னமோபசியகிளியோ, அம்பிகை கண்ணுக்கு இனியசொன்னமோ - உமையம்மைகண்களுக்கு இனிமைசுரக்கும் பொன்னே, போரூர் சுகபூரண ஒளியோ - திருப்போரூரிலெழுந்தருளிய சுகநிறைவினொளியோ. (௩௯)

ஞானக்கரும்போமெய்ஞ்ஞானனந்தக்கடலோ
தானற்றோர்போற்றுஞ்சமரபுரித்தண்ணளியோ.

(இ - ள்) ஞானக்கரும்போ - சிவஞானக்கரும்போ, மெய்ஞ்ஞான ஆனந்தக்கடலோ - அச்சிவஞானத்தால்விளையும் சிவபோகக்கடலோ, தான் அற்றோர்போற்றும் சமரபுரி தண் அளியோ - தற்போதமிழந்தவர்துதிக்கும் திருபோரூரிலெழுந்தருளியதண்ணிய அருட்கடலோ.

தற்போதமிழந்தவருள்ளத்தில் மதுரஞ்சுரத்தலால் ஞானக்கரும்போ மெய்ஞ்ஞானனந்தக்கடலோ என்றார். (௪0)

என்றென்றேதாலாட்டியெல்லோருமின்பமுற
நன்றருள்செய்யுமெங்கணுதன்போரூரிறையே.

(இ - ள்.) என்று என்று தாலாட்டி - அருட்டோழியர் கூறியவண்ணம் தாமுந்தாலாட்டுப்பாடலைச்செய்து, எல்லோரும் இன்பம்உற - யாவருமின்பங்கூர,எங்கள் நாதன் போரூர் இறை-எங்கள் தலைவனாகிய திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுள், நன்றுஅருள்செய்யும் - மிக்ககருணைசெய்வான்.(௪௧)

தாலாட்டு முற்றிற்று.

## திருப்பள்ளியெழுச்சி.

## திருப்பள்ளியெழுச்சி - திரோதானமலம் நீங்குதல்.

எண்சீர்க்கழி நெடிலாசிரியவிருத்தம்.

திருமலிகுண திசையருணனல் லுதயஞ்
செய்தனனிருவினைச்சமமலபாகம்
பருவமதுடையவர்தமதுளமெனவே
பாரகம்விளங்கினவவர்குணக்கிரிமே
லருளொளிவீசிநின் றிலகுமுன்பதம்போ
லருக்கனுங்குணதிசைப்பொருப்பெழுகின்றா
னிருளறுகுறுமுனிபரவியபோரூ
ரிறையவனேபள்ளியெழுந்தருளாயே.

(இ - ள்.) திருமலி குணதிசை - செல்வமிக்ககீழ்த்திசையில், அருணன் நல் உதயம் செய்தனன் - அருணனென்னுந் தேர்ப்பாகன்தோன்றினான்,இருவினை சமம் மலபாகம் பருவமது உடையவர் தமது,இருவினைச்சமமும்மலபரிபாகப்பருவத்தையுமுடைய அடியவரது, உளம் என-மனத்தைப்போல, பார்அகம் விளங்கின - நிலவுலகம் விளங்கின, அவர் குணம் கிரிமேல் - அவ்வடியவரது சாத்துவிதகுணமாகிய மலையின்மேல், அருள் ஒளி வீசி நின்று இலகும் உன் பதம்போல் - திருவருளாகிய ஒளியைவீசும் உனது திருவடியைப்போல, அருக்கனும் குணதிசை பொருப்பு எழுகின்றான் - சூரியனுமுதயகிரியிலுதயஞ் செய்கின்றான், இருள் அறு குறுமுனி பரவிய போரூர் இறையவனே - மலதிமிர மொழிந்த அகத்திய முனிவர்பணிந்த திருப்போரூரிலெழுந்தருளிய இறைவனே,பள்ளி எழுந்தருளாய் - திருப்பள்ளியிடத்திலிருந்து நீயெழுந்தருளாய்.

இருவினைச்சமம் - இருவினையும் தம்முளொத்தல். மலபாகம் - ஆணவமுதலிய மும்மலங்களும் பரிபாகமாதல். சூரியனுதயஞ்செய்தற்கு முன்னமேஅவன் தேர்ப்பாகன்தோன்றுகிறது முறையாதலால் அருணனல்லுதயஞ் செய்தனன் என்றார். (க)

ஆடுறுமணிமயில்சிறைவிரித்ததன்மே
லருளொளிதிகழநீயெழுந்தருண்முறைபோற்
பீடுறுமரகதக்குரகதம்பூண்ட
பெருந்தடந்தேர்மிசையெழுந்தனன்கதிரோன்
வாடுறுதாமரைநினதருளடைந்த
மாதவர்முகமெனமலர்ந்தனவெங்கு
மேடவிழ்மலர்ப்பொழில்பொதுளியபோரூ
ரிறையவனேபள்ளியெழுந்தருளாயே.

(இ - ள்.) ஆடுறு மணி மயில் - ஆடாநின்ற அழகியமயிலானது, விரித்தது சிறை அதன்மேல் - விரித்த சிறையின்மேல், அருள் ஒளிதிகழ - கருணையாகிய ஒளிவிளங்க, நீ எழுந்தருள் முறைபோல் - நீ எழுந்தருளும் முறையைப் போல், பீடு உறு மரகதம் குரகதம் பூண்ட - பெருமையமைந்த பச்சைக்குதிரைகட்டிய, பெரும் தடம் தேர்மிசை-பெரியபரவிய தேரின்மேல், கதிரோன் எழுந்தனன் - சூரியன்உதயஞ்செய்தான், வாடுறு தாமரை - சந்திரனால் வாடியதாமரை, நினது அருள் அடைந்த மாதவர் முகம் என்ன-உனதுகருணையையடைந்தபெரியதவத்தையுடையோர் முகத்தைப்போல, எங்கும் மலர்ந்தன- எவ்விடத்தும் மலர்ந்தன, ஏடு அவிழ் மலர் பொழில் பொதுளிய - இதழவிழ்ந்த மலர்நிறைந்த சோலைகள்நெருங்கிய, போரூர் இறையவனே - திருப்போரூரிலெழுந்தருளிய இறையவனே, பள்ளி எழுந்தருளாய் - திருப்பள்ளியிடத்தினின்றுமெழுந்தருளாய்.

மயில்விரித்த சிறைபோலப் பச்சைக்குதிரைபூண்டதேரும், அதன்மேல் முருகக்கடவுளெழுந்தருளுதல்போலச் சூரியன்உதயஞ்செய்தலுங் கூறுதலால் இதுபண்புந்தொழிலும் பற்றிவந்த உவமையணி. (உ)

பகரருசுடர்விடுமுனதயில்கண்ட
பதகர்தமனமெனச்சுரர்மனமெனவே
புகருடுமழுங்கினவிகசிதமாகிப்
பொலிந்தனமுளரிகடடந்தொறுமுனது
திகழ்பதமடைந்தவருயிர்ச்சிறுபோதந்
தேய்ந்தெனமதியொளிதேய்ந்ததுகுணபா
லிகலறுகதிரெழுகின்றதுபோரூ
ரிறையவனேபள்ளியெழுந்தருளாயே.

(இ - ள்.) பகர் அரும் சுடர் விடும் உனது அயில் கண்ட - சொல்லுதற்கரிய ஒளிவீசும்உனது வேலைக்கண்ட, பதகர்தம் மனம் என - அசுரர்மனம்மழுங்குதல்போல, புகர் உடு மழுங்கின - நிறம்வாய்ந்த நக்ஷத்திரங்கள் மழுங்கின, சுரர் மனம் என்ன - தேவர்கள்மனம்போல, முளரிகள் தடம் தொறும்-தாமரைகள் தடாகங்கள்தோறும், விகசிதமாகிபொலிந்தன - மலர்ந்துவிளங்கின, உனது திகழ் பதம் அடைந்தவர் - உனதுவிளங்கும்திருவடியையடைந்த அடியவரது, உயிர் சிறுபோதம் தேய்ந்தால் என்ன - ஆன்மபோதம் தேய்ந்தாற்போல, மதி ஒளி தேய்ந்தது-சந்திரனுடைய கிரணங்குன்றியது, குணபால் இகல் அறு கதிர் எழுகின்றது - கீழ்த்திசையில் பகைமையொழிந்த சூரியன்உதயஞ்செய்தது,போரூர்இறையவனே பள்ளிஎழுந்தருளாய் - திருப்போரூரிலெழுந்தருளிய இறையவனே திருப்பள்ளியிடத்தினின்று மெழுந்தருளாய்.

சூரியன் உதயஞ்செய்த காலத்துநக்ஷத்திரங்கள் மழுங்குதலும், தாமரை மலர்தலும், சந்திரனுதயஞ்செய்தலுமுடைமையால் பதகர் மனம்என மழுங்கினஎனவும், தேவர்மனம்போலத்தாமரை மலர்ந்ததெனவும், ஆன்மபோதந் தேய்ந்தாற்போலச்சந்திரனொளிதேய்ந்த தெனவுங்கூறுதலால் இதுதெரிதருதேற்ற உவமையணி. தேய்ந்தாலென்ன தொகுத்தல் விகாரம். (௩)

என்றனைக்கைப்பிடித்தாளுறுமிறைவ
னெழில்பெறுமதர்விழிமலர்ந்தெழுசமைய
முன்றனதுளவிருள்போக்குவனேக்கா
லொல்லையில்வருகெனவெல்லினைக்கூவி
நின்றனதிருக்கொடியழைத்துறுமுறைபோ
னீடுறுமனைதொறுங்கூவினமிகவு
மின்றெனையாண்டுகொண்டருளியபோரூ
ரிறையவனேபள்ளியெழுந்தருளாயே.

(இ - ள்.) என்றனை கை பிடித்து ஆளுறும் இறைவன் - என்னைத்தனதுதிருகரத்திலேந்தி ஆளும்படியான இறைவனது, எழில் பெறும் மலர் விழி மலர்ந்து எழு சமையம் - அழகுவாய்ந்ததாமரைமலரையொத்த திருக்கண்கள் மலர்ந்தெழுஞ்சமையமிது (ஆதலால்), உன் தனது உளவிருள் - உனது ஆன்மாவோடியையபுடைய ஆணவமலவிருளை, நோக்கால் போக்குவன் - தனதுதிருக்கண்களால் போக்கியருளுவன், ஒல்லையில் வருக என - நீவிரைந்துவரக்கடவாயென்று, எல்லினை கூவிநின்றன - சூரியனைக்கூவிநின்று, திருக்கொடி அழைத்துறு முறைபோல் - அழகியசேவற்கொடி அழைக்குமுறைபோல, நீடு உறுமனை தொறும் மிகவும் கூவின - உயர்ந்தவீடுகள்தோறும் கோழிகள்கூவின, இன்று என்னை ஆண்டுகொண்டருளியபோரூர் இறையவனே - இப்போதென்னை யடிமைகொண்டருளிய திருப்போரூரிலெழுந்தருளிய இறையவனே, பள்ளி எழுந்தருளாய் - திருப்பள்ளியிடத்தினின்று மெழுந்தருளாய்.

கோழிகள் வீடுகள்தோறுங் கூவுதலை என்னைக்கையிற் கொடியாகவேந்தி விளையாடுமிறைவன் துயிலுணருங்காலமாதலால் சூரியனே நீவிரைவில்வந்தால் உனது அகவிருளை விரைந்துபோக்குவான் ஆதலால் விரைந்து வருகவென்று சூரியனைக்கூவுதல்போலக் கோழிகள் கூவியதெனக்கவி அத்தியவசயித்துக்கூறுதலால் தற்குறிப்பேற்ற வுவமையணி. நின்றன - முற்றெச்சம். (௪)

மன்மதன்விருதுகளூதினபொழில்வாய்
மாயவன்கரப்படைதொனித்ததுனெதிரே

தென்மலிமலரவனூர்திகடடத்துச்
சிலம்பினநின்கொடிபதவெச்சரிக்கை
பன்முறைபண்ணுவபோன்மனேதோறும்
பாழியங்குரலொலிகாட்டினவருளா
லென்மலவிருடெறுமாரியபோரூ
ரிறையவனேபள்ளியெழுந்தருளாயே.

(இ - ள்.) பொழில் வாய் மன்மதன் விருதுகள் ஊதின - சோலையினிடத்து மன்மதனது விருதுகளாகிய குயில்கள்கூவின, உன் எதிரே மாயவன் கரப்படை தொனித்தது - உனக்கு எதிரே திருமால் திருக்கரத்திலேந்திய சங்கம்தொனித்தது, தென் மலி மலரவன் ஊர்திகள் - பொலிவுமிக்கதாமரைமலரில்வசிக்கும் பிரமனதுவாகனங்களாகிய அன்னங்கள், தடத்து சிலம்பின - தடாகத்திலொலித்தன,நின் கொடி பத எச்சரிக்கைபல்முறைபண்ணுவது போல்-உனதுசேவற்கொடி இதுசமையமென்று பலமுறையும் எச்சரிக்கைசெய்வதுபோல, மனை தோறும் பாழியம் குரல் ஒலி காட்டின-வீடுகள்தோறுங் கோழிகள்பெருத்தகுரலைக்காட்டின, அருளால் என் மல இருள் தெறும் ஆரிய - அருளினாலே எனது ஆணவமலவிருளினைப்போக்கும் குருராயனே, போரூர் இறையவனே பள்ளி எழுந்தருளாய் - திருப்போரூரிலெழுந்தருளிய இறையவனே திருப்பள்ளியிடத்தினின்றும் எழுந்தருளாய்.

பண்ணுவது - துவ்விகுதிதொகுத்தல். (ரு)

கின்னரர்கிம்புருடர்களொடுகருடர்
கந்தருவர்கள்சித்தர்வித்தியாதரரு
மன்னியமுரசதிர்சிகரியின்வாய்தல்
வந்தனரைந்தெழில்வாத்தியந்தொனித்தார்
பொன்னிலமடவாரிந்நிலமடவார்
புரிந்தனர்நாடகமிருந்தகைமயில்போ
லின்னருள்பொழிமுகிலேதிருப்போரூ
ரிறையவனேபள்ளியெழுந்தருளாயே.

(இ - ள்.) கின்னரர் கிம்புருடர் கருடர் கந்தருவர்கள் சித்தர் வித்தியாதரரும் - கின்னரர்களும் கிம்புருடர்களும் கருடர்களும் கந்தருவர்களும் சித்தர்களும் வித்தியாதரர்களும், மன்னிய முரசு அதிர் சிகரியின் வாய்தல் வந்தனர் - நிலைபெற்ற முரசொலிக்கும் கோபுரத்தின்திருவாயலில்வந்து, எழில் ஐந்து வாத்தியம் தொனித்தார் - அழகிய தோற்கருவி முதலிய பஞ்சவாத்தியங்களையும் முழக்கினார்கள், பொன் நிலமடவார் இந் நிலமடவார் - பொன்னுலகிலுள்ள அரம்பையர்களும் இந்நிலவுலகிலுள்ளபெண்களும், இரும் தகை மயில் போல் நாடகம்புரிந்தனர் - பெருந்தன்மைவாய்ந்த மயில்போலநாட்கமாடினார்

கள், இன் அருள் பொழிமுகிலே - இனியதிருவருள்பொழியுமேகமே, திருப்போரூர் இறையவனே - திருப்போரூரிலெழுந்தருளிய இறையவனே, பள்ளி எழுந்தருளாய் - திருப்பள்ளியினின்று மெழுந்தருளாய்.

தோற்கருவி, தொளைக்கருவி, நரப்புக்கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக்கருவிஆகிய ஐந்தும் வாச்சியங்களாதலால் ஐந்தெழில்வாத்தியம் தொனித்தார் என்றார். ஓடு - எண்ணொடு. (சு)

வானவர்புகழ்நவவீரர்களொருபான்
மால்வரையனகணநாதர்களொருபாற்
றீனமிலெண்டிசைப்பாலகரொருபாற்
றேவர்கள்முனிவர்கள்பாதலரொருபாற்
றானமதுதவியகரங்கொடுபாரி
சாதநன்மலர்மழைபொழிந்தனர்பணிந்தே
யேனலம்புனமலிசாரலம்போரூ
ரிறையவனேபள்ளியெழுந்தருளாயே.

(இ - ள்.) வானவர் புகழ் நவ வீரர்கள் ஒருபால் - தேவர்கள்புகழும்வீரவாகுமுதலிய நவவீரர்களொருபாலும், மால்வரை அன்ன கணநாதர்கள் ஒருபால் - பெரியமலையையொத்த சிவகணநாதர்களொருபாலும், தீனம் இல் எண் திசை பாலகர் ஒருபால் - எளிமையில்லாத அட்டதிக்குப்பாலகர்களொருபாலும், தேவர்கள் முனிவர்கள் பாதலர் ஒருபால் - தேவர்களும் முனிவர்களும் பாதலவுலகிலுள்ள நாகர்களுமொருபாலும், தானம்உதவிய கரம் கொடு - தானந்தருந்தமதுகரங்களால், பாரிசாத நல் மலர் மழைபணிந்து பொழிந்தனர் - பாரிசாதமென்னும் நல்லமலர்மழையைப்பணிந்து சொரிந்தார்கள், ஏனல் புனம் மலிசாரல் அம் போரூர் இறையவனே - தினைப்புனமலிந்தமலைச்சாரல் நெருங்கிய அழகிய திருப்போரூரிலெழுந்தருளிய இறையவனே, பள்ளி எழுந்தருளாய் - திருப்பள்ளியினின்று மெழுந்தருளாய். (எ)

மறைமுடியுணர்ந்தவர்மறையவரடியார்
வருபரிசாகரரசர்கள்வணிகர்
குறைவறுவளவர்கண்மற்றுளரெவருங்
குழுமியேவடமொழிதென்மொழிப்பாவா
னிறைதயவுறநினைப்புகழ்ந்துநின்றேத்தி
நீளுறுதண்டெனப்பணிந்தெழுகின்றா
ரெறிமணியருவிகள்சொரிகிரிப்போரூ
ரிறையவனேபள்ளியெழுந்தருளாயே.

(இ - ள்.) மறைமுடி உணர்ந்தவர் மறையவர் அடியார் - வேதசிரசாகிய உபநிடதத்தையுணர்ந்த அந்தணர்களும் அடியவரும், வரு பரிசாரகர் - குற்றே

வல் செய்வோரும், அரசர்கள் வணிகர் - அரசர்களும் வணிகர்களும், குறைவு அறுவளவர்கள் மற்று உள்ள எவரும் குழுமி - குறைவில்லாத செல்வத்தையுடைய சோழர்களும் பாண்டியர்களுஞ் சேரர்களும் எங்குநெருங்கி, வடமொழி தென்மொழி பாவால் - வடமொழிச்செய்யுளாலும் தென்மொழிச்செய்யுளாலும், நிறை தயவுற - நிறைந்த உனதருளைப்பெற, நின்னை புகழ்ந்து நின்று ஏத்தி - உன்னைப்புகழ்ந்துநின்று துதித்து, நீள் உறு தண்டு என பணிந்து எழுகின்றூர் - நீண்டதண்டத்தைப்போல நிலத்திற்றேயப் பணிந்து எழுகின்றூர்கள், மணிஎறி அருவிகள் சொரி கிரி போரூர் இறையவனே - முத்துகளையெறியும் அருவிகள் வந்திழியும் பிரணவசைலத்தையுடைய திருப்போரூரி லெழுந்தருளிய இறையவனே, பள்ளி எழுந்தருளாய்-திருப்பள்ளியினின்றுமெழுந்தருளாய்.

வளவர்களென்றமையால் மற்றுளரொன்பதற்குப் பாண்டியருஞ் சேரருமென்றும். பரிசாரகரென்றது - புகழ்ந்துபாடு முதியோர். (அ)

விலையறுநவமணிமாலைகள்கொணர்ந்தார்
 வெயில்விடுகுலிசகேயூரங்கள்கொணர்ந்தா
ரலகறுமணிசெறிமகுடங்கள்கொணர்ந்தா
 ராழிமதாணிகணூபுரங்கொணர்ந்தார்
நிலைபெறுகவிரிதழ்நேத்திரங்கொணர்ந்தார்
 நிறைந்துளம்வேண்டியபெறவுறப்பணிந்தா
ரெலையறுபெருவரமருள்செயப்போரூ
 ரிறையவனேபள்ளியெழுந்தருளாயே.

(இ - ள்.) விலைஅறு நவமணி மாலைகள் கொணர்ந்தார்-விலைவரம்பில்லாத மாணிக்கமுதலிய நவமணிகளைக் கோவைசெய்தமாலைகளைக் கொண்டுவந்தார்கள், வெயில் விடு குலிச கேயூரங்கள் கொணர்ந்தார் - ஒளிவீசும் வயிரமிழைத்த வாகுவலயங்கள் கொண்டுவந்தார்கள், அலகு அறு மணி செறி மகுடங்கள் கொணர்ந்தார் - அளவிகந்த ஒளிவாய்ந்த இரத்தினங்கள் நெருங்கிய கிரீடங்கள் கொண்டுவந்தார்கள், ஆழி மதாணிகள் நூபுரம் கொணர்ந்தார் - மோதிரங்களும் பதக்கங்களும் சிலம்புகளுங் கொண்டுவந்தார்கள், நிலைபெறு கவிர்இதழ் நேத்திரம் கொணர்ந்தார் - நிலைபெற்றமுண் முருக்கமலரினிதழ் போலச்செந்நிறம் வாய்ந்தபட்டாடைகள் கொண்டுவந்தார்கள், உளம் நிறைந்துவேண்டிய பெற - திருவுளங்கொண்டு நீவேண்டியவற்றைப்பெற, உற பணிந்தார் - மிகவும்பணிந்தனர், எல்லை அறு பெரு வரம் அருள்செய்ப - அளவில்லாத பெரியவரத்தை யவர்களுக்கருள, போரூர் இறையவனே பள்ளிஎழுந்தருளாய் - திருப்போரூரிலெழுந்தருளிய இறையவனே திருப்பள்ளியிடத்திினின்று மெழுந்தருளாய். (கூ)

ஐங்கரங்கொடுதழுவுறநினையொருகொம்
பானையுண்மகிழ்ந்ததுமுக்கணம்பொருப்புன்
பங்கயமுகவணிகண்டுகண்களிப்பப்
பரிவொடுநினைந்ததுபனிவரையுயிர்த்த
செங்கயல்விழிப்பசும்பிடிநினைமடிமேற்
சேர்த்தருட்பாறரத்திருவுளத்துனுமீண்
டெங்களையாண்டுகொண்டருளியபோரூ
ரிறையவனேபள்ளியெழுந்தருளாயே.

(இ - ள்.) ஒரு கொம்பு ஆனை - ஏகதந்தத்தையுடைய மூத்தபிள்ளையார், நின்னை ஐங்கரம்கொடுதழுவுற - உன்னைஐந்து திருக்கரங்களாலுந் தழுவியணைக்க, உள்மகிழ்ந்தது - மனமகிழ்ந்திருக்கின்றார், முக்கண் அம்பொருப்பு - திரிநேத்திரங்களையுடைய அழகியபவளமலையொத்த சிவபெருமான், உன்பங்கயம் முகம்அணி கண்டு கண்களிப்ப - உனது தாமரைமலரையொத்த திருமுகப்பொலிவைக்கண்டு கண்களிகூர, பரிவொடு நினைந்தது - அன்போடுநினைத்தருளினார், பனிவரை உயிர்த்த செங் கயல்விழி பசும் பிடி - இமமலைபெற்ற செவ்வரிபரந்த கயலையொத்த திருக்கண்களையுடைய பசியபெண்யானையையொத்த உமையம்மை, நினை மடிமேல் சேர்த்து அருட்பால் தர திரு உளத்து உன்னும் - உன்னைத்திருமடிமேல்வைத்துச் சிவஞானப்பாலையூட்டத் திருவுளங்கொண்டருளினார், ஈண்டு எங்களை ஆண்டுகொண்டருளிய போரூர் இறையவனே - இந்நிலவுலகில் எங்களைஅடிமைகொண்டு அருள்செய்த திருப்போரூரிலெழுந்தருளிய இறையவனே, பள்ளி எழுந்தருளாய் - திருப்பள்ளியினின்றுமெழுந்தருளாய். (௧௦)

திருப்பள்ளியெழுச்சி முற்றிற்று.

# பெரியகட்டியம்.

## எழுசீர்க்கழிநெடில்விருத்தம்.

பவளமலையுபயதிசையருவிசொரிமுறைகரட
பரமவிபமகிழிளையகோவே
தவளநிறமுளகவளகரியின்மிசைசுரருலகு
தழையவலம்வருமதிகதேவே
துவிதமயலறுமுனிவரெனுமளிகள்படியமிகு
சுகநறவுபொழியுமொருபூவே
குவடிலகுகுறவர்தருகொடியினொடுசமரபுரி
குலவியருள்வரமுதவுகாவே.

(இ - ள்.) பவள மலை உபய திசை அருவி சொரி முறை - பவளமலையானது இருபாலும் அருவிசொரியும்முறைமையைப்போல, கரட பரம இப மகிழ் இளைய கோவே - இருபாலும்மதஞ்சிந்தும் மேலான யானைமுகக்கடவுள் மகிழ்கூருமிளவரசே, கவளம் தவளம் நிறம் உள்ள கரியின் மிசை - கவளமுண்ணும் வெண்ணிறம்வாய்ந்த ஐராவதத்தின்மேல், சுரர் உலகு தழைய வலம் வரும் அதிக தேவே - விண்ணுலகுதழையவலம்வந்த மேலானதெய்வமே, துவித மயல் அறுமுனிவர் என்னும் அளிகள் படிய - ஆண்டான் அடிமையென்னும் மயக்கமிகந்தமுனிவரென்னும் வண்டுகள்படிய, சுக மிகு நறவு பொழியும் ஒரு பூவே - இன்பமிக்க தேனைச்சிந்தும் ஒருமலரே, குவடு இலகு குறவர் தரு கொடியினொடு - மலையில்வசிக்கும் குறவர்பெற்றபூங்கொடிபோன்ற வள்ளிநாய்ச்சியாரோடு, சமரபுரி குலவி அருள் வரம் உதவு காவே - திருப்போரூரிலெழுந்தருளி அடியவர்க்கு வேண்டியாங்குவரந்தருங் கற்பகச்சோலையே.

துவிதமயலறு என்றது சிவத்தோடிரண்டறக்கலத்தல். தேவருலகுகாத்தற்பொருட்டு இந்திரனாற் சேனபதிப்பட்டம்பெற்று அவ்விந்திரன் முதலிய தேவர்கள் துதிக்க, விண்ணுலகில் வெள்ளையானையின்மேல் வலம்வந்தனராதலால் சுரருலகுதழைய வலம்வரு மதிகதேவே என்றார். (க)

பரவைமுகடெழுமுதயகிரணபரிதியினடன
பரதமயின்முதுகில்வருதீரா
விரவுபரிமளகுரவுகமழுபயசரணகலை
விதரணிகபுரணகெம்பீரா
சுரரரசுசசியினொடுதருநிழலினுறையுமதி
சுமடவசுரர்களையடுவீரா
கரவுநெறியறுமடியர்கதியமுதுபெறவுதவு
கனசமரபுரிநிலவுதாரா.

(இ - ள்.) பரவை முகடு எழும் உதய கிரண பரிதியின் - கடல்முகட்டிலுதயஞ்செய்யும் இளங்கிரணத்தையுடைய சூரியனைப்போல, நடன பரத மயில் முதுகில் வரு தீரா - பரதநூலின்படி நடனஞ்செய்யும் மயிலின்முதுகில் எழுந்தருளிவருகின்ற தீரனே, பரிமளம் விரவு குரவு கமழ் உபய சரண கலைவிதரணிக - மணங்கலந்தகுராமலர்கமழும் இரண்டுதிருவடிகளையுடைய நூலில்வல்லோய், புரண கெம்பீரா - நிறைந்தகெம்பீரத்தையுடையனே, சுரர் அரசு சசியினெடு தரு நிழலின் உறைய - இந்திரன் இந்திராணியோடு கற்பகநிழலில் அரசுசெய்துவசிக்க, 'மதி சுமட அசுரர்களை' அடுவீரா - அறிவில்லாத அசுரர்களைக்கொன்ற அதிவீரனே, கரவு நெறி அறும் அடியர் கதி அமுதுபெற - கள்ளநெறியகன்றமெய்யடியார்கள் முத்தியாகிய அமுதினைப்பெற, உதவு கன சமரபுரி நிலவு உதாரா - தந்தருளும்பெருமைவாய்ந்த சமரபுரியில்விளங்கிய கொடையாளனே.

பரவைமுகடெழுபரிதியின் மயில்முதுகில் வருதீரா - பண்புந்தொழிலும்பற்றிவந்த வுவமையணி. (௨)

மறைகள்பலகலைகள்பலலிபிகண்முதலியவுதவு
வளர்சொருபநிசப்ரணவவொளியே
முறைமைதருசரவசரவுயிர்கள்செயிரறுபுவன
முழுதுநிறைபரமசுகவெளியே
கறைகண்முழுவதுமுடுகிமிகவுநினைபவரிதய
கமலமலர்குடிபுகுதுமளியே
பிறையறுகுநதியரவுசடிலமுடியணிபரமர்
பிரியமுறவொருசொன்மொழிகிளியே.

(இ - ள்.) மறைகள் பலகலைகள் பல லிபிகள் முதலிய உதவு - வேதங்களும் பலகலைகளும் பலபாடைகளுமுதலியவற்றைத் தந்தருளும், நிச சொருப வளர் பிரணவ ஒளியே - மெய்ஞ்ஞானசொருபம்வாய்ந்த பிரணவத்தினுள்ளொளியே, முறைமை தரு சர அசர உயிர்கள் முழுதும் - முறையாயுள்ள சராசர உயிர்கள்முற்றிலும், செயிர் அறு புவன முழுதும் - குற்றமற்றபுவனங்கள்முற்றிலும், நிறை பரம சுகவெளியே - நிறைந்த மேலானசுகவெளியே, கறைகள் முழுவதும் முடுகி - குற்றங்கள்முழுதுந் துறந்து, மிகவும் நினைபவர் இதய கமல மலர் குடிபுகுதும் அளியே - மிகவுஞ்சிந்திக்கும் அடியவரது இதயதாமரையில் குடியேறியவண்டே, பிறை அறுகு நதி அரவு சடிலம் முடி அணி பரமர் பிரியம் உற - இளஞ்சந்திரனையும் அறுகையும் கங்கையையும் பாம்பையும் சடாமுடியிலணிந்த சிவபெருமானுரன்புகூர, ஒரு சொல் மொழி கிளியே - ஒருமொழிகூறுங்கிளியே.

ஒருமொழியென்றது - பிரணவத்தினுட்கிடையை. வேதம் பிரணவத்தின் உட்கிடை முருகக்கடவுளெனக் கூறுதலால் பிரணவத்தினொளியே

யெனவும், அடியர் இதயதாமரையில் குடியேறுதலால் அளியேயெனவும், இன் சொற்றருதலால் பிரியமுறவொருசொன்மொழிகிளியே எனவுங்கூறினர். (௩)

இமயகிரியுதவுபிடிகுடமுலையினிடைபெருகி
யெழுமமுதவுததிசெறிவாயா
சமரவிரணியவசுரனுடலமடுமுகிர்கொளரி
தருமருகனெனநிலவுதூயா
வமரர்முனிவரருரகர்நரர்ககனமதியிவர்க
ளடிபணியவரமுதவுநேயா
திமிரதினகரனெனவுளிருளிரியவொளிர்சரண
திரசமரபுரிவருமுபாயா.

(இ - ள்.) இமய கிரி உதவு பிடி குட முலையின் இடை பெருகி எழும் - இமமலைபெற்ற பெண்யானைபோன்ற உமையம்மையின்குடம்போன்ற தனத்திணிடத்து உவட்டெடுத்துப்பெருகியெழாநின்ற, அமுத உததி செறி வாயா - சிவஞானப்பாலாகிய கடல்செறிந்தவாயையுடையவனே, சமர இரணிய அசுரன் - போர்த்தொழிலையுடைய இரணியனது, உடலம் அடும் உகிர் கொள் அரி- உடலைப்பிளந்த நகம்வாய்ந்ததிருமால், தரும் மருகன் என நிலவு தூயா-தக்கமருகனென்றழைக்க விளங்குந் தூயவனே, அமரர் முனிவரர் உரகர் நரர் ககன மதி இவர்கள் - தேவர்களும் முனிவர்களும் நாகலோகத்தாரும் நரர்களும் விண்ணிலுலவும் சந்திரனுமுதலிய இவர்கள், அடி பணிய வரம் உதவு நேயா - தனதுதிருவடியைவணங்க அவர்கட்குவேண்டியாங்குவரந்தந்தருளும் கருணையையுடையவனே, திமிர தின கரன் என்ன - புறவிருளையோட்டுஞ் சூரியனைப்போல, உள் இருள் இரிய ஒளிர் சரண - அடியவர் அகவிருளோட விளங்குந் திருவடியையுடையவனே, திரம் சமரபுரி வரும் உபாயா - நிலையாகச்சமரபுரியிலெழுந்தருளிய உபாயனே.

அன்பர்தரத்திற்கேற்பத்தான் நின்றருள்புரிதலால் திரசமரபுரிவருமுபாயா என்றார். (௪)

வடவைவிழிபிறையெயிறுகுடவயிறுதடியுதடு
மலியலகைபசியையடுவேலா
வடியுநெடுமுடியுமரியயனுமறிவரியசிவ
னகமகிழமழலைமொழிபாலா
நடனமிடுமயுரமிசையடியர்நினைதொறுமவர்மு
னகைமுகமொடெதிர்கொள்குணசீலா
தடவரைகள்கிடுகிடெனவுலகைவலநொடியில்வரு
சமரபுரிதழையவுறைலீலா.

(இ - ள்.) வடவை விழி - வடவாமுகாக்கினிசிந்துங்கண்களும், பிறை எயிறு குட வயிறு தடி உதடு-இளஞ்சந்திரன்போன்றபற்களும் குடம்போன்றவயி

றும் தடித்தஉதடும்ஆகிய இவ்வுறுப்புகள், மலி அல்கை பசியை அடுவேலா - குறைவின்றிநிறைந்தபசாசின் பசியைப்போக்கிய வேலாயுதத்தையுடையவனே, அடியும் நெடு முடியும் - தனதுதிருவடியையும் நெடியமுடியையும், அரி அயனும் அறிவரிய-திருமாலாலும் பிரமனாலும் அறிதற்கரிய, சிவன் அகம் மகிழ மழலை மொழி பாலா - சிவபெருமான்மனமகிழ மழலைச்சொல்லைக் கூறும் பாலனே, நடனம் இடு மயூரமிசை - நடனஞ்செய்யுமயிலின்மேல், அடியர் நினைதொறும்-அடியார்கள் நினைக்குந்தோறும், அவர்முன் - அவர் முன்னமே நகைமுகமொடு எதிர்கொள் குணசீலா-புன்னகையோடு காட்சிதந்தருளும் குணசீலனே, தட வரைகள் கிடு கிடுஎன - பெரியமலைகள் கிடுகிடென்றதிர, உலகை வலம் நொடியில்வரு சமரபுரிதழைய உறை லீலா - உலகினைவலமாக ஒருநொடிக்குள்வந்த திருப்போரூர் தழைந்தேற எழுந்தருளிய திருவிளையாட்டையுடையவனே.

மாங்கனிவேண்டிச் சிவபெருமானை வலம்வந்தமையால் உலகை வலம் நொடியில்வரு என்றார். மயூரம் - மயுரம் குறுக்கல் விகாரம். (௫)

ககனமுகடளவிவருகனகரதநவவிளையர்
கருதுபுடைவரமகிழுநாதா
சகமுழுதுமடுமசுரர்குலமுழுதுமுடுகியடு
சமரகணமுடிகடொடுபாதா
செககணகசெககணகதிகுதகுகுதிகுதகுகு
திமிதியெனநடனமயினீதா
தகுகடவுளிபமயில்கொளொருபதிருபுயமருவு
சமரபுரிதனிலுறுசவ்வாதா.

(இ - ள்.) ககனம் முகடு அளவி வரு கனக ரதநவ இளையர் - விண்ணின் முகட்டை யளாவிவாராநின்றபொன்னாலமைந்ததேரையுடைய வீரவாகுமுதலியநவவீரர்கள், கருது புடைவர மகிழும்நாதா - கருதியதனதிருபாலும் வரமகிழ்கூரும்நாதனே, சகம் முழுதும் அடும் அசுரர் குலம் முழுதும் - உலகமுழுமையுங்கொல்லுமசுரர்குலமுற்றும், முடுகி அடு சமர கணமுடிகள் தொடு பாதா - விரைந்துகொல்லும்போர்த்தொழிலையுடைய சிவகணங்களின்தலையிற்றோய்ந்தபாதத்தையுடையவனே, செக கணக செக கணக திகு தகுகு திகுதகுகு திமிதிஎன்ன-, நடன மயில் நீதா - நடனஞ்செய்யு மயிலின்மேலெழுந்தருளிவரும் நீதியையுடையவனே, தகு கடவுள் இபம் - தக்கதெய்வயானைநாய்ச்சியார், மயல்கொள் ஒருபதிருபுயம் - மயக்கங்கொள்ளும் பன்னிருதிருப்புயத்தையுடைய, சமர புரிதனில் உறுசவ்வாதா - சமரபுரியிலெழுந்தருளிய நறுமணங்கமழும் மிருகமதத்தையுடையவனே. (௬)

உததிசுவறிடவிடர்செய்குவடுபொடிபடவசுர
　　ருடல்கள்கிழிபடவயில்கொள்கரனே
குதிகொள்கருணையினிலகுவதனமுடனடியரெதிர்
　　குலவிவருமினியகுணதரனே
யதிகம்ருகமதபடிரகளபபரிமளதொடைக
　　ளணிகளிவைதிகழ்புனிதவுரனே
புதியபரிபுரவொலிகள்கலகலெனவருசரண
　　புகழ்சமரபுரிமருவுபரனே.

(இ - ள்.) உததி சுவறிட - கடல்சுவறவும், இடர் செய் குவடு பொடிபட - துன்பஞ்செய்யும் கிரௌஞ்சகிரிதுகள்படவும், அசுரர் உடல்கள் கிழிபட - அசுரர்சரீரங்கள் கிழிபடவும், அயில் கொள் கரனே - வேலேந்தியதிருக்கரத்தையுடையவனே, குதி கொள் கருணையின் இலகு வதனம் உடன் - மேம்பட்ட கருணையோடுவிளங்கும் ஆறுதிருமுகங்களுடனே, அடியர் எதிர் குலவி வரும் இனியகுணதரனே - அடியவரெதிரே குலாவிவருமினியகுணத்தையுடையவனே, அதிக மிருகமத படிரகளபம் - வாசமிக்கமிருகமதத்தோடு சந்தனக்குழம்புகலந்த கலவையும், பரிமள தொடைகள் அணிகள் இவை - வாசமிக்கமாலைகளும் ஆபரணங்களுமாகிய இவைகள் - திகழ் புனிதஉரனே - விளங்கும் மாசில்லாத திருமார்பையுடையவனே, புதியபரிபுர ஒலிகள் கலகல எனவருசரண - புதியசிலம்பினொலிகள் கலகலென ஒலித்துவரும் திருவடியையுடையவனே, புகழ் சமரபுரி மருவுபரனே - யாவராலும்புகழுந் திருப்போரூரிலெழுந்தருளிய பரமனே. (எ)

மலயநிலவியமுனிவனிடருததியகலவவன்
　　மனநினைவுகொடுதழுவுகலனே
கலைகடெரிபலகையுறைபுலவனுறுசிறையைவிடு
　　கதிர்கொளயிலுடையதெய்வகுலனே
நிலைமைநெறியுளதெரிவைமுருகவெனவுரைதருமு
　　னிலவியவள்கரமுதவவலனே
தலைமைசெறிபிரமசுகமனுதினமும்விளையுமொரு
　　சமரபுரிமருவுகதிநிலனே.

(இ - ள்.) மலயம் நிலவிய முனிவன் இடர் உததி அகல - பொதியமலையில் வசிக்கும் அகத்தியன் துன்பக்கடலினின் றகல, அவன் மனநினைவுகொடு தழுவு கலனே - அவன்தனதுமனத் தியானத்தாற்றழுவியேறிய மரக்கலமாயுள்ளவனே, கலைகள் தெரி பலகை உறைபுலவன்உறுசிறையை விடு கதிர்கொள் அயில் உடைய தெய்வகுலனே - பலநூல்களையுமாராயும் சங்கப்பலகையில்வசிக்கும் நக்கீரர் பூதத்தாற்சிக்குண்ட சிறையினின்றும் விடுவித்த கிரணம்வாய்ந்த வே

லேந்திய திருவுருவையுடையவனே, நெறிநிலைமை உள்ள தெரிவை-நல்லநெறி
யினிலைமையையுடைய ஓர்பெண், முருக என உரைதருமுன்-முருகாவென்று
சொல்லுதற்குமுன்னமே, நிலவி அவள்கரம் உதவ வல்லவனே - காட்சிதந்து
அவள்கையைத்தரவல்லவனே, தலைமைசெறி பிரமசுகம் அனுதினமும் விளையும்
மேன்மைமிக்க பிரமானந்தசுகம் எந்நாளும்விளையும், ஒரு சமரபுரி மருவு கதிநி
லனே - ஒப்பில்லாதசமரபுரியிலெழுந்தருளிய மோட்சவைப்பே. (௮)

கனலிலடுமகளையொருபதிகமதில்வரவருள்செய்
 கவுணியர்கள்குலதிலகநிதியே
பனகவணையனுமயனுமகிழமரகதவொளிசெய்
 பருமயிலின்மிசையுதயமதியே
தினகரனைநிகருமொருசிவசமயநெறியொழுகு
 திகழடியர்பரவியடைகதியே
தனபதிதனளகையெனவளமைசெறிசமரபுரி
 தனிலுறையுமமராதிபதியே.

(இ - ள்.) கனலில் அடு மகளை ஒரு பதிகமதில் வர அருள் செய் (திருமயிலையில்) நெருப்பிற்சாம்பலாகிய ஒருவணிகமாதை ஒரு திருப்பதிகத்தில்வர அருள் செய்யும், கவுணியர்கள் குல திலக நிதியே-கவுணியர்குலத்திற்கு ஓர்திலகமாயுள்ளபொன்னே, பனக அணையனும் அயனும் மகிழ - சர்ப்பசயனத்தையுடையதிருமாலும் பிரமனும் மகிழ்கூர, மரகத ஒளிசெய் பருமயிலின்மிசை உதயமதியே - மரகதம்போலும்பசிய ஒளிசெய்யும் பருத்தமயிலின்மேல் காட்சிதரும்சந்திரன்போலும் தண்ணளியையுடையவனே, தினகரனை நிகரும் ஒருசிவசமயநெறி ஒழுகும் - சூரியனையொத்த ஒருசிவசமயநெறியிற் செல்லும், திகழ் அடியர் பரவி அடைகதியே - விளங்குமடியவர்துதித்தடையும்மோட்சமே, தனபதிதன் அளகை என வளமை செறி சமரபுரிதனில் உறையும் அமரர் அதி பதியே - குபேரனது அளகையைப்போல வளஞ்செறிந்த திருப்போரூரிலெழுந்தருளிய தேவர்களுக்கதிபதியே. (௯)

பசிதமரனயனமணியிகழுமதிமடமைசெறி
 பலசமணதிமிரமடுசூரியா
நிசிசரர்களெனுமுததியளறுபடவொருநொடியி
 னிகழ்கரியபுருவநெறிவீரியா
வுசிததமிழ்முழுதுமொருமதுரைநகரவர்புகழ
 வுரைசெய்தளவிடுமதிககூரியா
சசிதரனுமுமையுமுளமகிழவெதிருளநிலவு
 சமரபுரியதனிலுறைசீரியா.

(இ - ள்.) பசிதம் அரன் நயன மணி - விபூதியும் உருத்திராக்கமுமாகியஇவற்றை, இகழும் மதி மடமை செறி பல சமண திமிரம் அடு சூரியா-இகழு

ம் அறிவீனமிக்க அளவிறந்தசமணரென்னுமிருட்டையோட்டுஞ்சூரியனே, நிசிசரர்கள் என்னும் உததி அளறுபட - அசுரர்களென்னும் கடல்சேறுபட, ஒரு நொடியில் நிகழ் கரிய புருவ நெறிவீரியா - ஒருநொடியில் நிகழும் கரியபுருவத்தைநெறித்தவனே, உசித தமிழ் முழுதும் - சிறப்புவாய்ந்த சங்கத்தமிழ்முற்றும், ஒரு மதுரை நகர் அவர்புகழ - ஒப்பில்லாதமதுரைநகரிலுள்ள அப்புலவர்கள்புகழ, உரைசெய்து அளவிடும் அதிக கூரியா - குறிப்பாற்கூறிக் குணங்குற்றங்களையளவறுத்த அதிககூரியபுத்தியையுடையவனே, சசிதரனும் உமையும் உள்ளம் மகிழ - சிவபிரானும் உமையம்மையும்மனமகிழ, எதிர் உறநிலவு - அவர்களுக்கெதிரேபொருந்தவிளங்கியுலவும், சமரபுரி அதனில் உறைசீரியா - திருப்போரூரிலெழுந்தருளிய சிறப்புடையவனே.

திருநீறுக்குப் பசிதமெனப் பெயர்வந்தது சிவத்துவத்தைவிளக்குங் காரணத்தாலெனவறிக. சங்கப்புலவர்களுக்கு வந்தபிணக்கினை ஒழித்தவரலாற்றினை முன்னர்க்கூறினும். (௧0)

பேரியகட்டியம் முற்றிற்று.

உ

## சின்னகட்டியம்.

கட்டியம் - அரசன் திருவோலக்கத்தில் வீற்றிருக்கும்போது அவ்வரசன் புகழை அவையிலுள்ள முதியோர்கேட்டு மகிழ்கூரக் கட்டியக்காரன் புகழ்ந்து கூறுங்கூற்று. இது முன்வந்ததற்கும் பின்வருவனவற்றிற்கும் பொருளாகக் கொள்க. சின்னகட்டியமென்றது செய்யுளளவைநோக்கி.

இதுவும் வெண்செந்துறை.

சுரர்முனிவருலகர்பணிபாதா - சுகசொருபநிசகலைவிநோதா
பரவறிவையறியவருள்போதா - பரவதிகசமரபுரிநாதா.

(இ - ள்.) சுரர் முனிவர் உலகர்-பணி பாதா - தேவர்களும்முனிவர்களும் உலகினர்களும் வணங்குந்திருவடியையுடையவனே, சுக சொருப நிசகலை விநோதா - பேரின்பவடிவாகிய மெய்ஞ்ஞானநூல்பொழுதுபோக்குந் திருவிளையாட்டாயுள்ளவனே, பரம அறிவை அறிய அருள் போதா - சிவவுணர்ச்சியை அடியவர்களுணர்ந்துய்யவருளும் ஞானனுக்கிரகமுடையவனே, பரவு அதிக சமரபுரி நாதா - தேவர்முதலியோர்வணங்கும் புகழில்மேம்பட்ட திருப்போரூரிலெழுந்தருளிய இறையவனே.

பேரின்பமே திருவுருவாகவமைந்தவனாதலால் இவனது வைபவமே மெய்ஞ்ஞானநூலுக்கு ஓர் விளையாட்டாக அமையுமென்பார் நிசகலைவிநோதா என்றார். (௧)

குறவர்மகடழுவுமணிமார்பா - குலவுபரிபூரணசொரூபா
நறவுபரிமளநிறையுநீபா - நயசமரபுரிமருவுபூபா.

(இ - ள்.) குறவர் மகள் தழுவும் அணி மார்பா - வள்ளிநாய்ச்சியார்தழுவும் அழகிய திருமார்பையுடையவனே, குலவு பரிபூரண சொரூபா - எங்கும் விரவிய பரிபூரணசொரூபத்தையுடையவனே, நறவு பரிமளம் நிறையும்நீபா - தேனும் நறுமணமும்நிறைந்த கடப்பமலர்மாலையையுடையவனே, நய சமரபுரி மருவுபூபா - நன்மைவாய்ந்த திருப்போரூரிலெழுந்தருளிய இறைவனே. சர்வஞ்ஞத்துவமுடையோனென்பார் குலவுபரிபூரணசொரூபா என்றார். (௨)

நெட்டூரசூரசங்காரா - நித்தமிடுபச்சைமாயூரா
விட்டொளிரும்வச்சிரகேயூரா - வித்தகர்துதித்தபோரூரா.

(இ - ள்.) நெட்டூர சூரசங்காரா - யாவருங்குறைகூறவிளைக்கும் சூரப்ன்மனைச் சங்கரித்தவனே, நித்தம் இடு பச்சை மாயூரா - நடனமிடும் பசிய மயிலூர்தியையுடையவனே, விட்டு ஒளிரும் வச்சிரகேயூரா - இடைவிட்டுவிளங்கும்வயிரமிழைத்த வாகுவலயத்தையுடையவனே, வித்தகர் துதித்த போரூரா - சதுரப்பாடுடைய அடியவர்வணங்குந் திருப்போரூரிலெழுந்தருளிய இறையவனே. (௩)

குஞ்சரமுகற்கிளையகோவே - கொஞ்சியுமைமுத்தமிடுபூவே
தஞ்செனநினைக்குமவர்தேவே - தண்சமரநற்பதியில்வாழ்வே.

(இ - ள்.) குஞ்சரமுகற்கு இளைய கோவே - யானைமுகத்தையுடைய விநாயகக்கடவுளுக்கிளைய இறையவனே, உமை கொஞ்சி முத்தம் இடும்பூவே - உமையம்மைகொஞ்சிமுத்தமிடும்பொலிவே, தஞ்சம் என்ன நினைக்கும் அவர் தேவே - பற்றுக்கோடெனச்சரண்புகும் அடியவர்தெய்வமே, தண்சமரநற்பதியில்வாழ்வே - தண்ணியநல்ல திருப்போரூரில்வாழ்பவனே.

ஏனைத்திருப்பதிகளில் அடியவர்பொருட்டு ஒருகால் நீங்கியருளுதல்போல இத்திருப்பதியில் ஒருபோதும் நீங்கியருளானென்பது தோன்றத்தண் சமரநற்பதியில் வாழ்வே என்றார். (௪)

ஆறுமதிசூடியருள்பாலா - வாறவருளாறுமுகவேலா
தேறுகலைபேசுகுணசீலா - சீர்சமரமாநகரிலீலா.

(இ - ள்.) ஆறு மதி சூடி அருள் பாலா - கங்கையையும் இளஞ்சந்திரனையும் அணிந்த இறைவனருளியபாலனே, ஆற அருள் ஆறுமுக வேலா - அடியவர்துன்பநீங்கவருளும் ஆறுதிருமுகங்களையுடையவேலவனே, தேறு கலை பேசு குணசீலா - அடியவர்தெளிதற்கெல்லையாகிய நூல்கள்விதந்துகூறுங்குணசீலனே, சீர் சமரமாநகரிலீலா - சிறந்த திருப்போரூரில் எழுந்தருளிய திருவிளையாட்டையுடையவனே.

சீர் - பெயரடியாகப்பிறந்த வினைத்தொகை நிலைத்தொடரார்தலால் வருமொழி முதல் வல்லெழுத்தியல்பாகவந்தது. (ரு)

தேவர்கண்மனோபயங்கரனே - சேவலங்கொடியாடுகரனே
மேவுகுங்குமவாசவுரனே - வீறுசெம்போரிவாழ்பரனே.

(இ - ள்.) தேவர்கள் மனோ பயங்கரனே - தேவர்கள்மனத்திற் பயங்குடியேறச்செய்தவனே, சேவலம் கொடி ஆடு கரனே - சேவற்கொடியாடுந் திருக்கரத்தையுடையவனே, குங்கும வாசம் மேவும் உரனே - குங்குமப்பூவாசனையமைந்த திருமார்பையுடையவனே, வீறு செம் போரிவாழ் பரனே - நடுநிலைமைநிகரின்றி வீற்றிருக்குந் திருப்போரூரிலெழுந்தருளிய பரமனே.

இளமைப்பருவத்தில் மேருமலையில் தம்மையுணராது போர்புரிந்த இந்திரன்முதலிய தேவர்களுக்கு நடுக்கமுறுத்தினமையால் தேவர்கள் மனோபயங்கரனே என்றார். இதனை முன்னர்க்காண்க. (சு)

தெய்வசிந்துரமருவுதோளா - திவ்யமங்களநிலவுதாளா
பொய்வருந்தேவர்மணவாளா - புண்ணியபோரூர்வருகண்ணாளா.

(இ - ள்.) தெய்வ சிந்துரம் மருவு தோளா - தெய்வயானைநாய்ச்சியார் சலவும் திருத்தோளையுடையவனே, திவ்விய மங்களம் நிலவு தாளா - தெய்வசோபனம்விளங்குந் திருவடியையுடையவனே, பொய் வரும் தேவர் மணவாளா - கற்பத்திலழியும் தேவர்கள்தலைவனே, புண்ணிய போரூர் வரு கண்ணாளா - சிவபுண்ணியம்நிறைந்த திருப்போரூரிலெழுந்தருளுந் திருநோக்குடையவனே.

தேவர்கள் விண்ணுலகிற் குடியேறச்செய்தமையால் அவர்கள்பாடுஞ் சோபனமேயென்றும் நிலவுந்திருவடியுடையானென்பது தோன்றத் திவ்யமங்கள நிலவுதாளா எனவும், பிரமன்முதலியோர் கற்பத்திலழியும்மாலையரென்பது தோன்றப் பொய்வருந்தேவரெனவும், அவர்களுக்குளழியா நிலையை யுடையோனென்பது தோன்ற மணவாளா எனவும், சிவபுண்ணியமே என்றும் திருப்போரூரில்வசித்தலால் அங்குவசித்தற்குத் திருவுளமுடையோனென்பது தோன்றப் போரூர் வருகண்ணாளா எனவுங் கூறினார். (எ)

பலகலைப்பரவையந்துறைவா - பரமனுக்குபதேசவிறைவா
தலைமையிற்குறையாதநிறைவா - சமரநற்பதிமேவுபொறைவா.

(இ - ள்.) பலகலை பரவை அம் துறைவா - பலவகைப்பட்ட நூற்கடற்பரப்பிற்கு ஓர் துறையாயுள்ளவனே, பரமனுக்கு உபதேச இறைவா - சிவபெருமானுக்குபதேசித்தருளிய விறையவனே, தலைமையிற் குறையாதநிறைவா - எப்பொருளுக்குந் தலைமையாயிருத்தலினின்றுங் குறையாத பரிபூரணனே, சமரநற்பதிமேவு பொறைவா - வளமமைந்த சமரபுரியிலெழுந்தருளிய சாந்தகுணசீலனே.

மெய்ப்பொருளுணர நூற்பரப்பிலழுந்தினவர்க்குத் தான் அம்மெய்ப்பொருளாய்த் தோன்றுதலால் பலகலைப்பரவையந்துறைவா எனவும், என்றுமொருதன்மைத்தாயிருத்தலால் தலைமையிற் குறையாத நிறைவா எனவுங் கூறினர். (அ)

அசுரர்குலகாலவேனேயா - வமரர்சேனுபதித்தூயா
வுசிததமிழறிதருமுபாயா - வுயர்சமரபுரிவருசகாயா.

(இ - ள்.) அசுரர் குலகால வேல் நேயா - அசுரர்குலத்திற்கோர் காலனை யொத்த வேலையேந்தியநேயனே, அமரர் சேனுபதி தூயா - தேவசேனுபதியாகிய மாசில்லாதவனே, உசிததமிழ் அறிதரும் உபாயா - நன்மைவாய்ந்ததமிழ்நூலொருங்குணர்ந்த உபாயனே, உயர் சமரபுரி வரு சகாயா - வளத்தாலுயர்ந்த சமரபுரியிலெழுந்தருளிய அடியவர்சகாயனே. (கூ)

மலயத்தின்முனிவனரியனே - மலமட்டஞானசூரியனே
தலமெச்சமேவுசீரியனே - சமரப்புராதிவீரியனே.

(இ - ள்.) மலயத்தின் முனிவன் ஆரியனே - பொதியமலையில்வசிக்கும் அகத்தியமுனிவனுக்கோர்குருராயனே, மலம் அட்ட ஞானசூரியனே - அடியவர்மும்மலங்களையும்போக்கிய ஞானசூரியனே, தலம் மெச்ச மேவு சீரியனே-மூவுலகங்களும்புகழத் திருப்போரூரிலெழுந்தருளிய சிறப்பையுடையவனே, சமரபுர அதிவீரியனே - திருப்போரூரிலெழுந்தருளிய வீரமிகுதியையுடையவனே.

சமரபுரம் இரண்டும் வடசொல்லாதலால் இயல்பாகாது வல்லெழுத்துமிகுதல் பொதுவிதியாலென்க. (கஂ0)

சின்னகட்டியம் முற்றிற்று.

உ

## பெரியகட்டியம்.

### எழுசீர்க்கழிநெடில்விருத்தம்.

மழையினிலகியகருணைபொழியுமழகளிறதிக
மடியின்மிசைநிலவுகுலமணியே
யுழையுமடலுறுமழுவுமிருகரனுமருவுசிவ
னுவகைகொடுதழுவுதெய்வவணியே
கழைகள்குழுமியவனயிலெயினர்தருமுழைமனது
களிபெருகநிழலுதவுகணியே
தழையுமிருநிதியுதவுசமரபுரியதனில்வரு
தகைமைசெறியடியர்குணகுணியே.

(இ - ள்) மழையின் இலகிய கருணை பொழியும் - மேகம்போலவிளங்கிய திருவருள்மழையைச்சொரியும், மழகளிறு - இளமைவாய்ந்தயானைமுகக் கடவுளது, அதிக மடியின் மிசை நிலவு குலமணியே - மேம்பட்ட திருமடியின்மேல் விளங்கும்மாணிக்கமே, உழையும் அடல் உறும் மழுவும் - மானும் கொலைவாய்ந்தபரசும், இருகரனும் மருவு சிவன் உவகை கொடு தழுவு தெய்வ அணியே - இரண்டுதிருக்கரங்களிலுமேந்திய சிவபிரான்மகிழ்கூர்ந்து தழுவும் தெய்வத்தன்மைவாய்ந்த ஆபரணமே, கழைகள் குழுமிய வரையில் - மூங்கில்கள்நெருங்கிய மலைகளில்வசிக்கும், எயினர் தரும் உழை மனது களி பெருக - குறவர்பெற்றமான்போன்ற வள்ளிநாய்ச்சியாரதுமனத்தில் களிப்புமிக, நிழல் உதவு கணியே - நிழல்தந்துநின்ற ஓர்வேங்கைமரமே, தழையும் இருநிதி உதவு - தன்னைவந்தடைந்தோர்க்குக் கொடுத்தலிற் குன்றாத சங்கநிதி பதுமநிதிகளைத்தந்தருளும், சமரபுரியில் வரு தகைமை செறி அடியவர் குணகுணியே - திருப்போரூரிலெழுந்தருளிய பொலிவுமிக்க அடியவர்குணத்திற்கோர் குணமுடைப்பொருளாயுள்ளவனே.

முருகக்கடவுள் வள்ளிநாய்ச்சியார்மேல் விருப்பங்கொண்டு அவர்காக்குந் தினைப்புனஞ்சென்று கண்டு மகிழ்கூர்ந்து இன்சொற்கூறி நின்றருளுங்காலையில், வேடர்களோடு வேட்டைமேல்வந்த அவ்வனசரத்தலைவன் அந்நாய்ச்சியார்காக்குந் தினைப்புனம் வந்தடையுங்கால், குமாரக்கடவுள் வேங்கைமரமாய் நின்றருளினரென்பது புராணவரலாறுதலால் நிழலுதவுகணியே எனவும், மெய்யடியார் சிவஞானவுணர்ச்சிதானாய் நிற்றலால் அடியர் குணகுணியே எனவும் கூறினர். (க)

அரியமறைமுடியிலுறைபரமசிவையகமகிழ
வருகில்வருதருணவளவுருவே
யிரவுபகலனுதினமுயர்தயவினினையுமவ
ரிதயமலரதனிலுறுமருவே
யுருவெனவுமருவெனவுமொளியெனவும்வெளியெனவு
முனலரியபொருளுதவுகுருவே
தரணியெனவிருளகலவறிவுதருசமரபுரி
தனிலுறையுமமரர்பணிதருவே.

(இ - ள்.) அரிய மறைமுடியில் உறைபரமசிவை அகம் மகிழ - அளவிடுதற்கரிய வேதசிரசிலெழுந்தருளிய பராசத்தி திருவுளம்களிகூர, அருகில் வரு தருண வளஉருவே - பக்கலிலுலவிவரும்பாலதிருவுருவுடையவனே, இரவு பகல் அனுதினமும் உயர் தயவின் நினையுமவர் - இரவினும்பகலினுமெக்காலத்தும் மேம்பட்ட நினதுகருணையைப்பெறவேண்டிச்சிந்திக்குமடியவரது, இதயமலர் அதனில் உறும் மருவே - இதயதாமரைமலரில் அமைந்தமணமே,

உரு எனவும் அரு எனவும் ஒளி எனவும் வெளி எனவும் - உருவென்றும் அருவென்றும் ஒளியென்றும் வெளியென்றும், உன்னல் அரிய பொருள் உதவு குருவே - சிந்தித்தற்கரியதன்னை அடியவருக்கருளும் திருவுருவே, தரணி என இருள் அகல அறிவு தரும் - சூரியன் புறவிருளைநீக்குதல்போல ஆணவமலவிருளோட அடியவர்க்குச் சிவஞானந்தந்தருளும், சமரபுரிதனில் உறையும் அமரர் பணி தருவே-திருப்போரூரிலெழுந்தருளிய தேவர்கள்வணங்குங் கற்பகதருவே.

அது பகுதிப்பொருள்விகுதி. (உ)

அதிமதுரநறவுபரிமளமழகுநிறையுமறு
பதமுரலுமினியதொடைநீபா
பொதியமலையுறையுமொருகுறுமுனிவனிதயகுகை
புதையுமிருளறவொளிசெய்தீபா
துதையும்ருகமதபடிரகளபபுளகிதவருண
துதிசெயழகொழுகுமணிமார்பா
ததிதிதிமிதிமிதியெனநடனமயின்முதுகில்வரு
சமரபுரிதழையவுறைபூபா.

(இ - ள்.) அதி மதுரம் நறவு - மிக்கமதுரத்தையுடையதேனும், பரிமளம் அழகு நிறையும் - நறுமணமும் பொலிவும் நிறைதற்கெல்லையாகிய, அறுபதம் முரலும் இனிய தொடை நீபா - வண்டுகளொலிக்கும் இனியகடப்பமாலையையுடையவனே, பொதியமலை உறையும் - பொதியமலையில்வசிக்கும், ஒரு குறுமுனிவன் இதயகுகைபுதையும் - ஒப்பில்லாத உருவிற்சிறிய பெருந்தவமுனிவரது இதயகுகையிற்பொதிந்த, இருள் அற ஒளிசெய் தீபா - மயக்கவிருளறவொளிசெய்யும் ஞானதீபமாயுள்ளவனே, துதையும் மிருகமத படிரகளப புளகித அருண - நெருங்கியமிருகமதமும் சந்தனமுங்கலந்தகூட்டுவர்க்கம் அரும்பியசெவந்தநிறமுடையவனே, துதிசெய் அழகு ஒழுகும் அணி மார்பா - அடியவர்துதிக்கும்பொலிவுவாய்ந்ததிருமார்பையுடையவனே, ததிதிதிமிதிமிதி என்ன, - நடன மயில் முதுகில் வரு சமரபுரி தழைய உறை பூபா - நடனஞ்செய்யும்மயிலின்முதுகில் எழுந்தருளாநின்ற திருப்போரூரிலெழுந்தருளிய இறைவனே.

கிரவுஞ்சகிரிவழித்தாய்ச்செல்லும் அகத்தியமுனிவருக்கு மயக்கம்விளைத்த அவ்வசுரன் விளைத்தமயக்கிது என்பது புலப்படச்செய்ததால் இதயகுகைபுதையும் இருளறவொளிசெய்தீபா என்றார். (ங)

பரிதிமரகதமலையின்மிசையுதயமெனநடன
பரதமயில்கடவுமிருதாளா
கருதரியதவளகரமலையுதவுமொருவனிதை
கனகமகிழ்மருவுமணவாளா

செருவிலசுரரைமுடுகியடுகனகவடவரைக
டிகழ்வதெனநிகழ்பனிருதோளா
பெருகுவளமைகளுதவுசமரபுரிபணியுமவர்
பிரமரசவுணவுதவுகோளா.

(இ - ள்.) பரிதி மரகத மலையின் மிசை உதயம் என்ன பரதநடனம் மயில் கடவும் இரு தாளா - சூரியன் மரகதமலையின்மேல்உதயஞ்செய்தாற்போலப் பரதநூலின்படிநடனஞ்செய்யும் மயூரத்தைநடத்தும் இரண்டுதிருவடியையுடையவனே, கருதரிய தவ்ள கரமலை உதவு ஒருவனிதை-நினைத்தற்கரியஒரு வெள்ளையானைபெற்ற ஒப்பில்லாததெய்வயானைநாய்ச்சியார், கன மகிழ்வு மருவு மணவாளா - மிக்கமகிழ்ச்சிகூரும்தலைவனே, செருவில் அசுரரை முடுகி அடு - போர்க்களத்தில் அசுரரைவிரைந்துகொல்லும், கனக வடவரைகள் திகழ் வது என்ன நிகழ் பன்னிரு தோளா - மேருமலைகள்விளங்குவதுபோல விளங்கும் பன்னிரண்டு திருப்புயங்களையுடையவனே, பெருகு வளமைகள் உதவு சமரபுரி பணியுமவர் - மிக்கவளப்பங்களை உயிர்களுக்கூட்டும் திருப்போரூரைவணங்குவோர்க்கு, பிரமரச உணவு உதவு கோளா - சிவஞானமாகிய உணவையூட்டுங் கொள்கையையுடையவனே.

கான்படுதிரவியமும், கடல்படுதிரவியமும், நாடுபடுதிரவியமும்,நகர்படுதிரவியமும், மலைப்படுதிரவியமு மமைந்திருத்தலால் பெருகுவளமைகளுதவு சமரபுரி என்றார். கான்படுதிரவியம் "அரக்கிறலின்றேன் அணிமயிற்பீலி - நாவிகான்படுதிரவியமைந்தே" கடல்படுதிரவியம், - "பவளமுத்துச்சங்கொக்கோரலை - உப்புக்கடல்படுதிரவியமைந்தே." நாடுபடுதிரவியம் - "செந்நெல் செவ்விளநீர்சிறுபயறு - கன்னற்கதலியெனப்பெயர்பெற்ற - ஐந்தும் நன்னாட்டமைந்த திரவியம்". நகர்படுதிரவியம் "கண்ணாடிபித்தன்கருங்குரங்குகாட்டானை - மண்ணாளும்வேந்தனோடைந்து திரவியம்," மலைபடுதிரவியம் "அகில் கதிகோட்டமொடுதக்கோலம் - குங்குமமைந்தும் மலைபடுதிரவியம்." எனவருஞ் சூத்திரங்களால் காண்படு திரவியமுதலியவற்றை யுணர்க.

போரில் அசுரரை விரைந்துகொல்லும் மேருமலைகளுளவாஞல் அவற்றையொக்கும் பன்னிருதிருப்புயங்களென்றமையால்இல்பொருளுவமையணி.(௪)

திடகரடமலைபிளிறநொடியிலடுகரகமல
திரிநயனவரனுதவுமுருவே
வடகலைகண்முழுதுமளவிமெதிகபிரமனறி
வரியபிரணவமுரைசெய்குருவே
யிடருதவுபவவுததிசுவறநினைதருமடிய
ரிதயமெழுமினியசுகமருவே
படிககனருரகர்முனிவரர்மருவுசமரபுரி
பணியுமவரெணியதருதருவே.

(இ - ள்.) திடகரட மலை பிளிற நொடியில் அடு கர கமல - வலியமதச் சுவட்டையுடைய தாரகாசுரன்கதற ஓர்நொடிப்பொழுதிற்கொல்லும் தாமரையையொத்ததிருக்கரங்களையுடையவனே, திரிநயன அரன் உதவும் உருவே - திரிநேத்திரங்களையுடைய சிவபெருமான்பெற்ற திருவுருவமே, வட கலைகள் முழுதும் அளவிடும் - வேதமுதலிய வடநூல்முற்றையும் எல்லையறுத்த, அதிக பிரமன் அறிவரிய பிரணவம் உரைசெய் குருவே - மேம்பட்ட பிரமனறிதற்கரிய பிரணவத்தினுட்கிடையைச் சிவபிரானுக்கருளிய குருராயனே, இடர் உதவு பவஉததி சுவற - துன்பந்தருஞ் சனனக்கடல்சுவற, நினைதரும் அடியர் மனம் இதயம் எழும் இனியசுகமருவே - சிந்திக்கும் அடியவரிதயதாமரையில் கமழும் பேரின்பமணமே, படி ககனர் உரகர் முனிவரர் பரவு - பூஉலகிலுள்ளவர்களும் விண்ணுலகிலுள்ளவர்களும் நாகலோகத்திலுள்ளவர்களும் முனிவர்களும் வணங்கும், சமரபுரிபணியுமவர் எண்ணிய தரு தருவே - திருப்போரூரைவணங்குவோர் எண்ணியவெண்ணியாங்கு அருளும் கற்பகதருவே. (ரு)

கவலைபிணிமிடியிடர்களறவடியர்நிலைமைபெறு
கதியினிகழ்வுறவருள்செய்கோனே
யுவரியெனவொலிமலியுமசுரரெனுமதகரிக
ளுருளவயிலெறியுமரிமானே
நவமருவுமுனிவர்சுரருரகரெனுமினியபயிர்
நலன்மருவவருள்பொழிமெய்வானே
குவலயமெணுறுசமரபுரியிலுறைதவமுனிவர்
குளிரிதயகமலமுறுதேனே.

(இ - ள்.) அடியர் கவலை பிணி மிடி இடர்கள் அற - அடியவரது கவலையும் நோயும் வறுமையும் துன்பமும் நீங்கவும், நிலைமை பெறு கதியில் நிகழ்உற - நிலைமைபெற்றமுத்தியில் அவர்கள்செல்லவும், அருள்செய் கோனே - கருணைசெய்யுமிறைவனே, உவரி என்ன ஒலி மலியும் - கடல்போல ஒலிநிரம்பிய, அசுரர் என்னும் மதகரிகள் உருள - அசுரரென்னும் மதயானைகள் நிலத்திற்சாய்ந்துருள, அயில் எறியும் அரிமானே - வேலையெறிந்தசிங்கமே, நவம் மருவு முனிவர் சுரர் உரகர் என்னும் இனிய பயிர் - புதுமையமைந்த முனிவர்களுந் தேவர்களும் நாகலோகத்தினரும் என்னும் இனியபைங்கூழ்கள், நலன்மருவ - தழைய, அருள் பொழி மெய் வானே - கருணையாகியமழையைப்பொழியும் நிலைபெற்ற மேகமே, குவலயம் எணுறு - நிலவுலகுகருதும், சமரபுரியில் உறை தவமுனிவர் - திருப்போரூரில்வசிக்கும் தவமுனிவர்களது, குளிர் இதய கமலம் உறு தேனே - தண்ணிய இதயதாமரையிற் பொருந்திய தேனே, (சு)

மலையருவிதருமரவின்மணியயனலெனவெருவு
வனசரர்கடருமரிவைமோகா

தலைமைமகபதியமரர்பரவவிரணியவுலகு
தழையவிபமிசைவருவைபோகா
விலையினவமணிகள்கதிரொளியின்வெயில்விடுகடக
மிளிருமொருபனிருதிருவாகா
கலைமுழுதுமறிபெரியவறிஞர்வளமையினர்செறி
கனசமரபுரிநாகரீகா.

(இ - ள்.) மலை அருவி தரும் அரவின் மணியை அனல் என வெருவும்- மலையினின்றிழியும் அருவிகள்கொழித்த பாம்புதருமாணிக்கங்களை நெருப்பென்றஞ்சும், வனசரர்கள் தரும் அரிவை மோகா - குறவர்கள்பெற்ற வள்ளிநாய்ச்சியாரது மோகத்திற்குரியவனே, தலைமை மகபதி அமரர் பரவ — மேன்மைபெற்ற இந்திரனும் தேவர்களும் வணங்கவும், இரணிய உலகு தழைய - பொன்னுலகுதழைக்கவும், இபமிசை வரு வைபோகா - வெள்ளையானையின் மேல் பவனிவரும் பெருஞ்செல்வத்தையுடையவனே, விலையில் நவமணிகள் கதிர் ஒளியின் வெயில்விடு - விலைவரம்பில்லாத முத்துமுதலிய நவமணிகள் சூரியனைப்போல ஒளிவீசும், கடகம் மிளிரும் ஒரு பன்னிரு திருவாகா-கடகம்விளங்கும் பன்னிரண்டுதிருப்புயங்களையுடையவனே, கலைமுழுதும் அறி பெரிய அறிஞர் வளமையினர் செறி - நூல்முற்றுமறிந்த பேரறிவுவாய்ந்த கல்விச் செல்வமுடையவரும் பொருட்செல்வமுடையவரும் நெருங்கிய, கன சமர புரி நாகரீகா - மேன்மைவாய்ந்த திருப்போரூரிலெழுந்தருளிய நாகரீகத்தையுடையவனே. (எ)

அகமுநடுமுடிவுமுறுதிசையுமெழுபுவியுநிறை
யறிவிலெழுபரமசுகநறையே
தகுதிகுகுதகுதிகுகுதகுதிதரிகிடதிமிதி
தகுதியெனநடனமயிலிறையே
பகர்கலைகண்முழுதுமளவிடவரியமிகநுணிய
படிறுளமுநுழைவரியமறையே
துகளகலுமறைமுனிவரனுதினமுநெறியொழுகு
துதிசமரநகரறிவின்முறையே.

(இ - ள்.) அகமும் - உள்ளிலும், நடுவும் முடிவும் உறு திசையும் எழு புவியும் நிறை - நடுவிலும் முடிவிலும் மிக்கதிசையிலும் எழுலகத்திலும், நிறை அறிவில் எழு பரமசுக நறையே - அடியவரது நிறைந்த மெய்ஞ்ஞானத்திலெழுந்த பரமசுகமாகியதேனே, தகு தி குகு தகு தி குகு தகுதி தரிகிட திமிதி தகுதி என்ன, - நடன மயில் இறையே - நடனஞ்செய்யும் மயிலூர்தியையுடையவனே, பகர் கலைகள் முழுதும் அளவு இட அரிய-சொல்லும்நூல்கள்முற்றும் அளவிடுதற்கரிய, மிக நுண்ணிய படிறு உள மும் நுழைவரிய மறையே - அது

யன்றி மிகவும் நுண்ணியபடிறுவாய்ந்தமனமும் செல்லுதற்கரிய இரகசியமே, துகள் அகலும் மறைமுனிவர் அனுதினமும் நெறிஒழுகு துதி சமரநகர் அறிவின் முறையே - குற்றத்தினின்றுநீங்கிய வேதங்களையுணர்ந்த முனிவர்கள் எந்நாளும் அன்பினெறியினின்றொழுகித் துதிக்கும் திருப்போரூரிலெழுந்தருளிய மெய்யுணர்ச்சியின்முறையிலுள்ளவனே.

அகம் என்றமையால் நடுமுடிதிசை எழுபுவி என்றது புறமெனக் கொள்க. (அ)

சுருதிகுருவனுபவமெய்யொருமையினிலெனைமருவு
துகளிரியவருளொளிசெய்கண்ணே
கருவிமுழுதையுநியதிகளையுமவர்பரவியடை
கனபுரணவறிவுதிகழ்விண்ணே
யிரவிசசியனனயனவிறைவர்செவிகுளிரவரு
மிசைதனிலுமிகுமொழிசெய்பண்ணே
தருணவளமுருகசரவணகுமரவெனுமொழிக
டழைசமரபுரியிலுறைதண்ணே.

(இ - ள்.) சுருதி குரு அனுபவம் மெய் ஒருமையினில் - சுருதிகுருசுவானுபவம் என்னும் பொருளொருமையில், என்னை மருவு-என்னைவிடாதுதொடர்ந்த, துகள் இரிய - மலக்குற்றம்நீங்க, அருள் ஒளி செய் கண்ணே - அருளாநிற்கும் ஒளியைச்செய்யும் திருநோக்குடையவனே, கருவி முழுதையும் நியதிகளையுமவர் பரவி அடை - தொண்ணூற்றறுதத்துவங்களையும் நியதிசெய்யும் சிவஞானிகள் வணங்கியடையும், கன புரண அறிவு திகழ் விண்ணே - பெருமைவாய்ந்த ஒளியும் அறிவும் திகழும் சிதாகாசமே, இரவி சசி அனல் நயன இறைவர் செவிகுளிர - சூரியனுஞ்சந்திரனும் அக்கினியும் ஆகிய திரிநேத்திரங்களையுடைய சிவபிரானது திருச்செவிகுளிர, வரும் இசைதனிலும் மிகு மொழி செய் பண்ணே - அமைந்த இசையிலும் மேம்பட்டசுவைவாய்ந்த உபதேசமொழியமைந்த ஓரிசையே, தருண - இளமைப்பருவமுடையவனே, வள முருக - வளம்வாய்ந்தமுருகனே, சரவண குமர என்னு மொழிகள் - சரவணனே குமரனேஎன்று அடியவர்கூறும்மொழிகள், தழை சமரபுரியில் உறை தண்ணே - தழைந்த திருப்போரூரிலெழுந்தருளிய தண்ணளியே.

சுருதிவாக்கியமும் குருமொழியும் அந்நெறிப்பட்டுநின்று அனுட்டிக்கும் அனுட்டிப்பும் ஒருவழிப்பட்டியலவேண்டும் ஆதலால் மெய்யொருமையென்றார். (௯)

சுடரிஞெளிவிடுசிகைகொள்பறவைவிருதுடையகுக
துரகமயிலிறைவதெய்வராயா
குடமுழவுமுரசதிரவலகைபசிகெடவசுரர்
குலமுழுதுமடுமயில்கொணேயா

படியிலுனதினியபுகழ்பரவுமவர்சுகவுததி
படியவினிதருடருமுபாயா
தடமலரினொழுகுபிழிதவளவளைபருகியுறு
சமரபுரியதனிலுறைதூயா.

(இ - ள்.) சுடரின் ஒளிவிடு சிகைகொள் பறவை விருது உடைய குக - சூரியனைப்போலவொளிவீசும் சூட்டுவாய்ந்த கோழிக்கொடியையுடைய குகனே, துரக மயில் இறைவ தெய்வ ராயா - மயிலைப்பரியாகவுடைய இறைவனே தேவர்களுக்கரசனே, குடமுழ்வுமுரசு அதிர - குடமுழாவும் முரசுமொலிக்கவும், அல்கை பசி கெட - பசாசின்பசிகெடவும், அசுரர் குலமுழுதும் அடும் அயில் கொள் நேயா - அசுரர்குலமுற்றும் உயிர்வாங்கிய வேலையேந்தியநேயனே, படியில் உனது இனியபுகழ் பரவுமவர் - நிலவுலகில் உனது இனியபுகழைப்பரவும் அடியவர்கள், சுக உததி படிய இனிது அருள் தரும் உபாயா - சுகக்கடலிலழுந்த இனியஅருள்செய்யும் உபாயனே, தட மலரின் ஒழுகு பிழி - தடாகத்திலுள்ள தாமரைமலரினின்றுசிந்துந்தேனை, தவள வளை பருகி உறு - வெள்ளியசங்குகள்பருகி உலாவும், சமரபுரிஅதனில் உறைதூயா - திருப்போரூரிலெழுந்தருளிய களங்கமில்லாதவனே.

சமரபுரியதனில் அது பகுதிப்பொருள் விகுதி. (௧0)

பெரியகட்டியம் முற்றிற்று.

உ

## சின்னகட்டியம்.

### வெண்செந்துறை.

ஐங்கரற்கிளையமகமேரோ - யம்புவிக்கினிமைதருசீரோ,
சங்கரக்கடவுளணைதாரோ - தண்டமிழப்போரிவருகாரோ.

(இ - ள்.) ஐங்கரற்கு இளைய மகமேரோ - ஐந்துதிருக்கரங்களையுடைய விநாயகக்கடவுளுக்கு இளையமகமேருபோல்பவனே, அம்புவிக்கு இனிமை தரு சீரோ - நிலவுலகிலுள்ள அடியவர்க்கு இன்பந்தருஞ்செல்வமே, சங்கரக்கடவுள் அணை தாரே - சிவபெருமான் மகிழ்கூர்ந்து தழுவுமலர்மாலையே, தண் தமிழ் போரி வருகாரோ - தண்ணியதமிழ்வழங்குந் திருப்போரூரிலெழுந்தருளிய மேகம்போல்பவனே.

அருண்மழைபொழிதலால் கார்எனவும், பொலிவும்மணமுந் தருதலால் மாலையெனவுங் கூறினர். (௧)

இமயமகளுதவுகுணமலையே - இதயவநுபவமுரைசெய்கலையே
சமயமுழுவதுநிகழுநிலையே - சனனகடலலைவாரும்வலையே.

(இ - ள்.) இமயமகள் உதவு குணமலையே - உமையம்மையீன்றருளிய சாந்தகுணமலையே, இதய அனுபவம் உரைசெய் கலையே - அடியவரிதயத்தில் அனுபவமுறைக்க அநுக்கிரகஞ்செய்யும் சிவஞானநூலே, சமயமுழுவதும் நிகழும் நிலையே - எல்லாச்சமயங்களும் நிகழ்ந்து விளங்குவதற்கு ஓர்நிலையாயுள்ளவனே, சனன கடல்லை வாரும் வலையே - பிறவிக்கடலிலழுந்து முயிர்களைவாரிக்கரையேற்றும் ஓர்வலையே.

அனுபவமுதித்தற்குச் சிவஞானநூல் காரணமாதலால் அனுபவமுரை செய்கலையே எனவும், எல்லாச்சமயங்களிலுமுள்ள கடவுளர்தோறும் நின்றருள் செய்வோன் தானாதலால் சமயமுழுவது நிகழுநிலையே எனவும், ஆன்மாக்களுக்குத் தனுகரணபுவன போகங்களைத் தந்தருளியது பிறவிக்கடலினின்றும் கடப்பித்தற்காதலால் சனனகடலலைவாரும்வலையே எனவுங் கூறினார். (௨)

கன்னியர்க்குரியநாயகனே - கண்ணனுக்கினியமருமகனே
பொன்னகர்ச்சுரர்கணேயவனே-புண்ணியப்போரிவாழ்பவனே.

(இ - ள்.) கன்னியர்க்கு உரிய நாயகனே - தெய்வயானை வள்ளியம்மை என்னுநாய்ச்சியாரிருவருக்குந் தலைவனே, கண்ணனுக்கு இனிய மருமகனே - திருமாலுக்கு இனியமருமகனே, பொன்னகர் சுரர்கள் நேயவனே - விண்ணுலகில்வாழுந் தேவர்களுக்கன்புசுரப்பவனே, புண்ணியம் போரிவாழ் பவனே - சிவபுண்ணியந்தழைத்தோங்குந் திருப்போரூரில் வாழ்பவனே. (௩)

நவவீரர்பணிபாததேவே - நனிபூதகணநாதர்கோவே
தவமேவுபெரியோர்கள்வாழ்வே - தடமேவுபோரிவாழ்காவே.

(இ - ள்.) நவவீரர் பணி பாத தேவே - வீரவாகுமுதலிய நவவீரர்கள்பணியும் திருவடியையுடையதேவனே, நனி பூத கணநாதர்கோவே - மிக்க பூதகணங்களுக்குத் தலைவனுயுள்ளவனே, தவம்மேவு பெரியோர்கள் வாழ்வே - தவமிக்க பெரியோர்களது சிவஞானவாழ்வே, தடம்மேவு போரிவாழ் காவே, தடாகஞ்சூழ்ந்த திருப்போரூரில்வாழுங் கற்பகச்சோலையே. (௪)

நீலக்கலாபமயில்வீரா - நீபத்துமாமலர்கொடாரா
கோலத்தியாககெம்பீரா - கோதற்றநாதபோரூரா.

(இ - ள்.) நீலம் கலாப மயில் வீரா - கரியதோகையையுடைய மயிலூர்தியில்வரும் வீரனே, நீபத்து மாமலர்கள் கொள் தாரா - பெருமைவாய்ந்த கடப்பமலராற்றொடுத்த மாலையையுடையவனே, கோலம் தியாக கெம்பீரா - அழகியகொடையில்மிக்கவனே, கோது அற்ற நாத போரூரா - களங்கமில்லாத இறைவனே திருப்போரூரில்வசிப்பவனே.

இயல்பாகவே பாசங்களினீங்கி நிற்றலால் கோதற்றநாதவென்றார். (௫)

வெடியத்தொனித்தசேவலனே - மிகுகொக்கையட்டவேலவனே
படிமெத்தமெச்சுபாவலனே - பரமற்குரைத்தநாவலனே.

(இ - ள்.) வெடிய தொனித்த சேவலனே - அண்டமுகடு பிளவுபடக்கூவிய சேவற்கொடியையுடையவனே, மிகு கொக்கை அட்ட வேலவனே - வலிமைமிக்கமாமரத்தினைப் பிளவுபடுத்திய வேலையேந்தினவனே, படி மெத்த மெச்சு பாவலனே - நிலவுலகம்மிகவும்மெச்சும் பாவில்வல்லவனே, பரமற்கு உரைத்த நாவலனே - சிவபெருமானுக்கனுக்கிரகஞ்செய்த நாவில்வல்லவனே.

யாவர்க்கும் அருளுமிறைவனுக்குத் தானருளும்வன்மை தோன்ற நாவலனென்றார். (௬)

பொன்மாரிபொழிகின்றபுயலே - பொய்யாதவறிஞோர்கள்செயலே
தென்மாறன்மகிழ்பலகையியலே - செஞ்ஞானசுகம்விளையும்வயலே.

(இ - ள்.) பொன் மாரி பொழிகின்ற புயலே - இம்மைமறுமையின்பங்களை விரும்பியடைந்தவர்க்குப் பொன்மழைபொழியும் மேகமே, பொய்யாத அறிஞோர்கள் செயலே - மெய்ம்மையையுடைய சீவன்முத்தர்கள்செய்யுஞ் செயல்தானுயுள்ளவனே, தென் மாறன் மகிழ் பலகை இயலே - பாண்டியன் மகிழும் சங்கப்பலகையில்வசித்த ஒரில்க்கணப்புலவனே, செம் ஞானசுகம் விளையும் வயலே - மெய்ஞ்ஞானசுகம் என்னும் பயிர்விளைதற்கு எல்லையாயுள்ளவனே.

அறம் - இம்மை மறுமை வீடு என்னும் மூன்றினையும் உயிர்களுக்குப் பயத்தற்கோர் துணைக்காரணமாதலானும், பொருள்-அறம் துணைக்காரணமாக ஈட்டும்பொருள் இம்மை மறுமைக்குரியவாதலாலும், இன்பம் பொருள் துணைக்காரணமாக ஐம்புலன்களால் நுகரும் காமம் இம்மைக்கேயுரியவாதலாலும், அவைபோலாகாது அவ்வறந்துணைக்காரணமாக ஈட்டும்பொருள் இம்மை மறுமைக்கேயுரியவாதலால் இம்மைமறுமைப்பயன்களை வேண்டி யடைந்தோர்க்கென்றும் மாறாதுதவுதலால் பொன்மாரி பொழிகின்ற புயலேயெனவும், ஜீவன்முத்தர்கள் செயல் சிவச்செயல்களேயாதலால் பொய்யாத அறிஞோர்கள் செயலே எனவும், சங்கத்தார்க்குள் விளைந்த கலகத்தை மூங்கைப்பிள்ளையாராய்ச் சங்கப்பலகையிலிருந்து இங்கிதங்களால் அவர் கலகத்தையொழித்தருளினமையால் தென்மாறன் மகிழ்பலகையியலே எனவுங் கூறினார்.(௭)

கருணைதருமாறுமுகமதியே - கனதேவர்சேனாதிபதியே
தருணவளமாறாதநிதியே - சமரபுரிவாழ்சுகோததியே.

(இ - ள்.) கருணை தரும் ஆறுமுக மதியே - கிருபைமிக்க சந்திரனையொத்த ஆறுதிருமுகங்களையுடையவனே, கன தேவர் சேனாதிபதியே - பெருமை

வாய்ந்த தேவசேனைக்கோர் தலைவனே, தருண வளம் மாறுத நிதியே - பாலப ருவமென்னும் வளம்நீங்காத ஓர்நிதியே, சமரபுரிவாழ் சுக உததியே - திருப் போரூரில்வாழும் பேரின்பசுகக்கடலே.

முகமதி உவம வுருவகவணி. (அ)

மாரவேள்வெரிட வருசுந்தரா - மாகர்கோனுதவுதெய்வசிந்துரா
கோரசூர்ப்பகையையடுதந்திரா - கோதிலாவாறுலிபிமந்திரா.

(இ - ள்.) மாரவேள் வெரிட வருசுந்தரா - மன்மதன் புறங்காட்ட விளங்கும் பேரழகையுடையவனே, மாகர்கோன் உதவு தெய்வசிந்துரா - இந்திரன் பெற்ற தெய்வயானை நாய்ச்சியாரையுடையவனே, கோர சூர்ப்பகை அடு தந்திரா - நடுக்கஞ்செய்யுஞ் சூரனைவென்ற உபாயத்தையுடையவனே, கோது இல்லாத ஆறுலிபி மந்திரா - களங்கமில்லாத சடாட்சரங்களாலமைந்த திருமந்திரத்தையுடையவனே. (௯)

கவலைவெயிலறவீசுகனமே - கருதடியர்நசையானதனமே
சிவன்மருமவணைதுயிலுமனமே - திகழ்போரியடைவோர்களினமே.

(இ - ள்.) கவலை வெயில் அற வீசு கனமே - பிறவித்துன்பமாகிய கோடை பற்றற அருண்மழைபொழியு மேகமே, கருது அடியர் நசையான தனமே - தன்னைக் கருதும் அடியவர் விரும்பும் சிவஞானச் செல்வமே, சிவன் மரும அணை துயிலும் அன்னமே - சிவபெருமான் மார்பமாகிய மெத்தையில் துயில்கூரும் ஓர் அன்னமே, திகழ்போரி அடைவோர்கள் இனமே - விளங்குந் திருப்போரூரையடையும் அடியவரை உறவினராகவுடையவனே. (௧௦)

சின்னகட்டியம் முற்றிற்று.

உ

## எச்சரிக்கை.

எச்சரிக்கை - அரசன் திருவோலக்கத்திற்கு வருங்கால் அவ்வரசனை முன்னிலையாக்கி அவையிலுள்ள முதியோர்க்கு அவ்வரசன் வருகையை எச்சரித்தல். இவ்வாறன்றி அரசன் திருவோலக்கத்தில் வீற்றிருக்கும்போது அவ்வரசன் தன்மை யித்தன்மையென்று அவையிலுள்ளோர்க்கு எச்சரித்தல் எனக் கொள்ளுதலுமொன்று.

சீரார்குறமானுளணி செப்பார்தனமேவுந்
தாரார்புயசமராபுரிச் சண்முகாவெச்சரிக்கை.

(இ - ள்.) சீர் ஆர் குறமாதுள் அணி செப்பு ஆர் தனமேவும் - அழகுநி றைந்த வள்ளிநாய்ச்சியாரது ஆபரணங்களணிந்த கரண்டகச் செப்பினையொத் த திருத்தனங்கள் நெருங்கும், தார் ஆர் புய சமராபுரி சண்முகா எச்சரிக்கை- மாலையணிந்த திருப்புயங்களையுடையவனே திருப்போரூரிலெழுந்தருளியமுரு கனே எச்சரிக்கை. (க)

பிறைசூடியசடையானருள் பிள்ளைப்பெருமாளே
மறையோர்நிறைபோரூர்வரு மன்னாவெச்சரிக்கை.

(இ - ள்.) பிறை சூடிய சடையான் அருள் பிள்ளை பெருமாளே - இ ளஞ்சந்திரனை யணிந்த சடையையுடைய இறைவன் பெற்ற இளமைவாய்ந்த பெருமானே, மறையோர் நிறை போரூர் வரு மன்னா எச்சரிக்கை - அந்தணர் கள்வசிக்குந் திருப்போரூரி லெழுந்தருளிய இறைவனே எச்சரிக்கை. (உ)

பனிமாமலைமிசைபூத்தருள் பச்சைக்கொடிதந்த
கனியேதிருப்போரூர்வரு கந்தாவெச்சரிக்கை.

(இ - ள்.) பனி மா மலை மிசை பூத்தருள் பச்சை கொடி தந்த கனியே- இமமலைமேற் படர்ந்து பூத்த ஒரு பசுங்கொடி தந்த நறுங்கனியே, திருப்போ ரூர் வரு கந்தா எச்சரிக்கை - திருப்போரூரி லெழுந்தருளிய கந்தனே எச்ச ரிக்கை. (௩)

அருமாமறைமுதலோதிய வானைக்கொருதுணையே
பரிபூரணசுகமேபோரிப் பதியேயெச்சரிக்கை.

(இ - ள்.) அரு மாமறை முதல் ஓதிய ஆனைக்கு ஒரு துணையே - அரிய பெரிய பிரணவத்தி னுட்கிடையைச் சிவபெருமானுக் குபதேசித்த யானைமு கக்கடவுளுக்கோர் துணைவனே, பரிபூரண சுகமே போரிப் பதியே எச்சரிக் கை - பரிபூரண சுகவாழ்வே திருப்போரூரி லெழுந்தருளிய இறைவனே யெச் ரிக்கை.

வேதத்தோற்றத்திற்குப் பிரணவ முதலாதலால் மறைமுதல் என்றார். "பிரணவமுதித்தத னிடையே வேதம்பிறந்த" என்பதனாலுணர்க. மறைமுத லோதிய யானைக்கொரு துணையே என்பது "காமனையெரித்த கணபதிதந்தை" என்றாற்போல வந்த இடைப்பிறவரல். (ச)

ஆனாவமுதனையாயயில் வேலாவுயர்வானோர்
சேனாபதிசமராபுரித் தேவாவெச்சரிக்கை.

(இ - ள்) ஆனா அமுது அனையாய் - சுவைநீங்காத அமுதத்தை யொத் தவனே, அயில் வேலா - கூரியவேலையுடையவனே, உயர் வானோர் சேனாபதி- உயர்ந்த தேவர்கள் சேனாபதியே, சமராபுரி தேவா எச்சரிக்கை - சமரபுரியி லெழுந்தருளிய தேவனே எச்சரிக்கை. (ரு)

தெய்வகுஞ்சரிகணவாபச்சைத் திருமாறிருமருகா
சைவநன்னெறிவளர்போரூர்ச்சண்முகாவெச்சரிக்கை.

(இ - ள்.) தெய்வ குஞ்சரி கணவா - தெய்வயானை நாய்ச்சியார் கணவனே, பச்சை திருமால் திருமருகா - பசிய திருமால் திருமருகனே, சைவ நல் நெறிவளர் போரூர் சண்முகா எச்சரிக்கை - நல்ல சைவநெறி விளங்குந் திருப்போரூரி லெழுந்தருளிய சண்முகனே எச்சரிக்கை. (௬)

வேலாகுணசீலாகனலீலாவிடைப்பாகன்
பாலாதிருப்போரூர்வளம்பதியாயெச்சரிக்கை.

(இ - ள்.) வேலா குண சீலா கனலீலா - வேற்படையையுடையவனே, குணசீலனே பெருமைவாய்ந்த திருவிளையாடலையுடையவனே, விடைப் பாகன் பாலா - இடபவூர்தியையுடைய இறைவன் புதல்வா, திருப்போரூர் வளம் பதியா எச்சரிக்கை - திருப்போரூரென்னுந் திருப்பதியையுடையாய் எச்சரிக்கை. (௭)

நவவீரர்கள்பணிநூபுரநளினத்திருவடியாய்
தவர்சூழ்தருசமராபுரிச்சண்முகாவெச்சரிக்கை.

(இ - ள்.) நவவீரர்கள் பணி நூபுரம் நளினம் திருவடியாய் - வீரவாகு முதலிய நவவீரர்கள் பணியும் சிலம்பணிந்த தாமரை மலரையொத்த திருவடியையுடையவனே, தவர் சூழ்தரு சமராபுரி சண்முகா எச்சரிக்கை - தபோதனர்கள் சூழ்ந்த சமராபுரியிலெழுந்தருளிய சண்முகனே எச்சரிக்கை. (அ)

ஈராறுயர்தோளாதண்டைக்கிசைந்தபத்மத்தாளா
சீரார்திருப்போரூர்மயில்வீராவெச்சரிக்கை.

(இ - ள்.) உயர் ஈராறு தோளா - உயர்ந்த பன்னிரண்டு திருத்தோளையுடையவனே, தண்டைக்கு இசைந்த பத்மதாளா - தண்டைக்கிசைந்த தாமரையையொத்த திருவடியையுடையவனே, சீர் ஆர் திருப்போரூர் மயில்வீரா எச்சரிக்கை - பொலிவு நிறைந்த திருப்போரூரி லெழுந்தருளிய மயிலூர்தியையுடைய வீரனே எச்சரிக்கை. (௯)

கோழியங்கொடிபடைத்தாய்நல்லகுணத்தாயென்னையளித்தாய்
வாழியம்மலர்ப்பதத்தாய்போரிவரதாவெச்சரிக்கை.

(இ - ள்.) கோழி அம் கொடி படைத்தாய் - கோழிக்கொடியை யேந்தினவனே, நல்ல குணத்தாய் என்னை அளித்தாய் - சாந்தகுணத்தையுடையவனே என்னைப் பாதுகாத்தவனே, அம் மலர் பதத்தாய் - அழகிய தாமரைமலரையொத்த திருவடியையுடையவனே, போரி வரதா எச்சரிக்கை - திருப்போரூரி லெழுந்தருளினவனே எச்சரிக்கை. (௧௦)

பூவேபரிமளமேமறைப்பொருளேமயிலேறுங்
கோவேசுரர்தேவேபோரிவாழ்வேவெச்சரிக்கை.

(இ - ள்.) பூவே பரி மளமே - மலரேயும் மலரிலுள்ள மணமே, மறை பொருளே - வேதத்தினுட்கிடையே, மயில் ஏறும் கோவே - மயிலூர்தியில் ஆரோகணித்தருளு மிறைவனே, சுரர் தேவே - தேவர்களுக்குத்தேவனே, போரிவாழ்வே எச்சரிக்கை - திருப்போரூரில் வாழ்பவனே எச்சரிக்கை. (கக)

பிரசமேபிரமரசமேதவர்பேசுங்கதிநலமே
சொரூபமேபோரிநகர்வாழ்சுப்பிரமணியாவெச்சரிக்கை.

(இ - ள்.) பிரசமே - தேனே, பிரமரசமே - பிரமானந்தசாரமே, தவர் பேசும் கதிநலமே - தபோதனர்கள் புகழ்ந்துபேசும் முத்தியின்பமே, சொரூபமே போரிநகர்வாழ் சுப்பிரமணியா எச்சரிக்கை - ஞானசொரூபமே திருப்போரூரில் வாழும் சுப்பிரமணியனே எச்சரிக்கை. (கஉ)

மதுராகுக்கிடவிருதாசிற்சுகவடிவாசுப்பிரமணியா
சதுராதிருப்போரூர்வருசண்முகாவெச்சரிக்கை.

(இ - ள்.) மதுரா - பேரின்பரசமாயுள்ளவனே, குக்கிடவிருதா - கோழிக்கொடியையுடையவனே, சிற்சுக வடிவா சுப்பிரமணியா - ஞானவடிவாயுள்ளவனே சுப்பிரமணியனே, சதுரா திருப்போரூர் வரு சண்முகா எச்சரிக்கை - சதுரப்பாடுடையவனே திருப்போரூரில் வரு சண்முகனே எச்சரிக்கை.

வேள்வியில் பிரணவத்தி னுட்கிடை சுப்பிரமணியன் என வேதங்கூறுதல் தோன்றச் சுப்பிரமணியா என்றார். (கங)

எச்சரிக்கை - முற்றிற்று.

---

௨.

## வண்ணத்தாழிசை.

---

இந்திரப்பெயருடையான்முதலெவருஞ்செறிவள்ளுக்
கிடையூறுகள்வாராவகையெணிமுற்பணிகளிறென்
சிந்தைப்பிரியவென்கண்சிறுபிள்ளாய்வருகென்றே
திருமார்பிறுகப்புல்கியதெய்வச்சிரமணியே
யந்திப்பிறைமுடியானருளின்பக்கனிநினைவந்
தண்டிப்பணிதொண்டர்க்கினியருளும்படிநினையாய்
சந்தப்பொழிலிடைவெற்பனதந்திக்களிறுலவுந்
தண்சாரன்மணஞ்சூழ்தருசமாபுரியானே.

(இ - ள்.) சந்தம் பொழில் இடை - சந்தனமரஞ்செறிந்த சோலையினிடத்து, வெற்பு அன்ன தந்தி களிறு உலவும் - மலைகளையொத்த யானைகளுலாவு

ம், தண் சாரல் மணம் சூழ்தரு சமராபுரியானே - தண்ணிய மலைச்சாரலின் மலர்மணஞ்செறிந்த சமராபுரியி லெழுந்தருளினவனே, இந்திரப் பெயருடையான் முதல் எவரும் - இந்திரனென்னும் பெயரையுடைய வாசவன்முதலிய எல்லோரும், செறி வளனுக்கு இடையூறுகள் வாராவகை எண்ணி முன் பணி களிறு - தமது நெருங்கிய செல்வத்திற்கு இடையூறுகள் வாராவண்ணங் கருதி முன்னே வணங்கும் விநாயகக்கடவுள், என் சிந்தைபிரிய என்கண் சிறுபிள்ளாய் வருக என்று - என்னுடைய மனத்திற்குப் பிரியந்தரு மெனது கண்ணே சிறிய பிள்ளையே வரக்கடவாயென்று, திருமார்பு இறுகப் புல்கிய தெய்வச் சிரமணியே - தனது திருமார்பில் இறுகத்தழுவிய தேவசிரோமணியே, அந்திபிறை முடியான் அருள் இன்பக்கனி - அந்திக்காலத்திற் றோன்று மிளஞ்சந்திரனை யணிந்த சடாமுடியையுடைய இறைவ னருளிய பேரின்பக்கனியே, நின்னை வந்து அண்டி பணி தொண்டர்க்கு இனி அருளும்படி நினையாய்- உன்னை வந்தடைந்து பணியு மடியவர்க்கு இனியருளும்வண்ணங் கருதுவாய். (௧)

வேயென்றுறுதோண்மாதுமைவெற்பன்னதனத்தின்
மிசையூறருவிப்பாலினைமிகவுண்டுகளித்த
வாய்குங்குமவாசந்தருவள்ளாலெனைவிள்ளா
வகையாளுநினக்கோதுகைமாறுஞ்சிறிதுளதோ
நாயொன்றுவளர்த்தோன்விடநாடானதுபோலும்
நல்லோர்களடைந்தோர்களையெள்ளாரதுபோலும்
தாயொன்றியசேயைப்புடைதள்ளாளதுபோலுந்
தமியேனைவிடேலண்டினன்சமராபுரியானே.

(இ - ள்.) சமராபுரியானே - திருப்போரூரி லெழுந்தருளிய இறைவனே, வேய் என்று உறு தோள் மாதுமை - மூங்கிலென்று சொல்லவமைந்த திருத்தோளையுடைய உமையம்மையினது, வெற்பு அன்ன தனத்தின் மிசை ஊறு அருவி பாலினை மிக உண்டு களித்தவாய் - மலையையொத்த திருமுலையின்மேல் வழிந்திழியும் சிவஞானப்பாலினை மிகவுமுண்டு களிகூர்ந்த வாய், குங்கும வாசம் தரும் வள்ளால் - குங்குமவாசம் வீசும் வள்ளலே, நாய் ஒன்று வளர்த்தோன் விட நாடான் - ஒரு நாயை வளர்த்தோன் அதனைக் கைவிடநாடான், அதுபோலும், நல்லோர்கள் அடைந்தோர்களை எள்ளார் - அறிவிற்சிறந்தோர் தம்மை யடைந்தோர்க ளிழிந்தோர்களாயினும் அவர்களை யிகழாது பாதுகாப்பார், அதுபோலும், தாய் ஒன்றிய சேயை புடை தள்ளாள் - தாய் தன்னையடைந்த தன் புதல்வனைத் தள்ளாள், அதுபோலும் - அதனையொக்கும், அண்டினன் - தேவரீரையடைந்தேன், தமியேனை விடேல் - துணையில்லாதயென்னைக் கைவிடாதே, என்னை விள்ளாத வகை ஆளு - என்னைக் கைவிடாவண்ணம் ஆட்கொள்வாய், நினக்கு ஓதும் கைமாறு சிறிது உளதோ - உனக்

கு என்னுற் செய்யப்படுமென்று சொல்லப்படும் கைம்மாறு சிறிதுளதோ (கூருய்.) (௨)

ஓதுங்கலையாவும்மனமோடாதுநிறுத்தி
யுன்பாதநிழற்கீழுறலுயர்நன்கெனவோத
வாதஞ்சொலியேதஞ்சொலுமனமோடுசுழன்ற
மதியின்றியசிறியேனுனைவந்தண்டுவதென்றோ
தீதின்றியகுறநாயகிசேருந்திருமார்பா
சிவனார்தருகுமராவுமைசிறுவாவரிமருகா
தாதொன்றியவனசத்தடமீதொன்றியவெகினந்
தண்மாலையில்வண்காவடைசமராபுரியானே.

(இ - ள்.) தீது இன்றிய குற நாயகி சேரும் திருமார்பா - வண்மையமைந்த வள்ளிநாய்ச்சியார் கலந்த திருமார்பையுடையவனே, சிவனார்தரு குமரா- சிவபெருமானீன்ற புத்திரனே, உமை சிறுவா - உமையம்மை ஈன்ற சிறுவனே, அரி மருகா - திருமால் மருகனே, தாது ஒன்றிய வனசம் தடமீது ஒன்றிய எகினம் - மகரந்தமமைந்த தடாகத்திலுள்ள தாமரை மலரின்மேல் வசித்த அன்னம், தண் மாலையில் வண்கா அடை - தண்ணிய மாலைப்பொழுதில் வளமமைந்த சோலையிலடையும், சமராபுரியானே - திருப்போரூரி லெழுந்தருளிய இறைவனே, ஓதும் கலை யாவும் - சொல்லும் கலைகளெல்லாம், மனம் ஓடாது நிறுத்தி - மனம் இந்திரியவழித்தாய்ச் செல்லாமல் நிறுத்தி, உன்பாத நிழல் கீழ் உறல் - உன்னுடைய திருவடி நிழலிற்கீழடைதல், உயர் நன்கு என்ன ஓத - உயர்ந்த ஞானநெறியென்றுகூற, வாதம் சொல்லி ஏதம் சொல்லும் மனமோடு சுழன்ற மதி இன்றிய சிறியேன் - பிறரொடு வாதம்பேசிப் பழிகூறும் மனத்தோடு சுழன்ற அறிவில்லாத சிறியேன்,உனை வந்து அண்டுவது என்றோ - உன்னை வந்து சேர்வது எந்நாளோ. (௩)

ஏலும்மனமோடிப்பொருளியாதொன்றினைநாடி
யிசையும்பொழுதேனும்மதையெண்ணுதுவிடுத்துன்
வேலுஞ்சிறைமயிலுங்கனதோளுஞ்சிறுதாளும்
வீறுறருண்முகமுமுனவேண்டுஞ்சிறியேனே
கோலும்மறைநாலின்முடிமேலொன்றியதேவே
குணகுஞ்சரிகோவேசுரர்கொண்டாடியவாழ்வே
தாலம்புகழணியேயெனதுயிர்நின்றொளிர்மணியே
தவமானுறைகணியேநலசமராபதியானே.

(இ - ள்.) கோலும் மறை நாலின் முடிமேல் ஒன்றிய தேவே - கோலிய நான்கு வேதங்களின் சிரசின்மேல் பொருந்திய தெய்வமே, குணகுஞ்சரி கோவே-குணம்வாய்ந்த தெய்வநாய்ச்சியார் கணவனே, சுரர் கொண்டாடிய வாழ்வே

தேவர்கள் கொண்டாடுஞ் சுகவாழ்வே, தாலம் புகழ் அணியே-நிலவுலகுபுகழும் ஆபரணமே, எனது உயிர் நின்று ஒளிர் மணியே-எனது உயிரொடுவிரவி நின்று விளங்கும் மாணிக்கமே, தவ மான் உறை கணியே - தவத்தையுடைய வள்ளி நாய்ச்சியார் தங்கும் வேங்கைமரமே, நல்ல சமரா பதியானே - நல்ல திருப்போரூரிலெழுந்தருளினவனே, ஏலும் மனம் ஓடி-பொருந்திய மனம்பொறிவழிச்சென்று, பொருள் யாது ஒன்றினை நாடி - ஒரு பொருளைத் தேடி, இசையும் பொழுதேனும் அஃதை எண்ணாது விடுத்து - அப்பொருளிசையுங் காலத்தாயினும் அதைக்கருதாது விடுத்து, உன் வேலும் சிறை மயிலும் கனதோளும் சிறு தாளும் அருள் வீறு முகமும் சிறியேன் உன்ன வேண்டும் - உனது வேலையும் சிறகையுடைய மயிலையும் பெருமைவாய்ந்த தோளையும் சிறிய திருவடியையும் அருள்மிக்க ஆறு திருமுகங்களையும் சிறியேன் கருதவேண்டும்.(௬)

உருவுந்தருபுகழும்பலகலையுமுயரறிவு
மோருந்திகழ்குணமும்பலமாருந்தவநெறியுந்
திருவும்மதிமதியும்பதிகதியுநினையொருநாட்
சேவித்தவர்தமைவந்தெதிர்தெரிசிப்பினும்வருமே
மருவுஞ்சிரபுரமாநகர்வந்தெண்ணிலிபேரா
மாருவளவீடேறிடவைக்கும்மறைமுதல்வா
தருவும்மிருநிதியுஞ்சுரபியுமன்னகரத்தார்
தண்மேகமெனப்பொன்பொழிசமராபுரியானே.

(இ - ள்.) மருவும் சிரபுர மாநகர் வந்து - வளமமைந்த சீர்காழியிலவதரித்து, எண்ணிலிபேரா மாரு வளவீடு ஏறிட வைக்கும் மறைமுதல்வா - அளவில்லாதவர்களை பேரின்பவளம் நீங்காத முத்திவீட்டில் குடியேற வைக்கும் அந்தணர் குலத்துக்கோர் முதல்வனே, தருவும் இருநிதியும் சுரபியும் அன்னகரத்தார் - கற்பகதருவையும் சங்கநிதி பதுமநிதியையும் காமதேனுவையும் ஒத்த கையையுடைய கொடையாளர்கள், தண் மேகம் என்னப் பொன் பொழி சமராபுரியானே - தண்ணிய மேகம்போலப் பொன்னைச்சொரியுந் திருப்போரூரிலெழுந்தருளிய இறைவனே, உருவும் தரு புகழும் பலகலையும் உயர் அறிவும் - நல்ல உருவும் மிக்ககீர்த்தியும் பல்நூலாராய்ச்சியும் உயர்ந்த அறிவும், ஓரும் திகழ் குணமும் - யாவருமாராயும் விளங்குஞ் சாந்தகுணமும், பலம் ஆரும் தவ நெறியும் - பலம் நிறைந்த தவமார்க்கமும், திருவும் மதிமதியும், பதிகதியும்-செல்வமும் நுண்ணறிவும் நிலைபெற்ற முத்திநிலையும், நின்னை ஒருநாள் சேவித்தவர் தம்மை வந்து எதிர் தெரிசிப்பினும் வருமே - உன்னை யொருநாள்வணங்கும் அடியவரை ஒருவர் வந்து எதிரே தெரிசித்தாலும் அவருக்குங் கைகூடும். (௭)

அத்தம்மனமுதயஞ்சிறிதறியாரவிபோலுன்
னருளாகியரவியென்னுளமகலாதுநிறைந்தே
சித்தம்மலவிருளும்பலதத்துவமெனுமுடுவுஞ்
சிறுபோதவெண்மதியுமகல்சீரொன்றினிவருமே
நித்தன்மகிழ்தரவோர்மொழியத்தம்புகல்குரவா
நீலக்கலபத்தோகைகண்மாலைப்புயல்கண்டு
தத்தாதிமிதித்தாதிகுதெய்த்தெய்யெனவாடத்
தண்காவளிபண்பாடியசமராபுரியானே.

(இ - ள்.) நித்தன் மகிழ்தர ஓர்மொழி அத்தம் புகல் குரவா - சிவபிரான் மகிழ்கூர ஒரு பிரணவத்தி னுட்கிடையை யருளிய பரமாசாரியனே, நீலம் கலாபம் தோகைகள் மாலை புயல் கண்டு - கரிய கலாபத்தையுடைய மயில்கள் மாலைக்காலத்திலுள்ள மேகங்களைக்கண்டு, தத்தா திமிதித்தா திகு தெய்த்தெய் என்ன ஆட - நடனஞ்செய்ய, தண்கா அளிபண்பாடிய சமராபுரியானே-தண்ணிய சோலையில் வண்டுகள் இசைபாடாநின்ற திருப்போரூரி லெழுந்தருளியஇறைவனே, அத்தம் மனம் உதயம் சிறிது அறியாத ரவிபோல்-அத்தமனத்தையும் உதயத்தையுஞ் சிறிதுமறியாத சூரியனைப்போல், உன் அருளாகிய ரவி என் உளம் அகலாது நிறைந்தே-உனது திருவருளாகிய சூரியன் எனது மனத்தில் நீங்காது நிறைந்து, சித்தம் மல இருளும் - உயிரினின்றும் நீங்காத ஆணவமல விருளும், பலதத்துவம் என்னும் உடுவும் - பல தத்துவங்களென்னும் நக்ஷத்திரங்களும், சிறு போத வெள் மதியும் - தற்போதமென்னும் வெள்ளிய சந்திரனும், அகல் சீர் என்று இனிவரும் - என்னினின்று நீங்கும் சிறப்பு இனி எக்காலத்தில் வாய்க்கும்.

செம்பிற்காளிதம்போல உயிரோடுவிரவி நிற்றலால் சித்தம் மலவிருளும் என்றார். (௬)

மறையாதியகலையோதியவனசப்பெருமானு
மண்ணுண்டுவடத்தேதுயில்பண்ணும்பெருமானு
நறையாரிதழித்தார்புனைசடையம்பெருமானு
நாடிக்களிகூரத்தகரேறித்திகழ்வோனே
யிறையாகியவளவாயினுமறவாதுனைநாடி
யின்பத்துயில்கொள்ளும்படியென்புத்தியினிறைவாய்
தறையாதியிலுறைவோர்பணிசரணும்பரிபூரண
தண்ணாரளியண்ணுமகிழ்சமராபுரியானே.

(இ - ள்.) மறை ஆதிய கலை ஓதிய வனசம் பெருமானும் - வேதமுதலிய நூல்களைக் கற்றுணர்ந்த தாமரையில் வசிக்கும் இறைவனும், மண் உண்டு வடத்தே துயில் பண்ணும் பெருமானும் - மண்ணுலகையுண்டு ஆலிலையில் அ

பிதுயில்கொள்ளுந் திருமாலும், நறை ஆர் இதழி தார் புனை சடை அம் பெருமானும் - தேன்சிந்துங் கொன்றைமாலையணிந்த சடாமகுடத்தையுடைய சிவபெருமானும், நாடி களிகூர - நாடிக்களிப்படைய, தகர் எறி திகழ்வோனே- மேடவூர்தியி லாரோகணித்து விளங்கும் பெருமானே, தறை ஆதியில் உறைவோர் பணி சரண பரிபுரண - நிலவுலகுமுதலிய உலகங்களில் வசிப்போர் வணங்குந் திருவடியையுடையவனே, பரிபுரண - எங்குமிறைந்தவனே, தண் ஆர் அளி அண்ணு மகிழ் சமராபுரியானே - தண்மைநிறைந்த கருணையையுடைய பெரியோயென்று அடியவர் துதிக்க மகிழ்கூருந் திருப்போரூரி லெழுந்தருளினவனே,இறையாகிய அளவாயினும் உன்னை மறவாது நாடி - இறைப்பொழுதாகிலும்உன்னை மறவாமற் கருதி, இன்பத் துயில் கொள்ளும்படி என் புத்தியினில் நிறைவாய் - பேரின்ப நித்திரைகொள்ளும் வண்ணம் என்னறிவில் நிறைந்தருள்வாய்.

ளகர்பேதமின்மைபோல் ரகர றகரங்கள் பேதமின்மையால் தறையாதி என்றார். (எ)

எளியேனையோரடியானெனவின்பத்திருவுள்ளத்
தெண்ணிச்சிறுநாயேனுளநண்ணச்சுகவாரிக்
களியேயுலகெங்குமிஃதல்லாதிலையென்றே
காட்டிப்பின்மறைத்தாயென்கண்மாயமிஃதென்றே
யளியேயருள்வெளியேயுயிரொளியேமறைமுடிவி
னஞ்சொற்புகழ்பஞ்சப்பிரணவமோதியகிளியே
தளிரேயனகையார்மயிலெனவேநடமாடுஞ்
சசிவெண்சுதைமாடஞ்செறிசமராபுரியானே.

(இ - ள்.) அளியே அருள் வெளியே - தண்ணளியாயுள்ள பொருளே சிதாகாசமாயுள்ள இறையே, உயிர் ஒளியே - என்னுயிரொடு விரவிய ஞானவொளியே, மறைமுடிவின் அம் சொல்புகழ் பஞ்ச பிரணவம் ஓதிய கிளியே- வேதசிரசினுள்ள அழகிய வாக்கியமாகிய் புகழப்படும் பஞ்சாக்கிரமாகிய பிரணவத்தைக் கூறிய் கிளிபோல்வாய், தளிரே அன்ன கையார் மயில் என்ன நடமாடும் - தளிரையொத்த மேன்மைவாய்ந்த கையையுடைய பெண்கள் மயிலைப்போல நடனஞ்செய்யும்,சசி வெண் சுதை மாடம் செறி சமராபுரியானே- சந்திரனையொத்த வெள்ளிய சுண்ணச்சாந்து தீட்டிய திருப்போரூரி லெழுந்தருளிய இறைவனே, எளியேனை ஓர் அடியான் என்ன - நாயிற்கடைப்பட்ட என்னையும் ஓர் அடியவனென்று, இன்பம் திருவுள்ளத்து எண்ணி - என்றும் இன்பமேநிறைந்த திருவுள்ளத்திற்கருதி, சுகவாரிக் களியே - பேரின்ப சுகக்கடலாகிய களிப்பு, சிறுநாயேன் உள்ளம் நண்ண - கடைப்பட்ட நாயேனது மனத்தில் நிலைபெற,உலகு எங்கும் இஃது அல்லாது இல்லை என்று காட்டி - உ

லகமுற்றும் ஆராயினும் இதுவன்றி வேறில்லையென்று காட்டி, பின் என் கண் மாயம் இஃது என்று - பின்பு என்னிடத்தில் இதுவோர் மாயமென்று, மறைத்தாய் - மறைத்தருளினாய். (இஃதோர் பெருவியப்பு)

ஐந்தெழுத்தும் ஓரெழுத்தாகிய பிரணவமாதலால் பஞ்சப்பிரணவமென்றார். "இறைசத்திபாச மெழில்மாயையாவி - யுறநிற்குமோங்காரத்துள்" எனவருந் திருவருட்பயனு முணர்க. (அ)

அவனோடவளதுயானெனுமலர்கானலைநாடி
யான்செய்தனன்பிறர்செய்தனரென்றின்பொடுதுன்பு
நவமாய்வருதோறுமிகுவிழைவும்வெகுளியுமே
நண்ணிநீயுயிருண்ணின்றுநடத்துஞ்செயனாடேன்
பவவேலைகடத்தும்முனபாதத்துணைவங்கம்
பற்றத்திருவுளம்வைத்தருள்பாலித்திடுகண்டாய்
தவராசர்கள்கவிராசர்கள்புவிராசர்கண்ஞானோ
தயராசர்கள்புடைசூழ்தருசமராபுரியானே.

(இ - ள்.) தவராசர்கள் கவிராசர்கள் புவிராசர்கள் ஞானோதயராசர்கள் - தவராசர்களும் கவிராசர்களும் நிலவுலகையாளு மரசர்களும் ஞானோதயத்தையுடைய அரசர்களும், புடைசூழ்தரு சமராபுரியானே - அயலிற் சூழ்ந்த திருப்போரூரி லெழுந்தருளிய இறைவனே, அவன் அவள் அது - அவன் அவள் அதுவென்னும் பிரபஞ்சத்தை, யான் என்னும் அலர் கானலை நாடி - யானென்றுகருதும் கானற்சலத்தை நிலையுள்ள பொருளென வாராய்ந்து, யான்செய்தனன் பிறர்செய்தனர் என்று - யான்செய்தேன் பிறர்செய்தாரென்று, இன்பொடு துன்பு நவமாய் வருதோறும் - இன்பமுந்துன்பமும் புதிதுபுதிதாய் வருந்தோறும், மிகுவிழைவும் வெகுளியும் நண்ணி - மிக்க விருப்பத்தையும் கோபத்தையும் அடைந்து, நீ உயிர் உள் நின்று நடத்தும் செயல்நாடேன் - நீ உயிருள்நின்று நடத்துஞ் செயலைச் சிறிதும் நாடேன், பவம் வேலை கடத்தும் உன்பாதம் துணை வங்கம் பற்ற - பிறவிக்கடலைக் கடத்தும் உனது திருவடியாகிய மரக்கலத்தைப்பற்ற, திருவுளம்வைத்து அருள் பாலித்திடு - திருவுளம் வைத்துக் கருணைசெய்யாய். (௯)

எண்ணின்செயலாயுமெழிலுடலின்செயலாயு
மியாதாயினுநாவாரவிசைக்குஞ்செயலாயு
நண்ணுஞ்செயல்வருதோறுநின்னருளின்செயலாக
நாடுஞ்செயலென்றேவருநாயேன்செயல்போயே
விண்ணும்புகழ்வேலும்விரிகதிரோனையழைக்கு
மிளிர்செஞ்சிறைவிருதுந்தருகரமீதுபிடித்தோய்
தண்ணந்துறைவாவிக்கயல்பாயக்கமலத்தேன்
சாயக்குடவளைமேய்தருசமராபுரியானே

(இ - ள்.) விண்ணும் புகழ் வேலும்- நில்வுலகன்றி விண்ணுலகும் புகழா நின்ற வேலையும், விரி கதிரோனை அழைக்கும் மிளிர் செஞ்சிறை விருதும்-விரிந்த கிரணத்தையுடைய சூரியனைக் கூவியழைக்கும் விளங்கும் செவந்த சிறகையுடைய விருதாகிய கோழிக்கொடியையும், தருகர மீது பிடித்தோய் - அடியவர்க்கருளுந் திருக்கரத்திலேந்தியருளினவனே,தண் அம் துறைவாவி கயல்பாய-தண்ணிய அழகிய துறையையுடைய தடாகத்திலுள்ள கயல்பாய்தலால்,கமலம் தேன்சாய-தாமரைகிழிந்து தேன்சொரிய, குட வளை மேய்தரு-சமராபுரியானே, குடம்போன்ற சங்குகள்மேயுந் திருப்போரூரிலெழுந்தருளிய இறைவனே, எண்ணின் செயலாயும் - மனத்தின் செயலாகியும், எழில் உடலின் செயலாயும் - தோற்றத்தையுடைய காயத்தின்செயலாகியும், இயாதாயினும் நாவார இசைக்கும் செயலாயும் - யாதாயினு மொன்றை நாக்கால் பொருந்தக்கூறும் வாக்கின்செயலாகியும், நண்ணும் செயல் வருதோறும் - பொருந்திய திரிகரணச்செயல்கள் வருந்தோறும், நின் அருளின் செயலாக - உனது திருவருட்செயலாக, நாயேன் செயல்போய் - நாயிற்கடைப்பட்ட வெனது செயல்கழிந்து, நாடும் செயல் என்றுவரும் - ஆராயுஞ்செயல் எக்காலத்தி லடியேனுக்கு உதிக்கும் (அதனை யருளாய்.)

மனவாக்குக்காயமென்னுங் கரணங்களின் தத்தம் செயல்கள்நிகழும்போது அவை யெனது செயல் எனக்கருதுந் தற்போதமொழிந்து சிவச்செயலாகக்கருதும் அச்செயலரிதாகலால் என்றே வரும் என்றார்.

உம்மை இறந்தது தழீய எச்சப் பொருட்டு. (௧௦)

வண்ணத்தாழிசை முற்றிற்று.

---

௨

## கலிநிலைத்துறை.

### அறுசீர்க்கழிநெடில்விருத்தம்.

ஆதரவாயடியவருக்கருள்சுரக்கு
மைங்கரத்தோனன்புகூர்ந்து
மாதவமேயெனவழைத்துப்புயத்தணைக்கத்
திருவுளத்துமகிழுங்கோவே
யேதமுறுதடியேனைக்காத்தளிப்ப
துன்கடனுமிசைப்பதென்னே
போதமலர்கற்பகமேபோரூர்வா
ழாறுமுகப்புனிதவேளே.

(இ - ள்.) அடியவருக்கு ஆதரவாய் - அடியார்களுக்கோர் பற்றுக்கோடாய், அருள்சுரக்கும் ஐங்கரத்தோன் அன்புகூர்ந்து - கருணைசுரக்கும் ஐந்து திருக்கரங்களையுடைய விநாயகக்கடவுள் அன்புமிக்கு, மாதவமே என்ன அழைத்து புயத்து அணைக்க - பெரியதவமே என்றழைத்துத்தனது திருப்புயத்தி லிறுகத்தழுவ, திரு உளத்து மகிழுங் கோவே - தனது திருவுளத்தில் மகிழ்கூரும் இறைவனே, போத மலர் கற்பகமே - ஞானமலர்பூக்கும் கற்பகதருவே; போரூர் வாழ் ஆறுமுகப் புனித வேளே - திருப்போரூரில் வாழும் ஆறு திருமுகங்களையுடைய களங்கமில்லாத இறைவனே, ஏதம் உறாது அடியேனை காத்து அளிப்பது உன் கடனும் - குற்றத்திற் படியாமல் அடியேனைப் பாதுகாத்தளிப்பது உனது கடமையாம், இனி இசைப்பதுஎன்னே - இனி யான் எடுத்துக் குறையுரைப்பது யாதுளது.

அடியேன்மேற் கருணைசெய்யில் அதுவே யமையும் என்பார் இனியிசைப்பதென்னே என்றார். (௧)

சிறுகுழவியெனைக்காவென்றாய்க்குரையா
 துறக்காக்குஞ்செய்திபோலு
மறிவிலியேன்காத்திடென்றிருக்கவுங்
 காத்தளிப்பதுனதருட்கேயுண்டா
முறியிலிடுநவநீதமுண்டவன்றன்மருகா
 வேலுரவாபச்சைப்
பொறிமயிலேறியமுருகாபோரூர்வா
 ழாறுமுகப்புனிதவேளே.

(இ - ள்.) உறியில் இடும் நவநீதம் உண்டவன் தன் மருகா - உறியில் வைத்தவெண்ணெயைப் பருகிய கண்ணன் மருகனே, வேல்உரவா பச்சை பொறி மயிலேறிய முருகா - வேலையேந்திய பெரியவனே பசிய புள்ளிவாய்ந்த மயிலூர்தியையுடைய இறைவனே, போரூர் வாழ் ஆறுமுகப் புனித வேளே - திருப்போரூரில் வாழும் ஆறு திருமுகங்களையுடைய களங்கமில்லாத் இறைவனே, சிறு குழவி என்னை கா என்று ஆய்க்கு உரையா - சிறிய குழந்தை நான் என்னைக் காவாயென்று தாய்க்குக் கூறாதிருக்கவும், உற காக்கும் செய்திபோலும் - மிகவும் பாதுகாக்குஞ் செய்தியைப்போலும், அறிவிலியேன் காத்திடு என்னாது இருக்கவும் - அறிவில்லாத யான் காவாயென்று குறையிரந்திடாதிருக்கவும், காத்தளிப்பது உனது அருட்கே உண்டாம் - பாதுகாப்பது உனது திருவருளுக்கே உரியதாம்.

உலகிற்றெரிந்த செய்தியை யெடுத்துக் கூறுதலால் இது தெருதரு தேற்றவுவமையணி. (௨)

தருமவயித்தியனொருத்தன்பிணிதீர்த்தல்
கடனாகித்தணித்தல்போலச்
சுருதிகுருசுவானுபவமாயடியேன்மலக்
தவிர்த்துஞ்சுழலாநின்றேன்
மருவளருமுனதுபயவாரீசபதநிழற்கீழ்
வைக்கவேண்டும்
பொருவிலருள்பொழிமுகிலேபோரூர்வா
ழாறுமுகப்புனிதவேளே.

(இ - ள்.) பொருவு இல் அருள் பொழி முகிலே - ஒப்பில்லாத திருவருள்பொழியும் மேகமே, போரூர்வாழ் ஆறுமுகப் புனிதவேளே - திருப்போரூரில் வாழும் ஆறு திருமுகங்களையுடைய மாசில்லாத இறைவனே, தரும வயித்தியன் ஒருத்தன் - தருமத்திற்காகப் பிணிதீர்க்கும் வயித்தியனொருவன், பிணி தீர்த்தல் கடன் ஆகித் தணித்தல்போல - நோயாளியின் நோயைத்தீர்த்தல் கடனாய்த் தீர்த்தல்போல, சுருதி குரு - மகாவாக்கியமும் அதனையொத்த குருமொழியும், சுவானுபவம் ஆய் - அனுபவமாக, மலந்தவிர்த்துஞ் சுழலாநின்றேன் - அடியேனது ஆணவமலத்தை யொழித்தும் வாசனாவசத்தால் மயங்காநின்றேன், ஆகையால் மருவளரும் உனது உபய வாரீசம் பதம் நிழல் கீழ் வைக்க வேண்டும், வாசமிக்க வுனது தாமரைமலரையொத்த இரண்டு திருவடிநிழற்கீழ் வைத்தருளவேண்டும்.

கைம்மாறு கருதாதவனென்பார் - தருமவயித்திய னொருத்தனெனவும், மருந்தால் நோயைத் தீர்ப்பானென்பார் - பிணிதீர்த்தல் கடனாகி எனவும், அந்நோய் மீட்டும் வராமற்செய்வானென்பார் தணித்தல்போல எனவும், நோய்நீக்குதற்கு மருந்து காரணமாதல்போல மலநோய் தீர்தற்குச்சுருதிகுருசுவானுபவம் மருந்தென்பார்- சுருதிகுருசுவானுபவம் அடியேன் மலந்தவிர்த்தெனவும் இங்குவாங்கிய பாண்டம்போல அம்மலநோய் வாதனையுறுமென்பார் சுழலாநின்றேன் எனவும், அது வொழிதற்கு உன் திருவடி பெறவேண்டுமென்பார், உனதுபயவாரீச பதநிழற்கீழ் வைக்கவேண்டுமெனவுங் கூறினார். இதுவும் அவ்வணி. ஆய் செயவெ னெச்சத்திரிபு. (௩)

என்னையொருபொருளாகத்திருவுளத்தி
லடைத்தாய்க்கிங்கெதுகைமாறு
மின்னனையசடாமகுடம்பெருமான்கண்
களிக்கவரும்விறல்வேலோயே
யுன்னைமறவாதுன்னுதுறுவேனை
யுன்னடியானென்னவைத்தாய்
பொன்னனையதிருத்தாளாபோரூர்வா
ழாறுமுகப்புனிதவேளே.

(இ - ள்.) பொன் அனைய திருத்தாளா - பொன்போலுமரிய திருவடியையுடையவனே, போரூர் வாழ் ஆறுமுகப் புனிதவேளே - திருப்போரூரில் வாழும் ஆறு திருமுகங்களையுடைய மாசில்லாத இறைவனே, மின் அனைய சடாமகுடம் பெருமான் கண்களிக்க வரும் விறல் வேலோயே-மின்னலையொத்த சடாமகுடத்தையுடைய இறைவனது கண்களிகூரவரும் வெற்றியையுடைய வேலை யேந்தினவனே, உன்னை மறவாது உன்னாது உறுவேனை உன் அடியான் என்னவைத்தாய், உன்னைமறக்காமலும் கருதாமலு மலச்சிமிழ்ப்புண்ட வென்னை யுனது அடியவனென்று என்னை யாட்கொண்டாய்(ஆதலால்)என்னை ஒரு பொருளாக திருவுளத்தில் அடைத்தாய்க்கு - என்னை யொருபொருளாகத் திருவுளத்தில்கொண்டருளிய உனக்கு,இங்கு கைம்மாறு எது-இவ்விடத்து யான் செய்யும் பிறிது உபகாரம் யாதுளது (இல்லை யென்றபடி) (௪)

உவமையறுபவசலதிகடத்தியிம்மானிடப்
பிறப்பிலுதிக்கச்செய்து
நவமருவுமுனதுபதநாடவைத்தா
யதைமறந்தேனாயினேனே
கவலையெலாமற்றுனதுதிருவடிக்கீ
ழிருக்கவினிக்கருணைசெய்யாய்
புவனைகரதலமணியேபோரூர்வா
ழாறுமுகப்புனிதவேளே.

(இ - ள்.) புவனை கரதல மணியே - உமையம்மை திருக்கரத்தி லேந்திய மாணிக்கமே, போரூர்வாழ் ஆறுமுகப் புனிதவேளே - திருப்போரூரில் வாழும் ஆறு திருமுகங்களையுடைய மாசில்லாத இறைவனே, உவமைஅறு பவசலதி கடத்தி - தன்னறிவிற்கோர் அளவில்லாத செனனக்கடலினின்றும் அடியேனைக்கடத்தி, இம்மானிடப்பிறப்பில் உதிக்கச்செய்து - இந்த மனிடப்பிறப்பில் உதிக்கச்செய்து, நலம் மருவும் உனது பதம் நாடவைத்தாய் - புதுமைமிக்க உனது திருவடியை நாடச்செய்தாய், நாயினேன் அதை மறந்தேன் - நாயிற்கடைப்பட்ட யான் அதை மறந்தொழிந்தேன், கவலை எல்லாம் அற்று-கவலையெல்லாமொழித்து, உனது திருவடிக்கீழ் இருக்க- உனது திருவடிகிழற்கீ ழிருக்க இனிக்கருணைசெய்யாய் - இனிக் கருணைசெய்வாய். (௫)

மயக்கமிடர்காணுகின்மலர்ப்பாதப்
பேரொளியில்வயங்காநின்ற
வியக்கமறுமானந்தக்கடல்படிவ
தெந்நாளோவேழையேனே
நயக்குமணப்பைம்பூவேநாகர்பர
வியகோவேநறவேகாவே

புயற்கருணைபொழிதேவேபோரூர்வா
ழாறுமுகப்புனிதவேளே.

(இ - ள்.) நயக்கு மணப் பைம் பூவே - யாவரும் விரும்பும் நறுமணம் வீசும் பசியமலரே, நாகர் பரவிய கோவே - தேவர்கள் வணங்கு மிறைவனே, நறவே காவே - பருகுதற்கினிய தேனே கற்பகச்சோலையே, புயல் கருணை பொழி தேவே - மேகம்போலுங் கருணைபொழியுங் கடவுளே, போரூர் வாழ் ஆறுமுகப் புனித வேளே - திருப்போரூரில் வாழும் ஆறு திருமுகங்களையுடைய களங்கமில்லாத இறைவனே, ஏழையேன் - அறிவில்லாத யான், மயக்கம் இடர் காணமல் - ஒருபொருளை யெனதெனதென்றுகருதி யுழலும் மயக்கத்தையும் அதனால்வரும் பிறவித்துன்பத்தையும் இனிக்காணமல், நின் மலர் பாதம் பேர் ஒளியில் வயங்காநின்ற - உனது தாமரையொத்த திருவடியின் பெரிய ஒளியில் விளங்காநின்ற, இயக்கம் அறும் ஆனந்தம் கடல் படிவது எந்நாளோ - சலனமற்ற பேரின்பக்கடலி லழுந்துவதெந்நாளோ (அடியேனறியேன்).

மயக்கம் இடர் காணத நின்மலர்ப்பாதம் எனப்பொருள்கொண்டு வினையுண்மையைக்காட்டும் பிறப்பிறப்பும் அதன் பயனைக்காட்டும் சுவர்க்க நிரயங்களும் இல்லையென்றும், அவ்வினையுடையதும் வினைப்போகமாகிய சரீராதிகளையெடுப்பதும் அதுகொண்டு சுவர்க்கநிரயங்களால்வரும் சுகதுக்கங்களையனுபவிப்பதுமான ஆன்மவர்க்கங்க ளில்லையென்றும், வினைப்போகத்தை அவ்வினைக்குரிய ஆன்மாவிற்கு அவ்வவ்வினையறிந்து பின்னமறக்கூட்டும் பிரானகிய இறைவனில்லையென்றுங் கூறும் மயக்கநூல்களிற்செல்லும் பாச அறிவே மயக்கம். அதனைக் கடிதலும், பாசவறிவுடைமையால் பதியல்லாத தன்னை பதியேயெனக்காணும் பசுவறிவே இடர். அதனைப் பழித்தலுமாகிய இவ்விருதன்மையுமுடையது நின்மலர்ப்பாதப் பேரொளியாதலால் யான் பொய்நூலின்வழி அகங்கார மமகாரத்துட்பட்டுழலும் மயக்கத்தையும் அது பிறவியைத்தருவது திண்ணமாதலால் அவ்விடரையும் அவ்வொளிநிற்கப்பெறுவேனயின் அம்மயக்கவிடரை இனிக் காணேனென்பார் மயக்கவிடர்காண நின்மலர்ப்பாதப்பேரொளியென்றாரெனப் பொருள்கூறுதலுமொன்று. (௬)

மங்கியுழற்பவித்துழலுழல்வல்லிடரிற்
புகுதாமன்மதியிலேனை
யிங்குனதுபதநிழற்கீழ்வைத்தியே
லுய்கேன்மற்றேழையேனே
கொங்கலரும்பைங்கூந்தற்குறமாதின்
கணவாவெண்குணவாசூழ்ந்த
பொங்கரளிபண்பாடும்போரூர்வா
ழாறுமுகப்புனிதவேளே.

(இ-ள்.) கொங்கு அலரும் பைங்கூந்தல் குறமாதின் கணவா - மகரந்தம்பரந்த பசிய கூந்தலையுடைய வள்ளிநாய்ச்சியார் கணவனே, எண்குணவா - எண்குணங்களையுடையவனே, சூழ்ந்த பொங்கர் அளி பண்பாடும் போரூர்வாழ் ஆறுமுகப் புனிதவேளே - புடைசூழ்ந்த சோலைகளில் வண்டுகள் இசைபாடுந் திருப்போரூரிலெழுந்தருளிய ஆறுதிருமுகங்களையுடைய களங்கமில்லாத இறைவனே, மங்கியும் உற்பவித்தும் உழல் வல் இடரில் புகுதாமல் - மலச்சிமிழ்ப்புண்டும் அதனாற் பிறந்தும் இந்நிலவுலகிற்சுழலும் வலிய பிறவித்துன்பத்தில் அழுந்தாமல், மதியிலேனை இங்கு உனது பதம் நிழல் கீழ் வைத்தியேல் ஏழையேன் உய்கேன் - அறிவில்லாத என்னை உனது திருவடி நிழற்கீழ் வைத்தருளினால் அறிவில்லாதயான் பிழைப்பேன்.

மங்கியும் என்றதனால் ஆணவத்தின் கொடுமையும், வல்லிடர் என்றதனால்கன்ம மலத்தின் வலிமையும், உற்பவித்தும் என்றதனால் மாயாமலத்தின்றொடக்கையும், உழல் மதியிலேன் என்றதனால் ஆன்மாவின் சுதந்தரமின்மையும், பதநிழற்கீழ் வைத்தியேலுய்கேன் என்றதனால் இறைவனது சுதந்தரமுடைமையுங் கொள்ளக்கிடந்தன. (எ)

இல்லாதான்வள்ளலாயுள்ளானை
யிரவாமுனீதல்போலு
நல்லானேயுனதுபதம்விரும்பாதே
னாயிடினுநல்கவேண்டுங்
கல்லாதபுல்லியர்போற்றேகபோகம்விரும்பிக்
கலங்காநின்ற
பொல்லாதேன்பிழைபொறுக்கும்போரூர்வா
ழாறுமுகப்புனிதவேளே.

(இ-ள்.) கல்லாத புல்லியர்போல் - நூல்களைக் கற்றுணராத புல்லிய அறிவினையுடையவர்போல, தேகபோகம் விரும்பிக் கலங்காநின்ற பொல்லாதேன் - தேகபோகத்தைவிரும்பிக் கலங்குகின்ற தீவினையையுடையேனது, பிழைபொறுக்கும் போரூர்வாழ் ஆறுமுகப் புனிதவேளே - தீங்கினைப்பொறுத்தாளுந் திருப்போரூரில்வாழும் ஆறுதிருமுகங்களையுடைய களங்கமில்லாத இறைவனே, இல்லாதான் வள்ளலாய் உள்ளானை இரவாமுன் ஈதல்போல - வறுமையாளன் வள்ளலாயுள்ளவனை யிரத்தற்குமுன் அவன் கொடுத்தல்போல, நல்லானே உனதுபதம் விரும்பாதேன் ஆயிடினும் - நல்லவனே உனது திருவடியை நான் விரும்பாதவனானாலும், நல்கவேண்டும் - நீ விரைந்தருளவேண்டும்.

வறியனொருவன் தன் வறுமையை யொழித்துக்கொள்ள பொருளுடையோன்பால் சென்றவிடத்து அப்பொருள் வேண்டுதலை மனத்துளிருத்தி

ப் புறம்பே நாவுழன்றும் கண்சுழன்றும் ஏற்குங் கரத்தையுள்ளடக்கி யேற்றுங் காட்டப் பொருளுடையோன் புறத்துக்காட்டிய அக்குறிப்பால் அப்பொருளீதலே வள்ளற்றன்மையென்பார் இல்லாதா னிரவாமுனீதலால் வள்ளலாயுள்ளானே என்வும், அவ்வறியனறிவுமில்லாத புல்லியனாய் பிறப்பறுக்கு முனது திருவடியை விரும்பாது துன்பத்தாழ்த்தும் தேகபோகத்தை விரும்பி ஓர் நிலையின்றிக் கலங்குகின்றேன் அதனால் நீ எனது கலக்கம் ஒன்றனையே நோக்கி யிரங்கி அதனை யொழித்தருளு முனது பாதகமலங்களை யருளல்வேண்டுமென்பார் கல்லாத புல்லியர்போற்றேக போகம்விரும்பிக் கலங்காநின்ற பொல்லாதேன் பிழைபொறுக்கும் உனது பதம் விரும்பாதேனாயினும் நல்கவேண்டுமெனவுங் கூறினாரெனப் பொருள் கூறுதலுமொன்று. கல்லாத புல்லியர்போல் கலங்காநின்ற பொல்லாதேன் ஆதலால் நான் இல்லாதான் ஆகும் அதனால் வள்ளல் இரவாமுன் ஈதல்போல பொல்லாது கருதாத நல்லான் நீ ஆதலின் விரும்பாதேனாயினும் உனது பதம் நல்கவேண்டுமெனக்கொண்டு கூட்டலுமொன்று. (அ)

ஊமர்கண்டகனவினைப்போலுரைப்பரிய
சிவானுபவமுணராநின்ற
காமருஞானிகள்பரவுமுனதுசேவடிநாயேன்
காண்பதென்றோ
தேமருவுமலர்க்கூந்தற்றெய்வவிளம்பிடிநோக்கஞ்
சேருந்தோளாய்
பூமகளுக்கணிகாட்டும்போரூர்வா
ழாறுமுகப்புனிதவேளே.

(இ - ள்.) தேமருவு மலர் கூந்தல் தெய்வ இளம்பிடிநோக்கம் சேரும் தோளாய் - தேன்பொருந்திய மலரையணிந்த கூந்தலையுடைய தெய்வயானை நாய்ச்சியார் திருக்கட்பார்வையளக்கும் திருத்தோளையுடையவனே, பூமகளுக்கு அணி காட்டும் போரூர் வாழ் ஆறுமுகப் புனிதவேளே- திருமகளுக்கும் கலைமகளுக்கும் பொலிவுதரும் திருப்போரூரில் வாழும் ஆறு திருமுகங்களையுடைய களங்கமில்லாத இறைவனே, ஊமர்கண்ட கனவினைப்போல் உரைப்பு அரிய சிவானுபவம் உணராநின்ற - மூங்கையர்கள்கண்ட கனவினைப்போலப் பேசுதற்கரிய சிவானுபவத்தை யுணராதுணர்கின்ற, காமம் மருவு ஞானிகள் பரவும் - விருப்பமிக்க சிவஞானிகள் வணங்கும், உனது சே அடி நாயேன் காண்பது என்றோ - உனது செவந்த திருவடியை நாயிற்கடைப்பட்ட யான் கண்டு தெரிசிப்பதெந்நாளோ (அறியேன் என்றபடி.)

உனது சேவடி ஞானிகளால் விரும்பிப் பரவப்பட்டது. அந்த ஞானிகள் உரைப்பரிய சிவானுபவம் உணராநின்ற பெரியோர். அவருணர்ந்த அது

வாங்மனதீதமாதலால் தாமே யனுபவிக்கும் பெருங்காதலுடையராய் ஊமர்கண்ட கனவினைப்போல் அவர்பாலாயது. அதனால் அவ்வூமர் வசப்பட்ட உனதுசேவடி நான் எவ்வாறுகாண்பேன்,காணேன்! காணேன்!! சிவானுபவம் எனக்கின்மையால். அச்சிவானுபவமோ மொழியுஞ் செல்லாநிலைமைத்து. அம்மொழி செல்லாதொழியின் மொழிவழியே செல்லும் அறிவுஞ் செல்லாது. இவ்விரண்டுஞ் செல்லாதொழியின் அருள்பெறாத யான் எவ்வாறுணர்வேன் உணரேன்! உணரேன்!! இதனால் சத்தாகிய சிவத்திற்கும் சித்தாகிய சத்திக்கும் இடையே நின்று பேரானந்தந்தரும் ஆனந்தரூபி நீ யாதலால் உன்னைச் சிவமும் சத்தியும் உணர்ந்து அவ்வழிநின்ற மௌனிகளே யறிந்தனுபவிப்பர். சிவத்தையும் சத்தியையும் உணராது பொறிவழியுழலும் யான் மௌனத்தாலனுபவிப்பது எவ்வாறென்றவாறும். (சு)

மடமைசெறிபுலைநாயேன்மனந்திருத்தித்
திருவடிக்கீழ்வைக்கவென்றுங்
கடனுனக்கேயாயிருக்கவடிக்கடியிங்
குரைப்பதென்னேகடையனேனே
சுடரனையசெழுஞ்சூட்டுப்பல்பொறிச்செஞ்
சிறைச்சேவற்றுவசத்தோனே
புடவியிடர்தவிர்த்தாளும்போரூர்வா
ழாறுமுகப்புனிதவேளே.

(இ - ள்.) சுடர் அனைய செழுஞ்சூட்டு பல்பொறி செம் சிறை சேவல் துவசத்தோனே - நெருப்பையொத்த செவந்த உச்சிக்கொண்டையையும் பலபுள்ளிகளையும் செவந்த சிறையையுமுடைய சேவற்கொடியையுடையவனே, புடவி இடர் தவிர்த்து ஆளும் - உலகிலுள்ள பிறவித்துன்பத்தைப்போக்கி அடியவரை யாட்கொள்ளும், போரூர்வாழ் ஆறுமுகப் புனிதவேளே - திருப்போரூரி லெழுந்தருளிய ஆறுதிருமுகங்களையுடைய இறைவனே, மடமை செறி புலை நாயேன் மனம் திருத்தி திருவடிக்கீழ் வைக்க - அறியாமை செறிந்த நாயிற்கடைப்பட்ட எனது மனத்தைத்திருத்தி உனது திருவடிக்கீழ் வைக்க, உனக்கு என்றும் கடனாய் இருக்க - உனக்கு எந்நாளுங் கடமையாயிருக்க, கடையனேன் இங்கு அடிக்கடி உரைப்பது என் - நாயிற்கடைப்பட்ட யான் இங்கு அடிக்கடி குறைகூறுவது யாது (இல்லை யென்றபடி.)

அன்று ஆணவப்பகைகுனால் சிமிழ்ப்புண்டிருந்த வென்னை வெளியிலீர்த்து மாயாகரணவொளிகூட்டி இன்று உன்னைநோக்கிக் குறைகூறச்செய்தது நீயன்றி நானேயோ. அதனால் என் மனத்தைத்திருத்தி அருளாதாரத்தில்வைக்குங் கடமையும் உன்னுடையதாகவேயிருக்க அதனை மறந்து யான் பன்மு

றையும் வேண்டுவது என்னமடமை. நீ இறைவனாதலால் அன்றே என்னைத் தாங்குங்கடமையை மேற்கொண்டனை. யான் இன்று காறும் அடிமையென்று உன் பணியை மேற்கொள்ளாது வாசாகைங்கரியஞ்செய்தல் என்னை? என்னினுங் கடைப்பட்ட தன்மையும் உடையாருமுண்டோ இல்லையென்றவாறும். (௧௦)

அறுசீர்க்கழிநெடில்விருத்தம் முற்றிற்று.

௨

## கலிவிருத்தம்

அருளைங்கரனிளையோய்திகழாறானனநாதா
விருளின்றியிருந்துன்பதமென்றெய்துவலடியேன்
மருவொன்றியநீபத்தொடைமார்பாவடிவேலா
திருவொன்றியபோரூருறைதேவேகுகவேளே.

(இ - ள்.) அருள் ஐங்கரன் இளையோய் - அடியவர்க்கருளும் ஐந்து திருக்கரங்களையுடைய விநாயகக்கடவுளுக் கிளையவனே, திகழ் ஆறு ஆனன நாதா-விளங்கும் ஆறு திருமுகங்களையுடைய நாதனே, இருள் இன்றி இருந்து - மலப்பிணிப்பு நீங்கியிருந்து, உன்பதம் அடியேன் என்று எய்துவல் - உன்னுடைய திருவடியை அடியேனென்று எய்துவேன், மருவு ஒன்றிய நீபம் தொடைமார்பா - வாசமிக்க கடப்பமலர்மாலையையுடைய திருமார்பையுடையவனே, வடிவேலா - வடித்த வேலையேந்தினவனே, திரு ஒன்றிய போரூர் உறை தேவா குகவேளே - செல்வமிக்க திருப்போரூரி லெழுந்தருளிய தேவனே முருகக்கடவுளே. (௧)

ஈசன்றருகுமராவிமகிரியான்மகள்புதல்வா
நேசந்திகழிருபாவையர்நினைவொன்றியவடிவா
மாசின்றுனதருணின்றிடுவழிதந்தெனையாளாய்
தேசொன்றியபோரூருறைதேவாகுகவேளே.

(இ - ள்.) ஈசன் தரு குமரா - சிவபெருமான் பெற்ற குமரனே, இமகிரியான் மகள் புதல்வா - உமையம்மையின் புத்திரனே, நேசம் திகழ் இருபாவையர் நினைவு ஒன்றிய வடிவா - அன்புமிக்க தெய்வயானை வள்ளிநாய்ச்சியார் என்னும் இருவர் நினைவில் பொருந்திய திருவுருவத்தையுடையவனே, மாசு இன்று உனது அருள் நின்றிடு வழி தந்து எனை ஆளாய் - குற்றமில்லாத உன்தருள் வழிநிற்கும் வழியைத் தந்தென்னை யாட்கொள்ளாய், தேசு ஒன்றிய போரூர் உறை தேவா - விளக்கமிக்க திருப்போரூரி லெழுந்தருளிய தேவனே, குகவேளே - முருகக்கடவுளே. (௨)

புவனஞ்சரவசரஞ்செறிபுறனுள்ளொடுகீழ்மே
னவமொன்றியசுகபூரணநாதாசிவபோதா
தவமும்பதியறிவும்நனிதந்தின்றென்னையாளாய்
சிவனின்சுதபோரூருறைதேவாகுகவேளே.

(இ - ள்.) புவனம் சரம் அசரம் செறி புறன் உள்ளொடு கீழ்மேல் - புவனங்களிலும் சர அசரங்களிலும் நெருங்கிய புறம்பும் உள்ளும் கீழும் மேலுமாக, நவம் ஒன்றிய சுகபூரண நாதா - நுகருந்தோறும் புதிதாக விளையும் சிவபூரண நிறைவாயுள்ள நாதனே, சிவபோதா - சிவபெருமானுக்குப் போதித்தருளினவனே, தவமும் பதி அறிவும் நனி தந்து இன்று என்னை ஆளாய் - தவத்தையும் பதியாயுள்ள நின்னை யறிதலையும் மிகவும் அடியேனுக்குத் தந்து இப்போதென்னை யடிமைகொள்ளாய், சிவனின் சுத - சிவபெருமான் இனியபுத்திரனே, போரூர் உறை தேவா - திருப்போரூரி லெழுந்தருளிய தேவனே, குகவேளே - முருகக்கடவுளே.

விருப்பால் விளையுந் தேகபோகம் பின் வெறுப்பைத் தருதல்போலாது விருப்புவெறுப்பில்லாதவிடத்து நிகழும் சிவபோகம் என்றும் புதிதாதலால் நவமொன்றிய சுகபூரண என்றார். அன்றியும், உருவம் அருவம் அருவுருவமாயுள்ள பிரபஞ்சமெல்லாம் சிவரூபமென்பார் புவனஞ்சர வசரஞ்செறி புறனுள்ளொடு கீழ்மேனவமொன்றிய எனவும், அப்பூரண சிவத்தின் ஆனந்தம் நீ என்பார் சுகபூரணநாதா எனவும், நீ கூறும் ஞானமே அச்சிவனார் விரும்பும் உண்மைஞானமென்பார் சிவபோதா எனவும், அதனால் நாளையென்னாது உன் அடிகாணப்பெற்ற இன்றே வினைமேற்கொண்டியற்றுந் தவத்தினின்றும் என்னை வேறுக்கி விளைபொப்பில்வரும் சரியையாதி தவங்களைத்தந்து அத்தவமுதிர்ச்சியால் பதியைவிளக்கும் பதிஞானத்தை மிகவுந்தந்தும் அருளாயென்பார் தவமும் பதியறிவும் நனிதந்தின் றென்னையாளாய் எனவுங் கூறினார். (௩)

சூர்சேனையையடுவீரர்கடொழுபங்கயபாத
மோர்கூரவெந்நாளும்மெனதுளமன்னுறநினையாய்
தார்மார்பககூர்வேலவதடமாமயில்வீரா
சீர்மேவிய போரூருறைதேவாகுகவேளே.

(இ - ள்.) தார் மார்பக - வெற்றி மாலையணிந்த திருமார்பையுடையவனே, கூர் வேல்வ - கூரிய வேலையுடையவனே, தடம் மாமயில் வீரா - பெருமைவாய்ந்த மயிலூர்தியையுடையவனே, சீர்மேவிய போரூர் உறைதேவா - செல்வம் நிரம்பிய திருப்போரூரி லெழுந்தருளிய தேவனே, குகவேளே - முருகக்கடவுளே, சூர்சேனையை அடுவீரர்கள் தொழுபங்கயபாதம் - சூரபன்மனுடைய

சேனைகளைக்கொன்ற வீரவாகுமுதலிய வீரர்கள் வணங்கும் தாமரை மலர்போன்ற திருவடி, எர்கூர எந்நாளும் எனது உள்ளம் மன்னுற நினையாய் - பொலிவுமிக எக்காலத்தும் எனது மனத்தில் நிலைபெற்றருள நீ நினைந்தருளாய். (௪)

தகரப்பரிமிசையேறியதாளாவணிதோளா
சுகநற்கதிபெறவெற்குளதுகளற்றிடநினையாய்
நிகழ்குக்கிடவிருதாசுரர்நிருபாவரிமருகா
திகழ்வுற்றிடுபோரூருறைதேவாகுகவேளே.

(இ - ள்.) நிகழ் குக்கிட விருதா சுரர் நிருபா அரி மருகா - விளங்குங் கோழிக்கொடியையுடையவனே தேவர்கள் தலைவனே திருமால் மருகனே, திகழ் உற்றிடு போரூர் உறை தேவா குகவேளே - விளங்கும் திருப்போரூரிலெழுந்தருளிய தேவனே முருகக்கடவுளே, தகர் அ பரிமிசை ஏறிய தாளா-மேடமாகிய அக்குதிரையின்மேலாரோகணித்த இறைவனே, அணி தோளா - அழகிய திருத்தோளையுடையவனே, சுகம் நல் கதிபெற எற்கு உள்ள துகள் அற்றிட நினையாய் - பேரின்பசுகம் விளைக்கும் பரகதியைப் பெறவும் எனக்குள்ள மலக்குற்ற மொழியவும் நினைந்தருளாய். (௫)

நல்வந்தனையடியாருளநாடும்படிதருவோ
யல்வஞ்சனையறவென்னுளமருள்செய்ததினிறைவா
யெல்வந்துறுவேலாமயிலேறுந்தெய்வராயா
செல்வந்திகழ்போரூருறைதேவாகுகவேளே.

(இ - ள்.) எல்வந்துறு வேலா - விளக்கம்வாய்ந்த வேலையுடையவனே, மயிலேறும் தெய்வராயா - மயிலின்மேலாரோகணித்தருளும் தேவராஜனே, செல்வம் திகழ் போரூர் உறை தேவா குகவேளே - செல்வம் விளங்கும் திருப்போரூரிலெழுந்தருளிய தேவனே முருகக்கடவுளே, நல்வந்தனை அடியார் உளம் நாடும்படி தருவோய் - நல்ல வழிபாட்டில் அடிபவருள்ளம் நிலைபெறும்படி யருள்வோய், வஞ்சனை அல் அற - ஆணவமலமாகிய விருளோட, என் உள்ளம் அதில் அருள்செய்து நிறைவாய் - எனது மனத்தில் கருணைசெய்து நீ நிறைந்து விளங்குவாய். (௬)

கனகும்பனலுளமாவிழிகாணுந்திருவடியாய்
நினைவும்மலவிருளும்மறுநிலைதந்தெனையாளாய்
வனசந்திகழ்திருமாதருள்வளருஞ்சனர்குழுமித்
தினமும்புகழ்போரூருறைதேவாகுகவேளே.

(இ - ள்.) கனகும்பன் நல் உளம் மா விழி - தவத்திற்சிறந்த அகத்திய முனிவர் நன்மையமைந்த ஞானக்கண்ணால், காணும் திருவடியாய் - காணப் பெறும் ஸ்ரீபாதங்களையுடையவனே, நினைவும் மலஇருளும் அறும் நிலைதந்து-

எனதுபோதமும் அப்போதந்தோன்றாது மறைந்திருந்த ஆணவவிருளுந்தோன்றா தழியவரும் அருள்நிலையைத்தந்து, எனை ஆளாய் - என்னை அடிமைகொள்வாய், வனசம் திகழ் திருமாது - செந்தாமரைமலரில் பொலிவொடுவிளங்கும் இலக்குமியின், அருள் வளரும் சனர் குழுமி - திருநோக்கால் செல்வம்வளர்ந்தோங்கப்பெற்ற செல்வர்கள் திரண்டு, தினமும் புகழ் போரூர் உறை தேவா - நாடோறும்புகழும் திருப்போரூரிலெழுந்தருளிய தேவனே, குகவேளே- முருகக்கடவுளே. (எ)

அயனாரறிவருமோர்மொழியரனார்க்கருளியவா
மயறீர்பரிபுரணத்திடைவைத்தின்றெனையாளா
யுயர்மாமறைமுடிமீதினிலுறுகாரணசுகமே
செயவேலவபோரூருறைதேவாகுகவேளே.

(இ - ள்.) அயனார் அறிவரும் ஓர்மொழி - பிரமனால் அறிதற்கரிய ஒப்பற்ற பிரணவப்பொருளை, அரனார்க்கு அருளியவா - சிவபெருமானுக்கு உபதேசித்த குருமூர்த்தியே, மயல்தீர் பரிபுரணத்திடை இன்று என்னைவைத்து ஆளாய் - மயக்கமற்ற சிவபூரணத்தில் இப்பொழுது என்னை யிருக்கவைத்து அடிமைகொள்வாய், உயர் மா மறை முடி மீதினில் - (எல்லாநூல்களுக்கும்) தலைமைபெற்ற வேதசிரசில், உறு காரண சுகமே - பொருந்தியகாரணப்பொருளாயுள்ள சுகசொரூபனே, செய வேலவ - வெற்றிபுனைந்த வேலாயுதத்தைத்திருக்கரத்திலேந்தினவனே, போரூர் உறை தேவா - திருப்போரூரிலெழுந்தருளிய தேவனே, குகவேளே - முருகக்கடவுளே.

* அரனார்க்கருளியவா என்புழி று தொகுத்தல்விகாரம்பெற்று நின்றதெனக்கொண்டு அரனார்க்குபதேசித்தவாறுபோல எனக்குபதேசித்து எனினுமமையும். (அ)

வானோர்தொழுபதியேசடைமன்னன்றருமதியே
ஞானோதயமகலாதெனைநண்ணும்படியருளாய்
கோனேயருளோனேகுணவானேமயிலோனே
தேனார்பொழிற்போரூருறைதேவாகுகவேளே.

(இ - ள்.) வானோர் தொழும் பதியே - தேவர்கள்வணங்குமிறைவனே, சடைமன்னன் தரு மதியே - சிவபெருமானீன்றருளிய சந்திரனே, ஞானோதயம் என்னை அகலாது நண்ணும்படி - சிவஞானத்தோற்றம் என்னைவிட்டுநீங்காது நிலைபெற்றிருக்க, அருளாய் - அருள்செய்யாய், கோனே அருளோனே குணவானே மயிலோனே - (யாவர்க்கும்) தலைவனே (அடியார்க்கருளும்) தண்ணளியுடையானே (அடைக்கலம்புகுவோர் குற்றங்களைக் குணமாகக் கொண்டருளும்) குணமுடையானே மயில்வாகனத்தையுடையானே, தேன்

ஆர் பொழில் போரூர் உறை தேவா - தேன்நிறைந்த மலர்கள்செறிந்த சோலைசூழ்ந்த திருப்போரூரிலெழுந்தருளிய இறைவனே, குகவேளே - முருகக்கடவுளே.

இந்திரன் முதலிய அமரரெல்லாம் நாம் சூரபன்மனால் அடைந்தவெப்பு இன்றோடு ஒழிந்ததென்று மனங்களிகூர இறைவனருளிய தண்ணளியாதலால் நெற்றிநாட்டத்துதித்த செவ்வேளை மதியென்றுவமித்தார். (௯)

இசையொன்றியவியனாடகமெணியோதியபுலவா
வசைவின்றியிருந்தென்றுனதடிசேர்குவலடியேன்
விசைசென்றிடுமயில்வாகனமிசையேறியகோவே
திசையெண்ணுறுபோரூருறைதேவாகுகவேளே.

(இ - ள்.) ஒன்றிய இசை இயல் நாடகம் எண்ணி ஓதிய புலவா - தென்மொழிக்கியைந்த இயலிசைநாடகமென்னு முத்தமிழையும் இலக்கணவளவையான் ஆராய்ந்து பொய்யடிமையில்லாத புலவர்க்கு ஓதி யுணர்வித்த புலவனே, என்று அடியேன் அசைவு இன்றி இருந்து உனது அடி சேர்குவல் - எந்நாள் அடியேன் நிவாததீபம்போலிருந்து உனதுதிருவருளைக் கூடுவேன், விசைசென்றிடும் மயில்வாகனமிசை - அடியார்க்கருள விரைந்துசெல்லும் மயில்வாகனத்தின்மேல், ஏறிய கோவே - ஆரோகணித்தருளும் இறைவனே, திசை எண்ணுறு போரூர் உறை தேவா - அட்டதிசைகளும் புகழும் திருப்போரூரிலெழுந்தருளிய இறைவனே, குகவேளே - முருகக்கடவுளே.

நிவாததீபமென்றது அனிலஞ்சேரா விளக்கை, அது காற்றணுகாத விளக்கென்றபடி. தனித்தனியே இறையனார் அகப்பொருட் குரைகூறிய பொய்யடிமையில்லாப் புலவர் உரைகளை இதுசிறந்தது இது சிறந்தது என்று ஓதிவரையறுத்த சிறப்புநோக்கி ஒன்றிய இயலென்றார். (௧0)

கலிவிருத்தம் முற்றிற்று.

1913

வேலுமயிலுந்துணை.

## பெருங்கழிநெடில்விருத்தம்.

சோமகிரணப்பெருங்கருணை சுரந்தமுகங்களோராறுஞ்
சுருதிவழுத்தும்பன்னிரண்டு தோளுநீபத்தொடைமார்பும்
காமர்நிறச்செம்பட்டாடைக் காட்சிமருங்குஞ்சிறுசதங்கை
கலித்தவுபயத்திருத்தாளுங் கடையேன்றுதிக்கப்பணிப்பாயே
சேமநிதியேசுரர்பதியே தெய்வத்தருவேமலர்மருவே
செறிபூரணமேயாரணமே சிறியேனுயிருக்கோருயிரே
பூமனறியாப்பிரணவத்தின் பொருளைப்பகரும்பூங்கிளியே
போற்றுமடியார்க்கோரருளே போரூர்முருகப்பெருமாளே.

(இ - ள்.) அன்பர் அருவருக்கும் செல்வம்போலாது தமது வைப்பாகக் கொண்ட நிதியமே, தேவர்கள் தத்தம்பதங்களைப் பெற இறைவராக மேற்கொண்ட தேவசேனாபதியே, அவ்வமரர்கள் வேண்டும் போகங்களையளிக்கும் கற்பகத்தருவே, அடியாரிதயகமலத்தின்கண் நீங்காத மணமே, எங்குநிறைந்த பரிபூரணப்பொருளே, (என்றிவ்வாறேனும்) வேதசொரூபமே, அதனால் நாயிற்கடைப்பட்ட எனக்கு முயிருக்குயிராயவனே,(அதுவேயுமன்றி)மலரோனறியாத பிரணவத்தினுட்கிடைப்பொருளை எனக்கெளிவந்தருளுங் குருமூர்த்தியே, உனதருட்டிருமேனியைக் கண்டுபுகழும் அடியார் கருதும் அருளாகிய திருவுருவுடையவனே, திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளே உனது தண்ணிய சந்திரகிரணம்போலும் கருணைவெள்ளம் ஊற்றெடுக்கும் ஆறு திருமுகங்களையும், வேதங்களெடுத்தோதும் பன்னிரண்டு திருப்புயங்களையும், கடப்பமலர் மாலையணிந்த திருமார்பையும், யாவரும் விரும்பும் செம்பட்டாடையால் பொலிவுபெற்ற இடையையும், சிறிய சதங்கை மாறுதொலிக்கும் இரண்டு திருவடிகளையும், நாயிற்கடைப்பட்ட யான் இடையறாது போற்றப்பணித்தருளாய்.

இதனால் யான் நீ அறிவிக்க அறிவோனுங் காட்டக் காண்போனும் செய்விக்கச் செய்வோனுமாம் தன்மையுடையோன் எனவே சுதந்தரமில்லாதவன். நீ சுதந்தரமுடைய இறைவனாதலால் பிறப்பிறப்பைத்தரும் அவனவளதுவாகக் காணப்படும் 'பிரபஞ்சத்தோற்றரவு எனக்குத் தோன்றாவாறொழித்து முத்திநிலையைத்தரும் உனது சாங்கவுபாங்கங்களையே அகத்தின்கண் எனதிச்சையால் விரும்பவும், புறத்தில் விடயங்களை நோக்காது அவ்விடயங்களினுள்ளீடாயிருக்கின்ற உன்னையே ஞானத்தாலறியவும், கண்ட விடயங்களைப்பற்றி அவாவித்தொழிற்படுஞ் செயலொழிந்து உன்னருட்பணியைக் கிரியையால் முயலவும் செய்வாயென்று தேவசேனாபதியாய் அவர்களுக்குப் போகங்களைத் தருவோனாய் சிவஞானிகள் இருதயகம்மியனாய் விளங்கும் முருகக்கடவுளை வேண்டியவாறென்க.

சோமகிரணம்போல எனக்கொண்டு உவமையாக்கினுமமையும். அவ்வாறு கொள்ளுங்கால் சகோரப்பறவைகள் சோமகிரணம் உண்பதுபோலப் பிள்ளையாரது திருமுகமாகிய மதியிற்றோன்றுங் கருணையாகிய அமுதகிரணத்தையடியவருண்பரென்பது பெற்றாம். (க)

மறையாகமத்தினெறிப்படியே வணங்குமவரினொருவனல்லேன்
மனுபேரன்புதழைத்துநினை வந்திப்பாரினொருவனல்லேன்
நிறைவானினதுபுரணசுக நேசித்தவரினொருவனல்லேன்
நீசனேனுன்றிருப்புாதநிழற்கு முரித்தேனுவேனோ
சிறையார்தோகைமிசைத்தோன்றுந் தேவேயமரர்பணிகோவே
சிவனார்புயத்திலணைத்தேந்துந் தெய்வக்குதலைமொழிக்குருந்தே
பொறையாலுயர்ந்தபெரியோர்கள் புந்திச்சுவையாஞ்செந்தேனே
புனிதநிறைந்தசெவ்வேளே போரூர்முருகப்பெருமாளே.

(இ - ள்.) இறகுகள்செறிந்த மயில்வாகனத்தில் தோன்றி நிற்குமிறைவனே, தேவர்கள்வணங்குமிறைவனே, இறைவனார் தமது திருப்புயத்திற்சார்த்திக் குலவாநிற்க வேதத்தினுட்கிடையையே இனிய மழலைச் சொல்லாகக் கூறும் இளங்குழவியே, உபசாந்தமிக்க முனிவரறிவின்கண் பேரின்பச் சுவைதரும் செவந்ததேனே, புனிதமிக்க செவ்வேளே, திருப்போரூரின்கணெழுந்தருளியிராநின்ற முருகக்கடவுளே, வேதாகமங்களில் விதித்த விதிப்படியே அர்ச்சித்து வணங்குந் தன்மையரைப்போல வணங்கும் கிரியையாளனுமல்லேன், நிலைபெற்ற பேரன்புநிறைந்து உன்னை வந்திப்பவரைப்போல வந்தனைசெய்யும் அன்பாளனுமல்லேன், எங்கும்நிறைந்த உனது பரிபூரணசுகத்தையடைய விருப்பங்கொண்டவரைப்போல் அவாவுடையானுமல்லேன், அதனால் கீழ்மையேனுகிய யான் உனதுதிருவடிநிழற்கீழ் வாழும் உரிமையுமுடையேனுவனோ (ஆகேனென்றபடி.)

இதனால் இறைவன்திருவடி நிழற்கீழ் வாழவிரும்புவோர் அப்பேறெய்தற்குச் சோபானங்களாக வகுத்த சரியை கிரியாயோகங்களை வேதாகமவிதிப்படி பிறழாதியற்ற எனக்கு வைராக்கியமுமில்லை, அஃதின்மையான் வரும் நானுதிகங்களைநோக்காது அருள்செய்ய நிலைபெற்ற அன்புமில்லை, இவ்விரண்டுமின்மையாயினும் மனத்தளவேனும் அத்வைதானந்த சுகத்தையடைய அவாவேனுமிருப்பின் அந்நிழற்குரியவனுவேன் அதுவுமில்லை, இம்மூன்றிலொன்றுமின்மையான் ஐயங்கொண்டேனென்று கூறியவாறு. (உ)

எண்ணிலாதநெடுங்கால மெண்ணிலாதபலபிறவி
யெடுத்தேயிளைத்திங்கவைநீங்கி யிம்மானிடத்தில்வந்துதித்து
மண்ணின்வாழ்க்கைமெய்யாக மயங்கியுழன்றாலடியேனுன்
மாறுப்பெருமைதரும்பாத வனசத்துணையென்றடைவேனே

கண்ணின்மணியேயுயிர்க்களியே கருணைப்புயலேசுகக்கடலே
கச்சித்தாயுச்சியைமோந்து கண்ணோடணைக்குந்திருத்தாளா
புண்ணியோரெண்ணியகரும்பே பொழிமும்மதவாரணமுகத்தோன்
பொற்பார்துணையேயற்புதனே போரூர்முருகப்பெருமாளே.

(இ - ள்.) கண்ணினின் றொளிரும் பாவையே - உயிருண்ணின்றருளும் அன்பே, கிருபாமேகமே - இன்பசாகரமே, கச்சித் திரு நகரத்தெழுந்தருளியிருக்கும் எம்மன்னை உச்சிமோந்து தமது கண்களோடு பொருந்த அன்போடணைக்கும் அழகிய பாதங்களையுடையவனே, புண்ணியர் உள்ளத்தின்கண் தியானிக்குந்தோறும் சுவைதரும் கரும்பே, மும்மதங்களைப்பொழிகின்ற யானைமுகத்தையுடைய விநாயகக்கடவுளுக்குப் பொலிவுபெறவமைந்த துணைவனே, என்றும் முதிரும் பருவத்தையடையாத கட்டழகுடையவனே, திருப்போரூரின்கணெழுந்தருளியிருக்கும் முருகக்கடவுளே, அளவறுத்தற்கியலாத நெடுங்காலம், எண்பத்துநான்குலக்ஷம் பேதங்களாயுள்ள பிறவிகளை மாறிமாறியெடுத்தலால் அளவிடவொண்ணாத பிறப்பிற்றலைப்பட்டுச் சோரும் இத்தொந்தனைநீங்கி, இனிப் பிறவாநெறியை யடைதற்குரிய சாதனங்களியற்ற இன்றியமையாத மக்கட்பிறப்பை யடைந்தும், அச்சாதனங்களியற்றாது மின்போற் றோன்றி யழிதன்மாலையவாகிய இவ்வுலகவாழ்க்கையை நிலையினவென்றுணர்ந்து அதனால் அறிவுமயங்கி அடியேன் சுகதுக்கங்களிலுழல்வேனாயின், என்றும் நிலைபெற்ற பெருமையைத்தரும் உனது தாமரைமலர்போன்ற திருவடிகளை என்று நான் பற்றுக்கோடாகப் பற்றுவேன் (நீ கூறாய்.)

ஆன்மாக்கள் மும்மலங்களினின்றும் நீங்கி முத்தியையடைந்து என்றும் மாறாத பேரின்பத்தில்வாழ இறைவன் சிருட்டிக்கத்தொடங்கியகாலம் இன்னகாலமென் றறுதியிட்டுரைக்கும் உரையளவைக் கெட்டாது அநாதியாய் நிற்றலின் எண்ணிலாத நெடுங்காலமெனவும், அக்காலந்தொட்டு இன்றளவும் எடுத்த பிறவிகள் அளவின்றாகலின் எண்ணிலாத பல பிறவி யெடுத்தெனவும், அவ்வாறெடுத்த எண்ணிறந்த பிறவிகளில் பிறவித்துன்பந் தோன்றாது இப்பிறவியிற்றோன்றினமையின் இளைத்தெனவும், அது தோன்றியகாலமே பிறவிநீங்குங்காலமாதலின் இங்சவை நீங்கியெனவும், இனிப் பேரின்பமடைதற்கு வேதாகமங்களில் விதித்த சரியையாதிகளியற்ற இன்றியமையாக்கருவியாகிய இம்மானிடப்பிறவியன்றி வேறுபிறவிகள் சிறப்பினதன்றாகலின் இம்மானிடத்தில் வந்துதித்தெனவும், பெறுதற்கரிய இப்பிறவியையெடுத்தும் பிறவிப்பிணிக்கு மருந்தாகிய சரியையாதிகளில் முயலாது உலகவாழ்க்கையை அவாவி விருப்புவெறுப்பிற்றலைப்படுதலின் உதித்தும் மண்ணின்வாழ்க்கை மெய்யாக மயங்கி எனவும், பிறவித்துன்பந் தெரியவந்தும் பிறவிக்கு வித்தாகிய அவாநீங்காதாயின் மீட்டும் பிறவித்தொந்தனை வருமாதலின் உழன்றாலெனவும், இவ்வாறு வெம்புதின்ற புழுப்போல நோக்கிற்றையே நோக்கிநிற்கும் ஆன்ம

விலக்கணத்தைமாற்றி சிவமாந் தன்மையையளிப்பது திருவருளாதலின் உன் மாறுப்பெருமைதரும் பாதவனசத்துணை எனவும், அத்திருவருளுடையபதி பசுக்களுக்குப் பதிவித்தாலன்றிப் பதியாதாகலின் அடியேனென்றடைவே னெனவுங் கூறினர். (௩)

கள்ளஞ்செறிந்தவஞ்சநெஞ்சக் கயவனேனைப்புலையனேனைக்
கருதாசாரவீனமுடைக் கசடனேனைமயல்செறிந்த
வுள்ளமுடைப்பொய்யவனேனை யுன்பேரருளாலுறநோக்கி
யுயர்பேரின்பத்திடையிருத்தா துறினுயடியேனுய்வேனே
வெள்ளஞ்செறிந்தசடாமகுட விமலன்புதல்வாவரிமருகா
வேடர்குலமாமகள்கணவா விறன்மாமுனிவர்தொழுந்தலைவா
புள்ளுஞிமிறுங்கலந்தார்க்கும் புனிதநீபத்தொடைமார்பா
புனைதிர்தகரப்பரியேறும் போரூர்முருகப்பெருமானே.

(இ - ள்.) ஊழி வெள்ளம்போலெழுந்த கங்கையை ஓர் திவலையளவாக வடக்கிய சடாமகுடத்தையுடைய இறைவன் குமாரனே, திருமால்மருகனே, வள்ளிநாய்ச்சியார் மணவாளனே, ஐம்பொறிகளைவென்ற வெற்றிப்பாட்டை யுடைய முனிவர்குழாங்கள் வணங்கு மிறைவனே, தேனையடைய யவாவும் வண்டுகள் கலந்தொலிக்குங் கடப்பமலர்மாலையையணிந்த திருமார்பனே, குற்ற மற்ற மேடவாகனமூர்ந்தருளும் திருப்போரூரின்கண் ணெழுந்தருளியிருக்கு முருகக்கடவுளே, கள்ளங்குடிகொண்ட வஞ்சச்சொல்லையுடைய அறிவிலி யும், நீசத்தன்மையுடையவனும், எண்ணத்தகு மொழுக்கத்தினின்றும் இழுக்கிய இழிஞனும், மாயாமயக்கஞ்செறிந்த மனத்தையுடைய பொய்மை யாளனுமாகிய என்னை, உனது திருவருளால் சிவஞானமுறக் கடைநோக்கால் நோக்கி மேன்மைவாய்ந்த சிவானந்தபோகத் தழுத்தாதொழியின், அடியேன் பிழைக்கும்வழியுமுண்டோ (இல்லையென்றபடி.)

கள்ளம் மனத்தின்றொழில், வஞ்சம் வாக்கின்றொழில். வாக்கின்றொழில் மனங்கலந்தாலன்றி நிகழா மனத்தின்றொழில் வஞ்சங்கலந்தாலன்றி கள்ளம் வெளிப்படா அவ்வொற்றுமை கருதியே கள்ளஞ்செறிந்தவஞ்ச நெஞ்சம் என்றார். புள்ளுஞிமிறு என்றது புள்ளாகியஞிமிறு எனக்குறித்தலால் இரு பெயரொட்டுப் பண்புத்தொகை. (௪)

சிலமிருந்தபத்திநெறி தினமுமாறுநடையினராய்ச் [யக்
செலுத்தாநெறியிற்பொறிவழியிற் செல்லாதிருந்தவுளத்தினரா
கோலஞ்சிறந்தபடியேநற் குணமுஞ்சிறந்தோராகியுனைக்
கூடுமடியார்போலெனையுங் குறித்தாட்கொண்டாய்நீயன்றே
நாலுவேதந்தொழுதேத்து நாதமுடியிற்பேரொளியே
நம்புமடியார்க்கின்பமெல்லா நல்குந்தேவேகயவர்தமைப்

போலுந்திரிந்தேனுளம்புகுந்த போதானந்தப்பெருங்கடலே
புவியிடேறமயிலேறும் போரூர்முருகப்பெருமானே.

(இ - ள்) இருக்குமுதலிய நான்கு வேதங்களும் வணங்கிப்போற்றும் நாதாந்தத்தொளிவடிவாய் விளங்கும் சுயஞ்சோதியே, பற்றகன்று திருவருளே துணையாகக்கொண்ட அடியார்களுக்கு இம்மை மறுமைச்செல்வங்களை ஒருங்கேயளிக்குந் தெய்வமே, வீட்டுநெறியுணராத கயவரைப்போலும் பொறிவழிச்சென்றுழலுமென்னுளத்திற் குடிகொண்ட ஞானானந்தசாகரமே, உலகுய்யுமாறு கலாபத்தேர்மீதெழுந்தருளும் திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளே, காமாதி குற்றங்களைக்கடியவல்ல சீலமிக்க பத்திநெறியினின்றும் மாறாதவைராக்கிய நடையுடையவராய், திருவருளடையச்செலுத்தாத புறச்சமயநெறிகளிலும் அன்றி உலகநெறியிற் பட்டுழலும் பொறிவழியினுஞ் செல்லாது சன்மார்க்கமாகிய ஞான நெறியில் நிலைபெற்றிருந்த உள்ளத்தையுடையவராய், அச்சன்மார்க்க நெறியிற்போந்த பூதிமுதலியவற்றால் சரீரம் பொலிவுபெற்றதுபோல் ஸ்ரீபஞ்சாக்கரத்தால் குணமுஞ்சீர்மையுடையராய்,* இவ்விரண்டாலும் உனது அனனியபர்வத்தைக்கண்டு உன்னில் வேறாகாது திருவருள்வசத்தராய் நிற்குமடியார்களைப்போல, சீலமாதி நெறிகளைக்கையிகந்த நாயிற்கடைப்பட்ட என்னையுஞ் சீலமுடையார்போல் திருவுளத்திற் குறித்து அடிமைகொண்டவன் நீயல்லவா.

நாதமுடியிற் பேரொளியென்றது நாதமுடிவிலுள்ளது மகாமாயையை, அதன் மேலுள்ளது பராசத்தி, அது ஒளிவடிவாயுள்ளது, அதனைத்திருமேனியாகவுடையது பரசிவமாதலால் நாதமுடிவிற் பேரொளியே என்றார். அதனால் நாததத்துவமானது குடிலாசத்தியின் காரியமாயும் அது பராசத்தியின்காரியமாயுநிகழ்தலான் அவ்வாறு கூறியதென்க. அந்நாத தத்துவத்தினின்றுந் தோன்றியது விந்து, அவ்விந்துவிற்றோன்றியது வேதம், அவ்வேதம் பராசத்தியுக்தமாகிய பரசிவத்தை யெவ்வாறு கண்டுநோக்கக்கூடுமென்பார் நாலுவேதந் தொழுதேத்து நாதமுடியிற்பேரொளியே எனவும், பேரொளிப்பிழம்பாயுள்ள பரசிவந்தன்னைச் சார்ந்தவர் தன்னோடேகமாய்ப்போதலே யின்பமென்னும் † பாதகவின்ப ஞானத்தைக்கடிந்து பிறவிப்பேதமாகிய இச்சரீரத்திலேயே கருவிகரணங்களாலடையும் சிற்றின்பங்களெல்லாம் ஒருங்கே பேரின்பமாக சகளவடிவங்கொண்டருள்வோனென்பார் நம்புமடியார்க்கின்பமெல்லா நல்குந்தேவே எனவும், சகளவடிவங்கொண்டின்பமருள நீவெளிவந்தும் இம்மை மறுமை என்பனவற்றையுணராது கவலையற்றிருக்கும் அறிவிலிகளில் யானுமொருவனாயிருந்தேனென்பார் கயவர்தமைப்போலுந் திரிந்

* பாசவைராக்கியத்தாலும் சிவஞானத்தாலும்.

† பாதகஞானம் - நானேபிரமமென்று மகிழும் ஞானம்.

தேனெனவும் * கூறினர். கடல்மேகம் முகத்தலால் குறைபடுதெனும் நதிசங்கமத்தால் விசேடித்தலு மின்றி என்றும் நிறைவாயுள்ளது. அதுவே பெய்ததுமில்லை. உலகினைத்தழைக்கச்செய்ததுமில்லை. தழைக்கச்செய்தது மேகம். அம்மேகம் பொழிவது நல்லோர்பொருட்டு. அவர்பொருட்டானாலும் ஏனையோர்க்கு மாதல்போல மேகம்போன்றெழுந்த நீ நல்லோர்க்கருளிய பேரின்பம் பெருகி என்னுளமும்புகுந்ததென்பார் என்னுளம் புகுந்த பேரானந்தப் பெருங் கடலேயெனவும், அதனால் கடல் சிவமெனவும் மேகம் முருகக் கடவுளெனவுங் கொண்டு முருகக்கடவுள் சிவமென்னுங் கடலில் பேரானந்தமென்னும் நீரைமுகந்து அடியார்களென்னும் பயிர்தழைத்தோங்கக் கடலே பெய்தாற்போலும் நீங்காது பொழிதலால் அப்பெருக்கைநோக்கி மேகம் பொழியும் நீர்போலென்னாது கடலேயெனக்கொள்ளப் பெருங்கடலே யென்றதாம். அதனான் அன்பர்களேயன்றி அன்பில்லாத என்போல்வாரும் உய்ந்தனர் என்பதுபற்றி புவியீடேற மயிலேறுமெனவும், இவ்வாறு விரைந்து செல்லும் மயிலூர்தியில் விரைந்தேறிமாறாதருளும் பேரருளுடைமை யியற்கையாகவே நீயுடையனாதலின் சீலமின்மையும், பத்தியின்மையும் அடியார் கோலமின்மையும், நற்குணமின்மையும் என்னிடத்தே குறிக்காது அவையெல்லாம் ஒருங்கேயுடைய அடியாரிலொருவனாகக் குறித்தடிமைகொண்டனை யென்பது நோக்கி உனைக்கூடுமடியார்போல் எனையுங்குறித்தாட்கொண்டாயென்றுங் கூறியதென்க.

பத்திநெறியென்று வாளா கூறாது சீலமிகுந்தபத்திநெறி யென்றதனால் அப்பத்தி - சார்புபற்றிய பத்தி சார்பிகந்தபத்தியென் றிருவகைப்பட்டு முன்னையது பொன் மணி முதலிய பொருட்செல்வத்தைத் தருவது என்றும், அது வினைவழிப்பட்டு இடையே விள்ளுவது என்றும், அதனால் அது சீலமில்லாதது என்றும், பின்னையது அருட்செல்வத்தைத்தருவது என்றும், அது பற்றுடைப்பொருளை வேண்டாத அன்பின் வழிப்பட்டு இடையே விள்ளாதது என்றும், அதனால் இது சீலமிகுந்ததெனவும் கூறியதன்றி நடையினராய் என்னாது தினமும் மாறா நடையினராய் என்றதனால் நடை சார்புடையது சார்பிகந்தது என்று முன் கூறியவிரண்டனுள் சார்பிகந்தபத்தியுடையோர் தாம் மேற்கொண்ட சைவநடை இவரைக்கைவிடா, இவரும் அவற்றைக் கைவிடார் ஆதலால் மாறா எனவும்; நெறியிலென்னாது செலுத்தா நெறியில் என்றதனால் - நெறி ஒருவன் ஓர் பொருளை நாடி அப்பொருளுடையவூர்க்குச் செல்ல மார்க்கமாயுள்ளதுபோன்று பிரமப்பொருளை நாடிச்செல்லத்தொடங்கிய

* கயவராவார் - இம்மையின்பத்திற்குரிய புகழும் மறுமையின்பத்திற்குரிய புண்ணியமும் வீட்டின்பத்திற்குரிய ஞானமும் தேடாது முறையே, பழியையும் பாவத்தையும் அறியாமையையுந் தேடுவோர்.

மார்க்கங்களெல்லாம் முக்கூற்றுப் புறச்சமயிகளால் வகுத்தநெறிகளாமாகலின் அந்நெறிகள் சமயாதீதராகிய சித்தாந்திகளால் வகுத்தநெறிபோல பிரமப் பொருளையடையச்செய்யாமையால் செலுத்தா நெறியெனவும், மேல் அவ்வழியிற் செல்லாதென்று கூறியதொன்றே யமையாது பொறிவழியிற் செல்லாது என்றதனால் பிரமானுபவத்தில் நிற்கச்செலுத்தாத புறச்சமயநெறிபோலச் சுட்டுணர்வும் செலுத்தாதாதலால் அதற்கு வாயிலாகிய பொறிகளும் அத்தன்மைத்தாதலின் பொறிவழியிற் செல்லாதெனவும், இவ்விருவழியிற்செல்லாவுளத்தினரென்றது இருந்தவுளத்தினரென்றதனால் மேல் காட்டிய பன்மார்க்கங்களும் கீழெனக்கழிக்கவும் பதிபசுபாசத்தைத் தெரித்துப் பரசிவத்தைக்காட்டும் நன்மார்க்கம் மேலெனநாடவும் சித்தாந்தத்திற் கூறும் சன்மார்க்கத்தில் இருந்தன்றி இயலாமையான் இருந்த வுளத்தினராயெனவும், கோலம் சிறந்தபடி என்றது தேற்றேகாரந்தந்து சிறந்தபடியே என்றதனால் சைவமே சன்மார்க்கம் அதன் கோலம் திருநீறுங் கண்டிகையுமாதலால் இச்சைவபூஷணமே இராசாங்கத்திலமர்ந்தோங்கியதென்பதுநோக்கி கோலஞ்சிறந்தபடியே எனவும், குணமுஞ்சிறந்த என்றது கோலஞ்சிறந்தபடியே நற்குணமுஞ் சிறந்தோங்கியென்றதனால் சைவத்தின்புறத்திலக்கணம் மேற்கூறிய சிவபூஷணமும் அதனகத்திலக்கணம் ஸ்ரீபஞ்சாக்கரமுமாதலால் புறத்துறுப்பைப்புனிதமாக்கிய சிவபூஷணம்போல அகத்திலக்கணமாகிய ஸ்ரீபஞ்சாக்கரமும் ஆன்மபூஷணமாய் வளர்ந்தோங்குவதுபற்றி குணமுஞ் சிறந்தோராகியெனவும், உனைக்கூடுவார் போலென்றது கூடுமடியார்போலென்றதனால் இவ்விரண்டிலக்கணமுமொருங்கேயடைதல் உன்னருள் பெற்றவர்க்கேயாம் ஏனையோர்க்கது ஆகாதது என்பதுநோக்கி உனைக்கூடுமடியார் போலெனவுங் கூறினானெனக்கொள்க.

தனுவோடிலகுகரணமுடன் சாரும்போகபுவனமிவை [கின்றேன்
தமையானெனதென்றுணர்ந்துமயறழைத்துத்தருக்கோடுழல்
உனதாமவைகண்மாயையிடை யுதிக்கச்செய்தாய்நீயதனால்
உள்ளவாறிம்முறைமைதனை யுணராச்சிறியேனுய்வேனோ
பனகாபரணர்க்குபதேசம் பாலித்தருளும்பரகுரவா
பைந்தார்க்கூந்தற்றெய்வானை பரிந்துமகிழவருகணவா
புனைவாமாலைதரித்தேத்தும் பொருவிலருணகிரிநாதன்
புகழ்வீட்டின்பம்பெறவுதவும் போரூர்முருகப்பெருமானே.

(இ - ள்.) சர்ப்பாபரணபூஷிதனாகிய சிவபெருமானுக்கு பிரணவத்தையுபதேசித் தருளிய பரமாசாரியனே, என்றும் வாடாதமலர் மாலையையணிந்த அளகத்தையுடைய தெய்வயானை நாச்சியார் ஆசைமீதூர்ந்து மகிழவரும் இறைவனே, சொன்மலரை வாக்கினாற்றொடுத்து மாலையாகச்சமைத்த பாமாலையை உனது திருப்புயத்திலணிந்து திருப்புகழ்பாடும் அருணகிரிநாதர், யா

வராலும் பெறுதற்கரிதெனப் புகழும் முத்தியின்பத்தை யெளிதிலடையவரு ள் செய்யும் திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளே, தனுவும் அதினெ டு சார்ந்திலகும் கரணமும் கரண சையோகத்தால் வரும்போகமும் அப்போ கஞ் சார்தற்கிடமாகிய புவனமுமாகிய இவைகளை யானென்று மெனதென் றும் சிற்றறிவாலறிந்து * இவ்விரண்டால் மூலாக்கியானம் அதிகப்பட்டு அதனு ல் மாயாகாரியமாகிய தனுவாதிகள் இடையறாதுவளரப் பெற்று நிகரின்றி மே லுங் கீழும்போக்குவர வோடிருக்கின்றேன்; (அந்தோ) யான், யானெனதெ ன் றபிமானித்த அவைகள் உன்னுடைப் பொருள்களாம். அவை மாயாகாரி யமாதலால் அதினின்றுந் தோற்றுவிக்கச் செய்தவன் நீயே, இம்முறைமையி ன் உண்மையை உள்ளவாறுணராத சிற்றறிவினனாகிய அடியேனுய்யும் வகை யுமுளதோ (கூறுயென்றபடி.)

இதனால் யான் யானென்றும் எனதென்றும் அபிமானிக்கப்படும் பொ ருள்களாயுள்ள தனுவாதிகள் உன்னுடைமைகளாம். எங்ஙனமெனில் அவை மாயாகாரியமாதலால், அம்மாயை உனது சத்தியை ஆதாரமாக்கொண்டிருப் பது. அதனால் அச்சத்தி எவ்வாறு சங்கற்பிக்கின்றதோ அச்சங்கற்பவழி தோற்றங்களாம். இவ்வாறாக வென்றெண்ணுகின்ற அச்சங்கற்பசத்தி உன்னு டையது. இவ்வுண்மையால் என்னுடைமையென் றபிமானித்த தனுவாதிகள் மாயாகாரியங்களென்றும் அம்மாயை சடமாதலிற் சித்தாகிய சத்திசங்கற்பத்தி னல் காரியங்களா மென்றும் இச்சத்திக்குச் சத்திமான் நீயேயென்று முணர்ந் தேனாயின் மலமயக்கத்தால் பிறந்திறந்துழலாது உனது செய்நன்றியை நாடி உன்னடிக்கீழ் வாழ்ந்துய்வேன். யான்செய் நன்றியுணராத சிறியேனாதலின் எவ்வாறுய்வே னுய் வேனென்றையுறுகின்றேன் என்பதாம். (௬)

மன்னராவாருறுசுகமும் வானோர்மகிழ்ந்துபெறுசுகமும்
மணிப்பைநாகத்தவர்சுகமு மற்றையோர்களடைசுகமும்
பன்னுமிடத்திற்சிவத்தெழுந்த பரமானந்தலேசமெனப் [றேன்
பகர்ந்தாய்குருவாயெழுந்தருளிப் படிறேன்மறந்திங்குழல்கின்
கன்னலெழுந்ததெளிசேறே கட்டுமாவின்றீங்கனியே
கதலிக்கனியேநற்பலவின் கனகச்சுளையேகதிமுளையே
பொன்னம்பொருப்பேயென்விருப்பே போதச்சுகமேகிஞ்சுகமே
புரணவெளியேயுள்ளொளியே போரூர்முருகப்பெருமானே.

(இ - ள்.) கருப்பஞ்சாற்றில் கோதகன்றெழுந்த இரதமே, ஒட்டுமாவின் இனியசுவைகனிந்த கனியே நல்லவாழைக்கனியே, வேர்ப்பலாவின் பொன் னிறம் வாய்ந்த அழகியசுளையே, அவரவரடையும் கதிகளைக்காட்டும் அங்கு

---

* யான் எனதென்றல் என்பன தனுவையானென் றகங்கரித்தலும் வினை யகரணாதிகளை எனதென்றபிமானித்தலுமாம்.

ரமே, அடியவர்க்குப்போகூழுற்ற விடத்து அப்போகூழைப்போக்கி ஆகூழாக்கவல்லபொன்மலையே, எனது விருப்பைக் கொள்ளைகொள்ளுமென தாசையே, உனதாசையால் என் போதத் தெழுகின்ற ஞானசுகமே, அச்சிவ ஞானத்தையுள்ளவாறு மாறாது போதிக்கவல்ல கிளியே, சிதாகாசரூபமே, அப்பரமாகாசத்தினுள்ளொளியே, திருப்போரூரி லெழுந்தருளிய முருகக்கடவுளே, அரசனனுபவிக்கும் மனுடானந்தமும் தேவர்கள் தமது சுகம் பிறர் அடைதற் கரிதென்று மகிழ்கூறும் தேவானந்தமும், இரத்தினங்கள் ஒளிவிட்டோடும் படத்தையுடைய நாகலோக வாசிகளானந்தமும் இவரொழிந்த ஏனையோரடையு மானந்தமும் ஆகிய இவற்றைக்கூறு மிடத்து பரசிவத்தெழுந்த ஆனந்த சாகரத்தினின்றுஞ் சிதறிய சிறிய திவலையினளவா மென்றுநீ குரவர்சிகாமணியா யெழுந்தருளி எனக்கனுக்கிரகஞ் செய்தனை, தூர்த்தனாகிய யான் அவைபரமானந்த லேசமென்பதனை அறிந்து இம்மனுடானந்தமுதல் இரண்யகர்ப்பானந்தம்வரையிலுள்ள இச்சிறிய வின்பத்திற்கு அப்பரமானந்தம் இலேசமெனக்கருதி இவ்வுலகில் சுகமென் றுழல்கின்றேன் (அந்தோ எனதறியாமையிருந்த வாறென்னை.)

கன்னல் முதலிய சுவையுடைப்பொருள்கள் ஒவ்வோரின் சுவையுடையன, இறைவனருட்சுவையோ அவைபோலாது அவ்வச்சுவையுடைப் பொருள்களெல்லாம் ஒருங்கிசைந்த வின் சுவையாய் மனத்தகத்திருந்து சுவைபெறச்செய்வித்தலின் அப்பொருளின் சுவையெல்லாம் அவனேயாகவும், பிரமனைநோக்கிப் பிரணவம் வினவியகாலத்து அதனுட்பொருளைக் கூறவறியாது அவன் குழறச்சினங் கொண்டு இவனால் சிருட்டிக்கப்படும் ஆன்மாக்கள் எவ்வாறு ஆணவச்சிறையினின்றும் நீங்கி சிவபெருமானடியை யடைந்துய்யும்பேறுபெறுவர் அந்தோவென்றிரங்கி அவனைச் சிறைக்களப்படுத்தி அவனது சிருட்டித்தொழிலை மேற்கொண்டு உயிர்கள்கதிபெறச் சிருட்டித்தனராதலின் கதிமூலையாகவும், ஞானிகள்பால் முன்செய்வினை இங்குளிவாங்குங்கலம்போல் மூண்டகாலத்தும் மெய்ப்பொருள் வயத்தராய் நிற்கநிலை பெறுவித்தலின் பொன்னம் பொருப்பாகவும், அவ்வாறு எனதுதற்போதச் செயலற்ற விடத்துயான் விரும்பிச்செய்வன எவைகளோ அவைகளையே தானும் விரும்பிச் செய்தலின் என்விருப்பாகவும், அவ்விருப்பிற்கு முன்னவனாய் நின்று முட்டின்றி முடித்தலின் போதச்சுகமாகவும், கூறியவற்றைப்பிறழ்வுபடக் கூறாது அவ்வாறே கூறும் கிளியைப்போல் இறைவன் வேதாகமத்தில் கூறிய உண்மைப்பொருளை வினவியகாலத்து ஏனையோர்போல் மாறுபடக்கூறாது உண்மையையே எனக்கெடுத்துக்கூறினாராதலின் கிஞ்சுகமாகவும், எவ்விடத்தும் நிறைந்துள்ள பூதாகாசம்போல் எல்லாவுயிருள்ளும் சின்மாத்திரமாய் நிற்றலின் புரணவெளியாகவும் கண்டேனென்று கூறினானென்க. மனுடானந்த

முதலியனவாகக்கூறப்பட்ட பதினோரானந்தமும் சூதசங்கிதையில் விரித்துக்கூறுதல் காண்க. (எ)

ஓகைபுரிந்துநன்னூலா லுணரத்தகுவவெலாமுணர்த்தி
உறுபேரருளாரியனாகி யுபதேசங்கள்பலமொழிந்தீண்
டாகமருவுமுயிர்க்குயிரா யறியாதனயாவையுமுணர்த்தி [தோ
அடியேன்றனையிங்காண்டுகொண்டவருளுக்கோர்கைம்மாறுள
வாகைபுனைவேலிறையோனே வழுத்துநாலுமறையோனே
வானோர்க்குறுசேனாபதியே மலயமுனிவன்குருபதியே
பூகமலிந்தசெங்குலைக்காய்ப் புடையிற்சிகரக்கயல்பாயும்
பொருவின்மருதச்சூழல்செறி போரூர்முருகப்பெருமானே.

(இ - ள்.) பகைவரைப்போர்முகத்தில் வென்று வெற்றிமாலை புனைந்து வேலைத்திருக்கரத்திலேந்திய இறைவனே, திருவடிகாணப்பெறாது இடைவிடாதரற்றும் இருக்கு முதலிய நான்கு வேதங்களையுடையவனே, இந்திரன் முதலிய தேவர்கள் மனத்துக்கியைந்த சேனாபதியே, முனிவரிற் சிறந்த மலைய மாமுனிவருக் குவந்த ஆசிரியசிகாமணியே, கமுகமரங்களில் நெருங்கியுள்ள சிவந்தகுலைகள் வயலின் வரம்புகளிற் சிதறச் சேற்கண்டைகள் பாயும் ஒப்பில்லாத மருதநிலஞ்சூழப்பெற்ற திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளே, நீ பேரருள் நிறைந்த குருமூர்த்தியாய் என்னையுமோர் அதிகாரியென வெண்ணி மகிழ்ந்து சிவாகமங்களாலாராய்ந் தறியத்தக்கனவாகிய முப்பொருள்களை என்னறிவிற் கறிவுறுத்தி, அவ்வறிவுறுத்தியபொருளை அகத்தின்கண் சிந்திக்க வேதமகாவாக்கியங்களைப்பல முறையுபதேசித்து அவ்வாக்கியத்தால் றொம்பதலக்ஷ்யமாகிய என்னையும் தத்பத லக்ஷ்யமாய் எனக்கு ஆதார மாகிய பிரமத்தையுந் தோன்றாது அனாதியேமறைத்திருந்த அஞ்ஞானமும் அவற்றின் காரியங்களையும் நன்குணர்த்தி இவ்வுண்மை விசாரத்தாலென்னைத்தானாக்கி அடிமைகொண்ட உனதுபெருங்கருணைக்கு சிறியதோர் கைம்மாறு எனக்கியற்றவுமுளதோ. (இல்லையென்றபடி.)

நூல்கள் என்னாது ஒருமையால் நூலென்றும் அது நன்னூலென்றுங் கூறியதால் ஆகமமென்றும், ஆகமருவு முயிர்க்குயிராய் அறியாதன யாவையுமுணர்த்தி யென்றதை ஆகமருவும் உயிரொன்றும் அவ்வுயிர்க்குயிராயென்றும் அறியாதன யாவையென்றும் கண்ணழித்து ஆகமருவும் உயிரொன்றதனை ஆன்மாவென்று குறிப்பதற்கு என்னையென்றும், உயிர்க்குயிரொன்றதனை பதியென்று குறிப்பதற்குப் பிரமமென்றும், அறியாதனயாவையும் எனப்பன்மையாகக் கூறினமையால் பாசந்திரிவிதமென்று குறிப்பதற்கு அஞ்ஞானமும் அவற்றின் காரியங்களென்றும் பொருள்கொண்டாம். ஆகமத்தை நன்னூலென்றது இறைவன் தனக்கு அருள்மூர்த்தியாய் அனுக்கிரகஞ்செய்யக் கைக்கொண்டமையானும் அதனை நல்லநூலென்றது திரிபதார்த்தங்களை இல்

பொருளாகக்கூறும் ஏனைய நூல்கள்போலாது உள்பொருளாகக்கூறி என்ஞண்டவனுக்கு என்னை யடிமையாக்கிமையானுமெனவுங் கொள்க. (அ)

வேதமுடியினுறுபொருளை விரிபூமிசைச்சேவடிபொருந்த
விகிர்தகுருவாயெழுந்தருளி விளம்புமவித்தையிருளிரிய
ஓதுமணியேயடியேனுன் னுபயசரணமறந்தாலும்
உறுபேரருளான்மனந்திருத்தி யுயரச்சரணத்திருத்தாயே
நாதமளிக்குங்குரற்புலியி னகம்போற்றுண்டச்செஞ்சூட்டு
நலத்தபொறிச்செஞ்சிறைச்சேவ னளின்க்கரத்திற்பிடித்தோனே
பூதகணங்கள்கொண்டாடப் பொருசூர்குலவேர்களைந்தவைவேல்
புனிதப்புயத்தின்மிசையேந்தும் போரூர்முருகப்பெருமானே.

(இ - ள்.) நாததத்துவ வொலியைக்காட்டுங் குரலையும் புலியினகம்போற்றுண்டமாகத் தோன்றும் செவந்த கொண்டையையும் நல்ல பொறிகளையும் சிறகுகளையுமுடைய சேவற்கொடியைத் தாமரைமலர்போன்ற திருக்கரத்தில் விருதாகப்பிடித்திருக்கும் வெற்றிப்பாட்டையுடையவனே, படைத்துணையாய்வந்த பூதகணங்கள் இப்போர் இது காறும் செய்தார் யாரொன்று பன்முறையும் விசயமெடுத்துக்கூறப் போர்க்களத்தில் சூரபன்மனை இருகூறுக்கியதேயன்றி, அவனது குலத்தையும் வேரோடுகளைந்து சூறையிட்ட கூரிய வேலாயுதத்தைப் புனிதம்வாய்ந்த திருமார்பிலென்றுஞ் சார்த்தியருளிய திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளே, வேதாந்தத்தி னுட்கிடைப்பொருளைப் பரந்த பூமியின்கண் பொன்போலுஞ் செவ்விய திருவடிபொருந்த விகிர்தகுருவா யெழுந்தருளிவந்து, நூல்களெடுத்துக்கூறும் அஞ்ஞானவிருள்நீங்க ஞானவொளியைக்காட்டும்மணியே, அடியேன் உனதுபயசரணங்களை மறந்தேனுயினும் என்னிடத்துப் பொருந்திய உனது பேரருளால் மனத்தைத் திருத்தி அடியார்களுயர்த்திக்கூறு மந்தச் சரணத்தை யிருத்தியருளாய்.

சேவற்குரலை நாதமளிக்குங் குரலெனவும், அந்நாதவொலியாற் கூவுகின்றதனுல் அதனை விருதாகத் திருக்கரத்தில் பிடித்தோன் எனவும், வைவேலைப் பூதகணங்கள் கொண்டாடப் பொருசூர்குலவேர் களைந்ததெனவும், அதனைப் புயத்தின்மிசையேந்துமெனவுங் கூறினர். துன்பமகற்றி யின்பந்தருளுமிறைவன் இம்முருகக்கடவுளேயென்று யாவர்க்கும் அறிவுறுத்தற்கென்க. நாதவொலி என்பது பேரொலியாகிய பிரணவமாம். அது ஒலிவடிவாயிருக்கின்ற வேதமுற்றுந் தன்னுள்ளடக்கி ஆதியினு மந்தத்தினும் ஒலித்தலால் பேரொலி என்றும். அவ்வொலியையே செஞ்சூட்டுச் சேவல் இடைவிடாதரற்றுகின்றதென்க. அன்றியும்பிரணவத்தைத் தமது தந்தையார்க்கு ஓர்காற் கூறினர் அதுபோலும் மலவாசிகளாயுள்ள ஆன்மாக்களுக்கு ஓர்காற் கூறப்

புகின் அவர் அதன்பொருளுணராராதலின் அதனைப் பலமுறையுமோதப் பிடித்தனவெனக் கொள்ளலுமொன்று.

வைவேல் ஆன்மாக்களுடைய மாயாபாசத்தையொழித்து ஞானசத்தியையளிக்கும் இறைவன் இம்முருகக்கடவுள்தானென்று ஒளிவீசுதலால் திருமார்பிற் சார்த்தியென்றார். அன்றியும் சண்முகன் சேவற்குரலால் சரணடைந்த ஆன்மகோடிகளைநோக்கி இதோ வேலாயுதமிருக்கின்றது அஞ்சலியொன்று அமைத்ததுபோலுமாம். இவ்வேலாயுதம் மாயாபாசத்தையொழிக்குமென்றதை இங்குள்ள பூதகணங்களுமெடுத்தெடுத்துரைக்கின்றனஎன்றார். எடுத்தெடுத்துரைத்தலென்றது பானுகோபனும் சூரபன்மனும் போர்முகத்தில் எல்லாப்படைகளையுமிழந்து இறுதியில் மாயப்படையையெடுத்து பெருமான் மனத்துக்கினிய அன்பராகிய வீரவாகு தேவர் முதலியோர் மாட்டேவ அதனால் அவர்கள் சிமிழ்ப்புண்டகாலத்து அப்படையைப் புறந்தந்தோடச் செய்தது இவ்வேலாயுதந்தானென்றும், சூரனென்னும் பெயரைத் தனக்கேயுடைய சூரபன்மன் செய்த மாயைகளையு மவனேவிய மாயைப்படையையு மோர்கணத்தில் மாற்றி அம்மாயைக்கிடனாயிருந்த அவனெஞ்சத்தையு மிருகூறாகச்செய்ததும் இவ்வேலாயுதந்தானென்றும் நக்கீரதேவரைக் கல்முழையினின்றும் மீட்டதும் இவ்வேலாயுதந்தானென்று மிவ்வாறு அவ்வேலாயுதத்தின் வெற்றியெல்லாம் புகழ்ந்து கூறுதலாம்.

இதனால் சாமிநாதனே ! உமது சேவல்யாவரையும் அழைக்கின்றது, சத்திவேல் பாசத்தைப் போக்குகின்றேனென்கின்றது, சேனைகள் வீரத்தையெடுத்துரைக்கின்றன, இவையன்றி நீயே குறுமுனிமுதலியோர்க்கு உபதேசகுருவா யெழுந்தருளி யனுக்கிரகமுஞ்செய்திருக்கின்றனை. அதனால் உனது உபயசரணங்களை யான் மறந்தேனாயினும் நீயே யென்னையழைத்துப் பாசத்தைப்போக்கி ஞானசத்தியைப் பதிவித்து அருளிலிருத்துவாய் ; இருத்தாதொழிதியேல் பூதகணங்கள் கூறும் புகழுரை பொய்யுரையாம், என்னொருகுற்றத்தைநாடி உனது புகழுரைக்குமாறு செய்தல் நன்றன்றென்பதாம்.

ஞானசாதனம் வருவிப்போன் வாசககுருவும், அச்சாதன முடையோனுக்கு ஞானநூலெடுத்துக் கூறுவோன் காரியகுருவும், அவ்வுபதேசத்தால் அஞ்ஞானத்தைப் போக்கி முத்தியின்பத்தையளிப்போன் விகிர்தகுருவுமாதலால், விகிர்தகுருவா யெழுந்தருளி விளம்புமவித்தை யிருளிரிய வோதுமணியே என்றார். (௯)

அலையிலாதசாகரம்போ லனிலஞ்சேராவிளக்கதுபோல்
அருங்கலிரும்பொன்சமமாகியானதராசினுனியதுபோல்
நிலையொன்றியநற்சமாதியுற்றுநின்றாட்கமலத்தெழும்பிரச
நிறைவாரிதியிற்புகுந்ததனினேசித்தடியேனிருப்பேனோ

விலையின்மகுடத்திருமுடியாய்மிளிர்குண்டலங்கள்செறிகாதா
　　வியன்கேயூரத்திருத்தோளாவிஞ்சுஞ்சதங்கைசூழ்தாளா
புலையுங்கொலையுங்களவுமில்லாப்புனிதத்தவத்தோர்தொழுதேத்தும்
　　புராரிகுமராவுமைசிறுவாபோரூர்முருகப்பெருமாளே.

(இ - ள்.) விலைவரம்பறியாத இரத்தின மகுடமணிந்த திருமுடியை யுடையவனே, விட்டுவிட்டொளிவீசும் மகரகுண்டலஞ் செறிந்த திருச்செவிகளை யுடையவனே, பரந்த வாகுவலயமணிந்த திருப்புயங்களை யுடையவனே, ஒலிக்குஞ் சிறுசதங்கையணிந்த திருவடிகளையுடையவனே, கொலை களவு கட்காமங்களை யடக்கிநிற்கும் புலைத்தொழிலாகிய இவற்றைக்கடிந்து பசுகரணங்களைச் சிவகரணங்களாக்கித் தவமியற்றும் சிவஞானிகள் வணங்கித்துதிக்குந் திரிபுரத்தையெரித்த சிவபெருமான் றிருக்குமாரனே, உமாதேவியார் தழுவியெடுக்கப்பட்ட குமாரனே, திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளே, அலையில்லாக்கடல்போலும் காற்றில்லாத் தீபம்போலும் அரிய கல்லையும் மாற்றுயர்ந்த பொன்னையும் சமமாக்கி நடுவே நிற்பதான துலாக்கோல்போலும் நிலைபெற்ற நல்ல சமாதியைப்பொருந்தி, உனது திருவடித் தாமரையிற் பெருக்கெடுத்தொழுகும் ஆனந்தத்தேனிறைந்த கடலில் இழிந்து அம்மதுவை விரும்பி யடியேனுமிருக்கப் பெறுவேனோ கூறாய்.

மகுடம் குண்டலம் கேயூரம் சதங்கை ஆகிய இவ் வணிகள் வேதமந்திரங்களாதலால் அவ்வணிகளிற்சிறந்த முடியை எடுத்துக்கூறி விலையின்மகுடமென்றார். அதனாலேனை யணிகளும் விலையிறந்தனவேயாம். பாதகங்களைந்தாக இங்குபுலைகொலை களவு எனமூன்றாகக் கூறுதலால் கள்ளுங் காமமும் உபலக்கணமாக அடக்கிக்கூறினாரெனப் பொருள்கொள்க. கொலையுங் களவுங் காயத்தாற்செய்யப்படுவது. காமம் மனத்தான் நினைக்கப்படுவது. கள் வாயால் நுகரப்படுவது. ஆதலாலிவ்வைந்தும் திரிவிதகரணங்களியக்கமெனக் கொள்ளலுமொன்று. இவ்வைந்துபாதகங்களன்றி பரிகாரவியலிலடங்காத மகாபாதகங்களுமுள்ளன. அவற்றை யொழித்தருள்வோன் மாபாதகந்தீர்த்த சோமசுந்தரக்கடவுளேயன்றி வேறிலையென்றறிந்து, அவ்விறைபணிநிற்குந் தவமே தவமாதலின் புனிததவத்தோரென்றும், அத்தவமுடையோர் சிவஞானிகளாதலானும், அவர்களால் தொழப்படுவோன் புராந்தகன் ஆதலானும் புனிததவத்தோர் தொழுதேத்தும் புராரியென்றுங் கூறினார். புராரிகுமரா உமைசிறுவா என இரட்டுறமொழிதலால் குமாரக்கடவுள் இறைவன் நெற்றி நாட்டத்தினின்றுந்தோன்றிய ஆறு அனற்பொறிகளாதலால் புராரிகுமரா எனவும், அவ்வாறு பொறிகளும் சரவணப்பொய்கையில் ஆறுகுழந்தைகளாய் கார்த்திகைமுதலிய அரிவைமாரிடத்துத் திருவிளையாடல்புரிந்திருக்குங் காலத்து இறைவன்

இறைவியோடும் அச்சரணவப்பொய்கையையடைய ஆங்குப் பிராட்டியார் சிவநேத்திரோற்பவமாகிய அவ்வாறு குழந்தைகளையும் தமதுபய திருக்கரங்களால் தழுவியெடுத்து ஓர் திருவுருவமாக்கி உச்சிமோந்து பாலூட்டிக் கந்தனென்னுந் திருப்பெயரிட்டழைத்தனராதலால் உமை சிறுவாயெனவும் கூறினாரெனக்கொள்க.

சிவமும் சத்தியும் எல்லாவுயிர்க்கும் இன்பந்தருவோர், அவ்விருவருக்கும் இன்பந்தருவோன் நீ, உனதின்பப்பெருக்கிற்கு வாயில் உனது தாட்டாமரைமலர், அம்மலர் ஆயிரமிதழ்களோடு பிரமரந்திரத்தினின்று விகசித்து அமிர்ததாரையைப்பொழிவது, அவ்வமுததாரையைச் சிவயோகமுடையார் தூலதேகவிசுத்தமுடையராய் பின்னர் சூக்குமதேகவிசுத்தமுடையராய் இவ்விரண்டு சரீராதிஷ்டிதமாயுள்ள தத்துவங்களை நீருக்கிப் பின் நாடிவழியால் பருகி அவ்வமிர்தத்தால் வியாபிக்கப்பட்டு அதனால் பரசரீரத்தையடைவர். அச்சரீரதாரிகளாய்த் தூல சூக்கும தத்துவங்களியக்கமின்றி யாவுஞ் சிவகரணமாய்நல்ல சமாதியிலிருந்து பகிர்முகமற்று அந்தர்முகிகளாய் இருதயகமலம், நாபிகுண்டம், பிரமரந்திரம் இம்மூன்றிடத்தும் முறையே உருவம் அருவம் அருவாருவம் ஆகிய திருமேனிகளை அர்ச்சனையாலும் ஓமத்தாலும் தியானத்தாலும் தான் கெட்டுக்கெடாதும், பாசங் கெட்டுக்கெடாதும், பதியாகிப் பதியாகாதும் நேசத்தோடிருப்பர். இச்சிவயோக முடையா ரியற்றும் யோகமும் அவ்யோகத்தாலடையுஞ் சமாதியும் அச்சமாதி குலையாது மேற்கூறிய அம்மூன்றிடத்தும் நேசிக்கும் நேசமும் எனக்கெவ்வாறுகிடைக்கும், எவ்வாறுநிற்பேன், அந்த நற்சமாதி அலையிலாத சாகரம்போல் அனிலஞ்சேரா விளக்கதுபோல் அருங்கல் இரும்பொன் சமமாகி ஆன தராசினுனியதுபோல் ஒன்றியநிலை ஆதலால் நீயே கூறியருளாய் என்றவாறும். (௧0)

பெருங்கழிநெடில்விருத்தம் முற்றிற்று.

வேலுமயிலுந்துணை.

# குயிற்பத்து.

## ஆன்மவிரக்கம்.

குயில் முல்லைநிலத்துள்ள மாமரத்திலிருந்து கூவுதலியல்பாதலால் அந்நிலக் கடவுளாகிய திருமாலுக்கு முருகக்கடவுள் மருகனென்னுமவ்வொற்று ஐமைகருதி அக்கடவுள்பாலிரக்கும் ஆன்மவிரக்கத்தை குயிலுக் கெடுத்துக் கூறுதலால் குயிற்பத்தெனக் கூறினார்.

### எண்சீர்க்கழிநெடிலாசிரியச் சந்தவிருத்தம்.

நன்றருளுதவைங்கரவன்றுணைவனை
நனிபனிமலைமகண்மகனைக்குகனை
மன்றினுளாடியகொன்றைச்சடைமுடி
மன்னனுவப்புறுபொன்னங்குழவியைக்
கன்றுகுறுந்தடியாவிளவெறிதரு
கண்ணன்மருகனையெண்ணுந்துணையைக்
குன்றுதொறாடியபோரூரிறையைக்
கூவாய்வரநீகூவாய்குயிலே.

(இ - ள்.) நன்மையைவிரைந்தருளும் ஐந்து திருக்கரங்களையுடைய கணபதியின் துணைவனை, மலையரையன் புத்திரியாகிய உமாதேவியின் புத்திரனை, அன்பரிதய குகையின்கண்வாழும் ஞானவொளியனை, பொன்னம்பலத்தின் கண் ஆனந்த நடனம்புரியுங் கொன்றைமாலைசூடிய சடாமுடியையுடைய இறைவன்மகிழ்கூறும் பொன்போன்ற செந்நிறச்செல்வனை, கன்றினைக் குறுந்தடியாகக்கொண்டு விளாங்கனியெறிந்து அவ்வசுரரிடர்போக்கிய திருமால் மருகனை, அன்பர்களெண்ணுந்தோறுந் துணையாயுள்ளவனை, ஆறு திருப்படைவீடேயன்றிக் குன்றுகள்தோறும் விளையாடியருளும் திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளை, குயிலே நீவரக்கூவாய் கூவாய்.

ஐந்து திருக்கரங்களையுடைய விநாயகக்கடவுள் துழாவுந்தொழிலமைந்த துதிக்கையால் மக்கட்பிறப்பினரில் சத்திநிபாதத் துத்தமரைக்கைக்கொண்டும், அவரது பாசத்தைப்போக்க அவரது அன்பைப் பாசமேந்திய திருக்கரத்திலேற்றும், அவரது தற்போதத்தை அங்குசமேந்திய திருக்கரத்தால் தோன்றுவாறு குன்றச்செய்தும், ஆணவசத்தி குன்றிய அவர்க்குக் கனியேந்திய திருக்கரத்தால் வேதக்கனியைத்தந்தும் அருளுதல் அருளின்றன்மையென்பார் நன்றருளுதவுமெனவும், அவ்வேதக்கனிக்குப் பொருளுரைக்கும் முருகன் ஐங்கரனிளையோனென்பார் ஐங்கரன்றுணைவனை எனவும், வேதப்பொருளாகிய சிவதத்துவத்தைத் தியானிக்கின்ற அடியவர்களுக்கு வருமிடையூற்

றைப்போக்குவானென்பார் எண்ணுந்துணையை எனவும், திருப்பரங்குன்ற முதலியவற்றைத் திருப்படைவீடாகக்கொண்டருளும் அத்துணைவன் அடியார் வேண்டியாங்கருளுமியல்பினனென்பார் குன்றுதோறாடிய போரூரிறையை யெனவும், உலகுநீரின்றியமையாது அந்நீரும் மேகமின்றியமையாது அற்றாக லின் அந்நீருண்ட மேகம் வருதலை முன்னருணர்த்தல் குயிலின் குரலென்பார் குயிலே எனவும், குயில் உலகினைக்காக்கும் நீருண்ட மேகத்தைச் சேய்மைக் கண்கண்டபோதே கூவுந்தொழிலுடையதாதலால் யான் பிறவிவெப்பமொழிய திருப்போரூரிலெழுந்தருளியிருக்கும் அருண்மேகத்தைக் காணப்பெறாது சோர்கின்றேன் நீ கண்டு வரக்கூவுவையாயின் உயிர்வாழ்வேனென்பார் நீ வரக்கூவாயெனவுங் கூறினார்.

கூவாய் கூவாய் என்ற அடுக்கு விரைவுபற்றி, அன்றியும் என்னகங்குளி ர எனவும் என்னுள்ளங்குளிர எனவும் பொருள் கொள்ளுதலுமொன்று. (௧)

மறைமுடிகுலவியபிரமரசத்தினை
    மருவடியவருளமலர்வாசத்தினை
நிறைசரவசரவுயிர்ப்புரணத்தினை
    நிமலகதிக்கொருவித்தினைமுத்தைச்
சிறைமயிலுதயசடானனரவியைத்
    தேவர்கடொழவருதேவைக்காவைக்
குறைவறுவளநிறைபோரூரிறையைக்
    கூவாய்வரநீகூவாய்குயிலே.

(இ - ள்.) வேதசிரசில் குலாவிவிளையாடும் பிரம ரசத்தை, திருவருள் பெற்ற அடியாரிதயகமலத்தின்கண் மணஞ்செய்யும் மணத்தை, இயங்கியற் பொருளும் நிலையியற்பொருளுமாயுள்ள உயிரின்கண் நிறைந்திருக்கின்ற பரிபூரண சொருபத்தை, மலரகிதமாகிய சித்தாந்தக்கனிவிளையும் ஓர்வி த்தை, அன்பர்கள்விடயவெப்பொழிய அணியுமுத்தாரத்தை, இறகுகள் செறி ந்த மயில்வாகனத்தின்மீது ஆறுதிருமுகங்களோடும் வருகின்ற இரவியை, இந்திரன் முதலிய தேவர்கள்வணங்க வரும் பெரியதெய்வத்தை, வினையமக் கட்பிறப்பினர்க்கெல்லாம் தண்ணிய வருணிழலைச் செய்யுஞ்சோலையை, செ ல்வத்துட்சிறந்த அருட்செல்வம் நிறைந்த திருப்போரூரிலெழுந்தருளிய முரு கக்கடவுளை குயிலே நீவரக்கூவாய்.

அனுக்கிரகசத்தியொன்றேயுடைய பராசத்தியுக்தமாகிய பரப்பிரமமும், அருட்சிந்தனைவசத்தராகிய அடியாரிதயத்தின்கண் விளங்கும் சிவமும், அத் வைத விலக்கணத்தால் சரவசரங்களில் நிறைந்திருக்கின்ற அருளும், அவ்வ ருளே திருமேனியாகவரும் குருவடிவும், அவ்வருட்குறியைக்காட்டும் சங்கமவ

டிவும், தேவர்கள் வேண்டுகோட் கிரங்கியருளத் திருவுருக்கொண்ட இலிங்க வடிவும், எல்லாவுயிர்களுக்கும் தன்னருட்குடை நிழற்றச் சிருட்டியை மேற்கொண்டு சாத்த கடவுளும், திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளே என்பார் பிரமரசத்தினை அடியவருளமலர்வாசத்தினை, சரவசரவுயிர்ப் புரணத்தினை, கதிக்கொருவித்தினை, முத்தை, சடானனரவியை, தேவர்கள் தேவை, காவை, போரூரிறையை என விதந்து கூறினர்.

இதனால் பரப்பிரமமும் சிவமும் அருளும் அவ்வருளாற் கொள்ளும் குருலிங்க சங்கமவடிவுமாகிய இவ்வாறும் அறுமுகக்கடவுளேயெனக்கொள்க.

சிறைமயிலுதயசடானன ரவியை என்றது சூரியன்தோன்றுதல் நீலநிறத்தையுடைய கடலினுள்ள உதயகிரியின்கண் ணாதலால் அது போலும் சடானனரவியும் கடல்போலும் பரந்தகலாபத்தையுடைய மயூரமலையின்மேலெழுந்தருளுதலால் கலாபத்தைக் கடலாகவும் மயூரத்தை மலையாகவும் சடானனை இரவியாகவும் உருவகஞ்செய்தமைகாண்க. இதனை 'உலகமுவப்பவலனேர் புதிரிதரு பலர் புகழ் ஞாயிறு கடற்கண்டாங்கோவறவிமைக்குஞ் சேண்விளங்கவிரொளி' என்றதற்கு நச்சினார்க்கினியர் கூறுதலானு முணர்க. ஓர் முகத்தையுடைய இச்சூரியன் ஊனக்கண்ணை மறைக்கும் பூதவிருளொன்றனையே யொழிக்கவல்லும், அகவிருளையொழிக்கவல்லதன்று, புறத்தே காணப்பெறாத அகவிருள் ஆன்மாக்களுடைய ஆறத்துவாக்களிலும் நிறைந்துள்ளதாதலால் அவற்றை யொழிக்க அவ்வாறு திருமுகங்களும் வல்லனவென்றுபொருள் கொள்ளுதலுமொன்று. (௨)

அரிவையரெனவருகாகத்திரள்களை
யணுகேன்மயலெனுமலகானலியும்
இருநிதிசுதரெனுமேகமெழுந்திக்
கெய்தேல்கவலைத்திவலைகள்வீசும்
பொருவருசமயக்காடணுகேறற்
போதமுரத்தெழுவாதமலைக்குங்
குருபரனநம்போரூரிறையைக்
கூவாய்வரநீகூவாய்குயிலே.

(இ - ள்.) மாதர்களென்று வருகிற காகக்கூட்டங்களை நெருங்காதே, மயக்கமென்கின்ற அலகையால் காவலுற்றிருக்கும் பெருஞ்செல்வமும் மக்களும் என்றுசொல்லப்பட்ட மேகங்களெழும் திசையையணுகாதே, மாறுக்கவலையென்கின்றதேன்துளிகளைச்சிதறும் ஓன்றுக்கொன்றோங்கி வளரும் சமயங்களென்கின்ற காட்டையடையாதே, குயிலே நீ, ஆன்மபோதம் வலிமைபெற்றெழும் ஆன்மவாதத்தை (மாயாவாதத்தை) அலைத்தகற்றும் நமது குரு

பரனை, திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளை, வரக்கூவாய் வரக்
கூவாய்.

காக்கை நிறத்தால் ஒற்றுமையுண்மையால் குயிலே நீ இனமென்று கரு
தாதே என்பார் காகத்திரள்களையணுகேலெனவும், நீமேகமெழும் வடதிசை
யை நோக்கி யொலித்த லியல்பாதலால் நம்மிறைவன் வரும் வடதிசையன்று
இது, எமதிசையென்பார் திக்கெய்தேலெனவும், நீசோலையைச்சென்றடைதல்
உன் செயலாதலால் அதுசோலையன்று பறவைகள் உலவாத அடவியென்பார்
காடணுகேலெனவும், நீகாற்றைக்கண்டு மேகமெழுதலை யூகிக்குமூகமுடைமை
யாதலால் இது காற்றன்று இது மாயாவாதமென்பார் வாதமெனவுங்கூறினார்.

இதனால் இனமென்றெண்ணியது காக்கைகளென்றும், மேகங்களெ
ன்று குறித்தது அலகை விரும்பும் பொருள்களென்றும், சோலையென்று
பார்த்தது காடென்றும், காற்றென்று யூகித்தது வாதமென்றுங் காட்டினே
னாதலால் குயிலே நீ உன்னைமயக்கிய அவைகள் என்னை மயக்காவாறு அவ்வ
வற்றின் நிலை கலங்க அறிவுறித்தியொழித்தருளிய அருண்மேகத்தைக்கண்டு
கூவாயென்றவாறும்.

ஈண்டுக்குயிலென்றது மனமாதலால் அம்மனத்தைநோக்கி மனமே நீ என
க்குத்துணையாயுள்ளாய், யான் ஓர் பேரின்பத்தை விரும்பி உனக்குத்தெரிவித்
தேன், அதனை நீ எனக்களிக்கவேண்டி அவ்வின்பத்தைத் தருவோர் அரிவை
யரென்றெண்ணினாய், அவர் உயிர் நீங்கிய உடலை இறையெனக்கொத்தித்தின்
னும் காக்கைபோல்வார், அவ்வரிவையர் என்னை யோர்காலன்றிப் பலகாலும்
வர்தித்தலால் காகத்திரள்களாம். நிதியும் மக்களுமோ எனின் பேய்பிடியு
ண்டானொருவன் தன்னறிவு கெட்டுப் பேயனாய் நலியக் காண்கின்றோம், அ
துபோலும் நிதியென்பது பெண்பேய் மக்களென்பது ஆண்பேய் இவ்விரண்டு
பேயின் வசப்படுவேனாயின் அறிவிழந்து துன்புறுவேன், ஆதலால் நிதியும் மக்
களும் அலகைகளாம். அன்றியும் நிதியும் மக்களும் இயமன் என்னைப்பற்றி வ
ரவிடுத்த தூதாதலால் அவற்றின் கண்களுக்குப் புலப்படுவேனாயின், என்னைவி
டாது துன்பப்படுத்தும், அவ்விரண்டும் நரகந்தோன்றுந்திக்காம். இவையொ
ழித்து சமயங்கள் தெய்வங்களை நோக்கிவழிபடுதலால் அச்சமயங்களை நாடுவை
யேல் அவை யான் கருதிய தெய்வத்தை யடைவிக்கும் மார்க்கங்களேயன்று,
சிற்றஞ் சிறுதெய்வங்களையடைவிக்கு மார்க்கங்களாம், அத்தெய்வங்களோ
சில்லாண்டிற்சிதையுஞ் சிற்றஞ்சிறுதெய்வங்களாம், ஆதலால் அவை பேரின்பந்
தருவனவன்று. அன்றியும் சூரபன்மன் முதலிய அசுரராற் கவலையுற்றுத் திவ
லையைப்போலும் கண்களினின்றும் நீரைச்சொரிகின்றன, அதனால் எனது பிற
விவெப்பமொழிக்கும் அருள்செறிந்த சைவசமயமாகிய சோலையன்று. அத்

தெய்வங்கள் கூடிக்குலாவும் இருளடைந்த புறச்சமயங்களாகிய காடாம். ஆயின் பலசமயமார்க்கங்களைக்கடந்து பிரமவிசாரஞ்செய்வோரை நோக்குவையேல் அந்தோ! அந்தோ! என்னை வைப்பரோ வையார்! வையார்! அவர்நாமமும் உரையாதே அவர் பிரமத்தையே அனவரதமும் எடுத்துக்கூறுவாரைப் போல் பிரமம் பிரமமென வாயாற்கூறிக் கணத்திலழியுந் தம்மையும் கரணத்தை யோகத்தாலழியும் தமது சிற்றறிவையுமே அனுபவத்தி லுரம் பெறநிலை நாட்டுவர், ஆதலால் தற்போதமுரத்தெழுவாதமாம். இப்புறச்சமய நெறிகளெல்லாம் புறந்தந்தோட ஆன்மவறிவுசெல்லுமிடமெல்லாங்கழித்து அறிவுசெல்லாவிடத்துத்தோன்றும் முருகக்கடவுள் கட்புலனுறத்தோன்ற திருஞானசம்பந்தனென்னுந் திருநாமங்கொண்டு சீ காழியில் வந்தருளினனாதலின் அக்குருபரனையே வரக்கூவாய் என்றதன்றி நீ யழைப்பதற் கிரங்கிவந்தருளின் என்னைக் கழித்தடித்தார்க்கும் மாயாவாதமொழிந்து திருவடிப் பேறெய்துவேன் என்றுந் தமது திருவுள்ளத்தை வெளியிட்டவாறுமாம் என்க. (௩)

கயவர்களெனும்வல்லூறுகளிக்குங்
காடணுகேறீதுகிருடறைக்கும்
மயன்மிகுமுலகவர்வாழ்வெனுமொட்டினை
மதியேலதுமதிவன்சிறைபற்றும்
உயுநெறியினராங்கிள்ளைகளுடனே
யுயர்நூற்கற்பகதருவிலிருந்து
குயின்மணிமாடப்போரூரிறையைக்
கூவாய்வரநீகூவாய்குயிலே.

(இ - ள்.) மக்கட்பதடிகளென்னும் கருக்குருவி யின்புற்றுலாவும் கண்டுகேட்டுண்டுயிர்த்துற் றறிதலாகிய பலன்களைத்தரும் ஐம்புலக்காட்டை யணுகேல், (அணுகுவையேல்) அவ்வல்லூறின் கொடிய நகங்களுடலைத்தைக்கும், மயக்க மிகுந்த உலகினர் வாழும் ஒட்டுவாழ்வினைப் பொருளாக மதிக்காதே, (மதிப்பையேல்) அதுஅறிவைச் சிறைப்படுத்தும் வலியபற்றும், (ஆகையாலவற்றையொழித்து) உய்ந்துபோம் நன்னெறியையுடைய அடியாராகிய கிள்ளைகளோடுகூடி நல்ல வேதாகமமென்னுங் கற்பகத்தருவிலிருந்து, இரத்தினங்களிழைத்த மாளிகைகள்சூழ்ந்த திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளைக் குயிலே நீ வரக்கூவாய்.

குயிலே நீ கயவர்களென்னும் வல்லூறின் கண்களிற்படில் மீளாய், அவை பறவையினங்களைக் கொல்லும் வன்மையை யுடையன, உனக்கவ்வன்மையின்மை யாதலால் கயவர்களெனும் வல்லூறின் நீது உகிர் உடல் தைக்குங் காடணுகேலெனவும், எனதுவாழ்க்கைக் குரியாரோடு செல்வேனெனின்

இஃதென்னமடமை இல்வாழ்க்கையரும் உன்னுடன் வருந்துணையாவரோ? அந்தோ! அவர்பொருட் பற்றுள்ளவரையன்றோ வொட்டிவாழ்வர். அப்பற்றொழியின் வாழ்வரோ வாழார். அன்றி மதிப்பரோ மதியார்! மதியார்!! இதனை நீயறியாயாதலால் உலகர்வாழ்வெனு மொட்டினை மதியேல் எனவும், யான் கூறியதைமறந்து அம்மயக்கில் மயங்குவையாயின் அது உன்னைச்செல்லவு மொட்டாது, சிறையிலும்வைக்கும், அறிவையுமயக்கும், ஆதலால் அதுமயன் மிகும்மதி வன்சிறைபற்று மெனவும், இனி நீ அவர்பற்றையொழித்து உயிர் போங்காலத்து உற்றதுணையாகிய பொன்னம்பலக் கூத்தனை நாடிச்செல்லும் அன்புநெறியிற்றலைப்பட்ட சுகவான்களோடு கூடிக்கலந்து இறைவனூல் என்னுந்தருவிலிருந்து அவரோடும்நீயும் அழைப்பையாயின் எம்பெருமான் விரைந்துவருவான் ஆதலால் உய்யுநெறியினராம்கிள்ளை களுடனே யுயர்நூற் கற்பகதருவிலிருந்து போரூரிறையைக் கூவாயெனவுங் கூறினர்.

கயவராவா ரிவரொன்றுமுன்கூறியிருக்கின்றோம். அக்கயவர்காண்டல் முதலிய விடயங்களைப் பற்றிவரும் சுகதுக்கங்களில் கைப்புறாது அவனவளது வென்னு முன்னிலையில் இராகத்துவேடங்கொண்டு தாவிச்செல்லுதலால் அவரை வல்லூறாகவும், அவரனுபவிக்குஞ் சுகதுக்கங்கள் மாறிமாறிவருங் காலத்தும் அன்றிப்பலகால்வருங் காலத்தும் அவற்றின் நிலையாமையையுமுணராது தன்போகம் ஒன்றனையேகருதிப் பிறவுயிர்க் கிடுக்கண்செய்து களித்தலால் அக்களிப்பு வல்லூறின் களிப்பாகவும், இக்கொடுஞ் செயலுடையார்க்கிடம் ஐம்புலவேடர்வாழும் உலகமாதலால் அவற்றை வல்லூறுவாழும் காடாகவும், ஐம்புலன்கள் இருவினை விளைச்கு முதலாதல்ால் அவற்றையுகிராகவும், அவ்வினையால் உடல்வருதலால் உடல்தைக்குமெனவும், வினைவசத்தராகிய அவர்க்கு மயக்கவறிவைத்தரும் ஏனையகரணபுவன போகங்களும் மாயாமலத்தின் காரியமாதலால் மயன்மிகுமுலகு எனவும், இவ்வினையாள ரெல்லாந்தம்மிற் கூடித் தத்தமில் பரிவர்த்தனை செய்யக்கூடிய சந்தையிற் கூட்டமாய் அவைநிலைபெறா ஆதலால் அவர் வாழ்வெனு மொட்டினை மதியேலெனவும், நீ இவ்வுண்மையையுணராத பறவையாதலால் அச்சந்தைக்கூட்டத்திலெங்கும் ஈதனனூல் பயிலும் மாதரொன்னும் குயில்களுலாவும், அவற்றைக்காண்பையாயின் அப்புறஞ்செல்லாது அவர் கண் வலையிற்பட்டு மாய்வையாதலால் அதுமதிவன் சிறைபற்றுமெனவும், நானெவ்வாறு தனித்துச் செல்வேனெனின் உனக்கு இனம் கிள்ளைகள் அவைசுகமென்னும் பெயருடையன, அவற்றோடுகூடிச் செல்வையாயின் * சுகமுண்டாகும் ஆதலால் உய்யுநெறியாங்கிள்ளைகளுடனே எனவும்,

---

* சுகமுடையார் அவநெறியிகந்து தவநெறிகைக்கொண்ட இறைவனடியார் எனவும் அவர்துணை சுகஞ்செய்யும் எனவுங் கொள்க.

அக்கிள்ளைகள் வேதாந்தத்தினுச்சியிற் பழுத்திருக்கும் சித்தாந்தக் கனியை நுகர வேதத்தருவில் தங்கும் அக்கனியுனக்குங்கிடைக்குமாதலால் உயர்நூற் கற்பகதருவிலிருந் தெனவும், அக்கனியுண்டழைப்பவர்க்கே அப்பெருமான் எளிவருத லியல்பாதலால் போரூரிறையைக் கூவாயெனவுங் கூறினர். (௪)

பற்பல்விதப்பூச்சோலைபுகாதே
  பரிபூரணமாமேகச்சோலையில்
எற்பெறநீயெந்நாளுமகிழ்ந்தங்
  கிதுவதுவென்றென்றையுநாடாமே
செப்பமதாய்நின்னையுநாடாமே
  சீரருளேவடிவாகியிருந்து
குப்புகழ்போரூரப்பனைநாடிக்
  கூவாய்வரநீகூவாய்குயிலே.

(இ - ள்.) பலபலபுட்ப சாதிகள் செறிந்த பூஞ்சோலையையடையாது, எங்குநிறைந்த பூரணமாகிய மேகந்தவழுஞ் சோலையையடைந்து, அச்சோலையில் நீ அழகுபெற எந்நாளும் மகிழ்ந்து, அம்மகிழ்ச்சியில் அது வென்றும் இது வென்றும் நாடாமல் நடுவேநிற்கும் இயல்பாய் அவ்வாறு நிற்கு முன்னையு நோக்காமல் அருளேவடிவாகி அவ்வருளாதாரத்திலிருந்து உலகம்புகழும் திருப்போரூரிலெழுந்தருளிய என்னப்பனைத் தியானித்துக் குயிலே நீ வரக் கூவாய்.

நீ மேகந்தவழும் விருக்ஷங்கள் செறிந்த சோலையைச் சென்றடைவாயென்பார் பற்பலவிதப் பூஞ்சோலைபுகாதே எனவும், உனக்குரிய அழகு நிலைபெறவும் நித்தியானந்தத்தை யடையவும் வேண்டின் என்பார் இது வது வென்றென்றையு நாடாமே எனவும், புகழும் ஆனந்தமும் திருப்போரூரனையன்றி யமையாதென்பார் சீரருளேவடிவாகி யிருந்து கூவாயெனவுங் கூறினர். அன்றியும் ஆன்மாவால் நுகரப்படும் விடயங்களெல்லாம் மாயையால் பலவிகாரப்பட்டு வருதலால் அம்மாயையையடையாது மாயாதீதமாகிய மெய்ஞ்ஞானத்தையடைவாயென்பார் பரிபூரணமாமேகச் சோலையை யடையெனவும், அம்மெய்ஞ்ஞானத்தால் அதுவிதுவென்றறியும் சுட்டுணர்வுட்பட்டு பகிர்முகத்துழன்ற ஞானக்கிரியைகளை அந்தர்முகப்படுத்தி ஆன்மாவாகிய என்னையுணர்ந்து எனக்காதாரமாகிய பரசிவத்தையுமுணர்ந்து பரமசுகத்தையடைய என்பார் எற்பெற நீ யெந்நாளுமகிழ்ந்தெனவும், அந்நிரதிசய வின்பத்தை யறிந்த அறிவாகிய இது அப்பிரமமென்றும், அவ்வின்பத்திலழுத்தும் பிரமமாகிய அது இவ்வான்மவறிவென்றும் உணரும் உணர்விழந்திருப்பை யென்பார் அங்கிதுவது வென்றென்றையு நாடாமே எனவும், அவ்வுணர்விழந்த விடத்துத்தோன்றும் பரவறிவால் ஆன்மாவையும் ஆன்மவறிவையும் பிரமமல்ல

வென்று கழிக்கவேண்டுமென்பார் செப்பமதா யெனவும், இவ்வாறு செம்மையினுணர்ந்த தன்னையே நோக்கின் அஞ்ஞானஞ் சாருமாகலின் அதுசாரா வகை விளக்கிய அவ்வறிவையே யொற்றித்து நிற்கவேண்டு மென்பார் நின்னையு நாடாமே சீரருளேவடிவாகியிருந்து எனவுங் கூறினரெனக்கொள்க.(௫)

விடயக்கண்ணியிணிற்புகுதாதே
மிகுபொறியென்பதுபொறியதைமேவேல்
உடலப்பஞ்சரமியானெனமகிழே
லோதுந்திசைமேவிப்பறவாதே
மிடையிற்சித்திரநற்புள்ளதுபோன்
மிளிர்பூரணமாமீதிலிருந்து
கொடைமிக்குதவியபோரூரிறையைக்
கூவாய்வரநீகூவாய்குயிலே.

(இ - ள்.) இன்பந்தருவதெனக்கருதும் விடயங்கள் பறவைகளைச்சிமிழ்ப்படுத்தும் வலையைப்போல உன்னைக்கவர்ந்து கொள்ளும் கண்ணியாதலின் அவ்விடயங்களிற்சென்று அதனால்வரும் இன்பங்களைக்கருதாதே; மிக்கபொறியென்று சொல்லப்படுவது யந்திரமாதலால் அதனைப்பொருந்தாதே, தேகம் பஞ்சபூதத்தால் மிடைந்த கூடாகையினால் அதனைநானென் றெண்ணிமகிழ்ச்சியடையாதே, பஞ்சரமாகியதேகத்தை நானென்றதனால் அத்தேகபோகத்தைக் கருதிக்கூறும் திசைகளைப்பொருந்தி அங்குழலாதே, சித்திரமெனச் சித்திரித்த நல்லபறவையைப்போல விளங்கும் பரிபூரணமென்னும் மாமரத்திலிருந்து வேண்டுவோரளவை நோக்காது, அவர்வேண்டியாங்கு மிக்குதவும் திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளைக் குயிலே நீவரக்கூவாய்.

கண்ணியிலகப்பட்ட பறவைமீளாததுபோலச் சத்தாதி விடயங்களில் அகப்பட்டமனம் மீளாதென்பார் விடயக்கண்ணியினிற்புகுதாதே எனவும், விடயங்களுக்குப் பொறிவாயிலாதலால் அவற்றையுங்கடிய வேண்டுமென்பார் பொறியதைமேவேலெனவும், அவ்வாயிலையுடையது தேகமென்பார் உடலப்பஞ்சரமெனவும், தேகத்திற்கு வேறாகத்தேகியுளனாதலால் துன்பந்தருந் தேகத்தை நானென்றெண்ணியின்புறாதே யென்பார் யானெனமகிழேல் எனவும், அனான்மாவாகிய தேகத்தை ஆன்மா வென்றெண்ணிக் கூறியமயக்க நூலின் வழிபரந்து செல்லாதே யென்பார் ஓதுந்திசைமேவிப் பறவாதே யெனவும், ஆன்மாவுக்கு அனான்மாவாகிய தேகம்பஞ்சரமெனக்கண்டதுபோல் பரமான்மாவாகியபதிக்கு ஆன்மாபஞ்சர மென்றுணர வேண்டுமென்பார் மிடையிற்சித்திர நற்புள்ளதுபோலென்றும், உடல்பொறியாலும், பொறிபுலனாலும், புலன் கரணத்தாலும், கரணம் ஆன்மாவாலும் விளங்குதலுண்மையான் இவ்விளக்கம் பரமான்மாவாகிய பதிவிளக்கத்தாலென் றுணர்ந்து அப்பதிவியாபகத்தால் ஒளிபெற்று விளங்கும் விருக்கமென்று சொல்லப்பட்ட இத்தேகத்தின்

உச்சியாகிய மீதானத்திலிருந் தென்பார்மீளிர் பூரணமா மீதிலிருந்தெனவும், அத் துவாதசாந்தத்திருக்கப் பெற்றோர்க்கு அத் துவாதசாந்தாதீதனாகிய இறைவன் சிவானந்தப் பெருக்கையிடையறாது பொழிவானென்பார் கொடைமிக்குதவிய போரூரிறைவையெனவுங் கூறினர்.

இசனல்விடயம் விடம்போல் ஆன்மவறிவை மயக்குமாதலால் விடயங்களிற் செல்லாது அவ்விடயங்களுலாவும் பொறிகளைக்கடந்து அப்பொறிகளையுடைய தேகத்தைச்சடமென் றெருவி அத்தேகத்தையே ஆன்மா வென்று கூறும்புறனுரையையிகந்து ஆகமாந்தத்திற் கூறும் உண்மைமொழியைக்கைக்கொண்டு தேகமுதல் ஆன்மாவிறுதியாக ஓவியனாற் சித்திரித்த சித்திரம்போல் அசைவில்லன வென்றுணர்ந்து அசைவில்லனவாகிய அவைபோக்குவரவு புரிதல் அசைவிப்பானாகிய இறைவனது பூரணவியாபகத்தாலென்று தெளிந்து அத்தெளிவால் விளங்கும் அருளாதாரத்திலிருந்து சிவானுபவத்தைப் பெற நெஞ்சமே! நீ முருகக்கடவுளை தியானிப்பாயென்று அறிவுறுத்தியவாறென்க.

இன்றைக்கெனவுநாளைக்கெனவு
மெண்ணேன்மயிலிறையின்னமுதூட்டும்
பொன்றப்படுசுகதுன்புகளுன்னிப்
பூரிப்பொடுவாட்டங்களுறாதே
யொன்றைக்கருதியிதென்னதெனாதே
யுயர்கதியின்பைக்கருதிக்கருதிக்
குன்றைப்பொருதடுபோரூரிறையைக்
கூவாய்வரநீகூவாய்குயிலே.

(இ - ள்.) இப்பொருளின்றைக்கு வேண்டுமெனவும் நாளைக்கிருக்க வேண்டுமெனவும் நீ நினையாதை, மயூரநாதன் நமக்கினிய சுவையுடையுணவையூட்டுவான், இறத்தலுக்கேது வாகிய இன்பத்தையுந்துன்பத்தையு நினைத்து விருப்பையும் வெறுப்பையுமடையாமல்,ஓர் பொருளைக்கருதி இது என்னுடையது என்றுகூறாமல், யாவராலுமடைதற்கரிய மோக்ஷவின்பத்தை நினைத்து நினைத்து, தாருகாசுரனோடுபோர்செய்து கிரவுஞ்சகிரியை இருகூறாக்கிய திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளை குயிலே நீவரக்கூவாய்.

இன்றைக்கு நாளைக்கென்று தேடுகின்ற நீ யிருப்பையோ இறப்பையோ அதனையறியா யாகையால் எண்ணேலெனவும், இவ்விரண்டையும் காலதத்துவத்தினளவே செய்யும் முருகக்கடவுள் வினையறிந்தூட்டுவோனாதலால் மயிலிறையின்னமு தூட்டுமெனவும், சுகஞ்செய்யும்பொருளே கெட்டுத்துன்பத்தைத்தருதலும், துன்பஞ் செய்தவதுவே சுகந்தருதலுமாதலால் பொன்றப்படு சுகதுன்புகளெனவும், இவ்வாறாதற்குக்காரணம் தீவினையுற்றகாலத்து நல்லவையெல்லாந்தீயவாதலும், நல்வினையுற்றகாலத்துத் தீயவையெல்லாம் நல்ல

வாதலுமாம்; ஆதலால் இதனைக்கருதாது விருப்புவெறுப்பை அடைவையாயின் பிறப்பிறப்பிற் படுவையாதலால் உன்னிப் பூரிப்பொடுவோட்டங்களுறுதே எனவும், நீ கருதுமோர் பொருள் சுகதுக்கத்தைத்தந்து அதனால்விருப்பு வெறுப்புண்டாக்கி வினையைப்பெருக்கி இழிந்த பிறப்பிற்றள்ளுமாதலால் ஒன்றைக்கருதியிதென்னதெனுதே எனவும், இப்பிறப்பின் துன்பத்தை நன்குணர்ந்து பிறவா நெறியாகிய வீட்டின்பத்தைச் சிந்தித்துச்சிந்தித்து முருகக்கடவுள்வரத் துதிப்பையானால் அதனைத்தருவானாதலால் உயர்கதியின்பைக்கருதிக்கருதிப்போரூரிறையைக் கூவாயெனவுங் கூறினர். (எ)

நிராசையுடனருளேவடிவாயந்
நின்மலனிருசேவடிநிழறங்கிப்
புராதனமாய்நிகழுறுமானந்தப்
பொங்குரசச்செங்கனிநனிதுய்ப்பப்
பராபரனேகுகனேமயிலோனே
பண்ணவனேவிண்ணவனேயென்று
குராவணிவோனைப்போரூரிறையைக்
கூவாய்வரநீகூவாய்குயிலே.

(இ - ள்.) எப்பொருளிலும் ஆசையற்று, எவ்வுயிர்களிடத்துமன்பு வைத்து, அவ்வன்பேவடிவாகிய அருண்மூர்த்தியினுடையதிருவடிநிழலிற்றங்கி, இடையிற்றோன்றி யழியுமின்பம் போலாது அநாதிநித்தியமாய் விளங்கும் சிவானந்தத்தேன் சிந்தும் சுவை முதிர்ந்தகனியைத் தெவிட்டாதுபருக, பராபரப்பொருளே, அன்பருள்ளமுடையானே, மயில்வாகனத்தையுடையானே, இறைவனே, தேவசேனாபதியே என்று குராமலரையணிந்த வெம்பெருமானைத் திருப்போரூரிலெழுந்தருளிய அழகிய இளையோனை குயிலே நீ வரக்கூவாய்.

வஸ்துவிசாரத்தால் பொருட்பற்றொழியினும் அருளுடைமையடைதலரிதென்பார் நிராசையுடனருளே வடிவாயெனவும், இறைவனுக்கும் அவ்வருளே வடிவென்பார் அந்நின்மலனெனவும், அவ்விறைவன் அடியவர்க்களிக்குஞ்செல்வமும் அருளேயென்பார் இருசேவடி யெனவும், இறைவனுருவாகிய அருளே ஆன்மாவுக்கு மிடமென்பார் நிழல்தங்கியெனவும், அவ்விடத்துச் சிவானந்தப்பெரும்போகம் என்றுநீங்காச் சுவையுடைய கனியென இனித்து நிற்குமென்பார் புராதனமாய் நிகழுமானந்தப் பொங்குரசச் செங்கனியெனவும், அச்சிவபோகமுதிர்ச்சியால் பெற்றசிற்றின்பமும் பேரின்பமாக என்பார் நனிதுய்ப்ப எனவும், இவ்வாற்றல் முருகக்கடவுள் நாமமேதருமாதலால் அந்நாமங்களில் ஒன்றனையும் விடாதரற்றுவையென்பார் பராபரனே குகனே மயிலோனே பண்ணவனே விண்ணவனே யென்றுபோரூரிறையைக் கூவாயெனவுங் கூறினர். (அ)

சேவற்கொடியுடையானேயென்றுந்
திகழொளிதருசாம்பூனததங்கப்
பாவைக்கிணையொப்பாரிருவோர்தம்
பண்புறுமின்பக்கணவாவென்றும்
யாவர்க்குந்தலைமையனேயென்றும்
எழின்மறைபுகழ்தருபொருளேயென்றுங்
கோவைப்போரூர்வாழ்வைக்கருதிக்
கூவாய்வரநீகூவாய்குயிலே.

(இ - ள்) சேவலாகிய விருதுக்கொடியை யுடையவனே எனவும், விளங்கும் கிரணத்தைப்பரப்பும் சாம்பூனதமென்னும் பொன்னாற்செய்த இரண்டு பாவைக் கொப்பாகிய தெய்வயானை வள்ளிநாய்ச்சியார் என்னுமிருவர் மனத்துக்கு மிசைந்த இன்பநாயகனே எனவும், அவ்விருவர்க்குமேயன்றி ஆன்மவர்க்கங்களுக்கெல்லாம் நாயகனே எனவும், அறிவை விளக்கும் வேதங்கள் புகழும் பொருளே எனவும்எண்ணி, குன்றுதோறாடலிற்சிறந்த திருப்போரூரில் வாழ்கின்ற முருகக்கடவுளைக் குயிலே நீவரக்கூவாய்.

ஞானமன்றிக் கிரியைநிகழா, அவ்விரண்டு முடையானையன்றி ஆகா; ஆதலால் அந்தஞானக்கிரியாசொரூபர் உபயநாய்ச்சிமாரும், அவ்விரண்டு முடையோன் முருகக்கடவுளேயாமென்பார் இருவோர்தம் பண்புறுமின்பக் கணவாஎனவும், இறைவன் ஆன்மநாயகனென்னும் பெயருடையானென்பார் யாவர்க்குந்தலைவனே எனவுங்கூறினர். இதனால் பிராட்டிமாரிருவர்க்கு மின்பஞ்செய்தல் கடனாகக்கொண்டதுபோல் எனக்கும் நாயகனாதலால் இன்பந்தருளல் உனதுகடமையாமென்று குறையிரந்தவாறெண்க. சாம்பூனத மென்றது நாவலோட்டுத்துப் பெயர்பெற்ற பொன். (௬)

சூரனுரங்கிரவுஞ்சபொருப்புத்
துணிபடவடிவேல்விடுவோயென்றும்
தாரணிபன்னிருபுயனேயென்றுஞ்
சரவணனேசண்முகனேயென்றும்
தேர்நவவீரர்கடுணைவாவென்றுந்
தேவர்கள்சேனபதியேயென்றும்
கூரறிவினர்புகழ்போரூரிறையைக்
கூவாய்வரநீகூவாய்குயிலே.

(இ - ள்.) சூரபன்மன் மார்பும் கிரௌஞ்சகிரியும் இருகூறாக வடித்த வேலாயுதத்தை விரைந்து விடுவோயெனவும், கடப்பமலர் மாலையையணிந்த பன்னிரண்டு திருப்புயங்களை யுடையவனே யெனவும், சரவணத்துற்பவனே எனவும், இவர்கள்தான் வீரர்களென்று தேர்ந்துணர்ந்த நவவீரர்களுக்கு மூத்

தவனே எனவும், தேவர்கள் சேனாதிபதியே எனவும், நுண்ணியவறிவினை யுடைய ஞானிகள்புகழும் திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளைக் குயிலே நீ வரக்கூவாய்.

சிவஞானிகள் முருகக்கடவுளுக்குக் காயத்தைக்கோயிலாக்கி மனத்தை யடிமையாக்கி வாக்கை அவ்விறைவன் றிருநாமத்தைப் புகழ்ந்து கூறச்செய்து ஆகாமியவினையை யொழித்தனர்; யான்காயத்தையும் மனத்தையும் அவ்வா றுக்காதொழியினும் வாக்கையேனும் புகழ்கூறும் ஓர்பணியிலேனும் நிற்கச்செய் யேனாயின் பிராரத்தசஞ்சிதங்கட் கிடஞ்செய்யும் வல்வினையினின்று மெவ் வாறு நீங்கப்பெறுவே னென்பார் அறிவினர்புகழ் போரூரிறையைக் கூவா யென்றார். வீரவாகுதேவர் முதலியஒன்பதின்மர் திருப்பெயர்களும் வீரரென் னும் பதத்தை முன்னாகக்கொண்டிருத்தலால் தோர்நவவீரரென்றார். (௧0)

துயிற்பத்து முற்றிற்று.

௨

## கிளிப்பத்து.

"சேயோன்மேய மைவரையுலகமும்" என்றபடி முருகன் குறிஞ்சிநிலக் கடவுளாதலால் அந்நிலக்கடவுள்பால் அந்நிலக்கருப்பொருளையே தூதுவிடுத் துத் தன்வருத்தங் கூறுதலால்கிளிப்பத்தெனக் கூறினார்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியச் சந்தவிருத்தம்.

பவளநிறச்செந்திருமேனிப்பஞ்சக்கரவானைக்கிளையோன்
றவளநிறப்பொடிபூசுமரன்றந்தருணீபத்தாரழகன்
கவுரிகொடுக்குமுலையமுதங்கமலத்திருவாய்வழிசிறுவன்
புவனமதிக்கும்போரூரன்புகழ்பேசிக்களிகிளிநீயே.

(இ - ள்.) பவளம்போலும் செவந்த திருமேனியையும், ஐந்து திருக்கரங் களையுமுடைய விநாயகக்கடவுளுக்கிளையோனும், வெள்ளிய திருநீறுபுனைந் தருளுஞ் சிவபெருமானின்றருளிய கடப்பமலர்மாலையை யணிந்த பேரழக னும், உமாதேவியார் தந்தருளிய சிவஞானப்பாலையுண்டு, தாமரைமலர் போன்ற திருவாயின்வழியே வழியவிடுத்த சிறுமதலையுமாகிய எல்லாவுலகினா ரும் நன்குமதிக்குந் திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளுடைய புக ழைக் கிளியே நீ மறவாமற் கூறிக் களிப்படைவாய்.

கவுரி - பொன்னிற முடையாள். கவுரிகொடுக்குமுலையமுதங் கம லத்திருவாய் சிறுவனென்னாது கமலத்திருவாய் வழிசிறுவன் என்றதனால் பாலறாவாயனென்னுந் திருநாமம்புனைந்த ஆளுடைய பிள்ளையாரெனக்கொ ள்க. முருகக்கடவுளெனக் கொள்ளலாகாதோவெனின் முருகக்கடவுள் சர

வணப்பொய்கையில் திருவிளையாடல் புரிந்திருந்தகாலத்து அம்மையப்பர் தாமேவந்து பாலை மணிவள்ளத்தி லளிக்க அதனையுண்டு கந்தனென்னுந் திருநாமம்பெற்று அவருடன் சென்றனர். அவ்விடஞ்சென்ற முருகக்கடவுள் ஞானனுக்கிரகஞ்செய்ய சீகாழியில்ஆளுடைய பிள்ளையாராய் வந்தவதரித்துத் தாமே பால்வேண்டி அம்மே அப்பா என்று திருவுளங்கனிந்தழைக்க அவ்வம்மையப்பர் மனமாற்ருது விரைந்தருள மால்விடையூர்ந்து மனங்குழைந்து பிள்ளையருகுவந்து பாலைப் பொன்வள்ளத்திற்கறந்து சிவஞானத்தைக்கலந்தூட்டி மீட்டும் வேண்டியவாறுண்ண அப்பொற்கிண்ணத்தைத் திருக்கரத்திலளிக்க அதனையேற்று வழிந்தொழுகவுண்டு திருஞானசம்பந்த னென்னுந் திருநாமங்கொண்டு அச்சிவஞானமெங்கும்பரவ பரசமய கோளரியாய் இந்நிலவுலகுய்ய வெழுந்தருளியிருந்தனர். ஆதலால் ஈண்டுமுருகக்கடவுளென்றது பாலருவாயனெனக் கொண்டாம். இதனுல் முருகக்கடவுள் சரவணப்பொய்கையில் பாலுண்டது அசுரரைக்களையவாதலால் சிவஞானங்கலவாத பாலுண்டனனெனவும், அப்பாலால் விளைந்தது நிக்ரகமாதலால் வழியாதொழிந்தது எனவும், பிரமபுரத்தில் பிரமதீர்த்தத்தில் பாலுண்டது பரசமயங்களைக் களையவாதலால் சிவஞானங்கலந்தபாலுண்டனனெனவும் இப்பாலால் விளைந்தது அனுக்கிரக மாதலால் வழிந்தது எனவுங் கூறினனெனக்கொள்க.

அன்றியும் அறுமுகக்கடவுளாய் வந்ததிருவுருவம் அசுரரைக்கடிந்து உலகினர்புகழுந் தேவரைக்காத்ததெனவும், திருஞானசம்பந்தராய் வந்ததிருவுருவம் பரசமயங்களைக்களைந்து சத்திநிபாதர்புகழும் அடியரைக்காத்ததெனவுங்கொள்க.

இதனுல் போகம்வேண்டுவோர் சிற்றின்பம்வெஃகிய தேவர்களுக்கு வந்தவிடுக் கண்தவிர்த்து அச்சிற்றின்பத்தை யளித்து தேவசேனுபதி யென்னும்பெயர்வாய்ந்த சண்முகக்கடவுளாக உபாசிக்கவேண்டுமெனவும், சிவஞானம் வேண்டுவோர் பேரின்பத்தை விழைந்த அடியார்களுக்கு பரசமயிகளால் வந்த பேரிடரைத்தவிர்த்து அவர்க்கு இம்மையின்பமே யன்றிப்பேரின்பத்தையு மளித்து பரசமயகோளரியென்னுந் திருநாமம் வாய்ந்த திருஞானசம்பந்தப்பெருமானுகவுபாசிக்க வேண்டுமெனவுங் கொள்ளக்கிடந்தன.

திருமால் ஓர்கால் கச்சித்திருப்பதியையடைந்து சிவசாரூப்பியத்தைத்தானடையக்கருதி சிவரூபத்தைத் தன்னுள்ளத்திருத்தி நெடுநாள்தவங்கிடக்க, அத்தவத்திற்கிரங்கி சிவபெருமான்காட்சி கொடுத்தருள இறைவனை வணங்கிப் பெருமானே தேவரீரால்இதுகாறுந் தேகபோகங்களைக்கருதி அதற்குரிய போக சரீரங்களைப்பெற்றேன். இனி அதனைவேண்டிலன் சிவபோகத்தைக் கருதி உம்முடைய சாரூபத்தையே விரும்பினேன்; அதனையளித்தருளல்

வேண்டுமென்று குறைபிரக்க இறைவன் கருணைகூர்ந்து நமதுகுமாரக்கடவுள் உலகினரெல்லாம் எளிதில்சிவபோகத்தால்சிவானுபவம்பெற சிவஞானத்தை எங்குமிடையறாதுபொழியத் திருஞான சம்பந்தமூர்த்தியாய் குருவடிவங் கொண்டு சீகாழியிலவதரித்து பலதளிகளிற் சென்று பதிகமோதிவருங்கால் இங்குவந்துனக் கருள்வான் என்றனுக்கிரகஞ் செய்து அந்தர்த்தானமாயினர். இறைவனருளியவாறே சண்முகக்கடவுள் என்று குருவாய்வந் தனுக்கிரகஞ் செய்யப்பெறுவேனோ என்று மனங் கசிந்து கசிந்துருக அவ்வாறே நமதுகுரு மணியாகிய ஆளுடையபிள்ளையார் சிவசாரூபத்தைத்தந்தருளினரென்பது புராணவரலாறு.

சிவபெருமான் திருமாலை நோக்கி ஞானசம்பந்தமூர்த்தியால் என்னுடையசாரூபத்தை யடைவாயென்றதை, காஞ்சிமஹாத்மியத்தில்-

“ மத்பக்தஸ்தேத்யஸம்பந்த :- ப்ரதாஸ்யதிஸரூபதாம்
தத்ரதத்ரசசம்பந்தோ - குஹாம்சோபக்திமாந்ஸுதீ:
த்வத்பக்தகர்வநாசாயா - மத்ஸாரூப்யமவாப்ஸ்யஸி”

என வருதல் காண்க. (க)

கன்னியரிருவோர்நாயகனைக்கமலக்கண்ணன்மருமகனை
மின்னியவடிவேலுடையவனைவீரனையாரினுந்தூயவனை
யன்னியமல்லாதெங்குநிறையாரணனைப்பரிபூரணனைப்
பொன்னியன்மாடப்போரூர்வாழ்புண்ணியனைக்கிளிபன்னுதியே.

(இ - ள்.) தெய்வயானை வள்ளிநாய்ச்சியாரென்னும் இருவர்க்குந் தலைவனுமுள்ளவனை, திருமால் மருகனை, மாறாது மின்னலிடுகின்ற வடித்த வேலாயுதத்தை யுடையவனை, யாவரினுஞ் சிறந்து விளங்கிய வீரனை, மலரகிதனை, தன்னில் வேறாகாது எங்குநிறைந்த வேதசொரூபனை, வேதங்களெடுத்தோதுந் தெய்வடிவங்களெல்லாம் தானானவனை, பொன்னாற் சமைத்த மாடங்கள் சூழ்ந்த திருப்போரூரிலெழுந்தருளிய சிவபுண்ணியவடிவனைக் கிளியே நீ வாக்கினாற்பேசுவாய்.

அசுரர் நிசிசரர் என்னும் பெயருடையார் ஆதலால் அவர்க்குத்துணையாகிய நிசியையும் அந்நிசிக்குத்துணையாகிய அவர்தேகவிருளையும் அவர்மாயையால்விளைக்கும் மாயவிருளையும் தனதுஒளியால் ஒருங்கே யோட்டிய வேலாதலால் மின்னியவடிவே லெனவும், அவ்வேல்ஞானவடிவாதலால் அடியார்க்கு மும்மலவிருளை யோட்டிஞானவொளியைக்காட்டுதல்என்றுமுடையானாதலால் வேலுடையவனை யெனவும், ஆயிரத்தெட்டண்டங்களையும் அவ்வண்டங்களை யாள யுகம் நூற்றெட்டும் எவராலும் எவற்றாலும் அழிவின்றியிருக்க ஆயுளையும் பெற்றேன் சூரபன்மனே யன்றி வேறோரசுரன் உளனோவென்று என்னான்று

மின்றுதலால் அச்சிறப்பினைவாய்ந்த சூரபன்மனை முதல்நாள் யுத்தத்தே புறந் தந்தொளித்தோடச்செய்தனனாதலால் யாரினும்வீரனையெனவும், ஞானத்தை யளிக்கும் நெற்றி நாட்டத்துதித்த சேயாதலின் தூயவனே எனவும், வியாத்த மாகிய உவர்ப்பும் வியாப்பியமாகிய நீரும் வியாபகமாகிய கடலுக்கு அன்னி யமாயில்லாததுபோல் வியாத்தமாகிய பாசத்தினிடத்தும் வியாப்பியமாகிய பசுவிடத்தும் பதியாகிய இவன் வேறாகாது வியாபகமாயிருத்தலால் அன்னி யமில்லாதெங்குநிறையெனவும், இக்கருத்தையுள்ளடக்கி வேதம் பிரமம் ஒன்றே யெனக்கூறும் அப்பொருள் தானாயிருத்தலால் ஆரணனை யெனவும், பிரமவடிமாயிருப்பதே யன்றி வேதங்கள் இறைவனாணையை மேற்கொண்ட அவரவரதிகாரங்களை நோக்கிக்கூறுங்கடவுளரும் தானாகவே யிருக்கின்றனா தலால் பரிபூரணனை யெனவும், அவ்வவ்வடிவங்களெல்லாம் உலகினரெல் லாம் புண்ணியமுடையராய்த் தம்மடிகூடுதற்குக்கொண்டதாதலால் புண்ணி யனை யெனவுங் கூறினர். (உ)

மரகதமுடிமேலாறுமுடிமாணிக்கக்கிரிவருவதுபோல் [ப்
விரைசெலுமயின்மேல்வருவோனைவெற்றிகொள்குக்கிடவிருதோனை
பரைதருபிள்ளைப்பெருமாளைப்பண்பழகெழுதருசெவ்வேளைத்
தரைபுகழ்போரூரிறையவனைத்தண்கிளிபேசாயன்புறவே.

(இ - ள்.) மரகதமலையின் சிகரத்தில் ஆறுசிகரங்களையுடைய மாணிக்க மலை வருவது போல, விரைந்து செல்லும்மயில் வாகனத்தின்மேல் ஆரோகணி த்து வருகின்றவனை, வெற்றியைக்கொண்ட சேவற்கொடியுடையவனை, பராச த்தியீன்ற பிள்ளைமைப்பருவத்தை யுடையவனை, இறைவன் குணங்களெல்லாம் அழகுபெறவளர்ந்த செவ்வேளை, மண்ணுலகம்புகழுந் திருப்போரூரிலெழுந்த ருளிய முருகக்கடவுளை, தண்ணிய குணமுடைய கிளியே நீ அன்பாகப் பேசுவாய்.

திருமால்முதலியதேவர்கள் தன்னடியிற்பட அவர்முடியிற் பொறித்த அடியையுடைய சூரனுடைய முடியில் தம்மடிசூட்டி அவனொளியைத் தமது ஆறுமுகத்தி னொளியிலடக்கினனென்பார் மரகதமுடிமேலாறு முடி மாணிக்க க்கிரிவருவதுபோல் எனவும், தேவர்களிடத்தும் பகைமேற்கொண்டு விரைந்து செல்லுஞ் சூரனைத்தன்னாணைவழி நிறுத்தினனென்பார் விரைசெலு மயில் மேல்வருவோனையெனவும், ஓர்கால்வெற்றியும் ஓர்கால்தோல்வியும் அடையும் வெற்றியுடையார் போலாது என்றும்வெற்றியையேயுடைய சூரபன்மனு டைய ஓர்கூற்றையே வெற்றித்துவசமாகப் பிடித்தனனென்பார் வெற்றிகொ ள்குக்கிடவிருதோனைஎனவும், இறைவன் தனது சத்திசங்கற்பத்தால் தோற் றுவிக்கும் ஏனைத்தோற்றம்போலாது பரையையே திருமேனியாகக்கொண்டு தானே தந்தனனென்பார் பரைதருபிள்ளைப்பெருமாளை எனவும், தந்தையறிவு

மகனறிவென்றதுபோல இறைவன் எண்குணங்களையும் தான் காட்டினனென்பார் பண்பழகெழுதருசெவ்வேளை எனவுங் கூறினர்.

எண்குணங்களாவன - தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்று முணர்தல், இயல்பாகவேபாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என்பனவாம். இவ்வெண்குணங்களையும் இறைவன் ஒவ்வோர் காலவிசேடங்களில் ஒவ்வொரு திருமேனிகளிற் காட்டியருளினன். இறைவன் மகனாகிய முருகக்கடவுள் தன்னொருதிருமேனியிற் காட்டியதை சரித முகத்தால் விளக்குதும்.

நவவீரராலும் இலக்கத்தவராலும் இரண்டாயிரம் வெள்ளங்களாலும் மாண்ட எண்ணிறந்தனவாய் அணியணியாய் ஏடிட்ட சூரபன்மன்படைகளும் சேனாதிபதிகளும் பானுகோபன் முதலிய பெருமக்களும் சிங்கமுகன் முதலிய சகோதரர்களும் ஆகிய அனைவரும் மாயையின்வஞ்சத்தால் அமிர்தகலசம் வாய்க்கப்பெற்று சூரபன்மன் எழச்செய்தகாலத்து, சூரபன்மனொருவன் தானுளன் அவனும் ஓர்மாத்திரைக்குள்ளே மாளப்போகின்றானென் றெண்ணி இறுமாந் திருந்த தேவர்களெல்லாங் கண்ணுற்று, அந்தோ! அந்தோ! இனி நமக்கபயந்தந்த முருகக்கடவுள்தான் என்செய்வார் நமது பாவம் இருந்தவாறென்னே யென்னே என்றெண்ணி, உயிரிழந்தாற்போலாதற்குமுன்னமே மகாசங்காரப்படையைத் தூண்டி யாவரையும் நீறாக்கி சூரபன்மனையுந் தன்னந்தனியனாக்கி அவனது கோட்பட்டு நின்ற இந்திரஞாலத்தேரினையும் ஊசம்படந்தவொலியால் அதன்வித்தையெல்லாம் அவித்தையாக்கித் தன்சுதந்தரத்தைக் காட்டினனாதலால் **தன்வயத்தனாதலையும்,**

இறைவனைநோக்கிநோற்றற்கரிய நோன்பினைநோற்று நோன்றாளினைத் தொழுத அச்சூரபன்மனை இருகூறாக்கிய இறைவனை இபமணம்புணர்ந்தருள இமையவர்வேண்ட இன்பமீதூர்ந்து இனிதருள்புரியுங்கால் பரனும் பரையும் ஆண்டெய்தி இளவலையும் தெய்வகுஞ்சரியையும் எடுத்தணைத்தார்த்து உச்சிமோந்து எம்மிறைமைத் தன்மையை உம்மிருவர்க்குத்தந்தன மென்று தழுவப்பெற்ற விசுத்ததேக முடையோனாதலால் **தூயவுடம்பினனாதலையும்**

இந்திரன் புத்திரனாகியசயந்தனென்பான் பானுகோபனாற்சிமிழ்ப்புண்டு சிறைக்களப்பட்டுச் சிந்தாகுல முற்றுச்சிற்றுயிர்சோர்ந்து சிவனே சிவனே யென்றிங்குநினதடியேம் யாருமரற்ற நங்களுயிர்க்குயிரா நாயகனே கேட்டிலையே என்றறிவிழந்தகாலத்து அச்சிவனே தானெனவந்து, சயந்தனே! உன்றன் அல்லலும் இரக்கமு முணர்ந்து ஈண்டெய்தினம். இனிமனக்கவலையை யொழிதிநாளையே நமது தூதனால் நம்வரவை சூரபன்மனுக்குணர்த்திப்பின்னர்அவன் கிளையோடுமவனையுமட்டு உன்னை முன்னிருந்தவாறே அமரர் நாடாளச்செய்

வேமென்று அவனுள்ளத்து நிராமயான்மாவாயிருந்துணர்த்தின னாதலால் இயற்கையுணர்வினனாதலையும்

சரவணப்பொய்கையில் பதுமப்பாசடையிற் பலதிருவுருக்கொண்டு பல திருவிளையாடல் புரியுங்காலத்து அம்மையப்பர் ஆண்டெழுந்தருளி அதிசயங் கூர்ந்து இறைவியை நோக்கி நமது ஆறெழுத்துமே நங்குமரனது நாமத்தள்ளன அதனால் எமக்கும் அவனுக்கும் பேதமின்று, அன்றியும் எவ்வுயிரறிவின் கண்ணும் நாம் எவ்வாறு அருளால் மன்னி போதமும் அப்போதத்தால் வீடுந் தருவமோ அவ்வாறே ஆன்மாக்களின் அறிவிச்சாசெயல்களை யறிந்து அருள வல்ல சர்வஞ்ஞத்துவ முடையானென்று அருளினர். அப்பெற்றிநோக்கி திருவிளையாடல்புரியும் இளங்குழவிப்பருவத்தே விண்ணகத்தார் மண்ணகத்தும் மண்ணகத்தார் விண்ணகத்தும் அங்குள்ளன இங்கும் இங்குள்ளன வங்குமாக இவ்வாறு யாவுந்தலைதடுமாறலெய்தியவழி தேவர்களெல்லா மச்சமெய்தி ஒருங்குகூடி, இவ்வாடல் புரியுங்குமரனைக் கண்டும் குமரக்கடவுளென்றுணராது பெரும்போர் புரிந்துமாண்டனர். பின்னர் தேவகுருவின் வேண்டுகோளா லுயிர்பெற்றெழுந்து சண்முகக்கடவு ளென்றுணர்ந்து அடிபணிந்து குறையிரந்து, சூரனைச்சங்கரித்தருளல் வேண்டுமெனப் புன்னகையரும்பி நாம் உங்களுக்குச் சேனாதிபதியாகி அவ்வாறே உங்களுக்கருள்வமென்றபயந்தந்து அவரவர்வினையறிந்து கொடியனை யறக்களைந்து அடியனையணைத்துத் தன்சர்வஞ்ஞத்துவத்தைக்காட்டினா னாதலால் முற்று முணர்தலையும்,

சூரபன்மன் அரியதவங்கிடந்து இறைவனால் பெற்ற தெய்வப்படைகளையெல்லாம் போர்க்களத்திலேவ அவை வீரங்கொண்டெழுந்து வருதலை நோக்கி அப்படைகளைப் பாசமுடையோனை வாட்டி வருத்திவீழ்விக்கும் அச்செயலாற்ற அறியாது அடிபணிந்து விழச்செய்தனன். அதனால் பாசமுடைய சூரனாலேவும் படை பாசமுடைய ஏனைய தேவர்களை வருத்துமே யல்லது பாசரகிதனாகிய எம்மைவருத்தா தென்று காட்டினா னாதலால் இயல்பாகவே பாசங்களினீங்கி நிற்றலையும்.

சிங்கமுகாசுரன் போர்புரியுஞான்று சிறுசதங்கையொலிபடுஞ் சிறியதாளுடைய சிறுகுழந்தாய்! நீ என்னோடு போர்புரியும் ஆற்றலுடையையோ அல்லை, அதனானே உன் தாய்தந்தையர்பால் செல்லுதி உயிர்தந்தேன் என்று தன் இன்னுயிரினியிழப்பானாகிய அசுரன்கூற அதனைச் செவிமடுத்து பேதாய்! நீ பிதற்றுதலொழிக வென்றுரைத்து அக்கணமே அவனது முடியைத் தடிந்தனன்; அவன் தலையிழந்தொழியாது பற்பலநூறுயிரந் தலைகள் தோன்றிக்கொண்டிருக்கத் தனதுசத்தியைக் காட்டியஞான்று அங்ஙனந்தோன்றுவாறு ஓர்ஹுங்காரத்தால் அடக்கவல்ல அநுத்தசத்தியை யுடையானா

யிருந்தும் அருளால் அவனது காலவளவையை நோக்கி யிறுதியில் ஹூங்காரத்தால் மீட்டுந் தலைகளுந் தோள்களும் தோன்றுவாறு ஒழித்தனன். இவ்வருளுடைமையைச் சூரபன்மன் மாட்டுங் காட்டினனாதலாற் பேரருளுடையனாதலையும்,

இறைவன் ஆறுதிருமுகங்களினின்றும் ஆறுபுலிங்கமாகத் தோன்றிய அத்துணையே இறைவன் ஐந்தொழிற்கும்வித்தாய மகாசத்தியாகிய உமாதேவியைப் பயந்தோடச் செய்தனனாதலால் முடிவிலாற்றலுடையனாதலையும்,

யாவர்க்கு மின்பந்தருளும் இறைவனுக்குப் பிரணவார்த்தங்கூறி அளவிலின்பத்தில் மூழ்கச்செய்தோனாதலால் வரம்பிலின்பமுடையோனாதலையும் காட்டினனாதலால் அங்ஙனம் கூறியவாறென்க. (௩)

உலகினைநொடிவலம்வந்தானையும்பர்கணகர்வலம்வந்தானைப்
பலகலைமுழுதுமறிந்தானைப்பரகதியடைநெறிதந்தானைச்
சிலுகிடுமசுரரைவென்றானைத்தேவர்கள்பரவிடநின்றானை
இலகியபோரியிருந்தானையிசையாய்கிளியேநசையாயே.

(இ - ள்.) ஓர் நொடிப்பொழுதில் உலகினை வலமாகச் சூழ்ந்துவந்தவனை, தேவர்களெல்லாம் புடைசூழ்ந்துவர இந்திரபுரியை வலம்வந்தவனை, வேதாகமமுதலிய கலைகளையெல்லாம் ஓதாதுணர்ந்த திருஞானசம்பந்தப்பெருமானை, தமது திருமணத்திற்குவந்த யாவருக்கும் மோக்ஷவாயிலை வகுத்துக் காட்டினவனை, அமரரைப் பலமுறை துன்புறுத்தும் அசுரரை வெற்றிகொண்டவனை, இந்திரன்முதலிய தேவர்களெல்லா மொருங்கே குழீஇப்போற்றத் திருப்பரங்குன்றத்தி லிருப்பவனை, எவ்வுலகினுஞ் சிறந்துவிளங்குந் திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளைக் கிளியே நீ அன்போடு பேசுவாய்.

சிவபெருமான் வேதமாங்கனியைக் காட்டியகாலத்து பிரணவமூலம் விநாயகக் கடவுளென்பதும் பிரணவார்த்தம் அறுமுகக்கடவுளாகிய தானென்பதும் உலகினரறிய மூத்தபிள்ளையார் அங்ஙனமே யிருக்க வலம்வந்தனரென்பார் உலகினை நொடிவலம் வந்தானை எனவும், சூரபன்மனதியரையழித்து தேவர்களை விண்குடியேற்றிய ஞான்று அங்கு உலாப்போந்தன ரென்பார் உம்பர்கணகர்வலம் வந்தானை எனவும், சீகாழியின்கண் வேதியரெல்லாங் குழுமி வேதநெறிதழைத் தோங்க முப்புரிநூற்சடங்கினை நடத்த அவாவுநின்றும் என்று விண்ணப்பஞ்செய்ய அவ்வாறே ஆகுகவென்று திருவுளமிசைந்து அச்சடங்கினையேற்று அன்று பிரமனைப் பிரணவம் வினவி வேதார்த்தம் இதுவோ வென்று மறக்கருணை மேற்கொண்டு கடிந்ததுபோலாது பிரமபுரத்துறைவாராய அந்தணர்கள்பால் அறக்கருணையை மேற்கொண்டு அப்பிரணவத்தையும் பிரணவத்தை மேற்கொண் டெழுந்த வேதங்களையும் அவ்வேத

ங்களை யடியாகக் கொண்டெழுந்த ஏனைய கலைகளையும் அவர்கள் சிந்தையி னெய்தும் ஐயந்தெளியத் தாமேஓதின ரென்பார் பலகலைமுழுது மறிந்தோனை யெனவும், நல்லூர்ப்பெருமணத்தில் தமக்குநடந்த ஒருமணத்தை விரும்பிவந் தார் யாவர்க்கும் ஞானத்தோடு சம்பந்தமுடைய தம் மடிச்சம்பந்தம் வாய்க்கப் பெற்ற அவ்வொன்றுனே வீடுபேற்றிற் குரியராக்கி அவ்வீடுபேற்றிற்கு வாயிலைவகுத்துக்காட்டின ரென்பார் பரகதியடைநெறிதந்தானை யெனவுங் கூறினர். (௪)

எனையொருபொருளாயுளமதனிலெணியருள்பொழியுஞ்சுகமுகிலைக்
கனைகடலமுதச்செந்தேனைக்கன்னலைரசதாளிக்கனியை
நனைவழிபலவின்பொற்சுளையைநசைதருகட்டுமாங்கனியைப்
புனைமதில்சூழ்போரூரிறையைப்பூங்கிளிசொல்லுதிதிங்கறவே.

(இ - ள்.) ஒன்றினும் பற்றாத என்னையும் ஒருபொருளாகத் திருவுளத்தி லெண்ணி திருவருள்ஞானத்தைப் பொழியும் பேரின்பமேகத்தை, ஒலிக்கும் கடலிற்றோன்றிய அமுதம்போலும் இனிய சுவைதரும் செந்நிறத்தேனை, அடி யார்க்கருளும் இன்பநிறைந்த கரும்பை, சுவை யூற்றெடுக்கும் வாழைக் கனியை, தண்ணிய தேன்வழிந் தொழுகும் பொன்போலுஞ் செவ்விய பலாக் கனியின் சுளையை, பருகப் பருகத் தெவிட்டாத சுவைதரும் கட்டுமாவின் கனியை,* பொறிகளாற் பொலிவுபெற்ற மதில்சூழ்ந்த திருப்போரூரி லெழுந் தருளிய முருகக்கடவுளை, நமது தீமையெல்லா மொழியக் கிளியே நீ கூறக் கடவாய்.

அன்புடையா ருள்ளத்துச் சுவையுடைப் பொருள்களாகத் தித்திக்கும் இறைவன் அன்பிகந்த என்னுள்ளத்துந் தித்திக்க அடிமைகொண்டன னாத லின் நெஞ்சமே; நீ ஐயுறாது இதுகாறும் நினையாத தீங்கெல்லாம் இன்றேநீங்க நினைப்பாய் என்றவாறெண்க. (௫)

வாளைகள்பூகச்செங்குலையின்மன்னியபொன்னுலகுறுதென்னம்
பாளையின்மோதச்சிதறிவயற்பவளந்தரளமெனத்திகழக்
காளையமள்ளர்கண்மடைதோறுங்கால்வாய்தோறுமணைகோலு
நீளணிபோரூர்நாயகனைநிமலக்கிளியேபுகல்வாயே.

(இ - ள்.) விண்ணையளாவிய கமுகமரத்தின் செவந்த குலையினுச்சியில் நிலைபெற்ற பொன்னுலகிற் பரந்தமைந் திருக்கின்ற தென்னம்பாளையில், வா ளைகள் தாவிமோத (அதனால்) அத் தென்னங் குரும்பைகள் சிதறி வயலின் கண் வீழ, (அவை) பவளத்தைப்போலும் முத்தைப்போலும் விளங்கக் கண்

---

* பொறிகள்-எந்திரங்கள்.

டும் (அவற்றினருமைநோக்காது) அவ்வயலி லுள்ள உழுநர்மக்களாகிய காளையர், நீரைத்தடுக்கும் நீர்மடைகள்தோறும் நீர்செல்லுங் கால்வாய்கள்தோறும் அணையாகக் கோலுவார்கள், அப்பெருஞ்சிறப்பினைவாய்ந்த திருப்போரூரி லெழுந்தருளிய முருகக்கடவுளை அழகிய கிளியே நீபேசுவாய். (இனிப்பேசா திருத்தலையொழிவாயென்றபடி)

நகரின்வளத்தைக் கூறியவதனால் அந்நகர்க்கிறைவன் பெருஞ்செல்வமுடையானென்பதை யோர்ந்து நெஞ்சமே! நீ வேண்டிய இம்மையின்பங்களை விரைந்துகூறுயென்றதென்க. (௬)

சாரலினாரப்பரிமளமுந்தண்டலையுறுசண்பகமணமுந்
தீரமுறுங்கேதகைமணமுஞ்சிர்நந்தனமல்லிகைமணமு
நாரியர்குழலூட்டகின்மணமுநாகர்வியப்புறவேவீசும்
பேருறுபோரூர்நாயகனைப்பேசாய்கிளியேமாசறவே.

(இ - ள்.) மலைச்சாரலி லுள்ள சந்தனத்தின்மணமும், சோலையிலுள்ள சண்பகத்தின்மணமும், கழிக்கரையி லுள்ளதாழையின்மணமும், கண்டோர் கண்களைக் கொள்ளைகொள்ளுஞ் சிறப்பினைவாய்ந்த நந்தவனத்திற் கமழும் மல்லிகையின்மணமும், மகளிர்கூந்தல் மணம்பெற ஊட்டிய அகிற்புகையின்மணமும் (ஆகிய இம்மணங்களெல்லாம்) பொன்னுலகத்தாராகிய இமையவர் இமையாநாட்டத்தால் நோக்குந்தோறும் அதிசயிக்கவீசுதலால், விண்ணுலகமுற்றும் புகழ்போய திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளைக் கிளியே நீ சொற்சோர்வுபடாது பேசுவாய்.

திருப்போரூர் மண்ணுலகத்துளதேனும் ஐந்திணைப்பொருளும் ஒருவா மணம்பெற்றுள்ளது. பொன்னுலகு விண்ணிலுள்ளதேனும் ஓர் திணைப் பொருளின் மணமும் வாய்க்கப்பெறுதொழிந்ததே யென்றுகவலையுற்றன ரென்பார் நாகர்வியப்புறவே வீசும்பேருறு என்றார்.

சாரலில் ஆரம் என்றதனால் குறிஞ்சிநிலப்பொருளும், தண்டலையுறு சண்பகம் என்றதனால் மருதநிலப்பொருளும், தீரமுறும் கேதகையென்றதனால் நெய்தனிலப்பொருளும், நந்தனமல்லிகை என்றதனால் முல்லைநிலப்பொருளும் அகில் என்றதனால் பாலைக்கருப்பொருளும் மயங்கி மணம்வீசிக்கொண் டிருக்கின்றனவெனக்கொள்க.

விண்ணுலகளவும் இசைபோய போரூரிறையைக்கிள்ளாய் நான் கூறியவாறே நீ கூறுவையாயின் நாம் இம்மை மறுமையின்பங்களை யீண்டேயடைந்துய்யலாமென்று அறிவுறுத்தியவா றென்க. (எ)

ஆறுசரோருகமுகனென்றுமணிதிகழ்பன்னிருபுயனென்றும்
பேறுதவும்பதயுகனென்றும்பெயர்வேலொளிருங்கரனென்றுந்
தேறுமுளத்தினர்வாழ்வென்றுந்தேவர்தமக்கொருகோவென்றும்
வீறுயர்போரூர்நாயகனைவிளம்பாய்கிளியேகலங்காமே.

(இ - ள்.) ஆறுதாமரைகள் மலர்ந்தாற்போலும் ஆறுதிருமுகங்களை யுடையவனேயென்றும், அழகமையும் வாகுவலயமணிந்த பன்னிருதிருப்புயங்களையுடையவனே என்றும், வேண்டுவார் வேண்டும் பதங்களைத் தரும் இரண்டுபாதங்களை யுடையவனே என்றும், ஒளி விட்டுவிட்டுப் பெயரும் வேலேந்திய திருக்கரத்தை யுடையவனேயென்றும், சிவஞானத்தாற்றெளிந்த வுள்ளத்தினை யுடைய மெய்ஞ்ஞானிகள் வாழ்வேயென்றும், தேவர்களுக் கெல்லாம் ஓர் அரசனே என்றும், பெருமையாலுயர்ந்த திருப்போரூரி லெழுந்தருளிய முருகக்கடவுளைக் கிளியே நீ கூறுவாய் கூறுவையேல் கலங்காய்.

கிள்ளையே! ஆறுசரோருக முகமென்பையேல் நான்சடாக்கர மந்திரத்தை யுச்சரித்தவனாவேன், பன்னிரு புயனென்பையேல் ஒழியவேண்டிய இடரொழிந்து அடையவேண்டிய பயனை யடைவேன். பேறுதவும் பதயுகனென்பையேல் என்றுமாறாத் திருவருளையடைவேன். வேலொளிருங் கரனென்பையேல் திருவருள்நீங்காத ஞானத்தையடைவேன். தேறுமுளத்தினர் வாழ்வென்பையேல் தொண்டர்க்குத்தொண்டனும் பெருவாழ்வடைவேன். ஆதலால் நீவிடயசுகங்களி லின்புற்றுக் கலங்காது தேவர்கோவாகிய போரூர்நாயகனைத் தியானிப்பாயென்றதென்க. (அ)

முருகாகுமராசரணென்றுமுதிராவயதாய்சரணென்று
நிருபாதிகனேசரணென்றுநிமலாகுகனேசரணென்று
மருகாவொளியேசரணென்றுமருளேபொருளேசரணென்று
மருவார்பொழில்சூழ்போரூர்வாழ்மயிலோனைக்கிளிபுகல்வாயே.

(இ - ள்.) முருகனே குமரனே உன்னடைக்கலமென்றும், முதிரும்பருவத்தை யடையாதவனே உன்னடைக்கலமென்றும், உபாதியில்லாதவனே உன்னடைக்கலமென்றும், விமலனே குகனே உன்னடைக்கலமென்றும், கெடாத ஒளிவடிவா யிருக்கின்றவனே உன்னடைக்கலமென்றும், மறுமைக்கருளும் இம்மைக்குப்பொருளுமாயிருக்கின்றவனே உன்னடைக்கலமென்றும், வாசமிக்க பொழில்சூழ்ந்த திருப்போரூரிலெழுந்தருளிய மயிலூர்தியை யுடையவனைக் கிளியே நீகூறுவாய்.

கிளியே; முருகா என்பையேல் நீவருந்தும் வருத்தமொழிய உன்னுள்ளங்குளிர முத்திநெறியைக்காட்டுவன், குமரா என்பையேல் குமரன் விளையாடுந்தன்மை யுடையோனாதலால் உனதுகுற்றத்தை யாராய்ந்துணரான், முதிராவயதா யென்பையேல் முதிராவயதோனாகிய ஞானசம்பந்தப்பெருமான் ஐம்புலவாசையின் செயலறியானாதலால் அவனைப்பொருளும் வரையாதளிப்பன், நிருபாதிகன் என்பையேல் நவகோள்களும் ஏனையவும் ஏனையோரை வாட்டுதல்போல் அடியாரை நலியாதவண்ண முறைசெய்து தன்

ஞானையி னிறுத்தினுனாதலால் அவன் உன்னை இவ்வுலகின்கண் அரசாளச் செய்வன், நிமலன் என்பையேல் ஆணவமலச்சிமிழ்ப்புண்ட அமணரால் உயிரிழக்க நேர்ந்த கூன்பாண்டியனுக் குயிரளித்து புறச்சமயக் களைகளைந்து நெடுமாறனென்னுந் திருநாமந்தந்து அகச்சமயத் தொளிவிளக்கின னாதலால் அவன் உனது ஆணவமலத்தை யொழித்து நிமலமாகிய அருளில் நிறுத்துவன், குகனே என்பையேல் * அன்பர் திருவுள்ளத்தின்கண் நீங்காதன்போடிருந்தோ னாதலால் அவனுளது இதயகுகையின்கண்ணும் வாழவருவன், அருகா வொளியென்பையேல் † யாழ்ப்பாணர்பால் நமிநந்தியடிகளுக்குண்டாகிய அறிவற்றத்தையகற்றி நீங்காத அன்பினிலை யறிவுறுத்தின னாதலால் அவன் உனது அறிவற்றத்தை யுணர்ந்து அதனையகற்ற அன்புநெறி காட்டுவன், அருளே பொருளே என்பையேல் சிவபாத விருதயருக்கு அருளால் அம்மையிலடையுஞ்சிவத்தையும் இம்மையில் பொருளாலடையும் வேள்வியையும் எளிதி லீண்டே யடையத் தந்தன னாதலால் அவனுனக்கும் திருவுடையார் தெள்ளியாராதலும் தெள்ளியோர் திருவுடையராதலுமின்றி யொவ்வொன்றே யுடையார் போலாது அவ்விரண்டையு மொருங்கே யளிப்பன். ஆதலால் மேற்கூறிய அவரது நாமங்களை மறவாதுமொழிந்து அடைக்கலங் கூறுவாயென்க (௬)

இன்பக்கடலேசரணென்றுமெண்குணமலையேசரணென்று
மன்பர்க்கமுதேசரணென்றுமாருயிர்முதலேசரணென்றும்
அன்புக்கறிவேசரணென்றும்வளர்பிரணவமேசரணென்றுங்
கொன்பெற்றுறுபோரூரிறையைக்கோலக்கிளியேயோதுவையே.

(இ - ள்.) பேரின்பசாகரமே உனக்கடைக்கலமென்றும், அடியார்கள் எண்ணும் எண்குண மலையே உனக்கடைக்கலமென்றும், அன்பர்களுக் காராவமுதே உனக்கடைக்கலமென்றும், பலபிறவிகளிலும் நிறைந்துள்ள உயிர்களுக்கோர்முதலே உனக்கடைக்கலமென்றும், அன்பினெறிக்கெளிவந்தருளும் அறிவே உனக்கடைக்கலமென்றும், வேதமுதலிய கலைகளெல்லாம் வளர்ந்தோங்க அவற்றிற்கு மூலமாயிருக்கின்ற பிரணவசொருபியே உனக்கடைக்கலமென்றும், அசுரருக் கச்சந்தரும் திருப்போரூரி லெழுந்தருளிய முருகக்கடவுளை அழகிய கிளியே நீ கூறுவாய்.

அமரர்கள் வேண்டிய இன்பத்தைத் திருப்பாற்கடல் தந்ததுபோல் அன்பர்கள் வேண்டும் இம்மை மறுமை யின்பங்களைத் தந்தருள்வோன் முருகக்கடவுளென்பார் இன்பக்கடலே எனவும், எவ்வுயிரின்கண்ணும் பாலில்நெய்போல் நிறைந்துள்ள இறைவன் வெளிப்பட்டருள ஆன்மவறிவின்கண் ணூட்டிய குண

---

* சம்பந்தசரணாலயர் முருகர் கணநாதர் முதலியோர்.
† திருநீல கண்டயாழ்ப்பாணர்.

மலையென்பார் எண்குணமலையே எனவும், அங்ஙனங் கசிந்த தொண்டால் ததியில் நெய்போல் ஆன்மவறிவின்கண் தோன்றி இறவாதிருக்கச் செய்வானென்பார் அன்பர்க்கமுதே எனவும், பெத்தமுத்திகளாகிய இருகாலத்தும் உயிர்களுக்குப் பதியே யாமென்பார் ஆருயிர்முதலேயெனவும், அன்பினெறியாலன்றியேனைய நெறிகளா லறியப்படா னென்பார் அன்புக்கறிவே எனவும், அவ்வன்புநெறியால் கணிக்கும் மந்திரங்களும் அவன்வடிவேயாமென்பார் வளர்பிரணவமே எனவுங்கூறினர். (௧0)

கிளிப்பத்து முற்றிற்று.

---

௨

## வண்டுவிடு தூது.

*தலைமகனை விழைந்தலைவி அவன் வருகையைப் பெறாது அவன் வசிக்குங் குறிஞ்சிநிலத்துவண்டோடு தனது குறை கூறுநிற்றல்.*

மூக்கா லுழுதுண் ணும்வண்டுகாண்மூத்தோனிளவலைக்கண்டுதான்
றேக்காரமுதரன்மைந்தனேசீர்ப்பார்ப்பதிதருகந்தனே
நோக்காயுனைநினைந்தன்பினுனோற்பாடனையினமென்றுநீர்
மாக்காவளமலிபோரிவாய்மாத்தாளிணைதொழுதேத்துமே.

(இ - ள்.) மூக்கினுற்கீண்டி மதுவையுண்ணும் வண்டுகளே, பரிதியின் கிரணம் பரவுதலறியாத வளமிக்க பெரிய சோலைசூழ்ந்த திருப்போரூரின்கண் ணெழுந்தருளியிருக்கின்ற மூத்தபிள்ளையாருக் கிளவலாகிய முருகக்கடவுளைத் தெரிசித்து, அவரதுபெருமைவாய்ந்த இரண்டுதிருவடிகளையும் வணங்கி, தேவர்கள் தேக்கிட ஆராவமுதத்தை யீந்தருளிய சிவகுமாரனே என்றும், பெருமைவாய்ந்த உமாதேவியார் தந்தருளிய கந்தனே என்றும் (வாழ்த்தி), உமது திருவுருவத்தை நினைந்து அன்பினுல் நோற்கின்ற தலைவியை, நீ இனியேனும் நோக்கிக்காணென்று அவன்பெருமை பொருந்திய பாதங்களைத்தொழுதேத்துங்கள்.

தன்னை நினைக்கும் அன்பர்கள் நினைப்பதற்குமுன்னமே நினைத்தவடிவோடும் அவரகமலரிடத்து விரைந்துசெல்லுந் தன்மையையுடைய அவன் நினைந்தும்வாராதொழியின் யா னினி யென்செய்வன், அதனையறிந்து வாரா யென்று கூறியதென்க. அன்றியும் மூத்தோனிளவலெனவும் அமுதரன் மைந்த னெனவும் பார்ப்பதி தருகந்தன் எனவும் எத்துவாயென்ற குறிப்பால் அண்ணனும் அன்னையும் அத்தனும் எனக்கிருக்க நான் எவ்வாறு அவள் கருத்துக் கிசைவேன் என்பரோல் மூத்தவரோ தாம் வள்ளிநாய்ச்சியாரை விருப்புற்ற காலத்து தமதுதெய்வத்தன்மையை நோக்காது காட்டானையாகவந்து

உதவிசெய்தவர், அம்மையப்பரோ விடந்தோன்றியகாலத்து வருந்திய பிறவுயிர்களின் இடுக்கணைக்காணப்பொறுது அக்கணமே இன்பந்தருளிய தண்ணியகருணையை யுடைவர், ஆதலால் நீரே வன்மனமுடையீர் என்று குறித்தற்குமாமெண்க. (௧)

தாமரைப்பூமணத்தேனெலாந்தண்டுறையுண்டுறைவண்டுகாள்
கோமளப்பாவையர்கேள்வனைக்கொண்டைமயூரப்ரசண்டனைப்
பாமணப்போரியிற்கண்டிதோர்பாவைபணிந்தனளென்றுதா
னீர்மனத்தன்பொடுபேசுவீர்நீள்சுகப்பொய்கையின்மூழ்கவே.

(இ - ள்.) மலர்களிற்சிறந்த வாசமிக்க தாமரைமலர்களி லுள்ள மதுவையெல்லாமுண்டு சோலையில் வாழும் வண்டுகளே, இளந்தளிர்போன்ற உபயநாய்ச்சிமார் கணவனை, உச்சிக்கொண்டையையுடைய மயில் வாகனத்தையுடைய பிரசண்டனை, பாமாலைமணக்குந் திருப்போரூரின்கண் கண்டு தெரிசித்து, ஒகாளையே! உன்னைவிரும்பி இதோ பாவையொப்பாளாகிய ஒரு தலைவி தன் மேனியில் மாசுபடப் படியிற் பணிகின்றுளென்று, யானழ்ந்தகன்ற இன்பப்பொய்கையில் மூழ்க நீங்கள் கனிந்த அன்போடளாவிய மனத்தோடு பேசக்கடவீர்.

ஏனையமலர்களில் தேனுண்டென்னது தாமரைப்பூத் தேனுண்டெனக்கூறியது 'பூவினுக்கருங்கலம் பொங்கு தாமரை' என்னும் சிறப்புநோக்கிளென்க. போரியிற் கண்டென்னது பாமணப் போரியிற் கண்டென்றதனால் வண்டுகளே யான் விரும்பிய அத் தலைவர்மாட்டு என்காதலைக்கூறி என்னை அவனின்பத்தில் மூழ்கச் செய்வீராகில் அவ்விறைவர் திருப்புயத்தில் புலவர்சாத்திய பாமாலையிலுள்ள அவரது அருட்டேனை நீங்கள் என்றுங் களித்துண்ணச் செய்வேனென்று அவற்றிற்கோர் பயன்காட்டியவா றென்க. (௨)

தாதினைத்தேனொடுங்கூட்டியேசந்தனம்பூசியவண்டுகா
ளாதரித்தென்னைமுனண்டவனறுமுகப்பெருமாளுடன்
பேதைமைப்பான்மையளாயினும்பிச்சியையொத்தவளேனுமியான்
மூதருட்போமுதாழிவாய்மூழ்கிடப்பேசுமினீவிரோ

(இ - ள்.) மகரந்தத்தைத் தேனொடுகலந்து சந்தனம்போற் பூசிய வண்டுகளே, யான் பேதமைத்தன்மையுடையளாயினும், பிச்சியையொத்தவளாயினும், ஆறுதிருமுகங்களையுடைய எம்பெருமான் என்னை முன் ஆதரித்து ஆண்டனன் (அதனல் அவனோடுகலந்து,) மிக்க அருளமுதந் தோன்றுங் கடலின்கண் மூழ்கப் (பேரவாகொண்டிருக்கின்றேன்) நீங்கள் அதனையெடுத்துப் பேசுங்கள்.

வண்டுகளே யான்பேதமையையுடையவளல்லள் பித்துடையவளுமல்லள் என்னை முருகப்பெருமான் முன்னே ஆண்டுவிருப்பத்தைத்தந்த அதனால் காமம் இத்தன்மைத்தென்றறிந்து பேதமைத்தன்மையும் பித்துத்தன்மையும் அடைந்தேன், அவ்விருதன்மையும் காமரசத்தைக் காட்டிய அவருடன் கலந்து இன்பநுகர்ந்து அவனருளாரமுதத்தில் மூழ்கினாலன்றி நீங்கப்பெறேன். பெறேனாயின் அவரோபழிபடுவர் இப்பெண்பழி அவரடையாவண்ணங் கூறுங்களென்றதென்க. வருவித்துரைத்த எல்லாம் குறிப்பெச்சமென்க.

வண்டுகாளென்றது தாதினைத் தேனொடுகூட்டியே சந்தனம்பூசிய வண்டுகாள் என்றகுறிப்பால் தேனுண்ணச்சென்ற நீங்க ளளவறிந்துண்டு வராது மிகபடவுண்டுமயங்கி மகரந்தத்தால் அளைப்பட்டீரன்றோ அதுபோலும் முருகன்திருநோக்கால் கண்டவின்பம் அவ்வளவினடங்கப்பெறாது அவனது மார்பிற்பூசிய சந்தனம் எனதுமுலைத்தடத்து மழுந்தப் பேரவாகொண்டேனென்றது குறித்தற்கென்க. (௩)

சோலைவிருந்திடவுண்டுதான்சோபனம்பாடியவண்டுகாள்
காலமெலாமுனையேநினைகாரிகைகைதொழுதாளென்றே
யாலையின்வாயெனமேதிவாயம்புயத்தேன்சொரிபோரிவாழ்
வேலவனூபுரக்கஞ்சமேல்விழுந்தெழுந்தாடிவிளம்புமே.

(இ - ள்.) சோலைகள் தம்மிடத்துள்ள தேனை விருந்தாகஇட, அதனை அதிசயங்கூர்ந்துண்டு சோபனம்பாடிய வண்டுகளே, ஆலை வாயினின்றும் வழிந்தொழுகும் கருப்பஞ்சாற்றைப்போல, எருமைகள் வாயினின்றுந் தாமரைமலரின் தேன்பெருக்கெடுத்தோடும் திருப்போரூரில் வாழ்கின்ற வேலாயுதபாணியாகிய முருகக்கடவுளுடைய, நூபுரமணிந்த திருவடித்தாமரைமலர்மேல் தண்டாகாரமாகவிழுந்து மீண்டுமெழுந்து ஆனந்தக்கூத்தாடி (எங்களையனே) ஓர் தலைவி எக்காலமும் உன்னையே நினைந்து கைகளைக்கூப்புகின்றாள், என்று என் னெண்ணக்குறிப்பைக் கூறுங்கள்.

யானுந் தலைவனும் வேறுசத்தணித்திராது கூடிவாழ எனதுகைகளைச்குவித்துக் காட்டினேனாதலால்அக்குறிப்புணர்ந்து எனது சோபனத்தையும்பாடுவீரென்பார் சோபனம் பாடிய வண்டுகாளெனவும், அங்ஙனம்பாடுவீரேல் தேன்பெருக்கெடுத்தோடும் போரியின்கண் என்றும்வாழச்செய்வேனென்பார் திருப்போரூரின்பெருமைதோன்ற ஆலையின் வாயென மேதிவாய் அம்புயத்தேன்சொரி போரியெனவுங்கூறினார். (௪)

கோங்கலர்மாமழைமதாணிமேற்குயின்றமணியன்னவண்டுகாள்
மாங்கனிவாழைபின்றிங்கனிமன்னுபலாக்கனிச்சாறெலாந்
தேங்குறும்போரியிலுண்டுநீர்செவ்வேள்பதம்பணிந்தேத்தியே
யோங்கொளிவீடுறநாயினேனோதுமினென்றுணாநீவீரோ.

(இ - ள்.) மதாணிப் பதக்கத்தில் இழைத்த நீலமணியைப்போல, மேகங்கள் தவழும் கோங்குமலர்களில் மொய்த்திருக்கும் வண்டுகளே, திருப்போரூரில் மாங்கனியின் சாறும், கனிந்த வாழைக்கனியின் சாறும், பலாக்கனியின் சாறும் கலந்து தியங்குகின்றதனால், அங்கு நீங்கள் வேண்டியவாறுண்டு, நீங்கள் எனது துணைவராதலால் எனக்கின்பத்தைப் பெருக்கும் முருகக்கடவுளுடைய திருவடிகளை வணங்கித் துதித்து, நாயிற்கடைப்பட்ட யான் சிற்சோதியிற்கலக்கக் கூறுங்கள்.

கோங்குமலர் மதாணிப் பதக்கமாகவும் வண்டுகள் அதிற்பதித்த நடுநாயகமாகவு மிருத்தலால் மதாணிமேற் குயின்ற மணியென்ன எனவும், மலரிலுள்ள தேன்சுவையொன்றையே யறிந்தநீங்கள் முக்கனியின் சுவையையும் திருப்போரூரி லெளிதிலறியலா மென்பார் சாறெலாம் தேங்குறு போரியிலுண்டெனவும், நீங்கள் முன்னே யின்பத்தைப் பெற்று பின் யான் சிவத்தோடு கலந்தின்புற நீங்கள் துணைசெய்வீ ரென்பார் ஓங்கொளிவீடுற நாயினேனுதயினென் றுணைநீவிரோ எனவுங்கூறினார். (ரு)

சந்தனச்சாரலி னெய்தலிற் றண்டலை நந்தனச் சூழலில்
வந்தொரு நால்வகைப் பூநறை வாசந்துளைந்தாடும் வண்டுகாள்
கந்தனைப் போரி விசாகனைக் கண்டென் கவலைக் கருத்தறச்
சிந்தை மகிழ்ந்தெனை யாளவே செப்புமினெற்குற வானிரோ.

(இ - ள்.) சந்தனமரங்கள் செறிந்த மலைச்சாரலிலும், நெய்தநிலத்திலும் சோலைபோற் செறிந்த நந்தனவனச் சூழலிலும் வந்து, ஒப்பிகந்த நால்வகை மலரிலுள்ள வாசமிக்க தேனையுண்ண, மகரந்தத்தைக் கிண்டி விளையாடும் வண்டுகளே, நீங்கள் எனக்குற வானீர்க ளாகையால், கந்தனென்னுந் திருநாமத்தை யுடையவனை, திருப்போரூரி லெழுந்தருளியிருக்கின்ற விசாகனென்னுந் திருநாமத்தை யுடையவனைத் தெரிசித்து, என் கவலைக்கருத்து நீங்க, திருவுளங் களிகூர்ந்து என்னை யடிமைகொள்ளக் கூறுங்கள்.

வண்டுகாள் "முயற்சி திருவினையாக்கு முயற்றின்மை இன்மைபுகுத்திவிடும்" என்றபடி நீங்கள் விரும்பியவற்றை நானிலத்திலுஞ் சென்று வேண்டியவாறேதுய்த்தின்புறுகின்றீர், யானோ இற்பழிநாடி இல்லிகவாது இறைவனை நினையாதார் அவலநெஞ்சம்போல் வாளா கவலையுறுகின்றேன். அற்றுகலின் நீங்க ளென் இன்னுயிர் காக்கும் உறவின ரானீராதலால் என் தலைவனாகிய கந்தன்பாற்சென்று எனதுநெஞ்சம் கவலையினின்று நீங்க யான் படும் பாட்டைக் கூறுங்கள்.

இதனால் யானில்லிகப்பேனாயின் எனதுகற்பைக் கெடுத்தானென் றலகின ரலர்தூற்றுவர் அது நன்றன்று. அவனே என்னுடைய உறவினரொல்லா மறியமணம்புணருமாறு கூறுங்களென்றுகூறியதென்க. (சு)

மல்லிகைத் தாதரித் துண்டலர் வாரிசத் தேன்கொடுவாய்கழீஇ
மெல்லிதழ்ப் பூவணைமீதிலே மென்றுயில்கொண்டுறைவண்டுகா
ளல்லிய னெஞ்சின ளன்பிலா ளானநெறிபுரி யாதவள்
புல்லிய ளென்று விடாதெனைப்போரிமுருகனுக் கோதுமே.

(இ - ள்.) மல்லிகை மலரிலுள்ள மகரந்தத்தை விரும்பியுண்டு, மலர்ந்த தாமரையிலுள்ள தேன்கொண்டு வாய்பூசி, மெல்லிய பூவினிதழ்ச் சேக்கையில், இனிய துயில்கொண்டுறங்கும் வண்டுகளே, திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளுக்கு அறியாமையி னிலக்கணம் வாய்ந்த நெஞ்சினை யுடையவள், அன்பிலாதவள், உன்னை யணையும் நெறியை விரும்பிச் செய்யாதவள் (இதனால்) இழிஞளென்று எண்ணி என்னைக் கைவிடாது காதலித்தணைய, இனியசொல்லைக் கூறுங்கள்.

அஞ்ஞானமுடைமையும் அன்பின்மையும் நெறியுணராமையு முடையேன் அதனால் யான் சிறியளென்னும் பெயருடையேன். அஞ்ஞானத்தை யகற்றி அன்பினைத் தந்து தன்னடிகூட நன்னெறிகாட்டுதல் பெரியோரென்னும் பெயருடையோர்கடன். அதனா லென்னைப் புல்லியளென்று கைவிடாமல் கைக்கொள்ளக் கூறுங்களென்று கூறியதென்க. (எ)

தண்டலை யூர்விண்டு நெய்தலூர்த் தாவடிபோய்ப் பனைக்கள்ளெலா
மொண்டுமிகக்கொள்ளை கொண்டுதான்மொய்த்துவருஞ்சிறை வண்டு
பண்டெனையாண்டருணேசனைப்பண்புறுபோரியில்வாசனைக் [காள்
கண்டின மாண்டுகொ ளென்றுநீர் காண வுரைத்திடுவீர்களே.

(இ - ள்.) சோலைசூழ்ந்த நகரத்தைக் கடந்து நெய்தனிலத்தை ஓரடியிற் றாவிச்சென்று, பனைமரத்திலுள்ள மதுவையெலாம், கொள்ளை கொள்ளையாக மொண்டுகொண்டு திரளாகத்திரண்டு வருகின்ற சிறகையுடைய வண்டுகளே, முன் என்னைக் கூடிக்கலந்த அன்புடையானை, அழகுபொருந்திய திருப்போரூரில் வாழ்கின்றவனைத் தெரிசித்து, இறைவனே ஓர்தலைவி நீஇணங்கும் குலமுடையாள் (அதனால்) நீ அவளோடுகூடுவாய் என்று நீங்கள் அவன், என்னை இனியேனுங் காண வுரைத்திடுவீர்கள்.

இறைவனே எம்மாற்கூறப்பட்டவளைமுன்னேகலந்திருக்கின்றீர் அதனால்உம்மிருவர்க்கும் உண்டாகியபுணர்ச்சி தெய்வப்புணர்ச்சியாயிற்று; இனி இனங்கருதாதீரென்று கூறுங்களென்று கூறியதென்க. (அ)

மாமலைச் சேணிலத் தேதுஞ்சி வாரமனைபுகுந் துண்டுபின்
கோமலர்க் காமுகசாலையிற் கூடு மரசிள வண்டுகா
டேமலர்த் தார்புனைமார்பனைச் செஞ்சிறை யஞ்சேவ லாளனைக்
காமணக்குந் திருப்போரிவாய்க்கண்டெனையாண்டிடச்சொன்மினே.

(இ - ள்.) விண்ணையளாவிய பெரியமலையின்கண் ணுறங்கி, உனக்குரிய மகளிருலாவும் மனைக்கட் சென்று அவரளகத்தில் மணக்கும் மலர்த்தேனை யுண்டு, பின் மன்மதனுக்குரிய புட்பபாணங்கள் நிறைந்த மன்மதசாலையிற் கூடும் அரசிளவண்டுகளே, நறுமணங்கமழும் கடப்பமலர்மாலையை யணிந்த திருமார்பை யுடையவனை, செந்நிறம்வாய்ந்த சிறகினையுடைய அழகிய சேவற்கொடி யேந்தினவனை, மலர்மணங் கமழப் பெற்ற சோலைசூழ்ந்த திருப்போரூரிற்கண்டு தரிசித்து, என்னை யடிமைகொள்ளச் சொல்லுங்கள்.

வண்டுகளே நீங்கள் எவ்வாறு மகளிரளகத்திலுள்ளமதுவை வாரமாகக்கொண்டு உண்கின்றீர்களோ அதுபோலும் போரூரிறையவனை யான் வாரமாகக்கொண்டின்புறச்செய்யுங்களென்று கூறியதென்க. (௬)

நீலநிறப் பொறிவண்டுகா ணித்தலுங் கைதொழுவே னுமை
யேலவுரைத்த மொழிகளை யெல்லாமயர்த்து விடாது நீர்
சாலநிகழ்த்திடும் போரிவாழ் சண்முகவேலனுக்குங்களைப்
போலுமெனக்குறவுண்டுகொல்பொங்கருநுங்களுக்கீவலே.

(இ - ள்.) நீலநிறத்தையும் பொறிகளையு முடைய வண்டுகளே, எனது தலைவன் இறங்கி யருளுமாறு இரக்க மொழிகளை உங்கள்மனத்தி லடைய யான்கூறியிருக்கின்றேன், அம்மொழிகளை யெல்லாம் நீங்கள் சோர்ந்து விடாது யான்கூறிய மொழியினு மினிய இன்சொற்கூட்டித் திருப்போரூரின்கண் வாழும் வேலேந்திய சண்முகக்கடவுளுக்குக் கூறுங்கள், (என்னெனில்) என திசைவுகூற உங்களைப்போலு மெனக்குரிய உறவினருமுண்டோ, (அதனால்) நானிருக்கு மிப்பூஞ்சோலை உங்களுக்குக் கொடுத்துபசரிப்பேன் (அன்றியும்) உங்களை நாள்தோறுங் கைதொழுவேன் இதுவே யான்செய்யுங் கைம்மாறென்றுணருங்கள்.

வண்டுகளே யானுரைத்தமொழிபிறழாதுரைப்பீராயின் உங்கள் செய் நன்றியை மறவாது என்தெய்வத்தை யெவ்வாறுமறவாது தொழுகின்றேனோ அதுபோலும் உங்களை என்றுந்தொழுவேன் என்று தன் நன்றிமறவாமையைக்கூறியதென்க. (௭0)

வண்டுவிடுதூது முற்றிற்று.

வேலுமயிலுந்துணை.

## கட்டளைக்கலிப்பா.

அருளிருந்தநின் பாதமடைந்தவ
    ரன்பிருந்தநெஞ் சாலுனிவாழ்த்தியு
மருவிருந்தமலர் தூய்வணங்கியு
    மன்னுகாலங் கழித்தனர்நாயினே
னுருவிருந்தயர்கின்றபொய்வாழ்க்கையை
    யுன்னியுன்னி யுழன்றே மயங்கினேன்
றருவிருந்த பொழில்வளமன்னிய
    சமரமாபுரிச் சண்முகவேலனே.

(இ - ள்.) வளங்குன்றாது தருக்கள் செறிந்திருந்தசோலையின் வண்மை நிலைபெற்ற திருப்போரூரிலெழுந்தருளிய சண்முகவேலவனே, அருள்தங்கியிருந்த உனது திருவடியையடைந்திருந்தவர்கள் அன்புநிறைந்திருந்த அவரது நெஞ்சால் நினைந்துவாழ்த்தியும், மணம் மாறாதிருந்தமலர்களைத்தூவி வணங்கியும் நிலைபெற்றகாலத்தைக்கழித்தனர், நாயிற்கடைப்பட்டயான் முன் உருவு போலிருந்து பின்சோர்வடைகின்ற பொய்வாழ்க்கையை நிலையுள்ளனவென்றெண்ணி யெண்ணி ஓர்காலன்றிப்பலகாலு முழன்றே அறிவு மயங்கினேன். (ஆதலின் என்போன்ற அறிவிலிகளுமுண்டோ இல்லை யென்றபடி).

அருளிருந்தநின் பாதமென்றதனால் திருவடியிற் போந்தவருளும், அன்பிருந்தநெஞ்சமென்றதனால் மனத்தின்கட்போந்த குணமும், மருவிருந்தமலரென்றதனால் மலரின்கட்போந்தகுணமும், நின்பாதமடைந்தவர் உன்னிவாழ்த்தியும் மலர்தூய்வணங்கியும் மன்னுகாலங்கழித்தனரென்றதனால் அருளடைந்த மெய்ஞ்ஞானிகள்பாற் போந்த குணமும் எடுத்துக்காட்டியவாறென்க. உருவிருந்தயர்கின்ற பொய்வாழ்க்கை என்றதனால் வாழ்க்கையின் நிலையாமையையும், உன்னியுன்னியுழன்றேனென்றதனால் நினைப்புமறப்பிற்பட்டுழலுந்தன்மையையும், மயங்கினேனென்றதனால் அருள்பெறாதாரினாயினேன் என்றதையுங் காட்டிய வாறுமாமென்க. (க)

கானனீரினை மெய்யென்றவாவியே
    கனவிடாய்கெட வுண்ணக்கருதினே
னனநீருவர் நீரொனநாடுவ
    தன்னமாமய லென்றினியாறுவேன்
வானநாடருமாமுனி வோர்களு
    மதித்தவாரண முந்துதித்தே தொழுந்
தானமாமழை யானைக்கிளையவா
    சமரமாபுரிச்சண்முகவேலனே.

(இ - ள்.) தேவர்களும், தவத்திற்சிறந்த முனிவர்களும், அவ்வவற்றின் நிலைநிலையாமையைக் கூறும் வேதங்களும், போற்றிவணங்கும் மதமழையைப் பொழிகின்ற யானைமுகக்கடவுளுக்கிளையவனே, திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளே, கானற்சலத்தைச்சலமென்று விரும்பி நீர்வேட்கைகெடப் பருகவெண்ணினவனைப்போலவும் (அன்றியும்) களரின்கண்காணப்படும் உவர் நீரை நீரென்றுவேட்டலும், அக்கானற்சலத்தை நீரெனமயங்கியமயக்கத்தைப் போலவுமாம், இவ்வுலகவின்பமாமென்று இனிமனவுபசாந்தியையடைவேன்.

இதனால் ஆதியாத்மீகம் ஆதிதெய்வீகம் ஆதிபௌதீகங்களால் வெய்யிற் கிடந்த புழுப்போல் வெம்பிய அதிகாரியொருவன் அவ்வெப்பொழிய இறைவன் திருவருளை விரும்புஞ்ஞான்று உலகவின்பம் கானல் நீராகவும், உவர்நீராக வுமே காண்பன். யானும் அவ்வாறு கண்டு மனநிலைபெற்றேன். அதனால் சண் முகவேலவனே இனி அருள் வேண்டினேனென்று குறிப்பித்ததென்க. (௨)

கனவிலே கண்டகாட்சிகள்யாவுமக்
 கனவிற்பொய்யெனக்கண்டுதனைக்கண்டோன்
பினையுமந்தக் கனவினைமெய்யெனப்
 பேணுமாறுமயங்கினேன்பேதையே
னனையுந்தாதையுமாரியனுமெனை
 யாண்டதெய்வமுநீயெனநம்பினேன்
றனைவிடேலுன்றன் சித்தமென்பாக்கியஞ்
 சமரமாபுரிச்சண்முகவேலனே.

" (இ-ள்.) கனவின்கட்காணுந்தோற்றங்களெல்லாம், அக்கனவின்கண்ணே இல்பொருளெனத் தெளிந்து, அத்திரிசியப்பொருளுக்குவேறாகத் தன்னைக்கண் டவன், மீட்டுமக்கனுப்பொருளை மெய்ப்பொருளெனமயங்கினவன்போல அறி விலியாகியயானும் மயங்கினேன், அதனாலெனக்கு அம்மையுமப்பனும் ஆரிய னும் என்னையடிமைகொண்டதெய்வமும் நீயே யென்று நம்பியிருக்கின்ற என்னை, திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளே கைவிடாதே, இனி உன்னுடைய சித்தம் என்பாக்கியம்.

ஒருவன் கனவின்கண்காணும் காட்சிகளை அக்கனவின்கண்ணே பொய் யெனக்கண்டு தன்னைவேறாகக்காணுதலும் மீட்டு மக்கனவிற்காணும் பொரு ளின்பங்களைப்பொய்யெனக்காணாது தானதுவா யின்பம்வேட்டலுமுண்மை போல், தனுமுதலாகக் காணப்பட்ட உலகமெல்லாந் தோன்றி நின்றழிதலைக் கண் கூடாகக்கண்டு வைத்தும் அஞ்ஞானமயக்கத்தால் நிலையுடைப்பொரு ளெனவேயெண்ணியுழன்றுவருந்துகின்றேன். அங்ஙனம் உழல்கின்றவனானு லும் தாய்தந்தை குரு தெய்வமுதலியயாவும் நீயே யென நம்பியிருக்கின்

றேன். ஆதலால் அவ்வொரு நன்மையை நாடி என்னைக்கைவிடா திருத்தியேல் அது உன் சித்தமே. அன்றிப்பொய்ப்பொருளையான் வேட்டகுற்றத்தை நாடி நீகைவிடுவையேல் அது என்பாக்கியந்தான் என்று கூறியவாறெண்க.

சரீரத்தை வளர்க்குந்தாயும் அறிவைவளர்க்குந்தந்தையும் ஞானத்தைவளர்க்குங்குருவும் முத்தியின்பத்தையளிக்குந் தெய்வமுமா யிருந்துபகரிக்குமியல்பினனென்பார் அனையுந்தாதையுமாரியனுமெனையாண்ட தெய்வமுநீயெனநம்பினேனென்றனை எனவும், ஆணவமலத்திற்சிமிழ்ப்புண்டிருந்த வெனக்குத்தனுவைக்கொடுத்துத்தாயெனக்காத்தும், வேதாகமங்களைத்தந்து இருவினையிற்பட்டுழலுதலகற்றி வீடுபேறெய்த தந்தையெனநூலுணர்ச்சியைத்தந்தும், அங்ஙனந்தோன்றியவுணர்ச்சி பொய்ந்நூலின்வழி செல்லாது மெய்ந்நூலின்வழிச்செல்லகுருவெனவந்துபதேசித்தும்,அவ்வுபதேசத்தாலடையவேண்டிய பேரின்பத்தை யான் வழிபடுந்தெய்வமாயிருந்தளித்தும் செய்தவன் நீயேயாக இன்று நீ என்னைக் கைவிடுவையாயின் யானென் செய்வேனென்பார் விடேலுன்றன் சித்தமென்பாக்கியமெனவுங்கூறினர். (௩)

பழுதைபாம்பல வென்றுளியாற் கண்டும்
 பாம்புவாதனைதீராதவனென
வெழுமுன் சிற்சுகநின்னருளாற் கண்டும்
 இங்கிலப்பொய்மைவாதனை நீங்கிலேன்
முழுதுணர்தன் முதலாயவெண்குண
 மொய்த்த பஞ்சரமே மறையுச்சியே
தழுவுவெண்சுதைமாளிகை நீடிய
 சமரமாபுரிச்சண்முகவேலனே.

(இ - ள்) முற்றுமுணர்தலாகக்கூறும் எண்குணஞ் செறிந்தபஞ்சரமே, வேதாந்தப்பொருளே, வெள்ளியசுண்ணச்சாந்தால் தீற்றியமாளிகைகள் சூழ்ந்ததிருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளே, இது பழுதை இது பாம்பல்லவென்று விளக்கொளியாற் கண்டும் முன்னராவெனக்கண்டதனாலுண்டாகியவாதனை நீங்காதவனைப்போல், உனது சிற்சுகம் உனதருளால் என்னறிவின்கண்தோன்றுதலைக் கண்டும், அழிதன்மாலையவாகிய இப்பிரபஞ்சவாதனையொழிந்தேனல்லேன் (என்செய்வேன் என்றபடி.)

ஒருவன் ரச்சுவினிடத்திற் கண்டசர்ப்பப்பிராந்திவிளக்கொளியாலப்பிராந்தி போய் ரச்சுவே யெனக்கண்டும் சர்ப்பந் தீண்டியதென்றெண்ணிய வேதனையவனுக்குத் தீராததுபோலயானுனது ஞானோபதேசத்தால் வேதனை செய்யும் மாயாபிரபஞ்சத்தையானென தென்றபிமானித்து எழுதலொழியப் பெற்றும் அடியேன் பிராரத்தவாதனை நீங்கப்பெற்றிலேன் அதனால்வ்வாத

னை யென்னைப் பேதியாவாறுனதருட்பணியைத்தந்தருளாயென்றுகூறிய தென்க. (௪)

பிரணவத்தைவிடவகராதிய
பிறங்குறுதபரிசெனப்பேதமா
முரணவித்தசொரூபம்விட்டிவ்வுயிர்
முதலவின்றெனவென்றெனக்கோதினே
யரணெரித்தவன்மைந்தநின்றாட்டுணை
யண்டினேற்குமவித்தையுண்டாகுமோ
தரணியைக்கண்டபேர்க்குமிருளுண்டோ
சமரமாபுரிச்சண்முகவேலனே.

(இ - ள்.) பிரணவாக்கரத்தைவிட்டு, அசரமுதலிய வெழுத்துகள்விளங்காத தன்மையைப்போல, பேதமுதலாகக்கூறும் முரண்களைக்கெடுத்த பிரமப்பொருளைவிட்டு இவ்வுயிர்முத லில்லையென்று யடியேனுக் கருள்செய்தவனே, மூவெயிலெரித்த யிறைவன்மதலையே, திருப்போரூரின்க ணெழுந்தருளியிருக்குஞ் சண்முகக்கடவுளே, அருக்கனைக் கண்டபேர்களுக்கு மிருளுண்டாகுமோ (அதுபோல) உனதடியிணையைவிடாது அண்டிநிற்குமெனக்கும் அஞ்ஞானமுண்டாகுமோ.

அகரம் பிரணவத்தின் வேறுதலும் பிரணவம் அகரத்தின்வேறுதலு மின்றி யொன்றாயிருத்தலென்பார் பிரணவத்தைவிட வகராதியபிறங்குறுத பரிசென என்றார். இதனால் அகரம் பிரணவத்தினேரக்கரமெனவும், அது பிரணவத்தைவிட்டு விளங்காதெனவும் போந்தது, போதரவே பிரணவம் சிவமெனவும் அச்சிவத்தினறிவு அகரமெனவுங்கொள்ளற்பாற்று. ஆகவே அச்சிவவறிவு அச்சிவத்தைவிட்டு எங்ஙனம்வேறாகாதோ அதுபோல் அவ்வறிவைவிட்டு ஆன்மாக்கள்வேறிலவென்பார்சொரூபம் விட்டிவ்வுயிர்முதலவின்றென என்றார். இவ்வுயிர்முதலவின்றனவென்றதனால் உயிரோர்முதலெனவும் சொரூபமோர்முதலெனவும்போந்தன. போதரவே சிவமுதலையன்றி உயிர்முதலில்லையென்றாயிற்று, ஆகவே பேதமாகவும் அபேதமாகவும் பேதாபேதமாகவும் கூறுங்கூற்றுக்களடாதென்பார் பேதமாமுரணவித்த என்றார். இக்கருத்துணராது சொரூபத்திற்கும் உயிர்க்கும் பேதங்கூறுதலடாது அபேதங்கூறுதலே அமைவுடைத்தென்றாெனின் அஃதன்றென்பார் நின்றாட்டுணையண்டினேற்கு மவித்தையுண்டாகுமோவென்றார். எனவே, சொரூபமாகியவுன்னை உயிராகிய யான் அணுகவொட்டாது தடைபடுத்திய அவித்தை உனதுதிருவருளாதாரத்தில் நிற்கப்பெற்றாலுண்டாகுமோவெனக் கூறக்காரணமின்றாம். அற்றாகலின் ஆன்மா அவித்தையோடுசம்பந்தமுடைய தெனவும், சொரூபம் அவித்தியாசம்பந்தமில்லாததெனவும் போதரலால் யான் அவித்தியாசம்பந்தமுடையவ

னாயினும் உனையண்டினேற்குமுண்டாகுமோவென்று ஐயமகற்றி மறுதலைப் பொருள்படக்கூறியதனாலு முணர்க. அல்லதூஉம் தரணியைக்கண்டபேர்க்கும் இருளுண்டாகுமோவென் றுவமையு மெடுத்தோதினார். இதனால் அருக்கனைக்காணாதஞான்று இருண்மயமாயும் கண்டஞான்று ஒளிமயமாயுமிருத்தலென்னுமுண்மையைக்காட்டினார். காட்டவே ஆன்மா இருளாகிய அசத்துமல்ல ஒளியாகிய சத்துமல்ல சதசத்தென்றுகொள்ளக்கிடந்தன. இவ்வுண்மை இறைவனுணர்த்த யானுணர்ந்ததன்றி என் போதவறிவாலுணர்ந்ததன்றென்பார் என்றெனக்கோதினாய் அரனொரித்த மைந்த என்றார்.

இதனால் சிவவறிவையன்றிச் சீவவறிவு நிகழாதெனவும், சீவவறிவுசிவவறிவையகலாதிருப்பின் ஆணவவிருளணுகாதெனவுங்கூறியவாறாயிற்று.

அகரம் அறிவென்பதை "அகரமெனவறிவாகியுலகமெங்கு மமர்ந்து" என்றபாசுரத்தாலுணர்க. (௫)

இந்திரஜாலம்பொய் யென்றதன்மூலத்தை
யியம்பிக்காட்டக்கண்டோன் மயக்கெய்தல்போல்
பந்தஜாலம்பொய்யென்றிதன்மூலநீ
பகரக்கண்டும்படிறேன் மயங்கினேன்
கொந்துலாவியகொன்றைச்சடாடவிக்
குழகனுக்கழகான குமாரனே
சந்தனாடவிச்சாரல் விரைதருஞ்
சமரமாபுரிச்சண்முகவேலனே.

(இ - ள்.) கொத்துக்கொத்தாய்விளங்குங் கொன்றை மலர்மாலையணிந்த சடாடவியையுடைய சிவபெருமானாகிய வழகனுக்கு பேரழகான புத்திரனே, சந்தனவிருட்சங்கள் செறிந்து மணங்கமழுஞ் சாரலையுடைய திருப்போரூரி லெழுந்தருளிய சண்முகக்கடவுளே, ஒருவன் இந்திரஜாலவித்தையைக்காட்ட அதனைக்கண்டு மயங்கினவனுக்கு அவனே அந்த ஜாலவித்தையின் மூலத்தை ஈதெனவிளக்கிக்காட்டப் பொய்யெனக்கண்டவன் மீளவும்மயக்கத்தையடைதல்போல, பந்தப்படுத்துமிவ்வுலகவின்பத்தை நிலையல்லவென்று இதன்மூலத்தை நீயுபதேசிக்க, அவ்வாறே கண்டும் வஞ்சகனாகிய யான் மயங்கினேன், (இதற்கோர்வழிகூறாயென்றபடி).

பொய்யென்றிசைத்தல் திதியாய்க்காணப்பட்ட பொருளைக்கண்ணுற்றேயன்றி, முயற்கோடுபோல் இல்பொருளைப்பொய்யென்றிசைத்தல் யாங்கணுஞ் செல்லா. ஆகவே அத்திதிப்பொருளாகிய காரியப் பிரபஞ்சம் ஆதியுமந்தத்தையுமுடையதென்பது பெற்றாம். பெறவே அவை காரணமின்றி யாதலின்மையான்பிரபஞ்சத்திற்குக்காரணம்மாயையெனப்பட்டது. படவே மாயைவித்தாய் நின்று அவற்றினின்றுங்காரியமாகிய பிரபஞ்சந் தோன்றிநின்றழிந்துவருதலை யென்று முடைத்தென்று கொள்ளற்பாற்று அதனால் சித்தாகிய நீ தே

காதிகளுக்கு மூலமாகாய். மூலம் ஜடமாகியமாயை யென்றறிவித்தனனென்பார் பந்தஞாலம்பொய்யென்றிதன்மூலம்பகர எனவும், ஞாலத்திற்கு மூலமாகிய மாயை ஜடமென்றதனால் அதன் காரியமாகிய பிரபஞ்சமும் ஜடமென்றுணர்த்தி ஜடம் ஜடத்தாற்காரியப்படா. அற்றாகலின் இவ்விரண்டுமாகாத இறைவனாகியயாம் இணைத்தாட்டுவோமென்றருளியதையனுபவத்தாற்கண்டும் முன்பழகியபழக்கத்தால் அவனவளதுவாகவொவ்வோர்முன்னிலையைக்கருதி அவற்றுளொன்றில் என்றனைச்சுட்டி யெனது சுதந்தரமின்மையை மறந்திடர்ப்படுகின்றேன் என்பார் கண்டும்படிறேன் "மயங்கினே னெனவுங் கூறினார் (௬)

பளிக்குமண்டபத் தேயுறுநாயதன்
பன்னிழற்குறு மெய்யெனநாடல்போல்
ஒளிக்குமாயையி னின்றெனையெண்ணிலா
வுருவமாக்கண்டுழன்றனனையனே
வெளிக்குளேவிளை யுஞ்சுகவாரியே
வித்திலாதெழு சுத்தசொரூபமே
தளிர்க்கையார்க ணடிக்கின்ற மாடமாம்
சமரமாபுரிச் சண்முகவேலனே

(இ - ள்.) சிதாகாசவெளியில் விளையுஞ் சுகக்கடலே, சுயஞ்சோதியாயெழுந்த சுத்தசொரூபமே, தளிர்போன்றகைகளையுடைய மங்கையர்கணடனஞ்செய்கின்ற மாளிகைகள் நிறைந்த திருப்போரூரின் கணெழுந்தருளியிருக்கும் சண்முகக்கடவுளே, பளிங்கினாற்செய்த மண்டபத்தையடைந்த ஞமலி, தன்னுடைய நிழலானது அப்பளிங்கின் சுவரினிடத்துப்பல ஞமலியாகக்காண, அவற்றை நிழலென்றுணராது ஞமலியென்றே யெண்ணிக் குரைத்தல்போல், அஞ்ஞானவிருளைச் சிறிதகற்றும் தத்வங்களோடுகூடி மாயாவுருவின்கண் நிற்குஞான்று, அம்மாயையின் தொடக்கால் காணப்படும் எண்ணில்லாதபல வுருவங்களும் யானேயாகக்கண்டுழன்றனன் (ஐயனே ஈதென்னமடமை யென்றபடி)

வித்திலாதெழு சுத்தசொரூபமே என்றதனால் பிறப்பிறப்பிலாதானெனும்பொருள் விளங்க **சுயஞ்சோதி** யென்றும்; என்றதனால் ஆன்மாபிறப்பிறப்பையடைதற்கு **ஆணவத்தை** வித்தாகவுடையவனென்றுபலக்கணத்தாற்கொள்ளற்பாற்று.

மறைக்கமறைபடாதஞானக்கிரியா சொரூபியாகிய விறைவன் மறைக்க மறைபடுஞ் ஞானக்கிரியா சகிதனாகிய வான்மா இருண்மயமாகிய ஆணவத்திலாழ்ந்து தன்னறிவு தோன்றாதிருந்த ஞான்று அவ்வாணவ விருளைச்சிறிதகற்றவிளக்கொளி போன்ற மாயையோடு கூட்டினனென்பார் மாயையை ஒளிக்குமாயையெனவும், அம்மாயாகாரியமாகிய தனுவாதிகளை யடைவிக்க ஆன்மா

வடைந்தனனென்பார் நின்றெனவும், ஆண்டணைந்த தேகேந்திரிய பிராணந் தக்கரணங்களெல்லாம் அப்பெத்தக்காலத்து கண்ணுக்குக் கண்ணாடிபோல ஆன்மவறிவைவிளக்கி நிற்றன்மாத்திரை யொன்றேயன்றி ஆன்மவறிவை யன்றி விடயங்களைத்தானேயறியும் ஆற்றலின்று, அன்றியும் அத்தத்துவங் களை யறிவாகிய தானொற்றித்துக்காணினல்லது ஒருசற்றுங்காணப்பெறாது அங்ஙனமாகத்தேகேந்திரிய முதலிய தத்துவங்களொான் றொன்றனையுந் தானெ னக்கருதி தேகமே தானென்றும் இந்திரியமே தானென்று மிவ்வாறுதா னல்லாத தத்துவங்களைத் தானென்றபிமானித்துத்தனியாகிய தன்னைப் பல தத்துவங்களாகவெண்ணின னென்பார் எனையெண்ணிலாவுருவ மாகக்கண்டு ழன்றனன் எனவுங் கூறினார்.

இதனால் மாயையைப்பளிங்கு மண்டபமாகவும், ஆன்மாவை அம்மண்ட பத்தையடைந்த ஞமலியாகவும்,ஆன்மாவல்லது அறிவதன்றாகிய வியற்கையை யுடைய தத்துவக்கூட்டங்களை பலநிழல்களாகவும், தன்னசைவால் விவகரிக்கப் பட்டுவரும் சடமாகிய தத்வங்களை யெல்லாம் தானேயென் றெண்ணுதலை பண்ணிழற்குளும் மெய்யெனநாடும் நாயாகவுங் கொள்ளக்கிடந்தன. மாயை யை யொளிக்குமாயை யென்றதனால் அது விளக்கொளியெனவும், என்னை பெண்ணிலாவுருமாகக் கண்டென்றதனால் தத்துவங்கள் சடமெனவும், உழன் றனனென்றதனால் அத்தத்துவங்களிலொன்றாகாதஆன்மா தனி யெனவுங் கூறும் சித்தாந்தத்தையீண்டுக் காட்டியவாறுமாமென்க.

இவ்வுண்மையையுணராது பளிங்கு மண்டபத்தின்கண் நாயொன்று சார்ந்து அம்மண்டபத்தில் தோன்றும் தனதுசாயைபலவற்றையு நோக்கித் தன் போலென் றெண்ணிய பிராந்தியைப்போல் ஏகமாகிய வான்மா மாயை யினால் தன்னையே சகசீவபரங்களாகக்கருதி பிராந்திகொண்டதேயன்றி அவை வாய்மையன்றென்றுகூறினுமொன்று கூறுவபோல் பிராந்தியாகியதன் னையோர் முதலாகவும், எண்ணிலா வுருவமாகியசகத்தையோர் முதலாகவும் ஐபனே யென்று பரத்தையோர் முதலாகவுங் கூறவழக்கில்லை. அல்லதூஉம் பரத்தைவெளிக்குளே விளையுஞ்சுகவாரி யெனவும், வித்திலா தெழுசுத்த சொரூபமே எனவும், சீவனென்றெண்ணப்பட்ட தன்னைநாயெனவும், உழன்றே னெனவும், சகத்தைமாயையெனவும் எண்ணிலா வுருவமெனவும், அவ்வவற்றினிலக்கணங்களை வருத்துக்கூறவேண்டிய கணக்கு மில்லை. விரிக் கிற் பெருகும். (எ)

மைந்தனேது பிழைபுரிந்தாலுமே
மன்னுதாதை பொறுத்தருள் செய்தல்போல்
எந்தையென்பிழைநீபொறுத்தாள்வதுன்
னினியபேரருளுக்கியல் பாகுமே

யந்தணாரியனாகிவந்தேழையேற்
கருளமுத மளித்தகண்ணாளனே
சந்த்ரகாந்தத் தகடொளிர்மாளிகைச்
சமரமாபுரிச்சண்முக வேலனே

(இ - ள்.) அழகிய தண்ணளியையுடைய குருமூர்த்தியாகி யெழுந்தருளி வந்து, எழ்மையேனாகிய யெனக்கு திருவருளமுதைத் தெரித்தருளிய ஞானக் கண்ணை யுடையவனே, சந்திரகாந்தக் கற்களால் சமைக்கப்பட்டு பொற்றகட்டைப்போலு மொளிவீசும் மாளிகைகள் சூழ்ந்த திருபோரூரின்கணெழுந்தருளிய சண்முகக்கடவுளே, புத்திரனானவன் ஏதேதுபிழைசெய்தாலும் அப்புத்திரனிடத்தி னிலைபெற்ற வன்பினையுடைய தாதையானவன் அப்பிழையை நோக்காது பொறுத்து அவன்வேண்டியவாறு மீட்டுமளித்தல்போல், எனக்குத் தந்தையாயுள்ள நீ எனதுகுற்றத்தைக் கருதாது என்பிழைக்கிரங்கிப்பொறுத்து யான் வேண்டியவாறெல்லாமளித்தருள்வது உனதினியபேரருளுக்கியல்பாகும் (அருள்செயாதொழிதியே லருளுக்கியல் பாகாவென்றபடி,)

மலசகிதனாகியயான் செய்யுங் குற்றங்களை மலரகிதனாகிய நீ அக்குற்றங்கள் மலத்தின் கொடுமையென் றோர்ந்து உனதருளால் அகற்றியடியிணைக் கீழ்வைப்பது உனது கடமையா மென்றுகூறியதென்க. (௯)

விண்ணிலேயெழுமிந்திரசாபத்தை
மேகமின்னலையொத்தெழுகாயங்க
ளெண்ணிலாதவெடுத்திளைத்தேனையென்
றின்பவாரியில்வைத்திளைப்பாற்றுவாய்
கண்ணிலேகண்டசித்தொளிக்காட்சியே
கருத்திலேகண்டவின்பசந்தோடமே
தண்ணிலாமுடிவேணியர்செல்வமே
சமரமாபுரிச்சண்முகவேலனே.

(இ - ள்.) மெய்ஞ்ஞானிகள் ஞானக்கண்ணாற் கண்டசிதாகாசவெளியில் ஒளியாய் விளங்குகின்ற காட்சியே, எனதுசுட்டறி விறந்தவிடத்துத் தோன்றிய பேரின்பக்களிப்பே, தண்ணிய கிரணம் வீசும் நிலவைமுடியிலணிந்த சடாமகுடத்தை யுடையசிவனாரது செல்வமே, திருப்போரூரிலெழுந்தருளிய சண்முகக்கடவுளே, ஆகாயத்திற்றோன்றும்இந்திரதனுசையும் மேகத்திற்றோன்று மின்னலையு மொத்துத்தோன்றுங் காயங்களை யளவில்லனவாக வெடுத்தெடுத்திளைத்த வென்னை, அவ்விளைப்பொழியவென்னாளில் உனது பேரின்ப சாகரத்தில் வைத்திளைப்பாற்றுவாய் (கூறுயென்றபடி)

ஆன்மாபிறப்பை யடையுஞ் சடிதியைக்குறித்தற்கு இந்திர சாபத்தையும் மின்னலையும் உவமையாக்கினர். (௧௦)

காலன்செங்கட்கடாவினிலேறியே
கயிறுவீசிப்பிடியாமுனமெனை
வேலுஞ்செங்கையிலேந்திமயின்மிசை
விரைவில்வந்துவந்தஞ்சலென்றருளுவாய்
ஆலமுண்டகளத்தரிடத்துறை
யரிவைகொஞ்சுறக்கொஞ்சுபைங்கிள்ளையே
தாலம்பாளைமதுக்குடமேந்திய
சமரமாபுரிச்சண்முகவேலனே.

(இ - ள்.) பாற்கடலிற்றோன்றிய விடத்தையுண்டருளிய சீகண்டத்தை யுடைய சிவனரிடத் தென்று நீங்காது இடப்பாகத்தில் வாழ்கின்ற உமாதேவி யார் தமதினியமொழியாற்கொஞ்சக் கொஞ்சுகின்ற பசுங்கிளியே, பனை யின் பாளையினின்றும் பெருகிய மதுவைக் குடத்தின்கணேந்தும் வளத்தினை யுடைய திருப்போரூரில் வாழும் சண்முகக்கடவுளே, இயமன்கோபக்கண்ணை யுடையகடாவை யூர்ந்து பாசக்கயிற்றைவீசி என்னைப்பிடிப்பதற்கு முன்ன மே, நீ வேலாயுதத்தையுனது செவந்த திருக்கரத்திலேந்தி மயூரமீதாரோக ணித்து விரைந்து வந்து அஞ்சேலென்றருள் செய்வாய்

யமனோகாலதத்துவத்தைக்கடவாது தன்னாணையைச் செலுத்துங் காலன் நீயோ அக்காலனைக்காலா லுதைத்த காலகாலன் தனதுமார்போ டணைக்குங் குமாரன். அவனேறும்வாகனமோ விரைந்து செல்ல வறியாத கரியகடா, நீயூரும்வாகனமோ விரைந்துசெல்லும் நடையை யுடைய பசியம யில். அவனேந்திய ஆயுதமோ பாசமாகியகயிறு நீயேந்திய ஆயுதமோ பாசத் தை நீக்கி ஞானத்தை யளிக்கும் சத்திவேல் ஆகையால் காலத்தைக்கண்டு என்னைப்பற்றவரும் காலனைக்கண்டு கலங்கி உன்னடியைச்சரணென்றடைந் தேன். இனி அஞ்சலென்றருள் செய்வது உனது கடமையாமென்று குறை யிரந்தவாறென்க. (௧0)

கட்டளைக்கலிப்பா முற்றிற்று.

---

௨
வேலுமயிலுந்துணை.

## கொச்சகக்கலிப்பா.

மாணிக்கமாரிசொரிவானம்போனாயேனைப்
பேணிக்கருணைபொழிபேரின்பமாப்புயலே
வீணிற்காலங்கழிக்கும்வெவ்வினையேனெஞ்சகத்துன்
தாணிற்கவைப்பாய் சமரபுரிநாயகமே.

(இ - ள்.) திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளே, மாணிக்கம ழையைப்பொழியுமேகம்போல நாயிற்கடைப்பட்டவென்னையோர் பொரு

ளாக வெண்ணித்திருவருள்பொழிந்த பேரின்பமாகிய மேகமே, எனதாயுளை வீணிலேகழிக்கும் தீவினையேனது நெஞ்சகத்து உனது திருவடி நிலைபெற்றிருக்கவைத்தருள்வாய்.

உன்கருணைக்குரியேனாகிய யான் இனி தேகபோகத்துக்குழலாது சிவபோகத்துக்குழல உனது கழலை எனதகத்திருக்கவைப்பாயென்றதென்க. (க)

பெரும்பேதைமையேன்பிழைகுறியாதுள்புகுந்த
அரும்பேரருளாலென்னாகங்குளிர்ந்தேனே
கரும்பேயென்னாருயிரின்கண்ணிருந்த கண்ணே
தரும்போதகமேசமரபுரி நாயகமே.

(இ - ள்.) இனியசுவையுடைய கரும்பே, எனது நிறைந்தவுயிரின்கண் உயிராயிருந்த ஞானக்கண்ணே,உனதுஞானத்தாலடையவரும் சிவஞானமே, திருப்போரூரிலெழுந்தருளிய முருகக்கடவுளே, மிக்கவறியாமையையுடைய யானியற்றுங்குற்றங்களைச் சிறிதுங்குறியாதெனதுள்ளத்தில் யானினைப்பதன் முன் குடிகொண்ட உனது பெறுதற்கரியபேரருளால் என்னுடம்புமுழுதுங்குளிர்ந்தேன். (௨)

பேராதசுத்தவெளிப்பேரின்பசாகாத்தே
ஏராதநாயேனிருப்பதினி யெந்நாளோ
வாராருங்கொங்கையுமைமடிமேலுந்தோண்மேலுஞ்
சாராவளருஞ்சமரபுரி நாயகமே.

(இ - ள்.) கச்சணிந்த திருத்தனத்தை யுடைய உமாதேவியாரது மடித்தலத்தின் மேலும் திருப்புயத்தின்மேலும் சார்ந்து வளர்கின்ற திருப்போரூரிலெழுந்தருளிய நாயகமே, என்றுமழியாத சுத்தவெளியாகிய பரமாகாசத்திற்றோன்றும் பேரின்பக்கடலிலெய்தப்பொலிவுபெறாத நாயிற்கடைப் பட்டயான் அக்கடலிலிருப்பது இனியெந்தநாள் (நீகூறாய்)

தத்துவச்சேட்டைகள் செல்லா வெளியிடமாதலால் சுத்தவெளி எனவும், தத்துவசமூகத்தி லொன்றாயிருக்கும்யான் அவைகழன்று அருள்வ சத்திலிருத்தல் அரிதாதலால் இருப்பதினியெந்நா ளெனவுங் கூறினார். (௩)

காட்டுவதுங்காண்பதுவுங் காட்சியும்போய் நின்றவின்ப
வீட்டினிடந்துயின்றேவேசறிக்கைதீர்வேனோ
மாட்டின் மிசையேறு மகதேவர் சேயேநின்
தாட்டுணையே தஞ்சஞ் சமரபுரிநாயகமே.

(இ - ள்.) தருமவிடையூர்ந்தருளும் மகாதேவருடைய புத்திரனே; திருப்போரூரிலெழுந்தருளிய நாயகமே, உனது திருவடித்துணையே எனக்கடைக்கலப்பொருள். அதனால் ஞானமுஞ்ஞேயமும் ஞாதுருவும் தோன்று

விடத்து நிலைபெற்ற பேரின்ப வீட்டினிடத்து எனதுபோதந்தோன்றுவாறது வாயிருந்து பிறப்பிறப்பாலடைந்த விளப்பைத் தீரப்பெறுவேனோ (நீகூறுய்)

இது ஞானமெனவும் இது ஞேயமெனவும் இது ஞாதருவெனவுங் கண்டால் ஆன்மவறிவு நிகழும்; அது நிகழுமாயின் சிவானந்தமுண்டாகா. ஆதலால் இம்மூன்றையும் விளக்கிய சுத்தவொளியாய் அதுவாயிருப்பதே முத்தியிலுறங்கு முறக்கமென்பார் காட்டுவதுங் காண்பதுவும் காட்சியும் போய் நின்ற வின்பவீட்டினிடத்துயின்றே என்றார். (௪)

ஏரகமன்பாகியெழிலுறுபாவீந்தோர்க்குன்
சீரகமீந்தின்புதவுஞ் செல்வமலிதேசிகனே
நாரகமொன்றில்லாத நாயேனை யாளைவைக்கும்
தாரகமேசேயேசமரபுரிநாயகமே.

(இ - ள்.) திருவேரகத்தி லெழுந்தருளி யிருக்கின்ற உன்னை யன்போடு நினைத்து, அழகுபொருந்திய பாமாலையை உனதுபுயத்திலணியப் பெற்றோர்க்கு அவரது சீவ அகத்தை நீக்கி உனது சிவோகத்தைத்தந்து பேரின்பத்தை யுதவும் ஞானச்செல்வமிக்க ஆரியனே, எப்பொருளுக்கும் தாரகமாயுள்ளவனே சிவகுமாரனே திருப்போரூரி லெழுந்தருளிய நாயகனே, அன்பொன்றுமில்லாத நாயிற்கடைப்பட்ட வென்னையடிமைகொள்வாய். (௫)

பாலுக்குள் வெண்ணெயெழு பான்மை போலென்னுளத்தின்
சீலத்தையெல்லாந் தெளிவிப்பதெந்நாளோ
வேலுக்கரசே விறன்மா மயிற்கரசே
தாலத் தரசே சமரபுரி நாயகமே

(இ - ள்) வேலாயுதத்தையேந்து மரசனே, வெற்றியையுடைய மயூரவாகனத்தையூர்ந் தருளுமரசனே, பனையடியின் கண்வாழுமரசனே, திருப்போரூரின்கண்வாழும் நாயகனே, பாலின்கண்ணுள்ள வெண்ணெயெழுவதுபோல எனதுள்ளத்தில் தோன்றுதிருக்கின்ற உனது சீலமுற்றும்யான் தெளிய நீ தெளிவிப்பது எந்நாளோ (கூறுய்) (௬)

வெள்ளைச்சோமன்றரித்த வேணியனு ரானைமுகப்
பிள்ளைக் கிளையதிருப் பிள்ளைப் பெருமாளே
கள்ளத்தே னுக்குன் கருணையின்பங் காட்டியதைத்
தள்ளத் தகுமோ சமரபுரி நாயகமே.

(இ - ள்.) திருப்போரூரிலெழுந்தருளிய நாயகனே, வெள்ளியசந்திரனைத்தரித்த ஜடாமகுடத்தையுடையசிவபெருமானரது யானைமுகத்தையுடைய மூத்தபிள்ளையாருக்கிளையாரென்னும் பிள்ளைமைப்பருவத்தையுடைய பெருமானே, கள்ளத்தையுடையேனுக்கு உன்றிருவருளாகிய இன்பங்காட்டியபின், அதை என்பாலிரங்காது அடியவரினின்றும் புறம்பாக்கலாமோ (கூறுய்.) (௭)

சோரிவேற் கண்ணியர்மேற் றெல்புவிமேற் பொன்னதன்மேல்
வாரி யலைபோல் வருமாசை தீர்வேனோ
நாரியிடப் பாகருக்கு நான்மறையி னுட்பொருளைத்
தாரிபெற வோதுஞ் சமரபுரி நாயகமே.

(இ - ள்.) உமாதேவியையிடப்பாகத்திலுடைய சிவபெருமானுக்கு நான்கு வேதங்களினுட்கிடைப்பொருளை, நெறிப்படவோதியருளிய திருப்போரூரிலெழுந்தருளிய நாயகனே, உதிரந்தோய்ந்தவேல்போன்ற கண்களையுடைய பெண்களின்மேலும், தொன்று தொட்டுள்ள மண்ணின்மேலும் பொன்னின்மேலும் கடலிற்றோன்றும் அலைபோலமாறிமாறி வரும் ஆசையினின்றுந் தீர்வேனோ (நீ கூறாய்). (அ)

காமர்குறப் பெண்மானுங் காமுறுதெய் வப்பிடியுங்
கோமளவீ ராறுபுயக் குன்றிலுறச் சேர்ப்போனே
யோமெனும்வித் துள்ளே யுதித்ததரு வேயெனையுந்
தாமரைத்தாள்சேராய் சமரபுரி நாயகமே.

(இ - ள்.) அழகிற்சிறந்த குறவர்குலத்திற்றோன்றிய வள்ளிநாய்ச்சியாரையும் விருப்பந்தரும் தெய்வயானைநாய்ச்சியாரையும், மெல்லிய பன்னிரண்டு திருப்புயங்களாகிய மலையிற்பொருந்தச்சேர்க்கின்றவனே, பிரணவமென்னும் வித்தினின்றுந்தோன்றியவிருட்சமே, திருப்போரூரிலெழுந்தருளிய நாயகனே அடியேனையுமுனது திருவடித்தாமரையில் சேர்த்தருளாய். (கூ)

கும்பமுனிக் கின்பமெல்லாங் கொள்ளைகொள்ளத் தந்தருளி
வம்பனேற் கின்பம் வழங்குவது முண்டாமோ
செம்பதுமக் காடலர்ந்த தேசுதரு பேரழகா
சம்புதவு மைந்தா சமரபுரி நாயகமே.

(இ - ள்.) செந்தாமரைக்காடு அலர்ந்ததுபோலும் தேசுமிக்கபேரழகுடையவனே, சம்புவென்னுந்திருநாமத்தையுடைய இறைவனீன்றருளிய புத்திரனே, திருப்போரூரிலெழுந்தருளிய நாயகனே, அகத்தியமுனிவருக்கு உனதின்பப்பெருக்கையெல்லாங் கொள்ளைகொள்ளையாகத் தந்தருளிய நீ வம்பனாகிய எனக்கு உனதின்பத்தைவழங்கவுங்கூடுமோ. (நீ கூறாய்). (கா)

கோச்சகக்கலிப்பா முற்றிற்று.

வேலுமயிலுந் துணை.

ஊசல்.

எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

சுந்தரமாகந்தொடுமண்டபத்தினூடே
சுரர்தருக்கணாற்றிசையுநிறுத்திநாப்பண்
முந்தியசாம்பூனதச்சங்கிலிகள் பூண்ட
முதிர்கதிர்வீசுங்குலிசப்பலகைமீது
சிந்தைமகிழ்ந்தினிதிருந்தோரரம்பைமாதர்
செங்கரங்கள் கொண்டுசிறப்பொடுநின்றாட்டத்
தந்திமுகற்கிளையவரோ யாடீரூசல்
சமரபுரிநாயகரோ யாடீரூசல்.

(இ - ள்.) ஆகாயத்தையளாவச்சமைத்த அழகிய மண்டபத்தினுள்ளே, தேவர்கள்கற்பகமுதலியதருக்களை நாற்றிசையினும் நிலைபெறநாட்டி அதனடுவிற் பொன்னிற்சிறந்தசாம்பூனதத்தாற்செய்த சங்கிலிகளாற்றொடுக்கப்பட்டுள்ள முதிர்ந்தகிரணங்களைப்பரப்பும் வைரத்தாற்செய்தபலகையின்மேல், மனமகிழ்ந்தினியகருணையோடிருந்து, ஒப்பற்ற அரம்பைமுதலிய கணிகையர் தமது செவந்த கரங்களைக்கொண்டு பொலிவுபெறநின்று ஆட்ட, யானைமுகத்தையுடைய விநாயகக்கடவுளுக்கு இளையவரோ ஊசலாடியருளும், திருப்போரூரிலெழுந்தருளியிருக்கின்ற இறையவரோ ஊசலாடியருளும். (க)

வடவரை யோர்பன்னிரண்டின் முடியின்மீதே
மார்த்தாண்டர் பன்னிருவருலாவல்போலும்
சுடர்மணிவீசுங்குழைகள் புயங்கள்மீதே
தோய்ந்தாடமார்பிலகுமதாணியாடக்
கடகநிரையசைந்தாடமகுடமின்னக்
கமலபதச்சிலம்பொடுகிண் கிணிகளாடத்
தடவரைகள் டுகிடுடென மயிலேடாத்துஞ்
சமரபுரி நாயகரோ யாடீரூசல்.

(இ - ள்.) ஒப்பிகந்த பன்னிரண்டு மேருமலையின்சிகரத்தின்மேல் பன்னிரண்டு சூரியர்கள் தவழ்தல் போலும் கிரணங்கள் வீசும் இரத்தினங்களிழைத்த குண்டலங்கள் திருப்புயங்கள்மேல் பொருந்தியசையவும், திருமார்பில்விளங்கும்மதாணிப்பதக்கமசையவும், திருக்கரங்களில் வரிசையாயுள்ளகடகங்களசைந்தாடவும், திருமுடியில் மகுடமொளிவீசவும், தாமரைமலர்போன்ற பாதங்களிலணிந்த சிலம்புகளோடு கிண்கிணிகளுமசையவும், பெரியமலைகள்கிடுகிடென்று நடுங்க மயில்வாகனத்தை யூர்ந்தருளும் திருப்போரூரிலெழுந்தருளியிருக்கின்ற இறையவரோ ஊசலாடியருளும். (உ)

கங்கைமுடித்தாதையுளத்துவகைபூப்பக்
　　கணபதியாகிய தமையன்களித்து நோக்கப்
புங்கநவவீரரொனுமிளவலாஞேர்
　　புடையினின்றுபணிகேட்பவிடைவிடாமே
செங்கண்மாலெனுமாமன்வியந்துபோற்றச்
　　செழுமறைமைத்துனன்றரிசித்தங்கைகூப்பத்
தங்கமணிச்சிலம்படியென் சென்னிசூட்டுஞ்
　　சமரபுரிநாயகரே யாடீரூசல்.

(இ - ள்.) கங்கையையணிந்த சடாமுடியையுடைய சிவபெருமானாகிய தந்தையினது திருவுள்ளத்துவகையரும்பவும், கணபதியாகிய மூத்தோன்களிப்புற்று நோக்கவும், பரிசுத்தராகிய நவவீரரொன்னும் இளையோர் இருபக்கங்களிலுநின்று ஏவும்பணிகளைக்கேட்கவும், எக்காலமும் செந்தாமரைமலரொன்று சொல்லப்படும் கண்கள் வாய்ந்ததிருமாலென்னும் மாமன் அதிசயித்துப்போற்றவும், மெய்ப்பொருளமைந்தமறையையோதும் பிரமனாகிய மைத்துனன் தரிசனஞ்செய்து அழகியகைகளைக்கூப்பவும், அழகிய தங்கச்சிலம்பணிந்ததிருவடியெனது சென்னியிற் சூட்டும் திருப்போரூரிலெழுந்தருளியிருக்கும் இறைவரே ஊசலாடியருளும். (௩)

இந்திரன்வேத்திரங்கொடுகட்டியங்கள்கூற
　　இரவிசசியிருபாலுங்கவரிவீசச்
சுந்தரமாமதனுருக்கொண்டடைப்பையேந்தத்
　　துணைவுடனேழ்திசையவரூ ழியங்கள் செய்யக்
கந்தருவர்தும்புருநாரதருமியாழின்
　　கனவிசையுமிடற்றிசையுங்கலந்துபாடச்
சந்தமுறுபுழுகுமணமெங்கும்வீசச்
　　சமரபுரிநாயகரேயாடீரூசல்.

(இ - ள்.) தேவேந்திரன் வேத்திரப்படையைக்கையிலேந்தி சட்டியங்களையெடுத்துக்கூறவும், சூரியசந்திரர்களிருவரு மிரண்டுபக்கங்களிலு நின்று சாமரையிரட்டவும், அழகிற்சிறந்த அனங்கன் உருக்கொண்டு அடப்பையேந்தவும், திக்குப்பாலகராகிய அக்கினிதேவன் முதலிய எழுவரும் விரைந்து ஏவும்பணிவிடைகளைச்செய்யவும், கந்தருவர்களாம் தும்புருநாரதரென்னுமிருவரும்யாழின்சிறந்த வொலியும் கண்டத்தொலியும் வேற்றுமையின்றிக் கலந்து பாடவும், சந்தனக்கலவையிற்பொருந்திய புழுகின்வாசனையெவ்விடத்தும் வீசவும், திருப்போரூரிலெழுந்தருளிய இறையவரே ஊசலாடியருளும். (௪)

நவமேவு பூதகணநாதராட
　　நாடரிய தேவர்கள் பூமாரிவீசச்

சிவமேவுமுனிவரர்பல்லாண்டு கூறத்
திகழூரகர்மாணிக்கமாரிதூவப்
பவவேலை மூழ்காதவடியார்நாடிப்
பரிந்துபரமானந்தக்கடலின் மூழ்கத்
தவமேவுமந்தணர்கள் வேதமோதச்
சமரபுரிநாயகனேயாடீரூசல்.

(இ - ள்.) புதுமையை விளைக்கும் பூதகணநாதர்கள் கொக்கரித்தாடவும், எண்ணுதற்கரிய தேவகணங்கள் புஷ்பவருஷங்களைப்பொழியவும், சிவசாம்பிராச்சியத்தையடைந்த முனிவர்கள் பல்லாண்டு கூறவும், விளங்காநின்ற நாகர்கள் மாணிக்கமழையைத்தூற்றவும், பிறவிக்கடலிலழுந்தாத அடியார் கூட்டங்கள் உண்மைப்பொருளை நாடி அன்புமிக்குசிவானந்தக்கடலில் மூழ்கவும், தவசிரேஷ்டர்களாகிய வேதியர்கள் வேதங்களையெடுத்தோதவும், திருப்போரூரிலெழுந்தருளிய இறைவனே ஊசலாடியருளும்.

சீவன்முத்தர்கள் தமது அறிவிச்சை செயல்களை முறையே மும்மலங்களைப் பரிகரித்தலிலும், அன்பரோடு மருவுதலிலும், திருவேடத்தைச் சிவமெனக் காண்டலிலுஞ் செலுத்திப் பிறவிக் கிடஞ்செய்யும் பிராரத்தத்தை மாற்றுந்தன்மையுடையராதலால் அவரது பெருமைதோன்றப் பவவேலை மூழ்காத வடியவர் என்றார். (௫)

இமயமலைதனிற் பிறந்தநற்றாய் வாழ்த்த
எழிற்சடையிற் குடியிருந்த பெருந்தாய்வாழ்த்தக்
கமலமலர்மாமியுளங்களித்து வாழ்த்தக்
கலைவாணித்தங்கை புயம்புகழ்ந்து வாழ்த்த
அமரர்புகழ்சசிமுதலாமரம்பைமாதர்
ஆலத்தியெடுத்தேத்தவருகினின்று
சமைவுறு நற்றேவிமாரிருவர்போற்றச்
சமரபுரிநாயகனேயாடீரூசல்.

(இ - ள்.) இமயமலையிற் றோன்றியருளிய உமாதேவியாகிய நற்றாய்வாழ்த்தவும், அழகியசடையின்கண் குடியிருக்கும் கங்காதேவியாகிய பெரியதாய்வாழ்த்தவும், செந்தாமரைமலரில்வசிக்கும் இலக்குமியாகிய மாமி மனங்களித்துவாழ்த்தவும், கலைமகளாகியதங்கை திருப்புயத்தைப்புகழ்ந்து வாழ்த்தவும், தேவர்கள்புகழும் இந்திராணிமுதலிய அரம்பைமாதர்கள் ஆலாத்தியெடுத்தேத்தவும், உபசாந்தம்வாய்ந்த தெய்வயானை வள்ளியம்மை என்னுந்தேவிமாரிருவரும் இருமருங்குநின்று போற்றவும், திருப்போரூரிலெழுந்தருளிய இறைவனே ஊசலாடியருளும். (௬)

அருணகிரிநாதன் மகிழ்ந்தோதுபாடல்
அருந்தமிழ்நூறெளிந்திடுநக்கீரன்பாடல்
இருணையமெய்யன்பர்குழாமிசைந்துபாட
இன்னியங்களைவகையின்சும்மையார்ப்பக்
கருணைபெறுமரசர்வணிகேசர்மேலாங்
காராளர் முதலெவருஞ்சேவைசெய்யத்
தருணவளமாறாதபெருமைமேவுஞ்
சமரபுரிநாயகரோயாடீரூசல்.

(இ - ள்.) அருணகிரிநாதர் மகிழ்ந்தோதும் பாடலையும், அரியதமிழ்நூல் தெளிந்த நக்கீரர்புகழ்ந்துபாடும் பாடலையும், அஞ்ஞானங்கெட மெய்யன்பர் குழாங்கள் மனமொழிமெய்களிசைந்து பாடவும், இனிய விசையைக்காட்டும் ஐவகைவாத்தியங்களினோசையொலிக்கவும், கருணையையுடைய அரசர்களும் வணிகர்களும் மேன்மைவாய்ந்தவேளாளர்களும் மற்றையோருந் தாம் தாமியற்றும் பணிவிடைகளைச்செய்யவும், தளிர்த்தலினின்றும் மாறாத வண்மையமைந்த திருப்போரூரிலெழுந்தருளிய இறையவரோ ஊசலாடியருளும்.

அருணகிரிநாதர் திருவருளால் ஓதாதுணர்ந்து புகழ்ந்தவ ராதலின் அவர்க்கடைகொடாதும், நக்கீரதேவர் முன்னர் இலக்கிய இலக்கண நூலில் ஆராய்ச்சியுடையராய்ப் பின்னர் திருவருளால் அவற்றை அகத்தியர்பால் தெளிந்தோதினவராதலின் இருந்தமிழ் நூறெளிந்திடு நக்கீரனென அடைகொடுத்துங் கூறினார். உலகினர் அரசன் செங்கோலையே நோக்கிவாழும் இயல்பினராகலின் அரசன் தன்னாணை வழிநிற்கும் அவனை இறைவனாணை வழிநிற்கச்செய்து அவனது திருவருளுக்குரியராக்கலின் அரசனென்று வாளாகூறாது கருணைபெறுமரசர் எனவும், பிறர்பொருளுந் தம்பொருளெனநாடி அறத்தின்வழிவந்த பெருஞ்செல்வ முடையராகலின் வணிகனென்னாது வணிகேசனெனவும், ஐம்பொறி வசத்தராகிய உலகினரையன்றிம், ஐம்பொறியிகந்த துறவிகளையும் வருத்த வல்ல அரும்பசியை அகற்றவல்ல அரும்பணியுடையராதலின் காராளரென்னாது மேலாங் காராளரெனவுங் கூறினார். (எ)

மகளிரினமயிலினம்போ னடனமாட
வண்டினங்களவர்குழன்மா லையினின்றாடப்
புகரறுமெய்யன்பரின்பநடனமாடப்
பொன்னுலகோர் மண்ணுலகோர்புகழ்கொண்டாட
இகலுறுபொய்யவுணருள நனிதிண்டாட
இலைவேலின்வலியலகைபாடியாடத்
தகைமைசெறியளகை நிகர்வளமைமேவுஞ்
சமரபுரிநாயகரோ யாடீரூசல்.

(இ-ள்.) மகளிர்கூட்டங்கள் மயிலினம்போல நடனமாடவும், வண்டின் கூட்டங்கள் அம்மகளிரதுகூந்தலிற்சூடிய மலர்மாலைகளினின்றுடவும், குற்றமற்றமெய்யன்பர்கள் ஆனந்தநடனஞ்செய்யவும், பொன்னுலகத்துள்ளோரும் மண்ணுலகத்துள்ளோரும் புகழ்கொண்டாடவும், பகைமேற்கொண்ட பொய்நிறைந்த அசுரருடைய உள்ளம் மிகவுந் திண்டாடவும், அச்சவடிவினை வாய்ந்த வேலாயுதத்தின்வன்மையைப் பேய்கள்பாடியாடவும், பெருமைசெறிந்த அளகாபுரியையொத்த வளமைபொருந்திய திருப்போரூரி லெழுந்தருளிய இறைவரோ ஊசலாடியருளும். (அ)

கோழியெழுதியவிருதும் வேலுந்தோகைக்
குரகதமுமுடையவரோயாடீரூசல்
ஊழியனற்சினச்சூரன் சேனையெல்லாம்
ஒருங்கறுத்தசேவகரேயாடீரூசல்
ஆழியலைத்துயர மெல்லாமகற்றியென்னை
ஆண்டுகொண்ட தேசிகரோயாடீரூசல்
தாழியளைகளவுகொண்டோன்மருகனோ
சமரபுரிநாயகரோயாடீரூசல்.

(இ - ள்.) சேவலெழுதிய விருதுக்கொடியையும், வேலாயுதத்தையும், தோகையுடையமயிலூர்தியையு முடையவரோ ஊசலாடியருளும், ஊழிக்காலத்தில் வெளிப்படும் வடவனலைப்போல் கோபங்கொள்ளும் சூரபன்மனுடைய சேனைகளையெல்லா மொருங்கேயழித்த வீரத்தையுடையவரோ ஊசலாடியருளும், அலைதங்கிய கடல்போன்ற துன்பங்களெல்லா மகற்றி என்னையுடிமைகொண்டவாரியரோ ஊசலாடியருளும், குடங்களிலுள்ள வெண்ணெயை ஆயர்பாடியில் களவுகொண்ட திருமால்மருகரோ, திருப்போரூரிலெழுந்தருளிய இறைவரோ ஊசலாடியருளும். (௯)

பொதியமுனிகுருபரரோயாடீரூசல்
புவிவாழவருள்பவரோயாடீரூசல்
முதியதமிழுரைத்தவரோயாடீரூசல்
முத்தியெனக்களித்தவரோயாடீரூசல்
அதிகவடிவழகினரோயாடீரூசல்
அகிலமறைநிகர்ப்பவரோயாடீரூசல்
ததையுமலர்த்தாரினரோயாடீரூசல்
சமரபுரிநாயகரோயாடீரூசல்.

(இ - ள்.) பொதியமலையில் வீற்றிருக்கும் அகத்திய முனிவருக் குபதேசித்தருளிய பரமாசாரியரோ ஊசலாடியருளும், மண்ணுலகுவாழ தண்ணளிபுரிபவரோ ஊசலாடியருளும், ஏனையபாடைகளில் மேம்பட்ட தமிழையோதி

யருளியவரோ ஊசலாடியருளும், மிக்க அழகிற்சிறந்த திருவுருவத்தையுடையவரோ ஊசலாடியருளும், உலகிற்குத் தகுணக்காரணமாகிய சப்தமேகங்களையுமொத்தவரோ ஊசலாடியருளும், செருங்கிய மலர்மாலையையுடையவரோ ஊசலாடியருளும்.

என்றுமுள தென்றமிழாதலின் முதிய தமிழ் என்றார். (௯௦)

ஊசல் முற்றிற்று.

உ

வேலுமயிலுந்துணை.

## விருத்தக்கலித்துறை.

வடமலைவில்லானுதவியவொற்றைமருப்பாளன்
திடமுறுதுணையேயெனதுயிர்நிறையுஞ்செவ்வேளே
இடமுறுநின்பூரணசுகமடைகுவதென்றடியேன்
தடமயிலேறுஞ்சேவகசமரப்பதியானே.

(இ - ள்.) மேருவை வில்லாகவுடைய சிவபெருமானீன்றருளியவொற்றைக் கொம்பினையுடைய விநாயகக்கடவுளது திடம்பொருந்திய துணைவனே, எனதுயிரின்கண் ணிறைந்த முருகக்கடவுளே, பெரியமயிலவாகனத்திலெழுந்தருளும் சேவகத்தையுடையவனே, திருப்போரூரென்னும் பதியையுடையவனே, அடியேன் முத்திவீட்டிலமைந்துள்ள உனது பூரணசுகத்தை யென்றடையப்பெறுவேன்.

விநாயகக்கடவுளின் சொரூபமாகிய பிரணவார்த்தத்தைத்திடமுறுத்தியது அறுமுகக்கடவுளாதலால் அவ்வொற்றுமைகருதி திடமுறு துணையே என்றார். (௧)

உமையமைதனமாரமுதக்கடலுண்டுயர்சோதிக்
கமைவுறுபதிகப்பெருமழைபொழியுமருள்வானே
இமையளவும்மறவாதுனைநாடுவதென்றடியேன்
சமரமயூரப்பரியாய்சமரப்பதியானே.

(இ - ள்.) உமாதேவியார் திருத்தனத்திலார்ந்த அமுதக்கடலைப்பருகி யொளிகட்கெல்லாம் முதலொளியாகிய சிவபெருமான்றிருவுள்ளத்தமையத் தேவாரமென்கின்ற பெரியமழையைப் பொழியும் அருண்மேகமே, போர்புரியும் மயில்வாகனத்தையுடையவனே, திருப்போரூரென்னுந் திருப்பதியையுடையவனே, அடியேன் ஓர் கண்ணிமைப்பொழுதும் மறவாம லுன்னைத் தியானிப்பதென்நாள்.

உலகுநீரின்றியமையாததுபோல் திருவருளடையவிரும்புஞ்சத்திநிபாதர்க்கு ஆளுடையபிள்ளையாரோதியருளிய திருப்பதிகங்களன்றியவ்வருளமையப்பெறா ஆகலின் பதிகப்பெருமழைபொழியு மருள்வானே என்றார். (உ)

அண்டர்மணிக்குழூஉநின்றொளிர்கடகத்தணிபூண்ட
திண்டிறல்வாகுவிராறுளமோனச்செவ்வேளே
மண்டிடுமன்பினர்போலடியேனைமதித்தாளாய்
தண்டைகொள்பாதசரோருகசமரப்பதியானே.

(இ - ள்.) தெய்வத்தன்மைவாய்ந்த நவமணிகூட்டங்கள்நிலைபெற்றுஒளிவீசும் கடகாபரணமணிந்த திண்ணிய வெற்றியமைந்த பன்னிரண்டு திருத்தோள்களையுடைய மௌனநிலையையருளும் முருகக்கடவுளே, தண்டையையணிந்த தாமரைமலர்போன்ற திருவடிகளையுடையவனே, திருப்போரூரென்னுந் திருப்பதியையுடையவனே, நிறைந்த அன்பினையுடைய மெய்யடியார்போல அடியேனையும் நன்றுமதித்து அடிமைகொள்வாய்.

மெய்ஞ்ஞானிகள் தமதுள்ளத்தடைந்தவன்பு உன்பாலதாக மனவாக்குக்காயங்களைவாயிலாகப்பெற்றனர், யானோ ஞானியல்லேன் அஃதின்மையால் உன்பாலதாகும் அன்புமடைந்திலனாயினும் அஃதின்மையைக்குறித்து வருந்துகின்றேனாதலின் என் சிறுமையை நோக்காது அடிமைகொள்வாயென்பார் மண்டிடுமன்பினர்போலடியேனை மதித்தாளாயென்றார். (௩)

அறிவொளியேயறிவோரமுதேபுவியாதியெலாம்
பிறிவருபூரணமேசுரரோதுபெரும்பொருளே
பொறிவழிசெலுமென்பிழைகுறியாதுபொறுத்தாளாய்
தறையுயிர்வாழ்தரநிலவியசமரப்பதியானே.

(இ - ள்.) அறிவின்கண் விளங்குமறிவே; உன்னையறிவோரறிவின் கண் நீங்காதிருக்கு மமிர்தமே, எல்லாவுலகங்களிலும் பிரிவற்றிருக்கும் பரிபூரணசொரூபமே, தேவர்களெடுத்தோதும் பெரியபொருளே, உலகிலுள்ள உயிர்களெல்லாம் வாழ்ந்துய்ய விளங்காநின்ற திருப்போரூரென்னுந் திருப்பதியையுடையவனே, ஐம்பொறி வழியிற்செல்லும் எனது குற்றத்தைக்குறிக்காது பொறுத்தருள்வாய்.

அறிவொளி என்றதனால்ஆன்மவறிவிற்கு முன்னர் விடயங்களை யறிவிக்கக் கலப்பால் அவரவ ரறிவேயா யிருந்தலையும், அறிவோரமுதே என்றதனால் இறைவன் ஆன்மவறிவின்கண் ஏகனாகி நிற்கு நிலையை யறிவோர்க்கு பொருட்டன்மையால் கண்ணிற்கு வேறாயிருந்து அருக்கன் விடய விம்பத்தை யூட்டுதல்போல அவரறியற்கு வேறாயிருந்து தனது ஆனந்தந்தருதலையும், புவியாதியெலாம் பிறிவரு பூரணமே என்றதனால் இருவினைவசத்தராகிய ஆன்மாக்கள்

வினை நீக்கம்பெற்றுப் பாகமெய்தப் பிறப்பிறப்பிற் பட்டுழலச்செய்யும் சிற்சத்தியோடு இறைவன் பிரிப்பின்றிச் சமவேதமா யிருத்தலையும் விளக்கியவாறும்.

வேடர்குலச்சிறுமானணைவுற்ற விறற்புயனே
ஆடரவப்பணியத்தனளித்தருளற்புதனே
மூடனெனத்தமியேனைவிடுத்திடன்முத்திதரும்
தாடலைவைத்தெனையாளுதிசமரப்பதியானே.

(இ - ள்.) வேடர்குலத்தில் வளர்ந்த வள்ளிநாய்ச்சியாராகிய சிறியமான் அணைந்திருத்தற்குரிய வெற்றியையுடைய திருப்புயங்களையுடையவனே, ஆடுகின்ற சர்ப்பாபரணத்தையணிந்த இறைவனீன்றருளிய அரிய திருவுருவத்தையுடையவனே, திருப்போரூரென்னுந்திருப்பதியையுடையவனே, அடியேனையறிவிலியென்றுகைவிடாதை, முத்தியைத்தந்தருளுந் திருவடியையெனது தலைமீது வைத்தடிமைகொள்வாய்.

விடுத்திடல் என்புழி அல்எதிர்மறையேவல் ஒருமைவிகுதி "மகனெனல்" என்புழிப்போல.

தேவர்கள்வேண்டுகோளால் இறைவன் ஆறுதிருமுகத்தோடுமெழுந்தருள, அவரது நெற்றி நாட்டத்து நின்று முருகக்கடவுள் ஆறு அனற்பொறிகளாக வெளிவந்தஞான்று அடங்காப்பெருந்தழலாய் அண்டமுற்றும் பரவத் தம்மவதாரத்தை விரும்பிய அமரரெல்லாம் அஞ்சியகன்றோடி இறைவனைநோக்கி எங்கள் தெய்வமே! யாங்கள் சூரபன்மனால் போகநலமெல்லாமிழந்து உனது திருவடிநலத்தா லப்போகநலத்தைப்பெறவேண்டினேமாக. அவ்வேண்டுகோளிவ்வனலாகி எங்களையெறிக்கவந்ததுபோலு மாயிற்று, அற்றாகலின் எங்களத்தனே! இத்தீ எல்லாவண்டங்களையும் எங்களையு மோர் கணத்துள் மாற்றுதற்கிருக்கின்றது. இதனை மாற்றியருளல்வேண்டுமென்று தம்மை வேண்டினரையே வேண்டாமென்று வேண்டச்செய்த வதிசயமொன்று. இறைவன் ஞானசொரூபத்தையுணராத அவ்வஞ்ஞானிகளைநோக்கி அஞ்சலொன் றபயந்தந்து அவ்வனற்பொறியாறும் தம்மருகுவரச்சங்கற்பிக்க, அச்சிவசங்கற்பரூபியாகிய முருகக்கடவுள் வரக் கருணைநாட்டம்வைத்து, வாயுதேவனையும் அக்கினிதேவனையும் நோக்கி நீவிரிருவரும் இப்பொறிகளைக்கையிலேந்திக் கங்கையில் விடுவீராயின் அவள் சரவணத்துய்ப்பளென்று கட்டளையிட, அவ்வாணைமேற்கொண்ட அவ்விருவருமிறைவனைப்பணிந்து என்னவருளியது. அனல்வடிவமாயிருப்பவனொருவனும், அவ்வனலை வளர்ப்பவனொருவனுமாயிருத்தலால் இவ்விருவர்தாம் தாங்கப்பெறுவரென்றெண்ணியோ, அல்லது அமரர்களெல்லாமலக்கணடைதற்குக் காரணம் தக்கனதுயாகமாதலால் அந்தவேள்விக்குக்காரணமாய் நின்ற அக்கினியை அவன் துணைவனாகிய வாயு

யோடு முன்னரழிப்போமென்றெண்ணியோ, யாங்களறியோமென்று மீட்டும் பணிந்து ஒருநொடியிலுலகினையழிக்கவல்ல இவ்வனலைத்தாங்கப்பெறும் ஆற்றலுடையோ மல்லேமல்லேம் முறையோ முறையோ வென்றலறி வீழச்செய்த அதிசயமொன்று; இவ்வாறுவீழ்ந்த அவ்விருவரையும் நோக்கி இப்பொரி அசுரரைக்காயும்பொரி அமரரைக்காக்கும் பொரி அன்பர்போற்றும் பொரி எம்மைமகிழ்விக்கும்பொரி யாதலால் உம்மைவாழ்விக்கும், நீங்களஞ்சாதீர்களென்று அவரகமகிழ அளவிலாற்றலைத்தர, அஃதுடையராய் ஞானிகளாலுந் தாங்குதற்கரிய அந்த ஞானக்கனலை ஞானசொரூபியினிணையாற்றுங்கப்பெற்றுக் கங்கைவெள்ளத்திலிட, அக்கணமே முன் அவ்வெள்ளம் பெருக்கெடுத்த ஞான்று இறைவன் தமது சடையில் சுவறச்செய்தது போலாது ஓர் திவலையளவு மின்றிச்சுவறச்செய்த அதிசயமொன்று. அண்டங்களெல்லாம் நீருகவும், கங்கைவற்றவும் செய்யவல்ல அழற்பிழம்பாயிருந்தபெருமான் கார்த்திகை முதலிய அறுவர் பாலுண்ண அருங்குழவியாய் விளையாடிய பேரதிசயமொன்று.

இவை போன்றஉளாயளவைக்கெட்டாத அதிசயத்தைக்காட்டு மரியதிருவுருவத்தையுடையவனென்பார் அத்தனளித்தருளற்புதனே என்றார். (௫)

நல்லாரல்லார்செய்தொழில்செய்யுநாயடியேன்
எல்லாம்வல்லார்பணிநின்பதமலரொன்றடைவேன்
தொல்லாரணமுதலெல்லாமோதுசுகாதீதா
சல்லாபவினோதத்தாய்சமரப்பதியானே.

(இ - ள்.) தொன்றுதொட்டுள்ளவேதமுதலிய கலைகளெல்லாம் புகழ்ந்து கூறும் சுகாதீதனே, மனக்களிப்பைத்தரும் சல்லாபவிநோதத்தையுடையவனே, திருப்போரூரென்னுந் திருப்பதியையுடையவனே, நன்மையுணராதீயோரியற்றுங்கொடுந் தொழிலைமாறுதியற்றும் நாயிற்கடைப்பட்டயான் சகல சித்திகளிலும் வல்லவர்கள் பணிகின்ற உனது திருவடித்தாமரையை யென்றடைவேன்.

இறைவன்றிருவருளடைதற்குச் சோபானங்களாயும், அவ்வருள் பெற்றோர் பின்னர் செய்யும் பணியாயுமுள்ள சரியைகிரியாயோக ஞானமென்னும் நான்கினையுஞ் சலியாதியற்றவல்லவரோ சகல சித்திகளும் அடைதற்குரியவராவர், அன்னோரால் பணியப்பெற்ற அரியதிருவடியென்பார் எல்லாம் வல்லார் பணி நின்பதமலர் எனவும், அங்ஙனந்திருவடி கூட்டுமெப்பணிசெய்யவறியாது அருள்வேண்டாதார் வாழும் பதங்களை நாடிச்செய்வனவெல்லாம் அறிவுடையோர் நன்குமதியாததொழிலென்பார் அதனை நல்லாரல்லார் செய்தொழிலெனவுங்கூறினர். (௬)

இலகியகற்புக்கடவுட்பிடிசேரெழின்மார்பா
விலகொளிமொய்த்துனதருளெனகத்துவெளிப்படுமே
நிலவியகுக்கிடவிருதுபடைத்தநெடும்புகழோய்
சலசமலர்ப்பதமுருகாசமரப்பதியானே.

(இ - ள்.) விளங்காநின்ற கற்பினைவாய்ந்த தெய்வநாய்ச்சியாரணையப் பெற்ற அழகிய மார்பையுடையவனே, வெற்றியைவிளக்குங் கோழிக்கொடியையுடைய பெரிய புகழுடையவனே, தாமரைமலர்போன்ற திருவடியையுடைய முருகனே, திருப்போரூரென்னுந் திருப்பதியையுடையவனே, என்னிடத்துத்தோன்று தொளித்திருக்கும் அறிவுவெளிப்பட்டுத் தோன்ற உன்னுடைய திருவருள் எனதறிவின்கண்ணென்று வெளிப்படும்.

விடயங்களைக்காணுங் கண் முதலியபொறிவழியிலும் கண்டவற்றைப் பகுத்தறியும் சத்தமுதலிய புலன்வழியிலும் அவற்றிலாழும் மனமுதலியகரணவழியிலும் ஆன்மவறிவு சிதைந்து பலதிறப்பட்டிருத்தலின் அவ்வறிவெல்லாமொன்று படுதலரிது. அற்றாகலின் அருள்வெளிப்படுதலுமரிதே என்பார் விலகொளிமொய்த்துன தருளெனகத்து வெளிப்படுமே எனவுங்கூறினாரென க்கூறுதலுமொன்று. (எ)

உனலருமன்பினர்நினையும்படிவமதுடையோனே
நினைவுகடந்தவரறிவெழுசுகமாய்நிறைவோனே
யெனையுமொரன்பினனெனவுந்திருவுளமெண்ணுதியோ
தனபதியளகையினிலவியசமரப்பதியானே.

(இ - ள்.) யாவராலு நினைத்தற்கரிய அன்பினையுடையவர் சிந்திக்கும் திருவுருவத்தையுடையவனே, நினைவிறந்தவரது அறிவின்கணெழுகின்ற சுகவடிவமாய் நிறைந்துள்ளவனே, குபேரன்வாழ்கின்ற அளகாபுரியைப்போலும் பொலிவுபெற்று விளங்கும் திருப்போரூரென்னும் திருப்பதியையுடையவனே அன்பிலியாகிய வென்னையுமன்புடையானென்று உனது திருவுள்ளத்திலுங்கருதுவையோ.

கருவிகளோடிசைந்து தொழிற்படுஞ் சகலசாக்கிரத்தில் அத்தத்துவ தாத்துவிதங்களைத் தானடையாது அவற்றின் வேறாயிருக்கும் நின்மல துரியாதீத நிலை கைகூடமுயலுந் திறமுடையோரைச் சகலசாக்கிரத்திற் பட்டுழல்வோர் நினைத்தற்கு மரிதாதலால் உனலருமெனவும், அந்நின்மல துரியாதீதநிலை கைகூடமுயல்வோர் ஞானிகளாதலால் அன்பினரெனவும், அவ்வன்பர் எல்லா அண்டபிண்டத் துள்ளும் புறம்பும் தானேயாய் நிற்கு மிறைவனுண்மையையுணர்ந்து தமது அயரா வன்பால் வழிபட நினைத்ததொரு குறியின்கண் அவ்விறைவன் நின்றருளுதலால் நினையும் படிவம துடையானேயெனவும், அவ்வழிபாட்டால் தாம் நினையும் நினைவிழந்து நிற்குமவரறிவை நிட்டையிற் கூட்டி

அங்குச் சுகரூபியாய் நிற்பவனாதலால் நினைவுகடந்தவ ரறிவெழுசுகமாய் நிறை வோனே எனவுங் கூறினர். (அ)

வானவர்முனிவரர்பாதலருலகர்வணங்கியசாம்
பூனததூபுரவோசைமுழங்குறுபொற்பாதா
ஞானபராவமுதுண்குவதென்றினிநாயடியேன்
தானவர்நூறிடவேல்விடுசமரப்பதியானே.

(இ - ள்.) தேவர்களும் முனிவர்களும் நாகவுலகினரும் பணிந்த சாம்பூனதப்பொன்னாற்செய்த நூபுரத்தினொலி இடைவிடாதொலிக்கும் அழகியதிருவடிகளையுடையவனே, அசுரர்களழியவேலாயுதத்தை விடுகின்ற திருப்போரூரென்னுந் திருப்பதியையுடையவனே, நாயிற்கடைப்பட்டயான் இனி ஞானிகளாற்புகழும் சிவஞானமிர்தத்தையுண்குவதெந்நாள். (௯)

உலகுயிர்பரமுயர்சிவமிவையாவையுமொன்றாக
நிலவியசொருபமதலதிலையென்றநிகழ்த்தியவா
இலகியவதனிடையசைவறவுறைகுவதென்றடியேன்
தலமகிழ்தருபுகழ்பெருகியசமரப்பதியானே.

(இ - ள்.) உலகினர்மகிழும் புகழ்மிக்க திருப்போரூரென்னுந் திருப்பதியையுடையவனே, நாயிற்கடைப்பட்ட யான் உலகமும் உயிரும் இவற்றின் வேறாகிய சிவமும் ஆகிய இவையாவையும் ஒன்றேயாக விளங்குகின்ற சொரூபசிவமல்லாமல் வேறில்லையென்று நீ உபதேசித்தவாறு அச்சொரூபத்தினிடத்தில் சலனமற்றுவாழ்ந்திருப்பது எந்நாள்.

சுவையொளியூறோசையாகிய உலகமும் அவற்றை யானென் றபிமானிக்கு முயிரும் இவற்றை இயக்கும் சிவதத்வாதிஷ்டிதமாகிய சிவபேதங்களும் ஆகியஇம்மூன்றினுக்கும் வேறாயுள்ள சொரூபசிவம், தன்னருட்சத்தியாற் சிவபேதங்களையும்,அவற்றா னுயிரையும், உயிரா னுலகத்தையுமியக்கித் தானவையிற்றி னுள்ளும் புறம்பும் வியாபகப்பொருளா யேனைய பொருள்களை வியாப்பிய வியாப்தமாகக் கொண்டனனென்பார் உலகுயிர் பரமுயர் சிவமிவை யாவையுமொன்றாக நிலவிய சொருபமதலதிலையெனவும், கிருத்திய கர்த்தர்களால் முத்தொழிற்பட்டுழலுந் தொழிலொழிந்து, யான் சொரூபசிவத்தில் நிலைபெற்றிருக்க விரும்பினேனென்பார் அடியேனென்று இலகிய வதனிடை யசைவற வுறைகுவது எனவுங் கூறினர்.

சுத்த தத்துவங்களைந்தும் சொரூபசிவத்தின் சுதந்திர வடிவங்களாதலால் அத்தத்வாதிஷ்டிதமாய் விளங்குந் தடத்தசிவத்தை யுலகுயிரோ டொன்றுயெண்ணற்பாற்றன்றெனக்குறித்தற்கு பரமுயர் சிவமென்றார். (௧௦)

விருந்தக்கலித்துறை முற்றிற்று.

வேலுமயிலுந் துணை.

# அஷ்டகம்.

## எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

திருவும்வெளை முளரியினிலுறைதருதேனுமாதவஞானமும்
மருவவிழிவழிகருணைபொழிதருமாகர்சேவிதமேகமே
உருவுமருவமுமொளியுமிருளுமிலொன்றதாம்பொருளென்றுநீ
தருதியெனதுளநிறையவளமுளசமரமாநகர்வேலனே.

(இ - ள்.) இலக்குமியும் வெண்டாமரைமலரில் வீற்றிருக்கும் கலைமகளும் பெரியதவத்தையளிக்கும் ஞானச்செல்வியும் பொருந்தக் கடைநோக்கின் வழியே கருணையைப்பொழிகின்ற தேவர்களால் சேவிக்கப்பட்டுள்ள மேகமே, வண்மை நிறைந்த திருப்போரூரின்கணெழுந்தருளியிருக்கின்ற வேலாயுதக்கடவுளே, ரூபமும் அரூபமும் ஞானமும் அஞ்ஞானமும் இல்லாத ஒன்றாகிய பொருளை எனதுள்ளம் நிறைய எந்நாள் நீதந்தருள்வாய்.

ரூபா ரூபங்களையுடையதும் ஞானாஞ்ஞானங்களையடைவதும் உயிரென்றாகிக்கி அவ்வுயிரோடொன்றா யெண்ணப்படாத பதியே ஒன்றாயுள்ளபொருள் என்பார் உருவுமருவமுமொளியு மிருளுமிலொன்றதாம் பொருள் என்றார். மேற்கூறிய உருவமுதலிய நான்கு மில்லாதது ஆன்மாவே எனக்கூறினுமெனக்கொள்ளின் எனதுள நிறைய என்று நீ தருதியெனக்கூறற்கியலாதென்க.

பதியுமரவமுநதியுமிதழியும்வைத்தசெஞ்சடையத்தனார்
அதிகதயவுடனொருசொன்மொழியெனவருள்செய்பரகுருதேசிகா
விதியுமறிவருபரமசுகமதைமேவவினியெனையாளுவாய்
ததிதிதிமியெனநடனமயில்வருசமரமாநகர்வேலனே.

(இ - ள்.) பிறையையும் சர்ப்பத்தையும் கங்கையையும் கொன்றை மலர்மாலையையும் வைத்தருளிய செவந்தசடா மகுடத்தையுடைய இறைவனார் மிக்கதயவுடனே ஓர் சொல்லை யான்கேட்க நீ சொல்லக்கடவாயென்று வினவியருள, அவ்வாறே ஒப்பற்ற பிரணவப்பொருளையுபதேசித்தருளிய பரமாசாரியனே, ததிதிதிமியென்று நடனமிடும் மயில்வாகனத்திலெழுந்தருளிவரும் திருப்போரூரின்கணெழுந்தருளியிருக்கின்ற வேலாயுதக்கடவுளே, பிரமனுமறிதற்கரிய சிவானந்தத்தையானடைய இனியென்னையடிமை கொள்வாய்.

பிரமனைநோக்கிப் பிள்ளையார் வேதங்களை யாவர் பாற்கேட்டனை யென்று வினவிய ஞான்று, யானிறைவன் பாற்கேட்டுள்ளேன் என்று கூறவும், அவன் பாலின் னருள்புரியாது சிறைக்களப்படுத்தினனாதலால் விதியுமறிவரு பரம சுகமது என்றார். (உ)

அகிலமுறுசரவசரமொடுபுறமகமுநடுமுடிவாதியும்
திகழுமொருசுகசொருபமாகியதேவனேயருணாதனே
சுகனபதிதொழுமுனதுபதமலர்கடையனேன்முடிசூட்டுவாய்
தகைமைசெறிமறையவர்கள்புகழ்தருசமரமாநகர்வேலனே.

(இ - ள்.) உலகத்திற்பொருந்தியுள்ள இயங்கியற்பொருளும் நிலையியற் பொருளுமாகிய எல்லாவற்றின் புறத்திலும் அகத்திலும் இடையிலும் முடிவிலும் முதலிலும் விளங்கும் ஒப்பற்ற சுகசொரூபமாகிய தேவனே, அருள்நாயகனே, மேன்மை செறிந்த அந்தணர்கள் புகழ்கின்ற திருப்போரூரின்கணெழுந்தருளியிருக்கின்ற வேலாயுதக்கடவுளே, விண்ணுலகுக்கிறைவனாகிய இந்திரன் வணங்கும் உனது திருவடித்தாமரைமலரை நாயிற்கடைப்பட்ட எனது முடியின்மேல் சூட்டியருளுவாய்.

ஆன்மாவின் இச்சா ஞானக்கிரியைகள் எவ்விடத்தும் விளங்குதலும், அவ்விளக்கத்தால் காணப்படும் விடயங்களிற் பற்றலும், அவற்றை நுகர்தலும் இறைவன்றிருவருளன்றியமையா; எங்ஙனமெனின் விளங்குதல் காட்டுமுபகாரமின்றியாகா, பற்றுதல் காணுமுபகாரமின்றியாகா, நுகர்தல் இவ்விருவகையானுமுபகரிக்கும் திருவருளன்றி யாகா (அற்றாகலின்) சரவசரமென்றதை ஆன்மாக்களெனவும், புறம் அகம் என்றதை அறிவிச்சைசெயல்கள் செல்லுமிடமெனவும், நடு முடி ஆதி என்றதை புறம் அகம் என்னும் இவ்விரண்டிடத்தும் பிரியம் மோதம் பிரமோதமாய் நுகரும் அனுபவவேற்றுமை எனவுங்கொண்டு அவ்வனுபவம் அம்முத்திறப்பட்டாதல் சுகசொரூபியாகிய இறைவன் ஆன்மாவோடு கலந்து விளங்கினாலன்றி ஆகாவென்பார் அகிலமுறுசரவசரமொடு புறமுமகமுநடு முடிவாதியுந், திகழுமொருசுகசொரூபமாகிய என்றார்.

இதனால் உபகரிக்கும்வகையெல்லாம் உடையான் இறைவனெனவும், அவ்வுபகரிப்பால் விளங்குதல் பற்றல் நுகர்தலாகிய பயன் பெற்றோன் ஆன்மாவெனவும் கொள்ளக் கிடந்தன. இதனை "இமையளவும் உபகாரமல்லால் வேறொன்றியக்கா" என்றதனானுமுணர்க. (௫)

அறிவொடறிபவனறியவருபொருளடையவொருபொருளாகியே
பிறிவுசிறிதுமின்மவுனமாகியபேசருஞ்சுகமானவா
நெறிகொளுனதருளுததிபெறவெனைநினைதிதிருவுளமதனிலே
தறுகணரவணிபரமனுதவியசமரமாநகர்வேலனே.

(இ-ள்.) சிவஞானத்தோடுஞாதுரு அறியவருகின்ற ஞேயத்தையடைய அவ்வொரு பொருளாகியே வேற்றுமை சிறிதுமில்லாத மௌனநிலையாகிய சொல்லுதற்கரிய சுகவடிவமானவனே, கோபக்கண்ணையுடைய அரவாபரணத்தையணிந்த இறைவனின்றருளிய திருப்போரூரின்கணெழுந்தருளியிருக்கின்ற வேலாயுதக்கடவுளே, நன்னெறியைக்கொண்ட உனதுதிருவருளாகிய கடலை யானடைய என்னை யுனதுதிருவுளத்தில் நினைந்தருளாய்.

சீவன்முத்தர்கள் சிவஞானத்தால் அறியப்படு பொருளாய் வருவது சிவமேயாமென்பார் அறிவோடறிபவ னறியவரு பொருளெனவும், அப்பரஞானத்தாற் பரத்தையடைந்த அவர்மீட்டும் மாயாபதார்த்தங்களை நோக்கி அதுவதுவாகாது சிவமாகியே யிருப்பரென்பார் அடையவொருபொருளாகியே எனவும், அச்சிவயோகநிலையில் முன்போகத்துக் கேதுவாய் நின்றகாண்பான் காட்சிப்பொருளாகிய திருபுடிஞானம் நிகழ்வனவன்றென்பார் பிறிவு சிறிதுமில் எனவும், விகற்பமாகக் காணப்படும்திருபுடிஞானம் தோன்றாதவிடமே நிருவிகற்பமென்பார் மௌனம் எனவும், அம்மௌனநிலையிலெழும் வாக்குமனாதீதமாகிய நிரதிசயானந்தம் முருகக்கடவுளென்பார் மௌனமாகிய பேசருஞ்சுகமானவா எனவுங் கூறினார்.

அறிவு - சிவஞானம், அறிபவன் - ஞாதுரு அல்லது ஆன்மா, வருபொருள் ஞேயம் அல்லது சிவம். முன்னர்க்கூறிய அறிவையொடுக்கொடுத்துப் பிரித்ததனால் சிவஞானமென்றும். (௪)

கனகவடவரையருவிசொரிமுறைகரடகுஞ்சரமுகவனார்
மனமும்விழிகளுமலரவழகொளிர்வாகனேதோகைபாகனே
இனனைநிகருறுமுனதுதிருவடியெனதுமுடியுறநினைகுவாய்
சனகன்மகள்பதிமருகனாகியசமரமாநகர்வேலனே.

(இ - ள்.) மேருவின் சிகரத்தினின்றும் விடாதொழுகும் அருவியைப்போல மதநீரைப்பொழிகின்ற யானைமுகத்தையுடைய மூத்தபிள்ளையார் தமதுமனமுங்கண்களும் மலரப் பொலிவுபெற்றுவிளங்கும் வெற்றிமாலையையுடையவனே, மயிலைநடத்துகின்றவனே, சானகிகணவன்மருகனாகிய திருப்போரூரின்கணெழுந்தருளியிருக்கின்றவேலாயுதக்கடவுளே, பரிதியையொத்து விளங்கு முனதுதிருவடி எனதுமுடியின்மீது பொருந்த நீநினைத்தருளாய்.

இமயகிரிதவவுதயமயின்முலையின்னருட்சுதைவாரியுண்
டமைவுதருதிரிநயனவரைமிசையணிசெய்கவிபொழிமேகமே
சிமையவரைதொறுமாடுநின்பதசேவைதந்தெனையாளுவாய்
சமரமயின்மிசையுதயசூரியசமரமாநகர்வேலனே.

(இ - ள்.) இமயமலையரையன் தவங்கிடந்துபெற்ற உமாதேவி திருமுலைத்தடத்தினின்றும் பெருகிய அருளாரமுதக்கடலைப்பருகிச் சோமசூரியாக்கினி என்னும் முச்சுடர்களுக்கும் முதலொளியாயிருந் தமைந்துவிளங்கும் முக்கண்ணையுடைய இறைவனாகியமலையின்மேல் அழகுசெய்யுங் கவிதைமழையைப் பொழிந்தமேகமே, போர்புரியவல்ல மயில்வாகனத்தின்மே லுதயஞ்செய்தருளுஞ் சூரியனே, திருப்போரூரின்கணெழுந்தருளியிருக்கின்ற வேலாயுதக்கடவுளே, சிகரத்தையுடைய குன்றுகள்தோறும் விளையாடியருளும் உனது பாதசேவையைத் தந்தருளி என்னையடிமைகொள்வாய்.

இறைவனைத்தொழிலும்சீகாழிவந்த பிள்ளையார் திருப்பதிகங்கள் ஓதிச் செய்தனராதலின் அணிசெய்கவி என்றார். (௬)

குறவர்மடமகள்களபபுளகிதகுடமுலைச்சுவடணுகிய
நறவுகமழ்தருதெரியன்மார்பநாயகாகருணாலயா
உறவுமெனதுயரறிவும்வளமையுமுனதுபரிபுரபாதமே
தறையினுயிர்வகைதழையநிலவியசமரமாநகர்வேலனே.

(இ - ள்.) வள்ளிநாய்ச்சியாரது சந்தனக்கலவைதிமிர்ந்து புளகமரும்பிய குடம்போன்ற தனத்தின் சுவடுபொருந்திய 'தேன்மணங்கமழும் கடப்ப மலர்மாலையையணிந்த திருமார்பையுடைய நாயகனே, கருணாலயனே, உலகி லுள்ளசீவபேதங்ளெல்லாந் தழைத்தோங்கவிளங்காநின்ற திருப்போரூரின்க ணெழுந்தருளியிருக்கின்ற வேலாயுதக்கடவுளே, என்னுடையவுறவும் சிறந் தஅறிவும் செல்வமும் உன்னுடையநூபுரமணிந்த பாதங்களேயாம்.

பெத்தான்மாக்களுக்கு உறவும் உணர்வும் போகமும் பாசமாதல் போல எனக்கு அவையாவும் அருளேயாமென்பார், உறவுமெனதுயரறிவும்வளமையு முனது பரிபுரபாதமே என்றார். (எ)

தெய்வசிந்துரநயனவிணைகுடிசேருமேருறைசெம்புயா
மெய்வழங்குகண்ணாளனேநவவீரர்சேவிததாளனே
செய்வழங்கயின்மன்னவென்னுளநின்றுநன்றருள்பாலியாய்
சைவநெறியினருய்யமனமகிழ்சமரமாநகர்வேலனே.

(இ - ள்.) தெய்வயானைநாய்ச்சியாருடைய இரண்டுகண்களும் குடி யிருக்கப்பெற்ற அழகுபொருந்திய செந்நிறம் வாய்ந்ததிருப்புயங்களையுடைய வனே, உண்மைப்பொருளுணர்த்தும் ஞானக்கண்ணையுடையவனே, வீரவாகு தேவர்முதலிய நவவீரர்கள் பணியப்பெற்ற திருவடியையுடையவனே, சைவ நெறியை மேற்கொண்டொழுகும் அடியார்களீடேறத் திருப்போரூரின் கண் திருவுள்ளக்களிப்போ டெழுந்தருளியிருக்கும் வேலாயுதக்கடவுளே, நெய்ப் பசையோடு விளங்கும் வேலேந்திய இறைவனே, எனதுள்ளத்தின்கணிலை பெற்றுநின்று நன்றாகத்திருவருள்புரியாய்.

அசுரரைக் கடிந்து அமரரைக்காத்து வேதநெறியைக்காத்ததுபோல் அ மணரைக்களைந்து அடியரைக்காத்தருளச் சைவநெறியை வளர்த்தனனாத லிற் சைவநெறியினருய்ய என்றார். (அ)

அஷ்டகம் முற்றிற்று.

வேலுமயிலுந்துணை.

## பெருங்கழிநெடில்விருத்தம்.

சுருதியின்முடிவுதெளிதருபரமசுகமுறக்கலசமாமுனிக்குத்
துகளறுமரியபொருள்பகர்குரவதுதிபெறுமுவமையிலழக
கருதருமடியர்பவவலைதுணிசெய்காரணபூரணவெனவுன்
கழலிணையடியேன்மனதினினினைந்துகசிந்துநெக்குருகுநாளுளதோ
செருவயினசுரர்குலமணியனையதிறலுடையொருமகசூரன்
றிகழுரமுருவவலையயில்விடுத்தசேவகபாவகவதீத
தருமணியிகலியருள்கரகமலதனிநெடுமயூரவாகனனே
சததளகமலமருவியவயல்சூழ்சமரமாநகருறைகுகனே.

(இ - ள்.) போர்க்களத்தில் அசுரர்குலங்களுக்கு ஓர்மணிபோன்ற வெற்றியையுடைய ஒப்பற்ற பெரியசூரபன்மனது விளங்கும்மார்பினூடுருவ அலைத்துப்புகவல்ல வேலாயுதத்தை விடுத்தருளியசேவகனே, பாவனாதீதனே, வேண்டியவேண்டி யாங்குதவும் கற்பகத்தருவையும் சிந்தாமணியையும் பகைத்து அருள்செய்யவல்லதாமரைமலர்போன்ற திருக்கரங்களையுடையவனே, ஒப்பற்றபெரிய மயில்வாகனத்தையுடையனே, நூற்றிதழோடுங் கூடிய தாமரைகள்செறிந்திருக்கின்ற வயல்கள்சூழ்ந்த திருப்போரூரின்கண் வாழும் முருகக்கடவுளே, வேதத்தின்முடிவாயுள்ள உபநிடதங்களால் தெளிந்தபரமசுகத்தையடைய அகத்திய முனிவருக்குச்குற்றமற்ற உண்மைப் பொருளை யோதியருளிய குரவனே எனவும், யாவராலுந் துதிக்கப்பெற்ற வொப்பிகந்த அழகுடையானே எனவும், எண்ணுதற்கரிய அடியார்களுடைய பிறவியைத்துணித்தருளும் காரணனே எனவும், பரிபூரணனே எனவும், உனது திருவடியிணையை அடியேன்மனத்தில் நினைந்து உள்ளங்கசிந்து என்பு மிகவும்நெக்குருகும்நாளும் எனக்குமுளதாகுமோ.

யோகநூலார்கூறும் மனோபாவனையும், கருவிப்பாவனையும், அநிர்வசனிய பாவனையும், போலிப்பாவனையும் ஆகியநான்குப்பாவனைகளையும் கடந்த பொருளாதலின் பாவனாதீதனெனவும்; பாவனாதீதமாகிய அப்பொருள் சூனியப் பொருளாகாது தனதுதிருவருளால் அன்பர்கருதும் பொருளாய்நின்று அவர் கருதும் பாவனைப்பொருளெல்லாந்தந்து மீண்டும் பாவிக்காவாறு தன்னோடைனியமாயிருக்கும் அத்துவித நிலையைத்தந்தருளுதலின் பாவிக்கும் பொருளொன்றனையே தரவல்லதருவும்மணியும் இவ்விறைவனோடு ஒப்புவமையாகாவாகலின் தருமணியிகலியருள்கரகமல எனவுங்கூறினார். (க)

முாணுறுகொடியபவமெனுமுததிமுழுகலுமெழுதலுமாகி
முதிர்கரையறியாதிடைதடுமாறிமுடலைகொள்விடயமென்றுறைசெய்

உரமருமகரமிடையிடையடரவுய்வகையொருதிசையின்றி
உழலுமென்றனக்குன்கழலிணையம்பியுவந்தளித்தாளுநாளுளதோ
விரவியகளபம்ருகமதபடீரவிரைகமழ்புயாசலவீர
விரிகதிரிலகுமரகதமயிலின்மிசைவருமொருபெருங்குமர
சரவணவிசாககுக்குடத்துவசசண்முகசச்சிதானந்த
சததளகமலமருவியவயல்சூழ்சமரமாநகருறைகுகனே

(இ - ள்.) மணங்கமழும்கலவைச்சாந்தும் மிருகமதமும் சந்தனமணமுங்கமழ்கின்ற புயமாகிய மலையையுடையவீரனே, விரிந்தகிரணங்கள் ஒளிவிடும்மரகதம்போன்ற மயில்வாகனத்தின்மேல் எழுந்தருளிவரும் ஒப்பற்ற பெருமைவாய்ந்த குமாரக்கடவுளே, சரவணபவனே, விசாகனே, கோழிக்கொடியுடையானே, சண்முகனே, சச்சிதானந்தசொரூபனே, நூற்றிதழோடுங்கூடிய தாமரைகள் செறிந்திருக்கின்ற வயல்கள் சூழ்ந்த திருப்போரூரின்கண் வாழும் முருகக்கடவுளே, ஒன்றோடொன்றேவ்வாதிருக்கும் கொடியவினையின்வழிவருவனவாகிய பிறவியென்னுங் கடலின்கண் மூழ்குதலையும் மீண்டெழுதலையும் உடையனாகி பெரிய முத்தியென்னுங் கரையையறியாது இன்பத்துன்பமென்னும் இவ்விரண்டினிடையலமந்து புலால்நாற்றம்நாறும் ஐம்பொறிகளை வாயிலாகவுடைய சத்தமுதலியவிடயங்களென்று சொல்லப்பட்ட வன்மை பொருந்திய மகரமீன்களிடையிடையே போர்புரிய அதனால் உய்ந்துபோகும் வழியைக்காணப்பெறாது ஓர்திசையென்பதில்லாமல் எத்திசையிலுஞ்சென்றுழலும் அடியேனுக்குனதடியிணையாகியமரக்கலத்தை மகிழ்ந்தளித்தடிமை கொள்ளும் நாளுமுண்டாகுமோ.

முரணுறுகொடியபவம் என்றது மக்கள்தேவர்முதலியபிறவிகள் மாறுபட்டிருத்தலை. முழுகவும் எழுதலுமென்றது பிறந்திறத்தலை எனக்கொள்க. (௨)

விலகியகலகவிழிமடவார்தமென்முலைக்குவட்டிடையிழிந்து
மிகுமயலாசைவெம்புவிபாயமெய்ம்மறந்துளதருணிணையாப்
புலமிலியிவனென்றெனையிகழாதுன்புனிதசெஞ்சரோருகமிணைந்த
பொற்பினிற்றிகழுமற்புதபாதம்பெற்றுநிட்டத்திருந்தருள்புரியாய்
பலகலைமுழுதுமறிதருபுலவபரகதிநெறிதருகுரவ
பதகரைமுடுகியடுமொருவீரபணிசுரரொணியடைநிருப
தலமதிலிரவிவரவொருதொனிசெய்தமைசிறைச்சேவலம்விருத
சததளகமலமருவியவயல்சூழ்சமரமாநகருறைகுகனே.

(இ - ள்.) வேதமுதலாகச் சொல்லப்பட்ட எல்லாக்கலைகளையுமோதாதுணர்ந்தபுலவனே, முத்திநெறியைத்தந்தருளும் சைவாசாரியனே, பாதகர்களாகிய குண்டையர்களை விரைந்துகொன்றருளியவீரனே, உலகினர் பணியுந்தேவர்கள் தாம்பணிய எண்ணியடையப்பெற்றநிருபனே, நிலவுலகின்கண் சூரியன்வருகையைக்கருதி ஒப்பற்ற தொனியைச்செய்கின்ற

தழைந்தசிறகினையுடைய சேவற்கொடியை விருதாகவுடையவனே, நூற்றித ழோடுங்கூடிய தாமரைகள் செறிந்திருக்கின்ற வயல்கள்சூழ்ந்த திருப்போரூரின் கண்வாழும் முருகக்கடவுளே, நன்னெறியினின்றும் விலகிய கண்கள் வாய்ந்த மங்கையருடைய மெல்லியதனமாகிய சிகரத்தினின்றிழிந்து மிக்க மயக்கினைச் செய்யும் கொடிய ஆசையென்னுமருவி உலகின்கண்பரவ அதனால் தேகபரவசனாய் உனது திருவருளைநினையாத அறிவிலியிவனுமென்று என்னை யிகழாது உனது பரிசுத்தமாகிய செந்தாமரைமலர்போன்றபொலிவொடு விளங் குமற்புதமாகிய திருவடி என்னுள்ளத்திற்பொருந்தத் திருந்தியதிருவருளைப் புரியாய்.

கலைமுற்றுமுணர்ந்தவரோ வீட்டுநெறிகாட்டவல்லார். அவ்வன்மையுடை யாரோ பரசமயிகளைக்களையவல்லார். அற்றாகலின் இம் மூன்று மொருங்கே யுடையான் சீர்காழி மணியே யென்பார் பலகலைமுழுது மறிதருபுலவ பரகதி நெறிதருகுரவ பதகரை முடுகியடுமொருவீர என்றார். (௯)

அழலுறுமெழுகினரிவையர்மயலினனுதினமகநெகவழியும்
அசடனைமதியில்கசடனையறிவிலாதனைமாதவமிலனை
விழலனையதிகவிரகனைமதுரமிலதொருவசனனைமுனிவின்
விறலனையுனதுகழலிணைகுறுகும்விதமளித்தாளுநாளுளதோ
புழைபெறுபணையிற்கரமலைப்பிடரிற்பொங்குசெங்கதிரொருகோடி
பொற்பினிற்றிகழ்வதொப்பெனச்சிறந்துபொன்னுலகுலவியபுனித
தழுவளைபெரியகற்பகாடவியின்றண்மலர்மாலிகாபரண
சததளகமலமருவியவயல்சூழ்சமரமாநகருறைகுகனே

(இ - ள்.) புழையையுடைய பனையின் துண்டத்தை யொத்ததுதிக்கை யையுடைய ஐராவதத்தின் பிடரியில் விளங்கும் கோடிசூரியர்கள் பொலிவு பெற்றுப்பிரகாசித்தலை யொப்பென்று கூறச்சிறப்புற்றுப் பொன்னுலகிற் பவனி வந்தருளிய புனிதனே, தழுதழுத்த தூற்றையுடைய பெரியகற்பகாடவியி லுள்ள தண்ணிய மலராற்றொடுக்கப்பட்டமாலையணிந்தமாலிகாபரணனே, நூற்றிதழோடுங்கூடிய தாமரைகள் செறிந்திருக்கின்ற வயல்கள் சூழ்ந்ததிருப் போரூரின்கண் வாழும் முருகக்கடவுளே, தீயையணுகிய மெழுகைப் போல மகளிர்மயலில்நாள்தோறும் உள்ளமானது சிதைவுபடவழிகின்ற கீழ்மகனை அறிவிலியாகிய குற்றமுடையோனை அஞ்ஞானமுடையோனை பெரியதவமில் லோனை வீணனை மிக்ககாமுகனை ஓர் மொழியினும் மதுரமில்லோனை கோப மிக்கோனை உனது அடியிணையைக்கூடும் வகையைத்தந்தடிமை கொள்ளும் நாளுளதோ.

இதனால் யான் அரிவையரின்பங் கருதிக்கருதி அனலிற்பட்ட மெழுகு போல மனமுருகும் வகையெல்லாம் அறிவிலார்கூற்றுட்பட்டு கற்றுணர்ந்து

அசடன் கசடன் அறிவிலான் தவமிலான் விழலன் விரகன் மதுரமில்வச னன் விறலனென்னு நாமங்கட்குரிய அனுபவமுடையனுயினேன் அற்ருக லின் ஆடுகின்றிலே அன்பிலே பாடுகின்றிலே பதைப்பதுஞ்செய்கிலே பணிகிலே பதமலர் சூடுகின்றிலே சூட்டுகின்றதுமிலே தேடுகின்றலே தெருவுதோறலரிலே என்று நெஞ்சம் உருகும் விதமெல்லாமுணர்ந் தியற்றியும் இயற்ருதார்போல் தமது நெஞ்சத்தை பிணமென்றழைக்கப்பட்ட அருளாளர் கூற்றுட்பட்டு இறைவனடியிணை குறுகும்நாள் எனக்கு உளதாதல் அரிதென்று கூறிய வாறு. முனிவன் விறலனே எனவும் பாடம். (௪)

உததிகொள்குமிழியுடுநிரையுயிர்களொலிகெழுதிரைமலிபுளினத்
துறுமணலளவையளவிடுமொருவனுளனெனிலெனதுறுபிறவி
விதவகையறியுமவைகளிலடியேன்மெலிவுறுமெலிவைநீயறிவாய்
விகசிதநினதுமலரடியுதவிவெந்துயரகற்றிடநினையாய்
நதிபெறுசடிலமணிமுடியொருவனகைபெறவிருசெவிகுளிர
நற்பொருளுரைத்தவற்புதக்குரவநாதபூதங்களின்றலைவ
சதியுடனடநமிடுமயிலூரவசதுரமென்மதுரவாசகனே
சததளகமலமருவியவயல்சூழ்சமரமாநகருறைகுகனே.

(இ - ள்.) கங்கையையணிந்த அழகியசடாமுடியை யுடைய ஒப்பிலியா கிய இறைவன் புன்னகையரும்பவும், இரண்டுசெவிகளுங் குளிரவும், நல்லபிர ணவார்த்தத்தை யுபதேசித்தருளிய அற்புதனுகிய ஆசிரியனே, சிவபூதங்களுள் தலைமை பெற்றபூதங்களுக்குத் தலைவனே, தாளவொத்துக்கிசைய நடனஞ் செய்யும்மயில் வாகனத்தையுடையவனே, அற்புதத்தைவிளைவிக்கும் மெல்லி யமதுர மொழியையுடையவனே, நூற்றிதழோடுங்கூடிய தாமரைகள் செறிந் திருக்கின்ற வயல்கள்சூழ்ந்த திருப்போரூரின்கண்வாழும் முருகக்கடவுளே, கடலின்கண்தோன்றும் நீர்க்குமிழியையும், ஆகாயத்தின்கண் காணப்படும் நக்ஷத்திரக் கூட்டங்களையும்,ஆன்மவர்க்கங்களையும்,ஒலிக்கும் அலையையுடைய கடற்கரையிலுள்ள மணற்குன்றுகளில் அமைந்துள்ளசிறுமணலளவையும்,அள விட்டறியவல்ல ஓர்மகன் இவ்வுலகின்கணுள்ளானுயின் யா னிதுகாறுமடை ந்த வெவ்வேறுவகைப்பட்ட பிறவிப்பேதங்களையறியவல்லவனுவன்,அவ்வாறெ ண்ணிகந்தபிறவிகளில் யான்மெலிவுற்றமெலிவை நீயேஅறிவாய், அற்ருகலின் உனது மலர்ந்த தாமரைமலர்போன்ற அடியிணையை எனக்கருளி அப்பிற விவெப்பொழிய நினைந்தருளாய்.

நீர்க்குமிழியையும் தாராகணங்களையும் அனுத்திரளொலியையும், திரட்சி யாகிய மணலையும் ஒருவனளவிடுதற்கு எவ்வாறு கூடாதோ அதுபோலுமாம் என்னுடைய பிறவிவகையையு மறிவது என்றதனுல் அறியத்தொடங்குவோர் யாவராயினும் சிற்றறிவுஞ் சிறுதொழிலுமுடைய ஆன்மவர்க்கங்களேயாவர்

அஃதால் அவனொன்றேனுடொத்தவர் அவரறியார். சர்வஞ்ஞத்துவத்தையும் சர்வ கர்த்திருத்துவத்தையும் சர்வானுக்கிரகத்துவத்தையும் இயல்பாகவேயுடைய இறைவனாகிய நீயே என்மெலிவையறியவல்லை. அற்றாகலின் யான் பிறவித்துன்பத்தில் மெலியாவண்ணம் உனது பதமலரைத்தருவையேல் யா னினிப்பிறவியுமெடேன் மலங்களையும் போக்குவேன் சீவன்முத்திநிலையுங் கூடுவேன் அடிமையுமாவேனென்றவாறும். (கு)

சிகரியினுதயபரிதியின்மணிகடிகமழுறுமகுடமோராறும்
திரளுடுபதியின்முகங்களோராறுந்திருவிழிமலர்களீராறும்
ககனமூடுருவுகனகமால்வரையிற்கதித்தெழுபுயங்களீராறும்
கடிகமழுபயபதங்களுமெனதுகருத்திலுற்றிருக்குநாளுளதோ
நிகரறுமுரகன்முடிநெறநெறெனநிகழ்வடவரைகிடுகிடென
நிலவியவுலகையொருநொடியதனினிலைபெறவுலவுசீரடியாய்
தகைபெறுகுறவர்மடவரலியானைதந்தருண்மடவரல்கணவ
சததளகமலமருவியவயல்சூழ்சமரமாநகருறைகுகனே.

(இ - ள்.) ஒப்பிகந்த ஆதிசேடன் ஆயிரமுடியும் நெறநெறென்று ஒன்றொன்றொடு தாக்குற்றுச்சிதையவும், நிலைபெற்றமேருகிரி கிடுகிடென்று குலுங்கவும்,(அதனால்) தனதுநிலையற்றுப் பொலிவிழந்து விளங்காநின்றவுலகை அக்கணமே ஓர்நொடிப்பொழுதில் நிலைபெற்றிருக்க உலாவியருளிய சிறப்பினை வாய்ந்த திருவடியையுடையவனே, தகுதியமைந்த வள்ளிநாய்ச்சியாருக்கும் தெய்வயானை நாய்ச்சியாருக்குந் தலைவனே,நூற்றிதழோடுங்கூடிய தாமரைகள் செறிந்திருக்கின்ற வயல்கள்சூழ்ந்த திருப்போரூரின்கண்வாழும் முருகக்கடவுளே, உதயகிரியின் சிகரத்திலுதிக்கும் சூரியனைப்போலுமொளிவிடுமிரத்தினங்களிழைத்த ஆறுதிருமுடிகளும், நக்ஷத்திரக்கூட்டங்களுக்குத் தலைவனாகிய சந்திரனைப்போன்ற ஆறுதிருமுகங்களும், மலர்போன்ற பன்னிரண்டு திருக்கண்களும், ஆகாயத்தையூடுருவிச் செல்லும்மேருமலையைப்போல் நிமிர்ந்தெழுகின்ற பன்னிரண்டு திருப்புயங்களும், நறுமணங்கமழும் இரண்டுதிருவடிகளும், எனதுள்ளத்தின்கண் பொருந்தியிருக்கும் நாளுமுண்டாகுமோ.

கசடறுககனமகபதியுலகிற்கடிதருமருமலர்க்கூந்தற்
கடவுளர்மகளிரிருபுடைகவரிகாலசைத்திரட்டமாமுனிவர்
திசைதொறுமமரர்மறைமொழியாசிசெப்பிடவொப்பிலாதுலவுஞ்
சேவகநினதுபதாம்புயத்தெனதுசிந்தையைச்செலுத்துநாளுளதோ
கெசமுகனுடலமிருதுணிபடுத்தகேழயிற்படைவலனேந்துங்
கேசரிதெய்வக்கம்மியனியற்றுங்கிங்கிணிச்சரணவானந்த
தசமுகன்மடியவொருகணைதொடுத்தசதுரனன்மருகனேமுருகா
சததளகமலமருவியவயல்சூழ்சமரமாநகருறைகுகனே.

(இ - ள்.) யானைமுகத்தையுடைய தாருகாசுரனுடலத்தை இருகூறுக்கிய ஒளிமிக்க வேலாயுதத்தை வலப்பக்கத்தில் சார்த்தியருளுஞ் சிங்கமே, தெய்வ கம்மியனால் நியமித்தகிண்கிணியையணிந்த பாதங்களையுடைய ஆனந்தசொ ரூபனே, தசக்கிரீவனிறக்க ஓர்பகழியை விடுத்தசதுரனாகிய திருமால்மரு கனே, முருகனே, நூற்றிதழோடுங்கூடிய தாமரைகள் செறிந்திருக்கின்றவயல் கள்சூழ்ந்த திருப்போரூரின்கண்வாழும் முருகக்கடவுளே, குற்றமற்ற இந்திரபு ரியில் மிக்கநறுமணங்கமழும் மலரணிந்தகூந்தலையுடைய தெய்வமங்கையர்கள் இரண்டு பக்கங்களிலு நின்றுசாமரைகளின் காம்பினையசைத்தியக்கவும், திக்கு கள் தோறும் தவத்திற்சிறந்த முனிவர்களும் தேவர்களும் வேதவாக்கியங்க ளால் ஆசிகள்கூறவும், நிகரின்றிப்பவனிவரும் சேவகனே, உனதுதிருவடித்தா மரையில் எனது கருத்தை செலுத்துநாளுமுண்டாகுமோ. (எ)

அவகதிபுகுதுநினைவுடனியங்கியடர்வுறுவிடயமென்கடுவை [ச்
அயின்றயின்றனந்தநாளெலாங்கழித்தவறிவிலுன்மத்தனேன்றன்னை
சிவகதிக்குரியனெனத்தெளிவித்துத்திரிமலமயக்கவேர்களைந்து
திகழுறுமழல்சேரிரும்புநீரொன்னத்திருவடிச்சேர்த்துநாளுளதோ
கவனவாம்புரவியேழுறப்பூண்டகடிரதக்கடவுளுக்குடைய
கதிரொனத்தோன்றுமமயிலுடைக்குமரகந்தநந்தாமணிவிளக்கே
தவநதிபெருகுஞ்சடிலவானந்தத்தண்கடலுதித்தவாரமுதே
சததளகமலமருவியவயல்சூழ்சமரமாநகருறைகுகனே.

(இ - ள்.) ஆகாயத்தில் தாவிச்செல்லும் ஏழுகுதிரைகள் பூட்டியவேக மிக்க ரதத்தையுடைய சூரியனுக்குரிய கிரணத்தைப்போல விளங்கும் மயில்வா கனத்தையுடைய குமாரனே கந்தனே அழிவில்லாதரத்னதீபமே, தவமிக்க கங்காதேவிவளரப்பெற்ற சடாமகுடத்தையுடைய ஆனந்தசொரூபியாகிய சிவமென்னுங்கடலில் தோன்றிய நிறைந்த அமிர்தமே,நூற்றிதழோடுங் கூடிய தாமரைகள்செறிந்தவயல்கள்சூழ்ந்த திருப்போரூரின்கண்வாழும் முருகக்கட வுளே, அவமாகியபிறவியிற்செல்லும் சங்கற்பநினைவோடுமேவி அத்ததியில்வந்து சாரும் விடயமென்கிற நஞ்சைப்பருகிப் பருகி யெண்ணிறந்த காலமெல்லாம் வீணிலேசெல்லக்கழித்த அறிவில்லாத உன்மத்தனாகிய என்னைச் சிவகதிக்குரி யவனென்று நீ தெளிவித்து,மும்மலங்களின் மயக்கத்தை வேரொடுங்களைந்து, விளங்கும் அக்கினியைச்சேர்ந்த இரும்புண்டநீர் போல உனது திருவடியைச் சேர்ப்பிக்கு நாளுமுண்டாகுமோ. (அ)

துகளறுமுலகமலிசிபெருகுந்துரிசறுபரிதிகோடிகளிற்
சுடர்விடுநினதுதிருவுருவழகுந்துலங்கியமுகங்களோராறும்
பகரருமணிகள்சுடர்விடுகடகப்பருப்பதப்புயங்களீராறும்
பரிபுரகமலபாதமுஞ்சிறியேன்பரிவொடுங்காணுநாளுளதோ

செககணசெகணசெககணசெகணசெஞ்சினதிருதகுதிகென
செறிமுரசுடுக்கைமத்தளமலகைதிசையொலிசென்றிடமுழக்கச்
சகதலத்தசுரர்மணிமுடியுருளத்தடக்கைவேல்விடுத்தசேவகனே
சததளகமலமருவியவயல்சூழ்சமரமாநகருறைகுகனே.

(இ - ள்.) செககணசெகண செககணசெகண ஜெம்மெனதிருதகுதிகு என்றுநெருங்கியபேரிகைகளும் உடுக்கைகளும் மத்தளங்களும் பேய்க்கணங் களும் எண்திசைகளிலும் நிறைந்தொலிக்க, உலகின்கண் அசுரர்களுடைய ரத்தினமகுடங்களுருள பெருமைவாய்ந்த திருக்கரத்திலேந்திய வேலாயுதத் தை விடுத்தருளிய வீரனே, நூற்றிதழோடுங் கூடியதாமரைகள் செறிந்தவயல் கள்சூழ்ந்த திருப்போரூரின்கண்வாழும் முருகக்கடவுளே, குற்றமற்ற உலகத் தில் நிறைந்தவிருளைப் பருகும் குற்றமற்றகோடிசூரியர்களைப்போல வொளி வீசுமுனது திருவுருவத்தினழகும், விளங்காநின்ற ஆறுதிருமுகங்களும், விலை வரம்பிகந்த மணிகளொளிவிடும் கடகமணிந்தமலைபோன்ற பன்னிரண்டு திருப்புயங்களும், நூபுரமணிந்த தாமரைமலர்போன்ற திருவடிகளும், சிறியே னாகியயான் அன்போடுங்காணு நாளுமுண்டாகுமோ. (க)

திடமுறுககனமகபதியமரர்சித்தர்விஞ்சையரரிபிரமர் [ச
செயசெயவெனவேகற்பகாடவியிற்செழுமலர்பொழிந்துநின்றிறைஞ்
நடமிடுகுழகனகமகிழ்ந்துதவுநாதவென்றிடைவிடாதுன்னு
நன்மனமளித்துப்புன்மனம்போக்கிநாயினேன்றன்னையாண்டருளாய்
கடதடவிகடகுஞ்சரானனத்துக்கடவுளுக்கிளையநற்களிறே
கதிதருதருவேநதிதருமணியேகாமனிற்கட்டழகினனே
தடமலைநிகர்த்தவரிமுகத்தசுரன்றனதுரமுருவவேல்விடுத்தோய்
சததளகமலமருவியவயல்சூழ்சமரமாநகருறைகுகனே.

(இ - ள்.) மதநீரைப்பொழிகின்ற பெரியயானைமுகத்து விகடசக்கர னென்னும் விநாயகக்கடவுளுக்கிளையவனாகிய நல்லயானையே, வேண்டுவோர் வேண்டுங் கதிகளைத்தந்தருளுங் கற்பகத்தருவே, கங்காநதி தந்தமணியே, மன்மதனிலும் மிக்ககட்டழகுடையவனே, பெரியமலையையொத்தசிங்கமு காசுரனதுமார்பகத்திலுருவியோட வேலாயுதத்தை விடுத்தவனே, நிலைபெற்ற விண்ணுலகத் தரசனாகிய இந்திரனும் ஏனையதேவர்களும் சித்தர்களும் வித்தியாதரர்களும் திருமாலும் பிரமனும் சயசயவென்றுகற்பகச்சோலையி லுள்ள வளப்பம்வாய்ந்த மலர்களைமழைபோற்சொரிந்துநின்று வணங்க ஆனந் தநடனஞ்செய்யும் பேரழகனாகிய இறைவன் மனமகிழ்ந்துதவியநாயகனே என்று எக்காலமும் நினைக்கும் நல்லமனத்தைத்தந்து புல்லியமனத்தையொ ழித்து நாயிற்கடைப்பட்ட வென்னையடிமை கொண்டருள்வாய்.

நற்கதிகளிலுள்ள போகங்களை விரும்புவோர்க்குத் தருதல் கற்பகமாத லால் அக்கதிகளெல்லாந் தந்தவனிவனென்பார் கதிதருதருவே எனவும், மணிக

ஊத்தருதல் பெருக்கெடுத்துவரும் நதிகளாதலால் அந்நதிகளிற் சிறந்தக்கங்கையில் தவழ்ந்தவனென்பார் நதிதருமணியே எனவும், மன்மதனை யழகுடையாள் என்பதேயன்றி அவனைக்கண்டாரில்லை, அவனுருவம் உருவமென்று சொல்லப்பட்ட அக்கினியாலிழக்கப்பட்டது, அவ்வனங்கன் அழகுடையானென்பதென்னை, அவ்வக்கினியிற்றோன்றியும்உருவுகுலையாதும்இருந்த அழகுடையானென்பார் காமனிற்கட்டழகினனே எனவும் கூறினார். (௧௦)

பெருங்கழிநெடில் விருத்தம் முற்றிற்று.

---

௨

வேலுமயிலுந்துணை.

## குறுங்கழிநெடில்விருத்தம்.

அறிவுக்களிறோ ருதவித்துணையா யகமெச்சியமுருகா
மறிமிக்கொளிசூழ் சுசிகைக்கொளுவோன் மகிழத்தவழ்புதல்வா
வெறிபற்றியதா ரவவெற்கருள்சேர் விமலப்பதமருளாய்
தறியட்டெழுமா தவளக்களிறாய் சமரப்பதியானே.

(இ - ள்.) ஞானமூர்த்தியாகிய விநாயகக்கடவுளே (காட்டானையாக வந்து) ஒருதவியைச்செய்யஅவ்வுதவியால் திருவுள்ளமெச்சியமுருகனே, மானையும்மிக்கஒளிவீசும் வன்னியையுந்திருக்கரத்திலேந்திய இறையோன் ஆனந்தங் கொள்ளத்தவழும் புதல்வனே, ஒளிவீசும்பொன்னரிமாலையையுடையவனே, கட்டுத்தறியைமுறித்துச்செல்லும் பெரிய வெள்ளையானையையுடையவனே, திருப்போரூரொன்னுந் திருப்பதியுடையவனே, அடியேனுக்கருளமைந்த புனிதமாகிய திருவடியையருள் செய்வாய்.

மானும் தழலும் என்றும் திருக்கரத்தில் அமர்ந்துள்ளனபோல் அம்மையப்பர் நாப்பண் தவழும் இளங்குழவிப் பருவத்தனாய்நின்று இன்பஞ்செய்தலின் மறிமிக்கொளிசூழ் சுசிகைக்கொளுவோன் மகிழத்தவழ்புதல்வா என்றார்.

இமயப்பிடிபா லுதவக்கனிவா யிடைவைத்துமிழ்சிறுவா
திமிரத்திரளா மசுரக்கொடியார் சிதையத்தொடுமயிலாய்
நிமலச்சுகபா ரணமெற்கினிநீ நிசழ்வுற்றினிதருளாய்
சமரச்சிறைமா மயுரப்பதியா சமரப்பதியானே.

(இ-ள்.) மலையரையன்பெற்ற பெண்யானையொத்த உமாதேவியார் தமது பொன்வள்ளத்தளிக்க அதனைத்தமது கனிபோன்ற திருவாயில் வைத்துண்டுதேக்கிய சிறுமதலையே, அஞ்ஞானக் கூட்டங்களாகிய அசுரராகிய

தீவினையாளர் சிதைந்தொழியத்தொடுத்த வேலாயுதத்தையுடையவனே, போர்புரியவல்ல சிறகினையுடைய பெருமைபொருந்திய மயூரநாதனே, திருப்போரூரென்னுந் திருப்பதியையுடையவனே, நீ இனிஎவ்விடத்தும் நிறைந்து விளங்கும் புனிதமாகிய சிவானந்த போகத்தைப்பருக எனக்கு இனிமையாக அருள்செய்யாய்.

அம்மையார் சிவஞானத்தைப் பாலாகத்திருவாயிலூட்ட அதனை நாவினல் மடுத்துப் பாவாகவுமிழ்ந்து உலகுய்யச்செய்தனை;யான் அப்பாவினை ஓதாதொழிந்து பாவியானேன்; அதனால் பிள்ளாய் ஓத அருளல்வேண்டுமென்று இரங்கியவாறென்க. (உ)

கடவுட்பிடிகா னவர்நற்கொடிசூழ் கனகக்கிரியனவா
மடமைச்சிறியே னிடாைக்களைவான் வனசப்பரிபுரதாள்
இடைவைத்தினியா ணடனச்சிறைமா மயிலுக்கெழினிருபா
தடவெற்பழகா தணிகைப்பதியாய் சமரப்பதியானே.

(இ-ள்) தெய்வயானை நாச்சியாரும் வள்ளிநாச்சியாரும் இருமருங்குஞ் சூழ்ந்தபொன்மலையொத்தவனே, நடனஞ்செய்யுஞ் சிறகையுடைய மயிலுக் கழகினைச்செய்யும் அரசனே, மிக்க அழகு வாய்ந்த தணிகாசலமென்னுந் திருப்பதியையுடையவனே,திருப்போரூரென்னுந் திருப்பதியையுடையவனே, அறியாமைமிக்க சிறியேனுடைய பிறவித்துன்பத்தைக்களைய நூபுரமணிந்த தாமரைமலர்போன்ற திருவடியில்வைத்து இனி என்னை யடிமைகொள்வாய்.

இடர்பட்டுழலும் எனக்கு உன்திருவடி தானணிந்திருக்கும் நூபுரத்தை அசைத்தொலித்து நீ வள்ளிநாய்ச்சியாரோடு இன்பமார்ந்து தணிந்திருக்கும் தணிகைமலையைக் காட்டியதால் அவ்வடியின்கண்ணே என்று வாழச்செய்வாயென்பார் சிறியேனிடாைக் களைவான் வனசப்பரிபுரதாளிடைவைத் தினியாளென்றார். (ரு)

நிகழ்குக்கிடநீள் விருதுப்பரமா நிமலக்குலமுருகா
புகல்பற்றிடநீ யலதெற்குளதோ புகழ்மிக்குளகுகவேள்
ககனச்சுரர்மா முனிவர்க்குழுமா நிலர்கைக்கணிசரணு
தகரப்பரியா யயில்வேற்படையாய் சமரப்பதியானே.

(இ-ள்) விளங்காநின்ற கோழிக்கொடியென்னும் பெரியவிருதுடைய இறைவனே, மிக்கபுனிதனாகிய முருகனே, மிக்கபுகழுடைய குகவேளே, விண்ணுலகவாசிகளாகிய தேவர்களும் பெரியமுனிவர் கூட்டங்களும் நிலவுலகினரும் தமதுகைகளுக்கு அணியாகக்கொள்ளுந் திருவடியையுடையவனே, மேடவாகனத்தையுடையவனே, கூரியவேலாயுதத்தையுடையவனே, திருப்போரூரென்னுந் திருப்பதியையுடையவனே,யான்பற்றுக்கோடாகக்கூறும் புகலிடம் நீயல்லாமல் எனக்கு வேறுண்டோ.

இம்மையின்பம் வேண்டியமக்களும் மறுமையின்பம் வேண்டிய சுரரும் வீட்டின்பம்வேண்டிய முனிவரும் தத்தமக்குப் புகலிடமென்று புகழ்ந்து கூறுவாராயின் என்னொருவனுக்கோ நீ புகலிடமாகாய் நானே புகலிடமென்று கூறுதொழிவேன் என்பார் புகல் பற்றிட நீயலதெற்குளதோ என்றார். (௪)

மனதிற்கினிதா நினைவிற்படிநான் மயலுற்றிடருறவோ
உனதற்புததாள் பணியப்பெறவோ யுமைசிற்பரைகுமரா
கனகப்பெருமால் வரைவிற்பரனார் கருதச்செவிபுகல்வோய்
சனனச்சுகவீ டுறவைத்தருள்வோய் சமரப்பதியானே.

(இ - ள்.) சித்ரூபியாகிய உமாதேவியின் குமாரனே, பெரியபொன்மலையை வில்லாகவுடைய சித்ரூபன் தமதுளத்தில் நன்குமதிக்கத் திருச்செவியில் பிரணவத்தையுபதேசித்தவனே, மக்கட்பிறப்பினரை முத்திவீட்டிலிருக்கவைத்தருள்பவனே, திருப்போரூரென்னுந் திருப்பதியையுடையவனே, யான் மனத்திற்கினிதாகிய நினைவின்படியே மயக்கத்தையடைந்து துன்பத்தையடையவோ, உனதற்புதமாகிய திருவடியைவணங்கும்படியான தன்மையையடையவோ நீ கூறாய்.

இடம்பொருளேவலை மேற்கொண்டு அவாவிற்பட்டெழலும் நினைவின்வழியே என்னறிவுபிடர்ப்படவோ அன்றி அந்நினைவுக்கு நினைவாகவிருந்துபகரிக்கும் உன்னருளினடங்கிச்சுகமுறவோ இவ்விரண்டில் நின்னருட்செயலின்றன்மை எது என்பார் நான்மயலுற்றிடருறவோ, தாள்பணியப்பெறவோ என்றார். (௫)

மும்மலக்குழுவோ டியபொய்க்கடமே முடுகித்தொடர்வுறவே
சுமைமிக்குறுவோ னிடருற்றனன்மா சுகம்வைத்தெனையினிதாள்
கமலப்பதனே கனகப்புயனே கருணைத்திருமுகனே
சமரக்கணநா கர்களுக்கிறைவா சமரப்பதியானே.

(இ - ள்.) தாமரைமலர்போன்ற திருவடியையுடையவனே, பொன்மலைபோன்ற திருப்புயங்களையுடையவனே, கருணையொழுகும் திருமுகங்களையுடையவனே, போர்புரியும் சிவகணங்களுக்குத் தலைவனே, திருப்போரூரென்னுந் திருப்பதியையுடையவனே, மும்மலங்களும் பெருக்கெடுத்தோடும்பொய்யாகிய சரீரத்தைமிக்கவினையோடு நீங்காதெடுக்க, (அதனால்) மிக்க சுமையையெடுத்தவன்போலயான் துயரத்தையடைந்தேன், (ஆதலின்) பெரிய சுகத்தைத்தந்து இனியென்னையடிமைகொள்வாய்.

மும்மலங்களில் தூலசரீரத்தினிடத்துச் சடமாகிய மாயாமலமும், தூலத்தையியக்கும் தத்துவங்களிடத்துக் கன்மமலமும் அத்தத்துவங்களை விளக்கும் ஆன்மவறிவின்கண் ஆணவமலமும் நிகழ்வனவாம் ஆதலினும் ஏனைய இருமலங்களையும் உள்ளடக்கிமுன்னாக நிற்கும் மாயாமலத்தின் காரியங்கள் உறங்கு

வதுபோலும் அழிவதும் உறங்கிவிழிப்பதுபோலும் ஆவதும் வருவதைக்காண்டற்கு உடம்பு இலக்காயிருத்தலாலென்பார் மும்மலக்குழுவோடிய பொய்க்கடம் எனவும், இது மும்மலத்தின்காரியமன்று பூதமுதலியவற்றின்காரியமென்று கூறுவார்கூற் றடாதென்பார் பொய்க்கடமே முருகித்தொடர்வுற எனவுங் கூறினார். (சு)

களவிற்களவா னவன்மெச்சுறநீள் கவியைப்பொழிமுகிலே
குளகுத்தகர்மேல் வருசிற்சொருபா குமரப்பெயருடையாய்
இளகத்தயவோர் சிறிதுற்றறியா வெனையுட்கருதுதியோ
தவளக்குழலார் நடைகற்றனமார் சமரப்பதியானே.

(இ - ள்.) களவுக்கெல்லையாயுள்ள கண்ணன்மகிழ்ச்சியடையபெருமையிற்சிறந்தகவிமழையைப்பொழியும் மேகமே, தழையைக்கண்டு மகிழும் மேடவாகனத்தையூர்ந்து வருகின்ற ஞானசொரூபனே, குமாரனென்னுந் திருப்பெயருடையவனே, முல்லைக்கொடிபோன்ற கூந்தலையுடைய மங்கையர் அன்னநடையைப்போலும் நடையைக்கற்றுப் பொருந்தியிருக்கும் திருப்போரூரென்னுந் திருப்பதியையுடையவனே, என்மனமிளக ஒரு சிறியதயவையுட்கொண்டு அறிவிலியாகிய என்னை உனதுதிருவுளத்தில் நினைத்தருளாய்.

ஓர் கால் மார்க்கண்டேயர் சலப்பிரளயத்தில் மிதந்து அப்பிரளயத்தை நீந்திவருகையில் அங்குத்தனியனாய் ஆலிலையில் உழிதருகின்ற திருமாலைக்கண்டு, திருமாலே உலகங்களும் சூரியசந்திரர்களும் ஏனையபொருள்களும் எங்கொழிந்தனவென்றுவினவ, அத்திருமால் அப்பொருள்களெல்லாம் என்னுதரத்தின்க ணிருக்கின்றன வென்று விடைதர, அதனைக்கேட்ட முனிவர் திருமாலே நீ இவ்வாறே முன் பிரமன் வினவியகாலத்தும் கூறிவஞ்சித்திருக்கின்றனை, அல்லதூஉம் உன்னை நம்பிய உன்னடியார்களுக்கும் வஞ்சத்தையே புரிந்திருக்கின்றனை, ஆதலால் நீ கள்ளம் புரிதற்கே எல்லையாயுள்ளாய் என்று கடிந்தொதுக்கிச்சென்றனரென்பது புராணவரலாறாதலால் திருமாலைக் களவிற்களவானவனெனவும், அங்ஙனம் கள்ளத்திற் கெல்லையாயிருந்த அக்கள்வன் தமதடி நினைந்துருகும் உள்ளத்தனாகத் தமதிறைவன் சாரூபத்தைப் பெறத் திருப்பதிகமோதியருளினனாதலால் மெச்சுற நீள்கவியைப்பொழிமுகிலே எனவுங்கூறினார். (எ)

நிலவுச்சடையா னுதவுத்தமனே நிமலைக்கெழின்மகனே
உலகுக்கரசே யமரர்க்கரசே யுபிருக்குயிரெனவே
பலசொற்புனைபா வதனிற்புகழே பகர்தற்கினிதருளாய்
சலசத்திருமா னிலகிக்களிகூர் சமரப்பதியானே.

(இ - ள்.) பிறையையணிந்த சடைமுடியையுடைய இறைவன்றந்தருளிய உத்தமனே, புனிதையாகிய உமாதேவியாருக்கழகிய புத்திரனே, செந்தாமரைமலரில்வசிக்கும் திருமகள்போல்விளங்கிக், கண்டோர்க்கு மிக்ககளிப்பைத்தருந் திருப்போரூரென்னுந் திருப்பதியையுடையவனே, உன்னை உலகுக்கர

சனே எனவும் தேவர்களுக்கரசனே எனவும் உயிர்க்குயிரானவனே எனவு
ம், பலசொற்களால் புனைந்தசெய்யுளில் உன்புகழையே எடுத்துக்கூறுதற்கு
இனியருள் செய்வாய்.

இதனால் ஆன்மாக்கள் மண்விண்ணென்னும் இவ்விரண்டிடத்துமின்றி
யமையாது அநுபவிக்கப்படு பொருள்களாயுள்ளவை உணவின்பேத
மும் ஆடையின்பேதமுமேயாம். அவற்றைத் தருவோர் அவ்விரண்டிடத்து
முள்ள அவ்வவ்வரசரோ தருவரெனக்கருதிப் புகழ்வதனால் அவர் தாஞ் சுதந்
தரமுடையரோ அல்லரென்பது திண்ணம். ஆதலின் தேகத்திற்குரிய
சோறுங் கூறையுமன்றி ஆன்மா வாழ்தற்குரிய சிவலோகத்தையுந் தரவல்
லான் உயிர்க்குயிராயிருக்கும் இறைவனே யாருமாயிருந் துபகரித்துவருப
வனென்றுணர்ந்து அவனையே உலகுக்கரசே அமரர்க்கரசே உயிருக்குயிரே
என்று புகழ்வாயென்று நெஞ்சுக்கறிவுறுத்தியவாறும். (அ)

குவளைக்கணினர் குயநச்சியமா கொடுமைச்சிறியவனேன்
அவலக்கடையே னுனதற்புததா ளடையக்கருதுதியோ
நவசித்திரகே ழொளிசுற்றியமே னடனக்களிமயிலோய்
தவளக்கரியாய் பழனிக்கிரியாய் சமரப்பதியானே.

(இ - ள்.) பலசித்திரங்கள் வாய்ந்தநிறமிக்க ஒளிசூழ்ந்த அந்தரத்தில் நட
னஞ் செய்யவல்லமிக்ககளிப்பினையுடைய மயூரவாகனத்தையுடையவனே,
பிணிமுகமென்னும் யானையையுடையவனே, பழனியென்னும் திருமலையையு
டையவனே, திருப்போரூரென்னுந் திருப்பதியையுடையவனே, குவளைமலர்
போன்ற கண்களையுடைய மங்கையரது தனங்களைவிரும்பும் மிக்கதொடுமை
யையுடைய சிறியவன், வீணரில்மிக்கவீணன் உனதற்புதமாகிய திருவடியை
யடையக் கருதுவாயோ.

'பிணிமுகம்' என்பது முருகற்குரிய யானை என்பதனை 'ஓடாப்பூட்கைப்
பிணிமுகம், வாழ்த்தி, என்ற திருமுருகாற்றுப்படையானுணர்க. (கூ)

பொருநைக்குலவிள் வரையிற்றவமே புரிமெய்க்குறுமுனிபால்
இருளுக்கொருசூ ரியனிற்குருவா யெதிருந்றருள்புரிவோய்
மருளுற்பவவா ரிதியிற்புகுதா வகையெற்குரைபுகலாய்
தருணிச்சிறுவா வருணக்குமரா சமரப்பதியானே.

(இ - ள்.) உமாதேவியின் புத்திரனே, செந்நிறமுடையகுமாரனே, திருப்
போரூரென்னுந் திருப்பதியையுடையவனே, தாமிரபர்ணியென்னும் நதியை
யுடைய சிறப்பினை வாய்ந்தபெரிய பொதியமலையில் தவம்புரியும் உண்மையை
யுடைய அகத்தியமுனிவரிடத்து அந்தகாரத்திற்கு ஒரு சூரியனைப்போல குரு
வடிவங்கொண்டெதிரெழுந்தருளியருள்செய்கின்றவனே, மயக்கத்தோடுங்கூ
டிப் பிறவியென்னும் பெரிய கடலில்இனிப்புகாவண்ணம் எனக்கு ஓர் மொ
ழியைக் கூறாய். (கo)

நாறுங்கழிநெடில்விருத்தமுற்றிற்று.

உ

வேலுமயிலுந்துணை.

## குறுங் கழிநெடில்விருத்தம்.

பான்மதிவேணியர்மாறொழுநாயகர்பரிவுடனருள்யானை
தான்வாவாவெனவங்கைவிரித்தழைசகலகலைப்பிள்ளாய்
தேன்மலிசுவையெனவெங்குநிறைந்துளசிற்சுகவாரியிலே
யான்முழுகுறுமொருகாலமுமுளதுகொலருள்போரூரானே.

(இ - ள்.) பால்போலும் வெள்ளியசந்திரனையணிந்த சடாமுடியையுடையவரும் திருமால் வணங்குமிறைவருமாகிய சிவபெருமான் அன்போடுதந்தருளிய விநாயகக்கடவுள் வாவாவென்று அழகியகையைவிரித்து அழைக்கும் எல்லாக்கலைகளிலும் வல்லவனாகியபுத்திரனே, திருப்போரூரென்னுந் திருப்பதியிலெழுந்தருளியிருக்கின்ற முருகக்கடவுளே, மதுரமிக்கசுவையைப்போல் எவ்விடத்து நிறைந்துள்ள சிற்சுகக்கடலில் யான் மூழ்கியிருக்கும் ஓர் காலமும் உண்டாகுமோ. (க)

மூபுரமெரிகொளவோர்நகைபுரிதருமுக்கணன்மடிமீதே
நூபுரமொலிதரவாடியதுணையடிநோன்மைதருஞ்சிறுவா
மாபுரமூவகைமேலெழுமொளியிடைமன்னுவதென்றடியேன்
ஆர்புரிநூலொளிர்மார்பகவேலவவருள்போரூரானே.

(இ - ள்.) திரிபுரங்களும் தீப்பட ஓர் புன்னகையரும்பிய திரிநேத்திரங்களையுடைய இறைவரது மடித்தலத்தின்மேல் நூபுரமொலிக்கவாடுகின்ற அடியிணையையுடைய பெருமைபொருந்திய சிறுவனே, முப்புரிநூலார்ந்து விளங்கும் திருமார்பையுடையவனே, வேலாயுதமுடையவனே, அருள்நிறைந்த திருப்போரூரின்கணெழுந்தருளியிருக்கின்ற முருகக்கடவுளே, அக்கினி மண்டலம் ஆதித்தமண்டலம் சோமமண்டலம் என்னும் மூன்று மண்டலங்களின்மேல் ஒளிவிட்டு வீசும் அவ்வொளியின் கண் அடியேன் நிலைபெற்றிருப்பதென்நாள். (உ)

நூல்வகிரனவிடைமாதுமைமகிழ்வுறநுவலருமழலைமொழிப்
பால்வழிநாநனிபேசியமூவிருபவளத்திருவாயா
மால்வழிவிலகிநன்னூல்வழிசெலுமுளமருவுவலோசிறியேன்
ஆல்வியினிலைதுயில்வோன்மகிழ்மருமகவருள்போரூரானே.

(இ - ள்.) நூலைவகிர்ந்தாலொத்த இடையையுடைய உமாதேவியார்மகிழ்கூரச் சொல்லுதற்கரிய குதலைச்சொல்லையுடைய பால்வழிகின்ற நாவினால் மிக்கவுளாயாடியபவளம்போன்ற ஆறுதிருவாயையுடையவனே, ஆலிலையின் கண்

என்றுமரிதுயில்மர்ந்தருளும் திருமால் மகிழ்கூரும் மருகனே, அருணிறைந்த திருப்போரூரென்னுந் திருப்பதியிலெழுந்தருளியிருக்கின்ற முருகக்கடவுளே, மயக்கமாகிய புறச்சமய நூல்வழி நின்றும் வேறுபட்டு நன்னெறியைக்காட்டும் மெய்ந்நூலின்வழிச் செல்லுமுள்ளத்தை நாயிற்கடைப்பட்டயான் பொருந்துவனோ. (ங)

தெய்வப்பிடியுந்திருவுறைமானுந்தினமுங்களிகூர
மெய்வைத்திடுபேரருணிழன்மொய்த்தொளிர்மேதகுகற்பகமே
யுய்வற்றிடுகதிபெற்றுனடிக்கணுவப்புறலென்றடியே
னைவர்க்குஞ்சற்காரணன்மருகாவருள்போரூரானே.

(இ - ள்.) தெய்வயானையும் அழகுநிறைந்த வள்ளியம்மையும் நாள்தோறுங்களிகூரச் சிவஞானமமைந்துள்ள பேரருணிழல் செறிந்துவிளங்கும் மேன்மைபொருந்திய கற்பகமே, பாண்டவரைவர்க்கும் நன்மையையளித்த திருமால் மருகனே, அருள்நிறைந்த திருப்போரூரென்னுந் திருப்பதியிலெழுந்தருளியிருக்கின்ற முருகக்கடவுளே, அடியேன் உய்யுநெறியைக் காட்டுங்கதியையடைந்து உனது திருவடிக்கண் ஆனந்தித்துவாழ்தல் எந்நாள். (ச)

வேலுஞ்சேவலும்விரிசிறைமயிலும்வெற்றிசெய்தகரேறு
நாலும்மறைபுகழக்கைக்கொண்டருளுயகதூயவனே
யேலுங்காமக்கடலின்கரைகண்டேறுவதென்றடியேன்
ஆலுங்கோலுந்துயில்வோன்மருகாவருள்போரூரானே.

(இ - ள்.) வேலாயுதமும் சேவற்கொடியும் விரிந்த இறகினையுடைய மயில்வாகனமும் பகைவரை வெற்றிகொள்ளும் மேடவாகனமும் ஆகிய இவைகளை நான்கு வேதங்களும் புகழவுனதுடைமையாகக்கொண்டருளும் இறைவனே மலரகிதனே, ஆலிலைமேலும் கோலின்மேலுந்துயில்கின்ற மாயோன் மருகனே, அருணிறைந்த திருப்போரூரென்னுந் திருப்பதியிலெழுந்தருளியிருக்கின்ற முருகக்கடவுளே, அடியேன் பொருந்தியகாமசாகரத்தின் கரையைக்கண்டேறுவதெந்நாள்.

ஆயர்கள் கோலை நாட்டி அக்கோலினிடத்தே தமது சிரத்தையூன்றியுறங்குதல் அக்குலமரபாதலால் அக்குலத்தில்வளர்ந்த கண்ணனும் அவ்வாறுறங்கினன் என்பார் ஆலிலையேயன்றி கோலுந்துயில்வோன் என்றார். (ரு)

மலையமுனிக்ககமதனின்மறைப்பொருள்வழுவறவைத்தபிரான்
கலைகடமக்குளபொருள்கள்விரித்துரைகசடறுமெய்ப்புலவா
நிலையில்பவக்கடல்சுவறவெனக்கொருநிலைமையளித்திடுவோ
அலையில்சுதைக்கடலெனநிறைசிற்பரவருள்போரூரானே.

(இ - ள்.) அகத்திய முனிவரது அறிவில் வேதப்பொருளைக் குற்றமறவைத்தபெருமானே, வேதமுதலிய நூல்களின் உட்கிடைப்பொருள்களை விதந்

தோதி அவற்றினிடையோழும் ஐயந்திரிபுவிபரீதமென்னுங் குற்றங்களைக்களைந்தருளும் உண்மையாகிய புலவனே, அலையில்லாதபாற்கடலைப்போல எங்கும் நிறைந்த சிற்சொரூபனே, அருள்நிறைந்த திருப்போரூரென்னுந் திருப்பதியிலெழுந்தருளியிருக்கின்ற முருகக்கடவுளே, நிலையில்லனவாகிய பிறவிக்கடல் சுவற அடியேனுக்கு ஒப்பற்ற ஞானத்தில் நிலைபெற்றிருக்கையை யருள்செய்வாயோ (அறியேனென்றபடி). (௬)

பாவருதொடையணிவோருளநாடியபாரிடைநீடுறவே
ஓவறவுதவுறுமாறிருகரமுளவுத்தமசிற்சொருபா
நாவுடன்மனமிவையாலுனைவந்தனைநாயடியேன்செயவே
ஆவருவோன்மகனாகியவேலவவருள்போரூரானே.

(இ - ள்.) செய்யுளால் சமைக்கப்பட்ட மாலையை அணிகின்றவர் தமதுள்ளத்தில் வேண்டிய பொருள்கள் நிலவுலகில் மிக்குவளர நீக்கமின்றி அருள் செய்யும்பன்னிரண்டு திருக்கரங்களையுடைய வுத்தமனே, ஞானசொரூபனே, இடபவாகனத்தையுடைய இறைவன் மகனாகிய வேலவனே, திருப்போரூரென்னுந் திருப்பதியிலெழுந்தருளியிருக்கின்ற முருகக்கடவுளே, நாயிற்கடைப்பட்ட யான் என் நாவோடுமனமுமாகிய இவற்றால் உன்னைவந்தனைசெய்ய அருள்செய்யாய். (௭)

மூதொளிநீடியகேயூரப்பணிமுந்நான்குறுதோளா
சீதளவான்மதிபோலுறுமாறுசிறந்தமுகத்தினனே
பாதகனென்மனனின்னடிமன்னுறுபான்மையினண்ணுறுமோ
ஆதரவேயெனதாருயிர்நாயகவருள்போரூரானே.

(இ - ள்.) மிக்க ஒளிவீசும் கேயூரமணிந்த பன்னிருதிருத்தோள்களையுடையவனே, குளிர்ந்த வெள்ளிய சந்திரன்போலுமமர்ந்துள்ள சிறந்த ஆறுதிருமுகங்களையுடையவனே, எனக்காதரவாயுள்ளவனே, புராணநாதனே, அருணிறைந்த திருப்போரூரென்னுந் திருப்பதியிலெழுந்தருளியிருக்கின்ற முருகக்கடவுளே, பாதகனாகிய என் நெஞ்சம் உனதுதிருவடியில் நிலைபெற்றிருக்குந்தன்மையில் பொருந்தியிருக்குமோ. (௮)

பணிபவருளமுறுமிருளறவொளிதருபரவறிவுளரவியே
தணிமலைமுதலியமலைதொறுநிலவியசசிபதிபணிபதனே
கணிதமில்பிழைசெய்தகொடியனைநிலைபெறுகதிபெறநினைதிகொலோ
அணிதிகழ்திருவுரவயிலவமயிலவவருள்போரூரானே.

(இ - ள்.) திருவடியே தஞ்சமென்று வணங்குகின்ற அவரதுள்ளத்திற் பொருந்திய அஞ்ஞான விருள் நீங்க ஒளிவிடுகின்ற பர அறிவினையுடைய சூரியனே, தணிகாசலமுதலிய குன்றுகள்தோறும் விளங்கும் இந்திரன்வணங்கும் பாதங்களையுடையவனே, அழகுவிளங்கும் திருமார்பின்கண் சார்த்தியரு

ளிப வேலாயுதத்தையுடையவனே, ஊர்ந்தருள மயில்வாகனத்தையுடைய வனே, அருணிறைந்த திருப்போரூரென்னுந் திருப்பதியிலெழுந்தருளியிருக்கின்ற முருகக்கடவுளே, எண்ணத்தொலையாத தீமைகளைப்புரிந்த கொடியேனை நிலைபெற்ற முத்தியையடைய நினைந்தருள்வையோ (அறியேனென்றபடி). ()

மின்றிகழம்புய லேமறைமீது விளங்குறுசெம்பொருளே
என்றுணையேயடி யாரகஞ்ச மிருந்தபெருந்தேனே
நன்குறுபேரறி வேயருளே சுகமேயென நாயடியே
னன்பொடுநின்பததாமரைநாடுறவருள்போரூரானே.

(இ - ள்.) மின்னல் விடுகின்ற அழகிய மேகமே; வேதசிரசில் பொருந்தி விளங்கும் உண்மைப்பொருளே, எனக்குற்றதுணையே, அடியாரிதயகமலத்தின் கண் பொருந்தியிருக்கும் தேன்பெருக்கே, திருப்போரூரென்னுந் திருப்பதியிலெழுந்தருளியிருக்கின்ற முருகக்கடவுளே, கருணையே, சுகசொரூபமே என்று நாயிற்கடைப்பட்டயான் அன்போடுனது பாததாமரையை நாடியிருக்க அருள் செய்யாய்.

சிவஞானம் அஞ்ஞானத்தைக்கடிந்து சிவத்தையளித்தலால் நன்குறு பேரறிவே எனவும், அச்சிவஞானத்தலருளும் அவ்வருளால் பேரின்பமும் விளைதலால் அருளேசுகமே எனவுங் கூறினர். (௧0)

குறுங்கழிநெடில் விருத்தம் முற்றிற்று.

உ

வேலுமயிலுந்துணை.

## குறுங்கழி நெடில் விருத்தம்.

பகலுடனிரவுமிடையினுமுனதுபாதப்பேரொளியிடைப்புகுந்து
சகலகேவலத்தின்றாக்கறவடியேன்றகுசுகத்திருக்குநாளுளதோ
ககனர்தமரசேகதிதருதருவேகாரணக்கருணைவாரிதியே
மிகுகுணக்குன்றேயதிவளப்போரூர்வீறிவாழாறுமாமுகனே.

(இ - ள்.) தேவர்கள் தலைவனே, முத்தியைத்தந்தருளுங் கற்பகமே, யார்க்கும்யாவைக்கும் காரணமாயுள்ள கருணைக்கடலே, குணமிக்கமலையே, முனிவர்வாழும் வளப்பம்பொருந்திய திருப்போரூரில் நிகரின்றியெழுந்தருளியிருக்கும் பெருமைபொருந்திய அறுமுகக்கடவுளே, அடியேன் பகலிரவென்னுமிவ்விருகாலத்தும் உனது திருவருட்பேரொளியின் வசத்தனாயிருந்து சகலகேவலமென்னு மிவ்விரண்டினால் தாக்குதலற்று ஒரு நிகரனவாய பேரானந்தசுகத்திலிருக்கு நாளுமுண்டாமோ. (௧)

உனதுதாயுலகசராசரமெவையுமொருங்குடன்பூத்தவளுந்தை
கனபரிபூரணசுகத்தனின்றமையன்காரியமுதல்வனின்மாமன்
வனசனுதியர்கள்பணிபதனிவர்கள்வளனெலாமுனக்குரித்திதனுல்
வினவுசெல்வத்துட்செல்வனீபோரூர்வீறிவாழாறுமாமுகனே.

(இ - ள்.) திருப்போரூரில் நிகரின்றியெழுந்தருளியிருக்கும் பெருமை பொருந்திய அறுமுகக்கடவுளே, உன்னுடையதாய் உலகத்திலுள்ள சராசரங்களையெல்லாமொருங்கேயீன்றவள், உனது தந்தைபெருமைபொருந்திய எங்கும் நிறைந்தசுகரூபன், உனது தமையன் எத்தொழிற்கும் முன்னிற்பவன், உனது மாமன் இந்திரன்முதலிய தேவர்கள் பணியும் பாதமுடையவன், அற்றுகலின் இவர்களுடைய செல்வங்களெல்லாம் உனக்குரிமையாயுள்ள செல்வங்களே, இக்காரணத்தால் கேட்கப்படுஞ் செல்வங்களுள் செல்வமுடையவன் நீயேயாம்.

எல்லாப்பொருள்களையும் தருபவரும் எல்லாயின்பங்களையுந்தருபவரும் எல்லாக்காரியங்களையும் முன்னின்று முடிப்பவரும் எல்லாத்தேவர்களும் வணங்கப்பெற்றவருமே உனக்குத் தாய் தந்தை தமையன் மாமன் ஆகப்பெற்றிருக்குஞ் செல்வமுடையாய், அப்பெருஞ்செல்வமுடைய உன்னை யான் பெற்றிருக்கின்றேன். அதனுல் என்னினுஞ்செல்வமுடையாரிங்கு யாவருளரொன்று செருக்குற்றவாறும். அல்லதூஉம் உலகில் ஒருவனிடத்து எல்லாப் பொருளையுங்காண்டலரிது. அதனினும் அப்பொருளாலடையும் இன்பம் வாய்க்கப்பெறுதல் அரிது. அதனினும் அவ்வின்பமீதுரமுயலுங்காரியங்கள் முட்டின்றி முடிவாதல் அரிது. அதனினும் அக்காரியங்களால் பிறர் நன்குமதித்து தன்னைப்புகழ்ந்து வணங்கப்பெறுதலரிது. இவையாவும் உன்னை யடையப்பெறின் எளிதிலடையக்கூடுமென்பது பெற்றும். (உ)

அறுவகைத்தாயர்குடமுலைசுரப்பவம்பிகைதிருவுளங்களிப்ப
மறுவறுகங்கைத்தாய்நனிவாழ்த்திவடிவெலாங்குளிர்ந்துபூரிப்ப
நறைகமழ்வனசமாமிகண்களிப்பநடந்தவரொதிர்வருகுருந்தே
விறலுறுநினைவந்தடைந்தனன்போரூர்வீறிவாழாறுமாமுகனே.

(இ - ள்) திருப்போரூரில் நிகரின்றி யெழுந்தருளியிருக்கும் பெருமை பொருந்திய அறுமுகக்கடவுளே, கார்த்திகைமுதலிய அறுவகைத்தாயர்க்கும் குடம்போன்ற தனங்களில் பால்பெருகவும், உமாதேவியார் திருவுள்ளத்திலானந்தமரும்பவும், குற்றமற்ற கங்காதேவி மிகவும்வாழ்த்தித் தன் னங்கமெல்லாங்குளிர்ச்சியடைந்து பூரிக்கவும், நறுமணங்கமழும் செந்தாமரைமலரில் வசிக்கும் இலக்குமியின் கண்கள்களிக்கவும், அவர்களுக்கெதிரே நடந்துவருகின்ற குழவியே, இத்தன்மையாயபெருமைவாய்ந்த உன்னையேயடைக்கலமென்று வந்தடைந்தேன்.

இறைவனது திருமேனியையும் சடையையுமே இடமாகக்கொண்டுவாழும் நம்மிருவரையும் அகன்றோடவும் வற்றவுஞ்செய்த இவ்வழல்வண்ணம் பண்டுபோல் நானிறைவன்வாமபாகத்தி லமர்ந்துவரவும் நீ இங்குவெள்ளப்பெருக்கோடு விளங்கவும் விளையாடல்புரிந்து இப்பொழுது நாமகங்குழைந்தங்கையிலெடுத்து அகங்குளிர மார்போடணைக்க இளங்குழவியாய்த் தளர்நடையோடுங்கூடி வருகின்றதேயென்று மகிழ்ந்தனளென்பார் அம்பிகைதிருவுளங்களிப்பகங்கைதாய் வடிவெலாங்குளிர்ந்து பூரிப்பஎன்றார். இதனைமுன்னர்க்கூறினும் ஆண்டுக்காண்க. அல்லதூஉம் உமாதேவி நடக்கும்பருவத்துவந்து அகமகிழ்ந்தவராதலால் வேறுவிசேடணங்கூறாது அம்பிகைதிருவுளங்களிப்ப எனவும், கங்காதேவி மிகவும்மகிழ வற்றிய நீரைப்பெருக்கியும் அவ்வெள்ளத்திலேயே தானமர்ந்து அரியதிருவிளையாடலைச்செய்தும் அத்தேவியின் மனமேயன்றி ஆக்கையையுங்குளிரச்செய்தனனாதலால் மருவருகங்கைத்தாய் நனிவாழ்த்தி வடிவெலாங்குளிர்ந்து எனவிசேடணந்தந்து கூறினானெனவுங் கொள்ளலுமொன்று. இலக்குமி நம்முடைய புத்திரரிருவரும் சிரமற்றவனும் அங்கமற்றவனுமாயினர் அதனால்குமாரன்வளர்வானாயின் நமக்குஅக்குறை நீங்க மருகனாய்வருவானல்லனோ என்றுமனமகிழ்ந்தனள் என்பார் வனசமாமிகண்களிப்பஎன்றார். அல்லதூஉம் உருவத்தினழகைக்கண்டுமகிழ்தல் மாமியாதலால் மாமிகண்களிப்பக்கூறினாரெனக்கொள்ளலுமொன்று.

இதனான்நன்னடையைக்கண்டு மகிழத்தக்கவள் ஈன்றதாயெனவும், விளையாடலைக்கண்டுமகிழத்தக்கவள் வளர்க்குந்தாயெனவும், மகளுக்குஅழகிற்சிறந்த மணவாளன் வாய்ந்தனனேஎன்று அழகினைக்கண்டு மகிழத்தக்கவள் மாமியெனவுங்கொள்ளக்கிடந்தன. (௬)

மண்ணவர்பணியவிம்மையிலின்பும்வானவர்பணிந்திடமறுமை
நண்ணுறுமின்புமுனிவரரடியர்நனிதொழப்பரகதியின்பும்
பண்ணுறுமுனதுபாதமீதருமிப்பதந்தொழுவாரிடர்கடந்தோர்
விண்ணகர்வளம்போனண்ணுறுபோரூர்வீறிவாழாறுமாமுகனே.

(இ - ள்.) விண்ணுலகிலுள்ள செல்வம்போல மிக்கசெல்வம் பொருந்திய திருப்போரூரில் நிகரின்றியெழுந்தருளியிருக்கும் பெருமைபொருந்திய அறுமுகக்கடவுளே, மண்ணுலகிலுள்ளார் உன்சரணங்களைப்பணிய இவ்வுலகிலடையுமின்பத்தையும், விண்ணுலகிலுள்ளார் பணிய மண்ணுலகிலுள்ளார்க்கு மறுமையின்பமாகிய அவ்வுலகவின்பத்தையும், ஐம்பொறியிகந்த முனிவர்களும் அன்புகந்த அடியாரும் மாறாதுபணிய முத்தியின்பத்தையும் உனது திருவடிகளே அவ்வவ்வவர்க்குத்தந்தருளும், இத்தன்மையவாய உனது திருவடியை வணங்குகின்றவர்களே துன்பத்தைக்கடந்தோராவர்.

இம்மையின்பம் வேண்டிச்செல்வமுடையார் புறங்கடை காத்தலும் மறுமையின்பம்வேண்டிச் சிற்றஞ்சிறுதேவர்களைப்போற்றலும் முத்தியின்பம் வேண்டி ஐம்புலவாசைவெறுத்தலும்வேண்டா. இம்மூவகையின்பங்களையும் இறைவனது பாதமே தரவல்லுமென்று பணியப்பெறுவாராயின் அப்பாதங்களேதரவல்லுமென்பது பெற்றும். (ச)

உரையுணர்விறந்தகரையறுமின்பமோரரைக்கடிகைமிக்குயர்ந்த
வருளொடுங்காட்டிமறைத்தனைநாயேற்கச்சுகமென்றளித்தருள்வாய்
சுரர்களுக்கிடர்செய்சூர்ப்பகைகடிந்துசுடர்விடுசோதிவேற்கரசே
விரகனேகுகனேமெய்யனேபோரூர்வீறிவாழாறுமாமுகனே.

(இ - ள்.) தேவர்களுக்குத் துன்பஞ்செய்த சூரபன்மன்பகையைக்கடிந்து ஒளிவிடும் சோதிவடிவாகிய வேலாயுதத்திற்கு நாயகனே, வள்ளிநாய்ச்சியார்பால் தணியாதவிருப்பமுடையானே, அன்பரிதய குகையில்வாழ்கின்றவனே, நித்தியப்பொருளாயுள்ளவனே, திருப்போரூரில் நிகரின்றியெழுந்தருளியிருக்கும் பெருமையமைந்த அறுமுகக்கடவுளே, வாக்குமனாதீதமாகிய அளவில்பேரின்பத்தை யொரு அரைநாழிகை மிகச்சிறந்த கருணையோடும் நாயிற்கடைப்பட்ட எனக்குக்காட்டியொளித்தனை, அப்பேரானந்தம் மீட்டுமென்று கிருபைபுரிவாய்.

ஓர்கணத்தில்தோன்றியழியுமின்பம் சிற்றின்பம். எல்லையுட்படாது ஓங்குவதுபேரின்பம். அங்ஙனமாக சிற்றின்பம்போலும் என்மாட்டொரரைக்கடிகை அப்பேரின்பந்தோன்றி மறைதல்மிகவியப்பு அப்பேரின்பந்தருவானாகிய நீஇவ்வாறுசெய்தலுமழகன்றென்று கூறியவாறுமாம். (ரு)

ஓதியுமுணர்ந்தும்பிறர்தமக்குணர்த்துமுளமுதற்றானடங்காத
பேதையிற்பேதையாரிலயொன்றபெரியவர்சொற்கிலக்கானேன்
கோதறுமாறுகொடிமுடிப்பவளக்குன்றமொத்திலகுகட்டழகா
வேதகோடங்கண்முழங்கியபோரூர்வீறிவாழாறுமாமுகனே.

(இ - ள்.) குற்றமற்ற ஆறுசிகரங்களையுடைய பவளமலைபோன்று விளங்குங்கட்டழகனே, வேதமோதுமொலிகள் மாறாது முழங்குந் திருப்போரூரில் நிகரின்றியெழுந்தருளியிருக்கும் பெருமையமைந்த அறுமுகக்கடவுளே, மனமொழிமெய்களடங்குதற்கேதுவாகிய ஞானநூல்களைக் கற்றும் அதன்பயனையுணர்ந்தும் பிறர்க்கு அவ்வடக்கம் வருமாறு நன்குணர்த்தியும், தான் உள்ள முதலிய முக்கரணங்கள் அடங்காத அறிவிலிபோல் ஓரறிவிலி இல்லை என்று பெரியோர் பணித்தமொழிக்குக் குறியிடமானேன் (யானென்றபடி)

மனமுதலிய திரிகரணங்கள் அடங்கினாலன்றி ஞானந்தோன்றாதாகலான் அக்கரணங்களையடக்கவல்ல ஞானநூலைக்கற்றலும், ஐயவுணர்வுக்கிடமின்றி அதனுண்மைப்பொருளை யுணர்தலும், தானுணர்ந்தவாறேபிறரது அஞ்ஞான

மகற்றியுணர்த்துதலும் ஒருவன் ஒருங்கேயடைதல் தவத்தாலன்றியாகா. அத்தவமுடையேனாயினும் உன்னருள்பெறும் முன்னைத்தவமிலியாயினேன். அதனான் யான்பேதையிற் பேதை என்பார் பெரியவர் சொற்கிலக்கானேனெனத்திருக்குறளையே காட்டாகக்கூறினர்.

இதனான்கரணவடக்கமே தற்போதவிழப்பெனவும் அவ்விழப்பு அருளாலாமெனவுங்கொண்டு ஞானநூலைத் திருவருளைமுன்னிட்டுணர்வாராயின் பயன்பெறுவர் அருளன்றியுணர்வோர் தானடங்கப்பெருது அடங்காநிரயத்தில் அடங்கப்பெறுவர் என்பதாம். (சு)

அரணியைக்கடைவோன்கனலெழுசமயத்தங்கையேமாறிவிட்டாங்
புரணபேரின்பமெழுதருவாயிற்பொருந்துநின்பதமறந்திளைத்தேன்[கு
மரணவுற்பவத்தின்மறுகுறுதெனைநின்மலர்ப்பதஞ்சேர்த்திடநினையா
விரிகதிரொறிக்கும்வேலனேபோரூர்வீறிவாழாறுமாமுகனே. [ய்

(இ - ள்.) விரிந்தகிரணங்களை வீசும்வேலாயுதனே, திருப்போரூரில் நிகரின்றி எழுந்தருளியிருக்கும்பெருமையமைந்த முருகக்கடவுளே, அரணியோடு அரணியைக் கடைவோன் தீயெழுகின்றசமயத்தில் அங்கையை மாறிவிட்டதுபோல், என்னுள்நிறைந்த சிவானந்தந்தோன்றும் அமையத்தில் பொருந்திய உனதுதிருவடியைமறந்து சோர்வடைந்தேன், அதனால் பிறப்பிறப்பிலுழலாது என்னைஉனது திருவடித்தாமரையில் சேர்க்க நினைத்தருளாய்.

பரதந்திரனாகிய ஆன்மா இந்திரியத்தின்வழி செல்லுங்கால் தான்தோன்றுதல்போல் இந்திரியச் சேட்டையொழிந்தவழி அடைவதாகிய திருவருட்டெரிசனத்து; தானொருமுதலாகத்தோன்றுது அவ்வருளேயாயிருத்தல் வழக்கென்பார் புரணபேரின்பமெழுதருவாயிற் பொருந்து நின்பதமறந்திளைத்தேன் எனவும், அவ்வின்பநிட்டையில் நிறகப்பெற்றோர் அந்நிட்டை ஓர்கால் நீங்கப்பெறின் அந்நிட்டையே கூட் ஞானசாதனங்களையே செய்யச்செய்தலேயன்றிக் கரணவிகற்பங்களைச் செய்யச்செய்தல், உனதியல்பன்றென்பார் மரணவுற்பவத்தின் மறுகுறு து எனைநின்மலர்ப்பதஞ் சேர்த்திடநினையாய் எனவுங்கூறினர்.

இதனான் இந்திரியங்கள்தோன்றுமிடத்துப் புரண வின்பந்தோன்றுதெனவும், அப்புரணவின்பந்தோன்றுமிடத்து ஆன்மபோதந்தோன்றுதெனவும், அதுதோன்றுவிடத்துச் சனனமரணம்வாராதெனவும், அவைவாராதொழிந்தவிடத்து ஆன்மா மலர்ப்பதஞ்சேருமெனவுங் கொள்ளற்பாற்று. (எ)

கடைபடுமுலகப்பொய்யினைமெய்யாக்கருதினேன்கானனீரொன்று
மடமையாற்கருதுமவனெனவினியுன்மலர்ப்பதச்சுகத்தையென்ற
[டைவேன்
தடவரைக்குறவர்குலத்தெழுவல்லிசாதகக்கொடிபடர்தருவே
விடலெழுதோகைப்பாகனேபோரூர்வீறிவாழாறுமாமுகனே.

(இ-ள்.) பெரியமலைகளில்வசிக்கும் குறவர்குலத்தில்வந்த வள்ளிநாச்சியாராகிய வல்லிசாதகக்கொடி படர்ந்தகற்பகத்தருவே, வன்மைமிக்க மயில்வாகனத்தை யுடையவனே, திருப்போரூரிலெழுந்தருளியிருக்கும் பெருமையமைந்த அறுமுகக்கடவுளே, கானலை நீரென்று அறிவின்மையாற்கருதும் ஓரறிவிலியைப்போல கீழ்மையாகிய உலகமென்னும்பொய்யை மெய்மையாகவெண்ணினேன் (ஆதலால்) இனிஉனதுதிருவடியின்பத்தை யென்றாளடைவேன்.

கானலைநீரென்று மடமையாற்கருதும் அவனென உலகப்பொய்யினை மெய்யாகக்கருதினேன் என்றதில் கானலினிடத்தில் நீர் எவ்வாறு இன்மைப்பொருளோ அதுபோலும் உலகம்இல்பொருளேயன்றி உள்பொருளல்லவென்றுகொள்ளற்பாற்றெனவும், அன்றி உள்பொருளெனக்கொள்ளின் மடமையாமெனவும் கூறினானெனக்கூறின் அற்றன்று. ஈண்டுலகென்றது காரியப்பிரசத்தை; அது அழிந்து ஆதலுடையதாம். ஆகுதலின்று, அழிதலொன்றேயுடையதெனின் அவ்வுரை உள்பொருளிடத்தேவருமன்றி இல்பொருளிடத்துவாரா அற்றாகலின் காரியமாகிய பிரபஞ்சத்திற்குக்காரணம் மாயையெனவும், அம்மாயையினின்றுங்காரியமாகிய உலகம் தோன்றியழியுந் தன்மையுடையதெனவுங்கொண்டு அழியுந் தன்மையை யுடையஇவற்றில் ஆன்மா இன்பமடைய விரும்பல் கானலை நீரென்றுவேட்டதுபோலுமாம் என்பதே அதன்பொருள். அற்றாகலின் அவ்வின்பத்தையொருவி யின்பந்தருவது உன் திருவருளே யென்றுணர்ந்தேனென்பார் இனியுன்மலர்ப்பதச்சுகத்தை யென்றடைவேனென்றார்.

இதனால் கானலை நீரென்றவுவமை உலகமில்லையெனக்கோடற்கன்று. உலகத்தில் இன்பமுளதெனக்கருதுதலை யொழித்தற்காமென்றுகொள்ளக் கிடந்தது. (அ)

எங்குமென்சொரூபசச்சிதானந்தவிலகொளியிருந்திடுமதனுள்
தங்குபல்பொருள்கள்கானலிற்சலம்போற்றூமுறும்வேறிலையென்றே
செம்பாங்கருட்குருவாய்வந்துநீயளித்தும்புலையனேன்மயங்குறுகின்றேன்
வெங்கதிர்விலக்குந்தண்டலைப்போரூர்வீறிவாழாறுமாமுகனே.

(இ - ள்.) சூரியகிரணம் தன்னுட்புகாவகைவிலக்கும் சோலைசூழ்ந்த திருப்போரூரிலெழுந்தருளியிருக்கும் பெருமையமைந்த அறுமுகக்கடவுளே, எவ்விடத்தும் எனதுசச்சிதானந்தசொரூபப்பிரகாசமே நிலைபெற்றிருக்கும் அதனுள்தங்கிய பலவகைப்பொருள்களும் கானலிற்றோன்றும்நீர்போலத் தோன்றிவிளங்கும், இதுவன்றி வேறுபொருளில்லையென்று நீ அருள்மிக்கருமூர்த்தியாயெழுந்தருளிவந் துபதேசித்தும் நீசனாகியயான் அந்நிலைமறந்து மயக்கத்தையடைகின்றேன்.

பிரமம் சச்சிதானந்தசொரூபமென்றும், அப்பிரமம்யானென்றும் பிரபஞ்சமெனக்கூறுமவை கானற்சலம்போல்பிராந்தியென்றுங் கோடலே யுண்மை.

இதுவன்றிப் பிரமம்வேறெனவும் தான்வேறெனவும் பிரபஞ்சம்வேறெனவுங் கூறும்பொருள் பொருளன்றென்றொழிப்பார் வேறிலையென்றேயெனக்கூறினு ரெனக்கூறுவர். அஃதேல் நீபொங்கருட்குருவாய்வந்துஎன்று அறுமுகனைவே றுகூறவும் புலையனேன்என்றுதன்னைவேறுகூறவும் மயக்கும்பொருள் இவ்விர ண்டின் வேறென்றுணர்த்த மயங்குகின்றேனென்று மயக்கத்தைவேறுகூறவு ம் வழக்கில்லை, மற்றென்னையோவெனில் அருட்குருஎன்றது பிரமமென்றும் புலையனென்றது பசுவென்றும், மயங்குறுகின்றேனென்றது பாசத்தாலென் றுங் கொள்ளக்கிடந்தன. ஆகவே சச்சிதானந்தசொரூபம் பிரமமே என்றும் அப்பிரமம் அறுமுகனாகியதானதலால் எங்குமென்சச்சிதானந்த மென்றும், அது ஒளிவடிவாய்ப்பிரகாசிப்பதாதலால் இலகொளியிருந்திடுமென்றும், அச்சு யம் பிரகாசத்தில் அப்பிரகாசமா யிருப்பது பிரபஞ்சமாதலால் அதனுட்டங்கு பல் பொருள்களென்றும், அசத்தாகிய பிரபஞ்சம் மயக்குதலியல்பாதலால் கானலிற் சலம்போலென்றும், அதுஎன்றுமுளதாதலால் தாமுறுமென்றும் பொருள் கொள்ளுதலே சித்தாந்தமாம்.

இதனுன் சச்சிதானந்தத்தன்மையை யுடையது பிரமமே, ஆன்மாவன் றென்றும், அப்பிரமம் ஒளிவடிவாதலால் அசத்தாகியபிரபஞ்சம் அப்பிரகாச மாயிருப்பதென்றும், சிவசத்தைவேறாகவும் அசத்தைவேறாகவும் உபதேசித் தனர்; இவ்வுண்மையுபதேசவழியில் நிற்கப்பெறாது அப்பிரகாசத்திற்கும் பிரகாசத்திற்கும்வேறாகிய என்னை அச்சச்சிதானந்தப்பொருளேயென்றெண் ணிக் கானற்சலம்போல்நிலையில்லாத பிரபஞ்சவாழ்வில் மயங்குகின்றேன், அதனால் அம்மயக்கத்தையொழித்து அசத்தையொருவிச் சிவசத்தாகவே நிற் கச்செய்வாயென்றுவேண்டியவாறாம். (க)

மலவிருடுரக்குஞானசூரியனாய்வந்தநின்மகிமையையறியாப்
புலையரிற்கடையேனெனினுமென்பிழையைப்பொறுப்பதுன்பொன்ன
[ருட்கியல்பாம்
கலைமுகம்புகழுங்களிற்றுறுதுணைவாகடவுளியானைக்குநற்கணவா
விலகிவில்லுமிழும்வேலவாபோரூர்வீறிவாழாறுமாமுகனே.

(இ - ள்.) வேதமுதலியகலைகள் முன்னறொடுத்துப்புகழும் விநாயகக்கட வுளுக்குற்றதுணைவனே, தெய்வயானைக்கு நல்லகணவனே, விட்டுவிட்டொளி பரப்பும் வேலாயுதனே, திருப்போரூரில் நிகரின்றியெழுந்தருளி யிருக்கின்ற பெருமையமைந்த அறுமுகக்கடவுளே, அஞ்ஞான விருளையோட்டும் ஞான பாஸ்கரனாயெழுந்தருளி வந்த உனது மகிமையைத் தெளிந்துணராதகடைப் பட்ட புலையரிற்புலையேனாயினும் எனதுகுற்றங்களைப்பொறுத்தருள்வது உ னது அழகிய திருவருளுக்கியல்பாகும்.

ஆன்மா புறத்திலேகாணப்பட்ட சூரியன் புவனமுற்று மறைத்திருந்த பூத விருளை யொழிக்க, அவ்வளவே ஒளியிழந்தகண் விளங்கப்பெற்று அவ்விளக்

கத்தால் தொழிலிழந்துநின்ற கருவிகரணங்கள்தொழிற்பட அத்தொழிற்பாட்டால் விடயபோகங்களையனுபவிக்கும். இறைவன் புறவிருளொழிக்கும் அருணன் போலாது ஞானசூரியனுய்வந்து தேகேந்திரியப் பிராணந்தக்கரணதர் மங்களால் நானெனுமுதலாகத்தோன்றாது அவற்றினுள்ளீடா யப்பிரகாசனு யிருந்தஎன்னை முன்னர்கூறும் சிரவணஞானத்தால் பிரகாசப்படுத்தியும் தத்துவதர்மங்களுக்குள்ளீடாயிருந்த என்னில் அத்தத்துவங்களடங்கி நிற்கச் செய்தும் முதலாகத்தோன்றாத என்னை முதலாகத் தோன்றியிருக்கவைத்து சிவபோகத்தையனுபவிக்கவும் செய்தமையே, மகிமை யென்பார் மலவிருடறக்கு ஞானசூரியனுய் வந்தநின்மகிமையை யெனவும், ஞானசூரியனுகிய நீ உனது ஞானத்தாலிவ்வாறு எனக்குபகரித்திருக்க அதனையுணராது எனது ஆன்மஞானத்தினல் நியதிவாக்கியங்களால் தேகமுதலியவற்றை இறவிமுன் இமம்போல நியதிசெய்து கூடஸ்தப்பிரம ஐக்கியத்தையடைந்தே மென்று கூறும் புலையர் ஞானத்துட்பட்டேன் ஆதலால் என்னிலுங்கடைப்பட்டாரில்லை என்பார் உன்மகிமையை யறியாப்புலையரிற் கடையேனெனவும், கடையனுகியயான் நீகுற்றங்களுக்குத்தக்கவாறு கூறியிருக்கும் பரிகாரவியலுள் இக்குற்றத்திற்குப்பரிகாரந்தேடினேன் அதற்குப்பரிகாரித்தை யோரிடத்துங் காண்கிலேன் காணுது உனது திருவருளைநாடினேன் அற்றாகலின்இனி அவ் வஞ்ஞானபோதத்துள் என்னைச்செலுத்தாது சிவஞானத்துவைத்துக்காத்தல் உனக் கியல்பென்பார் எண்பிழையைப் பொறுப்ப துன்பொன்னருட்கியல்பாமெனவுங்கூறினர்.

இதனன் ஆன்மா விடய வின்பங்களையனுபவிக்க ஊனக்கண்ணை மறைத்த புறவிருளை யொழித்து அவ்வின்பத்தை யூட்டியதுணைவன் புறத்தேகாணப்பட்ட சூரியனெனவும், முத்தியின்பத்தையனுபவிக்க ஞானக்கண்ணைமறைத்த அகவிருளையொழித்து அவ்வின்பத்தை யூட்டியதுணைவன் அகத்தேவிளங்குஞ் ஞானசூரியனெனவுங் கொண்டு புறவிருளை யொழிக்குமிச்சூரியன் ஆன்மாவிற்குப்புறம்பாகிய தேகேந்திரியாதிகளை முன்னர்விளக்கிப் பின் ஆன்மாவை விளக்கின னெனவும், அகவிருளையொழிக்கும் ஞானசூரியன் முன்னரான்மாவை விளக்கிப் பின் தேகேந்திரியாதிகளை விளக்கினனெனவும் வேற்றுமை யறியக்கிடந்தன.

மலவிருள்துரக்கும் ஞானசூரியனென்றதனல் புறவிருளகற்றுஞ் சூரியனை உவமையாகக்கொண்டு பொருள்கூறினும். (௧௦)

திருங்கழி நேடில் விருந்தம் முற்றிற்று.

வேலுமயிலுந்துணை.

## குறுங்கழி நெடில் விருத்தம்.

அருட்குழைதழைத்தைங்கரமலர்மலர்ந்தோ
ராடகப்பொருப்பிடையுரிஞ்சி
தெருட்டருகோட்டுக்கற்பகத்திளவ
லாகியமாதவத்தரசே
மருட்டிரைப்பிறவிவாரிதிழூழ்கா
வகையெனக்காத்தளித்தருளா
யுருட்டிகழிரதத்தெருப்புணைபோரூ
ருத்தமாசத்திவேலவனே.

(இ - ள்.) அருளாகிய தளிர்தழைத்து ஐங்கரமாகிய மலர்மலர்ந்து, ஒரு பொன்மலையை உராய்ந்து தெருளைவிளைக்கும் கோட்டினையுடைய கற்பகத்துக்கிளவலாகிய பெரியதபோநாயகமே, பொற்கட்டால் விளங்கும் உருளையையுடைய இரதங்களோடும் அழகிய வீதிகளையுடைய திருப்போரூரிலெழுந்தருளியிருக்கு முத்தமனே, சத்திவேலுடையானே, மயக்கமாகிய அலைகளையுடைய பிறவிக்கடலிலமிழாவண்ணம் அடியேனைக்காத்து இரக்ஷித்தருளாய்.

விநாயகப்பிரானை கற்பகத்தருவாக வுருவகஞ்செய்தமையான் அருளைத் தளிராகவும், கரங்களை மலராகவும், கோட்டினைக் கொம்பாகவும், கூறினார். ஓராடகப்பொருப்பிடையுரிஞ்சி என்றதனான் பொன்மலைபோன்ற சிவபெருமானைத் தமது திருக்கரத்தால் தழுவுந் தொழிலுடையவனெனவும், தெருட்டருகோட்டு என்றனுன் அடியாரது பாசங்களைக்களைந்து மெய்யறிவினை விளக்குகின்றவனெனவுங் கொள்க.

மகாசங்காரக்கடவுளாகிய முதற்கடவுளுக்கு மகாசத்தியாகிய உமாதேவியார் வேலளித்தஞான்று சூரபன்மனைவெல்லக்கற்பித்தலுடனே சத்தியென்னுந்தமது பேரையுந் தந்தளித்ததாதலால் சத்திவேலவனே என்றார். இதனை "உமைக்கணின்று தற்பெயர்புணர்த்திக் கற்பினொடுகொடுத்த-வமையாவென்றியரத்த நெடுவேலோய்" என்றதனுலுணர்க. (க)

நவமணிகுயின்றபருப்பதமனைய
நகைமயிற்பரியிவர்ந்துளத்துக்
கவலைகடவிர்த்திங்கடியரைக்காக்குங்
கடவுளேகடவுளர்கோவே
சிவமெனவெவையுமருட்குருவாகிச்
செப்பியவாறெனக்குளத்தும்
உவமையிலதனைக்காட்டுதிபோரூ
ருத்தமாசத்திவேலவனே.

(இ - ள்.) திருப்போரூரிலெழுந்தருளியிருக்கு முத்தமனே, சத்திவேலுடையானே, நவரத்தினங்களிழைத்த மலையையொத்த விளக்கமாகிய மயிலிலெழுந்தருளி யடியாரது* உள்ளத்திற்குடிகொண்டகவலைகளை யொழித்து இங்கடியனைக்காத்தருளும் தேவனே தேவர்கள்தலைவனே, யாவுஞ்சிவமே யென்று அருட்குருவடிவாய்வந்து எனக்குபதேசித்தபடியே ஒப்புவமையில்லாத அப்பொருளை யுள்ளத்தின்கண்ணுங் காட்டுவாய்.

எனக்கு எவையும்சிவமென்று கூறியதை யென்னுள்ளத்தில் அமையக் காட்டு என்றதனால் எவையும் என்னும்பதத்திற்குப் பொருள் பிரபஞ்சம் ஆகலாற் பிரபஞ்சம் சிவமாதல் ஒருவாற்றானுஞ்செல்லாதென்னுந்துணிவுகொண்டு உள்ளத்திலமையக் காட்டென்றார். இதுமாணவகன்கூற்று. அறியப்படாததே சிவமெனவும் அறியப்படுவதாயுள்ளதே பசுபாசங்களெனவும் ஆங்காங்குவிளக்கியிருக்கின்றோம். அற்றாகலின் ஈண்டு சிவமேஎவையும் என்றதற்குப்பொருள் அக்கரங்களையியக்குதற் பொருட்டு அகரம் அவ்வெழுத்துகளோடு நிற்குமது போலசேதனுசேதனப்பிரபஞ்சங்களை யியக்குதற்பொருட்டுச் சிவம் எவையுமாயுள்ளது எனக்கொள்க. சிவம்எவையுமென்பதேசுருதி அச்சுருதியில்எவையும் என்பதை சுட்டியறியப்படும் பிரபஞ்சமெனவும், சிவமென்பதை சுட்டியறியப்படாத பிரமமெனவுமறிவதேயுத்தி. அவ்வுத்தியால் தனக்குள்ளீடாயிருந்தசிவம் குருவாகித் தனது பக்குவநோக்கியறிவிக்கத் தானறிந்துவருவதேயனுபவம், இவ்வுண்மை விளங்கியதேனும் பிறர்கூறுங்கூற்றால் என்னுள்ளம் மாறுபடுதலால் அங்ஙனம்மாறுபடாதிருக்க அருள்புரிவா யென்பார் உள்ளத்து அதனைக்காட்டுதி என்றார்.

பிறர்கூறுங்கூற்றாவது சிவமேயுள்ளது பிரபஞ்சமில்லை யென்பதே சுருதிவாக்கியமெனவும், விவகாரத்தில் பிரபஞ்சம் திரிசியமாகத்தோன்றுமெனவும், பிரமம் அவ்வாறுதோன்றாதெனவும், பாரமார்த்தத்தில் பிரபஞ்சம் அதிரிசியமாமெனவும், இவ்வாறறிவதேயுத்தியெனவும்,இவ்வுத்தியால் பாரமார்த்தத்தில் இல்லையாகும் பிரபஞ்சம்திரிகாலத்தும் இல்லையாகக்காண்டலே அனுபவமெனவும் கூறுதலாம்.

அஃதேல் சிவமென்றுதனித்துக் கூறுவதேசாலும். அங்ஙனமின்றிச்சிவமெனவெவையுமென்று எவையுமென்பதனோடு சிவத்தைக்கூட்டியுரைத்தலின் ஒருபொருளென்றற்கிடமில்லை, அதனால்சிவமென்பதொருபொருளாகவும் எவையுமென்ப தொரு பொருளாகவுங் கொள்ளக்கிடந்தன. (உ)

நல்லவரொனினீபுரியருட்குள்ள
 நைந்துநெக்குருகுவரன்பாய்ப்
புல்லியேனதனின்மகிமையையறியாப்
 புலையனேனுய்யுநாளுளதோ

வெல்லுமும்மதத்துவாரணமுரித்து
வீட்டியமுக்கணன்புதல்வா
ஒல்லைவாந்தகரப்பரியனேபோரு
ருத்தமாசத்திவேலனே.

(இ - ள்.) யாவரையும் வெற்றிகொள்ளும் மும்மதத்தைப்பொழிகின்ற யானையினைக்கொன்று அதன்றோலையுரித்துடுத்துக்கொண்ட இறைவனது குமாரனே, விரைந்து தாவிச்செல்லும் மேடவாகனத்தையுடையவனே, திருப்போரூரிலெழுந்தருளியிருக்கு முத்தமனே, சத்திவேலுடையானே, நல்லவரோவெனின் நீசெய்யுமருளுக்கு அன்புடையராய் உள்ளம்நெக்குவிட்டு என்புருகுவர்; அதனால்யான் சிறியேனாகலின் அவ்வருளின் மகிமையையறியாத புலையேனாயினே னுய்யு நாளுமுண்டோ.

இதனான் அன்பின் றன்மையுள்ளம் நைதலும் என்புநெக்குவிடுதலும் கண்ணீர் பெருகுதலுமே என்று கொள்ளக்கிடந்தன. "உள்ளந்தாணின் றுச்சியளவு நெஞ்சாயுருகாதா லுடம்பெல்லாங்கண்ணாவண்ணா - வெள்ளந்தான்பாயாதா னெஞ்சங்கல்லாங் கண்ணிணையுமர மாந்தீவினையினேற்கே" என்று என்றுந் தீவினையறியா வருளாளர் தீவினையார்கூற் றிதென்று கூறிய கூற்றிற்கு யானிலக்காயினேனென்பார் புலையனேனுய்யுநாளுளதோ என்றார். (க)

காமவேள்கணையாலுளங்கலங்காதுன்
கனைகழற்கமலத்தாளிருந்த
சேமவானந்தவாரிதிபடிந்து
சிறியனேன்வாழுநாளுளதோ
பூமணம்வீசுங்கூந்தலங்கவுரி
பொருப்பனதனத்தமுதுண்டோய்
ஓமெனும்பதத்தினருத்தமேபோரு
ருத்தமாசத்திவேலவனே.

(இ-ள்.) இயற்கையாகவே மலர்மணங்கமழும் அளகத்தையுடைய அழகிய உமாதேவியாரது மலையையொத்த திருத்தனத்திற்பெருகிய அமிர்தத்தையுண்டவனே, ஓமென்னும்பிரணவத்தின் அருத்தமாயுள்ளவனே, திருப்போரூரிலெழுந்தருளியிருக்குமுத்தமனே, சத்திவேலுடையானே, மன்மதன்கணையினால் என்மனங்கலங்குறா துனது ஒலிக்கும்வீரகண்டையணிந்த தாமரைமலர் போன்ற திருவடியில் நிலைபெற்றிருக்கும் நித்தியானந்தக்கடலில் மூழ்கிச் சிறியேனாகியயான் வாழும்நாளுமுண்டாகுமோ. (உ)

கினதருட்பாதநினைதொறுமடியே
னினைப்பொடுமாறுகொண்டெழுந்த
மனவழுக்கதனல்வாடினேனதனை
மாற்றிநின்னருள்சுரந்தளிப்பாய்

கனைகடல்குமுறக்குலவரையதிரக்
கனவொலிகூவுசேவலனே
உனலருந்தவத்தோர்பரவியபோரூ
ருத்தமாசத்திவேலவனே.

(இ - ள்.) ஒலிக்கின்றகடல்குமுறவும், பெரியமலைகளதிரவும், பெரியவொலியெடுத்துக்கூவும் சேவலுடையவனே, நினைத்தற்கரிய சிவஞானிகளால் வழிபட்டுள்ள திருபோரூரிலெழுந்தருளியிருக்கு முத்தமனே, சத்திவேலுடையவனே, உனதுஅருளை அடியேன் நினைக்குந்தோறும் அந்நினைவோடு பகைமேற்கொண்டெழுந்த மனத்தினறியாமையினால் வாட்டமுற்றேன், அற்றாகலின் அவ்வாட்டத்தைத்தவிர்த்து உனது திருவருளை உள்ளங்கனிந்தளிப்பாய்.

இதனான்மனவழுக்கற்றவருக்கே திருவருள்தோன்று மெனவும், அருதார்க்கு அருள்தோன்றாதெனவும் கொள்ளற்பாற்று; அல்லதூஉம் ஒளியாகிய அருளுக்கும் இருளாகிய அஞ்ஞானத்திற்கும் இடமொன்றென்றும், அவ்விடம் ஆன்மாவென்றும் அறிந்தேனாதலால் அருளாளனாகியநீ மருளாளனாகிய எனதிருளின் வலியையகற்றி வாட்டந்தவிர்த்து உனதருளையே பெருகச்செய்வாயென்பார் மாறுகொண்டெழுந்தமனவழுக்கதனால் வாடினேனதனை மாற்றி நின்னருள்சுரந் தளிப்பாய் என்றாரெனக் கொள்ளலுமொன்று. (ரு)

வாக்கொடுமனமுங்காயமார்தொழிலு
மன்னுறுநின்னருட்காக்கும்
தேக்குறுமன்பர்போலலாச்சிறியேன்
செய்பிழைபொறுத்தினிதளிப்பாய்
ஆக்கமெய்ஞ்ஞானங்குறுமுனிக்குதவு
மருட்குரவாசிவயோக
ஊக்கமேதழைத்தோர்போற்றியபோரூ
ருத்தமாசத்திவேலவனே.

(இ - ள்.) மெய்ஞ்ஞானச் செல்வத்தையுடைய அகத்திய முனிவருக்குபதேசித்தருளும் அருளாசிரியனே, சிவயோகத்தினிடத்தே எக்காலமும் மனவெழுச்சியுடைய சிவயோகிகளால் புகழப்பெற்ற திருப்போரூரிலெழுந்தருளியிருக்கு முத்தமனே, சத்திவேலுடையவனே, மிக்கஅன்பினையுடையார் போலல்லாத சிறியேனாகிய யானியற்றும் பிழையைப்பொறுத்து,வாக்கும் மனமுங் காயமுமாகிய மூன்றிற்கும் பொருந்திய அவ்வப்பணிவிடைகளை யினிதாகவருள் செய்வாய்.

வாக்கொடுமனமுங் காயமார்தொழிலும் என்றதனால் கரணங்கள் மூன்றாயினும் அவைதொழிற்படுங்கால் வெவ்வேறாகாது ஒன்றுபட்டிருந்தே தொழிற்படுமெனப்போந்தன. போதரவே, அதுபோலும் உன்னருளடைய முயலுங்

கால் அம்முக்கரணங்களும் அவ்வாறு அருட்பணியிற்றலைப்படாதுகையொன்றுசெய்ய நாவொன்றுபேச கருத்தொன்றெண்ண யான் பெரும்பிழையைச் செய்தமையால் அவையொருவழிப்பட உன்னடித்தொண்டைச்சிறிதளிப்பாயென்பார் சிறியேன் செய் பிழைபொறுத்தினிதளிப்பாயென்றார். (சு)

மகவினைத்தாதையினிமைகள்காட்டி
மடித்தலத்திருத்துதல்போல
அகமதிலின்புகாட்டிநின்றாட்கீழ்
அடியனையசைவறவிருத்தாய்
ககனவானோர்களெனும்பயிர்தழைப்பக்
கடியசூர்க்களைகளைந்தருள்வோய்
உகலருவளங்கடிகழ்திருப்போரூ
ருத்தமாசத்திவேலவனே.

(இ - ள்.) விண்ணுலகவாசிகளாகிய தேவர்களென்னும் பயிர்தழைத்தோங்கக்கொடிய சூரபன்மனென்னுங் களைகளைக்களைந்து அருள்பவனே, நீங்குதலில்லாதவளமையால்விளங்கும் திருப்போரூரிலெழுந்தளியிருக்குமுத்தமனே, சத்திவேலுடையவனே, தாதைதன்னிளங்குழவியை இனிய சுவையுடைப்பண்டங்களைக்காட்டி மடித்தலத்திருத்தி யின்படைதல்போல, உள்ளத்தின்கண் உனதுபேரானந்தத்தை நீயே காட்டித்திருவடிக்கீழடியேனை அசைவறவிருத்தியருளாய்.

இதனால் தந்தையாயினும் மகவினுக்கு இன்சுவைகாட்டித்தன் வசப்படுத்துவனேயன்றி காட்டாமற்செய்ய அறியான், அதுபோலும் யாவர்க்குந் தந்தையாகிய நீ சிலர்க்கருளைக்காட்டி யின்பத்திருத்தி என்னை யவ்வாறின்பத்திருத்தாது அலைத்துத்துன்பத்திலாழ்த்தல் முறையன்றென்று கூறியவாறும். (எ)

பித்தனேனெனினும்பேயனேனெனினும்
பிழைபுரிபாவியேனெனினும்
அத்தனேயெனைநீயளிக்குதல்கடனே
யறனெலாமோருருக்கொண்டோய்
கொத்தலர்நீபத்தொடையணிமார்பா
குமரநாயகவெனக்குறுதாய்
ஒத்தவாழுத்தர்பற்றியபோரூ
ருத்தமாசத்திவேலவனே.

(இ - ள்.) அறங்களெல்லா வற்றையுமோர் திருவுருவமாகக்கொண்டவனே, கடப்பமலர்க்கொத்துகளாற் றொடுத்தமாலையை யணிந்தமார்பனே, குமாரக்கடவுளே, எனக்குப்பொருந்திய அன்னையையொத்தவனே, சீவன்முத்தர்கள் பற்றுக்கோடாகப் பற்றிவாழும் திருப்போரூரிலெழுந்தருளி யிருக்குமுத்தமனே, சத்திவேலுடையவனே, யான்பித்துடையவனே யாயினும் பேய்த்தன்

மையுடையனே யாயினும் தீமையேபுரியுந்தீவினையே னாயினும் அப்பனே, நீ என்னைக்காத்தருளுதல் கடனாகும்.

இதனால் யான்பித்துடையனும் பேய்த்தன்மையுடையனும் பாவியேனுமாயினும் உன்னையே அம்மையப்பனாகக் கொண்டேனாதலால் அவ்வறமொன்றனைநாடியே அறக்கடவுளாகிய நீ என்னையளித்தாள்வது கடனாமென்று கூறியவாறாம். (அ)

கன்னியரிருவரிருமருங்குறநற்
கனகமால்வரையிருந்தனநின்
சன்னிதிகண்டோர்பவத்துயர்கடந்து
தருசுகவாரிதிபடிவார்
நின்னடியவனென்றுலகவர்புகல
நிகழ்த்தினையினியெனைவிடுக்கேல்
உன்னதசிகரிமன்னியபோரூ
ருத்தமாசத்திவேலவனே.

(இ - ள்.) மேலோங்கியகோபுரங்களமைந்த திருப்போரூரிலெழுந்தருளியிருக்கு முத்தமனே, சத்திவேலுடையவனே, நல்லபொன்மலையிருந்தாலொத்தவள்ளியம்மை தெய்வயானை என்னுமிருவரும் உனதுஇருபக்கமும் வீற்றிருக்க நீ யெழுந்தருளியிருக்குங்கோலத்தை உனதுசந்நிதானத்தில் கண்டவர்கள் பிறவித்துன்பத்தைக்கடந்து அங்குதிக்கும் ஆனந்தக்கடலில் மூழ்குவார்கள், அதனால் (உனதடிமை) யானென்று உலகத்திலுள்ளார் கூறச்செய்தனை இனி என்னைக்கைவிடாதை.

பொன்மலை யோர்பால் வெள்ளிமலையையும், ஓர்பால் இமயமலையையுங் கொண்டுவிளங்குதல்போல், இருபக்கங்களில் நாய்ச்சிமாரிருவரும் பொலிவுபெற்று முருகக்கடவுள் விளங்குதலால் கன்னியரிருவரிருமருங்குறநற்கனகமால் வரையிருந்தன நின்சன்னிதி என்றார். (கூ)

பயனிலமொழிந்தும்பலதொழில்புரிந்தும்
பரவையிற்றிரையெனநினைந்துங்
கயவரிற்பொழுதுபோக்குறுதுனது
கமலத்தாணிணையவேதருவாய்
இயலிசையருணகிரிப்பெயர்நாதன்
இயம்புபாமாலைசேர்புயத்தாய்
உயுநெறியடியேற்குதவியபோரூ
ருத்தமாசத்திவேலவனே.

(இ - ள்.) திருவருளால் இயலிசைவாய்ந்த தமிழில்வன்மைமிக்க அருணகிரிநாதரோதியருளிய திருப்புகழ்ப்பாமாலை அணியப்பெற்ற திருப்புயத்

தையுடையவனே, அடியேற்குய்ந்துபோம் நெறியையுபதேசித்தருளிய திருப்போரூரிலெழுந்தருளி யிருக்கின்றவுத்தமனே, சத்திவேலுடையவனே, பயனில்மொழிகளைக்கூறியும் பலதொழில்களை யியற்றியும் கடலின்அலையென்னப் பலபலநினைந்தும் கயவரைப்போலக்காலத்தைப் போக்காமல் உனதுதாமரைமலர்போன்ற திருவடிகளைச் சிந்தித்தவண்ணமேயிருக்க நீயருள்செய்வாய்.

இயற்றமிழோர்கூறிய இலக்கணமும் இசைத்தமிழோர்கூறிய இலக்கணமும் நிரம்பித்திருவருளானமைந்து ,கிடக்கப்பாடும் பரிசுடையாராகலின் இயலிசையருணகிரிப்பெயர் நாதனியம்புபாமாலை யென்றார்.

இதனான் நீ அறிவிக்கஅறியுந்தன்மையும் செய்விக்கச் செய்யுந்தன்மையும் யானுடையனேயன்றி அவ்விரண்டற்கும் யானே சுதந்திரமுடையேனல்லன், அற்றாகலின் பயனில் மொழிகளையும் தொழில்களையும் கடலலைபோல் மாறிமாறிச்செய் தலைவ தொழித்து உன்னருளிலே நிற்கச்செய்வாயென்று கூறியவாறும். (௪௦)

குறுங்கழிநெடில் விருத்தம் முற்றிற்று.

---

உ

வேலுமயிலுந் துணை.

## குறுங் கழிநெடில்விருத்தம்.

கமலநான்முகவனோதியவேதக்கனமுகவுரைதினம்புகழும், விமலமெய்ஞ்ஞானக்களிற்றினுக்கிளையவீறுபன்னிருபுயத்தழகா, திமிரவஞ்ஞானக்களிற்றினைத் துணித்தென்சிந்தையிற்புகுந்தருள்புரியாய்
தமரநீர்ததும்பும்வயல்செறிபோரூர்ச்சரவணபிரணவப்பொருளே.

(இ - ள்.) ஒலிக்கும் நீர்நிறைந்தவயல்கள் செறிந்ததிருப்போரூரிலெழுந்தருளி யிருக்குஞ் சரவணனே, பிரணவார்த்தசொரூபியே, பிரமதேவன் கூறியஓரிருக்குக்கு முதலாகச்சொல்லிய பிரணவத்திற்குநாள்தோறும் புகழுரைவிளக்குஞ்சுத்தனே, மெய்ஞ்ஞானசொரூபியாகிய விநாயகக்கடவுளுக் கிளையவனே,நிகரில்லாதபன்னிருபுயத்தையுடைய அழகனே,மிக்க அஞ்ஞானமாகிய மதயானையைத் துணிபடுத்தி யெனதுள்ளத்தெழுந்தருளியருள் பாலிப்பாய்.()

இராவொடுபகலுமெழிலுறுசமாதியியல்பொடுகூடிவீட்டிருந்து
விராவுபேரின்பவமுதயின்றடியேன்வினைத்துயர்மறக்குநாளுளதோ
அராவணிவேணித்துகிர்க்கொடிபடருமருட்கடற்பிறந்தவாரமுதே
தராதலமுழுதும்புகழ்திருப்போரூர்ச்சரவணபிரணவப்பொருளே.

(இ - ள்.) சர்ப்பாபரணமணிந்த சடையாகிய பவளக்கொடிபடர்ந்திருக்கும் கிருபாசாகரத்தில் தோன்றிய நிறைந்தவமுதமே, உலகமெல்லாம் புகழும் திருப்போரூரிலெழுந்தருளியிருக்குஞ் சரவணபவனே, பிரணவார்த்த சொரூபியே, இரவும் பகலும் பொலிவுபெற்றசமாதியை முத்திவீட்டில் இயல் போடுகூடியிருந்து பேரின்பங்கலந்த அமுதத்தைப்பருகி அடியேனைவருத்தும் வினையைமறந்திருக்கும் நாளுமுண்டாகுமோ.

கேட்டல் சிந்தித்தல் தெளிதலென்னும் ஞானசாதனங்களால் முறையே கூடிய நிட்டையென்பார் இயல்பொடு கூடியசமாதி யெனவும், இச்சமாதி யோகம் பசுபாச ஞானங்கள்கழன்ற விடத்துத் தோன்றுவதென்பார் வீட்டிருந்தெனவும், அவ்விருஞானமுங்கழன்றவிடத்துத் தோன்றும் சிவஞானம் சிவானந்தத்தைப் பெருக்குமென்பார் விராவுபேரின்பமெனவும், இங்ஙனமாக யான் ஞானசாதனமுறையே நிட்டைகூடவறியாது இறுதியிலுள்ளசமாதியை விரும்பின் எவ்வாறு சிவானந்தத்தைப் பருகிவினைநீங்கப் பெறுவேனென்பார் அமுதயின்றடியேன் வினைத்துயர்மறக்குநாளுளதோ எனவுங்கூறினர்.

இதனுன் கேட்டன்முதலியவற்ருல் கூடுஞ்சமாதியே சமாதியெனவும், இந்தஞானுப்பியாசத்தால் பசுபாசஞானங்களை கடந்தடையும் வீடேவீடென வும், இச்சிவஞானமுதிர்ச்சியாலுண்டாகும் சிவானந்தமே ஆனந்தமெனவும், இக்கேட்டலாதி ஞானங்களை ஞானமன்றென்றொழித்து அடையும் ஞானத் தாலெய்து மின்பமே துன்பமெனவுங் கொள்ளக்கிடந்தன. (உ)

ஒருபொருளிடத்தும்விழைவொடுவெகுளியுறுதெலாஞ்சமமதாக்க
ண்டுன், றிருவடிநிழற்கீழசைவறவிருந்துசிறியனேனென்றினைப்பறு
வேன், அருணனிசுரக்கும்பனிமலைப்பிறந்தவங்கொடிதந்தசெங்கனி
யே,தருணமாறுதமுருகனேபோரூர்ச்சரவணுபிரணவப்பொருளே.

(இ - ள்.) மிக்க அருளூற்றெடுக்கும் இமயமலையிற்றோன்றிய அழகிய கொடிபோன்ற உமாதேவியாரீன்ற செவந்தகனியே, என்று மிளையோனென்னுந்திருநாமத்தையுடைய முருகக்கடவுளே, திருப்போரூரிலெழுந்தருளியிருக்குஞ் சரவணபவனே, பிரணவார்த்தசொரூபியே; சிறியேனுகிய யான்காணப்படும் பொருள்களுள் ஓர் பொருளிடத்தும் விருப்பையேனும் வெறுப்பையேனுமடையாது எல்லாப்பொருள்களையும் ஒக்கப்பார்த்து உனது திருவடி நிழலின்கீழ் சலனமில்லாதிருந்து எந்நாளுபசாந்தியோடிருப்பேன்.

இதனுன் எப்பொருளிடத்தும் சிவத்தையேகாணும் சீவன்முத்தர் விரும்பும் பொருளெது விரும்பாதபொருளெது அவர்காணும் பொருள் சிவமொன்றே எனவும், அச்சிவநிலை அருணிலை நிற்கப்பெற்றூர்க்கே கூடுமெனவும், அன்றுதானுபசாந்த நிலை கூடுமெனவுங் கூறியவாருயிற்று. (ங)

கலைபுகழ்ந்தோதுங்கற்பெலாநிறைந்தகன்னியரிருவர்பான்மகிழ
நிலைபெறுமயூரப்பரிமிசைத்தோன்றுநிறைபரிபூரணசுகமே [ய்
இலையுளதென்னுமிரண்டுமெத்தியத்தினெழுசொரூபத்தெனையிருத்தா
தலைமைகொடவத்தோர்நிலவியபோரூர்ச்சரவணப்பிரணவப்பொரு
[ளே.

(இ - ள்.) நூல்கள் புகழ்ந்துகூறும் கற்பிலக்கணமெல்லாம் அமைந்துள்ள தெய்வயானை வள்ளிநாய்ச்சியாரென்னும் பிராட்டிமாரிருவரும் இருமருங்கினு நின்று மகிழ்கூர என்றும் அழியாத மயில்வாகனத்தின்மேலெழுந்தருளி வரும் நிறைந்த பரிபூரணனந்தமே, தவத்திற்சிறந்த யோகியர்கள் நிலைபெற்று விளங்கும் திருப்போரூரிலெழுந்தருளியிருக்குஞ் சரவணபவனே, பிரணவார்த்தசொரூபியே, இல்லையென்றும் உள்ளதென்றுங் கூறும் இரண்டினடுவில் எழுகின்ற சொரூபத்தினிடத்து என்னையிருத்தியருளாய்.

ஆன்மா பதிஞானத்தால் தான் பாசமன்றென்றும் அவற்றின்வேறாகிய ஆன்மாவென்றும் விசாரிக்கும் விசாரத்தினடுவே தோன்றுவது சிவமாதலால் இலையுளதென்னு மிரண்டுமெத்தியத்தினெழு சொரூபத்தென்றார்.

ஆன்மா, போதங்கெட்டுச் சுத்தனாகிநிற்கும் அவ்விடையிலெழுவதெனினுமொக்கும். (௪)

இருளைவிட்டெனைநீயெடுத்தநாண்முதலாவின்றுகாறுபிறப்பிறப்பி
உருளெனச்சுழன்றேனிங்கினிதமையுமுயர்பரிபூரணத்திருத்தாய் [ல்
மருமலிநீபத்தார்புனைமார்பாவானவர்சேவிதபாதா
தருமலிகரத்தோர்நிரைதிருப்போரூர்ச்சரவணப்பிரணவப்பொருளே.

(இ - ள்.) மணமிக்க கடப்பமலர் மாலையணிந்த திருமார்புடையவனே, தேவர்கள் வணங்கப்பெற்ற திருவடியுடையவனே, கற்பகம்போலு மிரப்போர்க்கு இல்லையென்னாது கொடுக்கும் கரத்தினையுடைய செல்வாவரிசையாவுடைய திருப்போரூரிலெழுந்தருளியிருக்குஞ் சரவணபவனே, பிரணவார்த்தசொரூபியே, ஆணவவிருளினின்றும் நீயென்னையெடுத்த நாள் தொட்டு இந்நாள் காறும் எடுத்தபிறப் பிறப்பென்னுமிவ்விரண்டில் சகடக்கால் போலச் சுழன்றுழன்றேன் (அதனால்) அச்சலனமொழிந்து அமைதியோடிருக்கும் சிறந்தபரிபூரணத்திலென்னையிருத்தியருளாய்.

பலனைப்புணரும் விபசாரியொருத்தி அவ்விபசாரத்தைக்காட்டாது கணவன்மாட்டொழுக அவன் அவ்வஞ்சத்தையறியாது அவளோடின்புற்றுக்கூடி வாழ்தல்போல எனது இச்சாஞானக்கிரியையின் பரப்பெல்லாந்தோன்றுதும றைத்து என்னிடத்துக்கற்புடையாள்போல நிற்கும் ஆணவசத்தியின் கொடுமையையுணராது அவ்வாணவத்தோடத்துவிதமாயிருந்த என்னை அவ்வாணவத்தினின்றும் வேறாக்கினனென்பார் இருளைவிட்டெனை நீயெடுத்த எனவும்,

அவ்வாணவத்தின் கொடுமை யீதென்றெனக்குணர்த்தித் திருவருளிற் கூட்டி அவ்வருளில் நிலை பெறுவிக்க நீ பிறப்பிறப்பைக்கூட்ட அவற்றில் மாறுதுழன் றேனென்பார் எடுத்தநாண்முதலா வின்றுகாறுறு பிறப்பிறப்பிலுழன்றேனெனச் சுழன்றேனெனவும், இவ்வாறுநீ என்னை ஆட்டுவித்தவாறெல்லாம் நானுடி னேனாதலால் இனி உனதின்பப்பூரணத்தில் அடக்குவாயென்பார் இங்கினி தமையுமுயர்பரிபூரணத்திருத்தாயெனவுங்கூறினார்.

இதனான் ஆன்மா ஆணவசகிதமெனவும் இறைவன் ஆணவரகிதனென வும், ஆன்மாவவ்விரண்டின்பயனையடைபவனெனவும், இறைவன் அவ்விரண் டின்பயனை யளிப்பவனெனவுங்கொள்ளக்கிடந்தன. (ரு)

மனவழுக்கனைத்துமாறிநின்மலமாமனத்தனாய்நசைசினமறந்து
கனபரிபுரணசுகக்கடல்படியுங்காலமுஞ்சிறியனேற்குளதோ
உனலருபொதியத்துறுகுறுமுனிவனுளமகிழ்ந்திறைஞ்சுபொற்சரணா
தனபதியளகைவளனுறுபோரூர்ச்சரவணப்பிரணவப்பொருளே.

(இ - ள்.) நினைத்தற்கரிய பொதியமலையில்வாழும் அகத்தியமுனிவர்மன மகிழ்ந்து வணங்கும் பொன்போலுமரிய திருவடிகளையுடையவனே, குபே ரன்வாழும் அளகைமாநகரத்தையொத்த வளப்பம்பொருந்திய திருப்போரூரி லெழுந்தருளியிருக்குஞ் சரவணபவனே, பிரணவார்த்தசொரூபியே, மனத் தின்கண்படிந்துள்ள மலமெல்லாமொழிந்து நிர்மலமாகிய மனத்தையுடைய வனாய் விருப்புவெறுப்பென்னு மிவ்விரண்டையுமறந்து சிறந்தபரிபூரணசுக சாகரத்தில் மூழ்குங்காலமும் சிறியேனாகிய வெனக்குமுண்டாகுமோ.

இதனான் நசை சினம் என்றுசொல்லப்பட்ட வேண்டுதல் வேண்டாமை யென்னும் இவ்விரண்டும் பந்தம் போகம் போத்திருத்துவம் என்னுமிவற் றைப்பெருக்கி, மலத்திரயங்களென்னினின்றும் நீங்காது நிலைபெறச்செய்த லின் யான் பந்தத்தையும், அப்பந்தத்தால்விளையும் போகத்தையும், அப்போ கத்தில் பிரியாப்பிரியங்கொள்ளும் போத்திருத்துவத்தையும் நீங்கப்பெற்று வேண்டுதல் வேண்டாமையில்லானாகிய உன்னடியைக் கூடுதலுமுண்டாகுமோ என்றையுற்றவாறென்க. (சு)

யாவருமறியாவறிவெலாமறிவுக்கறிவதாயிருந்தறிவித்து
மேவருட்குருவாய்வந்தறிவளித்தும்வினையனேனறெளிந்திலனந்தோ
சேவலந்துவசம்பிடித்தசெங்கரனேதிகழ்தருசடானனக்களிறே
தாவியதகரப்பரியனேபோரூர்ச்சரவணப்பிரணவப்பொருளே.

(இ - ள்) சேவற்கொடியேந்திய திருக்கரத்தையுடையவனே, விளங்கா நின்ற ஆறு திருமுகங்களையுடைய யானையே, தாவிச்செல்லும் மேடவாகனத் தையுடையவனே, திருப்போரூரிலெழுந்தருளியிருக்குஞ் சரவணபவனே, பிரணவார்த்தசொரூபியே, பிரமன்முதலிய யாவரும் அறிவரிய ஞானமெல்

லாம் எனதறிவுக்கறிவாயிருந் தறிவித்தும் அதுவேயுமன்றி அருணிறைந்த ஆசிரியனுமாயெழுந்தருளிவந்து சிவஞானத்தையளித்தும் தீவினையுடையேனாகிய யான் தெளியாதொழிந்தேன் அச்சோ.

எல்லாவுயிர்களையும் வினையறிந்து படைத்தல் காத்தலாகிய உன்றொழில் வாய்க்கப்பெற்ற கடவுளரும் தமக்குப் பிறப்பிறப்பைத்தருவது ஆணவமென் றுணராது, அவ்வாணவத்துட்பட்டுப் பிறப்பிறப்படைய அவருக்கறிவியாதிருந்தநீ, எனக்கறிவுக்கறிவாயிருந்து, ஏன்னையானென்று முனைத்துத்தோன்றாவாறுசெய்து, அவ்வாணவத்தை யீதென்றுகாட்டி, அவ்வொழிவில் அருளால் ஊரும் பேரும் உருவுங்கொண்டு எனதூரையும் எனதுபேரையும் எனதுருவையுங்கெடுத்து, உனது ஞானமே எனக்கிடமாகவைத்தும் அவ்வருளைமறந்த பாவியேனென்பார் யாவருமறியா வறிவெலா மறிவுக்கறிவதாயிருந்தறிவித்து மேவருட்குருவாய்வந் தறிவளித்தும் வினையனேன்றெளிந்திலன் என்றார். (எ)

அத்தன்மேல்வித்தைமகற்குபதேசித்தஃதினைவருவித்தல்போலும் பித்தனுக்கொருவன்மருந்தினையளித்துப்பிறங்குணர்வளிக்குதல்போலும்,நித்தமென்மனத்தைத்திருத்தியாண்டளித்தநினதருளேதெனப் புகல்கேன், தத்தைகள்கொஞ்சுஞ்சோலைசூழ்போரூர்ச்சரவணபிரணவப்பொருளே.

(இ - ள்.) கிளிகள் குலாவிக்கொஞ்சும் பொழில்சூழ்ந்த திருப்போரூரி லெழுந்தருளியிருக்குஞ் சரவணபவனே, பிரணவார்த்தசொரூபியே, தந்தையொருவன் மேலாகியவித்தையைத் தன் மகனுக்குக்கற்பித்து அவ்வித்தையை அவனுக்கு வருவித்தல்போலும், பித்துடையானுக்கு அப்பித்தகல ஒருவன் மருந்தினையூட்டி அவனதறிவு விளங்கச்செய்தல்போலும், இவ்வாறு நாடோறு மெனது மனத்தைத் திருத்தித்திருத்தி யாண்டளித்தருளிய உனது திருவருளை யேதென்றெடுத்துக் கூறுவேன்.

கற்றறிவுடையவர் கண்ணேகண் கற்றறிவில்லார்கண் ஏனையவற்றைக் கண்டாலும் அக்கண் புண்ணென்று கூறினாற்போல் யான் நூலுணர்ச்சியுடையனாயினும் இறைவனை யறியு முணர்ச்சியின்றி அறிவிலிபோலிருந்தனன் இறைவன் தந்தையெனவந்து ஞானநூலைக்கற்பித்துத் தன்னை என்னுளத்திற் காணச்செய்தனன் என்பார் அத்தன்மேல் வித்தை மகற்குபதேசித்தஃதினை வருவித்தல்போலுமெனவும், வினைவயத்தால் பித்தடைந்த ஒருவனுக்கு அப்பித்தனை ஒருவன் மருந்தினால்மாற்றி அவனுணர்வைத்தெளிவித்தல்போல ஞானநூலால்கேட்டுத் தன்னுள்ளத்துத் தெளிந்த பதிப்பொருளை வினைவயத்த ரால்யற்றிய புறச்சமயநூல்கள் அதுவல்ல இதுபொருள் இதுபொருள் என்று கூற அவற்றால் அப்பதியறிவுபித்துற அப்பித்தனைத் தெளிதலென்னும் ஞானத்தால் சிந்தித்த பதிப்பொருளை தெளிவித்தனனென்பார் பித்தனுக்கொருவன் மருந்தினையளித்தும் பிறங்குணர்வளிக்குதல்போலும் நித்தமென் மனத்தைத்

திருத்தி எனவும், தெளிதலால் தெளிந்த தன்னை அடிமைகொண்டு அருளில் வேறாகாதிருக்கும் நிட்டையிற் கூட்டினனென்பார் ஆண்டளித்தெனவும், இவ்வாறு இவ்வொருபிறப்பிலேயே கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிட்டையென்னும் நான்கின்பயனையும் அடையச்செய்த அருளுக்கென் னுளைப்பேனென்பார் ஏதெனப்புகல்கேன் எனவுங் கூறினர். (அ)

நெஞ்சகத்துள்ளும்புறனுமாய்நிறைந்தநின்பரிபூரணநினைந்து
வஞ்சகச்சகப்பொய்யனைத்தையுமறந்துவாழுநாளெந்தநாளடியேன்
செஞ்சடைக்குழகனஞ்செவிக்கமுதாத்திகழ்மறைமுடிவினைப்புகன்
றோய், தஞ்செனப்பணிவோர்க்கருடரும்போரூர்ச்சரவணபிரணவப்
பொருளே.

(இ - ள்.) செவந்த சடாமுடியையுடைய அழகனாகிய இறைவனது அழகிய திருச்செவிக்கு ஊட்டு மினிக்குமமுதமாக விளங்கும் வேதாந்த மகாவாக்கியத்தை யுபதேசித்தருளினவனே, அடைக்கலமென்று பணிகின்றவர்களுக்குத் திருவருள்பாலிக்கும் திருப்போரூரிலெழுந்தருளியிருக்குஞ் சரவணபவனே, பிரணவார்த்தசொரூபியே, மனத்தி னுள்ளும் புறம்புமாய் நிறைந்திருக்கின்ற உனது பரிபூரணத்தைச் சிந்தித்து வஞ்சகமாகிய பிரபஞ்சமாயையையெல்லாம் அடியேன் மறந்து வாழும் நா ளெந்நாள். (க)

கணப்பொழுதெனினுமறக்கிலாதென்றுங்கனபரிபூரணவறிவிற் [தோ
பிணக்குறுமனமுமவித்தையுங்கடந்துபேதையேன்கலக்குநாளுள
மணத்தசெங்கழுநீர்மாலைதாழ்புயத்துவள்ளலேயுள்ளுவோர்க்கமுதே
தணப்பருங்கருணைதருந்திருப்போரூர்ச்சரவணபிரணவப்பொருளே.

(இ - ள்.) நறுமணங்கமழும் செங்கழுநீர்மாலையணிந்த திருப்புயத்தையுடையவனே, வேண்டுவார் வேண்டி யாங்கருளும் வள்ளலே, தியானிப்பவர்களுக்குத் தெவிட்டாத அமுதமே, நீங்குதலில்லாத கருணையைப்பொழிகின்ற திருப்போரூரிலெழுந்தருளியிருக்குஞ் சரவணபவனே, பிரணவார்த்தசொரூபியே, ஓர்கணப்பொழுதேனும் உன்னைமறவாது எக்காலத்தும் சிற்கனமாகிய பரிபூரண ஞானத்தில் பிணக்குற்றுநிற்கும் மனத்தையும் அஞ்ஞானத்தையும் கடந்து அறிவிலியாகிய யான் கலந்திருக்கும் நாளுமுண்டாகுமோ.

சிற்கன பூரணத்தில் கலக்கவொட்டாது வேறுபடுத்துவது தற்போதமும் ஆணவமுமாதலால் அதனைக்கடக்கவேண்டுமென்பார் கனபரிபூரண வறிவிற் பிணக்குறு மனமு மவித்தையுங்கடந்து பேதையேன் கலக்குநாளுளதோ என்றார். (கഠ)

திருவுக்கழிநேடில்விருத்தம் முற்றிற்று.

௨

வேலுமயிலுந்துணை.

## குறுங்கழிநெடில்விருத்தம்.

திடம்பெறுகலைகளனைத்துநின்றேத்துஞ்செய்யதாள்பூமிசைபொருந்த
நடந்துவந்தருளாற்குமாரசற்குருவாய்நாயினேனிருடெறுசுடரோ
அடர்ந்திடுபிணியாலுனதுமெய்யடியானசைவுறாதளித்தருள்புரிவாய்
தடங்கரிதிரியுஞ்சந்தனப்பொழில்சூழ்சமரமாபுரியுறைகுகனே.

(இ - ள்.) அழியாத மெய்ப்பொருளமைந்த எல்லாக் கலைகளும்நின்று துதிக்கும் செவந்த திருவடி நிலத்திற்படிய நடந்துவந்து கருணையால் குமார தேவரென்னுந் திருநாமம்புனைந்து எனக்கு சற்குருமூர்த்தியாய் நாயிற்கடைப்பட்ட எனது அஞ்ஞானவிருளை யோட்டியருளிய ஞானசூரியனே, பெரியயானைகளுலாவும் சந்தனச்சோலைசூழ்ந்த திருப்போரூரிலெழுந்தருளியிருக்கின்ற முருகக்கடவுளே, செறிந்த பிணியினால் உனது மெய்யடியானாகிய யான் மெலியாவண்ணம் காத்தருள்செய்வாய்.

மதுரையில் தாம் சென்றகாலத்து அங்கயற்கண்ணியம்மையார் அநுஞை யால்,திருப்போரூரின்கண் வேம்படி விநாயகராலயத்தில் வசிக்குங்கால்,அங்கு முருகக்கடவுள் தமது குருமூர்த்தியாகிய குமாரதேவர் திருவுருவங்கொண்டு நடந்துவந்து, இங்கெழுந்தருளியிருக்கும் முருகக்கடவுள்பாற் செல்வோமென்று அழைத்துக்கொண்டு சந்நிதியிற்செல்ல, அப்போது ஆசிரியரது திருவடியில் பணிந்தெழுவதற்கு முன் அத்திருவுருக்கரந்தருள, முருகக்கடவுள் திருவுருவத்தையே கண்டனராதலின் செய்ய தாள் பூமிசைபொருந்த நடந்துவந்தருளாற் குமாரசற்குருவாய் நாயினே னிருடெறுசுடரோ என்றார்.

இதனகலத்தை பின்வருஞ் சரித்திரத்தாற்காண்க. (க)

பந்தமூடறுத்துப்பாயிருள்சீக்கும்பரிதியினிலகுநின்பதமென்
சிந்தையிற்குடியாவிருத்தியாண்டருளுஞ்சிற்சுகக்கருணைமாகடலே
முந்துறுபிணியானொந்துனதடியான்முடிவுறாதினிதருள்புரியாய்
தந்திகடிரியுஞ்சந்தனப்பொழில்சூழ்சமரமாபுரியுறைகுகனே.

(இ - ள்.) பந்தத்தைவேரோடறுத்துப் பரந்தஇருளைப்போக்கும் அருணனைப்போல விளங்குகின்ற உனதுதிருவடி எனதுசித்தத்தில் நீங்காக்குடியாக வைத்து அடிமைகொண்டருளும் சிற்சுகமாகியபெரியகருணைக்கடலே, யானைகளுலாவும் சந்தனச்சோலைசூழ்ந்த திருப்போரூரி லெழுந்தருளியிருக்கின்ற முருகக்கடவுளே, முன்னைவினையாலடைந்த பிணியினால்நோவடைந்து உனதடிமையாகிய யான் இறவா வண்ணம் இனியஅருள்செய்வாய்.

புண்ணியபாவப்பயனாகியசுகதுக்கங்கட்கும் அவற்றின்காரணமாகிய நல்வினை தீவினைகட்கும் இடமாயுள்ளகன்மமலமும், பிருதிவிமுதலாகக்காணப்ப

டும் பிரபஞ்சகாரியங்கட்கு இடமாயுள்ளமாயாமலமும், இவற்றைச்சுட்டியறியும் விபரீதவுணர்வுக்கிடஞ்செய்யும் ஆணவமலமும் ஆகிய இம்மூன்றுமலங்களும் சிவஞானத்தால் நிட்டைகூடினார்மாட்டும் பிராரத்தமுள்ளவும் நிகழ்வது திண்ணம். அவைநிகழவே சிவபோகப்பெருவாழ்வு அமையப்பெறு தாகலான் நிட்டைகூடிய எனது இச்சாஞானக்கிரியைகளை இறைவனருள்வெளிப்படுதற்குவாயிலாகிய குருலிங்கசங்கமங்களின் வழிபாட்டில்நிற்கச்செய்து பிராரத்தவாசனையை மாற்றினனென்பார் பந்தமூடறுத்து நின்பத மென்சிந்தையிற் குடியாயிருத்தி யாண்டருளும் சிற்சுகக்கருணைமாகடலென்றார்.

பந்தமூட்டறுத்து என்றதனால்மும்மலங்களையும், பாயிருளென்றதனால் அவற்றின்காரியமாகியநல்வினை தீவினைகளையும் புண்ணியபாவங்களையும் சுகதுக்கங்களையும், இருள்சீக்கும் பரிதியினிலகுநின்பதம் என்றதனால் சிவபோகப்பெருவாழ்வையும், என்சிந்தையிற்குடியாயிருத்தி என்றதனால் குருலிங்கசங்கமங்களையும், ஆண்டருளும் என்றதனால் பிராரத்தவாசனையை மாற்றியதையுங் கூறியனவாகக் கொள்ளக்கிடந்தன.

அல்லதூஉம் பந்தமூடறுத்துப் பாயிருள்சீக்கும்பரிதி எனவே பதியிலக்கணமும், என்சிந்தையிற்குடியாயிருத்தி எனவே அடுத்ததின்வண்ணமாம் பசுவினிலக்கணமும், ஆண்டருளுமெனவே சத்திகெட்டுநிற்கும் பாசவிலக்கணமுங் காட்டியதூஉமாமென்க. பிராரத்தவாசனையொன்றுளதாகவே அதுபற்றி மும்மலங்களுநிகழுமென்பதனை மூந்துறுபிணியா னொந்துனதடியான்முடிவுறு து என்றதனானுமுணர்க. (உ)

வடங்கிடந்தொளிரும்வாரணக்கோட்டின்வளர்முலைவள்ளிநாயகியுன் இடம்பெறவயங்குபுயங்கள்பன்னிரண்டினிலகவுண்மகிழ்மணிக்குன்றே,விடந்தெறுகருடப்பார்வைபோலுனதுமெய்யடியவன்பிணிதவிர்ப்பாய், தடம்புயறுயிலுஞ்சந்தனப்பொழில்சூழ்சமரமாபுரியுறைகுகனே.

(இ - ள்.) யானைக்கொம்பினையொத்துவளர்கின்ற முத்தாரம் கிடந்தொளிவீசும் வள்ளிநாய்ச்சியாரது தனச்சுவடு உனது இடமகன்று விளங்கும்பன்னிரண்டு திருப்புயங்களிலும் பிரகாசிக்க, அதனைக்கண்டு திருவுள்ளமகிழ்கின்ற மாணிக்கமலையே, பெரியமேகங்கள் கண்ணுறங்குஞ் சந்தனச்சோலை சூழ்ந்த திருப்போரூரிலெழுந்தருளி யிருக்கின்ற முருகக்கடவுளே, விடத்தையகற்றும் கருடநோக்கம்போல உனதுமெய்யடியனாகிய எனது பவப்பிணியைத் தவிர்த்தருளாய்.

கருடபாவனைசெய்வோன் அப்பாவனையால் விடநீங்கப்பெற்று அக்கருடனையே சிந்தித்து எக்காலமும் பிணியைக் கடந்திருக்கக் கண்டாம். அதுபோலுனது திருநாமத்தைச்சிந்திக்கும் யான் பிறவிப்பிணிகடவா திருப்பேனாயின் உனதுநாமம் அதுபோலும் ஆற்றலின்றென்றாகும்.அஃதாலினி உனதாற்றலைக்

காட்டி பவப்பிணிதவிர்த்தாள்க என்பார் விடந்தெறுகருடப்பார்வைபோலுன துமெய்யடியவன் பிணிதவிர்ப்பாயென்றார்.

இதனான் பாவிப்பானுக்குக்கருடன் வேறாயினும் வேறாகிய அக்கருடனைப் பாவிக்க அவனிவனுள்ளத் திருந்து இவனேயாய் விடமகற்றக்கண்டாம். அக்க ருடனோ ஆதிபௌதீககருடன். அதனால் அக்கருடத்தியானத்திற்குப்பயன ளித்ததோ உனதுசத்தி; அங்ஙனமாக பறவைநாமத்தை நினைத்த அப்பெத்தா ன்மாவுக் குனது சத்தி பயனளிப்பதும் உன்னைநினைக்கும் மெய்யன்பனாகிய எ னக்குப்பயன்செய்யாதொழிதலும் அழகன்றென்று கூறியவாறுமாமென்க.()

சூர்குலத்திமிரமுழுவதுமிரியச்சுடர்விடுசோதிவேலுயர்த்த
வீரவம்புயத்தாய்மாரவேளழகும்வெற்றிகொளுத்தமவடிவா
சீர்பெறுமுனதுமெய்யடியவனைத்தெறுபிணியறவுளத்தடைப்பாய்
தார்செறிபொழில்வாய்க்கார்துளிசிதறுஞ்சமரமாபுரியுறைகுகனே.

(இ-ள்.) சூரபன்மனுடைய வமிசத்திற்றோன்றிய அசுரர்களென்னுஞ் செறிந்த விருளெல்லாம் அகன்றோட ஒளிபரப்பும் சோதிவேலையுயர்த்த வீரந்தங்கிய அழகியபுயத்தையுடையவனே, மன்மதனழகும் புறந்தந்தோட் வெற்றியைக்கொண்ட உத்தமமாகிய திருவுருவத்தை யுடையவனே, மலர்கள் செறிந்தசோலையில் மேகங்கள்தவழ்ந்து நீர்த்துளியைச்சிந்தும் திருப்போரூரி லெழுந்தருளி யிருக்கின்ற முருகக்கடவுளே, சிறப்புப்பொருந்திய உன்னு டையமெய்யடியவனை வருத்தும் பவப்பிணியற உனதுதிருவுள்ளத்தில் எண் ணியருள்வாய்.

சிவநிந்தகனாகிய தக்ஷசம்பந்திகளாகிய தேவர்களுக்கிரங்கி இடையூறு செய்த சூரபன்மன்குலத்தவரை வேரொடுகளைய வேலெறிந்த நீ சிவநிந்தகரை நிந்திக்கும் சீர்மைவாய்ந்த என்னைவருத்தும் பிணிக்கிரங்கி சத்திவேலைத் திருவு ளத்துநினைத் தேவா திருப்பது முறையோ என்றுகூறியவாறும்.  (ச)

அரையனூன்முறையேபுரியினுமரையனருள்சுதன்றனதுளப்படியே
விரைவுடன்புரியுமஃதுபோலீசன்வினைவழிபுரியினிற்போற்றுந்
திருவடியவரைத்தீவினைதெறாதுதீர்க்கநிற்கேவருங்கண்டாய்
தருமலிபுளினத்திளவளைதவழுஞ்சமரமாபுரியுறைகுகனே.

(இ - ள்.) விருக்ஷங்கள் செறிந்தமணற்றிட்டையில் இளவாளைகள் தவழும் திருப்போரூரிலெழுந்தருளியிருக்கின்ற முருகக்கடவுளே, அரசன் மனு நூலில் விதித்தமுறையே தனதுசெங்கோலால் உலகத்திலுள்ளாரை நடத்திவ ருவானாயினும் அவ்வரசன் பெற்றபுத்திரன் (அவனாணையன்றி) தனதெண்ணத் தின்படியே (வேறுசிலவற்றை) விரைந்துசெய்யுமதுபோல, (ஆன்மாக்களது) வினையின்வழியே இறைவன்யாவுஞ் செய்வானாயினும், உன்னைத்துதிக்குஞ்செ ல்வம் பெற்ற அடியவரைத் தீயவினை தங்க வொட்டாமல் தீர்த்துக்காத்தல் உனக்கே எளிதாய்வரும்.

இறைவன் உயிர்கண்மாட்டருளுடையனாயினும் அவ்வுயிர்களின்வினைவழியன்றியருள்செய்யான். இறைவன்மகனாகிய முருகனே உயிர்களின் வினைவழியன்றித் தானேயருள்செய்யவல்லன். இதனைப் பிரமனைச் சிறைக்களப்படுத்தி எல்லாவுயிர்களும்எளிதில்வினையினின்றுநீங்கி முத்தியின்பத்தையடைய சிருஷ்டிக்கத்தொடங்கியவதனால் வினைநோக்காது அருள்செயவல்லனென்பதையும், அங்ஙனஞ் சிருஷ்டிக்குங்கால் பிரமனைச்சிறையினின்று மீட்க நந்திதேவரை விடுத்ததேயன்றித் தாமே எழுந்தருளி அவனதுசிறையை மீட்பித்து உயிர்களைவினையின்வழியே சிருஷ்டிக்கச்செய்தனனாதலால் இறைவன் வினைவழியே யருள்செய்வனென்பதையுமுணர்க.

அல்லதூஉம் பிரமன்வேதங்களை இறைவன்பால் கேட்டுணர்ந்தேனென்றும் அவனாணையைமேற்கொண்டு சிருஷ்டியும் செய்கின்றேனென்று கூறியும் அவனையோர்பொருளாகமதியாது இறைவனாணையின்றி அவனதுநான்கு சிரங்களுங் குலுங்கப்புடைத்தும், திருவடியாற்றுக்கியும், சிறைக்களப்டுத்தியும், சிருஷ்டித்தும் வந்தசெயலை இறைவனுணர்ந்தும் மகன்பால் மறங்கொள்ளாது அங்ஙனம்புரிந்தது அறமேயென்றுங்கூறி தேவர்கள் வேண்டுகோளால் பிரமன்பால் கருணைகூர்ந்து அவனைமீட்க நந்தியெம்பெருமானால் தமதாணையைத் தெரிவிக்க அதனைமறுத்த ஞான்றும் மறங்கொள்ளாது புன்னகையரும்பித் தாமே யெழுந்தருளி தன்மகனிசைவு கொண்டுமீட்பித்தனனேயன்றி அப்பிரமனைத்தானே மீட்கவில்லையென்பார். அரையனூன்முறையேபுரியினும் அரையனருள்சுதன்றனதுளப்படியே விரைவுடன்புரியும் எனவும், தன்மணத்து வந்தவரதுதீவினை அன்றேதீப்பட முத்திவாயிலைக்காட்டினனாதலால் நிற்போற்றுந்திருவடியவரைத்தீவினை தெருது தீர்க்க நிற்கேவருங்கண்டாய் எனவுங்கூறினர். (ரு)

ஆலமார்களனுநீலமேனியனுமைங்கரனம்பிகையமரர்
சீலமார்முனிவரியாவருங்களிக்கச்சிகிப்பரிநடத்துசேவலனே
ஞாலமீதுனதுசிரடியவனைநலிதருபிணியறநினையாய்
தாலநீள்பாளைகட்குடஞ்சுமக்குஞ்சமரமாபுரியுறைகுகனே.

(இ - ள்.) நீலகண்டத்தையுடைய இறைவனும் கரியநிறத்தையுடைய திருமாலும் ஐந்துகரத்தையுடைய விநாயகரும் உமாதேவியும் தேவர்களும் சீலமுடைய முனிவர்களும் அவரொழிந்த ஏனையருங் களிகூர மயில்வாகனத்தை யூர்ந்தருளும் ஆண்மையுடையவனே, பனைமரத்திலுள்ள நீண்டபாளைகள் மதக்குடத்தைத்தாங்கும் திருப்போரூரிலெழுந்தருளி யிருக்கின்ற முருகக்கடவுளே, இந்நிலவுலகில் உனது சிறந்த அடியவனாகிய என்னைமெலிவுசெய்கின்ற பிறவிப்பிணிநீங்க நீ நினைந்தருளாய். (சா)

வடகலைக்கடலுந்தென்கலைக்கடலும்வருதிரைக்கடலுமுண்டிருந்த
திடமுறுமுனிவனிடர்க்கடலகற்றச்சிற்சுகக்கடலளித்தவனே

அடியவர்துயரமுறினிளங்கன்றுக்காவெனவருவதுன்னருளாம்
தடமலர்ப்பிரசஞ்சங்கின்வாயொழுகுஞ்சமரமாபுரியுறைகுகனே.

(இ - ள்.) வடமொழிக்கடலையும் தென்மொழிக்கடலையும் அலைமோதுகின்ற கருங்கடலையும் ஆசமித்திருந்த திடம்பொருந்திய அகஸ்தியமுனிவர் தமக்குண்டாய துன் பக்கடலையொழிக்க ஞானக்கடலையளித்த இறைவனே, பெரியதாமரைமலரிலுள்ள தேன் சங்கினிடத்தொழுகும் திருப்போரூரிலெழுந்தருளியிருக்கின்ற முருகக்கடவுளே, இளங்கன்றுகதறின் அதனையுணர்ந்து அக்கன்றைக்காத்தற்குவரும் அதன்புனிற்றாவைப்போல உனதடியவர்கள் துன்பமுற்றால் அத்துன்பத்தைக் கருதிவருவது உனதுதிருவருளாகும்.

கருங்கடலை எவ்வாறு ஒருழுந்தளவாக்கிப் பருகினரோ அவ்வாறே வரையறுக்கவொண்ணாத வடமொழியையுந் தென்மொழியையும் அளவிட்டறிந்தனரென்பார் வடகலைக்கடலுந் தென்கலைக்கடலுங் வருதிரைக்கடலு முண்டிருந்த எனவும், அம்முனிவர்க்குப்பரஞானத்தையளித்துச் சாக்கிராதீதத்தைத்தந்த ஞானாசிரியன் சண்முகனேஎன்பார் முனிவனிடர்க்கடலகற்றச் சிற்சுகக் கடலளித்தவனெனவும், கலைஞானத்தாலன்றி அன்பொன்றானே வழிபடும் அடியார்களோர்துன்பமுறின் எட்டுணையுந்தாழாத் தண்ணளியுடையானென்பார் அடியவர்துயரமுறினிளங்கன்றுக் காவெனவருவதுன்னருளாமெனவுங்கூறினார்.

இதனான் கலைஞானமும் உனதுதிருவள்ஞானமும் உன்றிருவடியினிடத்தன்பு மில்லாதயான் என்செய்யக்கிடந்தனனென்றவாறும். (எ)

புவனமீரேழும்பூத்திடுமெதுரப்பொற்பிடிநற்றனத்தீம்பால்
நவமணமாறுகுமுதவாய்வீசுநன் குறுமொண்சிறுகளிறே
திவமுறுகதிர்முன்னிருளெனவுனதுசீரடியவன்பிணிதவிர்ப்பாய்
தவமுனிவருக்குக்கரிகனியளிக்குஞ்சமரமாபுரியுறைகுகனே.

(இ - ள்.) பதினான்குலோகங்களையும் மீன்றருளு அழகியபெண்யானையினது நல்லதனத்திற் பெருகிய மிக்கசுவையையுடைய பாலின் புதியமணம் குமுதமலர்போன்ற ஆறுதிருவாயினும் வீசப்பெற்ற நன்மையமைந்த ஒள்ளியசிறியகளிறே, தவத்தையுடைய முனிவர்களுக்கு யானைகள் கனிகளைத்தரும் திருப்போரூரிலெழுந்தருளி யிருக்கின்ற முருகக்கடவுளே, சூரியகிரணத்தின் முன்னிருள்போல உனதுசிறப்பெடுத்துக்கூறும் அடியேனது பிணியைத்தவிர்த்தருள்வாய். (அ)

விண்குடியேறச்சூர்நகரோடவிழிசிவந்தன்பரானவர்க்குக், கண்குடியிருந்தமணியெனவறிவிற்கதியினைக்காட்டுசெம்பொருளே, எண்பெறுமடிமைபடைத்தவராள்வதியல்பதாமிசைப்பதென்னடியேன்,
தண்சுதைமாடங்கயிலைபோல்விளங்குஞ்சமரமாபுரியுறைகுகனே.

(இ - ள்.) தண்ணியசுண்ணச்சாந்து தீற்றியமாளிகைகள் கைலையங்கிரி போல்வெள்ளியவொளிவீசும் திருப்போரூரிலெழுந்தருளிருக்கின்ற முருகக்கடவுளே, விண்ணுலகில் விண்ணவர்கள்குடியேற, சூரபன்மனுடையநகர்குடியோட்டிழிய, கண்கள்செவந்தும், அன்பர்களுக்குக் கண்ணிற்குடியிருக்கும் பாவையைப்போலவென்னறிவினிடத்தில் நீங்காதிருந்து முத்திநெறியைக்காட்டும் மெய்ப்பொருளே, எண்ணத்தகும் அடிமைகளைப்படைத்தவர் அவரையாள்வது அவருக்கு இயல்பாகும் (அதுபோல அடிமையாகியவென்னை ஆள்வது உனக்கியல்பாகவிருக்க) ஆளவேண்டுமென்று அடியேன்கூறுவதெற்றுக்கு.

இதனால் தம்மைச்சரணமடையார்பால் விழி சிவந்துகோபக்குறியைக் காட்டித் தீநரகில் வீழ்த்தலும்,சரணமென்றடைந்தார்பால் அவரதுகண்மணியாகி அருட்குறியைக்காட்டி அவரறிவின்கண் யாவர்க்குங் கதியாயுள்ளதம்மைச் சிவமென்றுசாட்டியருள்வதும் இறைவனுக்கியல்பென்றுணர்ந்து சரண்புகாது அடிமையை ஆள் என்றுயான் வாளாகூறுவது என்னையோ அறியேனென்று கூறியவாறும். (௧)

கொடியசூர்த்தானைக்கருங்கடலுடைத்துக் குருதிவெஞ்செங்கடலாக்
கு,நெடியவேலுயர்த்தபுயத்திறையுனதுபேரருளேதெனவுரைக்கேன்,
அடியர்மார்க்கண்டர்க்காருயிரளித்தாங்களித்தனைநினதடியனுக்குந்
தடிபடுமெழிலியகிற்புகைமணக்குஞ்சமரமாபுரியுறையகுகனே.

(இ - ள்.) மின்னலிடும்மேகத்தைப்போல அகிற்புகைமணஞ்செய்யும் திருப்போரூரி லெழுந்தருளியிருக்கின்ற முருகக்கடவுளே, கொடியசூரபன்மனுடைய சேனையாகிய கரியகடலைமாற்றி வெவ்வியசெவந்த உதிரக்கடலாக்கிய நீண்ட வேலாயுதத்தைச்சார்த்தியருளிய திருப்புயத்தையுடைய இறைவனே, உனது தந்தை தனது அடியராகியமார்க்கண்ட முனிவருக்கு நிறைந்த ஆயுளைத்தந்ததுபோல உன்னடியானாகிய எனக்கும் உயிரைத்தந்தனை, ஆதலால் உனதுபேரருளையானென்னென்றெடுத்துரைக்கேன்.

உனதுதந்தை மார்க்கண்டேயர் மரணப்பிரமாதத்தை யென்று மறியாவாறுவாழ்வித்ததுபோல் யானும் பட்டிக்கடாவில்வரும் அவ்வந்தகனைப்பார்த்து, சூரபன்மனை யிருகூறாக்கிய சத்திவேல் என்னுவிடத்திருக்கின்றது அடா உன்னை இன்று புறங்காண்பதோடு இருகூறாக்குவேன் என்று அஞ்சாதுகூறி என்றும்வாழ நீயருள்செய்தனையென்பார் அடியர்மார்க்கண்டர்க்காருயிரளித்தாங்களித்தனை நினதடியனுக்கும் என்றார். (௧௦)

குறுங்கழி நெடில் விருத்தம் முற்றிற்று.

வேலுமயிலுந்துணை.

# குறுங்கழி நெடில் விருத்தம்.

பரிதிபோன்ஞானச்சுடரொளிவீசும்
　　பாழியங்களிற்றினுக்கிளையோய்
சுருதியின்முடிவைச்சிறியனேற்களித்த
　　சுந்தரமறப்பனோவடியேன்
அரிதுணர்பொருள்கணினதருளடைந்தோர்க்
　　கரிதலவென்பதுமறிந்தேன்
கருதியபொருள்கடருந்திருப்போரூர்க்
　　காங்கெயாதேங்கொளிமணியே.

(இ - ள்.) எண்ணியபொருள்களை இல்லையென்னுதளிக்கும் திருப்போரூரி லெழுந்தருளியிருக்கின்ற கங்காபுத்திரனே, ஒளிதவழுமிரத்தினமே, சூரியனைப்போல ஞானவொளியைவீசும் அழகிய வன்மைமிக்க விநாயகக்கடவுளுக்கு இளையவனே, வேதமுடிவைச்சிறியேனுக் குபதேசித்தருளிய அழகினை அடியேனினி மறப்பனோ. (அதுவேயுமன்றி) உன்னுடைய வருள்பெற்றவர்களுக்கு அறிவதற்கரிதாகிய பொருள்கள் அருமையல்லவென்பதையும் அறிந்தேன்.

அருளடையார்தார் நுண்ணிய பலநூலைக் கற்றுணர்ந்தாராயினும் அவற்றுள் நுண்ணியபொரு ளுணர்ந்திடுவாரல்லர் என்பதையும், அருளுடையார் அவற்றையெளிதாகவுணர வல்லரென்பதையு மறிந்தேனெனவும், வேதாந்தத்தின் பொருளுணராது அகம்பிரமமென் றகங்கரித்திருந்த எனக்குச் சிவம் பிரமமென்று காட்டியசுந்தரத்தை மறப்பனோவெனவுங்கூறியவாறும். (க)

மகவினுக்கிரங்குமன்னைபோற்கன்றை
　　மருவிவந்திரங்கியபசுப்போற்
புகலடைந்தவனுக்கிரங்கொருவனைப்போற்
　　புலையனேற்கிரங்கியாண்டளித்தோய்
இகலுறுசூலப்படையனீன்றெடுத்த
　　வெந்தைநின்னடைக்கலமடியேன்
ககனமூடுருவுஞ்சிகரியம்போரூர்க்
　　காங்கெயாதேங்கொளிமணியே.

(இ - ள்.) ஆகாயத்தையூடுருவிச் செல்லுங் கோபுரங்களையுடைய அழகிய திருப்போரூரி லெழுந்தருளியிருக்கிற கங்காபுத்திரனே, ஒளிதவழுமிரத்தினமே, இளங்குழவிக்கு மனங்கசிந்துருகுந்தாயைப்போலவும், கன்றைக்கருதி

அது அருகணைய விரைந்துவந்து அம்மாவென்றழைக்கும் பசுவைப்போலவும், அடைக்கலமென்றடைந்தவனுக்கு இன்சொல்வழங்கு மொருவனைப்போலவும், நீசனாகிய எனக்குத் திருவுள்ளமிரங்கி யடிமைகொண்டு காத்தவனே, பகைமேற்கொண்ட சூலப்படையுடைய இறைவனீன்றருளிய எமதுதந்தையே இனியடியேன் உனக்கடைக்கலம்.

மகவிற்கிரங்கு மன்னைபோல் என்றதனால் தாய் மகவழுங்காலத்து வந்து பாலூட்டுபவளெனவும், கன்றைமருவிவந் திரங்கியபசுப்போ லென்றதனால் பசுவே கன்றைக்கருதி யோடிவந்தூட்டுவதெனவும், புகலடைந்தவனுக்கிரங் கொருவனைப்போலென்றதனால் கண்ணோட்டமுடையார் தம்பாலிரந்தவர்க்கு அவரது இரவொழிய இன்சொல்வழங்குவனெனவுங்கொள்ளக்கிடந்தன. ஆகலான் இறைவன் பெத்தக்காலத்து ஆன்மாக்கள் வேண்டும் வேண்டும் பொருள்களைத்தாய்போலளிப்பவனெனவும், அவ் வான்மாக்கள் முத்திக்காலத்து அன்புடையராதலால் பசுவைப்போலத்தானேவந் தனுக்கிரகஞ் செய்பவனெனவும், அம்முத்தான்மாக்கள் சீவன்முத்திநிலைக்கண் சாரும் பிராரத்த விகற்பங்களுக்கெல்லாம் புகலடைந்தவனுக் கிரங்குமவன்போலத் தாமே சார்வாகவிருந்து இடுக்கண்வருந்தோறும் அருண்மொழிகூறி அப்பிராரத்தவாசனையால் பேதியாவாறு அநுக்கிரகஞ் செய்பவனெனவுங் கூறியவாறும். (உ)

நதியினதிருபாற்கரைகளிற்றிரிந்து
நடைதளர்ந்துழன்றிடுபசுப்போல்
மதிமருண்டுழன்றசிறியனையழைத்துன்
மலர்ப்பதத்திருத்தியாண்டளித்தோய்
அதிகநின்கருணைக்கடலினுக்குவமை
யாதினையெடுத்தினிதுரைக்கேன்
கதிதருமறிஞர்பரவியபோரூர்க்
காங்கெயாதேங்கொளிமணியே.

(இ - ள்.) (ஆன்மாக்களுடைய பக்குவாபக்குவங்களைக் கருதிக்) கதிகளைக்கற்பிக்கும் ஞானிகளால் புகழப்பட்ட திருப்போரூரிலெழுந்தருளியிருக்கின்ற கங்காபுத்திரனே, ஒளிதவழுமிரத்தினமே, ஆற்றினிருகரைகளினும் திரிந்து நடைசோர்ந்துழலும் பசுவைப்போல மதிமயங்கி அங்குமிங்குமா யுழன்ற அறிவிற் சிறியேனை நீயே வாவென்றழைத்து உனது திருவடித்தாமரையில் நீங்காதிருத்தி அடிமையாகக்கொண்டு காத்தவனே, உனதுபேரருட்கடலுக்கு உவமையாக வெப்பொருளையெடுத் தினிமையாகக்கூறுவேன்.

நதியினதிருபாற் கரைகளிற்றிரிந்து நடைதளர்ந்துழன்றிடு பசுப்போன் மதிமருண்டுழன்ற சிறியனைஎன்றதனால் நதி அன்பாகவும், நதியினதிருகரை

வேதாகமங்களாகவும்,அக்கணையிற்றளிர்த்த புற்கள் சரியைகிரியாயோக ஞான ங்களாகவும்,அச்சரியையாதிகளை விரும்பியதன்னைப் பசுவாகவும், பசுவாகியதா ன்வேதம் ஆகம மென்னுமிவ்விரண்டின் பொருளொன்றென் றுணராது வேத மொருபொருள் கூறியதெனவும், ஆகமம் முப்பொருள் கூறியதெனவும் மயங்கி ஓரிடத்தும் நிலைபெறுது இருகரையிலு மங்குமிங்குமாய்த்திரியும் பசுப்போல அவ்விரண்டினுமாராய்ந்தஆராய்ச்சியைத் திரிந்ததாகவும்,அவ்வாராயச்சியான் வேதாகமங்களின் பொருளொருமையுணராமையான் அநுபவங்கூடாமையை நடைதளர்ந்துழன்றதாகவும், கரையையடைந்து புல்மேயப்பெற்றும் வயறு நிரம்பும் வகையறியாப் பசுப்போல் வேதாகமவுணர்ச்சியால் சரியையாதிகளில் நிலைக்கப்பெருது அறிவுநிலைமாறியதை பசுப்போல்மதிமருண்டுழன்ற சிறியனுக வுங்கூறி, நிலைமாறியதன்னைத் தாமே வந்தடிமைகொண்டு அருளன்றி வேதாக மங்களி னுண்மையையறியா யென்று தன்னருளில் நிலைபெறுத்தி அவ்வருள் நிலை குறையாவாறு அருட்பணியாகிய சரியையினிற்கச்செய்த பெருங்கருணை க்கு இலக்கொன்றுமின்மையையுணர்ந்து யானிவ்விறைவன் புகழையென் னென்றுகூறிவே னென்பார் அழைத்துன்மலர்ப்பதத் திருத்தியாண்டளித் தோ யதிகநின்கருணைக்கடலினுக்குவமையாதினை யெடுத்தினிதுரைக்கேன் என்றார். (௩)

மருளனையளிக்கத்தொடங்கினேனவன்றன்
மனமொழிமெய்களினிகழும்
தெருளறுசெயலைநோக்கிடானதுபோற்
சிறியனையளித்தலுன்கடனே
இருளறவீசுஞ்சுடர்விடுவடிவேற்
கிறையவாகுறுமுனிகுரவா
கருடவாகனத்தோன்மருகனேபோரூர்க்
காங்கெயாதேங்கொளிமணியே.

(இ-ள்.) இருள்கெட வொளிவீசும் வடித்தவேலாயுதத்திற்கு இறைவனே, அகஸ்தியமுனிவருக்காசிரியனே, கருடவாகனத்தையுடைய திருமால்மரு கனே, திருப்போரூரிலெழுந்தருளி யிருக்கின்ற கங்காபுத்திரனே, ஒளிதவழு மிரத்தினமே, அறிவுமயங்கிய ஒருவனைக்காக் கத்தொடங்கினவன் அம் மயக் குடையவனது மனவாக்குக் காயங்களினின்று வெளிப்படும் தெளிவற்ற தொ ழிலைக்கருதிப்பாரான், அதுபோலச் சிறியேனைக் காத்தலுனதுகடனாகும்.

இதனுன் மலமயக்குடையனுகிய யான் அம்மயக்கத்தால் முப்புறச்சமயக் கோட்பட்டு அதுவேபொருளென்று அவற்றுள்மனமொழி மெய்களைச்செலுத் தினேனுயினும், நீ அக்குற்றத்தைக் கருதிக்கைவிடாது, அம்மயக்கநூல்வழி யைத்தூர்த்து,சிவத்தொடுசம்பந்தமாகிய சைவநூல் வழியிலே என்னை நிறுத்த லுனதுகடமை. எங்ஙனமெனின், மருளனையளிக்கத் தொடங்கினேனவன்

றன் மனமொழிமெய்களினிகழுந் தெருளறுசெயலை நோக்கிடானதுபோலா மென்று கூறியவாறும். (ச)

வஞ்சனேனெஞ்சின்மாற்றுதற்கரிதா
மலினவாதனையெலாந்தவிர்த்திங்
குய்ஞ்சிடவடியேனஞ்சலென்றளித்த
வுனதருண்மறப்பனோசிறியேன்
செஞ்சிறையடித்துக்களத்தினைநிமிர்த்துச்
சிரம்வளைத்தொலித்தசேவலனே
கஞ்சனெஞ்சறியாதவன்மகிழ்போரூர்க்
காங்கெயாதேங்கொளிமணியே.

(இ-ள்.) செவந்த இறகினையடித்து கழுத்தைநிமிர்த்து தலையைவளைத்து ஒலிக்கின்றசேவற்கொடியை யுடையவனே, கம்சனுடையவஞ்ச நெஞ்சத்தை யறிந்தயாதவகுலத்திறைவனாகிய மாயோன்மனமகிழும் திருப்போரூரிலெழுந் தருளியிருக்கின்ற கங்காபுத்திரனே, ஒளிதவழுமிரத்தினமே, வஞ்சகனாகிய எனதுள்ளத்தில் நீக்குதற்கரிதாகிய எல்லாவாசனைகளையும்நீக்கி இவ்விடத்தில் அடியேனுய்ந்துபோக அஞ்சாதையென்று அபயந்தந்த உனது திருவருளைச் சிறியேனாகியயான் மறந்துவிடுவேனோ (மறக்கேனென்றபடி.)

இதனான் மலினமாகியவாதனை யெல்லாமென்னைவருத்த அவ்வாதனையை எனதுபோதத்தால் மாற்றவறியாது மாழாந்திருக்க நீ எளிவந்து அருளாலதனை மாற்றி அஞ்சலையென்றவுனது அருளினைமறப்பேனாயின் யான்பிழைப்பனோ அஃதால் என்னை நீ சிவமென்று கூறினும் யான் அடிமையே நீ யெனக்கண்டவனே என்று முத்தியிலும் அடிமையையே விரும்பியவாறும்.

“இக்கணமே முத்தியினையெய் திடினுமியானினைந்த, வக்கணமேயானந் தந்திடினு - நற்கணத்தார், நாயகற்குநாயகிக்கு நானடிமையெப்பொழுது, மாயிருத்தலன்றியிலே னியான்.”

எனக்கூறியசித்தாந்தவாக்கியத்தாலுணர்க.

இரவொடுபகலுமிரவொடுபகல்கள்
இன்றியவீட்டினிதிருந்துன்
குரவணிபாதகமலமீதெழுந்த
குளிர்நறுவெள்ளமென்றடைவேன்
மரகதவொளியேய்பருமயிலேறு
மன்னவாவென்னுயிர்த்துணைவா
கரவறுமுளத்தோர்நிலவியபோரூர்க்
காங்கெயாதேங்கொளிமணியே.

(இ - ள்.) மரகதவொளியை வீசுகின்ற பெரிமயில்வாகனத்திலெழுந் தருளிவருமரசனே, எனதுயிர்த்துணைவனே, கரவடமில்லாத நெஞ்சத்

தையுடையவர்கள் விளங்குகின்ற திருப்போரூரிலெழுந்தருளியிருக்கின்றகங் காபுத்திரனே, ஒளிதவழுமிரத்தினமே, இரவும்பகலும் சகலகேவலங்களைக் கடந்த முத்திவீட்டி லினிதாக விருந்து உனது குராமலரணிந்த திருவடித்தாம ரையில் மீதூர்ந்தெழுந்த குளிர்ந்த தேன் வெள்ளத்தை யென்றடைவேன்.

முன்னர்க்கூறிய இரவொடுபகல் காலங்களையும் பின்னர்க்கூறிய இரவொ டுபகல்கள் சகலகேவலங்களையும் குறித்ததெனவும், வீடு சகலகேவலாவஸ்தை களைக்கடந் ததெனவும், பாதகமலம் அவ்விருவவத்தையுங்கடந்து சுத்தாவத் தையினிற்குஞ் சுத்தான்மாக்களுக்குச் சிவானந்த வெள்ளத்தைத்தருவதென வுங்கொள்ளக்கிடந்தன. (சு)

மனநினைவனைத்துமொழிந்துமூடமும்போய்
மன்னுநின்னருளொளிபுகுந்தாங்
கினனிறவயிரக்கிரியெனவசைவற்
றிருக்குநாளெந்தநாளடியேன்
நனைமலர்க்கூந்தற்கவுரிகண்டுவப்ப
நகைமுகமலர்ந்தெதிர்வருவோய்
கனவினஞ்சுரந்துபொழிதிருப்போரூர்க்
காங்கெயாதேங்கொளிமணியே.

(இ-ள்) தேனிறைந்த மலர்மாலைசூடிய் அளகத்தையுடைய உமாதேவியார் கண்களாற்கண்டுமகிழ ஒளியாலழகுபெற்ற திருமுகமலர்ச்சியோடு எதிரேவரு கின்றவனே, மேகபடலங்கள் நீர்சுரந்து விடாது பொழிகின்ற திருப்போரூரி லெழுந்தருளியிருக்கின்ற கங்காபுத்திரனே, ஒளிதவழுமிரத்தினமே, அடி யேன் மனத்தின் செயலாகிய நினைவெல்லாமொழியப்பெற்று, அதனாலஞ் ஞானமும் நீங்கி நிலைபெற்றவுனது அருளொளியில் நுழைந் தங்கு சூரியனைப் போலப்பிரகாசிக்கின்ற வயிரமலையொத்து, சலனமற்றிருக்குநா ளெந்நாள்.

மனத்தினினைவு சங்கற்ப விகற்பங்களாம். அவைவருதல் திருசிய பதார்த்தங்களால், அப்பதார்த்தங்கள் பலவாதலால் அவைகாரணமாகவரும் சங்கற்பவிகற்பங்களும்பலவாம். அஃதேல் மனநினைவென்னது மனநினைவ னைத்துமெனவும், அம்மனநினைவனைத்து மொழியப்பெறின் யா னெனதென் முனைத்துவரும் அகங்காரமமகாரங்களுமடங்கும் அவையடங்கவே, அவற் றிற்கு மூலமாகிய அஞ்ஞானமும்போ மாதலால் நினைவனைத்துமொழிந்துபோ மென்னது மூடமும்போயெனவும், மனநினைவும் அஞ்ஞானமும் அகன்ற விடத்தே அருணிலைபெறுமாதலால் நின்னருளென்னது மூடமும்போய் மன் னுநின்னருளெனவும், அருள் நிலைபெற்றவிடத்து ஆன்மாவை யருள் தன்வசப் படுத்துமாதலால் அருளொளியென்னது நின்னருளொளிபுகுந்தெனவுங்கூறி னார். (எ)

ஆடகவரைமேற்றுருவனைப்போல
வாணவதிமிரநீத்திருந்த
வீடகம்புகுந்தங்கசைவறவிருக்க
வினையனேற்கென்றருள்புரிவாய்
ஏடகக்கூந்தற்கன்னியரிருவர்க்
கிசைந்துளகணவனேகமலக்
காடகமலர்ந்தவாவிசூழ்போரூர்க்
காங்கெயாதேங்கொளிமணியே.

(இ-ள்.) மலரணிந்தகூந்தலையுடைய தெய்வயானை வள்ளியம்மைஎன்னும் நாய்ச்சிமாரிருவருக்கும் மனத்துக்கிசைந்ததலைவனே, தாமரைக்காடலர்ந்ததடாகங்கள்சூழ்ந்த திருப்போரூரி லெழுந்தருளியிருக்கின்ற கங்காபுத்திரனே, ஒளிதவழுமிரத்தினமே, பொன்மலைமேலுள்ள துருவ சக்கரத்தில்வாழும் துருவனைப்போல் ஆணவவிருள் நீங்கப்பெற்றிருந்த மோட்சவீட்டில் நுழைந்து அவ்விடத்துச் சலனமற்றிருக்க தீவினையாளனாகிய வெனக் கெந்நாளருள் பாலிப்பாய்.

இப் பூலோகத் துநிலைபெற்ற மேருமலை எண்பத்துநாலாயிரம் யோசனையுயரமுள்ளது. அதன்மேல் பதினன்குலக்ஷத்துப்பதினாயிரம் யோசனையுயரமுள்ளது துருவபதம். அப்பதத்தில் வாழ்வோன் துருவன். அவன்கீழ்சப்தவிருடிகள் அவர்களின்கீழ் சனி - வியாழன் - அங்காரகன் - சுக்கிரன் - புதன் - நக்ஷத்திரங்கள் - சந்திரன் - சூரியன் ஆகிய இவர்கள் முறையே தத்தம்பதங்களில் வாழ்கின்றவர்கள். இவர்களுக்கெல்லாம் துருவனாதாரமாகி அவர்களையியக்கித் தானியங்கா தசைவறத் தன்னிலையினிற்பதுபோல் சமயகோடிகளெல்லாம் தத்தம் முத்தி நிலையையே நிலையாகக்கூறும் அந்நிலைகளுக்கெல்லாம் மேற்பட்டு நிலையாகி நிற்பது சித்தாந்தமுத்தி. எங்ஙனமெனின், சித்தாந்தமென்பது முடிபெனப்படும். படவே ஏனையவெல்லாம் அவற்றின்கீழுள்ள பூருவபக்ஷமென்றும், ஆகவே துருவபதமெவ்வாறு எல்லாப்பதங்களுக்குமேலாகி ஆதாரமானதோ அவ்வாறே சித்தாந்தம் எல்லாச்சமயங்கட்கும் ஆதாரமாகி ஆணவவிருளால் அவரவர் போதம்போந்தவாறெல்லாம் பதங்களைநிறுவி தன்னியல்பென்றுந் திரியாது நிற்பதாம். ஆதலால் ஆணவதிமிரமொழிந்த அச்சித்தாந்தமுத்தியில் வினையேனாகியயான் நிற்க எந்நாள் அருள்செய்வையோவென்பார் ஆடகவரை மேற்றுருவனைப்போல வாணவதிமிரநீத்த வீடகம் புகுந்தங் கசைவறவிருக்க வினையனேற் கென்றருள்புரிவாய் என்றார். (அ)

உயிர்ப்பிணிதவிர்க்குமருத்துவனென்கோ
வுடற்பிணிக்கொருமருந்தென்கோ
மயக்குறுமனத்தினினைவெனும்பனியை
மாற்றியகதிரவனென்கோ

வியப்புறுபுரணசொருபநின்னருளை
 வினையனேனேதெனப்புகல்கேன்
கயத்துரிதரித்தோன்புதல்வனேபோரூர்க்
 காங்கெயாதேங்கொளிமணியே.

(இ - ள்.) யானையின்றோலையுரித்துப் போர்த்தருளிய சிவபெருமான் குமாரனே, திருப்போரூரிலெழுந்தருளிய கங்காபுத்திரனே, ஒளிதவழுமிரத்தினமே, வியப்பினைத்தரும் எங்கும்நிறைந்தசொரூபனாகிய உனதருளை உயிரை வருத்தும்பிணியையகற்றும் மருத்துவனென்று சொல்வேனா (அல்லது) உடலைப்பற்றிய பிணியைமாற்றும் ஒருமருந்தென்று சொல்வேனா (அல்லது) மயக்கஞ்செய்யும் மனத்திலெழும் நினைவென்கிறபனியை மாற்றும்சூரியனென்று சொல்வேனா (ஆகியவிவற்றுள்) வினைவசத்தனாகியயான் எதனையறுதியிட்டுக் கூறுவேன்.

உயிர்ப்பிணி ஆணவமலம், உடற்பிணி கன்மமலம், மயக்குறுமனத்தினினை வெனும்பனி மாயாமலம், எனச்சொல்வகை செய்து உயிரைப்பற்றிய வியாதி ஆணவமலமெனவும் உடலைப்பற்றிய வியாதி கன்மமலமெனவும் நினைவைப் பற்றி வியாதி மாயாமலமெனவும் கொள்ளற்பாற்று. அங்ஙனங்கொள்ளவே பிணிவசத்தராகிய ஆன்மாக்களை இறைவன் ஆளாகவுடையானாதலானும் அவனே அம்மூவகைப்பிணியையு மகற்றுதலானும் உயிர்ப்பிணிதவிர்க்குமருத்துவனென்கோ உடற்பிணிக் கொருமருந்தென்கோ மனத்தினினைவெனும் பனியைமாற்றிய கதிரவனென்கோ எனக்கூறினார்.

அங்ஙனமாயினும் உயிரையும் உடலையும் பற்றியது பிணியாகவேயிருக்க இறைவனை ஓர்பிணிக்குமருத்துவனாகவும், ஓர்பிணிக்குமருந்தாகவும், நினைவின் மயக்கத்திற்கு கதிராகவுங்கூறியகாரணம் என்னையோவெனின்;—

உயிர்ப் பிணியாகிய ஆணவம் உயிரொடுவியாபகமாய்விரவிக் குணம்போல நிற்பதாகலான் குணத்தை மாற்றுதல்சேதனனாலன்றிச் சடமாகியவுடற்பிணியைமாற்றும் மருந்தாலாவதன்றாகலின் உயிர்ப்பிணியாகிய ஆணவத்தைமாற்ற அவ்வுயிர்க்குயிராகிய இறைவன் அறிவாய்நின்றகற்றுதலின் மருத்துவனாகவும், சடமாகியவுடற்பிணியைச் சடமாகிய அவுடதத்தைக்கொண்டே மாற்றுவதியல்பேயன்றி மருத்துவனா லாவதன்றாகலான் இறைவன் கன்மமலத்தை உடம்பான்மாற்றுதலான் மருந்தாகவும், மனத்தின்சங்கற்பரூபமாகிய நினைவு விடயகோடிகளால் ஆன்மவறிவைப்பனிபோல மூடுவதாகலான்பனியைமாற்றுஞ் சூரியன்போல இறைவன் அவ்வபரநினைவைப் பரவறிவினொளியால் மாற்றுதலின் கதிராகவுங் கூறியதென்றுணர்க.

அஃதால் உயிர்ப்பிணிதவிர்க்கு மருத்துவனென்கோ வுடற்பிணிக்கொரு மருந்தென்கோ மயக் குறுமனத்தி னினை வெனும்பனியை மாற்றியகதிரவனெ

ன்கோ என, இங்ஙனம் மருத்துவனுகவும் மருந்தாகவும் கதிரவனுகவும் உபகரித்தது அருளெனவும் அவ்வருளே இறைவனுக்குத் திருமேனியாதலால் நின்மலனுகிய இறைவனுக்கு உடம்பாகிய அத்திருவருள் மலமுடையானுகிய என்னேடொன்ருயிருந்து மும்மலப்பிணியையு மொழித்துத் தன்னருளினிற் கச் செய்தது மிகவியப்பாதலால் வியப்புறுபூரண சொருபநின்னருளை வினையனேனேதெனப் புகல்கேன் எனக்கூறினுர். (க)

ஆரியன்சுருதியனுபவமெனுமூன்
றூலுமென்னகத்தினிலிருந்த
கூரிருள்கடந்தநினதருளதனைக்
குறித்திடலதிசயந்தருமால்
சூரனதுரமுங்கிரியுமூடுருவிச்
சுடர்விடுசோதிவேல்பிடித்த
காரணுவெங்கும்பூரணுபோரூர்க்
காங்கெயாதேங்கொளிமணியே.

(இ-ள்.) சூரபன்மனுடையமார்பினும் கிரௌஞ்சகிரியினும் ஊடுருவிச்சென்று ஒளிவிடும் சோதிவேலைத்திருக்கரத்தி லேந்தியகாரணனே,எவ்விடத்தும் நிறைந்தபரிபூரணனே, திருப்போரூரிலெழுந்தருளி யிருக்கின்ற கங்கா புத்திரனே, ஒளிதவழுமிரத்தினமே, சுருதிகுருசுவானுபவமென்னு மிம்மூன்றினுலும் என்னுள்ளத்துட்படிந்த மிக்க ஆணவவிருளைக்கடந்ததாகிய உனதுதிருவருளைக்குறிக்குங்கால் அதிசயத்தைத்தராநிற்கும்.

என்னுள்ளத்தையே குடிகொண்டு என்னையும் என்தலைவனுகிய உன்னையும் காட்டாதுமறைத்துத் தானேதோன்றிவிளங்கிய ஆணவவிருளை, நீ குருவடிவாகிய திருமேனியினுலும் நீ கூறியசுருதியாகிய வாக்கியத்தினுலும் உணர்த்தவுணர்த்த யான் உணர்ந்துவருந்தன்மையாகிய அனுபவத்தாலும் ஒழித்து, என்னையும் உன்னையும் இருவர்க்குமிடையேநின்ற விருளையுங் காட்டிய திருவருளை நோக்கி, என்னன்பைக்குறிக்குங்கால் வியப்பினையேவிளைத்தலால் ஆரியன் சுருதியனுபவமெனு மூன்றூலு மென்னகத்தினிலிருந்த கூரிருள்கடந்த நினதருளதனைக் குறித்திடலதிசயந்தருமால் எனக்கூறினுர். (கo)

துறுங்கழிநேடில் விருத்தம் முற்றிற்று.

வேலுமயிலுந் துணை.

## குறுங் கழிநெடில்விருத்தம்.

மணிகிடந்திமைக்கும்பஃறலையுரகன்
வளைபடந்திசைதொறுந்தடவ
வணியலகெடுத்துச்சிறைபுடையடித்திங்
காடிடுதோகைவாகனனே
கணிதமிலுயிர்கள்வாடிடாதருளாற்
கனமழைகொடுத்தியற்புதமே
குணில்படுமுரசமுழங்கியபோரூர்க்
குமரனேயமரர்நாயகனே.

(இ-ள்.) இரத்தினங்கள்பொருந்தி விளங்கும் பலதலைகளையுடைய ஆதிசேடனது வளைந்தபடம் திக்குகள்தோறுந்தடவ, அழகியமூக்கினலெடுத்து சிறகினை யிருபக்கத்தினுமடித்து இங்குஅசைந்தாடும்தோகையையுடையமயில் வாகனனே, குறுந்தடியினல் அடிக்கப்படும் பேரிகையொலிக்கும் திருப்போரூரிலெழுந்தருளி யிருக்கின்றகுமாரக்கடவுளே,தேவர்கள்தலைவனே, எண்ணிறந்தவுயிர்கள் வாடாது அருளால் மேகத்தை மழைபொழியச்செய்வித்தவனே, இது அதிசயம்.

சந்திரனை ஏகமாகவும், சலசந்திரனைப் பலவாகவுங் காண்டல்போல் ஆன்மாவொன்றேயெனவும், ஆன்மப்பிரதிபலனமாகிய அந்தக்கரணவுபாதிவசத்தராகிய ஜீவர்கள்பலவெனவும் கூறும் பிம்பப்பிரதிபிம்பவாதம் அடாதெனமறுத்தற்குக்கணிதமிலுயிர்களென்றார். இதனை இடம்வந்துழி விரித்துக்காட்டுதும்.

கனைகடன்முகடுபுழுங்கிடவெழுந்து
கணவுடுகரந்தொளிர்கதிர்போ
னினைதருகருவிக்குழுவெலாங்கரந்தெ
னெஞ்சகத்தெழுந்தபேரொளியே
யனையிலுமினியகருணையாலுலகுக்
கம்புயன்மழைகொடுத்தாய்க்குக்
கொனையுறுகைமாறேதுளைபோரூர்க்
குமரனேயமரர்நாயகனே.

(இ - ள்.) ஒலிக்குங்கடலினுச்சியில் உயிர்கள்வருந்தவுதித்து நக்ஷத்திரக்கூட்டங்கள் ஒளிமழுங்க வொளிவீசுகின்ற சூரியனைப்போல எண்ணத்தகும்

கருவிக் கூட்டங்களெல்லாம் தத்தம் அறிவுகெட எனது நெஞ்சகத்துள்தோன்றியபேரொளியே, திருப்போரூரிலெழுந்தருளியிருக்கின்ற குமாரக்கடவுளே, தேவர்கள்தலைவனே, தாயினுமினியகருணையினால் உலகினுக்கு அழகியமேகத்தை மழை பொழியச்செய்வித்த வுனக்கு யான்செய்யும் பிரதியுபகாரம் என்னையுண்டு நீகூறாய்.

சிவசூரியன் ஆன்மவறிவில் தோன்றுங்கால் தத்துவங்களின்ஒளி அச்சிவவொளியிலடங்கி நிற்குமென்னு முண்மையைக் காட்டுவார் கணவுகெரந்தொளிர்கதிர்போ லென்னுமுவமையை முன்னர்க்கூறிப் பின்னர்நினைதருகருவிக் குழுவெலாம் கரந்தெ னெஞ்சகத்தெழுந்தபேரொளியே என்றார். (உ)

விரிதலைப்புவனம்வெயிலினில்வெதும்பி
வீதருவாயினின்மிகுத்த
கருணையான்மாரிதந்துகாத்தளித்த
கனதையைச்சிறியனோவறிவேன்
அருணையங்கிரிநாதன்றமிழ்மணமும்
அரியகீரன்றமிழ்மணமும்
குரவினன்மணமுங்கமழ்தருபோரூர்க்
குமரனேயமரர்நாயகனே.

(இ - ள்.) அருணகிரிநாதர் பாடியதமிழின்மணமும், (தமிழாராய்ச்சியில்) வல்லநக்கீரர் பாடியதமிழின்மணமும், நல்லகுராமலரின்மணமும், மணக்கின்ற திருப்போரூரி லெழுந்தருளியிருக்கின்ற குமாரக்கடவுளே, தேவர்கள்தலைவனே, பரவியபுவனத்திலுள்ள வுயிர்களெல்லாம் வெயிலால்வாடியுயிரிழக்க வருங்காலத்தில் உனது மிக்ககருணையினால் மழையைத்தந்து காத்தளித்த பெருமையைச் சிறியேனாகியயானோ அறியவல்லன், (வல்லேனல்லனென்றபடி)

புவனங்கள் இருநூற்றிருபத்துநான்காதலால் விரிதலைப்புவனமென்றார்.

வேதநான்முகனும்விண்ணவர்கோனும்
விரிசடைமுனிவருமுனது
பாதபங்கயத்துக்கவர்கள்சிரணிகைப்
பங்கயங்குவிக்கநன்களித்தோய்
காதுறுபசியாலுயிர்தவியாமற்
கனமழைதந்துகாத்தளித்தாய்
கோதறுகருணைத்தெய்வநீபோரூர்க்
குமரனேயமரர்நாயகனே.

(இ - ள்.) திருப்போரூரி லெழுந்தருளி யிருக்கின்ற குமாரக்கடவுளே, தேவர்கள் தலைவனே, பிரமதேவனும் தேவேந்திரனும் விரிந்தசடையையுடைய முனிவர்களுமாகிய இவர்கள் உனது திருவடித்தாமரைமலருக்குத் தமதுசிறந்த அழகியகரங்களாகிய தாமரைமலர்களைக்குவிக்க நன்றாக அருள்செய்தவனே, வருத்துகின்ற பசியினால் உயிர்கள்வாடி வருந்தாமல் விடாமழையைப் பெய்வித்துக் காத்தளித்தனை. (அதனால்) குற்றமற்ற திருவருளே திருமேனியாகவுடைய இறைவன் நீயேயாகும்.

இதனான் மாயாசபளிதன் ஈசனென்று கூறுவார் கூற்றைமறுத்து அருட்சத்தியே வடிவென்றுணர்த்தக்கோதறு கருணைத்தெய்வ நீ எனவும், அடியார்கள்தமது செயலறுதியைக்காட்டுஞ் செயல்பற்றித்தொழிற்படும் கைகளையஞ்சலியாகக்குவிக்க இறைவன் அக்கைம்மலரைக் கண்டு அவரது நெஞ்சத்துட் பொதிந்திருக்கும் தனது திருவடிமலரைத்தருதலால் பாதபங்கயத்துக் கவர்கள் சீரணிகைப்பங்கயங் குவிக்க நன்களித்தோய் எனவுங்கூறினார். (ச)

வேடுவர்குலத்தைவிளக்கியமயிலும்
விண்ணரசளித்தகோமயிலும்
பீடுறுபுடையில்வாழ்வுறநிவந்த
பெரியநற்பவளமால்வரையே
வாடுறுமுயிர்கடழைத்திடமாரி
வளத்தைநீகொடுத்ததற்புதமே
கோடுறுசந்தச்சாரலம்போரூர்க்
குமரனேயமரர்நாயகனே.

(இ-ள்.) வேடுவரது குலத்தைப் பொலிவுபெறச்செய்த வள்ளிநாய்ச்சியாரும், தேவேந்திரன்பெற்ற தெய்வயானை நாய்ச்சியாரும், பெருமைபெற்ற இரண்டுபக்கங்களிலும்வாழ, உயர்ந்தோங்கிய பெரியநல்லபவளமலையே, கிளைகள் பொருந்திய சந்தனவிருட்சங்கள் செறிந்தசாரலையுடைய அழகியதிருப்போரூரிலெழுந்தருளியிருக்கின்ற குமாரக்கடவுளே, தேவர்கள்தலைவனே, பசிப்பிணியால் வாடியவுயிர்கள் அப்பிணியினின்றும் நீங்கிவிளங்க, மழையின்வளப்பத்தை நீ தந்தருளியது அதிசயமே.

தன்னைவளர்த்தவனாகிய இந்திரனைத் தனது நாயகரால் அரசாளச்செய்தனராதலால் விண்ணரசளித்தகோமயிலும் என்றதற்கு விண்ணுலக வாழ்வைத் தந்ததெய்வயானை எனப்பொருள் கொள்ளலுமொன்று.

முருகக்கடவுள் வள்ளிநாச்சியாரைக் களவிற் புணர்ந்தகாலத்து குறவர்கள் குமாரக்கடவுளென்றுணராது போர்புரிய அக்குறவர்களைத் தமது சேவலால்மா

ளச்செய்ய அஞ்ஞான்று வள்ளிநாய்ச்சியார் சற்றேமனங்குழைய அதனை இறைவன் கண்ணுற்று நீயே அவர்களையெழச்செய்வாயென் றருள அங்ஙனமே எழச்செய்தனராதலால் வேடுவர்குலத்தை விளக்கியமயிலும் என்றார்.

கன்றொருகுணிலாவிளவெறிந்தவர்க்குக்
காதன்மீக்கொளவருமருக
வென்றுநன்மாரிதந்துநீயெம்மை
யெழிலுடன்காப்பதுன்கடனே
நன்றுதீதென்றபொருளெலாங்கடந்த
ஞானவீடுதவுசற்குரவா
குன்றுதோறாடலுவந்தவாபோரூர்க்
குமரனேயமரர்நாயகனே.

(இ - ள்.) கன்றினை ஒருகுறுந்தடியாகக்கொண்டு விளாமரத்திலெறிந்த திருமாலுக்கு ஆசை மிக்குவளர வருகின்றமருகனே, நன்மைதீமையென்று சொல்லப்பட்ட எல்லாப்பொருளையுங்கடந்த மோக்ஷவீட்டைத்தந்தருளும் நல்லாசிரியனே, குன்றுதோறும் திருவிளையாடலை யுகந்தவனே, திருப்போரூரிலெழுந்தருளியிருக்கின்ற குமாரக்கடவுளே, தேவர்கள்தலைவனே, நீ எக்காலத்தும் நல்லமழையைப்பெய்வித்து என்னைப்பொலிவுடன் காத்தருள்வ துனது கடனாகும்.

மனச்செருக்கடையும் சிற்றின்பத்தையும் மனமாழ்கும் பெருந்துன்பத்தையுந் தருவதாகிய சொர்க்கநிரயங்கள்போலாது என்றுமாறாப்பேரானந்தத்தைத்தருவது ஞானத்தாலடையும் முத்தியாதலால் நன்றுதீதென்ற பொருளெலாங்கடந்த ஞானவீடென்றார். (சா)

முக்கணுயகனுமவன்புடைமயிலு
முறைமுறையெடுத்துமுத்தாடுந்
தக்கநற்குருந்தாயிருந்தநீயவரிற்
றண்ணளியாற்பெரியவனே
மிக்கவாருயிர்வாடுறுந்தருவாயில்
விண்மழைதந்துகாத்தளித்தாய்
கொக்கடுசத்திச்சுவலனேபோரூர்க்
குமரனேயமரர்நாயகனே.

(இ - ள்.) சிவபெருமானும் அவனதுவாமபாகத்தில் வீற்றிருக்கும் உமாதேவியும் முறைமுறையே யெடுத்துமுத்தாக விளையாடுந் தகுதியமைந்த நல்ல

இளங்குழவியாயிருந்த நீ அவ்விருவரினுந்தண்ணியவருளால் பெரியோனே, மாமரமாய்நின்ற சூரபன்மனை யிருகூறுக்கிய சத்திவேலை திருத்தோளின்மேல் சார்த்தியருளினவனே, திருப்போரூரிலெழுந்தருளிய குமாரக்கடவுளே, தேவர்கள்தலைவனே, நிறைந்தவுயிர்கள் பசியினால்மிகவும் வாட்டமுறும் அமையத்தில் ஆகாயத்தினின்றும் மழையைப்பெய்வித்துக் காத்தளித்தனை.

முருகக்கடவுள் இளங்குழவிப்பருவத்தே அசுரரைக்கடிவதிலும் அன்பரைக்காப்பதிலும் வன்மைவாய்ந்த திருவிளையாடல்புரிதலை அம்மையப்பர்நோக்குந்தோறும் மகிழ்ச்சிமீதூர அவ்வன்பான் உலகினர் தம்மக்கள்மாட்டுக்கழிபேருவகையான் தாய்மகிழ்ந்து தந்தையினிடத்தும் தந்தைமகிழ்ந்து தாயிடத்தும் தந்து எவ்வாறுமாறிமாறிமுத்தாடுவரோ அதுபோலப் பரசிவமும் பரையும் முத்தாடுதலால் முக்கணுயகனுமவன்புடைமயிலும் முறைமுறையெடுத்து முத்தாடு மெனவும், போகமூர்த்தியாய் எழுந்தருளியிருக்கும் அவ்விருவர்க்குமிடையே பாலசுப்பிரமணியராய் என்றும் வீற்றிருத்தலால் தக்கநற்குருந்தாய் இருந்த நீ எனவும், அவ்விருவரிடையில் பாலனுயிருந்தும் காலங்கண்டருளும் தம் மம்மையப்பர்போலாது தம்மடிநினைத்த அவ்வளவே காலங்குறிக்காது தண்ணளியை விரைந்தருளுதலால் அவரிற்றண்ணளியாற் பெரியவனே எனவுங் கூறினர்.

காலங்கருதாது அருள்செய்பவனென்பதை, பாண்டிமாதேவியும் குலச்சிறையாரும் சைவநலங்குன்றி அமணராற்பழிப்புண்டிடக்கும் தென்னவனை அப்பழியகற்றி யடிமை கொண்டருளல் வேண்டுமென்று தமக்கறிவிக்க; ஆங்கு திருநாவுக்கரசு சுவாமிகள் காலத்தைக்குறித்து அவ்வமணர்பால் செல்லவொண்ணுதென்று தடுத்தும் அத்தடையுட்படாது அக்கணமேசென்று அவ்வமணிருளொழித்து சைவநலம்விளக்கி அவ்வரசனையடிமைகொண்ட அற்புதத் திருவிளையாடலானுணர்க. (எ)

தங்கலொனுமச்சூர்க்குலம்வீட்டித்
　　தமனியத்தருவுறைசசிக்கு
மங்கலநாண்முன்கொடுத்துவானவரை
　　மகிழ்வொடுங்காத்தளித்ததுபோ
லெங்களையின்றும்வான்மழைபொழிவித்
　　தெழிலுடன்காத்தளித்தனைகான்
கொங்கலர்சோலைச்சாரலம்போரூர்க்
　　குமரனேயமரர்நாயகனே.

(இ - ள்.) நறுமணங்கமழும் மலர்கள்நிறைந்த சோலைகள்சூழ்ந்த திருப்போரூரிலெழுந்தருளி யிருக்கின்ற குமாரக்கடவுளே, தேவர்கள்தலைவனே,

பகைவனென்று கூறப்படும் அச்சூரபன்மனுடைய குலங்களைமாய்த்துப் பொன்னுலகில் கற்பகநிழலில்வசிக்கும் இந்திராணிக்கு முன்னுளில் மங்கலநாணைத்தந்து தேவர்களை மகிழ்ச்சியோடுங்காத்ததுபோல எங்களையிந்நாளிலும் விண்ணினின்றும் மழையைப்பொழிவித்து விளக்கத்தோடுங்காத்தருளினுய்.

விண்ணுடர் தமது பொன்னுட்டைச் சூரபன்மனுக்காக்கி மண்ணுடராய்த்திரிய அவரைமுன்போல் விண்ணுட்டைப்பொலிவாக்கி அந்நாடாளச்செய்து சசியின்மங்கல நாண்காத்ததுபோல் இம்மண்ணுடு,விண்ணுடுசூரபன்மன்வசப்பட்டடிருந்தகாலத்து எவ்வாறு பொலிவிழந்ததோ அதுபோலாக, அவ்விண்ணினின்றும் மழைபெய்வித்து இந்நிலமங்கையரையுங் காத்தனனென்று கொள்க.

அல்லதூஉம் விண்ணுடர் போக நலமிழந்தகாலத்து அவர்க்கிடமாயும்,அவரிழந்தசிவபுண்ணியத்தை மீளக்கூட்டியும் வாழச்செய்தது மண்ணுலகாதலால் அவ்வொற்றுமை கருதி அவ்வானுலகால் வாழச்செய்தனனென்று கொள்ளலுமொன்று. (அ)

பாகடுவெள்ளைக்குஞ்சரப்பிடரிற்
பால்புரைவெள்ளியங்கிரிமேற்
சேகுறுபவளமால்வரையிருந்த
செய்திபோற்சுரர்தொழவிருந்தோய்
வேகவெம்பசியால்வருந்திடாதெம்மை
விண்மழைதந்துகாத்தளித்தாய்
கோகனகப்பூந்தடஞ்செறிபோரூர்க்
குமரனேயமரர்நாயகனே.

(இ - ள்.) பாலையொத்த வெள்ளிமலையின்மேல் வயிரம்பற்றிய பவளமலையிருக்குந்தன்மைபோல் மதமிகுதியினுல் பாகன்புடைக்கும் வெள்ளையானையின்பிடரின்மேல் தேவர்கள்வணங்க இருந்தவனே, தாமரைத்தடாகங்கள் சூழ்ந்த திருப்போரூரிலெழுந்தருளி யிருக்கின்றகுமாரக்கடவுளே, தேவர்கள் தலைவனே, மிக்கதீப்பசியால் வருந்தாது விண்ணினின்றும் மழைபெய்வித்து எம்மைக்காத்தளித்தனை.

கைலையென்னும் இரசிதமலையின்மேல் பவளம்போலும் திருமேனியையுடைய தந்தையாகிய பரமசிவன் வீற்றிருப்பதுபோல் செவ்வேளாகியதாமும் ஐராவதமென்னும் கஜமலையின்மேல் வீற்றிருந்தன ரென்பார் பாகடுவெள்ளைக்குஞ்சரப்பிடரிற்பால்புரை வெள்ளியங்கிரிமேற் சேகுறு பவளமால்வரையிருந்த செய்திபோல் சுரர் தொழவிருந்தோய் என்றார். (க)

மாண்செறியடியார்வேண்டியவரங்கண்
மாறிடாதளித்திடுமுனைப்போற்
காண்கிலேனொருதேமூன்றுலகிடத்துங்
காட்சியாற்கேள்வியாற்றமியேன்
சேண்படுமுகிலான்மழைவருவித்துச்
சிற்றுயிர்காத்தினிதளித்தாய்
கோண்படுசெங்கமுழங்குறுபோரூர்க்
குமரனேயமரர்நாயகனே.

(இ - ள்.) வளைந்தவடிவினையுடைய சங்கங்கள்மாறுதொலிக்கும் திருப்போரூரிலெழுந்தருளி யிருக்கின்றகுமாரக்கடவுளே,தேவர்கள்தலைவனே,ஆகாயத்திற்பரவிய மேகத்தால் மழையைப்பெய்வித்துச் சிற்றுயிர்களைக்காத்து இனியவருள் செய்தனை (அதனால்) பெருமைசெறிந்த அடியார்கள் வேண்டிய வரங்களை வேண்டியவாறே அளிக்கவல்ல உன்னைப்போல மூன்றுலகத்தினும் ஒருதெய்வமுண்டென்று அடியேன் பிரத்தியக்ஷத்தாலும் கேள்வியினாலும் கண்டது மில்லை, கேட்டதுமில்லை.

திருமயிலையென்னுந் திருப்பதியின்கண் இறைவன்பால் நீங்காதநேசமுடையேன் யானென்று பரசமயிகளெல்லாமறிய சிவநேசரென்னுந் திருநாமம் புனைந்த அன்பாளர், சிவநேசம் உலகமுற்றும்பரவ ஆளுடையபிள்ளையார் சிவஞானப்பாலுண்டு சிறுசமணர் அடங்கலுமடங்குமாறு திக்விஜயஞ் செய்து வருகின்றாரென்று, தமதுசெவிப்புலனுக்கெட்டிய அத்துணையே, அவ்வாளுடையபிள்ளைக்கே தமதுடமையோடுதாம் ஆளாகுவதன்றி வேறுகதியொன்றில்லை என்றெண்ணியொழுகுங்கால், தனதுபெண்கொடியிறக்க, அதனைநீறாக்கி அதனங்கத்தைப் புறம்பாக்காது இவ்வங்கம் நம்மை யுடையாராகிய ஆளுடையபிள்ளையாரது உடைமையாதலால் அவருடைமையை நாம்பாதுகாத்து, அவரதுசந்நிதியில் செலுத்துவதே கடனுமென்று எண்ணிப்போற்றிவர, அவ்வுடைமையை யுடையராகிய ஆளுடையபிள்ளையாராண்டெழுந்தருள,அவ்வங்கத்தை அப்பிள்ளையாரது திருமுன்னிட, அவ்வங்கத்தைநோக்கி இவ்வங்கத்தையோ நமதுடைமையென்று தந்தனையென்று அவ்வங்கத்தையும் அவரையும்புறக்கணிக்காது அன்புமிக்குடையராய் அச்சிவநேசரது சீலத்தைக்கருதி அவ்வங்கத்தைப்பூம்பாவையாக்கிய தண்ணளி;தெய்வமென்னும் பெயருடைய எத்தேவரிடத்து மின்றாகலான் மாறிடாதளித்திடு முனைப்போற் காண்கிலேனொருதேமூன்றுலகிடத்துங் காட்சியாற்கேள்வியாற்றமியேன் எனவும், அதுபோலும் இப்போரியின்கண் நெடுநாள்மழையின்றிவறப்ப அதனாலுயிர்கள் சாம்பி என்மாட்டுக்கூற யான் திருவீழிமிழலையில் படிக்காசால் வறுமை நோய

கற்றி மழைபெய்வித்த பெருங்கருணையை நாடி வேண்ட, அக்கணமே மழை பெய்வித்து உயிர்களெல்லாம் உடம்போடுவாழச் செய்தனனுகலான் சேண் படுமுகிலான்மழைவருவித்துச் சிற்றுயிர்காத்தினிதளித்தா யெனவுங்கூறினூர்.

அல்லதூஉம் ஏனையதேவர்களைப் போகமோக்ஷங்களைவேண்டிப் பொறிகளையடக்கியும் கரணங்களையொடுக்கியும் குணங்களைப்போக்கியும் அறிவிலா அசேதனப்பொருள்போல் அளவிறந்தகாலம் தவங்கிடந்து தியானிப்பாராயின் அருள்செய்யவல்லரும், அவ்வாறுதவமியற்றுங்கால் மேற் கூறியபொறிகளும் காணங்களும் குணங்களும் தத்தஞ்செயலைக்காட்டுமோயின் அத்தவமுடையோரைக் கனவிலுங்கருதாதொழிவோரும் என்றே புராணுதிளால் கேட்பதும், அப்புராணுதிகளிற் கூறியவாறே தவங்கெடாதியற்றியவர்க்குக் காட்சிதந்தளித்தக்ஷேத்திரங்களைக் காண்பதுமேயன்றி, தவஞ்செய்யாமலும் பொறிகளையடக்காமலும் போக மோக்ஷங்களைவிரும்புவாராயின், அவர்களுக்கும் அவற்றை அத்தேவர்க ளளிப்பா றொன்று கண்டது மில்லை கேட்டது மில்லை எனக்கூறினூரென்பது மொன்று.

இதனுன்போகமோக்ஷங்களைக் கருதிவிரும்புவோர் பரமசிவன்முதலையாகிய எமதிறைவன் விரும்புந் தவமாகிய பரசமயக்கோட் பாட்டுக்குடன்படாது மறுத்தலையும், அவன்விரும்புங்குணமாகிய சிவநேசமுடைமையும் உடையராயின் எளிதிற்பெறுவாறொன்று உபாயங்கூறியவாறுமாம். (கo)

### குறுங்கழி நெடில் விருத்த முற்றிற்று.

உ

வேலுமயிலுந்துணே.

## குறுங்கழிநெடில்விருத்தம்.

அருட்கடறதும்பிக்கவுட்செவிச்சார
லருவிபாய்ந்தெழிறருமசலம்
விருப்புறமருப்பிற்கடகமொன்றெடுத்து
வீறுகிம்புரியெனத்தரிப்போய்
சுரும்பினந்தொடருங்குதுப்பினர்மயக்கிற்
றுளேந்துருதெனேயினியளிப்பாய்
பொருப்பனபுயத்தோய்மயிற்பரியுகைத்தோய்
போரிவாழாறுமாமுகனே.

(இ-ள்.) கருணேயாகிய கடல் பெருகி செவியி னருகிலுள்ள கதுப்பின் வழியே அருவியைப் போலும் பாய்ந்து பொலிவினேக்காட்டும் விநாயகக்கட வுள் மகிழ, அவரது ஒற்றைக் கொம்பில் தன்கைக்கடகமொன்றெடுத்து பெரு மை பெற்ற கிம்புரியாகத் தரிப்பவனே, மலேயையொத்த திருப்புயங்களேயு டையவனே, மயில்வாகனத்தை யூர்ந்தருள்கின்றவனே, திருப்போரூரில் வா ழ்கின்ற அறுமுகக்கடவுளே, வண்டின் கூட்டங்கள் விடாது மொய்க்கும் கூந்தலேயுடைய மங்கையரது மயக்கத்தில் ஆழ்ந்து மயங்காது என்னே இனி யேனுங்காத்தருள்வாய்.

விநாயகக்கடவுளே அசலம் எனக்கூறி யதனல் மதநீரை யருவியெனவும், அவ்வருவிமலேயினின்றிழியும் அருவிபோலாது கடல்போலப் பெருகிவருவ தனல் கடல்ததும்பி யெனவும், அக்கடல் பிறவிவெப்பொழிக்கும் கருணே யாதலினல் அருட்கடலெனவும், அவ்வருண்மதத்தைக் காட்டுவது யானேமுக மாதலால் அத்திருமுகம் அணிபெற அறுமுகவன் அவரது எயிற்றில் கடகம ணிந்தனனுதலால் கடகமொன்றெடுத்து வீறுகிம்புரி யெனத்தரிப்போய் என வுங் கூறினர். (க)

அறிவுதன்னினேவிற்கலந்துறுபோதி
லரும்பரமுயிர்சகமுளவாம்
பிறிவிலவ்வறிவந்நினேவினேயகன்றூற்
பேதாபேதங்களொன்றின்றி
நெறியுறத்தானே தன்னிடத்திருக்கு
நிச்சயமென்றெனக்கிசைத்தான்
பொறிமறுமார்பன்மருகவேளேயாள்
போரிவாழாறுமாமுகனே.

(இ-ள்) பரசிவம் தனது சங்கற்பரூப சக்தியோடு கூடும்பொழுதில் முன்னர் தம்மாட்டொடுங்கியுள்ள நினைத்தற்கரிய வீசனும் ஆன்மவர்க்கங்களும் உலகமும் மீள உண்டாகுமெனவும், சத்தியைவிட்டுநீங்காத அச்சிவம் அச்சங்கற்பத்தினின்றும் நீங்குமாயின், பிரபஞ்சம் பிரமத்திற்கு பேதமென்றும் பிரமம் பிரபஞ்சத்தி லபேதமா யிருப்பதென்றுங் கூறுங் கூற்றுக் கிடமில்லாமல், அத்வைதவிலக்கணத்தால் யாவு மியங்கச் சுயம்பிரகாசரூபமாகவே விளங்குமெனவும், இதுவேநிச்சயமெனவும், இலச்குமி வீற்றிருக்கும் திருமார்பையுடைய திருமாலுக்கு மருகனும் என்னையடிமை கொண்ட திருப்போரூரில் வாழ்கின்றவனுமாகிய அறுமுகக் கடவுள் எனக்கருளினான்.

அறிவுஎன்றதை பரமசிவமெனவும், தன்னினைவு என்றதை அச்சிவத்தின் வேறாகாத சங்கற்பரூப சக்தியெனவும், கலந்துறுபோதில் என்றதை, ஞானசொரூபியாகிய சிவம் அப்பனாகியும் கிரியாசொரூபியாகியசத்தி யம்மையாகியும் திருவுருக்கொண்ட இரண்டுருவமுமொன்றாய்க் கூடுங்காலத்திலெனவும் அரும்பரமுயிர்சக முளவாம் என்றதில் அரும்பரம் என்றதை - சிவம் உருவமாகவும் அருவமாகவும் உருவாரூபமாகவும் கொண்ட நவபேதங்களெனவும் உயிர் என்றதை விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலாகலராகவிருக்கின்ற ஆன்மவர்க்கங்களெனவும், சகம் என்றதை சுத்தம் அசுத்தம் பிரகிருதி என்னும் மாயாகாரியங்களாகிய புவனபேதங்களெனவும், உளவாம் என்றதை - இம் மூன்றும் அநாதி நித்யமாயுள்ளதெனவும், பிறிவிலவ்வறிவு என்றதை - பொன்னுக்குநிறமாயுள்ள மாற்றானது பொற்கட்டியினிடத்தும் அப்பொன்னாலாகிய கடகமுதலியவைகளிடத்தும் வேறாகாது நிற்றலைக்காண்டல்போல் சிற்சத்தியினிடத்தும், பிரபஞ்சகாரியார்த்தமாகத் திருவுருக்கொண்ட பஞ்சகிருத்திய காரணிகளாகிய சத்திகளிடத்தும் பஞ்சகிருத்திய மூர்த்தியாய சிவம் நிற்குமெனவும், அந்நினைவினையகன்றால் என்றதை பரிக்கிரக சத்தியாகிய மாயையில்பிரபஞ்சமுத்தொழிற்படச்செய்து அத்தொழிற்குரிய திரிமூர்த்திகளின் வேறாகி துரிய சிவமாகிநிற்குங்கால் எனவும், பேதாபேதங்களொன்றின்றி என்றதை - படிகத்தில் பொன்மை நீலாதிவன்னபேதங்கள் பொருந்தி நிற்குங்கால் அந்நிறங்களுக்கு வேறாகப்படிகத்தையும் படிகத்துக்கு வேறாகநிறங்களையும் காணக்கூடாததுபோல் அத்துரியசிவம் ஆணையென்னும்பரியாயப் பெயருடையதனது சிற்சத்தியால் பிரபஞ்சம்முத்தொழிற்படுங்கால் பேதமாய் நிற்குமென்பதும்அபேதமாய்நிற்குமென்பதுமின்றி அவையேயாய்தானேயாய் அவையே தானேயாய் இருத்தலாகிய நிலையையெனவும், நெறியுற என்றதை மேற்கூறிய அத்வைதநெறியால் சடசித்துக்களாகிய சேதனாசேதனப் பிரபஞ்சங்களெல்லா மியங்கச் செய்தலை எனவும், தானே தன்னிடத்திருக்கு மென்றதை தான் தடத்தக்குறியாகிய உருவமாகாமலும் அருவமாகாமலும் சித்துப்பொருளாகாமலும் சிருஷ்டியாதி தொழில்களைச் செய்பவனுமாகாமலும் சொரூபவிலக்கண மெனப்படும் தன்னுண்மைநிலையிலேயே நிலையாயிருத்தலையென

வும், நிச்சயமென்றதை இங்ஙனங்கூறியவேதாந்தத்தெளிவாகிய சைவசித்தாந்தமே சித்தாந்தமெனநாட்டியதை எனவும், ஆறுமுகனெனக்கிசைத்தான் என்றதை இச்சித்தாந்தத்தெளிவை பசுவாகியதம்மை பதிபாகக்கூறும் பசுஞானிகளாகிய ஆன்மஞானிகள்பால் யானுணர்ந்ததன்று, பிரமமல்லாதாரைப் பிரமமாகச்கூறிய பிரமனைப் புடைத்துருட்டிப் பிரமபுரத்தில் திருஞானசம்பந்தனென வந்து யான் மறைஞானமுனிவனென்று தற்பெயர் புகழ்ந்தவள்ளலாகிய சண்முகனெனக்கருளாலுணர்த்தினனெனவும் உய்த்துணர்ந்துகொள்ளற்பாற்று.

இங்ஙன நிற்க, வேதாந்திகளென்னும் பெயருடையோர் அறிவு நினைவின் வசப்பட்டகாலத்து சகசீவபரங்களுளவாமெனவும், நினைவிலையகன்ற காலத்து அவையிலவாகி சச்சிதானந்த சொரூபமாகவே யிருக்குமெனவும், இவ்வாறுணர்தலே அத்வைதஞான மெனவும் கூறுவர்.

இச்செய்யுள் பரசிவம் யாவுந் தன் சத்தியாலாக்கித் தானொன்று மாக்காதும் ஆகாதுமாம் சொரூப விலக்கணமாகவே நிற்குமியல்பைக் கூறியதென்றுணரற்பாற்று. (௨)

நினைவறிவெனவிவ்விரண்டினைவிரித்து
நிகழ்த்துறுஞ்சுருதியீண்டிவற்றி
னினைவிரண்டாகும்பரநினைவெனவு
நிலவுறுமுயிர்நினைவெனவும்
புனைபரநினைவுசகமுயிர்நினைவுபுரிந்ததைப்
பிடிக்குமென்றிசைத்தான்
புனையரும்பாரஞ்சொரிதருநெய்தற்
போரிவாழாறுமாமுகனே.

(இ-ள்.) இவ்வுலகின்கண் (பிரமாணமாகக்கொள்ளப்படும்) வேதம், (நினைவென்றும் அறிவென்றுங்கூறும்) சிவசங்கற்பமும் சிவமும் ஆகியவிவ்விரண்டினையுமே விரிவாக வெடுத்துக்கூறு மெனவும், இவ்விரண்டில் சிவசங்கற்பமானது இரண்டாகு மெனவும், (அவை) பஞ்சகிருத்தியங்களியற்றுதற்குரிய பஞ்சசத்திகளாகிய அருள்நினைவு (ஒன்று) எனவும், அப்பஞ்சகிருத்தியத்தால் விளங்கும் ஆன்மா சிவமாக அவ்வான்மாவைப்பற்றிய ஆணவசத்திகுன்ற அவ்வருளே திரோதான மெனப்பெயர்பெற்றநினைவு (ஒன்று) எனவும், (அவ்விரண்டில்) அழகியபரநினைவு உலகமாமெனவும், உயிர்நினைவு (பரநினைவால்) ஆகிய உலகத்தை (நானெனப்) பற்றியிருக்கச்செய்யுமெனவும், புதுமையைவிளைக்கும் முத்துக்களைச் சொரிகின்ற நெய்தனிலத்தையுடைய திருப்போரூரில் வாழ்கின்ற (எனதாசிரியனாயெழுந்தருளிவந்த) அறுமுகக்கடவுள் கூறினான்.

நினைவு அறிவு ஈதென்பது முன்னர்க் கூறியிருக்கின்றாம். சிவபோதமசற்றிச் சிவமாக்கும் அருள்நினைவாகியும் ஆன்மபோதத்தை மறைத்திரு

ளாய்நிற்கும் ஆணவத்தையொழிக்க சுத்தம் அசுத்தம் சுத்தாசுத்தம் என்னும் பகுதிவாய்ந்த மாயா மலத்தோடு மலமெனப் பெயர் பெற்று நிற்பதாகியதிரோதான நினைவாகியும் நிற்றலால் நினைவிரண்டாகும் பரநினைவெனவும் நிலவுறு முயிர்நினைவு எனவும், உலகுதோன்றி நின்றழிதற்கு அருள்நினைவு தாரகமாய் நிற்றலால் புனைபரநினைவு செகமெனவும், அச்சகமாயையை ஆன்மாக்களுக்குத் திரோதானசத்தியாய் மலதிமிரங்கழியுங் காரணமாக ருசிப்பித்தலால் உயிர்நினைவு புரிந்ததைப் பிடிக்குமெனவுங் கூறினர்.

இதனால் சிவசக்தியொன்றே ஆன்மபந்தமாகிய பாசநிவிர்த்தியாதற் பொருட்டுதிரோதான சத்தியாயும் பின்னர் அவ்வான்மா சிவமாந்தன்மைப் பெருவாழ் வடைதற் பொருட்டு அருட்சத்தியாயும் நிற்குமெனவும், இவற்றில் நிமித்தகாரணனாகிய இறைவனுக்கு துணைக்காரணமாகிய அருட்சத்தி திரோதானசத்தியின்வழியே உபாதானகாரணமாகிய மாயையினின்றும் உலகுமுத் தொழிற் படச்செய்வித்து வீடுபேற்றினைப் பயப்பிக்குமெனவும், திரோதான சக்தி ஆணவவிருள் வசப்பட்ட ஆன்மாவிற்கு மாயா வொளிகாட்டி இச்சா ஞானக்கிரியைகளைத் தொழிற்படுத்தி அவ்விருளையகற்று மெனவுங் கொள்ளக் கிடந்தன.

ஆன்மவிலக்கணமீதெனவும் பிரமவிலக்கணமீதெனவும் அறியாப்போலி ஞானிகள் பிரமமெனினும் ஆன்மாவே, ஆன்மாவெனினும் பிரமமே எனவே தங்களிற் பொருள்கொள்ளும் இலக்கணிகளாதலால் சகம் ஆன்மசங்கற்பமென்னுங்கால் பிரமசங்கற்பமெனப் பொருள்கொள்ள அறியாது ஆன்மசங்கற்பமேயெனப் பொருள் கொள்வர். அதனை மறுத்தற்கன்றோ சகம் உயிர்நினைவன்று பரநினைவெனவும், உயிர்நினைவு பரநினைவால் புரிந்ததைப் பிடிக்கு நினைவெனவும் கூறினர்.

இவ்வாக்கியத்தால் உயிர்நினைவு பரநினைவாகாவெனவும் பரநினைவு உயிர்நினைவாகா வெனவும் பெறப்பட்டது. படவே, பரம்வேறு உயிர்வேறு என்றாயிற்று. ஆகவேபிரமமே ஆன்மாவென்னுங் கூற்றொழிந்து இரண்டுந்தனித்தனி ஒவ்வோர் முதல்களாம் என்றுணரக் கிடந்தன. அஃதுணரவே சகம் பரநினைவென்றும் அதனைப்பற்றுதல் 'உயிர்நினைவென்றும் விளங்கின. அவ்விளக்கத்தால் பரன்சகத்தையுண்டாக்கும் பதியேயன்றி அச்சகத்தால் பந்தமுறும்பசுவல்லனென்றும் அதனிற்பந்த முறுவோன் பசுவென்றும் போந்தன, போதரவே பந்தப்படுத்தல் பாசவிலக்கண மாதலால் பரனுக்கும் உயிர்க்கும் வேறாக மலமென்பதொன்றுண் டெனவும் கொள்ளக் கிடந்தது.

இதனால் பதார்த்தத்திரயம் சித்தாந்தமாயின. இஃதொழிந்து பதார்த்தம் ஒன்றென்னும் பொருள்படவே கூறினரெனக் கொள்ளலாகாதோவெனின் பரநினைவே-சகம் எனவும், அதுவே - புரிந்ததைப் பிடிக்கு 'மெனவுங் கூறவேண்டும். அங்ஙனங் கூறாது பரநினைவு சகம் உயிர் நினைவு புரிந்ததைப் பிடிக்கும்

என்று பதார்த்தம் மூன்றென்பதேதோன்றக் கூறினாராதலால் மேற்காட்டிய சித்தாந்தமே சித்தாந்தமாம்.

வேதங்களில் ஓரிடத்துப்பிரமசங் கற்பமெனவும் ஓரிடத்து ஆன்மசங்கற்பமெனவும் கூறுவது என்னையோ வெனின் பிரமம் அருட்சத்தி யுக்தமாய் பஞ்சகிருத்தியம் புரியும் பதியாய்நிற்கு மவசரத்தைக் கூறுங்கால் பிரமசங்கற்பமெனவும, ஆன்மவர்க்கங்கள் அவ்வைந்தொழிற் படுங்கால் அவைகளில் உடலுயிர்போற் கலந்துதிரோதான சத்தியுக்தனாய்ப் போகங்களைநுகர்விக்குங்கால் எழும் சங்கற்பத்தை ஆன்மசங்கற்பமெனவுங் கூறுமென்றுணர்க.

போலி வேதாந்திகள் (உ) வது செய்யுளில் அறிவுநினைவிற் கலந்துறுபோதில் பரமுயிர்சகமுளவாம், அந்நினைவினை யகன்றால் பேதாபேதங்களொன்றின்றித் தானேதன்னிடத்திருக்கும் என்றதனால் அகண்டசச்சிதானந்த சொரூபவிலக்கணத்தை விளக்கியதெனவும் (ந) வதாகிய இச்செய்யுளில் அப்பிரமசந்நிதியில் ஆரோபித்தமுக்குணங்களில்சுத்தசாத்வீகமாகிய மாயாப்பிரதிபலன ஈஸ்வரனை யுணர்த்த பரநினைவெனவும், ரஜோகுணசம்பந்த அவித்தியா பிரதிபலன சீவகோடிகளையுணர்த்த உயிர்நினைவெனவும், இவர்களில் ஈஸ்வரன் சர்வக்கியனாதலால் சகத்தையுண்டாக்குவோன் அவனென்றுகாட்டப் பரநினைவால்சகமெனவும், சீவன் கிஞ்சிக்யனாதலால் சகத்தைப்பிடிப்பவ னவனென்றுணர்த்த உயிர் நினைவு புரிந்ததைப் பிடிக்குமெனவும் கூறினாரெனக் கூறுவர். அது உடன்பாடன்று.

இச்செய்யுளில் (உ) வது செய்யுளுட் கூறியசொரூபசிவத்தினது சிற்சத்தி அருட்சத்தி திரோதானசத்தி என்றிருவகைப்படு மெனவும், அவ்விரு சத்தியுள் திரோதானசத்தி ஆன்மா சுதந்தரமிலியும் சஙம் சடமுமாதலின் அச்சடத்தோடான்மா வொன்றாய்ப் பந்தமுற்று அதுபாகம்வர ருசிப்பித்துவருமெனவும், அருட்சத்தி சடமாகியசகத்தைக் காரியப் படுத்த இறைவனுக்குத் துணையாகியும் பாகம்வந்த சத்திநிபாதர்களுக் கிடமாயும் நிற்குமெனவும், இங்ஙனம் உபசரிக்கும் சிற்சத்தியோடு சமவேதமாய்நின் றியக்கினாலன்றி ஆன்மாவும் உலகும் இயங்காவென அச்சிவம் அச்சத்தியிடத்து தாதான்மியமாயிருக்கு மெனவும் கூறியவாறாயிற்று. (ந)

பரனதுமுகத்திற்குலகுபொய்சீவன்
படிற்றுளக்கினுக்கதுமெய்மை
திரமுறுசாட்சிதானெனச்சீவன்
றெரிந்திடிற்பரன்மனமிவற்காம்
விரவியசகமப்போதுபொய்யாகி
விளங்குறுமென்றெனக்கிசைத்தான்
புரமெரிசெய்தோனுவந்துபெற்றெடுத்த
போரிவாழாறுமாமுகனே.

(இ - ள்.) பரசிவத்தின் சந்நிதிக்கு (தனது விளக்கத்தால் விளங்கும்) சகம் பொய்யாமெனவும், (அங்ஙனம் பொய்யாகுஞ் சகமாகிய) அது பாசத்தால் மறைபட்டிருக்கும் அறிவிற்கு மெய்யாமெனவும், (மெய்யாகக்கண்ட) ஆன்மா தான் (பாசகாரியமாகியதேகாதிகட்கு) அழியாத சாக்ஷியேயெனத் தேர்வானயின் பாசிவத்தினருள் இவனுக்கிடமாகு மெனவும், (அவ்வருள் வசத்தனுகு) மஞ்ஞான்று (ஆன்மவறிவிற்கும்) அவ்வறிவிற் கலந்திருந்த சகம் பொய்யாகித் தோன்றுமெனவும், திரிபுரத்தையெரித்த இறைவன் உவகையோடீன்ற திருப்போரூரில் வாழ்கின்ற அறுமுகக் கடவுள் அடியேனுக் கோதியருளினன்.

பரன் உலகத்தைக்காணல் அருளால். ஆன்மாகாணல் கரணத்தால். அருள் மாயையைவிளக்கி ஒளிவடிவாகச் சிவத்தைவிளக்குவது, கரணம் மாயையின் காரியமாய் ஆன்மவறிவைமயக்கிச் சிவத்தைவிளக்காதது. இதனுல் அருளுடையோன் பரனெனவும், மாயாகரணமுடையோன் ஆன்மாவெனவும் விளங்கின. இவ்விளக்கத்தான் பரன்அருளுடையனுதலால் உலகால் மயங்கானென்பார் பரனதுமுகத்திற்குலகு பொய்யெனவும், அல்லது அம்மாயாகாரியமாகிய உலகு அவன் மாட்டுச்சங்காரப் பட்டுவருதலாலும் பொய்மையென்பது உமாமெனவும், ஆன்மாமாயாகரணமுடையனுதலால்உலகால்மயங்குவானென்பார் சீவன்படிற்றுளக்கினுக்கு அது மெய்மை யெனவும், அல்லதூஉம் மாயாகாரியம் ஆன்மாவின் மாட்டுநிகழ்ந்துவருதலாலும் மெய்மையென்பதூஉமாமெனவும், ஆன்மாவைமயக்கும் மாயையானது ஆன்மாவைச் சூனியமென்றும் தேகமென்றும் இந்திரியமென்றும் சூக்குமதேகமென்றும் பிராணவாயுவென்றும் விஞ்ஞானமென்றும் சமூகமென்றும் அறியச்செய்து, ஆன்மாவினுண்மையையறியவொட்டாது மயக்குதலின் அம்மயக்கத்தைப் பரநினைவாகிய அருளால் முறையேதேகமுதலிய ஒவ்வோர்பகுதிகளையும் தானல்லவென்றும் தானிவற்றிற்குவேறென்றும் தன்பிரகாசத்தாலிவையாவும் பிரகாசிக்கின்றன என்றும் அதனுல் இவற்றிற்குத்தான் சாக்ஷியென்று முணரவேண்டு மென்பார் திறமுடிசாக்ஷிதானெனச் சீவன்தெரிந்திடி லெனவும், அங்ஙன்தெளிந்த பின்னர் தெளிவித்த அவ்வருளே வான்மாவிற்கறிவாய் நிற்கு மென்பார் பரன்மனமிவற்காம் எனவும், அங்ஙனம் ஆன்மாபரநினைவாய் நிற்குங்கால் மேற்கூறிய தேகமுதலியசம்பந்தங்களெல்லாம் தூலசூக்குமபரங்களாகிய உடம்பாயொழிவதென்பார் விரவியசகமப்போது பொய்யாகி எனவும், அங்ஙனம் அவை உடம்பாகிய ஞான்று தனியே விளங்குவது ஆன்மா வென்பார் விளங்குறு மென்றெனக் கெனவுங் கூறினர்.

தேகமுதலிய எண்வகைப் பகுதிகளையும் தானல்லவென்று நியதி செய்யும் முறைமையையும், தானிவற்றிற்கு வேறென் றுணரும் விளக்கத்தையும், தன் பிரகாசத்தால் இவையாவும் விளங்குந்தன்மையையும், இவற்

நிற்குத்தான் சாக்ஷியென்னும் சாக்ஷித்துவத்தையும், சாக்ஷியாய்நிற்குங்கால் மேற்கூறியதேகமுதலிய சம்பந்தங்களெல்லாம் தூலசூக்குமபரங்களாகிய உடம்பாயொழிவதென்னும் அனுபவத்தையும் அவ்வனுபவத்தால் ஆன்மாதனியெனக்காணும் சித்தாந்தத்தையு மீண்டுவகுத்துக்காட்டுகின்றாம்.

## தேகமுதலியஎண்வகைப்பகுதிகளில்,

### (க) வது ஆன்மாசூனியமன்றென்கை.

சூனியமே ஆன்மாவெனின், தேகாதிகளைவிட்டு வேறாய் சூனியமென்பதொன்றுளதாய் அதனை ஆன்மாவென்று வாளாகூற அமையுமாயின் சூனியமே ஆன்மாவென்றலமையும் அங்ஙனமின்மையால் சூனியத்தை ஆன்மாவென்றலமையாது.

இனி தேகமுதலிய தத்துவங்க ளொவ்வொன்றனையும் சுட்டிக் காட்டி இது ஆன்மாவல்ல இது ஆன்மாவல்லவென்றுகூற அவற்றை அவ்வாறே காணும் அறிவுவேறாய் சூனியமாகா துளதாயிருத்தலின் அவ்வறிவே ஆன்மாவென்றுணர்தல் அமைவுடைத்து.

இஃதொழிந்து சூனியத்தை ஆன்மாவென்னின் ஈன்றாள் மலடி என்பதனோடொக்கும். அல்லதூஉம் சூனியம் எனப்படுவது உள்ளதும் இல்லதும் அல்லாததாய்ப் பாழெனப்படும்.

இதனால் சூனியமென்பதையும் அறியும் அறிவே ஆன்மா எனப்படுமென்பதாம்.

### (உ) வது ஆன்மாதேகமன்றென்கை.

தேகமே ஆன்மாவெனின், உலகில் ஒவ்வொரு புருடரும் என் பதி என் மனை என்பதுபோல என்கை என்கால்என் கண் என்னுடம்பு எனப் பிறிதின் கிழமைப் பொருளாகக்கூறுதலேயன்றி யானுடம்பு யான்கண் யான்கால் யான் கையென்று தற்கிழமைப் பொருள்படக் கூறுதல் வழக்கின்கணில்லை. அஃதால் தற்கிழமையாகாது பிறிதின்கிழமைப் பொருளாகிய தேகம் ஆன்மாவென்றல் அமையாது.

மேல் ஆன்மா சூனியமன்றென மறுத்து ஆண்டு நிலைபெறுத்திய அறிவு தேகத்தோடுகூடி வழங்கிவரினும் அதுதானாகாது அத்தேகத்திற்கு வேறுபொருளாய் விளங்குமதனால் அதனையே ஆன்மாவென்றல் அமைவுடைத்து.

இஃதொழிக்து தேகத்தை ஆன்மாவென்னில் பிணமானகாலத்தும் அதனோடொப்பக்கிடக்கும் உறக்கத்தும் அறிவுநிகழவேண்டும். அஃதின்மையால் சடமெனப்படும்.

இதனால் தேகமிடமாகவிடயங்களையறியும் அறிவே ஆன்மா எனப்படுமென்பதாம்.

(ங) வது ஆன்மாஇந்திரியமன்றென்கை.

இந்திரியமே ஆன்மாவெனின், இந்திரியங்கள் சத்தபரிசரூபரசகந்தங்களைத் தனித்தனியே அறியும் ஐபறிவுகளாம். அவைகளே ஆன்மாவாயின் ஓர் தேகத்திலுள்ளது ஓர் ஆன்மாவோ பலவான்மாவோ என ஆசங்கைக்கிடனும். அல்லதூஉம் பஞ்சேந்திரியங்களி லொன்றாகிய சுரோத்திரேந்திரியமே ஏனையரூபமுதலியவற்றையும் ரூபேந்திரியமே சத்தமுதலியவற்றையும் இவ்வாறு தனித்தனி ஒவ்வோரிந்திரியமே ஏனைய இந்திரிய விஷயங்களையுமறிவதோ வெனின் அஃது மின்று. அதனால் இந்திரியங்களையான்மா வெனலமையாது.

இனி ஆன்மா முன்னர்க்கூறிய சூனியமுமன்று. தற்கிழமைப் பொருளாசாது பிறிதின்கிழமைப் பொருளாகிய தேகமுமன்று எனமறுத்து ஆண்டு நிலை பெறுத்திய அறிவு ஒன்றை யொன் றறியாத பஞ்சேந்திரியங்களிலும் தான்வேறாய் நின்று அவ்வைந்தினுலும் ஐம்பயனும் அறிவதுளதாதலின் அதனையே ஆன்மாவென்றல் அமைவுடைத்து.

இஃதொழிந்து இந்திரியங்களை ஆன்மா வென்னின் யாம் கூறிய அறிவு ஒன்றாய் ஐம்பயனும் எவ்வாறறிவதோ அதுபோலும் அறிதல் வேண்டும். அல்லது இந்திரியங்களில் ஒவ்வொன்றுமே யாம் கண்டோம் கேட்டோமென ஐம்பயனையும் அறிந்தனுபவித்தல் வேண்டும். இவ்விரண்டு மின்மையான் இவ்வைந்தும்வாயில்க ளெனப்படும்.

இதனுல் பஞ்சேந்திரியங்களையும் இடமாகக் கொண்டு கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறிந்து நிகழ்வதாகிய அறிவே ஆன்மாவெனப்படுமென்பதாம்.

(ச) வது அந்தக்கரணமன்றென்கை.

அந்தக் கரணமே ஆன்மா வெனின் மனம் புத்தி சித்தம் அகங்காரமாகிய அவை பொறிகளின் வாயிலாக அறிவாகிய வுயிர் அறிந்த விஷயங்களை இது இன்னதாமெனவும், இது இன்னதே எனவும், இதுயாதாகுமெனவும், இனித் துணியலா மெனவும் முறையே சங்கற்பித்தலும், சங்கற்பித்தவற்றை நிச்சயித்தலும், நிச்சயித்தவற்றைச் சிந்தித்தலும், சிந்தித்தவற்றைச்செய்வேனென்று ஒருப்பட்டெழுதலுமாகிய தொழில்பற்றி யெழுங்கரணங்களாம். அவைகளே யான்மாவாயின் கரணம் நான்கென்னுந் தொகை பெறாது ஒன்றென்னுமெண்ணைப்பெறவேண்டும். அல்லதூஉம் ஓர் கரணமே ஏனையகரணச்செயல்களையடைதல் வேண்டும். அஃதுமின்று. செயலால் நான்காயினும் அறிவால் ஒன்றாகவேயிருத்தல் வேண்டும். அஃதுமின்று இதனுல் கரணங்களையான்மா வெனலமையாது.

இனி முன்னர்க் கூறிய சூனியமுமன்று. தேகமுமன்று, ஒன்றையொன் றறியாத இந்திரியங்களு மன்றெனமறுத்து ஆண்டுநிலை பெறுத்திய அறிவு கரணங்களுக்குவேறாய் அக்கரணங்களோடுகூடி மேற்கூறியசங்கற்பித்தல் முத

லிய தொழிலால் சுகதுக்கமோகங்களை யனுபவிப்பதுளதாதலின் அதனையே ஆன்மாவென்றலமைவுடைத்து.

இஃதொழிந்து அந்தக் கரணங்களே யான்மாவென்னின் யாம் கூறிய அறிவை வேண்டாதும் புத்திதத்துவத்தின் செயல்மேலிட்டகாலத்து மனோ தத்துவத்தின் செயல் அதற்குள்ளாயும் சித்தத்தின் செயல்மேலிட்டகாலத்து புத்திதத்துவம் அதற்குள்ளாயும் இவ்வாறு ஒவ்வோர்கரணம் வியாபகத்தையடையுங்கால் ஏனையகரணங்கள் வியாப்பியத்தையடைதலுமாகிய வேற்றுமையடையாதும், கடலிடைப்படுமலைபோல மாறிமாறிவருதலையடையாதும் தான் சித்தாகவே யிருத்தல் வேண்டும். அஃதின்மையான் அரசன் தன் தொழில் நடாத்த அமைச்சனையுடன்கொண்டிருத்தல்போல ஆன்மாவுக்கு அமைச்சாகக் கொள்ளப்படும்.

இதனாற் கரணங்களை யமைச்சாகக் கொண்டு யான் சுகித்தேன் துக்கித்தேன் மோகித்தேன் என்றறியும் அறிவே ஆன்மாவெனப்படு மென்பதாம்.

## (ரு) வது. ஆன்மாசூக்குமதேகமன்றென்கை.

சூக்குமதேகமே ஆன்மாவெனின் சூக்குமம் எனவே துலதேகத்துக்குள்ளீடாய் நிற்குந் தேகமெனப்படும். இவ்விருதேகமும் சாக்கிர சொப்பனவத்தையை யனுபவித்தற்குரிய கருவிகளாம். அங்ஙனமாக சொப்பனவத்தைக்குரியசூக்குமதேகம் ஆன்மாவாத லெங்ஙனம். அல்லதூஉம் பஞ்சேந்திரியங்ளே ஒன்றனை யொன்றறியா தென்றதுபோல் சூக்குமதேகமும் நனவின்கண்ணும் அது ஒழிந்த கனவின் கண்ணும் அவ்விரண்டு மொழிந்தசுழுத்தியின் கண்ணும் அறியுந்தொழிலில் மாறியும் தான் கெட்டும் நிகழ்தலாலும் அஃதேயுமன்றி நனவின் கண் தெரிந்தறிதலும் கனவின் கண் மயங்கியறிதலும், சுழுத்தியில் அவ்விருதன்மையுமின்றி மயங்கியும் நிற்றலும் அனுபவத்தாற் கண்டாம். அல்லதூஉம் நனவில் தூலசரீரத்தோடு கூடியும், கனவில் வாசனாசரீரத்தோடு கூடியும், சுழுத்தியில் துணையின்றித் தோன்றாதிருத்தலையும் கண்டாம். இவ்விசாரத்தால் துணையுள்ளதாயின் சீவித்தலும் அஃதின்றாயின் சீவித்தலின்மையும், சீவிக்குங்கால் தத்துவங்கள் கூடிய அளவே அறிவுநிகழ்தலும் உடைமையென்று பெறப்பட்டமையாற் சூக்குமதேகத்தை ஆன்மாவெனலமையாது.

மேல் ஆன்மா முன்னர்க்கூறிய சூனியமுமன்று, தேகமுமன்று, பஞ்சேந்திரியங்களுமன்று, அரசனுக்குள்ள அமைச்சன்போலுமென்ற கரணங்களுமன்றெனமறுத்து ஆண்டுநிலைபெறுத்திய அறிவு கனவவத்தைக்குரிய, சூக்குமவுடலினியக்கத்தை நனவின்கண் கண்டாமென்றும் கண்டிலமென்றும் அறிவதுளதாகலின் அதனையே ஆன்மாவென்றலமைவுடைத்து.

இஃதொழிந்து சூக்குமதேசத்தையே ஆன்மாவென்னின் சாக்கிர முதலிய மூன்றவத்தைகளினும் ஏகதேசப்பட்டறிதலுங் கெடுதலுமன்றி ஏகமாயறியும் அறிவாயும் உளதாயு மிருத்தல் வேண்டும். அஃதின்மையான் அவத்தாத்திரயங்கள் நிகழ்தற்குரிய மூன்றிடங்களில் இது நடுவிடமெனப்படும்.

இதனாற் சூக்கும தேகத்தை சொப்பனவத்தையை யனுபவித்தற்குரிய இடமாகக்கொண்டு அக்கனவு நிலையில் சுகமோ அல்லது துக்கமோ விவற்றைக்கூறுவதாகிய அறிவே ஆன்மாவெனப்படு மென்பதாம்.

## ௬ - வது, ஆன்மாபிராணனன்றென்கை.

பிராணனே ஆன்மாவென்னின் சுகதுக்கமோகங்களை அவஸ்தாத்திரயங்களிலு மாறாதறிந்து அவற்றின்பயனை யனுபவித்தல்வேண்டும். ஏனெனின் பிராணன் சாக்கிரமுதலிய மூன்றுகாலங்களிலேயும் நிகழ்தலுண்மை. அங்ஙனநிகழவேநனவின்கண் இன்பத்துன்பநுகர்ச்சியை உடம்போடுகூடிநுகர்தல்போல்எனைய அவஸ்தையினிடத்தும் உடம்போடு அனுபவித்தல்வேண்டும், அஃதின்மையான் பிராணவாயுவை யான்மாவென்றலமையாது.

மேல் ஆன்மா முன்னர்க்கூறிய சூனியம்-தேசம் - இந்திரியம் - அந்தக்கரணம் - சொப்பனவஸ்தைக்குரிய சூக்குமதேகம் ஆகிய இவையன்றெனமறுத்து ஆன்மா நிலைபெறுவித்த அறிவு அப் பிராணனறிந்துகூறவறியாத சொப்பனவஸ்தையும் சுழுத்தியவஸ்தையுமாகிய அவ்விரண்டின் சுகதுக்கங்களை உடம்போடுகூடி அனுபவிக்கும் சாக்கிராவஸ்தையிலறிந்து கூறுதலுளதாகலின் அதனையே ஆன்மாவென்றலமைவுடைத்து.

இஃதொழிந்து பிராணனையே ஆன்மாவெனில் அறிவன்றியும் கருவிகரணங்களின் றுணையன்றியும் நனவுமுதலிய மூன்றவத்தைகளினும் தானேயறிந்தனுபவித்தல்வேண்டும். அஃதின்மையான் அரசன்வசித்தலைக்காட்டுஞ்சேவகனெனத்தேகத்தினிடத்து ஆன்மாவசித்தலைக்காட்டும் காவலாளெனப்படும்.

இதனான் பிராணனையே பிராணனாகக்கொள்ளாது அதனைச்சடமாகிய காற்றுக்கித்தான் தேகத்தோடு இருத்தலையும் இன்மையையுங்காட்டும் ஆளாக்கி நிகழும் அறிவே ஆன்மாவெனப்படுமென்பதாம்.

## ௭ - வது, ஆன்மாவிஞ்ஞானமன்றென்கை.

விஞ்ஞானமே ஆன்மாவெனின், விஞ்ஞானமாவது ஒன்றனையொன்றறியாதபொறிபுலன்கரணசாதகங்களால் விடயங்களையறியும் அறிவாகும். அவ்வறிவை யான்மா வெனலமையாது.

மேல் ஆன்மா முன்னர்க்கூறிப சூனியமும் - தேகமும்-இந்திரியங்களும்-கரணங்களும் - ஆன்மாதேகத்தோடு கூடியிருக்குமிருப்பைக்காட்டும் பிராண

னுமன்றெனமறுத்து ஆண்டுநிலைபெறுத்திய அறிவு ஏகதேசமாகவறியச் செய்யும்பொறிமுதலியவற்றைத் தற்பிரகாசத்தால் விளக்கி அதனால் விடயங்களையறிதலின் அதனை ஆன்மாவென்றலமைவுடைத்து.

இஃதொழிந்து விஞ்ஞானத்தை ஆன்மாவென்னில் ஆன்மப்பிரகாசம் விளக்கவிளங்குவதொழிந்தும் தானேவிளங்கியும் மயங்கிமயங்கியறியாது அறிந்தாங்கறிந்து மிருத்தல்வேண்டும். அஃதின்மையான் ஆன்மா ஐந்தவத்தைப் படுங்கால் ஆங்காங்கறியும் அறிவெனப்படும்.

இதனான் மயங்கிமயங்கி யறியச் செய்வதாகிய சிற்றறிவுபோலாது அறிந்தாங்கறிவதாகிய பேரறிவால் விளங்குமறிவையே ஆன்மாவெனப்படுமென்பதாம்.

## அ - வது; ஆன்மாசமூகமன்றென்கை.

சமூகமே ஆன்மாவென்னில் சமூகமாவது உடம்பின்கண் குழாமாகக் கூடியதத்துவங்களின் கூட்டங்களென்றுரும் அக்கூட்டத்தை ஆன்மாவென்றலமையாது.

மேல் ஆன்மா முன்னர்க்கூறிய சூனியம் - தேகேந்திரியப் பிராணந்தக்கரணங்கள் - சூக்குமசரீரம் - ஆங்காங்கறியும் விஞ்ஞானம் ஆகிய இவையாவும் அன்றெனமறுத்து ஆண்டுநிலைபெறுத்திய அறிவு மேற்கூறிய சமூகமெனப்படுமவை சூனியமென்றும், தேகமென்றும், இந்திரியமென்றும், அந்தக்கரணமென்றும், பிராணனென்றும் விஞ்ஞானமென்றும் வெவ்வேறு பெயர்பெற்றனவேயன்றி ஆன்மாவென்று பெயர்பெற்றுள்ளன ஒன்றுமின்று. அஃதால் சூனியம்நீங்கலாக ஏனையதேசமுதலிய சமூகங்களை அங்காங்களாகவுடைய அறிவே ஆன்மாவெனப்பெயர் பெற்றிருத்தலால் அதனை ஆன்மாவென்றல் அமைவுடைத்து.

இஃதொழிந்து சமூகத்தையான்மாவென்னின் தத்துவக்கூட்டங்கட்குத் தலைமைபெற்று அறிவன்றியே. இவைகள் தொழிற்படவேண்டும். அஃதின்மையான் அறிவைநோக்கச் சடமெனப்படும். அஃதால் சடயாகாது தத்துவங்களோடு கூடியகாலத்தும் கூடாக்காலத்தும் சித்தாய்விளங்கும் அறிவு வசித்தற்குமாயையாலமைக்கப் பட்ட இயந்திரமெனப்படும்.

இதனான் சமூகங்களைத்தூலசூக்கும பரங்களாகவுடைய அறிவையே ஆன்மாவெனப்படுமென்பதாம்.

## தானிவற்றிற்குவே றென்றுணரும் விளக்கத்தை யென்றது.

அரசன் அத்தாணியிலிருந்து தன்கீழ்க்கருமஞ்செய்வாரைத்தத்தங் காரியங்களில் தான்செலுத்தியாளுதலேயன்றிக் கருமஞ் செய்வோரால் அவனாளப்படுதலின்மைபோல் ஆன்மாதேகமுதலிய தத்துவங்களைத் தானாளுதலேயன்றி

அவை ஆன்மாவை யாளப்பெறுதன்மையையும் ஆன்மாதன்னிச்சைவழியே அவற்றை யியக்கித்தா னவற்றேடொன்றாகாது விளக்குதலையுங் காண்டலையேயாம்.

## தன்பிரகாசத்தாலிவையாவும் விளங்குந்தன்மையேன்றது.

இதனால்ஆன்மா இயக்கும்பொருளெனவும் தத்துவங்கள் இயங்கும் பொருளெனவும் ஏற்பட்டன. படவேஇயக்கும் பொருள் அசித்தெனவும் அசித்தாகலால்அப்பிரகாசமெனவும், இயங்கும் பொருள் சித்தெனவும் சித்தாகலால் பிரகாசமெனவும் கொள்ளக்கிடந்தன. ஆகவே ஆன்மப்பிரகாசத்தால் அப்பிரகாசமாகியதத்துவங்கள் விளங்குகின்றன என்றறிதலேயேயாம்.

## தான்சாக்ஷி யென்னும் சாக்ஷித்துவத்தையும் என்றது.

பெத்தக்காலத்துத் தத்துவங்களுந் தானும் வேறாகாது அதுவேயாயிருந்து இன்பத்துன்பங்களை நுகர்ந்ததன்மைபோல் முத்திக்காலத்தாகாது சாக்ஷியாயிருந்து அந்நிலைகெடாதே தத்துவங்களோடு கூடிவாழ்தலேயேயாம்.

## சாக்ஷியாய்நிற்குங்கால் தேகமுதலிய சம்பந்தங்களெல்லாம். தூலசூக்குமபரங்களாகியஉடம்பாயோழிவது என்னும் அனுபவம் என்றது.

பிராரத்தமுள்ளளவும் வருஞ்சுகதுக்கானுபவங்களை யனுபவித்தற்கு மேற்காட்டிய தேகமுதலியவையெல்லாம் இன்றியமையாதகருவிகளாதலான் அவற்றிற்குவேறாகத்தன்னைக் கண்ட சிவன்முத்தன் கலப்பால் அவற்றேடொன்றாகியும், அங்ஙனம் ஒன்றேயாய்விடயங்களை நுகருங்கால் அந்நுகர்ச்சியால் வரும் பயன்களையறிந்தனுபவித்தல் சாக்ஷியாகியதானேயன்றி தன்னேடுசம்பந்தமாயிருந்ததேகமுதலாகக் கூறியவையெல்லாம் அன்றாகியும் இருத்தலுண்மை. அல்லதூஉம் அவையாவும் உயிர் உடம்போடுள்ளவரை அவ்வுடம்பே யாவுமனுபவித்தும் உயிர் உடம்பினின்றும் நீங்கியவழி ஓரனுபவமுமின்றி அசேதனப் பொருள்போல் கிடத்தியவழி கிடந்திருத்தலுண்மைபோல் பொருளால் வேறாகியதான் தேகமுதலிய சம்பந்தங்களோடுகூடி நிகழுங்காலத்தும் அவைகளையெல்லாம் கிடத்தியவழிகிடக்கும் உடம்பினிலக்கணமாகக்காணுவனேயன்றி தானாகக்கண்டு மயங்கி அநுபவியாமையேயாம்.

## அவ்வநுபவத்தால் ஆன்மாதனியேனக்காணுஞ் சித்தாந்தத்தையுமேன்றது.

இம்முத்திக்காலத்தே இங்ஙனம்கருவிகளோடு கூடியவழியும் தன்னை வேறாகக்கண்டதுபோல் அப்பெத்தக்காலத்தும் தான்வேறென்றே காணவரும் அநுபவத்தையேயாம். (சு)

ஆங்கு தேகமுதலிய எண்வகைப்பகுதிகளையும் தானல்லவென்று நியதி செய்யும் முறைமை முதலாகத் தொகுத்துக் கூறியவற்றை இருகாறும் வகுத்துக் காட்டியவாறும்.

போலிவேதாந்திகள் அதிஷ்டானசைதன்னியத்திற்கு ஆரோபிதப்பிரபஞ்சம் காலத்திரயத்துமில்லையென்பார் பரனதுமுகத்திற் குலகுபொய்யெனவும், சிதாபாசனாகிய சீவனுக்கே அநுசத்தியமாகத்தோன்றுமென்பார் சீவன்படிற்றுளக்கினுக் கது மெய்மையெனவும், தசமனானவன் ஏனைய ஒன்பதின்மரையும் தனித்தனியேஎண்ணி எண்ணியுந்தன்னைக்காணாது மயங்கிய அஞ்ஞான்று எண்ணியநீயே தசமனென்று எண்ணிக்காட்ட நசமனைவேறாகக்காணாது அத்தசமனைத்தானேயாகக் கண்டதுபோல் தேகேந்திரியப் பிராணாந்தக்கரணங்களோடு ஒன்றாய்த்தான்தோன்றாது மயங்கியிருந்ததன்னை ஆசிரியன் நீ தேக முதலியவை யாகாய்இவற்றையறிந்த அறிவே நீயாகுமாதலால் இவற்றிற்கு சாக்ஷியாகுமென்றுணர்த்த தன்னைச் சாக்ஷியாகவே காண்பனென்பார் திறமுறுசாட்சிதானெனச் சீவன்றெரிந்திடிலெனவும், அங்ஙனம் சாக்ஷியாகக்கண்ட அறிவை விளக்குமறிவு வேறொன்றின்றாதலான் அவ்வறிவையே பிரமமாகக்காணவேண்டுமென்பார் பரன்மனம் இவற்காம்எனவும், தன்னைப்பிரமமாகக்காணவே அறியப்படுபொருள்களெல்லாம் அத்தியாசமாய்ப் போமென்பார்விரவியசகம் அப்போதுபொய்யாகி விளங்குறுமெனவும் கூறினாரெனக்கூறுவர்.

இதனால் அதிஷ்டானசைதன்னியம் வேறாகச் சாக்ஷியாகக்கண்ட ஆன்மாவேயாமெனவும், வேறாகக்காணுமவ்வளவே பிரபஞ்சத்தோற்றமன்றி அதிஷ்டானபக்கத்தில்லை யெனவும்போந்தது.

அறிவு வொன்றேயாயும் பிரபஞ்சம் அத்யாசமாயும் ஆகின்றபக்ஷத்தில் சாக்ஷித்துவம் கூறவேண்டுவதில்லை. பிரபஞ்சம் அத்தியாசமாகாது அழிவதும் மீளத்தோன்றுவதுமாய்உள்பொருளா யிருத்தலால்சாக்ஷித்துவம்கூறினார். அல்லதூஉம் தேகமுதலியவைகளைக்கண்டே நான் இவற்றிற்குச்சாக்ஷியென்று கூறுவது மரபாயிருத்தலேயன்றி அத்தேக முதலியவைகளை யில்லையாகக்கண்டே சாக்ஷிகூறுதல் வழக்கின்கணில்லை.

இதனால் சகத்துமுள்ளதேஎனவும் அவற்றைக்காணும் சாக்ஷியாகியசீவனும் உள்ளதேயெனவும் இவற்றுள்சீவனே அநித்தியப்படுமேரும் சகத்தை நித்தியமெனக் காணுதலும் சாட்சியாகக் காணுங்கால் அநித்தியமாமெனவே காணுதலு மாமெனவும், அஃதால் சீவன்படிற்றுளக்கினுக்கது மெய்மை திறமுறு சாட்சிதானெனச்சீவன் றெரிந்திடில் சகம்அப்போது பொய்யாமெனக்கூறினார் இதுபோல் பரன்பொய்யாகவும்மெய்யாகவுங்காணுமென்றுகூறினாரில்லை. பரனதுமுகத்திற்குலகு பொய்யாகுமென்னுமோரிலக்கணமே கூறினார். இவ்விலக்

கணத்தால் பொய்யாகவு மெய்யாகவுங் காணும் அறிவொன்று, பொய்யாகவேகாணும் அறிவொன்று என்றாயிற்று.

இதனால் அறிவொன்றே அறியாமையாயும் அறிவாயும் இருப்பதென்னுங் கூற்றை மறுத்து அறிவு இரண்டென்று நாட்டியவாறாயிற்று. (௪)

அறிவினைநோக்கி லுயிர்வயமாகு
மகமணுஞ்சகத்தையவ்வுயிர்தான்
பிறிபடநோக்கின் மனத்தினின்வயமாம்
பிறப்புமீதிதன்வயப்படாது
நெறியுறுமறிவின்மிகப்பரிசிக்கி
வினைப்பறுங்கதியுமீதென்றான்
பொறிமயிலேறுஞ்சேவகனென்னையாள்
போரிவாழாறுமாமுகனே.

(இ-ள்.) அவ் ஆன்மா (அறிவென்னும்) சிவத்தைநோக்குங்கால் (சிவம் அவ்வான்மாவின்வேறாகாது) ஆன்மாவேயாகுமெனவும், (அவ்வான்மா) அகங்காரவிருத்தியின்பேதமாகிய உலகைவேறுபடநோக்கில் (வேறுபடக்காணும்) அம்மனோவிருத்தியின் வயமேயாகுமெனவும், இதுவேபிறப்புக்கிடமாமெனவும், (அதனால் மனோவிருத்தியின் வசப்படாது,) நன்னெறிப்பட்டஅறிவில் மிகவும் தொந்தனை யுண்டாகுமாயின் (பிரபஞ்சத்திற் கிடஞ்செய்த) நினைவுங் கெடுமெனவும், (அந்நினைவு கெடுதலாகிய) அதுவே முத்தியெனவும், புள்ளிகளையுடைய மயில்வாகனத்தையூர்ந்தருளும் சேவகனும் என்னையடிமை கொண்ட திருப்போரூரில் வாழ்கின்றவனுமாகிய அறமுகக் கடவுள் அருளினான்.

" மேலைச்செய்யுளில் ஆன்மாகுணியமுதல் சமூகமீறாகக்கூறியவையெல்லாம் ஆன்மப்பிரகாசத்தினால் விளங்குவன. அவையெல்லாம் ஆன்மாவன்றெனவும், அவ்வான்மப்பிரகாசம் அறிந்தாங்கறிவதாகிய சித்தாகியபிரமத்தால் விளங்குதலுடைமை எனவுங்காட்டிய அதனால் பிரமசித்தினால்விளங்குவதாகிய ஆன்மா தேகமுதலிய அசித்பதார்த்தங்களெல்லாம் தற்பிரகாசத்தால் விளங்குவதெனவும் தான் - பிரமப்பிரகாசத்தால் விளங்குவதெனவுமுணர்ந்து தற்பிரகாசத்தால் விளங்குமவற்றை தானன்றென்று அவற்றின்வேறாய்த் தன்னைவிளக்கும் பிரமப்பிரகாசத்தின்வழி நிற்கப் பெறுமாயின் அப்பிரமம் இவ்வான்மாவின் மாட்டு அத்வைதமாயிருத்தலை விளக்கித் தானேயாய் நிற்கச் செய்யுமென்பார் அறிவினைநோக்கில் உயிர்வயமாகுமெனவும், அங்ஙனம்நிற்கப் பெறாது தேகமுதலியவை நாமல்லவென்று ஒவ்வொன்றையுஞ் சுட்டியறிந்தும் அவற்றிற்கு வேறாகியதன்னைச் சுட்டியறிந்தும் தற்போதம் நிகழுமாயின் சுட்

டிறந்தபிரமந்தோன்றாது போதநிகழ்தற்குரிய ஆன்மநிலைவிலையே நிற்கப்பெறுமென்பார் அவ்வுயிர்தான் அகமனஞ் சகத்தைப்பிறிபடநோக்கின் மனத்தினின்வயமாமெனவும், தற்பிரகாசத்தை அப்பிரகாசமாக்கவல்லதத்துவ தாத்திகங்களைச் சுட்டியறிந்து சுட்டியஅவ்விடங்களில் போதம்நிகழுமளவும் பிரமந்தோன்றாது சநநமேதோன்றிவருமென்பார் பிறப்புமீதெனவும், தேகமுதலியவை நாமல்ல இவற்றிற்கு வேறாகக்கண்டநாமே பிரமமென்று விசாரித்தலாகிய இவ்வஞ்ஞானவிசாரம் தற்போதத்தைக்காட்டுமல்லது பிரமத்தைக்காட்டாதாகலான் அவ்விசாரத்தை யொழித்துத் தான் விளங்குவதும், தற்பிரகாசத்தால் தத்வங்கள் விளங்குவதும் அங்ஙனம் விளங்குந்தத்துவங்களும் தானுங்கூடி இன்பத்துன்பநுகர்வதும் தனக்குக்காட்டாகிய சிவசந்நிதியின் விளக்கத்தாலென்றுணர்ந்து அவ்வருளே கண்ணாக நாம் பிரமமல்லவென்றுணரும் ஞானவிசாரம் செய்யப்பெறின் அவ்விசாரமிகுதியான் தற்போதந்தோன்றா தொழியுமென்பார் இதன்வயப்படாது நெறியுறமறிவின் மிகப்பரிசிக்கில் நினைப்பறும் எனவும், தற்போதமொழியவே அங்ஙனங் கண்ணாகவுடைய அருளையுடையது சிவமாதலால் அவ்வருளே இவ்வான்மாவைச் சிவத்தின்வேறென்றும் ஒன்றென்றும் இரண்டென்றும் அவ்விரண்டுமல்லவென்றும் ஆமென்றுஞ் சொல்லஅறியாத முத்திநிலையைத்தருமென்பார் கதியுமீதெனவுங் கூறினர்.

இதனால் (உ) வது செய்யுளில் பிரமவிலக்கணத்தையும், (ங) வது செய்யுளில் பிரமசத்தியினிலக்கணத்தையும், (ச) வது செய்யுளில் அருள்ஆன்மாவிடத்தில் தோன்றுங்காலவரையையும், இச்செய்யுளில் அருள்ஆன்மாவிற்குவிளங்குங்கால் அறிவுவேறு உயிர்வேறு உலகுவேறென அவ்வற்றினிலக்கணம் விளங்கப்பெற்று அவ்விளக்கத்தால் பிறவியைத்தரும் பிரபஞ்சத்துட்படாது அவ்வருள்வழி நின்றனுசந்திக்கும் அனுசந்தானவிலக்கணத்தையுங் கூறியவாறாயிற்று,

போலிவேதாந்திகள் பிரமத்தைவிட்டு ஒருபொருளுமில்லையென்பார் அறிவினைநோக்கில் உயிர்வயமாகும் எனவும், யாவரிடத்தும் அகமகமென்றுசீவிக்கும் அகத்தைப் பிரமமென்றுணராமல் மனமாகவே வேறாகக்காணுங்கால் அம்மனோகற்பனையால் விளைந்ததாகிய சகத்தை யபிமானித்துச் சீவோகம் என்றேவிவகரிக்கப்படுமென்பார் அகமனஞ் சகத்தையவ்வுயிர்தான் பிறிபடநோக்கின் மனத்தினின்வயமாம் எனவும், அச்சிவபாவனையே பிறந்தோமிறந்தோமென்னும் விவகாரஞானத்திற்கிடமாமென்பார் பிறப்புமீதெனவும், அதனால் கற்பனாப்பிரபஞ்சவாசனையுட்படாது சர்வப்பிரபஞ்சமும் மனோகற்பனையே. அவைவாஸ்தவமன்று, அறிவேயுள்ளது. அவ்வறிவே நான்என்று தன்னில் தான்நிற்கப்பெறுவானாயின் உலகுபொய்யாயொழியுமென்பார் இதன்வயப்படாதுநெறியுறமறிவின் மிகப்பரிசிக்கினினைப்பறும் எனவும், அதுவே நிரதிசயானந்தமென்பார் கதியுமீதெனவுங் கூறினாரெனக்கூறுவர்.

இதனால் அறிவன்றி அறிவானாகிய ஆன்மாவுமில்லை, அறியப்படு பொருளாகிய பிரபஞ்சமுமில்லை என்றுணர்ந்து தன்னில் தானிற்றலே நிரதிசயானந்தமெனக் கூறியதாமெனப் போந்தது. அஃதேல் அறிவே உயிர்வயமாகுமெனவும் மனத்தினின் வயமாமெனவும், அதனால் அதுவே பிறப்புறுமெனவும், அதுவே கதி யுறுமெனவுங் கூறல்வேண்டும். அங்ஙனங்கூறாது உயிர் அறிவினைநோக்கில் அவ்வுயிர் அவ்வறிவின் மயமாகுமெனவும், சகத்தைநோக்கின் மனத்தினின் வயமாமெனவும், அவ்விருமயத்துள் அறிவின் மயம் கதியைத் தருமெனவும் மனத்தின்மயம் பிறப்பைத்தரு மெனவும் உயிர்க்கேற்றிக் கூறுவானேன்.

அஃதால் அப்போலிஞானத்தைக் கூறியதன்றென் றுணரற்பாற்று. (ரு)

ஏதொருநினைவிங்கெழுமதுமனமீ
தெனதெனவருமிதன்மூலந்
தீதுறுமூலவகங்கரமீதியா
னென்றெழுஞ்செப்புமிங்கிவைக்கு
மூதிருளவித்தைமூலமீதகன்றான்
மொய்யறிவெனவெனக்கிசைத்தான்
போதகமாக்கும்புகன்றமெய்க்குரவன்
போரிவாழாறுமாமுகனே.

(இ - ள்.) (மனமென்று சொல்லப்படுவது) யாதொருநினைவு (ஆன்மாவின் கண்ணெழுகின்றதோ அதுவே மனமெனவும், (அம்மனம் இதுவிதுவென்று அறியப்படு பொருள்களுள் ஒவ்வோர்பொருள்களையும்) ஈதென்னுடையதுஎன்னும் மமகாரத்தின்வழியே தோன்றுமெனவும், இம்மமகாரத்திற்குமூலம் தீமையையுடையமூல அகங்காரமெனவும், இவ்வகங்காரம் (மமகாரத்தாற் கொள்ளப்படுபொருள்களையுடையவன்)யானென்னும் வழியேதோன்றுமெனவும், சொல்லப்பட்ட (எனதென்னும் மமகாரமும்யானென்னுமகங்காரமும்) ஆகியஇவைகளுக்கு பேரிருளாகிய அவித்தை மூலமெனவும், (அவித்தையாகிய) இது நீங்கப்பெறுமாயின் (அதுவே) பேரறிவெனவும், ஞானவடிவமாக்கும் (உண்மையுபதேசத்தை) உபதேசிக்கின்ற ஞானாசாரியனும் திருப்போரூரில்வாழ்கின்றவனுமாகிய முருகக்கடவுள் அடியேனுக்கருளிச்செய்தான்.

மேலைச்செய்யுளுட்கூறிய அகமனம் என்றவற்றைவகுத்துக் கூறவந்தது இச்செய்யுள்.

ஏதொருநினைவு இங்குஎழும் அதுமனம் என்றதனால் மனத்தின் செயல் நினைவுஎனவும், ஈது எனது என்னவரும் என்றதனால் அந்நினைவின்செயல் என்னுடைய தெனப்பற்றும் பொருளாகிய பொன்மண் பெண் என்பவற்றில்

இச்சா ஞானக்கிரியைகள் செல்லுமுறையே செல்லுமெனவும், இதன்மூலம் தீதுறு மூலவகங்காரம் என்றதனால் அங்குசெல்லு முறையே மனம்போமளவும் இருவினைகளையேயீட்டி அகங்காரத்தைவளர்த்து மெனவும், ஈது யானென்றெழு மென்றதனால் அவ்வகங்காரம் எனதெனப்பற்றுந் தேகமுதலிய தத்துவங்களொன்றொன்றையும் யான்யானென்றே பற்றுக்கோடாகப் பற்றியெழுமெனவும், செப்பும் இங்கிவைக்கு மூதிருள் அவித்தை மூலம் என்றதனால் நினைவுமுதல் அகங்காரமீருக்கூறிய இவைகளுக்கு வித்தாக விருப்பது மூலாக்கியான மெனவும், ஈது அகன்றால் மெய்யறிவு என்றதனால் மனமுதலிய வற்றிற்கு மூலமாகிய இவ் வஞ்ஞானம் அருளால் ஆன்மாவினின்று மொழியப் பெறுமாயின் ஆன்மாவின்கணுள்ளீடாய் நின்ற சிவப்பிரகாசம் பிரகாசிக்கு மெனவுங்,கொள்ளக்கிடந்தன.

இதனால் மூலாக்கியானம் காரணமாக அகங்காரந் தோன்றுமெனவும், நினைவின்வழியாக மனந் தோன்றுமெனவும், இவ்வகமும் மனமும் நீங்கப் பெறுமாயின் எங்கணுஞ்சிவமே தோன்றுமெனவுங் கூறியவாறென்க.

போலி வேதாந்திகள் நினைவு மனோசங்கற்பமெனவும் அந்நினைவு அகங்காரவிருத்தியோடு யானென தென்று விவகரிக்குமெனவும் அவ்விவகாரத்திற்கு மூலாக்கியானம் காரணமெனவுங் கூறி மேல் மனமும் மனோசங்கற்பமும் அச்சங்கற்ப விவகாரமும் ஆகிய இவையாவும் மூலாஞ்ஞானத்தின் செயலேயன்றி ஆன்மதன்மமன்றாகலின் ஏதொரு நினைவு இங்கெழும் அதுமனம் அதன்மூலம் மூல அகங்காரம் இங்கிவைக்கு மூலம் மூதிருளவித்தை மூலமென்றாரெனவும், மேற்கூறியவை ஆன்ம சன்மமன்றென்றுகாணவே தனது தர்மமாகிய சச்சிதானந்த சுயம்பிரகாசமாகவே விளங்குமாதலின் ஈதகன்றால் மெய்யறிவு என என்றாரெனவுங் கூறுவர்.

சச்சிதானந்தமே ஆன்மதர்மமாய் மனம் மனோசங்கற்ப முதலியவை ஆன்ம தர்மமன்றாயின் ஈதகன்றால் மெய்யறிவு எனக் கூறுவானேன். அஃதால் ஈது அகன்றால் என்றமையால் முன் ஆன்மா அவற்றோடு இருந்தமையும்,மெய்யறிவு என்றமையால் அவ்வான்மா பின்னறிவாய் விளங்கினமையும் விளக்கியதெனவே கொள்ளற்பாற்று. கொள்ளவே பின்விளங்கிய அறிவே சச்சிதானந்த ரூபாத்மகமாய் விளங்கு மெனவும் ஆன்மா அநூர்த ஜட துக்காத்மகமாய்க் கிடக்குமெனவு முய்த்துணரற்பாற்று.

இதனால் ஆன்மா மூலாக்கியான சம்பந்தமுடைய தெனவும் அறிவு அச்சம்பந்தமில்லாத தெனவுங் கூறியவாறு. (கூ)

சச்சிதானந்தமெனும்பெயர்மூன்றில்
தழுவுமாவரணமூன்றிவைதாம்
நிச்சயவறிவாற்சமாதிஞானத்தால்
நிகழ்வுறுசகசஞானத்தால்

அச்சமின்றகலுமிவற்றினையறியென்
றருட்கடனிறைத்தெனையளித்தான்
பொய்ச்சழக்ககன்றமனத்தினர்நினைக்கும்
போரிவாழாறுமாமுகனே.

(இ-ள்.) சத்து சித்து ஆனந்தம் என்று பெயர்பெற்ற அம்மூன்றில் தழுவிய ஆவரணங்கள் மூன்றெனவும், அவைகள் நிச்சய ஞானத்தினாலும் சமாதி ஞானத்தினாலும் விளங்குகின்ற சகசஞானத்தினாலும் யாதொரு அச்சமில்லாமல் நீங்குமெனவும், இம்முறைகளை யறிவாயென்று பேரருளை என்னுள்ளத்திருத்தி பொய்வழக்கில்லாத மனத்தினை யுடைய ஞானிகள் தியானிக்கும் திருப்போரூரில் வாழ்கின்ற அறுமுகக் கடவுள் அடியேனைக் காத்தருளினன்.

சச்சிதானந்தமென்னும் பெயர்க்குரிய பொருளியைபுடையது பிரமமும் பெயர்மாத்திரப் பொதுமையான் இயைபுடையதுஆன்மாவுமாதலால் ஈண்டு அவ்வான்மாவை குறித்தற்குச் சச்சிதானந்தமெனும் பெயர்மூன்றிலெனவும், பொதுமையானப்பெயர்க்குரிய ஆன்மா அப்பெயர்ப்பொருளாயுள்ள பிரமமாதற்குஇடையேமறைப்பாயுள்ளது அநித்திய ஜட துக்கரூபமாகிய பாசமாதலால் அதனைக்குறித்தற்குத் தழுவுமாவரண மூன்றெனவும், அவ்வாவரணமானது அநித்தியப்பொருளை நித்யமாகக் கருதுவதனாலும் அப்பொருளை இன்பமெனக்கருதுவதனாலும் இன்பமெனக்கருதியவது துன்பமாதலால் அத்துன்பத்தால் மயங்கிய மயக்கறிவதனாலும் நீங்கப்பெறாது நிலைபெற்றிருத்தலால்அம்மூன்றையும் மூன்றுஞானத்தால் கெடுக்கவேண்டுமென்று குறித்தற்கு இவைதாம் நிச்சயவறிவால் சமாதிஞானத்தால் நிகழுறு சகசஞானத்தால் அச்சமின்றகலும் எனவும், இம்மூன்று ஞானங்களால் அவ்வாவரணங் கெட்டவழி ஆன்மா சச்சிதானந்தப் பொருளாகிய அப் பிரமமேயாய் நிற்குமாதலால் அவ்வநுபவத்தைக் குறித்தற்கு இவற்றினை யறியெனவுங்கூறினர்.

இதனால் மேலைச் செய்யுளில் மூதிருளவித்தை மூலமீதகன்றால் மொய்யறிவெனக் கூறியவற்றை விதந்தது இச்செய்யுள். எங்ஙனமெனின் மொய்யறிவென்றதைச் சச்சிதானந்தப் பொருளாயுள்ள தெனவும், மூதிருளவித்தை யென்றதை அனித்திய சடதுக்கமாயுள்ளதெனவும், ஈதகன்றாலென்றதை அவ்விருள் நிச்சய ஞானமுதலிய ஞானங்களால் அகலுமெனவுங் கொள்ளக் கிடந்தன. சச்சிதானந்த மெனும் பெயர் மூன்றில் தழுவுமாவரணம் மூன்றென்று கூறவே தழுவும் வினைக்குரிமையல்லாத பிரமத்தை விட்டு தழுவும் வினைக்குரிய ஆன்மாவை விட்டலக்கணையானும் விடாதலக்கணையானும் விட்டுவிடாத லக்கணையானும் கூறினும்.

**விட்டலக்கணையாவது:**—மஞ்சாக் குரோசந்தி கங்காயாம் கோஷப் பிரதிவசதி என்பன. இதன் பொருள் மரம் கூப்பிட்டது கங்கைக்கணிடைச்சேரி என்பனவாம். மரம் கூப்பிட்டது என்று கூறுங்கால் மரத்தில் ஓர் புருடனிருந்து கூப்

பிட்டானென்று பொருள்கொள்ளுதல்போலும், கங்கைக்கணிடைச்சேரி யென்னுங்கால் கங்கைக் கரையின்கண் இடைச்சேரி யென்று பொருள்கொள்ளுதல்போலும் தழுவும் ஆவரணம் மூன்று என்றதனால் ஆவரணம் தழுவி நிற்றல் ஆன்மாவையே யாதலால் அவ்வான்மாவை யீண்டுக் கூறினும்.

அல்லதூஉம் விடாதலக்கணையானும் ஆன்மாவையே கொள்ளற்பாற்று.

**விடாதலக்கணையாவது:**—சோணஸ்திஷ்டதி சுவேதோதாவதி என்பன. இதன்பொருள்சிவப்புக்குதிரையும் வெள்ளைப் பசுவையும்கண்டனேயோஎன்பவாம்.

அங்ஙனம் வினுவியோர்க்கு செகப்பு நிற்கின்றது வெள்ளை போகின்றது என்றுகூறுங்கால் செம்மையும் வெண்மையும் போகாது நில்லாது ஆதலால் செந்நிறமுடைய குதிரை நிற்கின்றதென்றும் வெண்ணிறமுடைய பசுபோகின்றதென்றும் பொருள் கொள்ளுதல் போலும், ஆவரணம் தழுவு மென்றும் ஞானத்நாலச்சமின்றகலு மென்றும் கூறியவதனால் தழுவியிருத்தலும் அகன்று நிற்றலும் ஆகிய இவ் விருதன்மையையு முடையது ஆன்மாவேயன்றி பிரமமன்றாகலான் விடாத லக்கணை யானும் ஈண்டு ஆன்மாவையே கூறினும்.

அல்லதூஉம் விட்டுவிடாத லக்கணையானும் ஆன்மாவையே கொள்ளற்பாற்று.

**விட்டுவிடாதலக்கணையாவது:**—சோயம்தேவ தத்தனென்பது இதன்பொருள் ஓர் புருடன் இடவேற்றுமையானும் காலவேற்றுமையானும் வேடவேற்றுமையானும் மாறுபட்டேவரினும் அவனைவிடாதுள்ள மருவுமுதலிய சில வடையாளங்களைக் காணுங்கால் முன்னுள்ளதேவதத்தனென்றே கொள்ளுதல்போலும், ஆவரணந் தழுவுமென்றும் அகலுமென்றும் கூறியதே யமையாது இவற்றினை யறியென்றும் அருட்கட னிறைத்து எனையளித்தா னென்றும் கூறியவதனால் அறிதலும் அருளைப் பெறுதலும் ஆன்மாவேயன்றி ஆன்மாவா லடையப்படு பொருளாயும் அடையப்படுபொருளால் பின்பெறும் பயனையுடையதாயுமுள்ள பிரமமன்றாகலான் விட்டுவிடாதலக்கணையானும் ஆன்மாவையே யீண்டுக் கூறினும்.

ஆன்மாவா லடையப்படு பொருளென்றது பிரமம். அப்பொருளால் பின்பெறும்பயனென்றது அருள்.

ஓர்தேவதத்தனை விகாரத்திற் றெட்குறாது வாளாயிருந்த காலத்துக்கண்ட ஒருவனே பின் நெடுநாட்சென்று மற்றோரிடத்தில் சதுரங்கசேனைகளுடனே கண்டானாயினும் அவனை வேறோர் அரசனாக வெண்ணாது முன்வாளாயிருந்தவனாகவே என்னுவதும், பின் சின்னாட்சென்றவழி தண்டு கமண்டலத்துடனே சந்நியாசியாகக்கண்டானாயினும் அவனை வேறோர் சந்நியாசியாகக்காணாது அவ்வரசனாகவே காணுதலுமாம். சுயம்தேவதத்தனென்னும் வாக்கியத்தில் மேற்கூறியவாறு ஒருதேவதத்தனையே இங்குகொண்டதுபோல் ஆன்மா தன் னறிவு தோன்றாது மூலாஞ்ஞான்த் துட்பட்டிருந்த காலத்தும் ஆன்மாவுள்ளதெனவும், அவ்வறிவு மாயாகாரியங்

களாகிய கருவிகரணங்களோடு கூடி விடயங்களை நுகருங்காலத்தும் இவ் வறிவினை யுடையது முன்னஞ்ஞான வசப்பட்டிருந்த ஆன்மாவே யாமெனவும், இக்கருவி கரணங்கள் ஞானவுணர்ச்சியால்நாமல்லவென்றும் இவை மாயாகாரியமென்றும் தெ ந்து சர்வசங்கபரித்தியாக முடையனாய் நிற்குங்காலத்தும் முன்கருவி கரணங்க ளோடுகூடிய ஆன்மாவேயென்றும் கொள்ளுதலே உண்மைப் பொருளாம்.

போலிவேதாந்திகள் விட்டலக்கணையால் கங்கையைவிட்டு இடைச்சேரியைக் கொண்டதுபோல் சங்கற்ப விவகாரங்களைவிட்டு பிரஞ்ஞையையும், விடாதலக்க ணையால் நிறங்களைவிட்டு நிறங்களையுடைய பொருள்களைக்கொண்டதுபோல் பிரஞ் ஞையையுடைய அகத்தையும், விட்டுவிடாத லக்கணையால் விவகாரபேதங்களைவிட்டு ஒருவனையே கொண்டதுபோல் பிரக்ஞையாகவும் அகமாகவும் கண்ட அவற் றையே பிரமமாகவும் அப்பிரமத்தை வேறெனக் கொள்ளாது ஆன்மாவென்றே கொள்ளற்பாற் றென்பர்.

அற்றேல் இவற்றினை யறியெனவும் அருட்கடல் நிறைத்தெனவும் எனையளி த்தா னெனவும் கூறவேண்டியதில்லை. என்னையெனின் அறியென்னுமிடத்து அறி யவேண்டியவன் ஜீவனோ பிரமமோ; அறியென்றவன் பிரமமோ ஜீவனோ, அரு ட்கடல் நிறைத்து என்னுமிடத்து அறிவிக்கவந்தவன் நிறைத்ததோ அறிந்தவனோ என்னை யளித்தா னென்னுமிடத்து அறிவிக்கவந்தவன் கூற்றோ அறிவிக்க அறிந்த வன்கூற்றோ என்றிவ்வாறு பல ஆசங்கைக் கிடனாம்.

இதனால் (சு) வது செய்யுளுட் கூறிய ஆணவமலத்தை இச்செய்யுளில் ஞா னத்தா லகற்று முறைமையைக் கூறுவான் திருவருட்பேறே பேறெனவும் பேற் றைத் தருவோன் ஆன்மாவின் வேறாகிய சச்சிதானந்தப் பொருளாய் விளங்கும் பிரமமெனவும், அப்பிரமத்தால் அதனின்வேறாகிய ஆன்மா சச்சிதானந்த விலக்கண த்தை யடையக் கூடுமெனவு முணர்த்தியவாறு. (எ)

சுருதியின்றுணிவானினைவுகொண்டுலகந்
துச்சமென்றுணர்தனிச்சயமாங்
கருதுறுங்னைவையடக்கியிவ்வுலகங்
காணலென்றுணர்ந்திடல்சமாதி
யிருவகையாய்முன்னுரைத்தவையின்றி
யிலங்கறிவுருவமாயிருத்தல்
பொருவறுசகசஞானமென்றிசைத்தான்
போரிவாழாறுமாமுகனே.

(இ - ள்) நிச்சயஞானமாவது வேதவளவையின் றுணிபால் (தெளிந்த) நி னைவைக்கொண்டு, காணப்படும் உலகை அற்பமென்றுணர்தலே நிச்சய ஞானமெ னவும், இன்பமெனக்கருதும் மனத்தை யகத்திலடக்கி இவ்வுலகவாழ்வைக் கானற்

சலமென்று அறிதலே சமாதிஞானமெனவும், துச்சமாயும் கானற்சலமாயும் கண்ட இருவகையாய் முன்னர்க்கூறிய ஞானங்களின்றி விளங்கும் அறிவின் வடிவமாயிருத்தலே ஒப்பில்லாத சகச ஞான மெனவும் திருப்போரூரில் வாழ்கின்ற அறுமுகக் கடவுள் அடியேனுக்கு அருளிச்செய்தான்.

பிரம சந்நிதானத்தில் தோன்றிநின்றழியும் பிரபஞ்சம் துச்சபதார்த்தங்களென்று வேதங்களிற் கூறுவதனுலும் அச்சிரவண முதிர்ச்சியையுடையோர் நிச்சயிப்பதும் அதுவேயாதலானும் சுருதியின்றுணிபால் நினைவுகொண்டுலகம் துச்சமென்றுணர்தல் நிச்சயமாமெனவும், துச்சமென்றுணர்ந்த நிச்சயஞானத்தால் சுருதியிற் கூறிய பரசிவத்தி னிடத்துதிக்கும் பிரமானந்தத்தைப்பருக முயல்வோர் பிரபஞ்சத்தைப்பொருளாக மதித்து அவற்றிடை இன்பங்கருதியுழன்ற நினைவை அவற்றிற் செல்ல வொட்டாதடக்கி சிவயோகத்தி லிருத்தவேண்டு மாதலால் கருதுறு நினைவையடக்கி இவ்வுலகம் கானலென் றுணர்ந்திடல் சமாதியெனவும், அச்சிவயோகத்தி லிருக்கப் பெற்றோர் மீட்டும் பிரபஞ்சத்தை யோர் பொருளாகமதித்தலும் இன்பமெனக் கருதுதலுமில்லையாய் அகமும் புறமும் சிவத்தையேகண்டு கண்ட அச்சிவமாகவே யிருப்பார் அஃதால் நினைவின் வசப்பட்டும் அதனுல் விடையாகாரமாயும் ஆகாராதலால் இருவகையாய் முன்னுரைத்தவையின்றி இலங் கறிவுருவமாயிருத்தல் பொருவறுசகசஞான மெனவுங் கூறினர்.

இதனுல் மேலைச்செய்யுளில் நிச்சயமுதலிய ஞானங்களால் ஆவரணம் மூன்றும் அச்சமின்றகலும் என்றவற்றை விதந்தது இச்செய்யுள். அல்லதூஉம் நிச்சய ஞானத்தால் உலகு துச்சபதார்த்தமா யுள்ளதெனவும், சமாதி ஞானத்தால் துச்சபதார்த்தத்தில் ஆன்மா பற்றுடைப் பொருளாயினும் அவற்றின்வேருகும் இலக்கணமுடைய தெனவும், சகச ஞானத்தால் ஆன்மாவின் வேருகிய சிவம் பாசத்தின் வேருகிய ஆன்மாவோடு உடனுய்நிற்கு மிலக்கணம் உடையதெனவும் உணரவருமென்று கூறியவாறுமாம்.

போலிவேதாந்திகள் பிரபஞ்சம் பாரமார்த்திகத்தில் உலகுபொய்யாக விவகரிக்கப்படுவதென்று துணிவதே நிச்சய ஞானமெனவும், அந்நிச்சய முதிர்ச்சியால் கானற் சலம்போல் இல்பொருளாகக் காண்கையையே சமாதி ஞானமெனவும், அச்சமாதியில் நிலைபெற்ற திடத்தால் தன்னைச் சிவனுகக் காணுது பிரமமாகக் காண்கையே சகசஞானமெனவுங் கூறுவர்.

அஃதேல் துச்சமென் றுணர்த லெனவும் கானலென் றுணர்ந்திடலெனவும் அறிவுறுவா யிருத்தலெனவும் கூறுர். மற்றென்னையோவெனின் பரமார்த்தத்தில் உலகுபொய்யேயாயின் பொய்யென்னும் பொருள்படக் கூறவேண்டும் அங்ஙனங்கூறுது துச்சமென்றதனுல் உலகு அசத்தாயுள்ள பதார்த்தமென்று உணரவருதலால் உணர்தல் எனவும்.

உலகைக் கானற் சலம்போற் பிராந்தி யென்று காண்கை யொன்றுனே உலகுபொய்யாய்ப்போய்ப் பிரமமே யாவதாயின் பிரமமே உள்ளதென்றும் பொருள்படக்கூறவேண்டும் அங்ஙனங்கூறாது நினைவையடக்கி கானலென் றுணர்ந்திடல்என்றதனுல் இல்பொருளாகாது உள்பொருளாகிய அசத் பதார்த்தத்தில் ஆன்மா நினைவு செல்லுதலாற் அதனை யடக்கி எனவும், அதனை அனுபவித்தல்போல் சத்பதார்த்தத்தோடுகூடி யனுபவிக்கும் ஆற்றலுடைய தாதலால் அச் சத்தோடுகூடி யனுபவித்தற்கு உலகு இன்பம் பயக்கும்பொரு ளல்லவென்றுணர்த்த அதனைக் கானலென் றுணர்ந்திடல் எனவும், இதனுல் ஆன்மா சத்தையும் அசத்தையும் உணர்ந்திடலால் உணர்ந்திடல் எனவும்.

பொய்யென்று கண்ட சிவ அறிவே பிரமமாயின் அறிவு இலங்குமென்று பொருள்படக் கூறவேண்டும். அங்ஙனங்கூறாது இருவகையாய் முன்னுரைத்தவை இன்றி அறிவுருவமாயிருத்தலென்றதனுல் அசத்தாகிய உலகமாகாமலும் அவ்வுலகோடுகூடி அவற்றின்வேறுகிச் சித்தாய்விளங்கும் ஆன்மாவாகாமலும் இவ்விரண்டினையும் பிரகாசிக்கச் செய்யும் அவ்வறிவுருவமா யிருக்க வேண்டுமென் றுணர்த்த அறிவுருவமா யிருத்த லுண்மையால் அறிவுருவமா யிருத்தல் எனவும் கூறினுரெனக் கோடலே உண்மைப் பொருளாம்.

இதனுல் ஆன்மா அறிவுருவமா யிருப்பது சத்தாயுள்ள பதார்த்தத்தினிடத்தெனக் கோடல் வேண்டுமெனவும் போந்தது.

போதரவே உணர்தலும் உணர்ந்திடலு மின்றி அறிவாயிருப்பது பிரமமெனவும், ஆன்மா உணர்தலால் உலகிற்கு வேறுகியும் உணர்ந்திடலால் பிரமத்தோடு கூடியும் அறிவுருவமா யிருத்தலாதலால் சிவானுபவத்தையும் யுடையதெனக் கூறியவாறுயிற்று. (அ)

நிச்சயஞானஞ்சமாதிஞானங்க
ணிராசையார்மனத்தினிற்கலங்கா
தெச்சமின்றிருக்குமாசையார்மனத்தி
லிரண்டுஞானங்களுங்கலங்கு
நச்சுதல்வெகுளியின்றியசகச
ஞானிகணசையுளர்போலப்
பொய்ச்சகத்துறினுங்கலங்குறுரென்றுன்
போரிவாழாறுமாமுகனே.

(இ-ள்.) நிச்சயஞானம் சமாதிஞானம் என்னுமிவ்விருவகை ஞானங்களும் நிராசையையுடைய ஞானிகளது அறிவினிடத்தில் கலங்குறுதெனவும், குறைவின்றி எக்காலத்தும் நீங்காதிருக்கும் ஆசையுடையார்மனத்தில் மேற்கூறிய அவ்விருவகைஞானங்களும் கலங்குமெனவும், வேண்டுதலும் வேண்டாமையு

மில்லாத சகசஞானிகள் அவ்விரண்டு முடையார்போல் பொய்மையாகிய சகத்தில் வாழினும் கலங்காரகளெனவும், திருப்போரூரில் வாழும் அறுமுகக்கடவுள் அடியேனுக் கருளிச்செய்தான்

அநுபவிக்கப்படும் பொருள்கள் தத்துவக்கூட்டங்கள் கூடக்கூடும் பொருள்களன்றெனவும், மனமுதலிய கரணங்களைக் கொண்டு தானே அனுபவிக்குஞ் சுதந்தரம் ஆன்மாவுடைய தன்றெனவுங் காணும் திருவருள்ஞானத்தை யடைந்தோர் வேண்டுதல் வேண்டாமையாகிய சங்கற்ப விகற்பங்களற்ற சகசஞானத்தில் நிலைபெற்று நிச்சய ஞானத்தாற் றுணிந்த துச்சப் பொருளாலும் சமாதிஞானத்தான் கானற் சலமென்றுணர்ந்த விடய இன்பங்களாலும் கலங்காராதலால் நிச்சயஞானஞ் சமாதிஞானங்கள் நிராசையார் மனத்தினிற் கலங்காதெச்சமின்றி யிருக்குமெனவும், அநுபவிக்கப்படும் பொருள்கள் தத்துவக்கூட்டங்கள் கூடக்கூடும் பொருள்களெனவும் அப்பொருள்களை ஆன்மா மனமுதலிய கரணங்களைக் கொண்டுதானே யறிந்தனுபவிக்கும் சுதந்திரமுடையதெனவுங்கொள்ளும் பசுஞானத்தையுடையோர் பிரபஞ்சப்பொருளை துச்சமென்றும் கானற்சலமென்றும் காணும் ஞானங்களில் நிலையுறப் பெறாது அப்பொருளாலும் கரணங்களாலும் கலங்குறுவா ராதலால் ஆசையார் மனத்தில் இரண்டு ஞானங்களும் கலங்குறுமெனவும், சகசஞானமுடையோர் இந்திரியத்துவாரா அனுபவிக்கப்படும் பொருள்களோடுகூடி அனுபவித்துவரினும் செயல்வகையானேயன்றி கருத்துவகையான் வேண்டுதல் வேண்டாமையடையாது திருவருளையே நோக்கி நிற்பராதலால் நச்சுதல் வெகுளியின்றிய சகசஞானிகள் நசையுளர்போலப் பொய்ச்சகத்துறினும் கலங்குறா ரெனவுங் கூறினர்.

போலிவேதாந்திகள் அஞ்ஞானிகள் பிரபஞ்சத்தைச் சத்தியமாகக் கொண்டிருப்பவ ராதலால் அதனைச்துச்சமாகவும் கானற்சலமாகவும் காணாரெனவும் ஞானிகள் பிரபஞ்சத்தை மித்தையாகக் கண்டிருப்பவ ராதலால் மேர்கூறியவாறே காண்பரெனவும் அங்ஙனங்கண்ட ஞானிகள் பிராரத்த நீங்குமளவும் பொய்ச்சகத்துறினும் உறாதவரே யாவரெனவுங் கூறுவர்.

இதனால் ஆன்மாக்கள் ஞானக் ஞான்முடைய ரெனவும் பிரபஞ்சம் ஞானமுடையாரைக் கலக்கா தெனவும் அஞ்ஞான முடையோரைக் கலக்குமெனவும் போந்தது.

போதரவேஆன்மா பிரமமன்று ஞானஞ்ஞானத்தோடுகூடி அதுவது வாயிருப்பதெனவும் பிரபஞ்சம் அஞ்ஞானிகளிடத்துத் தான் குன்றாது மறைக்குஞ் சத்தியாய் நிற்குமெனவும், ஞானிகளிடத்து மறைக்குஞ் சத்திகுன்றி நிற்குமெனவும் கொள்ளக்கிடந்தன. இவ்வாறன்றிப் பிரபஞ்சம் அஞ்ஞானிகளுக்குச் சத்தியமே யன்றி ஞானிகளுக்கு மித்தையென்றே கூறவந்தாரெனின் நிராசை

யார்மனத்தினிற் கலங்காதென்று முன்னர்க்கூறி மீட்டுஞ் சகசஞானிகள் நகையுளர்போலப் பொய்ச்சகத்துறினும் கலங்குறுரென்று கூறியது மிகையாம்.

இதனால் சகம் தோற்றன் மாத்திரமே யன்றி வாஸ்தவ மன்றென்னுங் கூற்று மொழிந்தமை காண்க.

ஒழியவே அஞ்ஞான சொரூபமாயுள்ளது பாசமெனவும் ஞானசொரூபமாயுள்ளது திருவருளெனவும், அஞ்ஞானமுடையோர் ஆன்மாக்களெனவும் திருவருளுடையோ னிறைவனெனவும், அஃதால் இறைவனருள் பெற்றோர் அஞ்ஞானத்தாற் கலங்காரெனவும், ஆன்மஞானத்தால் அருள்பெறுதார் கலங்குவாரெனவுங் கூறியவாறும். (கூ)

சித்தொருநான்கிற்பிரமங்கூடத்தன்
செப்புமாயாரகிதங்கண்
மத்தமிலீசனுயிர்கடாமாயா
சகிதங்கள்வழுத்துமிவ்வீசன்
சத்தெனுந்தன்னைமறப்பிலாமையினற்
றருகதிதேடிலன்சீவன்
பொய்த்தலில்வீடுதேடுமென்றிசைத்தான்
போரிவாழாறுமாமுகனே.

(இ - ள்.) சித்தென்று சொல்லப்படும் ஒருநான்கில் பிரமம் கூடஸ்தன் (என்னுமிவ்விரண்டுசித்தும்) சொல்லப்படும் மயாரகிதங்களெனவும், மயக்கமில்லாத ஈசன் உயிர்கள் என்னு மிவ்விரண்டுசித்தும் மாயா சகிதங்களெனவும், (இவற்றுள்) புகழப்படுமீசன் சத்தென்று சொல்லப்படுந்தன்னை மயக்கத்தினால் மறவாத தன்மையினால் நன்குமதிக்கும் முத்தியைத் தேடிலனெனவும், சீவன் பொய்மையை யடைதலில்லாத முத்தியைத் தேடுவானெனவும், திருப்போரூரில்வாழ்கின்ற அறுமுகக்கடவுள் அடியேனுக் கருளிச்செய்தனன்.

பிரமம் கூடத்தன் என்னுமிவ்விரண்டுமே சொரூபமாகவும் தடத்தமாகவும் விவகரிக்கப்பட்டு வருமாதலால் சித்தொருநான்கெனவும், இவற்றுள்பிரமசித்து இயல்பாகவே பாசரகிதமும் கூடஸ்தசித்து மலநீக்கம் வரப்பெற்று பிரமசித்தோடு ஒன்று யிருக்கப் பெறுமாதலால் நான்கில் பிரமம் கூடத்தன் செப்பும் மாயாரகிதங்களெனவும், ஈஸ்வரத்தோற்றம் மகாமாயையிலும் ஜீவத்தோற்றம் அசுத்தமாயையிலும் ஆதலால் மாயையென்னும் பெயர்ப் பொதுமையைநோக்கி அத்த மிலீசனுயிர்கடா மாயாசகிதங்களெனவும், ஈசன் அருள்காரணமாகத் திருவுருவங் கொண்டவனாதலால் ஈசன் சத்தெனுந்தன்னை மறப்பிலாமையினால் தகு கதி தேடிலனெனவும், சீவன் மலவாசனையால் தன்னைமறந்து பிறவிவாத

ணையிற் சிமிழ்ப்புண்டு முத்தியின்பத்தை விரும்புவோனுதலால் பொய்த்தலில் வீடுதேடும் எனவுங்கூறினர்.

போலி வேதாந்திகள் ஓராகசமே மகாகாசமெனவும் மேகசலா காசமெனவும் கடாகாசமெனவும் கடசல ஆகாசமெனவும் எவ்வாறு கற்பனுநாமம் பெற்றதோ அதுபோலும் பிரமம் கூடஸ்தன் ஈசன் சீவன்என்று நான்கு சைதன்னியங்களாக விவகரிக்கப்பட்டன வெனவும், அவற்றுள் பிரமம் கூடஸ்தன் என்னுமிவ்விரண்டும் அதிட்டான சைதன்னியங்க ளெனவும், சீவன் ஈஸ்வரன் இவ்விரண்டும் மாயையில் ஆரோபித்த ஆரோபசைதன்னியங்க ளெனவும், இந்தமாயாரோபிதர்களாகிய சீவேஸ்வரர்கள் மாயாசகிதர்க ளெனவும், பிரம கூடஸ்தர்கள் மாயாரகிதர்க ளெனவும், மாயாரகிதர்களாகிப பிரமகூடஸ்தர்கள் துவம்பத தத்பத லக்ஷியார்த்தரெனவும், சீவேஸ்வரர்கள் துவம்பத தத்பத வாச்சியார்த்தரெனவும், அதிஷ்டானமாயும் துவம்பத தத்பத லக்ஷியார்த்தமாயுமுள்ள பிரமகூடஸ்தர்களுக்கே ஐக்கியங் கூடுமெனவும், ஆரோபிதமாயும் துவம்பத தத்பத வாச்சியார்த்தமாயுமுள்ள சீவேஸ்வரர்சளுக்கு ஐக்கியங் கூடாதெனவும் ஈண்டுப் பொருள் கூறுவர்.

சீவனே இன்பத்துன்பமாகிய உபாதிகளை அநுபவிப்பவன். ஈசனே அவற்றைக்காலமறிந்து கூட்டுபவன் கூடஸ்தனேமலபாகம் பிறந்துஅருள்வசப்பட்டவன். பிரமமோ அருள்வழிநிற்கும் ஆன்மாவைத் தானுக்கிக் கொள்வது. இதுபோலுமோ மகாகாயமுதலிய ஆகாயங்கள் வெவ்வேறிலக்கணங்களையுடையன.

அல்லதூஉம் விண்ணென்றே மகாவிண்ணென்றும் மேக விண்ணென்றும் கடவிண்ணென்றும் கடசல விண்ணென்றும் எண்ணும் கற்பனை போலன்றி வேறில்லையென்னுங்கற்பனையைக் கழித்தற்குச் சித்தொன்றேயென்று கூறுது சித்தொரு நான்கிலெனவும் அகண்டசச்சிதானந்த பிரமப்பொருளாகிய சிவம்அறிவிக்குஞ் சித்தாதலான் அருட்சித்துமாய் பாசரகிதமாகிய ஆன்மா அறிவிக்க அறியுஞ் சித்தாதலான் அருளைச் சேருஞ் சித்துமாய் விளங்குதலின் இவ்விளக்கத்து மாயாப்பிரசங்கமின்மையை யுணர்த்தற்குப் பிரமம் கூடஸ்தன் மாயாரகிதங்களெனவும், இவ்வுண்மையன்றி வேறுகூறுவனவெல்லாம் வேதவுண்மை யன்றென்றுணர்த்தற்குச் செப்புமெனவும், ஏனைய ஈசன் சீவனென்று கூறு மிவ்விரண்டு சித்தும் ஆரோபிதங்களென்று கூறும் அவரது ஆரோபத்தை மறுத்தற்கு ஈசனுயிர்கடாம் மாயாசகிதங்களெனவும், இவருள் ஈசன் பிரவஞ்சத்தைக் காரியப் படுத்தும்பொருட்டு நாதம் - விந்து சாதாக்கியம் ஈஸ்வரம் சுத்தவித்தை என்கின்ற பஞ்ச சத்திகளையுண்டாக்கி அந்தத்துவங்களில் முறையே சிவம் சத்தி மகேசுரன் உருத்திரனென்கின்ற மூர்த்திபேதங்கொள்ளுதல் குடிலையாகிய மகாமாயையினுலாதலால் அது மயக்கு மாயைபோலன்றென்றுணர்த்தற்கு மத்தமில் லெனவும்,பிரவஞ்சகாரியத்தின் பொருட்டு ஈசன் மகாமாயையைத் தானமாகக் கொள்வது போல

ன்று ஆன்மாக்கள் கொள்ளுந் தனுவென்றுணர்த்தற்குஉயிர்கடாம்மாயாசகிதங்களெனவும், ஈசன் சொரூபத்தும் தடத்தத்தும் அருளன்றிவேறின்மையான் அவ்வீசனைப் பிரமமேயென்றுணரவேண்டு மென்றறிவுறுத்தற்கு வழுத்து மிவ்வீசனெனவும், அவ்வீசனைச் சீவனேடொன்று யெண்ணிப் பிரமத்தின் வேறாகக் கூறும் கூற்றை மறுத்தற்குச் சத்தெனுந்தன்னை மறப்பிலாமையினால் தகுகதி தேடிலன் எனவும், டாசசகிதனாகிய சிவசித்தே டாசரகிதமாகுங்கால் கூடஸ்தசித்தாம், அக்கூடஸ்த சித்தே பிரமசித்தோடு கூடியின் புறுமென்னு முண்மையை நாட்டி சிவசித்து பிரமசித்தோடு கூடுமைக்கியங் கூடாதென்னுங் கூற்றை மறுத்தற்கு சிவன் பொய்த்தலில் வீடுதேடுமெனவும் கூறினானெனவும் போந்தமைகாண்க.

இதனால் அறிவிக்குஞ் சித்தை நிஷ்களமாகக் கூறுங்கால் பிரமசித் தெனவும், சகளவடிவமாகக் கூறுங்கால் ஈஸ்வர சித்தெனவும், அறிவிக்க அறியுஞ் சித்தை தன்னையுணராது தன்னைத்தேகமுதலியவையாக வெண்ணி விவகரிக்குங்கால் சீவசித்தெனவும், தன்னை அருளால் உணர்ந்து பின்தலைவனைக் கூடி அதுவாய் விவகரிக்கவருங்கால் கூடஸ்த சித்தெனவும், இவற்றுள் பிரமம் தடத்தவடிவங் கொண்டது ஆன்மாவின் அஞ்ஞானத்தை யகற்றி அருளோடு கூட்ட எனவும், ஆன்மா தனுவாதிகளை யெடுத்தது மூலாக் ஞான நீங்கப்பெற்று அருளோடி கூடி சிவமாகவேயிருக்க எனவுங் கொள்ளக்கிடந்தன. ஆகவே சிவேஸ்வரர்கள் ஆரோபிதர்களெனவும் அவர்களுக்கு ஐக்கியங் கூடாதெனவும் கூறுங் கூற்றை மறுத்தவாறாயிற்று

ஓதுருநாமமியானெனதசுத்த
　　முயர்ந்துளசுத்தவாதனைகள்
ஆதியதிரோதமனுக்கிரகத்தா
　　லாக்கைவாக்கியக்கவாதனைகள்
ஏதமில்காட்சிகாண்பவனென்ற
　　விவற்றுளோர்வகுப்பினுன்மனத்தின்
போதமினினைவைப்பகுத்தடக்கென்றான்
　　போரிவாழாறுமாமுகனே.

**(இ-ள்)** சொல்லப்படும் உருவ மென்பதும் நாமமென்பதும் யானென்பதும் என தென்பதும் அசுத்தங்களெனவும், உயர்வாகிய சுத்தவாதனைகளெனவும் (ஆகிய சுத்தமும் அசுத்தமும்) ஆதியாகிய திரோதான சத்தியினாலும் அநுக்கிரக சத்தியினாலும் ஆக்கப்பட்டவைகளெனவும், அவை வைகரிமுதலாகக் கூறும் ஐவகை வாக்கின் இயக்கவாதனைகளெனவும், ஆகிய இவைகள் குற்ற மில்லாத ஞானம், ஞாதுரு என்று கூறும் இவ்விரண்டுள் ஓர் வகையில் உனது மனத்தின் அறிவில்லாத நினைவைப் பகுத்தறிந்து அடக்குவாயெனவும் திருப்போரூரில் வாழ்கின்ற அறுமுகக்கடவுள் அடியேனுக் கருளிச்செய்தனன்.

மேலைச் செய்யுளில் சீவேஸ்வரர்களுக்குக்கூறிய நாமரூபங்களும் யானென தென்பவைகளும் மகாமாயை அசுத்தமாயை என்னும் மாயாசம்பந்தங்களுடைய தாதலால் ஓதுரு நாமம் யானென தசுத்தம் உயர்ந்துள சுத்தவாதனைகளெனவும், அசுத்தமாயையின் காரியமாகிய நாமரூபாதிகள் கன்மமலத்தை ருசிப்பிக்கும்ஆற்றலுடையதும், சுத்தமாயையின் காரியமாகிய நாமரூபாதிகள் அக்கன்மவிருப்பை யொழிக்கும் ஆற்றலுடையதும் ஆதலால் ஆதியதிரோத மநுக்கிரகத்தாலாக்கு எனவும் அங்ஙனம் விருப்புறச்செய்தலும் விருப்பகலச் செய்தலுமாகிய பந்தமோக்ஷ விவகாரங்கள் சூக்குமை பைசந்தி மத்திமை வைகரிமுதலிய நால் வகைவாக்கும் தூலதரம் - தூலதமம் - தூலம் - சூக்குமம் - சூக்குமதரமுமாய் நிவிர்த்திகலை முதலிய ஐவகைப் புவனவாசிகட்கு ஐவகைவாக்குகளாய் விளங்கும் பரமபந்தத்தின் இயக்கங்களானன்றி அமையாவாதலால் ஐவாக்கியக்கவாதனைகளெனவும், இப்பரமபந்த இயக்கத்தால் மூலமாகிய ஆணவமலம் நீங்கப்பெற்று அங்குதிக்கும் சிவஞானவகையிலாவது சிவசொரூபத்திலாவது மனோசங்கற்பமடங்கி நிற்கப்பெருதாயின் சிவானந்தம் உண்டாகாதாதலால் ஏதமில்காட்சி காண்பவனென்ற இவற்றுளோர் வகுப்பினுல் மனத்தின் போதமினினைவைப் பகுத்தடக்கெனவுங்கூறினுர்.

போலிவேதாந்திகள் நாமரூபரகிதமாய் இரண்டற்ற ஒன்றாய் உணர்வொளி நிறைவாய் விளங்கும் பரப்பிரமத்தில் ஆரோபிதர்களாகிய சீவேஸ்வரர்களுக்கு நாமரூபமுதலியவைகள் ஆவரணம் - விக்ஷேபம் என்று கூறும் இரண்டு சத்திகளின் காரியங்களெனவும், அவற்றுள் ஆவரணசத்தி பாழாகிய ஜனனமரணங்களென்கின்ற அனர்த்தத்தை விளைவிக்கும் அசுத்தவாசனையெனவும் விக்ஷேப சத்திமுத்திக்கனு கூலத்தை - விளைவிக்கும் சுத்தவாசனை எனவும், இச் சுத்தா சுத்தங்கள் சூக்குமமாகிய பஞ்ச தன்மாத்திரைகளியக்கத்தா லியங்குவனவெனவும், இவற்றை யபிமானிக்குங்கால் வரும் கற்பனுநாமங்களையுடையவரே சீவேஸ்வரர்களெனவுங் கூறி அதிஷ்டான சைதன்னியத்தில் ஆரோபமுதலாக மேற்கூறிய இப்பகுதிகளில் பற்றிச்செல்லும் மனம்,மனோசங்கற்பமாகிய நினைவின் விகற்பங்களைத் தோன்றவொட்டாதடக்கித் தத் பதநிலையில் நிறுத்தி வாழக்கடவாயென்று கூறினுரெனக் கூறுவர்.

இங்ஙனங் கூறியவாறே யாவும் ஆரோபித மென்றே கூறினுராயின் அடக்கென்று கூறவழக்கில்லை. அடக்கென்றதனுல் ஆரோபிதமென்று கூறிய கூற்றை மறுத்தவாருயிற்று.

இதனுல் மாயை நாமரூபங்கட்கு அதிட்டானமும் அவற்றையடைதற்குஆன்மா அதிட்டானமு மாதலால் ஆன்மா மாயாதிஷ்டானத்தை யொழித்துத் தனக்கதிஷ்டானமான பிரமத்தை யடையும் உபாயத்தைக் கூறியவாரும். (கக)

கயிலைவாழரசுதந்தகற்பகமக்
கனவரசுறைகொடிக்கனிநா

ஙியல்புறுகற்புக்கன்னிமாரிருவ
ரிருமருங்குறைவடமேரு
அயிலுடன்மயிலுங்கோழியுமாடு
மழகுடன்படைத்தமெய்க்கடவுள்
புயலினஞ்சுரந்துபொழிதருநீதிப்
போரிவாழாறுமாமுகனே.

(இ-ள்.) மேகபடலங்கள் நீர் சுரந்து பொழியும் நீதியினின்றுந் தவறாததிருப்போரூரில் வாழ்கின்ற அறுமுகக்கடவுள் கயிலையின்கண் வாழ்கின்ற இறைவன் பெற்ற கற்பகவிருக்ஷமாம், அந்நக் கற்பகத் தருவையுடைய இறைவன் இடப்பாகத்தில் நீங்காது வாழும் உமாதேவிக்குக் கனியாம், நூல்களிற்கூறும் கற்பிலக்கணமமைந்த தெய்வயானை வள்ளியம்மை யென்னும் இருமங்கையரும் இருமருங்கினுமுறைகின்ற மேருமலையாம், சத்திவேலோடு மயூரமும் சேவலும் மேஷமும் (ஆகிய இந்நான்கினையும்) பொலிவுடன் தமக்குரிமையாகவுடைய நித்தியமாகிய கடவுளாம்.

இதுவே வேதாந்தம் இதுவே வேதாந்தம் என்று கூறும் அவரது கூற்றை இது காறுங்கூறிய பதினொரு செய்யுளால் போலிவேதாந்த மாக்கி வேதாந்தத் தெளிவை முறையே காட்டிவந்தனராதலால் அத்தெளிவின் நிற்கப்பெற்றோர் பின்னரடையப்படுந் தெய்வ மீதென்றுணர்த்த அதன் பெருமையை எடுத்துக் கூறியதிச் செய்யுள்.

முன்மங்கலத்தைத்தந்து பின் அமங்கலத்தைத்தரும் பொருள்களைப்பயக்கும் பொன்னுலகில் வாழும் கற்பகம்போலாது என்றும் மங்கலத்தையே பயக்கும் சிவத்துவத்தை யளிக்கும் ஆற்றலுடைய கற்பகம் சிவகுமரானே யென்றுணர்த்த கயிலைவாழரசுதந்த கற்பகமெனவும், சிவத்துவத்தை யடையப்பெற்று அன்பர்வேண்டிய வேண்டியாங் கெய்த அருட்கனியைத் தருவோனும் அவனே யென்றுணர்த்த அக்கனவரசுறை கொடிக்கனியெனவும்,வேண்டியாங் கனுபவிக்குங்கால் ஆன்மஞானக்கிரியைகள் அவ்வப்பொருள்களாகாது அருள்வழியே நிற்கச் செய்வோனும் அவனே யென்றுணர்த்த கன்னிமாரிருவரிருமருங்குறை வடமேரு எனவும், அவ்வருள்வழி, ஞான யோகக் கிரியா சரியைகளே என்று காட்டுவோன் அவனே யென்றுணர்த்த அயிலுடன் மயிலும் கோழியும் ஆடும் அழகுடன் படைத்த மெய்க்கடவுளெனவுங் கூறினர்.

இதனால் அடையவேண்டியது சிவத்துவமெனவும்,சிவத்தாற் பெறவேண்டியது அருளெனவும், அருளாலடங்க வேண்டியது ஞானக்கிரியைகளெனவும், அவ்வடக்கத்தால் சரிக்கவேண்டியது சரியைமுதலியநான்கிலெனவும் அருளியவாறு காண்க.

அயில்-மயில்-கோழி-ஆடு என்பனவற்றை ஞானமுதலிய நான்கிற்கும் அடையாகக்கூறிய தென்னையோவெனின் அயில்முதலிய நான்கும் எவ்வாறு வேறு கடவுளைக்குறிக்காது முருகக்கடவுளையே குறிக்குமோ அதுபோல சரியை முதலிய நான்கும் சிவமென்கின்ற ஒருபொருளையே குறித்துச் சிவானந்தப் பெருவாழ்வடையச்செய்தலின் அங்ஙனம் எடுத்துக்காட்டினாரெனக் கொள்ளலுமொன்று.

அல்லதூஉம் சரியையிற் கூறிய பணியில் நிற்கும் சரியை யாளர்க்கு அவ்வப் பணிக்குத் தக்கவாறே அவ்வப் பயனையளிக்கவேண்டு மாதலால் கற்பகமாகவும்,கிரியையிற் கூறியவாறேதன்னை யான்மாவின் மாட்டுணர்ந்து பூசிப்போர்க்கு நாவிற் சுவைதரும் கனியைப்போல ஆங்கு சுவைதரவேண்டு மாதலால் கனியாகவும், யோகத்திற் கூறியவாறே இச்சிவச்சுவையின் முதிர்ச்சியால் விடய இன்பமொழிந்து நிராதாரயோகத்தில் நிற்கப்பெற்றாரை அடுத்த யாவும் பொன்வண்ணமாக்கும் பொன்மலைபோல ஞானத்திற் கூறிய வாறே தன் வண்ணமாகிய அவரை முன்போலும் தேகமுதலிய தடத்தங்களான் வாதிக்கப்பட்டுத் தற்போதமுருவண்ணம் சொரூபமாகச் செய்யவேண்டுமாதலால் தடத்த வடிவங்களல்லாத மெய்க்கடவுளாகவும் அனுக்கிரகஞ் செய்யுமுறைமையைக் கூறியவாறுமாமென்க.

அல்லதூம் வேல் ஞானத்தையும், மயில் யோகத்தையும், கோழிகிரியையும், ஆடுசரியையும்,காட்டுவதென்று கூறினாரெனக்கொள்வது மொன்று. எங்ஙனமெனின்-பொறிகளை யடக்குவது சரியையும், புலனையடக்குவது கிரியையும், கரணங்களையடக்குவது யோகமும், தற்போதத்தை யடக்குவது ஞானமுமாதலான் இவையொன்றற் கோன்றேதுவும்,பயனுமாகமுடிதலின்அந்நான்கையுமுறையே கூறினார். அதனைக்காட்டுதும் நிலைபெறாதுழலும் ஆட்டைப்போலும் பொறி அடுத்துதடுத்துவரும் பலவிடயங்கடோறும் உழல்வதாதலால் அங்ஙனஞ் செல்லாது இறைவனடிக்கட்படுத்தவேண்டுமென்றுணர்த்துவது ஆடெனவும், பகிர்முகப்பட்ட பொறிசெல்லாதொழியவே அப்பொறிவழியுழலும் புலன் உன்முகப்படும், உன முகப்பட்டவழிதோன்றுவது சிவம், அச்சிவத்தை வழிபடுவது மந்திரத்தாலாதலாற் சிவமந்திரம் பிரணவமென்றுணர்த்துவது கோழி எனவும், புலன் பிரணவார்த்த சிவத்தையுணர்ந்துவழிபடத் தொடங்கவே புலன்வழி யுழலும் பசுகரணம் சிவகரணமாதலால் அதனையுணர்த்துவது மயிலெனவும், பசுகரணம் சிவகரணமாகவே அக்கரணத்தின் வழியுழலும் சீவபோதம் சிவபோதமாய்ச் சிவமே ஒளிவிடுமாதலால் அவ்வொளியைக் காட்டுவது வேலெனவும் கொள்ளற்பாற்றென்க.

அல்லதூஉம் கடவுள்என்னுதுஅழகுடன் படைத்த மெய்க்கடவுளென்றதனுல் ஆன்மாமுத்தியை யடைதற்குச் சோபானங்களாகக் கூறிய மெய்ந்நெறி, சரியை முதலிய நான்குமேயாதலால் அந்நன்னெறியை ஊர்தியினாலும் துவசத்தாலும் படையாலும் மேற்கூறிப்போந்த ஏதுவும் பயனுமமையக்காட்டிய கடவுள்ஒருவரு

மில்லை ஆதலால் அங்ஙனங் காட்டிய கடவுள் முருகக்கடவுளொருவனே யென்று ஆன்மாக்களுக்குணர்த்திய பெருங் கருணையுமாமென்க. (கஉ)

தடவரைப்பிறந்தநதியராச்செல்லார்
தண்கடற்படமுடிமீது
சுடர்விரியுதயகதிர்மணிவிளக்குஞ்
சுந்தரப்போரிவேலிறையே
மடமையின்றடியேனுனதருளமிர்த
வாரியின்மூழ்கிடநினையாய்
குடமுனிசெவ்ந்தசடைமுடியிவர்ந்த
குரவணிசரணவாரிசனே.

(இ-ள்.) பெரிய மலையினின்றும் பெருகிய நதியாகிய பாம்பினது மேகங்கள் முகக்கின்ற தண்ணிய கடலாகிய படத்தின் முடியின்மேல் கிரணங்களை விரித்துதிக்கின்ற சூரியனாகிய இரத்தினத்தை விளக்கஞ்செய்யும் அழகிய திருப்போரூரில் வாழ்கின்ற முருகக்கடவுளே, அகஸ்திய முனிவரது செவந்த சடாமுடியின் மேல் விளங்குகின்ற குராமலரையணிந்த திருவடித் தாமரைகளையுடையவனே, இஃறே அறியாமையையுடைய அடியேன் உனது திருவருளாகிய அமிர்தசாகரத்தில் மூழ்கும் வண்ணம் நினைந்தருளாய்.

தடவரைப் பிறந்த நதியராச்சென்று தண்கடற் பட முடிமீது சுடர்விரியுதயகதிர் மணிவிளக்குஞ் சுந்தரப் போரிவேலிறை என்றதனுல் தடவரைப்பிறந்த நதியைப் பாம்பாகவும்,அந்நதிசென்று கூடும் கடற்பரப்பு அப்பாம்பின் படமாகவும்,அக்கடலிற்றோன்றஞ் சூரியன் அப்படமுடியில்விளங்கும் மணியாகவும்,அம்மணியை விளக்குமுதலொளி போரிவேலிறைவனாகவும்,மடமையின்றடியே னுனதருளமிர்தவாரியின் மூழ்கிட நினையாய் என்றதனுல் புல்லியவரம் பினையுடையனவாகிய பிறவித்துன்பந்தொட்டு வறுமையீறாகக் கூறும் பலதுன்பங்களி னின்றும் பிழைத்து இத்துன்பம் வந்தவாறென்னை? இதனையடைவித்தவன்யாவன்? என்றுணருஞ் சிலமுடையராய் இத்துன்பத்தை யொழித்து இன்பந் தரவல்ல தெய்வம் யாதென்று ஆராயவருங்கால் அவ்வாராய்ச்சியைத்தானே மாற்ற வெழுவதாகிய பலபல மாயாசத்திகளையும் அஃதொழிந்த மாயையால் வாதிக்கப்படும் ஆன்மாவையே பிரமமாகக் கூறும் மாயாவாதத்தையுங் கடக்கப்பெற்று பிறப்பிறப் பறியாததெய்வம் யாதோ அதுவேதெய்வமென்றுணரும் உணர்ச்சியிற் பசுமரத்தாணி யறைந்தாற்போல நிலைபெற்று விளங்கும் சத்திநிபாதத்துத்தமருக்குப் பிறப்பிறப் பறியாததாகிய கருணைத் தெய்வம் சரியைமுதலிய அருண்மார்க்கத்தைக் காட்டி முறையே கற்பகமாகவும் கனியாகவும் வடமேருவாகவும், மெய்க்கடவுளாகவு மிருந்து அருட்கடலி

ன் மூழ்கச்செய்தலின் அதனையே வேண்டினா ரெனவும், குடமுனிசெவந்த சடைமுடியிவர்ந்த குரவணி சரணவாரிசனே என்றதனால் அருட்கடலில் மூழ்கச்செய்ய யான்வேண்டிய தெய்வம் பிரணவார்த்த சொரூபியாகிய முருகக்கடவுளை யென்று ஏனையோரறியக் கூறியவாறுமாமெனவுங் கொள்ளக் கிடந்தன.

(ரு) வது செய்யுளில் கூறிய அருள்வழி நின்றனுசந்திக்கும் அனுசந்தான விலக்கணங் கூறியவாறே அநுசந்திக்குங்கால்அடைவதாகிய முத்திநிலையையடையவொட்டாது அகலச்செய்வதாகியஆணவத்தை யகற்றுமுறைமையையும் (சு) வது செய்யுளிலும் (எ) வது செய்யுளில் அஞ்ஞானத்தையகற்றி முத்திநிலையைக் கூடுங்கால் வரும் ஆவரணத்திரயங்களை ஞானத்திரயங்களால் அவை நீங்கப்பெறு முறைமையையும் (அ) வது செய்யுளில் அந்த ஞானங்களின் உண்மையையுணர்ந்து உணர்ந்த அவ்வுணர்வு சிவமாத்திரமாய் நிற்கவேண்டுமென்னு முறைமையையும் (கூ) வது செய்யுளில் சிவமாத்திரமாய்நின்ற அப்பெரியோர் பேய்த்தேராகிய உலகால் கலங்கா ரென்னுமுறைமையையும் (க0) வது செய்யுளில் அங்ஙனங் கலங்கா நிலைபெற்ற சிவன் முத்தர்களே திருவருளை விரும்புமதிகாரிகளாதலால் அவர்கள் இறைவனிடத்து வேறாகாது நிற்கு முறைமையையும் (கக) வது செய்யுளில் இறைவன் வேறாகாதுநானே அவனென்றுகூறப்பெற்ற அன்பர் அவ்விறைவனையின்றி பந்த மோக்ஷங்கள் அமையாமையை யுணருமுறைமையும் (கஉ) வது செய்யுளில் பந்தமோக்ஷங்களை அமைவித்த இறைவனைச் சிந்திதனுகக்கண்டு வழிபடு முறைமையையும் தெரித்துணர்த்தினமை காண்க.

இப்பதின்மூன்று செய்யுளுக்கும் சித்தாந்தப் பார்வையால் போலிவேதாந்தங்களை மறுத்துப் பொருள் கூறிவந்தாம்; இனி இப்பதின்மூன்று செய்யுளில்கடவுள் வணக்கம் கூறும் முதற்செய்யுள் நீங்கலாக ஏனைப் பன்னிரண்டுசெய்யுளும் பொய்கண்ட கன்ற மெய்கண்டதேவரருளிய பன்னிரண்டு சூத்திரக்கருத்தை மேற்கொண்டு நிற்றலை இனிதுவிளக்குதும் (உ)வதுசெய்யுள் சகசீவபரங்கள் அறிவுதன் நினைவில் கலக்குங்காலத்து உளவாம் என்றதனால் சங்காரகாரணனை முதலாகவுடையது இவ்வுலகு என்ற முதற் சூத்திரக்கருத்தைமேற்கொண்டதெனவும், (ங) வது செய்யுள் உயிர் பிரபஞ்சப் பற்றுடைய தாதலால் பரநினைவு சகத்தைப்படைக்கும் என்றதனால் புனருற்பவங் கூறும் இரண்டாஞ் சூத்திரக்கருத்தை மேற்கொண்டதெனவும், (ங)வது செய்யுள் பரன் பிரபஞ்சத்துட் படாது எவ்வாறு வேறாகிப் பிரகாசிக்கின்றானோ அதுபோலும் சீவனும் பாசகாரியமாகிய தேகேந்திரிய முதலியவைகளோடொன்றாயெண்ணப்பட்டவனன்று, அவற்றிற்குத் திரமுறுசாக்ஷிதான் என்றதனால் ஆன்மப்பிரகாசம் கூறும் மூன்றாஞ் சூத்திரக்கருத்தை மேற்கொண்டதெனவும், (ச) வது செய்யுள் உயிர் மனோசம்பந்தத்தால் பிரபஞ்சமயமாயும் அம்மனத்தினின்றும் உயிர்வேறாயின் நினைப்பறும் என்றதனால் மனமுதலிய அந்தக்கரணங்

களுக்கு வேறாயுயிருண்டெனக் கூறும் நான்காஞ் சூத்திரக்கருத்தை மேற்கொண்டதெனவும், (௬) வது செய்யுள் உயிர் அவித்தையினின்று நீங்கி நினைவுமனம் அகங்கார மமகாரங்களோடுகூடி விவகரித்தலாகிய சகலத்தையடைந்தது மெய்யறிவாலென்றதனால் ஆன்மாக்களிடத்துத்தமது முதலுபகார முணர்த்துதல் கூறும் ஐந்தாம் சூத்திரக்கருத்தை மேற்கொண்டதெனவும், (எ) வது செய்யுள் வாக்குமனாதீதமாகிய பிரமம் சச்சிதானந்த இலக்கண முடையதெனவும் ஆன்மாவைத்தழுவியிருக்கும் மும்மலம் ஆவரண விலக்கணமுடையதெனவும் என்றதனால் சத்தும் அசத்தும் வரை செய்துணர்த்துதல் கூறும் ஆறாஞ் சூத்திரக்கருத்தை மேற்கொண்டதெனவும், (அ) வது செய்யுள் சுருதிவாக்கியத்தால் நிச்சயித்த நிச்சயஞான முதலியஞானங்களால் உலகைத் துச்சமெனவும்சானற்சலமெனவுமுணர்ந்து அறிவுருவமாயிருத்தலென்றதனால் உலகைக் கானற் சலமென் றுணர்ந்ததும் அறிவுருவமா யிருந்ததும் இவ்விரண்டுமாகாத ஆன்மாவென் றுணர்த்துதல்கூறும் ஆறாஞ்சூத்திரக்கருத்தை மேற்கொண்ட தெனவும் (௯) வது செய்யுள் ஐயுணர்வுகளால் மயங்காத நிராசையார் மனத்தினில் ஞானங்கலங்கா, ஐயுணர்வுகளான் மயங்கித்தம்மையுணராத ஆசையுடையாரிடத்து ஞானங்கலங்கும் என்றதனால் ஞானத்தினையுணர்த்து முறைமை யினையுணர்த்துல் கூறும் எட்டாஞ் சூத்திரக்கருத்தை மேற்கொண்டதெனவும், (௧0)- வது செய்யுள் ஞான சாதனமுதிர்ச்சியால் இயல்பாகவே பாசரகிதமாகிய சிவஞானத்தான் சீவன் பொய்த்தலில் வீடுதேடுமென்றதனால் ஆன்மசுத்தி பண்ணுமாறுணர்துதல் கூறும் ஒன்பதாஞ் சூத்திரக் கருத்தை மேற்கொண்டதெனவும், (௧௧) வது செய்யுள் மலமாயா கன்மங்களாகிய சுத்தாசுத்த வாசனைகள் ஆன்மாக்களுக்கு இறைவன் கூட்டிய பணியென்றுணர்ந்து அப்பாச காரியத்தால் யானெனதென் றெழாது மனத்தின்போதமினினவைப் பகுத்தடக்கென்றதனால் பாசக்ஷயம் பண்ணுமா றுணர்த்துதல்கூறும் பத்தாஞ் சூத்திரக்கருத்தை மேற்கொண்ட தெனவும் (௧௨) வது செய்யுள் பாசக்ஷயமான சீவன் முத்தர் சரியைமுதலிய நான்கால் வழிபட அயிலுடன் மயிலுங் கோழியுமாடும் அழகுடன்படைத்த மெய்க்கடவுள் என்றதனால் பரமேசுரனது சீபாத்தை யணையுமாறுணர்த்துதல் கூறும் பதினொன்றாஞ்சூத்திரக் கருத்தைமேற் கொண்ட தெனவும், (௧௩) வது செய்யுள் இறைவன் புறவிருளகற்றி ஆன்மாக்களுக்குவிடய வின்பத்தையூட்டுஞ் சூரியனுக்கு உள்ளொளியாகி ஒளிசெய்வதுபோல் என தகவிருளையொழித்து உனதரு ளமுர்தவாரியின் மூழ்கிட நினையாய் என்றதனால் அசிந்திதனாய் நின்ற பதியைச் சிந்திதனாகக் கண்டு வழிபடுமா றுணர்த்துதல் கூறும் பன்னிரண்டாஞ் சூத்திரக்கருத்தை மேற்கொண்டதெனவும் நுண்ணுணர்வாற் கண்டு தெளிக.

(௧௩)

குறுங்கழிநெடில் விருத்தமுற்றிற்று.

மெய்கண்டதேசிகன் திருவடிவாழ்க.

உ

வேலுமயிலுந்துணை:

## குறுங்கழிநெடில்விருத்தம்.

நல்வினமுனதுதிருவடிவிடயநாடுறுபொறியுடல்கரணம்
புல்லியவினமென்றறிந்தஃதடைந்துபொருந்துமற்றிவைவிடவறியேன்
கல்லெனவிழியுஞ்சாரல்பாயருவிகாழகிற்றிரண்மலைகாட்ட
மல்லலைக்கடல்சங்கினமலைகாட்டி மலிசமராபுரிக்குகனே.

(இ- ள்.) கல்லென்னு மொலிக்குறிப்புடனே இழிகின்றசாரலின் வழியே பாயும்அருவியானது சேகுபற்றிய அகிற்கட்டைகளை மலைபோலத்திரட்டிக்காட்ட, வன்மைமிக்க அலைகளையுடைய கடலானது சங்கின்கூட்டங்களை மலைபோல (அவற்றினெதிரே) காட்டி வளமலிந்ததிருப்போரூரில் வாழ்கின்ற முருகக்கடவுளே, யான் உன்னுடைய திருவடியே நல்லவினமென்றும்,ஐம்புலவிடயங்களை அவாவும் ஐம் பொறிகளும் உடலும் கரணங்களும் தீயவினமென்றும் தெரிந்து அந்நல்லினத்தையடைந்து என்னைப்பொருந்தியிருக்கின்ற இத்தீயவினங்களை விட்டொழிய அறியகில்லேன் (அதனால் என்போலும் உலகில் ஓர் அறிவிலியுமுண்டோ என்றபடி.)

இறைவனது திருவடி பிறவிக்கடலைக்கடத்தி முத்திக்கரையையடைவிக்கும் தெப்பமாதலால் நல்வினமென்றும், பொறி உடல் கரணங்கள் அப்பிறவிக்கடலைக்கடத்த லொட்டாது அதிலாழ்த்துத லியல்பாதலால் புல்லியவினமென்றும், இவற்றை யான் சுருதியுக்தியனுபவத்தாலுணர்ந்து முணராதார் போலத் தொன்று தொட்டுவரும் பாசகாரியங்களைத் திருவருள்விளக்கத்தால் மாற்றவறியாது அவற்றிலாழ்ந்து கிடக்கின்றேனாதலால் அறிந் தஃதடைந்து பொருந்துமற்றிவைவிடவறியேன் என்றும், அருவியானது அகிற்கட்டையின் திரட்சியால் குறிஞ்சிநிலவண்மையைக்காட்ட கடலானது அதனைநோக்கி சங்கின்திரட்சியால் நெய்தனிலவண்மையைக்காட்டியதென்பார் அருவிகாழகிற்றிரண்மலைகாட்ட மல்லலைக்கடல் சங்கின்மலைகாட்டி என்றுங்கூறினார். (௧)

ஏழ்கடலனையவருள்கொடுபுவிநீயிலங்குசற்குருவதாய்வந்த
போழ்தெலாமாறுபுரிந்தவெங்கொடிய புலையனையாண்டவாறறியேன்
வேழமாமலையிற்றுழ்மதவருவிவெளந்துளைந்திளம்பொழின்மூச
மாழைவண்டினங்கள்பூமணங்கமழுமலிசமராபுரிக்குகனே.

(இ - ள்.) பெரியமலையிலுள்ள யானையின் மத்தகத்தினின்றும் வீழ்கின்றமதமாகிய அருவிவெள்ளத்தில் அழகியவண்டினங்கள் மூழ்கி, இளஞ்சோ

லையில் மொய்க்க (அச்சோலை) மலர்மணங்கமழும் வளமிக்கதிருப்போரூரி லெழுந்தருளியிருக்கின்ற முருகக்கடவுளே, எழ்கடலையொப்பத் திருவருளை மேற்கொண்டு நீஇவ்வுலகின்கண் விளங்குஞ் சற்குருமூர்த்தியாய்வந்த கால மெல்லாம் (உன்னருட்பணிசெய்ய அறியாது) இருவினைச்செயலை யியற்றிய மிக்ககொடியேனாகிய நீசனை அடிமைகொண்ட அருட்டிறத்தையறியேன்.

மூலமலமகற்ற மாயாமலத்தின் காரியமாகிய தனுவாதிகளை நீதர அதனை அவ்வாறுணராது அதனையேயின்பமெனக்கருதி அவற்றிற் கிடஞ்செய்துழலல் போல் சமயாதீதமாகிய சித்தாந்தசைவத்தை நீசற்குருவாய்வந்து பன்முறை யுணர்த்துந்தோறும் அதனையுணராது அதற்குமாறாகிய புறச்சமயங்களையே சற்சமயங்களென அவற்றிலாழ்ந்து நீகூறிய அச் சித்தாந்தசைவத்தை யிகழ்ந்து கூறும் கொடியருட்பட்டேனாதலால் என்போல் ஓர் புலையனுமில்லையென்பார் சற்குருவதாய் வந்த போழ்தெலாம் மாறுபுரிந்த வெங்கொடிய புலையனென வும், இங்ஙனமானபுலையனையாண்டகருணைக்கு இலக்கில்லையென்பார் எழ்கட லனையவருள்கொடு புலையனை ஆண்டவாறறியேன் எனவுங்கூறினார். (௨)

பாதகம்புரியுமெனதுளநினைக்கும்பரிசினிலொருசிறிதெனினுங்
கோதறுமுனதுதிருவடிக்கன்புகொண்டுநின்றுருகிடக்காணே
னேதுறுகுரவம்பூச்சிறுகுழவிக்கூன்கழிஞொளைவிடுபிழியை
மாதவிமனையிற்சூர்மகவூட்டிமலிசமராபுரிக்குகனே.

(இ - ள்.) ஓதப்படுகின்ற குராமலர்ப் பாவைக்கு ஊன்சழித்தசிறாரத்தை யினிடத்திருந்த தேனை மாதவிப்பந்தராகிய மனையில் தெய்வப்பிணா வூட்டித் தங்கிய திருப்போரூரி லெழுந்தருளி யிருக்கின்ற முருகக்கடவுளே, பாதகத்தை மாறாதியற்று மெனதுநெஞ்சம் நினைக்கும் பகுதியில் ஒருசிறியவளவேனும் குற்றமற்ற உனது திருவடிக்கு அன்புகொண்டு நின்று உருகும் வண்ணத்தை யான் காணேன்.

இதனால் உனதுதிருவடிக்கு எனதுநெஞ்சம் அன்புகொண்டு நின்றுரு கிடக்காணேன் அதனால் எனதுள்ளத்தில் உனதுதிருவருள் பதியவில்லைஎன் பதை நன்குணர்ந்தேனென்று கூறியவாறாயிற்று. (௩)

கொங்கையங்குவடுமார்பிலூடுருவக்கொடியிடைமகளிரைத்தழுவி
வெங்கனன்மெழுகாயுருகிடுமுளத்துவினையனேனுய்யுநாளுளதோ
திங்களங்குழவிச்சடையவன்புயத்துன்றிருவடிக்கமலமுமவன்பான்
மங்கைதன்றனத்துன்குமுதவாய்மலருமலிசமராபுரிக்குகனே.

(இ - ள்.) அழகிய விளஞ்சந்திரனை யணிந்த சிவபெருமானது திருப்புய த்தி லுனது திருவடித்தாமரையும், அவ்விறைவன் பாகத்தமர்ந்தருளும் உமா

தேவியாரது திருத்தனத்தி லுனது திருவாயாகிய ஆம்பல்மலரும் விளங்க வி ளையாடுகின்ற திருப்போரூரி லெழுந்தருளியிருக்கின்ற முருகக்கடவுளே, அழ கிய கொங்கையின் சிகரம் மார்பிலூடுருவிப் பாயக் கொடிபோன்ற இடையை யுடைய மங்கையரைத்தழுவி வெவ்விய தீப்பட்டமெழுகைப்போலஉருகாநின்ற நெஞ்சத்தையுடைய தீவினையேனாகிய யானும் பிழைக்குநாளுமுண்டாகுமோ.

தாமரை பரிதியைக்கண்டு மலர்தலும் ஆம்பல் சந்திரனைக்கண்டு மலர்தலும் உண்மையால் திருவடியாகிய தாமரை இறைவனது முகமாகிய அருணனாலும் திருவாயாகிய ஆம்பல் உமாதேவியாரது முகமாகிய சந்திரனாலும் மலர்ந்தன வென்பார் திங்களங்குழவிச் சடையவன் புயத்துன் றிருவடிக்கமலமும், அவன் பால் மங்கைதன் றனத்துன் குமுதவாய் மலரும் என்றார்.

அம்மையப்பர் மாட்டு என்றும் சிறுமதலையாய் வீற்றிருக்குஞ் செல்வனா தலால் அம்மையாரிடத்துப் பாலுண்ணுங்கால் திருவாய் தனத்திடத்திருத்த லும் திருப்பாதம் தந்தை திருப்புயத்திருப்பது மியற்கையாம். இதனால் முரு கக்கடவுளது பெருஞ்செல்வத்தை வியந்துகூறியவாறும். (ச)

பிறப்பறுவீட்டுற்பவமெனக்கருளிப்பிறங்குசிற்சுகவமிர்தருத்தி, யொ றுக்கு மென்போத மனத்தையுமறுத்திங்குலகிய லுணர்வெலாமறை த்து, விறற்றகுமுனதுதிருவடிவிளக்கிமேன்மையைந்தொழிலிவண்பு ரிவாய், மறைக்குரியவனாலினிப்பிறப்பறியார்மலிசமராபுரிக்குகனே.

(இ - ள்.) வேதத்துக்குரியவனாகிய பிரமனால் இனிப்பிறவியையெடுத்த லையறியாத சீவன்முத்தர்கள் நிறைந்து விளங்கும் திருப்போரூரிலெழுந்தருளி யிருக்கின்ற முருகக்கடவுளே, பிறவியில்லாத முத்திவீட்டில் வாழும்பிறவி யையெனக் கனுக்கிரகஞ் செய்து விளங்கும்சிவானந்த அமிர்தத்தையூட்டி ய ன்னைவருத்தும் தற்போதத்தின் விகற்பங்களொன்றுந் தோன்றாவாறொழித் து, உலகியலை யறியு முணர்ச்சியாவுந் தோன்றாவாறு மறைத்து, வெற்றிபொ ருந்திய உனது திருவடியைவிளக்கி மேன்மையமைந்த உனது பஞ்சகிருத்தி யத்தையும் இப்பொழுதே இங்குசெய்தருள்வாய்.

பஞ்சகிருத்திய மூர்த்தியாகிய இறைவன்மகன் நீயாதலால் உன்மாட்டு யானும் ஐந்தொழிலை விரும்பினேன். அவை பிரமன்றந்த பிறப்பையொழி த்து அருள்சேர்ந்த முத்திவீட்டில் வாழுஞ்சரீரத்தை யெனக்குத்தருதலாகிய சிருஷ்டியொன்று, சிற்சுகஅமிர்தத்தை யூட்டிக் காத்தலாகிய தொழிலொன்று, தற்போதத்தை யொழித்தலாகிய சங்காரத்தொழிலொன்று, உலகியலையுணரும் உணர்வை மறைத்தலாகிய திரோதானத்தொழிலொன்று, அங்குதிக்குந் திரு வருளை அருளென்றுணர்த்தலாகிய அநுக்கிரகத் தொழிலொன்று இவையே

யாம். இவற்றை அடியேனுக்கு அம்மையிலளிப்போமென்றுகூறாது இம்மையே செய்வாயென்று வேண்டியவாறும். (ரு)

உருமெனவெயிறுகடித்திதழ்மடக்கியுழல்விழிபொறிபடவிழித்து
வெருவருதோற்றக்கூற்றுவந்தடரும்வேலையுன்பாலெனையழையாய்
பிரசவண்கடம்புசெறியுமுன்புயத்துப்பிறங்குறுகுறமகள்விழியு
மருமலர்க்கூந்தலிளம்பிடிவிழியுமலர்சமராபுரிக்குகனே.

(இ - ள்.) தேன்வளமிக்க கடப்பமலர்மாலை செறிந்த உனது திருப்புயத்தில் விளங்கும் வள்ளிநாய்ச்சியாரது கண்களும், நறுமணங்கமழும் மலர்சூடிய கூந்தலையுடைய தெய்வயானை நாய்ச்சியாரது கண்களும் ஆகிய நீலோற்பல மலர்கள் மலர்ந்திருக்கின்ற திருப்போரூரி லெழுந்தருளியிருக்கின்ற முருகக்கடவுளே, இடியென்று சொல்லப் பற்களைக்கடித்து உதட்டைமடக்கி சுழலும்கண்களினின்றும் தீப்பொறிசிதற விழித்து யாவருமஞ்சும் உருவத்தை யுடைய இயமன் நெருக்கும் சமயத்தில் உன்பக்கல் யானஞ்சாதிருக்க என்னை வா வென்றழைத்தருள்வாய்.

திருப்புயத்தில் கடப்பமலர்மாலை விளங்குவதுபோல் பிராட்டிமாரிருவர் கண்மலரும் மாறாது பொலிவுபெற்றிருக்கு மென்பார் பிரசவண்கடம்பு செறியுமுன் புயத்துப் பிறங்குறு குறமகள்விழியும், மருமலர்க் கூந்தலிளம்பிடி விழியுமலர் சமராபுரிக்குகனே என்றார். (சு)

கண்ணிவாயிரையையருந்திடப்புகுந்துகடுஞ்சிறைப்பறவைசிக்
குறல்போற், பெண்ணுறுமின்பங்கருதியான்மாயப்பிறப்பிடையகப்ப
டுகின்றே, னண்ணுகண்மணியே தண்கடலமிர்தேநற்கதிச்சுவைதரு
கரும்பே, மண்ணுறுமணியேவடித்தவேலரசேமலிசமராபுரிக்குகனே.

(இ - ள்) பொருந்திய கண்மணியே, தண்ணியபாற்கடலிற்றோன்றிய அமிர்தமே, நல்ல முத்தியின்பத்தைத்தரும் கரும்பே, அழகமைந்த இரத்தினமே, வடித்தவேலையேந்திய அரசனே, செல்வமிக்கதிருப்போரூரி லெழுந்தருளியிருக்கின்ற முருகக்கடவுளே, கொடியசிறகினையுடைய பறவையானது வலையின்கண்ணுள்ள உணவையுண்ண அதிற்புகுந்து சிக்குறுதல்போல யான் மகளிரின்பத்தை நாடி மாயப்பிறவியினிடையிலகப்பட் டுழல்கின்றேன்.

கண்ணினின்றிலகும் பாவையி னொளி அணுவாக விருந்து புறத்தேயுள்ள பெரும்பொருள்களைக் காட்டல்போல் அணுவென்னும் பெயருடைய ஆன்மஅறிவின்கண் இறைவன்பரமாணுவாயிருந்து தானெல்லாமாயிருக்கும் பொருளைக்காட்டுவதனல் நண்ணுகண்மணியை யுவமையாக்கியும், அங்ஙனம் எல்லாமாயிருக்குந் தன்மைதோன்றவே ஆன்மாவென்ப தொன்றில்லை யென்பார்

மதம் மேற்கொள்ளாது நித்தியமெனக் காண்பதனால் இறத்தலைச் செய்யாத கடலமிர்தத்தை யுவமையாக்கியும், பின்னர் நித்தியமாகிய பேரின்பத்தை விரும்பி யியற்றும் சரியை யாதி நான்கு மியற்று வோர்க்கு இன்பமீதூரச்செய்வதனால் இனிக்குங் கரும்பை யுவமையாக்கியும், இவ்வாறு தம்மிடத்து இன்பங் காணுமவர்க்கு அவர் விரும்பும் பொருளாயு மிருத்தலினால் மண்ணுறு மணியையுவமையாக்கியுங்கூறினார். (எ)

பிணியுடல்வெறுக்கேன்பெண்சுகமறுக்கேன் பேணுமூணொறுக்
கிலேனின்றாட், கணியநல்லடியார்க்கன்பு செய்திடிலேனாதனேனேத
மென்றறுமே, கணிபடுநறும்பூஞ்சிறுகுவையதனைக்கான்புலிக்குருளை
யென்றஞ்சி, மணிபடுமான்கன்றிரிதருசாரன்மலி சமராபுரிக்குகனே,

(இ - ள்.) வேங்கை மரத்தினின்றும் வீழ்கின்ற நறுமணங்கமழும் மலர்களாலாகிய சிறிய குவியலைப் புலிக்குட்டியென்றஞ்சி அழகிய மான்கன்றுகள் மருட்சியடைந் துழலும் மணிகளுண்டாகின்றமிக்க திருப்போரூரி லெழுந்தருளியிருக்கின்ற முருகக்கடவுளே, பிணிகொண்ட சரீரத்தையான்வெறுத்திடேன், மகளிரின்பத்தைமறுக்கமாட்டேன். விரும்புமுணவைநீக்கமாட்டேன், உனது திருவடிக்குரிமை பூண்ட நல்லஅடியார்களுக்கு அன்புசெய்யவுமாட்டேன் (அதனால்) அறிவிலியாகிய எனது குற்றங்களெந்நாளொழியும்.

பிணியுடல் பிராரத்த்தையும், பெண்சுகம் சஞ்சிதத்தையும், ஊண் ஆகாமியத்தையும், குன்ற வொட்டாது வளரச்செய்யும் பொருள்களென்றுணர்ந்து வெறுத்தும் மறுத்தும் ஒறுத்தும் செய்யவறியாது முறையே விரும்பியும்உடன்பட்டும் மேற்கொண்டும் நின்றேன். யான்வெறுத்ததோ உன்திருவருளுக்குரிய நல்லடியாரது அன்பை, மறுத்ததோ அவரது இலக்கணத்தை, ஒறுத்ததோ அவரிடும்பணியை. அதனால் இம்மூன்றிலும் விளைந்தபெரும் பிழையென்று மொழியாதென்பார் - பிணியுடல்வெறுக்கேன் பெண்சுகமறுக்கேன்பேணுமூணொறுக்கிலே னின்றாட்கணியநல்லடியார்க்கன்பு செய்திடிலே னாதனேனேத மென்றறும் என்றார். (அ)

பொறிவழிவிடயமறிநனவதனிற்பொருந்தியவாதனைமிகவுஞ்
செறிதருகரணநான்குறுங்கனவிற்றியங்கிமற்றிவையெலாமிறந்த
நெறியறுமவித்தையிருளுறுஞ்சுழித்திநிலையினிலறிவறத்துயின்று
மறுகுறுகின்றேனென்றுனையடைவேன்மலிசமராபுரிக்குகனே.

(இ - ள்.) வளமிக்க திருப்போரூரிலெழுந்தருளி யிருக்கின்ற முருகக்கடவுளே, சுரோத்திரமுதலிய ஐம்பொறியின்வாயிலாகச் சத்தமுதலியவிடயங்களையறிகின்ற சாக்கிராவஸ்தையிலும் (அவ்வவத்தையில்) பொருந்திய ஐம்புலவாசனை மிகவுஞ் செறிந்த மனமுதலியகரணங்கள் நான்கும் நிகழ்வதாகிய

சொப்பனவத்தையிலும், அக்கரணங்களும் மயக்கமுற்று ஏனையதத்துவங்க ளெல்லாம் கழன்றநெறியற்ற அஞ்ஞானவிருளடைந்த சுழுத்தியவத்தையிலும், அறிவழிந்துறங்கி அங்காங் குழல்கின்றேன் எந்தக்காலத்திலேதா னுன்னையடைவேன்.

நெற்றி - கண்டம் - இதயம் - என்னுமூன்றிடத்தும் முறையே கூடு, உடு, கூ, ஆக ஆங்காங்குறும் தத்துவங்களோடுகூடி அவத்தையுட்பட்டுழலும்யான் தத்துவாதீதனாகிய உனதுதத்துவத்தை யுணர்ந்து உணர்ந்தவாறே நிற்கப்பெறுதல் அரிதென்பார் னைவதனில் கனவில்சுழுத்தி நிலையினில் அறிவறத்துயின்று மறகுறகின்றேன் என்றனையடைவேனென்றார். அல்லதூஉம் நனவதனிற்பொருந்தி கனவில்திடங்கி சுழுத்தியிலறிவறத்துயின்று என்றதனால் ஆன்மவறிவானது தத்துவங்களிலெல்லாம் பொருந்தியகாலத்து அறிவதும் சிலதத்துவங்கள்குறைவுற்றவழி விடையந்தோன்றுது மயங்கியும், தத்துவங்களொடுங்கியவழி அறிவிழந்தும் நிற்கப்பெறுமாயின், எஞ்ஞான்றும் அறிவாகவேயிருக்கும் உன்னை திருவருட்டுணையன்றி வறிவுகாணப் பெறுதென்றும் கூறியவாறாயிற்று. (சுகூ)

குறுமைசேர்வடிவுநெடுமைமாதவமுங்கொண்டுதென்மலையுறை முனிக்கு, மறைமுடிவிருந்தவிளக்ககத்தேற்றிமருளிருடுமித்தசற்குருவே, சிறுமையேபுரியுங் கொடியனையாளத்திருவுளத்தடைத்திடுகண்டாய், வறுமைதீதறியார்களிப்புறுமாடமலிசமராபுரிக்குகனே.

(இ - ள்.) வறுமையும் அவ்வறுமையைத்தரும் தீமையு மறியாத புண்ணியமுடையார்கள் களிப்போடு வாழும் மாளிகைகள் நெருங்கிய திருப்போரூரி லெழுந்தருளி யிருக்கின்ற முருகக்கடவுளே, குறுகிய வடிவமும் நீண்ட பெரிய தவமுமுடையராய்ப் பொதியமலையில் வசிக்கும் அகஸ்திய முனிவருக்கு வேதமுடிவிலிருக்கும் தீபத்தை யுள்ளத்தின்கணேற்றி அஞ்ஞான விருளையோட்டிய பரமாசாரியனே, இழிதொழிலையே யியற்றும் கொடியேனாகிய வென்னை யடிமைகொள்ளத் திருவுளத்தி லெண்ணியருள்.

அகஸ்திய முனிவரது குறுவடிவை நோக்காது பெரிய தவத்தைநோக்கி மறைமொழி யுபதேசித்ததுபோல் எனது பெரியவடிவத்தைநோக்காது சிறிய குணத்தை நோக்கி அருள் செய்யத் திருவுளத்து எண்ணுக வென்று குறையிரந்தவாறும். (கூ0)

துறுங்கழிநெடில் விருத்தம் முற்றிற்று.

உ

வேலுமயிலுந்துணை.

## சந்தக்கழிநெடில்விருத்தம்

கருணைப்பெருநறவிருபுறனொழுகியகாரணமலைமகிழ்ந்துணைவா
முரணுற்றிடுமலவிருளறவொளிதருமுளரிநிகர்த்ததிருத்தாளாய்
தெருளுற்றிடுபேரின்பக்கடலிடைசிறியேனுறவைத்தினிதாளாய்
தருணச்சுந்தரமாறுதிலகியசரவணசமரப்பதியானே.

(இ - ள்.) இளங்குழவிப் பருவத்துவிளங்கிய அழகானது என்றும் மாறுதுவிளங்கிய சரவணபவனே, திருப்போரூரென்னுந் திருப்பதியுடையானே, கருணையென்னும் பெரிய மது வெள்ளமானது மதநீரைப்போல இருபுறத்திலும் ஒழுகுகின்ற யானைமுகத்தையுடைய விநாயகக்கடவுள்மகிழ்கூறுந்துணைவனே, இருள் வலிமிக்க அஞ்ஞானவிருளிரிந்தோட ஒளிவீசும் தாமரைமலரையொத்த திருவடிகளையுடையவனே, தெளிந்த பேரானந்தக்கடலில் அறிவிற்சிறியேனாகிய யான் பொருந்திவாழ இனிதாகவிருத்தியருளாய். (க)

சிவன்மெச்சுறவவன்மடிமிசைநிலவியசெந்துகிராடைச்சிறுமத
லாய், புவனத்தொடுசராசரமளித்தருள்பூரணிதருமொருகாரணனே
யவலச்சிறியவனேனையளித்தாய்க்கைம்மாறுளதுகொலோ
தவளக்கலைமயில்புகழ்ப்பெறுபுயசரவணசமரப்பதியானே.

(இ - ள்.) தந்தையாகிய சிவபெருமான் மேன்மேலுங்கொண்டாட அவ்விறைவனது மடித்தலத்தில்விளங்காநின்ற செம்பட்டாடையுடுத்துவீற்றிருந்தருளும் சிறு குழந்தையே, புவனங்களோடு இயங்கியற்பொருளும் நிலையியற்பொருளுமாகியயாவையுமீன்றருளிய உமாதேவியாரருளிய ஒப்பற்றகாரணனே, தவளநிறத்தையும் மயில்போலுஞ்சாயலையுமுடைய கலைமகள்புகழ்ப்பெற்றதிருப்புயங்களையுடையசரவணபவனே, திருப்போரூரென்னுந் திருப்பதியையுடையவனே, ஐயனே, துன்பத்திலாழும் சிறியேனாகிய என்னை யாண்டளித்தவுனக்கு கைம்மாறாக வளிக்குஞ்செயலும் உண்டோ (இல்லையென்றபடி.)

படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளலாகிய யாவும் தன் சத்தியாலாக்கி ஆனந்தமேவடிவாகவிளங்கும் இறைவனுக்கு விநாயகர்முதலிய மக்களைப்போலாது மேன்மேல் ஆனந்தத்தைவிளைவிக்கும் செல்வக்குழந்தையாய் மடித்தலத்தில் மாறாதிருந்து விளையாடல் புரிதலின் சிவன் மெச்சுறவவன்மடிமிசை நிலவிய சிறுமதலாய் எனவும், சர்வசத்திகளுக்கும் மூலகாரணியாகிய சிவசத்தியினின்றுந்தோன்றிய மதலையாகலின் பூரணிதருமொரு காரணனே எனவுங்கூறினர். (உ)

களவிற்கனியன களமுளவிறைதருகன கிங்கிணிரால்சிறுதாளா
விளவிற்கனிவிழவொருகன்றெறிதருவிமலனுவப்புறுகுலமருகா
சுளகுச்செவிமதமலையெனவெழுதருதுகளறவெனதுளமறநினையாய்
தளவக்கொந்தளவனமயின்மகிழ்வுறுசரவணசமரப்பதியானே.

(இ - ள்.) களாவின்கனியையொத்த நீலகண்டத்தையுடைய இறைவனீன்ற பெருமைவாய்ந்தகிண்கிணிக ளொலிக்கும் சிறியதாளையுடையவனே, விளாவின்கனிவீழ ஓர்கன்றையெறிந்த திருமால்மகிழும் பெருமையமைந்த மருகனே, முல்லைமலரையணிந்த கூந்தலையுடைய வள்ளிநாய்ச்சியார் மகிழுஞ்சரவணபவனே, திருப்போரூரென்னுந் திருப்பதியுடையவனே, முறம்போலுஞ் செவியையுடைய மதத்தயானையையொத்தெழுகின்ற தற்போத மழியவும், என்னுள்ளங்கெடவும் நீ நினைந்தருளாய்.

கற்புடை மகளிரணிவது முல்லை மலராதலால் தவளக்கொந்தள வனமயிலென்றார். (௩)

பொதியக்குறுமுனிமதியிற்றழுவியபூரணனேபுகழ்காரணனே
விதிபுத்தியிலறிவருமெய்ப்பொருளினைவிமலற்குதவியநாயகனே
கதியெற்குனதிருபதமுற்றெனைவிடல்ககனத்தவரமுதுண்டிறைநீரோ
ததியிற்றுயில்பவன்மருகச்சிறுபிளைசரவணசமரப்பதியானே.

(இ-ள்) பொதியமலையிலுள்ள அகத்தியமுனிவரது அறிவிற்கலந்தபூரண சொரூபியே, புகழையுடைய காரணனே, பிரமனது அறிவினால் அறிதற்கரிய உண்மைப்பொருளை இறைவனுக் குபதேசித்தருளியதலைவனே, அமரர்கள்பருகும் அமிர்தத்தையுடைய பாற்கடலில் அரிதுயில்கொள்ளும் திருமால் மருகனே, சிறியமதலையே, சரவணபவனே, திருப்போரூரென்னுந் திருப்பதியையுடையவனே, எனக்கு உன்னுடைய இரண்டுபாதங்களே கதியென்று அடைந்தேனாதலால் என்னைக்கைவிடாதை.

அகத்தியமுனிவரது சோகம்பாவனையில் விளங்கும் சொரூபசிவம் நீயே என்பார் பொதியக்குறுமுனி மதியிற்றழுவிய பூரணனே எனவும், மகன் தந்தையினுண்மைப்புகழை பிறர்பால்நாட்டுவதேயன்றி அத் தந்தையும் மகிழ்கூற நேரேபுகழ்ந்துரைத்தலும் தலையன்பென்பார் விதிபுத்தியிலறிவரு மெய்ப்பொருளினை விமலற்குதவியநாயகனே எனவும், அவ்விறைவன் புகழை யானும் விரும்பினேனாதலால் எனக்கின்றியமையாத துணையாயுள்ளது உன்திருவடியே என்பார் கதியெற்குனதிருபதம் எனவும் கூறினார். (௪)

உதவிக்கொருதுணையனையென வெனைவந்துறுதுயரடையாதருடருவோய்,மதனப்பயல்விடுகணைகளிலடியேன்வாடாதுனதிருதாடாரா, யிதழிச்சடைநடராயனளித்தருளெண்ணியதருபுண்ணியராயா
சதநற்றளமுளமுளரியிலிறமுளசரவணசமரப்பதியானே.

(இ-ள்.) கொன்றைமலரணிந்த சடாமுடியையுடைய நடராஜமூர்த்தி ஈன்றருளும் அடியார்கள் எண்ணிய வெண்ணியாங்கருளும் புண்ணியராயனே, நல்லநூறிதழ்களையுடைய செந்தாமரைமலரின் நிறமுள்ள திருமேனியையுடையவனே, சரவணபவனே, திருப்போரூரென்னுந் திருப்பதியையுடையவனே, இடுக்கண்வந்துழியெல்லாம் ஒருதவியைச் செய்தற்குத் தன்னோடுற்ற ஓர்துணைவன் துணையாயிருந் துதவுதல்போல அடியேனைத் துன்பங்கள்வந்து தாக்குந்தோறும் அதனால் வருந்தாவண்ணம் அருள்செய்கின்றவனே, மன்மதனாகிய சிறுவன் விடுகின்றபூங்கணைகளினால் அடியேன் வாட்டமுறா துனது திருவருளைத்தந்தருள்வாய்.

என்னை எஞ்ஞான்றுந் துன்பம் அணுகாவண்ணங்காக்கின்ற நீ அங்கவீனனாகிய மன்மதப் பயலால்வாடும் வாட்டத்தைத்தவிர்க்கா திருக்கின்றாய் என்னையோ அங்ஙனமாயினும் அவ்வனங்கன்விடுங்கணை மலராதலால் அம்மலரை உன்னடிக்கிடவேண்டினேன் அதனால் உன்திருவடிதருவா யென்றுகூறியவாறும்.

இதனால் இறைவன் திருவடி வுள்ளத்தில் நிற்கப்பெறுமாயின் மன்மதன் கணை என்னை என்செய்யவல்லு மென்பதுகுறிப்பு. (௫)

புனநற்குறமகள்விழியிணைகளிபெறுபுனைமலர்நீபத்தார்மார்பா
மனநற்கமலமதிடைதிருவடியிணைமருவத்திருவுளய்வைத்தெனையாள்
கனகுக்குடவிருதுடையவவிடைவரு கடவுள்புயத்தணைமிசைவளர்
வோய்,தனதத்தனவெனநடமயின்மிசைவருசரவணசமரப்பதியானே

(இ-ள்.) பெருமையமைந்த கோழிக்கொடியை விருதாகவுடையவனே, இடபவாகனத்தி லெழுந்தருளிவரும் இறைவனது புயமாகிய மெத்தையின் மேல்திருக்கண்வளர்பவனே, தனதத்தனஎன்று நடனமிடும் மயில்வாகனத்தின் மேல் எழுந்தருளிவரும் சரவணபவனே, திருப்போரூ ரென்னுந் திருப்பதியையுடையவனே, தினைப்புனத்தில்வாழும் அழகியவள்ளிநாய்ச்சியாரது கண்ணிணைகள் களிப்படையும் கடப்ப மலர்மாலையையணிந்த திருமார்பையுடையவனே, எனது மனமாகிய நல்லதாமரைமலரினிடத்தில் உனது திருவடியிணைகள் பொருந்ததிருவுள்ளம்வைத்து என்னையடிமைகொள்வாய். (௮)

மதியொத்துளமுகமடவாரிருபுடைமகிழ்வுறநிகழ்வுறும்வடிவழகா
வதிகப்பெருவளமடியவர்பெறவருளம்புயமலரனசெங்கரனே
துதிபெற்றுளசுகசலதிக்கிடையதிசுமடனைவைத்திடநினைதிகொலோ
ததிதித்திமியெனநடமயின்மிசைவருசரவணசமரப்பதியானே.

(இ-ள்.) சந்திரனையொத்துவிளங்கும் திருமுகத்தையுடைய நாய்ச்சிமார்கள் இரண்டுபக்கங்களிலும் மகிழ்ச்சி யோடமர்ந்திருக்கப் பொலிவுபெற்று

விளங்கும் அழகிற்சிறந்த திருவுருவத்தையுடையவனே, அளவில்லாத பெருஞ்செல்வங்களையெல்லாம் அடியார்கள்பெற்றுவிளங்க அருள்செய்யும் தாமரைமலர்போன்ற செவந்ததிருக்கரத்தையுடையவனே, ததிதித்திமியென்று நடனஞ்செய்யும் மயில்வாகனத்தின்மேல் எழுந்தருளிவரும் சரவணபவனே, திருப்போரூரென்னுந் திருப்பதியையுடையானே, மெய்ஞ்ஞானிகளால் புகழ்பெற்றுள்ள சுகசாகரத்தில் மிக்கஅறிவிலியாகிய என்னை வைத்திடவும் நினைந்தருள்வையோ.

அதிகப் பெருவள மடியவர் பெறவரு ளம்புயமலரன செங்கரனே என்றதனால் உன்னைநினைக்கும் அடியார்களை நீயும்நினைந்து பெருவளந்தருதல் இயற்கை அங்ஙனமாக உன்னைநினையாதயான் பெருவளம்பெற்று எங்ஙனம் வாழ்வேன் என்றுகூறியவாறும். (எ)

கலகப்பிணிவிழியரிவையர்கிறிசெறிகலவியைநலனெனநனிநாடிப்
பலகற்பனைநினைமனமறநினதருள்பாலித்தடியனையாளுதியே
உலகிற்பெரியவர்பணிதருபருதியினும்பர்கள்கும்பிடுநெடுவேலாய்
தலைமைப்புகழ்பெறுமாறிருகரமுளசரவணசமரப்பதியானே.

(இ - ள்.) உலகின்கண் பெரியோர்கள் பணிகின்ற சூரியனைப்போலவிளங்கும் தேவர்கள் வணங்கும் நெடியவேலாயுதத்தையுடைய பன்னிரண்டு திருக்கரங்களையுடைய சரவணபவனே, திருப்போரூரென்னுந் திருப்பதியையுடையவனே, கலகங்கள் பிணிப்புண்டிருக்கும் கண்களையுடைய மங்கையரது பொய்மை செறிந்தகலவியை இன்பமென்று மிகவும்நாடி பலகற்பனைகளைநினைக்கும் மனமடங்க உனது திருவருளைப்பாலித்து அடியேனை யடிமை கொள்ளுவையோ. (அ)

கடகத்தணிமணிமகுடச்சிரமணிகதிரொளிவீசத்திசைதோறு
நடனச்சிறைமயின்மிசையுற்றடியர்முனளினத்திருமுகமலர்வோனே
மடமைச்சிறியனுனருளைப்பெறநினைவனசத்திருமயின்மருகோனே
தடவெற்பெனவளர்தவளக்களிறிவர்சரவணசமரப்பதியானே.

(இ - ள்.) திருக்கரத்திலணிந்த கடகத்திற் பதித்திருக்கும் ரத்தினமும் மகுடத்திலணிந்திருக்கும் சிரோரத்தினமும் கிரணவொளியை வீசத் திக்குகள்தோறும் நடனஞ்செய்யும் சிறகினையுடைய மயூரத்தின்மேல் எழுந்தருளி அடியவர்முன் தாமரைமலர்போன்ற திருமுகத்தை மலரச்செய்கின்றவனே, பெரியமலையைப்போல வளர்ந்த வெள்ளையானையின்மேல் எழுந்தருளிவரும் சரவணபவனே, திருப்போரூரென்னுந் திருப்பதியையுடையவனே அறிவிலியாகிய சிறியேன் உனது திருவருளைப் பெறநினையாய். (கூ)

அறமிக்குளவுளமுடையவர்மகிழ்வுறவவரெதிருறவருமொருநீதான்
மறமிக்குளசிறியவனேனெதிருறவருநாளொருநாளுளதுகொலோ
திறமிக்குளசூர்மார்பூடுருவச்செஞ்சுடர்நெடுவேல்விடுவோயே
தறுகட்புலியதளுடையவனுதவியசரவணசமரப்பதியானே.

(இ - ள்) வன்மைமிக்குடைய சூரபன்மனுடைய மார்பில் ஊடுருவிச்செல்லச் செவந்த ஒளிபரப்பும் நெடிய வேலாயுதத்தை விடுகின்றவனே, கோபக்கண்ணையுடைய புலித்தோலை யாடையாகவுடைய இறைவ னீன்றருளிய சரவணபவனே, திருப்போரு ரென்னுந் திருப்பதியையுடையானே, அறமிகுந்த உள்ளத்தையுடைய அந்தணர்கள் மகிழ்ச்சிபெற அவரெதிரே அருளோடெழுந்தருளி வரும் ஒப்பிலியாகிய நீ பாவமிகுந்த உள்ளத்தையுடைய சிறியேனாகிய என்னெதிரில் எழுந்தருளிவரும் நாள் ஓர் நாளு முண்டாங்கொலோ (அருள்புரியாய் என்றபடி.) (௯0)

சந்தக்கழிநெடில் விருத்தம் முற்றிற்று.

---

உ

வேலும்மயிலுந் துணை.

## கட்டளைக்கலித்துறை.

அருளேமதமெனக்காட்டியடியரகத்திருந்த
மருளேதுடைத்தமதமாமுகத்தன்மகிழ்துணைவா
தெருளேயடியனுக்கீகுதல்வேண்டுஞ்செழுமறையின்
பொருளேமயிலவனேசமராபுரிப்புண்ணியனே.

(இ - ள்.) திருவருளையே மதநீராகக்காட்டி அடியாரது அகத்திலுள்ள ஆணவமலத்தை யழித்தருளிய விநாயகக்கடவுள் மகிழ்ந்தருளுந் துணைவனே, சொல்வளமிக்க வேதப்பொருளே, மயில்வாகனத்தையுடையவனே, திருப்போரூரிலெழுந்தருளியிருக்கின்ற புண்ணியனே, அடியேனுக்குச் சிவஞானச் செல்வத்தையே யளித்தருளல்வேண்டும். (க)

வந்திக்குமன்பர்க்குவாழ்வுங்கதியுமகிழ்ந்தளிக்குங்
கந்திக்களத்துமைமோந்துகொளாறுகமலத்தனே
சிந்திக்குமென்னெஞ்சைநின்பாதகஞ்சத்திற்சேரவைத்தேன்
புந்திக்குளேநிறைவாய்சமராபுரிப்புண்ணியனே.

(இ - ள்.) வந்தனை செய்யுமன்பர்களுக்கு இம்மைமறுமையின்வாழ்வையும், முத்தியையும், மகிழ்ந்தளிக்கும் சமுகுபோலும் கழுத்தையுடைய உமாதேவியார் மோர்ந்தருளும் ஆறுமுகங்களாகிய தாமரைகளையுடையவனே, விடயங்களைச்சிந்திக்கும் எனது நெஞ்சத்தை யுனதுபாத தாமரையிற் சேர்ந்திருக்கவைத்தேன் (அதனால்) நீஎனது புந்திக்குள் நிறைந்தருள்வாய். (உ)

நதியுமதியுங்குடிகொண்டவார்சடைநம்பனுக்கோர்
நிதியுந்தருவுமெனவந்தவாநினதன்பருக்குக்
கதியுந்திருவுந்தருவள்ளலேகடையேனையுமாள்
பொதியுமலர்ப்பொழில்சூழ்சமராபுரிப்புண்ணியனே.

(இ - ள்.) கங்கையும்பிறையும் குடிகொண்டுவாழும் நீண்ட சடைமுடியையுடைய இறைவனுக்கு ஒப்பற்ற இருவகைநிதியும் பஞ்சதருக்களுமென்ன வந்தருளினவனே, உனது அன்பர்களுக்கு முத்தியையும் செல்வத்தையும் வரையாதளிக்கும்வள்ளலே, மலர்கள்செறிந்த சோலைசூழ்ந்த திருப்போரூரில் வாழ்கின்றபுண்ணியனே, நாயிற்கடைப்பட்டவென்னையும் அடிமைகொள்வாய்.

பாதகமெண்ணிலிசெய்தேனைவாவென்றுன்பாதகஞ்சப்
போதகமாமலர்மீதுவைத்தோய்நின்புகலடியேன்
காதகங்கொள்ளச்சிவனுக்குநான்முகன்காணவொணுப்
போதகஞ்செய்தவனேசமராபுரிப்புண்ணியனே.

(இ - ள்.) சிவபெருமானுக்கு திருச்செவியினுள்ளே அமர பிரமனுலறியவொண்ணுத பிரணவார்த்தபோதத்தையுபதேசித்தவனே, திருப்போரூரிலெழுந்தருளியிருக்கின்றபுண்ணியனே, எண்ணிகந்தபாதகங்களைச்செய்த என்னை வாவென்றழைத்து உனது திருவடித்தாமரையை எனதுள்ளமாகிய மலர்மீது வைத்தருளினை (அதனால்) அடியேன் உன்னடைக்கலம். (ச)

கன்னியராமிருவோருமிருபுடைகாதலுற
மன்னியநாப்பணிருந்தனைவோருக்கும்வாழ்வுதரு
நின்னியல்பேதெனவோதுகிற்பேனெடுமான்மருகா
பொன்னியன்மேனியனேசமராபுரிப்புண்ணியனே.

(இ - ள்.) திருமால்மருகனே, பொன்போலுமரிய திருமேனியையுடையவனே, திருப்போரூரி லெழுந்தருளியிருக்கின்ற புண்ணியனே, வள்ளியம்மை தெய்வயானையென்னும் பிராட்டிமாரிருவரும் இரண்டுபக்கங்களிலும்அன்போடமர்ந்திருக்க நீநடுவேயெழுந்தருளியிருந்து தேவர்முதலிய யாவர்க்கும் வாழ்வைத்தந்தருளும் உனதருளின்வன்மையை யான்யாதென்று சொல்வேன். (ரு)

இகலடைந்தேவருஞ்சூர்குலமாயவிருளினுக்கோர்
பகலடைந்தாலெனவேல்விட்டதீரபவனனிலா
தகலடைந்தார்சுடர்போனின்றுனைப்பணியன்பரைப்போற்
புகலடைந்தேனையுமாள்சமராபுரிப்புண்ணியனே.

(இ - ள்.) மேன்மேற் பகைகொண்டேவந்த சூரபன்மனுடைய குலமழியஉலகைமூடிய பேரிருளுக்கு ஓர்சூரியன் தோன்றினாற்போல விளங்கும் வேலாயுதத்தைவிட்டதீரனே, திருப்போரூரி லெழுந்தருளியிருக்கின்ற புண்ணியனே, காற்றில்லாது தகளியிலுள்ள சுடர்போல அசைவின்றியிருந்து உன்னைப்பணிகின்ற அடியார்களைப்போல அடைக்கலம் புகுந்தவென்னையு மடிமைகொள்வாய். (சு)

கவனமதிக்குமென்னெஞ்சைத்திருத்திக்கடவுளரு
மெவனமதிக்குநின்றாளுனவைத்திங்கெனையளிப்பாய்
சிவனமதிக்குஞ்சிறுமதலாய்புகழ்செப்பிமுப்பார்ப்
புவனமதிக்குஞ்சமராபுரிவருபுண்ணியனே.

(இ - ள்.) சிவபெருமான் களிக்குஞ் சிறுமதலையே, மூன்றுலகங்களும் புகழெடுத்துக்கூறி மதிக்கத்தகும் திருப்போரூரில் வாழ்கின்றபுண்ணியனே, பற்றினைப்பற்று மென்னெஞ்சத்தைத் திருத்தித் தேவர்களும் மதிக்கத்தக்க இளமைவாய்ந்த உனது திருவடியை எண்ணவைத்து இவ்வுலகில் என்னைக்காத்தருள்வாய். (எ)

மறைகொண்டபல்கலையாய்ந்தபொதியமலைமுனிக்கு
நிறைகொண்டபோதமுரைசெய்ததேசிகநின்னடியேன்
கறைகொண்டபவ்வத்தின்மூழ்காதுகாக்கக்கடனுனக்கே
பொறைகொண்டமாதவர்சூழ்சமராபுரிப்புண்ணியனே.

(இ - ள்.) வேதப்பொருளைமேற்கொண்ட பலநூல்களையு மாராய்ந்தறிந்த அகத்தியமுனிவருக்கு, அருள்நிறைந்த சிவஞானபோதத்தை யுபதேசித்தருளிய ஆசிரியனே, சுத்தசாத்விகத்தை மேற்கொண்ட பெரியதவமுடையோர் சூழ்ந்துவாழும் திருப்போரூரிலெழுந்தருளியிருக்கின்ற புண்ணியனே, உனது அடியேனாகிய யான் தீமைமிக்க பிறவிக்கடலில் மூழ்காது என்னைக் காத்தருளலுனக்கே கடனாகும். (அ)

நாகப்படமணிகுத்தியெடுத்துநடம்புரியும்
தோகைப்பரிமிசைதோன்றியவாதுகளின்றடியேன்
ஏகத்தியானத்திருந்திளைப்பாறவினிதளிப்பாய்
போகத்துநாகர்புகழ்சமராபுரிப்புண்ணியனே.

(இ - ள்.) போகபூமியில்வசிக்கும் அமரர்கள் புகழ்கின்ற திருப்போரூரி லெழுந்தருளியிருக்கின்ற புண்ணியனே, சர்ப்பத்தினது படத்திலுள்ளரத்தி னத்தைக் குத்தியெடுத்து நடனஞ்செய்யும் பீலியையுடைய மயிலின்மே லெழுந்தருளி வருகின்றவனே, அடியேன் குற்றங்களினின்று நீங்கிச் சித்தமொரு க்கி தியானத்திற் றங்கி யுபசாந்தியடைய இனியவருள்செய்வாய். (கூ)

மறுமைகுறித்தபயத்தாற்பணிபவர்மத்திமரே
சிறுமைகுறித்துப்பணிவாரதமர்கள்செப்புமிந்த
வுறுமைகுறித்திலதன்பாய்ப்பணிபவருத்தமரே
பொறுமைகுறித்தவர்சூழ்சமராயுரிப்புண்ணியனே.

(இ- ள்.) சாந்தசீலமுடையவர் நிறைந்துவாழ்கின்ற திருப்போரூரி லெழுந்தருளியிருக்கின்ற புண்ணியனே, (தாஞ்செய்யுந் தீவினையினால்) மறுமையி னுபவிக்கும் நரகத்துன்பத்தைநாடி உனது திருவடியைவணங்குவோர் மத்தி மராகும், இம்மையிலனுபவிக்கும் வறுமையைநாடி உனது திருவடியைப்பணி வோர் அதமராகும், சொல்லப்படும் இவ்விரண்டையுங் கருதாது உனது திரு வடியினிடத்து அன்பினையே பேணி வணங்குவோ ருத்தமராகும் (யான் யாவ னாவேனோவென்றபடி).

இதனால் முன்தீவினையின்பயனை யெண்ணுதுபுரிந்து பின்அதனுக்கஞ்சி நல்வினை புரிவோர்மத்திமரெனவும், வறுமைதீவினைப்பயனென் றெண்ணி நல்வினைபுரியாது தெய்வத்தை வழிபடுவோர் அதமரெனவும், இவ்வறுமை செல்வங்களைக்குறிக்காது இறைவனடிமைத்திறத்தையேவிரும்பி அருட்பணி யில்முயல்வோர் உத்தமரெனவுங் கூறியவாறும். (௧o)

நடிக்குமெய்யன்பரினென்போலிகணிற்கநம்பினர்க்கே
பிடிக்குளடங்கிடையார்கட்செலாதுளம்பேணிநின்பொன்
அடிக்குளுருகுங்கண்ணீர்வார்ந்துரைதழுத்தங்கமெல்லாம்
பொடிக்குமுரோமஞ்சமராபுரிவருபுண்ணியனே.

(இ - ள்.) திருப்போரூரி லெழுந்தருளியிருக்கின்ற புண்ணியனே, மெ ய்யன்பரைப்போலநடிக்கும் என்போலியர்கள்நிற்க, உன்னைநம்பினோர்க்கே ஓர்கைப்பிடிக்கு ளடங்குமிடையையுடைய மங்கையர்பால் உள்ளமானது செ ல்லாது உன்னை விரும்பி உனது பொன்போலுமழகிய திருவடிக்குள் உருகா நிற்கும் (அதனால்) கண்களினின்றும் நீர்பெருகி சொல்தடுமாறி அங்கமுற்றும் உரோமம்பொடிக்கும். (இவ்வடையாளங்கள் நம்பாதோர்க்கில்லையென்றபடி).

கோழிக்கொடியைநின்வேலைமயிலைக்குறித்தவரை
ஊழிக்கனலுமணுகாதெனினுனையேயடைந்தேற்

சாழிப்பவமுமுளதோர்வரிவையரப்புசந்தம்
பூழிக்குளுமணக்குஞ்சமராபுரிப்புண்ணியனே.

(இ - ள்.) மங்கையர்கள் தமதங்கத்திற்பூசிய சாந்தமானது வீதியிலுள்ள புழுதியின்கண்ணும் மணக்கப்பெற்ற திருப்போரூரி லெழுந்தருளியிருக்கின்ற புண்ணியனே, உனது சேவற்கொடியையும் வேலாயுதத்தையும் மயிலூர்தியையும் எண்ணுகின்றவரை ஊழிக்காலத்திலெழும் வடவைக்கனலும் அணுகாதென்று வேதங்கள்முறையிடுமாயின் அவைகளை யெல்லாமுடையோனாகிய உன்னையடைந்த எனக்குப் பிறவிக்கடலு முளதாகுமோ.

இதனால் இறைவன்மந்திரத்தைக் கூறுவதுசேவலாதலால் அச்சேவலையும் அம்மந்திரத்தால் அடையும் ஞானவொளியைக்காட்டுவது வேலாதலால் அவ்வேலையும், அந்தஞானத்தால் அடையும் பயன்திருவடியென்றுணர்த்துவது மயூரமாதலால் அம்மயிலையும் சிந்திக்கின்றவர்களுக்கு எவ்விதவிடரும் அணுகுதற்கஞ்சுமென்று கூறியவாறும். (கஉ)

முருகாவெனவுனையோதுந்தவத்தினர்மூதுலகில்
அருகாதசெல்வமடைவார்வியாதியடைந்துநையா
ரொருகாலமுந்துன்பமெய்தார்பரகதியுற்றிடுவார்
பொருகாலனுடுபுகார்சமராபுரிப்புண்ணியனே.

(இ - ள்.) திருப்போரூரிலெழுந்தருளியிருக்கின்ற புண்ணியனே, உன்னை முருகாவென்று ஓதுந்தவத்தையுடையவர் பெரிய இவ்வுலகில் குன்றாத பெருஞ் செல்வத்தையடைவார்கள், பிணியையடைந்து அதனால் வருந்தார்கள், ஓர்காலத்தும் துன்பமுறார்கள், பரமுத்தியடைவார்கள். யமபுரத்தையடையார்கள். (கங)

கட்டளைக்கலித்துறை முற்றிற்று.

உ

வேலுமயிலுந்துணை.

## கட்டளைக்கலித்துறை.

நாரணனானனெனநாளும்போற்றுநளினபத
காரணன்பாகம்பிரியாதகன்னிகளிக்கவரும்
சீரணவுன்பதச்செந்தாமரையென்சிரசில்வைப்பாய்
வாரணவெல்கொடியாய்சமராபுரிவானவனே.

(இ - ள்.) வெற்றியையுடைய சேவற்கொடியையுடையவனே, திருப்போரூரி லெழுந்தருளியிருக்கின்ற தேவனே, திருமாலும் பிரமனும் எக்காலத்துந் துதிக்கும் தாமரைமலர்போன்ற திருவடிகளையுடைய இறைவனும் அவ்விறைவனது இடப்பாகத்தைப் பிரியாத உமாதேவியும் களிக்கவருகின்ற சீர்மையுடையவனே, உனது பாதமாகிய செந்தாமரைமலரை எனது முடியின் கண்வைத்தருள்வாய். (க)

வாதமுடன்பித்தமையென்னுமூன்றின்வரும்பிணிதீர்த்
தேதன்பிழைபொறுத்தேன்றுகொள்ளாயெழிலார்குறப்பெண்
காதல்புரிந்தணைபன்னிருசெம்புயக்காங்கெயனே
மாதமும்மாரிசொரிசமராபுரிவானவனே.

(இ - ள்) அழகுவாய்ந்த வள்ளிநாய்ச்சியார் ஆசைமீதூர்ந்து அணையப்பெற்ற செவந்த பன்னிரண்டு திருப்புயங்களையுடையவனே, கங்காபுத்திரனே, மாதந்தோறு மும்மாரிபொழிகின்ற திருப்போரூரி லெழுந்தருளியிருக்கின்ற தேவனே, வாதபித்த சிலேட்டுமமென்னு மிம்மூன்றினல் வருகின்ற பிணியைத் தீர்த்து துன்புடையேனுகிய எனது பிழையைப் பொறுத்து அடியேனை அங்கீகரித்தருள்வாய். (உ)

அந்திப்பிறையணிவேணியனூர்தந்தவானைமதஞ்
சிந்திப்பொழிந்துவரவேதியானித்தசேவலனே
யுந்திப்பவக்கடல்வீழாதெனையுன்னுபயசரண்
வந்திக்கவேதருவாய்சமராபுரிவானவனே

(இ - ள்.) திருப்போரூரி லெழுந்தருளியிருக்கின்ற தேவனே, அந்திக்காலத்திலுதிக்கும் பிறையையணிந்த சடாமுடியையுடைய விறைவன்தந்த பிரணவயானையை மதத்தைச்சிந்திப் பொழிந்து காட்டானையாய் வரும்படித்தியானஞ்செய்த சேவற்கொடியுடையவனே, பிறவிக்கடற் சுழலில்வீழாது அடியேனையுனது உபயசரணங்களையும்வந்தித்திருக்க நீயருள்செய்வாய். (ங)

கரும்போதவளக்கடலமிர்தோகனமாமழையோ
வரும்போதெழுநறவோவிற்வோவையநீக்கியின்பந்
தரும்போதமோநின்னருளினையேதென்றுதானுரைப்பேன்
வரும்போதகக்களிறேசமராபுரிவானவனே.

(இ - ள்.) அரியஞானக்களிறே, திருப்போரூரிலெழுந்தருளியிருக்கின்ற தேவனே, உனது திருவருள் கரும்போ திருப்பாற்கடலிற்றேன்றிய அமிர்தமோ, பெரியமேகங்களோ, மலரிற்றேன்றுந் தேனே, விரும்புஞ்சுற்றமோ, சந்தேகத்தையகற்றிச் சிவானந்தத்தையளிக்கும் ஞானமோ, இவற்றுள்யாதென்று யானெடுத்திசைப்பேன் (இவையாவும் அவ்வருளே என்றபடி). (ச)

நோயென்றனக்கொருசஞ்சீவியஞ்சநுவன்றெழுந்த
பேயாந்தனக்கொருமந்திரமாமெனைப்பேணுதற்கோர்
தாயாமினியதமராமெனக்குறுதஞ்சமுமா
மாயாக்கருணைதருஞ்சமராபுரிவானவனே.

(இ - ள்.) என்றுமழியாத கருணையைத்தந்தருளும் திருப்போரூரிலெழுந்தருளியிருக்கின்றதேவனே, பிணியாளனாகிய எனக்கு (அப்பிணியைமாற்றுதற்கு) ஒப்பிகந்தசஞ்சீவியுமாகும், அஞ்சும்படி பெருங்குரலோடெழுந்தபேய்க்கு (அதனையோட்டும்) மந்திரமுமாகும், என்னைப்பாதுகாத்தற்கு ஒப்பிகந்த இனியதாயுமாகும், (என்னைவிரும்பும்) இனிய சுற்றமுமாகும், எனக்குப் பொருந்திய அடைக்கலப் பொருளுமாகும்.

இதனால் யான்நோய்முதலியவற்றிற்குரிய ஒவ்வோர்பொருளைப் பேணாது அவ்வப்பொருளெல்லாம் முருகக்கடவுளே யென்றெண்ணினேனென்று கூறியவாறும். (௫)

தோகைமயிற்பரியேறிவந்தென்னெதிர்தோன்றியரு
ளோகைமிகவும்புரிந்தெனையாள்வதுமுண்டுகொலோ
பாகைமறுத்தமொழித்தெய்வயானைபரிகணவா
வாகைபுனைவடிவேற்சமராபுரிவானவனே.

(இ - ள்.) பாகினைப்பழித்த மொழியினையுடைய தெய்வயானைவிரும்புந்தலைவனே, வெற்றிமாலை புனைந்த வடித்த வேலேந்திய திருப்போரூரிலெழுந்தருளியிருக்கின்றதேவனே, தோகையுடைய மயில்வாகனத்தின்மேலெழுந்தருளிவந்து என்னெதிரேநின்று அருளானந்தத்தை மிகவும் அருள்செய்து என்னையடிமைகொள்ளுஞ் செயலுமுண்டாகுமோ. (௬)

ஆறங்கநான்மறையோதுங்குறுமுனிக்கானமறைப்
பேறங்குதவும்பெருமானமிர்தம்பிறங்கியெழு
பாறங்குவாரிதுயின்றோன்மருகநின்பாதமுனு
மாறிங்கெனக்கருளாய்சமராபுரிவானவனே.

(இ - ள்.) திருப்போரூரிலெழுந்தருளியிருக்குந்தேவனே, ஆறுசாஸ்திரங்களையும் நான்குவேதங்களையும் ஓதவல்ல அகத்தியமுனிவருக்கு அமைந்த வேதத்தின்பயனை யங்குபதேசித்தருளிய இறைவனே, அமிர்தமானது பொலிவுபெற்று எழுந்தபாற்கடலில் துயிலுந் திருமால்மருகனே, உனது திருவடியைத்தியானிக்கும்வண்ணம் எனக்கருள்செய்வாய். (௭)

ஏழைத்தொண்டேனுனையண்டிநின்றேனெனையேன்றுகொள்ளாய்
மாழைப்பொருப்புவில்லாளன்மைந்தாநினைவந்திக்கிலாக்
காழைப்பொருவுமனத்தினனாயினுங்காப்பைகண்டாய்
வாழைப்பெருங்குலஞ்சூழ்சமராபுரிவானவனே.

(இ - ள்.) பெரியவாழைச் சோலைகள் சூழ்ந்ததிருப்போரூரிலெழுந்தருளியிருக்கின்றதேவனே, பொன்மலையை வில்லாகவுடைய இறைவன்மகனே உன்னைப் பணிந்திலாத வைரம்பற்றியமனத்தை யுடையேனாயினும் என்னைக் காத்தருளல் வேண்டும் (என்னையோவெனின்) யானேழைத் தொண்டனாய் உன்னை யணுகிநிற்கின்றேனாதலால் அடியேனை யங்கீகரித்தருளாய். (அ)

பேயன்பிழையையும்பித்தன்பிழையையும்பேசரிய
சேயின்பிழையையுந்தேரார்பெரியர்சிறியபுன்மை
நாயன்பிழைதனைநீபொறுத்தாளுந்திநாயகமே
மாயன்திருமருகாசமராபுரிவானவனே.

(இ - ள்.) திருமால்மருகனே, திருப்போரூரி லெழுந்தருளியிருக்கின்ற தேவனே, எனதுநாயகமே, பேய்பிடியுண்டான் செய்யுங் குற்றத்தையும், மனப்பித்துடையான் கூறுங் குற்றத்தையும், சொல்லுதற்குரிய செல்வச்சிறுவன் ஆடுங்குற்றத்தையும், பெரியோர்களாராயார் (அதனால்) அறிவிற் சிறிய புல்லியனாகிய நாயேனது குற்றங்களையும், நீபொறுத்து ஆளக்கடவாய். (கூ)

அருண்மேகமென்னகத்தூடெழுமானந்தவாரியுண்மைப்
பொருண்மாதவருள்ளம்புக்குறைபூரணம்போதநல்குந்
தெருள்வாசவன்முதற்றேவரும்போற்றியதெய்வநெஞ்சின்
மருண்மாசுதீர்க்குஞ்சமராபுரிவருவானவனே.

(இ - ள்.) நெஞ்சத்தையடைந்த மருண்மயக் ககற்றும் திருப்போரூரிலெழுந்தருளியிருக்குந்தேவனே, அருள்பொழியும்மேகம், என்னகத்தின்கண்ணெழுந்த ஆனந்தக்கடல், உண்மைப்பொருளை யுணர்ந்த மெய்ஞ்ஞானிகளதுள்ளத்திற் புகுந்து வசிக்கின்ற பூரணம், ஞானத்தை யளிக்கும் சிவஞானம், இந்திரன்முதலிய தேவர்கள்போற்றும் தெய்வம் (ஆகிய இவையாவுமாவன்). (௧௦)

கட்டளைக்கலித்துறை முற்றிற்று.

உ

வேலுமயிலுந்துணை.

## கட்டளைக்கலித்துறை.

கண்ணிற்சிறந்தகருமணியேகடையேனிதயத்
துண்ணிற்குமோரொளியேவெளியேயுயர்தேவரெல்லாம்
விண்ணிற்றருமலர்கொண்டேயிறைஞ்சுமுன்மென்மலர்த்தா
டண்ணிற்சிறந்ததன்றேசமராபுரிச்சண்முகனே.

(இ - ள்.) திருப்போரூரி லெழுந்தருளியிருக்கின்ற சண்முகக்கடவுளே, கண்களிற்சிறந்து விளங்கும் கரியமணியே, நாயிற்கடைப்பட்ட அடியேனுடைய இதயத்தூன்நிலைபெற்று நிற்கும் ஒப்பிகந்தமணியே, சிதாகாசமே, மேன்மைவாய்ந்த தேவர்களெல்லாம் விண்ணுலகிலுள்ள கற்ப மலர்களைக்கொண்டு வழிபடுமுனது மெல்லியமலர்போன்ற திருவடியே அருளிற் சிறந்ததாகும்.()

விண்டலைகொண்டநின்சேவடிக்கன்புசெய்வித்தகரே
மண்டலைவாரிப் பவங்கடப்பார்மற்றையோர்களெல்லாங்
கண்டலைமென்மொழியார்கருவாழிகடக்கறியார்
தண்டலைமண்டுசமராபுரிவருசண்முகனே.

(இ - ள்.) சோலைகள் நெருங்கிய திருப்போரூரிலெழுந்தருளியிருக்கின்ற சண்முகக்கடவுளே, விண்ணுலகினரெல்லாம் தங்கள் தலைக்குமுடியாகக்கொண்ட உனது திருவடிக்கு அன்புசெய்யவல்ல ஞானிகளே நெருங்கிய அலையையுடைய பிறவிக்கடலைக் கடப்பார்கள், உனது திருவடிப் புணையைப்பெறாதவர்கள் கற்கண்டினையொத்து கேட்போரையலைக்கும் மெல்லிய மொழியையுடையாரது உதரத்தின் கண்கருக்கொள்ளும் கடலைக்கடத்தற்கு அறியமாட்டார்கள்.

தீதேபுரியுங்கொடியேனகத்துன்செறிகழற்றாட்
போதேயிருக்கவரந்தருவாய்புனக்குன்றவர்த
மாதேபுணருமணிப்புயத்தாய்வண்டுகிண்டிமொய்க்கத்
தாதேசொரிபொழில்சூழ்சமராபுரிச்சண்முகனே.

(இ - ள்.) தினைப்புனத்தையுடைய குறிஞ்சி நிலமாக்களது மகளாகிய வள்ளிநாய்ச்சியார் அணைந்திருக்கும் அழகிய புயத்தையுடையவனே, வண்டுகள் கிண்டிமொய்க்க மகரந்தத்தைச் சொரியும் சோலைசூழ்ந்த திருப்போரூரி லெழுந்தருளியிருக்கின்ற சண்முகக்கடவுளே, தீமையையே யெக்காலத்துமியற்றும் தீயனாகிய எனதுள்ளத்தில் உனது செறிந்த திருவடித் தாமரையேயிருக்கவரந்தருவாய். (௯)

ஆலஞ்செறிந்தகறைமிடற்றுற்குமகத்தியத்திற்குங்
கோலஞ்செறிந்தமறைமொழிகூறுங்குருபரனே
சீலஞ்சிறிதுமறியேனையாண்டதிறனென்கொலோ
தாலம்புகழுஞ்சமராபுரிவருசண்முகனே.

(இ - ள்.) உலகம் புகழும் திருப்போரூரி லெழுந்தருளியிருக்கின்ற சண்முகக்கடவுளே, விடஞ்செறிந்த கரிய கண்டத்தையுடைய இறைவனுக்கும் அகத்தியமுனிவருக்கும் அழகிய பொருளமைந்த பிரணவப்பொருளைக்கூறிய

குருமணியே, சிலஞ்சிறிதுமறியாத வென்னை யடிமைகொண்ட வல்லபம் யாதோ அறியேன். (சு)

வஞ்சகனெஞ்சினனாயினுமாதர்வலையிற்கொட்டும்
பஞ்சனநெஞ்சினனாயினுமுன்றன்பணிபுரியா
தஞ்சுறுதீவினைசெய்தேனெனினுமடியனுக்குன்
றஞ்சமலாதுளதோசமரபுரிச்சண்முகனே.

(இ - ள்.) வஞ்சஞ்செறிந்த நெஞ்சத்தை யுடையவனாயினும், மங்கையரது வலையிற்சிக்கி கொட்டியபஞ்சையொத்த நெஞ்சினையுடையவனாயினும், உனது திருவடித்தொண்டினைச்செய்யாது அறிவுடையோர் அஞ்சத்தக்க தீவினையைச்செய்துடையேனாயினும், அடியேனுக்கு உன்பற்றுக்கோடல்லது வேறு ஒரு பற்றுக்கோடுமுளதோ (இல்லையென்றபடி.) (ரு)

அரையிருணோக்கும்விழிபோன்மலவிருளாழுமென்னைப்
புரையறுமுன்மலர்த்தாட்பிரகாசம்புகுதவைப்பாய்
வரையுறுதோள்வள்ளிநாயகிகொங்கைமணந்தவனே
தரையுறுமன்பர்புகழ்சமராபுரிச்சண்முகனே.

(இ - ள்.) மலையையொத்த உனதுபுயங்களில் வள்ளிநாய்ச்சியாரது தனங்கள்புணரப்பெற்றவனே, உலகத்தின்கண் ணிலைபெற்ற அன்பர்கள்புகழும் திருப்போரூரி லெழுந்தருளியிருக்கின்ற சண்முகக்கடவுளே, அரையின்கணுள்ள இருளைநோக்கும் கண்ணைப்போல மலவிருளில் ஆழ்ந்தவென்னை மலக்குற்றமற்ற உனது திருவடித்தாமரையினது பிரகாசஞ்செல்ல அத்திருவடியை வைத்தருள்வாய்.

அறையிரு ளென்றதனால் பாசவிலக்கணமும், நோக்கும் விழிபோலென்றதனால் பசுவிலக்கணமும், மலவிருளாழும் என்னை யென்றதனால் பெத்தவிலக்கணமும், உன் மலர்த்தாட்பிரகாசம் புகுதவைப்பாயென்றதனால் முத்தியிலக்கணமும் குறிப்பாற்கொள்ளக்கிடந்தன. (சா)

தீதொன்றுநெஞ்சினனென்றுகொலுன்றன்திருவடியாம்
போதொன்றிரதநறைபெறுவேன்பொருசேலிணைபோற்
காதொன்றுகண்ணினள்கானக்குறத்திதன்காதலனே
தாதொன்றுபூம்பொழில்சூழ்சமராபுரிச்சண்முகனே.

(இ - ள்.) இரண்டுகயல்மீனைப்போல் காதொடுபோர்புரியும் கண்களையுடைய வள்ளிநாய்ச்சியாரது தலைவனே, மகரந்த நிறைந்த சோலைகள் சூழ்ந்த திருப்போரூரி லெழுந்தருளி யிருக்கின்ற சண்முகக்கடவுளே, தீமைபொருந்திய நெஞ்சத்தையுடைய யான் உனது திருவடியாகிய தாமரைமலரில் பொருந்திய இரதமுள்ள தேனை யென்னாள் பெறுவேன்.

இறைவன் எங்கும் நிறைந்துள்ளானாயினும் அவன்வெளிப்பட்டருளுதல் அன்பொன்றிய நெஞ்சமுடையார்க்கேயன்றி தீதொன்றிய நெஞ்சமுடையார்க் கன்றாகலான் தீதொன்று நெஞ்சினன் திருவடியாம்போது ஒன்று இரதநறை என்று பெறுவேன் என்றார். (எ)

விடையுடையானுங்கருடத்துவசனும்வெங்குலிசப்
படையுடையானுமனக்கொடியானும்பணிபெரியோய்
கடையுடைநாயிற்றிரியுமென்னுசைகளைதிமிரத்
தடைவிடுநெஞ்சினர்சூழ்சமராபுரிச்சண்முகனே.

(இ - ள்.) மலதிமிரமாகிய தடையினின்றும் விடுபட்ட அறிவினையுடைய ஞானிகள் சூழப்பெற்ற திருப்போரூரி லெழுந்தருளியிருக்கின்ற சண்முகக் கடவுளே, இடபவாகனத்தையுடைய இறைவனும், கருடக்கொடியையுடைய திருமாலும், வச்சிரப்படையையுடைய இந்திரனும், அன்னக்கொடியையுடைய பிரமனும் பணிகின்ற பெரியவனே, கடைப்பட்ட நாய்போலுந் திரியும் என் தாசையை யொழித்தருளாய்.

சகளம் நிஷ்களங் கடந்த பரம்பொருள் நீயே யென்பார் விடையானுங் கருடத்துவசனும் வெங்குலிசப் படையானும் பணிபெரியோ யெனவும், அங்ஙனமாயினும் சிந்தனை செய்வோர்க்குக் கோசரப் பொருளாய் அவரது திமிரங் களைந்தருளுதலால் எனதாசைப் பெருக்கையும் களையவேண்டுமென்பார் கடையுடை நாயிற்றிரியுமென்னுசைகளை யெனவுங்கூறினார்.

விடையானை யென்றது குணருத்திரரை. (அ)

காரார்பிறவிக்கடலைக்கடத்துமென்கன்மனத்தை
நீராயுருக்குமெனீடுயிர்மூடிநிறைந்திருண்ட
தீராமலப்பிணிதீர்த்திடுமுன்றன்றிருவடியே
தாரார்பொழில்புடைசூழ்சமராபுரிச்சண்முகனே.

(இ - ள்.) வரிசையாகச் சோலைகள் சூழ்ந்திருக்கப்பெற்ற திருப்போரூரி லெழுந்தருளியிருக்கின்ற சண்முகக்கடவுளே, உனது திருவடியே அஞ்ஞான மிக்க பிறவிக் கடலைக்கடக்கச்செய்யும், எனது கல்போன்றமனத்தை நீராய்ப் பெருகவுருக்கும், எனது அழியாத வுயிரை இருள்மயமாய் மூடிநிறைந்து எக்காலத்துப்நீங்காத ஆணவமலப்பிணியைத் தீர்த்துவிடும்.

பிறவி மாயாபாசமுடையதாதலால் அம்மாயாமலத்தையும், கன்மனம் கருமபாசமுடையதாதலால் கன்மமலத்தையும், உயிர்ஆணவபாசமுடையதாதலால் ஆணவமலத்தையும் முறையே கடத்தியும் உருக்கியும் தீர்த்தும் ஆன்மாவைச் சுத்தமாக்கிச் சிவமாக்குவது அருளாதலால் உன் திருவடி பிறவிக்கடலைக் கடத்தும் கன்மனத்தைநீராயுருக்கும்தீராமலப் பிணிதீர்த்திடும் என்றார் அல்லதூஉம்

இம் மும்மலங்களையும் ஆன்மாவுக்கு முப்புறங்களாகவும் கொள்ளற்பாற்று. எங்ஙனமெனின் ஆணவம் அகப்புறமாம் கன்மம்புறமாம் மாயைபுறப்புறமாம். ஆகவே இம்முப்புறங்களுக்கும் அப்பாற்பட்ட சிவம் அகமாயுளதாதலால்அச் சிவத்தைவிளக்குவது அருளேயாமென்பார் திருவடியேயென்று தேற்றேகாரந் தந்து கூறினரெனக் கொள்ளினுமமையும், அல்லதூஉம் தேகம் சடமாதலால் கடத்துமெனவும் மனம்அறிகருவியாதலால் உருக்குமெனவும் ஆணவம் உயிர்க் குப்பிணியாயிருத்தலால் தீர்க்குமெனவும் கூறினரெனக் கொள்ளலுமொன்று.

நாயேனுன்சேவடிவேண்டுகொளாதுநலிபிணியான்
மாயாமலுன்னடியேன்றனைக்காத்தனைமற்றிதற்கோர்
பேயேன்பின்செய்யுங்கைமாறுளதோபெரியாய்சிறியேன்
றாயேயெனதுறவேசமராபுரிச்சண்முகனே.

(இ - ள்.) திருப்போரூரி லெழுந்தருளி யிருக்கின்ற சண்முகக்கடவுளே, பெரியோனே, சிறியேனது அன்னையே, என்னுடையவுறவே, நாயிற்கடைப் பட்ட யான் உனது திருவடியை வேண்டிக் கொள்ளாது வாளாயிருக்க, நீ உன்னடியேனாகிய என்னை நலிவுசெய்யும் பிணியினால் மாய்ந்துறாமல் காத்தருளினாய், இதற்குப்பேயனாகிய யான் பின்செய்வதாகிய ஓர் கைம்மாறுமுண் டாங் கொலோ (இல்லையென்றபடி.)

இதனால் இறைவனது வள்ளற்றன்மை காட்டியவாறு. (௫௰)

கட்டளைக்கலித்துறை முற்றிற்று.

உ

வேலும்மயிலுந்துணை.

## நேரிசை வெண்பா.

கலைமுகங்கள்போற்றுங்களிற்றுக்கிளையா
னிலைமுகங்கொள்வேலுக்கிறையா - னிலைமுகங்க
ளாறுடையானறிரண்டுதோளுடையானம்போரூர்
வீறுடையானென்றுளமேவேண்டு.

(இ - ள்.) எனதுநெஞ்சமே நான்முகங்களெல்லாம் முன்போற்றும் விநாயகக்கடவுளுக்கு இளையவனேயென்றும், இலைபோலும் முகத்தையுடைய வேலாயுதத்திற்கு இறையவனேயென்றும், நிலைபெற்ற ஆறு திருமுகங்களையுடையவனே யென்றும், பன்னிரண்டு திருப்புயங்களை யுடையவனேயென்றும்

நமது திருப்போரூரி லெழுச்தருளி யிருக்கின்ற நிகரற்ற வீரனேயென்றும் வேண்டுவாய். (க)

வேதாந்தச்சென்னிமிசையிருக்குந்தெய்வமே
போதானந்தச்சுடரே புண்ணியனே - நாதாந்த
வின்பத்தைக்காட்டியெனையளிப்பாய்போரூரா
துன்பத்தையெல்லாந்துடைத்து.

(இ - ள்.) திருப்போரூரென்னுந் திருப்பதியையுடையானே, வேதாந்தத்தின் முடியின்மீது நிலைபெற்று விளங்கும் தெய்வமே, ஞானானந்தவிளக்கே, புண்ணியசொரூபனே, நாதமுடிவில் விளங்கு மின்பசுகத்தைக் காட்டி பிறவித் துன்பங்களையெல்லாந் துடைத்து என்னைக்காத்தருள்வாய்.

வேதமுடிவிற்கூறும் தெய்வம் போற்றும் தெய்வமென்பார் வேதாந்தச்சென்னிமிசையிருக்கும் தெய்வமே யெனவும், ஏனைத்தெய்வங்கள்போல் வேதனைப்படுதலும் இறத்தலும் மேல்வரும் வினையைப்புரிதலும் ஆகிய துன்பச்செயலொழிந்து இன்பரூபியாய் அம்மையப்பர் நாப்பண் வீற்றிருப்பவனென்பார் போதானந்தச்சுடரே புண்ணியனேயெனவும், ஆனந்தரூபியாகிய நீ நாதாந்த இன்பத்தைத்தருதல் எளிதென்பார் நாதாந்த இன்பத்தைக்காட்டி எனையளிப்பாயெனவுங்கூறினர். (உ)

சும்மாவிருவெனநீசொல்லப்பொருளொன்று
மம்மாவறிந்திலமென்றன்றுரைத்த—வெம்மா
னருணகிரிநாதனனுபவநாயேற்குக்
கருணைபொழிபோரூராகாட்டு.

(இ - ள்.) சும்மாயிரு வென்று நீகூற அதன் பொருளொன்றும் அம்மா அறிந்திலம் என்று அந்நாளிலுரைத்த எமது பெருமானாகிய அருணகிரிநாதர் கூறிய அநுபவவாக்கியத்தை, நாயிற்கடைப்பட்ட அடியேற்கும் கருணையைப் பொழிகின்ற திருப்போரூரென்னுந் திருப்பதியையுடையவனே, அதனைக்காட்டியருள்வாய்.

அருணகிரிநாதருக்கு நீ சும்மாயிருவென்றுகூற அதன்பொருள் உருவன்றென்றும் அருவன்றென்றும் உளதன்றென்றும் இலதன்றென்றும் இருளன்றென்றும் ஒளியன்றென்றும் நின்றபொருள் என்றுணர்ந்து அப்பொருளைமேற்கூறிய பகுதிகளில் ஒன்றென்றுகூறுஞ் சொல்லிறந்து அப்பொருளேயாய் நிற்கும் அனுபவமுடையராய் நிற்கப்பெற்று இதனை அருள்கொண்டறியாரறியுந்தரமோ என்று கூறினாராதலால் அருள்பெறாதாரிலொருவனாகிய யான் அவ்வனுபவத்தை யெங்ஙனமுணர்வேன். அஃதால் நீயேயருளால் காட்டநான்காணவேண்டுமென்பார் அருணகிரிநாதனனுபவநாயேற்கு கருணைபொழிபோரூராகாட்டு என்றார். (௩)

மன்னுபிரமத்தில்வாழபின்னுசத்தியிடத்
துன்னும்பின்னுசத்தியுண்டதனிற்—றுன்னு
முலகுண்டதனையுளம்பிடிக்குமென்று
னிலகும்போரூர்வாழிறை.

(இ - ள்.) பொலிவுபெற்றுவிளங்கும் திருப்போரூரில்வாழ்கின்ற இறைவன், நித்தியமாகிய பிரமத்தில் வாழ்கின்ற அபின்னசத்தியினிடத்துப் பொருந்தியபின்ன சத்தியுண்டெனவும், அதனிற்பொருந்திய உலகமுண்டெனவும், அவ்வுலகத்தை மனம்பிடிக்குமெனவும் எனக்குச்கூறியருளினன்.

பிரமத்தில்வா ழபின்னசத்தி யென்றது தாதான்மியசத்தியாகிய அருட்சத்தியை, பின்னசத்தியென்றது பரிக்கிரகசத்தியாகியமாயையை, அருட்சத்தியே திரோதானசக்தியாய் மாயாசத்தியோடுகலந்திருத்தலின் அபின்னசத்தியிடத்துன்னும்பின்னசத்தி யுண்டெனவும், உலகிற்குமாயை யுபாதான காரணமாதலால் அதனிற்றுன்னுமுலகுண்டெனவும், அம்மாயாமலத்தோடொன்றுயெண்ணப்பட்டவாணவசகிதனுகிய ஆன்மா மாயாகாரியமாகியஉலகில்மயங்கி நிற்றலின் அதனையுளம்பிடிக்கு மெனவுங்கூறினர். இதற்கு பிறர்கூறும்பக்கங்களையும் அதனைமறுத்துரைக்குஞ் சுபக்கங்களையுமுன்னர் விதந்துகூறியிருக்கின்றேமாதலாலீண்டிவ்வளவில் விடுத்தாம். (௪)

அறிவைவிடத்தோன்றிடாதம்புவியுநெஞ்சுஞ்
செறியறிவாய்நில்லென்றுசெப்பிப் - பிறிவறவென்
னெஞ்சைத்திருத்திநிறையவைத்தபோரூரன்
கஞ்சத்திருத்தண்டைக்கால்.

(இ - ள்.) திருப்போரூரிலெழுந்தருளி யிருக்கின்ற இறைவனது தாமரைமலர்போன்ற தண்டை யணிந்த திருப்பாதமானது, அறிவைவிட்டு உலகமும் நெஞ்சும்தோன்றிடாது (அதனால்) நீநிறைந்த அறிவாகவே நிற்பாயென்றுகூறி நீக்கமின்றி யெனதுள்ளத்தைத்திருத்தி பரிபூரணத்தை யடையவைத்தது. (ரு)

பிரபஞ்சம் சடமும் நெஞ்சம் சுதந்திரமற்றதும் ஆகையால் சுதந்தர அறிவையுடைய இறைவனுலன்றிக்காரியப்படாவாகலான் அறிவைவிடத்தோன்றிடாது அம்புவியும் நெஞ்சுமெனவும், அஃதால் நெஞ்சின்வழியே பிரபஞ்சத்திற்சார்ந்து துன்பமுறாது இன்பம்வேண்டுவோர் சிவத்தையேபேணுவராதலால் செறியறிவாய் நில்லெனவும், அங்ஙனம்நிற்கப் பெற்றோர்க்கு அவ்வறிவு வேறறநின்று அறியாமையையகற்றித் தானேயாயிருக்கச் செய்யுமாதலால் பிரிவற என்னெஞ்சைத்திருத்திநிறையவைத்தபோரூரன் எனவுங் கூறினர்.

அறிவை ஆன்மாவாகக் கொண்டு ஏனையபதங்களுக்குப் பொருள்கூறின் மேலைச் செய்யுளில்பின்ன சத்தியுண்டு, அதனில்துன்னுமுலகுண்டு, அதனையுளம்பிடிக்கும் என்றுகூறியபொருளடைவிற்குமுரணினிற்குமாறுகாண்க. (ரு)

இளம்பிடியுமானுமிசைகற்பகமொன்
றுளங்குடியாக்கொண்டென்னைவிட்டோவா-களங்கனிபோற்
கண்டத்தானீன்றதகாரணமெய்ப்பூரணத்தா
னண்டத்தான்சேய்போரூராங்கு.

(இ - ள்.) உலகிற்கு நிமித்தகாரணனும் மெய்மையானவியாபக முடையானு மெல்லாவண்டமுடையானும் சேய் என்னும் பெயரினனுமாகிப் போரூரின் கண் தெய்வயானையும் வள்ளிநாய்ச்சியாரும் இணங்குகின்ற கற்பகத்தருவொன்று, என்னுள்ளங் குடியாகக்கொண் டென்னைவிட்டு நீங்காதது; அது களாக்கனிபோலும் நிறத்தையுடைய கண்டத்தானருளியது.

ஆங்கு - அசைநிலை. பிடிபோன்ற நடையினராதலின் இளம்பிடியென்றும் மான்விழியினராதலின்மா னென்றும், தன்னைவழிபடுவார்வேண்டிய வேண்டியவாறே யருளுதலுனுக்கிக் கற்பகமென்றும் உவமைமுகத்தாற் கூறினர். அடியாருள்ளமே கோயிலாகக் கொண்டமையான் உளங்குடியாகக் கொண்டென்னைவிட்டோவா தென்றதென்க. இப்பெற்றி நோக்கியே 'மலர்மிசை யேகினன்' எனப்பிறருங் கூறுதல் காண்க. ஆக ஓவாதது என்பன ஈறுதொகுத்தல்பெற்றன. கற்பகமெனவாளாகூறாது ஒன்றென்றது கடல்கடைந்து வருந்தித்தோன்றிய கற்பகம் போலாது இறைவனது நுதற்கண்ணிற்றோன்றிய புலிங்கவடிவாகலினென்பது. சேயென்பதை 'செவ்வேற்சேஎய்' என்னும் படையுள்செய்யவனென்பது சேயென விகாரத்தானீண்டதென நச்சினார்க்கினியார் கூறலானுமறிக. காரணமெய்ப் பூரணத்தாரெனப்பாடங் கூறுவாருமுளர். (கூ)

தஞ்சமெனவந்துன்சரணடைந்தநாயினேன்
வஞ்சமனநினைவால்வாடினேன் - வஞ்சமன
நீக்கித்திருப்போரூர்வின்மலாநின்னடிமை
யாக்கியெனையாளுவாய்.

(இ - ள்.) அடைக்கலமெனவந்து உனது திருவடியையடைந்த நாயினேன், வஞ்சம்பொருந்திய மனநினைவால் வாட்டமுற்றேன், (அதனால்) திருப்போரூரிலெழுந்தருளியிருக்கின்ற சுத்தனே, எனது வஞ்சமனத்தையகற்றி உனது திருவடிக்கடிமையாக்கி யாட்கொள்வாய்.

இதனால் யான்ஞானியென்றெண்ணி வஞ்சமனத்தால் வாடிநலமழிவதினும் உனக்கடிமையாளென்று பேர்பெறவேணுயின் இவ்வஞ்சமனத்தின் வாதனையை அன்றேவிட்டொழிவேன் அதனால் அடிமைத்திறத்தை வேண்டினேனென்றவாறும். (எ)

உன்னடிமைக்கேவிரதமுற்றசிறியேன்மனமுன்
பொன்னடிமைக்காகாதபூணுமோ—நின்னடிமை

யாக்குதற்கும்போரூரணிநகரராய்நாயேனைக்
காக்குதற்குமுன்றன்கடன்.

(இ - ள்.) உன்திருவடிக்கு அடிமையாதற்கே விரதம்பூண்டசிறியேனது மனம், உனது அழகிய திருவடிக்கு ஆகாதனவற்றை விரும்புமோ, திருப்போரூரென்னும் அழகிய நகரத்தையுடையவனே, (இனி) நாயிற்கடைப்பட்ட என்னை உனது திருவடிக்குரிய அடிமையாளா யாக்குதற்கும், அவ்வடியைவிட்டு நீங்காதுஅங்ஙனம் வாழ்ந்திருத்தற்கும் அருள்பாலிப்பது உனது கடனாகும்.

இதனால் இறைவன் திருவருளைவிரும்பின் அவனருளாலன்றி ஆகாவென்பது பெற்றாம். (அ)

தீனமனம்போக்கிச்சிறியேனுக்குன்றாளுக்
கானமனந்தந்தென்னையாளுவாய் - ஞானபர
முத்தாநம்போரூர்முருகாவென்னுருயிருக்
கத்தாகருணாலயா.

(இ - ள்.) ஞானசொரூபியாகிய பரமுத்தனே, எங்கள் திருப்போரூரிலெழுந்தருளியிருக்கும் முருகக்கடவுளே, எனது நிறைந்தவுயிருக்கு இறைவனே, கருணாலயனே, சிறியேனாகிய எனக்கு தீனத்தன்மையுடைய மனத்தைப்போக்கி உன்திருவடிக்குரிய மனத்தைத்தந்துஎன்னை யடிமைகொள்வாய்.

இதனால் அருள்பெறாதார்மனம் தீனமனமெனவும் பெற்றார்மனம்தீரமனமெனவும் போந்தது. (கூ)

ஆனந்தத்தேனிருக்குமாறுமுகக்கற்பகமே
யீனந்தீர்போதவிரவியே - தேனுந்து
நீபத்தொடையாய்நிகழ்போரூரையாவென்
றாபத்திரயந்தவிர்

(இ - ள்.) சிவானந்தத்தேன் நிறைந்திருக்கும் ஆறுமுகத்தையுடைய கற்பகமே, சிறுமையினின்றும் நீங்கிய ஞானசூரியனே, தேன்பிலிற்றும் கடப்பமலர் மாலையையுடையவனே, அழியாதுநிலைபெற்ற திருப்போரூரிலெழுந்தருளியிருக்கின்றஐயனே, எனது தாபத்திரயத்தை யொழித்தருளாய்.

இதனால் எனது தாபமோமூன்று அதுவொழிக்க வெழுந்த உனது முகமோ ஆறு அங்ஙனமாக இன்னும் அம்மூன்றும் ஒழியாதிருப்பது என்னையோவென்றவாறாம். (௧௦)

நேரிசை வெண்பா முற்றிற்று.

உ

வேலுமயிலுந்துணை:

## அடைக்கலப்பத்து.

மணியேயனவைங்கரற்கிளையமன்னேபொன்னேவானமிர்தே
யெணியேயிருவர்பணிந்தேத்துமீசனுவந்தசிறுமதலாய்
நணியேயெனைவந்தாண்டுகொண்டநாதாவினிநாயேனைவிடே
லணியேசிறந்தபோரூராவடியேனுன்றனடைக்கலமே.

(இ - ள்.) இரத்தினத்தையொத்த ஐந்து திருக்கரங்களையுடைய மூத்தபிள்ளையாருக்கிளையவரசே, (யாவரும்) விரும்பும் பொன்னே, தேவர்கள்வேண்டும் அமிர்தமே, போற்றிப்போற்றிஎன்று திருமாலும் பிரமனும் பணிந்துபோற்றும் இறைவனுவந்தருளுஞ் சிறுமதலையே, என்னையடுத்துவந்து அடிமைகொண்ட நாதனே, இனிநாயிற்கடைப்பட்ட வென்னைக் கைவிடேல், மிக்கஅழகேசிறந்து விளங்கும் திருப்போரூரென்னுந் திருப்பதியையுடையவனே, அடியேன் உன்னடைக்கலம்.

உனக்கு நானடிமையானது உன்னாலன்றி என்னாலன்றென்பார் நணியேயெனைவந்தாண்டுகொண்ட நாதாஎனவும், ஆண்ட நீயேகைவிடுதல் நன்றன்றென்பார் இனி கைவிடேல் எனவுங் கூறினார். (௧)

வேயேயனதோளுமையுதவுமிளிர்பொற்கலசப்பாலுண்ட
தூயோயிருகன்னியர்கணவாசோதிவேலாமயில்வீரா
நாயேனிழைத்தபிழைபொறுத்துனளினபாதந்தரவேண்டும்
ஆயேயனையபோரூராவடியேனுன்றனடைக்கலமே.

(இ - ள்.) மூங்கிலையொத்த தோளையுடைய உமாதேவியாருதவிய விளங்கும் பொன் வள்ளத்தி லமைந்த ஞானப்பாலையுண்ட சைவனே, தெய்வயானை வள்ளியம்மையென்னும் பிராட்டிமாரிருவருக்கும் தலைவனே, சோதிமயமாகிய வேலாயுதத்தையுடையவனே, மயில்வாகனத்தை யூர்ந்தருளும் வீரனே, நாயிற்கடைப்பட்ட யானிழைத்த குற்றத்தைப்பொறுத்து உனது திருவடித்தாமரையைக் கொடுத்தருளல் வேண்டும், அன்னையையொத்த திருப்போரூரென்னுந் திருப்பதியுடையவனே அடியேனுன்னடைக்கலம்.

அன்னையானவள் மக்கள் தன்னையடைக்கலமென்றடையாது ஓர்பொருளைவேட்டாராயின் அப்பொருளளித்தல்கடன். யானடைக்கலமென்றடைந்து வேறோர் பொருளைப்பேணாது உன்திருவடியையே பேணினேனாதலால் எனக்கன்னையையொத்த நீ அதனைத்தருதல் கடனாகுமென்பார் ஆயேயனைய போரூரா அடியேனுன் றனடைக்கல மென்றும் உன்னளினபாதந் தரவேண்டு மென்றுங் கூறினார். (௨)

மாண்டுபிறவாநெறியருளுமன்னவானோர்முதலெவரும்
வேண்டும்பொருளேபொய்யவனேன்மெய்யாந்துணையேநாயடியே
னீண்டிங்கிழைத்தகுற்றங்களெல்லாம்பொறுத்தேயெளியேனை
யாண்டுகொளவேண்டும்போரூரையாவுன்றனடைக்கலமே

(இ - ள்.) இறந்து மீண்டும் பிறவாத வீட்டு நெறியையருளும் அரசனே, தேவர்கள் முதலியயாவரும் விரும்பும்பொருளே, பொய்யேனாகிய எனக்குமெய்யாகிய துணையே, நாயிற்கடைப்பட்டயான் இவ்விடத்திலிப்பொழுது இயற்றிய குற்றங்களெல்லாம் பொறுத்தருளி யெளியவனை யடிமைகொண்டருளல் வேண்டும், திருப்போரூரென்னுந் திருப்பதியையுடையவனே, ஐயனே, உன்னடைக்கலம்.

இதனால் உன் திருவடிக்குப் பலபிழைபுரியினும் உன்னையடைக்கலமென்றடைந்தேனாகலின் மாண்டுபிறவாதநெறியைத் தந்துஆண்டுகொள்ளவேண்டுமென்று வேண்டியவாறும். (௩)

வினையேனிழைத்தபெரும்பிழைகள்பொறுத்தாட்கொண்டமெய்த்தேவே, நினையேன்வேறோர் புகலிடமுமறியேன் சிறியேனின்மலனே, கனைமாபிறவிக்கடல்கடப்பக்கழற்றாட்கலனைத்தரவேண்டும், அனையேயனையபோரூராவடியேனுன்றனடைக்கலமே.

(இ - ள்.) தீவினையுடையேனாகிய யானியற்றிய பெருங்குற்றங்களைப் பொறுத்து யடிமைகொண்ட வுண்மைத்தெய்வமே, சிறியேனாகிய யான் வேறொருதெய்வத்தை நினையேன், வேறொரு புகலிடமுமறியேன் (அதனால்)பரிசுத்தனே, ஒலிக்கும் பெரிய பிறவிக்கடலைக்கடப்ப வீரகண்டையணிந்த உன்திருவடிப்புணையைத் தந்தருளல்வேண்டும், தாயையொத்த திருப்போரூரென்னுந் திருப்பதியையுடையவனே உன்னடைக்கலம்.

இதனால் பிறந்திறக்குந் தெய்வங்களையடைக்கலம் புகாது உன்னையடைக்கலம் புகுந்தேனாதலால் எனது பிறவிக்கடலைக்கடத்தற்கு உனது தாளைத்தரவேண்டுமென்று வேண்டியவாறும். (௪)

பொன்னேயனையவருடந்தாய்பொற்பார்திருத்தாடொழத்தந்தாய்
மன்னேயதனைமறந்திகழ்ந்தமதியிலேனென்றினியுய்கேன்
மின்னேயனையபொய்வாழ்வைவிழைந்தகடையேனாயிடினும்
அன்னேயனையபோரூராவடியேனுன்றனடைக்கலமே.

(இ-ள்.) பொன்போலுமரிய திருவருளைத்தந்தனை, அழகமைந்த திருவடியை வணங்கத்தந்தனை, தலைவனேநீதந்தஅவ்வருளை அறிவுடையோராலிகழ்ந்த அறிவிலியாகிய யான்மறந்து மின்னலையொத்த பொய்வாழ்க்கையைவிரும்பிய

சடையேனுயினேன் இனியென்றுபிழைப்பேன் ஆயினும் தாயையொத்ததிருப்போரூரென்னுந் திருப்பதியையுடையவனே அடியேன் உன்ற னடைக்கலம்.

(இனி யான்பிழைக்கும் வகையின்றுயிடினும் ஆகுக).

இதனுல் பொய்வாழ்வொழிய அருளையும் அவ்வருளால்அடையும் அடியையும் நீதந்தும் அவற்றைக்கைக்கொள்ளாது இகழ்ந்து அப்பொய்வாழ்வுட்பட்டுக் சடையனுயினேன். அதனுல் இனி மனத்தால் நினைக்கும் குற்றம்நீங்க அருளையும் காயத்தாலியற்றும் குற்றம்நீக்க அடியையும் எங்ஙனம் பெறுவேன். வாக்கினுலியற்றும் குற்றமொன்றேனும் நீங்க ஈண்டு உனக் கடைக்கலங் கூறினேனென்றவாறும். (ரு)

காரின்கருணைபொழிந்திந்நாட்காத்துக்கடையேன்றனையளித்தோய்
கூருங்கொடியனெனவினித்தான்குறித்துவிடுத்தல்கணக்கோதான்
வீரஞ்செறிந்தவரைத்தோளாவிண்ணோர்பணிந்ததிருத்தாளா
வாரஞ்சிறந்தபோரூராவடியேனுன்றனடைக்கலமே.

(இ - ள்.) மேகத்தைப்போலும் கருணையைப்பொழிந்து இந்நாள்காறுங் காத்துக் கடையேனாகிய என்னைரகூஷித்தவனே, இனி மிகக்கொடியனென்று குறித்து என்னைக்கைவிடுதல் கணக்காகுமோ, வீரமிக்கமலைபோன்ற புயங்களையுடையவனே, தேவர்கள்வணங்குந் திருவடியையுடையவனே, அன்புமிக்க திருப்போரூரென்னுந் திருப்பதியையுடையவனே அடியேனுன் னடைக்கலம்.

இதனுல் நீ சிருட்டிக்கத்தொடங்கியநாண்முதல் இன்றுகாறும் யானெடுத்தபிறவிக்கோ கணக்கில்லை. இங்ஙனமான அநந்தம்பிறவிகளில் உனது உபகாரத்தை நினைந்திரும்பேனோ வென்னில் அஃதுமின்று. அக்குற்றத்தை இன்றுநாடி என்னைக்கைவிடுவையாயின் அது உன் பெருங்கருணைக்கிழுக்காய் முடியுமாதலான் கருணைக்குக்குற்றங் கணக்கல்லவென்று கூறியவாறும். (சு)

கலங்குநெறியிற்செலுத்தாமல்கதிசேர்நெறிக்கட்செலுத்தியெனை
யிலங்சவைத்தபெருமானேயினிமேல்விடுத்தாலென்செய்கேன்
றுலங்குபொறிச்செஞ்சேவலனேதுதித்துப்பணிவோர்காவலனே
யலங்கன்மார்பாபோரூராவடியேனுன்றனடைக்கலமே.

(இ - ள்.) அறிவுகலங்கிய பெத்தநிலையைச் சேர்ந்த புறச்சமய நெறிகளில் செலுத்தாமல் முத்திநிலையைச்சேர்ந்த சைவநெறியின்கண்செலுத்தி யென்னைவிளங்கும்படி வைத்த இறைவனே, இனிமேல் என்னைவிடுத்தியாயின் யான் என்செயவல்லேன், பொலிவுபெற்ற பொறிகளையுடைய சேவற்கொடியையுடையவனே, போற்றிவணங்குவோரைக்காப்பவனே, மலர்மாலையையணிந்தமார்பனே, திருப்போரூரென்னுந் திருப்பதியையுடையவனே, அடியேனுன்னடைக்கலம்.

இதனால் யான்புறச்சமயங்களினின்றும் வேறாகிச் சைவநெறியிற்சேர்ந்து இணங்க நீயெடுத்துக்கொண்ட அருட்செயலின்றிறத்தை யளவிடுந்தரத்ததோ. அஃதால் இனியென்னைக்கைவிடுவையாயின் உனக்குப் பாரமாய்முடியுமேயன்றியான்செய்வதென்னையென்று கூறியவாறும். (எ)

ஏதுசெயினுங்கொடியேனுக்கிரங்கியாண்டபெருந்தாதாய்
தீதனிவனென்றெனையிகழ்ந்தாற்சிறியேற்குயுமோர்நெறியுளதோ
வோதுமதிபோலருளமிர்தமுதவுமாறுமுகப்பெருமா
னாதிபுதல்வாபோரூராவடியேனுன்றனடைக்கலமே.

(இ - ள்.) கொடியேனாகியயான் எவ்வகைத்தீமைபுரியினும் அவற்றை நோக்காது சித்தமிரங்கியடிமைகொண்ட பெரியதந்தையே, (இன்று) தீமையாளனிவனென்று என்னையிகழ்வையாயின் சிறியேனுக்குப்பிழைக்கும் ஓர் மார்க்கமுமுண்டாகுமோ, சொல்லப்படுஞ்சந்திரனைப்போல திருவருளமிர்தத்தையளித்தருளும் ஆறுமுகப்பெருமானே, இறைவனதுபுத்திரனே, திருப்போரூரென்னுந் திருப்பதியையுடையவனே, அடியேனுன் னடைக்கலம்.

இதனால் யான் யாதுசெய்யினும் இரங்கியாண்டநீயே இன்று அதனை நோக்குவையாயின் யானடைக்கலம்புகும் ஓர்புகலிடம் இல்லையென்று கூறியவாறும். (அ)

எளியேன்றனையோரன்பனென வேன்றுகொண்டாண்டருள்செய்தோய், களியாலுனதுபுகழிகழ்ந்தகடையேனெனினும்விடேல்கண்டாய்,வெளியேயொளியேவியனறிவேவேதநாலின்முடிமணியே, யளியாரமிர்தேபோரூராவடியேனுன்றனடைக்கலமே.

(இ - ள்.) எளியேனாகிய என்னை ஓரன்பாளனென்று அங்கீகரித்து அடிமைகொண்டு அருள்செய்தவனே, களிப்புமிகுதியால் உனதுபுகழையிகழ்ந்து கூறியகடையேனாயினும் என்னைக்கைவிடாதை, சிதாகாசரூபனே, ஒளிவடிவானவனே, நான்குவேதங்களின் முடியில்விளங்கும் ரத்தினமே, கருணைநிறைந்த அமிர்தமே, திருப்போரூரென்னுந் திருப்பதியையுடையவனே அடியேனுன்னடைக்கலம்.

ஆள்வதற்குமுன் குற்றத்தைநாடல்குணம்; ஆண்டபிறகு அதனைநாடல் குற்றமாம் அஃதால்கைவிடாதை என்று கூறியவாறும். (கூ)

சண்ணின்மணியேயுயிர்க்குயிரேகரும்பின்சுவையேபெருந்தேனே
நண்ணுங்கதியேசுரர்பதியேநாதாவதிகசிவபோதா
வெண்ணும்மடியார்பெருவாழ்வேயென்னாயகனாகியதேவே
யண்ணுங்கனியேபோரூராவடியேனுன்றனடைக்கலமே.

(இ - ள்.) கண்ணினுண்மணியே, உயிர்க்குயிரானவனே, கரும்பினுள்ளிருக்குஞ்சுவையே, சுவைமிக்கதேனே, அன்பர்களடையும் முத்திநிலையே, தேவர்கள்தலைவனே, யாவர்க்குமிறைவனே, ஞானமிக்கசிவபோதனே, தியானிக்கும் அடியார்களது பெரியவாழ்வே, எனதுநாயகனுகிய தேவனே, கனிந்தகனியே, திருப்போரூ ரென்னுந் திருப்பதியையுடையவனே அடியேனுன்னடைக்கலம்.

அவ்வவற்றின் குணிப்பொருளாகி அடியார்கள்விரும்புஞ் சுவையுடைப்பொருளாகியும் அவர்களடையுங்கதியாகியும் வணங்கும்பெரியதெய்வமாகியும் மெய்ஞ்ஞானபோதமாகியும் இவர்கள்வாழ்வாகியும் நீயேயாயிருத்தலால் யானுமுன்னடைக்கலமென்று கூறியவாறும். (சo)

அடைக்கலப்பத்து முற்றிற்று.

---

உ

வேலுமயிலுந்துணே.

## விருத்தக்கலித்துறை.

பேறுதருந்தொல்லியானைமுகன்றன்பிரியவீர
னீறிலகுஞ்செம்மேனியரன்றந்தருணீதன்
றேறிலகுந்தெண்ணீரெனவுள்ளந்தெளிவீர்கா
ளாறுமுகன்றன்போரியைவந்திங்கடைவீரே.

(இ - ள்.) தேற்றாங்கொட்டையினால் தெளிந்த தெள்ளியநீரைப்போல உள்ளந்தெளியும் சாதனங்களில் முயல்கின்றவர்களே, வீடுபேற்றைத்தரும் மூத்தபிள்ளையாராகிய விநாயகக்கடவுள் அன்புகூரும் வீரனும், திருநீறுவிளங்கும் பவளம்போலுந் திருமேனியையுடைய இறைவனீன்றருளிய நீதிமானும், ஆறுமுகங்களையுடையவனும் ஆகிய முருகக்கடவுள் வீற்றிருக்கும் திருப்போரூரென்னுந் திருப்பதியை இப்பொழுதேவந் தடையுங்கள்.

இதனால்மலத்திரயங்களால் மயங்கிக்கிடக்கும் ஆன்மாக்களைக்கேட்டல்சிந்தித்தல் தெளிதலாகிய இவற்றால் தெளிவிக்கத் தெளிந்து அடைவதாகியபேரின்பப்பொருள் இத்திருப்போரூரி லெழுந்தருளியிருக்கின்ற முருகக்கடவுளேயாதலால் தேறிலகுந் தெண்ணீ ரென வுள்ளந் தெரிவீர்கா ளாறு முகன்றன் போரியைவந்திங் கடைவீரே என்றார். (க)

மூதுணர்வொன்றும்வீடுறநண்ணுமுனிவோர்காள்
பேதைமையுந்துநூல்களினின்றும்பிறழாதீர்

மாதுமைமைந்தன்மான்மருகன்றன்வளனீயும்
ஆதரவண்டும்போரியைவந்திங்கடைவீரே.

(இ - ள்.) பேரறிவாகிய சிவத்தோடு வேறாகாது ஒன்றியிருத்தலாகியமுத்தியையடைய அவாவிநிற்கும் முனிவர்களே, அஞ்ஞானத்தையகற்றும் சிவஞானநூல்கள் கூறும் பொருள்களி னின்றும் வேறுபடா திருப்பீர், உமாதேவியாரது மதலையும் திருமால் மருகனுமாகிய முருகக்கடவுளது அருள்வளத்தைத்தரும் அன்பமைந்த திருப்போரூரென்னுந் திருப்பதியை இப்பொழுதேவந்தடையுங்கள்.

இதனால் முப்புறச்சமயிகள் கூறும்முத்தியைநாடாது அருள்சேர்முத்தியையே விரும்புவோர் தற்போதத்தைவிளைவிப்பதாகிய புறச்சமயநூல்களைக் கண்ணுறாது சிவஞானத்தைவிளைவிக்கும் மெய்ஞ்ஞானநூல்களைக்கைக்கொண்டு அவற்றின்சாதனங்களிற் பசுமரத்தாணியறைந்தாற்போலப் பிறழாதுநிலைபெற்றுநிற்க இன்றியமையாக் கருவியாயுள்ளது அன்பாதலால் அவற்றையருள்வது திருப்போரூரன்றி வேறில்லை யென்பார் மூதுணர்வொன்றும் வீடுறநண்ணுமுனிவோர்காள் பேதமையுந்துநூல்களினின்றும் பிறழாதீர் ஆதரவண்டும் போரியைவந் திங்கடைவீரே என்றார். (௨)

ஊனையிகழ்ந்துமூனைமறந்துமுழல்வீர்காள்
மோனசுகஞ்சும்மாவருமின்றென்மொழிநாடிக்
கானில்விளங்குமாமயிலன்பன்கதிர்வேல
ஞனவர்துன்றும்போரியைவந்திங்கடைவீரே.

(இ-ள்.) தேகத்தைவெறுத்தும், தேகவுணர்ச்சிதோன்றாது முழலும் தவசிகளே, மோனானந்தம் (இத்தவமியற்றுமலே) இப்பொழுதே சும்மாவரும் (ஆகையால்) யான் இன்றகூறும்மொழியை (உமதுஅறிவால்) நாடி, திணைப்புனத்து விளங்கும் வள்ளிநாய்ச்சியாருக்கன்பனும், ஒளிபரப்பும் வேலாயுதத்தையுடையவனுமாகிய முருகக்கடவுள் வீற்றிருக்கும் திருப்போரூரென்னுந் திருப்பதியைவந்தடையுங்கள்.

ஆன்மபோத வொழிவின்கண்தோன்றுவதே மோனசுகமாதலால் அவ்வான்மபோதமொழிக்கு முண்மைநெறியையுணரப்பெறாது, சரீரத்தைவெறுத்தற்குரியதவசாதனங்களையும், சரீரத்தைமறந்திருத்தற்குரிய யோகசாதனங்களையும் கைக்கொள்வதுபயனில்சாதனங்களென்பார் ஊனையிகழ்ந்துமூனைமறந்துமுழல்வீர்காள் எனவும், அவ்வான்மபோதத்தை யொழிப்பதருளாதலால் அவ்வருளுடைய அறுமுகக்கடவுள் தமதிருக்கையாகக் கொண்டிருப்பது போரூராதலால் அப்பதியிற்செல்லுஞ் சாதனமொன்று பெறுவீராயின் அஃதே அம்மோனசுகத்தைத்தருமென்பார் மோனசுகஞ் சும்மாவரும் மாமயிலன்பன் கதிர்வேலனனவர் துன்றும்போரியை வந்திங்கடைவீர் எனவுங்கூறினார். (௩)

பாலுநறுஞ்செந்தேனும்விரும்பும்பழமோடே
யேலுறுமின்பம்போலறிவின்பமெளிமேவுங்
கோலநரந்தனிபசுகந்தன்குயின்மாமே
லாறுறுநந்தம்போரியைவந்திங்கடைவீரே.

(இ - ள்.) நல்லபாலும் செவந்ததேனும் விரும்பும் பழத்தோடு கலந்தகாலத்து இன்பந்தருவதுபோல ஆன்மவறிவின்கண் பேரின்பமெளிதாகவந்து பொருந்தும், அழகிய நறுமணங்கமழும் கடப்பமலரையுகந்த முருகக்கடவுள் வீற்றிருக்கின்ற மாமரத்தின்மேல் குயில்கள்கூவும் நமது திருப்போரூரை இப்பொழுதே வந்து அடையுங்கள்.

ஆன்மபோதமொழியப்பெற்ற அறிவின்கண் முன்னர்க்கூறிய போகசுகம் பழத்தோடு பாலுந் தேனுங் கலந்து இன்பந்தருவதுபோல் தருவதென்பார் பாலுநறுஞ்செந்தேனும் விரும்பும்பழமோடே யேலுறுமின்பம் போலறிவின்பமெளிமேவும் எனவும், அவ்வின்பத்தை யெளிதாகத்தருதல் இத்திருப்பதி என்பார் போரியைவந்திங்கடைவீரே எனவுங்கூறினர். (ச)

மாரனைவெல்லுஞ்சீலமுணர்ந்தமதியோர்காள்
காரினியங்குமேதியன்வஞ்சங்கடவீர்காள்
சூரடுதுங்கனுரியிடன்றன்சுதனாக
மாரமருந்தும்போரூரியைவந்திங்கடைவீரே.

(இ - ள்.) மன்மதனைவெல்லும் சீலத்தையுணர்ந்த அறிவுடைய முனிவர்களே, நீவிர் மேகம்போல் விளங்கும் கடாவூர்தியையுடைய வஞ்சகனாகிய இயமனைக்கடக்கமாட்டீர்கள், சூரபன்மனைவென்றசீலனும் உமாதேவியையிடப்பாகத்திலுடைய இறைவன்மகனும், கடப்பமலர்மாலைவிளங்கும் திருமேனியையுடையவனுமாகிய முருகக்கடவுள் வீற்றிருக்கின்ற திருப்போரூரென்னுந் திருப்பதியை இப்பொழுதே வந்தடையுங்கள் (அடைந்தால் கடப்பீரென்றபடி.)

இயமன் இறைவன்மாட் டன்புடைய மெய்ச்சீல முடையார்க்கே அடிபணிந்தொழுகுவானன்றி, அச்சீலமுடைமையறியாத இந்திரிய நிக்ரஹஞ்செய்தல் முதலாகிய தவமேபொருளென்பார்க்கு அவனஞ்சாதுசெய்யுந் தண்டம் புரியாதொழியா னென்பார் மாரனைவெல்லுஞ் சீலமுணர்ந்தமதியோர்காள் காரினியங்கு மேதியன்வஞ்சங்கடவீர்காளென்றார். (ரு)

பாசவிலங்கினுணிவிடும்பண்பினராகித்
தேசமதெங்குமோடியுழன்றுந்திரிவீர்காண்
மாசறுகந்தன்வேலவனம்பொன்மயில்வீர
னுசினிதுன்றும்போரியைவந்திங்கடைவீரே.

(இ-ள்.) (விலங்கைப்போலுந் தளைப்படுத்தும்) மைந்தர்மனைவிமுதலிய பாசங்களினால் நாணமுற்று, (அவற்றை விட்டொழியும்) துறவறத்தைமேற் கொண்டவராகி, நகரங்கள் தோறும் ஓடியுழன்று திரிகின்றதுறவிகளே, களங்கமில்லாத கந்தனென்னுந் திருநாமத்தையுடையவனும், வேலாயுதத்தையுடையவனும், அழகிய பொன்போலும் அரிய மயில்வாகனத்தையுடைய வீரனும், ஆகியமுருகக்கடவுள் வீற்றிருக்கின்ற பலாச்சோலைகள் நெருங்கிய திருப்போரூரென்னுந் திருப்பதியை இப்பொழுதே வந்து அடையுங்கள்.

துறவிகள் ஓரிடத்தையும் பற்றுக்கோடாகக்கொண்டு வசித்திராது தேசங்கள் தோறுஞ்சென்று பிச்சையேற்றுத்திரிவதே அறமென்பார் தேசமதெங்குமோடியுழன்றுந் திரிவீர்காள் எனவும், அத்துறவறவிலக்கணமொன்றே அஞ்ஞானத்தையகற்றி ஞானத்தைக்காட்டி முத்தியின்பத்தைத் தருவதன்று போரூரனாகிய முருகக்கடவுளே தருவனென்பார் மாசறுகந்தன் வேலவனம் பொன் மயில்வீரனெனவுங்கூறினார். அல்லதூஉம் அஞ்ஞானத்தை யகற்றுதலால் மாசறுகந்தனெனவும், ஞானத்தைக்காட்டுதலால் வேலவனெனவும், முத்தியின்பத்தைத்தருதலால் மயில்வீரனெனவும் விசேடணந்தந்து கூறினாரெனக் கொள்ளினுமொன்று. (௯)

நோய்ப்பிணிபம்புஞ்சூனியம்வஞ்சநுவல்பூதங்
காய்பசிவெம்புஞ்சோகபுயங்கங்கடிவீர்கா
ணயமுறுந்தண்மாதர்கணண்டநெடுவேல
னாய்கிளிகொஞ்சும்போரியைவந்திங்கடைவீரே.

(இ-ள்.) நோய்செய்யும் பிணிகள் இடைவிடாது வருத்தும்வண்ணம் இயற்றுஞ்சூனியத்தையும், வஞ்சச்செயல்களை மாறாதியற்றும் பூதப்பிரயோகங்களையும், சுடுகின்றபசியால் வெம்புஞ்சோகத்தையும் அரவின்விடங்களையும் நீக்கவல்ல மந்திரசித்தியையுடையவர்களே, அன்புமிக்க தண்ணியபிராட்டிமாரிருவர்க்கும் நண்பானவனும் நீண்டவேலையுடையவனுமாகிய முருகக்கடவுள் வீற்றிருக்கும் கிளிகள்மாறாது குலாவும் திருப்போரூரென்னுந்திருப்பதியைவந்து இப்பொழுதே வந்தடையுங்கள்.

சூனியத்தையும் ஏவலையும் விடங்களையும் மாற்றவல்லமந்திரங்களையுச் சரிப்பதனால் ஆன்மவறிவைச் சூனியஞ்செய்திருக்கும் கட்புலனுக்குத் தோன்றாத அஞ்ஞானத்தையும், அவ்வஞ்ஞானமுடைமையால் பூதகாரியமாகிய சரீரத்தைமேவிய ஏவலையும்; அச்சரீரமுடைமையால் ஐந்தலைநாகம்போற்சீறும் ஐம்புலப்பாம்பாலேறிய விடத்தையும் ஒழித்தகற்றவறியீராதலால், இவையிற்றை யொழித்தற்குரிய மந்திரமூர்த்தியாகிய முருகக்கடவுள் வீற்றிருப்பது போரூராதலால் நோய்ப்பிணிபம்புஞ் சூனியம்வஞ்ச நுவல் பூதங் காய்பசி வெம்புஞ் சோகபுயங்கங்கடிவீர்காள் நெடுவேலன் போரியை வந்திங்கடைவீர் என்றார்.

மீடுறுமைந்தன்மாதெழில்புங்கம்பெயர்மாட
மாடணிதங்கநீடுறவெண்ணுமதியோர்காள்
வேடர்தரும்பெண்மாலுறுகொண்கன்விறல்வேல
னூடகமண்டும்போரியைவந்திங்கடைவீரே.

(இ - ள்.) கல்வியிற்சிறந்தமைந்தனும்,அழகிற்சிறந்தமங்கையும்,உயர்விற்சிறந்த மாடங்களும் பொருளிற்சிறந்தபொன்னும் மேன்மேற்சிறந்தோங்க எண்ணுகின்றமதியுடையவர்களே,வேடர்தந்தவள்ளிநாய்ச்சியாரது கணவனும் வேலாயுதத்தையுடையவனுமாகிய முருகக்கடவுள் வீற்றிருக்கின்ற பொருட்செல்வமிக்கதிருப்போரூரென்னுந்திருப்பதியை, இப்பொழுதேவந்தடையுங்கள்.

அறிவுடைமைந்தன் அழகுடைமங்கை அரணுடைமாடம் அணிபெறுதங்கம் ஆகிய இவைநிலையில் பொருள்களாதலால் அவைநிலைபெறவிரும்பிய நீவிர் நிலைபெற்ற பெரும்பொருளாகிய நெடுவேலனருள்பெறுவீராயின் அவைவளருமாதலால் அவன்வீற்றிருக்கும் போரியை வந்தடைந்தால் நிலைபெற்றுவாழலாமென்பார் மீடுறுமைந்தன் மாதெழில் புங்கம் பெயர்மாட மாடணிதங்க நீடுறவெண்ணுமதியோர்காள் விறல்வேலன் போரியைவந்திங் கடைவீரென்றார்.()

வேகதுரங்கஞ்சேனைகலிங்கமிளிர்பூண்மா
நாகபடங்கொண்மாநிலநெஞ்சினசையீர்கா
ளேகமெனுஞ்சொல்லோர்பொருடந்தென்னையாள்வோ
னாகமம்விஞ்சும்போரியைவந்திங்கடைவீரே.

(இ-ள்) வேகத்தையுடைய குதிரைகளும், அஃதொழிந்த ரத கஜ பதாதிகளும் நல்ல ஆடையும் பொலிவுமிக்க ஆபரணங்களும் உடையவராய்ப் பெருமையிற் சிறந்த ஆதிசேடன் முடியால் தாங்கப்பெற்ற நிலத்தையாள இடைவிடாது விரும்பும் மனமுடையவர்களே, ஒன்றென்னுஞ் சொல்லின் பொருளாயுள்ள ஓர் பொருளையுபதேசித்து அப்பொருள் நிலையில் என்னை யடிமைகொண்ட முருகக்கடவுள் வீற்றிருக்கும் ஆகமார்த்தங்கள் மிக்கு விளங்கும் திருப்போரூரென்னுந் திருப்பதியை இப்பொழுதே வந்தடையுங்கள்.

தத்பத மகாவாக்கியத்தின் பொருளாகிய சிவத்தைக் குறிக்குஞ் சொல் ஏகமென்பதாதலால் ஏகமெனுஞ் சொலெனவும், அந் தத்பதப்பொருள் பாசத்தோடொன்றாய் ஒன்றென்றெண்ணப்பட்ட பசுவன்றென்றொழித்து, அச்சொல்லுக்குப் பொருள்பதியையேயுணர்த்தினராதலால் ஓர்பொருள்தந்தெனவும், அகரவுயிரின்றியின் அக்கரங்களின்றாதல்போல பதி பசுவோடு அநிபமாயிருக்கும் முத்திநிலையையுணர்த்தினாராதலால் அங்கு என்னை ஆள்வோனெனவும், இவ்வுண்மை வேதாந்தத்தெளிவாகிய சித்தாந்தமாதலால் ஆகமம் விஞ்சும் போரி யெனவுங் கூறினார்.

இதனால் ஏகமென்னுஞ் சொல்லுக்குப் பிரமமெனப் பொருள் கொண்டு அப்பிரமம் நானே யென்றெண்ணியிடர்ப்பட்ட என்னை அடிமையென்றுணர்த்தி அச்சொற்குப் பொருள்சிவமென்றுகாட்டி என்னைச்சதுரங்கசேனைகளையுடைய அரசர்களால் பணியச்செய்து வாழ்வித்தனனாதலால் வேகதுரங்கஞ்சேனைசலிங்கமிளிர் பூண்மா நாகபடங்கொண் மாநிலநெஞ்சினசையீர்காள் போரியைவந்திங் கடைவீரென்றார். (கூ)

நாவலர்நெஞ்சந்தாவுறுமின்பநலனீபா
வோவறவென்றுமோதுறவெண்ணமுடையீர்கா
டீவமினங்கம்பாவையினங்கஞ்செயுநீத
னாவிறைமைந்தன்போரியைவந்திங்கடைவீரே.

(இ-ள்.) நாவில் வல்லவர்களாகிய அறிஞரதுநெஞ்சம் அவாவியின் புறும்பேரின்ப நலம் நீயே யென்று பாவினங்களால் எப்பொழுதும் நீக்கமின்றி ஓதவேண்டுமென்கின்ற எண்ணமுடைய புலவர்களே, பசையற்ற எலும்பைப் பெண்ணங்கமாகச் செய்யும் சுத்தனும், (ஆன்மாக்களாகிய) பசுக்களுக்கு இறைவன் மகனுமாகிய முருகக்கடவுள் வீற்றிருக்கும் திருப்போரூரென்னுந் திருப்பதியை இப்பொழுதே வந்தடையுங்கள். (௪0)

புலவர்களே பசையற்ற என்பைப்பெண்ணாக்க வல்ல பாவுடை யெம்மிறைவனாகிய முருகன்முன் அன்பொடுகெலவாத நீவிர் பாடும் பா என்னாம்.

அஃதால் நீவிர் அன்புடையராய் போரியைவந்து இறைவன்சரண் புகுந்து அருளுடையராய்ப் பாடுவீராயின் அப்பாவின்பயனை யெளிதில் பெறுவீரென்றிதனால் கூறியவாறும்.

விருத்தக்கலித்துறை முற்றிற்று.

முருகன்றிருவடிவாழ்க.

திருப்போரூர்ச்சந்நிதிமுறை
முற்றிற்று.

வேலுமயிலுந்துணை.

## திருப்போரூர்ச்சந்நிதிமுறை

# செய்யுளகராதி.


| பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். |
|---|---|---|---|---|---|
| அ | | அரிய | ௨௯௮ | ஆடக | ௭௮ |
| அண்ட | ௪ | அதிமதுர | ௨௯௯ | ஆறுசமய | ௧௧௯ |
| அரிய | ௧௪ | அகமு | ௩௦௨ | ஆறுவதன | ௧௩௮ |
| அஞ்சக்கர | ௨௩ | அருமா | ௩௦௮ | ஆயர் | ௧௬௫ |
| அமரர் | ௪௧ | அந்தம் | ௩௧௪ | ஆள்வேட்ட | ௧௯௩ |
| அலைகட | ௫௨ | அவனே | ௩௧௬ | ஆறுசமய | ௧௯௩ |
| அளகு | ௮௯ | அருளை | ௩௨௫ | ஆரண | ௨௦௮ |
| அறைய | ௯௮ | அயனு | ௩௨௮ | ஆருயிர் | ௨௧௪ |
| அளைகடை | ௧௨௫ | அலையிலாத | ௩௪௨ | ஆணி | ௨௫௨ |
| அங்கை | ௧௩௧ | அரிவைய | ௩௪௭ | ஆனந்த | ௨௫௨ |
| அடியார் | ௧௩௭ | அருளிருந்த | ௩௭௩ | ஆம்பல் | ௨௫௫ |
| அருணன் | ௧௪௩ | அருணகிரி | ௩௮௮ | ஆசை | ௨௬௧ |
| அண்ட | ௧௬௩ | அண்டர் | ௩௯௧ | ஆரியனாய் | ௨௬௪ |
| அகிலேந்து | ௧௭௧ | அறிவொளி | ௩௯௧ | ஆனைமுகத் | ௨௬௫ |
| அள்ளி | ௧௭௨ | அகிலமுறு | ௩௯௭ | ஆறுமுகம் | ௨௭௦ |
| அளகாபுரி | ௧௯௦ | அறிவொ | ௩௯௭ | ஆறிரண்டு | ௨௭௨ |
| அஞ்ஞான | ௧௯௭ | அழலுறு | ௪௦௨ | ஆய்மா | ௨௭௩ |
| அண்ட | ௨௦௩ | அவகதி | ௪௦௫ | ஆச்சா | ௨௭௯ |
| அவுண | ௨௦௫ | அறிவு | ௪௦௭ | ஆடுறு | ௨௮௧ |
| அருணகிரி | ௨௦௯ | அறுவகை | ௪௧௬ | ஆறுமதி | ௨௪௫ |
| அளைகையர் | ௨௩௨ | அரணியை | ௪௧௯ | ஆனுவமு | ௩௦௮ |
| அருளே | ௨௩௫ | அருட்குழை | ௪௨௩ | ஆதரவா | ௩௧௭ |
| அன்பெலா | ௨௪௦ | அத்தன் | ௪௩௩ | ஆறுசரோ | ௩௬௪ |
| அயிலேந்து | ௨௪௫ | அனைய | ௪௩௭ | ஆலமார் | ௪௩௮ |
| அம்புலி | ௨௪௯ | அருட்கடல் | ௪௫௭ | ஆடக | ௪௪௬ |
| அமரர் | ௨௫௧ | அறிவுதன் | ௪௫௭ | ஆரியன் | ௪௪௮ |
| அஞ்ஞான | ௨௫௪ | அறிவினை | ௪௭௦ | ஆறங்க | [illegible] |
| அன்பு | ௨௬௦ | அறமிக்குள | ௪௯௯ | ஆலஞ் | ௫௦௭ |
| அமராபதி | ௨௭௩ | அருளே | ௪௯௯ | ஆனந்த | ௫௧௪ |
| அண்ட | ௨௭௪ | அந்தி | ௫௦௪ | இ | |
| அருணகிரி | ௨௭௪ | அருண் | ௫௦௬ | இருண்மை | ௭௫ |
| அரிவை | ௨௭௫ | அனையிரு | ௫௦௮ | இடமுற | ௧௬௯ |
| அரனொடு | ௨௭௮ | அறிவை | ௫௧௨ | இமையா | ௨௦௦ |
| அன்னமோ | ௨௮௦ | ஆ | | இருகோட் | ௨௦௬ |
| அசுரர்குல | ௨௯௭ | ஆடக | ௬௫ | இருட்டறை | [illegible] |

| பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். |
|---|---|---|---|---|---|
| இல்லற | உஙக | உலக | ஙசாஉ | ஏலும் | ஙகஉ |
| இன்போ | உஙக | உமையமை | ஙகூ0 | ஏரக | ஙஅங |
| இருளிற் | உஙங | உனலரு | ஙகூச | ஏதொரு | சஎஉ |
| இடர்களை | உஙச | உலகுயிர் | ஙகூரு | ஏழ்கட | சஅகூ |
| இமயகிரி | உகூ0 | உததிகொள் | ச0ங | ஏழை | ரு0ரு |
| இமய | ங0ரு | உனது | சகசா | ஏது | சகஅ |
| இந்திர | ஙக0 | உரையுணர் | சகஅ | ஐ | |
| இல்லாதான் | ஙஉஉ | உயிர்ப்பிணி | சசசா | ஐந்தொழிலு | உரு |
| இசை | ஙஉகூ | உருகு | சகூஉ | ஐம்பொறி | உங0 |
| இன்றை | ஙருங | உதவி | சகூசா | ஐம்பொறி | உச0 |
| இன்ப | உசாசா | உன்னடிமை | ருகங | ஐவாய | உருக |
| இந்திர | ஙஎஎ | ஊ | | ஐங்கரன் | உருஎ |
| இந்திரன் | ஙஅசா | ஊழ் | உசாக | ஐங்கர | ங0ச |
| இமயமலே | ஙஅஎ | ஊமர் | ஙஉங | ஒ | |
| இலகிய | ஙகூச | ஊனே | ருஉ0 | ஒருபொரு | சங |
| இமயகிரி | ஙகூஅ | எ | | ஒருபொரு | கசகூ |
| இமயப்பிடி | ச0எ | எண்டிசை | ககூ | ஒளியாற் | உருஎ |
| இரவொடு | சஉகூ | எல்லார் | கசாஉ | ஓ | |
| இருளை | சஙக | எண்ண | உகஉ | ஓதிம | ஙச |
| இரவொடு | சசச | எண்ணி | உஉங | ஓதுங்கலே | ஙகஉ |
| இகலடை | ரு0க | எல்லா | உஉங | ஓகைபுரி | ஙச0 |
| இளம்பிடி | ருகங | எண்ணி | உஉரு | ஓதிய | சகஅ |
| ஈ | | | | | |
| ஈராறு | ருங | என்னே | உஙசா | ஓதுரு | சஅஉ |
| ஈராறு | ங0கூ | எனதபி | உஙஎ | க | |
| ஈசன் | ஙஉரு | எனக் | உஙஎ | கருதரிய | கரு |
| உ | | என்போத | உரு0 | களவறு | உகூ |
| உல்கமெலா | உ | என்செய | உருசா | கறையின் | ஙசா |
| உடலிற் | சாச | எத்தி | உருகூ | கஞ்சனே | சசா |
| உயிருண் | கூசா | என்று | உசாச | கண்ணன் | சாக |
| உதடுகடந்த | கஉஎ | எப்போது | உசாஅ | கயல் | சாஅ |
| உலகிறெடு | கசஅ | என்றென் | உஅ0 | கருத்தே | கூங |
| உள்ளக்கவலே | ககூக | என்றனே | உஅங | கஞ்சா | க0ரு |
| உள்ளூறு | உஉஉ | எளியேனே | ஙகரு | கனக | ககசா |
| உள்ள | உஉச | எண்ணின் | ஙகசா | கட்டை | கஉ0 |
| உரக | உசரு | என்னே | ஙககூ | கரியின் | கச |
| உள்ள | உருசா | எண்ணி | ஙஙஉ | கமல | கசஉ |
| உண்ணு | உசாகூ | எனேயொரு | ஙசாங | கவைதரு | கருஉ |
| உலகின்ற | உஎஉ | எங்கு | சஉ0 | கருதார் | கருகூ |
| உள்ள | உஎஎ | எளியேன் | ருகஅ | கருநாக | கஎ0 |
| உததி | உகூஉ | ஏ | | கட்டா | கஎச |
| உருவு | ஙகங | ஏதங் | கஅஎ | கன்னிய | கஎஎ |
| உவமை | ஙஉ0 | ஏது | உசக | கருப்பு | கஎகூ |

| பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். |
|---|---|---|---|---|---|
| கருக்கடல் | கஅ0 | கலைமுக | ருக0 | குவளை | சகக |
| கரும் | ககூரு | கலங்கு | ருகஎ | குறுமை | சகூச |
| கண்ணி | உஙஅ | கண்ணின் | ருகஅ | கே | |
| கலங்கி | உசங | கா | | கேட்ட | உச0 |
| கடலை | உசசா | காரென | அ | கை | |
| கடவுட் | உசகூ | காம | உஎ | கைக்குரிய | உருஎ |
| கருப்பு | உசாங | காரார் | ச0 | கைவிட் | உசாரு |
| களங்க | உஎ0 | கானவர் | ககச | கொ | |
| கனக | உஎக | காண்டம் | கஎகூ | கொங்க | கசாச |
| ககன | உகூக | காளை | கஅ0 | கொலை | ககூகூ |
| கனவி | உகூகூ | காழி | உஉஅ | கொக்கரி | உகரு |
| கவலை | ங0க | கானலை | உருங | கொடிய | சச0 |
| கன்னி | ங0ரு | காதலி | உசாங | கோ | |
| கருணை | ங0சா | கானம் | உஎங | கோளகை | சங |
| கவலை | ங0எ | கானனீ | ஙஎங | கோக்கு | கசாரு |
| கனகும்ப | ஙஉஎ | காலன் | ஙஅக | கோல | உ0சா |
| கள்ளம் | ஙஙச | காட்டு | ஙஅஉ | கோழி | உசச |
| கயவர் | ஙசகூ | காமர் | ஙஅச | கோது | உசாஎ |
| கன்னிய | ஙருஅ | காமவேள் | சஉரு | கோழி | ங0கூ |
| கனவி | ஙஎச | காரார் | ரு0கூ | கோங்க | ஙசாகூ |
| கங்கை | ஙஅசா | காரின் | ருகஎ | கோழி | ஙஅகூ |
| கனக | ஙகூஅ | கி | | கோழி | ரு0உ |
| கசடறு | ச0ச | கிளி | கஉசா | ச | |
| கடவுட் | ச0அ | கின்ன | உஅச | சமரபுரி | க |
| களவிற் | சக0 | கு | | சந்த | சாகூ |
| கடைபடு | சககூ | குஞ்சிமுடி | உச | சந்திர | கஅஎ |
| கன்னி | சஉஅ | குவளை | ஙஉ | சடையாம் | உ0க |
| கமல | சஉக | குண்ட | சஅ | சகல | உகக |
| கலை | சஙக | குலிச | ருகூ | சரவண | உசஅ |
| கணப்பொழு | சஙச | குழை | அரு | சமரபுரி | உஎசா |
| கனைகடன் | சசக | குறு | ககரு | சங்க | உஎஎ |
| கன்றொரு | சருஉ | குடமுழா | ககஅ | சந்தன | ஙஎ0 |
| கயலை | சஅங | குழவி | உசங | சடைமேற் | ஙஎஉ |
| கண்ணி | சகூஉ | குமரா | உசஎ | சச்சிதா | சஎ |
| கருணை | சகூரு | குற்ற | உசஎ | சா | |
| களவி | சகூசா | கும்பமுனி | உருச | சாறூற்று | கஅங |
| கலக | சகூஅ | குறை | உசாசா | சாரலி | ஙசாச |
| கடக | சகூஅ | குன்ற | உஎசா | சி | |
| கன்னி | ரு00 | குறவர் | உகூரு | சிமய | அக |
| கவன | ரு0க | குஞ்சர | உகூரு | சிற்றறிவு | கசாக |
| கரும்போ | ரு0ச | கும்ப | ஙஅச | சிறுகுழவி | ஙகஅ |
| கண்ணி | ரு0சா | குறவர் | ஙகூகூ | சிவமேவு | ஙஉஎ |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| சிகரி | ௪௦௪ |
| சித்தொரு | ௪௮௦ |
| சிவன் | ௪௯௫ |
| சீ | |
| சீரலை | ௨௭௬ |
| சீரார் | ௩௦௭ |
| சீலமிகு | ௩௩௪ |
| சு | |
| சுரர் | ௧௦௦ |
| சுரர் | ௨௯௪ |
| சுருதிகுரு | ௩௦௩ |
| சுடரி | ௩௦௩ |
| சுந்தர | ௩௮௫ |
| சுருதி | ௪௦௦ |
| சுருதி | ௪௭௬ |
| சும்மா | ௫௧௧ |
| சூ | |
| சூரன் | ௨௦௭ |
| சூக்குமை | ௨௫௦ |
| சூர்சேனை | ௩௨௬ |
| சூரனுரம் | ௩௫௫ |
| சூர்குல | ௪௩௭ |
| செ | |
| செங்கட | ௪௫ |
| செக்கர் | ௧௮௫ |
| செப்பு | ௨௨௦ |
| செஞ்ச | ௨௭௩ |
| சே | |
| சேவற் | ௩௫௫ |
| சோ | |
| சோதி | ௧௨ |
| சோம | ௩௩௧ |
| சோலை | ௩௬௯ |
| சோரி | ௩௮௪ |
| ஞா | |
| ஞான | ௨௮௦ |
| த | |
| தருவிற் | ௧௪௧ |
| தரள | ௧௫௪ |
| தண்டா | ௧௭௬ |
| தனை | ௨௦௩ |
| தன்னை | ௨௫௯ |
| தவமுனி | ௨௭௪ |
| தரும | ௩௧௯ |
| தகர | ௩௨௭ |
| தனுவோ | ௩௩௭ |
| தண்டலை | ௩௭௧ |
| தங்கல | ௪௫௩ |
| தடவரை | ௪௮௬ |
| தஞ்ச | ௫௧௩ |
| தா | |
| தாரகன் | ௩௨௧ |
| தாயா | ௨௩௯ |
| தார்மார் | ௨௭௬ |
| தாயோ | ௨௭௯ |
| தாமரை | ௩௬௮ |
| தாதினை | ௩௬௮ |
| தி | |
| திரவணி | ௨௨௬ |
| திருவடி | ௨௬௧ |
| திருநீல | ௧௯௬ |
| திருமலி | ௨௮௧ |
| திடகர | ௩௦௦ |
| திருவும் | ௩௯௬ |
| திடமுறு | ௪௦௬ |
| திடம் | ௪௩௫ |
| தீ | |
| தீதறு | ௬௭ |
| தீயவ | ௨௬௨ |
| தீதே | ௫௦௭ |
| தீதொன்று | ௫௦௮ |
| தீனமனம் | ௫௧௪ |
| துகளறு | ௪௦௫ |
| தெ | |
| தென்ன | ௪௬ |
| தெய்வ | ௧௫௮ |
| தெய்வ | ௨௯௬ |
| தெய்வ | ௩௦௯ |
| தெய்வ | ௩௯௯ |
| தெய்வ | ௪௧௩ |
| தே | |
| தேமா | ௧௩௦ |
| தேருரிரவி | ௧௮௮ |
| தேவரு | ௨௧௫ |
| தேவர் | ௨௯௬ |
| தோ | |
| தோட்குங் | ௧௬௨ |
| தோகை | ௧௬௭ |
| தோகை | ௪௦௫ |
| ந | |
| நனவில் | ௫௭ |
| நதிபிறை | ௨௦௪ |
| நன்மை | ௨௦௪ |
| நவவீரர் | ௩௦௫ |
| நவவீர | ௩௦௯ |
| நல்வந்தனை | ௩௨௭ |
| நன்றருளு | ௩௪௫ |
| நல்லா | ௩௯௩ |
| நவமணி | ௪௨௩ |
| நல்லவ | ௪௨௪ |
| நதியி | ௪௪௨ |
| நல்வின | ௪௮௯ |
| நதியு | ௫௦௦ |
| நடிக்கு | ௫௦௨ |
| நா | |
| நாயேனுன் | ௨௨௯ |
| நாடுதனி | ௨௬௩ |
| நாயினே | ௨௭௭ |
| நாகப்பட | ௫௦௧ |
| நாரண | ௫௦௩ |
| நாயேன் | ௫௧௦ |
| நாவலர் | ௫௨௪ |
| நி | |
| நின்பாத | ௨௨௦ |
| நிராசை | ௩௫௪ |
| நிகழ் | ௪௦௮ |
| நிலவு | ௪௧௦ |
| நினதருட் | ௪௨௫ |
| நினைவா | ௪௫௯ |
| நிச்சய | ௪௭௮ |
| நீ | |
| நீரிற் | ௨௦௬ |
| நீலக்கட | ௨௪௧ |
| நீலமயி | ௨௭௨ |
| நீலக்கலா | ௩௦௫ |
| நீலநிற | ௩௭௨ |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| நூ | |
| நூல் | சகஉ |
| நே | |
| நெய் | கஅ |
| நெஞ்சை | ககூகூ |
| நெட்டோ் | உகூரு |
| நெஞ்சக | சஙச |
| நோ | |
| நோவ | உசு0 |
| நோயிற் | உசுசு |
| நோயேன் | ரு0ரு |
| நோய் | ருஉஉ |
| ப | |
| பகவதி | கக |
| பனி | எங |
| பசுமை | கருங |
| பளிக்கறை | கசுகூ |
| பச்சை | கஎரு |
| பச்சை | கஅஉ |
| பவள | கஅச |
| படல | உஙசு |
| பவள | உருரு |
| பஞ்ச | உசுஅ |
| பழமுதிர் | உஎஎ |
| பகரறு | உஅஉ |
| பவள | உஅஅ |
| பரவை | உஅஅ |
| பசித | உகூங |
| பலகலை | உகூசு |
| பரிதி | உகூகூ |
| பனிமாமலை | ங0அ |
| பற்பல | ஙருக |
| பவள | கூருசு |
| பழுதை | ஙஎரு |
| பளிக்கு | ஙஎஅ |
| பணிபவ | சகச |
| பகலுட | சகரு |
| பயனில | சஉஅ |
| பந்த | சஙரு |
| பரிதி | சசக |
| பரனது | சசுக |
| பா | |
| பாததிகிரி | கசஎ |
| பாம்பாக | உருங |
| பாலோ | உஅ0 |
| பாலு | ஙஅங |
| பான்மதி | சகஉ |
| பாவரு | சகச |
| பாகடு | சருச |
| பாதகழ் | சகூ0 |
| பாதக | ரு00 |
| பாலு | ருஉக |
| பாச | ருஉக |
| பி | |
| பிடி | கசுஎ |
| பிரம | உஎரு |
| பிறை | ங0அ |
| பிரச | ஙக0 |
| பிரண | ஙஎசு |
| பித்தனே | சஉஎ |
| பிறப்பறு | சகூக |
| பிணியுட | சகூங |
| பீ | |
| பீடுறு | ருஉங |
| பு | |
| புள்ளூ | ஙங |
| புலன் | ககஉ |
| புகர் | கஉச |
| புரங் | ககூஅ |
| புயல் | உசரு |
| புராரி | ஙஎங |
| புவனம | ஙஉசு |
| புவன | சஙகூ |
| புன | சகூஎ |
| பூ | |
| பூமேவு | சு |
| பூனத | எச |
| பூவே | எஎ |
| பூதம் | கூக |
| பூமேவு | கருஎ |
| பூவை | கஎங |
| பூதர் | ககூக |
| பூவார் | உஉஎ |
| பூமாது | உஎக |
| பூவே | ஙக0 |
| பெ | |
| பெருகும் | எக |
| பெண் | உஎஉ |
| பெரும் | ஙஅஉ |
| பே | |
| பேய் | உசஎ |
| பேராத | ஙஅஉ |
| பேறு | ருகசு |
| பேயே | ரு0சு |
| பொ | |
| பொற் | கசு |
| பொரு | ருக |
| பொன் | அச |
| பொரு | உஙசு |
| பொதிய | உஎச |
| பொற்று | உஎஅ |
| பொன் | ங0சு |
| பொதிய | ஙஅகூ |
| பொருனை | சகக |
| பொறி | சகூங |
| பொதிய | சகூசு |
| பொன்னே | ருகசு |
| ம | |
| மகபதி | ங0 |
| மகா | ஙஎ |
| மரகத | சுங |
| மயிலு | க0ங |
| மண்ண | ககஎ |
| மரகத | கஉஅ |
| மறையின் | கஙரு |
| மதுகரம் | கசச |
| மறுகு | கசசு |
| மதுவார் | கஎக |
| மடுப்ப | கஎரு |
| மனப்பரி | கஅகூ |
| மதி | கஅகூ |
| மற்ற | ககூச |
| மணி | உகசு |
| மகுட | உககூ |
| மலவி | உஉக |
| மலஞ் | உஉச |
| மருப்பு | உஉஎ |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| மயக்க | ௨௩௧ |
| மனவழு | ௨௩௨ |
| மலையணை | ௨௪௧ |
| மலைமுழை | ௨௪௩ |
| மறப்பு | ௨௪௬ |
| மரகத | ௨௫௨ |
| மயிலடை | ௨௫௯ |
| மருளுடை | ௨௬௭ |
| மகுடம் | ௨௭௨ |
| மதுரை | ௨௭௮ |
| மயிலை | ௨௭௯ |
| மன்மதன் | ௨௮௩ |
| மறைமுடி | ௨௮௫ |
| மறைகள் | ௨௮௯ |
| மலைய | ௨௯௨ |
| மலயத்தி | ௨௯௭ |
| மழை | ௨௯௭ |
| மலை | ௩௦௧ |
| மதுரா | ௩௧௦ |
| மறையாதி | ௩௧௪ |
| மயக்க | ௩௨௦ |
| மங்கி | ௩௨௧ |
| மடமை | ௩௨௪ |
| மறை | ௩௩௨ |
| மன்ன | ௩௩௮ |
| மறைமுடி | ௩௪௬ |
| மரகத | ௩௫௯ |
| மல்வி | ௩௭௧ |
| மகளி | ௩௮௮ |
| மதியு | ௩௯௬ |
| மனதிற் | ௪௦௯ |
| மலைய | ௪௧௩ |
| மகவினை | ௪௨௭ |
| மகவி | ௪௪௧ |
| மருளனை | ௪௪௩ |
| மன்னினை | ௪௪௫ |
| மணி | ௪௪௯ |
| மதியொத் | ௪௯௭ |
| மறை | ௫௦௧ |
| மறுமை | ௫௦௨ |
| மன்னு | ௫௧௨ |
| மணியெ | ௫௧௫ |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| **மா** | |
| மாலை | ௭௯ |
| மானை | ௯௯ |
| மான்சூட் | ௧௬௪ |
| மாலோ | ௨௧௦ |
| மாணிக்க | ௨௭௧ |
| மாரவேள் | ௩௦௭ |
| மாண் | ௪௫௫ |
| மாண்டு | ௫௧௬ |
| மாரனை | ௫௨௧ |
| **மி** | |
| மின்ன | ௨௧௮ |
| மின்றி | ௪௧௫ |
| **மு** | |
| மும்மை | ௨௧ |
| முக்கணு | ௧௦௭ |
| முக்கட் | ௧௫௭ |
| முடை | ௧௭௩ |
| முகடி | ௨௧௭ |
| முடித்தே | ௨௩௫ |
| முக்கரண | ௨௪௨ |
| முத்து | ௨௪௬ |
| முத்தோ | ௨௭௯ |
| முருகா | ௩௬௫ |
| முரணுறு | ௪௦௦ |
| முமல | ௪௦௯ |
| முக்கணு | ௪௫௨ |
| முருகா | ௫௦௨ |
| **மூ** | |
| மூல | ௩௮ |
| மூதண்ட | ௩௫௫ |
| மூவாசை | ௨௪[illegible] |
| மூக்கா | ௩௬௭ |
| மூபுர | ௪௧௨ |
| மூதொளி | ௪௧௪ |
| மூதுணர் | ௫௧௧ |
| **மெ** | |
| மெய் | ௨௦௯ |
| மெய்யா | ௨௨௧ |
| மெய் | ௨௩௬ |
| மெய்யடி | ௨௬௬ |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| **மே** | |
| மேரு | ௮௮ |
| மேக | ௧௧௦ |
| மேகங்கள் | ௧௬௮ |
| மேரு | ௨௦௨ |
| **வ** | |
| வட்டா | ௯௫ |
| வடவை | ௧௫௧ |
| வடவனை | ௧௫௫ |
| வனை | ௧௬௯ |
| வண்டு | ௧௭௭ |
| வள்ளை | ௧௭௮ |
| வல்லை | ௪௮௪ |
| வண்டனை | ௧௮௬ |
| வட்டாடல் | ௧௯௨ |
| வள்ளி | ௨௩௨ |
| வள்ளை | ௨௩௩ |
| வள்ள | ௨௫௮ |
| வடவனை | ௩௮௫ |
| வடங் | ௪௩௬ |
| வடகலை | ௪௩௮ |
| வந்தோர் | ௨௭௯ |
| வடவை | ௨௯௦ |
| வஞ்சனே | ௪௪௪ |
| வந்திக்கு | ௪௯ |
| வஞ்சக | ௫௦ |
| **வா** | |
| வாவி | ௧௮௨ |
| வாடை | ௧௮௫ |
| வாரிசுழல | ௨௧௪ |
| வாளை | ௨௫ |
| வானவர் | ௨௭ |
| வானவர் | ௨௮ |
| வானோர் | ௩௨ |
| வாளைகள் | ௩௬ |
| வானவர் | ௩௬ |
| வாக்கொடு | ௪௨ |
| வாதமுட | ௫௦ |
| **வி** | |
| விடைய | |
| விளை | ௮ |
| விரவு | ௧௦ |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| விதையா | ௧௩௨ |
| விருந்து | ௧௭௬ |
| விதிவழியே | ௨௩0 |
| விருப்ப | ௨௪௪ |
| விலையறு | ௨௮௬ |
| விடய | ௩௫௨ |
| விண்ணிலே | ௩௮0 |
| விலகிய | ௪0௧ |
| விஞ்குடி | ௪௩௯ |
| விரிதலை | ௪௫0 |
| விண்டலை | ௫0௭ |
| விடையுடை | ௫0௯ |
| வினையே | ௫௧௬ |
| **வீ** | |
| வீட்டின்ப | ௧௮௧ |
| வீதி | ௨௫௮ |
| வீரத்த | ௨௧௪ |
| **வெ** | |
| வெளியில் | ௧௨௨ |
| வெடிய் | ௩0௬ |
| வெள்ளை | ௩௮௩ |
| **வே** | |
| வேந்த | ௧௯௬ |
| வேல் | ௨௩௯ |
| வேலு | ௨௪௮ |
| வேலை | ௨௪௮ |
| வேல் | ௨௬௨ |
| வேலை | ௨௭௫ |
| வேலா | ௩0௯ |
| வேயென | ௩௧௧ |
| வேத | ௩௪௧ |
| வேம்குல் | ௩௯௨ |
| வேலும் | ௪௧௩ |
| வேத | ௪௫0 |
| வேடுவர் | ௪௫௧ |
| வேதாந்த | ௫௧0 |
| வேக | ௫௨௩ |
| வேலே | ௫௧௫ |

வேலுமயிலுந்துணை.

## திருப்போரூர்ச்சந்நிதிமுறை.

# அட்டவணை.


| பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். |
|---|---|---|---|
| காப்பு | ங | கொச்சகக்கலிப்பா | ஙஅக |
| செங்கீரை | உக | ஊசல் | ஙஅரு |
| தால் | ஙசு | விருத்தக்கலித்துறை (வடமலை) | ஙகூ0 |
| சப்பாணி | ருக | | |
| முத்தம் | சுஅ | அஷ்டகம் | ஙகூசு |
| வருகை | அங | பெருங்கழிநெடில் விருத்தம் | ச00 |
| அம்புலி | கூகூ | | |
| சிறுபறை | ககசு | குறுங்கழிநெடில விருத்தம், அறிவுக்கணி | ச0எ |
| சிற்றில் | கங0 | | |
| சிறுதேர் | கசச | ,, பான்மதி | சகஉ |
| அலுங்காரம் | கருஎ | ,, பகலுட | சகரு |
| மாலை | உஉஎ | ,, அருட்குழை | சஉங |
| தாலாட்டு | உஎக | ,, கமலநான் | சஉகூ |
| திருப்பள்ளியெழுச்சி | உஅக | ,, திடம்பெறு | சஙரு |
| பெரியகட்டியம். (பவள) | உஅஅ | ,, பரிதி | சசக |
| சின்னகட்டியம் (சூர்) | உகூச | ,, மணிகிடந் | சசகூ |
| பெரியகட்டியம் (மனழ) | உகூஎ | ,, அருட்கட | சருஎ |
| சின்னகட்டியம் (ஐங்கர்) | ங0சு | ,, நல்லின | சஅகூ |
| எச்சரிக்கை | ங0எ | சந்தக்கழிநெடி் விருத்தம் | சகூரு |
| வண்ணத்தாழிசை | ஙக0 | | |
| கலிநிலைத்துறை | ஙகஎ | கட்டளைக்கலித்துறை (அருளே) | சகூகூ |
| கலிவிருத்தம் | ஙஉரு | | |
| பெருங்கழிநெடில்விருத்தம் | ஙங0 | ,, (நாரண) | ரு0ங |
| | | ,, கண்ணிற்சிறந்த | ரு0சு |
| குயிற்பத்து | ஙசரு | நேரிசைவெண்பா | ருக0 |
| கிளிப்பத்து | ங.ருசு | அடைக்கலப்பத்து | ருகரு |
| வண்டுவிடுதூது | ஙசுஎ | விருத்தக்கலித்துறை (பேறுதரும்) | ருககூ |
| கட்டளைக்கலிப்பா | ஙஎங | | |